# சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம்

**ஸ்ரீ சங்கர் பட்**

**(ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சமகாலத்தவர்)**

*மொழிபெயர்ப்பு:*

**மாதங்கி பாலாஜி**



**ஸ்ரீ சுமதி நந்தன் பப்ளிகேஷன்ஸ் டிரஸ்ட்**

பிடாபூர்.

## நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம்** |
| மொழிபெயர்ப்பு | : | **மாதங்கி பாலாஜி** |
| © உரிமை | : | **ஆசிரியர்க்கே** |
| எச்சரிக்கை | : | இந்நூலின் எந்த ஒரு பகுதியையும் ஆசிரியரின் அனுமதியின்றி பயன்படுத்தக்கூடாது. |
| வெளியீடு | : | **மாதங்கி பாலாஜி & ஸ்ரீ சுமதி நந்தன் பப்ளிகேஷன்ஸ் டிரஸ்ட் பிடாபூர்** |
| பிரதிகளுக்கு | : | ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீபாத ஸ்ரீ சாய் பீடம் - 7305548119<br>மாதங்கி பாலாஜி - 9942219947 |
| விலை | : | |
| பதிப்பு | : | **முதல்பதிப்பு ஜூலை 2022** |
| மொத்த பக்கங்கள் | : | 526 + 8 வண்ணபக்கங்கள் |
| நூலின் அளவு | : | 14cm x 21cm (Approx) |
| தாளின் தரம் | : | மேப்லித்தோ 60gsm, ஆர்ட் பேப்பர் 130gsm |
| டைப்செட்டிங் | : | ஜெமினி டிசைன்ஸ், சென்னை. M: 9840487404 |
| வரைபடம் | : | மாதங்கி பாலாஜி |
| அச்சிட்டோர் | : | கைலாஷ் பிரிண்டர்ஸ், சென்னை - 94440 89506 |

Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

உ

☎ : 044-27222115
Acts : 044-27224236

II Sri Chandramouleeswaraya Nama: ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samsthanam
No. 1, Salai Street, Kancheepuram - 631 502, Tamilnadu State, INDIA.

ஸ்ரீமுகம்.

गुरुर्ब्रह्मा गुर्विशणु : गुरुर्देवो महेश्वर : गुरुशाक्षात् परम् ब्रह्म तस्मै श्रिगुरवे नम: 11

நாம் அனைவருமே அறிந்த இந்த ஸ்லோகமானது, ஸ்ரீ ஸ்காந்த புராணத்தில் உத்திர காண்டத்தில் உமா-மஹேஸ்வர சம்வாதம் மூலமாக, ஸ்ரீகுருவின் அருமை பெருமைகளை "குருகீதை" என்ற தலைப்பில் நமக்காகவே சொல்லப்பட்டுள்ளது. வேதநெறியில் அமைந்துள்ள நமது சனாதன தர்ம மார்கத்தில், அரிதான மானிடப் பிறவி பெற்ற நாம் அனைவரும், "சாக்ஷாத்காரம்" எனும் ஆத்ம தர்ஸனம் பெற்று பிறவிப்பயன் எய்த வேண்டும் என்பதே நோக்கமாகும். இதற்கு, நமது கர்ம வினைப் பயன்கள் யாவும் முழுமையாகப் போக்கடிக்கப்பட்டு மாயை எனும் திரை விலக வேண்டும். இந்த உன்னத நிலை பெறுவதற்கு, யாக, யக்ஞ, தபஸ், தானம் என்று பல மார்கங்கள் உள்ளன. எனினும், ஞான மார்கம், கர்ம மார்கம், பக்தி மார்கம் என்ற பல வழிகளில், கலியுகத்தில் பக்தி மார்கமே மிகச் சிறந்ததும் அனைவராலும் கடை பிடிக்கக் கூடியதும் அதிகாரி பேதமில்லாத எளிய சாதனமுமாகும். இந்த எளிய சாதனத்துக்கும் மார்க தர்ஸியாக, வழிகாட்டுவதற்கு, ஆத்ம தரிஸனம் பெற்றவரும், பெருமை மிக்க ஞானவானாகிய, ஸத்குரு ஒருவர் அவசியமாகிறது."கல்பக வ்ருக்ஷமானது நாம் வேண்டியதைத் தர வல்லது; காமதேனுவோ, நாம் எண்ணியது அனைத்தையும் தரவல்லது; ஸ்யமந்தக மணியானது அனைத்தையும் ஸ்வர்ணமயமாக்க வல்லது, ஆனால் ஒரு உத்தம ஞான குருவானவர், தீக்ஷண்யத்தால், தனது பக்தனை/ உத்தம சிஷ்யனை தனக்கு நிகரான ஞானவானாக ஆக்க வல்லவர்" என நமது குரு ஸ்துதிகள் எடுத்துரைக்கின்றன. அதனால்தான், நமது சனாதன மார்கத்தில், "மாதா,பிதா, குரு, தெய்வம்" என்று, அன்னை தந்தைக்குப் பின்னும் தெய்வத்திற்கும் முன்னதுமான ஸ்தானம், குருவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, வேத நெறிகளில் அமைந்துள்ள, அத்வைதம் முதலான எந்த ஒரு சித்தாந்தத்தை பின் பற்றுவோருக்கும் ஞானவானும் அனுபூதிமானும், குணவானுமான சத்குரு அவசியமே. அதனால்தான், அந்தந்த சித்தாந்தத்திற்கும் உண்டான குரு பரம்பரையினை, "நாராயணம் பத்மபுவம்" என்றும் "சதாசிவ சமாரம்பாம்" என்றும்,

SRI KANCHI KAMAKOTI PEETAM SRI MATAM Kancheepuram

"தக்ஷிணாமூர்த்தி சமாரம்பாம்" என்றும் அவரவர்கள் சம்ப்ராதாயப்படி, தம் தம் குருவரர்களைப் போற்றியும் தொடர்ந்து, தற்போது நம் முன்னர் ஞானகுருவாக பிரகாஸிக்கின்றவர்களை ஸ்துதி செய்தும் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கின்றோம்.

"கலியை" எளியோரும் வென்றிட, சத் சங்கத்துடன் கூடிய சுலபமான பக்தி மார்கமானது, தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, கருநாடகத்தில் பயணித்து, வளர்ச்சி பெற்று மஹாராஷ்ரத்திலும் குஜராத்திலும் அனைவராலும் நன்கு போஷிக்கப்படுகின்றது. தர்மத்தினை நிலை நாட்டிடவும், ப்ரஹ்லாதன் த்ருவன் போன்ற தீவிரமான பக்தனின் அசஞ்சலமான பக்திக்குக் கட்டுப் பட்டும் பக்த பராதீனர்களை பாதுகாத்து நன் நெறிப் படுத்திடவும் பகவானே அவதாரம் எடுப்பது மட்டுமல்லாது, பகவானின் அம்ஸமாக அவதாரபுருஷர்களும் தோன்றுவதே சனாதன தர்மத்தின் பெருமையாகும். அத்தகைய அவதார புருஷர்களான குருமார்கள் இன்றளவும் இப்பூவுலகில் ப்ரஸன்னதையாகவும் சூக்ஷமமாகவும் நடமாடி பக்தர்களை ரக்ஷித்து வருகிறார்கள். அவ் வகையில் சாக்ஷாத் மும்மூர்த்திகளுமே மஹரிஷி அத்ரி-அனுசூயை எனும் திவ்ய தம்பதிக்குப் பிறந்து, பின்னர் அம்மூவரும் ஒருருக்கொண்டு, ஸ்ரீ தத்தாத்ரேயராக அவதரித்தது ஒரு திவ்ய சரித்திரமாகும். புண்ணிய பூமியாம், பாரததேசத்தில் அவ தரித்த அனைத்து யோகீஸ்வரர்களும் தர்மத்தினை நிலை நாட்டியும் நல்லோரை பாதுகாத்தும் ரக்ஷித்தும் வருகின்றனர். ஸ்ரீ தத்தாத்ரேயர் முதலாகக் கொண்ட , குரு பரம்பரை தொடர்ந்து, ஸ்ரீதத்தரின் அவதாரமாகவே கருதப்படும், ஸ்ரீ ஸ்ரீபாத வல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி முதலானோர் தோன்றினர். இவர்களில் ஸ்ரீ ஸ்ரீபாத வல்லபர், ஸ்ரீ தத்தர் போலவே அவதூதர்களாவார். குருவரர்களில், அவதூதர்களின் மகிமைகள் மிகவும் போற்றப்படுகின்றன. ஸ்ரீ அவதூத கீதை ஸ்ரீமத் பாகவதத்தில் மிகப் பிரசித்தம். ஸ்ரீ ஸ்ரீபாத வல்லபர், கலியுகத்தில் தோன்றிய ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் மற்றும் முதன்மையான அவதாரமாகும்.ஸ்ரீ வல்லபர் ஸ்வாமி 1320 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம், பீதிகாபுரம் எனும் ஊரில் அவதரித்தார். 30 ஆண்டுகளே ஜீவிதத்தில் இருந்துள்ளார். ஆனால் இன்றும் சூக்ஷமமாக இருந்து கொண்டு, தமது சைதன்யத்தை அவ்வப்போது பக்தர்களுக்கு உணர்த்தி வருகிறார். யோக ரகஸ்யங்களும் உபநிஷத் கோட்பாடுகளும் அடங்கிய இவரது வாழ்க்கை வரலாற்றினை, " ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப சரிதாம்ருதம்" எனும் தலைப்பில், சமஸ்கிருத மொழியில், ஸ்ரீபாதரின் சமகாலத்தவரன, "ஸ்ரீ சங்கர் பட்" என்ற அடியவரால், ஸ்ரீபாதரே, ஜோதி ரூபமாக சூக்ஷமமாக ஸ்ரீ சங்கர் பட் அவர்களுக்கு துணையாக நின்று வழிகாட்டியதன் பலனாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டு, 2001ம் ஆண்டுதான் வெளிச்சத்திற்கு கொண்டுவரப் பட்டதாகத் தெரிகிறது. அது வரை, ஸ்ரீபாதரின் தாய் மாமா சந்ததியைச் சேர்ந்தவர்களால் பாது காக்கப்பட்டதாகவும், மல்லாடி ஸ்ரீனிவாசலு என்பவர் மூலம், தெலுங்கு மொழியில் " ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப சரிதாம்ருதம்" வெளிச்சத்திற்கு வந்ததாகவும் அறிகிறோம். இந் நூல், ஸ்ரீபாதர் பக்தர்களால், காம்யமாகவோ அகாம்யமாகவோ, நித்திய பாராயணத்திற்கு உகந்ததாகவும், ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகிமைகளை உணர்ந்து போற்றி வணங்கும் பக்தர்களின் கர்ம வினைகளை அழிக்கவல்லது என்றும்,3

SRI KANCHI KAMAKOTI PEETAM SRIMATAM Kancheepuram

அவர்கள் கோரிய பலன்களை அளிக்க வல்லதாகவும் உள்ள ஓர் அற்புதமான ஆன்மிக வழிகாட்டி என அனுபூதிமான்களால் மிகுந்த நம்பிக்கையுடன் போற்றப்பட்டு வருகிறது.

சம்ஸ்கிருத மொழியில் இருக்கின்ற ஸ்ரீ சங்கர பட் அவர்களின் மூல நூலான ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப சரிதாம்ருதம் , பின்னர் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு, அதிலிருந்து, ஸ்ரீ கோபால் பாபா ஆஸ்ரமத்தினரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பிக்கப் பட்டுள்ளது.மூல நூலில், ஸ்ரீ சங்கர் பட் அவர்களின் நெடிய எழுத்துப் பயணத்திலே தமக்கு ஏற்பட்ட பற்பல அனுபவங்களையும் சேர்த்து தந்துள்ளார், என்பது குறிப்பிடத் தக்கது. எனவே, இன்னூலில் ஸ்ரீ ஸ்ரீபாதர் சரிதத்துடன், மேலும் சில மகான்களின் வரலாறுகளும் இணைகின்றன. இந்த ஆங்கில வழி நூலினை அப்படியே "தமிழில் மிக அழகாகவும், மாற்றம் ஏதும் செய்யாமலும் தரணி போற்றும் தமிழறிந்த மக்களுக்காக, தமிழில் மொழி மாற்றம் செய்து, ஸ்ரீ ஸ்ரீபாதரின் பக்தையான ஸ்ரீமதி.மாதங்கி பாலாஜி, மிகவும் பரி ஸ்ரமப் பட்டு மிகுந்த ஆராய்ச்சிகளின் பலனாகவும் குருவருள் துணை கொண்டும் எழுதி வழங்கியுள்ளது மிகவும் மெச்சத்தக்க முயற்சியாகும்", என ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சஸ்வதி ஸ்வாமிகள், மிகவும் சந்தோஷித்து ஆசிர்வதித்தார்கள் என்பது தெரிவிக்கலான விஷயம். ஸ்ரீமதி மாதங்கி பாலாஜி குருவருள் துணை கொண்டு மென்மேலும் அரிய பல நூல்களை, எழுதி குருசேவையாக ஆன்மிக அன்பர்களுக்கு பெருமையுடன் அளித்திட ஸ்ரீ மஹா த்ரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மவுளீஸ்வர ஸ்வாமியை ப்ரார்த்திக்கிறோம்.

ஜ்யேஷ்ட பகுள நவமி.

முகாம்: துண்டிகல், தெலுங்கானா.

**For Sri Kanchi Kamakoti Peetam**
**Srimatam Samsthanan**

**MANAGER**

## அணிந்துரை

உ
Sivamayam
SIVAGAMA KALANITHI, SIVAGAMA CHELVAR,SAIVA SIDHDHANTHA SARABHAM

**A.V.SWAMINATHA SIVACHARIYAR**

FOUNDER & PRINCIPAL
SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI
No:32, Mayuranathar South Street, Mayiladuthurai, Tamilnadu, India- Pincode: 609001
email:avssivachariyar@yahoo.com website: www.sivapuramtrust.com



உ
சிவமயம்

**சதாசிவ சமாரம்பம் ஸ்ரீகண்டாச்சார்ய மத்யமாம் II**
**அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தேகுரு பரம்பராம் II**

ஸனாதன தர்மம். இது வற்றாத ஜீவநதி. யுகங்களைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் இந்நதி இவ்வுலக மக்களை, ஆச்ச்சார்யர்களையும் மகான்களையும் அவதரிக்கச் செய்தும், வேதங்கள் மூலம் இறைவனை அறிதலையும், யக்ஞங்கள் பூஜைகள் மூலம் தெய்வத்தின் அருள் பெற்று வளமான வாழ்வும், சிறந்த ஞானமும் பெறச்செய்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேல் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்ற தத்துவமே ஸனாதன என்று குறிப்பிடப்படுகிறது.

சிவன் விஷ்ணு இன்னும் பல பெயர்களில் அழைக்கப்பட்டாலும் ஒருவனே தேவன் எனும் திருமூலரின் வாக்குக்கிணங்க வேறுபாடுகளைக் களைந்து தெய்வத்தை வழிபட வேண்டும். இந்நிலையில் ஜாதி மதம் மொழி என பிரிந்து நிற்கும் மக்களும் ஒன்றே குலம் என்னும் திருமந்திரத்தின் பொருளாக ஒன்றிணைவர். சொல்வதற்கும் படிப்பதற்கும் எளிதான இவ்விஷயம் புரிந்து செயல்பட கடினமானதேயாகும். இதனை உணர்ந்த ஆச்சார்யர்களின் உபதேசவழியே இவ்விஷயத்தை சாதிக்க இயலும் என, சிவன் விஷ்ணு முதலிய தேவர்களே குருமார்களாகத் தோன்றி குரு பரம்பரைகளை பாரதத்தின் பல்வேறு இடங்களிலும் தோற்றுவித்துள்ளார்கள்.

சிவபெருமானுடைய குரு அவதாரங்களாக தட்சிணாமூர்த்தியும், அவரிடமிருந்து சனகாதி முனிவர்களும், அவர்களிடமிருந்து ரிஷி பரம்பரையும்,

வேதியர் பரம்பரையும் தோன்றி வைதீக தர்மத்தை மக்களுக்கு போதித்தும் அவர்களை நல்வழிப்படுத்தியும் வருகிறார்கள். இதேபோன்று விஷ்ணுவும் விகனசாசாரியார், ராமானுஜர் போன்ற குருமார்களாகத் தோன்றி வைஷ்ணவ சம்பிரதாய தர்மத்தை காப்பாற்றி வருகிறார். சமயங்கள் என்பது பெயரளவிலும், சடங்குகள் அளவிலும் மாறுபட்டிருக்கலாமே தவிர, கொள்கை விரோதம் பாராட்டப்படக்கூடாது. இப்படிச் சூழல் உண்டானபோது சமய ஜாதி வேறுபாடுகளைக் களைந்து ஸனாதன தர்மத்தில் மக்கள் நெறியுடன் வாழத் தோன்றியவர்களே ஸ்ரீ தத்தாத்ரேயர், ஆதிசங்கரர் போன்ற ஆச்சார்யார்களாவர்.

சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் எனும் இந்நூல் ஸ்ரீ தத்தாத்ரேயரின் குரு பரம்பரையின் மகிமையை விளக்கும் அருமையும் பெருமையும் உடையதாக அமைந்துள்ளது. வேற்று மொழிகளில் எழுதப்பெற்றும், அவற்றில் சில பகுதிகள் விடப்பட்டும் இந்நூல் பலவாறாக இருந்ததை ஒருங்கிணைத்தும், பலநூல்களை ஒப்புநோக்கி ஆராய்ந்தும் முதன்முதலில் தமிழில் வெளியிட்டிருக்கும் பெருமை சௌபாக்யவதி. மாதங்கி பாலாஜியை சாரும். இவர் நமது ஆப்த நண்பர் மயிலாடுதுறை தொழிலதிபர் ஸ்ரீமான் Soo. விஜயகுமார் அவர்களின் அருந்தவப்புதல்வியாவார்.

இனி, ஸ்ரீமன் நாராயணர் கருணைகொண்டு அவதரித்த குருவடிவங்கள் பல. அவற்றில் அத்ரிமகரிஷிக்கும் அனஸூயாவுக்கும் மகனாகப் பிறந்து ஸ்ரீ தத்தாத்ரேயர் எனும் திருநாமத்துடன் ஆச்சாரியராக விளங்கியது அவரது ஆறாவது குரு வடிவம் என வைணவ நூல்கள் கூறுகின்றன. பிரம்ம விஷ்ணு ருத்திரர்களாகிய திரிமூர்த்தி சொரூபமே தத்தாத்ரேயர். இவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். தமிழகத்தில் சேலம் அருகே சேந்தமங்கலம் எனும் ஊரில் தனிக்கோயில் கொண்டு அருளுகிறார். ஆந்திரம் கர்நாடகம் மற்றும் வட இந்தியப் பகுதிகளில் நிறைய கோயில்கள் இவருக்கு இருக்கின்றன. அவர் பிற்காலத்தில் சாதாரண பிராமண குடும்பத்தில் பிறந்து இப்பூவுலகில் தமது குருபரம்பரை அவதாரங்களைத் தொடரச் செய்தவர். இந்தப் பகுதியில் இருந்துதான் இந்நூலின் மையப்பகுதி துவங்குகிறது.

ஆந்திர மாநிலம் பீதிகாபுரத்தில் ஸ்ரீ அப்பலராஜ சர்மா ஸ்ரீமதி சுமதி மஹாராணி எனும் உத்தமமான தம்பதிகள் இருந்தனர். இவர்கள் செய்த யக்ஞங்கள் தர்மங்களின் பயனாய் சிறு பாலகனாக தத்தாத்ரேயர் காட்சியருளினார். அவரை வணங்கி அக்குழந்தை வடிவிலே தங்களுக்கு புதல்வராக அவதரிக்க வேண்டும் என வரம் கேட்டனர். குரு தத்தரும் அவ்வாறே ஆகட்டும் என அருளினார். மேலும் த்ரேதா யுகத்தில் பரத்வாஜ

முனிவர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம் பூவுலகில் நிகழவேண்டி ஸவித்ரு காடக சயனம் எனும் யாகத்தை நிகழ்த்தினார். இதன் பலனாய் அப்பலராஜ சுமதி தம்பதிகளுக்கு வரமளித்த வண்ணம் 1320ம் ஆண்டு பாத்ரபாத சுக்லசதுர்தியில் (ஸ்ரீ விநாயக சதுர்த்தி) குரு தத்தர் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் எனும் திருநாமத்துடன் அவர்களுக்கு குழந்தையாக அவதரித்தார்.

இவரது தோற்றம் முதல் மறைவு வரை முப்பது ஆண்டுகளே இப்பூவுலகில் எல்லோருக்கும் காட்சி அளித்திருக்கிறார். இதிலும் பதினாறு ஆண்டுகள் பெற்றோருடனும், பதினான்கு ஆண்டுகள் துறவு பூண்டும் வாழ்ந்து கிருஷ்ணா நதியில் இறங்கி மறைந்துவிட்டிருக்கிறார். பெற்றோருடன் இருந்தபோதும் துறவு பூண்டும் இவர் ஆற்றியுள்ள அற்புதங்கள் ஏராளம்.

இந்நிகழ்வைக் கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் எனும் இந்நூலை எழுதத் துவங்கிய சங்கர் பட் என்ற அடியவரின் எழுத்துப்பயணத்தில் கிடைத்த அனுபவங்களே, மிக நீண்ட நூலாக அமையக் காரணமாயிற்று எனலாம்.

மகான்களின் வரலாறுகள் எழுதப்புகுவது என்பது எல்லோராலும் இயலாது. அதற்கு நிறைய புண்ணியம் செய்த ஒருவரை இறைவனே தேர்ந்தெடுப்பார். அந்நூல் எழுத பகவானே துணைபுரிவார் என்பதை திருத்தொண்டர் புராணம் முதலிய நூல்களின் வரலாறுகளைக் கண்டு உணரலாம். அந்த வகையில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தமது சரிதத்தை எழுத தாமே சங்கர் பட் என்பாரைத் தேர்வு செய்து அவரது அறிவில் நின்று, இந்நூல் எழுத அருள்பாலித்திருக்கிறார் என்பதை அவரே கூறும் முகத்தானும், இந்நூல் கூறும் செய்திகளாலும் அறிகிறோம்.

ஸ்ரீபாத குரு ஆந்திராவில் ஒரு தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் என்று முன்பு சிந்தித்தோம். ஆனால் பிறப்பதற்கு முன்பே பலருக்கு காட்சியளித்திருக்கிறார். பலருக்குநுட்பமானவிஷயங்களைஉபதேசித்திருக்கிறார். அதேபோல மறைந்த பின்னரும் பல இடங்களில் தோன்றி வேதங்களையும் அதன் நுட்பங்களையும் பலருக்கு போதித்திருக்கிறார். அவரால் ஆட்கொள்ளப்பட்ட பல அருளாளர்கள் ஸ்ரீ சங்கர் பட் அவர்களின் இந்நூல் எழுத்துப்பயணத்தில் வழிகாட்டிகளாகத் தோன்றி குருபாதரின் மகிமைகளைக் கூறி மறைந்திருக்கிறார்கள்.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திரம் எனும் பத்தாம் திருமுறையை அருளி மறைந்தாலும்,

இன்றும் சித்தபுருஷராக ஜீவிக்கிறார் என அவரது வரலாறு கூறுவது போல, ஸ்ரீபாதரும் என்றும் ஜீவிக்கிறார் என்று இந்நூலால் அறியமுடிகிறது.

குருவபுரம் எனும் க்ஷேத்திரமே ஸ்ரீ ஸ்ரீபாதர் துறவு பூண்டு மறைந்த திருத்தலமாகும். இன்றும் அங்கு அவரது ஜீவிதம் இருப்பதை பலவற்றானும் இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

நாராயணரின் அவதாரம் தத்தாத்ரேயர். இவரே ஸ்ரீபாதராகவும் அருளியவர். உடுப்பி ஸ்ரீகிருஷ்ணர் நாராயணரின் அவதாரமல்லவோ! இந்நூலின் துவக்கம் சங்கர் பட்டின் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்திலேயே துவங்குகிறது. சங்கர் பட் ஸ்ரீ கிருஷ்ணரை தரிசிக்க உடுப்பி செல்கிறார். தரிசனமளித்த கிருஷ்ணர் கன்னியாகுமரி அம்பாளை தரிசிக்க ஆணையிடுகிறார். குமரியில் ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரியை தரிசிக்கும் அவரை, குருவபுரம் சென்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசிக்க ஆணையிடுகிறாள். இதிலிருந்து துவங்குகிறது இந்த சரிதாம்ருதம்.

குருவபுரம் செல்லத்துவங்கும் சங்கர் பட் வழியில் பல மகான்களைக் கண்டு அவர்களின் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பெருமைகளையும், அவரது சரிதாம்ருதம் எழுதவே தாம் பிறந்துள்ளதையும் அறிகிறார். இதில் இன்னும் பிற அருளாளர்களின் வரலாறுகளும் இணைகின்றன.


கணாத முனிவரின் வரலாற்றில் அவர் கூறும் வேதிப்பொருள் நமது ஸனாதன தர்மம் எந்த அளவிற்கு மனித அறிவை வளப்படுத்துகிறது என்பதை உணரலாம். கணிதப்பாடத்தில் வர்க்கமூலம் (*square root*) படித்திருக்கிறோம். இதை கண்டுபிடித்தவர் யார் என்றால் கணித மேதை ராமானுஜம் என்பர் இந்துக்கள். இன்னும் பிறர் ஆங்கிலேயர் என்பர். அவற்றையெல்லாம் கடந்து வேதத்தில் சமகம் எனும் பகுதியில் வரும் “ஏகாசமே திஸ்ரஸ்சமே” எனும் அனுவாகமே கணிதத்தின் மூலம் என இந்நூல் நிறுவுகிறது. ஏழாவது அத்தியாயம் படிக்கும் ஒவ்வொருவரும் அறிவு முதிர்ச்சி பெறுவார் என்பது திண்ணம். மனிதன் மட்டுமே அறிவும் உணர்ச்சியும் ஒருசேர பெற்றிருக்கிறான். இரண்டும் மோதும்போது உணர்ச்சியால் வெல்லப்பட்டவர்கள் வாழ்வில் தோல்வியைத் தழுவுகிறார்கள். அறிவினால் உணர்ச்சியை வென்றவர்கள் மேதைகளாகவும் மகான்களாகவும் வாழலாம் என உணரச்செய்கிறது இப்பகுதி. இப்படி ஏராளமாக சொல்லிக்கொண்டே போகலாம்.

இப்படி பயணித்து குருவபுரம் சென்று ஸ்ரீபாதரை தரிசித்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய சங்கர் பட்டிற்கு அருளுபதேசம் செய்தும் இந்நூல் எழுத ஆணையிட்டும் இந்நூலைப் படிப்போருக்கு அவர்களின் அருகில்

அதிர்வலைகளாக இருந்து அருளுவோம் என்றும் அருளி ஐப்பசி மாதம் கிருஷ்ண துவாதசியில் ஸ்ரீபாதர் கிருஷ்ணா நதியில் இறங்கி மறைகிறார். அங்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதுகாப் பிரதிஷ்டை செய்து அங்கிருந்து இந்நூலை ஆக்கி அவரது பாதுகையில் சமர்ப்பணம் செய்திருக்கிறார். அப்போது அவருக்கு மீண்டும் குருபாதரின் ஒளிவடிவ தரிசனம் கிடைக்க மகிழ்ச்சியுடன் இந்நூலை நிறைவு செய்துள்ளார் சங்கர் பட். அவர் பெற்ற ஆத்ம பரிசுத்தத்தை இந்நூலைப் படிப்பவர்களும் பெறலாம் என்பது திண்ணம்.

அற்புதமான இந்நூலை படிக்கத் துவங்குபவர்கள் முடிக்கும்வரை சோர்வில்லாமல் படிக்குமாறு இந்நூல் அமைந்துள்ளது. தமிழாக்கம் செய்து நம்மையும் புனிதராக பெரும் புண்ணியத்தை செய்திருக்கும் சௌபாக்கியவதி மாதங்கி பாலாஜிக்கு இறைவன் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாக ஆசீர்வதித்து நிறைவு செய்கிறோம்.

லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து.



**ஏ.வி. சுவாமிநாத சிவாச்சாரியார்**

நிறுவனர், சிவபுரம் வேத சிவகாம பாடசாலை

# சமர்ப்பணம்

**'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது'** என்பது ஔவை வாக்கு. அரிதான இந்த மானிட பிறப்பில் மோக்ஷத்தை நோக்கி பயணிப்பதுதான் நம் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கான சரியான மார்க்கத்திற்கு அழைத்து செல்ல குருவின் கடாக்ஷம் பெற வேண்டியது அவசியமாகிறது. ஸ்ரீ குரு நமது கர்மாக்களை அழித்து, அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றி நம்மை மோக்ஷ பாதைக்கு அழைத்து செல்கிறார். அப்படிப்பட்ட குருவாக பிரம்மா, விஷ்ணு சிவனின் ஸ்வரூபமாக பூவுலகில் அவதரித்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயர். ஸ்ரீ தத்தர் கலியுகத்தில் எடுத்த அவதாரங்களாவன,

1. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்
2. ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி
3. ஸ்ரீ சுவாமி சமர்த்தர் (எ) அக்கல்கோட் மஹராஜ்
4. ஸ்ரீ மாணிக் பிரபு மஹராஜ்
5. ஸ்ரீ ஷீர்டி சாய் பாபா

மேலும் பல அவதாரங்களாகவும், அம்ச அவதாரங்களாக பலரும் அவதரித்து ஸ்ரீ தத்தாத்ரேயரின் பண்புகளை வெளிக்காட்டினர்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் வாழ்க்கை வரலாறை மட்டும் எடுத்துக் கூறவில்லை. அதில் யோக ரகசியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் உபநிஷத்துக்களில் அடங்கியுள்ள பல உன்னதமான தகவல்கள் இக்காலத்திற்கு ஏற்ற நவீன முறையில் எளிதாக விளக்கப்பட்டுள்ளது. மிகவும் அவசரமயமான இந்த நவீன யுகத்தில் அனைத்தும் ஒரே சேர எளிதாக கிடைக்க வேண்டும் என்பதுதான் இப்போது அனைவரின் விருப்பமாக உள்ளது. அதில் ஆன்மீகமும் விதிவிலக்கல்ல. அதை உறுதிப்படுத்தும் விதமாகத்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் சமீபத்தில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது என்று தோன்ற வைக்கிறது. மக்களுக்கு தோன்றும் பலவகையான ஆன்மீக சந்தேகங்களுக்கும் இப்புத்தகத்தில் பதில் இருக்கிறது. அதனால் நாம் இப்புத்தகத்தை கற்பகவிருட்சம் என்று கூறுவது மிகை ஆகாது.

விநாயகர் தாய் தந்தையை சுற்றி உலகத்தை சுற்றிய பலன் பெற்றார். அதேபோல் சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பாராயணம் செய்வதன் மூலம் அனைத்து புத்தகங்களையும் பாராயணம் செய்வதற்கு சமமான பலன்களை பெறலாம். அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், மந்திரங்கள், தந்திரங்கள் மற்றும் யோகம் போன்ற விஷயங்களை

தெரிந்துகொள்ள பல புத்தகங்களை படிப்பதற்கு பதில் சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்னும் ஒரே புத்தகத்தை பாராயணம் செய்தாலே பேரானந்த அனுபவத்தை பெறலாம். ஸ்ரீ தத்தரின் அருளை அடைவதற்கான வழிமுறைகள் அனைத்தும் இந்த புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. கடவுளை நோக்கி நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் அவர் நம்மை நோக்கி பல அடிகள் எடுத்து வைப்பார்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் **1353** ஆம் ஆண்டு வரை ஸ்ரீ சங்கர் பட் என்னும் அடியவரால் எழுதப்பட்டு நிறைவு செய்யப்பட்டாலும், அது **2001** ஆம் ஆண்டுதான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைக்கிணங்க வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. அது வரை ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாய்மாமாவின் சந்ததியை சேர்ந்தவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஸ்ரீ மல்லாடி ஸ்ரீனிவாசலு என்பவர் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தில் கூறப்பட்டுள்ள சித்த மங்கள ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்தாலே அனைத்து விதமான மந்திரங்களை கூறுவதற்கும் சமமாகிவிடும். சித்த மங்கள ஸ்தோத்திரம் பாராயணம் செய்யப்படும் இடத்தில் சித்தர்கள் மற்றும் தேவர்கள் அனைவரும் சூக்ஷ்ம ரூபத்தில் சூழ்ந்திருப்பர். மேலும் அந்த இடத்தில் நல்ல அதிர்வலைகள் நிரம்பியிருக்கும். பாராயணம் செய்பவரின் தீய கர்மாக்கள் உடனடியாக அழிக்கப்பட்டு நல்ல பலன்களை அளிக்கும்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்னும் இந்த அமுத சுரபி என் கையில் கிடைத்த நாளிலிருந்து நான் எனக்குள் பல மாற்றங்களை உணர்ந்தேன். இது மற்ற பாராயண புத்தகம் போலல்லாமல் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்னை முழுவதுமாக ஆட்கொள்வதை என்னால் உணர முடிந்தது. என் எண்ணம், செயல் மற்றும் பேச்சில் பல மாற்றங்கள் உண்டானது. இப்புத்தகத்தை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு மூன்று முறை பாராயணம் செய்தும் முழுமை ஏற்படாதது போன்ற உணர்வே இருந்தது. பிறகுதான் நான் பாராயணம் செய்த புத்தகத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தில் இருக்கும் ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரியின் பாகங்கள் அகற்றப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். பழைய ஆங்கில பிரசுரங்களில் மட்டும்தான் அப்பாகங்கள் இருந்தது என்றும் புதிய பதிப்புகளில் அவை இல்லை என்பது தெரிந்தது. அவற்றை படிக்கும் ஆவலில் இணையம் மூலம் பதிவிறக்கி ஆங்கில வழியில் படிக்க துவங்கிய போது, அதை தாய்மொழியில் பாராயணம் செய்தால் நன்றாக இருக்கும் என்ற ஆவல் எழும்பியது. தமிழில் முழு மொழிபெயர்ப்பு இல்லை என்பது தெரிய வந்தது. அச்சமயத்தில் இணையத்தில் பிடாபுரத்தில் இருக்கும் ஸ்ரீ கோபால் பாபா

ஆஸ்ரமம் 2020ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வெளியிட்ட புத்தகத்தில் அனைத்து பாகங்களும் முழுமையாக இருப்பதை கண்டு அப்புத்தகத்தில் இருந்து மொழிபெயர்ப்பு செய்ய துவங்கினேன்.

தீராத தாகத்தில் மொழிபெயர்ப்பு செய்ய துவங்கினேன் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் விருப்பம் என்பதை அவர் பல சமயங்களில் நிரூபித்தார். வேதாந்தங்கள் பற்றி அறியாத ஒரு அஞ்ஞானியை தேர்வு செய்து அவரே தன் சரிதாம்ருதத்தை எழுதுகிறார் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டேன். நான் வெறும் கருவி மட்டுமே. ஒரு சமயத்தில் ஸ்ரீ கோபால் பாபா அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஸ்ரீ நந்தகிஷோர் மிஸால் அவர்களிடம் "நான் இன்னும் பத்து வருடங்களில் என் பணியை தமிழ்நாட்டில் தொடங்குவேன் என்றும் அந்த நபர் ஸ்ரீ நந்த கிஷோர் அவர்கள் மூலம் தெரிய வருவார்" என்று கூறியது நினைவுக்கு வந்தது. அது இந்த புத்தகம் மூலம்தான் என்பது தோன்றுகிறது.

இந்த பயணத்தின் போது சரிபார்ப்பதில் உதவிய என் கணவருக்கும், எனக்கு ஒத்துழைத்த என் இரண்டு மகள்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை சமர்பிக்கிறேன். இப்புத்தகத்தை பாராயணம் செய்து கருத்துக்கள் கூறியவர்களுக்கும், அகமது நகரை சேர்ந்த ஸ்ரீ நந்த கிஷோர் மிஸால் அவர்களுக்கும் என் நன்றியை சமர்ப்பிக்கிறேன். மேலும் எழுத்து பிழைகளை சரி பார்க்க உதவிய தமிழ் ஆசிரியர் ஸ்ரீ உப்பிலி ஆராவமுதன் அவர்களுக்கும் என் நன்றியை காணிக்கை ஆக்குகிறேன்.

என் கோரிக்கையை ஏற்று தன் பணிகளை எல்லாம் ஒதுக்கி தள்ளிவிட்டு அணிந்துரை எழுதி இந்த சரிதாம்ருதத்தின் சிறப்புகளை அனைவருக்கும் புரியும் வண்ணம் எடுத்துக் கூறிய ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களுக்கு என் கோடானு கோடி நன்றிகளை சமர்ப்பணம் செய்கிறேன்.

இந்த மொழிபெயர்ப்பில் ஏதாவது மாறுதல்கள் அல்லது எழுத்துப்பிழை இருக்குமாயின் தயவுகூர்ந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரி மூலம் தெரியப்படுத்தவும்.

**மாதங்கி பாலாஜி**

*sripadharcharithram.tamil@gmail.com*

**ஸ்ரீபாத ராஜம் சரணம்! ப்ரபத்யே!**

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் மகிமைகள்

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை சிறந்த யோகிகளும் மஹாபுருஷர்களும் பாராயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்புத்தகத்தை மற்ற பாராயண புத்தகம் போன்று கருத முடியாது. இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் சத்தியம். மேலும் ஒவ்வொரு எழுத்தும் பீஜாக்ஷர சக்தி நிறைந்தது. இதன் ஒவ்வொரு எழுத்தும் ஸ்ரீகுருவின் எழுத்து வடிவம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் சித்தர்கள் மற்றும் யோகிகளின் பிராணன் அடங்கியுள்ளது. இது போன்ற புத்தகங்களை மனதாலோ அல்லது மனதையும் குரலையும் ஒருங்கிணைத்து வாய்விட்டோ படிக்கும் போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மன சைதன்யம் அவ்விடத்தை நோக்கி கவரப்படும். பக்தியுடன் இப்புத்தகத்தை பாராயணம் செய்யும் பக்தரின் உடல், உயிர் நிலை, மனக்கஷ்டம் மற்றும் துன்பங்கள் ஆகியவற்றின் அதிர்வலைகள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மன சைதன்யத்தை அடைந்துவிடும். அவரிடம் சென்ற அதிர்வலைகள் தூய்மையாக்கப்பட்டு தெய்வீக அருளுடன் கூடிய அதிர்வலைகளாக பக்தனிடம் வந்து சேரும். இச்செயல்பாட்டின் மூலம் பக்தனின் அனைத்து கர்மாக்களும் தூய்மையாக்கப்பட்டு இந்த உலகம் மற்றும் அனைத்து உலகங்களிலும் சுகம் பெறுவான். மேலும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை படிப்பவர்களுக்கு முறையான வழியில் பரிணாம வளர்ச்சி நடைபெறும். இப்புத்தகத்தை எந்த மொழியில் படித்தாலும் ஒரே மாதிரியான பலன்கள் கிடைக்கும். மேலும் இந்த புத்தகத்தை பூஜை அறையில் வைத்து வழிபட்டாலே அற்புதமான முன்னேற்றங்கள் பெறலாம்.

## சித்த மங்கள ஸ்தோத்திரம்

1. ஸ்ரீமதனந்த ஸ்ரீ விபூஷித அப்பல லக்ஷ்மி நரசிம்மராஜா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

2. ஸ்ரீ வித்யாதரி ராதா சுரேகா ஸ்ரீராகிதரா ஸ்ரீ ஸ்ரீபாதா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

3. மாதா சுமதி வாத்ஸல்யாம்ருத பரிபோஷித ஜய ஸ்ரீ ஸ்ரீபாதா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

4. ஸத்ய ருஷீச்வர துஹிதானந்தன பாபண்ணார்யனுத ஸ்ரீ சரணா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

5. ஸவித்ருகாடகச் சயன புண்யபல பரத்வாஜ ருஷிகோத்ர சம்பவா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ !

6. தோ சௌபதி தேவ் லக்ஷ்மி கண சமிக்யா போதித ஸ்ரீ சரணா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

7. புண்ய ரூபிணீ ராஜமாம்ப சுத கர்ப புண்யபல ஸம்ஜாதா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

8. சுமதிநந்தன, நரஹரினந்தன தத்த தேவப் பிரபு ஸ்ரீபாதா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

9. பீதிகாபுர நித்ய விஹாரா, மதுமதி தத்தா, மங்கள ரூபா!
ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

**ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே!**

## **பகவான் ஸ்ரீ கோபால் பாபா மகாராஜ்,**
பீதாபுரம்.

*அது 1980 , இந்தியாவில் உள்ள ஆந்திரபிரதேச மாநிலம் விசாகப்பட்டினம் ரயில் நிலையம். அன்று அந்த ரயில் நிலையத்தில் யோகி ஒருவர் தோன்றினார். அவர் சமாதி நிலையில் இருந்து திரும்பி வந்திருந்தார். இடுப்பு வரையில் வளர்ந்த ஜடாமுடியுடன்,மிக நீளமாக வளர்ந்த நகங்களுடன் தோற்றமளித்தார். ஆடைகளற்று பல நாட்கள் சமாதி நிலையில் இருந்தமையால் கால் நகங்கள் வளர்ந்து மேல் நோக்கி வளைந்து காணப்பட்டது.ரயில் நிலையத்தில் இருந்த அனைவரும் இந்த வசீகரமான மனிதரை கவனிக்கத் தொடங்கினர்.அவர்தான் அவதூதர் யோகி ஸ்ரீ கோபால் பாபா. அவரை சுற்றி இருந்த பக்தர்கள் தேநீர், சிகரெட் மற்றும் உணவுகளை வழங்கினர்.*

ஒருமுறை ஸ்ரீ கோபால் பாபா அவருடைய பக்தர் ஒருவரிடம் "**நான் உன் இல்லத்தில் 12 வருடங்கள் வாழ விரும்புகிறேன்**" என்று கூறினார்.அந்த பக்தர் அவரை தன் இல்லத்திற்கு அழைத்து சென்றார், பாபாவும் அவர் *இல்லத்தில் 12 ஆண்டுகள் தங்கினார். அந்த மலரின் வாசம் பல பக்தர்களை கவரத் தொடங்கியது. பக்தர்கள் ஸ்ரீ கோபால் பாபாவின் அருள் மழையை அனுபவிக்கத் தொடங்கினர்.அதற்கு பிறகு 1993 முதல் 2000 ஆம் ஆண்டு மத்தி வரையில் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நரசிபட்டினத்திற்கு அருகில் உள்ள பலிகட்டம் என்னும் ஊரில் உள்ள பகல்பட்டி குருஜி சமாதி ஆசிரமத்தில் தங்கினார். முதலில் அங்கிருந்த மக்கள் அனைவரும் பாபா அந்த ஆசிரமத்தில் தங்குவதை எதிர்த்தனர். அவர் காட்டுப்பகுதியில் உள்ள ஒரு மரத்தடியில் அனைத்து பருவ மாற்றங்களையும் தாங்கிக் கொண்டு அங்கேயே தங்கினார். இதை கண்டு மனமாற்றம் அடைந்த மக்கள் அவரை ஆசிரமத்திற்கு வருமாறு மரியாதையுடன் அழைத்தனர். அங்கிருந்து 2000மாவது ஆண்டில் கிளம்பி 2000 முதல் 2003 வரை ராஜமுந்திரிக்கு அருகில் உள்ள தவலேஸ்வரம் என்னும் ஊரில் ஒரு பக்தரின் இல்லத்தில் தங்கினார். 2003 ஆம் ஆண்டு* முதல் பாபாவின் பயணம் தொடங்கியது. அவர் விசாகப்பட்டினம், ஹைதராபாத், பெங்களூரு, ராஜமுந்திரி, மாணிக் நகர் (ஹம்னாபாத்), அக்கல்கோட், கனகாபூர், சோலாப்பூர், அகமது நகர் மற்றும் ஷீர்டி போன்ற இடங்களுக்கு பயணித்தார். *2006 ஆம் ஆண்டு ராஜமுந்திரியில் தங்கியிருக்கும்* போது அவருடைய பக்தர்களில் சிலரை அழைத்து பீதாபுரம் சென்று அன்னதானத்தை தொடங்குமாறும் "**என்னுடைய நேரம் வரும் போது நான்**

**பீதாபுரம் வருவேன்**" என்றும் கூறினார். அதற்கு பின் பக்தர்கள் பீதாபுரத்தில் பாதகயா அமைந்துள்ள குக்குடேஸ்வரர் கோவிலுக்கு பின்புறம் உள்ள இடத்தில் அன்னதானத்தை துவங்கினர்.

2006ஆம் ஆண்டு பாபா பெங்களூரில் உள்ள ஒரு பக்தரின் வீட்டில் இருந்த போது பீதாபுரத்தில் வஸ்திர தானத்தையும் வித்யா தானத்தையும் துவங்க ஆணையிட்டார். அதன் விளைவாக 12.06.2006ல் பக்தர்களால் இலவச பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. அதே வருடத்தில் வஸ்திரதானமும் தொடங்கப்பட்டது.

அன்னதானம் தொடங்கிய உடனேயே ஒரு பக்தரின் கனவில் பாபா தோன்றி பீதாபுரத்தின் புறவழி சாலையில் அமைந்துள்ள ஒரு விவசாய நிலத்தை வாங்குமாறு ஆணையிட்டார். அந்த நிலத்தின் மத்தியில் உயர் மின் சக்தியுடன் கூடிய மின்சார கம்பி இருக்கும் என்பதை தெரிவித்தார். அந்த கனவில் தன் யோக சக்தியை நிரூபிக்கும் விதமாக அந்த மின்சார கம்பியை கையில் பிடித்துக்கொண்டு 70 அடி உயரத்தில் காட்சி அளித்தார். 2007 ஆம் ஆண்டு பல்லக்கு பயணத்தை தொடங்கினார். ஆனால் அவர் நடை பயணமாகவே பீதாபுரம், மாணிக்கநகர், கனகாபூர், அக்கல்கோட் மற்றும் ஷீர்டி ஆகிய ஊர்களுக்கு சென்றார். பல்லக்கு அந்த இடங்களுக்கு செல்வதற்கு முன்னரே பாபா அவ்விடங்களை அடைந்துவிடுவார்.

2008 ஆம் ஆண்டில் பாபா கிழக்கு கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள அமலாபூர் மாவட்டத்தில் உள்ள ஒரு பக்தரின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது சில பக்தர்கள் அவரை விசாகப்பட்டினத்திற்கு காரில் அழைத்துச் சென்ற போது அவர்கள் பீதாபுரம் புறவழி சாலை வழியாக சென்றுகொண்டிருந்தனர். இந்த இடம்தான் பாபா 2006ல் பக்தனின் கனவில் தோன்றி வாங்கச்சொன்ன நிலம். அந்த இடம்தான் இப்போது ஸ்ரீ கோபால் பாபாவின் ஆசிரமமாக இருக்கிறது. இவை அனைத்தும் 01.10.2008 விஜயதசமி அன்று நடந்தது.

ஸ்ரீ கோபால் பாபா தன் காரில் இருந்து கீழிறங்கி கட்டிடம் கட்டிக் கொண்டிருந்த இடத்தில் ஒரு இருக்கையை போட்டுகொண்டு அமர்ந்தார். அப்போது அவர் "**இனி இது தான் என் வீடு. நான் இங்கே தான் தங்க போகிறேன். 3 நாட்களில் வீடு கட்டி முடிக்க வேண்டும். வாடகை வீட்டில் இனி நான் ஏன் தங்க வேண்டும்?**" என்று கூறிவிட்டு காரில் ஏறி அப்போது தங்கியிருந்த இடத்திற்கு போகச் சொன்னார். ஆசிரமம் கட்டும் வேலை முடிவடையும் வரை அவர் பீதாபுரத்திலேயே தங்கியிருந்தார். கட்டிட வேலை

முடிவடைவதற்கு 40 நாட்கள் ஆனது. (40 நாட்கள் என்றால் 1 மண்டலம். இதன் சிறப்பு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தில் விளக்கப்பட்டுள்ளது). 2008 ஆம் ஆண்டு கார்த்திகை பௌர்ணமி அன்று (அன்னை சுமதி மகாராணியின் பிறந்தநாள்- ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அன்னை) ஸ்ரீ கோபால் பாபா ஆசிரமத்தில் நிரந்தரமாக தங்கத் துவங்கினார். **"என் உடல் இன்னும் 7 வருடங்கள் இங்கு இயங்கும்"** என்று கூறிவிட்டு அன்றிலிருந்து பீதாபுரம் ஆசிரமத்திலேயே இருந்தார். தன் பக்தர்களின் இல்லங்களுக்கு கூட செல்லவில்லை. அவர் ஆசிரமத்தில் தங்கியிருந்த போது துனியை (அணையா நெருப்பு) தொடங்கச் சொன்னார். துனி நெருப்பை எரியூட்டுவதற்கு ஷீரடி துவாரகாமாயியில் இருந்து எரிந்து கொண்டிருந்த நெருப்பு கொண்டுவரப்பட்டது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் தேதி 108 தேங்காய்களை அத்தீயில் செலுத்தி துனியை துவக்கி வைத்தார். தத்த பக்தர்களின் நோய்களையும் தீய கர்மாக்களையும் துனி அழிக்கவல்லது.

ஸ்ரீ கோபால் பாபாவின் ஆணைப்படி பீதாபுரத்தில் 3 பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதலும் முதன்மையானதும் ஏழை எளியவர்களுக்கும் அனாதைகள் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் அன்னதானம் வழங்குவது. தினமும் மதியம் 12 மணியிலிருந்து 3 மணி வரை நடைபெறும்  மகா அன்னதானத்தில் 500-600 மக்கள்  பயனடைகிறார்கள். இரண்டாவதாக ஸ்ரீ கோபால் பாபா ஆணையிட்டது வித்யாதானம். இதன் மூலம் கிராமத்தில் உள்ள ஏழை எளிய மாணவர்கள் இலவச கல்வி பெறுகிறார்கள். 200 மாணவர்கள் இலவசமாக சீருடை, புத்தகம், போக்குவரத்து, பால், காலை மற்றும் மதிய உணவு ஆகியவைகளை பெற்று பயனடைகின்றனர். ஸ்ரீ கோபால் பாபாவின் மூன்றாவது ஆணை வஸ்திரதானம்.ஒவ்வொரு தத்த ஜெயந்தி அன்றும்  பருவ பேரிடர்களின் போதும் பீதாபுரத்திலும் அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏழை எளிய மக்களுக்கு  வஸ்திரங்கள் தானமாக வழங்கப்பட்டு வருகிறது.புடவைகள், வேஷ்டிகள், சட்டைகள், போர்வைகள், செருப்புகள் ஆகியவை தானம் அளிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது அவ்வப்போது தரமான மருத்துவர்களால் மருத்துவ முகாம்களும் இலவச மருத்துவமும் நடைபெறுகிறது. கோபால் என்கிற தன் பெயருக்கேற்ப ஸ்ரீ கோபால் பாபா அவர்களால் 2014 ஆம் ஆண்டு ஆசிரமத்தில் கோசாலை தொடங்கப்பட்டது. இந்திய வகையை சேர்ந்த ஓங்கோல், மைசூர், கிர் போன்ற பசுக்கள் நூற்றுக்கணக்கில் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ கோபால் பாபா ஆசிரமத்தில் உள்ள கபில பசுவுக்கு தினமும் காலையில் பூஜைகள் நடக்கும்.பிறகு அத்தி மரத்தடியில் உள்ள ஸ்ரீ ஸ்ரீபாத

ஸ்ரீவல்லபருக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் நடைபெறும்.அதற்கு பின் ஸ்ரீ காயத்ரி ஹோமமும் பின்னர் அகண்ட துனிக்கும் ஸ்ரீபாதருக்கும் நைவேத்தியம் நடைபெறும்.அதற்கு பின் அன்னதானம் துவங்கும். மாலை வேளையில் ஆசிரம வளாகத்தில் ஸ்ரீபாதருக்கு பல்லக்கு ஊர்வலம் நடைபெறும்.ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் ஸ்ரீ சத்ய தத்த விரதம், ஸ்ரீ காயத்ரி ஹோமம் நடைபெறும் அதுமட்டுமல்லாது ஒவ்வொரு கிருஷ்ண பக்ஷத்தில் வரும் பௌர்ணமி அன்றும் குழந்தை வளம் பெற வேண்டுவோர் ரிஷி பூஜை செய்வர். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் எள்ளு அபிஷேகமும் தைல அபிஷேகமும் நடைபெறும். குரு பூர்ணிமா, ராக்கி பூர்ணிமா, ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சுவாமி மஹா உற்சவம், மஹாளய அமாவாசை, விஜயதசமி, கார்த்திகை பௌர்ணமி, மகா சிவராத்திரி ஆகிய தினங்களில் உற்சவங்கள் நடைபெறும்.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தில் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தான் அவதூதர் ரூபத்தில் வந்து தன் பணிகளை தொடர்வேன் என்று கூறியிருந்தார் (ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் அத்தியாயம் 4). இந்த யுகத்தின் அவதூதராக தோன்றியவர்தான் ஸ்ரீ கோபால் பாபா. அவர் ஸ்ரீ தத்தாத்ரேயரை போல் எப்போதும் '**குழந்தைத்தனமான பித்து பிடித்த பிசாசு**' (*Balun Mata Pisach*) யோக நிலையிலே இருந்தார்.பாபா ஆசிரமத்தில் தங்கத் தொடங்கிய பிறகு உலகின் பல மூலைகளில் இருந்த தத்த பக்தர்களின் கனவில் தோன்றி பீதாபுரத்திற்கு அழைத்து பல பொறுப்புக்களையும் பணிகளையும் கொடுத்தார். இவ்வழிகளின் மூலம் ஸ்ரீ கோபால் பாபா தன் யோக சக்திகளை பக்தர்களிடம் நிரூபித்தார்.ஸ்ரீ கோபால் பாபா எப்போதும் அமைதியாகவும் சாந்தமாகவும் காணப்பட்டார். சில சமயங்களில் பாபா மராத்தி,ஆங்கிலம்,தெலுங்கு, உருது,ராஜஸ்தானி, ஜாட்,பஞ்சாபி போன்ற மொழிகளில் அந்த ஊர்களிலிருந்து வரும் பக்தர்களிடம் பேசுவதுண்டு. ஸ்ரீ கோபால் பாபாவின் வயதை யாராலும் கணிக்க முடியவில்லை.பௌஷ்ய சுத்த துவிதியையான(மார்கழி மாதம் சுத்த துவிதியை) 25 டிசம்பர் 2010 அன்று "**இன்று எனக்கு 252 வயதாகிறது**" என்று கூறினார்.ஸ்ரீ தாத்தாத்ரேயரின் அவதாரமான ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதிக்கும் பௌஷ்ய சுத்த துவிதியை அன்று தான் ஜென்ம தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

1458 ஆம் ஆண்டு மாசி மாதம் பௌர்ணமிக்கு அடுத்த நாளான பிரதமையன்று ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி கதலிவனத்தில் மறைந்தார்.இந்நாளை குரு பிரதிபதா என்று கொண்டாடுவர்.300 வருடங்களுக்கு பிறகு அவர் ஸ்ரீ சுவாமி சமர்த்தராக அவதரித்தார். சமர்த்தர் தோன்றிய நாள் பௌஷ்ய சுத்த துவிதியை. எந்த நாளில் தனக்கு 252 வயதாகிறது என்று ஸ்ரீ கோபால் பாபா கூறினாரோ அன்றுடன் தான் சுவாமி சமர்த்தர் தோன்றி 252 வருடங்கள்

ஆகியிருந்தது. ஸ்ரீ கோபால் பாபா எப்போதும் "**ஒருவர் பாகல்கோட் இன்னொருவர் அக்கல்கோட்.நான் அக்கல்கோட்**" என்று கூறுவார்.ஸ்ரீ பாபா அனைத்தையும் அறிந்தவர் ஆதலால் தன் பக்தர்களின் பொருள் மற்றும் ஆன்மீக தேவைகளை கவனித்து கொள்வார். ஆகவே ஸ்ரீ கோபால் பாபாவின் முன் எதையும் கூற வேண்டும் என்ற அவசியமே இல்லை. ஸ்ரீ கோபால் பாபாவை தரிசிக்க வரும் பக்தர்கள் எந்தவிதமான இடர்களை சந்திக்க போகிறார்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.ஆனால் அனைத்தையும் அறிந்திருந்த ஸ்ரீ பாபா அவற்றை பக்தர்களுக்கே தெரியாமல் சரி செய்வது மட்டுமல்லாது அனைத்து இடர்களையும் சரியாக்குவேன் என்ற உறுதியையும் அளிப்பார்.பின்னர் அந்த பக்தனின் குடும்பம் தத்த பக்தியில் சந்தோஷ களிப்பில் வாழ்வர் என்பதில் என்ன சந்தேகம்?

2007 ஆம் ஆண்டு பாபா பெங்களூரில் உள்ள தன் பக்தன் வீட்டிலிருந்து விசாகபட்டினத்திற்கு காரில் பயணித்து கொண்டிருந்தார். அப்போது சித்ரதுர்காவிற்கு அருகில் உள்ள சிக்மகளூர் மலைப்பகுதியில் உள்ள பாபாபுடன்கிரி என்கிற மலையில் தங்கியிருந்தார். பாபாவின் சேவைக்காக அவருடன் இரண்டு பக்தர்கள் இருந்தனர். அப்போது அவர்களுக்கு "**நீங்கள் சேவை செய்து கொண்டிருப்பது என்றும் பதினாறாக இருப்பவர். அவர் தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்**" என்கிற அசரீரியை கேட்டனர்.

பிறகு பாபா ஆசிரமத்தில் தங்குவதற்கு வந்த பிறகு ஒரு பக்தருக்கு கனவில் சிவ-பார்வதி,நந்தீஸ்வரர்,திருப்பதி பாலாஜி மற்றும் பாபா தெய்வீக இசையுடன் விஸ்வரூப தரிசனம் அளித்தனர். அப்போது நந்தீஸ்வரர் அந்த தெய்வீக இசையை தலையசைத்து கேட்டு ரசித்து கொண்டிருந்தார்.பிறகு அனைவரும் ஆசிரமத்திற்குள் நுழைந்தனர். திருப்பதி பாலாஜி மட்டும் ஆசிரமத்திலேயே தங்கிவிட அந்த இடத்தில் 1.5 லட்சம் ரோஜாக்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் ஒரு நாள் பாபா ஆசிரமத்து நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தார்.அப்போது ஆசிரம மண்ணை தொட்டு விட்டு "**பரமாத்மா 5 பைசா கொடுத்தவுடன் திருப்பதி மஹாபட்டணம் உருவானது. பரமாத்மா இங்கு 5 ரூபாய் கொடுத்தார்**" என்று கூறியதன் மூலம் இந்த இடம் திருப்பதியை விட 100 மடங்கு சக்தி வாய்ந்தது என்பதை குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் ஸ்ரீ கோபால் பாபாவாக பிறந்தார். கபீர்தாஸ் காலத்தில் அவருக்கு குருவாக இருந்த ஸ்ரீ ராமானந்த் வேறெவரும்

இல்லை ஸ்ரீ கோபால் பாபாதான். சாய்பாபாவின் அவதாரத்தின் போது இருந்த கபீர்தாசுக்கு குருவாக இருந்தவர் ஸ்ரீ கோபால் பாபா மஹாவிஷ்ணு வெங்குசா கோபால் ராவ் மாதவ் ராவ் தேஷ்முக் (சாய்பாபாவின் குரு வெங்குசாவாக பிறந்தது ஸ்ரீ கோபால் பாபா தான்). பிறகு 'கோபால்' என்னும் அதே பெயரில் பீதாபுரத்தில் தோன்றினார். 20 நவம்பர் 2016 ஆம் ஆண்டு கார்த்திகை கிருஷ்ண பக்ஷம் சஷ்டி அன்று தன் பக்தர்களுடன் பணி செய்து கொண்டிருக்கும் போது சமாதி அடைந்தார்.

பாபா சமாதி அடைவதற்கு முன் ஒரு பக்தருக்கு ஒரு கனவு வந்தது. அக்கனவில் பாபாவின் காரில் பின்புறம் உள்ள ஜன்னலில் "**பீடாதிபதி, ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மஹாஸ்தான்,பீதாபுரம்**" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே பின்புறம் "**பீடாதிபதி இறந்துவிட்டார்**" என்ற குரல் கேட்டது. பாபா ஏற்கனவே பக்தர்களிடம் ஒரு இடத்தை தொட்டுக்காட்டி தன் சமாதி இந்த இடத்தில்தான் என்று கூறியிருந்தார். "**பரமாத்மாவுக்கு வயதாகிவிட்டது. பரமாத்மா ஓய்வு பெறப்போகிறார். பூமிக்கடியில் இருந்து கொண்டு வேலை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது**" என்று பாபா கூறியிருந்தார்.

பாபா தான் சமாதி அடைவதற்கு முன்னர் ஒரு பக்தரை அழைத்து தன் சமாதிக்கு அருகில் 2 விளக்குகள் எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார்.பின்னர் இன்னொரு பக்தரை அழைத்து தன்னுடைய சமாதிக்கு தினமும் விபூதி அபிஷேகம் நடைபெற வேண்டும் என்று ஆணையிட்டார். மேலும் இன்னொரு பக்தரிடம் தன் பக்தர்களுக்காக செய்யும் பணிகளினால் அவருக்கு ஏற்படும் உடல் வலிகளை போக்க தினமும் அவரை பிடித்துவிட (*massage*) வேண்டும் என்று கூறினார் (தினமும் அவருடைய சமாதியும் திருவுருவச் சிலையும் பிடித்து விடப்படுகிறது).பாபாவின் பஞ்சலோக சிலை பிரதிஷ்டைக்கு பின்னர் தன் பக்தர்களை அழைத்து எப்படி திருப்பதி பாலாஜிக்கு பூர்ண அபிஷேகம் நடைபெறுகிறதோ அதே போல் தனக்கும் நடக்க வேண்டும் என்று ஆணையிட்டார். 2017 ஆம் ஆண்டு பாபாவின் முதல் சிரார்த்த தினம் தொடங்குவதற்கு முன்னர் "**நான் எங்கும் செல்லவில்லை. என்னுடைய ஸ்ரார்த்த தினத்தை கொண்டாட வேண்டாம். அதை என்னுடைய திருமண வைபவம் போல் 9 நாட்கள் பிரம்மோற்சவமாக கொண்டாடுங்கள்**" என்று ஆணையிட்டார்.

பாபா சமாதி அடைந்தது முதல் உலகத்தின் குண்டலினி விழிப்படைய துவங்கியுள்ளது. அதன் அறிகுறிகளை பல பக்தர்கள் அனுபவப் பூர்வமாக உணர்ந்து வருகின்றனர். பீதாபுரத்திற்கு மக்கள் எறும்பு கூட்டம் போல் வருவர்

*என்று ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த பணியை நிறைவேற்றும் பொருட்டு பக்தர்களின் பொருள் மற்றும் ஆன்மீக தேவைகளை பாபா தன் சமாதியிலிருந்து நிறைவேற்றி வருகிறார். ஸ்ரீ கோபால் பாபாவின் ஆசிரமத்தில் தினமும் அன்னதானம், வித்யாதானம், வஸ்திர தானம், கோசேவை ஆகிய பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. நன்கொடைகளை ஆசிரம வங்கி கணக்கில் செலுத்தி அனைவரும் புண்ணியம் பெறலாம்.*

**Shri Gopalbaba Annasantarpana Trust**

SBI A/C NO: 36502382299 IFSC : SBIN0001003

UNION BANK A/C NO: 043211100002193
IFSC : UBIN0804321

**திகம்பரா திகம்பரா ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப திகம்பரா!**
**திகம்பரா திகம்பரா ஸ்ரீ குரு கோபால் பாபா திகம்பரா!**

# ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீபாத ஸ்ரீ சாய் பீடம்

(காஞ்சிபுரம்)

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆட்கொள்ளப்பட்டவரும் ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீபாத ஸ்ரீ சாய் பீடத்தின் ஸ்தாபகருமான ஸ்ரீ மாதா ஸ்ரீ வல்லபானந்த மயி அவர்களிடம் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தனக்கு தக்ஷிண (தெற்கு) தேசத்தில் ஓர் இருப்பிடம் அமைக்க உத்தரவிட்டார். பிறகு ஸ்ரீபாதர் ஆணைப்படி அவருக்கு திருக்கோவில் கட்டுவதற்காக இடம் தேடிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு மகானின் வழிகாட்டுதல் மூலம், சிவபக்தர்களுடன் 2017 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மேல் சிறுனை என்கிற கிராமத்திற்கு வந்தார். அங்கு அவருக்கு ஸ்ரீபாதர் காட்சிதர இந்த இடமே ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு கோவில் கட்டுவதற்கான இடம் என்று முடிவு செய்தார். இந்த கிராமத்திற்கு சிவ பக்தர்களுடன் அனுப்பிய அம்மகான் **"ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவா"** என்பது அவர் காஞ்சி ஸ்ரீ சங்கர மடத்திற்கு சென்றபின் அறிந்து கொண்டார். பிறகு காஞ்சிபுரம் மேல் சிறுனை கிராமத்தில் 1000 வருடம் பழமையான சிதிலமடைந்திருந்த சிவன் கோவிலை கட்டவும், ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம் அமைக்கவும் அவருக்கு தெய்வீக எண்ணம் உதித்தது.

காஞ்சிபுரத்தைப் போலவே ஸ்ரீ பீடிகாபுரமும் பதினெட்டு சக்தி பீடங்களில் ஒன்று (காஞ்சிபுரம் - ஸ்ரீ காமாக்ஷி, ஸ்ரீ பீடிகாபுரம் - ஸ்ரீ புருஹூதிகா தேவி). பீடிகாபுரத்தில் எப்படி ஸ்ரீ குக்குடேஸ்வரரும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியும் ஒரே சன்னிதானத்தில் அமைந்துள்ளார்களோ அதேபோல் இங்கு ஸ்ரீ அக்ஷயலிங்கேஸ்வரரும் ஸ்ரீ லலிதாம்பிகையும் அமைந்துள்ளனர். ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் அத்தியாயம் 27ல் அவர், **"எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நடந்த சம்பவங்களை என்னால் மீண்டும் உருவாக்க முடியும். புது சம்பவங்களை சில மாறுதல்களுடன் கூட என்னால் உருவாக்க முடியும்"** என்று கூறியுள்ளதை உண்மையாக்கும் விதத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. அதனால் இவ்விடத்தை தக்ஷிண பீடிகாபுரம் என்று கூறுவது மிகையாகாது.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அனுக்கிரகத்தினால் 2019 ஆம் ஆண்டு ஏகமுக தத்தாத்ரேயர், ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஷீரடி ஸ்ரீ சாய்பாபா விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்த திருக்கோவிலுக்கும், ஸ்ரீ லலிதாம்பிகை சமேத ஸ்ரீ அக்ஷயலிங்கேஸ்வரர் திருக்கோவிலுக்கும் மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. மேலும் 2021 ஆம் ஆண்டு, உலகிலேயே

முதன்முறையாக ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயரின் விக்கிரகமும், ஸ்ரீ சக்கரமும் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது.

மேலும் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைப்படி ஸ்ரீ தத்தாத்ரேயர் அவதாரங்களான ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமி, அக்கல்கோட் மகராஜ் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர், ஸ்ரீ மாணிக் பிரபு மகராஜ், ஸ்ரீ கஜானன் மகராஜ் ஆகிய அனைத்து குரு அவதாரங்களின் மூர்த்திகளும் பாதுகைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது.

தக்ஷிண பீடிகாபுரம் என அழைக்கப்படும் காஞ்சிபுரம் மேல் சிறுணையில் உள்ள ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீபாத ஸ்ரீ சாய் பீடம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைப்படி யுகமாற்றத்திற்காகவும், சத்ய யுகத்திற்காகவும் உருவான புண்ணிய ஸ்தலம். இந்த மகத்துவமான புண்ணியம் வாய்ந்த இத்திருத்தலத்திற்கு வருபவர்களின் ஜென்ம பாவ கர்மாக்கள் விலகுவது மட்டுமல்லாமல் அவர்களின் சகலவிதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் ஆன்மீக முன்னேற்றம் அடைவதும் திண்ணம். மேலும் அனைத்து தத்த அவதாரங்களின் அனுக்கிரகத்தையும் பெற்று வளமான வாழ்க்கை அமையும்.


ஒவ்வொரு மாதமும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஜென்ம நட்சத்திரமான சித்திரை நட்சத்திரத்தில் ஹோமம் மற்றும் அன்னதானம் நடைபெறுகிறது.

## சத்ய யுகத்திற்கான மந்திரம்

**திகம்பரா! திகம்பரா! ஶ்ரீபாத வல்லப திகம்பரா!**
**திகம்பரா! திகம்பரா! ஶ்ரீ சக்ர தத்தாத்ரேய திகம்பரா!**

*இம்மந்திரத்தை ஜெபித்து ஶ்ரீபாத ஶ்ரீவல்லபரின் பரிபூரண அனுக்கிரகத்தை பெறுவீர்.*

*—ஜெய் ஶ்ரீபாதா—*



*பூஜை, ஹோமம், அன்னதானம், புத்தகத்திற்கு கீழ்கண்ட அக்கௌன்ட் இல் பணம் செலுத்தலாம்*

*SREE PADA SREE VALLABHA TRUST*
*A/C : 1650115000000767*
*PALLAVARAM BRANCH IFSC CODE : KVBL0001650*
*KARUR VYSYA BANK CURRENT ACCOUNT*

# பொருளடக்கம்


| அத்தியாயம் எண் | அத்தியாயத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| **1** | ஸ்ரீ சங்கர் பட்டிற்கும் வ்யாக்ரீஸ்வர சர்மாவுக்கு இடையே நடந்த உரையாடல் | *1* |
| **2** | சங்கர்பட் ஸ்ரீ சித்தேந்திர யோகியை சந்தித்தல்- விசித்ராபுரக் கதை | *10* |
| **3** | ஸ்ரீ பழனிச்சாமியைச் சந்தித்தல்- அவரின் குருவபுரப் பயணம் | *27* |
| **4** | குருவபுரத்தில் தரிசித்த வாசவாம்பிகா பற்றிய சங்கர் பட்டின் தெளிவுரை | *39* |
| **5** | திருப்பதிக்கு வருதலும், காணிப்பாக்கத்தில் ஸ்ரீ திருமலதாசை சந்தித்தலும் | *60* |
| **6** | நரசாவதானியின் கதை | *71* |
| **7** | அண்ட கோளங்கள் பற்றிய விளக்கம் | *91* |
| **8** | தத்த அவதாரங்கள் பற்றிய விளக்கம் | *108* |
| **9** | கர்மாவின் பலன்கள் பற்றிய விவாதம் | *125* |
| **10** | ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியின் உருவங்கள் பற்றிய விளக்கம் | *145* |
| **11** | ஸ்ரீ தத்தரை வழிபட்டால் அனைத்து தெய்வங்களையும் வழிபடும் பலன் கிடைக்கும் | *161* |
| **12** | குலசேகரனின் கதை | *171* |
| **13** | ஆனந்த சர்மா அளித்த தகவல் தொகுப்பு | *176* |
| **14** | தத்ததாஸுக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதம் | *190* |
| **15** | பங்காரப்பா மற்றும் சுந்தரராம சர்மா பற்றிய விவரங்கள் | *202* |
| **16** | ஸ்ரீமன் நாராயணன் அளித்த விவரங்கள் | *216* |

| | | |
|---|---|---|
| **17** | ஸ்ரீ நாமானந்தாவை சந்தித்தல் | *228* |
| **18** | ரவிதாஸின் கதை | *243* |
| **19** | குருசரணை சந்தித்தல் | *254* |
| **20** | விஸ்ஸாவதானி அளித்த தகவல்கள் | *266* |
| **21** | தண்டிஸ்வாமி குக்குடேஸ்வரர் கோவிலுக்கு விஜயம் செய்தல் | *281* |
| **22** | குருதத்த பட்டின் கதை | *292* |
| **23** | சிவ வழிபாட்டின் முக்கியத்துவத்தை பற்றிய விளக்கம் | *301* |
| **24** | அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின் விளக்கம் | *307* |
| **25** | ருத்ராக்ஷங்களின் மகிமைகள் | *314* |
| **26** | கன்யகாபரமேஸ்வரியின் பிறப்பின் கதை | *319* |
| **27** | விருபாக்ஷரை பஞ்சதேவ மலையில் சந்தித்தல் | *326* |
| **28** | ஸ்ரீ வாசவி மற்றும் நாகரேஸ்வரரின் கதை | *330* |
| **29** | அக்னிப்ரவேசம் மேற்கொண்ட தம்பதிகளை பற்றிய விளக்கம் | *339* |
| **30** | ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மகாசமஸ்தானம் ஸ்தாபிக்கப்படும் என்று ஸ்ரீபாதரே அறிவித்தல் | *348* |
| **31** | தசமஹாவித்யா பற்றிய விளக்கம் | *353* |
| **32** | நவநாதர்களின் கதை மற்றும் விளக்கம் | *358* |
| **33** | ஸ்ரீ ஸ்ரீபாதர் தனிப்பட்ட முறையில் அவரே ரமணி மற்றும் நரசிம்ம ராயுடுவின் திருமணத்தை நடத்தி வைத்தல் | *363* |
| **34** | சரபேஸ்வரரின் கதை | *368* |
| **35** | உக்ரதாரா தேவியைப் பற்றிய விளக்கம் | *375* |
| **36** | வேதாந்த சர்மா அளித்த விவரங்கள் - மாதங்கியின் வழிபாடு | *380* |

| | | |
|---|---|---|
| **37** | சின்னமஸ்தா தேவி பற்றிய வர்ணனை | *389* |
| **38** | பகளாமுகி வழிபாட்டின் விளக்கம் | *393* |
| **39** | நாகேந்திர சாஸ்திரியை சந்தித்தல் | *402* |
| **40** | பாஸ்கர சாஸ்திரியை சந்தித்தல் | *408* |
| **41** | போலி சந்நியாசியின் கதை | *412* |
| **42** | ஸ்ரீ ஸ்ரீபாதர் தெய்வீக தரிசனம் அளித்தல் | *420* |
| **43** | அனகா லக்ஷ்மியை பற்றிய வர்ணனை | *426* |
| **44** | சொர்ண பீதிகாபுரம் பற்றிய வர்ணனை | *432* |
| **45** | அனுமனை பூமியில் அவதரிக்குமாறு அறிவுறுத்துதல் | *438* |
| **46** | ஸ்ரீ தன குப்தர் வீட்டுக்கு செல்லுதல் | *446* |
| **47** | ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பெற்றோர்கள் மற்றும் சீடர்களை பீதிகாபுரத்தில் இருந்து பஞ்சதேவ மலைக்குக் கொண்டுவருதல் | *451* |
| **48** | பஞ்சதேவ மலையில் இருக்கும் தர்பாரின் வர்ணனை | *456* |
| **49** | ஸ்ரீ ஸ்ரீபாதர் கர்மாக்களை அழிக்கும் முறைகள் | *460* |
| **50** | குரு நிந்தனையால் ஏற்படும் ஏழ்மை மற்றும் மற்ற தோஷங்களில் இருந்து விடுபடுதல் | *464* |
| **51** | இந்த புத்தகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலன் | *467* |
| **52** | சங்கர் பட்டின் யோக அனுபவங்கள் | *469* |
| **53** | ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் பீதிகாபுரத்தை வந்தடையும் வழி | *470* |

## சப்த பாராயணம்

பக்தியுடன் ஏழு நாட்களுக்கு செய்யப்படும் பாராயணம் சப்த பாராயணம் என்று அழைக்கப்படும். இம்முறையில் பக்தியுடன் பாராயணம் செய்தால் அபரிமிதமான அருள் பெறலாம்.

*நாள் 1 : அத்தியாயம் 1 இல் இருந்து அத்தியாயம் 6 வரை*

*நாள் 2 : அத்தியாயம் 7 இல் இருந்து அத்தியாயம் 12 வரை*

*நாள் 3 : அத்தியாயம் 13 இல் இருந்து அத்தியாயம் 18 வரை*

*நாள் 4 : அத்தியாயம் 19 இல் இருந்து அத்தியாயம் 22 வரை*

*நாள் 5 : அத்தியாயம் 23 இல் இருந்து அத்தியாயம் 34 வரை*

*நாள் 6: அத்தியாயம் 35 இல் இருந்து அத்தியாயம் 42 வரை*

*நாள் 7: அத்தியாயம் 43 இல் இருந்து அத்தியாயம் 53 வரை*

இப்புத்தகத்தை பக்தியுடன் பாராயணம் செய்து பதினோரு பேருக்கு அன்னதானம் அளித்தாலோ அல்லது ஏதாவது தத்த க்ஷேத்திரத்திற்கு தேவைப்படும் செலவிற்கான பணம் அளித்தாலோ அல்லது அனகாஷ்டமி விரதம் கடைபிடித்து 11 பேருக்கு அன்னதானம் அளித்தாலோ அபரிமிதமான அருளைப் பெறலாம்.

பாராயணம் மண்டலமாகவோ அல்லது சப்த பாராயணமாகவோ அல்லது தினசரி பாராயணமாகவோ மேற்கொள்ளலாம்.

**ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே!**



# அத்தியாயம் – 1

## ஸ்ரீ சங்கர் பட்டிற்கும் (சரிதாம்ருதத்தின் ஆசிரியர்) வ்யாக்ரீஸ்வர சர்மாவுக்கும் இடையே நடந்த உரையாடல்

ஸ்ரீ மகாகணபதி, ஸ்ரீ மகாசரஸ்வதி, ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அனைத்து தெய்வங்கள், என் வம்ச குருக்களை வணங்கி, பல கோடி பிரபஞ்சங்களின் தலைவரான, ஸ்ரீ தத்தாத்ரேயரின் தற்போதைய அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மகிமைகளை நான் விவரிக்க தொடங்குகிறேன்.

ஸ்ரீ தத்தாத்ரேயர் மிகவும் பழமையானவர் மற்றும் அழிவே இல்லாதவர். இந்த கலியுகத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயர், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக ஆந்திர மாநிலம் கோதாவரி பகுதியில் அமைந்துள்ள பீதிகாபுரம் என்னும் ஊரில் அவதரித்துள்ளார். அவரின் தெய்வீக சரித்திரம் மற்றும் அவர் லீலைகளின் மகிமைகளை ஒரு சிறந்த பண்டிதரால் கூட வர்ணிக்க முடியாது. நான் ஒரு அஞ்ஞானி, அறியாமை நிறைந்தவன். இந்த சரிதாம்ருதத்தை விவரிக்கும் முயற்சியானது ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பம் மட்டும் அல்ல. இது அவரின் ஆணை மற்றும் தெய்வீக ஆசீர்வாதம் என்பதை பணிவுடன் உங்களுக்கு தெரிவித்து கொள்கிறேன்.

என் பெயர் சங்கர் பட். நான் கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவன். ஸ்மார்த்த பிரிவு, பாரத்வாஜ கோத்திரம். நான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை தரிசிக்க உடுப்பியில் உள்ள அவர் கோவிலுக்கு சென்றேன். அங்கு ஸ்ரீ கிருஷ்ணர், மயிற்பீலியுடன் குழந்தை ரூபத்தில் காட்சி அளித்தார். அவர் என்னை கன்னியாகுமரி சென்று ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரியை தரிசனம் செய்யுமாறு ஆணையிட்டார்.

கன்னியாகுமரியில் இருக்கும் ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரியை தரிசித்துவிட்டு, அங்கிருக்கும் முக்கூடல் சங்கமத்தில் ஸ்நானம் செய்தேன். ஒரு செவ்வாய்கிழமை அன்று அம்மனை தரிசிக்க கோவிலுக்குள் சென்றேன். அர்ச்சகர் மிகுந்த சிரத்தையுடன் பூஜை செய்து கொண்டிருந்தார். என் கையிலிருந்த சிவப்பு பூக்களை பெற்றுக் கொண்டு அம்மனை பூஜித்தார். அப்போது கருணைக் கண்களுடன் என்னை பார்த்த அம்மன், **"சங்கரா!! உன் பக்தியில் மகிழ்ச்சி அடைந்தேன். நீ குருவபுரம் சென்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசித்து பிறவிப் பலனை பெறுவாயாக!! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை நீ தரிசனம் செய்தாலே உன் உடல், ஆன்மா மற்றும் அனைத்து உறுப்புகளிலும் வர்ணிக்க முடியாத அனுபவங்கள் ஏற்படும்"** என்று கூறினாள்.

அம்மன் அருளுடன் அந்த புனித க்ஷேத்திரத்தில் இருந்து புறப்பட்டேன். வழியில், மருத்துவமலை என்னும் கிராமத்தை அடைந்தேன். அது கன்னியாகுமரிக்கு மிக அருகில்தான் இருக்கிறது. அனுமன் சஞ்சீவினி மலையை இமயமலையிலிருந்து தூக்கிச்

செல்லும் போது இந்த இடத்தில் ஒரு சிறு துண்டு விழுந்தது என்றும், அதனால்தான் இந்த கிராமம் மருத்துவமலை என்கிற பெயரைப் பெற்றது என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன்.

மருத்துவமலை கிராமத்தில் இருக்கும் மலை மிகவும் அழகு வாய்ந்ததாக இருந்தது. அங்கு சில குகைகள் இருக்கின்றன. அங்கு பல சித்த புருஷர்கள் இருப்பதாகவும், அவர்கள் சூக்ஷ்ம ரூபத்தில் தவம் புரிந்து கொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

எனக்கு பாக்கியம் இருந்தால் எவரேனும் சிறந்த மனிதரை தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்ற நோக்கத்துடன் குகைகளுக்குள் ஆராய்ந்தேன். எனினும் ஒரு குகை வாயிலில் ஒரு புலியைக் கண்டேன். புலியை கண்டவுடன், என் அனைத்து உறுப்புகளும் நடுங்கத் தொடங்கியது. **"ஸ்ரீ ஶ்ரீபாதா! ஸ்ரீவல்லபா! தத்தப் பிரபு!!"** என பயத்தில் நடுங்கிக்கொண்டே கூச்சலிட்டேன். அந்த புலி வீட்டு விலங்கைப் போல் நின்றது. ஒரு வயதான துறவி குகையிலிருந்து வெளியே வந்தார். அந்த மருத்துவமலை முழுவதும் ஸ்ரீ ஶ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமம் எதிரொலித்தது.

அந்த வயதான துறவி என்னை பார்த்து **"மகனே!! நீ ஒரு நிறைவானவன். நிர்விகல்ப சமாதியில் (பிரம்மத்தை அறிய முற்படும் போது அடையும் யோக நிலை) வாசம் செய்யும் சித்தர்கள், மகா யோகிகள், ஞானிகள் மற்றும் பரமஹம்சர்களால் மட்டுமே கலியுகத்தில் ஸ்ரீ தத்தர், ஸ்ரீ ஶ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளதை உணர்ந்து கொள்ள முடியும். உன் அதிர்ஷ்டத்தினால்தான் நீ இங்கு வந்துள்ளாய். இவ்விடம் மிகுந்த ஆன்மீக நாட்டம் நிறைந்தது. இது ஒரு சித்தபூமி. உன் விருப்பங்கள் நிறைவேறும். நீ நிச்சயம் ஸ்ரீ ஶ்ரீபாதரை தரிசித்து அருள் பெறுவாய். நீ அந்த குகை வாயிலில் பார்த்த புலி ஒரு ஞானி. நீ அவரை வணங்க வேண்டும் என்று உனக்கு அறிவுறுத்துகிறேன்"** என்றார்.

நான் புலி உருவத்தில் இருந்த அந்த ஞானியை வணங்கினேன். உடனே, அந்த புலி **"ஓம்"** என்று கர்ஜித்தது. அது மருத்துவமலை முழுவதும் எதிரொலித்தது. **"ஶ்ரீ ஶ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே!"** (மஹாராஜ ஸ்ரீ ஶ்ரீபாதரே உங்கள் தாழ் பணிகிறேன்) என்று அழகாக பாடியது. நான் இந்த அற்புதமான காட்சியை கண்டேன். அந்த புலி உருவத்தில் உள்ள அனைத்து அணுக்களும் நொறுங்கி, தெய்வீக பிரகாசத்துடன் ஒரு மனித உருவம் ஒன்று அங்கு வெளியானது. அந்த தெய்வீக மனிதர் வயதான துறவியை வணங்கி விட்டு ஒளிபொருந்திய உடலுடன் பறந்து சென்று விட்டார். அந்த வயதான துறவி என்னை பார்த்து சிரித்தார். அவர் என்னை குகைக்குள் அழைத்து சென்றார். நான் அமைதியாக அவருடன் சென்றேன். அந்த துறவியின் கண்களில் இருந்து கருணை வழிந்தோடியது. அவர் தன் மனோசக்தியால் ஹோமத் தீயை மூட்டினார். அவர் புனித பொருட்கள், சில இனிப்புகள் மற்றும் பழங்களை ஹோமத்தில் இடுவதற்காக உருவாக்கினார். அவர் வேத மந்திரங்களைக் கூறிக்கொண்டே அவற்றை ஆஹுதியிலிட்டார்.

அவர் என்னிடம், "நீதியை பறைசாற்றும் சடங்குகளான யாகங்கள் மற்றும் யக்ஞங்கள் இந்த உலகத்தில் அழிந்து கொண்டிருக்கின்றன. பஞ்சபூதங்களினால் பலனடையும் மனிதன், அந்த பஞ்சபூதங்களின் அதிபதியான தெய்வங்களை மறந்து கொண்டிருக்கிறான். அந்த தெய்வங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான் யக்ஞங்கள் செய்யப்படுகின்றன. யக்ஞங்களினால் தெய்வங்கள் திருப்தி அடைகின்றன. இயற்கை அவற்றின் அருளினால் நமக்கு சாதகமாக ஆகின்றன. இயற்கையின் சக்திகள் மனிதனுக்கு எதிராக திரும்பினால் அவனால் தொடர்ந்து வாழ முடியாது. இயற்கை சக்திகள் சமாதானமாக இல்லாமல் இருக்கும் போது, பேரழிவுகள் நடைபெறும். மனிதன் தன் நீதியின் பாதையில் இருந்து விலகும் போது, இயற்கை அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

நான் இந்த யக்ஞத்தை உலக நலனுக்காக செய்தேன். யக்ஞம் என்றால் இணைவு என்று பொருள். அதிர்ஷ்டவசமாக, நீ இந்த யக்ஞத்தை பார்த்திருக்கிறாய். அதன் பலனால், ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தரிசனத்தை கண்டிப்பாக பெறுவாய். பல ஜென்மங்களில் செய்த புண்ணியங்களின் பலன் ஒருசேர பலன் தரும் போதுதான், இதுபோன்ற கிடைக்காத அதிர்ஷ்டங்கள் நிகழும்" என்று கூறினார்.

நான் அவரை வணங்கிவிட்டுப் பேசினேன். **"சித்தர்களில் மிக சிறந்தவரே! நான் ஒரு ஞானியோ யோகியோ இல்லை. நான் ஒரு பக்தனும் இல்லை. நான் ஒரு அறியாமை நிறைந்தவன். தயவுகூர்ந்து என் மேல் கருணை கொண்டு என் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும்"** என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் சம்மதித்தார்.

பின்னர் நான், **"சிறந்த சித்தரே!! நான் கன்யகாபரமேஸ்வரியை தரிசித்தபோது அவள் என்னை குருவபுரம் சென்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசனம் செய்யுமாறு கூறினாள். நான் இங்கு உங்களையும் மற்றும் புலி உருவில் இருந்த ஒருவரையும் கண்டேன். புலி உருவில் இருந்த அந்த தெய்வீக புருஷர் யார்? உண்மையில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் யார்? தயவுசெய்து என் சந்தேகங்களைத் தீர்த்து எனக்கு அருள் புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்"** என்று வேண்டிக்கொண்டேன்.

"மகனே!! ஆந்திர மாநிலத்தில் உள்ள கோதாவரி நதிக்கரையில் அத்ரி மகரிஷி தவம் செய்த ஆத்ரேயபுரம் என்கிற கிராமம் ஒன்று உள்ளது. அந்த கிராமத்தில் காஸ்யப கோத்திரத்தில் வைதீகமான பிராமண குடும்பத்தில் ஒருவர் பிறந்தார். அவருக்கு அவர் பெற்றோர்கள், '**வ்யாக்ரீஸ்வர சர்மா**' என்று பெயரிட்டனர். அவருடைய தந்தை பெரிய ஞானியாக இருப்பினும் மகன் மிகுந்த முட்டாளாக இருந்தான். பல நாட்களுக்கு கற்பிக்கப்பட்டும், ஒரு நாளைக்கு குறிப்பிட்ட முறை கூற வேண்டிய காயத்ரி மந்திரத்தை கூட அவரால் சரியாக செயல்படுத்த முடியவில்லை. நமஸ்காரம் செய்யும் போது கூறப்படும் '**அபிவாதயே**' மட்டும்தான் அவரால் சரியாக கூற முடிந்தது. மற்றவர்கள் கூறும் அவமான வார்த்தைகளால்

மிகுந்த வேதனை அடைந்தார். பெற்றோர்கள் அவமதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போனது. அவரை எந்த சுபகாரியங்களுக்கும் புரோகிதராக அழைத்துச் செல்ல மாட்டார்கள். அவரை எள்ளு தானம் பெறுவதற்காகவோ அல்லது சிரார்த்தத்திற்கு எவரும் கிடைக்காத போது மட்டும்தான் அழைத்து செல்வார்கள். எந்த பாண்டித்யமும் இல்லாத ஒரு பிராமணனைத்தான் இவ்வாறு மிகவும் கீழ்த்தரமாக நடத்துவார்கள். அதனால், அவருக்கு தாழ்வு மனப்பான்மை அதிகரித்தது. இமய மலையில் பல சிறந்த துறவிகள் வாழ்வதாகவும், அவர்களின் அருள் ஒருவருக்கு கிடைத்தால் ஆத்ம ஞானம் கிடைக்கும் என்று கேள்விப்பட்டிருந்தார்.

ஒரு நாள் விடியற்காலையில் ஒரு கனவு கண்டார். அக்கனவில் பிரகாசமான ஒளியுடன் ஒரு தெய்வீக உருவத்தை கண்டார். அந்த உருவம் வானத்திலிருந்து பூமிக்கு வந்து கொண்டிருந்தது. அந்த உருவத்தின் தெய்வீகப் பாதம் பூமியைத் தொட்டவுடன், பூமி முழுவதும் தெய்வீக ஒளியால் நிரம்பியது. அந்த தெய்வீக குழந்தை அடிமேல் அடிவைத்து வ்யாக்ரீஸ்வர சர்மாவிடம் வந்து, 'நான் இருக்கும் போது என்ன கவலை உனக்கு? இந்த கிராமத்தில் எனக்கு ஒரு கடன் பாக்கி உள்ளது. எந்தவித பந்தமும் இல்லாமல் ஒரு நாய் கூட நம்மை அண்டாது . நீ இமயமலையில் உள்ள பத்ரிகாரண்யத்திற்கு (பத்ரிநாத் காடு) செல்! அங்கு தெய்வீக அருள் பெறுவாய்!!' என்று கூறி மறைந்தது.

வ்யாக்ரீஸ்வர சர்மா பத்ரிகாரண்யத்தை அடைந்தார். எந்த முயற்சியும் இல்லாமல் அவருக்கு வழியில் உணவு கிடைத்துக் கொண்டே இருந்தது. எனினும், பயணம் தொடங்கியது முதல் அவரை ஒரு நாய் பின் தொடர்ந்து கொண்டே இருந்தது. பத்ரிகாரண்யத்தை அடைந்து அங்கு திரிந்து கொண்டிருந்தார். நாயும் அவருடன் சேர்ந்தே திரிந்தது. அங்கு உள்ள ஊர்வசிக் குண்டம் என்ற குளத்தில் நீராடினார். அப்போது நாயும் அவருடன் சேர்ந்து நீராடியது. அச்சமயத்தில் ஒரு ஞானி தன் சீடர்களுடன் தன்னை சுத்தப்படுத்தி கொள்ள அங்கு வந்தார். வ்யாக்ரீஸ்வர சர்மா அவரை வணங்கி தன்னையும் சீடனாக ஏற்றுக் கொள்ளும்படி அவரிடம் வேண்டி கொண்டார். அந்த மஹா புருஷர் அன்புடன் ஒத்துக்கொண்டார். அவர் சம்மதித்ததுடன், அந்த நாய் மறைந்தது. அந்த ஞானி, **"வ்யாக்ரீஸ்வரா! இந்த நாய்தான் நீ பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணியங்களின் ஸ்வரூபம். காலத்தின் வழிநடத்துதலால்தான், நீ இங்கு வந்து ஊர்வசி குண்டத்தில் நீராட முடிந்தது. நவ நாராயணர்கள்(விஷ்ணுவின் ஒன்பது அவதாரங்கள்) தவம் புரிந்த இந்த இடத்திற்கு ஈர்க்கப்பட்டுள்ளாய். இது எல்லாம் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபரின் கிருபையே!"** என்றார்.

வ்யாக்ரீஸ்வர சர்மா அவரை வணங்கி விட்டு, **"குருதேவா!! ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபர் யார்? அவரின் அருள் எனக்கு எப்படி கிடைத்தது?"** என்று கேட்டார். "மகனே!! ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபர் சாக்ஷாத் ஶ்ரீ தத்தாத்ரேயர்தான். திரேதா யுகத்தில் (4 யுகங்களில் இரண்டாவது) பாரத்வாஜ முனிவர் '**சவித்ரு காடக சயனம்**' (சூரியனின் தெய்வீக தன்மையை உணர்த்தும் யாகம்) என்ற யாகத்தை பீதிகாபுரத்தில் நிகழ்த்தினார். அந்த யாகத்திற்கு அவர் சிவனையும் பார்வதியையும் அழைத்திருந்தார்.

சிவன் மற்றும் பார்வதி அவருக்கு அளித்த வரத்தினால்தான் பல ஞானிகள், சித்தர்கள் மற்றும் யோகிகள் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்துள்ளார்கள் என்று '**பைங்கிய பரிமாணம்**' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. '**பைங்கிய பரிமாணம்**' மற்றும் '**சந்திர சிந்து வேதம்**' ஆகிய நூல்கள் உலகத்தில் மற்ற இடங்களில் மறைந்து போனாலும், கலி அவதரிக்கப் போகும் சாம்பலா என்னும் கிராமத்தில் பத்திரமாக பாதுகாக்கப்படுகிறது. கலியுகம் முடிந்து சத்ய யுகம் தொடங்கும் போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மீண்டும் பீதிகாபுரத்தில் ஸ்தூல உருவத்தில் வருவார். ஒருவருக்கு பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் மறைந்து, புண்ணியம் நல்ல பலனை அளிக்கத் தொடங்கும் போதுதான், தத்த பக்தி உருவாகும். தத்தரிடம் உள்ள பக்தி பூரணமாகும் போதுதான், பார்வை, தொடுதல் மற்றும் பேச்சு ஆகிய செல்வங்களை எந்த வயதிலும் மற்றும் எந்த நேரத்திலும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அருளுவார். உன் பூர்வ ஜென்ம புண்ணியங்கள் பலமாக இருப்பதால்தான் உனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணை கிடைத்துள்ளது. நான் என் குருவான மகா அவதாரம் பாபாஜியை சந்திக்க செல்கிறேன். ஒரு வருடத்திற்குப் பிறகு வருவேன். அது வரை உனக்கு ஒதுக்கப்பட்ட குகையில் கிரியா யோகாவை (பண்டைய கால யோகமுறை) பயிற்சி செய்து ஆத்ம ஞானத்தைப் பெற முயற்சி செய்" என்று கூறிவிட்டு சஞ்சீவினி மலையில் உள்ள த்ரோணகிரிக்குச் சென்றுவிட்டார்.

வ்யாக்ரீஸ்வரன் தனக்கு ஒதுக்கப்பட்ட குகையில் அமர்ந்தார். அவருக்கு கிரியா யோகத்தைப் பற்றியோ அல்லது ஆத்ம ஞான போதனைகள் பற்றியோ ஒன்றுமே புரியவில்லை. **"குரு என்னை அன்பாக வ்யாக்ரா (புலி) என்று அழைப்பார். மற்ற சிஷ்யர்களும் புலித்தோல் மீது அமர்ந்துதான் தியானம் செய்கிறார்கள். புலித்தோலே இவ்வளவு சிறப்பானதாகவும், ஒரு யோகிக்கு இவ்வளவு நன்மை அளிப்பதாகவும் இருக்குமானால், புலி எவ்வளவு சிறப்பானதாக இருக்கும்? குரு 'நான்' என்பதை அறிய முற்பட சொன்னார். 'நான்' என்றால் என்னைத்தான். அப்படியென்றால் நான் மற்றவர்களுடன் என்ன செய்ய வேண்டியிருக்கிறது? என் பெயர் வ்யாக்ரீஸ்வரன். ஆகவே, நான் புலிதான். புலியை நோக்கித்தான் தியானம் செய்ய வேண்டும். அதுதான் என் ஆன்மா. நான் புலி உருவம் பெற்றால் நான் ஆத்ம ஞானம் பெற்றுவிட்டதாக கருத்திக்கொள்ளலாம்"** என்று எண்ணினார்.

ஒரு வருடம் விரைவாக கழிந்தது. குரு அங்கு வந்தார். ஒவ்வொரு குகைக்குள்ளும் சென்று தன் சிஷ்யர்களின் முன்னேற்றங்களை பார்த்துக் கொண்டே வந்தார். வ்யாக்ரீஸ்வரனின் குகையில் அவருக்கு பதில் ஒரு புலி இருப்பதை கண்டார். குரு தன் யோகப் பார்வை மூலம் நடந்தவைகளை ஆராய்ந்தார். வ்யாக்ரீஸ்வரன் தீவிரமாக வ்யாக்ராவை (புலி) நோக்கி தியானித்ததால் அவர் புலியாக மாறியதை அறிந்துகொண்டார். தன் சீடனின் தூய்மையான உள்ளம் மற்றும் சுயகட்டுப்பாட்டுத் தன்மையை எண்ணி மகிழ்ச்சி அடைந்தார். அவரை ஆசீர்வதித்து '**ஓம்**' என்னும் மந்திரத்தை போதித்தார். அவரை '**ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே!**' என்னும் மந்திரத்தையும் உச்சரித்து கொண்டே இருக்கச் சொன்னார்.




வ்யாக்ரீஸ்வரன் ஸ்ரீ ஸ்ரீபாதர் தரிசனத்துக்காக புலி உருவத்தில் குருவபுரத்திற்கு அருகே சென்றார். குருவபுரம் அடைய ஒரு நதியை (கிருஷ்ணா நதி) கடக்க வேண்டும். அந்த நேரத்தில், ஸ்ரீ ஸ்ரீபாதர் பக்தர்களின் தர்பாரில் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் திடீரென்று, **"என்னுடைய சிறந்த பக்தன் என்னை அழைக்கிறான். நான் உடனடியாக சென்று திரும்புகிறேன்"** என்று கூறிவிட்டு ஒளிபொருந்திய உடலுடன் நதி மீது நடந்தே வந்தார்.

அவர் தண்ணீரின் மீது நடந்து வந்தபோது, அவர் காலடி பட்ட இடத்தில் எல்லாம் தாமரை மலர்ந்தது. அவர் அக்கரைக்கு வந்து **"ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே"** என்று தொடர்ந்து கூறி கொண்டே இருந்த வ்யாக்ரீஸ்வரனை கண்டார். வ்யாக்ரீஸ்வரன் ஸ்ரீபாதரின் தெய்வீக பாதத்தை நமஸ்கரித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் புலியின் மீது அமர்ந்து, மிதந்தவாறு நதியை கடந்து சென்று குருவபுரத்தை அடைந்தார். இக்காட்சியை அனைவரும் மிகுந்த ஆச்சரியத்துடன் கண்டனர்.

தத்த புராணத்தின் படி ஸ்ரீ தத்தாத்ரேயர் தர்ம சாஸ்தாவாக அவதரித்துள்ளார். அவர் ஹரி-ஹரனுக்கு மகனாக பிறந்த போது புலியின் மீது அமர்ந்து கொண்டுதான் தன் தலை நகரத்திற்கு வந்தார். தேவேந்திரன் புலியாக உருவெடுத்து அய்யப்ப ஸ்வாமி அல்லது தர்மசாஸ்தாவின் வாகனமானார். சிலர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உண்மையில் தர்மசாஸ்தா என்கின்றனர். ஸ்ரீ அம்பாளின் வாகனம் கூட புலி மற்றும் சிங்கம். அதனால், ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆதிபராசக்தியின் இணைபிரியா உருவம் என்றுகூட சிலர் கூறுகிறார்கள்.

குருவபுரம் அடைந்து ஸ்ரீ ஸ்ரீபாதர் புலியை விட்டு இறங்கியவுடன் புலி இறந்து விழுந்தது. அந்த புலியில் இருந்து தெய்வீக பிரகாசத்துடன் ஒரு மனிதர் வெளிப்பட்டார். அவர் தன் பூர்வ ஜென்மத்தின் புலித்தோலை ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் ஆசனமாக பயன்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதற்கு ஸ்ரீசரணர்

சம்மதித்தார். பொங்கும் பேரன்புடன் ஸ்ரீ ஸ்ரீபாதர், "என் மகனே வ்யாக்ரீஸ்வரா!! முன் ஜென்மத்தில் நீ ஒரு சக்தி வாய்ந்த மல்யுத்த வீரன். அந்த ஜென்மத்தில் பல கொடுமையான செயல்களைச் செய்தாய். புலிகளுடன் சண்டையிடுவது, அவற்றை காயப்படுத்துவது, அவற்றை பட்டினி போட்டு துன்புறுத்தி கண்காட்சி அமைத்து மக்களை சந்தோஷப் படுத்துவது போன்றவற்றைச் செய்தாய். அந்த பாவச் செயல்களால் பலமுறை மிருக பிறவி எடுக்க வேண்டிய நீ, என்னுடைய கருணையால், சேர்த்துவைத்த பாவங்கள் அனைத்தும் இந்த புலி உருவத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. அதிக நாட்கள் புலி உருவத்தில் இருந்ததால் நீ எப்போது வேண்டுமானாலும் புலி உருவம் எடுக்கும் வரத்தை உனக்கு அளிக்கிறேன். நீ இமய மலையில் பல நூறு வருடங்களாகத் தவம் புரிந்து கொண்டிருக்கும் சித்தர்களின் ஆசி பெறுவாய். நீ யோகப் பாதையில் பெரிய முன்னேற்றம் பெறுவாய்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் வ்யாக்ரீஸ்வரனை ஆசீர்வதித்தார்.

சங்கர் பட், "**நீ முன்பு பார்த்த புலி வ்யாக்ரீஸ்வரர்தான். அவர் இமயமலையில் வசிக்கிறார். சித்தர்கள் மனித தொடர்பை தவிர்த்துவிடுவர். யோகிகளுக்கு ஒரு காவல்காரன் போல் இருந்து பொதுஜன தொடர்புகளில் இருந்து காப்பாற்றுகிறார். சித்தர்கள் தங்களுக்குள் எழும் சிந்தனைகளையும் செய்திகளையும் பரிமாறிக் கொள்ள ஒரு ஒழுங்கு முறையைக் கையாள்வர். அதற்கு அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து வெளியில் வரவோ அல்லது தூதுவர்களை நியமிக்கவோ தேவையில்லை. எனினும், இந்த லீலைகளுக்கு வ்யாக்ரீஸ்வரரை நியமித்து செய்தி பரிமாறிக்கொள்வர். இவை அனைத்தும் ஸ்ரீ தத்தாத்ரேயரின் திருவிளையாடல்தான்**" என்று விளக்கினார் மருத்துவமலை சித்தர்.

என் அருமை சங்கர் பட்!! பிரபஞ்சம் படைக்கப் படுவதற்கு முன்னர் ஒரு முதல் தம்பதி இருந்தனர் (சிவனும்-பார்வதியும்). ஒரு மனைவி கர்ப்பம் தரித்தால் அவளுக்கு சில ஆசைகள் ஏற்படக்கூடும். அதை நிறைவேற்றவேண்டியது கணவனின் கடமை. ஷ்ராவணி (பார்வதி) கர்பமாக இருந்த போது அவளுக்கு ஏதுனும் விருப்பங்கள் உள்ளனவா என்று பரமேஸ்வரன் (சிவன்) கேட்டார். அதற்கு ஷ்ராவணி "**ஸ்வாமி, நான் ஒரு பெண்ணாக பிறந்து அந்த உடலில் ஏற்படும் அனைத்து இன்பங்களையும் அனுபவித்துவிட்டேன். ஒரு ஆணாக பிறந்தால் எப்படிப்பட்ட அனுபவங்களை பெறமுடியும் என்பது எனக்கு தெரியாது. எனவே அப்படி மாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்**" என்று கேட்டாள். பரமேஸ்வரன் "**ததாஸ்து**" என்று கூறியவுடன் ஷ்ராவணி ஆண் உருவம் பெற்றாள். அதுதான் மஹாவிஷ்ணு உருவம். இம்மாற்றத்தினால் அவளிடமிருந்து குழந்தை வெளிவருவதற்கு எந்தவித சாத்தியமும் இல்லை. ஆகவே மஹாவிஷ்ணுவின் தொப்புள் கொடியிலிருந்து ஒரு தாமரை வெளியானது. அந்த தாமரையிலிருந்து பிரம்மா பிறந்து உயிர்களை படைக்க துவங்கினார். மஹாவிஷ்ணு மீண்டும் தன் உருவத்திலிருந்து ஷ்ராவணியை உருவாக்கினார். கடவுளின் ரகசியங்களும் திருவிளையாடல்களும் நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாதவை. இக்காரணத்தினால்தான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் பார்வதி தேவியும் சகோதரன் சகோதரி ஆனார்கள்.

ஷ்ரவண மாதத்தின் பௌர்ணமி அன்று பார்வதி தேவி ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு 'ராக்கி' (சகோதரி சகோதரனுக்கு அணிவிக்கும் கயிறு) அணிவித்துவிட்டு "**அண்ணா, ஸ்ரீ சிவசங்கரன் ஒருவருக்கு வரங்களை அளிக்கும் போது அவர்கள் அந்த வரங்கள் பெற தகுதியானவரா, இது நடைமுறைக்கு சாத்தியமா என்பதை யோசிக்காமல் வரமளிக்கிறார். அப்படி ஒவ்வொரு முறை நிகழும் போதும் உங்கள் விஷ்ணு மாயையை கொண்டு நீங்கள் அவதரித்து அசுரர்களை அழித்து என் மாங்கல்யத்தை காப்பாற்றுகிறீர்கள். இதுபோன்ற சகோதர சகோதரியின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக இந்த ராக்கி கட்டும் வைபவம் எப்போதும் நிலைத்து நிற்கட்டும்**" என்றாள். அதற்கு மஹாவிஷ்ணு 'ததாஸ்து' என்றார். இந்த சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டுதான் பிரம்மாசுரனிடமிருந்து சிக்கல்கள் ஏற்பட்ட போது ஸ்ரீ விஷ்ணு மோகினியாக அவதரித்து அவனை அழித்தார். விஷ்ணு மாயை என்பது நினைத்து கூட பார்க்க முடியாத ஒன்று. அதை இப்படித்தான் இருக்குமோ என்று கூட நம்மால் ஊகிக்க முடியாது. மோகினிக்கும் சங்கரருக்கும் பிறந்தவர்தான் தர்மசாஸ்தா. தர்மசாஸ்தா பிறந்தவுடன் மோகினி மறைந்துவிட்டாள். பின்னர் கலியுகத்தில் தர்மசாஸ்தா ஐயப்ப ஸ்வாமியாக அவதரித்தார். இதில் ஒரு தெய்வீக ரகசியம் அடங்கியுள்ளது. தர்மசாஸ்தா வேறு எவருமில்லை மஹாவிஷ்ணுதான். அந்த வடிவத்தில் ருத்ரரும் பிரம்மாவும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுடன் ஐக்கியமாகியுள்ளதால், மூன்று உருவங்களும் ஒன்றான உருவமான ஸ்ரீ தத்தாத்ரேயர் என்றும் கூறலாம். பரமேஸ்வரி மீனாட்சி என்ற பெயரில் பூபால பாண்டியனின் மகளாக தோன்றியபோது பரமேஸ்வரன் சுந்தரேஸ்வரராகத் தோன்றினார். ஸ்ரீ மகாவிஷ்ணுவே மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணத்தை நடத்திவைத்தார். அதே பரமேஸ்வரி ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரியாக தோன்றிய போது அவளுக்கு திருமணம் நடைபெறவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் காலத்தையும் இடத்தையும் கடந்த ஒன்று. அவர் கலியுகத்தில் பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீவல்லபராக தோன்றினார். ஆனால் ஸ்ரீவல்லபரின் இந்த ஒளி பொருந்திய உருவமானது இந்த பிரபஞ்ச படைப்பின் துவக்கத்திலிருந்தே உள்ளது. ஸ்ரீ ஸ்ரீபாதர் பீதிகாபுரத்தில் கி. பி. 1320ல் அவதரித்தது முதல் குருவபுரத்தில் கி. பி. 1350 ல் மறைந்தது வரையிலான 30 வருடங்களில் நிகழ்ந்த திருவிளையாடல்களை சப்த ரிஷிகளால் கூட வர்ணிக்க முடியாது. அவற்றை நம்மால் எப்படி புரிந்து கொள்ள முடியும்?" என்றார்.

**"ஸ்வாமி நாம் இப்போது கி. பி. 1336ல் இருக்கிறோம். அப்படியென்றால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இந்த உலகத்தில் இன்னும் அடுத்த 14 வருடங்கள் மட்டும்தான் இருப்பாரா? அவரின் அவதாரத்தை இவ்வளவு விரைவாக முடித்து கொள்வாரா?"** என்று கேட்டேன்.

சத்குரு தேவர் தொடர்ந்து கூறினார் "**அன்பானவனே!! ஸ்ரீவல்லபர் பிறந்தால் மறைதலும் இருக்கும் தானே? எனினும், அவருடைய திருவிளையாடல்களுக்கு பிறப்பும் இறப்பும் கிடையாது. அவருக்கு நேரம் மற்றும் காலத்தால் எந்தவித பாதிப்பும் இல்லை**" என்றார்.

## ஸ்ரீ கன்யகா புராணம்

ஸ்ரீ கிருஷ்ணரின் சமகாலத்தவரான அர்கசேனா என்கிற அரசன் வட இந்தியாவில் உள்ள ஆர்யவர்த்தம் என்கிற நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒரு வைசியன். அவன் வம்சத்தைச் சேர்ந்த சிலர் தென்னிந்தியாவில் வியாபாரம் செய்து வந்தனர். அதில் ஒரு சிலர் ஆந்திர பிரதேசத்தில் உள்ள பிருஹத்ஸிலநகரத்து (இப்போது பெனுகொண்டா) மன்னரின் உறவினர்களோடு வாழ்ந்து வந்தனர். அவ்விடத்தை அர்க்ஸேன மன்னரின் உறவினர்களின் ஒருவரான குஸூம சிரேஷ்டி பிருஹத்ஸிலநகரைத் தலைநகராக கொண்டு, தர்ம நெறிகள் மீறாமல் ஆண்டுவந்தார். குஸூம சிரேஷ்டி தம்பதி நீதி தவறாத நல்லொழுக்கம் மிக்கவர்கள். அவர்கள் யாகங்கள் யக்ஞங்கள் போன்ற நற்செயல்களை செய்து வந்தனர். அம்மன்னரின் குரு பாஸ்கராச்சார்யா. அவர் குஸூம சிரேஷ்டியுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார்.

அவர்கள் வீட்டில் ஜகன்மாதாவான ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரி பிறந்தாள். அவ்வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன்னுடைய அம்சத்தில் ஒரு பகுதியை பிறக்க செய்தார். அவருக்கு விருபாக்ஷர் என்று பெயரிடப்பட்டது. முன்னொரு காலத்தில் ஆத்ம லிங்கத்தை அடைய ராவணன் கைலாச வாசனான சிவனை வேண்டினான். அப்போது இராவணன் ஒரு இழிவான வரத்தையும் பெற்றுக் கொண்டான். அந்த வரத்தை நிறைவேற்றும் பொருட்டு ஜகன்மாதா பத்திரகாளி உருவத்தில் அவனுடன் சேர்ந்து வந்தாள். ஆத்ம லிங்கம் கோகர்ண க்ஷேத்திரத்தில் விழுந்து அங்கேயே பிரதிஷ்டை ஆனது. அன்புக்குரியவனே! கோகர்ண க்ஷேத்திரத்தின் மகிமைகள் அளவற்றது. வைசிய ஜாதிக்கும் கோகர்ணத்திற்கும் (பசுவின் காதுகளுக்கும்) மற்றும் கோகர்ண க்ஷேத்திரத்திற்கும் ஒரு ரகசிய தொடர்பு உண்டு. இராவணன் கொல்லப் பட்டாலும், அவனின் ஒரு அம்சம் கலியுகத்தில் கண்மூடித்தனமான காமுகனாக பிறவி எடுத்தது.

அம்பா(ஜகன்மாதா) கலியுகத்தில் தன் பத்திரகாளி உருவத்தை வேறு வழியில் வெளிப்படுத்தினாள். ஆர்யவர்த்த அரசர்களின் பாரம்பரியத்தின் படி தங்கள் சுய மரியாதையை வெளிப்படுத்தும் விதமாக ஜகன்மாதா அரசரின் உறவினர்கள் சிலருடன் அக்னிப்ரவேசம் செய்தாள். இந்த நிகழ்வினால் ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரி தன் தெய்வமான ஸ்ரீ நாகரேஸ்வரரை (சிவனை) அடைந்தாள்.

குஸூம சிரேஷ்டி தம்பத்தியர் அம்பா பிறப்பதற்கு முன் பல யக்ஞங்கள் நிகழ்த்தினர். குஸூம சிரேஷ்டி அவர்களின் உறவினர்களில் ஒருவர் வீட்டில் மட்டும்தான் பாலும் தங்கமும் பெற்றுக் கொள்வர். அந்த உறவினர் வீட்டிற்கு பைண்ட என்பது பெயர். நீ பீதிகாபுரம் செல்லும் போது அந்த குடும்ப வம்சத்தினரான மகாத்மா ஒருவரை சந்திப்பாய். இப்போது குருவபுரம் செல், அங்கு ஸ்ரீ ஸ்ரீவல்லபரின் தரிசனம் பெறுவாய்" என்று என்னை (சங்கர் பட்) அந்த சித்தர் ஆசீர்வதித்துவிட்டு ஒளியாக மறைந்துவிட்டார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் - 2

## சங்கர் பட் ஸ்ரீ சித்தேந்திர யோகியை சந்தித்தல்

- விசித்ராபுரக் கதை


நான் (சங்கர் பட்) மருத்துவமலையில் ஏற்பட்ட வினோதமான அனுபவங்களை நினைவூட்டிக் கொண்டும், ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை என் மனதில் ஜபித்துக் கொண்டே என் பயணத்தை தொடர்ந்தேன். வழியில் பல புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசனம் செய்து கொண்டே சென்றேன். வழியில் உணவு தடையில்லாமல் கிடைத்துக் கொண்டே இருந்தது. அது ஒரு அறிய அனுபவமாக இருந்தது. நான் பாண்டிய நாட்டில் உள்ள கதம்பவனத்தை அடைந்த பின்னர், என் உடல் எடை குறைவது போல் உணர்ந்தேன். அந்த வனத்தில் சக்தி வாய்ந்த சிவலிங்கம் ஒன்று இருந்தது. அந்த சிவன் கோவிலை தரிசனம் செய்துவிட்டு வந்த போது கால்கள் கனத்தன. அந்த கோவிலில் சற்று இளைப்பாறிய பின் என் பயணத்தை தொடர்ந்தேன். அருகில் ஒரு ஆசிரமத்தை கண்டேன். ஸ்ரீ சித்தேந்திர யோகி என்ற பெயருடைய சிறந்த மனிதர் அங்கு வாழ்ந்து வந்தார். நான் அவரை கண்டு அவர் பாதத்தில் விழுந்தவுடன், என் உடல் எடை பஞ்சு போல் லேசானது. எனக்கு உடலில் உணர்வுகள் இருந்தாலும் உடலில் எடையே இல்லாதது போல் உணர்ந்தேன். கனிவான உள்ளம் கொண்ட அந்த மகாகுரு என் தலையில் கையால் தொட்டு விட்டு "ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசனம் செய்வாய்!" என்று ஆசீர்வதித்தார்.

"என் மகனே சங்கர் பட்! நீ தரிசித்த சிவன் கோவில் மிகவும் சக்தி வாய்ந்தது. பழங்காலத்தில், தேவேந்திரன் பல அரக்கர்களை வீழ்த்திய போது ஒருவன் மட்டும் தப்பித்து விட்டான். அப்போது அவன் தவம் செய்து கொண்டிருந்தான். இந்திரன் இரக்கமின்றி தவம் செய்து கொண்டிருந்த அரக்கன் ஒருவனை கொன்று விட்டார். தவம் செய்து கொண்டிருந்த ஒருவரை கொன்ற பாவத்தினால் இந்திரன் தன் தேஜஸை இழந்தார். இந்திரன் பாவ விமோசனம் பெற பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றார். கதம்பவனத்தில் வீற்றிருக்கும் சிவன், சக்தி வாய்ந்தவர் என்பதால், அந்த இடத்திற்கு வந்தவுடனேயே அவரின் பாவங்கள் அனைத்தும் நீங்கியது. அவர் ஆச்சரியம் அடைந்தார். இங்கு ஏதோ ஒரு அற்புதமான சக்தி உள்ளது என்பதை உணர்ந்த இந்திரன், சுற்றும் முற்றும் தேடி ஆராய்ந்தார். அப்போது ஒரு சிவலிங்கத்தை கண்டார். அதை பக்தியுடன் வணங்கி விட்டு அந்த சுயம்பு லிங்கத்திற்கு கோவில் எழுப்பினார். ஆகவே, நீங்கள் தரிசித்த அந்த சிவலிங்கம் தேவேந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த சிவலிங்கமானது

எல்லா பாவங்களையும் நீக்கி அனுகூலத்தை தரும். புண்ணியங்கள் செய்தவர்கள் மட்டுமே அச்சிவலிங்கத்தை தரிசிக்கும் பாக்கியம் பெறுவர். எனினும், ஒரு தத்த பக்தனுக்கு புண்ணிய ஆத்மாக்களை சந்திப்பதும் புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசிப்பதும் எந்தவித முயற்சியுமில்லாமல் நடந்துகொண்டே இருக்கும்" என்றார்.

நான் ஸ்ரீ சித்தேந்திர யோகியின் பாத கமலத்தில் மீண்டும் விழுந்து வணங்கினேன். அவர் என்னை மீண்டும் அந்த சக்தி வாய்ந்த சிவனை தரிசித்து விட்டு வரச்சொன்னார். கோவில் இருந்த இடத்தை இரண்டாம் முறை அடைந்த போது அந்த இடத்தில் ஒரு அழகான சிவன் கோவில் இருந்தது. நான் முன்பு அங்கு பார்த்த அதே கோவில் இல்லை. அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது அது மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் என்றும் இவ்வூர் மதுரை என்பதும் தெரிந்தது.

அனைத்து தெய்வங்களையும் தரிசனம் செய்த பின் ஸ்ரீ சித்தேந்திர யோகியின் ஆசிரமத்திற்கு சென்றேன். அந்த இடம் மிகுந்த ஜன நெருக்கடி மிகுந்த நகரமாக மாறி இருந்தது. எனினும், நான் எவ்வளவு தேடியும் என்னால் ஸ்ரீ சித்தேந்திர யோகியின் ஆசிரமத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜபித்துக்கொண்டே கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்தேன். சூரியன் மறைய தொடங்கியது. இருள் தொடங்கியது. ஒரு ஒளி என் பின்னால் வருவதை பார்த்தேன். நான் திரும்பி பார்த்த போது, மூன்று வைரக்கற்களை பதித்துக்கொண்டு மூன்று தலை நாகம் ஒன்று இருந்தது. அதிலிருந்துதான் ஒளி வந்துகொண்டிருந்தது. பயம் என்னை ஆட்கொண்டது. நான் நின்றால் நாகமும் நின்றது.



ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக நாமம் என்னை அறியாமலேயே மனதிலிருந்து எழும்பியது. அதேபோல் என்னை அறியாமலேயே ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை நான் கூறிக்கொண்டே இருந்தேன். ஒரு வழியாக நான் ஸ்ரீ சித்தேந்திர யோகியின் ஆசிரமத்தை அடைந்தேன். உடனே, அந்த தெய்வீக நாகமும் அந்த ஒளியும் மறைந்துவிட்டது. என்னை கருணையுடன் ஸ்ரீ சித்தேந்திர யோகி வரவேற்றார். வறுத்த கொண்டைக்கடலையை (சுண்டல்) வாழை இலையில் பிரசாதமாக கொடுத்தார். நான் வயிறுமுட்ட சாப்பிட்டேன். நான் உணவு உண்ட பின்னரும் எனக்கு படபடப்பு அடங்கவில்லை.

ஸ்ரீ சித்தேந்திர யோகி என் நெஞ்சில் கை வைத்து மெதுவாக அன்புடன் தடவினார். பின்னர், தன் புனிதமான கையால் என் தலையை தொட்டார். என்னுடைய இதயத்தின் படபடப்பு குறைவதை கவனித்தேன். என் நுரையீரலில் இருந்து கெட்ட வாயுக்கள் நீங்கியது போல் உணர்ந்தேன். சில தீய எண்ணங்களும் கொடூர ஆசைகளும் என் மனதை விட்டு விலகியது போல் உணர்ந்தேன். என் உடல் சூடேறி மயக்க நிலையை அடைந்தேன்.

## தத்தரின் மகிமைகளும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளை பெற தேவையான தகுதிகளும்

ஸ்ரீ சித்தேந்திர யோகி தொடர்ந்தார். "சங்கர் பட்!! நீ முன்பு பார்த்த சிவலிங்கமும் பிறகு பார்த்த ஸ்ரீ சுந்தரேஸ்வரரும் வேறு அல்ல. நீ இப்படி ஒரு அனுபவத்தை பெற வேண்டும் என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரின் ஆணை. ஆதலால் அது அப்படியே அருளப்பட்டது. அதாவது காலச்சக்கரம் பின் நோக்கி சுழன்று இந்திரன் பிரதிஷ்டை செய்த சிவலிங்கமும் அப்போது இருந்த சுற்றுப்புறமும் காண்பிக்கப்பட்டது. நீ உண்மை படைப்பு என்று பார்த்துக் கொண்டிருக்கும் அனைத்து படைப்புகளும் ஒரு மாயை என்பதை உணர்த்துவதற்கே இது நிகழ்த்தப்பட்டது. அனைத்தும் உணர்வுகளின் உருவகம்தான். ஸ்ரீ தத்தர் நினைத்தால் வருங்காலத்தையும் நிகழ்காலம் ஆக்கலாம். ஸ்ரீ தத்தரின் சைதன்யம் (உணர்வுகள்) எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும் (அழிவில்லை). ஸ்ரீ தத்தரின் விருப்பத்திற்கேற்பத்தான், இறந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலம் இருக்கும். ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஸ்ரீ தத்தரின் தீர்மானம் மிகவும் முக்கியம், அதாவது நிகழ வேண்டுமா வேண்டாமா என்பது கூட அவரின் விருப்பம்தான். ஸ்ரீ தத்தர்தான் படைத்தல்,காத்தல், அழித்தல் ஆகிய செயல்களின் அற்புதமான நிகழ்வுகளுக்கு காரணம். இப்போது அவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பூமியில் அவதரித்துள்ளார்.

அவரை பீதிகாபுர மக்களினால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. குரு தத்துவத்தை அவர்கள் சரியாக`புரிந்து கொள்ள தவறி விட்டனர். குருவபுரத்திலோ ஏதுமறியா ஒரு மீனவன் கூட பிரம்மஞானியாக இருந்தான். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அருளை பெற வேண்டுமானால், நம்மிடம் உள்ள அஹங்காரம் அழிக்கப்பட வேண்டும். எல்லா வித கர்வமும் அழியவேண்டும். அப்போதுதான் அவருடைய சக்தி,கருணை மற்றும் அவரின் உண்மையான குணங்களை புரிந்து கொள்ள முடியும்.

தனஞ்செயன் என்ற வியாபாரி இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தைப் பற்றி அந்நாட்டு மன்னராகிய குலசேகர பாண்டியனிடம் தெரிவித்தார். சிவனின் ஆணைப்படி குலசேகர பாண்டியன் அந்த இடத்தை விரிவுபடுத்தி அங்கு ஒரு நகரத்தை நிர்மாணித்தார். அதற்கு மதுரை என பெயரிட்டார். சிவனின் ஜடாமுடியிலிருந்து தோன்றிய வேகவதி நதி (வைகை) மதுரையை புனிதப்படுத்துகிறது. அவரது மகன் மலையத்வஜ பாண்டியன் தன் வம்சவிருத்திக்காக புத்திரகாமேஷ்டி யாகம் செய்தார். அந்த யாககுண்டத்தில் இருந்து, மூன்று வயது

பெண் குழந்தையாக மீனாட்சி தேவி சுயம்புவாக தோன்றினாள். அவள் சுந்தரேஸ்வரரை மணந்து கொண்டாள். மீனாக்ஷி -சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்தை மஹாவிஷ்ணு விமரிசையாக முன்னின்று நடத்தி வைத்தார்".

ஸ்ரீ சித்தேந்திர யோகி தொடர்ந்தார். "மகனே சங்கர் பட்!! இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருட்களிலிருந்தும் அதிர்வலைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இந்த வேறுபட்ட அதிர்வலைகளினால் பிற பொருள்களுடன் ஈர்ப்பு ஆற்றலும் விலக்கு ஆற்றலும் நடக்கின்றன. இதே ஸ்தூல, சூக்ஷ்ம மற்றும் காரண சரீரங்களில் இருந்து நற்செயல்களினால் நல்ல அதிர்வுகளும் தீய செயல்களினால் தீய அதிர்வுகளும் ஏற்படுகின்றன. நல்ல கர்மாக்களின் பலனினால், புண்ணிய ஆத்மாக்களை சந்திக்கும் விருப்பம், புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வது மற்றும் நல்ல கர்மாக்கள் செய்வதில் ஆர்வம் ஆகியவை அதிகரிக்கும். அவற்றினால், சத்கர்மா அதிகரிக்கும். சத்கர்மாக்கள் அதிகரித்து பாவங்கள் மறைந்தால் மட்டும்தான், ஸ்ரீ தத்தரின் மீது ஸ்திரமான பக்தி இருக்கும். காலம், புண்ணியம் அல்லது பாவம் போன்றவைகளால்தான் நம் வாழ்க்கையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ ஸ்ரீபாதர் உன் மேல் கொண்டுள்ள அளவற்ற கருணையால்தான் நீ இங்கு வந்துள்ளாய்" என்றார்.

இந்திரன் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தை பற்றிய விவரங்களை குலசேகர பாண்டியனுக்கு தெரிவித்த தனஞ்செயன் மகா புண்ணியம் பெற்றான். அதன் காரணமாக குஸும சிரேஷ்டியாக பிறந்து பிருஹத்ஸிலநகரத்தின் மன்னனாகி ஜகன்மாதாவே அவனுக்கு மகளாக பிறந்தாள். நந்தீஸ்வரனின் அம்சத்தை உள்ளடக்கிய விருபாக்ஷர் குஸும சிரேஷ்டி தம்பதிக்கு மகனாக பிறந்து அம்பிகைக்கு சகோதரன் ஆனார். ஸ்ரீ தத்தரும் தன் அம்சத்தில் சிறு பகுதியை விருபாக்ஷரிடம் கொடுத்தார். அம்பிகையும் தான் வாக்களித்தபடி பிருஹத்ஸிலநகரத்தில் வாசவியாக பிறந்தாள். ஞானிகளால் மட்டுமே கன்யகாபரமேஸ்வரி அம்பிகை என்றும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம் என்றும், அவர் ஸ்ரீ நாராயணன்தான் என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

ஷ்ரவண மாதம் பௌர்ணமி அன்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு அம்பிகை ராக்கி அணிவிப்பாள். இந்த தெய்வீக ரகசியத்தை சாதாரண மனிதர்களிடம் சொல்லக்கூடாது. ஆனால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைக்கு இணங்க நான் உன்னிடம் மட்டும் கூறுகிறேன். பௌர்ணமி அன்று அம்பிகையையும் அவள் குடிகொண்டிருக்கும் கோவில்களில் உள்ள தெய்வங்களையோ தத்த க்ஷேத்ரத்திரத்தையோ தரிசனம் செய்தால் மிகுந்த புண்ணியம் அடையலாம். சிவனும் கேசவனும் வெவ்வேறு அல்ல. அப்படி வேறுபட்டு நோக்கினால் அவர்களுக்கு பாவம்தான் வந்து சேரும். ஏகாதசி அன்று பாவங்கள் அனைத்தும் உணவில் பொதிந்திருக்கும். எவரொருவர் ஏகாதசி அன்று உபவாசம் இருந்து அடுத்த நாளான துவாதசி அன்று பிராமணனுக்கு உணவளிக்கிறாரோ, அவர் மிகுந்த புண்ணியம் பெறுவார். துவாதசி அன்றும் உபவாசம் இருந்து அன்று பிராமணனுக்கு உணவளித்தால் மேலும்

புண்ணியம் பெறுவார். அவர்கள் புண்ணியம் பெறுவது மட்டுமல்லாமல் அவர்களின் பாவங்களும் அழிந்து விடும். ஏகாதசி அன்று உபவாசம் இருந்து தகுந்த பிராமணனுக்கு உணவளித்து விட்டு, துவாதசி அன்று உணவருந்தினால் சுமாரான பலன்களை பெற முடியும். அதாவது புண்ணியங்கள் சேரும் ஆனால் பாவங்கள் அழியாது. அதே ஒருவர் ஏகாதசி அன்று உபவாசம் இருந்து துவாதசி அன்று உணவருந்திவிட்டு எந்த பிரமணனனுக்கும் உணவளிக்கா விட்டாலும் சிறிதளவு புண்ணியம்தான் பெற முடியும். ஆனால் பாவங்கள் அழியாது" என்று கூறினார்.

என் புண்ணியத்தின் பலனை நான் என்னவென்று விவரிப்பது? பிறகு நான் ஸ்ரீ சித்தேந்திர யோகியிடம் **"மஹாபிரபோ! அம்பிகை வாசவி என்ற பெயரை ஏன் பெற வேண்டும்? யாருக்கு அளித்த சத்தியத்தை நிறைவேற்று வதற்காக அவள் வாசவி கன்யகாபரமேஸ்வரியாக தோன்றினாள்? என் மீது கருணை கொண்டு அந்த விஷயத்தை என்னிடம் வெளிப்படையாக சொல்லுங்களேன்"** என்று கேட்டுக்கொண்டேன்.

என் வேண்டுதல்களை புரிந்து கொண்டு சிரித்தார் ஸ்ரீ சித்தேந்திர யோகி. 'அன்பானவனே! உனக்கு ஞானமான விஷயங்களை தெரிந்து கொள்வதில் ஆர்வம் மிகுதியாக உள்ளது. ஆர்வமானவர்களிடமும் தகுதியான, பொருத்தமானவர்களிடம் மட்டும்தான் தெய்வீக ரகசியங்களை வெளிப்படுத்த வேண்டும். தகுதி இல்லாதவர்களிடமும் வாக்குவாதம் செய்பவர்களிடமும், நாத்திகர்களிடமும் இவ்விஷயங்களை வெளியிட்டால் தெய்வீக ரகசியங்களையும் திருவிளையாடல் களையும் குறை கூறினால் பாவம்தான் வந்து சேரும்.

ஸ்ரீமன் நாராயணனுக்கு உபேந்திரா என்றொரு பெயரும் உண்டு. ஒருமுறை ஸ்ரீமன் நாராயணனிடம் இந்திரன் **"உங்களுக்கு உபேந்திரா என்ற பெயர் உள்ளதால் நீங்கள் எனக்கு சகோதரன் முறையாகிறது. அப்படியென்றால் அம்பிகை எனக்கு சகோதரி ஆவாள். அவளுக்கும் என்னை நினைவூட்டுவது போல் ஒரு பெயர் இருக்க வேண்டுமல்லவா?"** என்று கேட்டார். **"உன் வாதம் சரியானதுதான். நீ உன் கேள்வியை அம்பிகையிடமே கேள்"** என்று சிரித்துக் கொண்டே ஸ்ரீமன் நாராயணன் கூறினார்.

காலம் கடந்து கொண்டே போனது தேவர்கள் பல அசுரர்களை கொன்று ஆணவத்தில் இருந்தனர். அவர்களின் செருக்கை அடக்க வேண்டிய நேரம் வந்தது. அம்பிகை யக்ஷனாக உருமாறினாள். அங்கு சென்ற வாயுதேவரிடம் ஒரு சிறு புல்லை அங்கு போட்டு அதை நகர்த்துமாறு கூறினாள். வாயுவால் நகர்த்த முடியவில்லை. அதேபோல் அக்னியாலும் எரிக்க முடியவில்லை. இதே போல் அனைத்து தேவர்களும் அவமானப்படுத்தப்பட்டனர். ஆனால் தேவேந்திரன் மட்டும் அது யக்ஷன் இல்லை, பரதத்துவம் (உயர்ந்த ஆத்மா) என்று அடையாளம் கண்டு கொண்டார். அந்த பரதத்துவம் அம்பிகையாக உருமாறியது. இந்திரன் அவளைப் பலவாறு புகழ்ந்து பாடினார். அதில் மகிழ்ந்த அம்பிகை கலியுகத்தில் பிருஹத்ஸிலநகரத்தில் பிறக்கும் போது வாசவா என்ற இந்திரனின் ஒரு பெயரை நினைவூட்டும் வண்ணம் வாசவி என்ற பெயரில் பிறப்பதாக வரமளித்தாள். அந்த வரத்தை நிறைவேற்றவே வாசவி கன்யகாபரமேஸ்வரியாக பிறந்தாள்.

குழந்தாய்! நடைபெறும் ஒவ்வொரு சிறிய நிகழ்வுகள் கூட காலத்தாலும் கர்ம பலங்களினாலும் ஏதோ ஒரு காரணத்தினாலும்தான் நடக்கிறது. திருவிளையாடல்களை நம்மால் ஊகிக்க முடியாது. தேவகிக்கும் வசுதேவருக்கும் மகனாக ஸ்ரீமன் நாராயணர் ஸ்ரீ கிருஷ்ணராக அவதரிப்பதற்கு முன்னரே அம்பிகை யோகமாயையாக தோன்றி விட்டாள். கம்சன் அவளை கொல்ல முற்பட்ட போது அவள் விண்ணில் தெய்வீக உருவமாக விட்டாள். ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்தில் அவருக்கு தாய்மாமன் பாசம் கிடைக்கவில்லை. ஆனால் அது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அவதாரத்தில் பெற்றுகொள்வார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை சிறு குழந்தையாக எண்ணினால் அவர்கள் வீட்டில் மறைமுகமான உருவத்தில் குழந்தை ரூபத்தில் உலாவுவார். அதே வாசவி கன்யகா பரமேஸ்வரியை அவர்களின் குழந்தையாக எண்ணி பாசமும் பக்தியும் பொழிந்தால் அவர்கள் வீட்டில் மறைமுகமாக தெய்வீக குழந்தையாக இருப்பாள். தூய எண்ணமுடைய பக்தர்களால் அவளுடைய கொலுசொலியை கேட்க முடியும். இதுவே கலி யுகத்தின் உண்மை. இதில் எந்த சந்தேகமும் இல்லை.

இப்போது நீ நன்றாக ஓய்வெடு. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை நினைவு படுத்தி கொள். பல ஜென்மங்களில் சேர்ந்த பாவங்கள் எரிந்து விடும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணையால் மட்டுமே உன்னால் இங்கு வர முடிந்தது" என்று ஸ்ரீ சித்தேந்திர யோகி அருளினார். நான் களைப்பாக இருந்தமையால் அயர்ந்து உறங்கி விட்டேன்.

என் பேரதிஷ்டங்களை எண்ணி என் மனம் உற்சாகம் அடைந்தது. விரைவாக குருவபுரம் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்து. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதங்களை விட்டு நீங்கவே கூடாது என்று தோன்றியது.

காலையில் கண்விழித்த போது பெரிய அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டது, ஏனென்றால் மலை பகுதியிலுள்ள ஒரு அத்தி மரத்தடியில் நான் கிடந்தேன். அந்த சுற்றுப்புறத்தில் ஜன நடமாட்டமே இல்லை. நான் ஸ்ரீ சித்தேந்திர யோகியின் ஆசிரமத்தில் இரவில் தங்கியிருந்தது எல்லாம் பிரமையா? அல்லது அவர் ஒரு மந்திரவாதியா? அல்லது பிசாசா? என்ற சந்தேகங்கள் என் மனதில் தோன்றின. ஸ்ரீ சித்தேந்திர யோகி ஸ்ரீ தத்தாத்ரேயரை பற்றி கூறியவை அனைத்தும் என் காதில் ஒலித்து கொண்டே இருந்தன. எனக்கு இப்படி ஒரு இக்கட்டான நிலைமைகளை ஏற்படுத்துவதன் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு என்ன பயன் போன்ற பல்வேறு எண்ணங்கள் என் மனதில் தோன்றின. என் உடமைகளை எடுத்துக்கொண்டு என் பயணத்தை தொடர்ந்தேன்.

மதியம் வரை என் பயணம் தொடர்ந்தது. சிறு வீடுகள் கொண்ட ஒரு குக்கிராமத்தை அடைந்தேன். பசி வயிற்றை கிள்ளியது. நான் ஒரு பிராமணன் என்பதால் பிராமணர்கள் வீட்டில் மட்டும்தான் உண்ண வேண்டும். வேறு எங்கும் சாப்பிடக்கூடாது. யாராவது பொருட்கள் கொடுத்தால் நானே சமைத்து சாப்பிடலாம் என்று நினைத்தேன். அப்படியென்றால் அந்த உணவை நான் சாப்பிடலாம். அந்த

ஊரில் யாராவது பிராமணர்கள் இருப்பார்களா என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதனால், நான் அந்த கிராமத்து மக்களிடம் விசாரித்தேன். அப்போது அவர்களில் ஒருவன் "ஐயா!! நாங்கள் மலைவாழ் மக்கள். நான்தான் தலைவன். எங்கள் ஊரில் எந்த பிராமணர்களும் இல்லை. உங்களுக்கு எந்த தயக்கமும் இல்லை என்றால் எங்களிடமிருந்து பழங்களும் தேனும் பெற்று கொள்ளலாம்" என்றனர். பிராயணத்தின் போது சூத்திரன் போல இருக்கலாம் என்ற பழமொழி ஒன்று உண்டு. ஆதலால், பிரயாணத்தின் போது அவர்கள் அளிக்கும் எதையும் உண்ணுவதில் எந்த தவறும் இல்லை என்று கருதினேன். அங்குள்ள மலைவாழ் மக்கள் அந்த மலைப் பகுதியில் இருக்கும் தேன் மற்றும் பழங்களை என் முன்னர் வைத்தனர். நான் அவற்றை உண்ண முற்பட்ட போது, எங்கிருந்தோ ஒரு காகம் வந்து என் தலையை கொத்தத் தொடங்கியது. நான் அதை துரத்தும் முயற்சியும் வீணானது. சற்று நேரத்தில் மேலும் சில காகங்கள் வந்து சேர்ந்தன. அவை என் உடல் முழுவதும் கொத்தி தீர்த்தன. நான் பயந்து ஓடத்தொடங்கினேன். அந்த காகங்கள் என்னை துரத்திக் கொண்டு வந்தன. அந்த காகங்களிடமிருந்து என்னை காப்பாற்ற அந்த ஊர்க்காரர்கள் எவராலும் முடியவில்லை. அந்த ஊர்த்தலைவர் "என்ன ஒரு வினோதம்!! எங்கள் ஊரில் காகங்கள் எவரையும் தாக்கியது இல்லையே!! இந்த காகங்கள் இவ்வளவு ஆக்ரோஷமாகவும் பிடிவாதமாகவும் உங்களை தாக்குவது ஆச்சர்யமாக உள்ளது. நீங்கள் சித்த புருஷர் எவரையோ திட்டியதாலோ அல்லது அவமானப்படுத்தியதாலோ கிடைத்த சாபத்தினால்தான் இந்த காகங்கள் உங்களை துரத்துகிறது. நாங்கள் அதை தடுத்தோமானால், நாங்கள் அந்த முனிவரின் கோபத்திற்கு ஆளாவோம். அதனால், இந்த திருவிளையாடலை மாற்ற முயற்சிக்க மாட்டோம். எங்களை தயவுசெய்து தவறாக நினைக்காதீர்கள்" என்று கூறிவிட்டு அமைதியாக அத்தலைவர் நின்றார்.

எனக்கு கொடுக்கப்பட்ட பழங்களையோ தேனையோ தொடக்கூட முடியவில்லை. உடல் முழுவதும் இரத்தம் சொட்டியது. நான் எவ்வளவு ஓடியபோதும் அந்த காகங்கள் என்னை விடாமல் துரத்தின. என் மோசமான நிலைமையை எண்ணி வருத்தமாக இருந்தது. நான் ஸ்ரீ சித்தேந்திர யோகியை சந்தேகப்பட்டதால்தான் இந்த நிலைமையோ? இல்லையே!! அவர் '**நீ ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசிப்பாய்**' என்று ஆசீர்வதித்தாரே!! என் பூர்வ ஜென்ம பாவங்கள் கழிந்தால்தான் ஸ்ரீ தத்தரின் தரிசனம் கிடைக்குமோ என்னவோ? நான் எவ்வளவு பாவங்கள் செய்தோருக்கிறேனோ? யாருக்கு தெரியும்? எவ்வளவு தண்டனைகள் அனுபவிக்க வேண்டுமோ தெரியவில்லையே!! ஸ்ரீவல்லபருடைய அருளும் தரிசனமும் கிடைக்க இவ்வளவு கஷ்டங்களும் ஆபத்துக்களும் இருக்குமா? கடவுளே!! எவ்வளவு தண்டனைகள் எனக்கு அளிக்க போகிறாய்? என்னை இப்போது யார் காப்பாற்றுவார்கள்? ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா!! காப்பாற்று!! காப்பாற்று!! சரணா!! சரணா!! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா!! அதே எண்ணத்துடன் முழுமையாக சரணடைந்து மெதுவாக அத்தி மரத்தின் வேரை சென்றடைந்தேன். ஸ்ரீ தத்தர் வாசம் செய்யும் அத்தி மரம் என்னை காப்பாற்றும்

என்று நான் எண்ண ஸ்ரீ தத்தரின் திருவிளையாடலோ என் நம்பிக்கைக்கு மாறாக இருந்தது. என் உடலில் இருந்து நான் இதுவரை உணராத துர்நாற்றம் வீசியது. அந்த துர்நாற்றத்தால் ஈர்க்கப்பட்டோ அல்லது என்னுடைய விதியின் காரணமாகவோ விஷ பாம்பு கூட்டம் என்னை நோக்கி வேகமாக வந்தன. அவைகள் என்னை கடித்து விட்டு வேகமாக சென்றன. முன்பு காகத்தால் துன்புற்றேன் இப்போது விஷப் பாம்பு கடியால் என் உடல் முழுவதும் விஷமேறியது. வாயில் நுரை தள்ளியது. இதயம் பலவீனம் அடைந்தது. நான் எந்த நிமிடமும் இறந்து விடுவேன் என்று தோன்றியது.

மாலை ஆனது. அவ்வழியாக சில சலவைத் தொழிலாளர்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் துணிகளை துவைத்து காயவைத்து மூட்டைகளாகக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். அம்மூட்டைகளை கழுதை மேலேற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். என் துயரமான நிலையை அவர்கள் கண்ட போதும் நான் பிராமணன் என்பதால் என்னை தொட சிறிது நேரத்திற்கு தயங்கினர். மேலும் தாமதித்தால் உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்று உணர்ந்தனர். அதனால், என்னை கழுதை மேல் ஏற்றி அவர்கள் கிராமத்திற்கு அழைத்து சென்றனர். இன்று ஒரே நாளில் துன்பங்கள் அனைத்தும் எனக்கு வரிசையாக நடந்து கொண்டிருக்கிறது. செருப்பு தைக்கும் தொழிலாளிகள் தங்கும் இடத்திற்கு அவர்கள் என்னை கொண்டு சென்றார்கள். அவர்களில் ஒருவருக்கு இந்த விஷ முறிவு மருந்து தெரிந்திருந்தது. என்னை ஒரு கயிற்று கட்டிலில் கிடத்தினர். அந்த இடம் முழுவதும் துர்நாற்றம் வீசியது. அச்செக்கிலிய மருத்துவன் சில காட்டு மூலிகைகளிலிருந்து சாறுகளை எடுத்து என்னை குடிக்கச் செய்தான். பாம்பு கடித்த இடங்களில் சில இலைகளை வைத்து கட்டினான். பால் ஒழுகும் கொழுந்தான அத்தி மர இலைகளை பறித்து என் இரு காதுகளிலும் சொருகினான். வலி தாங்க முடியவில்லை. எழுந்து ஓடிவிட முயன்ற என்னை இரு வலிமையானவர்கள் அழுத்தி பிடித்தனர். அதனால் வேறு வழியில்லாமல் இருந்தேன். அம்மருத்துவன் "**அத்தி இலையில் விஷம் வரும். பிறகு அந்த இலைகளை எரித்துவிட வேண்டும். விஷம் இலைக்கு வரும் போது இவர் மிகுதியாக வலியில் துடிப்பார், அதனால் அழுத்தி பிடித்துக்கொள்ளுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

சிறிது நேரத்தில் விஷம் முறிந்து குணமானேன். நான் அந்த சக்கிலியனின் வீட்டிலேயே இரவு முழுவதும் தங்கினேன். இரவு முழுவதும் "தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தத்த திகம்பரா!" என்று பாடிக் கொண்டிருந்தான். நான் கட்டிலில் படுத்திருந்தேன். அந்நாமத்தை கேட்டவுடன் என் மனம் பூரிப்படைந்தது. நானும் அந்த சக்கிலியனும் ஒரே குருவின் சிஷ்யர்கள் என்று எண்ணியபோது அவன் மீது என் அன்பு அதிகரித்தது. அடுத்த நொடியே நான் பிராமணன் என்றும் அவன் தாழ்ந்த ஜாதியை சேர்ந்தவன் என்ற எண்ணம் மேலோங்கியது.

## சங்கர் பட்டுக்கு சக்கிலியன் வல்லபதாஸ் கூறிய அறிவுரைகள்

பாடி முடித்த பின் அந்த சக்கிலியன் என் அருகில் வந்தான். கருணை அவன் கண்களிலிருந்து பொழிந்து கொண்டிருந்தது. அவன் இரு கண்களும் ஆத்ம ஞானத்தை அனுபவித்தவன் என்பதை உணர்த்தியது. அவர் ஒரு யோகியோ என்று எனக்கு தோன்றியது. அவர் என்னை பார்த்து "ஐயா!! என் பெயர் வல்லபதாஸ் நான் மிருகத்தோலிருந்து பொருட்கள் தயாரிக்கும் கலைஞன். நான் தாழ்ந்த ஜாதிக்காரன்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!! இருப்பினும், நான் உங்களிடம் சில தகவல்களை கூற வேண்டும். நீங்கள்தான் சங்கர் பட் என்றும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசிக்க சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றும் எனக்கு தெரியும். அதுமட்டுமல்லாமல் வரும் வழியில் உங்களை காகம் கொத்தியதும் நாகம் தீண்டியதும் எனக்கு தெரியும்" என்றார்.

அதிர்ச்சியில் உறைந்து, இவர் என்ன ஜோசியக்காரரா அல்லது ஞானியா? என்று யோசித்துக்கொண்டே அவர் கூறியவற்றை கேட்டுக்கொண்டிருந்தேன். **"நான் ஜோசியனெல்லாம் இல்லை. ஸ்ரீ பீதிகாபுர புண்ணிய க்ஷேத்திரத்தில் பல சிறந்த பிராமணர்கள் பிறந்திருந்தனர். அங்குதான் வேதச் சக்கரவர்த்தி மல்லாடி பாப்பண்ணவதானி வாழ்ந்து வந்தார். பரப்ரம்மத்தை பற்றி வர்ணிக்க முயற்சித்த வேதங்கள் சோர்வடைந்து விட்டன. அதன் தத்துவங்களை குறிப்பிட்டு சரியாக கூற முடியாமல் அனைத்தையும் "இது இல்லை", "இது இல்லை"** என்று தள்ளி விட்டுக் கொண்டே வந்தன. இதுதான் பரபிரம்மத்தின் குணம். பீதிகாபுரம் என்னும் இடத்தில்தான் பரபிரம்மத்தின் ஸ்வரூபமான '**ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்**' அவதரித்தார். வறண்ட தத்துவங்களாலும் அர்த்தமில்லா விவாதங்களினாலும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையை பெற்றுவிட முடியாது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் கிருபையை பெற பேரறிவு தேவையில்லை. ஆனால் பெருமிதம்,கர்வம் இருந்தால் அவரை நம்மிடமிருந்து தூரமாக்கிவிடும்.

உங்களை கொத்திய காகங்கள் முன் ஜென்மத்தில் பீதிகாபுரத்தில் வாழ்ந்த சிறந்த பண்டிதர்கள். அவர்களால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக குணத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் அவரை ஸ்ரீ தத்தர் என்று உணர்ந்து கொள்ள முடியவில்லை. இதனாலேயே அவர்கள் வாழ்க்கை முழுவதும் வீணானது. இந்த பிராமணர்கள் நான்கு வேதங்களையும் தலைகீழாக ஒப்பித்தாலும் என்ன பயன்? அவர்கள் மீண்டும் மீண்டும் '**க்ரம, கன, ஜடா, ஸ்வாதிய**' (*words described for grammatical errors*) போன்ற வார்த்தைகளை அகந்தையினால் கூறிக்கொண்டே இருந்தனர். இறந்த பிறகு அவர்கள் சொர்க்கத்தை அடைந்தனர்.

இந்திரன் அவர்களை புகழ்ந்து விட்டு, **"நீங்கள் ஒரு க்ராமந்தா, ஒரு காணாப்தி, ஒரு ஜடி நீங்கள் வாக்குவாதம் செய்வதில் கில்லாடி. என்ன ஒரு பேரதிர்ஷ்டம்? எத்தனை ஆயிரம் முறை நீங்கள் வேதத்தை ஓதியிருப்பீர்கள்? என்ன புண்ணியம்!! என்ன புண்ணியம்!! அந்த புண்ணியத்தால்தான் சொர்க்கத்திற்கு வரமுடிந்தது"** என்றார். இந்திரலோக வாசிகளும் அவர்களை தலையில் வைத்து கொண்டாடினர். எனினும்,

அந்த பண்டிதர்கள் பசியால் தவித்தனர். சொர்க்கத்தில் இருக்கும் அமிர்தத்தை உண்டால் பசியும் தாகமும் தீர்ந்து விடும் என்று கேள்விப்பட்டிருக்கிறார்கள். இதை எவரிடம் கூறியும் கண்டுகொள்ளாததால் இந்திரனிடமே கூறினர். அதற்கு இந்திரன் "வேதம் என்பது கடவுள் விடும் மூச்சுக்காற்றின் உள்ளிழுத்தலும் வெளியிடுதலும் ஆகும். கடவுள் எல்லையற்றவர் இறப்பில்லாதவர். ஆகவே வேதத்திற்கும் எல்லையே கிடையாது. வேதங்களே அனைத்து தர்மத்திற்கும் அடிப்படை. நீங்கள் வேதத்தைப் பாராயணம் செய்து கடவுளை போற்றியுளீர்கள். அதன் பலனாகத்தான் தேவர்களாகிய நாங்கள் உங்களை போற்றுகிறோம். இல்லை யென்றால் என்னிடமிருந்து இது போன்ற புகழுரைகள் உங்களுக்கு கிடைக்குமா என்ன? ஒருவன் உணவை விரும்பினால் அதை அதிகமாக மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். ஒரு தானியத்தை தானமாக அளித்தால் அதை தேவர்கள் ஆயிரமாக பெருக்கி தானம் அளித்தவருக்கு கொடுப்பர். நீங்கள் எதுவுமே தானம் அளிக்காத போது நான் எப்படி உங்களுக்கு திருப்பி அளிக்க முடியும்? நீங்கள் வேதத்தை ஓதியதால் இந்த அனுகூலங்களை பெற்றீர்கள். நீங்கள் இந்திரலோகம் இருக்கும் வரை இங்கு தாராளமாக தங்கலாம். பிறகு வேறு லோகத்திற்கு சென்று அங்கு தங்கலாம். இந்த வழியில் நீங்கள் எப்போதும் சுதந்திரமாக இருக்கலாம்" என்று விளக்கினார் இந்திரன்.

இந்திரனின் வார்த்தைகளை கேட்டு கொண்டிருந்தவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி கொண்டிருந்தனர். பசியோடும் தாகத்தோடும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பது தாள முடியாத தண்டனையாக இருந்தது. இந்திரன் தொடர்ந்தார் "நீங்கள் பாத கயா க்ஷேத்திரத்தில் இருந்தாலும் உங்கள் மூதாதையர்களுக்கு சிரத்தையோடும் அக்கறையோடும் திவசங்கள் செய்யவில்லை. அந்த நாட்களில் செய்யும் செலவை கணக்கிட்டு கொண்டிருந்தீர்கள். அந்நாட்களில் உண்ணும் உணவின் சுவையை பற்றிய எண்ணம் இருந்ததே ஒழிய அந்த புண்ணிய தினத்தில் கடைபிடிக்க வேண்டிய சிரத்தையும் அக்கறையும் பற்றிய எண்ணம் இல்லை. அதனால் உங்கள் முன்னோர்கள் நல்ல கதியை அடையவில்லை. உங்கள் குழந்தைகளும் அதே போல் நடந்துகொண்டனர். நீங்கள் அதிக நாட்கள் வாழ்வதாகவும் உங்களின் மருத்துவ செலவுக்கு அதிக பணம் செலவாவதாகவும் புலம்புகின்றனர். அதுமட்டுமல்லாமல் **"எவ்வளவு உணவு வீணாகிறது"** என்று நினைக்கின்றனர். ஸ்ரீமன் நாராயணனே உங்கள் முன் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்திருக்கிறார். அவர் மோக்ஷத்திற்கான பாதையை உங்களுக்கு காண்பித்த போதும் அவரை தவறாக கூறினீர்கள். பயனற்ற விவாதங்களும் எதிர் விவாதங்களும் செய்து கொண்டிருந்தீர்கள். எங்கும் நிறைந்திருத்தல், அனைத்திலும் இருத்தல், சர்வ வல்லமை போன்ற தெய்வீக தன்மைகள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரிடம் வெட்டவெளிச்சமாக தெரிந்த போதும் அவரை ஸ்ரீ தத்தரின் அவதாரம்தான் என்று அறிந்து கொள்ளாமல் குருடர்கள் போல் இருந்தீர்கள். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை உச்சரித்து புனிதம் அடைந்த ஒருவரின் ரத்தத்தை குடிக்கும் வரையில் உங்கள் முன்னோர்களின் ஆவியின் உருவத்தில் காகங்களாக

*இருக்க வேண்டும்" என்று கூறினார் இந்திரன். மேலும் தொடர்ந்த வல்லபதாஸ்* **"சங்கர் பட்!! இந்த காரணங்களினால்தான் அவர்கள் தன் முன்வினை பலனால் காகங்களாக பிறந்து உங்கள் இரத்தத்தை பருகி உயர்ந்த நிலையை அடைந்தனர்"** *என்றார்.*

*வல்லபதாஸ் கண்டிப்பாக ஒரு சாதாரண மனிதனாக இருக்க முடியாது என்பதையும், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அருள் அவரிடம் முழுவதுமாக உள்ளது என்பதையும் அறிந்து கொண்டேன். மேலும்* **"உங்கள் உடம்பிலிருந்து வந்த துர்நாற்றத்தினால் ஈர்க்கப்பட்ட நாகங்கள் மோட்சம் அடைந்தன"** *என்றார் வல்லபதாஸ்.*

*பிறகு நான்* **"ஐயா!! வல்லபதாஸ் அவர்களே!! இந்நிகழ்ச்சிகள் ஏன் நடக்க வேண்டும்? காகங்களுக்கும் சர்பங்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் என் உடல் உணவானது ஒரு துன்பம் மிக்க அனுபவம். இது போன்று வேறு ஏதாவது விலங்கு மீண்டும் தாக்குமோ என்ற பயம் எனக்கு மிகுதியாக உள்ளது"** *என்றேன்.*

**"இவை அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்கள்தான். பயப்பட வேண்டாம். இது போன்று இனி உங்களுக்கு நிகழாது"** *என்றார் வல்லபதாஸ். உயிரை அளிப்பவருக்குத்தான் அதை எடுக்கும் உரிமையும் உண்டு. ஆகவே, அந்த உரிமை கடவுளைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது.*

*எனினும், உங்கள் முன்னோர்கள் சுடுகாட்டில் உள்ள காளியை உபாசனை செய்து வந்தனர். அந்த மந்திரங்களின் துணையுடன் அவர்களுக்கு பிடிக்காத பலரை கொலை செய்தனர். அம்மனிதர்களின் அகால மரணத்திற்கு காரணமானதால் பாவங்களை சேர்த்துக்கொண்டு சர்பங்களாக பிறந்தனர். நீங்களும் அக்குடும்பத்தை சேர்ந்தவர் என்பதாலும் உங்களுக்கு அவர்களுடன் இரத்த சம்பந்தம் இருப்பதாலும் இது போன்று நடந்தன. மேலும், நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கிருபையை பெற்றுள்ளீர்கள். அந்த சிறு புண்ணியத்தினால், இந்நிகழ்ச்சி நடைபெற்று உங்கள் முன்னோர்களை முக்தி அடைய செய்தீர்கள்" என்று வல்லபதாஸ் விளக்கினார்.*

*"ஒரு பிராமணன் என்பவன் உண்மையை தேடுபவனாக இருக்க வேண்டும். ஒரு க்ஷத்ரியனோ தர்மத்தை ஒத்து இருக்க வேண்டும். ஒரு வைசியன் உழவை மேற்கொண்டு கால்நடைகளை பராமரித்து சிறந்த வியாபாரியாக இருக்க வேண்டும். ஆதலால் அவர்கள் அமைதியான மனிதர்களாக இருக்க வேண்டும். இதே ஒரு சூத்திரன் மிகவும் அன்பானவனாக சேவைகள் புரிய வேண்டும். ஆயினும் தெய்வீக அருளை பெறுவதற்கு ஒருவரின் குலம், மதம், ஏழை, பணக்காரன் ஆகிய எந்த தகுதிகளும் தேவையில்லை. ஒரு பிராமணன் க்ஷத்ரியனின் கடமைகளைச் செய்யும் போது அரசனாகிறான். இதே ஒரு க்ஷத்திரியன் பிரம்மத்தை அறிய விரும்பினால் அவன் பிராமணனின் கடமைகளை ஏற்றுக்கொள்கிறான். வைசியனான குஸும சிரேஷ்டி க்ஷத்ரிய தர்மத்தை கடைப்பிடித்து அரசனாகவில்லையா? பிராமண தர்மத்தின் படி எதிரியை கொல்வது பாவம் இதே க்ஷத்ரிய தர்மத்தில் அது கடமை. நீ ஒரு பிராமணன், உண்மையைத் தேடுபவன். அஹிம்சையே உன் முக்கியமான கடமை இதே கசாப்பு கடைக்காரனுக்கு அது இல்லை.*

ஆகையால் ஒருவன் எந்த ஜாதியை கடைபிடித்தாலும் சரி அவன் அதன் தர்மத்தை ஒத்து தன் கடமைகளை செய்வானாயின் அதற்குச் சரியான பலன்கள் கிடைக்கும். உங்களுக்கு இப்போது உடல் நலம் சரியில்லாததால் வைத்தியரிடம் இருக்கும் தேவை இருக்கிறது. அதனால் என்னிடம் அழைத்து வரப்பட்டீர்கள். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனைத்தையும் கவனித்து கொண்டுதான் இருப்பார் என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சிறிய வயதில் ஸ்ரீ விஷ்ணு சுலோகங்களை பாராயணம் செய்தீர்கள். அப்போது ஸ்ரீ கணேசரின் ஸ்லோகத்தை நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு கேலிசெய்து உளறினீர்கள்.

**"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்**
**பிரசன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே"**

என்ற ஸ்லோகத்திற்கு மாறான ஒரு அர்த்தம் வருமாறு வேடிக்கையாக கூறினீர்கள். நீங்கள் கூறியது என்னவென்றால்:

| | | |
|---|---|---|
| சுக்லாம்பரதரம் | = | வெள்ளை உடைகளை தாங்கிக்கொண்டிருக்கும். |
| விஷ்ணும் | = | எங்கும் நிறைந்த ஒன்று. |
| சசிவர்ணம் | = | சாம்பல் நிறத்துடன். |
| சதுர்புஜம் | = | நான்கு கைகளுக்கு பதில் நான்கு கால்கள். |
| ப்ரஸன்னவதனம் | = | (1) கழுதை கனைக்கும் போது அதற்கு கருணையான முகம் இருக்கும். |
| | | (2) கழுதை தன் பின் காலால் அனைவரையும் உதைக்கும் |
| த்யாயேத் | = | அதனால்தான் அதன் முகம் பார்ப்பதற்கு அழகாக உள்ளது |
| ஸர்வவிக்னோப சாந்தயே | = | எல்லா தடைகளும் நீங்க வேண்டி கொள்கிறேன் |

என்று இந்த புனிதமான ஸ்லோகத்தை கழுதைக்கு பொருந்துமாறு விளையாட்டாக மாற்றி கூறினீர்கள்.

சங்கர் பட்!! ஸ்ரீ தத்தர் மிகுந்த திறன் மிக்கவர். நாம் விளையாட்டாக செய்யும் தவறுகளை கடவுள் தன் இருப்பால் சரி செய்கிறார். சலவை தொழிலாளிகள் உங்களை கழுதை மேல் ஏற்றி இங்கு கொண்டுவந்தனர். அப்போது அழுக்கு படிந்து சாம்பல் பூசியது போல் இருந்தீர்கள். இங்கு வரும் போது நின்று நிதானமாக சில சமயம் உங்களுடைய நான்கினையும் அதாவது கைகளை தரையில் ஊன்றியும் நடந்து வந்தீர்கள். நீங்கள் அத்தி மரத்திடம் வந்தாலும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு விபத்தை தவிர்க்க முடியவில்லை. நீங்கள் பாம்புகளிடமிருந்து தப்பிக்க எண்ணியதும் பொய்யானது. நீங்கள் வலியால் துடிக்காதபோது உங்களுக்கு தெளிவான முகத்தோற்றம் இருந்தது. கடைசியில் சக்கிலியர்களின் கிராமத்திற்கு அழைத்து வரப்பட்டீர்கள். பொழுதுபோக்காக ஸ்ரீ ஸ்ரீபாதர் உங்களுக்கு இப்படி பல துன்பங்கள் ஏற்படுத்தி படிப்பினை அளித்துள்ளார். அந்த சக்கிலியர்கள் தங்களின் இழிவான பிறப்பிலிருந்து விடுபட்டனர். நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு ஸ்ரீ விஷ்ணுவின் ஸ்லோகத்தை நகைச்சுவையான முறையில் சொல்லிக்

கொடுத்தீர்கள். அதன் காரணமாகத்தான் கீழ்ஜாதிக்காரனான என்னிடமிருந்து உபதேசம் பெறுகிறீர்கள். இன்று இங்கு இருக்கிறீர்கள். நாளை உங்கள் ஜாதிக்காரர் வீட்டில் தங்கும் போது தவறுதலாக இங்கு தங்கியதாக கூறினீர்களானால் அவர்கள் உங்களை ஒதுக்கி வைத்துவிடுவர்." என்றார் வல்லபதாஸ்.

வல்லபாதாஸின் அறிவுரையை கேட்டவுடன் நான் பிராமணன் என்ற அகங்காரம் நீங்கியது. வல்லபதாஸ் ஒரு கீழ்ஜாதிக்காரன் என்ற எண்ணம் மறைந்து போனது. என் சகோதரன் போன்ற ரத்த சம்பந்தம் உடையவர் என்ற உணர்வை ஏற்படுத்தியது. வல்லபதாசின் உபசரிப்பை இரண்டு மூன்று நாட்கள் ஏற்றுக்கொண்ட பின் என் பயணத்தை தொடர்ந்தேன்.

ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபரின் கருணையை எங்கனம் விவரிப்பது? நான் விசித்ராபுரம் என்கிற கிராமத்தில் விசித்திரமான சிக்கலில் மாட்டி அதிசயமான முறையில் வெளிவந்தேன்.

விசித்திராபுரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது சில அரசு சிப்பந்திகள் பவ்வியமாக என்னிடம் வந்து **"நீங்கள் சைவரா? வைணவரா?"** என்று கேட்டனர். நான் ஸ்மார்த்தர் என்றும் சிவனும் விஷ்ணுவும் வேறில்லை என்று எண்ணினாலும் சைவத்தின் பால் சற்று ஈடுபாடு அதிகம் என்றும் சிருங்கேரி சாரதாபீடம் சங்கராச்சாரியாரை குருவாக கொண்டவர்கள் என்று கூறினேன். **"உங்களை அரசர் அழைத்துவரச் சொன்னார்" என்றனர். வழியில்தான் சில வினோத விஷயங்களை அறிந்துகொண்டேன். அந்த அரசன் எல்லா பிராமணர்களையும் அழைத்து "இவ்வளவுக்கு இவ்வளவு என்றால் அவ்வளவுக்கு எவ்வளவு?"** என்று கேட்பான். எவராலும் அவனை திருப்திப்படுத்தும் பதிலை கொடுக்க முடியவில்லை. அந்த அரசர் சில வருடங்களுக்கு முன் வாரிசு வேண்டி யாகம் செய்தான். அதன் பலனால் ஒரு மகன் பிறந்தான். எனினும், அந்த மகன் ஊமை ஆன நாளில் இருந்து, பிராமணர்கள் வினோதமான பிரச்சனைகளுக்கு ஆளானார்கள். பிராமணர்கள் செய்த யாகத்தின் குறையால்தான் தன் மகன் ஊமை ஆனான் என்று தவறாக எண்ணிக் கொண்டிருந்தான். அவன் எல்லா பிராமணர்களையும், அதாவது சைவராக இருந்தால் நாமம் இட்டும் வைஷ்ணவராக இருந்தால் விபூதி பட்டையிட்டும் தலையை மொட்டை அடித்து கரும்புள்ளி செம்புள்ளி வைத்து கழுதை மேல் ஊர்வலம் அனுப்பினான்.

இந்த சூழ்நிலை சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கு தாங்கமுடியாத துன்பத்தை அளித்தது. அந்த அரசன் திடீரென வினோதமாக நடந்து கொள்ளத் துவங்கினான். அவன் அனைத்து பிராமணர்களுக்கும் தாராளமாக முளைக்கீரையை தானமாக அளித்தான். அவன் அனைத்து விளை நிலங்களிலும் முளைக்கீரையைப் பயிரிட ஆணையிட்டான். வரியின் பாதியை முளைக்கீரையாக வசூலித்தான். விளைந்த முளைக்கீரையை வண்டி வண்டியாக தன் கோட்டையில் சேமித்து வைத்தான். அதை பிராமணர்களுக்கு தானமாக அளித்தான். அவன் நாட்டை சேர்ந்த பிராமணர்கள் அரிசியையோ அல்லது மற்ற உணவுகள் உண்ண தடை

விதித்தான். சமைத்த முளைக்கீரையை பிரதான உணவாக உண்டபின், தின்பண்டமாக கூட சமைத்தோ அல்லது சமைக்காத முளைக்கீரையை மட்டும்தான் உண்ணவேண்டும்.

இந்த ஏழை பிராமணர்களால் என்ன செய்ய முடியும்? தாங்கள் பெரிய மேதாவிகள், தத்துவ ஞானிகள், புராணங்களில் புலமை நிறைந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த அனைத்து பிராமணர்களும் தங்கள் கர்வத்தை துறந்து அவர்களை இந்த நிலையில் இருந்து காப்பாற்றுமாறு கடவுளிடம் மௌனமாக வேண்டி கொண்டிருந்தனர். அந்த பிராமணர்களில் ஒருவன் ஸ்ரீ தத்தாத்ரேயரின் பக்தன். வெறும் நினைப்பால் மட்டுமே கருணை பொழியும் ஸ்ரீ தத்தரால் மட்டுமே நம் நிலையை மாற்ற முடியும் என்று கூறினான். அனைத்து பிராமணர்களும் **மண்டல தீக்ஷை** (நாற்பது நாட்கள் விரதம்) இருந்து தத்தரை வழிபடத் தொடங்கினர்.

அரசனின் மகன் ஊமையாக இருந்தமையால் அவன் ஊமை பாஷையை ஊக்குவிக்க எண்ணினான். சைகை பாஷைக்கான புத்தகத்தை எழுதுமாறு ராஜகுருவை ஆணையிட்டான். முதலில் ஆணவத்தில் இருந்த ராஜகுரு ஊமை பாஷையை உருவாக்க பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பரிதாபகரமான நிலையில் இருந்தார்.

## சங்கர் பட்டுக்கும் மஹாராஜாவிற்கும் இடையே நடந்த உரையாடல்

நான் மன்னர் முன் அழைத்து வரப்பட்டேன். வேர்த்து விறுவிறுத்து நடுங்கிக்கொண்டிருந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் எனக்கு அளித்த கடுமையான பரிட்சைகளை எண்ணிக்கொண்டிருந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை இடைவிடாமல் ஜபித்து கொண்டிருந்தேன். எப்போதும் இல்லாதது போல் தைரியம் எனக்கு உருவானது. அனைவரையும் கேட்பது போல் '**அவ்வளவுக்கு இவ்வளவு என்றால் இவ்வளவுக்கு எவ்வளவு?**' என்ற கேள்வியை கேட்டான். '**இவ்வளவுக்கு இவ்வளவுதான்!**' என்ற என்னுடைய பதிலை கேட்டு அரசன் வியப்படைந்தான். "மஹாத்மா! நீங்கள் மிகப்பெரிய ஞானி. உங்களை பார்த்ததில் புண்ணியம் பெற்றேன். என் முன்ஜென்மம் பற்றிய விவரங்களை சில நாட்களுக்கு முன்தான் தெரிந்துகொண்டேன். முன்ஜன்மத்தில் நான் ஒரு ஏழை பிராமணனாக இருந்தேன். அப்போது முளைக்கீரையை என் வீட்டில் வளர்த்து வந்தேன். கேட்டவர்களுக்கெல்லாம் இலவசமாக கொடுத்து வந்தேன். அதை வாங்கி சென்ற பிராமணர்களுக்கு பணமோ உணவோ தடையில்லாமல் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் என்னிடம் இலவசமாக பெற்று சென்றார்களே தவிர எனக்கு அனுகூலமாக இல்லை. எனக்கு எந்தவித கருணையும் காட்டவில்லை. அவர்களுக்கு பதிலாக நான் செல்லும் ஸ்ரார்தங்களுக்கோ திருமணங்களுக்கோ சம்பாவனையாக மிகுதியான பணம் கிடைக்கும். என்னை அங்கு அனுப்பியவர்கள் கிடைக்கும் சம்பாவனையில் 99 சதவிகிதத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு மீதமான 1 சதவிகிதம் மட்டுமே என்னிடம் கொடுப்பர். உழைப்பு என்னுடையது ஆனால் பரிசு அவர்களுக்கு. அதுமட்டுமல்லாமல், இலவசமாக என் வீட்டில் இருந்து முளைக்கீரை கூட

அவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. நான் வறுமையில் வாடினாலும் தானமாக கொடுக்கும் முளைக்கீரையை நிறுத்தவே இல்லை. முளைக்கீரை மிகவும் சுவையாக இருந்தமையால் அதை தினமும் உண்பதில் எந்த பாதிப்பும் இல்லை என்று கூறிக்கொண்டு பிராமணர்கள் அனைவரும் தினமும் உண்டனர்.

காலம் சுழன்றது. நான் ஏழ்மையிலும் முளைக்கீரையை தானம் செய்ததன் பலனாக இந்த பிறவியில் அரசராக பிறந்தேன். என்னிடமிருந்து முளைக்கீரையை தானமாகப் பெற்றுக்கொண்ட பிராமணர்கள் இந்த பிறவியில் என் நாட்டில் பிராமணர்களாகப் பிறந்தனர். ஆனால் அவர்களை விட பல மடங்கு பணக்காரனாக நான் பிறந்துள்ளேன். முளைக்கீரையை தானமாக கொடுத்து அரசனானேன். அதனால் இப்போதும் வண்டி வண்டியாக முளைக்கீரையை தானமாக அளிக்கிறேன். அதனால்தான் '**இந்த அளவிற்கு தானம் செய்தால் எந்த அளவிற்கு எதிர்காலத்தில் செல்வ செழிப்பு கிடைக்கும்**' என்பதை அறியவே இந்த கேள்வியை கேட்டேன். நீங்கள் மட்டும்தான் என் வினோதமான கேள்விக்கு சரியான பதிலை அளித்தீர்கள்" என்று அரசன் கூறி தன் பேச்சை முடித்துக்கொண்டான். அதற்கு நான் **"போன ஜென்மத்தில் நீங்கள் ஏழை பிராமணன். அப்போது முளைக்கீரை விலையுயர்ந்த பொருள். ஆனால் இந்த ஜென்மத்தில் அதன் மதிப்பு மிகவும் குறைவு. வைரம், தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை தானம் அளிக்கும் நிலையில் இருக்கும் நீங்கள், இப்போதும் முளைக்கீரையை தானம் அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு கீரையை தானமாக அளித்தாலும் அந்த கீரையை போன்று நூறு மடங்கு அதிகமாக அதே கீரைதான் கிடைக்கும்"** என்ற என் விளக்கத்தை கேட்டு மகிழ்ச்சி அடைந்தார் அரசன். அவன் பூர்வ ஜன்ம பலன்கள் பற்றிய என் தற்செயலான விளக்கங்களால் நான் திருப்தி அடைந்தேன். என்னை கழுதை ஊர்வலத்திலிருந்து தப்பிப்பிக்க வைத்த ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மனதார நன்றி தெரிவித்தேன். சிறு வயதில் விளையாட்டாக 'சுக்லாம் பரதரம்' என்ற சுலோகத்தை தவறாக விளக்கியதால் ஏற்கனவே கழுதை ஊர்வலம் சென்றுவிட்டேன். எனக்கு மீண்டும் அந்த அவமானம் நிகழாமல் காப்பாற்றிய ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மனதார நன்றி தெரிவித்தேன்.

இரண்டாவது சோதனையை ராஜகுரு நடத்தினார். ராஜகுரு தன் சோதனையை அரசருக்கு மிகவும் பிடித்த ஊமை பாஷையில் நிகழ்த்தினார். முதல் செய்கையாக தன் விரலை காட்டி இது ஒன்றா, இரண்டா என்று கேட்டார். நான் தனியாக வந்திருக்கிறேனா அல்லது கூட்டாளியுடன் வந்திருக்கிறேனா? என்பதை கேட்கிறார் என்றெண்ணி ஒன்று என்று விரலை காட்டினேன். இரண்டாவது செய்கையாக மூன்று விரலை காட்டினார். அது எனக்கு ஸ்ரீ தத்தாத்ரேயரை நினைவூட்டியதால், பக்தி என்பது ரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்றெண்ணினேன். அதனால், என் விரல்கள் அனைத்தையும் ஒன்றுகூட்டி (முஷ்டி) காண்பித்து இது ரகசியமான விஷயம், நம் உள்மனது மட்டுமே அறிய வேண்டிய ஒன்று என்பது போல் காண்பித்தேன். பெரும் மகிழ்ச்சி அடைந்த ராஜகுரு இனிப்பை வழங்கியதும் அதை

மறுத்துவிட்டு அங்கு இருந்த எனக்கு மிகவும் விருப்பமுள்ள அவல் மூட்டையை காண்பித்தேன். அங்கிருந்த மூட்டையில் இருந்து கொஞ்சம் அவலை எடுத்து அவர்களிடம் கொடுத்தேன். எனக்கு இனிப்புக்களை விட அவல் பிடிக்கும் என்பதால் அவர்களிடம் அதையே பகிர்ந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அப்படி செய்தேன்.

உற்சாகமடைந்த ராஜகுரு **"ராஜா! இவர் மிகப்பெரிய ஞானி. இவர் அனைத்து வேதங்களும் அறிந்த மிகச் சிறந்த பண்டிதன் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இவர் ஊமை பாஷையிலும் வல்லவர்".** எனக்கு அனைத்தும் மிகுந்த குழப்பமாக இருந்தது. பிறகு மஹாராஜாவிடம் **"ராஜா, இரண்டு விரல்களை காட்டி சிவனும் விஷ்ணுவும் ஒன்றா வேறா? என்று கேட்டதற்கு ஒரு விரலை காட்டி ஒன்றே என்று பதிலளித்தார். மூன்று விரல்களை காட்டி பிரம்மா, சிவன், விஷ்ணு தனித்தனியாக இருக்கிறார்கள் என்று கூறியதற்கு 'ஐந்து விரல்களையும் ஒன்றாக்கிய கை ஒன்றாக இல்லையா?' என்று என்னை கேட்டார். நான் இனிப்பை அவரிடம் வழங்கி என்னை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுமாறு கூறினேன். தான் சிஷ்யர்களை பற்றி கவலைப்படுவதில்லை. குசேலனை போல் திருப்திகரமாக வாழ்வதாக கூறி என் கோரிக்கையை மறுத்துவிட்டு காய்ந்த அவலை என்னிடம் கொடுத்தார்".** எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஆஹா! இந்த உலகத்தில் ஒவ்வொருவரின் புரிதலும் ஒவ்வொரு விதமாக உள்ளதே என்று வியப்பாக இருந்தது. அடுத்ததாக மூன்றாவதும் கடைசி சோதனை. ராஜகுரு ருத்ர சமகத்தில் (11வது அனுவாகம்) இருந்து மந்திரத்தை கூறி அதற்கு விளக்கம் கேட்டார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை நினைவில் கொண்டு அதன் விளக்கத்தை என் அறிவை கொண்டு விவரிக்க தொடங்கினேன்.

**ஏகா ச மே, திஸ்ரஸ்ச மே, பஞ்ச சமே, ஸப்த ச மே,**
**நவ ச மே ஏகாதஸ ச மே, த்ரயோதஸ ச மே, பஞ்சதஸ ச மே**
**ஸப்ததஸசமே, நவதஸசமே ஏகவிகும்ஸதிஸ்மே**
**த்ரயோவி கும்ஸதிஸ்சமே, பஞ்சவிகும்ஸதிஸ்ச மே,**
**ஸப்தவிகும்ஸதிஸ்சமே, நவவிகும்ஸதிஸ்சமே, ஏகதரிக்கும் சச்சதமே**

என்கிற சமக மந்திரத்தின் விளக்கம் என்னவென்றால்

| சமகம் | தமிழில் | அணுக்களின் எண்ணிக்கை | வர்க்கமூலம் |
|---|---|---|---|
| ஏகாசமே | 1 | 0+1 = 1 | $\sqrt{1} = 1$ |
| திஸ்ரஸ்சமே | 3 | 3+1 = 4 | $\sqrt{4} = 2$ |
| பஞ்சசமே | 5 | 5+4 = 9 | $\sqrt{9} = 3$ |

| | | | |
|---|---|---|---|
| ஸப்தசமே | 7 | $7+9= 16$ | $\sqrt{16} = 4$ |
| நவசமே | 9 | $9+16= 25$ | $\sqrt{25} = 5$ |
| ஏகாதஸசமே | 11 | $11+25= 36$ | $\sqrt{36} = 6$ |
| த்ரயோதஸசமே | 13 | $13+36= 49$ | $\sqrt{49} = 7$ |
| பஞ்சதஸசமே | 15 | $15+49= 64$ | $\sqrt{64} = 8$ |
| ஸப்ததஸசமே | 17 | $17+64= 81$ | $\sqrt{81} = 9$ |
| நவதஸசமே | 19 | $19+81= 100$ | $\sqrt{100} = 10$ |
| ஏகவிகும்ஸதிஸ்சமே | 21 | $21+100= 121$ | $\sqrt{121} = 11$ |
| த்ரயோவி கும்ஸதிஸ்சமே | 23 | $23+121= 144$ | $\sqrt{144} = 12$ |
| பஞ்சவி கும்ஸதிஸ்சமே | 25 | $25+144= 169$ | $\sqrt{169} = 13$ |
| ஸப்தவிகும்ஸதிஸ்சமே | 27 | $27+169= 196$ | $\sqrt{196} = 14$ |
| நவவிகும்ஸதிஸ்சமே | 29 | $29+196= 225$ | $\sqrt{225} = 15$ |
| ஏகதரிக்கும் சச்சதமே | 31 | $31+225= 256$ | $\sqrt{256} = 16$ |

நான் சமக மந்திரத்தில் பொதிந்துள்ள கணித மர்மங்களை இவ்வாறு விளக்கினேன். என் விளக்கங்களை கேட்ட அவையில் இருந்த ஞானிகள் அனைவரும் வெகுவாக பாராட்டினர். என் விளக்கங்களை எண்ணி எனக்கே ஆச்சரியமாக இருந்தது. மேலும் தொடர்ந்த நான் **“இவை அனைத்தும் படைத்தல் பற்றிய அணுக்களின் ரகசியம். இதை பற்றி கணாத முனிவருக்கு நன்றாக தெரியும். வெவ்வேறு வரிசையில் அமைக்கப்பட்ட அணுக்களால் வெவ்வேறு உலோகங்கள் உருவாகின்றன”** என்று கூறினேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணையால் விசித்ராபுரத்தில் இருந்து விசித்திரமாக காப்பாற்றப்பட்டேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் - 3

## ஸ்ரீ பழனிச்சாமியைச் சந்தித்தல் - அவரின் குருவபுர பயணம்

### ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தொடர்ந்து தியானிப்பதால் கிடைக்கும் பலன்கள்

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணையினால் மட்டும்தான் என்னால் விசித்ராபுரத்தை விட்டு கிளம்பி என் பயணத்தைத் தொடர முடிந்தது. சிதம்பரத்தில் உள்ள பரமேஸ்வரனை தரிசிக்கும் ஆவல் அதிகரித்தது. மூன்று நாட்கள் என் பயணம் மகிழ்ச்சியுடன் தொடர்ந்தது. உணவுக்கு வழியெங்கும் தடையேயில்லை. நான்காவது நாள் ஒரு பிராமணன் வீட்டு வாசலில் பிக்ஷைக்காக நின்றேன். அப்போது ஒரு கோபக்கார குடும்பப் பெண் வெளியே வந்து **"சாப்பாடு ஒன்றும் இல்லை"** என்று கத்தினாள். நான் சிறிது நேரம் அந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். அந்த வீட்டு எஜமானன் வெளியில் வந்து "விருந்தினர்களையும் அதிதிகளையும் உபசரிக்கும் பாக்கியம் எனக்கு இல்லை. என் மனைவி ஒரு கோபக்காரி. அவளுக்கு கோபம் வந்தால் பானைகளை என் தலை மீது போட்டுடைப்பாள். என் குருவின் மனைவியும் இவளைப் போலவேத்தான். ஆனால் ஒரு வித்தியாசம் மட்டும் உண்டு. என் மனைவி அவள் உடைத்த பானைகளுக்கு என்னிடம் பணம் கேட்பாள் ஆனால் என் குருவின் மனைவி அவரை அப்படி துன்புறுத்துவதில்லை. இப்போதுதான் சில பானைகள் என் தலையில் உடைக்கப்பட்டது. என் வீட்டில் நீருக்கும் உணவுக்கும் எந்த பஞ்சமும் இல்லை ஆனால் உடைக்கப்பட்ட பானைகளுக்கான விலையை உடனடியாக திருப்பி செலுத்தி விட வேண்டும். இது எனக்கு மிகுந்த சங்கடத்தை உண்டாக்குகிறது. அன்றைய தினம் சடங்குகளில் சம்பாவனையாக கிடைத்த பணம் இருந்தால் அதை கொடுத்து சமாளிப்பேன். இல்லையேல் கடன்தான் வாங்க வேண்டும். சம்பாவனைகளில் பணம் கிடைத்தவுடன் கடனை செலுத்திவிடுவேன். சம்பவானைகளில் கிடைக்கும் பணத்தை கொண்டு கடனை அடைத்துவிட்டு மீதமாகும் பணத்தை என் மனைவியிடம் கொடுத்துவிடுவேன். இப்படி சில காலம் தொடர்ந்தது. இப்போதெல்லாம் முழு சம்பாவனையையும் எடுத்துக் கொண்டு விடுவதால் என்னால் கடனை அடைக்க முடியவில்லை. என் நிலைமையை அறிந்தவர்கள் யாரும் என்னை நம்பி பணம் தருவதில்லை. அவர்கள் என்னிடம் **'நீ கடனை எப்படி அடைப்பாய்? சம்பாவனையில் கிடைக்கும் பணத்தை வைத்தா?'** என்கின்றனர். அந்த வழியும் எனக்கு இப்போது இல்லை. நான் முன்பு பணக்காரனாக இருந்ததால் எவரும் எனக்கும் தர்மமாக கூட பணம் கொடுப்பதில்லை. என்னை



கேலிதான் செய்கிறார்கள். நான் பானைகளுக்கான பணத்தை அளிக்க வேண்டும். உங்களை கோபமாக திட்டிவிட்டு உள்ளே வந்த என் மனைவி '**வாசலில் ஒரு யாத்ரீகன் இருக்கிறார். அவருடன் சேர்ந்து நீங்களும் பிக்ஷை எடுத்துக்கொண்டு வந்தால்தான் உங்களுக்கு வீட்டில் சாப்பாடு**' என்று சொல்லியிருக்கிறாள். மனைவிக்கு பயந்த அந்த கணவன் என்னோடு வருவதாக கூறினான். தனக்கு இந்த ஊரில் உள்ள அனைத்து பிராமணர்களையும் தெரியும் என்றும் அவர்கள் கண்டிப்பாக உணவும் தக்ஷிணையும் தருவார்கள் என்றும் கூறினான். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா இது என்ன சோதனை!! என்று நினைத்துக்கொண்டு வீடுவீடாக அந்த பிராமணனுடன் சென்றேன். எவரும் உணவோ தக்ஷிணையோ தரவேயில்லை. **"இதுவரை நான் மட்டும்தான் துரதிர்ஷ்டசாலி. இப்போது என்னுடன் சேர்ந்து நீங்களும் துரதிர்ஷ்டசாலி ஆகிவிட்டேர்களே!!"** என்று புலம்பினான் அந்த பிராமணன். நான் அவனிடம், **"அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவளிக்கும் ஸ்ரீ தத்தாத்ரேயர் சர்வ வல்லமையுடையவர்!! அவர் இப்போது கலியுகத்தில் குருவபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற பெயர் மற்றும் உருவத்துடன் வசித்துக் கொண்டிருக்கிறார். நான் அவரை தரிசிக்கத்தான் சென்று கொண்டிருக்கிறேன். வா!! அவர் குடியிருக்கும் அத்தி மரத்தடியில் அமர்ந்து கொண்டு அவர் நாமத்தை ஜெபிப்போம்!! ஸ்ரீ தத்தரின் கிருபை கண்டிப்பாக கிடைக்கும்!!"** என்று கூறிவிட்டு நாம ஸ்மரணம் செய்து கொண்டிருந்தோம்.

பசி வயிற்றை கிள்ளியது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை பலவீனமான குரலில் கூறிக்கொண்டிருந்தோம். அப்போது விசித்ராபுரத்து அரச சிப்பந்திகள் வந்து **"இளவரசருக்கு பேச்சு வந்துவிட்டது!! அவரின் ஊமைத்தன்மை முற்றிலுமாக நீங்கி விட்டது. உங்களை அரசர் உடனே அழைத்து வரச்சொன்னார். ஆகவே எங்களுடன் நீங்கள் வரவேண்டும்"** என்றனர். என்னுடைய அவலமான நிலைமையை அந்த சிப்பந்திகளிடம் விளக்க முடியவில்லை. நான் இந்த பிராமணனுடன்தான் வருவேன் என்று கூறியதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டனர். எங்களை ராஜமரியாதையுடன் குதிரை மேல் அமர்த்தி விசித்ராபுரம் அழைத்து செல்வதைப் பார்த்து அக்ராஹாரத்து மக்கள் மூக்கின் மேல் விரல் வைத்தனர்.



அரசர் எங்களை வரவேற்று **"மஹாத்மாவே! நீங்கள் எவ்வளவு பெரிய ஞானி என்பதை தெரிந்தும் நான் உங்களுக்கு எந்த சன்மானமும் தராமல் அனுப்பிவிட்டேன். நீங்கள் சென்றவுடன் இளவரசர் மயங்கி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் அவருக்கு பலமணிநேரம் சிகிச்சை அளித்தோம். நீண்ட**

**நேரத்திற்கு பிறகு அவர் கண் விழித்த பின்னர் 'ஸ்ரீ ஶ்ரீபாத வல்லப திகம்பரா! ஸ்ரீ தத்தாத்ரேய தேவ திகம்பரா!' என்று கூறத் தொடங்கினார்"** *என்றார் அரசர்.* **"மிக உயரமாக மிகவும் அழகு பொருந்திய 16 வயதுடைய யோகி ஒருவர் என் கண் முன் தோன்றி என் வாயில் விபூதியை போட்டார். ஆனால் யார் அந்த யோகி? அவர் எங்கே இருக்கிறார்? அந்த யோகிக்கும் ஸ்ரீ தத்தருக்கும் என்ன தொடர்பு? ஒன்றும் தெரியவில்லை தயவு செய்து கூறுங்கள்"** *என்றார் இளவரசர்.*

**"ஸ்ரீ ஶ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மஹிமையை எங்ஙனம் விவரிப்பேன்? அவர் உண்மையில் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம். அவரது அவதாரம் ஸ்ரீ கிருஷ்ண அவதாரம் போல் மிகவும் அசாதாரணமானது. நான் அவரைப்பற்றி கேள்விப்பட்டது எல்லாம் சிறிதளவே!! நான் குருவபுரத்திற்கு அவரை தரிசிக்கத்தான் சென்று கொண்டிருக்கிறேன். வழியில் சத்புருஷர்களையும் புண்ணிய க்ஷேத்ரங்களையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்துக்கொண்டிருக்கிறது"** *என்று கூறினேன்.*

*விசித்ராபுர மக்கள் இந்த வினோத நிகழ்வுகளை எண்ணி பெருமகிழ்ச்சி அடைந்தனர். அரசருக்கு நல்ல புத்தி வந்ததும், தங்களின் துன்பங்கள் நீங்கியதும் யுவராஜாவின் ஊமைத்தன்மை நீங்கியதும் நாற்பது நாட்கள் விரதத்தினால்தான் என்று ஸ்ரீ ஶ்ரீபாதரை வாயார புகழ்ந்தனர்.*

*அரசன் பொன் கொடுத்து என்னை கௌரவித்தான்.* **"பல காலங்களுக்கு பிறகு எங்களுக்கு ஞானம் பிறந்துள்ளது. சைவரையும் வைஷ்ணவரையும் தூஷித்து பாபங்களை சேர்த்துக்கொண்டிருந்தோம். கடவுளை நிந்தனை செய்து பல சிரமங்களுக்கு உள்ளானோம். தெரிந்தோ தெரியாமலோ நாற்பது நாட்கள் தத்தருக்கு விரதம் அனுஷ்டிக்க அறிவுரை அளித்த மாதவன் நம்பூதிரிக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும். நாங்கள் உங்களுக்கு கடன்பட்டுள்ளோம்"** *என்றார் ராஜகுரு.*

*நாங்கள் விசித்ராபுரத்தை விட்டு கிளம்பிய போது மாதவன் நம்பூதிரியும் எங்களுடன் பயணத்தில் சேர்ந்து கொள்ள விரும்பினான். நாங்கள் சம்மதித்தோம். நாங்கள் மூவரும் அந்த பிராமண நண்பனின் கிராமத்திற்கு சென்றோம். பொற்காசுகளை அவ்வூரில் உள்ள அக்ராஹாரத்தில் இருக்கும் பிராமணர்களுக்குப் பகிர்ந்தளித்தோம். தங்கம் பெற்றுக்கொண்டவுடன் என் நண்பனின் கோபக்கார மனைவி எங்களுக்கு உணவளித்தாள். பின்னர் தன் குணங்களை மாற்றிக்கொண்டு நடந்தவைகளை அறிந்து அப்பெண்ணும் ஸ்ரீ ஶ்ரீபாதரின் பக்தையானாள் என்பதையும் கூறத்தான் வேண்டுமா?*

*நானும் மாதவன் நம்பூதிரியும் சிதம்பரத்தை நோக்கி பயணித்தோம். அகஸ்தியர் கோதாவரி நதிக்கரையில் உள்ள ரியாலி கிராமத்தில் இருந்து பரபிரும்ம சாஸ்திரியை அழைத்துச் சென்று ஐயப்பனுக்கு பூஜாரியாக்கினார். சில காலங்களுக்குப் பிறகு கர்த்தபுரியில் (குண்டூர்) உள்ள நம்புரு கிராமத்தில் உள்ள பிராமணர்களை மலையாள தேசத்து அரசர்கள் அழைத்து சென்றனர். பல பிராமணர்கள்*



நம்புருவிலிருந்து மலையாள தேசத்திற்குச் சென்று அங்கு வேதத்தை பரப்பினர். அவர்களைத்தான் நம்பூதிரி பிராமணர்கள் என்று அழைக்கிறோம். ஆதி சங்கரரின் முன்னோர்கள் கூட நம்புருவை சேர்ந்தவர்கள்தான். நம்பூதிரி பிராமணர்கள் சம்பிரதாய முறைகள் பின்பற்றுவதில் வல்லவர்கள் மட்டுமல்லாது பாரம்பரியம், ஒழுங்கு, பக்தி, மந்திரம், யந்திரம், தந்திரம் போன்ற முறைகளிலும் வல்லவர்கள். ஆனால் மாதவன் நம்பூதிரியோ எழுத படிக்கத் தெரியாதவன். அவன் பிராமணர்களின் வீட்டில் சமையல் வேலை செய்து தன் ஜீவனத்தை நடத்தி கொண்டிருந்தான். அவன் பெற்றோர்களை சிறு வயதிலேயே இழந்துவிட்டான். அவனது சொந்தங்கள் கூட கைவிட்டு விட்டனர். அவன் ஸ்ரீ தத்தரின் மீது அசைக்கமுடியாத பக்தி கொண்டிருந்தான். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அவதாரத்தை கேள்விப்பட்டவுடன் அவரை தரிசிக்கும் ஆவல் அவனுக்கு அதிகரித்தது.

சிதம்பரத்திற்கு அருகில் பல சிறந்த சித்த புருஷர்கள் இருப்பதாக கேளிவிட்டிருந்தோம். நாங்கள் ஒரு மலையில் தனியாக வசித்து வரும் ஸ்ரீ பழனிச்சாமி என்கிற வயதான சித்தரை சந்தித்தோம். நாங்கள் இருவரும் குகை வாயிலில் வருவதை கண்ட மஹா சித்தரான ஸ்ரீ பழனிச்சாமி "ஆஹா என்ன அதிர்ஷ்டம்! சங்கரரும் மாதவனும் சேர்ந்து வருகிறார்கள்!!" என்றார். எங்களுடைய பரிச்சயம் இல்லாமலேயே எங்களை பெயர் சொல்லி அழைத்த அவர் எவ்வளவு மகா சித்தராக இருக்க வேண்டும் என்று உணர்ந்தோம்.

அவர் மேலும் "என் மகன்களே!! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைப்படி இந்த வயதான உடலை உதிர்த்துவிட்டு ஒரு இளைஞனின் உடலில் புக வேண்டும். இந்த உடலின் வயது 300. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைப்படி இந்த உடலை துறந்துவிட்டு புது உடலில் 300 வருடங்கள் வாழ வேண்டும். ஒரு ஜீவன் முக்தி அதாவது பிறப்பு இறப்பு சுழற்சியில் இருந்து விடுபட்டாலும் ஸ்ரீ ஸ்ரீபாதர் வரச்சொல்லி உத்தரவிட்டால் வந்தாக வேண்டும். இந்த பிரபஞ்சத்தை ஆளும் மகாசக்தி ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவத்தில் இப்போது அவதரித்துள்ளது. இந்த அவதாரமானது மேல் உலகங்களில் உள்ள சூக்ஷ்ம (நுட்பமான) லோகங்களில் நிகழுமே ஒழிய மானுட உருவம் எடுப்பது மிகவும் அரிது. அவர் ஒரு முழு யோக அவதாரமாகும். அவருடைய சைதன்யத்தில் இருந்து வரும் ஒரு துளி அம்சமே உலகில் உள்ளவர்கள் அனைவரையும் காக்கவல்லது" என்றார் ஸ்ரீ பழனிச்சாமி சித்தர்.

"மகனே சங்கரா! நீ விசித்ராபுரத்தில் விளக்கிய கணாத வின் அணுவின் கொள்கையை எனக்கு மீண்டும் விளக்குவாயாக!" என்று கேட்டார்.

## கணாத முனிவர் முன்மொழிந்த அணுக்களின் கொள்கை

"ஸ்வாமி! எனக்கு கணாத முனிவர் பற்றியும் அணுக்களின் கொள்கை பற்றியும் மிக குறைந்த அளவுதான் தெரியும். நான் விசித்ராபுரத்தில் கூறிய அனைத்தும் என்னை அறியாமல் தானாக வந்தது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்" என்று கூறினேன்.

இரக்க குணமுள்ள ஸ்ரீ பழனிச்சாமி விளக்கத் தொடங்கினார். "பிரபஞ்சப் படைப்புகள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. அவற்றில் அணுக்களை விட மிக நுண்ணிய துகள்கள் இருப்பதால்தான் மின்சார ஓட்டம் உருவாகிறது. சூரியனை கோள்கள் சுற்றுவது போல் இந்த தூசும் தனக்கே உரிய வட்டப்பாதையில் அவைகளுக்குள்ளேயே ஒரு மையப்பகுதியை ஏற்படுத்திக்கொண்டு மிக வேகமாக சுற்றுகின்றன. பிரபஞ்சத்தில் வாழும் அனைத்து ஜீவராசிகளின் உணர்ச்சி அதிர்வுகளும் (*emotional vibration*) இந்த தூசியை விட மிகவும் நுட்பமானவை. துடிப்புடன் இருக்கும் இந்த பிரபஞ்சத்தில் எதுவும் நிலையாக இருக்காது. மாறிக்கொண்டே இருப்பது அதன் குணம். ஒவ்வொரு நொடியும் மாறிக்கொண்டே இருப்பதுதான் இயற்கையின் பண்பு. ஸ்ரீ தத்தரின் சைதன்யமோ இந்த அதிர்வுகளை விட மிகவும் நுட்பமானது. அவரின் கடாக்ஷத்தை பெறுவது எவ்வளவு எளிதோ அதே சமயம் கடினமும் கூட ஆகும். ஒரு அணுவை பல்லாயிரக்கணக்காக பிரிக்கும் போது வெறுமையே அதாவது சூனியமே ஏற்படுகிறது. அதற்கு எதிர்மாறாக அனைத்து சூனியமும் ஒன்று சேரும் போது ஒரு படைப்பாகிறது. எப்படி ஒரு பொருள் உருவாகிறதோ, அதற்கு எதிர்மாறான ஒரு பொருளும் படைக்கப்பட்டிருக்கும். இப்படி எதிர்மாறான இரண்டு பொருட்கள் ஒன்று சேரும் போது, எதிர்மறையான பொருட்கள் அழிக்கப்படும். ஒரு பொருளால் அதன் குணங்கள் மற்றும் தன்மைகளை மாற்றிக்கொள்ள முடியும். நாம் வழிபடும் தெய்வ சிலைகளுக்கு உயிரூட்ட பிரதிஷ்டை செய்யும் போது பிராணப் பிரதிஷ்டை செய்வதால், அது சக்தி ஊட்டப்பட்டு பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை அளிக்கின்றன" என்றார்.

அனைத்து மந்திரங்களும் குண்டலினியில் (முதுகெலும்புக்கு கீழே உள்ளது) இருந்துதான் தோன்றுகின்றன. காயத்ரி மந்திரமும் அங்கிருந்தான் தோன்றியது. காயத்ரி மந்திரம்,

**"ஓம் பூர் புவஸ்ஸுவஹ தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன ப்ரசோதயாத்."**

என்ற மூன்று வரிகளை மட்டுமே அறிவோம். அதற்கு நான்காவது வரியும் உண்டு. அது **"பரோரஜஸி ஸாவதோம்"** (*paro rajase savadom* परो रजसे सावदोम्). இந்த நான்கு வரி காயத்ரி மந்திரம் உருவமற்ற பிரம்மத்தைக் குறிக்கிறது. குண்டலினி சக்தி பிரபஞ்சத்தை 24 குணங்களில் படைக்கிறது. காயத்ரி மந்திரத்திற்கும் 24 அக்ஷரங்கள் உள்ளன. எண் 24 கோகுலம் எனப்படும். கோ என்றால் 2, குலம் என்றால் 4. பிரம்மம் மாற்றமில்லாதது எனவே அது 9 என்ற எண்ணால் குறிப்பிடப் படுகிறது. எண் 8 மகா மாயை. ஸ்ரீ ஸ்ரீபாதர் தனக்கு பிரியமானவர்களிடம் "தோ சௌ பதி தேவ் லக்ஷ்மி" என்று கேட்பதுண்டு. பரப்பிரம்மமே அனைவருக்கும் தலைவன். அவரே அனைவருக்கும் பதி. அதனால் '**பதிதேவ்**' என்பது 9 ஐ குறிக்கும். எண் 8 லக்ஷ்மியை குறிக்கும். '**தோ**' என்றால் 2. '**சௌ**' 4 ஐ குறிக்கும். இரண்டு சப்பாத்திகளை கேட்பதற்கு பதில் இலக்கணமற்ற முறையில், '**தோ சௌ பதி தேவ் லக்ஷ்மி**' என்று வினோதமாக கேட்பார். 2, 4, 9, 8 என்ற மாய எண்களை பற்றி



உயிரினங்களுக்கு நினைவூட்டுகிறார். கோகுலத்து பரப்ரம்மனும் (உயர்ந்த சக்தி) பராசக்தியும் (தூய முதன்மையான அனைத்திலும் பரவியுள்ள உணர்வு நிலை) இப்போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவத்தில் வாசம் செய்கிறது. ஸ்ரீ கிருஷ்ணர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்பதை நினைவில் கொள். காயத்ரி மந்திரமே அவரின் உருவமற்ற பாதுகைகளாக வடிவம் கொண்டுள்ளது.

மேலும் தொடர்ந்த சித்தர் "மகனே சங்கரா, மனிதனின் மொத்த உடலும் 12 விதமான மாறுதல்கள் அடையும். நாம் அனைவரும் உணரக்கூடிய இந்த மொத்த உடலானது மொத்த சூரியனின் ஆதிக்கம் பெற்றது. க்ரியா யோக பயிற்சியின் மூலம் உடலில் ஏற்படும் நுட்பமான மாறுதல்களைக் கூட அறிந்துகொள்ள முடியும். **துவாதச ஆதித்யர்கள்** என்னும் 12 சூரியர்களின் இயக்கத்தால் இந்த 12 விதமான மாறுதல்கள் உடலில் நிகழ்கின்றன. எனினும், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இந்த 12 சூரியர்களை விட மிக உயர்ந்தவர். அவர் மொத்த உடலும் அதியற்புதமான தெய்வீக அதிர்வலைகள் நிறைந்தது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் பீதிகாபுரத்தில் மனித உருவத்தில் அவதரிப்பதற்கு 108 வருடங்களுக்கு முன்னரே இங்கு வந்து என்னை ஆசிர்வதித்துள்ளார். அவர் இப்போது குருவபுரத்தில் இருக்கும் அதே உருவத்தோடுதான் இங்கு வந்தார். அவரின் லீலைகளுக்கு எல்லைதான் ஏது?

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இங்கு வந்த சிறிது நேரத்தில் இமயமலையில் உள்ள புனித க்ஷேத்திரமான பத்திரியிலுள்ள ஸ்ரீபத்ரிநாராயணரை அங்குள்ள முனிவர்கள் பிரம்மகமல மலர்களை கொண்டு வழிபட்டனர். ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருப்பாதங்களில் அம்மலர்கள் இங்கு விழுந்ததை நான் கவனித்தேன். அவர் இடத்தையும் நேரத்தையும் கடந்தவர்" என்று ஸ்ரீ பழனிச்சாமி தன் வர்ணனையை முடித்துக்கொண்டார்.

ஸ்ரீ பழனிச்சாமியின் தெய்வீக வார்த்தைகளை கேட்டு எனக்கு விவரிக்க முடியாத அனுபவங்கள் ஏற்பட்டது. "பிரம்மகமல மலர்கள் என்றால் என்ன? அவை எங்கு கிடைக்கும்? ஸ்ரீ தத்தரை அம்மலர்களை கொண்டு வழிபட்டால் அவர் மகிழ்வடைவார் என்பதை உங்கள் வார்த்தைகள் மூலம் புரிந்து கொண்டேன். என் சந்தேகங்களை தீர்த்துவையுங்கள் ஸ்வாமி!" என்று கேட்டுக்கொண்டேன்.

## பிரம்மகமல மலர்களை பற்றிய விளக்கம்

கருணையுடன் என்னை பார்த்த ஸ்ரீ பழனிஸ்வாமி என் கேள்விக்கான பதிலை கூறினார். "ஸ்ரீமஹாவிஷ்ணு சதாசிவரை பிரம்மகமலம் கொண்டு பூஜித்தார். மஹாவிஷ்ணுவின் நாபியிலிருந்து தோன்றிய தாமரையும் பிரம்மகமலம்தான். ஸ்ரீ தத்தரை தாமரைமலர் கொண்டு பூஜித்தால் செல்வ வளமும் ஆன்மீக முன்னேற்றமும் கிடைக்கும். தேவலோகத்தில் உள்ள பிரம்ம கமலத்திற்கு இணையான மலர்கள் இமய மலையில் 12000 அடி உயரத்தில் காணப்படுகின்றன. இம்மலர்கள் வருடத்திற்கு ஒரு முறைதான் பூக்கும். மகனே! இம்மலர்கள் நள்ளிரவில்தான் மலரும். இது இன்னொரு அதிசயம். அந்த மலர்கள் மலரும் சமயத்தில் அந்த பிரதேசம் முழுவதும்

அற்புதமான வாசனை பரவும். ஆன்மீகத் தேடலில் இருப்பவர்கள் இந்த அரிய காட்சியை காண மாதக்கணக்கில் நாட்கணக்கில் காத்திருப்பர். இம்மலர் இலையுதிர்க் காலம் முதல் வசந்த காலம் வரை பனிக்கட்டிக்கு அடியில் புதைந்திருக்கும். சித்திரை மாதம் ஆரம்பம் முதல் வெளியே வரத்தொடங்கி கோடைக்காலம் முழுவதும் பூக்கள் பூப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெறும். ஆவணி பௌர்ணமி நள்ளிரவில் பூக்கள் முழுவதுமாக மலரும். அந்த நேரத்தில்தான் அமர்நாத்தில் பனி லிங்கம் தென்படுகிறது. என் அருமை சங்கர் பட்!! இந்த அற்புத அதிசயமானது ஆன்மீக தேடுதல்களில் உள்ளவர்களுக்காகவும், மகா முனிவர்களுக்காகவும், இமயமலையில் வாழும் சித்தர்களுக்காகவும் இப்போதும் மற்றும் எப்போதும் நடந்துகொண்டே இருக்கும். பிரம்மகமல மலரை பார்ப்பதால் மட்டுமே அனைத்து பாவங்களும் நீங்கிவிடும். யோகத்திற்கான தடைகள் மறைந்துவிடும். இந்த அற்புதம் உடனடியான பலனை அளிக்கிறது. ஆதலால் யோகிகளும் முனிவர்களும் தங்கள் பாதையில் உன்னத நிலையை அடைகிறார்கள். பிரம்மகமல மலர்கள் மலர்ந்த பிறகு மறைந்துவிடும். எப்படியாயினும் அதை பார்க்க வேண்டும் என்கிற விதி இருப்பவர்கள் முழுமையாக பார்த்துவிடுவர்" என்று கூறினார்.

என் மகனே சங்கரா!! நான் பத்து நாட்கள் முழுமையாக கடுந்தவம் புரிய போகிறேன். அச்சமயத்தில் துயரத்துடன் யாராவது வந்தால், என்னுடைய தியானத்தை கலைக்காமல் நீயும் மாதவனும் தரிசிக்க ஏற்பாடு செய்யுங்கள். எவரேனும் பாம்பு கடித்து இறந்தவரின் உடலை கொண்டு வந்தால், அவ்வுடலை ஆற்றில் விட்டுவிடவோ அல்லது மண்ணில் புதைத்துவிடவோ வேண்டும் என்பது என் ஆணை என்று கூறிவிடுங்கள் என்று கூறிவிட்டு ஸ்ரீ பழனிச்சாமி தியானத்தில் சமாதி நிலையை அடைந்தார்.

துயரத்தில் வருவோருக்கு அமைதியான முறையில் தரிசனம் கிடைப்பதற்கு நானும் மாதவனும் ஏற்பாடு செய்து கொடுத்தோம். சில பக்தர்கள் எங்களுக்கு உணவு தயாரிக்க பொருட்கள் கொடுத்தனர். மாதவன் தென்னை மரக்கிளைகளின் உதவியுடன் உணவு சமைக்கப் போவதாக கூறினான். நான் சம்மதித்தேன். மாதவன் இன்னொருவருடன் சேர்ந்து சென்றான். விதி வசத்தால் தென்னை மரக்கிளையை மாதவன் தூக்க முற்பட்ட போது தென்னை மரத்திற்குப் பின் மறைந்திருந்த நல்ல பாம்பு அவனை கொத்தியது. மூன்று பேர் அவனை குகைக்கு கொண்டுவந்தனர்.

ஸ்வாமியின் கட்டளையை மீற முடியாமல் மாதவனின் உடலை புதைத்துவிட்டேன். அங்கிருந்த மக்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைத்தனர். நான் தேம்பி தேம்பி அழுதேன். மாதவனின் தூய உள்ளத்தையும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மேல் அவன் கொண்டிருந்த பக்தியும் அசைக்கமுடியாத நம்பிக்கையும் என் மனதில் தோன்றி சஞ்சலம் அடைய செய்தது. விதியை யாராலும் மாற்ற முடியாது என்று கூறி என் மனதைத் தேற்றிக் கொண்டேன். இந்த சோகமான நிகழ்வுக்கு பின்னர் மீண்டும் ஒரு துரதிர்ஷ்டமான நிகழ்ச்சியை கண்ணுற்றேன். ஒரு 18 வயது இளைஞனின் இறந்த உடலை தூக்கிக்கொண்டு அவன் உறவினர்கள் வந்தனர். அவர்கள் துயரத்தில் சத்தமாக

அழுது கொண்டிருந்தனர். அந்த இளைஞனும் பாம்புக்கடியால்தான் இறந்திருந்தான். நான் அவர்களிடம் ஸ்வாமிகள் யோக சமாதி நிலையில் இருப்பதாகவும் அவரின் ஆணைப்படி அந்த உடலை புதைக்க வேண்டும் என்று கூறினேன். அங்கிருந்த பக்தர்கள் என் நண்பனும் இதே போல்தான் இறந்தான் என்றும் அவன் உடலையும் ஸ்வாமிகளின் ஆணைப்படி புதைத்துவிட்டதாகக் கூறினர். வருத்தத்துடன் இருந்த அவர்கள் ஏமாற்றமடைந்து தங்கள் துரதிர்ஷ்டத்தை பலவாறு குறை கூறினர். வேறு வழியில்லாமல் அந்த புது இளைஞனின் உடலை புதைத்தனர்.

தினமும் ஸ்வாமியை 3 அல்லது 4 நபர்கள் தரிசிப்பர். சமாதி நிலையில் இருக்கும் ஸ்வாமியை பக்தர்கள் அமைதியாக தரிசனம் செய்து விட்டு எந்த தொந்தரவும் செய்யாமல் சென்றுவிடுவர். இதே போல் பத்து நாட்கள் சென்றது. பதினோராவது நாள் பிரம்ம முகூர்த்தத்தில் (காலை 3.00 லிருந்து 5.00 வரை) சுயநிலைக்கு வந்து **மாதவா!!** என்றழைத்தார். நான் நடந்தவைகளை கதறி அழுதுகொண்டே விவரித்தேன்.

பிறகு ஸ்ரீ பழனிச்சாமி என்னை தேற்றி விட்டு யோக சக்தியால் என்னை பார்த்தார். அந்த யோக பார்வையால் என் முதுகுத்தண்டுவடத்தில் ஒரு அசைவு ஏற்பட்டு தாங்க முடியாத வலியை உணர்ந்தேன். ஸ்ரீ பழனிச்சாமி என்னை மீண்டும் கனிவான பார்வையால் நோக்கினார். என் வலி மறைந்தது. "மகனே! மாதவனுக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை ஸ்தூல உடலுடன் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை. பத்து நாட்களாக சூக்ஷ்ம சரீரத்துடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் தரிசனத்தை குருவபுரத்தில் பெற்றுவிட்டான். நடந்தது எதுவாயினும் அவனின் ஆசை நிறைவேறிவிட்டது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் லீலைகளை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. நேரம், விதி மற்றும் அதன் விளைவுகளின் மர்மத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. இவை அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மட்டும்தான் சாத்தியம். ஸ்ரீ ஸ்ரீபாதர் மாதவனின் உயிரை அவன் உடலுக்குள் செலுத்தும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார். நாம் உடனடியாக அந்த பணியை செய்ய வேண்டும்" என்று கூறினார்.

என் மனதை வாட்டி கொண்டிருந்த பெருந்துயரம் அந்த நொடியிலிருந்து மறையத் தொடங்கியது. மாதவன் உயிர்பெற போகிறான் என்பதை விட எனக்கு வேறென்ன வேண்டும்? மாதவன் புதைக்கப்பட்ட இடத்திற்கு வந்தோம். மாதவனின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. எனக்கு உதவியாக இருவர் இருந்தனர். ஸ்ரீ பழனிச்சாமி எங்களை தெற்கு பகுதியில் உள்ள பனை மரங்களுக்கு அருகில் நகர சொல்லிவிட்டு "ஓ மாதவனை கடித்த ராஜநாகமே பழனிச்சாமியின் கண்களுக்கு தென்பட வேண்டும்! இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணை!!" என்று சத்தமாக கூறினார். நாங்கள் அனைவரும் ஸ்ரீ பழனிச்சாமியின் சொல்படி நடந்து கொண்டோம்.

ஸ்ரீ பழனிச்சாமி தன் இடுப்பில் இருந்த துணியில் இருந்து நான்கு சிறிய கிளிஞ்சல்களை எடுத்தார். சடலத்தின் நான்கு பக்கத்திலும் அவற்றை வைத்தார். சிறிது நேரத்திற்கு பின் அவை நிலத்தில் இருந்து மேலே எழும்பின. பின்னர் படபடவென சப்தம் செய்து கொண்டு வேகமாக நான்கு திசைகளிலும் விண்ணில் பறந்து சென்று விட்டன. சற்று நேரத்தில் சீறும் சத்தத்துடன் நல்ல பாம்பு ஒன்று ஊர்ந்து வந்தது. அந்த பாம்பு அமைதியற்று காணப்பட்டது. பறந்து சென்ற ஸ்ரீ

பழனிச்சாமியின் கிளிஞ்சல்கள் அப்பாம்பின் தலையில் இருந்தது அவை ஒட்டிக்கொண்டது போல் தோற்றம் அளித்தது. ஸ்ரீ பழனிச்சாமி மாதவனின் உடலில் உள்ள விஷத்தை அகற்ற சொன்னார். மாதவனின் உடலில் எந்த இடத்தில் கொத்தியதோ அந்த இடத்தில் இருந்து நஞ்சை உறிஞ்சியது. ஸ்ரீ பழனிச்சாமி ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை சொல்லிக் கொண்டே மந்திரத்தண்ணீரை பாம்பின் மீது தெளித்தவுடன் பழனிச்சாமியின் பாதத்தை முத்தமிட்டுவிட்டு 3 முறை சுற்றி விட்டு அமைதியாக பின்வாங்கியது.

## தத்த பக்தர்களுக்கு உணவளிப்பதால் கிடைக்கும் நற்பலன்கள்

ஸ்ரீ பழனிச்சாமி தொடர்ந்தார். "இந்த நாகம் முற்பிறவியில் ஒரு பெண்ணாக பிறந்திருந்தது. அவள் முதுமை அடைந்தாள். அவளுக்கு கொஞ்சம் பாவமும் கொஞ்சம் புண்ணியமும் இருந்தது. ஒருமுறை தத்த பக்த பிராமணனுக்கு உணவளித்தாள். ஸ்ரீ தத்தர் எளிதில் திருப்தி ஆகும் குணமுடையவர். இறந்தவுடன் அவள் யம லோகத்திற்கு சென்று யமனை சந்தித்தாள். யமதர்மராஜன் அவளிடம், "நீ கொஞ்சம் பாவமும் கொஞ்சம் புண்ணியமும் செய்திருக்கிறாய். நீ தத்த பக்தனுக்கு உணவளித்ததால் மிகச்சிறந்த அனுகூலத்தை பெற்றிருக்கிறாய். இப்போது ஸ்ரீ தத்தாத்ரேயர் இந்த மனித உலகத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற உருவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஸ்ரீ ஸ்ரீபாதர் உன் பாவ புண்ணிய கணக்குகளில் மாற்றம் செய்ய எங்களை ஆணையிட்டுள்ளார். உனக்கு அதிகமான புண்ணியமும் பாவத்தின் பலன் சிறிதளவுமாக மாற்றப்பட்டுள்ளது. அதனால் சித்ரகுப்தன் உன் கணக்கில் மாற்றம் செய்துள்ளார். நீ முதலில் பாவத்திற்கான பலனை அனுபவிக்கிறாயா அல்லது புண்ணியத்திற்கான சந்தோஷத்தை அனுபவிக்கிறாயா?" என்று எமதர்மராஜா கேட்டதற்கு "பாவக்கணக்கு சிறியதாக உள்ளமையால் முதலில் பாவத்திற்கான பலனை அனுபவித்துவிட்டு பின்னர் புண்ணிய பலன்களை அனுபவிக்கிறேன்" என்று கூறியதால் பாம்பாக இந்த பூலோகத்தில் பிறந்தாள். அவளுக்கு அனைவரின் மனதையும் புண்படுத்தும் குணம் இருந்தமையால் அவள் வழியில் யார் கடந்து சென்றாலும் கடித்துவிடுவாள். அதனால் அவள் மேலும் பாவங்களை சேர்த்துக்கொண்டாள். பாம்பில் நான்கு வகையுண்டு. முதலாவது யாரையும் துன்புறுத்தாமல் காற்றை உணவாக எடுத்துக்கொண்டு யோகி போல் வாழும். இரண்டாவது யார் நிழலாவது தன் மீது விழுந்தால் கோபமடைந்து கொன்றுவிடும். மூன்றாவது மனிதனை விட்டு தள்ளியே வாழும். மனிதனை முகத்திற்கு நேரில் கண்டால் பயந்து ஓடிவிடும். நான்காவது பழிவாங்கும் குணமுடையவை. யார் எந்த தீங்கும் ஏற்படுத்தவில்லை என்றாலும் அவர்களை கொத்திவிடும். இந்த வயதான பெண் (பாம்பு) ரஜோகுணம் நிரம்பியவள் (மூன்று குணங்களில் ஒன்று ரஜோ குணம்-சத்வ, ரஜஸ், தாமஸ குணங்கள். இயற்கையாக தோன்றும் ஒவ்வொன்றும் இம்மூன்று குணங்களையும் வெவ்வேறு சதவிகிதத்தின் கலவையில்தான் பெற்று இருக்கும்). மாதவன் அதன் அருகில் சென்றதால் அவனை கொத்திவிட்டது. அவனின் பூர்வ ஜென்ம பலன்களினால் கடிபட்டு இறந்தான். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணையால் இப்பெண் பாம்பு ஜென்மத்தில் இருந்து விரைவாக விடைபெற்று உயர்ந்த நிலையை அடைந்தாள். ஒரு கரு கர்ப்பத்தில் இருக்கும்

போது அதன் ஜீவன் பாம்பு வடிவத்தில் இருக்கும். நாக தோஷம் இருக்குமாயின் குழந்தைகளின் மரணம் சம்பவிக்கும்" என்று நடந்தவைகளுக்கான காரணங்களை விளக்கினார் ஸ்ரீ பழனிச்சாமி.

## தகுதியானவர்களுக்கு உணவளிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

ஸ்ரீ பழனிச்சாமி, "மிக எளிமையான சேவைகளிலேயே ஸ்ரீ தத்தர் மகிழ்ச்சி அடைவார். ஸ்ரீ தத்தரை மனதில் எண்ணிக்கொண்டு ஒரு தகுதியான மனிதருக்கு உணவளிக்கப் பட்டால் எவர் அன்னதானம் செய்கிறாரோ அவர் மிக சிறந்த புண்ணியம் பெறுவார்கள். அந்த உணவில் அடங்கியுள்ள பண்பின் சிறிய அளவு மனதாக மாறுகிறது. அன்னதானம் செய்வோரின் மனம், அறிவு, ஆசை, ஆணவம், உடல் முழுவதும் நல்லுணவுகளால் நிரம்பும். அதன் பலனால் படைக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களையும் ஈர்க்கும் சக்தி கிடைத்துவிடும். ஸ்ரீ மஹாலக்ஷ்மி அருளால் அளவற்ற செல்வங்களைப் பெறுகிறார்கள். அனைத்து படைப்புகளும் நுண்ணிய அதிர்வலைகளாலும் அதன் நேர்த்தியான கட்டுப்பாட்டிலும்தான் இயங்குகிறது" என்று ஸ்ரீ பழனிச்சாமி விளக்கினார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகத்துவம்

ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை கூறுவதாலேயே ஸ்ரீ மஹாலக்ஷ்மி செல்வ வளங்களை அருள்கிறாள். அவரின் கருணை பெற்றவர்களின் பேரதிஷ்டங்களை எங்கனம் விளக்குவது? அவரின் கருணையால் மட்டுமே பல நாட்களுக்கு முன் புதைக்கப்பட்ட மாதவனின் உடல் எந்தவித சேதாரமும் ஆகாமல் அப்படியே இருந்தது. இப்போது அவனுக்கு உயிர் சக்தியையும் அளித்துவிட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளையும், கருணையையும், தெய்வீக அற்புதங்களையும் விளக்கத்தான் முடியுமா?

மாதவனின் சுயநினைவு திரும்பிக் கொண்டிருந்தது. தாகத்திற்கு அவன் தண்ணீர் கேட்டதும் மறுத்துவிட்டு 100 வருட பழைய நெய்யை பருக சொன்னார் ஸ்ரீ பழனிச்சாமி. மாதவன் அதை குடிக்க மறுத்தான். நெய் பருகிய பின்னர் கண்டிப்பாக தண்ணீர் தருவதாக ஸ்ரீ பழனிச்சாமி உறுதி அளித்தார். மாதவன் நெய்யை முழுவதுமாக பருகியதும் பழரசம் கொடுக்கப்பட்டது. சிறிது நேரம் கழித்து தண்ணீரும் கொடுக்கப்பட்டது.

## நாகலோகத்தை பற்றிய வர்ணனை

மாதவனுக்கு உயிர் வந்தது. எங்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மாதவன் பேச தொடங்கினான். "நான் சூக்ஷ்ம ரூபத்தில் குருவபுரம் சென்றேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் மிக உயரமாக இருந்தார். பெரிய கண்களுடன் அனைத்து ஜீவராசிகளிடமும் அன்பு, கருணை, இரக்கத்தை பொழிந்து கொண்டே இருந்தார். நான் சூக்ஷ்ம ரூபத்தில் இருந்தால் ஸ்தூல ரூபத்தில் இருந்தவர்களின் கண்களுக்கு நான் புலப்படவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை குருவபுரத்தின் மத்தியில் உள்ள தீவுக்கு போகச் சொன்னார். அந்த தீவின் நடுப்பகுதியில் ஆழத்திற்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை கூறிக்கொண்டே சென்றேன். பூமியின் ஆழத்தில் அதன் நடுப்பகுதியில் அரண்களுடன் கூடிய மாளிகைகள் இருந்தன. அது பாதாள லோகம் என்று





புரிந்துகொண்டேன். ஸ்தூல உடலுடன் இருப்பவர்களுக்கு ஸ்தூல பொருட்கள் மட்டும்தான் புலப்படும். இதே என்னைப்போல் எவர் சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு சென்றாலும் அங்குள்ள சூக்ஷ்ம உலகம் புலப்படும். அங்கிருந்தவர்கள் அனைவரும் நாக இனத்தவர்கள். அவர்கள் விரும்பும் எந்த உருவத்தையும் எடுக்கும் சக்தி படைத்தவர்கள். அவர்கள் எப்போதும் பாம்பு உருவத்தில் இருப்பதையே விரும்புகிறார்கள். நான் அங்கு பல சிறந்த நாகங்களை கண்டேன். சில நாகங்கள் 1000 தலை கொண்டவைகளாக இருந்தன. வைரங்களால் அதன் தலையை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அந்த வைரத்திலிருந்து ஒளி பரவியது. சில நாகங்கள் மிகவும் அமைதியாக சமாதி நிலையில் இருப்பது போல் தோற்றமளித்தன. ஆஹா!! அவைகளில் மிகசிறந்த ஒரு நாகம் இருந்தது. அதற்கு ஆயிரகணக்கான தலைகள் இருந்தது. அந்த ராஜ நாகத்தின் மேல் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மஹாவிஷ்ணு போல் படுத்துக் கொண்டிருந்தார். சில நாகங்கள் இனிமையான பாடல் போல் வேதத்தை ஓதிக்கொண்டிருந்தன. ஸ்ரீ ஸ்ரீபாதர் அவற்றை மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தார். எனக்கு அருகில் இருந்த பெரிய நாகம் இவ்வாறு பேச தொடங்கியது:

## ஸ்ரீ தத்தாத்ரேயரின் உன்னதமான மகிமை

"பல யுகங்களுக்கு முன்னால் ஸ்ரீ தத்தாத்ரேயர் நேபாளத்தில் உள்ள சித்ரகூட்டில் அமைந்திருக்கும் அனுசுயா மலையில் அத்ரி அனுசுயா தம்பதியருக்கு மகனாக பிறந்தார். அவர் தன் அவதாரத்தை முடிக்காமல் நீலகிரி, ஸ்ரீசைலம் மலை,சபரகிரி மலை மற்றும் சஹ்யாத்ரி மலை போன்ற இடங்களில் சூக்ஷ்ம ரூபத்தில் அலைந்து கொண்டிருக்கிறார். திசையே ஆடையாகக் கொண்டு வானமே எல்லையாக கொண்டவர்கள்தான் திகம்பரர்கள். ஸ்ரீ தத்தர் சஹ்யாத்ரியில் யோகத்தில் ஈடுபட்டார். நாத வம்சத்தை சேர்ந்த கோரக்நாத்திற்கு க்ரியா யோகத்தை கற்று கொடுத்தார். ஞானேஸ்வர் என்ற யோகி முன் உருவமற்ற யோக நிலையான கேசரி முத்திரையில் அமர்ந்தது போல் காட்சி அளித்தார். அவர் காலத்தையும் நேரத்தையும் கடந்தவர். கடவுளுடன் எப்போதும் இருக்கும் எங்களுக்கு கடந்த,நிகழ் மற்றும் எதிர் ஆகிய கால கூறுகள் வெவ்வேறு விதமாக தோன்றாது. எப்போதும் நிகழ்காலம்தான்.

## அனகா தேவியுடன் ஸ்ரீ தத்தாத்ரேயர் காட்சி அளித்தல்

மற்றொரு நாகம் என் பக்கத்தில் இருந்து பேசத் தொடங்கியது. "என் அருமை மாதவா !! நாங்கள் கால சர்பங்கள். எங்களை ரிஷீஸ்வரர்கள் என்றும் கூறுவர். ஸ்ரீ தத்தாத்ரேயர் இந்த பிரபஞ்சத்தை பல ஆயிரம் ஆண்டுகள் ஆண்ட பிறகு மறைந்து வாழ விரும்பினார். அவர் ஆற்றினுள் சென்று அங்கேயே மூழ்கிய வண்ணம் பல்லாண்டு காலம் இருந்தார். பல ஆண்டுகளுக்கு பின்னர் அவர் தண்ணீரின் மேல் எழும்பி தோன்றினார். நாங்கள் அவருடைய சீடர்கள் என்பதால் அவர் எங்களிடம் வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் அங்கேயே காத்திருந்தோம். அவர் எங்களிடமிருந்து மறைந்து வாழ விரும்புகிறார் என்பதை புரிந்து கொண்டோம். அவர் மீண்டும் தண்ணீருக்குள் தாவி குதித்து சென்றுவிட்டு பல ஆண்டுகளுக்கு பின்னர் வெளியே வந்தார். எனினும், அப்போது கையில் மதுக்கோப்பையுடன் இருந்தார். மற்றொரு கையில் பதினாறு வயது திருமணமாகாத இளம் மங்கையை

பற்றி இருந்தார். மதுவுக்கு அடிமையானவரையும் பெண் பித்து பிடித்தவரையும் கடவுள் என்று தவறாக கருதி விட்டதாக எண்ணி நாங்கள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டோம். அவர் மறைந்துவிட்டார். அவர் மறைந்தவுடன்தான் எங்களுக்கு ஞானம் பிறந்தது. அவர் கையில் இருந்தது மதுக்கோப்பை இல்லை யோக ஆனந்தத்தையளிக்கும் அமிர்தம் என்றும் அந்த அழகான மங்கை முப்பெரும் தேவியரான லக்ஷ்மி, பார்வதி, சரஸ்வதியின் சங்கம வடிவமான அனகா லக்ஷ்மி தேவி என்பதையும் புரிந்துகொண்டோம். அவர் மீண்டும் இந்த பூலோகத்தில் பிறக்க எண்ணி நாங்கள் கடுந்தவம் புரிந்தோம். எங்கள் மீது இரக்கம் கொண்ட ஸ்ரீ தத்தர், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பீதிகாபுரத்தில் அவதரித்தார்.

## ஸ்ரீ குருவபுரத்தை பற்றிய வர்ணனை

அவர் ஆற்றுக்குள் குளிக்க சென்ற இடம்தான் இப்போது இருக்கும் புனிதம் வாய்ந்த குருவபுரம். அவர் ஜலசமாதியில் இருந்த போது நாங்களும் சூக்ஷ்ம உலகத்தில் நுண்ணிய அதிர்வலைகளுடன் யோக சமாதியில் இருந்தோம். குரு என்பவர் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் மூதாதையர். இந்த புனித இடத்தில்தான் குரு மன்னன் தெய்வீக ஞானம் பெற்றார். என் அருமை மாதவா!! ஆதிசேஷனால் கூட குருவபுரத்தின் சிறப்பை விளக்க முடியாது.

## ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் பூர்வ வரலாறு

நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் புனிதப் பாதங்களில் விழுந்து வணங்கினேன். தயை மிகுந்த ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் "என் மகனே, நீ தரிசித்த என்னுடைய இந்த தெய்வீக வடிவம் அரிதானதும் மிகவும் அதிர்ஷ்டமானதும் ஆகும். நீ பேசிய நாகங்களில் ஒன்று வருங்காலங்களில் ஜோதி ராமலிங்கராக பிறவி எடுக்கும். அது ஜோதி வடிவமாகவே மறைந்து விடும். நீ உரையாடிய இன்னொரு நாகம் வருங்காலங்களில் இந்த பூமியில் சதாசிவ பிரம்மேந்திரர் என்கிற பெயரில் தோன்றி பல அற்புதங்களை நிகழ்த்தும். பீதிகாபுரம் எனக்கு மிக நெருக்கம். என்னுடைய பாதுகைகள் பீதிகாபுரத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்படும். அது நான் பிறந்த என் தாய் வழி தாத்தாவின் வீட்டில்தான் பிரதிஷ்டை செய்யப்படும். என்னுடைய பிறப்பு செயல்முறைகள் அனைத்தும் தெய்வீகமானதும் மர்மமான ஒன்றாகும். அவை ரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டியவை. நீ பீதிகாபுரத்தில் என்னுடைய பாதுகைகள் பிரதிஷ்டை செய்ய பட போகும் இடத்தை தரிசனம் செய்து விட்டு பாதாள லோகத்திற்கு செல். அங்கு கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கும் காலநாகங்களைச் சந்தித்துவிட்டு மீண்டும் இங்கு வா" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியதை மாதவன் கூறினான்.

புன்முறுவலுடன் ஸ்ரீ பழனிச்சாமி "என் மகனே மாதவா, பீதிகாபுரத்தில் உள்ள காலநாகங்களை பற்றி நாம் பிறகு பேசலாம். நாம் உடனடியாக ஸ்நானம் செய்துவிட்டு தியானம் செய்ய வேண்டும். இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உத்தரவு" என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 4

## குருவபுரத்தில் தரிசித்த வாசவாம்பிகா பற்றிய சங்கர் பட்டின் தெளிவுரை

ஸ்ரீ பழனிச்சாமி விரும்பியது போல் நாங்கள் மூவரும் தியானம் செய்ய தொடங்கினோம். "மகனே மாதவா, மகனே சங்கர் பட், நாம் மூவரும் தியானம் செய்வோம். நமக்கு தியானத்தின் போது ஏற்படும் தெய்வீக அனுபவங்களை பிறகு விவாதிக்கலாம். இது ஸ்ரீவல்லபரின் ஆணை என்பதால் நிச்சயம் இந்த அனுபவம் வருங்காலத்தில் ஒரு ஆன்மீக திருப்புமுனையாக இருக்கும். வருங்காலங்களில் கிறிஸ்தவ நாட்காட்டி பயன்பாட்டில் இருக்கும். இன்று கிறிஸ்தவ நாட்காட்டியின் படி வெள்ளிக்கிழமை மே 25 1336. இன்று யோக சக்திகள் நிறைந்த ஆக்கமான நாள். இந்த நாள் நம் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இருக்கும். நான் என் ஸ்தூல உடலை இங்கு விட்டுவிட்டு சூக்ஷ்ம ரூபத்தில் குருவபுரம் செல்ல போகிறேன். ஒரே நேரத்தில் 4 அல்லது 5 இடங்களில் சூக்ஷ்ம ரூபத்தில் செல்வது எனக்கு ஒரு சிறு பிள்ளை விளையாட்டு போன்றது. நாம் அனைவரும் இப்போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை நோக்கி தியானிப்போம். அவர் எனக்கு அனுமதி அளித்தவுடன் நான் சூக்ஷ்ம ரூபத்தில் குருவபுரம் செல்வேன்" என்று கூறினார்.

### ஸ்வாமியின் அருளை பெறுவதற்கான வழிமுறைகள்

ஸ்ரீ பழனிச்சாமியின் வார்த்தைகளை கேட்டவுடன் ஆச்சரியம் அடைந்த நான் "ஸ்வாமி, மாதவன் ஸ்ரீவல்லபரின் தெய்வீக திரு உருவத்தை பார்த்திருக்கிறான். நீங்களோ அவருடன் எப்போதும் சூக்ஷ்ம நிலையில் ஒன்றாக இருக்கிறீர்கள். எனக்கு அவர் பெயர் மட்டும் தானே தெரியும், உருவம் தெரியாதே! நான் எப்படி தியானிப்பது?" என்று கேட்டவுடன் பழனிச்சாமி சிரித்துக் கொண்டே "மகனே, ஸ்ரீ ஸ்ரீபாதரின் மீது உனக்கு பக்தி இருந்தால் எல்லாம் சாத்தியம். ஒரு ஆமை தனது குஞ்சுகள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் தன் எண்ண ஓட்டத்தை வைத்தே அவற்றை பாதுகாக்கும். ஒரு பூனை தன் குட்டிகளை வாயில் கவ்விக் கொண்டு வீடு வீடாக எடுத்து செல்லும். அது எந்த இடத்தை பாதுகாப்பானதாக கருதுகிறதோ அங்கு அவற்றை வைக்கும். அவரும் அதே போலத்தான் முதலில் ஆமை தன் குஞ்சுகளை பாதுகாக்கும் நீதிமுறையில் தன் பக்தர்களை ஆட்கொள்வார். பின்னர் கொஞ்சம் முன்னேறிய நிலையில் பூனை தன் குட்டிகளை பாதுகாப்பது போல் ஆட்சி செய்வார். பின்னர் தொடக்கத்தில் குரங்கு தன் குட்டிகளை எப்படிப் பாதுகாக்குமோ அந்த நீதியில் பக்தனை வழிநடத்துவார். அதாவது இங்கு குட்டிதான் தாயை முயன்று பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு பக்தன் நல்ல உயர்ந்த நிலையை அடைந்தபின்

ஒரு தாய் மீனை தொடர்ந்து எப்படி மீன் குஞ்சுகள் செல்கின்றனவோ அதே போல் பக்தனும் அவரை பின் தொடருவான்.

நீ தியானத்தில் அமரும் போது அவரே உனக்கு தரிசனம் அளிப்பார். ஸ்ரீவல்லபர் எதிர்காலத்திற்கான ஒரு முக்கியமான முடிவை எடுக்க நினைக்கிறார். அதனால்தான் இந்த முக்கியம் வாய்ந்த நாளில் என்னை சூக்ஷ்ம ரூபத்தில் குருவபுரம் வர வேண்டும் என எண்ணுகிறார். என் தியானத்தில் அதற்கான ஆணை அவரிடமிருந்து வந்தவுடன் நான் குருவபுரத்திற்கு புறப்பட்டு விடுவேன். சில முக்கியமான நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற போகிறது. ஸ்ரீ தத்தர் அவற்றைக் காணும் அசாதாரணமான வாய்ப்பை எனக்கு அருளியுள்ளார்" என்று கூறிவிட்டு தியானத்திற்குச் சென்றுவிட்டார். உடனே நானும் மாதவனும் தியானத்தை தொடங்கினோம்.

தியானம் 10 நாழிகைகளுக்கு தொடர்ந்தது (1 நாழிகை= 24 நிமிடங்கள்). ஆர்வமிக்க வண்ணம், நாங்கள் ஒரே நேரத்தில் சுய நினைவுக்கு வந்தோம். தியானத்திற்கு பின்னர் ஸ்ரீ பழனிச்சாமி மிக உயர்ந்த மனநிலையில் இருந்தார். மாதவனும் நானும் அவரின் தியான அனுபவங்களை விவரிக்குமாறு கேட்டுக்கொண்டோம். மிகுதியான ஆனந்தத்துடன் அவர் நடந்தவைகளை விவரித்தார்:

## சிவசர்மாவின் கதை-ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை பற்றியே தொடர்ந்து சிந்திப்பதால் கிடைக்கும் பலன்

'கலியுகத்தில் வாழும் மக்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்!! குருவபுரம் ஒரு குக்கிராமம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் சிறப்புக்களை நன்கு உணர்ந்து கொண்ட பக்தியான வேத ஞானி சிவசர்மா தன் மனைவி அம்பிகாவுடன் அங்கு வாழ்ந்து வந்தார். அவர்கள் மட்டும்தான் அங்கு ஒரே பிராமணக் குடும்பம். அவர் தினமும் ஆற்றை கடந்து சென்று பிராமண நியதி படி ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தார். கொஞ்சம் பணம் கிடைத்தவுடன் குருவபுரத்துக்கு திரும்பிவிடுவார். அவர் காஸ்யப கோத்திரத்தை சேர்ந்தவர். சிவசர்மா ஒரு சிறந்த பண்டிதர், மத கோட்பாடுகளைக் கடுமையாக கடைபிடிப்பவர், யஜுர் வேதத்தை சேர்ந்தவர். அவருக்கு குழந்தைகள் பல பிறந்து சில காலங்களிலேயே இறந்துவிட்டன. ஒரே ஒரு மகன் மட்டும்தான் உயிரோடு இருந்தான். துரதிர்ஷ்டவசமாக அவன் மந்த புத்தியோடு மூடனாக இருந்தான். இந்த உதவாக்கரை மகனை நினைத்து துயரத்தத்தில் சிவசர்மா பலவீனமாகி நோயுற்று எலும்பும் தோலுமாக ஆனார். ஒரு நாள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்முன் வேதத்தை ஓதி விட்டு மௌனமாக நின்று கொண்டிருந்தார். அவர் மனதில் இருந்த துயரத்தை கவனித்த ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துக்கொண்டே "சிவசர்மா!! தன் துயரங்களை மறந்துவிட்டு சதா என்னையே தியானிப்பவர்களுக்கு நான் அடிமை. உன் விருப்பத்தை சொல்" என்று அவர் கூறினார். அதற்கு சிவசர்மா "**ஸ்வாமி, என் மகனும் என்னைவிட சிறந்த ஞானியாகவும் நாவன்மை உடையவனாகவும் ஆக வேண்டும் என விரும்பினேன். ஆனால் அது நிறைவேறாமல் போனது. என் மகனோ சரிசெய்ய முடியாத முட்டாளாக இருக்கிறான். சர்வ வல்லமை நிறைந்த உங்களுக்கு அவனை ஞானியாகவும் உபயோகம்**

**உள்ளவனாகவும் மாற்றுவது ஒன்றும் கடினமான ஒன்று அல்ல. நான் உங்களின் விருப்பத்திற்கே விட்டுவிடுகிறேன்**" என்று சிவசர்மா கூறினார்.

அதை ஒத்துக் கொள்ளும் விதமாக பதிலளிக்கத் தொடங்கினார் ஸ்ரீ ஸ்ரீபாதர். "என் அன்புக்குரியவனே, மிக உயர்ந்தவராக இருப்பினும் பூர்வ ஜென்ம பலன்களை தவிர்க்கவே முடியாது. அனைத்து படைப்புகளும் தவிர்க்கமுடியாத சட்டத்தின் கீழ் இயங்குகிறது. ஒரு பெண்ணுக்குக் கணவன் கிடைப்பது அவளின் பூஜை பலன்களை பொருத்துதான். அவள் செய்யும் தானத்தை பொறுத்துதான் குழந்தை பாக்கியம் கிடைக்கிறது. தகுதியானவர்களுக்கு மட்டும்தான் தானம் செய்ய வேண்டும். அதே தகுதியற்றவர்களுக்கு செய்யும் தானம் விரும்பத்தகாத பலன்களை தரும். நற்குணங்கள் நிறைந்த ஒருவருக்கு அன்னதானம் செய்யும் போது அவர்கள் செய்த புண்ணியங்களில் இருந்து ஒரு பகுதி அன்னதானம் செய்பவர்களுக்கு வந்து சேரும். அகங்காரத்துடன் தானம் செய்தல் கூடாது. அப்போதுதான் நல்ல பலன்கள் கிடைக்கும். உன்னுடைய பூர்வ கர்மாக்களின் பலனால்தான் உனக்கு மந்த புத்தியுடைய மகன் பிறந்துள்ளான். நீயும் உன் மனைவியும் நீண்ட ஆயுள் உடைய குழந்தையை வேண்டினீர்கள். உங்களுக்கு குறை ஆயுள் உடைய குழந்தை வேண்டாம். அதனால் நான் உங்களுக்கு முழு ஆயுளுடைய மகனை அளித்தேன். கர்மாவின் விதிப்படி, அவனுடைய பூர்வ ஜென்ம பாவங்களை அழித்து அவனை ஞானி ஆக்க வேண்டுமானால் நீ உன்னுடைய உயிரை தியாகம் செய்ய வேண்டும். நீ உன்னுடைய உயிரைத் தியாகம் செய்ய சம்மதித்தால் நான் அவனை ஞானி ஆக்குகிறேன்" என்றார்.

அதற்கு சிவசர்மா "**ஸ்வாமி, எனக்கோ வயதாகிவிட்டது. நான் தியாகம் செய்யத் தயார். என் மகன் ஞானியாகவும் பிரஹஸ்பதி போல் நாவன்மை உடையவனாகவும் ஆகிவிடுவான் என்றால் எனக்கு வேறென்ன வேண்டும்**" என்றார். பிறகு சர்வ வல்லமை பொருந்திய ஸ்ரீ ஸ்ரீபாதர் "சரி நீ சீக்கிரமே இறந்து விடுவாய். இறந்தவுடன் சூக்ஷ்ம ரூபத்தில் தீஸிலா நகரத்தில் (ஷீர்டி) உள்ள வேப்பமரத்தின் கீழ் உள்ள பாதாள குகையில் சில காலம் தியானத்தில் இருப்பாய். பிறகு மராட்டிய புண்ணிய நிலத்தில் பிறப்பாய். இதை எந்த சந்தர்ப்பத்திலும் உன் மனைவியிடம் சொல்லக் கூடாது" என்று தெரிவித்தார்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் எதிர்கால பிறப்பை வெளிப்படுத்துதல்

சிவசர்மா சிறிது நாட்களில் இறந்துவிட்டார். அம்பிகாவும் அவளது மகனும் இரந்து உண்டு துயரமான நிலையில் வாழ்ந்து வந்தனர். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் இகழ்ச்சிக்கும் ஏளனத்திற்கும் எல்லை இல்லாமல் போனது. அனைவரின் கேலியையும் அந்த உதவாக்கரை இளைஞனால் தாங்க முடியவில்லை. அவன் தற்கொலை செய்துகொள்ள ஆற்றை நோக்கி ஓடினான். உதவியற்ற அவனது தாயும் தன் உயிரை மாய்த்துக் கொள்ள மகனை பின் தொடர்ந்தாள். பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணியங்களினால் அவர்கள் இருவரும் ஸ்ரீ ஸ்ரீபாதரை

வழியில் சந்தித்தனர். அவர்களின் தற்கொலை முயற்சியை அவர் தடுத்து நிறுத்தினார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பத்தினாலும் எல்லையற்ற கருணையினாலும் முட்டாளான அந்த இளைஞன் ஆழ்ந்த ஞானியாக மாறினான். அம்பிகாவை மீதமுள்ள அவள் வாழ்நாள் முழுவதும் சிவ வழிபாடு மேற்கொள்ளுமாறு ஸ்ரீ ஸ்ரீபாதர் அறிவுறுத்தினார். சனிக்கிழமைகளில் மாலை நேரத்தில் சிவ வழிபாடு செய்வதால் கிடைக்கும் பலன்களை பற்றி விரிவாக விளக்கினார். அடுத்த ஜென்மத்தில் எல்லா விதத்திலும் அவரையே ஒத்த மகன் அவளுக்கு பிறப்பார் என்று வரம் அளித்தார். மூவுலகங்களிலும் அவருக்கு இணையாக எவரும் இல்லை என்றாலும், அவர் வரும் பிறவியில் அவளுக்கு மகனாக பிறக்கப் போவதாக அவரே தீர்மானித்தார்.

என் மகனே, ஸ்ரீசரணரின் இந்த அற்புதமான திருவிளையாடல் வெள்ளிக்கிழமை மே 25 1336 இன்று என் முன்னிலையில் நடைபெற்றது.

## வாசவி தோற்றம் மற்றும் அவளின் கதை

தற்செயலாக நானும் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் கிருஷ்ணா நதியில் நீராடினேன். நீராடிய பிறகு ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் ஆத்ம சக்தியை கொண்டு யோகத்தீயை உருவாக்கினார். அந்த யோகத்தீயில் அழகான அக்னியை போன்ற மேனியுடன் வாசவி கன்யகாம்பா தோன்றினாள். நான் பல நாட்களாக ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சகோதரியான வாசவி கன்யகாம்பாவை தரிசிக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன். என்ன காரணமோ தெரியவில்லை அவள் எனக்கு தரிசனம் கொடுக்கவில்லை. நான் அம்பிகையின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியாக காணப்பட்டார். அன்னை ஸ்ரீ வாசவி ஸ்ரீவல்லபரை போலவே தோற்றமளித்தாள். அவர்கள் இருவரையும் எவரேனும் பார்த்தால் கண்டிப்பாக இரட்டையர்கள் என்றுதான் கருதுவார்கள்.

குருவபுர புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர், அன்னை வாசவி மற்றும் என்னை தவிர வேறு எவரும் இல்லை. ஸ்ரீவல்லபரின் யோக லீலைகளுக்கு எல்லையே இல்லை. தீஸிலா என்கிற ஊர் எங்கிருக்கிறது, இறந்த சிவசர்மாவினால் மட்டும் எப்படி சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு சென்று தியானிக்க முடியும் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. **“யோகசக்திகளுக்கு எல்லையே இல்லை. ஸ்ரீ தத்தரின் யோக பாதைகள் மிகவும் வினோதமாகவும், எப்போதும் புதிது போலவும், முன்பு கேள்விப்படாததாகவும் மற்றும் யோசித்தது பார்க்க முடியாத வண்ணம் இருக்கும்”** என்று ஸ்ரீவல்லபர் கூறினார்.

சிறிது நேரம் கழித்து யோகத்தீயில் இருந்து ஒரு தெய்வீக தம்பதி தோன்றினர். இவர்கள் அன்னை வாசவியின் தாய் குசும்பி மற்றும் தந்தை குஸும சிரேஷ்டி என்று ஸ்ரீவல்லபர் என்னிடம் கூறினார். அன்னை வாசவி சில நேரத்திற்கு தியான முத்திரையில் இருந்தாள். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவாக்கிய யோகத்தீயிலிருந்து ஸ்ரீ நாகரேஸ்வர ஸ்வாமி தோன்றினார். அதற்கு பின் ஸ்ரீ வாசவி அன்னையின் சகோதரரான விருபாக்ஷரும், அக்னி பிரவேசம் மேற்கொண்ட 102 கோமாதாக்களும்

*(ஆரிய வைசியர்கள்) யோக அக்னியிலிருந்து தோன்றினர்.* **"விருபாக்ஷர் நந்தீஸ்வரனின் அம்ஸ அவதாரமாகவும் என்னுடைய அம்சத்தில் சிறிதளவும் கொண்டு பிறந்துள்ளார்"** *என்று ஸ்ரீவல்லபர் கூறினார்.*

*சூரிய மண்டலத்திலிருந்து சக்தியை எடுத்து ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன லிங்கத்திடம் சேர்த்த என் தாய்வழித் தாத்தாவான ஸ்ரீ பாப்பண்ணார்யா முன் ஜென்மத்தில் பாஸ்கரா என்கிற பெயரில் பிருஹத்சிலநகரத்தில் பிறந்து ராஜகுருவாக விளங்கினார். அவர் பிரம்மனின் அம்சத்துடன் பிறந்திருந்தார். ஷ்ரவண மாதம் பௌர்ணமி அன்று கண்டிப்பாக நான் பிருஹத்சிலநகரத்திற்கு வருவேன். என் சகோதரி ஸ்ரீ வாசவி கன்யகாம்பா என் கையில் ராக்கி அணிவிப்பாள். என் அருமை பழனி! என்னுடைய செயல்கள், திருவிளையாடல்கள் மற்றும் மாபெரும் நிகழ்வுகளை எவராலும் நிகழ்த்த முடியாது. அவற்றை யாராலும் அதேபோல் நிகழ்த்த முடியாது. என்னுடைய சக்திகளை யாராலும் பெற முடியாது. நீ செய்த தவ பலன்களினால்தான் சித்த வைசியர்கள், அன்னை வாசவி மற்றும் எங்களின் பெற்றோர்களான குஸும சிரேஷ்டி-குசும்பி ஆகியோரை தரிசிக்க முடிந்தது. பார்! இந்த குருவபுரம் மிகப் பெரிய மாளிகையாக மாறப்போகிறது" என்று மகிழ்வான தொனியில் கூறினார்.*

*அற்புதம்! ஆச்சரியம்! மிகச் சிறந்த அரசனின் மாளிகை அவர் எண்ணிய மாத்திரத்திலேயே தோன்றியது. நாங்கள் அனைவரும் வைரம் பதித்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தோம்.*

*ஸ்ரீசரணர் தொடர்ந்தார் "கோமாதாக்கள் 714 கோத்திரங்களை சேர்ந்தவர்கள். அம்பிகையுடன் சேர்ந்து வெறும் 102 கோத்திரங்களை சேர்ந்த தம்பதி மட்டும் அக்னிப்ரவேசம் செய்தனர். ஸ்வரோசிஷ மனுவின் காலத்தில் ஸ்ரீ ஈஸ்வரனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 18 நகரங்களில் முக்கியமானது பிருஹத்சிலநகரம். தத்த பக்தர்கள் எவரேனும் பிருஹத்சிலநகரத்தில் உள்ள அம்பிகை, நாகரேஸ்வரர் மற்றும் அங்கு வீற்றிருக்கும் தெய்வங்களை தரிசித்திருந்தால் மிக சிறந்த நன்மை பெறுவர். தத்தரின் பெயர் ஜெபம் செய்யப்படும் இடத்தில் அன்னை வாசவி கண்ணுக்கு புலப்படாத வண்ணம் வாசம் செய்வாள். அவள் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவாள். இதே வாசவி கன்யகாம்பாவின் பெயர் ஜெபம் செய்யப்படும் இடத்தில் ஸ்ரீ தத்தர் கண்ணுக்கு புலப்படா வண்ணம் வாசம் செய்வார். சிறிய முயற்சியாலேயே சிறந்த பலன்களை பெறலாம். கிருதயுகத்தில் (சத்ய யுகம்) வாழ்ந்த மக்கள் சித்தர்களாகவும் சத்தியத்தையும் கடைபிடித்தனர். திரேதாயுகத்தில் யக்ஞம் போன்ற முறைகள் நடைமுறையில் இருந்தன. துவாபரயுகத்தில் மந்திர சாஸ்திரம் வழக்கத்தில் இருந்தது. கலியுகத்தில் தந்திர சாஸ்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தந்திரம் என்றால் சைதன்யத்தை (ஆத்ம ஸ்வரூபத்தை) விரிவடைய செய்தல்.* **படைப்புகள் அனைத்திற்கும் நான்தான் மூல காரணம். முப்பத்து முக்கோடி தேவர்களும், அனைத்து உயிரினங்களும், கோடிக்கணக்கான உலகங்களும் என்னுள் அடங்கியுள்ளது. அதுமட்டுமல்லாமல் என்னால்தான் அனைத்தும் இயங்குகிறது, என்னுடைய இருப்பால்தான் அவை பல்வேறு விதமான**

**சக்திகள் பெறுகின்றன. அனைத்து நதிகளுக்கும் கடல்தான் கடைசி அடைக்கலம். எந்த கடவுளை வணங்கினாலும் அந்த வேண்டுதல்கள் அனைத்தும் என்னிடம்தான் வந்து சேரும். இதே ஒருவர் என்னை வணங்கினால் அனைத்து தெய்வங்களையும் வணங்கும் பலன் பெறுவர். என்னுடைய பரப்பிரம்ம தத்துவத்தில் தோன்றும் உலகங்கள் அனைத்தும் என் பிம்பம்தான். என்னுடைய பரப்பிரம்ம தத்துவத்தில் இருந்து வெளியாகும் பிரபஞ்சங்கள் அனைத்தும் என் பிம்பம்தான். எனக்கும் என்னுடைய பிம்பத்திற்கும் வேறுபாடு கிடையாது. ஆதிபராசக்தியிடம் உள்ள தன்மையும் நான்தான். பரதத்துவம் என்பது ஆண் பெண்ணுக்கு அப்பாற்பட்டது. நான் ஆண் உருவத்தில் இருந்தால் ஸ்ரீ தத்தர். அதே பெண் உருவத்தில் இருந்தால் அது ஆதிபராசக்தி. அதனால்தான் 'ஸ்ரீ கிருஷ்ண சியாமளா தேவி மற்றும் ஸ்ரீ ராமோ லலிதாம்பிகா' என்று வேத விற்பன்னர்கள் கூறுகின்றனர். என்னுடைய உடலில் இருந்து வெளியாகும் கதிர்களினால் நான் எங்கு சென்றாலும் அந்த இடங்களை புனிதம் ஆக்குகிறது.** *என்னுடைய சூக்ஷ்ம உடல் இந்த பூலோகம் முழுதும் ஊடுருவி இருக்கிறது. என் காரண உடல் கோடானு கோடி பிரபஞ்சங்களிலும் ஊடுருவி உள்ளது. என் மகா காரண உடல் சத்-சித்-ஆனந்தத்தின் உருவகம். அது பிரம்மாண்டத்தில் மூழ்கி ஒய்வு நிலையில் இருக்கும். என் உணர்வுகளின் நான்கு நிலைகளும் ஒரே நேரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும். என்னை எந்தவிதமான ஜெப முறைகளினாலோ தவ முறைகளினாலோ யோக முறைகளினாலோ வேறு ஏதாவது முறைகளினாலோ அடைய முடியாது. என்னுடைய கருணை இருந்தால் மட்டுமே என்னை அடைய முடியும். என்னுடன் கலந்த புனிதம் வாய்ந்த மனிதர்கள் கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் ஆணையிடும் போது மனித உருவம் எடுத்து நான் இடும் பணிகளை செயற்படுத்த வேண்டும்.*

## பரப்ரம்மாவின் குணம்

*மூன்று சக்திகளும் (மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹா சரஸ்வதி) ஒன்று சேர்ந்த என் சக்தி வடிவம்தான் அனகா லட்சுமி. அவள் என் உடலின் இடப் பாதி. என் உடலின் வலப் பாதியில் முக்குணங்களின் உருவமான மும்மூர்த்திகள் ஒன்றுசேர்ந்து இருக்கிறார்கள். முழு படைப்பும் என்னுள்தான் அடங்கியுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், பின்னடைதல் (திரோதானம்/மறைதல்) மற்றும் அருள் (அனுகிரஹம்) ஆகிய நிகழ்வுகள் இடைவிடாமல் நடந்து கொண்டிருக்கின்றன. (பிரபஞ்சத்தில் உள்ள) ஒவ்வொரு மிகச்சிறிய பகுதியும் எழுத்து (ஒலி-பீஜாக்ஷர மந்திரம்) வடிவினால் திடப்படுத்தப்பட்டுள்ளது. எல்லா எழுத்திலும் அதிர்வலைகள் இருக்கும், அவைகள் அனைத்தும்தான் மந்திரங்கள். இந்த அதிர்வலைகளுடன் கூடிய எழுத்துக்களின் உருவமே மஹாசரஸ்வதி. திடப்படுத்தப்பட்டுள்ள சக்தியின் உருவம்தான் மஹாலக்ஷ்மி. உள்ளே பதிந்துள்ள சக்திதான் மகா காளியின் உருவம். நான் இப்போது சக்தி, அடுத்த நொடியே சக்தாவாகி விடுவேன்.*

*ஜகன்மாதா என்பவள் கருணையின் முடிவில்லா அடையாளம் அதே ஜகன்பிதா கண்டிப்பான தெய்வீக நியாயத்தின் அடையாளம். என் தந்தை வடிவம், கர்மாவின்*

தவிர்க்கமுடியாத விளைவுகளை முடிவுசெய்து நடைமுறைப் படுத்தும். என் தாய் வடிவம் என்னிடம் சரணைந்த பக்தர்களிடம் கருணையையும் இரக்கத்தையும் காண்பிக்கும். ஒரு குழந்தை பெரிய தவறை செய்தால் கூட தாய் அதை சிறியதாகத்தான் எண்ணுவாள். ஒரு சிறிய நல்ல காரியத்தை செய்தால் கூட தாய் அதற்கு கைமாறாக பெரிய பலனை அளிப்பாள். இந்த முழு படைப்புக்கும் நான்தான் தந்தை, தாய் மற்றும் குரு என்பதை தெரிந்துகொள்!!

உன் மனதில் நிலைகொண்டுள்ள சந்தேகத்தை நீக்க முடிவு செய்துவிட்டேன். வாசவி எப்படி என் சகோதரியானாள் என்பதுதான் உன் சந்தேகம். நான் முன்பு அத்ரி அனுசுயா தம்பதியினருக்கு மகனாக பிறந்த போது அனுசுயா தொட்டில் ஆட்டிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் '**எல்லாம் ஆண் குழந்தைகளாக இருக்கின்றன. தத்தரின் அழகு பொருந்திய அம்சத்துடன் பெண் குழந்தை ஒன்று கூட இல்லை**' என்று எண்ணினாள். அவள் பதிவிரதை என்பதாலும் அவளுக்கு விருப்பம் மிகுதியாக இருந்தமையால் அது உடனே நிறைவேறியது. ஆடும் தொட்டில் ஒரு பக்கம் செல்லும் போது தத்தரின் உருவமும் மறுப்பக்கம் செல்லும் போது வாசவியின் உருவத்தையும் அவள் கண்டாள்.

இது கனவா அல்லது வைஷ்ணவ மாயையா என்று அவள் ஆச்சரியமாக பார்த்துகொண்டிருந்தபோது அத்ரி மகரிஷி அவளிடம் வந்து "அனுசுயா, கடுந்தவம் புரிந்து மும்மூர்த்திகளின் உண்மையான ஆதாரத்தையும் அவரின் மூன்று குணங்களையும் தெரிந்துகொண்ட பின் நமக்கு தத்தர் மகனாக பிறந்தார். இது குரு வடிவம் என்பதையும் மும்மூர்த்திகளின் ஆதாரம் என்பதையும் உணர்ந்து கொண்டேன். இது உண்மையில் ஸ்ரீமன் நாராயணரின் உருவம். இதே உருவம் பெண் வடிவம் எடுத்தால் கன்யகாவாக ஆகிவிடுவாள், அதுதான் ஆதிபராசக்தி. படைப்புகளின் ஆரம்பம் முதலே இவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள். என்ன ஒரு ஆச்சரியம்!" என்று கூறினார்.

பிறகு தியானத்தில் மூழ்கியவர் என்னுடைய உருவத்தை அனைத்தையும் உள்ளடக்கிய சைதன்யமாக தரிசித்தார். அவர் இதுதான் அம்பிகை வடிவம் என்பதையும் கண்டார். நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரிப்பதற்கு முன் யோகமாயையாக வந்து வாசவி கன்யகாபரமேஸ்வரியாக உருவம் எடுப்பேன் என்பதையும் புரிந்துகொண்டார். அத்ரி அனுசூயாவின் வேண்டுதலுக்கு இணங்க எங்கள் உருவம் பிரிந்து அம்பிகை எனக்கு ராக்கி அணிவித்தாள். அத்ரி அனுசுயா தம்பதிக்கு பிறந்த ஸ்ரீ தத்தரின் அதே உருவம்தான் கலியுகத்தின் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவமாக பிறந்துள்ளது. ஸ்ரீ தத்தரின் மற்ற அனைத்து உருவங்கள் தோன்றுவதற்கு முன்பு தோன்றிய இந்த உருவம், மறைக்கப்பட்டு இருக்கும். அனைத்து வெளிப்பாடுகளும் தோன்றுவதற்கு முன்பு இருந்த ஆதிபராசக்தியின் உருவம் வாசவி கன்யகா பரமேஸ்வரியின் உருவத்தை ஒத்து இருந்தது. அதனால்தான் அந்த உருவமும் அக்னி தத்துவத்தில் மறைக்கப்பட்டு இருக்கிறது. மனிதனின் தர்மமும் கடவுளின் தர்மமும் வேறு. மிகச்சிறந்த புண்ணியம் செய்தவர்களால் மட்டுமே அம்பிகையின் இந்த புனித வடிவத்தை காண முடியும்.

உங்கள் அனைவரையும் இன்று இங்கு அழைத்ததற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. முடிவில்லா உயர்வான என்னுடைய சைதன்யத்திற்கு (ஆத்ம ஸ்வரூபம்) எந்த வடிவமோ பெயரோ கிடையாது. நான் எல்லையற்ற சக்தி வாய்ந்த அலைகள் இல்லாத கடல் அசைவில்லாமல் இருப்பது போல் இருக்க முடிவெடுத்துள்ளேன். எனக்கு உருவமில்லாமல் இருப்பதற்கும் உருவத்தோடு இருப்பதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. நான் இன்றிலிருந்து இந்த உருவத்தை மறைத்துக்கொள்ள முடிவெடுத்துள்ளேன். அம்மா வாசவி, உன்னுடைய விருப்பத்தையும் கருத்தையும் கூறு" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் உருவம் இவ்வளவு சீக்கிரம் மறையப் போகிறது என்பதை எண்ணி கவலையுற்றேன். தெய்வீக உருவத்துடன் இருந்த அன்னை வாசவி ஸ்ரீவல்லபரை பிரார்த்தனை செய்யும் தொனியில் நோக்கி "என் மதிப்பிற்குரிய சகோதரனே, உருவத்தோடு இருப்பதற்கும் உருவமில்லாமல் சக்திவாய்ந்த அதிர்வலைகளாக இருப்பதற்கும் உங்களுக்கு எந்த வித்தியாசமும் இல்லை என்றாலும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக சில காலம் இருந்துவிட்டு உங்கள் உருவத்தை மறைத்துக் கொள்ளுங்கள். ஆன்மீகத்தின் மீது உண்மையான நாட்டம் உள்ளவர்களின் மீது கருணை கொண்டு அவர்கள் உங்கள் தெய்வீக புனித வடிவத்தை காணும் படி செய்யுங்கள். இடங்கள் மற்றும் நேரங்கள் வித்தியாசம் இல்லாமல் இந்த உருவத்தின் ஸ்தூல சரீரத்தை மறைத்து வையுங்கள். நீங்கள் மீண்டும் அவதரிக்க வேண்டும் என்று எண்ணினால் வேறு உருவமும் உடலும் எடுத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் விருப்பப்பட்டால், அந்த உடல் சமாதியில் இருந்தாலும் உங்கள் பக்தர்களுக்கு சமாதியிலிருந்து கருணை பொழிய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் கீழ்வருமாறு பதிலளித்தார்.

## ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் பிறப்புக்கான முடிவெடுத்தல்

"ஓ! வாசவி அம்பிகா, அனைத்து நற்குணங்களின் உருவகமே உன்னுடைய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறட்டும். நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உடலில் எனக்கு 30 வயதாகும் வரையில் இன்னும் 14 ஆண்டுகள் இருப்பேன். அதற்கு பிறகு மறைந்து விடுவேன். சன்யாச தர்மத்தை புதுப்பிக்கும் பொருட்டு ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரித்து 80 வருடங்கள் இருப்பேன். அதற்கு பிறகு 300 வருடங்கள் கதலி வனத்தில் (ஸ்ரீசைலத்தில் உள்ள காடு) கடுந்தவம் புரிந்த பின் பிரஞ்ஞானபுரத்தில் (அக்கல்கோட்) ஸ்வாமி சமர்த்தராக அவதரித்த பின் என் அவதாரத்தை முடித்து கொள்வேன். அவதூதர்கள் மற்றும் சித்தர்களின் ரூபமாக தோன்றி பல அற்புதங்களையும் தெய்வீக திருவிளையாடல் களையும் நடத்தி காட்டி என்னுடைய எல்லையில்லா நற்பண்புகளின் மூலம் மக்களுக்கு நீதியை போதிப்பேன்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் இனிமையாக பேசினார்.

## ஸ்வாமி வெளிநாட்டவருக்கு கருணை பொழிதலும் அவருக்கு பெயரிடுதலும்

சில நிமிடங்கள் தியானம் செய்த பின் அவர் விருபாக்ஷரை அழைத்து **"என் அருமை விருபாக்ஷா! ஜெர்மனியில் இருந்து ஒரு வெள்ளைக்காரன் பல கஷ்டங்களைக்**

**கடந்து குருவபுரத்திற்கு என் தரிசனத்திற்காக வந்திருக்கிறான். இந்த தெய்வீகத் தங்க மாளிகையை யாராலும் பார்க்க முடியாது. அதனால் அவன் என்னை தேடி கொண்டிருக்கிறான். அவனை சென்று அழைத்து வா"** *என்று கூறினார். வருவதற்கு மிகவும் கடினமான இந்த இடத்திற்கு ஒரு வெள்ளைக்காரனால் எப்படி வரமுடிந்தது என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. விருபாக்ஷர் அந்த வெள்ளைக்காரனை அழைத்துவந்தார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தரிசனத்தை கண்டவுடன் அவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் ஸ்ரீசரணரின் பாதங்களை பிடித்துக்கொண்டு வெகுவாக அழுதான். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவனை தூக்கினார். அவர் கண்களில் இருந்து அருளமுதம் பெருகியது. ஸ்ரீசரணரின் உருவத்திற்கு எல்லையில்லா சக்தியும் எல்லையில்லா அன்பும் உண்டு. அவருடைய உள்ளம் கோடிக்கணக்கான தாய் உள்ளத்திற்கு ஈடானது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அவனை ஜான் என்று அழைத்தார். அவர் ஜானுடைய கண்ணை ஊடுருவுவது போல் நோக்கினார். அவர் தன் கண்களின் மூலமாகவே அவனுக்கு எதையோ துவக்கி வைப்பது போல் தோன்றியது. சிறிது நேரத்திற்கு பின் ஜானுடைய புருவ மத்தியை தொட்டார். அந்த புனிதமான தொடுதலினால் ஜான் தெய்வீக பேரின்பத்தை அனுபவித்தான். ஸ்வாமி அங்கு கூடியிருப்பவர்கள் அனைவரையும் வானத்தை பார்க்கும்படி சொன்னார். தேவனாகிரி போன்று தெய்வீக ஒளியுடன் பெரிய எண் வானத்தில் தோன்றியது. இது சித்ரகுப்தனுடைய ஞான எண் என்று கூறினார். இந்த எண் வரும் நூற்றாண்டுகளில் மிக முக்கியத்துவம் பெரும் என்று ஸ்ரீசரணர் கூறினார். அந்த எண் 17014118346046 923173168730371588410 57271.*

**"இது பிரபஞ்சத்தின் எண். அதன் அர்த்தமும் உள் அர்த்தமும் இயற்கையின் வஸ்துக்களை புரிந்துகொள்ள எண்ணுபவர்களின் அறிவுக்கு ஏற்றார்போல் புரிந்து கொள்ள முடியும்"** *என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாதர் தெலுங்கில் பேசினார் ஆனால் ஜானால் புரிந்துகொள்ள முடிந்தது. ஜான் ஜெர்மன் பாஷையில் கேட்ட கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தெலுங்கில் பதிலளித்தார். என்ன ஒரு அற்புதம்! ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருகில் இருக்கும் போது ஒவ்வொரு நொடியும் திருவிளையாடல்களும் அற்புதங்களும் நிறைந்திருக்கும்.*

*எல்லாவிதமான ஞானங்களும் புலமைகளும் ஸ்ரீசரணரின் பாதங்களில்தான் உள்ளன. "நான் தெலுங்கில் பேசியதை ஜான் ஜெர்மனில் புரிந்துகொண்டான். நான் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஜெர்மனுக்கு மொழிமாற்றம் ஆகி ஜானுக்கு கேட்டது. என்னுடைய பக்தர்களுக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன். என்னால் நிமிர்த்த முடியாத ஒன்று என்பதே கிடையாது மேலும் என்னால் தீர்க்க முடியாத பிரச்சனை என்பதும் கிடையாது. அனைத்து தர்மங்களுக்கும் அப்பாற்பட்டு மனதாலும் செயலாலும் வார்த்தைகளாலும் என்னை நம்புபவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். என்னுடைய கருணை உன் மீது பொங்கி வழிந்தால் இயற்கையில் உள்ள மற்ற அனைத்து சக்திகளும் ஆக்கபூர்வமான சுப அதிர்வலைகளை ஏற்படுத்தும். இதை என்னுடைய சத்திய வாக்காக எடுத்துக்கொள்ளலாம். பதினான்கு*

புவனங்களிலும் (உலகங்கள்) எனக்கு கிடைக்காத ஒன்று என்பதே கிடையாது. நீங்கள் எந்த நீதியை கடைபிடித்தாலும் என்னுடைய பெயரை நினைவில் கொண்டால் உங்களை கண் இமை போல காப்பேன். நான் அன்பின் உருவகம். என்னை அன்பால் மட்டும்தான் உணர்ந்து கொள்ள முடியும்.

சப்தரிஷி மண்டலத்தில் துருவ நட்சத்திரம் மிகவும் முக்கியமானது. துருவனுக்கு எப்படி துருவபதம் (நிலையான இடம்) கிடைத்தது என்பதை தெரிந்து கொள். அவர் தன் தந்தையின் மடியில் அமர்ந்து கொள்ள விரும்பி ஸ்ரீமன் நாராயணனை நோக்கி தவம் புரிந்தார். ஸ்ரீமன் நாராயணனை தரிசித்தவுடன் இறந்த தந்தையின் மடியில் அமர்ந்து கொள்ளும் விருப்பம் இல்லாமல் போனது. ஸ்ரீமன் நாராயணன் அவருக்கு துருவபதத்தில் இடம் அளித்தார். அவர் துருவனை தன்னுடைய மடியில் அமர்த்திக்கொண்டார். குழந்தையான துருவன் இறந்த தன் தந்தையின் மடியில் அமர்ந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டவுடன் பிரபஞ்சத்திற்கே அதிபதியான ஸ்ரீமன் நாராயணன் தன் மடியில் அமர்ந்து கொள்ளும் படி துருவனுக்கு கருணை பொழிந்தார்.

## கலியுகத்தில் துருவனே ஆண்டவர் இயேசு


கலியுகத்தில் துருவன் இயேசுநாதர் ஆக பிறந்தார். அவர் கடவுள்தான் தன் தந்தை என நம்பினார். நீ என்னை எந்த எண்ணத்தில் வழிபடுகிறாயோ அதே எண்ணத்தில் அருளுவேன். ஸ்ரீ வாசவி கன்யகாம்பிகா புனித ஆத்மாவான மரியாவுக்கு தன் சக்தியை அளித்தாள். மரியா கன்னியாக இருந்த போதும் அவளுக்கு, துருவனே இயேசுநாதராக பிறந்தார். தாய் தந்தையரின் இணைப்பினால் இயேசு கிறிஸ்து பிறக்கவில்லை. இயேசு கிறிஸ்து ஸ்ரீமன் நாராயணனைத்தான் தன் தந்தை என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தார். ஸ்ரீமன் நாராயணன்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக உங்கள் கண் முன் இருப்பது. ஓ!! சித்த வைசிய முனிவர்களே என் சகோதரி வாசவி கன்யகாம்பிகாவின் முன் வேதங்களை ஓதுங்கள். வரும் நூற்றாண்டுகளில் தோன்றும் மக்களின் தீயவினைகள் நீங்கள் ஓதும் புனித வேதத்தின் ஓசையினால் அழியட்டும். ஸ்ரீ நாகரேஸ்வரருக்கும் வாசவி கன்யகாம்பிகாவுக்கும் வேதங்கள் ஓதினால் மிகவும் பிடிக்கும். இப்போது ஏதேச்சையாக இங்கு இருக்கும் வெள்ளைக்காரன் தன் அடுத்த பிறவியில் இமய மலையில் வாழும் ஒரு வேத பிராமணரின் வீட்டில் பிறப்பான். அவன் யோகியாகி சாம்பலா கிராமத்தை அடைவான். மாசு அடைந்துள்ள காற்று மண்டலத்தில் பொதிந்திருக்கும் தீய சக்திகளை உங்கள் புனிதமான வேதத்தின் ஒலியால் விரட்டி அனுப்புங்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களை பார்த்து உரைத்தார்.

சித்த வைசிய முனிவர்களின் வேதபாராயணம் முடிவடைந்தது. ஸ்ரீ வாசவி கன்யகாம்பிகா, ஸ்ரீ நாகரேஸ்வரர், விருபாக்ஷர், குஸும சிரேஷ்டி தம்பதி மற்றும் சித்த வைசிய முனிவர்கள் அக்னியில் இறங்கி மறைந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஜானை ஆசீர்வதித்தார். 'ஸ்ரீசரணரின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக இருந்தால் நன்றாக இருக்கும்' என்று ஜான் கேட்டுக்கொண்டான். 'உன் விருப்பப்படியே ஸ்ரீ

ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் ஜெர்மன் மொழியில் கூட தோன்றும்' என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் பதிலளித்தார். அவர் ஜானுக்கு இவ்வாறு உறுதி அளித்து அனுப்பிவிட்டார். என்னை மீண்டும் ஸ்தூல உடலுடன் சேர ஆணையிட்டார். பின்னர் பிரயாகை சங்கமத்தில் நீராட சென்று விட்டு, மறைந்து விட்டார்.

"என் செல்வங்களே, இன்று மிகவும் புனிதம் வாய்ந்த நாளான வெள்ளிக்கிழமை மே 25 1336. சங்கரா!! நீ உன் தியான அனுபவங்களை கூறு" என்றார் பழனிச்சாமி.

## ஷீர்டி சாய்பாபா தோற்ற சிறப்பு



நான் தொடர்ந்தேன் "ஓ, மதிப்பிற்குரிய ஸ்ரீ பழனிச்சாமி அவர்களே!! என் தியானத்தில் ஒரு முஸ்லிம் பக்கிரியை பார்த்தேன். அவர் எப்போதும் 'அல்லா மாலிக்' என்று கூறிக்கொண்டிருந்தார். அவர் ஒரு வேப்பமரத்தடியில் அமர்ந்திருந்தார். அவருக்கு 16 வயதிருக்கும். அவரை தரிசிக்க வந்த வயதானவரிடம் 'நான் ஒரு நானகபந்தி முஸ்லீம்' என்று கூறினார். வேறு ஒருவரிடம் 'நான் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்த பிராமணன்' என்று கூறினார். இன்னொருவரிடம் 'இது என்னுடைய குருஸ்தான் என்றும் இங்கு வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தரிசனம் செய்தால் பேரதிஷ்டம் கிடைக்கும்' என்று கூறினார். ஸ்ரீ பழனிச்சாமி அவர்களே, என்னுடைய முழு தியானத்திலும் அந்த முஸ்லீம் இளைஞரின் தரிசனம் மட்டும்தான் இருந்தது. எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தரிசனம் கிடைக்கவில்லை. அந்த முஸ்லீம் இளைஞன் அமர்ந்திருந்த வேப்ப மரத்திற்கு கீழ் ஒரு சிலர் வந்து தோண்டினர். அதற்குள் ஒரு சிறிய குகை இருந்தது. அங்கு நான்கு பக்கங்களிலும் விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அந்த குகை மீண்டும் மூடப்பட்ட பின் அங்கு வந்த இளவயது சந்நியாசி, "இது என்னுடைய குருஸ்தானம். இதை யாரும் திறக்க கூடாது" என்று கூறினார். ஸ்ரீ பழனிச்சாமி அவர்களே, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் எனக்கு ஏன் இப்படி பட்ட தரிசனத்தை தியானத்தில் அருளினார் என்று புரியவில்லை" என்று நான் கூறினேன்.

## யவனர்களின் கதை

ஸ்ரீ பழனிச்சாமி தொடர்ந்தார் "என் அருமை சீடர்களே, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் குணத்தை யாராலும் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. அவரின் திருவிளையாடல்களை வர்ணிக்க முடியாது. உலகத்தில் உள்ள அனைத்து தர்மங்களையும் பாரம்பரியங்களையும் ஒன்றிணைத்து சனாதன தர்மமாக ஒருங்கிணைப்பதே அவரது விருப்பம் (இந்து மதம் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது). கலியுகத்தின் முடிவில் இந்த பிரபஞ்சம் முழுவதிலும் அவர் சனாதன தர்மத்தை ஸ்தாபிப்பார். ஸ்ரீசரணர், ஜானை நோக்கி, '**ஜெஹோவா**' என்றால் '**நான்**' என்று அர்த்தம் என்று கூறினார். அது பரப்ரம்மனுடைய வடிவம். பிரபஞ்சத்தில் பிரதிபலிக்கும் அனைத்து சைதன்யங்களும் (ஆத்ம ஸ்வரூபம்) கடவுளின் மகனான இயேசு கிறிஸ்துவின் சைதன்யம்தான். தூய்மையான சைதன்யமும், அமைதி மற்றும் சந்தோஷத்தை அளிக்கும் புனிதம் பொங்கி வழியும் கருணையும் ஒன்றுதான். இந்த மூன்றுமே என்னுடைய வடிவங்கள்தான். தூய அன்பின் விளைவாக மட்டுமே நீ என் தரிசனத்தை பெற முடியும், வேறு வழிகளில் கிடைப்பது மிக கடினம்.யவன தர்மம்(இஸ்லாம்) கூட தத்த சாராம்சத்தின் உள்ளார்ந்த பகுதிதான். மகாமதி (முஹம்மது) என்ற பெயருடைய மகாத்மா உருவமற்ற மக்கேஸ்வரின் பக்தன். அவர் கடவுளை அல்லா என்று அழைப்பார். அவர் 7 சொர்கங்களையும் பார்த்தார். அல்லாவை பார்க்க எண்ணியவருக்கு, தன்னுடைய பிரதிபலிப்பைத்தான் காண முடிந்தது. நீ கண்ட யவன சந்நியாசி பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்த பிராமணர். சிறுவயதில் பெற்றோரை இழந்து முஸ்லீம் பக்கிரியால் வளர்க்கப்பட்டு இஸ்லாமிய தர்மங்களை கற்றுக்கொண்டார். இந்து தர்மங்களை இந்து மகாத்மாவுடன் தங்கிய போது கற்றுகொண்டார். வாரணாசியில் இருந்த ஒரு சிறந்த யோகியிடமிருந்து கிரியா யோகத்தை கற்றுக்கொண்டார். பின்னர் ஒரு தத்த அவதூதரை சந்தித்து அவரிடமிருந்து வெள்ளிக் காசுகளை கேட்டார். அவருடைய தகர குவளை முழுமை அடையாததால், அந்த அவதூதர் இரண்டு பேரீச்சம்பழங்களை அதில் போட்டார். பிறகு அவர் திருப்தி அடைந்தார். அதன் பிறகு தத்தரின் சைதன்யம் அவரிடம் பெருக தொடங்கியது. பின்னாட்களில் அவர் தீஸிலா நகரத்திற்கு (ஷீர்டி) வந்தார். அது காட்டு பகுதியில் உள்ள சிறிய கிராமம். அவர் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்ற போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஒரு கல்லின் மீது அமர்ந்துகொண்டு தியானம் மேற்கொண்டார். இந்த கல்லின் மீது எவரொருவர் அமர்ந்துகொண்டு தியானம் செய்தாலும் அற்புதமான பலன்களை பெறலாம். நீ வேப்பமரத்திற்கு கீழ் பார்த்த பாதாள வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் 12 வருடங்கள் தவம் (தியானம்) மேற்கொண்டார்.

அந்த 12 வருட தியானத்தில் 12000 வருடங்கள் செய்த தியானத்தின் சக்தியை பெற்றார். ஸ்ரீவல்லபரின் உடல் 12000 வயதுடையவர் போலானது. அந்த குகை முழுவதும் அவரின் ரோமத்தால் நிறைந்திருந்தது. அவருடைய புருவம் அடர்த்தியானது. அவருடைய கண்களைப் பார்க்க வேண்டுமானால் கண்ணிமைகளைக்

கஷ்டப்பட்டுத்தான் திறந்துவிடவேண்டும். ஸ்ரீசரணர் தன் தவப்பலன்களை இளவயது சந்நியாசியிடம் கொடுத்தார். அந்த இளவயது சந்நியாசிக்கு நான்கு வயது இருந்தபோது ஸ்ரீசரணர் குகையினுள் மறைவான உருவத்தில் தவம் மேற்கொள்ள தொடங்கினார். அந்த சந்நியாசிக்கு 16 வயதாகும் போது அவர் தன் 12 வருடங்கள் தவத்தை நிறைவு செய்தார். என் செல்வங்களே நான் இப்போது கூறும் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் வரும் நூற்றாண்டுகளில் நடைபெறும். இவை அனைத்தும் நிகழ்கால நிகழ்ச்சிகள் அல்ல. ஸ்ரீ ஸ்ரீபாதர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக தோன்றி அந்த பெயரிலும் உருவத்திலும் 80 வருடங்கள் வாழ்வார். பிறகு கதலிவனத்தில் 300 வருடங்கள் மறைந்துகொண்டு ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவார். பின்னர் பிரக்ஞானபுரத்தில் (அக்கல்கோட், மகாராஷ்டிரா) ஸ்வாமி சமர்த்தர் என்ற பெயருடன் வந்து பின்னர் ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன லிங்கத்துடன் ஐக்கியமாவார். நீ கண்ட யவன சந்நியாசி வயதாகியும் இருப்பார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த சந்நியாசியிடம் தன் சைதன்யத்தை செலுத்தி தனக்கு இணையானவராக ஆக்குவார்.

என் அருமை சங்கர் பட், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் நான்கு நந்தா தீபங்களுக்கு நடுவில் அமர்ந்து கொண்டு 12 வருடங்கள் கடுந்தவம் புரிந்தார். அவர் முழு பிரபஞ்சத்தையும் 16 பாகமாக பிரித்து பிரம்மத்தை 4 பாகங்களாக விளக்கியுள்ளார். பிரம்மத்தின் நான்கு பாகங்களை குறிக்கும் வகையில் நான்கு நந்தா தீபங்களை யோக அக்னியை கொண்டு எரியூட்டி தவத்தில் இருந்தார். முதல் பாகத்தின் கலைகள் கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு. இவற்றை வணங்கினால் தெய்வீக ஒளியை பெறலாம். பூமி, இடம்,ஆகாயம் மற்றும் கடல் இரண்டாம் கலைகள். இவற்றை வணங்குபர்கள் எல்லையற்று விளங்கி உலகங்களை வெல்வர். நெருப்பு, சூரியன், நிலவு மற்றும் மின்னல் ஆகியவை பிரம்மத்தின் மூன்றாம் கலைகள். இவற்றை வணங்கினால் தேஜஸ் கூடி உலகங்களை வெல்வர். உயிர், கண், காது மற்றும் மனம் ஆகியவை நான்காவது கலைகள். இவற்றை வணங்குபவர்கள் தங்களுக்குள் ஸ்தாபிக்கப் படுவார்கள். மேலும், ஒருவர் வடக்கு பகுதியை வென்றால் ஞானம் பெறுவர். தெற்கை வென்றால் பூதம், பிரேதம் மற்றும் பிசாசுகளிடம் இருந்து எந்தவிதமான பிரச்சனையும் இருக்காது. கிழக்கை வென்றவர்களுக்கு செல்வமும் மேற்கை வென்றவர்களுக்கு அரசனும் சாதகமாவான். நான்கு பக்கங்களையும் வென்றவர்களால் திக்விஜயம் செய்ய முடியும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு நான்கு பக்கங்களும் அவரின் ஆடைகள். அவர் அனைத்து பக்கங்களிலும் எல்லையற்று பரந்துவிரிந்துள்ளதால் திகம்பரர் என்று அழைக்கப்படுகிறார். ஸ்ரீ தத்த திகம்பரரும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப திகம்பரரும் ஒன்றுதான். ஸ்ரீசரணரின் ஸ்தூல,சூக்ஷ்ம மற்றும் காரண உடல்களில் இருந்து ஆயிரக்கணக்கான கதிர்களும் கலைகளும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அவற்றில் சில கதிர்கள் அம்ச அவதாரம் ஆகும். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகள் நிறைவடைந்தவுடன் மூலாதாரச் சைதன்யமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடன் ஒன்றாகிவிடும். அவர் படைத்தல், காத்தல், அழித்தல், பின்வாங்குதல் மற்றும் கருணை ஆகியவைகளை நடத்தி கொண்டே இருக்கிறார். உலகங்கள் படைக்கப்படும்

போது ஏற்படும் அதிர்வலைகள் சிருஷ்டி தத்துவம் என்று அழைக்கப்படும். அவற்றைப் பேணி பாதுகாத்தல் ஸ்திதி தத்துவம் என்று அழைக்கப்படும். அவை அழிவது லய தத்துவம் என்று அழைக்கப்படும். அந்த அதிர்வலைகள் ஆரம்ப நிலைக்கு செல்வது திரோதானம் (பின்வாங்குதல்) என்று அழைக்கப்படும். ஜீவன்களின் மீது செலுத்தப்படும் இரக்கம் மற்றும் தயவு அதிர்வலைகள் அனுக்கிரகம் (அருள்) என்று அழைக்கப்படும்.

யுகங்கள் செல்ல செல்ல மனிதர்கள் பலவீனம் அடைவார்கள். ஆகவே முனிவர்கள் வேண்டுதல்களுக்கு இணங்கி கடவுள் தன் நிலையை விட்டு கீழிறங்கி வருவர். கடவுள் தன் நிலையை விட்டு கீழிறங்கி மனித உடலில் அவதரிப்பது அவருடைய கருணையின் முழு வெளிப்பாடு. கடவுள் தன் நிலையில் இருந்து கீழிறங்கி வருவதால் மனிதர்களின் சிறு முயற்சி கூட பெரிய பலனை தருகிறது. அதனால்தான் கலியுகத்தில் வாழும் மக்கள் பாக்கியசாலிகள். வெறும் நினைவலைகளின் மூலமாகவே ஸ்ரீ தத்தரின் அருளை பெற முடியும். கலியுகத்தில் மனிதன் வீழ்ச்சி அடைவதற்கு பல வாய்ப்புகள் இருந்தாலும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளை பெறுவதற்கான வாய்ப்பு இரு மடங்கு அதிகமாக உள்ளது. இது புனிதத்தன்மை வாய்ந்த சத்தியம். நினைவில் வைத்துக் கொள்ளுதல், வழிபாடு மற்றும் சில வழிமுறைகளினால் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம். இதனால் பக்தர்களின் அனைத்து பாவங்களும், தூய்மையற்ற எதிர்மறை எண்ணங்களும், குணங்களும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் சைதன்யத்தை அடைந்து, அவரின் தெய்வீக அதிர்வலைகள் பக்தனிடம் வந்து சேரும்.

பக்தர்களின் பாவ மூட்டைகள் மற்றும் தீய பண்புகள் ஸ்ரீசரணரின் சைதன்யத்தில் நுழைந்தவுடன் புனித நதிகளில் நீராடுவது போன்றோ அல்லது அவர் அவற்றை தன் யோக தீயில் எரித்து சாம்பலாக்கி விடுவார். பக்தர்களுக்காக அவரே தவம் புரிந்து, அதன் பலன்களை பக்தர்களுக்கு அளிப்பார். இதன் மூலம் கர்ம நீதியை மீறாமல் பக்தர்களை பாதுகாக்கிறார். அவர் பாதங்களில் சரணடைந்தவர்களுக்கு செயலற்ற கர்மாவின் இயல்பிற்கு ஆணையிட்டு விடுதலை அளிக்கிறார். அவர் மூர்க்கமான உருவம் எடுத்து தன் பக்தர்களின் நலனுக்காக அவர்களின் கர்மாக்களை ஒவ்வொரு நொடியும் அழிக்கிறார். ஆகவே அவரை சரணடைந்த பக்தர்கள் எதுவும் தெரியாமலேயே தங்கள் கர்ம பந்தங்களிலிருந்து விடுபடுகின்றனர்".

ஸ்ரீ பழனிச்சாமி இவ்வாறு அனைத்து விவரங்களையும் விளக்கி கொண்டிருந்த போது தைரியமாக என் மனதில் தோன்றிய சந்தேகத்தை அவரிடம் கேட்டேன்.

**"ஸ்வாமி,சங்கரரால் (சிவன்) கூட ஏழரை சனியின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாத போது எப்படி ஸ்ரீகுரு ஸர்வபௌமரால் (பிரபஞ்சத்தின் சக்கரவர்த்தி) கிரக தோஷங்களை நிவர்த்தி செய்ய முடியும்"** என்று கேட்டேன்.

"என் அருமை சங்கரா, ராசி மண்டலத்தில் உள்ள கிரகங்கள் உயிரினங்களிடம் நட்போ பகைமையோ பாராட்டுவதில்லை. ஒரு மனிதனின் பூர்வ கர்மாக்களை வைத்துதான் அவர் பிறக்கும் போது கிரக நிலைகள் இருக்கும். கிரக சஞ்சாரங்களை

பொருத்துதான் ஒருவருக்கு நன்மையோ தீமையோ ஏற்படும். கிரகத்திலிருந்து வரும் சூக்ஷ்ம கதிர்கள் ஒருவருக்கு தீமையை ஏற்படுத்தும் போது மந்திர, தந்திர, யந்திர பரிகாரங்கள் பலனளிக்காத போது ஜபம்,தபம் மற்றும் ஹோம முறைகளை கையாள வேண்டும். அம்முறைகளும் பலனளிக்காத போது ஸ்ரீகுருவின் பாதங்களைத்தான் அடைக்கலம் அடைய வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர் சர்வ வல்லமை படைத்தவர். நல்ல மற்றும் தீய சக்திகள் இரண்டும் உள்ளன. நல்ல சக்திகள் நல்ல முன்னேற்றத்தையும் மற்றும் தீய சக்திகள் தீய முன்னேற்றத்தையும் அளிக்கும். மனித உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு கிரகம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஏதாவது ஒரு கிரகத்தில் தோஷம் ஏற்பட்டால் அந்த கிரகம் ஆதிக்கம் செலுத்தும் உடல் பாகத்தில் நோய் ஏற்படும். பிரபஞ்சத்தின் சைதன்யத்தில் இருந்து வெளியாகும் சூக்ஷ்ம கதிர்கள் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். அந்த அதிர்வலைகளினால் ஈர்ப்பு மற்றும் விலக்குதலில் மாறுதல்கள் ஏற்படும். இது நாள் வரையில் நல்ல நட்பு வட்டத்தில் இருந்த ஒருவன் திடீரென தீய சகவாசம், தாழ்ந்த சாதி நட்பு, தேவையற்ற சண்டை, உறவினர்கள் உயிரிழப்பு, குடும்பத்தில் சண்டை மற்றும் பொலிவற்ற தோற்றம் ஆகியவற்றுக்கு ஆளாவான். பிரபஞ்ச சக்தியானது தொடர்ந்து அதிர்வலைகளை ஏற்படுத்தி கொண்டே இருக்கும். சம்பந்தப்பட்ட நபர்களிடம் சில காலம் தொடர்ந்து ஸ்திதி நிலையில் (ஓய்வு அல்லது கண்ணுக்கு புலப்படாத நிலையில் தங்கி இருத்தல்) இருக்கும். சில காலங்களுக்குப் பிறகு அந்த நபரைவிட்டு நீங்கி அதன் ஆதிக்கத்துக்கு விதிக்கப்பட்டிருக்கும் இன்னொரு நபரை அடையும். காலச்சக்கர சுழற்சிக்கு ஏற்றார் போல் அவை மீண்டும் பலன்கள் அளிக்க தொடங்கும். கடவுளின் பக்தர்களும், ஆன்மீக நடைமுறைகளான ஜபம், தபம் ஆகிய முறைகளை கடைபிடிப்பவர்கள் கிரக வீரியத்திலிருந்து சிறிது நிவாரணம் பெறலாம். பிரபஞ்ச நன்மைக்காக முனிவர்கள் பல்வேறு யாகங்களை நடத்துகின்றனர். அதன் மூலம் கிடைக்கும் ஆன்மீக சக்திகள் அனைத்தையும் மனித குல மேன்மைக்காக அவர்கள் அர்பணிக்கின்றனர். இந்த நடைமுறையினால் மனிதனை கொடுமைக்கு ஆளாக்கும் பிரபஞ்சத்தில் எழும் தீய தாக்கங்கள் அனைத்தும் தோன்றிய இடத்தையே சென்றடைந்து விடுகிறது. அதாவது அவை தோன்றிய மையப் பகுதியையே அடைந்து விடுகிறது. இதுதான் திரோதானம் என்று அழைக்கப்படுகிறது (பின்வாங்குதல்). சிறிய நற்காரியங்களினால் கூட மிகப்பெரிய சுப விளைவுகள் ஏற்படுவதை அனுக்கிரகம் (அருள்) என்று அழைக்கப்படுகிறது. மகனே, நான் கிரியா யோகத்தில் போதிக்கப்படும் சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோதானம் மற்றும் அனுகிரகத்தை பற்றி விளக்கம் அளித்துவிட்டேன்.

வருங்காலங்களில் நீ தியானத்தில் கண்ட முஸ்லிம் பக்கிரியிடம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சக்திகள் அதிக அளவில் பொங்கி வழியும். வேப்ப மரத்திற்கு கீழ் உள்ள பாதாள அறையில் நீ நான்கு நந்தா தீபங்களை பார்த்தாய். இது ஒரு அசாதாரணமான விஷயம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன் மனதில் ஒரு பெரிய உள்நோக்கத்தோடுதான் இந்த அனுபவங்களை உனக்கு அளித்துள்ளார். அதன் உள்ளர்த்தம் அவருக்கு மட்டும்தான் தெரியும். அவரின் தெய்வீக திருவிளையாடல்கள்

அனைத்தும் அருமையானவை. அவை அனைத்திற்கும் ஆழ்ந்த அர்த்தம் இருக்கும். அதுமட்டுமல்லாமல் அந்த தெய்வீக ரகசியங்களை யாரிடமும் வெளிப்படுத்த கூடாது. எனக்கு அவர் அனுமதி அளித்திருக்கும் அளவு மட்டும்தான் உனக்கு விளக்க முடியும். அனைத்து படைப்புகளும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் வழிகாட்டுதலில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவருக்கே அவர்தான் ஆளுமை செலுத்துகிறார். மிகவும் போற்றத்தக்க இந்த பிரபஞ்ச தலைவனின் யோக சக்திகளை அளக்கவே முடியாது, வரையறுக்க பட்ட அளவுகள் மூலம் அவற்றை புரிந்து கொள்ள முடியாது" என்றார்.

ஸ்ரீ பழனிச்சாமியின் விளக்கங்களை நான் மன மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டிருந்தேன். நான் உடுப்பியில் இருந்து குருவபுரம் செல்லும் பயண வழியில் பல சுவாரஸ்யமான மற்றும் வினோதமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் இவற்றை புத்தகமாக எழுத ஸ்ரீகுரு சர்வபௌமரின் அனுமதி பெற வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசித்தவுடன் அவரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

என் மன ஓட்டத்தை புரிந்துகொண்ட ஸ்ரீ பழனிச்சாமி **"உன் மனதில் உள்ள எண்ணத்தை புரிந்து கொண்டேன். வருங்காலத்தில் அவருடைய பக்தர்களைக் கருத்தில் கொண்டு அவரின் வரலாறைப் புத்தகமாக எழுத நினைக்கிறாய். உன் முயற்சிக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கண்டிப்பாக அருளுவார்"** என்று கூறிவிட்டு மாதவனின் தியான அனுபவங்களை விளக்குமாறு கூறினார்.

மாதவன் தொடர்ந்தான் "மகாத்மா, நான் தியானத்தில் கௌபீனம் அணிந்திருந்த ஒரு பிராமண சந்நியாசியை பார்த்தேன். அவர் அக்னியையும் சூரியனையும் வணங்குபவர். அவர் ஒரு வேத பண்டிதரிடம் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தார். 'நீ கொடுத்த இந்த தேங்காயை நான் முஸ்லிம் பக்கிரிக்கு கொடுத்து அனுப்ப விரும்புகிறேன். அந்த முஸ்லிம் பக்கிரி என்னை விட உயர்ந்த நிலையில் இருக்கிறார். அவர் எனக்கு மூத்த சகோதரர் போன்றவர். அவருக்கு கடந்த,நிகழ் மற்றும் எதிர்காலங்கள் பற்றி நன்றாகத் தெரியும். உன்னிடம் உள்ள பனை ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்கிற கிரந்தத்தை நான் எடுத்துக் கொள்கிறேன். என் மூத்த சகோதரனாக நினைக்கும் முஸ்லிம் பக்கிரியிடம் அவற்றை கொடுத்துவிடுகிறேன். அவருடைய ஆசிகளை பெற்றுக்கொள்கிறேன். இந்த கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையா அல்லது கட்டுக்கதையா? எந்த அளவிற்கு உண்மை? எவை எல்லாம் உண்மையில்லை? என்று முடிவுசெய்கிறேன். அவற்றை எல்லாம் ஆராய்ந்து முடித்த பின் நான் கிரந்தமாக எழுதுகிறேன்" என்றார்.

அதற்கு வேத பண்டிதர் "ஐயா, நான் கொடுத்த தேங்காயை உங்களால் முஸ்லிம் பக்கிரியிடம் கொண்டு செல்ல முடியாது. உங்கள் முயற்சிகள் அனைத்தும் வீண்தான். சரிதாம்ருதம் முன்பே எழுதப்பட்டு விட்டது. ஸ்ரீவல்லபரின் விருப்பத்திற்கு இணங்க நடந்து விட்டது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்ற பெயருடைய இந்த

கிரந்தத்தை அனைத்து தேவர்கள், ரிஷிகள் மற்றும் உன்னதமான பிறவிகள் அனைவரும் புனித புத்தகமாக கருதி மரியாதையுடன் அவர்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளனர். ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைக்கு இணங்க இக்கிராந்தம் எழுதப்பட்டுள்ளது. இந்த கிரந்தத்தில் ஒரு வார்த்தையை கூட மாற்றும் அதிகாரம் எவருக்கும் கிடையாது. இது பல தலைமுறைகளாக எங்களிடம் உள்ளது.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைப்படி பழுதடைந்த பிரதியை புனிதமான கங்கையில் மூழ்கச்செய்ய வேண்டும். நாங்கள் பல தலைமுறைகளாக இதை பாதுகாத்து வருகிறோம். ஒருவர் எவ்வளவு சிறந்த மனிதனாக இருப்பினும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணை இல்லாமல் இது போன்று ஒரு கிரந்தம் இருக்கிறது என்பதை கூட நாங்கள் அவரிடம் வெளியிட மாட்டோம். நீங்களோ சரிதாம்ருதத்தில் உள்ள சில பாகங்களை மாற்ற விரும்புகிறீர்கள். எங்கள் குடும்பத்தில் அந்த கிரந்தத்தை தொடுவதைக் கூட ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதத்தை தொடுவது போல நினைப்போம். நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை விட சிறந்தவர் என்றால் உங்கள் உத்தரவு எங்களைக் கட்டுப்படுத்தும். நீங்கள் சன்யாச உடையில் இருக்கிறீர்கள். நாங்கள் குடும்பஸ்தர்கள். உங்களை எதிர்க்கும் தைரியம் எங்களுக்கு இல்லை. உங்களால் இந்த தேங்காயை தீஸிலா நகரத்திற்கு கொண்டு செல்ல முடிந்தால் நான் இந்த ஓலைச்சுவடியை உங்களிடம் கொடுத்துவிட்டு என் பூணூலை அறுத்தெறிந்து விட்டு என்னை தீண்டத்தகாதவன் என்று அறிவிக்கிறேன். முஸ்லிம் பக்கிரிக்கு நந்தா தீபத்தை பற்றி நன்றாக தெரியும் என்று நீங்கள் கூறினீர்கள். இப்போது தீஸிலா நகரம் என்று அழைக்கப்படும் இடம் காலப்போக்கில் ஷிலாதி நகரம் என்று பெயர் பெரும் என்றும் கூறினீர்கள். எங்கள் குடும்பத்தில் தோன்றிய அவதூதர் ஒருவர் அவுரங்காபாத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அம்ச அவதாரம் ஒருவர் இருப்பதாகவும், அவர் தன்னை திசிலா நகரத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் கூறினார். நீங்கள் பீதிகாபுரத்திற்கு சென்றாலும் உங்களால் அங்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதுகைகளை பிரதிஷ்டை செய்ய முடியாது. பீதிகாபுரத்தில் உள்ள எறும்புக்கூட்டம் போன்ற மக்கள் விஷத்தன்மை உள்ள பாம்புகள் போல சண்டையிட்டுக் கொண்டிருப்பர். அவர்கள் ஆன்மீக நாட்டம் இல்லாமல் வாத பிரதிவாதங்களிலும் தேவையற்ற விவாதங்களிலும் தங்கள் நேரத்தை விரயம் செய்து கொண்டிருப்பர். எங்கள் மூதாதையர்களின் வீட்டில் நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதுகைகளை பிரதிஷ்டை செய்தால் எங்களுக்கு அது மிக சந்தோஷமான விஷயம். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் முழு அருள் உங்களுக்கு கண்டிப்பாக வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பம் இல்லாமல் மரத்தின் ஒரு இலை கூட அசையாது. எங்கள் குடும்பத்திற்கு மக்களிடமிருந்து பெயரோ, புகழோ, பட்டமோ, மரியாதையோ தேவையில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதர் கண்ணுக்கு புலப்படாத வண்ணம் சிறு பிள்ளையாக எங்கள் வீட்டில் இருப்பதாக நம்புகிறோம்" என்று கூறினார் ஸ்வாமி, இவற்றைத்தான் என் தியானத்தில் கண்டேன்" என்று மாதவன் தெரிவித்தான்.

ஸ்ரீ பழனிச்சாமி "என் அருமை குழந்தைகளே, வேத பண்டிதர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாய்மாமன் பரம்பரையை சேர்ந்தவர். அவர்கள் குடும்பத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் கண்ணுக்கு புலப்படாமல் சிறுபிள்ளையாக இருப்பதாக நினைக்கின்றனர். எவர் ஒருவர் எந்த

ஜாதி, எந்த குலம், எந்த மதம், எந்த தேசம், எந்த வயதாக இருந்தாலும் ஸ்ரீ ஸ்ரீபாதரை வாத்சல்ய பக்தியுடன் (கடவுளை சிறு குழந்தையாக பாவித்து பக்தி செலுத்துதல்) தெய்வீக குழந்தையாக எண்ணினால் அவர்கள் வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாதர் சிறுவனாக கண்ணுக்கு புலப்படா வண்ணம் இருப்பார். இதை ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரே பீதிகாபுரத்தில் வெளிப்படையாக கூறியுள்ளார். ஸ்ரீசரணர் பீதிகாபுரத்தில் உள்ள தன் தாய்வழி தாத்தாவின் வீட்டில் பிறந்தார். ஸ்ரீவல்லபர் பீதிகாபுரத்தை விட்டு சென்றதும் அந்த குடும்பத்தில் உள்ளவர்கள் சில வருடங்களுக்கு பின்னர் வேறு கிராமத்தில் குடிபெயர்ந்தனர். மற்ற உறவினர்களும் வேறு ஊர்களுக்கு குடிபெயர்ந்தனர். பிற்காலத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் சக்திகள் அனைத்தையும் தீஸிலா நகரத்து முஸ்லிம் பக்கிரிக்கு மாற்றிவிட்டார். வங்காளத்தில் கடாதர் (ஸ்ரீ பரமஹம்ச ராமகிருஷ்ணரின் இயற்பெயர்) என்ற சிறந்த மனிதர் பிறந்தார். அவர் காளிகாம்பாளை (காளி) வணங்குபவர். அவர் மோக்ஷத்திற்காக வேண்டிக் கொண்டபோது ஜகத்ஜனனி ஒத்துக்கொள்ளவில்லை. அவரை மீண்டும் பிறக்க வேண்டும் என்றும் அவரையே நம்பி இருக்கும் பக்தர்களின் பாவ புண்ணியங்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவர் மீண்டும் பிறக்க மறுத்துவிட்டார். பிறகு தீஸிலா நகரத்து முஸ்லிம் பக்கிரியை சூக்ஷ்ம ரூபத்தில் அவளிடம் வருமாறு காளிகாம்பாள் அழைத்தாள். அந்த முஸ்லிம் பக்கிரியின் உடல் மூன்று நாட்களுக்கு உயிரற்று இருந்தது. அவர் தன் பக்தர்களிடம் "**நான் அல்லாவிடம் சென்றுவிட்டு மூன்று நாட்களில் வருகிறேன்**" என்று கூறினார்.

பிருஹத்ஸிலநகரத்தில் உள்ள வாசவி கன்யகாபரமேஸ்வரிதான் காளிகாம்பாள். கடாதரரின் பக்தர்களின் பாவ புண்ணியங்களை கவனிக்கும் பணி முஸ்லிம் பக்கிரியிடம் கொடுக்கப்பட்டது. ஜகத்ஜனனி தன்னுடைய அம்சத்தில் சிறிதளவை அவரிடம் கொடுத்தாள். ஸ்ரீ ஸ்ரீபாதரும் தன்னுடைய பகுதியை அவரிடம் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு தன் ஸ்தூல உடலுக்குள் வந்த முஸ்லிம் பக்கிரி மிகுந்த சக்தி வாய்ந்தவராக மாறினார். அவர் வாழ்ந்து வந்த மசூதியை அன்னை (மாயி) என்று அழைத்தார். தெய்வீக அன்னையின் அம்சம் அவருக்குள் நுழைந்ததுதான் அதற்கு காரணம். அதனால், தன் பக்தர்களிடம் தாய் அன்பை பொழிய தொடங்கினார்.

என் செல்வங்களே, நான் இப்போது விவரித்து கொண்டிருக்கும் அனைத்தும் வரும் நூற்றாண்டுகளில் நடைபெறும்.

தியானத்தில் கண்ட வேத பண்டிதருக்கு ஒரு வைசியன் நெருங்கிய நண்பராக இருந்தார். கௌபீனம் அணிந்திருந்த அந்த அவதூதரிடம் "ஸ்வாமி, எங்களுடைய உபசரணையை ஏற்று கொள்ள வேண்டும். நாங்கள் ஆர்ய வைசியர்கள். ஜகத்ஜனனி வாசவி கன்யகாம்பிகா எங்கள் ஜாதியை சேர்ந்தவள்தான். நீங்கள் தயவுசெய்து சமையலுக்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொண்டு நீங்களே சமைத்துக் கொள்ளுங்கள்" என்று அந்த வைசியன் வேண்டி கேட்டுக் கொண்டான். வேத பண்டிதரும் அந்த சந்நியாசியிடம் அந்த சிறந்த வைசியனின் வேண்டுகோளை

ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த அவதூதர் பிரமணத்துவத்தை மிகவும் கடைபிடிப்பவர். ஆதலால் வைசியரின் பிக்ஷயையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இந்த நிகழ்ச்சி ஸ்ரீவல்லபரையும் ஸ்ரீ வாசவி அன்னையையும் கோபமடையச் செய்தது. தான் பிராமணன் என்ற செருக்கை அவதூதரிடம் இருந்து போக்க அவரை தண்டிக்க எண்ணினர். அந்த அவதூதர் பீதிகாபுரத்தை அடைந்தார். புற வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் உடைய பீதிகாபுர பிராமண சமூகம் அவதூதருக்கு பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தாய்வழி தாத்தாவின் வீடு வேறொருவருக்குக் கை மாறி இருந்தது. அந்த வீட்டின் இப்போதய சொந்தக்காரரிடம் ஆலோசனை செய்த பின் ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்த அவ்வீட்டில் ஸ்ரீபாதுகைகள் பிரதிஷ்டை செய்ய முடிவு செய்யப்பட்டது. சாஸ்திர முறைகளை பின்பற்றி வெள்ளிப் பாதுகைகள் பதிக்கப்பட்டது. நள்ளிரவில் ஒரு திருடன் அந்த வீட்டினுள் நுழைந்து விட்டான். அந்த வீட்டு சொந்தக்காரர் அப்போது விழித்து கொண்டுதான் இருந்தார். வெள்ளிப் பாதுகைகள் பதிக்கப்பட்டிருந்த அறைக்குள் அந்த திருடன் நுழைந்தான். அப்போது அந்த வீட்டு சொந்தக்காரர், "எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பெரிய அவதாரம் என்ற நம்பிக்கை எல்லாம் இல்லை. எனக்கு இந்த அவதூதரிடம் கூட நம்பிக்கை இல்லை. நீ இந்த வெள்ளிப் பாதுகைகளை எடுத்துக் கொண்டு அதை விற்று கிடைக்கும் பணத்தில் பாதியை எனக்கு கொடுத்துவிடு" என்று கூறியவுடன் அந்த திருடன் 'சரி' என்று கூறினான்.

அடுத்தநாள் பாதுகைகள் காணவில்லை. அவதூதர் வருத்தம் அடைந்தார். இரண்டாவது முறையாக வெள்ளிப் பாதுகைகள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவற்றை வழிபடுவதற்கு பிரமாண்டமாக ஏற்பாடுகள் நடந்தது. அவதூதர் பாதுகைகள் பதிக்கப்பட்ட அறையிலேயே நள்ளிரவில் தங்கினார். அவர் தத்த ஸ்தோத்திரங்களை கூறிக்கொண்டிருந்தார். அவர் கண் முன்னரே அந்த பாதுகைகள் மேலே எழும்பி அவரின் தலையில் பலமாக அடித்து விட்டு பறந்து சென்று மறைந்துவிட்டது. ஸ்ரீசரணரின் குரல் கேட்டது "என்னால் என் உடலை மறைத்துக் கொள்ள முடியும் போது இந்த பாதுகைகளை மறைக்க முடியாதா? அந்த தேங்காய் தீஸிலா நகரத்திற்கு போய் சேர்ந்திருந்தால் என் மாமா தன் சத்தியத்தை நிறைவேற்றி இருப்பார். ஆனால் எனக்கு அதில் சம்மதம் இல்லை. நீ கொடுத்து அனுப்பிய தேங்காய் வழியிலேயே சாப்பிடப்பட்டு விட்டது. அதனால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்ற கிரந்தம் உன்னிடம் கிடைப்பதற்கு சாத்தியம் இல்லை. நான் யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ யோகியோ போகியோ யாராக இருந்தாலும் எனக்கு கவலை இல்லை. நான் ஒரு சக்கிலியர் (மாதிகா சாதி). தோலை உரித்து செருப்பு தைப்பதுதான் என் வேலை. உன் தோலை உரித்து செருப்பு தைத்தால் கூட எந்த பாவமும் வராது" என்று அந்த குரல் கர்ஜனை செய்தது. அவதூதர் நடுங்கிக் கொண்டிருந்தார். அடுத்தநாள் ஒரு பெரிய போராட்டம் ஏற்பட்டது. அவதூதரை யாரெல்லாம் கௌரவப்படுத்தினார்களோ அவர்களே அவரை ஏமாற்றுப் பேர்வழி என்று பழி கூறி அவர்தான் பணத்திற்காக வெள்ளி பாதுகைகளை திருடியதாக கூறினர். அவர் பூஜை அறையில் இருந்தபோதும் வெள்ளி பாதுகைகள் எப்படி

தொலைந்து போனது என்பதற்கான விளக்கத்தை கேட்டனர். பெருத்த அவமானத்துடன் அந்த சந்நியாசி பீதிகாபுரத்தை விட்டு சென்றார்" என்றார்.

இவை அனைத்தும் வருங்காலங்களில் நடக்கும் என்று ஸ்ரீ பழனிச்சாமி எங்களிடம் கூறினார். பின் பழனிச்சாமி "என் செல்வங்களே! ஸ்ரீ ஸ்ரீபாதரின் வரலாற்றில் நம்பமுடியாத பல திருவிளையாடல்கள் இருக்கின்றன. அவருடைய வரலாறை எவரேனும் சந்தேகப்பட்டாலோ விமர்சனம் செய்தாலோ அவர்கள் பிரம்ம ராக்ஷசர்களாக பிறப்பர். அவதூதர் சரிதாம்ருதத்தின் உண்மைத்தன்மையை சந்தேகப்பட்டதால் அவரின் நேர்மையின் மீது பீதிகாபுர மக்கள் சந்தேகப்படுமாறு ஸ்ரீவல்லபர் செய்தார். இதுதான் அவரின் திருவிளையாடல்" என்று கூறினார்.

மாதவன் தொடர்ந்தான். **"ஸ்வாமி நான் பீதிகாபுரத்திற்கு சூக்ஷ்ம ரூபத்தில் சென்ற போது நடந்தவைகளை கூறட்டுமா?"** என்று கேட்டவுடன் ஸ்ரீ பழனிச்சாமி சம்மதித்தார். "நான் பீதிகாபுரத்தில் உள்ள ஒரு வீட்டிற்கு சென்றேன். அங்கு ஒரு இடத்தில் என்னுடைய அனைத்து சக்திகளும் கண்ணுக்கு புலப்படாமல் இருந்த இரண்டு தெய்வீக பாதுகைகளிடம் ஈர்க்கப்பட்டது போல் உணர்ந்தேன்" என்று கூறினான்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பிறந்த இடத்தில் பாதுகைகள் பிரதிஷ்டையும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ தத்தாத்ரேயர் மற்றும் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் சிலை பிரதிஷ்டையும்

ஸ்ரீ பழனிச்சாமி தொடர்ந்தார். "மாதவா நீ சென்றது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தாய்வழித் தாத்தாவின் வீடு, அவர் அங்குதான் பிறந்தார். அது உன் அனைத்து சக்திகளையும் ஈர்த்துவிட்டது. அந்த பாதுகைகளுக்கு கீழ் உள்ள பாதாளத்தில் நூற்றுக்கணக்கான வருடங்களாக பல துறவிகள் தவம் செய்து வருகின்றனர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதுகைகள் அவர் பிறந்த இடத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்படும். பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்பட்ட சில வருடங்களில் 'ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம்' எந்தவித முயற்சியும் இல்லாமல் வெளிச்சத்திற்கு வரும். நீ தியானம் செய்த இடத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ தத்தாத்ரேயர் மற்றும் அவரின் அடுத்த அவதாரமான ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஆகியோரின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படும். அதற்கு பிறகு அந்த இடத்தில் பல தெய்வீக திருவிளையாடல்கள் நடைபெறும்" என்று கூறிவிட்டு மௌனமானார் ஸ்ரீ பழனிச்சாமி.

பின்னர் அவர் எங்கள் குகைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த இளைஞனின் உடலை தோண்டி எடுக்க சொன்னார். அந்த உடலை வெளியே எடுத்தவுடன் பிரணவ மந்திரத்தை (ஓம்) ஜபிக்க தொடங்கினார். வ்யாக்ரீஸ்வர சர்மா 'ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே' என்று சத்தமாக கர்ஜனை செய்து கொண்டு அங்கு வந்தார். ஸ்ரீ பழனிச்சாமி அந்த இளைஞனின் உடலுக்குள் புகுந்து கொண்டார். புலி வடிவத்தில் இருந்த வ்யாக்ரீஸ்வர சர்மா வயதாகி சிதைந்திருந்த ஸ்ரீ பழனிச்சாமியின் உடலை எடுத்துக் கொண்டு ஆற்றில் வீசச் சென்றார்.

*புது உடலுக்குள் நுழைந்த ஸ்ரீ பழனிச்சாமி "இந்த இடத்தைவிட்டு உடனடியாக செல்லுங்கள். என் அருமை மாதவனே, நீ விசித்ராபுரத்திற்கு செல். சூக்ஷ்ம ரூபத்துடன் நீ பீதிகாபுரத்தில் உள்ள பக்திமான்களை பார்த்து விட்டாய். இந்த ஜன்மத்துக்கு உனக்கு இது போதும். என் அருமை சங்கரா, நீ திருப்பதி மகா க்ஷேத்திரத்திற்கு செல். மாதவா!! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அருள் உனக்கு கிடைக்கட்டும்" என்று எங்களுக்கு ஆணையிட்டார்.*

*பின்னர் மாதவன் விசித்ராபுரத்தை நோக்கியும் நான் திருப்பதியை நோக்கியும் சென்றோம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் லீலைகளுக்கு எல்லைதான் ஏது?*

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 5

## திருப்பதிக்கு வருதலும் காணிப்பாக்கத்தில் ஸ்ரீ திருமலதாசை சந்தித்தலும்

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால் சனியின் பிடியிலிருந்து விடுபடுதல்

*என்னுடைய பயண திட்டத்தின்படி திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தை அடைந்தேன். நான் விவரிக்க முடியாத அமைதியற்ற நிலையில் இருப்பது போல் உணர்ந்தேன். திருமலையில் உள்ள குளத்தில் நீராடினேன். ஸ்ரீ வெங்கடேஸ்வரை தரிசனம் செய்துவிட்டு கோவில் வளாகத்திலேயே தியானத்தில் ஆழ்ந்தேன். தியானத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரரை பெண்ணாக பார்த்தேன். சில நொடிகளில் அந்த உருவம் பாலா திரிபுர சுந்தரியாக தோன்றி பரமேஸ்வரரின் உருவமாக மாறியது. பிறகு அந்த உருவம் மகாவிஷ்ணுவாக மாறியது. சிறிது நேர தியானத்திற்குப் பின் அந்த உருவம் அழகு பொருந்திய 16 வயது யோகியாக தோன்றியது. அந்தக் குழந்தைத் துறவியின் கண்கள் முழுவதும் அமிழ்தத்தால் நிறைந்திருந்தது. ஆயிரம் அன்னையர்களின் பாசமுள்ள அன்பு அவர் இரு கண்களிலிருந்தும் வெளிப்பட்டது. அச்சமயத்தில் அசிங்கமான கருப்பு உருவம் ஒன்று அவரிடம் சென்று 'ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா, நீங்கள்தான் இந்த பிரபஞ்சத்தின் தலைவன். இன்றிலிருந்து உங்கள் பக்தன் சங்கர் பட்டுக்கு ஏழரை சனி தொடங்குகிறது. நான் அனைத்து விதமான சங்கடங்களையும் அவருக்கு உருவாக்குவேன். நான் கடவுளின் ஆணைக்காக காத்திருக்கிறேன்' என்று கூறியது. இரக்க குணமுடையவரான கடவுள் '*__சனீஸ்வரா நீதான் விதியின் கர்த்தா. நீ மக்களின் செயல்களுக்கான விளைவுகளை அனுபவிக்க செய்து அவர்களை கர்மவினைகளில் இருந்து விடுவிக்கிறாய். நீ உன் கடமையை செய். நான் 'ஆச்ரித பக்தஜன' என்று உறுதி அளித்திருப்பதால் நான் சங்கர் பட்டை நீ கொடுக்கும் சங்கடங்களிலிருந்து விடுவித்து எப்படி காப்பாற்றுகிறேன் என்று பார்__*' என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கும் சனீஸ்வரனுக்கும் இடையே நடந்த இந்த உரையாடலுக்கு பின் என் தியானத்திலிருந்து அவர்கள் மறைந்தனர். அதற்கு பின் கடவுளின் உருவச் சிலையின் மீது எவ்வளவு தியானம் செய்ய முயற்சி செய்தும் முடியவில்லை. எனக்குக் கடினமான நேரம் வரப்போகிறது என்பதையும் ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை சங்கடங்களிலிருந்து மீட்டெடுப்பார் என்பதையும் புரிந்து கொண்டேன். நான் திருமலையிலிருந்து திருப்பதிக்கு கீழே இறங்கி வந்தேன்.*

*நான் திருப்பதி வீதிகளில் அலைந்து கொண்டிருந்தேன். என்னுடைய மனது அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு நாவிதன் (barber) என்னை வலுக்கட்டாயமாக நிறுத்தி 'நீ 20 வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு காணாமல் போன சுப்பையா தானே? உன் பெற்றோர்கள் கவலையுடன் இருக்கின்றனர். உன் மனைவி பருவம்*

அடைந்துவிட்டாள். அதனால் வீட்டுக்கு வந்து அவளை ஏற்றுக்கொண்டு பிள்ளைகளை பெற்றுக்கொண்டு சந்தோஷமாக வாழ்' என்று அவன் இடி முழங்கியது போல் அதிகாரமாக கூறினான். பிறகு நான் 'ஐயா, நான் கர்நாடகத்தை சேர்ந்த பிராமணன் பெயர் சங்கர் பட். நான் புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசித்து கொண்டிருக்கும் ஒரு யாத்ரீகன். நான் ஒரு தத்த பக்தன். ஸ்ரீ தத்தர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளதை கேள்விப்பட்டு குருகட்டாவிற்கு போய்க்கொண்டி ருக்கிறேன். காயத்திரி மீது சத்தியமாக நான் பிரம்மச்சாரி. நீங்கள் நினைப்பது போல் நான் நாவிதன் சுப்பையா இல்லை' என்று விளக்கினேன்.

அவன் என் வார்த்தைகளை கவனிக்கவே இல்லை. அங்கு கூட்டம் கூடியது. என்னை அனைவரும் வாய்க்கு வந்தபடி ஏசினர். அவர்கள் என்னை சுப்பையாவின் வீட்டிற்கு கொண்டு சென்றனர். சுப்பையாவின் பெற்றோர்கள் என்னை மகனாகக் கருதி பல்வேறு விதமாக கெஞ்சினர். அவர்கள் நல் நடத்தை பற்றியும்,அவர்களைத் தனியாக விட்டு செல்லக்கூடாது என்றும் பருவமடைந்த மனைவியை கைவிடுவது கொடுமையானது என்றும் கூறினார்கள். அவர்களில் ஒருவன் '**சுப்பையா மிகவும் அழுக்காகி தாடி மீசையுடன் இருக்கிறான். அவனுக்கு சவரம் செய்தால் பழைய பொலிவை பெறுவான்**' என்று கூறினான். நான் எவ்வளவு ஆட்சேபித்தும் அவர்கள் என்னை சட்டை செய்யவே இல்லை. வலுக்கட்டாயமாக என் தாடி மீசையை நீக்கி என் தலைக்கு மொட்டை அடித்தனர். என் பூணூலையும் நீக்கினர். எனக்கு வைத்தியம் செய்ய அவர்களுக்கு தெரிந்த ஒரு மந்திரவாதியை அழைத்தனர். அவன் வினோதமான ஆடைகள் அணிந்திருந்தான். அவனுடைய பயங்கரமான பார்வை என் நெஞ்சை துளைத்து வலி உண்டாக்கியது. அவர்கள் என் கைகால்களை கட்டி கூர்மையான கத்தியை கொண்டு என் தலையை புண்ணாக்கினர். காயத்தின் மீது எலுமிச்சை சாறையும் மற்ற பழச்சாறுகளையும் தடவினர். நான் தாங்கமுடியாத வலியில் துடித்தேன். சுப்பையா வீட்டை விட்டு வெளியே சென்றதும் அவனை பிராமணப் பேய் பிடித்துவிட்டது என்றும் அதனால்தான் பூணூல் அணிந்து கொண்டு மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருக்கிறான் என்று முடிவு செய்தனர்.

திருப்பதியில் உள்ள பிராமண சமூகமும் எதுவும் பேசாமல் இருந்தனர். அவர்களும் இங்கு வந்துள்ள யாத்ரீகன் சுப்பையாதான் என்றும் அவனுக்குள் பிராமணப் பேய் புகுந்துள்ளதாக எண்ணினர். என்னை அங்குள்ள மூத்த பிராமணர்களிடம் அழைத்து சென்ற போது நான் கர்நாடகத்தை சேர்ந்த ஸ்மார்த்த பிராமணன் என்றும் பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவன் என்றும் கூறினேன். எனக்கு நமகம் சமகம் போன்ற மந்திரங்கள் தெரியும் என்றும் நான் தினமும் சந்தியாவந்தனம் செய்யும் பழக்கம் உடையவன் என்றும் கூறினேன். அந்த மூத்த வயதுடைய பிராமணர்கள் என்னை நம்பவில்லை. எனக்கு கன்னட பிராமண பேய் பிடித்துள்ளதாகவும் சரியான வைத்திய முறைகளை கொண்டு என்னை சரி செய்ய முடியும் என்றும் கூறினர்.

காயத்தின் வலி தாங்க முடியாமல் நான் மயங்கி விழுந்துவிட்டேன். என் புலம்பல்கள் அழுகையாக மாறி நட்டநடு வனாந்தரத்தில் மாட்டிக் கொண்டவன் போல ஆனேன். நான் சுய நினைவுக்கு திரும்பியவுடன் என்னைப் போலவே கருப்பு ஒளியுடன் இருந்த அசிங்கமான உருவம் ஒன்று எனக்கு எதிரில் அமர்ந்திருந்தது. என்னிடம் எதுவும் பேசாமல் அது என்னுள் ஐக்கியமாகி ஒன்றர கலந்து விட்டது. இது சனியின் தாக்கத்தால்தான் நடந்தது. இந்த ஏழரை வருடங்களில் எல்லாம் தலைகீழாக மாறப்போகிறது. இது மிகவும் கடினமான ஒரு காலமாக இருக்கப் போகிறது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரால் மட்டுமே என்னை காப்பாற்ற முடியும்.

அந்த வேதனையான சூழ்நிலையிலும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை மனதிற்குள் ஐபித்து கொண்டிருந்தேன். ஸ்ரீசரணரின் நாமத்தை ஜெபிக்க ஜெபிக்க வலி குறையத் தொடங்கியது. அந்த மந்திரவாதி ஆடுகளையும் கோழிகளையும் பலியிட்டு வினோதமான சடங்குகளை மேற்கொண்டான். எனக்கு வரையறுக்கப்பட்ட உணவுகள் மட்டுமே கொடுக்கப்பட்டன. எனக்கு பிராமணப் பேய் பிடித்துள்ளதால் சைவ உணவை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று மந்திரவாதி முடிவு செய்தான். எனக்கு அசைவ உணவை கொடுத்து வலுக்கட்டாயமாக சாப்பிடச் சொல்லி விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன், நல்லவேளையாக ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளால் சைவ உணவு மட்டுமே கொடுக்கப்பட்டது. இது எனக்கு கொஞ்சம் ஆறுதல் அளித்தது. மூன்று நாட்களுக்கு நரக வேதனையை அனுபவித்தேன். அந்த நிலையிலும் நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை நினைவூட்டிக்கொள்வதை நிறுத்தாத காரணத்தால், நான்காவது நாளில் இருந்து வலி தணியத்தொடங்கியது. என் உடலில் வழக்கத்திற்கு மாறான சோதனைகள் செய்யப்பட்டது. அந்த சூனியக்கார மருத்துவன் எனக்கு சவுக்கடிகள் கொடுத்தான். வலியில் அழுது துடித்து கொண்டு "**ஸ்ரீவல்லபா!! சரணம்!! சரணம்!!**" என்று கதறினேன். ஸ்ரீ தத்தரின் மீது மாறா பக்தி உடைய பக்தர்களை நரக வேதனைதான் என்ன செய்ய முடியும்?

அந்த நேரத்தில் ஒரு அதிசயம் நடந்தது. சவுக்கடி என் உடலின் மீது விழுந்தும் என்னால் கொஞ்சம் கூட வலியை உணர முடியவில்லை. மாறாக சூனியக்கார மருத்துவன் வலியில் துடித்தான். என்னை சவுக்கால் அடித்த போது தனக்கு எப்படி வலி ஏற்பட்டது என்பது அவனுக்கு புரியவில்லை. என்னை வினோதமாக பார்த்தான். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடலை கவனித்து சிரித்தேன். எனக்கு உப்பில்லா பத்திய சாப்பாடு கொடுக்கப்பட்டாலும் அது மிகவும் சுவையாக இருந்தது. நான் மன நிறைவுடன் அந்த உணவை உண்டேன். அதை ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிரசாதமாக எண்ணி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அந்த மந்திரவாதி தனக்கு பிடித்த ஆடுகளையும் கோழிகளையும் உண்ட போதும் அவை அவனுக்கு நஞ்சாக மாறியது. அவனுடைய உடல்நிலை சீர் கெட்டு போனது. அவன் என்னை துன்புறுத்துவதை நிறுத்தி விட்டு மந்திரங்களிலும் சடங்குகளிலும் நேரத்தை செலவழித்தான். ஐந்தாவது நாள் வைத்தியத்தை எனக்கு தொடங்கியவுடன் அவன் வீடு எரிந்து போனது. அன்று அவன் வீட்டில் எந்த நெருப்பும் எரியூட்டப்படவில்லை ஆனாலும் திடீரென அனைவர் முன்னிலையிலும் தீ பரவத்தொடங்கி வீடு எரிந்து சாம்பலானது. ஆறாவது

நாள் அந்த மந்திரவாதி வெளிறிய முகத்துடன் சுப்பையாவின் வீட்டிற்கு வந்து "நான் சுப்பையாவிற்கு சிகிச்சையை தொடங்கியதால் அவன் உடலில் இருக்கும் பிராமண பேய் சூனியம் செய்து என் வீட்டை எரித்துவிட்டது" என்றான். மேலும் வேதாளம் போன்ற தீய சக்திகளை விரட்ட பல சடங்குகள் செய்ய வேண்டும் என்றும் அதற்கு அதிக அளவில் பணம் தேவைப்படுகிறது என்று கூறினான். இந்த வைத்தியங்கள் எந்த பயனையும் அளிக்கப்போவதில்லை என்று எனக்கு தெரியும். அந்த சூனியக்கார மருத்துவன் பணத்தின் மீது பேராசை கொண்டு இவ்வாறு பல வித பரிந்துரைகள் செய்து கொண்டு இருக்கிறான். விதியின் கொடுமைகளுக்கு அடிபணிவதை விட சுப்பையாவின் மனைவியை ஏற்றுக் கொள்வதில் எந்த வித துர்பாக்கியமோ துரோகமோ இல்லை என்று என் மனதில் தோன்றியது. என் விதி ஏன் இப்படி கருணை இல்லாமல் என்னோடு விளையாடுகிறது என்பதுதான் புரியவில்லை. என் இதயத்தை ரம்பத்தால் பிளப்பது போல் உணர்ந்தேன். நான் சுப்பையாவின் பெற்றர்களிடம் "என் அருமை பெற்றோர்களே,இந்த மந்திரவாதியின் சூழ்ச்சியில் விழுந்து உங்கள் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விற்றுவிடாதீர்கள். நான் உங்களை என் தாய் தந்தையாகத்தான் பாவிக்கிறேன்" என்று கூறி அவர்களை அந்த மந்திரவாதியிடமிருந்து விடுவித்தேன். சுப்பையாவின் பெற்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் கண்களில் மின்னிய சந்தோஷத்தை கண்டு என் கண்களும் கலங்கின. மற்றவர்கள் மனைவியை தாயாகக் கருத வேண்டும் அதனால் நான் நீதி மீறாமல் இருக்க என்னை காப்பற்ற வேண்டும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் மனதில் தாழ்மையுடன் வேண்டிக் கொண்டேன். என்னை வரப்போகும் ஆபத்துக்களிலிருந்து காக்க வேண்டும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன்.

ஏழாவது நாள் எனக்கு வைத்தியம் தொடங்கியது. என்னை கவனித்துக்கொண்டிருந்த சுப்பையாவின் மனைவியிடம் **"நீ என்னை பற்றி என்ன நினைக்கிறாய்? நான் சுப்பையா என்று நம்புகிறாயா?"** என்று கேட்டேன். அதற்கு அவள் "எனக்கு இரண்டு வயது இருக்கும் போது திருமணம் நடைபெற்றது. எனக்கு இப்போது 22 வயதாகிறது. நீங்கள் என் கணவரா இல்லையா என்பது கடவுளைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. பருவ வயதில் இருக்கும் எந்த ஆணாலும் தன் மனைவியை கண்டால் நிலையுடன் இருக்க முடியாது. உங்களுக்கு இவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்ட போதும் என்னை நீங்கள் மனைவியாகக் கருதவில்லை. என்னை தொடக்கூட இல்லை. நல்ல பழக்கவழக்கம் உடைய ஒருவரால் மட்டுமே இப்படி நடந்துகொள்ள முடியும். எனக்கு உங்கள் மேல் எந்த அபிப்பிராயமும் இல்லை. எனக்கு குடும்ப பாரம்பரியத்தை கடைப்பிடித்து ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். நீங்கள் என் கணவர் என்றால் உங்கள் பணிவான வேலைக்காரியை விட்டு சென்று விடாதீர்கள். அதுமட்டுமில்லாமல் என் கணவர் 20 வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு சென்றுவிட்டார். எனக்கு எதுவும் தெரியாத வயதில் திருமணம் நடைபெற்றது. நீங்கள் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளலாம். நான் உங்கள் பாதையில் பயணிக்கிறேன். நீங்கள் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் யார்? அவர் ஒரு சத்குரு என்றால் இந்த சிக்கலான பிரச்னைக்கு நெறிகள் மீறாத தீர்வை அளிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்" என்று கூறினாள்.

அவளுடைய விவாதம் எனக்கு சரி என்று தோன்றியது. பிறகு நான் "**ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உண்மையில் ஸ்ரீ தத்தர்தான். அவர் இந்த கலியுகத்தில் அவதரித்துள்ளார். அவர் இப்போது குருவபுரத்தில் உள்ளார். நாம் அவரை எப்படி எண்ணுகிறோமோ அதே போல் நடந்துகொள்வார். நாம் அவரை சத்குருவாக எண்ணினால் சத்குரு அனுபவங்களை நமக்கு அளிப்பார். நாம் பரமாத்மாவாக எண்ணினால் தன்னை பரமாத்மா என்று நிரூபிப்பார். நல்லது நீயும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை ஜபம் செய். உன்னுடைய கடமைகள் தெரிய வரும். அனைவரும் ஒத்துக்கொள்ளும் படியான தீர்வு கிடைக்கும்**" என்று கூறினேன்.

அன்று மாலஜங்கத்தை (சைவத்தை கடைபிடிப்பவர்) சேர்ந்த ஒருவர் அங்கு வந்தார். அவரிடம் ஓலைச்சுவடி கட்டுகள் இருந்தன. குறுகிய நேரத்தில் அங்கு வாழும் மக்களின் மரியாதைக்குரிய மனிதர் ஆனார். அவரைச் சந்தித்தவர்களின் கடந்த,நிகழ் மற்றும் எதிர்காலங்களை கூறிக்கொண்டிருந்தார். அவர் இந்த ஓலைச்சுவடிகளை நாடிக் கிரந்தங்கள் என்றும், இதை ரமல விஞ்ஞானம் என்றும் கூறினார். இந்த கட்டுகளில் உள்ள கணிப்புகள் அனைத்தும் முன்பு தெரிவிக்கப்பட்டது போல் அப்படியே நடக்கும் என்றார். அவர் சுப்பையாவின் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் வீட்டுக்கு வந்தார். அவர் என்னிடம் சில சோழிகளை கொடுத்து அவற்றை தரையில் போடச் சொன்னார். அவர் சில கணக்குகளை போட்டு விட்டு அந்த பனை ஓலை கட்டில் இருந்து ஒன்றை எடுத்து வாசித்தார். 'கேள்வி கேட்பவர் ஒரு கன்னட பிராமணர், பெயர் சங்கர் பட். அவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் வாழ்க்கை வரலாறை எழுதுவார். முற்பிறவியில் அவரும் இன்னொருவரும் கண்டுகூர் நகரத்திற்கு அருகில் உள்ள மொக்லிச்சரல கிராமத்தில் பிறந்திருந்தனர். அவர்கள் இருவரும் சூதாட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். அந்த கிராமத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சுயம்பு தத்தர் கோவில் இருக்கிறது. இவர் அந்த கோவில் அர்ச்சகரின் சகோதரனாக பிறந்திருந்தார். சகோதரன் இல்லாத சமயத்தில் இவர் கோவில் வழிபாடுகளையும் சடங்குகளையும் மேற்கொள்வார். இவரும் நண்பனும் கோவில் வளாகத்திலேயே சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இது மிகவும் ஆட்சேபிக்கத்தக்க விஷயம். ஒரு நாள் விசித்திரமான நிபந்தனைகளுடன் இருவரும் விளையாடினர். அவர் நண்பர் ஜெயித்தால் இவர் ஒப்பந்தம் செய்த பணத்தை கொடுக்கவேண்டும். இதே இவர் ஜெயித்தால் நண்பனின் மனைவியை இவரிடம் ஒப்படைக்க வேண்டும். இவை அனைத்திற்கும் தத்தர்தான் சாட்சி. இந்த ஒப்பந்தத்திற்கு இருவரும் மனதார சம்மதித்து விளையாட தொடங்கினர்.

ஸ்ரீ தத்தர் முன்னிலையில் நடந்த இந்த கண்டிக்கத்தக்க நடத்தையை ஸ்ரீ தத்தர் கவனித்துக் கொண்டிருந்தார். சங்கர் பட் சூதாட்டத்தில் வென்றார். நண்பன் தன் மனைவியை சங்கர் பட்டிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டார். இந்த சண்டை பெரியவர்களிடம் சென்றது. அவர்கள் சாதியை சேர்ந்த பெரியவர்கள் கூடினர். ஸ்ரீ

தத்தரின் முன்னிலையில் இப்படிப்பட்ட அநீதி நடந்தது மன்னிக்க முடியாத குற்றம் என்று தீர்ப்பளித்தனர். இன்னொருவரின் மனைவியை கவர்ந்து அவளை சீர்கெட்ட முறையில் அடைய நினைத்ததால் சங்கர் பட்டின் தலையில் சூடான எண்ணையை ஊற்றவேண்டும் என்று தீர்ப்பளித்தனர். மேலும் மனைவியை பணயம் வைத்த நண்பனின் பிறப்புறுப்பை அறுத்து அவனை ஆண்மையற்றவனாக ஆக்கியும், தண்டனையை நிறைவேற்றியவுடன் இருவரையும் கிராமத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று தீர்ப்பளித்தனர்.

தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. சங்கர் பட் ஸ்ரீ தத்தருக்கு சிறிது காலம் சேவை புரிந்திருந்தமையால் கடவுள் பக்தி உள்ளவராக பிறந்தார். அவருடைய நண்பர் திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில் உள்ள நாவிதனின் வீட்டில் சுப்பையா என்ற பெயரில் பிறந்தான். திருமணம் முடிந்தவுடன் மனநலம் பாதிக்கப்பட்டு பைத்தியமாகி ஓடிவிட்டான். சுப்பையாவின் மனைவி அப்பாவி. அவள் எந்த தவறும் செய்யவில்லை ஆதலால் இவர்களின் திருமண பந்தத்தின் பலனால் சுப்பையாவின் பைத்தியம் குறைந்து இந்த ரமலா வாசிக்கப்பட்ட அடுத்தநாள் சுப்பையா இந்த இடத்திற்கு வருவான். அந்த நாளில் சங்கர் பட் விடுவிக்கப்படுவார்" என்று கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால் சங்கர் பட்டுக்கு ஏழரை வருடங்கள் அனுபவிக்க வேண்டிய சனியின் துன்பங்கள் அனைத்தும் ஏழரை நாட்களில் கழிந்துவிட்டது. கடவுளின் பெயரில் பொய் சத்தியம் செய்தாலோ அநீதியான பிரகடனங்கள் செய்தாலோ ஸ்ரீ தத்தரால் கடுமையாக தண்டிக்கப்படுவர். சுப்பையாவின் உறுதியற்ற மனநிலையை குணப்படுத்த சங்கர் பட்டின் நல்வினைகளில் சிறிதளவை சுப்பையாவின் கணக்கிற்கு சித்ரகுப்தன் மாற்றிவிட்டான். கர்மாவின் பலன்கள் மிகவும் சூக்ஷ்மமாகத்தான் வேலை செய்யும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே நல்ல வினைகளை மட்டுமே செய்து தீய வினைகளை தவிர்க்கவேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் மறைந்து சில நூற்றாண்டுகளுக்கு பிறகு அவரின் ஜாதகம் திரிபுரா மாகாணத்தில் வசிக்கும் ஜைன மதத்தை பின்பற்றும் அக்ஷய குமார் மூலமாக பீதிகாபுரம் வந்தடையும். அதற்கு முன்பாக ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகளை விளக்கும் 'ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம்' வெளிச்சத்திற்கு வரும்" என்று கூறி முடித்தார்.

ஸ்ரீவல்லபரின் கருணையை எப்படி விவரிப்பது? அடுத்த நாள் சுப்பையா அவன் வீட்டிற்கு வந்தான். அவனுடைய மனநிலை முற்றிலும் குணமாகியிருந்தது. நான் சுப்பையாவின் மனைவியை சகோதரியாக பாவித்தேன். நான் சுப்பையாவின் பெற்றோர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சித்தூர் பகுதியில் உள்ள காணிப்பாக்கம் கிராமத்திற்கு வந்து சேர்ந்தேன்.

காணிப்பாக்கம் சித்தூருக்கு அருகில் இருக்கும் ஒரு சிறிய கிராமம். அங்கு ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோவில், ஸ்ரீ மணிகண்ட ஸ்வாமி கோவில், ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில் ஆகியவை இருக்கின்றன. நான் வரசித்தி விநாயகரை தரிசனம் செய்த பின் கோவிலை விட்டு வெளியே வந்தேன். அங்கு ஒரு உயரமான நாய் நின்று

கொண்டிருந்தது. நான் பயந்து வரசித்தி விநாயகர் கோவிலுக்குள் சென்று விட்டேன். கடவுளை சிறிது நேரம் தியானம் செய்த பின் வெளியே வந்தேன். அந்த நாயுடன் அதே போல் இன்னொரு நாய் சேர்ந்து கொண்டு நின்று கொண்டிருந்தது. நான் கண்டிப்பாக அந்த நாய்களால் கடிபட்டு விடுவேனோ என்று பயமாக இருந்தது. நான் மீண்டும் வரசித்தி விநாயகரின் கோவிலுக்குள் சென்றேன். அந்த ஆலயத்தின் அர்ச்சகர் என் வினோதமான நடவடிக்கையை கவனித்து "ஐயா, நீங்கள் ஏன் கோவிலுக்குள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறீர்கள்" என்று கேட்டார். நான் என் பயத்தை அவரிடம் கூறினேன். அதற்கு அவர் "அவை யாரையும் தேவையில்லாமல் தொந்தரவு செய்யாது. அவை ஒரு சலவை தொழிலாளியின் நாய்கள். அவர் ஒரு தத்த பக்தன். அந்த சலவைத் தொழிலாளி ஶ்ரீ தத்தர் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபராக அவதரித்துள்ளதாக திட்டவட்டமாக கூறுகிறார். அந்த சலவை தொழிலாளி இந்த கோவிலுக்குள் நுழைவதற்கு எந்த தடையும் இல்லை ஆயினும் அவர் கோவிலுக்குள் வருவதில்லை. அவர் நாய்களைத்தான் அனுப்புவார். நான் ஸ்வாமியின் பிரசாதத்தை பொட்டலமாக கட்டி அந்த நாய்களிடம் கொடுத்து அனுப்புவேன். அவை அந்த பொட்டலத்தை எடுத்துக் கொண்டு போய் தன் எஜமானனிடம் கொடுத்துவிடும். நீங்கள் இரண்டு நாய்களைப் பார்த்ததாகத் தானே கூறினீர்கள். நான் நான்கு நாய்களும் ஒன்றாக சேர்ந்து வந்தால்தான் பிரசாதத்தை கொடுப்பேன். மற்ற இரண்டு நாய்களும் வந்துவிட்டனவா என்று பார்ப்போம்" என்று கூறிவிட்டு வெளியே வந்த போது நான்கு நாய்களும் வந்திருந்தன. நான்கு நாய்களும் என்னை நாலாப்பக்கமும் சூழ்ந்துகொண்டன. "அந்த நாய்களின் விருப்பத்திற்கு ஏற்ப அந்த சலவைத் தொழிலாளியின் வீட்டுக்கு செல்லுங்கள். இது உங்களுக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்" என்று அர்ச்சகர் கூறினார்.

என் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபரின் வழிகாட்டுதலில்தான் நடைபெறுகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். சுப்பையாவின் வீட்டில் நடந்த சம்பவங்களின் மூலம் ஒருவர் ஜாதி மற்றும் மத வேறுபாடுகள் பார்க்ககூடாது என்று எண்ணினேன். இந்த ஜென்மத்தில் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர் அடுத்த ஜென்மத்தில் பிராமணனாக பிறக்கக்கூடும். அதே இந்த ஜென்மத்தில் பிராமணனாக பிறந்தவர் அடுத்த ஜென்மத்தில் தாழ்ந்த ஜாதியில் பிறக்கக்கூடும். ஒரு உயிரினம் செய்யும் பாவ புண்ணியங்களின் குவியல்களை மூட்டைகளாக சுமந்துகொண்டு விதி என்னும் நீரோடையில் அடுத்த பிறவிகளுக்கு கடந்து செல்கிறது என்பதை கற்றுக் கொண்டேன்.


## சங்கர் பட்டிற்கும் திருமலதாசிற்கும் இடையே நடந்த உரையாடல்

அர்ச்சகர் அறிவுறுத்தியது போல நான் சலவை தொழிலாளியின் வீட்டிற்கு சென்றேன். அவருக்கு எழுபது வயது இருக்கும். அவர் குடிசையில் இருந்து வெளியே வந்து அன்புடன் என்னை கட்டிலில் அமர்த்தினார். நான் இந்த பிறவியில் பிராமணனாக பிறந்திருக்கிறேன் என்ற பெருமிதம் முற்றிலும் அழிந்துவிட்டது. ஶ்ரீ ஶ்ரீபாதரின் பக்தர்கள் எவராக இருப்பினும் உறவினர்கள் போல் தோன்றினர்.

திருமலதாஸ் என்று அழைக்கப்பட்ட அந்த சலவை தொழிலாளி எனக்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரசாதத்தை கொடுத்தார். நான் அதை ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பிரசாதமாக ஏற்றுக்கொண்டேன்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அயினவில்லி கணபதி வருதல்

திருமலதாஸ் பேசத்தொடங்கினார். "ஐயா இன்று நன்னாள். உங்களை காணும் பாக்கியம் பெற்றுள்ளேன். நான் மல்யாத்திரிபுரம் மற்றும் பீதிகாபுரத்தின் முக்கியமான நிகழ்வுகளை பற்றி உங்களிடம் தெரிவிக்க ஆவலாகக் காத்திருக்கிறேன். என் அருமை சங்கர் பட், உங்களுக்கு வரசித்தி விநாயகரின் பிரசாதம் கிடைத்தது; இன்றிலிருந்து ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சரிதாம்ருதத்தை எழுதத் தொடங்குங்கள். குருவபுரத்தில் உள்ள ஸ்ரீவல்லபரின் ஆசீர்வாதம் பெறுவீர்கள். நான் என் முந்தைய பிறவியில் ஒரு வேத பண்டிதனாக பிறந்திருந்திருந்தேன். நான் அப்போது மகா கஞ்சன். நான் சாகும் தருவாயில் இருந்த போது, புதிதாக பிறந்திருந்த கன்றுக்குட்டி ஒன்று பழைய கந்தல் துணி ஒன்றை மெல்வதைப் பார்த்தேன். இறக்கும் தருவாயில் என் கவனம் முழுவதும் அந்த துணியின் மீது இருந்ததால் இந்த பிறவியில் சலவை தொழிலாளியாக பிறந்திருக்கிறேன். ஒரு மனிதன் பிறவி முடியும் தருவாயில் கடைசி மூச்சு பிரியும் நேரத்தில் எந்த விருப்பத்தில் தன் கவனத்தை செலுத்துகிறானோ அடுத்த பிறவி அதை பொறுத்துதான் அமையும். என் பூர்வ ஜென்ம புண்ணியங்களினால் கர்த்தபுரி மாவட்டத்தில் உள்ள பலநாடு பகுதியில் உள்ள மல்யாத்திரிபுரத்தில் பிறந்தேன். சில காலங்களுக்கு பிறகு மல்யாத்திரிபுரம் மல்லாடி என்று மருவியது. அந்த கிராமத்தில் மல்லாடி என்ற குடும்பப்பெயருடன் கூடிய இரு குடும்பங்கள் இருந்தன. ஒரு குடும்பம் மல்லாடி பாப்பண்ண அவதானி என்கிற மகா பண்டிதருடைய குடும்பம். அவர் ஹரிதாஸ கோத்திரத்தை சேர்ந்தவர். மற்றொரு குடும்பம் மல்லாடி ஸ்ரீதர அவதானி என்கிற மகா பண்டிதருடைய குடும்பம். அவர் கௌசிக கோத்திரத்தை சேர்ந்தவர்.



ஸ்ரீதர அவதானியினுடைய சகோதரியான ராஜமாம்பாவை பாப்பண்ண அவதானி திருமணம் செய்து கொண்டார். மைத்துனர்கள் இருவரும் ஆழ்ந்து படித்த பண்டிதர்கள். அவர்கள் இருவரும் கோதாவரி பகுதியில் உள்ள அயினவில்லி கிராமத்திற்கு சொர்ண கணபதி மகா ஹோமத்திற்கு சென்றனர். வேதத்தில் கூறியுள்ளபடி கணபதி ஹோமத்தின் கடைசி ஆகுதியை தன் தும்பிக்கையால் பெற்றுக்கொண்டு தங்க நிறத்தில் காட்சி அளிக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் வாதிட்டனர். இந்த மகா யாகத்தைத் தலைமை ஏற்று நடத்திய இரண்டு பண்டிதர்களும் வேதங்களில் கூறியுள்ளது படி அனைத்து சடங்கு முறைகளையும் கடுமையாக கடைபிடித்து ஸ்ரீ மகாகணபதியை அவர்கள் கண்முன் தோன்ற வைப்பதாக சத்தியம் செய்தனர். யாகம் முடிவடையும் தருவாயில் கணபதி தங்கம் போல பிரகாசத்துடன் தோன்றி ஹோமத்தின் கடைசி ஆகுதியை தன் தும்பிக்கையால் ஏற்றுக் கொண்டார். மேலும் தான் விரைவில் கணேச சதுர்த்தி அன்று அனைத்துவிதமான ஆற்றல்கள் மற்றும் நற்குணங்களுடன் அவதரிக்க போவதாக அறிவித்தார். யக்ஞத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்தனர். அந்த கூட்டத்தில் மூன்று நாத்தீகர்கள் இருந்தனர். அவர்கள் இங்கு அனைவரையும் வசீகரிக்கும் வண்ணம் ஒரு மாயாஜால காட்சிகளை கண்டதாகவும் கணபதியை கடைசி ஆகுதியின் போது கண்டுபிடிக்க முடியவில்லை என்ற சர்ச்சையை கிளப்பினர். இது உண்மையெனில் கணபதி மீண்டும் நிரூபிக்க வேண்டும் என்று வாதிட்டனர்.

## காணிப்பாக்கம் விநாயகரின் சிறப்பு

ஹோம குண்டத்திலிருந்த சாம்பல் மனித உருவம் எடுத்து பிறகு மகா கணபதியாக மாறியது. அந்த மகா கணபதி உருவம் "முட்டாள்களே!! சிவன் திரிபுராசுரனை அழிக்கும் முன்பும், விஷ்ணு பலிச்சக்ரவர்தியை அடக்கிய போதும், ராவணன் சிவனிடமிருந்து ஆத்ம லிங்கத்தை எடுத்துச் செல்லும் போது அதை விஷ்ணு தடுப்பதற்கு முன்பும், பார்வதி தேவி மகிஷாசுரனை வதம் செய்வதற்கு முன்பும், ஆதிசேஷன் பூமியின் பாரத்தை சுமப்பதற்கு முன்பும், சித்தர்கள் மந்திர ஆற்றல்களை அடைவதற்கு முன்பும், மன்மதன் உலகை வெல்வதற்கு முன்பும், தேவர்கள் தங்கள் ஆசை நிறைவேறுவதற்கு முன்பும், என்னை வணங்கினர். நான் சக்திகளின் சுரங்கம். நான் எங்கும் நிறைந்திருப்பவன். தெய்வீக குணங்களும் பிசாசு குணங்களும் கலவை நான். எல்லா தடைகளையும் தோற்றுவிப்பவனும் முறியடிப்பவனும் நானே. ஸ்ரீ தத்தாத்ரேயர் யார் தெரியுமா? ஹரிஹர புத்திரனான தர்மசாஸ்தாதான். பிரம்மாவும் ருத்திரனும் ஒன்றாகி விஷ்ணுவிடம் ஐக்கியமான வடிவம்தான் ஸ்ரீ தத்தர். கணபதியும் ஷண்முகரும் தர்மசாஸ்தாவில் கலந்ததால் அவரும் தத்தாத்ரேய ரூபமே. ஸ்ரீ தத்தர் எப்போதும் மும்மூர்த்திகளின் உருவகம்தான் என்பதை தெரிந்து கொள். மஹாகணபதி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவத்தில் இருக்கிறார் என்பதை உணர்த்தும் வகையில் அவர் விநாயக சதுர்த்தி அன்று அவதரிப்பார். சுப்ரமணியரின் பண்புகள் அவரை ஞானாவதாரமாக உருவாக்கும் என்பதை அறிந்து கொள். தர்ம சாஸ்தாவின் அம்சம் அவரை தர்ம கர்மங்கள் மற்றும் சடங்குகளின் தொடக்கமாகவும்

தோற்றமாகவும் வெளிக்காட்டும். வரப்போகிற இந்த அவதாரம் பெற்றோர்களின் இணைப்பினால் உருவாகாது. ஒளியே மனித உருவம் எடுக்கும்.

நான் உங்களை சபிக்கிறேன். உண்மையின் உருவகத்தை கண்களால் பார்த்த போதும் உங்களில் ஒருவன் பொய் உரைத்தீர்கள். அவன் குருடனாக பிறப்பான். இன்னொருவன் உண்மையின் உருவகத்தை புகழ்ந்து பேசுவதற்கு பதில் ஏளனம் செய்ததால் அவன் ஊமையாக பிறப்பான். மூன்றாமவன் உண்மையான பக்தர்கள் கூறுவதை காது கொடுத்து கேட்காமல் செவிடனாக இருந்தமையால் அவன் செவிடனாக பிறப்பான். நீங்கள் மூவரும் சகோதரர்களாக பிறந்து என்னுடைய சுயம்பு உருவத்தை பார்த்த பிறகு உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள்" என்று கூறினார்.

"என் அன்புக்குரியவனே!! அம்மூவரும் காணிப்பாக்கத்தில் சகோதரர்களாக பிறந்தனர். மும்மூர்த்திகளையோ மும்மூர்த்திகளின் உருவகமான தத்தரையோ தவறாக பேசினால் கணக்கற்ற பேரிடர்கள் வந்து சேரும். இந்த சகோதரர்கள் ஒரு காணி(40,000 சதுர அடி) நிலத்தில் விவசாயம் செய்து வந்தனர். இந்த நிலத்தில் நீருக்கான கிணறு ஒன்று இருந்தது. அந்த கிணற்றிலிருந்து ஏற்றம் இறைத்து நீர் எடுப்பர். ஒரு வருடம் கடுமையான பஞ்சம் நிலவியது. நிலத்தடி நீர் குறைந்து விட்டது. ஒரு நாள் நீர் முழுவதுமாக வற்றியதால் அந்த சகோதரர்கள் அங்கிருந்த மணலை மண்வெட்டி கொண்டு வெளியேற்ற முயன்றனர். மண்வெட்டி நீருக்கடியில் இருந்த ஒரு பாறையின் மீது இடித்து ரத்தம் கசியத் தொடங்கியது. ஊமை அந்த ரத்தத்தை தொட்டவுடன் அவன் பேச தொடங்கினான். கிணற்றில் தண்ணீர் எழ தொடங்கியது. அந்த தண்ணீரை தொட்டவுடன் செவிடனுக்கு செவிட்டு தன்மை நீங்கியது. தண்ணீரில் உள்ள பாறையை தொட்டவுடன் மூன்றாமவனுக்கு பார்வை கிடைத்தது. அந்த பாறைதான் சுயம்பு விநாயகர் சிலை. மண்வெட்டி பாறை உருவத்தின் தலையில் தாக்கியதால் அங்கிருந்து ரத்தம் வெளியே வரத்தொடங்கியது.

அந்த வரசித்தி விநாயகரை பிரதிஷ்டை செய்ய சத்யருஷி பாப்பண்ண அவதானியும் அவரின் மைத்துனரான ஸ்ரீதர அவதானியும் அந்த கிராமத்திற்கு வந்தனர். வரசித்தி விநாயகர் அவர்களிடம் "நான் மகாபூமியில் இருந்து இந்த உலகத்திற்கு வந்துள்ளேன். நான் இந்த பூமியின் குணத்தில் அவதரித்துள்ளேன். இந்த இயல்பு நாளாவட்டத்தில் பல மாறுதல்கள் அடையும். ஏற்கனவே நீர், நெருப்பு, காற்று, சொர்க்கம் ஆகியவற்றின் குணத்தில் என் வருகை ஏற்பட்டுவிட்டது. அயனவில்லியில் நடைபெற்ற மகா யாகத்தின் சாம்பல்தான் இந்த உருவம் எடுத்துள்ளது. நீங்கள் பிற்காலத்தில் செய்யப்போகும் கடமைகளை பற்றி அறிவுறுத்துகிறேன். ஸ்ரீசைலத்தில் உள்ள காலத்தின் ஆற்றல்களின் திறன் குறைந்து வருகிறது (காலம் - இவ்வுலக செயல்பாடுகள் தெய்வீக சக்தியால் நேரத்தின் வரிசைப்படி வெளியாவது). அதனால் சூரியனிடமிருந்து சக்தியை இடம் பெயர்த்து அங்கு வைக்க வேண்டும். நீங்கள் ஸ்ரீசைலத்தில் சக்தி பரிமாற்றம் செய்யும் அதே நாளில் கோகரணம், காசி, பத்ரி மற்றும் கேதார்நாத்தில் அதே நேரத்தில் சக்தி

பரிமாற்றம் நடைபெறும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் நிகழ போவதற்கான காலம் கனிந்து வருகிறது. ஸ்ரீதரா நான் உன் குடும்பப் பெயரை ஸ்ரீபாதா என்று மாற்றுகிறேன். கௌசீக கோத்திரத்தை சேர்ந்த உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இனி ஸ்ரீபாதா என்ற குடும்ப பெயருடன் செழித்து விளங்குவர்" என்று கூறினார்.

திருமலதாஸ் என்கிற சலவைத் தொழிலாளி சங்கர் பட்டிடம் "என் அருமை சங்கரா, பாப்பண்ண அவதானியும்,ஸ்ரீதர அவதானியும் பீதிகாபுரத்திற்கு இடம் பெயர்ந்தனர். நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பல்வேறு பால்ய லீலைகளை நேரடியாக கண்டுள்ளேன். அவற்றை விவரமாக நாளை விவரிக்கிறேன். என் முதல் மனைவிக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் பெயர் ரவிதாஸ். அவன் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு தக்க பணிவிடைகளை செய்து கொண்டு குருவபுரத்தில் வசிக்கிறான். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைக்கு இணங்க காணிப்பாக்கத்தில் என் இரண்டாவது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். இங்கு நான் என் குலத்தொழிலை செய்து வாழ்ந்து வருகிறேன். நீ பீதிகாபுரத்தில் பல சிறந்த மனிதர்களை சந்திப்பாய். சிறந்த வைசியரான பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியை சந்திக்கும் போது பல முக்கியமான விஷயங்களை கற்று கொள்வாய். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர் பெயரை சிறிது மாற்றி வெங்கயப்ப சிரேஷ்டி என்று அழைப்பார். சிரேஷ்டியின் குடும்பத்தின் மீது ஸ்ரீ ஸ்ரீபாதரின் காக்கும் கரம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். நீ வத்சவாயீ நரசிம்ம வர்மாவையும் சந்திப்பாய். அவருக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்வாமியோடு நெருங்கிய தொடர்பு உண்டு. நீ எழுதப்போகும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் வாழ்க்கை வரலாறு ஸ்ரீசரணரால் ஆசீர்வதிக்கப்படும். நீ எழுதும் புத்தகத்தை தவிர ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் வாழ்க்கை வரலாறை வேறு எந்த வழியிலும் விளக்கமாக வர்ணிக்க முடியாது. இது ஸ்ரீசரணரின் ஆணை" என்று கூறினார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 6

## நரசாவதானியின் கதை

அடுத்த நாள் தியானத்தையும் வழிபாடுகளையும் முடித்துக்கொண்டு திருமலதாஸ் தன் வர்ணனையை தொடங்கினார். "ஐயா, அசையும் மற்றும் அசையா படைப்புகள் அனைத்திற்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் ஆதாரம். அவரை ஆலமரத்திற்கு ஒப்பிடலாம். அவருடைய அம்ச அவதாரங்கள் கிளைகளில் இருந்து தொங்கும் வேர் போன்றது. ஆல மர கிளைகளில் இருந்து வளர்ந்திருக்கும் அந்த வேர்கள் சுதந்திரமாக இருப்பது போல் தோன்றினாலும் அவற்றிற்கு ஆலமரம்தான் மூலக்கூறு. அவரே அனைத்து கடவுள்கள் பேய்கள் மற்றும் அனைத்து உயிரினங்களின் ஆதாரம் மற்றும் அடைக்கலம். அனைத்து சக்திகளும் அவரிடமிருந்து தோன்றி பின் அவருடனேயே கலந்து விடும். ஒரு மலையின் உச்சியை அடைந்த ஒருவருக்கு எல்லா பாதைகளும் ஒன்று போலத்தான் தோன்றும். அதே போல வெவ்வேறு பாரம்பரிய முறைகளை கடைபிடிப்பவர்களும் தத்த தத்துவத்தில்தான் ஒன்றாக இணைவர். எல்லா உயிரினங்களையும் ஒரு ஒளிவட்டம் சூழ்ந்திருக்கும். நான் பீதிகாபுரத்தில் இருந்தபோது ஒரு யோகி அங்கு வந்தார். அவர் ஒரு சிலையைச் சுற்றி எவ்வளவு ஒளிவட்டம் இருக்கிறது,ஒரு மனிதனை சுற்றி ஒளிவட்டம் எவ்வளவு தூரம் இருக்கிறது மற்றும் அந்த ஒளிவட்டம் எந்த நிறத்தில் விரிந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டுக் கூறினார். அவர் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள சுயம்பு தத்தரின் ஒளிவட்டத்தின் நீளம் மற்றும் நிறத்தை சோதனை செய்ய விரும்பினார். அவர் சுயம்பு தத்தருக்கு பதில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை கண்டார். ஸ்வாமியின் தலையை சுற்றி மின்னலை ஒத்த மிகுதியான வெள்ளை ஒளி பரவியது. வெள்ளை ஒளியைத் தொடர்ந்து நீல ஒளி அனைத்து திசைகளிலும் பரவியது. அந்த ஆளுமை நிறைந்த தெய்வீகம் யோகியிடம் "என் அன்புக்குரியவனே,மற்றவர்களின் சூக்ஷம உடல்களின் நீள விரிவாக்கத்தை பற்றி கணக்கிட நீ உன் மதிப்பிற்குரிய நேரத்தை பைத்தியக்காரத்தனமான நோக்கத்தில் விரயம் செய்து கொண்டிருக்கிறாய். முதலில் உன்னை பற்றி யோசி. சாவு உன்னை நெருங்கி கொண்டிருக்கிறது. விமோசனத்திற்கான வழிகளை யோசி. அனைத்து கோட்பாடுகள் மற்றும் அனைத்து உண்மைகளுக்கும் தொடக்கமான ஸ்ரீ தத்தர் நான்தான். சிறந்த சித்தர்கள்,சிறந்த முனிவர்கள் மற்றும் சிறந்த பக்தர்கள் அன்போடு அழைத்தமையால் இந்த கலியுகத்தில் பாதகயா க்ஷேத்திரத்தில் (பீதாபுரம்) அவதரித்துள்ளேன்" என்று கூறியது.

ஸ்வாமியின் உபதேசங்களை கேட்டவுடன் அந்த யோகியின் பழைய போக்குகள் நின்று போனது. சூக்ஷம உடல்களின் ஒளிவட்டத்தை அறிந்து கொள்ளும் சக்தி ஸ்ரீவல்லபரிடம் முழுவதுமாக ஐக்கியமானது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை அவர் வீட்டில் தரிசனம் செய்து ஆசீர்வதிக்கப்பட்டார். அந்த யோகி "ஸ்ரீவல்லபரைச்

சுற்றிப் பரவும் வெள்ளை ஒளியானது அவர் களங்கமற்றவர் என்பதையும் அவர் முழு யோக அவதாரம் என்பதையும் குறிக்கிறது. நீல ஒளி அவர் எல்லையில்லா அன்பையும் கருணையும் உள்ளடக்கியவர் என்பதையும் காட்டுகிறது" என்றார்.

அந்த யோகி சென்றவுடன் ஒரு சுவாரசியமான விவாதம் ஒன்று நடந்தது. **"நான்கு ஜாதிகளின் பிரிவினைகளை எவ்வாறு முடிவு செய்வது? அது சூக்ஷ்ம உடல்களின் ஒளிவட்டத்தின் வித்தியாசங்களை பொறுத்தா? அல்லது சாதி மற்றும் கோத்திரத்தை கருத்தில் கொண்டா? வேதங்களில் விவரிக்கப்பட்டுள்ளது போல் உபநயன சடங்கு முறைக்கு எந்த சாதி தகுதி பெறும்? புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது போல் உபநயனத்திற்கு (பூணூல் அணிவிக்கும் விழா) எந்த ஜாதி தகுதி பெறும்? உபநயனத்திற்கும் புருவ மத்தியில் உள்ள மூன்றாவது கண்ணுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அல்லது அது ஏதாவது சிறப்பம்சம் பொருந்திய விஷயமா? மேதாஞானம் என்றால் என்ன?"** போன்ற விவாதங்கள் சூடாக தொடர்ந்தது. பண்டிதர்களால் ஒருமித்த கருத்துக்கு வர முடியவில்லை.

உண்மையான துறவி என்று புகழ் பெற்ற ஸ்ரீ மல்லாடி பாப்பண்ண அவதானிதான் பீதிகாபுர பிராமணர் சங்கத்தின் தலைவர். அவரை பாப்பண்ணார்யலு என்றும் அழைப்பர். அவர் சூரியனையும் அக்னியையும் வணங்குவார். அவர் பீதிகாபுரத்தில் நடைபெற்ற யாகத்திற்கு தலைமை தாங்க அழைக்கப்பட்டிருந்தார். யாகத்தின் முடிவில் பெரும் மழை பெய்ந்தது. அனைவரும் உற்சாகம் அடைந்தனர். ஸ்ரீ வத்சவாயீ நரசிம்ம வர்மா என்கிற க்ஷத்ரியர் ஸ்ரீ பாப்பண்ண அவதானியை தங்கள் கிராமத்திலேயே வசிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவர் ஸ்ரீ வர்மாவின் வேண்டுகோளை மறுத்துவிட்டார். ஸ்ரீ பாப்பண்ணார்யலு யாகங்களில் கொடுக்கப்படும் கௌரவ சம்பாவனைகளை மட்டும்தான் ஏற்றுக்கொள்வார். அப்பணம் களங்கமற்ற பணமாக இருந்தால் மட்டுமே பெற்றுக் கொள்வார். ஸ்ரீ வர்மாவிடம் ஒரு கபில பசு இருந்தது. அவருக்கு அதன் மீது மிகுந்த விருப்பம். அதன் பெயர் காயத்ரி. அந்த பசு ஏராளமாக பால் கொடுக்கும். அது சாதுவான குணம் உடையது. காயத்ரி பசு காணாமல் போய்விட்டதாக ஸ்ரீ வர்மாவிற்கு தெரிய வந்தது. ஸ்ரீ பாப்பண்ண அவதானிக்கு பசு பற்றிய ஜோசியம் நன்றாக தெரியும் என்பதால் ஸ்ரீ வர்மா அவரிடம் கேட்டார். அந்த பசு சியாமளாம்பபுரத்தில் (சாமல்கோட்) உள்ள கான் சாஹேப்பின் கசாப்பு கடையில் நின்று கொண்டிருப்பதாக ஸ்ரீ பாபண்ணார்யலு தெரிவித்தார். காணாமல் போன பசுவை எவரேனும் உடனடியாக மீட்கவில்லை என்றால் அது கொல்லப்பட்டு விடும் என்று கூறினார். சியாமளாம்பபுரத்திற்கு ஆள் அனுப்பும் போது ஸ்ரீ வர்மா ஸ்ரீ பாபண்ணார்யலுவிடம் ஒரு நிபந்தனை விடுத்தார். அதாவது ஸ்ரீ பாபண்ணார்யலு கூறியது போல் காயத்ரி பசு மீண்டும் வந்தால் அவர் மூன்று புட்லு நிலத்தையும் நல்ல வீட்டையும் பரிசாக பெற்று கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இது பாபண்ணாரியலுவுக்கு இக்கட்டான நிலையை உண்டாக்கியது. அவர் இந்த பரிசை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ஸ்ரீ வர்மா அந்த பசுவை கொல்வதற்கு இடங்கொடுத்து விடுவார். பிறகு பசுஹத்தி பாவத்திற்கு ஆளாகி விடுவார். பசு வதை பாவத்திற்க்கு ஆளாவதை விட

பரிசுகளை ஒத்துக் கொள்வதே மேல் என்று எண்ணினார். காயத்ரி காப்பாற்றப்பட்டது. பீதிகாபுரவாசிகள் பாக்கியசாலிகள். ஸ்ரீ பாப்பண்ணார்யலுவுக்கு வசிப்பதற்கு நல்ல வீடு மற்றும் மூன்று புட்லு நிலத்திற்கும் அதிபதி ஆனார். ஸ்ரீ பாப்பண்ணார்யலுவுக்கு வெங்காவதானி என்ற மகனும் சுமதி என்கிற மகளும் இருந்தனர். சுமதியின் ஜாதகம் நல்ல அம்சங்களுடன், அவளது நடத்தை மகாராணியின் நடத்தையை போல் இருந்தது. அதனால் அவள் சுமதி மஹாராணி என்று அழைக்கப்பட்டாள். ஸ்ரீ பாப்பண்ணார்யலுவின் புகழ் எல்லா திசைகளிலும் பரவியது.

கோதாவரிப் பகுதியில் இருக்கும் அயினவில்லி கிராமத்தில் இருந்து கண்டிக்கோட்டா என்கிற குடும்ப பெயருடன் அப்பலலக்ஷ்மிநரசிம்மராஜ சர்மா என்ற பெயருடைய இளைஞர் ஒருவர் பீதிகாபுரம் வந்தார். அவர் வேலநாட்டி வைதீக பிரிவையும் ஆபத்சம்ப சூத்திரத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவர் வீட்டில் காலாக்னி சமான தத்தரின் (சத்ய யுகத்தின் 16 தத்த அவதாரங்களில் ஒன்று) சிலை இருந்தது. அச்சிலையை வழிபடும் போது அது அப்பலராஜ சர்மாவுடன் உரையாடி அறிவுறுத்தும். அப்பலராஜ சர்மா தன் சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தவர். ஒரு நாள் அவர் காலாக்னி சமான தத்தரை வழிபாடு செய்துகொண்டிருந்த போது அவரை வேலநாட்டி பிரிவு ஆபத்சம்ப சூத்திரம் ஹரிதாஸ கோத்திரத்தை சேர்ந்த மல்லாடி பாப்பண்ண அவதானியின் வழிகாட்டுதலில் படிப்பை முடித்துக்கொள்ளுமாறு சுட்டிக்காட்டியது. அதனால் ராஜசர்மா பீதிகாபுரத்திற்கு வந்தார். ஸ்ரீ தத்தரின் ஆணைப்படி ஸ்ரீ பாப்பண்ணார்யலுவின் மாணவராக வந்த ராஜசர்மாவுக்கு தன் வீட்டில் தங்குவதற்கு இடமும் உணவும் அளித்தார். அவர் ராஜசர்மாவை பல வீடுகளில் பிக்ஷை எடுக்க அனுமதிக்கவில்லை. ஸ்ரீ பாப்பண்ணார்யலு சனி பிரதோஷ காலங்களில் சிவனை வணங்குவது வழக்கம். சனிப்பிரதோஷ காலங்களில் வீட்டில் உள்ள பெண்கள் சிவனுக்கு மத சம்பிரதாயங்களை செய்வர். பழைய காலத்தில் நந்தனும் யசோதையும் சனிப்பிரதோஷ காலங்களில் சிவனை வணங்கினார்கள். அதன் பலனாகத்தான் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை வளர்க்கும் பாக்கியம் பெற்றனர். ஸ்ரீ நரசிம்ம வர்மா,ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய்ய சிரேஷ்டி மற்றும் முக்கியமான வைசியர்கள் தவறாமல் ஸ்ரீ பாப்பண்ணார்யலுவுடன் சிவ வழிபாட்டில் கலந்துகொள்வர்.

## ஸ்ரீ குக்குடேஸ்வர சிவலிங்கத்தில் இருந்து கேட்கப்பட்ட குரல் - சுமதி மஹாராணிக்கும் அப்பல ராஜாவுக்கும் நடந்த திருமணம்

ஒரு சனிப்பிரதோஷ வழிபாட்டின் போது சிவனை வழிபட்ட பிறகு ஸ்ரீ குக்குடேஸ்வர சிவலிங்கத்தில் இருந்து ஒரு பிரகாசமான மின்சார ஒளி வீசியது. அழுத்தமான குரல் ஒன்று "என் அருமை பாப்பண்ணார்யா, எந்த தயக்கமும் இன்றி உன் மகள் சுமதி மகாராணியை அப்பலராஜ சர்மாவுக்கு திருமணம் செய்து கொடு. இது பிரபஞ்சத்திற்கு நன்மை பயக்கும். இந்த உயிருள்ள அல்லது உயிரற்ற படைப்பில் உள்ள எந்தவொரு தனிநபருக்கும் இந்த சிறந்த முடிவை மீற எந்த அதிகாரமும் இல்லை. இது ஸ்ரீ தத்தரின் முடிவு" என்று கேட்டது.

இந்த குரல் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி, நரசிம்மா வர்மா மற்றும் அங்கிருந்த அனைவருக்கும் கேட்டது. அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அயினவில்லியில் உள்ள ராஜசர்மாவின் உற்றார் உறவினர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது. சுமதி மஹாராணிக்கும் ராஜசர்மாவிற்கும் திருமணம் நிச்சயமானது. ராஜசர்மாவுக்கு ஒரு வீடு கூட இல்லை என்பது வருந்தத்தக்க விஷயம்தான். ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி தனக்கு இருக்கும் பல வீடுகளில் ஒன்றை ராஜசர்மாவிற்கு வழங்குவதாக கூறினார். எனினும் ராஜசர்மா எந்த நன்கொடையையும் பெற்று கொள்ள மாட்டார். சிரேஷ்டி ராஜசர்மாவின் உறவினர்களுடன் பேசி அயினவில்லியில் உள்ள ராஜசர்மாவின் பூர்வீக வீட்டை மதிப்பீடு செய்ய ஏற்பாடு செய்தார். அது ஒரு வராகன் என்று மதிப்பிடப்பட்டது. சிரேஷ்டியின் வீடு குறைந்தபட்சம் 12 வராகன் என்று மதிப்பிடப்பட்டது. ராஜசர்மா தன்னால் மீதமிருக்கும் பதினோரு வராகனை செலுத்த இயலவில்லை என்று கூறினார். பிறகு தன் வீட்டை ஒரு வராகனுக்கு மட்டுமே ராஜசர்மாவுக்கு விற்பதாக சிரேஷ்டி கூறினார். சிரேஷ்டி "**நீங்கள் வீட்டை பரிசாக எடுத்துக் கொள்ள மறுத்தால் ஒரு வராகன் செலுத்தி எடுத்து கொள்ளுங்கள்**" என்று கூறினார். சிரேஷ்டி கூறுவது தர்மத்திற்கு ஏற்ப இருந்ததால் அனைவரும் சம்மதித்தனர்.

சுமதி மஹாராணி மற்றும் அப்பலராஜ சர்மாவின் திருமணம் சிறந்த வேத விற்பன்னர்களின் வேத முழக்கத்துடன் நடந்தது. திருமணம் இசை வாத்தியங்களின் இன்னிசையுடன் பிரமாண்டமாக நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அறியாமையின் இருளை அகற்ற வந்த அவதாரம். உடல் மற்றும் ஆன்மீக விஷயங்களில் தடுமாறிக்கொண்டிருந்த மக்களின் முன்னேற்றங்களை அகற்ற வந்தவர். ஆகவே ஸ்ரீ தத்தர் காலத்தின் தேவனுக்கும், கர்ம தேவனுக்கும் ஆணை பிறப்பித்தார். அவரின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு ராஜ சர்மாவிற்கு இருள் நிறைந்த அறியாமையை குறிக்கும் வகையில் ஒரு குருட்டு மகனும், உலகம் மற்றும் மேல் உலகங்களில் நின்ற முன்னேற்றத்தை குறிக்கும் வகையில் நொண்டியான மகனும் பிறந்தனர். தன் இரு மகன்களும் ஊனமுற்றவர்களாக பிறந்ததை எண்ணி சுமதியும் ராஜசர்மாவும் அதிர்ச்சி அடைந்தனர். அயினவில்லியில் ஒரு புகழ்பெற்ற விக்னேஸ்வரர் கோவில் உள்ளது. ஒருநாள் அவர்களுடைய உறவினர்கள் விக்னேஸ்வரரின் பிரசாதத்தை பீதிகாபுரத்திற்கு கொண்டுவந்தனர். சுமதியும் ராஜசர்மாவும் அந்த பிரசாதத்தை பெற்றுக் கொண்டனர். அன்றிரவு சுமதி மஹாராணி தன் கனவில் ஐராவத (இந்திரனின் யானை) தரிசனம் பெற்றாள். இன்னும் சில நாட்களில் சங்கு, சக்கரம், கதாயுதம், தாமரை, திரிசூலம், பல தெய்வங்கள், முனிவர்கள், சித்தர்கள், யோகிகள் மற்றும் அதுபோன்ற தெய்வீக மனிதர்கள் அவள் கனவில் தோன்றின. சில நாட்களில் இந்த தெய்வீக வெளிப்பாடுகளை விழித்த நிலையிலேயே அனுபவித்தாள். கண்களை மூடினால் சமாதி நிலையில் இருக்கும் யோகிகள்,தெய்வீக பிரகாசத்துடன் இருக்கும் முனிவர்கள் மற்றும் பல ஒளிகள் திரையில் தோன்றும் உருவம் போல் தெய்வீக தரிசனம் அளித்தன.

இது பற்றி தன் தந்தை ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம் கேட்ட போது இவை அனைத்தும் முழுமையான புனித தன்மையுடன் கூடிய அம்சங்களுடன் ஒரு மகாபுருஷர் (சிறந்த மனிதர்) அவதரிக்க போவதற்கான அறிகுறிகள் என்று கூறினார். சுமதி மகாராணியின் மாமாவான ஸ்ரீதர் பண்டிட் "அம்மா சுமதி, சூரிய கிரகத்தின் நட்சத்திரமான விசாகத்திற்கும், ஸ்ரீ ராம அவதாரத்திற்கும் உறவு உண்டு. அதேபோல் சந்திர கிரகத்தின் நட்சத்திரமான கிருத்திகைக்கும் ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்திற்கும் உறவு உண்டு. பூர்வாஷாடா நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய் கிரகத்திற்கும் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம அவதாரத்திற்கும் உறவு உண்டு. ஸ்ரவண நட்சத்திரத்தில் பிறந்த புதன் கிரகத்திற்கும் புத்தர் அவதாரத்திற்கும் உறவு உண்டு. பூர்வ பல்குனி நட்சத்திரத்தில் பிறந்த வியாழன் கிரகத்திற்கும் விஷ்ணு அவதாரத்திற்கும் உறவு உண்டு. புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்த வெள்ளி கிரகத்திற்கும் பார்கவ ராம அவதாரத்திற்கும் உறவு உண்டு.ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த சனி கிரகத்திற்கும் கூர்ம (ஆமை) அவதாரத்திற்கும் உறவு உண்டு. பரணி நட்சத்திரத்தில் பிறந்த ராகு கிரகத்திற்கும் வராஹ (ஒற்றை கொம்பு காண்டாமிருகம்) அவதாரத்திற்கும் உறவு உண்டு. ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்த கேது கிரகத்திற்கும் மத்சய அவதாரத்திற்கும் உறவு உண்டு.

நீ கேள்வி கேட்ட இந்த நேரம் தெய்வீக ரகசியத்துடன் சம்மந்தப்பட்டது. கோடானுகோடி கிரகங்கள், நட்சத்திரங்களின் விதியையும், மகாபிரபஞ்சதின் இருப்பை கட்டுப்படுத்தும், ஸ்ரீ தத்தரே பிறக்கப்போவதாக நான் ஊகிக்கிறேன்" என்று கூறினார்.


## ஸ்ரீ தத்தரின் அழிவில்லா தனிச்சிறப்பும் தோற்றப்பொலிவும்

சுமதி மஹாராணி இவற்றை ராஜசர்மாவிடம் தெரிவித்தாள். ராஜசர்மா இவைகளைப் பற்றி தான் காலாக்னி சமான தத்தரிடம் வழிபாடு செய்யும் போது கேட்பதாகக் கூறினார். வழிபாடு செய்யும் போது காலாக்னி சமான தத்தரை வேறு எவரும் பார்க்கக் கூடாது என்பது விதிக்கப்பட்டிருந்தது. வழிபாடு முடிந்தவுடன் ஸ்ரீ தத்தர் மனித உருவம் எடுத்து வந்து ராஜசர்மாவின் முன் அமர்ந்து கொண்டு அவருடன் பேசுவார். பிறகு சிலைக்குள் ஸ்ரீ தத்தர் ஐக்கியமாகி விடுவார். இதேபோல் தினமும் நடக்கும். ராஜசர்மா மிகச்சிறிய விஷயங்களையோ சுயநலமான பிரச்சனைகளையோ ஸ்ரீ தத்தரிடன் சமர்பிப்பதில்லை. அன்றைய வழிபாட்டின் போது ஸ்ரீ தத்தர் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டார். வழிபாடு முடிந்தவுடன் ஸ்ரீ தத்தர் ராஜசர்மாவின் முன் அமர்ந்தார். "**ஸ்ரீதரா வா!**" என்று அழைத்தார். ஸ்ரீ தத்தரிடமிருந்து ஒரு உருவம் வெளியே வந்து தியானத்தில் மூழ்கியபடி அவர் முன் அமர்ந்திருந்தது. ஸ்ரீ தத்தர் மீண்டும் தன் விரலால் செய்கை செய்து "**வா ஸ்ரீதரா!**" என்று கூறியவுடன் அந்த உருவம் ஸ்ரீ தத்தருடன் ஐக்கியமானது. ராஜசர்மா ஆச்சரியத்தில் மூழ்கினார். ஸ்ரீ தத்தர் ராஜ சர்மாவிடம் "நீ இப்போது பார்த்தது வருங்காலங்களில் வரப்போகும் என்னுடைய அம்ச அவதாரங்களில் ஒன்று. நான் எப்போது அழைத்தாலும் என்னுடன் ஐக்கியமான மோக்ஷம் அடைந்த ஆத்மாக்கள்

கூட உடனடியாக வெளிவரும். நான் கிளம்பச் சொன்னவுடன் அவை மறைந்து விட வேண்டும். என்னுடைய திருவிளையாடல்கள் இந்த உலகத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டது இல்லை. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து கோளங்களும் என் கையில் விளையாட்டுப் பந்து போன்றவை. நான் என் காலால் உதைத்தால் பல கோடி மைல்களுக்கு அப்பால் போய் விழும்! நான் பிறப்பு இறப்பை கடந்தவன்" என்று கூறினார்.

அப்படி கூறிவிட்டு ராஜசர்மாவின் புருவ மத்தியை தொட்டார். உடனே ராஜசர்மாவுக்கு பல யுகங்களுக்கு முன் தான் விஷ்ணுதத்தராக பிறந்ததும் அவர் மனைவி சோமிதேவம்மா அல்லது சுசீலாவாக பிறந்ததும் புலப்பட்டது. அவருக்கு முற்காலம் அனைத்தும் நினைவில் வந்தது. ஸ்ரீ தத்தர் "நான் அந்த யுகத்தில் உன் முன் தோன்றி வரம் கேட்க சொன்னேன். உன்னால் சரியான வரத்தை கேட்க முடியவில்லை. நீ உன் வீட்டுக்கு சிரார்த்த தினத்தன்று கலந்துகொண்டு உணவருந்துமாறு அழைத்தாய். நான் சூரியன் மற்றும் அக்னி தேவர் ஆகியோருடன் உணவருந்திவிட்டு உன் மூதாதையர்களுக்கு பிரம்ம லோகத்தில் நிரந்தரமான இடத்தை அளித்தேன். நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரிக்க விரும்புகிறேன். கடந்த 100 வருடங்களாக இந்த உலகத்தில் உள்ள யோகிகள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கும் நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக தரிசனம் அளித்துவருகிறேன். த்ரேதா யுகத்தில் பாரத்வாஜ முனிவர் பீதிகாபுரத்தில் சவித்ரு காடக சயனம் என்கிற யாகத்தை நிகழ்த்தினார். யாகத்தினால் உருவான சாம்பல் பெரிய மலை போல் ஆனது. அனுமன் அந்த சாம்பலை சொர்க்கம், பூமி மற்றும் பாதாள (கீழ்) லோகங்களுக்கு கொண்டு சென்றார். மர்த்ய லோகத்தில், அந்த சாம்பலை இமயமலை பகுதியில் உள்ள த்ரோணகிரியிலும் மற்ற இடங்களிலும் தூவப்பட்டது. அனுமன் அந்த சாம்பலை கொண்டு சென்றபோது அதில் ஒரு சிறிய துண்டு கந்தர்வநகரத்தில் (கனகாபூர்) விழுந்தது. பீம-அமரஜ நதிகளின் புனித சங்கமம்தான் கந்தர்வ நகரம். என் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் நிகழ்ந்து முடிந்த பிறகு நான் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக மீன லக்கினத்தில் பிறப்பேன். நான் கந்தர்வநகரத்தில் பல அற்புதங்களை காட்டிவிட்டு ஸ்ரீசைலத்தில் உள்ள கதலி வனத்தில் 300 வருடங்கள் சமாதி நிலையில் தவம் இருப்பேன். பிறகு நான் பிரக்ஞானபுரத்தில் ஸ்வாமி சமர்த்தராக வாழ்ந்துவிட்டு சனி மீன ராசியில் நுழையும் போது என் (அழியக்கூடிய) மனித உடலை விட்டு நீங்கி விடுவேன்" என்றார்.

ஸ்ரீ தத்தர் அதிகாரபூர்வமாக தெரிவித்தவைகளை ராஜசர்மா தன் மனைவியிடம் விளக்கினார். சத்யரிஷீஸ்வரரான பாப்பண்ணார்யலு "**என் அருமை ராஜசர்மா, நீங்கள் பழங்காலத்தில் சிரார்த்த தினத்தன்று ஸ்ரீ தத்தர், சூரிய தேவன் மற்றும் அக்னி தேவன் ஆகியோருக்கு உணவளித்த பாக்கியசாலி. இந்த பிறவியில் எந்த உருவத்திலும் ஸ்ரீ தத்தர் உணவு கேட்பார். அன்று இறந்தவர்களின் சிரார்த்த தினமாக இருப்பினும் அதிதிகள் உணவு அருந்தவில்லை என்றாலும் எந்த தயக்கமும் இன்றி ஸ்ரீ தத்தர் கேட்கும் போது அவருக்கு உணவு அளித்துவிடுங்கள். என் அன்புக்குரிய சுமதி இவற்றை குறித்து வைத்துக்கொள்**" என்றார்.




சங்கர் பட், ஸ்ரீ தத்தரின் லீலைகள் அபூர்வமானதும், எண்ண முடியாதபடியும் முன்பு கேள்விப்படாததுமாக இருக்கும்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பிறப்பு

ராஜசர்மா மகாளய அமாவாசை தினத்தன்று பித்ரு காரியங்களுக்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது தெருவிலிருந்து அவர் வீட்டு நுழைவாயிலில் '**பவதி பிக்ஷாம் தேஹி!**' என்று பிக்ஷகாக கூப்பிடும் குரல் கேட்டது. சுமதி மஹாராணி அந்த அவதூதருக்கு பிக்ஷை அளித்தாள். அவர் அவளிடம் ஏதாவது வரம் கேட்குமாறு கூறினார். சுமதி அவரிடம் "**ஐயா! நீங்கள் ஒரு அவதூதர். உங்கள் வார்த்தைகள் மன நிறைவை தருகிறது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் விரைவில் பூமியை நோக்கி ஈர்க்கப்படப் போவதாக பெரியவர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். இப்போது ஸ்ரீ தத்தர் எந்த உருவத்தில் உலாவிக் கொண்டிருக்கிறார்? கடந்த 100 வருடங்களாக ஸ்ரீ தத்தர் இந்த பூமியில் உலாவிக் கொண்டிருப்பதாக கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் என் விருப்பத்தை கூறுமாறு கேட்டீர்கள். எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவத்தை பார்க்க ஆவலாக இருக்கிறது**" என்றாள்.

இந்த வார்த்தைகளை கேட்டவுடன் அவதூதர் உலகங்கள் அதிரும் அளவுக்கு பலமாக சிரித்தார். சுமதி மகாராணிக்கு தன் அருகில் இருக்கும் முழு பிரபஞ்சமும் மறைவது போல் தோன்றியது. அழகு நிறைந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவன் முனிவர்களின் உடைகளை அணிந்து கொண்டு அவள் கண்முன் தோன்றி "**அம்மா நான்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர். நான்தான் ஸ்ரீ தத்தர். நீங்கள் ஸ்ரீவல்லபரின் அவதூத உருவத்தை காண்பிக்க கோரினீர்கள். உங்கள் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு ஸ்ரீவல்லபராக காட்சி அளிக்கிறேன். என்னுடைய ஸ்ரீவல்லப உருவத்திடம் நீங்கள் எது வேண்டுமானாலும் கேட்கலாம். நீங்கள் எனக்கு உணவு அளித்தீர்கள். அதற்கு கைமாறாக நான் உங்களுக்கு ஏதாவது வரம் அளிக்க விரும்புகிறேன்**. இந்த உலகத்தில் உள்ள மக்கள் வேண்டுமென்றே பாவ காரியங்கள் செய்தால் தீய விளைவுகளைப் பெறுவர். அதே வேண்டுமென்றே நல்ல காரியங்கள் செய்தால் நல்ல விளைவுகளைப் பெறலாம். எந்த விருப்பமும் இல்லாமல் செய்யும் நல்ல காரியங்களை அகர்மா என்று அழைப்பர். அகர்மாவுக்கு எந்தவித பாவ புண்ணியங்களையும் கணக்கில் கொள்ளாமல் ஒருவருக்கு இன்னொரு பலன் கொடுக்கவேண்டும். இது கடவுளின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனை கௌரவர்களை கொல்லுமாறு கூறியது ஏனென்றால் அவர் அகர்மா செய்திருந்தார். இதுபோன்ற கொலைகள் எந்தவித பாவங்களையும் அர்ஜுனனுக்கு உள்ளாக்காது. நீங்களும் உங்கள் கணவரும் பல அகர்மாக்களை செய்துள்ளீர்கள்.

உங்கள் விருப்பத்தை எந்தவித தயக்கமும் இல்லாமல் வெளிப்படுத்துங்கள். நான் நிச்சயமாக அதை நிறைவேற்றுகிறேன்" என்றார்.

## ஸ்ரீ தத்தர் தோன்றிய பின் சுமதி மகாராணியின் விருப்பம்

சுமதி மஹாராணி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அதி அற்புதமான புனித வடிவத்தை கண்டதும் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் சுமதி மகாராணியை தரையில் இருந்து தூக்கி "**அம்மா, தன் குழந்தையின் பாதங்களில் தாய் விழுவது மிகவும் பரிகாசத்திற்கு உரிய விஷயம். இது குழந்தையின் ஆயுளைக்கூட குறைத்துவிடும்**" என்றார். பின்னர் சுமதி "**ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரே நீங்கள் என்னை அம்மா என்று அழைத்தீர்கள். அதனால் நீங்கள் எனக்கு மகன் என்பதையும் நான் உங்களுக்கு தாய் என்பதையும் ஒத்துக்கொண்டு விட்டீர்கள். உங்கள் வார்த்தைகளுக்கு உண்மை தன்மை உண்டு என்பதால் அவற்றை நிறைவேற்றி விடுங்கள். நீங்கள் எங்களுக்கு மகனாக பிறக்கவேண்டும்.**" என்று சமர்ப்பித்தாள். பின்னர் ஸ்ரீசரணர் இவ்வாறு பேசினார் "**ததாஸ்து (அப்படியே ஆகட்டும்). நீங்கள் இப்போது பார்த்த உருவத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக நான் பிறப்பேன். ஒரு தாய் குழந்தையின் பாதத்தில் விழுந்தால் குழந்தையின் ஆயுள் குறைந்துவிடும். நான் நீதி மற்றும் விதியின் கொள்கைகளை மீற மாட்டேன். ஆகவே நான் உங்கள் மகனாக வெறும் 16 ஆண்டுகள் ஆண்டுகள் மட்டுமே இருப்பேன்**" என்றார். அதற்கு சுமதி அழுதுகொண்டே பேசத் தொடங்கினாள் "**ஓ, என்ன குற்றம் நடந்தது. அப்படியென்றால் இந்த வாழ்க்கை வெறும் 16 வருடங்கள் தானா?**" என்றவுடன் "**அம்மா 16 வருடங்கள் உங்கள் மகனாக நீங்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு இருப்பேன். 16 வயதிற்கு பிறகு ஒரு சிறுவனை நண்பனை போல் பாவித்து எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்கக்கூடாது. நீங்கள் என்னை திருமணம் செய்ய வற்புறுத்த கூடாது. நீங்கள் எனக்கு சந்நியாசி ஆவதற்கும் சுதந்திரமாக சுற்றி திரிவதற்கும் அனுமதி அளிக்கவேண்டும். நீங்கள் என்னை கட்டாயப்படுத் தினாலோ என் நோக்கத்திற்கு மாறாக நடந்துகொண்டாலோ நான் உங்கள் வீட்டை விட்டு சென்றுவிடுவேன்**" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறிவிட்டு உடனடியாக அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டார்.

சுமதி மஹாராணி சிறிது நேரத்திற்கு வாயடைத்து நின்றிருந்தாள். தன் கணவரிடம் தனக்கு தெரிந்தவைகளை விவரித்தாள். "**சுமதி, வருத்தப்படாதே. உன் தந்தை இதுபோன்ற வழியில் ஸ்ரீ தத்தர் நம் வீட்டிற்கு வந்து பிக்ஷை எடுப்பார் என்று குறிப்பால் உணர்த்தினார் தானே! ஸ்ரீ தத்தர் ஒரு கருணைக்கடல். முதலில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பிறக்கட்டும். பிறகு மற்றவைகளை பற்றி யோசிக்கலாம்**" என்றார் அப்பலராஜ சர்மா.

அப்பலராஜ சர்மாவின் வீட்டிற்கு அவதூதர் வந்த செய்தி ஊர் முழுவதும் பரவியது. பித்ருக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மகாளய அமாவாசை தினத்தன்று பிராமணர்களுக்கு உணவளிப்பதற்கு முன்பே அவதூதருக்கு உணவளித்தது பற்றி விவாதிக்கப்பட்டது. அதற்கு ஸ்ரீ பாப்பண்ண அவதானலு "**ஸ்ரீ ஸ்ரீபாத**

**ஸ்ரீவல்லபரின் பிறப்பு அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அவதூதரின் முன் சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பதும் முறையானதுதான். அதனால் சுமதியின் தரப்பில் எந்த தவறும் இல்லை. ஒரு குழந்தையின் முன் நமஸ்கரித்தால்தான் அதன் ஆயுள் குறையுமே ஒழிய ஒரு அவதூதரின் முன் நமஸ்கரிப்பது எந்த தவறும் இல்லை**" *என்றார்.*

*பீதிகாபுரத்தில் உள்ள பிராமணர்களுக்கு இந்த விஷயம் மிகவும் பொறாமை அளித்தது. அவர்களுள் நரசாவதானி என்ற பண்டிதருக்கு மிகவும் பொறாமையாக இருந்தது. அமாவாசை தினத்தன்று அனைவரும் தங்கள் முன்னோர்களின் நினைவு சடங்கில் பரபரப்பாக இருப்பர். அன்று சடங்கில் விருந்துக்கு பிராமண அதிதிகள் கிடைப்பது கடினம். எனினும் அப்பலராஜ சர்மாவின் வீட்டிற்கு எந்த கஷ்டமும் இருக்காது என்று பாப்பண்ணார்யலு கூறினார். ஸ்ரீ ராஜ சர்மா காலாக்னி சமான தத்தரிடம் தியானத்தில் இருந்தார். அச்சமயத்தில் 3 அதிதிகள் வந்தனர். முன்னோர்களின் நினைவு நிகழ்ச்சி எந்தவித தடையும் இன்றி நடந்தது.*

*என் குழந்தாய் சங்கர் பட், அன்றைய தினம் வைசியர்களுக்கு பூணூல் அணிந்து கொள்ளும் அதிகாரம் உள்ளதா என்பது பற்றி முக்கியமான விவாதம் ஆனது. பிராமணச் சங்கம் கூடியது. வங்காளத்தில் உள்ள நவதீப்பை சேர்ந்த அசுதோஷ் என்கிற பண்டிதர் பாதகயா க்ஷேத்திரத்திற்கு (பீதிகாபுரம்) வந்தார். அவரிடம் பழைய நாடி புத்தகங்கள் இருந்தன. அவரும் பண்டிதர்களின் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஸ்ரீ பாப்பண்ணார்யலு ஆன்மீக விதிகளின் படி பிராமணர்கள், வைசியர்கள் மற்றும் க்ஷத்ரியர்கள் சமமாகத்தான் கருதப்படுவர் என்றார். ஆகவே பண்டைய தர்மங்களின் படி வேத உபநயனம் அனைத்து ஜாதியினரும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. மற்றவர்கள் இதை விரும்பினால் புராண சம்பர்தாயங்களின் படி உபநயனம் நடத்தலாம்.ஞானம் பெற ஜாதி, பாலினம் மற்றும் வயது ஆகியவைகள் எந்த தடையும் இல்லை. சித்தர்களில் வைசிய முனிவர்கள் இருந்தனர் மற்றும் லாபாதா என்கிற வைசியர் ஸ்ரீ தத்தரின் அருளை பெற்று சித்தர் ஆனார். ஒருவர் லாபாத மஹரிஷியின் அருளைப் பெற்றால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறி அனைத்து முயற்சிகளிலும் நன்மை பெறுவர்.*

*ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் முடிவு அனைவராலும் பாராட்டப்பட்டது. எனினும் இந்த முடிவு நரசாவதானி என்கிற பண்டிதருக்கு மிகுந்த வலியை தந்தது. அவர் பிடிவாதமாக விவாதிப்பதில் திறமையானவர். அவர் அன்னை பகளாமுகியின் பக்தர். அந்த தெய்வத்தை தினமும் வணங்குவார். ஒரு விவாதத்தை தொடங்குவதற்கு முன்பு தன் முகத்தை கழுவிக்கொள்வார்; அவர் பகளாமுகியின் மந்திரங்களை ஜபித்துவிட்டு விவாதத்தில் இறங்குவார். அந்த நேரத்தில் அவரை வெல்வது மிகவும் கடினம். பக்தியுள்ள ஸ்ரீ பாப்பண்ணார்யலு காயத்ரி மந்திரத்தை பல கோடி முறை பாராயணம் செய்துள்ளார். இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து விவாதம் செய்ததில்லை. நரசாவதானி தன் முகத்தை கழுவிக்கொண்டு மந்திரத்தை தியானம் செய்தார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மிக சிறிய வயதிலிருந்தே தன் தாய் வழி தாத்தாவிற்கு மிக நெருக்கம். அதனால் அவர் தன் தாத்தாவுடன் பிராமண சபைக்கு வந்திருந்தார்.*

அந்த அழகான சிறுவனுக்கு யாரும் தடை கூறவில்லை. அன்று ஸ்ரீவல்லபர் அந்த கூட்டத்தில் இருப்பது நரசாவதானிக்கு மிகுந்த சஞ்சலத்தை அளித்தது. சிறந்த பண்டிதர்களின் மாநாட்டில் ஒரு சிறுவன் கலந்துகொள்வது தவறு என்று நரசாவதானி கருதினார். விவாதத்தை துவங்குவதற்கு முன்னர் பகளாமுகி மந்திரத்தை ஜபித்துவிட்டு ஸ்ரீ ஸ்ரீபாதரை ஏன் இங்கு வந்தாய் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் **"தாத்தா, அழைக்கப்படாமல் கலந்துகொள்வது முறையல்ல. நீங்கள் என்னை முறையான வழியில் அழைத்ததால்தான் வந்தேன். நீங்கள் போகச் சொன்னால் போய் விடுகிறேன். எனக்கென்ன? எந்த கவலையும் இல்லை. நான் ஒரு சிறுவன் சுதந்திரமானவன்"** என்று பதிலளித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் விலகிச்செல்ல வேண்டும் என்று இடிபோல் முழங்கினார் நரசாவதானி. ஸ்ரீ ராஜசர்மா தன் மகனை அழைத்து கொண்டு சென்றுவிட்டார். தன் விவாதத்தை தொடங்க எண்ணிய நரசாவதானியால் பேச முடியவில்லை. எவ்வளவு முயற்சி செய்தும் அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை. இவை அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த அசுதோஷ் மிகுதியான நகைச்சுவையோடு சிரித்தார். கூட்டத்தில் பாப்பண்ணார்யலுவின் முடிவு நடைமுறை படுத்தப்பட்டது. வைஸ்யர்களுக்கும் உபநயனம் பரிந்துரைக்கப்பட்டது.

அசுதோஷிடம் இருந்த நாடி புத்தகங்களை பற்றி விவாதிக்கப்பட்டது. சந்திர சிந்து வேதத்தில் (நேரம் மற்றும் வருங்ககால நிகழ்ச்சிகளை பற்றியது) கொடுக்கப்பட்டுள்ள கணக்கு சூத்திரங்களின் படி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பிறந்த நேரம் நாடி புத்தகத்தில் இருக்கலாம் என்று தெரிவித்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் கணேச சதுர்த்தி அன்று விடியற்காலையில் சித்திரை நக்ஷத்ரத்தில் சிம்ம லக்கினத்தில் துலா ராசியில் பிறந்தார் என்று உறுதி செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தத்தரின் அவதாரம் என்றும் அவர் பாதங்களில் புனித சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும் என்று குறிப்பிட்டனர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்ற பெயருக்கு மிகவும் தகுதியானவர். அவரின் ஜாதகத்தை யாரிடமும் கொடுக்க கூடாது என்றும் மேலும் திரிபுரா மாநிலத்தில் இருந்து ஜைன மதத்தவரான அக்ஷயகுமார் என்கிறவரின் மூலம் காலப்போக்கில் பீதிகாபுரம் வந்தடையும் என்று சுட்டிக்காட்டினர். இவை அனைத்தும் திருவிளையாடல்களின் ஒரு பகுதியாக தெய்வீக திட்டத்தின் படி பீதாபுரம் வந்தடையும்.

அசுதோஷ் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை காண அவர் வீட்டிற்கு சென்றார். ஸ்ரீவல்லபர் **"இன்று சித்திரை நக்ஷத்திரம். நான் பிறந்த நக்ஷத்திரத்தில் என்னை எவர் வணங்கினாலும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். நீ தூய பக்தியுடன் வந்துள்ளாய். அதனால் நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன். உன் விருப்பம் எதுவானாலும் கேள்"** என்றார். பிறகு அசுதோஷ் **"ஸ்வாமி, நரசாவதானி பகளாமுகியின் பக்தர் என்று கேள்விப்பட்டிருந்தேன். அவரின் உதவியுடன் அம்பிகையை பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். என் நம்பிக்கை நிராசை ஆனது. அம்பிகை அவரிடம் கோபமாக இருக்கிறாள் என்பதை புரிந்துகொண்டேன்"** என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதர் உடனடியாக **"நான்தான் அவர் வணங்கும் அம்பிகை. நரசாவதானியுடன் சூக்ஷ்ம ரூபத்தில் இருந்த அம்பிகை நான்தான். அவர் என்னை அந்த இடத்தை விட்டு**

**செல்ல சொன்ன அடுத்த நொடியே என்னுடன் ஐக்கியமாகி விட்டாள். நான்தான் அனைத்து ஆண் மற்றும் பெண் தெய்வங்களின் மீது ஆளுமை செலுத்துகிறேன். அம்பிகையின் தரிசன பாக்கியம் பெற்றுக்கொள்".** *அப்படி கூறிக்கொண்டே அசுதோஷின் முன் பகளாமுகியாக காட்சி அளித்தார். அசுதோஷ் முழு திருப்தியுடன் பெனுசில கோணாவுக்கு (பெஞ்சலகோனா- நெல்லூர் மாவட்டம்) சென்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அறிவுறுத்தியபடி கண்வ மகரிஷி தவம் புரிந்த பெஞ்சலகோனா காட்டை அடைந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம் கண்வ மஹரிஷியின் வாஜசநேயி பிரிவில் மஹாராஷ்டிராவில் பிறப்பாய் என்று கூறினார். தான் மீண்டும் அவதரிக்கும் போது அசுதோஷை ஆசீர்வதிப்பதாகவும் மேலும் அவரின் முக்கிய சீடராக இருந்து கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் இருக்கும் பல அற்புதங்களை காணும் பாக்கியம் பெறுவாய் என்றும் கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரை உடனடியாக கிளம்ப சொன்னார்" என்று திருமலதாஸ் கூறினார்.*

## ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்த போது காணப்பட்ட அற்புத காட்சிகள்

*பிறகு நான்* **"ஐயா, நீங்கள் கண்ணுற்ற ஸ்ரீவல்லபரின் இன்னும் சில அற்புதங்களை விவரியுங்களேன் நான் பாக்கியசாலி ஆகிறேன்"** *என்றேன். பின்னர் திருமலதாஸ் தொடங்கினார், "சங்கர் பட் நரசாவதானி பாப்பண்ணார்யலுவின் மீது கடுங்கோபத்தில் இருந்தார். அவரை எப்படியாவது அவமானப்படுத்தி விட வேண்டும் என்று விரும்பினார். அன்னை பகளாமுகியின் தயவு கிடைக்காததற்கு பாப்பண்ணார்யலுதான் பொறுப்பு என்று எண்ணினார். பாப்பண்ணார்யலுதான் ஏதோ தந்திரங்கள் செய்து மந்திரங்களுக்கு திறன் இல்லாமல் செய்திருக்கிறார் என்று பிரகடனம் செய்தார். ஸ்ரீவல்லப அவதாரத்தைப் பற்றிய விவரங்களால் மேலும் சங்கடத்திற்கு உள்ளானார். அவர் நாடி புத்தகங்கள் நம்பத்தகுந்தவை அல்ல என்றும் மீன் உண்ணும் வங்காள பிராமணனுக்கு உணவளித்ததால் பாப்பண்ணார்யலு தெய்வ குற்றம் புரிந்துவிட்டார் என்றும் விவாதம் செய்தார். மேலும் எந்த மனிதனும் பூரண பிரம்மமாக முடியாது என்றும் சிறுவன் ஸ்ரீ ஸ்ரீபாதர் சர்வ வல்லமையுடைய,சர்வ வியாபியான, சர்வ ஞானியான ஸ்ரீ தத்தராக இருக்க முடியாது என்றும் விவாதம் புரிந்தார். அவர் குறும்புத்தனத்துடன் ஸ்ரீ ஸ்ரீபாதரின் அசாதரணமான நடவடிக்கைகளான குழந்தையாக இருக்கும்போதே பிரணவத்தை (ஓம்) உச்சரிப்பது; தொட்டிலில் ஆடிக்கொண்டிருக்கும் போதே சமஸ்கிருத வேதங்களை பற்றி பேசுவது; தன் வயதுக்கு மீறிய அசாத்திய புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துவது போன்றவைகளை தவறாக சித்தரித்தார். ஒரு இறந்த பிராமண பண்டிதர் அந்த சிறுவனின் உடலில் தஞ்சம் அடைந்துள்ளதால்தான் இவ்வாறு அசாதரணமாக பேசுகிறார் என்று வதந்திகள் பரப்பினார். ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள சுயம்பு தத்தர்தான் உண்மையான கொடையாளர் என்று பேண வேண்டுமே ஒழிய இந்த சிறுவனை தத்தராக நடத்துவது தவறு என்றார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பிறந்த போது ஒரு மூன்று தலை நாகம் 18 நாட்களுக்கு அவரை எங்கு கொண்டு சென்றாலும் அவருக்கு குடையாக இருந்தது. அவர் தாயின்*

கருவறையில் இருந்து திகைப்பூட்டும் ஒளியாக வெளிவந்தார். அவர் பிறந்தவுடன் சுமதி மஹாராணி மயக்கம் அடைந்தாள். பிரசவ அறையில் இருந்து இசைவாத்தியங்களின் புனிதம் வாய்ந்த இசை கேட்டது. சிறிது நேரத்திற்கு பின் கண்ணுக்குத் தெரியாத குரல் ஒன்று அனைவரையும் அறையை விட்டு செல்லுமாறு அச்சுறுத்தியது. நான்கு வேதங்களும், 18 புராணங்களும் மற்றும் சிறந்த மனிதர்களும் ஒளிப்பிழம்பாக வந்து ஸ்ரீ ஸ்ரீபாதரை வாழ்த்தினர். புனித வேத மந்திரங்களின் ஓசை அறையின் வெளியே கேட்டது. சிறிது நேரத்திற்கு பின் நிசப்தமாக இருந்தது. இந்த நிகழ்ச்சி மிகுந்த குழப்பமாகவும் ஸ்ரீ பாப்பண்ணார்யலு அவர்களால் கூட புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இருந்தது.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் பால்ய லீலைகள்

ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்து ஒரு வருடம் ஆகியிருந்தது. அவர் பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தாலும் தன் தாத்தா ஸ்ரீ பாப்பண்ணார்யாவுடன் அறிஞர்களுடனான கூட்டங்களுக்கு செல்ல தொடங்கினார்.

ஸ்ரீசரண் சில மாதங்களே ஆன சிறுவனாக இருப்பினும் சுதந்திரமாக நடந்துகொண்டும் வேதங்களில் இருந்து சொற்பொழிவாற்றி கொண்டும் வியத்தகு அற்புதங்களை நிகழ்த்திக்கொண்டும் இருந்தார். இறந்த பண்டிதர் அந்த சிறுவனுக்குள் புகுந்துகொண்டு இருப்பதால்தான் இது போன்ற அற்புதங்கள் நிகழ்த்த முடிகிறது என்று பீதிகாபுர வாசிகள் நினைத்தனர். ஸ்ரீ பாப்பண்ணார்யாவும் ஸ்ரீ ராஜசர்மாவும் முறையான வைத்தியம் செய்யாமல் தவறுதலாக தத்த அவதாரம் என்று எண்ணிக் கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ள கூடிய விஷயம் இல்லை என்று எண்ணினார்கள். பீதிகாபுரம் பாதகயா க்ஷேத்ரம் என்பதாலும் இறந்த மூதாதையர்களுக்கு முக்கியமான க்ஷேத்திரம் (க்ஷேத்ரம்: சக்திவாய்ந்த அதிர்வலைகளால் நிறைந்த இடம்) என்பதாலும் பீதிகாபுரத்தில் பல தாந்த்ரீகர்களால் இறந்த ஆன்மாக்களுடன் பேச முடியும் என்பதாலும் இந்த வாக்குவாதம் வலுப்பெற்றது. நான் மலயாத்ரிபுரத்தில் இருந்து வந்திருந்ததால் ஸ்ரீ பாப்பண்ணார்யா மற்றும் ஸ்ரீ ராஜசர்மா வீட்டு துணிகளை துவைத்துக்கொண்டிருந்தேன். நரசாவதானி வீட்டில் துணிகளை துவைத்து கொண்டிருந்தவர் முதுமையினால் இறந்துவிட்டார். அவருடைய ஒரு மகனும் கோகனாடம் என்று அழைக்கப்படுகிற வ்யாசபுர அக்ராஹாரத்திற்கு (காக்கிநாடா) இடம்பெயர்ந்து விட்டான். அதனால் நரசாவதானி வீட்டு துணிகளை துவைக்க நான் பணியமர்த்தப்பட்டேன். நான் குழந்தைப் பருவத்தில் இருந்தே ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் குடும்பத்துடன் நெருக்கமாக இருந்தமையால் படிப்படியாக ஆன்மீக நாட்டம் உள்ளவனாக மாறிவிட்டேன். ஆன்மீகத்தீ என்னுள் கொழுந்துவிட்டு எரிந்தது. நான் ஸ்ரீ நரசாவதானியின் துணிகளை துவைப்பதற்கு பதில் என் மூத்த மகன் ரவிதாஸிடம் அந்த வேலையை ஒப்படைத்தேன். நான் என்றாவது நரசாவதானியை பாத்துவிட்டால் அன்று எனக்கு வயிற்றில் உபாதை ஏற்பட்டு அன்றைய தினம் முழுவதும் உணவு உண்ண முடியாமல் போய்விடும். ஆன்மீக நாட்டமுள்ள குடும்பத்திற்கு மட்டுமே என்னால் துணி துவைக்க முடியும்.

## திருமலதாஸ் மீது ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக கருணை

ரவிதாஸ் என் முதல் மனைவி மூலம் பிறந்த மூத்த மகன். நான் நரசாவதானியின் துணிகளை துவைப்பதற்கு பதில் ரவிதாஸை துவைக்க சொன்னேன். நரசாவதானிக்கு இது எப்படியோ தெரிந்துவிட்டது. அவர் நான்தான் துவைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். பெரியவர்களின் உத்தரவை மீற கூடாது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை நினைத்துக் கொண்டு அவர் துணிகளை துவைத்தேன். ரவிதாஸ் அவற்றை நரசாவதானி வீட்டிற்கு எடுத்து சென்றான். வினோதமாக, நரசாவதானி துவைத்த துணிகளை அணிந்து கொண்டவுடன் தேளும் விஷதன்மையுடைய பூரானும் அவர் உடல் முழுவதும் ஊர்ந்து செல்வது போல் உணர்ந்தார். எனினும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு இது போன்று எதுவும் இல்லை. நரசாவதானியின் உடல் முழுவதும் பற்றி எரிவது போல தொந்தரவு ஏற்பட்டது. துணிகள் நெருப்பு ஆடைகள் போல் ஆனது. அவர் என்னை கூப்பிட்டு அனுப்பினார். அவர் நான் ஏதோ சூனியம் செய்து அவர் துணிகளின் மீது கெட்ட ஆவியை ஏவி விட்டு இவ்வாறு செய்வதாகவும் இந்த கொடூரமான நடத்தைக்காக நான் தண்டனை பெறுவேன் என்றும் கூறினார். அவர் நீதித்துறை அதிகாரியிடம் என் மீது புகார் அளித்தார். அதிகாரி நான் நிரபராதி என்று தீர்ப்பளித்தார். என் அருமை சங்கர் பட்,ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளை நம்மால் நினைத்து பார்க்க முடியாது. நான் அதிகாரியின் வீட்டில் இருந்து வந்தவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் என் வீட்டிற்கு மலர்ச்சியுடன் 16 வயது பாலகனாக வந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்ததிலிருந்தே தான் தேர்ந்தெடுக்கும் வயதில் தன் பக்தர்களுக்கு காட்சியளிப்பார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளை பற்றி நன்கு தெரிந்தவர்களுக்கு இது ஒரு சாதாரண விஷயமாகத் தோன்றும். மிகுந்த உற்சாகத்துடன் ஆச்சரியம் அடைந்த நான் **"ஐயா, நீங்கள் உயர்ந்த பிராமண ஜாதியில் பிறந்தவர். நீங்கள் சலவை தொழிலாளிகள் தங்கும் இடத்திற்கு வருவது நல்லதல்ல"** என்றேன்.

அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் **"நரசாவதானி யார் என்று நினைக்கிறாய்? சலவை தொழிலாளி துணி மூட்டைகளை சுமப்பது போல் அவர் பாவ மூட்டையை சுமந்து கொண்டிருக்கிறார் அதேசமயம் சலவை தொழிலாளியான நீங்கள் பிரம்ம ஞானத்தை (முழுமையான ஞானம்) அடைய ஏங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் நீங்கள்தான் உயர்ந்த பிராமணன். ஆகவே நான் இங்கு வருவது ஒன்றும் தவறல்ல"** என்று பதிலளித்தார். பின்னர் நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதங்களில் விழுந்து தேம்பி தேம்பி அழுதேன். என்னை அமுதம் பொங்கும் பார்வையால் நோக்கி தன் திருக்கரங்களால் என்னை தரையில் இருந்து தூக்கினார். அவர் தன் திருக்கரங்களை என் தலையின் மீது வைத்தார். என் பூர்வ ஜென்மம் முழுவதும் நியாபகத்திற்கு வந்தது. என் யோக சக்திகள் அனைத்தும் வேகம் அடைந்தன. குண்டலினி சக்தி செயல்படுத்தப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் மெதுவான நடையுடன் மறைந்தார்.

நரசாவதானி தன் வீட்டில் முளைக்கீரை வளர்த்தார். அவர் வீட்டு முளைக்கீரை மிகுந்த சுவையாக இருக்கும். எவ்வளவு கெஞ்சினாலும் யாருக்கும் அந்த காய்கறியை அவர் கொடுப்பதில்லை. அவருக்கு எவரிடமிருந்தாவது ஏதாவது பெரிதாக உபகாரம்

பெற வேண்டும் என்றால் அந்த மனிதருக்கு முளைக்கீரை அளிப்பார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாயை முளைக்கீரை சமைக்குமாறு கேட்டார். அவர் நரசாவதானி வீட்டில் இருந்து முளைக்கீரை கொண்டுவர சொல்லி கேட்டார். இதற்கு சாத்தியம் இல்லை. அவர் தாத்தா ஸ்ரீ பாப்பண்ணார்யலு **"என் அருமை ஸ்ரீ ஸ்ரீபாதா, நாளை காலை நீயே நரசாவதானியிடம் முளைக்கீரை வேண்டும் என்று கேள். நான் உன்னை அவர் வீட்டிற்கு தூக்கிக்கொண்டு செல்கிறேன். நரசாவதானி அதற்கு சம்மதிக்கவில்லை என்றால் அந்த விஷயத்தை வற்புறுத்த கூடாது"** என்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு சம்மதித்தார்.

அடுத்த நாள் காலையில் பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரை நரசாவதானி வீட்டிற்கு தூக்கிக்கொண்டு சென்றார். மூத்தவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்றும் அவர்களுடைய ஆசீர்வாதம் மிகவும் முக்கியம் என்றும் பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு சம்மதித்தார். நரசாவதானி அவர் வீட்டு திண்ணையில் அமர்ந்து கொண்டு இருந்தார். அவர் தலையில் குடுமி இருக்கும். அப்போதுதான் நாவிதன் வந்து நரசாவதானிக்கு சவரம் செய்துகொண்டிருந்தான். தன் தாத்தாவின் தோள் மீது அமர்ந்திருந்த ஸ்ரீ ஸ்ரீபாதர் நரசாவதானியை பார்த்து தன் கைகளை கூப்பி தன் வணக்கத்தை செலுத்தினார். இந்த திடீர் சம்பவத்தை கண்டு நரசாவதானி திகைப்படைந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் கூர்ந்த பார்வை நரசாவதானியின் தலையில் உள்ள குடுமியின் மீது விழுந்தது. நரசாவதானியின் குடுமி தானாகவே கீழே விழுந்தது. குடுமி எப்படி தானாகவே விழுந்தது என்பது புரியாமல் அவர் குழப்பம் அடைந்தார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாத்தாவிடம் **"தாத்தா நரசாவதானிக்கு அவர் தலையில் உள்ள குடுமியின் மீது அலாதி பிரியம். இப்போது அது தானாகவே விழுந்துவிட்டது. இப்போது அவருக்கு பிடித்தமான முளைக்கீரையை கேட்பது நன்றாக இருக்காது. ஏற்கனவே மிகுந்த வருத்தத்தில் இருப்பவரை நாம் ஏன் மேலும் வருத்தம் அடைய செய்ய வேண்டும்? நாம் வீட்டிற்கு செல்லலாம்!"** என்றார். அதற்கு பிறகு ஸ்ரீ ஸ்ரீபாதர் முளைக்கீரையை கேட்கவே இல்லை.

நரசாவதானிக்கு ஸ்ரீபதார் ஏன் தன் கைகளைக் கூப்பி மரியாதை செலுத்துவது போல் பாசாங்கு செய்தார் என்பது தெரியவந்தது. நரசாவதானி தியானத்தில் அமர்ந்திருந்த போது அவரை ஒத்த ஒரு பிரகாசமான உருவம் ஒன்று அவரிடமிருந்து வெளியானது. நரசாவதானி அவரிடம் நீ யார் என்றும் எங்கே செல்கிறாய் என்றும் கேட்டார். அதற்கு அந்த பிரகாசமான மனிதன் "நான் உன் உடலில் இருந்த புண்ணிய சரீரம். நீ வேதத்தை பல முறை பாராயணம் செய்திருக்கிறாய். நீ சுயம்பு தத்தரை வணங்கியிருக்கிறாய். அந்த தத்தரே ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்திருக்கும் போது அவரை அவமதித்தாய். நீ முளைக்கீரையின் மீதும் உன் குடுமியின் மீதும் செலுத்திய அன்பு மற்றும் பாசத்தில் பத்தாயிரத்தில் ஒரு பங்கையாவது ஸ்ரீ ஸ்ரீபாதரின் மேல் செலுத்தியிருந்தால் நீ பிழைத்திருப்பாய். மோகத்தின் (மாயை) அழிவே மோக்ஷம்(விடுதலை). நீ மோகத்தின் பிடியில் பிணைக்கப்பட்டு இருக்கிறாய். நீ விரைவில் வறுமையை சந்திக்கபோகிறாய். அதைத்

தவிர்க்கவே ஸ்ரீ ஸ்ரீபாதர் உன்னிடமிருந்து காய்கறியை தானமாக கேட்க விரும்பினார். அவர் கேட்டது போல் நீ முளைக்கீரையை கொடுத்திருந்தால் வரவிருக்கும் ஏழ்மை குறைக்கப் பட்டிருக்கும். அதுமட்டும் அல்லாமல் செல்வமும் வழங்கப்பட்டிருக்கும். நீ உனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை இழந்துவிட்டாய். ஆனாலும் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு கருணைக்கடல். அவர் தன்னுடைய இந்த அவதாரத்தை மறைத்துக்கொண்டு விட்டு மீண்டும் இன்னொரு அவதாரம் எடுப்பார். அந்த சமயத்தில் நீ ஒரு ஏழை பிராமணனாகப் பிறப்பாய். நீ அப்போதும் உன் வீட்டில் முளைக்கீரை வளர்ப்பாய். சரியான தருணத்தில் நான் உன் உடலில் மீண்டும் நுழைந்து விடுவேன். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் உன் வீட்டிற்கு வந்து அன்புடன் சமைத்து பரிமாறப்படும் முளைக்கீரை பொரியலை உண்பார். அவர் உனக்கு செல்வத்தை அளிப்பார். எனினும் நான் இப்போது உன்னை விட்டு செல்கிறேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் வணக்கம் தெரிவித்தது உனக்கு அல்ல. புண்ணியங்களின் உருவகமான என்னை அவருடன் வந்து ஒன்றாகுமாறு ஸ்ரீ ஸ்ரீபாதர் எனக்கு பிறப்பித்த ஆணை. நீ ஸ்ரீ ஸ்ரீபாதரின் வணக்கத்தை ஏற்றுக்கொண்டதால் என்னுடைய பண்பாக இருந்த உன் புண்ணியங்கள் அனைத்தையும் இழந்து விட்டாய். உன்னிடத்தில் பாவங்களின் பண்பு மட்டுமே இருக்கிறது" என்று கூறிவிட்டு புண்ணிய புருஷன் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் ஐக்கியமானது.

அப்போதிலிருந்து நரசாவதானியின் வாழ்க்கையின் நிலைமை மோசமடையத் தொடங்கியது. அவரின் வார்த்தைகளை யாரும் மதிக்கவில்லை. அவர் உடலில் இருந்து ஒளி மறைந்தது. பீதிகாபுரத்தில் காலரா நோய் பரவியது. பலர் இறந்து கொண்டு இருந்தனர். தண்ணீர் மாசடைந்து உள்ளதால் அதில் கிருமிகள் வளர்ந்துள்ளன என்றும் இந்த தொற்று நோய் பரவுவதற்கு காரணம் என்று மருத்துவர்கள் முடிவுக்கு வந்தனர். பயத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் பாப்பண்ணார்யாவிடம் சென்று இந்த அச்சுறுத்தும் நோயிலிருந்து தங்களை காப்பாற்ற வேதங்களில் மக்கள் நலனிற்காக ஏதாவது வழிமுறை பரிந்துரைக்க பட்டிருக்கிறதா என்று வேண்டிக்கொண்டனர். அவர்கள் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

ஸ்ரீ பாப்பண்ணார்யலு இந்த பிரச்னையை தன் ஆழ்மனதால் நோக்கினார். காற்று மாசுபட்டதுதான் இந்த நோய்க்கு காரணம் என்றும் தண்ணீர் மாசுபட்டதால் இல்லை என்றும் கூறினார். ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் கூற்று மருத்துவ கோட்பாடுகளுக்கு மாறாக இருப்பதாக மருத்துவர்கள் அனைவரும் ஒத்துக் கொள்ள மறுத்தனர். மக்கள் அனைவரும் கிராம தேவதைகளை திருப்தி படுத்த பல்வேறு பூஜைகளையும் மிருக பலிகளையும் செய்துகொண்டிருந்தனர். ஒரு மிருகம் கொல்லப்பட்டால் அதன் உயிர் சக்தி வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும். மந்திரங்கள் ஜபிக்கப்பட்டால் அதன் உயிர்சக்தி பலி கொடுப்பவர்களின் கட்டுப்பாட்டிற்கு வந்துவிடும். பிராண சக்தியை அதிகப்படுத்த பல யோக வழிமுறைகள் இருப்பதாகவும் சாத்வீக முறை வழிபாடுகள் இருப்பதாகவும் பாப்பண்ணார்யா தெரிவித்தார். மேலும் சாத்வீக முறைகளைத்தான் கிராம தேவதைகளை சாந்தப்படுத்த கடைபிடிக்க வேண்டும் என்றார். அவர் அப்படி அறிவுறுத்தியும் மக்கள் மிருகங்களை பலியிடுவதை நிறுத்தவில்லை.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தெய்வீக நடவடிக்கைகளின் மீது நம்பிக்கை இருந்த சிலர் அவரிடம் இவ்விஷயத்தை பற்றிக் கேட்டனர். பின்னர் ஸ்ரீசரணர், தான் கிராமதேவதையை மிருக பலி கேட்க கூடாது என்று கூறி இருப்பதாகவும் அவள் குளிப்பதற்காக கடலுக்கு சென்றிருப்பதாகவும், காளிதேவி பால் பாயசத்தை படைத்தாலே சமாதானமாகி விடுவாள் என்று அவர்களிடம் கூறினார். அவர் இந்த தகவலை இந்த கிராமத்து மக்கள் மட்டுமல்லாது பக்கத்து கிராமங்களுக்கும் தண்டோரா போட்டு தெரிவிக்க வேண்டும் என்று வழிகாட்டினார். இதை யார் மூலமாக தெரிவிக்க வேண்டும் என்று கேட்டதற்கு காலரா நோயினால் தவித்துக்கொண்டிருக்கும் வெங்கையாதான் இந்த வேலையை செய்யவேண்டும் என்றும் இது அவரின் ஆணை என்று அவரிடம் தெரிவிக்கச் சொன்னார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் நம்பிக்கையுள்ள பக்தர்கள் வெங்கய்யாவிடம் சென்றனர். வெங்கையாவுக்கு சாவு நெருங்கிக்கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணையை அவரிடம் கூறியவுடன் அவர் மயங்கி விழுந்துவிட்டார். ஒரு நாழிகைக்குப் பின்னர் அவர் உடல்நிலை சரியாகி முழுமையான ஆரோக்கியம் அடைந்தார். இந்த செய்தி பீதிகாபுரம் முழுவதும் சலசலப்பை உண்டாக்கியது. வெங்கையா தண்டோரா போட்டு பிரகடனம் செய்தார். பாப்பண்ணார்யா ஒரு பெரிய பாத்திரம் முழுவதும் தண்ணீர் நிரப்பி அவரின் முன்னிலையில் கொண்டுவரச் சொன்னார். அவர் விஷத்தன்மை உடைய ஐந்துக்களை அழிக்க கூடிய மந்திரங்களை ஜெபித்தார். காற்று மண்டலத்தில் இருந்த அந்த விஷத்தன்மையுடைய புழுக்கள் படபடக்கும் ஓசையோடு வந்து தண்ணீரில் விழுந்தது. காற்று மண்டலத்தின் அசுத்தம் நீக்கப்பட்டது. அச்சுறுத்தும் நோய் பீதிகாபுரத்தை விட்டு நீங்கியது.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிறந்தநாளான கணேச சதுர்த்தி அன்று ஸ்ரீ ராஜசர்மா அவர் மனைவி மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் பாப்பண்ணார்யா வீட்டிற்கு சென்றார். எப்போதெல்லாம் பாப்பண்ணர்யா ஸ்ரீ ஸ்ரீபாதரின் கால்களில் உள்ள தெய்வீக சின்னங்களை கவனிக்க நினைக்கிறாரோ அப்போதெல்லாம் ஒரு பளபளப்பான ஒளி தோன்றி அவர் கண்களை கூசச் செய்யும். அதனால் அவரால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தெய்வீகச் சின்னங்களை பார்க்க முடியாது. இது அவருக்கு புரியாத புதிராகவே இருந்தது. ஒரு நாள் காலை வேளையில் அரிசி உமியில் தெய்வீகப் பாதச்சுவடுகளை கண்டார் பாப்பண்ணார்யா. அவர் தன் மகள் சுமதியிடம் "**அம்மா இந்த வழியாக யார் சென்றார்கள்?**" என்று கேட்டார். அதற்கு "**வேறுயார் உங்கள் அருமை பேரன்தான் இப்படி சென்றான்**" என்றாள். அந்த பாதச்சுவடுகள் 16 வயது பாலகனுடையது போல் இருந்தது. தாத்தா ஸ்ரீவல்லபரை தன் மடியில் அமர்த்திக் கொண்டு அவர் ஸ்ரீசரணங்களை (தெய்வீக திருப்பாதங்களை) ஆராய்ந்தார். முன்பு அவர் கண்களில் தோன்றிய பளபளக்கும் ஒளி தோன்றவில்லை. அவர் ஸ்ரீ தத்தரின் அவதாரம்தான் என்று நிரூபிப்பதற்கான அம்சங்கள் அவர் முன் தோன்றின. அவர் தெய்வீக ஸ்ரீசரணங்களுக்கு முத்தமிட்டுவிட்டு இந்த சிறுவன் ஸ்ரீ தத்தர்தான் என்று முடிவு செய்து கொண்டார். பின்னர் எந்தவித முயற்சியும் இல்லாமல் பாப்பண்ணார்யாவின்

வாயில் இருந்து சில வார்த்தைகளை உச்சரித்தார். அதற்கு இலக்கண திருத்தமோ குறைபாடற்ற யாப்பிலக்கணமோ தேவையில்லை.

ஶ்ரீ ஶ்ரீபாதர் தன் தாத்தாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தார். "தாத்தா, நீங்கள் சூரியனிடமிருந்து ஆற்றல் மிகுந்த சக்தியை எடுத்து ஶ்ரீசைலத்தில் உள்ள மல்லிகார்ஜுன சிவலிங்கத்திடம் பரிமாற்றம் செய்தீர்கள். அதே சமயம், சூரியனிடமிருந்து வந்த சக்தி கோகர்ணத்தில் உள்ள மஹாபலேஸ்வரரிடமும் (கிருஷ்ணா நதியின் உற்பத்தி ஸ்தானம்) பீதிகபுரத்தில் உள்ள சுயம்பு தத்தரிடமும் ஈர்க்கப்பட்டது. நான் கோகர்ண க்ஷேத்திரத்தை இன்னும் சக்தியூட்ட விரும்பினேன். மஹாபலேஸ்வரத்தில் உள்ள மக்களின் விரும்பத்தகாத அதிர்வலைகளை பரமேஸ்வரரின் ஆத்மலிங்கத்திடம் செலுத்திவிட்டு என்னை சரணடைபவர்களுக்கு நல்ல அதிர்வலைகளை செலுத்துவதுதான் என் எண்ணம். அதேபோல் தரிசித்த மாத்திரத்தில் மோக்ஷம் அளிக்கும் ஶ்ரீசைல மல்லிகார்ஜுன லிங்கத்தை இன்னும் சக்திவாய்ந்ததாக மாற்ற எண்ணினேன். நீங்கள் உண்மையான முனிவர். என் தாய் என் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்ததால் எனக்கு குறைவான ஆயுள் இருக்கக்கூடாது என்று முடிவெடுத்தீர்கள். என் தாய் என்னுடைய ஶ்ரீவல்லப உருவத்தை நமஸ்கரித்ததால் நான் குறைந்த காலமே இருப்பேன் என்று கூறினேன். நம் இருவரின் வார்த்தைகளிலும் இருக்கும் முரண்பாடை தவிர்க்க நான் உங்கள் வீட்டில் 16 வருடங்கள் மட்டுமே இருக்கப்போவதாக திட்டமிட்டுள்ளேன். உலக பந்தங்களில் இருந்து விடுவித்துக் கொள்ள நினைக்கும் ஆன்மீக ஆர்வலர்களுக்கு என் கருணையை பொழிய வேண்டும். நான் எப்போதும் வாழ வேண்டும் என்று எண்ணுகிறீர்கள். நான் அதையும் நிறைவேற்றுகிறேன். ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபர் என்ற பெயருடன் இருக்கும் இந்த அற்புதமான தெய்வீக வடிவம் மறைந்துவிடும். ஶ்ரீ நரசிம்ம சரஸ்வதி உருவத்தின் வருகைக்கு பிறகும் கூட ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப உருவம் தொடர்ந்து உண்மைத்தன்மையுடன் நிலைத்திருக்கும். ஶ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரித்த பின்னர் கதலிவன (வாழை காடு) காட்டில் 300 வருடங்கள் தவத்தில் இருப்பேன். பின்னர் பிரக்ஞானபுரத்தில் (அக்கல்கோட்) ஸ்வாமி சமர்த்தராக வடிவமெடுத்து என் உயிர்சக்திகளை அரசமரத்திடம் மாற்றிவிட்டு ஶ்ரீசைல சிவலிங்கத்துடன் ஐக்கியமாகிவிடுவேன்" என்றார்.

பாப்பண்ணார்யா அனைத்தையும் ஆச்சரியத்துடனும் வியப்புடனும் கவனித்துக் கொண்டிருந்தார். ஶ்ரீ ஶ்ரீபாதரின் முதல் பிறந்தநாள் அவர் தாத்தாவின் வீட்டில் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது.

அன்று பீதிகாபுரத்தில் ஒரு வினோதமான சம்பவம் நடந்தது. காலையில் நரசாவதானியும்,அர்ச்சகரும் மற்றும் சிலரும் ஶ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்கு சென்ற போது அங்கு சுயம்பு தத்தரை காணவில்லை. சிலை காணாமல் போன செய்தி கிராமம் முழுவதும் காட்டுத்தீ போல பரவியது. நரசாவதானியின் மீது பொறாமை கொண்ட தீய நடைமுறைகளை பேணும் ஒரு தாந்த்ரீகன், நரசாவதானிதான் சிலை காணாமல் போனதற்கு காரணம் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தான். பின்னர் பீதிகாபுர பிராமண சமூகம் நரசாவதானியின் வீட்டை முழுவதுமாக சோதனை

இடத் தீர்மானித்தனர். பாப்பண்ணார்யாவிடம் கேட்ட போது உண்மை உரிய நேரத்தில் வெளிவரும் என்றும் இந்த நேரத்தில் மௌனமாக இருப்பதே பொருத்தம் என்றார். மேலும் சரியான தருணத்தில்தான் பேசுவதாக கூறினார்.

நரசாவதானி வீட்டின் சில இடங்களை தோண்டிய போது மண்டை ஓடுகளும் தீய சக்திகளுக்கு தொடர்புடைய சில பொருட்களும் கிடைத்தன. நரசாவதானி குற்றமற்றவர் என்றாலும் அவர் சூனியக்காரன் என்றும் தீய வழிபாடு செய்பவர் என்றும் முத்திரை இடப்பட்டார். நாளுக்கு நாள் அவர் ஆரோக்கியம் குறைந்து கொண்டே போனது. அவர் வீட்டில் ஒரு மலட்டுப் பசு இருந்தது. அதை எருது போல விவசாய நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தினர். நரசாவதானி அதற்கு சரியாக உணவளிப்பதில்லை. அந்த தாந்த்ரீகன் அதன் மீது தீய சக்தியை ஏவி விட்டான். அது தன் கயிற்றை அறுத்து கொண்டு தன் கட்டுப்பாட்டை இழந்தது. அது வீட்டில் உள்ளவர்களை தன் கொம்பால் குத்திவிட்டு தன் முதலாளி ஆசையாக வளர்த்த முளைக்கீரை தோட்டத்தை அழித்தது. எவராலும் அதை கயிற்றைக் கொண்டு கட்ட முடியவில்லை.

அன்று நரசாவதானியுடைய தாயின் திவச தினம். வடை மற்றும் சில உணவுப் பொருட்கள் அதிக அளவில் செய்யப்பட்டிருந்தது. நரசாவதானி வீட்டு சமையல் அறையில் தயாராகி இருந்தவைகளை அந்த பசு உண்டது. அப்போது அதிதிகள் உணவருந்தி இருந்தனர் ஆனால் வீட்டில் உள்ளவர்கள் இன்னும் சாப்பிடவில்லை. ஶ்ரீ ஶ்ரீபாதர் உடனடியாக நரசாவதானி வீட்டிற்கு செல்லவேண்டும் என்று தன் தந்தை ராஜசர்மாவை வற்புறுத்தினார். ராஜசர்மா ஶ்ரீ ஶ்ரீபாதரை தன்னுடன் அழைத்துச்சென்று நரசாவதானியின் வீட்டின் முன் நின்றனர். அந்த சமயத்தில் நரசாவதானி வீட்டு பசு வெளியே வந்தது. ஶ்ரீ ஶ்ரீபாதர் தன் தந்தையிடம் தன்னை இறக்கி விடுமாறு சொன்னார். அந்த பசு ஶ்ரீ ஶ்ரீபாதரை மூன்று முறை சுற்றி விட்டு ஶ்ரீ ஶ்ரீபாதரின் திருப்பாதங்களில் நமஸ்கரித்துவிட்டு இறந்துவிட்டது.

பீதிகாபுரத்து மக்கள் இந்த நிகழ்ச்சிக்குப் பல கருத்துக்கள் தெரிவித்தனர். அவர்கள் வடையில் விஷம் கலக்கப்பட்டிருந்தது என்றும் அதிதிகள் அதிர்ஷ்டத்தினால் உயிர் பிழைத்தனர் என்றும் பசு அந்த விஷத்தினால்தான் இறந்துவிட்டது என்றும் விவரித்தனர். நரசாவதானி பசுவை கொன்ற குற்றத்தினால் பாவம் அவரை தாக்கும் என்று கருதினர்.

இந்த கருத்துக்கள் அனைத்தும் நரசாவதானிக்கு மிகுந்த வேதனை அளித்தது. பசு ஶ்ரீ ஶ்ரீபாதரை சுற்றிவிட்டு இறந்து போனதால் ஶ்ரீசரணர் அசாதாரண தெய்வீக குணங்கள் நிறைந்தவர் என்று பலர் கருதினர். ராஜசர்மாவுக்கு ஆயுர்வேதத்தில் கொஞ்சம் பரிட்சயம் இருந்ததால் நரசாவதானி கேட்டுக்கொண்டதால் அவருக்கு வைத்தியம் பார்த்தார். ராஜசர்மா நரசாவதானியின் வீட்டுக்கு செல்லும் போதெல்லாம் ஶ்ரீ ஶ்ரீபாதரும் அவருடன் செல்வார். ராஜசர்மா சிறப்பாக மருத்துவம் செய்தும் நரசாவதானியின் ஆரோக்கியம் மேலும் சீர்கெட்டு போனது. ஒரு நாள் நரசாவதானி இறந்து போனார்.

பீதிகாபுரத்தில் புரளிகள், தவறான பிரச்சாரங்கள், பொய்யை உண்மையாகத் திரித்து கூறுதல் மற்றும் உண்மையை பொய்யாக கூறுவது போன்றவைகள் மிகவும் பரவலாக இருந்தது. ராஜசர்மா மிகுந்த நல்லெண்ணத்துடன்தான் மருந்துகள் கொடுத்தார் ஆனால் அனைத்து முயற்சிகளும் பலிக்கவில்லை. எப்படியிருந்தாலும் பிறப்பும் இறப்பும் கடவுளின் கையில் தானே இருக்கிறது!! தாந்த்ரீகன் தாந்த்ரீகம் செய்ததால்தான் நரசாவதானி இறந்தார் என்று சிலர் எண்ணினர். சிலர் முன்விரோதத்தால் ராஜசர்மா சரியாக வைத்தியம் செய்யவில்லை என்றும் வேறு யாராவது வைத்தியம் செய்திருந்தால் அவர் பிழைத்திருப்பார் என்றும் எண்ணினர். ஒரு சிலர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தினமும் நரசாவதானியின் வீட்டிற்கு சென்ற போதும் அவர் இறந்துவிட்டதால் ஸ்ரீ ஸ்ரீபாதரை தத்த அவதாரமாக கருதுவது நியாயமற்றது என்று யூகித்தனர். ஆகவே ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு சாதாரண சிறுவன்தான். இந்த விஷயத்தை பற்றி இதுவே சிலரின் எண்ணமாக இருந்தது. விஷத்தினால்தான் பசு இறந்தது என்றும் பசுவைக் கொன்ற கொடும்பாவத்தி னால்தான் நரசாவதானி இறந்துபோனார் என்றும் அந்த வீட்டில் இருந்து மேலும் சில பிணங்கள் சுடுகாட்டிற்கு செல்லலாம் என்றும் தீர்மானித்தனர். பசுவைக் கொன்ற பாவத்தை அகற்ற பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன: பிராமணர்களுக்குத் தாராளமாக நன்கொடைகள் கொடுப்பது, பிராமணர்களுக்கு தங்கத்திலான பசுவை தானம் கொடுப்பது, 40 நாட்களுக்கு பரிகார ஹோமங்கள் செய்வது,ஹோமங்கள் நடக்கும் போது பிராமணர்களுக்கு தினமும் அன்னதானம் அளிப்பது. இவைகளே பசுவைக் கொன்ற பாவத்தை அகற்றுவதற்கான வழிமுறைகள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்வதற்கு நரசாவதானியின் சொத்துகள் முழுவதையும் விற்க வேண்டும். இந்த விஷயம் நரசாவதானியின் குடும்பத்திற்கு பேரிடியாக இருந்தது.

நரசாவதானியின் இறந்த உடல் எரியூட்டப் பட சுடுகாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. ராஜசர்மா, ஸ்ரீ ஸ்ரீபாதர் மற்றும் பாப்பண்ணார்யா, நரசாவதானியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். நரசாவதானியின் மனைவி ஸ்ரீ ஸ்ரீபாதரின் கைகளை பிடித்துக்கொண்டு அழுதாள். **“ஸ்ரீ ஸ்ரீபாதா, நான் சுமங்கலி பூஜைகளுக்கு மஞ்சள் குங்குமம் எடுத்துக்கொள்ள எவ்வளவு தொலைவாக இருந்தாலும் சென்றுவிடுவேன். நீ தத்தராக இருந்தால் உன் நரசன்ன தாத்தாவை மீண்டும் உயிர் பிழைக்க வைப்பது முடியாதா என்ன?”** என்றாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் அமுதம் ததும்பும் இதயத்துடன் தம் திருக்கரங்களால் அவளின் கண்ணீரை துடைத்துவிட்டு மௌனமாக நின்றார். இறுதி ஊர்வலம் தொடங்கியது. ராஜசர்மா, ஸ்ரீ ஸ்ரீபாதர், ஸ்ரீ பாப்பண்ணார்யா ஆகியோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நரசாவதானியின் மூத்த மகன் சிதைக்கு தீயூட்ட முற்பட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் கண்களில் இருந்து 2 சொட்டு கண்ணீர் தரையில் விழுந்தது. இடியின் முழக்கத்துடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் “ஓ!! இறந்த தந்தையின் சிதைக்கு தீ மூட்டும் மகனை பார்த்திருக்கிறேன் ஆனால் உயிரோடு இருக்கும் தந்தையின் சிதைக்கு தீ மூட்டும் மகனை பார்த்ததில்லை” என்று கூறினார்.

அனைத்து மக்களும் அவரை வியப்புடன் பார்த்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் மெதுவாக சிதையில் படுத்துக் கொண்டிருக்கும் நரசாவதானியின் புருவமத்தியை தன் கட்டைவிரலால் தொட்டார். மீண்டும் அவர் புருவமத்தியை தொட்டார். நரசாவதானி மெதுவாக சுயநினைவு பெற தொடங்கினார். நரசாவதானி அவர் சவ ஊர்வலத்திற்கு வந்தவர்களுடன் பெருமையுடன் ஊர்வலமாக வீட்டிற்கு சென்றடைந்தார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் நரசாவதானியின் புருவமத்தியை தொட்டவுடன் அவர் கர்ம கொள்கையின் சூக்ஷ்ம ரகசியங்களை உணர்ந்துகொண்டார். அவர் வீட்டில் இருந்த மலட்டுப் பசு தன் தாய் என்றும் கிழட்டு எருது அவர் தந்தை என்பதையும் புரிந்துகொண்டார். அவர்கள் இருவரும் இவரின் தந்தைவழி பாட்டியை வயதான காலத்தில் மோசமாக நடத்தியதால்தான் இப்படிப்பட்ட கீழ்த்தனமான பிறவி எடுத்து இவருக்கு அடிமையாக இருந்தனர். மேலும் அந்த தாய் பசு இறக்கும் தருவாயில் ஸ்ரீ ஸ்ரீபாதரை தன் பாலை குடிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போது அடுத்த ஜென்மத்தில் அவள் மீண்டும் மலட்டு பசுவாக பிறக்கும் போது குடிப்பதாக கூறியதையும் தெளிவாக மனக்கண்ணில் கண்டார்.

நரசாவதானியும் சூக்ஷ்ம உலகங்களின் குறிப்பிட்ட விவரங்களை உணர்ந்து கொள்ள தொடங்கினார். உதாரணமாக இவருக்கு தாந்த்ரீக முறைகளினால் தீங்கு விளைவித்த தாந்த்ரீகன் சீக்கிரம் இறந்து அடுத்த பிறவியில் தீய பிராமணனாக பிறந்து ஸ்ரீசரணர் துறவியாக பிறக்கும் போது அவனுக்கு கருணை காட்டுவார் என்பது தெளிவானது. மேலும் அடுத்த பிறவியில் இவருக்கும் துறவி வேடத்தில் இருக்கும் ஸ்ரீசரணர் ஆதரவாக இருந்து அபரிமிதமான செல்வத்தை அளிப்பார் என்பதையும் அவர் தெரிந்து கொண்டார். பின்னர் முளைக்கீரை சமையலை ஸ்ரீசரணர் உண்டு விட்டு அந்த கீரை கொடியை தன் கரங்களால் பிடுங்கிவிட்டு தங்கக் காசுகள் நிறைந்த பாத்திரங்களை வழங்குவார். நரசாவதானி மனக்கண்ணில் தன் வருங்காலத்தை தெளிவாக பார்த்தார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகள் முன்பு சம்பவிக்காததும் ஒப்பிட்டு பார்க்க முடியாதவையாகவும் இருக்கும். நாளை ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், நரசாவதானிக்கும் அவர் மனைவிக்கும் இரக்கத்துடன் அளித்த அறிவுரைகளையும், அவர்களிடம் எப்படி கருணையை வெளிக்காட்டினார் என்பதையும் கூறுகிறேன். நாம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை நினைவுபடுத்திக் கொண்டு சிறிது நேரம் பஜனை செய்து பொழுதை கழிப்போம். அவரின் நாமத்தை அனைவரும் சேர்ந்து பாடுவோம். அவரின் தெய்வீக நாமம் எங்கெல்லாம் ஜபிக்கப்படுகிறதோ அங்கு அவர் சூக்ஷ்ம ரூபத்தில் நடமாடுவார். இது கண்டிப்பாக உண்மை" என்றார் திருமலதாஸ்.

சிறந்த பக்தரான திருமலதாஸுடன் நான் தொடர்பில் இருக்கிறேன் என்பதை எண்ணி உடனடியாக மகிழ்ச்சியும் உயர்ந்த நிலையையும் அடைந்தேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 7

## அண்ட கோளங்கள் பற்றிய விளக்கம்

### ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீ வல்லப சரிதாம்ருதத்தின் சிறப்பு

காலையில் திருமலதாஸ் தன் தினசரி வழிபாடுகளை முடித்து கொண்டு விவரிக்க தொடங்கினார். “என் அருமை சங்கர் பட் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தெய்வீக வரலாறு ஒரு தெய்வீக அமிர்தம். அது முன்பு கேட்டிராததும்,முன்பு சம்பவிக்காததும் மற்றும் விவாதிக்க முடியாததுமானது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உன் மீது கொண்ட எல்லையில்லா கருணையின் காரணத்தால் அவரின் சரிதாம்ருதத்தை எழுதும் நல் அதிர்ஷ்டத்தை பெற்றுள்ளாய். மிகப்பெரிய ஞானிகளுக்கு கூட கிடைக்காத நல்லதிர்ஷ்டம் உனக்கு வழங்கப்பட்டுள்ளது. இது அவரின் விருப்பம் மட்டுமே.

### ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றுவது


மரணத்தில் இருந்து வெளியே வந்தவுடன் நரசாவதானியின் ஈர்ப்புசக்தி குறைந்துவிட்டது. முன்பு தன் தியானத்தில் எவரை நினைத்தாலும் அவர் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் இவர் கண்முன் தோன்றி விடுவர். அந்த சக்தியை இப்போது இழந்துவிட்டார். முன்பு இவருக்கு பயந்து கொண்டும் புகழ்ந்துகொண்டும் இருந்தவர்கள் அனைவரும் இப்போது பயமற்று இருந்தனர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இவரை இழிவாக பேசி கிண்டல் செய்தனர். அவருடைய நிதி நிலைமையும் சீர்குலையத் தொடங்கியது. இரண்டு வேளை உணவு கிடைப்பது கூட சிரமமாக இருந்தது. தன் துயரமான நிலையை எண்ணி புலம்பிக்கொண்டே அவர் தெருவில் நடந்து வந்தார். அச்சமயத்தில் பாப்பண்ணார்யா தன் பேரனை தோளில் தூக்கிக்கொண்டு வந்தார். பாப்பண்ணார்யாவின் வீடு அந்த தெருவின் மூலையில் அமைந்துள்ளது. ஸ்ரீசரணர் தன் வீட்டில் இருக்கும் நேரத்தை விட தன் தாத்தாவின் வீட்டில் இருக்கும் நேரம்தான் அதிகம். அவர் ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டிற்கும் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய்ய சிரேஷ்டியின் வீட்டிற்கும் தன் இஷ்டம் போல் செல்வார்.

நரசாவதானிக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் பேசவேண்டும் போல் இருந்தது. அந்த தெய்வீக குழந்தையை தன் கையில் தூக்கிக்கொண்டு முத்தமிட வேண்டும் போல் தோன்றியது. பாப்பண்ணார்யாவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் செல்வதை நரசாவதானி கண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் நரசாவதானியை பார்த்து சிரித்தார். அந்த சிரிப்பு உள்ளத்தை மயக்கும் விதமாக இருந்தது. பின்னர் நரசாவதானி மளிகைப் பொருட்கள்

வாங்குவதற்கு சிரேஷ்டியின் வீட்டிற்கு சென்றார். அங்கு சிரேஷ்டியின் மடியில் ஸ்ரீ ஸ்ரீபாதர் அமர்ந்திருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பார்வையை நரசாவதானியின் மீது செலுத்தி புன்னகை புரிந்தார். நரசாவதானி மளிகைப் பொருட்களை வாங்கிக்கொண்டு தன் வீட்டிற்கு வந்து விட்டு நரசிம்ம வர்மாவின் வீட்டிற்கு சென்றார். அச்சமயத்தில் நரசிம்ம வர்மாவின் வீட்டில் அவர் தோளில் ஸ்ரீ ஸ்ரீபாதர் அமர்ந்திருப்பதை நரசாவதானி கண்டார். மீண்டும் நரசாவதானியை கண்டு ஸ்ரீவல்லபர் விளையாட்டுத்தனமான புன்னகை புரிந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதரை ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ வர்மா மற்றும் ஸ்ரீ சிரேஷ்டி ஆகியோரின் வீட்டில் ஒரே நேரத்தில் நரசாவதானி கண்டார். அவர் இது என்ன கனவா அல்லது விஷ்ணு மாயையா என்று குழம்பினார்.

கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் இவரை பல வழிகளில் குறை கூறிக்கொண்டும் கேலி செய்து கொண்டும் இருந்தனர். பாதகயா க்ஷேத்திரத்தில் காணாமல் போன ஸ்ரீ தத்தரின் சிலைக்கு நரசாவதானிதான் காரணம் என்று பழிபோட்டனர். நரசாவதானி தெருக்களில் இலக்கு தெரியாத யாத்ரீகன் போல உலாவிக்கொண்டிருந்தார். பித்து பிடித்தது போல் வீடு வந்து சேர்ந்தார். தன் கணவரின் நிலையை கண்டு அவர் மனைவி துயரத்தில் ஆழ்ந்தாள். தன் மனவேதனையைக் கடவுளிடம் வெளியிட பூஜை அறையின் உள் சென்றாள். அங்கு அவள் கண்டது ஒரு அற்புதமான காட்சி. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அவர்களின் பூஜை அறையில் இருந்தார். அந்த தம்பதிகளின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவர்கள் சமைத்து தரும் முளைக்கீரை சமையலை கொஞ்சமாவது உண்ணுமாறு ஸ்ரீ ஸ்ரீபாதரை கெஞ்சினர். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு சம்மதிக்கவில்லை. சரியான சமயம், காரணம் மற்றும் செயல் ஒன்றாக வரும்போது சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். அதை பகுத்து உணர தெரிந்தவர்கள் அதை கவனித்து நன்மை பெறுகிறார்கள். அதைப் பகுத்து உணர தெரியாதவர்கள் அவற்றை கவனிக்காமல் வாய்ப்புகளை இழந்து விடுகின்றனர்.

கடைசியாக அவர்கள் வீட்டில் உணவருந்த ஸ்ரீ ஸ்ரீபாதர் சம்மதித்தார், ஆனால் இந்த பிறவியில் அல்ல. அவர் தனது அடுத்த பிறவியில் மகாராஷ்டிரத்தில் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக பிறக்கும் போது அவர்கள் வீட்டுக்கு வந்து அவர்கள் சமைத்த உணவுடன் முளைக்கீரை பொரியலை கண்டிப்பாக உண்பதாக கூறினார். கணேச சதுர்த்தி அன்று நிகழ்ந்த அவருடைய கணேச அவதாரத்தின் சக்திகளைக் கொண்டு கஜானன் (கஜானன் மஹராஜ்) என்கிற பெயரில் இன்னொரு சிறந்த மனிதர் அவர் பிறந்த இடத்திற்கு அருகில் சில நூற்றாண்டுகளுக்கு பிறகு



*பிறப்பார்.* **சூரியன் மற்றும் சந்திரனின் திசைகள் கூட மாறலாம் ஆனால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் வாக்குகளை எவராலும் மாற்ற முடியாது. இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் பஞ்சபூதங்களும் உட்பட அவரின் ஆணைக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். அவரின் சத்தியங்களை நிறைவேற்ற உறுதி உள்ளவராகவும் உண்மையானவராகவும் நடந்துகொள்வார். பிரஞ்சமே அசைந்து யுகங்கள் மாறினாலும் அவரின் திருவிளையாடல்கள் எப்போதும் உண்மையாகவும் மிகவும் நவீனமாகவும் இருக்கும்.** *அந்த பூஜை அறையில் நரசாவதானிக்கும் அவர் மனைவிக்கும் சில நன்மை தரும் அறிவுரைகளை ஸ்ரீ ஸ்ரீபாதர் அளித்தார். அந்த நன்மை தரும் அறிவுரைகள் தத்த பக்தர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். பின்வரும் உரையாடல் நரசாவதானிக்கும் ஸ்ரீவல்லபருக்கும் இடையே நடைபெற்றது.*

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கும் நரசாவதானிக்கும் பூஜை அறையில் நடந்த உரையாடல் - நரசாவதானிக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் அளித்த உபதேசங்கள்

*நரசாவதானி கேட்ட கேள்விகளுக்கு பதிலாக ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உபதேசங்களாகப் பதில் அளித்தார்.*

**நரசாவதானி** : *நீ யார்? கடவுளா? யக்ஷனா? (தெய்வீக பிறவி) ஒரு மாயாஜாலக்காரனா?*

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : *நான் நான்தான். பஞ்ச பூதங்களால் ஆன இந்த படைப்பின் ஒவ்வொரு அணுவிலும் அதனுடன் பிறந்த முதன்மையான சக்தி. மிருகங்கள்,பறவைகள் முதல் இந்த அனைத்து எண்ணற்ற உயிரினங்களின் தாய்வழி மற்றும் தந்தைவழி உருவங்களாக அவற்றுக்குள் நான்தான் வசிக்கிறேன். அனைத்து படைப்புகளுக்கும் நான்தான் ஆசான்.*

**நரசாவதானி** : *அப்படியென்றால் நீ ஸ்ரீ தத்தரின் அவதாரமா?*

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : *சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நான் ஸ்ரீ தத்தர்தான். உங்களுக்கு ஒரு உடல் இருப்பது போல் நீங்கள் என்னை அடையாளம் கண்டுகொள்ள நானும் ஒரு உடலுடன் வந்துள்ளேன். உண்மையில் எனக்கு உருவமும் இல்லை குணமும் இல்லை.*

**நரசாவதானி** : *அப்படியென்றால் உனக்கு உருவமோ குணமோ இல்லை அப்படித்தானே?*

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : *உருவமில்லாதது கூட உருவம்தான். பண்புகள் இல்லாதது கூட பண்புதான். நான் உருவத்திற்கும் உருவம் இல்லாமைக்கும், குணத்திற்கும் குணம் இல்லாமைக்கும் அடிப்படை மற்றும் அவைகளுக்கும் அப்பாற்பட்டவன்.*

**நரசாவதானி** : நீ எல்லாமும் என்றால் ஏன் உயிரினங்களுக்கு சந்தோஷமும் துக்கமும் ஏற்படுகிறது?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : நானும் நீங்களும்தான் உங்களுக்குள் இருக்கின்றோம். உங்களுக்குள் வசிக்கும் நீங்கள் ஜீவன் (தவறுதலாக தன்னை தனி ஆத்மாவாக எடுத்துக் கொள்ளும் ஆத்மா) மற்றும் உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் நான் பரமாத்மா (எங்கும் நிறைந்திருக்கும் உயர்ந்த நிலையில் இருக்கும் நான்). நீங்கள்தான் அனைத்தையும் செய்பவர் என்ற கருத்து உங்களிடம் இருக்கும் வரை நீங்கள் நான் ஆக முடியாது. அதுவரை எதிர்மறை ஜோடிகளான சந்தோஷம்-துக்கம், பாவம்-புண்ணியம் ஆகியவற்றில் இருந்து வெளிவர முடியாது. உங்களுக்குள் இருக்கும் நீங்கள் மறைந்து நான் மேலோங்கும் போது நீங்கள் என்னருகில் வருவீர்கள். நீங்கள் என்னருகில் வர வர உங்களுடைய பொறுப்புகள் குறையத் தொடங்கும். நீங்கள் என் பராமரிப்பில் இருக்கும் போது சந்தோஷமும் நல்வாழ்வையும் பெறுவீர்கள்.

**நரசாவதானி** : சிலர் ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்கின்றனர். மற்றவர்கள் ஜீவாத்மா பரமாத்மாவுக்கு மிக அருகில் இருக்கின்றது என்கின்றனர். வேறு சிலர் ஜீவனை கடவுளாக பாவிக்கின்றனர். இவற்றில் எது சரி?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : நாம் இருவரும் தனியாக இருப்பதில் எந்த நஷ்டமும் இல்லை. உங்களுடைய அஹங்காரம் நிர்மூலமாக்கப்படும் போது நல்ல அதிர்ஷ்டங்கள் வந்து சேரும் மற்றும் நாம் இருவரும் இருமை நிலையில் இருப்போம். நீங்கள் என் கருணையால் பெற்ற அனைத்திற்கும் நீங்கள் வெறும் கருவிதான் என்று உணர்ந்துகொண்டு பேரானந்த நிலையில் இருப்பீர்கள். மோகத்தை களைதல்தான் மோக்ஷம். ஆதலால் இருமையிலும் பாவ விமோசனம் அடைய முடியும். நீங்கள் எனக்கு மிக அருகில் இருக்கும் போது உங்கள் மூலமாக நான் என்னை வெளிப்படுத்துவேன். என்னுடைய சக்திகள் அனைத்தும் உங்கள் மூலம் வெளியாகும்போது உங்கள் அஹங்காரம் அழிக்கப்பட்டு உங்களுக்குள் இருக்கும் அறியாமோகம் குறைய தொடங்கும். இந்த உயர்ந்த இருமையில்லாத நிலையில் நீங்கள் பேரானந்தத்தை அடைவீர்கள். இதுவும் மோகத்தை அழிப்பதால் மோக்ஷம்தான். நான் என்ற அகந்தை முழுவதுமாக அழிக்கப்படும் போது அனைத்தையும் செய்பவர் என்ற உங்களுடைய அனுமானம் எரிக்கப்பட்டு 'தான்' என்பது மறைய தொடங்கி 'நான்' மட்டுமே உங்களிடம் மிஞ்சி இருப்பேன். அதனால் பிரம்மானந்த நிலையை (உயர்நிலை தெய்வீக பேரானந்தம்) அடைவீர்கள். ஆகவே இருமை இல்லாத நிலையிலும் மோக்ஷம் பெறலாம்.

துவைதம் (இருமை), அத்வைதம் (இருமை இல்லாத) அல்லது விசிஷ்டாத்வைதம் (சிறப்பான இருமை) ஆகிய ஆன்மீக முன்னேற்றங்களில் பரமானந்த நிலை என்பது ஒன்றுதான். இதை

வார்த்தைகளாலோ மனதாலோ கைப்பற்ற முடியாது. இது அனுபவிக்க வேண்டிய விஷயம்.

**நரசாவதானி** : அவதூதர் நிலையை அடைந்த சிலர் தங்களை உயர்ந்த ப்ரம்மனாக அழைத்துக்கொள்கிறார்கள். அப்படியென்றால் நீ அவதூதனா?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : நான் அவதூதன் இல்லை. நான் உயர்ந்த ப்ரம்மம். ஒரு அவதூதர் அனைத்தையும் பிரம்மமாக உணருவர் ஆனால் நான் ப்ரம்மம் என்னுடைய நிலை என்னவென்றால் நான்தான் அனைத்துமே.

**நரசாவதானி** : இந்த சிறு வித்தியாசத்தின் ரகசியம் எனக்கு புரியவில்லை.

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : உலக பந்தங்களில் இருந்து விடுபட்ட அவதூதர் ஒருவர் என்னுடன் ஐக்கியமாகி உயர்நிலை பேரானந்தத்தை அனுபவிப்பார். அவருக்கு தனித்தன்மை இருக்காது மற்றும் தனித்தன்மை இல்லை என்றால் விருப்பம் அல்லது தீர்மானம் இருக்காது. இந்த படைப்பின் மிகப்பெரும் தீர்மானம் நான்தான் மற்றும் நான்தான் உயர்ந்த சக்தி. நான்தான் சக்தியின் வடிவமான மாயை என்று அழைக்கப்படும் உயிரினங்கள். என்னுள் ஐக்கியமான அவதூதரை மீண்டும் பிறக்க நான் ஆணையிட்டால் அதற்கு அவர் கட்டுப்பட வேண்டும். என்னுடைய உருவம் உண்மை,ஞானம் மற்றும் மனஉறுதியுடன் இணைந்த பேரானந்தத்தின் உருவம். அவர்களின் உருவம் உண்மை, ஞானம் மற்றும் மன உறுதி இல்லாமல் விளங்கும்.

**நரசாவதானி** : வறுத்த விதைகள் முளைக்காது அப்படித்தானே? பிரம்ம ஞானத்தை அடைந்த பின்னர், பிரம்மமாக ஆன பிறகு எப்படி மீண்டும் பிறக்க முடியும்?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : படைப்பின் நியதிப்படி வறுத்த விதைகள் முளைக்காது. எனினும் படைப்பாளியின் சக்தியும் பலமும் வறுத்த விதைகளை முளைக்க வைப்பதில் உள்ளது. உண்மையில் என்னுடைய முந்தைய அவதாரங்கள் இந்தக் கோட்பாடுகள் மற்றும் அதன் எதிர்மறை கோட்பாடுகளின் உண்மையை உணர்த்துவதற்காக நிகழ்ந்தவை.

**நரசாவதானி** : ஸ்ரீ தத்தர், ஸ்ரீ ஸ்ரீபாதர் சற்று விளக்குங்களேன்?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : அத்ரி மகரிஷி என்று பிரபலம் அடைந்த என்னுடைய தந்தை முக்காலங்களான கடந்த,நிகழ் மற்றும் எதிர் காலங்களையும், மூன்று இருப்பு நிலைகளான படைத்தல்,காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றையும் கடந்தவர். என் தாய்க்கு எந்த படைப்பின் மீதோ எந்த விஷயத்தின் மீதோ கொஞ்சம் கூட பொறாமையோ வெறுப்போ இல்லாததால் அனுசுயா (அ/அன்-அற்ற, அசுயா-பொறாமை) என்று புகழடைந்தாள். மும்மூர்த்திகளின் ஆதாரம் மற்றும் அதையும் கடந்த பரஞ்சோதியை தன் மனக்கண் முன்

தோற்றுவிக்க அத்ரி மகரிஷி கடுந்தவம் புரிந்தார். அந்த பரஞ்சோதி படைப்பில் உள்ள அனைத்து உயிரினங்கள் மற்றும் அனைத்து பொருட்களின் மீதும் அமுதம் ததும்பும் பார்வையுடன் நோக்கி கருணை பொழிய வேண்டும் என்று அன்னை அனுசுயாவும் தவம் புரிந்து வேண்டிக்கொண்டாள். கர்மாவின் கோட்பாடுகளின் படி உயிரினங்கள் சந்தோஷமும் துக்கமும் பெறுகின்றன. ஆகவே பெரிய பாவங்கள் கூட மக்களுக்கு சிறிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் சிறிய நல்வினை கூட நல்ல பலனைத் தர வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்னை அனுசுயா வேண்டிக் கொண்டாள். அவள் தவத்தின் மூலம் பெற்ற ஆன்மீக சக்தியின் பலனால் கடினமான கொண்டைக்கடலை போலிருக்கும் உலோக உருண்டைகளை, உண்ணக்கூடிய உயிருள்ள கொண்டைக் கடலையாக மாற்றினாள். உலோகத்தின் உணர்வுகள் முழுமையான செயலற்ற நிலையில் இருக்கும். மரம் மற்றும் மரம் சார்ந்த பொருட்களில் உணர்வுகள் அரை தூக்க நிலையில் இருக்கும். மிருகங்களின் உணர்வுநிலை முழுமை பெற்று இருக்கும். மனிதனின் பரிணாம வளர்ச்சி பின்வருமாறு நிகழும். உயிரினம் முதலில் கனிமமாக பிறந்து இறந்துவிடும்; பிறகு மரம் மற்றும் தாவரங்களாக பிறக்கும்; பின்னர் மிருகங்களாக பிறக்கும்; கடைசியில் மனிதனாக வெளிப்படும். அப்படிப்பட்ட மனிதர் அவனுக்குள் செயலற்று இருக்கும் தெய்வீக சக்திகளான வேறுபட்டு நோக்குதல்,ஞானம் மற்றும் பற்றின்மை ஆகியவைகளை விழிப்படைய செய்து மோக்ஷத்தை அடைய முயல வேண்டும்.

பரிணாம வளர்ச்சியின் பண்புகளை கடவுளின் கருணையோடு மாற்ற முடியும் என்று அன்னை நிரூபித்தாள். மும்மூர்த்திகளின் உருவத்தின் உணர்வுகள் விழிப்பு நிலையில் இருந்தன. ஆகவே அவள் அவற்றை செயலற்ற நிலைக்கு மாற்றி மும்மூர்த்திகளையும் குழந்தை ரூபமாக மாற்றிவிட்டாள். முப்பெரும் தேவியர்கள் (சரஸ்வதி,லக்ஷ்மி மற்றும் பார்வதி) ஒன்றாகி அனகா தேவியாக உருவம் பெற்றது. நான் ஸ்ரீ தத்தாத்ரேயராக பிறந்து அனகாதேவியை மணந்து கொண்டேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தில் அர்த்தநாரீஸ்வரர் (இருபால்களையும் ஒன்றாக பெற்ற சிவன் மற்றும் பார்வதியின் உருவம்) போல் இடப்பக்கத்தில் அனகா தேவியும் வலப்பக்கத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயரும் போன்ற உருவத்தில் பிறந்துள்ளேன். இது சிவனின் பாதி ஆண் மற்றும் பாதி பெண்ணின் அம்சம் கலந்த உருவம். இந்த அற்புதமான படைப்புகளை தன் இஷ்டம் போல உருவாக்கிய கடவுளுக்கு, தேவையென்றால் படைப்பின் கோட்பாடுகளை மாற்றும் சக்தியும் பலமும் உண்டு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**நரசாவதானி** : ஸ்ரீ ஸ்ரீபாதா, படைப்புகளின் பண்புகள் மற்றும் கோட்பாடுகளை மாற்றகூடிய திறன் உனக்கு இருக்கிறது. ஏன் உன்னால் என்னுடைய வறுமையை ஒழிக்க முடியவில்லை?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : நிச்சயமாக என்னால் வறுமையை ஒழிக்க முடியும் ஆனால் நான் அதை அடுத்த பிறவிக்கு தள்ளி வைத்துள்ளேன். அடுத்த பிறவியிலும் பல காலம் ஏழ்மையை அனுபவித்த பின்னர்தான் நான் உங்களுக்கு கருணை புரிவேன். முளைக்கீரை என்பது ஒரு சிறிய பொருள். அதன் மீது எவ்வளவு பற்றை வளர்த்து கொண்டுள்ளீர்கள்! என் தாயோ தந்தையோ தாத்தாவோ யாரிடமும் எதுவும் கேட்டதில்லை. சிறு பாலகனான நான் எவ்வளவு கீரை சாப்பிடப் போகிறேன்? நான் விருப்பப்பட்ட போது நீங்கள் உடனடியாக முளைக்கீரையை கொடுத்திருக்க வேண்டும். இப்போது அந்த நேரம் முடிந்து விட்டது. உங்கள் மனதில் உள்ள அழுக்கைத் துடைக்க இந்த ஆயுட்காலம் போதாது. ஒவ்வொரு மனிதனும் அவனின் புண்ணியங்களை கொண்டுதான் ஆயுட்காலம், செல்வம், அழகு மற்றும் புகழ் ஆகியவைகளை பெறுகிறான். பாவத்தின் காரணமாக குறைவான ஆயுட்காலம், ஏழ்மை, அழகின்மை மற்றும் பழி ஆகியவைகளை பெறுகிறான். நான் உங்களுடைய புண்ணியத்தில் பெரும் பகுதியை நீக்கிவிட்டு ஆயுளை நீட்டிவிட்டேன். உங்களுடைய பெரும் பகுதி புண்ணியங்கள் செலவிடப்பட்டு விட்டது. பாவம்தான் மிகுதியாக மீதம் உள்ளது. நீங்கள் ஏழ்மையை அனுபவித்ததாக வேண்டும். உங்களிடம் செல்வம் இல்லையென்றாலும் நீங்கள் சுயம்பு தத்தரை வணங்கியதால் எந்தவித பாதிப்பும் இல்லாமல் உங்களுக்கு இருவேளை உணவு கிடைக்க அருள் புரிகிறேன்.

**நரசாவதானி** : ஸ்ரீ ஸ்ரீபாதா வேதங்களில் சாதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. உன் தாத்தா வைசியர்களும் வேத முறைகளின்படி பூணூல் அணிந்து கொள்ளலாம் என்று முடிவெடுத்துள்ளார். இது தவறு இல்லையா?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்** : சத்ய ருஷீஸ்வரரின் (உண்மையின் ரிஷி அல்லது தீர்க்கதரிசி) முடிவில் குறை கூறும் உன் நாக்கை அறுத்து எறிய வேண்டும். என் தாத்தா யாரென்று நினைத்தாய்? அவர் உண்மையில் பாஸ்கராச்சார்யர் (ஆரிய வைசியர்களின் குரு). புனிதம் வாய்ந்த விஷ்ணு தத்தா-சுசீலா தம்பதிக்கு சுயநலம் என்றால் என்னவென்றே தெரியாது. நான் நேரம் மற்றும் செயல் தேவதைகளுக்கு அவர்களை என் பெற்றோர்கள் ஆக்க உத்தரவிட்டேன். ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் முன்னோர்கள் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமியின் சிறந்த பக்தர்கள்.

அவர்கள் மிகவும் பக்தி உள்ளவர்கள். சிம்மாச்சலத்தில் நடக்கும் யாகங்கள் மற்றும் சடங்குகளின் போது பெரிய அளவில் அன்னதானம் செய்வார்கள். நான் பீதிகாபுரத்தில் பிறப்பதற்கு முன்னரே முறையான வழியில் திட்டமிட்டு விட்டேன். அந்த மூன்று குடும்பங்களுடன் நான் கடன்பட்ட இந்த தொடர்பு இந்த ஒரு பிறவியுடன் முடியாது. அது ஒரு அவதாரத்தில் முடிவடையாது. என்னுடைய வளமான கரங்கள் அவர்களின் பல தலைமுறைகளுக்கு நன்மை அளிக்கும். என்னுடைய தெய்வீக குடையின் நிழலில் அவர்கள் எந்த கவலையும் இன்றி வாழ்வார்கள்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களுக்கு அளித்த உத்தரவாதம்

என்னுடைய விஷயத்தை பொறுத்த வரையில் உங்களால் எனக்கு மலிவான முளைக்கீரையை கூட கொடுக்க முடியவில்லை. நீங்கள் எனக்கு உணவளித்திருந்தால் ஒரு லட்சம் பிராமணர்களுக்கு உணவளித்த புண்ணியத்தை சம்பாதித்திருப்பீர்கள். நீங்கள் அந்த வாய்ப்பை இழந்து விட்டீர்கள். எது தர்மம் (சரி) அல்லது அதர்மம்(தவறு) என்று விவாதம் எழுந்த போது நீங்கள் வேதத்தை நன்றாக ஆராய்ந்திருக்க வேண்டும். எனினும் வேதத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டுமா இல்லையா என்ற சந்தேகம் எழும் போது தூய மனமுடையவர்களின் முடிவையே வேதத்தின் உத்தரவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் கூறுவதை வேதத்தின் உண்மையாகவும் அவர்களின் வார்த்தைகளை நீதியின் கோட்பாடுகளாகவும் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் அநீதியான ஆணைகளை கூற நினைத்தாலும் நீதிதேவதை அவர்களை தீய வழியில் இருந்து திசைமாற்றி சரியான தீர்ப்பை அளிக்கும் படி வற்புறுத்துவாள்.

மற்றவர்களுக்கு துன்பம் விளைவிப்பது பாவம் என்று வேதங்கள் கூறுகின்றன. எனினும் ஸ்ரீ கிருஷ்ணரின் முன்னிலையில் நடைபெற்ற யுத்தம் நீதியானதுதான்; கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடந்த யுத்தம் நடைபெற்ற இடம் தர்ம க்ஷேத்திரம் என்றே கூறப்படுகிறது. மத சடங்குகள் புண்ணியம் தரும் என்று வேதங்கள் கூறுகின்றன. எனினும் உயர்ந்த கடவுளான சிவனை அழைக்காமல் தக்ஷன் செய்த சடங்கு கடைசியில் பெரிய போரில் முடிந்தது. தக்ஷனுடைய தலை துண்டிக்கப்பட்டு ஆட்டின் தலை வைக்கப்பட்டது. பித்தம் அதிகமாகும் போது மருத்துவர் எலுமிச்சையையும் நெல்லிக்காயையும் கொண்டு வைத்தியம் செய்வார்கள். உடலின் ஒரு பகுதியில் இரத்த ஓட்டம் நின்று விட்டால் மருத்துவர் அந்த பகுதியை வெட்டி எடுத்து விடுவார்கள். நானும் அப்படித்தான். கடவுள் மட்டுமல்ல பிசாசுகளும் என்னுள் அடங்கியுள்ளது. நான் பைத்தியக்காரன் போலவும் பேய் பிசாசு போலவும் நடந்து கொள்வேன். இருப்பினும் உயிரினங்களின் மீது அன்பு மட்டும் பொங்கி வழிந்து கொண்டே இருக்கும். உங்களுடைய குணம், நல்ல

மற்றும் தீய நடவடிக்கைகளினால் விளையும் வினைகளை பொறுத்தே என்னுடைய நடத்தை இருக்கும். என்னை விடாது முழுவதுமாக சரணடைந்த பக்தர்களின் கரங்களை நான் ஒருபோதும் விடமாட்டேன். பல தூர இடங்களில் வசிக்கும் என் பக்தர்களை என் க்ஷேத்திரத்திற்கு இழுத்து வருவேன். நதிமூலம் ரிஷிமூலம் பற்றி விவாதிக்க கூடாது. உயர்ந்த சக்தியே கன்யகாபரமேஸ்வரியாக வைசியர் குலத்தில் பிறக்கவில்லையா? வைசிய முனிவர்களில் திறன் மிகுந்த பல சித்தர்கள் இருக்கின்றனர். ஆன்மீக ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கடைபிடித்தால் பிராமணர்கள் மட்டுமல்ல க்ஷத்ரியர்கள், வைசியர்கள் மற்றும் தாழ்ந்த ஜாதி சூத்திரர்கள் கூட உபநயனம் செய்து கொள்ளத் தகுதியானவர்கள்தான். உபநயனம் நிகழ்த்தப்பட்ட பின்னர் மூன்றாவது கண் திறக்க வேண்டும். உள்ளுணர்வு தூய்மை ஆக்கப்பட்டு உயர்ந்த ஞானத்தை நோக்கி மனம் கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் மனது முழுவதும் காய்கறிகள் பற்றிய எண்ணத்திலேயே மூழ்கியிருந்தது. ப்ரம்மம் என்ன கடையில் வாங்கும் பொருள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த பிறவியில் பிராமணனாக பிறந்தவன் அடுத்த பிறவியில் தாழ்ந்த ஜாதியில் பிறக்கக்கூடும் மற்றும் இந்த பிறவியில் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவன் அடுத்த பிறவியில் பிராமணனாக பிறக்கக்கூடும். உயர்ந்த பிரம்மம் என்பது நேரம்-இடம், ஜாதி-மதம் ஆகியவற்றை மீறிய ஒன்று என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கடவுளுக்கு உள்ளுணர்வுகள்தான் பிடிக்குமே தவிர புற தோற்றங்களை அல்ல. கடவுள் உங்கள் உள்ளுணர்வுகளை பொருத்துதான் இயங்குகிறார். பிரம்ம ஞானத்தை பற்றிய விவாதங்கள் எழும் போது நான் பிரமணனாகிறேன். நீதியை பறைசாற்றும் போதும், பக்தர்கள் நலம் காத்து அவர்களுக்கு அனுகூலங்கள் அளிக்கும் போதும் நான் க்ஷத்ரியன் ஆகிறேன். ஒவ்வொரு உயிரினங்களும் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்படும். ஒவ்வொருவரின் ஊதியமும் என்னிடம் உள்ளது. நான் ஒவ்வொரு தனிநபரின் பாக்கியையும் எடைபோட்டு அளந்து கணக்கிடும் போது வைசியன் ஆகிறேன். என் பக்தர்களின் வேதனைகளையும் வலிகளையும் என்னுடைய உடலுக்குள் ஈர்த்துக் கொண்டு சேவை செய்யும் போது நான் சூத்திரன் ஆகிறேன். உயிரினங்களின் பாவங்களை முழுவதுமாக நீக்கும் போது நான் சலவைத் தொழிலாளி ஆகிறேன். இறந்தவர்களை எரித்து சாம்பலாக்கி அவர்களுக்கு உன்னத பிறப்பை அளிக்கும் போது நான் வெட்டியான் ஆகிறேன். இப்போது முடிவெடுத்து சொல் நான் எந்த ஜாதியை சேர்ந்தவன் என்று.

**நரசாவதானி:** ஸ்ரீ ஸ்ரீபாதா மன்னித்துக்கொள். நான் ஒரு அஞ்ஞானி. நீ சாக்ஷாத் ஸ்ரீ தத்தர்தான். அனைத்து உயிரினங்களுக்கும் நீதான் ஒரே அடைக்கலம். தயைகூர்ந்து படைப்புகள் எப்படி உருவானது என்பதை எனக்கு விளக்கமாக கூற வேண்டும்.

## பல உலகங்கள் பற்றிய விளக்கம்

**ஸ்ரீ ஸ்ரீபாதர் :** *தாத்தா! சொர்க்கத்தில் மொத்தம் 88000 முனிவர்கள் உள்ளனர் அவர்கள் குடும்பஸ்தர்கள். அவர்கள் மறுபிறவி எடுக்கும் ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் தர்மத்தை பரப்பும் விதைகளாக விளங்குகின்றனர். பிரபஞ்ச ஆத்மாவின் விவரிக்க முடியாத சக்தியில் இருந்து ஒரு சிறு பகுதி பிரபஞ்சத்தைப் படைப்பதற்காக பிரம்மாவாக வடிவம் எடுத்தது. பரமாத்மாவில் இருந்து நீர் வெளிவந்து அது எல்லா இடத்திலும் பரவியது. மிக உயர்ந்த ஆத்மாவின் வீரியத்தில் இருந்து சக்தி வாய்ந்த பல கோடி தங்க முட்டைகள் உருவானது. நாம் வசிக்கும் இந்த பிரம்மாண்டம் (பிரபஞ்சம்) இவற்றில் ஒன்று. அவற்றின் உட்புறம் இருளால் நிரம்பி இருந்தாலும் பரமேஸ்வரரின் பிரகாசம் மனித உருவம் எடுத்து, அனிருத்தா என்ற பெயருடன் அழைக்கப்பட்டார். அந்த முட்டையை தன் அற்புதமான பளபளப்புடன் கூடிய ஒளியால் ஒளியூட்டியதால் அவர் ஹிரண்யகர்பர் என்றும் (பிரம்மன், தங்க முட்டையில் இருந்து பிறந்தவர்), சூரியன், சவிதா (சூர்யதேவி) மற்றும் பரஞ்சோதி (மிக உயர்ந்த ஒளி) மற்றும் பல பெயர்களில் வேதங்களில் அழைக்கின்றனர். திரேதா யுகத்தின் போது பீதிகாபுரத்தில் பாரத்வாஜ முனிவர் ஸவித்ரு காடக சயனம் என்ற யாகத்தை நிகழ்த்தினார். பல கோடி பிரபஞ்சங்களையும் சூழ்ந்துள்ள ஸ்ரீ தத்தாத்ரேயரின் மகிமைகளை உரைக்கும் வகையில் ஸவித்ரு காடக சயனம் இருந்தது. சத்ய லோகத்தில் (லோகம் என்றால் உலகம்)* **'நிர்மய ஸ்தான்'** *என்னும் முக்கியமான இடம் உள்ளது. அந்த இடத்தில் மூன்று அடுக்கு படிகள் உள்ளன. அங்குதான் பித்ருக்களின் தேவதைகளான வசு,ருத்திரர்கள் மற்றும் ஆதித்யர்கள் வசிக்கிறார்கள். அவர்கள்தான் அவ்விடத்தின் பாதுகாவலர்கள்.*

*நான்முகனான பிரம்மா காரண பிரம்ம லோகத்தில் வசிக்கிறார். ஸ்ரீநகரம் என்று அழைக்கப்படும் வித்யாஸ்தானமும் மூலப்ரக்ருதி ஸ்தானமும் (மையப்பகுதி) அதற்கு மேல் உள்ளது. அதற்கு மேல் மகாகைலாசமும் அதற்கு மேல் காரண வைகுந்தமும் உள்ளது. புராணபுரம் என்றழைக்கப்படும் வித்யாதார ஸ்தானம் சத்ய லோகத்தில் உள்ளது. தபோ லோகத்தில் உள்ள அஞ்சனாவதிபுரத்தில் சத்யர்கள் வசிக்கின்றனர். ஜனலோகத்தில் உள்ள அம்பவதிபுரத்தில் சனகர் சனந்தனர் மற்றும் மற்ற ரிஷிகளும் வசிக்கின்றனர். சித்தர்களும் மற்ற ரிஷிகளும் ஜ்யோதிஷ்மதிபுரத்தில் வசிக்கின்றனர். சுவர் லோகம் என்று அழைக்கப்படுகிற சொர்க்க லோகத்தில் உள்ள அமராவதிபுரத்தில் இந்திரனும் மற்ற தெய்வங்களும் வசிக்கின்றனர். நட்சத்திரங்களையும் உலக உருண்டையின் கோள்களையும் உள்ளடக்கிய புவர் லோகத்தில் உள்ள ரதந்தரபுரத்தில் விண்ணுலக சிற்பியான விஸ்வகர்மா வாழ்கிறார்.*

*தாத்தா, பூலோகத்தில் (பூமி) இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. மனிதன் வாழும் பிரிவு பூகோளம் என்று அழைக்கப்படுகிறது. மற்றொன்று மஹாபூமி என்று அழைக்கப்படுகிறது. பூகோளத்திற்கு தெற்கில் ஐந்து கோடி பிரம்மாண்ட யோசனைகள் தொலைவில் மஹாபூமி அமைந்துள்ளது. பூலோகமும் புவர்லோகமும் சேர்ந்ததுதான் மார்த்யலோகம். இதில் மஹாபூமியும் அடங்கும். பாதாள லோகம் என்றால் அதல,*

விதல, சுதல, ரஸாதல, தலாதல, மஹாதல மற்றும் பாதாளம் (7 பாதாள உலகங்கள்). தோராயமாக இவற்றை ஸ்வர்கம், மார்த்தியம் (பூமி) மற்றும் பாதாளம் என்று அழைக்கப்படுகிறது.

நாம் வாழும் பூமிக்குக் கீழ் மஹாபூமி அமைந்துள்ளது. அது வட்டமான உருவத்தில் நடுப்பகுதியில் உயர்ந்தது போல காணப்படும். ஆகவே மஹாபூமியில் சூரியன் மற்றும் நிலவின் வெளிச்சம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். எப்போதும் வெளிச்சம் இருப்பதால் நேரத்தை தீர்மானிக்க முடியாது. இந்த மஹாபூமியில், ஏழு கடல்கள் மற்றும் ஏழு தீவுகளும் இருக்கும். இங்குதான் ஜம்புத்வீபம் இருக்கிறது.

படைப்பின் துவக்கத்தில் அனைத்தும் தண்ணீருக்குள் மூழ்கி இருந்தது. பிரஜாபதி (பிரம்மா, படைப்பு கடவுள்) படைப்பை துவங்குவதற்கு தவம் புரிந்தபோது தண்ணீரில் ஒரு தாமரை இலை தோன்றியது. பிரஜாபதி காட்டுப்பன்றி (வராஹ) உருவம் எடுத்து தாமரை இலைக்கு அருகில் மூழ்கி மஹாபூமியை அடைந்தார். தன் கூர்மையான கொம்பால் மஹாபூமியைத் தோண்டி மண் எடுத்தார் அந்த ஈர மணலை தண்ணீரின் மேற்பரப்பிற்கு கொண்டு வந்தார். அந்த மண்ணை தாமரை இலையின் மீது வைத்தார். பிறகு அதன் பெயர் பிருதிவி என்றானது. தாத்தா, இதுதான் பூமி. பூமி மஹாபூமியில் இருந்து 5 கோடி பிரம்மாண்ட யோசனைகள் தொலைவில் உள்ளது. மஹாபூமியின் பரப்பளவு 50 கோடி யோசனைகள். மஹாபூமியில் உள்ள ஜம்புத்வீபத்தில் 9 கண்டங்கள் உள்ளன. தெய்வங்கள் தெய்வ கண்டத்தில் வசிக்கின்றன. கர்பஸ்த்ய கண்டத்தில் ஆவிகள் வசிக்கின்றன. பரத கண்டத்தில் மனிதர்கள் வசிக்கிறார்கள். சரக கண்டத்தில் சித்தர்கள் வாசம் செய்கிறார்கள். கந்தர்வர்கள் காந்தர்வ கண்டத்தில் வாசம் செய்கிறார்கள். புருஷ கண்டத்தில் கின்னரர்கள் வாசம் செய்கிறார்கள். ராட்சசர்கள் தாமரக் கண்டத்தில் வசிக்கிறார்கள். யக்ஷர்கள் சேரு கண்டத்தில் வாழ்கிறார்கள் மற்றும் பன்னகர்கள் இந்து கண்டத்தில் வாழ்கிறார்கள். மஹாபூமியின் ஜம்புத்வீபத்தின் தெற்கு நோக்கியும் பரத கண்டத்தில் உள்ள பரதபுரத்தில் வைவஸ்தவ மனு மனிதர்கள் மற்றும் பூமியின் முனிவர்களுடன் ஆட்சி செய்கிறார். மஹாபூமியில் உள்ள ஜம்புத்வீபம் போல் பூமியிலும் ஜம்புத்வீபம் இருக்கிறது.

**நான் ஸ்ரீ பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரிப்பதற்கு 100 வருடங்களுக்கு முன்னரே மஹாபூமிக்கு வந்துவிட்டேன்.**

மஹாபூமியின் ஜம்புத்வீபம் 1 லட்சம் பிரம்மாண்ட யோசனைகள் பரவியுள்ளது. ஜம்புத்வீபத்தின் பாரத துணைக்கண்டத்தில் வைவஸ்தவ மனு வாசம் செய்கிறார். தேவர்கள் மற்ற கண்டங்களில் வசிக்கிறார்கள். மஹாபூமியின் ஜம்புத்வீபத்தில் குளிரும் வெப்பமும் மிதமாகவும் இனிமையாகவும் இருக்கும். எப்போதும் லேசான சூரிய ஒளி பரவிக்கொண்டு பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் இல்லாமல் இருக்கும். மஹாபூமியின் ஜம்புத்வீபம் 1 லட்சம் யோஜனைகள் பரவி உள்ளது.

## பல்வேறு கடல்கள், மற்றும் மலைகள் போன்றவற்றின் அளவுகள் விவரங்கள் கீழ்வருமாறு :

சமுத்திரங்கள்(கடல்கள்),த்வீபங்கள்(தீவுகள் அல்லது கண்டங்கள்) மற்றும் பர்வதங்கள் (மலைகள்)

| | |
|---|---|
| லவண சமுத்திரம் | 1 லட்சம் யோஜனைகள் |
| பிளக்ஷத் தீவு | 2 லட்சம் யோஜனைகள் |
| இக்ஷீ சமுத்திரம் | 2 லட்சம் யோஜனைகள் |
| குச தீவு | 4 லட்சம் யோஜனைகள் |
| சுரா சமுத்திரம் | 4 லட்சம் யோஜனைகள் |
| கிரௌஞ்சத் தீவு | 8 லட்சம் யோஜனைகள் |
| ஸர்பீ சமுத்திரம் | 8 லட்சம் யோஜனைகள் |
| ஷாக கண்டம் | 16 லட்சம் யோஜனைகள் |
| ததி சமுத்திரம் | 16 லட்சம் யோஜனைகள் |
| ஷால்மலி கண்டம் | 32 லட்சம் யோஜனைகள் |
| க்ஷீர சமுத்திரம் | 32 லட்சம் யோஜனைகள் |
| புஷ்கர கண்டம் | 64 லட்சம் யோஜனைகள் |
| சுத்த ஜல சமுத்திரம் | 64 லட்சம் யோஜனைகள் |
| சலாசல மலை | 128 லட்சம் யோஜனைகள் |
| சக்ரவாள மலை | 256 லட்சம் யோஜனைகள் |
| லோகலோக மலை | 512 லட்சம் யோஜனைகள் |
| தமோ பூமி | 1250 லட்சம் யோஜனைகள் |

லோகலோக மலையைத் தாண்டி சூரிய ஒளி செல்ல முடியாது அதனால் லோகலோக மலைக்கும் பிரபஞ்சத்தின் சுவருக்கும் இடையே எப்போதும் இருள் சூழ்ந்து இருக்கும். பிரபஞ்சத்தின் சுவர் 1 கோடி யோஜனை கனம் உடையது. வராஹ மற்றும் நரசிம்ம(மனித சிங்கம்) அவதாரங்கள்(விஷ்ணுவின் இரண்டு தெய்வீக அவதாரங்கள்) இந்த பூமியை முழுவதும் அடக்க முடியவில்லை. வராஹ என்றால் பன்றி அல்ல. அது ஒற்றை கொம்புடன் இருக்கும் காண்டாமிருகம்.

## த்வீபங்கள் பற்றிய விளக்கம், த்வீபங்களின் அரசர்கள் மற்றும் த்வீபங்களை பராமரிக்கும் பொறுப்புள்ள தெய்வங்கள்

அதேசமயம் மஹாபூமியில் உள்ள ஜம்புத்வீபத்தை ஸ்வயம்புவமனு முதல் அரசனாக இருந்து ஆண்டார் மேலும் அவரின் மகன்கள் மற்ற த்வீபங்களை(தீவுகள்) ஆண்டனர்.

| தீவின் பெயர் | அரசரின் பெயர் | வசிக்கும் வர்ணத்தவர்கள் | அதிபதி |
|---|---|---|---|
| ப்ளக்ஷ த்வீபம் | மேதாதிதி | ஆர்யகா, குரர, விந்தக, பாவினா | சந்திரவடிவ விஷ்ணு |
| ஷால்மலி த்வீபம் | வபுஷ்மாந்தா | கபில, சக்ரவாக, பீத, கிருஷ்ண | விஷ்ணு |
| குச த்வீபம் | ஜோதிஷ்மந்தா | தமி, சுஷ்மினா, ஸ்னேஹா, மந்தேஹ | பிரம்மா |
| கிரௌஞ்சத் த்வீபம் | துதிமந்தா | புஷ்கரா, புஷ்களா, தன்யா, பிஷ்ய | ருத்ரர் |
| ஷாக த்வீபம் | ஹவ்யா | மங்கா, மாகத, மானசா, மந்தா | சூரியன் |
| புஷ்கர த்வீபம் | சவனா | ** | ப்ரம்மா |

**புஷ்கர தீவில் வர்ணங்கள் இல்லை. அனைவரும் நோய்நொடி மற்றும் துன்பங்கள் இல்லாமல் விண்ணுலகத்தவர் போல் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

பூமியின் ஜம்புத்வீபத்தில் பாரத வர்ஷம், கிம்புருஷ வர்ஷம், ஹரி வர்ஷம், கேதுமல வர்ஷம், இளவ்ருத வர்ஷம், பத்ரவாச வர்ஷம், ரம்யக வர்ஷம், ஹிரண்யக வர்ஷம் மற்றும் குரு வர்ஷம் ஆகியவை இருக்கின்றன. தாத்தா, மகாபூமியில் உள்ள ஜம்புத்வீபம் எப்படி கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதோ அதேபோல் அரைக்கோளமான பூமியிலும் (*EARTH'S HEMISPHERE*) ஜம்புத்வீபம் இரண்டு பகுதிகளாக உள்ளது. மஹாபூமி வட்டமாகவும் ஆமையின் ஓட்டை போல் மத்தியில் உயர்ந்து காணப்படும். இதை பூமண்டலம் என்று அழைப்பர். எனினும் பூமியின் உலகஉருண்டை எலுமிச்சை பழம் போல் இருக்கும். மஹாபூமி மேரு ரேகையை சூழ்ந்தும் பிரபஞ்சத்தின் சுவர் வரையில் பரந்து விரிந்துள்ளது. பூமி சரியாக ஒளிவட்டப்பாதையின் நடுவில் உள்ளது. மஹாபூமிக்கு நடுவில் அமைந்துள்ள மேருமலை வரிசையை சுற்றி அதன் ஜம்புத்வீபம் அமைந்துள்ளது. அதைச் சுற்றி 7 மலைகளும் தீவுகளும் அமைந்துள்ளது. பூமியின் வடக்கு அரைக்கோளத்தை தேவப்பகுதி என்றும் தெற்கு அரைக்கோளத்தை அசுரப்பகுதி என்றும் அழைப்பர். மஹாபூமியின் பூமத்திய பகுதியின் மத்தியில் மேருமலை தெய்வீக ஜொலிப்புடன் உள்ளது. இதுதான் மனிதர்களை ஆளும் மனுக்களின் குடியிருப்பு பகுதி. பூகோளத்தில் உள்ள மனிதர்களை மனுக்கள் ஆட்சி செய்கின்றனர். சக்ரவாள மலையின் உச்சியில் ஒளியுடன் கூடிய சக்கரம் (ஜ்யோதிஷ சக்கரம்) வைக்கப்பட்டுள்ளது. எனினும் பூகோளம் இதிலிருந்து வேறுபட்டது. ஏழு வட்டப்பாதைகளால் சுற்றிவளைக்கப்பட்ட ஒளிரும் சக்கரம், ஒரு நாளைக்கு பூமியை ஒரு முறை சுற்றி வருகிறது. மஹாபூமியில் குளிர், வெப்பம் மற்றும் மற்ற காலநிலை மாற்றங்கள் குறைவாக இருக்கும். அங்கு

எப்போதும் பகல் பொழுதாகவே இருக்கும், இரவும் கிடையாது நேர வித்தியாசமும் கிடையாது. பூகோளத்தில் வித்தியாசமாக இருக்கும். ஒருவர் நல்வினைகளின் புண்ணியங்களால் மட்டுமே மஹாபூமியை அடைய முடியும். பூகோளம் புண்ணியங்களை சம்பாதித்துக் கொள்ள கூடிய கர்ம பூமி (செயல்களின் நிலம்). பூமியில் மக்கள் ஸ்தூல சரீரத்துடன் வாழ வேண்டும். மஹாபூமியில் சிறிய பிரளயங்கள் நடைபெறாது, மனுபிரளயங்கள் மட்டுமே நடைபெறும். பூகோளத்தில் யுகப்பிரளயங்கள், மஹாயுகப்பிரளயங்கள் மற்றும் மனுபிரளயங்கள் நடைபெறும்.

மஹாபூமியை தாத்ரி மற்றும் விதார்த்தி என்று அழைப்பர். பூகோளத்தை மஹி,உருவி,க்ஷிடி,பிரித்வி மற்றும் பூமி என்று அழைப்பர். தாத்தா,நான் உங்களுக்கு இப்போது பாதாள லோகங்கள் பற்றி சொல்லப்போகிறேன் கேளுங்கள். அதல லோகத்தில் பேய்களும், விதல லோகத்தில் குஹயகாவும், சுதல லோகத்தில் அசுரர்களும், ரஸாதல லோகத்தில் ஆவிகளும் வசிக்கிறார்கள். யக்ஷர்கள் தலாதலத்திலும் மூதாதையர்கள் மஹாதலத்திலும் நாகங்கள் பாதாளத்தில் வசிக்கின்றன.

## லோகங்களில் வசிப்பவர்கள், லோகங்கள் மற்றும் கண்டங்களின் அரசர்கள் பற்றிய விளக்கம்

குபேரன் விதல லோகத்தில் வசிக்கிறார். அவர் நவநிதிகளின்(9 பொக்கிஷங்கள்) தலைவர். அவரே பிரம்மாண்டத்தின் பொருளாளர். அவர் வடக்கு திசையை ஆள்கிறார். விதலத்தில் உள்ள அலகாபுரிதான் அவரின் தலைநகரம். மேரு மலைக்கு மேற்கிலும் அதே விதலத்தில் அமைந்துள்ள யோகினிபுரத்தில் மயன் வசிக்கிறார். இவரே அசுரர்களின் கட்டிட வடிவமைப்பாளர்.த்ரிபுராசுரர்களுக்கு விண்ணில் அதிக உயரத்தில் உலாவக்கூடிய 3 குடியிருப்புகளை கட்டிக்கொடுத்தார்.

சுதல லோகத்தில் உள்ள வைவஸ்தவபுரத்தை யமதர்மராஜா ஆட்சி செய்கிறார். அவர்தான் தெற்கு பகுதியின் அதிபதி. அந்த நகரத்தின் நுழைவாயிலில் ஒளிரும் தீப்பிழம்புகளுடன் ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கும். இதுதான் வைதரணி நதி. புண்ணியம் செய்தவர்கள் இந்த நதியை எளிதில் கடந்து விடலாம் ஆனால் பாவம் செய்தவர்களுக்கு மிகவும் கடினம்.

ரஸாதல லோகத்தின் புண்யநகரை நிருதி என்கிற அசுரன் ஆட்சி செய்கிறான். அவன்தான் தென்மேற்கு பகுதியின் அதிபதி. தலாதளத்தில் உள்ள தனிஷ்டாபுரத்தில் வேதாளங்கள் பிசாசு கூட்டங்களுடன் வாசம் செய்கின்றன. மஹாதலத்தில் உள்ள கைலாசத்தில் பூதகணங்களுடன் காத்யாயணியும் அவளது கணவன் ஈசனுடன் வசிக்கின்றனர். அவர்தான் வடகிழக்கு பகுதியின் அதிபதி.

பாதாளத்தில் உள்ள வைகுந்த நகரத்தில் ஸ்ரீமன் நாராயண மூர்த்தி வசிக்கிறார். இங்கு அவர் தனது அனைத்து மகிமைகளுடனும் இருக்கிறார். அவர் இங்கு பாதாளத்தின் ஆவிகளுடனும் வாசுகி மற்றும் உயர்ந்த நாகங்களுடனும் வசிக்கிறார். அவர் பாம்புப் படுக்கையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். இவ்விடத்தை ஸ்வேதத்வீபத்தில் உள்ள காரிய வைகுண்டம் என்றும் அழைப்பர்.

பாதாள லோகத்தின் கடைசியில் ஒரு மூன்று அடுக்கு பிரிவுகள் உள்ளது. முதல் அடுக்கில் உடலில்லா உயிரினங்கள் வசிக்கின்றன. இரண்டாவது அடுக்கில் பேய் கூட்டமாக வாழ்கின்றன. மூன்றாவது அடுக்கில் வேதனையுடன் இருப்பவர்களின் உடலை எடுத்துக் கொண்ட உயிரினங்கள் துயரத்தில் மூழ்கிய வண்ணம் இருக்கின்றன.

மஹாபூமியில் 7 கடல்களும் 7 தீவுகளும் இருக்கின்றன. அதன் மத்தியில் ஐம்புத்வீபம் அமைந்துள்ளது. அது 9 கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. தெற்கில் உள்ள கண்டத்தின் பெயர் பரத கண்டம். இந்த கண்டத்தில் உள்ள பரதபுரத்தில் சுயம்புவமனு வசிக்கிறார். பல நல்லொழுக்கமுள்ள மனிதர்களும் முனிவர்களும் அவரது ஆட்சியின் கீழ் உள்ளனர். அவர்கள் உலகங்களை நிர்வாகித்து நீதி மற்றும் அநீதியின் கோட்பாடுகளைச் செயல்படுத்துகின்றனர். மஹாபூமியின் 7 தீவுகளை சுற்றி சராசர,சக்ரவாள மற்றும் லோகலோக மலைகள் ஸ்வர்க லோகம் வரை உயர்ந்து உள்ளது. இந்த அடுக்குகள்தான் எந்த ஒளியையும் அதனுள் ஊடுருவ அனுமதிக்காது.

மஹாபூமிக்கு கீழ் 7 பாதாள லோகங்கள் உள்ளன. இவை சப்த பாதாளங்கள் என்று அழைக்கப்படும். அதல லோகத்தில் அசுரர்கள் வசிக்கின்றனர். விதலலோகத்தில் உள்ள அலகாபுரியில் குபேரர் வசிக்கிறார். விதலலோகத்திலுள்ள யோகினிபுரத்தில் மயன் அசுரர்களுடன் வசிக்கிறார். சுதல லோகத்தில் பலி சக்கரவர்த்தி தன் அசுர வேலையாட்களுடன் வாழ்கிறார். வைவஸ்தபுரத்தில் யமதர்மராஜன் வசிக்கிறார். பாவம் செய்தவர்கள் இங்குள்ள பல்வேறு நரகங்களில் தண்டனைகள் பெறுகிறார்கள். ரஸாதல லோகத்தில் உள்ள புண்யாதிபுரம் நிருதியின் இருப்பிடம். இங்கு பேய்கள் மற்றும் அதேபோன்ற வகைகயானவைகள் இருக்கும். தலாதல லோகத்தில் உள்ள தனிஷ்டாபுரத்தில் வேதாளங்கள் வசிக்கின்றன . தலாதலத்தில் உள்ள கைலாசபுரத்தில் ருத்ரர் வாசம் செய்கிறார். மஹாதல லோகம் பித்ருக்கள் மற்றும் முன்னோர்களின் இருப்பிடம். ஸ்வேதத்விப வைகுந்தம் பாதாள லோகத்தில் உள்ளது. நாராயணன் இங்கு வசிக்கிறார். கீழ்ப் பகுதியில் மேருவுக்கு அருகில் உடலற்ற உயிரினங்களும், இறந்தவர்களின் ஆத்மாவும், துன்பங்களை அனுபவிக்கும் உடல்களும் இருக்கின்றன. கொடூரமான குற்றம் புரிந்தவர்களுக்கு நிரலம்ப சூச்யகிரஹஸ்தானத்தில் இடம் பெறுவர். சாப்பாட்டிற்கு பின் உத்தரா போஜன ஜலம் இவர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மந்திரத்தை கூறி அளிக்கப்படுகிறது

**“ரௌரவே அபுண்ய நிலையே பத்மார்புதே நிவாஸினாம்**
**அர்த்தினாம் உதகம் தத்தம் அக்ஷயம் உபாதிஷ்டதே”**

## லோகங்களின் பெயர்களும் அதன் பரப்பளவு விளக்கங்களும்

பூகோளமும் (பூமி) பூலோகத்தில் உள்ள மஹாபூமியும் வெவ்வேறு என்பதை தயவுசெய்து நன்றாக புரிந்து கொள்ளுங்கள். பூகோளத்தின் மத்திய புள்ளியின் மேலிருக்கும் மேற்பகுதியில் உள்ள துருவ நட்சத்திரம் வரை நீளும் மேரு ரேகை பகுதியில் சூர்ய லோகம் பிரகாசிக்கிறது. இந்த உலகத்தில்தான் சூரிய தேவன் வசிக்கிறார். இது சூரியனின் இருப்பிடத்திற்கு அருகில் இல்லை. இதே போல் சந்திர லோகம்,செவ்வாய் லோகம், புதன்லோகம், குரு லோகம், சுக்ர லோகம், சனிலோகம்,ராசி மண்டலங்கள், நட்சத்திர அதிபதிகளின் லோகங்கள், சப்தரிஷி

மண்டலம் (வேதங்களின் அதிபதிகளான 7 ரிஷிகள்), மற்றும் அதற்கு மேல் துருவ லோகம் இருக்கும். இவற்றை தவிர பல லோகங்கள் உள்ளன.

சூரியலோகம் பூமியின் மத்திய புள்ளியில் இருந்து 1 லட்சம் பிரம்மாண்ட யோஜனைகள் தூரத்தில் அமைந்திருக்கிறது. இந்த லோகத்தில்தான் சூரியனின் பிரதான தெய்வமான சூரியதேவன் வாழ்கிறார். பூமியின் மத்திக்கும் லோகங்களுக்கும் உள்ள தூரப் பட்டியல் பின்வருமாறு:

| லோகங்களின் பெயர் | தூரம் (பிரமாண்ட யோஜனைகளில்) |
|---|---|
| சந்திர லோகம் | 2 லட்சம் |
| செவ்வாய் லோகம் | 3 லட்சம் |
| புதன் லோகம் | 5 லட்சம் |
| குரு லோகம் | 7 லட்சம் |
| சுக்ர லோகம் | 9 லட்சம் |
| சனி லோகம் | 11 லட்சம் |
| ராசிமண்டலம் | 12 லட்சம் |
| நட்சத்திர அதிபதிகளின் லோகங்கள் | 13 லட்சம் |
| சப்தரிஷிமண்டலம் | 14 லட்சம் |
| துருவ லோகம் | 15 லட்சம் |

இதேபோல் ஸ்வர்க லோகம், மகரலோகம், ஜனலோகம், தபோலோகம் மற்றும் சத்ய லோகம் ஆகிய லோகங்களும் பூமியின் மத்தியிலிருந்து வெவ்வேறு தூரத்தில் உள்ளது. பூமியின் மத்திக்கும் அண்டத்தின் சுவருக்கும்(பிரம்மாண்டத்தை சுற்றியுள்ள சுவர்) இடையே உள்ள தூரம் 24 கோடியே 50 லட்சம் பிரம்மாண்ட யோஜனைகள். பூமியின் மத்திக்கும் அண்டத்தின் வெளிசுவருக்கும் இடையே உள்ள தூரம் 25 கோடியே 50 லட்சம் பிரம்மாண்ட யோஜனைகள். பிரளயத்தின் போது பூலோகம், புவர்லோகம்,மற்றும் ஸ்வர்கலோகம் அழிந்துவிடும்.ஸ்வர்க லோகத்திற்கு மேல் உள்ள மகரலோகம் பாதி அழிந்துவிடும். ஜனலோகம்,தபோலோகம் மற்றும் சத்தியலோகம் பிரம்மாவின் காலம் அழியும் வரை இருக்கும். ஸ்வர்க லோகம், மகரலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் மற்றும் பிரம்மாண்டத்தை சுற்றியுள்ள சுவர் வரை சொர்க்கம் ஆகும்.

## ஸ்ரீ தத்தர் யார்?

**நரசாவதானி தாத்தா! ஸ்ரீ தத்தரின் மகிமைகளையும் தத்துவங்களையும் புரிந்துகொள்ள சில லட்சம் ஜென்மங்கள் வேண்டும். ஸ்ரீ தத்தர் மட்டும்தான் பலகோடி பிரம்மாண்டங்கள் மற்றும் அதை கடந்து பரவியுள்ள அற்புதமான ஒளிபொருந்திய பேரொளி. உங்கள் கண் முன் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக நின்று கொண்டிருப்பது அதே தத்தாத்ரேயர்தான் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.**

இந்த இனிமையான உபதேசங்களை கேட்டு நரசாவதானியும் அவர் மனைவியும் வியப்படைந்தனர். ஒரு வயது சிறிய குழந்தை அதிகாரத்துடன் பல

ஆழமான விஷயங்களை வெளிப்படுத்தியது மட்டுமல்லாது தன்னையே ஸ்ரீ தத்தாத்ரேயர் என்று அறிவித்தது, ஆகியவைகளை எண்ணி நரசாவதானியும் அவர் மனைவியும் தேம்பி கண்ணீர் விட்டனர். அவரின் காலை தொட்டு வணங்க இருவரும் அனுமதி கேட்டனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் மறுத்துவிட்டார். அவர்கள் இருவராலும் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு சிறிது கூட நகர முடியவில்லை.

ஸ்ரீ ஸ்ரீபாதர் உறுதியாக இவ்வாறு கூற தொடங்கினார் "நான்தான் ஸ்ரீ தத்தர். கோடானுகோடி பிரபஞ்சங்களில் வியாபித்திருக்கும் ஒரே நிகழ்வு நான்தான். திசைகளே என் ஆடைகள். நான் ஒரு திகம்பரர் (வானத்தை உடையாக அணிந்தவர்). எவரொருவர் தூய மனம்,உடல் மற்றும் பேச்சு ஆகியவற்றுடன் **"தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா திகம்பரா! நரசிம்ம சரஸ்வதி திகம்பரா!!"** என்று கூறுகிறார்களோ நான் அங்கு சூக்ஷ்ம ரூபத்தில் இருப்பேன். மூதாதையர்களுக்கு சடங்குகள் செய்ய வெளியூரில் இருந்து பாதகயா க்ஷேத்ரத்திற்கு வரும் பக்தர்களுக்கு என் தாய்வழி தாத்தா ஸ்ரீ பாப்பண்ணார்யா இலவசமாக தங்க இடமும் உணவும் அளித்து உதவுகிறார். நீங்கள் அவரை போன்ற சிறந்த மனிதரை கேலி செய்யும் விதமாக **"உங்களுடைய சுயம்பு தத்தர் எங்கே? அவர் இன்னும் மறையவில்லையா?"** என்று கூறினீர்கள். நான்தான் அந்த தத்தர். நான் பிறந்த அந்த புனிதமான வீட்டில் எவர் தங்கினாலும் புண்ணியம் பெறுவர். அவர்களின் முன்னோர்களும் புண்ணிய லோகத்தில் இடம்பெறுவர். நான் இறந்தவர்கள் மற்றும் உயிருடன் இருப்பவர்களின் நலன்களைப் பேணி காப்பவன். இறப்பும் பிறப்பும் எனக்கு ஒன்றுதான். இருப்பினும் நீங்கள் கவலையில் இருக்கிறீர்கள். இதுதான் சுயம்பு தத்தரை வணங்குவதால் கிடைக்கும் பலனா? உங்கள் மேல் சுமத்தப்பட்ட அவதூறு நீங்க சுயம்பு தத்தர் விரைவில் தோன்றுவார். கும்பாபிஷேக விழாவும் நடைபெறும். நான் உங்களுக்கு நீண்ட ஆயுளை அளிக்கிறேன்.

ஸ்ரீ தத்தருடன் தியானத்தில் இருங்கள். நான் உங்கள் அடுத்த பிறவியில் கருணை காட்டுவது உறுதி. இந்த பிறவியில் என் பாதத்தை தொடும் அளவுக்கு நீங்கள் புண்ணியம் பெறவில்லை. கோடானுகோடி பிரம்மாண்டங்களை படைத்து, காத்து அழிக்கும் படைப்புகளின் ஒரே மன்னரான நான் என் நற்கரங்களை கொண்டு ஆசீர்வதிக்கிறேன்" என்றார். பயங்கரமான பேரொலியுடன் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய உடலின் அணுக்கள் சிதறி ஸ்ரீ ஸ்ரீபாதர் மறைந்துவிட்டார்.

என் குழந்தாய் சங்கர் பட், ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருடைய நாமத்தின் முடிவில் திகம்பரா என்று சேர்த்து ஜெபிப்பதன் ரகசியத்தை விளக்கினார். அவர் எங்கும் நிறைந்த குணமுடையவர். உருவமில்லா குணமுடைய ஒருவர் எப்படி வடிவத்துடன் அவதரித்தார் என்பதை புரிந்து கொள்வது நமக்கு அப்பாற்பட்ட ஒன்று. பிரபஞ்சத்திற்கு அதிபதியான அவர் தந்திரமான மாறுவேடத்தில் இருந்து கொண்டு அவரின் குழந்தைப்பருவத்தில் இருந்து நடத்தும் திருவிளையாடல்களுக்கு எல்லைதான் ஏது?

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 8

## தத்த அவதாரங்கள் பற்றிய விளக்கம்

### ப்ரம்மஞானத்தை அடைய விருப்புபவர்களே பிராமணர்கள்

அடுத்த நாள் காலையில் தன் தினசரி வழிபாடுகளை முடித்துக்கொண்டு திருமலதாஸ் பின்வருமாறு விளக்க தொடங்கினார், "என் மகனே சங்கர் பட், ஒரு ஆத்மாவின் வெளிப்பாடு நிகழும் போது அதன் 16 ஆற்றல்களும் அதற்குரிய கூறுகளிடம் ஐக்கியமாகிவிடும். பல்வேறு தெய்வங்களின் சக்திகள் அதன் உணர்வுகளின் அடிப்படை தோற்றத்திற்குள் நுழைந்துவிடும். தன்னை அறிதல் மற்றும் அனைத்து வினைகளும் பிரம்ம உருவத்திடம் உட்கொள்ளப்பட்டுவிடும். பிரம்மஞானத்தை (பிரம்மத்தை பற்றிய ஞானம்) அடையும் ஏக்கம் கொண்டவர்கள்தான் உண்மையான பிராமணர்கள். உயிர், நம்பிக்கை, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம், உடலுறுப்புக்கள், மனம், உணவு, தண்ணீர், எண்ணம், மந்திரங்கள், செயல், உலகங்கள், மற்றும் உலகிலுள்ள பல்வேறு பெயர்கள் ஆகியவைகளை 16 ஆற்றல்கள் என்று அழைப்பர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பரப்ரம்மத்தின் அனைத்து 16 ஆற்றல்களையும் உள்ளடக்கிய அவதாரம்.

### உணவே மனம் ஆகிறது-சாத்வீக உணவினால் மனம் தூய்மை பெறுகிறது

ப்ரம்மா ஆரம்ப நிலையில் பிராணனை உருவாக்கினார் (உயிர் சக்தி). பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து மொத்த உயிர்களைத்தான் உயிர் என்கிறோம். இதுதான் சூக்ஷ்ம ஆத்மா அல்லது ஹிரண்யகர்பம் எனப்படுகிறது. படைப்பாளிக்கு ஹிரண்யகர்பர் என்ற பெயரும் உண்டு. படைப்புக்காக மனிதனின் உடல் ரீதியான, மனம் ரீதியான மற்றும் அறிவு அம்சங்கள் தூண்டபடுவதுதான் பிராணன் (உயிர் சக்தி) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. பிராணமய கோசம்தான் (பிராணமய உறை) சக்தி சரீரம் (தெய்வீக பெண் ஆற்றலின் உடல்) என அழைக்கப்படுகிறது. உயிர் உணர்வுகளை சரி செய்து கொள்வதன் மூலம் உடல் உபாதைகளை நீக்கிவிடலாம். மனிதனின் ஸ்தூல உடல் நோய்வாய்ப்படுவதற்கு முன் உயிர் சக்தியின் அடுக்கு நோய்வாய்ப்படும். பிறகுதான் மொத்த உடலும் நோய்வாய்ப்படும்.

உயிர் சக்திகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் பஞ்சபூதங்கள் உருவாகும். பஞ்சபூதங்களின் உணர்வுகளை உணர்த்து கொள்வதற்குத்தான் ஐம்புலன்கள் உருவாக்கப்பட்டது. இந்த உறுப்புகளை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் அனைத்து செயல்பாடுகளும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றனவா என்பதை மேற்பார்வை பார்ப்பதற்காக மனம் உருவானது. உணவு விஷயத்தில் மனிதன் போதுமான

முன்னெச்சரிக்கைகள் எடுக்க வேண்டும். உணவில் உள்ள மிக நுண்ணிய கூறுகளால்தான் மனம் உருவாகிறது. மனதை உணவால் திடப்படுத்தும் போது எண்ணங்கள் மிகுதியாகின்றன. அந்த எண்ண அலைகள் சீராக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டும். அந்த எண்ண ஓட்டங்களின் பிரதிபலிப்புதான் மந்திரங்கள் என்று கூறப்படுகிறது. வேதங்களில் கூறப்பட்டுள்ளபடி ஹோமங்கள் மற்றும் சில சடங்குகள் நடத்தப்படும் போது மந்திரங்கள் முறையாக ஜபிக்கப்படும், இந்த நடைமுறைதான் கர்மா என்று அழைக்கப்படுகிறது.

உலகம் கர்மாவின் படிதான் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெயர் மற்றும் உருவம் இல்லாமல் உலகம் இருக்க முடியாது. இந்த பாணியில்தான் ஆழ்ந்த துயரத்துடன் இருக்கும் சங்கிலியால் பிணைக்கப்பட்ட 16 நிறங்கள் உருவானது. மனித உடலில் ஒவ்வொரு உடல் உறுப்பையும் ஒவ்வொரு தெய்வம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஒரு யோகி ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் போது ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அதன் 16 ஆற்றல்களும் அதற்குரிய கூறுகளுடன் ஐக்கியமாகிவிடும். யோகியின் உடல் உறுப்புகளின் சக்தியும் பிரபஞ்சத்தின் உள்ளர்ந்தமான இடத்தில் ஐக்கியம் ஆகிவிடும். செயல் உறுப்புகள் (கர்மேந்திரியம்) மற்றும் ஞான உறுப்புகளுடன் (ஞானேந்திரியம்) கூடிய மனிதனால் செயல்படாமல் இருக்க முடியாது.

## ஆணவம் அழிக்கப்படாமல் மோக்ஷம் கிடைக்காது

மனிதனின் செயல்கள் அவன் ஆணவத்தில் இருந்துதான் வருகிறது. அஹம் (ஆணவம்) என்பது மனம் மற்றும் ஞானத்தின் நிபந்தனைகளால் ஒளியூட்டப்பட்ட சைதன்யம். ஆத்ம சாக்ஷாத்காரம் (ஆத்மாவை உணர்ந்த) பெற்ற ஒரு யோகிக்கு அவரின் பூர்வ ஜென்ம பலன்கள் ரத்து செய்யப்பட்டு விடும். பிரிவினைவாத போக்கான அஹங்காரம் முழுவதும் அழிக்கப்படவில்லையென்றால் ஆத்ம சாக்ஷாத்காரம் நடைபெறாது. ஒரு யோகி தன்னை அறிந்தால் வேத சடங்குகள் மற்றும் அதன் வெகுமதிகளும், அதனுடன் அகங்காரத்தின் மையம் மற்றும் அதன் மாய தந்திரங்களும் நிலையான பரமாத்மாவுடன் ஐக்கியமாகிவிடும்.

யோகி பரமாத்மாவுடன் ஐக்கியமாகி தன் தனித்துவத்தை இழந்து விடுவார். பரமாத்மாவிற்கு தனித்துவம் உண்டு மற்றும் அந்த பண்புதான் சக்தியின் உருவம். கர்மா அழிக்கப்பட்டு அதன் பலனால் ஒரு யோகி சித்த நிலையை (பூரணத்துவ நிலையை) அடைவார். அவரின் மொத்த உடல் கர்மாவின் பலன்களை அனுபவித்துக் கொண்டு இருந்தாலும் அவரின் ஸ்தூல உடலுக்கு எந்தவித விழிப்புணர்வும் ஏற்படாமல் மோக்ஷ நிலையிலேயே இருப்பார். கடவுள் தன்னுடைய திருவிளையாடல்களை ஒரு பூரணமான யோகியின் மூலம் வெளிக்காட்டுவார். அந்த யோகி இந்த பலமும் செயல்திறனும் தவறுதலாக தன்னுடையது என்று நினைத்தால் பரமாத்மா அவற்றை திரும்ப பெற்று கொண்டு அவரின் கர்வத்தை அழித்து விடுவார். ஒரு யோகி பரமாத்மாவின் கருவியாக இருந்து கொண்டு தன் ஆணவ கர்வங்களை பரமாத்மாவுடன் கலந்துவிட வேண்டும்.

ஸ்ரீ பாப்பண்ணார்யா ஸ்ரீசைலத்தில் உள்ள மல்லிகார்ஜுன லிங்கம், கோகர்ணத்தில் உள்ள மஹாபலேஸ்வர லிங்கம் மற்றும் மற்ற புனித இடங்களுக்கு சூரிய மண்டலத்தில் இருந்து சக்தியை பரிமாற்றம் செய்தார். சக்தி பரிமாற்றம் சுயம்பு தத்தரின் வழிபாட்டு சிலைக்குள்ளும் நடைபெற்றது. அந்த நெருப்புடன் தொடர்புடைய சக்தி அமைதி படுத்தப்படவேண்டும். இல்லையென்றால் சிலையின் பயங்கரமான சக்தியினால் விரும்பத்தகாத விளைவுகள் நிகழ்வுற்று எல்லா பக்தர்களும் அர்ச்சகர்களும் தண்டிக்கப்படுவார்கள். ஆழ்ந்த ஞானம் உள்ள யோகியால் மட்டுமே சுயம்பு தத்தருக்குள் இறங்கியிருக்கும் சூரிய மண்டலத்தின் சக்திகளைப் புரிந்து கொள்ள முடியும். ஸ்ரீசைலத்தில் ஆயிரம் மக்கள் முன்னிலையில் ஸ்ரீ பாப்பண்ணார்யா வழிகாட்டியபடி சக்திப் பரிமாற்றம் நடைபெற்றது. சூரிய மண்டலத்தில் இருந்து ஒரு பேரொளி வெளியாகி மல்லிகார்ஜுன லிங்கத்துடன் ஐக்கியமான காட்சியை அங்கு கூடியிருந்த மக்கள் கண்டனர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உண்மையான அவதாரத்திற்கும் சக்திப் பரிமாற்றம் நடைபெற்றதற்கும் ஒரு முக்கியமான தெய்வீக ரகசியம் கலந்த மர்மம் இருக்கிறது. இந்த ரகசியமான விஷயத்தை ஒரு சிறந்த துறவியால் மட்டும்தான் வெளிப்படுத்தவோ தெரியப்படுத்தவோ முடியும். ஸ்ரீசைலத்தில் அமைதிப்படுத்த ஒரு சிறந்த யாகம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளிக்கப்பட்டு பசித் தீ பெருமளவில் தணிக்கப்பட்டது. சக்தி தன் ஆக்ரோஷத்தை துறந்து அமைதியான நிலையில் நிலைத்திருக்கும் போது அனைத்து சுப நிகழ்ச்சிகளும் அமைதியான முறையில் நடைபெறும்.

எனினும், பீதிகாபுரத்தில் ஸ்ரீ சுயம்பு தத்தருக்கு சக்தி பரிமாற்றம் நடைபெற்றதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. அதனால் எந்தவித அமைதிபடுத்தும் சடங்குகளும் நடத்தப்படவில்லை. ஸ்ரீ பாப்பண்ணார்யா மகா அன்னதானம் நடத்தவும் மற்றும் அமைதிப்படுத்தும் சில வழிமுறைகள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தும் உள்ளூர் அர்ச்சகர்கள் அவர் முன்மொழிந்ததை மறுத்துவிட்டு தவறாக கருதிக்கொண்டு விவாதத்தில் இறங்கினர்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரே பதினாறு ஆற்றல்களின் உருவகம்

காலம் போய்க்கொண்டிருந்தது ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு 2 வயதானது. அவரின் பல விளையாட்டுத்தனமான திருவிளையாடல்களின் மூலம், தான் இந்த யுகத்தின் ஒரு சிறப்புமிக்க அவதாரம் என்பதையும், 16 வித அற்புதமான ஆற்றல்களின் கொடையாளி என்பதையும் பறைசாற்றிக் கொண்டே இருந்தார். அவர் பீதிகாபுரத்தை விட்டு செல்லும் போது அவருக்கு 16 வயது. பிறகு 14 ஆண்டுகள் குருவபுரத்திலும் மற்ற இடங்களிலும் உலாவிக் கொண்டிருந்தார். ஆனால் பார்ப்பதற்கு என்றும் பதினாறாகவே காட்சியளித்தார்.

## ஸ்ரீ தத்தாத்ரேயரின் பதினாறு அவதாரங்களின் பெயர்கள்

எண் 16ன் மற்றுமொரு மகத்துவமாக, ஸ்ரீ தத்தாத்ரேயர் பண்டைய காலத்தில் தன்னை 16 விதமாக வெளிப்படுத்தி கொண்டார். அவை

*1.யோகி ராஜா 2.அத்ரிவராதா 3.திகம்பரா அவதூத ஸ்ரீ தத்தாத்ரேயா 4.காலாக்னி சமான 5.யோகிஜன வல்லபா 6.லீலாவிஸ்வம்பரா 7.சித்தராஜா 8.ஞானசாகரா 9.விஸ்வம்பர அவதுதா 10.மாயமுக்த அவதூதா 11. ஆதிகுரு 12.ஸம்ஸ்கார ஹீன சிவ ஸ்வரூப 13.தேவ தேவ 14.திகம்பரா 15.தத்த அவதூத 16.ஸ்யாம கமல லோச்சனா.*

**யோகிராஜா:** *அத்ரி அனுசுயா தம்பதி குழந்தை வரம் வேண்டி ஹிமாத்ரி இமயமலையில் தவம் புரிந்த போது யோகிராஜா அவதரித்தார். அவருடைய முதல் தரிசனம் கிருத்திகை நட்சத்திரம் கார்த்திகை பௌர்ணமி சூரிய உதயத்தின் போது நடந்தது, அன்று புதன்கிழமை. அந்த வெளிப்பாட்டின் போது ஸ்வாமி செயலற்ற நிலையில் மாசற்ற மாணிக்கத்தை போன்று தோன்றினார்.*

**அத்ரி வரதர்:** *அத்ரி மகரிஷி இந்த உருவத்தை தரிசித்த போது 100 வருடங்கள் சமாதி நிலையில் இருந்தார். அவருடைய தீவிரமான தவத்தினால் மூவுலகங்களும் கலக்கமடைந்தன. அதை அமைதிப்படுத்த ஸ்ரீ தத்தாத்ரேயர் ஆறு கரங்களுடன் கார்த்திகை மாதம் இரண்டாவது பாதி பிரதமையன்று விடியற்காலையில் குரு ஹோரையில் தெய்வீக தரிசனம் அளித்தார். வியாழக்கிழமை ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய அந்நாளில் பல வரங்கள் அளித்தார். இந்த வெளிப்பாடுதான் அத்ரி வரதர் (அத்ரியின் விருப்பங்களை அளிப்பவர்).*

**திகம்பரா அவதூத ஸ்ரீ தத்தாத்ரேயா:** *அத்ரி மகரிஷி அத்ரி வரத உருவத்தில் வந்த கடவுளிடம்* **'தயவுசெய்து உங்களை போன்ற மகன் எனக்கு அளிக்க வேண்டும்'** *என்றார். அதற்கு ஸ்வாமி 'எனக்கு ஈடானவர் எவருமில்லை. ஆகவே என்னையே உங்களுக்கு தானமாக அளிக்கிறேன்' என்றார். அவர் திகம்பரர் உருவத்தில் குழந்தை தரிசனம் அளித்தார். அன்று வெள்ளிக்கிழமை மிருகசீரிஷ நட்சத்திரம் கார்த்திகை மாதம் இரண்டாவது பகுதியின் இரண்டாவது நாள் சூரிய உதயத்தின் போது நடந்தது. இந்த வெளிப்பாட்டை திகம்பரா அவதூத ஸ்ரீ தத்தாத்ரேயா என்று அழைப்பர்.*

**காலாக்னி சமான:** *இந்த திகம்பர அவதூத வடிவத்தை அத்ரி மற்றும் அனுசுயா இருவரும் கண்டனர். அன்று புதன்கிழமை, மார்கழி மாதம் பௌர்ணமி, அன்று மிக அதீதமான பேரொளி ஒன்று அவரின் கண்ணில் இருந்து வெளிவந்து அன்னை அனுசூயாவின் கருவறைக்குள் நுழைந்தது. அது கருவறைக்குள் நுழைந்தவுடன் அதன் தீவிரம் குறைந்து விட்டது. அந்த பரஞ்சோதி (மிகுதியான ஒளி) ஒரு ஆண் கருவாக மாறியது. அது காலாக்னி சமான தத்தர் என்று அழைக்கப்பட்டது. என் அருமை சங்கர் பட், இந்த காலாக்கினி தத்தரைத்தான் ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் வீட்டில் பல தலைமுறைகளாக வணங்கி வருகின்றனர்.*

## ஸ்ரீ தத்தரின் அவதார நேரம் மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அவதார நேரம்

**யோகிஜன வல்லபா :** நம் ஸ்வாமியான காலாக்னி சமான தத்தர் விளையாட்டுப் பிள்ளையாக மார்கழி மாதம் பௌர்ணமி அன்று சூரிய அஸ்தமனத்தின் போது

மிருகசீரிஷ நட்சத்திரத்தில் பிறந்தார். அந்த வடிவம்தான் யோகிஜன வல்லபர் என்று அழைக்கப்படுகிறது. என் அன்பானவனே, இந்த கலியுகத்தில் முதன்முறையாக ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் புண்ணிய நாளான கணேச சதுர்த்தி அன்று சூரிய உதயத்தின் போது துலா ராசியில் சித்திரை நட்சத்திரத்தில் சிம்ம லக்கினத்தில் பீதிகாபுரத்தில் சிறந்த புண்ணியவதியான சுமதிக்கு பிறந்தார்.

**லீலா விஸ்வம்பரா :** பல சிறந்த முனிவர்கள் யோகிஜன வல்லபராகத் தன்னை வெளிப்படுத்திய நம் ஸ்வாமியிடம் தங்கள் யோகப்பாதையைத் தொடங்கி வைக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவர்களை சோதிக்க எண்ணிய ஸ்வாமி ஒரு மாயப் பெண்ணை உருவாக்கினார். அவளுடன் விளையாடிக்கொண்டே ஆற்றினுள் மூழ்கி மறைந்துவிட்டார். இந்த அவதாரத்திற்கு லீலா விஸ்வம்பரா என்று பெயர். இந்த லீலை தை மாத பௌர்ணமி அன்று புதன்கிழமை காலையில் நடந்தது. என் செல்வமே, அந்த மாய பெண் வேறு யாருமல்ல தத்தாத்ரேயரின் மறுபாதியான அனகாதேவிதான். அந்த தெய்வீக புனித வடிவம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் இடப்பாகத்தில் உள்ளது. வலப்பக்கத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயர் இருக்கிறார். அதனால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப வடிவம் அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தில் இருக்கிறார். இது ஒரு தெய்வீக ரகசியம்.

## ஸ்ரீ தத்தரின் மற்ற வெளிப்பாடுகள்

**சித்த ராஜு:** நம் கடவுள் பத்ரிநாத்தில் சில காலம் வாழ்ந்தார். அங்கு சித்தர்கள் ஸ்வாமியை சோதிக்க முயற்சி செய்தனர். பிறகு ஸ்வாமி அவர்களிடம் இருந்து அனைத்து சக்திகளையும் பறித்துக்கொண்டார். அவர்கள் சரணடைந்தவுடன் ஆத்மசித்தியை வழங்கினார். இவை வியாழக்கிழமை மதியம் மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய பௌர்ணமி அன்று நடைபெற்றது. சித்த முனிவர்களுக்கு ஆத்மசித்தி அளித்த இந்த உருவம்தான் சித்தராஜு என்று அழைக்கப்படுகிறது. என் செல்வமே,சரியாக 2498 வருடங்களுக்கு முன் கணேச சதுர்த்தி அன்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக தன்னை வெளிப்படுத்தியபோது ஒரு வினோதமான சம்பவம் நடந்தது. ஸ்ரீ தத்தரின் தரிசனத்திற்காக பத்ரிநாத்தில் வெவ்வேறு உயர்ந்த ஆன்மீக நிலையில் இருந்த சிறந்த யோகிகள் தவம் புரிந்து பிரார்த்தனை செய்து கொண்டனர். பின்னர் கடவுள் அவர்களுக்கு 25 வயது இளமையான உருவத்தில் தரிசனம் அளித்தார். அவர்களுக்கு பண்டைய காலத்து கிரியா யோகாவை கற்றுக்கொடுத்தார், அது ஜீவனின் உருமாற்றத்தின் முன்னேற்றத்தை வேகப்படுத்தியது. சைதன்யம் இயற்கையாக 10,000 வருடங்களில் உரு மாற்றம் அடைய வேண்டிய முழுநிறை நிலையை கிரியா யோகப் பயிற்சியினால் சில வருடங்களிலேயே அடைந்துவிட முடியும். மஹாசக்தியின் விருப்பத்தின் பேரில் மாறிக்கொண்டிருக்கும் மேல் சமதளத்தில் இருக்கும் பெரும் சக்திகள்,நிலம்,நீர்,காற்று,நெருப்பு மற்றும் ஆகாயம் ஆகியவற்றின் உணர்வில் ஈர்க்கப்பட்டு கீழ் சமதளத்தில் உள்ள மொத்த உடலும் மாறுதல் அடையும். இதுதான் கிரியா யோகா என்று அழைக்கப்படும். இது ஸ்ரீ தத்தாத்ரேயரின் மிக ரகசிய வழி யோகமுறை ஆகும். இந்த முறையில் உடலில் உள்ள மூலக்கூறுகளில்

பிராணவாயுவினால் சக்தி ஊட்டப்படும். உடலில் உள்ள கரியம் (carbon) நீங்கிவிடும். இது இறப்பை வென்று மிருத்யுஞ்சயனாக ஆவதற்கான ராஜ வழி. ராஜயோகத்தை கற்பித்த பரமகுருவை ஸ்ரீ பாபாஜி என்று அழைத்தனர். ஆதிசங்கரர் முன் சண்டாளனாகத் தோன்றி ஞானம் கற்பித்தது ஸ்ரீ பாபாஜிதான். அவர் இப்போதும் ஸ்தூல உடலுடன் இருக்கிறார்.

யோகிகள் பாபாஜியாக தரிசனம் அளித்த ஸ்ரீ தத்தாத்ரேயரை பூமியில் பிறக்க வேண்டும் என்று கேட்க மறந்து விட்டனர். அதற்காக அவர்கள் வருத்தப்பட்டனர். அந்த யோகிகள் அனைவரும் நேபாளுக்கும் பூடானுக்கும் இடையே உள்ள கைவல்ய ஷுருங்க ஸ்தானம் என்ற இடத்தில் கடுந்தவம் புரிந்தனர். அவர்களில் பல யோகிகளுக்கு சில நூறு வயது இருக்கும். அவர்கள் சிறந்த தவம் புரிந்தனர். அவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு கடவுள் தரிசனம் அளித்தார். அவர்கள் பிரார்த்தனையின் பலனால் வானத்தில் ஒரு லட்சம் சூரியன்களுக்கு இணையான ஒளி தோன்றியது. அந்த மகத்தான ஒளி ஒரு வயதான மனிதனாக வடிவம் எடுத்தது. அந்த சிறந்த கடவுளை ஸ்ரீ விஸ்வேஸ்வர மகாபிரபு என்று அழைத்தனர். அவரை எப்போதும் தரிசனம் அளிக்கும் படி பிரார்த்தனை செய்து கொண்டனர். தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை தரிசனம் அளிப்பதாக கூறினார். அவர்கள் இது மிகவும் நீண்ட காலம் என்று கூறினர். பிறகு அவர் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை தரிசனம் அளிப்பதாக கூறினார். அதுவும் நீண்ட கால இடைவெளி என்று கூறினர். கருணை பொங்கும் மனதுடன் தான் ஆறு மாதத்திற்கு ஒருமுறை தரிசனம் அளிப்பதாக உறுதி அளித்தார். அந்த சித்தர்கள் கூட்டம் அவரை பூமியில் அவதரிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கு விஸ்வேஸ்வர மகாப்பிரபு தான் 2498 வருடங்களுக்கு பிறகு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பீதிகாபுரத்தில் அவதரிப்பதாக உறுதி அளித்தார். அதுமட்டுமல்லாமல் தன்னுடைய அம்ச அவதாரங்கள் 12 முறை வரும் என்றும் தனது பன்னிரண்டாவது அவதாரமான ஸ்ரீ ராம்லால் மகாபிரபு, வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே ஸ்வாமிகள்) என்னும் பெயருடைய துறவிக்கு நிர்விகல்ப சமாதியை வழங்குவார். வாசுதேவானந்த சரஸ்வதி பின்னாட்களில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பிறந்த ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டை கண்டுபிடிப்பார். அந்த இடத்தில் அவரால் பாதுகைகளை பிரதிஷ்டை செய்ய முடியாது (அத்தியாயம் 4). பாதுகைகளை பிரதிஷ்டை செய்யும் வாய்ப்பு வேறு ஒருவருக்கு அளிக்கப்பட்டு இருப்பதால் அவரால் இதை செய்ய முடியாது. என் அருமை சங்கர் பட் , ஒரு வேலை நடக்க வேண்டுமா அல்லது நடக்க வேண்டாமா அல்லது வேறு வழிகளில் நடைபெற வேண்டுமா என்பது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் விருப்பம்தான் காரணம் என்பதை நினைவில் கொள்" என்றார் திருமலதாஸ்.

நான் அவரிடம், **"ஐயா திருமலதாஸ் அவர்களே, பாதுகைகள் பிரதிஷ்டை என்பது ஒரு சிறிய விஷயம் தானே!! அவர் பிறந்த இடத்தில் பாதுகைகளை பிரதிஷ்டை செய்ய பல நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டுமா?"** என்று கேட்டதற்கு "என் அன்பானவனே, இது அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் திருவிளையாடல்தான். அவரின் விருப்பம் இல்லாமல் ஒரு இலை கூட அசையாது. துரோணகிரியில் உள்ள

பத்ரிகாருண்யத்தில் (பத்ரி காடு) அதாவது சஞ்சீவினி மலை என்று அழைக்கப்படும் இடத்தில் அவர் 25 வயதுடைய மனிதனாக பாபாஜி என்ற பெயரில் தோன்றுவார்.

நேபாளுக்கும் பூடானுக்கும் இடையே உள்ள கைவல்ய ஸ்ருங்கத்தில் ஸ்ரீ விஸ்வேஸ்வர பிரபு என்ற வயதான தோற்றத்தில் காட்சியளிப்பார். இப்போது குருவபுரத்தில் 16 வயதுடைய துறவியாக தரிசனம் அளித்துக் கொண்டிருக்கிறார். அவர் இந்த மூன்று உருவங்களிலும் ஒரே நேரத்தில் இருக்கிறார். ஆதிபராசக்தியான ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரி தசஸ்வமேத படித்துறையின் குகையில் பாபாஜியின் சகோதரியாக வீற்றிருக்கிறாள். என் அன்பானவனே, ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகள் நினைத்துப் பார்க்கவும் முடியாத,விவாதத்தால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கும் முன்பு பார்த்தோ அல்லது கேள்விப்படாத ஒன்றாகவோ இருக்கும். மார்க்கண்டேய மகரிஷியின் வழிகாட்டுதலின் கீழ் வைசிய முனிகள் காசியில் ஒரு சிறந்த யாகத்தை நிகழ்த்தினர். பின்னர் ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரி தசஸ்வமேத படித்துறையில் அவர்களுக்கு தரிசனம் அளித்து ஆசீர்வதித்தாள். அன்று ஆடி மாதம் பௌர்ணமி. ஆஷாட பௌர்ணமி அன்றுதான் வேத வியாசரும் பிறந்தார். இந்த பௌர்ணமிதான் குரு பூர்ணிமா என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ தத்தாத்ரேயர்தான் குருக்களுக்கெல்லாம் குருவாகவும் முதல் ஆசிரியராகவும் விளங்குகிறார்.

**ஸம்ஸ்கார ஹீன சிவ ஸ்வரூபம்:** விஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமர் பெரிய யாகம் நிகழ்த்தினார். ஆவணி மாதத்தின் முற்பகுதியின் எட்டாவது நாளான ஒரு திங்கட்கிழமை அன்று ஸ்வாமி கிருஷ்ண கமலம் மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு பிங்கலநாதர் என்ற முனிவருக்கு உண்மையான சிவதத்துவத்தை கற்பித்தார். இதுதான் சிவ ஸ்வரூபம் அல்லது ஸம்ஸ்காரஹீன வெளிப்பாடு.

**தேவதேவ:** ஒருமுறை பிரம்மா வேதங்களை மறந்துவிட்டார். புரட்டாசி மாதம் பதினான்காம் நாள் ஒரு வியாழக்கிழமை அன்று சதய நட்சத்திரத்தில் அவர் ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் சரணடைந்த போது ஸ்வாமி அவருக்கு வேதத்தை வழங்கினார். இதுதான் தேவதேவ அவதாரம்.

**திகம்பர அவதாரம்:** ஸ்வாமி யது மன்னனுக்கு தரிசனம் அளித்துவிட்டு தன்னுடைய 24 குருக்கள் பற்றி கூறி அருளினார். இதுதான் திகம்பர அவதாரம். இது ஐப்பசி மாதம் பௌர்ணமி, ஒரு புதன்கிழமை அன்று நடந்தது.

**தத்த அவதூதா:** கோரக்ஷா என்கிற ஒரு நல்ல பக்தர் இருந்தார். அவர் கோரக்நாத் என்றும் அழைக்கப்படுவார். ஆனி மாதம் பௌர்ணமி அன்று ஸ்வாமி தன்னை அவரிடம் முழுவதுமாக வெளிப்படுத்திக்கொண்டார். இந்த உருவம்தான் தத்த அவதூத அவதாரம். கோரக்ஷரின் சீடர்கள் நேபாளத்தில் உள்ளனர். சுக்ர நாடிக் கிரந்தத்தில் (வருங்கால வரலாறின் ஜோதிட கையெழுத்துப்பிரதி) ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஜாதகத்தின் பிரதி உள்ளது. உரிய நேரத்தில் அது நேபாளத்தில் இருந்து பீதிகாபுரம் வந்தடையும். அப்போதிலிருந்து கணக்கிலடங்கா மக்கள் ஸ்ரீ பீதிகாபுரம் வந்து தத்த பாதுகைகளை தரிசனம் செய்வர்.

**ஞான சாகர அவதாரம்:** என் செல்வமே,சித்த ராஜு அவதாரத்திற்கு பின்னர் ஸ்வாமி முழுமையான ஞான யோகத்தில் நுழைந்துவிட்டார். இந்த உருவம் பங்குனி மாதம் முதல் பாதியின் பத்தாவது நாளான ஞாயிற்றுக்கிழமை அன்று விடியற்காலை வேளையில் ஞான யோகத்தினுள் நுழைந்தது. இதுதான் ஞான சாகர அவதாரம்.

**விஸ்வம்பர அவதூதா:** கடவுளிடம் இருந்து ஞான யோகத்தை பெற்ற சித்த முனிகள் தங்கள் ஆன்மீக நல்லொழுக்கத்தை சாதகம் செய்து கொண்டு இருந்தனர். அவர்களை சோதனை செய்ய கடவுள் ஒரு அசிங்கமான உருவம் எடுத்தார். அவரை சரணடைந்த யோகிகளுக்கு முழு அருளையும் பொழிந்தார். இது செவ்வாய்க்கிழமை,சித்திரை நட்சத்திரம் கூடிய சித்திரை மாத பௌர்ணமி அன்று நடைபெற்றது. இதைத்தான் விஸ்வம்பர அவதூத அவதாரம் என்று அழைப்பர்.

**மாய முக்த அவதூத:** காசியில் நற்பிராமணன் ஒருவர் இருந்தார். வைகாசி மாதம் முதல் பாதியில் வரும் பதினான்காம் நாளில் சுவாதி நட்சத்திரம் கூடிய நாளில் அவர் வீட்டு முன்னோர்களுக்கு சிரார்த்தம் நடைபெறும். அந்த புனித நாளை இழிவுபடுத்தும் விதமாக அன்று ஒரு பிச்சைக்காரன் கோவணம் அணிந்து கொண்டு தன் நாயுடன் அவர் வீட்டிற்குள் நுழைந்தார். அந்த பிராமணனின் கோபம் எல்லையை கடந்து சென்றவுடன் அந்த பிச்சைக்காரர் தன் நாயை வேத மந்திரங்களை ஜபிக்க வைத்தார். அந்த பிராமணன் அவரை தத்தஸ்வாமி என்று அடையாளம் கண்டுகொண்டு அவர் பாதத்தில் விழுந்தார். இந்த பிராமணன்தான் ஒரு பிறவியில் சிறந்த தத்த பக்தராக மாறிய விஷ்ணு தத்தராக பிறந்தார். ஸ்வாமி மிகவும் மகிழ்ந்து தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரிப்பதாக வரம் அளித்தார். அந்த புண்ணியம் வாய்ந்த தம்பதி சுமதி மற்றும் அப்பலராஜ சர்மாவாக பிறப்பர். அவர்கள் வீட்டில் வணங்கப்படும் காலாக்னி சமான தத்த மூர்த்தி அவர்களின் குழந்தையாக பிறப்பார். இந்த உருவத்தின் பெயர் மாய முக்த அவதூதா.

**ஆதி குரு:** ஜம்பாசுரனைக் கொல்வதற்காக வெளிவந்த தத்தஸ்வாமி மற்றும் அனகாதேவியின் இரட்டை வடிவம் ஆதி குரு என்று அழைக்கப்படும்.

**ஷ்யாம கமல லோச்சனா:** கார்த்திகை மாதத்தின் முதல் பகுதியின் பன்னிரண்டாவது நாளான ரேவதி நட்சத்திரம் கூடிய நாளில் சூரிய உதயத்தின் போது ஸ்ரீ தத்தர் எண்ணற்ற மக்களுக்கு அமுதம் பொழியும் தெய்வீக ஒளியுடன் கூடிய கருமையான தாமரைக்கண்களுடன் தரிசனம் அளித்தார். இந்த வெளிப்பாட்டை ஷ்யாம கமல லோச்சனா என்று அழைப்பர்.

ஸ்ரீ தத்தர் மகிழ்ச்சி, இன்பம் மற்றும் விடுதலை ஆகியவற்றை வழங்குபவர். அவரை வணங்க வேண்டும் என்றால் அவரின் தெய்வீக பாதுகைகளை வணங்கினாலே போதும். நான்கு வேதங்களும் நான்கு நாய்களாக வடிவம் எடுத்து அவர் பாதுகைகளை நாவால் சுவைத்து கொண்டிருக்கின்றன. வேதங்கள் அனைத்து அசுத்தங்களையும் நீக்கவல்லது. அந்த வேதங்களே அழுக்கான நாய் உருவம் எடுத்து அவர் பாத கமலங்களில் அமர்ந்திருக்கிறது என்றால் மனிதனால் அவரின் புனிதத்தை புரிந்துகொள்வது கடினம். தேவர்கள் மற்றும் சப்த ரிஷிகளுக்குக் கூட இது முடியாத ஒன்று.

முன்பு ஸ்ரீ தத்தர் வாமன அவதாரமாக தோன்றிய நேரத்தில் வாமதேவ மகரிஷி என்ற பெயரில் ஒரு முனிவர் அவரின் சமகாலத்தவராக இருந்தார். அவர் பிறந்த நேரத்தில் அவரின் தாயின் கருவறையில் இருந்து அவரின் தலை வெளியே வந்து வெளி சுற்றுப்புறத்தை கண்டு மீண்டும் கருவறைக்குள் சென்று விட்டார். பின்னர் தேவர்கள் மற்றும் துறவிகளின் பிரார்த்தனையால் அவர் மீண்டும் பிறந்தார். அதனால் அவர் பிறந்ததில் இருந்தே த்விஜ(இருமுறை பிறந்தவர்) மற்றும் ஒரு ப்ரம்மஞானி.

இதே போன்றுதான் ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்தபோதும் நடந்தது. அவர் இரண்டுமுறை பிறந்ததால் அவரும் பிறந்ததில் இதே த்விஜதான். அவர் பிறந்ததில் இருந்தே முழு பிரம்மஞானம் (உயர்ந்த தன்னை பற்றிய முழு ஞானம் பெற்றவர்)பெற்றவர். அவர் முழுமையான பிரிக்கமுடியாத மற்றும் எல்லையற்ற இருமையில்லாத சச்சிதானந்தராக (சத்-இருத்தல்,சித்-உணர்வுகள்,ஆனந்தம்-பேரின்பம்) அவதரித்ததால் அவருக்கு ஆசான் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீபாதர் கணேஷ சதுர்த்தி அன்று சித்திரை நக்ஷத்ரத்தில் துலா ராசியில் சிம்ம லக்கினத்தில் பிறந்தார். அவர் உண்மையில் மும்மூர்த்திகள் சேர்ந்த ஸ்வரூபம் மட்டும் இல்லை, ஆனால் அதையும் தாண்டிய சிறப்பான ஒரு நிகழ்வு. அவர் மும்மூர்த்திகளையும் மீறிய நான்காவது பரிமாணம் என்பதை குறிக்கும் வகையில் சதுர்த்தி அன்று பிறந்தார். மேலும் அவர்தான் ப்ரவருத்தி கணங்கள் மற்றும் நிவ்ருத்தி கணங்களின் (பொருள் மற்றும் ஆன்மீக சக்திகளின் அதிபதி) அதிபதியான கணேசர் என்பதை சுட்டிக்காட்டும் விதத்தில் கணேச சதுர்த்தி அன்று பிறந்தார். செவ்வாய் கிரகம் அல்லது அங்காரகனே சித்திரை நட்சத்திரத்தின் அதிபதி. ஒருவருக்கு செவ்வாய் தோஷம் இருப்பின் அவர் வாழ்க்கையில் பல அமங்கலமான நிகழ்வுகள் நடைபெறும். அவற்றின் மோசமான விளைவுகளை துடைத்து நல்வினைகளை அளிக்கும் விதமாகவே ஸ்ரீ ஸ்ரீபாதர் சித்திரை நட்சத்திரத்தில் தோன்றினார். ஸ்ரீ ஸ்ரீபாதரை சித்திரை நட்சத்திரத்தில் வழிபட்டால் ஏராளமான நல்வினைகளைப் பெறலாம்.

உண்மையில் ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் தர்மசாஸ்தா. அவர் ஹரி மற்றும் ஹரனின் புத்திரன் அதாவது ஸ்ரீ அய்யப்ப ஸ்வாமி என்பதை தெரியப்படுத்தவே அவர் துலா ராசியில் பிறந்தார். அவர் சிம்ம லக்கினத்தில் பிறந்தார், அதாவது கிரகங்களின் ராஜாவான சூரியனின் வீடு. அவர்தான் பிரபஞ்சத்தின் அதிபதி என்பதை தெளிவுபடுத்துகிறார். மற்றும் அவர்தான் இந்த ஒளிபொருந்திய ராஜ தர்பாரை நடத்த வந்த பேரரசர். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு தெரியாத துல்லியமான தர்மங்களே கிடையாது. தர்மத்தில் ஏதாவது குழப்பம் ஏற்படும் போது அவரை வணங்கினால் சரியான நேர்மையான வழி நமக்குத் தென்படும்.

ஸ்ரீ தத்தரிடமிருந்து மும்மூர்த்திகள் வெளியானது, மும்மூர்த்திகளிடமிருந்து 3 கோடி தேவர்களும் அவர்களிடமிருந்து முப்பத்திமூன்று கோடி தெய்வங்களும் வெளியானது. ஆகவே ஸ்ரீ தத்தாத்ரேயர் என்ற நாமத்தை ஞாபகத்தில் கொண்டாலே முப்பத்து முக்கோடி தேவர்களையும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு சமம்.

ஸ்ரீ தத்தரின் பிரம்ம முகத்திற்கு ரிஷி பூஜை செய்ய வேண்டும்(துறவிகளை வணங்குவது போலவே). விஷ்ணு முகத்திற்கு சத்தியநாராயண விரதமும், விஷ்ணு சஹஸ்ரநாமமும் ஜபிக்க வேண்டும். ருத்ர முகத்திற்கு ருத்ராபிஷேகம் செய்ய வேண்டும். பிரம்மாவின் நாவில் சரஸ்வதி வாசம் செய்வதால் ஸ்ரீ தத்தரின் பிரம்ம முகத்தில் அவள் வசிக்கிறாள். விஷ்ணுவின் மார்பில் மகாலக்ஷ்மி வாசம் செய்வதால் ஸ்ரீ தத்தரின் விஷ்ணு முகத்தில் அவள் வசிக்கிறாள். சிவனின் இடப்பக்கத்தை கௌரி தேவி ஆக்ரமித்து கொண்டிருப்பதால் ஸ்ரீ தத்தரின் சிவ முகத்தில் அவள் வசிக்கிறாள். ஸ்ரீ தத்தர்தான் ஸ்ரீ ஸ்ரீபாதர் என்பதால் பெண் தெய்வங்கள் மற்றும் அவர்களின் சக்திகள் அனைத்தும் அவரின் இடப்பக்கத்திலும், ஆண் தெய்வங்கள் மற்றும் அவர்களின் சக்திகள் அனைத்தும் அவரின் வலப்பக்கத்திலும் உள்ளன.

திருப்பதி ஏழுமலையில் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரர் உண்மையில் ஸ்ரீ தத்தர்தான். '**வெம்**' என்றால் பாவம். '**கட**' என்றால் நீக்குபவர் அல்லது வெளியேற்றுபவர் என்று பொருள் படும். வெம் என்பது அமிர்த பீஜம் (ஒற்றை எழுத்து பீஜாக்ஷர ஒலி) மற்றும் கட என்பது ஐஸ்வர்ய பீஜம். அங்கு வெங்கடேஸ்வரர் தெய்வீக அமிர்தத்தையும் செல்வச் செழிப்பும் அளிக்கிறார். அவர் அனைத்து பாவங்களையும் வெளியேற்றுகிறார். ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது. அவர்கள் இருவரும் ஒன்றுதான்" என்றார் திருமலதாஸ்.

பிறகு நான் **"ஐயா திருமலதாஸ், பண்டைய கால பெரியவர்கள் சாதி முறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளனர். எனினும் ஸ்ரீ ஸ்ரீபாதர் வேறுவிதமாக கூறுவதாக எனக்கு தோன்றுகிறது. தயவுசெய்து என் சந்தேகத்தை நீக்குங்கள்"** என்று கேட்டுக்கொண்டேன்.

## பிராமணனுடைய பண்பு

பின்னர் திருமலதாஸ் இவ்வாறு கூறத் தொடங்கினார், "என் செல்வமே, ஒரு பிராமணன் பிரம்மஞானத்தை தேடுவதற்காக வாழ வேண்டும். அப்போதுதான் அவன் சத் பிராமணன் என்று அழைக்கப்படுவான். ஒருவன் தன்னுடைய கடமைகளை புறக்கணித்துவிட்டு தீய வழியில் சென்றால் அவன் கெட்ட பிராமணன் ஆகிவிடுகிறான். அவனுடைய தீய வழிகள் அதிகமாகி பசு வதை, அந்த மாமிசத்தை உண்பது அல்லது மற்ற பெண்களை அடைய விருப்பம் கொள்வது ஆகிய செயல்களில் ஈடுபட்டால் அவனிடம் துளிகூட பிராமணியம் இல்லை என்பதை புரிந்து கொள்ளலாம். அதிகப்படியான தீய குணங்களினால் அவனுடைய பிராமண தேஜஸ் திரும்ப பெறப்பட்டு விடும். அவனுடைய உயிரணுக்களிலும் பல மாறுதல்கள் நடைபெற்று கடைசியில் அவன் சண்டாளனாக (தாழ்ந்த ஜாதிக்காரன்) ஆகிவிடுவான். பிறகு பேருக்கு மட்டுமே பிராமணன் என்று இருப்பான். ஒரு க்ஷத்ரியன் பிரம்மஞானத்தின் மீது தீவிரமான விருப்பம் கொண்டால் நிலையான தவத்தின் மூலம் அவன் பிராமணத்துவத்தை பெறலாம். பிறப்பிலிருந்து இருந்த அவனின் உயிர் அணுக்கள் பிராமண குணத்திற்கு மாறுதல்கள் அடையும். விஸ்வாமித்ரர்

இந்த வழியில்தான் பிராமணத்துவத்தை பெற்றார். ஏழரை வருடங்கள் சனி மூன்று ராசியின் வீடுகளில் பயணிக்கும் போது ஒவ்வொரு மனித உடலின் உயிர் அணுக்களிலும் பல மாறுதல்கள் உட்படுத்தப்படும். பழைய அணுக்கள் இறந்து புது அணுக்கள் உருவாகும். இவை அனைத்தும் மனிதனின் அறிவுக்கு தெரியாமலேயே நடைபெறும்.

## க்ஷத்ரியரின் பண்பு

ஒரு க்ஷத்ரியன் தன்னுடைய வழக்கமான கடமைகளை விட்டுவிட்டு அமைதியான நடவடிக்கைகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் வியாபாரத்தில் ஈடுபடும் போது அந்த அமைதியான தொழில்கள் உச்ச நிலையை அடையும் போது அவனுடைய இராணுவ வீரம் முற்றிலும் இருக்காது. அவனுடைய மனம், செயல் மற்றும் உடலில் பல மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டு அவன் வைசியனாகி விடுவான். ஒரு பிராமணன் மாவீரனின் பாதையை பின்பற்றினால் பரசுராமன் போல் ஆகிவிடுவார். பண்டைய காலத்தில் பிராமணர்களாகப் பிறந்த துரோணாச்சாரியாரும் கிருபாச்சாரியாரும் ஒரு மாவீரனின் தொழிலை ஏற்றுக் கொள்ளவில்லையா? நான் கீழ்ஜாதியான சூத்திரனாக பிறந்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால் பிரமத்தை உணரவில்லையா? இடைவிடா முயற்சியினால் சூத்திரனாக பிறந்த ஒருவன் வைசியனாகவோ க்ஷத்ரியனாகவோ பிரமணனாகவோ ஆக முடியும். ஒருவன் குறிப்பிட்ட ஜாதியை சேர்ந்தவன் என்பதற்காக யமதர்மராஜன் தண்டிக்கவோ அல்லது விட்டுவிடவோ போவதில்லை. நம்முடைய நல்ல மற்றும் தீய வினைகளை பொருத்துதான் வெகுமதிகள் வழங்கப்படும். நான் இந்த பிறவியில் கீழ்ஜாதியான சூத்திரனாக பிறந்தாலும் அடுத்த பிறவியில் பிராமணனாக பிறக்கலாம். இந்த பிறவியில் பிராமணனாக பிறந்தவன் அடுத்த பிறவியில் சூத்திரனாக பிறக்கலாம். ஜாதி அமைப்பு என்பது சமுதாய ஒழுங்கு முறைக்கான ஏற்பாடு. ஒருமுறை ஸ்ரீ ஸ்ரீபாதர் கடவுளின் முகம் பிராமணத்துவத்தை குறிப்பதாகவும் கரங்கள் க்ஷத்ரியத்துவத்தை குறிப்பதாகவும் தொடைகள் வைசியத்துவத்தையும் பாதங்கள் சூத்திரத்துவத்தையும் குறிப்பதாக கூறினார். சங்கர் பட், நீங்கள் என்னுடைய வீட்டில் விருந்தோம்பலை ஏற்று கொண்டுள்ளீர்கள். எங்கள் வீட்டு உணவு பிராமண உணவுதான்.

## கர்மாவின் ரகசியம்

இந்த சுற்றுப்புறம் முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதரைப் பற்றிய எண்ணங்கள் நிரம்பியுள்ளது, அவரின் நாமம் எதிரொலித்துக் கொண்டும், புனிதமான சுப அதிர்வலைகளால் பொங்கி வழிகிறது. நரசாவதானி பிறப்பால் ஒரு பிராமணன். ஆனால் அவர் வீட்டின் பொருள், மன மற்றும் தெய்வீக துடிப்புகள் அனைத்தும் விஷமாக உள்ளது. அதனால்தான் ஸ்ரீ ஸ்ரீபாதர் மாசுபட்ட சுற்றுப்புறம் உள்ள அந்த பிராமண வீட்டின் உபசரிப்பை மறுத்துவிட்டார். இதுதான் அந்த ரகசியம்.

கர்ம விதிகளுக்கு உட்பட்டு, பரிணாம வளர்ச்சி அல்லது நடைமுறை சிக்கல்களின் செயல்முறையை கருத்தில் கொண்டு ஒவ்வொரு உயிரினமும் ஒரு ஜாதிப் பிரிவில் பிறக்க நேரிடுகிறது. அந்த நோக்கத்திற்காகத்தான் இது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜெர்மனியைச் சேர்ந்த ஜான் பிரம்மஞானத்தை விரும்புபவர். அவருடைய நேர்மையான முயற்சிகளினால் அவருடைய ஆன்மீக

வளர்ச்சியின் கடைசி கட்டத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதரை குருவபுரத்தில் தரிசிக்கும் நல்லதிர்ஷ்டத்தை பெற்றார். அவர் அந்நிய தேசத்தவராக இருந்த போதும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் செயல் விளைவுடன் கூடிய கருணையினால் ஆசீர்வதிக்கப்பட்டார். பீதிகாபுரத்துவாசியான நரசாவதானியினால் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு அவதாரம் என்று பல வருடங்களாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை மற்றும் இறுதி நிலையில் அடையாளம் கண்டுகொண்டாலும் கடினமான முயற்சிக்குப் பின்தான் ஸ்ரீ தத்தரின் அருளை பெறமுடிந்தது" என்றார்.

பிறகு நான் **"ஐயா, உயிரணுக்களில் மாற்றத்திற்கு உட்படுத்தப்படும் என்று கூறினீர்கள். ஒவ்வொரு இனத்திற்கும் தனி ஆத்மா உண்டா? பார்வதி தேவி இமய மலைகளின் மகள் என்று கூறப்படுவதன் கருத்து என்ன?"** என்று கேட்டேன்.

பின்னர் திருமலதாஸ், "ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு ஆத்மா உண்டு. இது மனநிலை சார்ந்த ஒரு விஷயம், ஸ்ரீ தத்தரின் தெய்வீக ஆத்மாவில் இருந்து வெளியாகும் ஒரு பகுதி. அந்த சிறந்த சக்தி தெய்வீக ஆத்மாவுடன் எப்போதும் நேரடியாகத் தொடர்பில் இருக்கும். நீங்கள் கருதுவது போல் ஒரு இனம் என்பது தனிநபர்களின் கூட்டம் அல்ல. அந்த தனிநபர்கள் கூட்டத்தில் பல்வேறு தனிநபர்களின் வலிமைகள், ஆற்றல்கள் மற்றும் பண்புகள் உள்ளடங்கி இருக்கும். எப்படி உயிரணுக்கள் ஒவ்வொரு தனிநபரிலும் இருக்கிறதோ அதே போல் ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு நகரத்திற்கும், ஒவ்வொரு நாட்டிற்கும் தனி ஆத்மா இருக்கும். நாம் வாழும் பூமிக்குக் கூட ஆத்மா உண்டு. அந்த ஆத்மாவை நாம் பூமாதா (பூமித்தாய்) என்று அழைக்கிறோம். அப்படியென்றால் பூமியின் அதிபதியை பூமாதா என்று அழைக்கிறோம். பரமாத்மாவிடம் இருந்து வெளியாகும் ஆத்மாவிற்கும் சக்திவாய்ந்த அவளின் ஆத்மாவிற்கும் தொடர்பு உண்டு. அதேபோல் இமயமலையின் அதிபதிக்கு இமயவன் என்று பெயர். அவருடைய மகள் ஹைமாவதி. யமதர்மராஜன் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சாட்சியான சூரியனின் மகன் என்று கூறப்படுவதன் அர்த்தம் என்னவென்றால், அவர்தான் உயிரினங்களின் நல்ல மற்றும் தீய வினைகளை கருத்தில் கொண்டு அவற்றிற்கு தீர்ப்பை வழங்கி, பாவங்களுக்கு தண்டனை அளிக்கும் ஒரு தெய்வீக ஆத்மா.

எல்லா உயிரினங்களும் சூரிய கடவுளிடமிருந்து சக்தியை பெற்றுக் கொள்வதால் தான் அனைத்து செயல்களையும் செய்ய முடிகிறது. வானத்தில் நம் கண்ணுக்குத் தெரியும் சூரியனும் அதற்கு ஆதாரமாக இருக்கும் தெய்வீக ஆத்மாவும் வேறு. ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு முப்பது வயதாகும் போது அவர் மறைந்து விடுவார் என்று நான் கூறியிருக்கிறேன். பிரம்மாண்டத்தில் உள்ள கோடானுகோடி அணுக்களில் ஒவ்வொன்றிலும் அவர் கலந்து விடுவார். அவர் எங்கும் நிறைந்திருப்பவர். மீண்டும் கலப்பது என்றால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். அவர் எங்கும் நிறைந்திருப்பவர் என்றாலும் கோடனுகோடி சிறந்த பிரபஞ்சங்கள் அவரின் சக்தி மற்றும் ஆதிக்கத்தை விட்டு சற்று தூரத்தில்தான் அமைந்திருக்கும். அதன் பரிணாம வளர்ச்சியை துரிதப்படுத்த அவற்றை தன் சக்தி மற்றும் ஆதிக்கத்திற்கு அருகில் ஈர்த்துக்கொள்வார். முழு படைப்புகளின் பரிணாம நிலைகளில் ஏதாவது சில நெருக்கடிகள் ஏற்படும்

போது ஸ்ரீ தத்தாத்ரேயர் இந்த முறையில் அவதரிப்பார். காந்தம் இரும்பை ஈர்க்கும். இரும்பிடம் அசுத்தங்கள் இருக்கும் போது ஈர்க்கப்படும் திறன் அதனிடம் பலவீனமாகிவிடும். இது போன்ற அவதாரங்கள் அனைத்து அசுத்தங்களையும் நீக்கவும் படைப்பின் அனைத்து அணுக்களையும் தன்னிடம் ஈர்த்துக் கொள்வதற்காகவும் பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியை புதிய திசைக்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் கீழிறங்கி வரும்.

## பஞ்சகன்னிகைகள் (ஐந்து கற்புக்கரசிகள்) பற்றிய விளக்கம்

நான் திருமலதாஸிடம் "**அஹல்யா, திரௌபதி, சீதா, தாரா, மண்டோதரி இந்த ஐவரின் பெயரை தினமும் உச்சரிப்பதால் பாவமெல்லாம் போய்விடும் என்கிறார்களே!! அதை என்னால் எளிதாக புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு விளக்கமாக கூறுங்கள்**" என்று கேட்டேன்.

திருமலதாஸ் தொடர்ந்தார் "தேவேந்திரனுக்கு அகல்யாவின் மீது மோகம். அவளை அடைய எண்ணி ஒரு தந்திரமான காட்சியை வடிவமைத்தான். ஒரு நாள் இரவில் சேவல் உருவம் எடுத்து கூவினான். விடிந்துவிட்டதாக எண்ணி கௌதம முனிவர் தன் தினசரி சடங்குகளை செய்ய வெளியே சென்றுவிட்டார். அகல்யா கற்புக்கரசி ஆதலால் தேவேந்திரனால் அவளை தொட கூட முடியவில்லை. தேவேந்திரனிடம் தெய்வீக சக்திகள் இருந்தன. அவனுக்கு தெய்வீக சக்திகள் இருந்தமையால், அகல்யாவின் மீது கொண்ட அதீத மோகத்துடன் கூடிய திடமான விருப்பம் ஒரு சக்தியாக மாறி அகல்யாவை போன்ற ஒரு பெண் அவனிடமிருந்து வெளியேறினாள். நகல் அகல்யாவின் உடலில் இருந்த உயிர் அணுக்கள் அனைத்தும் தேவேந்திரனின் வலுவான விருப்பத்தினால்தான் உருவானது. அந்த நகல் அகல்யாவுடன் அவன் சம்போகம் செய்வதை பார்த்த கௌதம முனிவர் இருவரையும் சபித்தார். பின்னர் அகல்யா "**ஓ! முட்டாள் முனிவரே என்ன செய்து விட்டீர்கள்!**" என்று கூச்சலிட்டாள். அகல்யா கௌதமரை விட ஆன்மீகத்தில் மேல் நிலையில் இருந்தாள். அவளின் சாபத்தால் 12 வருடங்கள் கௌதமரின் மனம் கலக்கம் ஏற்பட்டது. சிவனை வழிபட்ட பின்னர் பழைய நிலையை அடைந்தார். அகல்யாவின் உடல் செயலற்று போனது மற்றும் கல் போல மாறினாள். பின்னர் ஸ்ரீ ராமருடைய பாதங்களில் இருந்த தூசிகள் அவள் மேல் பட்டவுடன் சாப விமோசனம் அடைந்தாள். ஆகவே அகல்யாவின் ஆத்மா எவ்வளவு தூய்மையானது என்பதை புரிந்துகொள்.

சாபம் பெற்ற தேவேந்திரனே பஞ்சபாண்டவர்களாக பிறந்தான். அவர்களுக்கு ஐந்து உருவங்களும் மனங்களும் இருந்தாலும் அவர்களுக்கு ஆதாரமான ஆத்மா ஒன்றுதான். இது ஒரு வினோதமான விஷயம். சதி தேவி யாககுண்டத்தில் இருந்து திரௌபதியாக தோன்றினாள். அவளுடைய பிறப்பு சாதாணரமான ஒன்று கிடையாது.

அக்னிதேவன் உண்மையான சீதாவை தன்னுள் மறைத்துக்கொண்டான். மாய சீதையைத்தான் இராவணன் இலங்கைக்கு கவர்ந்து சென்றான். சீதையின் அக்னி பரீட்சையின் போது 2 சீதாக்கள் வெளியே வந்தனர். ஆகவே சீதை மிகச் சிறந்த பதிவிரதை என்பதைத் தெரிந்துகொள்.

பன்னிரண்டு ராசியின் வீடுகளில் 27 நட்சத்திரங்கள் உள்ளன. 27 நட்சத்திரங்களுக்கும் தேவதையாக தாராதேவி பிறந்தாள். அவள் இளமை வயதில் இருக்கும் போது வியாழன் கிரகத்தின் அதிபதியான குரு பகவான் அவளின் மீது காதலில் விழுந்து அவளை மணந்து கொண்டார். ஒரு வயதான கணவரால் இளமையான மனைவியை திருப்தி படுத்த முடியாது. இது தர்மத்திற்கு புறம்பானது.திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட உறுதிமொழியைக் கடைபிடிக்க முடியாதது மன்னிக்க முடியாத ஒன்று. பிருஹஸ்பதியை பார்க்கும்போதெல்லாம் தாரா தேவியால் அவரை கணவாராகவே உணர முடியவில்லை. கணவன் என்கிற அவளுடைய உணர்வைத் தூண்ட வேண்டியது பிருஹஸ்பதியின் பொறுப்பு. அனைத்து தர்மங்களையும் நன்கு தெரிந்த பிருஹஸ்பதியே தர்மத்தை மீறுவது போல் நடந்துகொண்டார். தாரா தேவியின் மன ஓட்டத்துக்கு ஏற்ப அவள் உயிர் சக்திகளில் மாற்றங்கள் ஏற்பட்டது. அவள் மனதில் சந்திரனின் வடிவம் நிலைபெற்றது. அவள் மனதை சந்திரன் ஆட்கொண்டான். பிருஹஸ்பதியை மணந்து கொண்ட தாராதேவியும் சந்திரனை விரும்பும் தாராதேவியும் ஒரே மாதிரி இல்லை. ஆதலால் தாராதேவி-சந்திரன் சேர்க்கை தர்மத்தை மீறியது இல்லை. பிரபஞ்ச நியதிப்படி சந்திரன்தான் 27 நட்சத்திரங்களையும் சுற்றி வரவேண்டும். இது வியாழன் கிரகத்தின் வேலை அல்ல. அப்படி வியாழன் கிரகம் செய்தால் தர்மம் வரம்பு மீறி சென்றுவிடும். எது ஒன்று தர்மத்தை மீறினாலும் அது அழிவது உறுதி. ஆகவே 27 நட்சத்திரங்களின் தேவதையான தாராதேவி சந்திர மண்டலத்தின் (சந்திரன் மற்றும் அதன் சக்திகளும் அதன் தேவதைகளும்) அதிபதியான சந்திரனுடன் சேர்வதுதான் தர்மம். என் குழந்தாய், இந்த நுட்பமான தர்மத்தை ஒத்துக் கொள்ளும் விதமாக தாராதேவி ஒரு மகா பதிவிரதை.

பீஷ்மர் அம்பினால் ஆன மரணப்படுக்கையில் இருந்த போது தர்ம ராஜாவுக்கு பயனுள்ள உபதேசம் அளித்தார். பீஷ்மர், **“அதர்மம் நடக்கும் போது அதை தடுக்க வேண்டும். அல்லது அநீதி இழைக்கப்படும் அந்த இடத்தை விட்டு செல்ல வேண்டும்”** என்றார். இதை கேட்டு பலமாக சிரித்தாள் திரௌபதி. பின்னர் பீஷ்மர் “திரௌபதியின் ஆடைகள் அகற்றப்பட்ட போது (முயற்சி செய்யப்பட்டது ஆனால் ஆடைகளை களைய முடியவில்லை) நான் அமைதியாகத்தான் இருந்தேன். துரியோதனன் மற்றும் வேறு சிலர் அளித்த உணவை உண்டு கொண்டிருந்தேன். இதனால் என் மனம் அசுத்தமாகி இருந்தது. இப்போது அந்த இரத்தம் என்னை விட்டு வெளியே சென்று விட்டது. தற்போது என் மனமும் களங்கமற்று இருக்கிறது. எனக்கு உண்மை புரிந்து விட்டது” என்றார்.

பரிணாம வளர்ச்சியின் செயல்முறையில் ஒவ்வொரு உயிரினமும் பல பிறவிகள் எடுக்கும். சில பிறவிகளில் ஆணாகவும், சில பிறவிகளில் பெண்ணாகவும் பிறக்கலாம். மனிதப் பிறவி அல்லாமல் மிருகமாகவோ அல்லது பறவையாக கூட பிறக்கலாம். மண்டோதரி ஒரு பிறவியில் ஆணாகப் பிறந்தாள்.

*அந்தப் பிறவியில்,அவளுக்கு நிலையற்ற மனம் உடைய மனைவியும், கொடூர எண்ணமுடைய மனைவியும், கனிவான குணமுடைய மனைவியும் இருந்தனர். நிலையற்ற மனம் உடைய மனைவி, குரங்காக வாலி என்ற பெயரில் பிறந்தாள். கொடூர எண்ணமுடையவள் ராவணனாகவும் கனிவான குணமுடையவள் விபீஷணனாகவும் பிறந்தனர். வேறொரு கல்பத்தில் (நாலு யுகங்களின் ஒரு ஆயிரம் சுழற்சிகள்) மண்டோதரி ஆணாக பிறந்த போது இம்மூவரும் அவளுடைய மனைவிகள். தற்போதைய பிறவியில் மண்டோதரி வாலிக்கு மனைவியாகி அங்கதனை பெற்றெடுத்தாள். பின்னர் ராவணனுக்கு மனைவி ஆனாள். இராவணன் இறந்த பின்னர் விபீஷணனுக்கு அரச மனைவி ஆனாள். அவள் வாலியை, ராவணனை மற்றும் வீபீஷணனை மணந்து கொண்ட போது உயிர் அணுக்கள் வெவ்வேறு நிலைகளில் மாறுபட்டு இருந்தன. ஆகவே மண்டோதரியும் மகா பதிவிரதைதான்" என்று கூறினார் திருமலதாஸ்.*

*பின்னர் நான்* "**ஐயா, ஆணும் பெண்ணும் ஒருதார ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. பலதாரம் கண்டிக்கத்தக்கது இல்லையா?**" *என்று கேட்டேன்.*

## கர்ம சுழற்சியின் முன்னேற்றம்

*பின்னர் திருமலதாஸ், "நீங்கள் கூறுவது முற்றிலும் சரிதான். ஒரு ஆண் தன் மனைவியை எந்த காரணமும் இல்லாமல் கொடுமை படுத்தினால் அவனின் அடுத்த 7 பிறவிகளிலும் இளம் விதவையாகப் பிறப்பான். ஒரு ஆண் 4 அல்லது 5 பெண்களை மணந்து கொண்டால் அடுத்த பிறவியில் பெண்ணாகப் பிறப்பான். அந்த பெண்களின் இச்சை தீர்க்கப்படாமல் இருந்தால் அவர்கள் ஆணாக பிறந்து அந்த பெண்ணிடம் இன்பம் காண்பர். இது ஒரு பிறவியில் நடந்து பல தாரமாக இருப்பின் அது பாவம். அதே பல பிறவியெடுத்து ஒவ்வொருவரையும் தனித்தனியாக மணந்தால் பாவம் ஆகாது. இந்த சுழற்சி சக்கரத்தில் இது போன்ற எண்ணிலடங்கா பல அற்புதங்கள் நடைபெறும். ஒருவர் பெண்ணாக பிறந்தால் அந்த பிறப்புக்கான கடமைகளை சரிவர செய்ய வேண்டும். அதே போன்றுதான் ஆணுக்கும். தம்பதியரை பிரித்த பாவி அடுத்த பிறவியில் அலியாக பிறப்பர். அந்த பாவி வீர்ய சக்தியற்ற ஆணுமில்லாது பெண்ணுமில்லாது பிறந்து இல்லற சுகத்தை இழந்து விடுவார்கள். மாமிசம் உண்பதைத் தவிர்க்க வேண்டும். ஒரு ஆட்டை 10 மனிதர்கள் கொன்று சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த ஆடு இறக்கும் தருவாயில் பயங்கரமான வலியை உணரும். அதன் வேதனைக் காற்று மண்டலத்தில் மறைந்த வண்ணம் இருக்கும். என் மகனே, வலியின் எதிர்விளைவுகள் மற்றும் சந்தோஷத்தின் எதிர்விளைவுகள் காற்று மண்டலத்தில் மறைந்த வண்ணம் இருக்கும். நல்வினைகள் நல்ல அதிர்வலைகளுடன் கூடிய எதிர்விளைவுகளையும் தீய வினைகள் கிளர்ச்சியூட்டும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தும். இறந்த ஆடு அந்த 10 பேரை கொல்லும் நோக்கத்துடன் இருக்கும். அது மனிதர்களைப் பற்றிய எண்ணத்தில் இருந்துகொண்டே இருப்பதால் மனித பிறவி எடுக்கும். அந்த பத்து மனிதர்களும் ஆடாகப் பிறப்பர். இப்படியே செயல்களின் விளைவுகள் தொடரும். ஒவ்வொரு செயலுக்கும் அதன் எதிர்வினை*

செயல்கள் இருந்துகொண்டே இருக்கும். ஆகவே மனிதன் மன்னித்தல் என்னும் குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். சாத்வீக உணவு உண்பவன் ஒரு ஆட்டின் மாமாமிசத்தை பார்த்தலும் உண்ணும் எண்ணம் ஏற்படாது. அந்த ஆடு அந்த மனிதனை முன்பு உண்டிருந்தாலும் அவன் அதை மன்னித்து உயிர் அளிக்கும் போது கர்மச் சக்கரத்தின் சுழற்சி நின்று விடும்" என்று விளக்கினார் திருமலதாஸ்.

பீதிகாபுர மக்கள் செய்த மொத்த பாவங்கள் மற்றும் மொத்த புண்ணியங்களும் ஒரே நேரத்தில் பலன் அளித்தமையால், அது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பிறப்புக்கு காரணமாக அமைந்தது. பக்திமான்கள் அவரை ஸ்ரீ தத்தர் என்று உணர்ந்து நற்பலன்களை பெற்றனர். பாவிகள் அவரை ஸ்ரீ தத்தர் என்று உணராமல் தீயபலன்களை அனுபவித்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதரை தூற்றுபவர்கள் தத்த பக்கதர்களானாலும் ரௌரவத்திற்கும் மற்ற நரகத்திற்கும் செல்வார்கள். **ஒரு விஷயம் புரியவில்லை என்றால் மௌனமாக இருப்பதே மேல் ஆனால் அந்த அழகான, தெய்வீகமான, புகழ்பெற்ற, புனிதமான, மகத்தான அவதாரத்தை தவறாகப் பேசக்கூடாது. கடவுளின் முகத்தருகே கற்பூர ஆரத்தியை காட்டினாலோ, அவர் பாதத்தில் ஆணி அடித்தாலோ, ஸ்ரீ தத்தரின் அவதாரங்களை தவறாக பேசினாலோ பால்வினை நோய்களால் அவதிப்படுவர்.** அதுமட்டுமல்லாது ஸ்ரீ தத்தர் அவருடைய லீலைகளின் அருளில் விசித்திரமான யோக சக்திகளை இணைத்துள்ளார். பக்தியுள்ளவர்கள், அவர் பெயரை நினைவுபடுத்தி கொண்டாலே அவர்களின் அனைத்து விருப்பங்களும் கேட்காமலேயே மற்றும் எந்த முயற்சியும் செய்யாமலேயே நிறைவேற்றி விடுவார். ஆனால் ஸ்ரீ ஸ்ரீபாதரை குறைகூறும் பாவிகளுக்கு எண்ணற்ற தடைகளும் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறும். ஸ்ரீ ஸ்ரீபாதர் நெருப்பின் வடிவம். அவர் நெருப்பை ஆடையாக கொண்டவர். அவர் உடல் யோகத்தீயின் உருவகம். அவர் பாதுகைகளின் மகிமைமையை விவரிக்க யுகங்கள் போதாது. வேதங்களாலும் உபநிஷத்துக்களாலும் கூட அதன் சிறப்புகளை முழுமையாக விவரிக்க முடியாது. எவ்வளவு யுகங்கள் கழிந்தாலும், எவ்வளவு கல்பங்கள் கடந்தாலும், எத்தனை முறை உலகங்கள் உருவாகி,நிலைத்து,அழிந்தாலும் ஸ்ரீ தத்தருக்கு சமம் ஸ்ரீ தத்தர் மட்டும்தான். அவரை யாருடனும் ஒப்பிட முடியாது. அவர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்! இந்த படைப்பில் உள்ள ஒவ்வொரு அணுவும் அந்த உயர்ந்த உண்மையின் சாட்சியை தாங்கியிருக்கிறது.

## சுயம்பு தத்தரை மறு பிரதிஷ்டை செய்தல்

ஒரு வினோதமான அவதூதர் ஒருவர் பீதிகாபுரத்திற்கு வந்தார். அவர் ஒரு பைத்தியக்கார துறவி. பைத்தியம் போலிருந்த அந்த துறவி சாபங்கள் மற்றும் தீய வார்த்தைகள் மூலம் ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார். அவர் யாரையாவது வாழ்த்தினால் அவர்களின் புண்ணியங்கள் குறையத் தொடங்கின. பீதிகாபுர மக்கள் சுயம்பு தத்தர் எங்கு உள்ளார் என்று அவரிடம் விசாரித்தனர். அதற்கு அந்த சித்தர், சுயம்பு தத்தர் அனைத்து புண்ணிய நதிகளிலும் நீராடிவிட்டு இப்போது ஏலா நதியில் ஓய்வெடுத்து கொண்டிருப்பதாகக் கூறினார். பின்னர் அந்த நதியில் தேடிய போது சுயம்பு தத்தர்

*வெளியே வந்தார். ஒரு சுபநேரத்தில் அகண்ட சர்வமங்களா தேவி சுமதி மஹாராணியும் மற்றும் பிராமணத்துவத்தில் பெருந்திறமையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்த அப்பலராஜ சர்மாவும் சிலையை மறு பிரதிஷ்டை செய்தனர். இவை அனைத்தும் சித்தரின் விருப்பத்தின் பேரில் நடந்தது. ஸ்ரீ பாப்பண்ணார்யா இந்த மாபெரும் கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.*

## ஸ்ரீ வித்யாரண்யரின் பிறப்பு

*மறுபிரதிஷ்டை நடந்த தினத்தில் ஸ்ரீ பாப்பண்ணார்யா சித்தரை தன் வீட்டிற்கு பிக்ஷைக்கு (பணம் மற்றும் அன்னதானம் அளிப்பது) வருமாறு அழைத்தார். சித்தர் சம்மதித்தார். ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாதரை கண்டார். இரண்டு வயது தெய்வீக குழந்தை மெதுவாகத் தரையில் தவழ்ந்து கொண்டிருப்பத்தைக் கண்டு அவருக்கு அடக்க முடியாத தந்தை பாசம் மேலோங்கியது. அந்த குழந்தை தன் தாய் மாமா வெங்காவதானியின் தோள் மீது ஏறியது. அவர் சந்தோஷமாக அவர் மாமவின் குடுமியுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அவர் சித்தரை பார்த்து சிரிக்கத் தொடங்கினார். சிரிப்பொலியை கேட்டவுடன் சித்தர் சமாதி நிலைக்கு சென்று விட்டார். அவர் சுயநினைவுக்கு திரும்பியதும் ஸ்ரீ ஸ்ரீபாதர்* **“மாதவா! நான் 16 வயதை அடையும் போது உன் ஆசைப்படி புக்கராயுடு ஹிந்து ராஜ்யத்தை அமைப்பார். நீ ஹரிஹரா மற்றும் புக்கராயுடுவுடன் இருப்பாய். நீ வித்யாரண்ய மகரிஷி என்ற பெயரில் பிரபலம் அடைவாய். வரும் காலங்களில் உன் சகோதரன் சாயணாச்சார்யாவின் வீட்டில் கோவிந்த தீக்ஷிதலு பிறப்பார். அந்த கோவிந்த தீக்ஷதலு வேறு எவருமில்லை நீதான். நீ தஞ்சாவூரின் (தமிழ்நாட்டின் கோவில் நகரம்) அரசவையில் சிறந்த அமைச்சராகவும் ராஜரிஷியாகவும் இருந்து செழிப்படைவாய்”** *என்று கூறினார். சித்தரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதரை ஆரத்தழுவிக் கொண்டார். விளையாட்டாக சித்தரின் பாதத்தை ஸ்ரீ ஸ்ரீபாதர் வணங்கினார்.* **“என்ன இது!!”** *என்று சித்தர் கூச்சலிட்டார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர்* **“நீ சிருங்கேரி பீடத்தில் அமர்ந்து வித்யாரண்யர் என்ற பெயருடன் புகழடைவாய். பின்னர் கிருஷ்ண சரஸ்வதி என்ற பெயரில் உன் மூன்றாவது தலைமுறை சீடராக பிறப்பாய். என் மேல் அதிகமான தந்தை பாசத்துடன் விளங்குவாய். நான் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக மீண்டும் அவதரிக்கும் போது ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதி என்ற பெயரில் எனக்கு குருவாகி காசியில் எனது துறவற நிலையை தொடங்கி வைப்பாய். இதற்கு காசி விஸ்வநாதரும் அன்னபூரணி அன்னையும் சாட்சி. நீ மீண்டும் துறவற தர்மத்தை நிலை நிறுத்த வேண்டும்”** *என்றார்.*


**“வசிஷ்ட, சக்தி மற்றும் பராசர ரிஷிகளை உள்ளடக்கிய பராசர கோத்திரத்தை சேர்ந்த வாஜபேயஜுல மாதவச்சார்யா எப்படி வித்யாரண்ய மகரிஷி என்ற பெயரில் புகழடைந்தார் என்பதையும் மற்ற சிலவற்றையும் நாளை கூறுகிறேன்”** *என்று கூறி அன்றைய விளக்கங்களை முடித்துக்கொண்டார் திருமலதாஸ்.*

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 9

## கர்மாவின் பலன்கள் பற்றிய விவாதம்

அன்று வியாழக்கிழமை. சூரியன் உதிக்கும் நேரம், குருஹோரை. ஸ்ரீ திருமலதாஸும் நானும் ஒரு அறையில் தியானத்தில் இருந்தோம். அப்போது ஒரு சூரிய ஒளிக்கதிர் எங்கள் அறையில் நுழைந்தது. சூரிய ஒளி எங்கள் அறையினுள் நுழைந்தவுடன் எங்கள் தியானம் கலைந்து சுயநினைவுக்கு வந்தோம். அதிசயங்களின் அதிசயமாக அந்த சூரியக்கதிர்களில் நாங்கள் இருவரும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய பதினாறு வயதுடைய உருவத்தை கண்டோம். சந்தேகத்திற்கிடமில்லாமல் கடவுளின் அபரிமிதமான கருணையினால் மட்டும்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய புனிதமான மற்றும் அதி உன்னதமான பதினாறு வயது இளைஞனின் உருவத்தை காணமுடிந்தது. அந்த அற்புதமான புனித வடிவம் எங்களுக்கு ஒரு நொடிக்கு காட்சி அளித்து விட்டு பின்னர் மறைந்துவிட்டது.



சூரியக்கதிர்களினால் கடவுளுக்கு படைக்கப்பட்டிருந்த கொண்டைக்கடலை உலோகமாக மாறியிருந்தது. இது மிகவும் ஆச்சரியமாக இருந்ததாலும் மிகவும் சங்கடமாக இருந்தது. கடவுள் தோன்றியது அவரின் கருணையின் அறிகுறியா அல்லது கொண்டைக்கடலை உலோகமாக மாறியது அவரின் கோபத்தின் அறிகுறியா என்று என் மனது கவலை கொள்ளத் தொடங்கியது.

பின்னர் திருமலதாஸ் பேசத்தொடங்கினார், "என் அருமை சங்கர் பட், இன்று மதியம் என் உபசரிப்பை ஏற்றுக்கொண்டு விட்டு நீங்கள் குருவபுர பயணத்தை தொடங்கலாம். ஸ்ரீ தத்தரின் உத்தரவு கிடைத்துவிட்டது. ஸ்ரீ தத்தர் வியாழக்கிழமை மதிய நேரங்களில் தத்த க்ஷேத்திரங்களில் பிக்ஷை எடுப்பார். இந்த நேரம் மிகவும் புனிதமான நேரம்" என்றார்.

பின்னர் நான், "**ஐயா!! தினமும் நாம் இருவரும் ஸ்ரீ தத்தரை நினைவுபடுத்திக் கொண்டும் தத்தரின் கதைகளை வர்ணித்துக் கொண்டும்தான் நேரத்தை கழித்தோம். நைவேத்தியமாக படைக்கப்பட்ட கொண்டைக்கடலை உலோகமாக மாறியது எனக்கு மிகுந்த வலியை உண்டாக்குகிறது. என் சந்தேகங்களை தீர்த்து என்னை நிறைவானவன் ஆக்குங்கள்**" என்றேன்.

அதற்கு திருமலதாஸ் "சில நூற்றாண்டுகளுக்கு பின் கலியுகம் முன்னேறும் போது நாத்திகம் தலைவிரித்தாடும். அப்போது கடவுள் பல வினோதமான மற்றும் வியத்தகு அற்புதங்களின் மூலம் நாத்திகத்தை அழித்து ஆத்திகத்தை நிலைநிறுத்துவார். அவர் இவ்வாறு உயிரினங்களை ஆசீர்வதிப்பார். ஸ்ரீ தத்தாத்ரேயர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் போது, எதிர்காலத்தில் தர்மத்தை நிறுவுவதற்கான திட்டங்களின் விதை வடிவத்தை வழங்குவார்.

உலோகங்களின் உணர்வு செயலற்ற நிலையில் இருக்கும். உலோக நிலையில், உயிர் அதன் உள்ளேயே இருக்கும். பின் உலோகங்கள் பல்வேறு வேதியியல் மாற்றம் அடைந்து அதில் உயிர் வெளிப்படும். உயிரில் மனது ஒரு உள் மூலப்பொருளாக அமைந்திருக்கும். ஆரம்ப உயிர் நிலையில் உணர்வுகள் பாதி செயலாற்றும் நிலையில் இருக்கும். இதை மரங்களில் தெளிவாகக் காணலாம். போதை மருந்து உட்கொண்டவன் உடலில் இந்த நிலையைத்தான் அனுபவிப்பான். தன்னை உயிர் சக்திகளின் மூலம் வெளிப்படுத்திக்கொண்ட இயற்கை, பரிணாம வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த பின் புத்தியின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள கற்றுக் கொள்ளும். இந்த நிலையை மிருகங்களில் காணலாம். முழு வளர்ச்சியடைந்த மிருகம்தான் மனிதன். அவனிடம் உள்ள மனம் (புத்தி) வலுவான நிலையில் செயல்படும். இந்த மனதில் சாதாரண மனதை தாண்டிய ஆழ்மனமும் இருக்கிறது; இது மனதை தாண்டிய ஒன்று. மனிதன் யோகமுறைகளின் மூலமாகத்தான் முழுமை அடைகிறான். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை சஹஸ்ராரத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் அதை செயல்படுத்த முடியும். அங்கு சென்று சவிகல்ப நிலையையும் நிர்விகல்ப நிலையையும் அடையலாம். உயர்ந்த ஒளியின் உருவமான ஸ்ரீ குருவுடன் ஐக்கியமாகும் அனுபவத்தைப் பெறலாம். அந்நிலையில் விவரிக்க முடியாத பேரானந்தத்தையும் பெற்று மஹாஸங்கல்பத்தின் படி நடந்து கொள்வார்கள். ஆகவே கர்மபந்தங்கள் இனி இருக்காது. அந்த சங்கல்பத்தின் வடிவம் நினைத்துப் பார்க்க முடியாத படியும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கும் இருக்கும். அது நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிவேகத்தில் இருக்கும். ஆழ்மனது சிறந்த கடவுளுக்குதான் சொந்தம். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒவ்வொரு நொடியும் கோடிக்கணக்கான பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்கிறார். அவற்றில் தர்மத்திற்கு ஒத்த ஒவ்வொரு பிரார்த்தனைகளுக்கும் பதில் அளிக்கிறார். பக்தர்களின் துன்பத்தைப் போக்குகிறார். நியாமான விருப்பங்களை நிறைவேற்றுகிறார். ஒரு மனித மனதின் (புத்தி) வேகத்தை ஆமைக்கு ஒப்பிட்டோமானால் கடவுளின் ஆழ்மனதின் வேகமோ புரியாத அளவுக்கு அதிவேகமாக இருக்கும். ஒளியின் வேகத்தை கூட அவரின் ஆழ்மனதின் வேகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஒரு மனிதன் அல்லது உயிரினத்தின் சிறிய பிரார்த்தனை கூட அவரின் கணக்கிலடங்கா பேரொளியை சென்றடையும்! அவரே கண்ணுக்கு புலப்படும் மற்றும் புலப்படா சக்திகளின் ஆதாரம். எப்போதும் ஒளியுடன் கூடிய அவர் உடலிலிருந்து வெளியாகும் அற்புதமான ஒன்றிணைந்த ஒளிக்கதிர்கள்தான் அவருடைய உலகத்தின் பளபளப்புக்கு காரணம். அந்த அற்புதமான ஒளியானது கோடிக்கணக்கான சூரியன்களின் ஒளியை

ஒத்து இருக்கும். கோடானுகோடி நட்சத்திரங்கள் மற்றும் கோடிக்கணக்கான பிரம்மாண்டங்களில் ஒளிரும் கிரகங்களின் மொத்த ஒளியும் அவரின் தெய்வீக ஒளிக்கு ஒப்பிட்டால் சூரியனுக்கு முன் சிறு மெழுகுவர்த்தியின் ஒளி இருப்பது போலத் தோன்றும். என் செல்வமே, இதுதான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உண்மையான மற்றும் சரியான குணம். உருவமற்ற, எல்லையற்ற சக்திகளுடைய, பண்புகளற்ற, எல்லையற்ற ஞானம் மற்றும் எல்லையற்ற ஊடுருவும் சக்திகள் உள்ளவர் படைப்புகளின் மீது கருணை கொண்டு, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக மனித உருவம் எடுத்துள்ளார். இதை புரிந்து கொள்ள மனிதன் முழு சித்த நிலையை அடைய வேண்டும்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தெய்வீக உருவம்

எப்படி தெய்வீகத்தை நோக்கிய மனிதனின் பரிணாமம் தவிர்க்க முடியாதோ, கடவுளும் தன் எல்லையில்லா சக்திகளை சுருக்கிக்கொண்டு கீழ் நிலைக்கு இறங்கி வருகிறார். இதற்குப் பெயர்தான் அவதாரம். இது ஒரு தொடர்ச்சியான யோக செயல்முறை. படைப்பில் உண்மை ஸ்தாபிக்கப்பட்டு விட்டால் அது எந்தவித முயற்சியும் இல்லாமல் இயல்பாகவே இயங்கிக்கொண்டிருக்கும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்- உண்மை, ஞானம் மற்றும் முடிவற்ற தன்மை ஆகியவற்றின் உருவகம்- படைப்பின் பல தெய்வீக உண்மைகளை ஸ்தாபிக்கும் எண்ணத்துடன் கிழிறங்கி வந்த ஒரு உயர்வான தெய்வீக அவதாரம். அவர் உண்மையில் ஸ்ரீ தத்தர்தான்" என்றார்.

பின்னர் நான் "**நான் உங்களோடு நடத்திய உரையாடலில் பல புது விஷயங்கள் எனக்கு தெளிவுபடுத்தப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதருடைய உண்மையான குணம் புரிதலுக்கு அப்பாற்பட்டது. அவருடைய அற்புதமான தெய்வீக வாழ்க்கை வரலாறை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை; அதை எந்தவிதமான வர்ணனைகளுடன் எழுதுவது என்பது விளங்கவில்லை. நீங்கள் உண்மையை ஸ்தாபிப்பது பற்றி கூறினீர்கள். நான் சிலைகள் ஸ்தாபிப்பது பற்றிதான் கேள்விப்பட்டிருக்கிறேன், உண்மையை ஸ்தாபிப்பது பற்றி கேள்விப்பட்டது இல்லை. சற்று விளக்குங்கள்**" என்று கேட்டுக்கொண்டேன்.

அதற்கு திருமலதாஸ் "சங்கர் பட்!! கடவுளின் சரிதாம்ருதத்தை எழுத நீங்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் கடந்து வரும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப பக்தர்களின் அனுபவங்களை எழுதுங்கள். அவர்கள் கூறுவதை குறித்துக்கொள்ளுங்கள். அதற்கு உங்களுடைய வர்ணனைகள் அவசியமில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதரே உங்களைக் கருவியாகக் கொண்டு அவரின் சரித்திரத்தை எழுதுவார். நீங்கள் இதற்கு மேல் இதை பற்றி யோசிப்பது வீண்தான்.

மனிதன் பல வகையான உணவுகள் உண்கிறான். அவை தன் இஷ்டம் போல் ஒருங்கிணைந்து மனிதனுக்கு பலத்தை அளிக்கிறது. இந்த செயலில் மனிதனுடைய புத்தியின் உபயோகம் அல்லது தலையீடு இருக்காது. மனிதனுடைய பொறுப்பு உணவை ஈட்டுவதோடு சரி. அதற்கு பின்னர் ஒரு ஆரோக்கியமான உடல் அவற்றை

செரித்து உடலுக்கு சக்தியை அளிக்க வேண்டும். அதாவது உணவை சம்பாதிக்கும் கடமை மட்டும்தான் உனக்கு இடப்பட்டுள்ளது. உண்ட உணவுகளை ஒருங்கிணைத்து பலத்தை அளிப்பது உடலுடைய கடமை. மனிதனுக்கு புத்தி உண்டு என்பதால் அவன் அதிகமான சுதந்திரத்தை அனுபவிப்பான், மேலும் எது சரி அல்லது தவறு என்பதை தேர்வு செய்து கொள்வான். ஆனால் உடலுக்கு அந்த சுதந்திரம் இல்லை. அது உணவை ஒருங்கிணைப்பதற்கு ஏற்றதாக மாற்றி உடலுக்கு பலத்தை கொடுக்க வேண்டும். இந்த இயற்கையான வேலை உணவை உண்பவரின் விருப்பு வெறுப்பை பொருட்படுத்தாமல் எந்தவித முயற்சியும் இல்லாமல் தானாகவே நடைபெறும். அதுதான் உடலுக்கு அளிக்கப்பட்ட கடமை. அது தொடர்பான உண்மை நிறுவப்பட்டது. உண்மையின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அதன் செயல் எந்தவித முயற்சியும் விருப்பமும் இல்லாமல் தானாகவே நடைபெறும். இந்த படைப்பு அல்லது இயற்கையில் ஒரு செயல்களும் அதன் எதிர்மறை செயல்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் நடக்கும். சூரிய உதயம்,அஸ்தமனம்,பருவங்கள், நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் இயக்கங்கள் இவ்வாறுதான் நடக்கின்றது. இது மீறமுடியாத விதி. வேறு வழிகளில் நடப்பதற்கு அவற்றிற்கு சுதந்திரம் அளிக்கப்படவில்லை. ஆனால் எல்லாம் வல்ல இறைவன் படைப்பில் உள்ள உயிரினங்களின் மீது கருணை கொண்டு அவற்றிற்கு அவர் அளித்துள்ள கடமைகளில் இருந்து சற்று தளர்வுகள் செய்கிறார். கிருத யுகத்தில் அனைத்தும் வெறும் விருப்பத்தால் மட்டுமே கிடைத்தது. த்ரேதா யுகத்தில் யாகங்கள் மற்றும் சடங்குகளின் மூலம் அனைத்தையும் பெற முடிந்தது. துவாபர யுகத்தில் மந்திரங்கள் உச்சரிப்பதாலும் அஸ்திரங்களை (பண்டைய போரில் பயன்படுத்தப்படும் ஏவுகணைகள்) உபயோகிப்பதாலும் அனைத்தையும் அடைய முடிந்தது. கலியுகத்தில் தந்திர சாஸ்திரங்களுக்குத்தான் முக்கியத்துவம் இருக்கும். இந்த யுகத்தில் இயந்திரங்களை கொண்டு பயன் அடைவார்கள். இந்த யுகத்தின் தர்மத்தின் படி அனைத்து விஷயங்களும் எளிமையாகிவிட்டது. மனிதனின் பலமும் அறிவும் குறைந்து கொண்டே வருவதால் அனைத்து விஷயங்களையும் அடைய சுலபமான வழிகள் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## இடைவிடாத தியானத்தின் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் கிடைக்கும்

எவரொருவர் மூன்று நாட்கள் இரவும் பகலும் இடைவிடாது ஸ்ரீ ஸ்ரீபாதரை தியானித்து அவர் நாமத்தை ஜெபிக்கிறார்களோ இரத்தமும் சதையுடன் அவர்கள் கண்முன் தோன்றி ஆசீர்வதிப்பார். ஒரு மனிதன் வீழ்ச்சியடைய 1 லட்சம் வழிகளை பின்பற்றுவானால் கடவுள் அவனை காப்பாற்ற 1 கோடி வழிகளை கடைபிடித்து அவரை உயர்த்துகிறார். ஸ்ரீ தத்தாத்ரேயர் படைப்புகளிடம் தன் அவதாரங்கள், சித்தர்கள்,யோகிகள், அவதூதர்கள் மற்றும் சிறந்த சித்திகளின் மூலம் தன் ஆளுமையை நிலைநாட்டுகிறார்.

“பழைய யுகங்களில் இருந்த ஸ்ரீ தத்தாத்ரேயர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரா என்று உங்கள் மனதில் விதையை விட சிறிதளவு சந்தேகம் இருக்கிறது. அந்த

சந்தேகத்தை களையவே நைவேத்தியம் செய்யப்பட்ட கொண்டைக்கடலைகளை உலோகக் கடலையாக மாற்றினார். அன்னை அனுசுயா உலோகக் கடலைகளை சாப்பிடக்கூடிய கடலையாக மாற்றினாள். அதையே அவர் செய்துகாட்டி தான் பழைய காலத்து ஸ்ரீ தத்தர்தான் என்று நினைவூட்டி இருக்கிறார். இதில் இன்னொரு சூக்ஷ்ம அர்த்தமும் உள்ளது. உங்கள் ஜாதகத்தில் குரு பலவீனமாக உள்ளது. கொண்டைக்கடலைக்கும் குருவிற்கும் தொடர்பு உண்டு. இந்த நிகழ்ச்சியின் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாதர் தெரிவிப்பது என்னவென்றால் உங்களுக்கு குருவினால் வரப்போகும் கஷ்டங்கள் விதை வடிவத்தில் உள்ளது, அதை முளைக்க முடியாத உலோகமாக மாற்றிவிட்டார். இந்த படைப்பில் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தெய்வீக மன எல்லைக்கு தெரியாமல் எந்த ஒரு உயிரினமும் நுழைய வாய்ப்பில்லை. இதுதான் உயர்ந்த உண்மை. இந்த உண்மை தொடர்பான அறிவு நன்கு நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த அறிவு உள்ளவர்கள் இந்த உலகத்தைவிட்டுப் போனாலும் எந்த நஷ்டமும் இல்லை. இப்படிப்பட்ட ஞானம் பெறத் தகுதியான ஒரு மனிதன் இவ்வுலகத்தில் தோன்றும் போது இந்த ஞானங்கள் அனைத்தும் அவனுக்கு தானாகவே கிடைத்து விடும். தெய்வீக சக்திகள், நீண்ட ஆயுளுடைய ரிஷிகள் மற்றும் தெய்வீக அவதாரங்கள் அழிவில்லாத தத்துவத்தில் விளங்குகின்றனர். மனிதன் அழியக்கூடிய தத்துவத்தில் விளங்குகிறான். இந்த அழிவில்லா தத்துவத்தில் விளங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வகை அறிவு, நிலை, வலிமை அல்லது இயக்கம் ஆகியவற்றுடன் ஒத்துப்போக வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. சுதந்திரம்தான் அதன் குணம். இது அனைத்து கோணங்களும் முழுமையாக பெற்றது. இது மிகவும் பழமையானது மற்றும் மிகவும் நவீனமானது கூட! எந்த ஒரு செயலும் காரணம் இல்லாமல் நடைபெறாது. ஒன்றுபடுதல்தான் எல்லா காரியங்களுக்கும் எல்லா செயல்களுக்கும் அடைப்படை. இது எல்லாவற்றையும் விட மேலானது. இதுதான் ஸ்ரீ தத்தரின் குணம். அப்படிப்பட்ட ஸ்ரீ தத்தாத்ரேயர் கலியுகத்தில் முதல் முறையாக அனைத்துவிதமான அற்புத ஆற்றல்களுடன் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பீதிகாபுரத்தில் அவதரித்துள்ளார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் எவ்வளவு சிறப்பானவர் என்று 1000 தலை கொண்ட ஆதிசேஷனால் கூடத் தெளிவாக விவரிக்க முடியாது.

என் செல்வமே, ஸ்ரீ ஸ்ரீபாதர் தான் நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்கப் போவதாக எப்போதும் அறிவித்துக் கொண்டிருந்தார். இரண்யகசிபு ஒரு வினோத வரம் பெற்றுக்கொண்டதால் அவனுக்கு மரணம் சாத்தியமற்றது போல் தோன்றியது. அப்படியிருப்பினும் கொடுத்த வரத்திற்கு எந்த பங்கமும் ஏற்படாவண்ணம் கடவுள் நரசிம்மராக அவதரித்து வந்து இரண்யகசிபுவை கற்பனை செய்ய கூட முடியாத அளவுக்கு கொன்றார். சிறந்த பக்தனான பிரகலாதன் இரண்யகசிபுவிடம் இருந்து காப்பாற்றப்பட்டான். பிரகலாதர் கடவுள் அந்த மாளிகையின் தூணில் இருப்பதாக உரைத்தார். அதுபோலவே கடவுள் தூணில் இருந்து தோன்றினார். கலியுகத்தில் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகம் பலருக்கு உள்ளது. இரண்யகசிபுவின் அகங்காரத்தை அடக்கவும் பிரகலாதனை போன்ற பக்கதர்களை காக்கவே ஸ்ரீ

தத்தர் இந்த அவதாரத்தை எடுத்தார். கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிப்பதுதான் நரசிம்ம அவதாரத்தின் சிறப்பு. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மற்றும் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஆகிய இரண்டு தத்த அவதாரங்கள் இரண்டு முக்கியமான பணிகளுடன் இந்த பிரபஞ்சத்திற்கு வந்தன: கடவுளை தூற்றுபவர்களின் அகங்காரத்தை அடக்கவும், தன் பக்தர்களை கண் இமை போல் பாதுகாக்கவும்தான். ஸ்ரீ ஸ்ரீபாதரால் முடியாது என்று ஒன்றுமே கிடையாது" என்றார் திருமலதாஸ்.

திருமலதாஸ் விவரித்து கொண்டிருக்கும் போதே எனக்கு சில சந்தேகங்கள் தோன்றின. நான் இப்போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் சரித்திரத்தை ஓலைச் சுவடியில் எழுதிக்கொண்டிருக்கிறேன் எதிர் காலத்தில் எந்த பொருளில் எழுதுவார்கள்? இப்போது சாலிவாகன காலம் நடந்து கொண்டிருக்கிறது. வரும் காலங்களில் ஆங்கில முறை நாட்காட்டி முக்கியத்துவம் பெறும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியுள்ளார். கிருஷ்ண அவதாரத்தின் நிர்ணயம் (அவதாரத்தின் முடிவு) எப்போது ஏற்பட்டது? எந்த தேதியில் எந்த நேரத்தில் கலியுகம் தொடங்கியது? இவை அனைத்தைப் பற்றியும் நேரக் கணக்குடன் வருங்கால மக்கள் எழுதப் பயன்படுத்தும் வஸ்துவில் எழுதிக்காட்டினார் என்றால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உண்மையில் ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்று நம்புவேன்.

திருமலதாஸிடம் என்னுடைய சந்தேகங்களை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அவர் கூறுவதை உன்னிப்பாக கேட்பது போல் தோரணைகள் செய்து கொண்டிருந்தேன். உலோக உருண்டைகளை அவ்வப்போது பார்த்தும் சிரித்து கொண்டும் இருந்தேன். திடீரென்று திருமலதாசின் குரல் கரடு முரடாக மாறியது. அவர் பேசும் திறனை இழந்து விட்டார். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் வாழ்க்கை வரலாறை கேட்டுக் கொண்டிருக்கும் போது காது செவிடாகும் படி ஒரு பெரிய சப்தம் கேட்டது. அந்த வெடி போன்ற சத்தம் கேட்டவுடன் நான் முழுவதும் செவிடாகி என்னால் எதையும் கேட்க முடியவில்லை.

ஓ! ஒரு நொடியில் நான் செவிடனானேன் திருமலதாஸ் ஊமை ஆகிவிட்டார். திருமலதாஸ் ஏதோ கூற முற்பட்ட போது அவரிடம் இருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. நான் எவ்வளவு முயற்சி செய்தும் ஒரு சிறிய ஓசையைக் கூட என்னால் கேட்க முடியவில்லை. என் மனதில் எழுந்த சந்தேகங்களை நான் ஊக்குவித்தது தவறு என எண்ணி வேதனை அடைந்தேன். அதன் விளைவால் நான் செவிடன் ஆகிவிட்டேன். இது நிரந்தரமாகிவிடுமோ? கடவுளே,இப்போது என்ன செய்வது?

## படைக்கப்பட்ட உலோக கொண்டைக்கடலைகள் 'ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் பிரபத்யே' என்ற வாக்கியமாக மாறுதல்

இதற்கிடையில் உலோக கொண்டைக்கடலை தானாகவே நகர்ந்து '**ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே**' *(ராஜா ஸ்ரீ ஸ்ரீபாதா, நான் உங்கள் பாதத்தை வணங்குகிறேன்)* என்று தெலுங்கு மொழியில் எழுத்துக்களாக உருவாகியிருந்தன. அதன் மேல் சிறிய

வெள்ளை காகிதம் இருந்தது. நாங்கள் இருவரும் பார்த்ததும் அது பெரிதானது. அது செவ்வக வடிவத்தில் மாறியது. அது ஓலைச்சுவடியை விட மெல்லியதாக இருந்தது. கையால் தொடுவதற்கு வழவழப்பாக இருந்தது. அதில் கருப்பு நிற மையினால் அழகாக எழுதப்பட்டிருந்தது. தெலுங்கு மொழியில் "ஸ்ரீ கிருஷ்ணரின் இறப்பு கி. மு. 3102 பிப்ரவரி 18 ஆம் தேதி இரவு 02 மணி 27 நிமிடம் 30 வினாடிகள். நடந்த வருடம் பிரமாதி சித்திரை மாதத்தில் வரும் முதல் பிரதமையில் வெள்ளிக்கிழமை அஸ்வினி நட்சத்திரம் கூடிய நாளில் ஸ்ரீ கிருஷ்ணரின் இறப்பு நடந்து கலியுகம் தொடங்கியது" என்று எழுதப்பட்டிருந்தது.

இதை பார்த்ததும் எனக்கு குப்பென்று வியர்த்தது. உடலெல்லாம் வியர்வை தண்ணீராக ஊற்றியது. என் உடல் நடுங்க ஆரம்பித்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் இங்குதான் சூக்ஷ்ம ரூபத்தில் இருக்கிறார் என்பது உறுதி. **"என்ன ஒரு துரதிர்ஷ்டம்!! நான் குருவபுரம் செல்வது கனவுதான்!! இப்போது ஸ்ரீ ஸ்ரீபாதர் நரசிம்ம அவதாரம் எடுத்து என்னை வதம் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!! ஸ்ரீ ஸ்ரீபாதர் திருமலதாஸிடம் என்னை கல்லில் துணியை துவைத்து காய வைப்பது போல் அடித்து துவைக்க ஆணையிட்டால் நான் என்ன செய்வது? கடவுள் இப்படி ஆணையிட்டால் திருமலதாஸ் கண்டிப்பாக என்னை துவைக்கும் கல்லில் அடித்து துணிகளை காய வைப்பது போல் என்னை தொங்கவிட்டு விடுவாரே"** என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன். சில குருக்கள் தங்களை தன்னை அறிந்த பெரிய ஞானி என்று கூறிக்கொண்டு தன் சீடர்களுக்கு பிரம்ம ஞானத்தை போதிப்பதாகக் கூறி அருள் பொங்கும் கண்களுடன் பார்த்து பலவாறு பாராட்டி பணத்தைக் கறப்பார்கள். சீடனும் தன்னைத்தான் குரு பாராட்டி விட்டதாக எண்ணி அகந்தை அடைவான். இப்படிப்பட்ட குரு-சிஷ்யன் இருவருமே குற்றவாளிகள்தான். ப்ராமணனான எனக்கு சலவைத் தொழிலாளியான திருமலதாஸை கொண்டு ப்ரம்ம ஞானத்தை போதிக்க வைத்தது ஸ்ரீ ஸ்ரீபாதரின் புத்திக்கூர்மை. அவரை சுற்றியுள்ள எல்லா சலவைத்தொழிலாளிகளும் தங்கள் தொழிலில்தான் முழுமையாக ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களால் எந்த தத்துவங்களைப் பற்றியும் விவாத்திக்கவோ புரிந்துகொள்ளவோ முடியாது. எதுவானாலும் சரி எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் மட்டுமே ஒரே அடைக்கலம்.

நான் திருமலதாஸை நோக்கினேன். அவர் முகம் மிகவும் உயர்ந்த ஜொலி ஜொலிப்புடன் பிரகாசமாக காணப்பட்டார். பின்னர் என் மனதில் திருமலதாஸ் ஒரு பிராமணன் போலவும் நான் அசுத்தமான மனதுடன் இருக்கும் ஒரு சலவைத் தொழிலாளி போலவும் தோன்றியது.

உலோக உருண்டைகள் மீண்டும் பழைய உருவத்தை அடைந்து கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை மன்னித்து விட்டார் என்று புரிந்து கொண்டேன். சிறிது நேரத்தில் வெள்ளை காகிதமும் மறைந்துவிட்டது. திருமலதாஸ் பின் பேசத்தொடங்கினார் **"என் மகனே சங்கர் பட்!! இந்த கலியுகம் ஒரு உலோக யுகமாகும். இந்த யுகம் அசுத்தங்களின் கலவை. ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைப்படி நான் இறந்த பிறகு ஹிரண்ய லோகத்தில் சிறிது காலம் தங்கி விட்டு மகாராஷ்டிர மாநிலத்தில் பிறக்கவேண்டும்"** என்றார்.

நான் **"இந்த உடலைப் பிரிந்த பின் உங்களுக்கு மீண்டும் பிறவி உண்டா!! அந்த கதையை கூறி என்னை புண்ணியம் செய்தவன் ஆக்குங்கள்."** என்றேன். திருமலதாஸ், **"ஒரு நாள் சலவை செய்த துணிகளை எடுத்துக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாத்தா வீட்டிற்கு சென்றேன். பின்னர் சுமதி மஹாராணியின் மாமாவான ஸ்ரீதரவதானி ஸ்ரீ ஸ்ரீபாதரை தூக்கி கொண்டும் விளையாட்டு காட்டிக்கொண்டும் "தத்த திகம்பரா!! தத்த திகம்பரா!! தத்த திகம்பர அவதூதா!!"** என்று பாடிக்கொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு இரண்டு வயது இருக்கும். ஸ்ரீ ஸ்ரீபாதர் சந்தோஷத்தில் கத்திக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார். அந்த காட்சி பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. உடனே நான் **"ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தத்த திகம்பரா"** என்று கூறியதும் என்னை நோக்கி பார்த்தார் ஸ்ரீதர அவதானி. பின்னர் **"நரசிம்ம சரஸ்வதி தத்த திகம்பரா"** என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார். இதன் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாதர் தனக்கு உரிய பாணியில் அவர் தான் முன்காலத்தில் தத்தராக பிறந்ததாகவும்;இப்போது ஸ்ரீ ஸ்ரீபாதர் என்கிற பெயருடன் இந்த உருவத்தில் இருப்பதாகவும்; இந்த உருவம் மறைந்த பின் நரசிம்ம சரஸ்வதியாக தோன்ற போகும் விவரங்களை தெரிவித்தார்" என்றார்.

## சமர்த்த சத்குரு சீரடி சாய்பாபாவாக அவதரித்தல்

ஸ்ரீ ஸ்ரீபாதர், **"தாத்தா!! நான் நரசிம்ம சரஸ்வதியாக மகாராஷ்டிரத்தில் அவதரிப்பேன். அப்போது திருமலதாஸும் என்னுடன் மஹாராஷ்டிரத்திற்கு வருவார்"** என்றார். ஸ்ரீதரவதானி செயலற்ற நிலைக்கு சென்றார். பின்னர் நான் (திருமலதாஸ்) **"ஸ்வாமி, நான் எங்கு இருந்தாலும், எந்த உருவத்தில் இருந்தாலும், எந்த பிறவியில் இருந்தாலும் என்னை கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுடையதுதான். எனக்கு உங்கள் பாலகிருஷ்ண அவதாரத்தின் மீது அலாதி பிரியம்"** என்றேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை ஆசீர்வதித்து இவ்வாறு கூறினார். "திருமலதாஸ் நீ கட்கே மகராஜாக சலவை செய்வோரின் குலத்தில் மகாராஷ்டிரத்தில் பிறப்பாய். அப்போது துயரத்திலிருப்போருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் துன்பத்திலிருப்போருக்கும் ஆதரவாக இருப்பாய். என் சமர்த்த சத்குரு அவதாரமான முஸ்லீம் வேடத்தில் இருக்கும் சாய்பாபா தீஸிலா நகரத்தில் நடைபெறும். நீ சமர்த்த சத்குரு சாய்நாத் அவதாரமான என்னுடைய அருளை பெறுவது உறுதி. உனக்கு பாலகிருஷ்ணன் உருவத்தின் மீது பேரன்பு இருக்கும். அதனால் **"கோபாலா கோபாலா தேவகி நந்தன கோபாலா" என்ற நாமத்தை ஜெபிப்பாய். நான் உன் மனக்கண்ணில் என்னுடைய தரிசனத்தை அளித்துக் கொண்டிருப்பேன். நீ உன்னுடைய இந்த உடலை உதிர்த்த பின் ஹிரண்ய லோகத்தில் சில காலம் இருந்துவிட்டு பின்னர் கட்கே மஹாராஜாக இந்த உலக மக்களின் நலனுக்காக உழைப்பாய். இது என்னுடைய வரம்!! இது என்னுடைய உத்தரவாதம்"** என்றார்.

ஸ்ரீதரவதானி சற்று நேரத்திற்கு பின் சாதாரண நிலைக்குத் திரும்பினார். இவை அனைத்தும் அவருக்குக் குழப்பமாக இருந்தது. இதற்கிடையில் சுமதி மஹாராணி தன் மாமாவை அழைத்தாள். மாயைகள் அனைத்தும் அவரை மீண்டும் சூழ்ந்து ஸ்ரீ ஸ்ரீபாதரை மீண்டும் சாதாரண பையன் என்று நினைத்தார்.

பின்னர் நான், "ஐயா, எனக்கு ஒரு சந்தேகம். அனைவரும் கர்மாவின் பலன்களை தவிர்க்க முடியாது என்று ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் கூறியுள்ளார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த கொள்கையை மீறி எப்படி அனைவரையும் கர்ம பந்தங்களிலிருந்து விடுவிக்கிறார்?" என்றேன்.

## சத்குருக்கள், சத்புருஷர்கள் மற்றும் யோகிகளுக்கு வழங்கப்படும் தான தர்மங்களினாலும் கொடைகளினாலும் கிடைக்கும் பலன்

திருமலதாஸ் பதிலளிக்கத் தொடங்கினார். "ஸ்ரீகிருஷ்ணர் கர்மாவை கண்டிப்பாக அனுபவித்ததாக வேண்டும் என்றுதான் கூறியுள்ளாரே தவிர அதை விழிப்பு நிலையில்தான் அனுபவிக்க வேண்டும் என்று கூறவில்லை. அவற்றை கனவு நிலையில் கூட அனுபவிக்கலாம். ஒருவன் உடல் ரீதியாக பத்து வருடங்கள் துன்பப்பட்டு அனுபவிக்க வேண்டியக் கர்மாவை மன வேதனையாகவோ மன சித்ரவதையாகவோ கனவில் சில மணி நேரங்கள் அனுபவித்துக் கழித்து விடலாம். கர்மாவின் தாக்கம் அந்த வழியில் அழிந்துவிடும். நல்லவர்களுக்கும் யோகிகளுக்கும் செய்யும் தானங்கள் மற்றும் சேவைகள் புரிவதாலும் தெய்வங்களுக்கு சேவைகள் செய்வதாலும் பாவங்கள் மறைந்துவிடும். தெய்வத்தின் படங்கள் மிகவும் புனிதமானவை. நாம் அவைகளுக்கு சேவைகள் செய்யும் போது நம் பாவங்கள் அவர்களிடம் சென்றடைந்து அவர்களின் புண்ணியம் நம்மிடம் பரிமாற்றம் ஆகிவிடும். நல்ல தெய்வ பக்தி உள்ளவர்களுக்குத் தானங்கள் வழங்கி சேவை புரிந்தாலும், இதுபோன்ற பரிமாற்றம் நடைபெறும். சத்குருவை நோக்கி தியானம் புரியும் போது தியானத்தின் வழியாக பாவ புண்ணிய பரிமாற்றம் நடைபெறும். சத்குரு பக்தன் செய்யும் சேவையை ஏற்றுக்கொண்டு பக்தனின் பாவங்களை போக்கி அவரின் தவப்பலனை அளித்து அருள்புரிகிறார். ஒருவன் செய்த தீய செயல்களின் விளைவுகளை அனுபவித்தேதான் தீரவேண்டும். எனினும், தெய்வங்களும் தெய்வீக அவதாரங்களின் அதீத சக்திகள் எரியும் நெருப்பின் உருவகம் என்பதால் அவர்கள் ஏற்றுக்கொண்ட பாவ கர்மாக்களை எரித்து சாம்பலாக்க முடியும். பக்தியுடன் தெய்வங்களுக்கு ஒரு இலையோ பழமோ பூவோ படைக்கும் போது பாவகர்மாக்களும் அவர்களின் புண்ணியங்களும் பரிமாற்றம் ஆகின்றன. இந்த பரிமாற்றத்தின் செயல்பாடு நம் வேண்டுதல்களின் ஆழத்தைப் பொருத்தும் பக்தியைப் பொறுத்தும் சரணாகதியைப் பொருத்தும் அமையும். ஸ்ரீ ஸ்ரீபாதர் சில சமயம் நம் பாவங்களை உயிரற்ற பாறைகள் மற்றும் கற்களுக்கு மாற்றி விடுவார். அவற்றை வினோதமான பல வழிகளில் உடைப்பதன் மூலம் நம் கர்மாக்களை கழித்து விடுவார். இதை விளக்கும் வகையில் ஒரு கதையை கூறுகிறேன் கவனமாக கேளுங்கள்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்ததிலிருந்தே பால் பற்றாக்குறை இருந்தது. சுமதி மஹாராணிக்கு குழந்தைக்குக் கொடுக்கும் அளவுக்கு போதுமான பால் இல்லை. அவர்கள் வீட்டில் ஒரு பசு இருந்தது. அவர்கள் வீட்டில் உள்ள காலாக்னி சமான தத்தருக்கு படைக்க சிறிய அளவு பால் தேவைப்பட்டது. பசு தன் கன்று குட்டிக்கு திருப்திகரமாக பால் கொடுத்துவிட்டு மீதி சிறிய அளவு பால்தான் கொடுக்கும். இது மிகவும் விசித்திரமான ஒரு நிலைமை.

ஸ்ரீ ஸ்ரீபாதர் சிலசமயம் திருட்டுத்தனமாக பூஜை அறைக்குள் நுழைந்து காலாக்னி சமான தத்தருக்கு படைப்பதற்கு முன்பே பாலை குடித்து விடுவார். அப்படி செய்தாரானால் அன்று அப்பலராஜ சர்மா சிறு துண்டு வெல்லத்தை ஸ்ரீ தத்தருக்கு படைத்துவிட்டு உபவாசம் இருப்பார். கணவர் உபவாசம் செய்வதால் சுமதி மஹாராணியும் சாப்பிடாமல் இருப்பார். அப்படி அவர் நைவேத்தியம் செய்யும் நேரம் வரை காத்திருந்தால் ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் அந்த பாலை அருந்துவார். தங்களுக்கு இப்படி ஒரு அபூர்வமான தெய்வீகக் குழந்தை பிறந்தும் அதற்குச் சரியாக பால் கூட கொடுக்க வசதி இல்லையே என்று பெற்றோர்கள் வருந்தினர். அபரிமிதமாகப் பால் கொடுக்கும் பசுவை அப்பலராஜ சர்மாவுக்குத் தானமாக அளிக்க பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியும் நரசிம்ம வர்மாவும் பலமுறை முயற்சி செய்தனர். அனைத்து முயற்சிகளுக்கும் வீண்தான். அப்பலராஜ சர்மா எந்த சூழ்நிலையிலும் தானங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார். இது அவரின் சபதம். தானம் பெற்றுக்கொள்வது பாவத்தைச் சேர்க்கும் என்பது அவருடைய கருத்து. அவர் வேதஅறிஞர் என்பதால் வேத மாநாடுகளில் கொடுக்கப்படும் சம்பாவனைகளை மட்டும் பெற்றுக் கொள்வார். அவருடைய புரோகிதர் தொழிலில் வருமானம் மிகவும் குறைவு. அவர் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் ஸ்ரீ நரசிம்ம வர்மா வீட்டுக்கு மட்டும் புரோகிதராக இருந்தார். மற்ற புரோகிதர்களுக்குக் கொடுப்பதை விட அதிகமாக சம்பாவனை அளித்தால் அது போன்றவைகளை மறுத்துவிடுவார். அப்பலராஜ சர்மா அவரின் மாமனாரான சத்யரிஷீஸ்வரர் பாப்பண்ணார்யா வீட்டில் கூட எதையும் பெற்றுக் கொள்ள மாட்டார். சுமதிமஹாராணிக்கு கார்த்திகை பௌர்ணமி அன்று பிறந்தநாள். அன்று மட்டும்தான் அப்பலராஜ சர்மா ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் சாப்பிடுவார். அதேபோல் அவரது பிறந்தநாளான வைகாசி சுத்த த்ரிதியை அன்று தன் மாமனார் வீட்டில் சாப்பாடு சாப்பிடுவார். காலப்போக்கில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிறந்தநாள் என்பதால் விநாயக சதுர்த்தியன்றும் தன் மாமனார் வீட்டில் விருந்து சாப்பிட்டார்.

தன் குடும்பத்தின் துயரமான நிலையை குறித்து சுமதி மஹாராணி தன் கணவரிடம் கூறினாள். "என் பெற்றோர்கள் மிகவும் வசதியானவர்கள். அதோடு அவர்கள் ஆன்மீக ஒழுக்கத்தை கடைபிடிக்கும் ஆச்சாரமானவர்கள். மிகவும் செல்வந்தர்களான என் மல்லாடி பெற்றோர்களிடம் இருந்து பசு தானம் பெற்றுக் கொள்வதில் எனக்கு எந்த தவறும் தெரியவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு தேவையான பால் கொடுக்கும் நிலையில் நாம் இப்போது இல்லை. நீங்கள் இந்த விஷயத்தை கவனமாக கருத்தில் கொள்ளவேண்டும்" என்று கூறினாள். பின்னர் அப்பலராஜ சர்மா, "நீ சொல்வது சரிதான். சத்யரிஷீஸ்வரர் களங்கமற்றவர் என்பதால் அவர் வீட்டிலிருந்து பசுவை தானமாக பெறுவது எந்த தவறும் இல்லை என்றாலும் இதற்கு தர்ம சாஸ்திரத்தின் ஒப்புதல் பெறவேண்டியது அவசியம். மிகவும் ஆளுமை பொருந்தியவர்கள், ஸ்ரீ தத்தாத்ரேயர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளதாக கூறியிருக்கின்றனர். அவர் பிறந்ததிலிருந்து பல ஆச்சரியம் அளிக்கும் விஷயங்கள் இன்று வரை நடந்துகொண்டு இருக்கின்றன. இதுதான் ஸ்ரீ தத்தரின் புது அவதாரம்

என்றால் நம் வீட்டு பசு அபரிமிதமான பால் கொடுக்க வேண்டும் மற்றும் உனக்கும் போதுமான அளவு பால் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது நம் மூத்தமகன் ஸ்ரீதர ராஜ சர்மாவோ குருடன் மற்றும் நம் இளையமகன் ராமராஜ சர்மா நொண்டி. ஸ்ரீ ஸ்ரீபாதரால் அவர்கள் இருவரின் ஊனத்தை விடுவிக்க முடியும். இந்த விஷயத்தை உன் தந்தையிடமோ அல்லது ஸ்ரீ ஸ்ரீபாதரிடமோ நீ விவாதிக்கலாம். இப்படி ஒரு இக்கட்டான நிலைமையை உருவாக்கி என் கொள்கையை மீறச் செய்வது கடவுளுக்கு அழகல்ல" என்று பதிலளித்தார்.

சுமதிமஹாராணி நடந்தவைகளை தன் தந்தையிடம் தெரிவித்தாள். பாப்பண்ணார்யலு சிரித்துக்கொண்டே "என் செல்வமே, இவை அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்தான். அவர் பிரச்சனைகளை சரி செய்வதில் மட்டும் திறமைசாலி இல்லை அதை உருவாக்குவதிலும்தான். அவர்தான் தத்தர் என்பதை யோக பார்வையின் மூலம் கவனித்தேன். நம் வீட்டில் எண்ணற்ற பசுக்கள் இருக்கின்றன. அதை ஒத்துக் கொள்வது மட்டுமல்லாது அதில் ஒன்றை உனக்கு கொடுப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். ஸ்ரீ தத்தருக்கு பசும்பால் என்றால் மிகவும் இஷ்டம். உன் கணவர் கூறுவது போல் தர்ம சாஸ்திரத்தின் ஒப்புதலும் வேண்டும். ஓ! என்ன ஒரு விதியின் ஒரு முரண்பாடு!! இந்த ஊரில் உள்ள மருமகன்கள் மாமனாரின் சொத்துக்களை அடைய பல்வேறு முயற்சிகளை செய்கிறார்கள் ஆனால் என் மருமகனோ எரியும் தீ போன்றவர். அவரின் சபதத்தை மீற செய்வதால் நாம் முட்டாள் ஆகிவிடுவோம். அவர் பஞ்சபூதங்களின் ஒப்புதல் இல்லாமல் பசுதானத்தை ஏற்று கொள்ளமாட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் உன் இரு மகன்களின் ஊனத்தை சரி செய்து விட்டால் உன் குடும்பத்திற்கு அவர் பட்ட கடன் தீர்ந்து விடும். கடனிலிருந்து விடுபட்ட ஸ்ரீ தத்தர் உனக்கு குழந்தையாக உன் வீட்டில் இருக்க முடியாது. அவர் உலகத்தை உயர்த்த உலக ஆசானாகி உன் வீட்டை விட்டு சென்று விடுவார். அதனால் தவறுதலாகக் கூட அவரைச் சகோதரர்களின் ஊனத்தைச் சரி செய்யுமாறு வேண்டாதே. அனைத்தும் காலத்தை அனுசரித்துத்தான் நடக்கும். அந்த காலம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஸ்ரீ ஸ்ரீபாதர் விரும்பினால் உனக்கு மிகுதியான பால் சுரக்கும் ஆனால் உனக்கும் அவருக்கும் உள்ள கடன் முடிந்துவிடும். அவர் கடனைக் கழித்துவிட்டால் ஸ்ரீ தத்தர் நம் குடும்பத்துடன் மட்டும் தன்னை மட்டுப்படுத்தி கொள்ள மாட்டார். பிரபஞ்சத்தின் ஆசான் என்னும் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ள வீட்டிலிருந்து தப்பித்து விடுவார். ஸ்ரீ ஸ்ரீபாதர் விரும்பினால் உங்கள் வீட்டு பசு தன் வினோதமான குணத்தை கைவிட்டு அதீத பால் உற்பத்தி செய்து அபரிமிதமாகப் பால் அளிக்கமுடியும். பின்னர் இதுபோன்ற பிரச்சனை எழப்போவதில்லை. ஆகவே கொஞ்ச காலத்திற்குப் பொறுமையாகக் காத்திரு. ஸ்ரீ தத்தர் போட்ட முடிச்சை அவரே அவிழ்ப்பார்" என்றார்.

பின்னர் நான், "ஐயா, ஸ்ரீ ஸ்ரீபாதரின் சகோதரர்களின் ஊனத்திற்கு என்ன காரணம்? அவர்கள் பரம்பரையில் குடும்பம் சம்பந்தமான ஏதாவது கர்ம குறைபாடுகள் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

அதற்கு திருமலதாஸ் “என் செல்வமே, ஸ்ரீ தத்தாத்ரேயர் சந்தியாகால வேளையில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் விடியற்காலையில் அவதரித்தார். அடுத்து வரப்போகும் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி அவதாரம் மதியம் உச்சி வேளையில் அபிஜித் லக்னத்தில் நடைபெறும். ஸ்ரீ தத்தரின் லீலைகள் மிக ஆழமானது. சந்தியாகாலத்திற்கு பின் இருள் சூழத் தொடங்கி உயிரினங்கள் தூக்க நிலையில் இருக்கும். எனவே தத்த அவதாரம் உயிரினங்களை சுகமாக உறங்க அனுமதித்துவிட்டு யோக முயற்சிகளை வளர்ச்சி அடைய செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மிகுந்த இருளாக இருக்கும் போது மக்களுக்கு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதும் என்ன செய்ய வேண்டும் என்பதும் பரிணாம வளர்ச்சி பெற எப்படி நகர வேண்டும் என்பதும் தெரியாது. மக்களின் பரிணாம வளர்ச்சி அவர்களுக்கே அறியா வண்ணம் நடைபெறச் செய்வதுதான் ஸ்ரீ தத்த அவதாரத்தின் சிறப்பு. அவர்கள் எந்த முயற்சியும் செய்யாமல் அல்லது சிறு முயற்சியினாலோ உயிரினங்கள் ஆழ்ந்த உள்ளுணர்வுகளில் இருந்து அவர்களுக்கே தெரியாத ஆன்மீக பரிணாம வளர்ச்சி முறைகளை நோக்கி பயணிப்பார்கள். இது பூமிக்கு மட்டும் வரையறுக்கப் பட்ட ஒன்று அல்ல.

ஸ்ரீ ஸ்ரீபாதர் விடியற்காலையில் வருகை புரிந்தார். விடியற்காலை நேரத்தில் சூரிய கடவுளின் சக்திகள் அனைத்தும் ஒரே நேரத்தில் பிரகாசித்து அனைத்து உயிரினங்களையும் தூய்மைப்படுத்தும். அவர்களுடைய ஆத்மா சூரியனின் ஆத்மாவின் பிரதிபலிப்பு. இது உயிரினங்களுக்குள் இருக்கும் வெவ்வேறு நிலைகளில் நடனமாடிக் கொண்டிருக்கும் பலவகையான எண்ணற்ற சக்திகளின் முன்னேற்றத்தையும் விழிப்பையும் குறிக்கிறது. மதியநேர சூரியன் கடுமையான மற்றும் பயங்கரமான பொங்கியெழும் நெருப்பின் உருவம். அனைத்து உயிரினங்களையும் விழிப்படையச் செய்ய சூரிய ஆத்மாவை முழுமையான சக்திகளுடன் அதீதமாகவும் சுதந்திரமாகவும் பரவச் செய்வதுதான் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தின் நோக்கம். இந்த பிரபஞ்சம் முழுவதும் பரவும் இவை அனைத்தும் அவரின் சைதன்யத்துடன் (ஆத்ம ஸ்வரூபம்) தொடர்புடையவை.

ஸ்ரீ தத்தர் அவதரித்த நேரத்திற்கும் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவதரித்த நேரத்திற்கும் இடையே ஒரு நீண்ட இருள் படிந்த இரவு தலையிடுகிறது. அது பேரிருளின் முழு உருவகம். இதை குறிக்கும் வகையில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் மூத்த சகோதரர் பிறந்தார். அந்த இருள் படிந்த நேரம் விலகிய பின் அடுத்த நிலையின் வருகையில் அனைவருக்கும் நிறைய சந்தேகங்கள், நாத்திக தர்க்கங்கள்,தந்திரமான வாக்குவாதங்கள் மற்றும் வக்கிரமான விளக்கங்கள் மேலோங்கியது. இதை குறிக்கும் வகையில்தான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் இளைய சகோதரர் ஸ்ரீ ராமராஜ சர்மா பிறந்தார். எந்த உயிரினமும் பேரிருட்டிற்கு ஈடான தன் செயலற்ற தன்மையை விட்டு விலக்கி அவர்களின் சந்தேகங்கள், வழி மாற்றும் வாக்குவாதங்கள், மற்றும் வக்கிரமான கருத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மனத் தடுமாற்றங்களை மீறி எழுபவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளை பெறுவர். இது தான் இதன் ரகசியம் . இவை அனைத்தும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சித் தொடர்புடைய விஷயங்கள்.

கூடுதலாக அப்பலராஜ சர்மாவின் குடும்பத்தினர் குறிப்பிட்ட தவறான நடத்தைகள் செய்திருந்தனர். ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் குடும்பம் வைதீக வேலநாட்டி பிராமணர்களாக இருந்தாலும் அவரின் குடும்பத்தினர் கிராமத்தின் தலைவர்களாக இருந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அப்பா வழி தாத்தா ஸ்ரீதர ராமராஜ சர்மா. அந்த கிராமத்தின் நிர்வாக பொறுப்பில் இருக்கும் பிராமணர்கள் ராஜ என்ற அடைமொழி சேர்த்துக் கொள்வர். சர்மா என்கிற வார்த்தை அந்த நபர் பிராமணன் என்பதை குறிக்கிறது.

ஸ்ரீதர ராமராஜ சர்மா அயினவில்லி கிராமத்தின் நிர்வாக அதிகாரி. அவர்கள் குடும்பத்தில் மூத்த மகன் கிராம தலைவர் பொறுப்பை பெறுவார். நல்ல விளைச்சல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களிடமிருந்து வரிப் பணத்தை சில சமயம் வற்புறுத்தி கூட வசூலித்து ஜமீன்தார்களிடம் ஒப்படைக்க வேண்டியது கிராமத் தலைவரின் பொறுப்பு. ஆதலால் ஜமீன்தாரின் ஆணைக்குக் கீழ்பணிந்து ஸ்ரீதரராஜ சர்மா தன் விருப்பு வெறுப்பு இன்றி வன்முறைகளின் மூலம் வரிகளை வசூலிக்க வேண்டியிருந்தது. அது அவருடைய கடமை மற்றும் தர்மமாக இருந்தாலும் இது கடவுளின் பார்வையில் பாவம். கிராமத் தலைவர் பொறுப்பு ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் மூத்த சகோதரருக்கு அளிக்கப்பட்டது.

தாத்தா செய்த பாவத்தினால்தான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் மூத்த சகோதரர் ஸ்ரீதரராஜ சர்மாவும் அடுத்த மூத்த சகோதரரான ராமராஜ சர்மாவும் பிறவி ஊனமாக பிறந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ தத்தரின் அவதாரமாக இருப்பினும் அவர் தாத்தா செய்த பாவத்தின் சிறிதளவை அனுபவித்ததாக வேண்டியிருந்தது. அந்த காரணத்தினால்தான் அவர் பால் பற்றாக்குறையை சந்திக்க நேரிட்டது. பிரபஞ்சத்திற்கு அதிபதியான அவர் வரையறுத்த ஒழுங்குமுறைகளை அனைவரிடமும் செலுத்துவார். அவதாரமாக இருப்பினும் கர்ம பலன்களை அனுபவித்தே தீர வேண்டும் என்பதை இதிலிருந்து அவர் உணர்த்தியிருக்கிறார்.

ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய்ய சிரேஷ்டியும் வத்ஸவாயீ நரசிம்ம வர்மாவும் ஸ்ரீ ஸ்ரீபாதரை தன் சொந்தப் பேரனாகவே கருதினர். அதனால் பல நாட்களாக ஸ்ரீ ஸ்ரீபாதரை துன்பப்படுத்தி கொண்டிருக்கும் பால் பற்றாக்குறை பிரச்சனையை சரி செய்ய எண்ணினர். ஸ்ரீ வர்மா ஸ்ரீ சிரேஷ்டியுடன் ஆலோசித்து இந்த பிரச்சனையை முடிவுகட்ட ஒரு யோசனை கூறுமாறு வேண்டினார். மிகவும் பிரசித்தி பெற்ற காயத்ரி பசுவின் கன்றுகள் ஸ்ரீவர்மாவின் பராமரிப்பில் இருந்தன. அவற்றில் சர்வ லக்ஷணம் பொருந்திய பசு ஒன்றை ஸ்ரீ சிரேஷ்டி ஸ்ரீ வர்மாவிடமிருந்து வாங்கிகொண்டார். இதற்கிடையில் வைதீகரான தன் கடமைகளைச் செய்ய ஸ்ரீ அப்பலராஜ சர்மா ஸ்ரீ வர்மாவின் வீட்டிற்கு வந்தார். அந்த வைபவத்தில் பசுவை விற்று கிடைத்த பணத்தை ஸ்ரீ வர்மா ஸ்ரீ அப்பலராஜ சர்மாவிடம் கொடுத்தார். அந்தத் தொகை, சராசரியாக இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு புரோகிதர்களுக்கு அளிக்கப்படும் சம்பாவனையை விட அதிகமானது. ஸ்ரீ அப்பலராஜ சர்மா தான் பெற வேண்டிய நியாயமான தொகையை மட்டும் பெற்றுக்கொண்டு மீதியை

மறுத்துவிட்டார். ஸ்ரீ வர்மாவும் அந்த பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஒரு உண்மையான க்ஷத்திரியன் தானமாக கொடுத்ததை திரும்ப பெற்றுக் கொள்ள மாட்டார் என்று கூறினார். இந்த பிரச்சனை ஸ்ரீ பாப்பண்ணார்யா விடம் பரிந்துரைக்கப்பட்டது. பிராமணர் சங்கம் கூட்டப்பட்டது. அந்த கூட்டத்தில் **"அப்பலராஜ சர்மா மறுத்த பணத்தை யார் விருப்பப்பட்டாலும் எடுத்துக்கொள்ளலாம்"** என்று ஸ்ரீ பாப்பண்ணார்யா அறிவித்தார். பல பிராமணர்கள் அந்த பணத்தை பெற போட்டியிட்டனர். இவை அனைத்தும் வினோதமான விஷயம்.

பின்னர் பாப்பைய சாஸ்திரி என்ற இளைஞன் "ஸ்ரீ ஸ்ரீபாதர் கண்டிப்பாக அவதாரம் இல்லை. அப்படி அவர் கடவுளாக இருந்தால் இப்படி ஒரு வினோதமான நிலை அவருக்கு வரப்போவதில்லை. அவர் ஸ்ரீ தத்தராக இருந்தால் தன் சகோதரர்களின் ஊனத்தை சரி செய்திருக்க வேண்டாமா? ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்ததிலிருந்தே சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் சீரற்ற முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த கோணத்தை ஒதுக்கிவிடுவது குற்றமாகும். நான் ஸ்ரீ தத்தரின் பக்தன். நான் என் குருவிடமிருந்து '**ஸ்வேதர்கர் ரக்ஷக்**' (வெள்ளை எருக்கு ரக்ஷை) கையும் பெற்றுள்ளேன். தினமும் அதிக நேரம் ஜெபம் செய்கிறேன். நான் இப்பணத்தை தானமாகப் பெற்றுக் கொண்டாலும் எனக்கு எந்த களங்கமும் ஏற்படாது. இந்த பணத்தைப் பெற்றுக்கொள்ள நான் தகுதியானவன் என்பதால் அதை என்னிடம் கொடுக்கலாம்" என்றான்.

பிராமண சங்கத்தினர் பணத்தை பாப்பைய சாஸ்திரியிடம் கொடுத்தனர். அந்த பணத்தை வைத்து ஒரு நல்ல பசுவை வாங்கலாம். வெற்றிப் பெருமிதத்துடன் பாப்பைய சாஸ்திரி வீட்டுக்கு வந்தான். அவன் வீட்டுக்கு போய் சேர்ந்த அதே நேரத்தில் அவனைக் காண அவன் மாமா காத்திருந்தார். அவர்களுக்கு இடையே சம்பிரதாய பேச்சுக்கள் நடந்தன. பாப்பையா அவரை சாப்பிட அழைத்தான். அவர் மறுத்துவிட்டு தான் வருடத்திற்கு ஒரு முறைதான் சாப்பிட முடியும் என்றும் அதுவும் மருமகன் வீட்டில் சாப்பிட முடியாது என்றார். அப்படி கூறிக்கொண்டே உடனடியாக சென்றுவிட்டார்.

மாமா சென்றவுடன் பாப்பையா யோசனையில் அமர்ந்திருந்தான். அவன் மனைவி அவனிடம் வந்து **"ஸ்வாமி, இப்போது வந்து போனவர் சென்ற வருடம் இறந்துபோன உங்கள் மாமாவின் சாயலில் இருக்கிறார் தானே!!"** என்று கேட்டவுடன் பயத்தில் திகைப்படைந்தான். அவனுக்கு இருந்த ஒரே மாமாவும் சென்ற வருடம் இறந்துவிட்டார். இப்போது வந்த புது மாமா யார்? என்னுடைய மனது எந்த கற்பனையில் இருந்தது? வேறு உறவினர்கள் இருந்தாலும் அவர்கள் யாரும் அச்சு அசல் மாமாவைப் போலவே இல்லை. அப்படியென்றால் மாமாவின் இறந்த ஆத்மாவையா கண்டேன்? இதயம் பயங்கரமாக படபடக்கத் தொடங்கியது. அவனுக்கு ஆவிகள் பேய் பிசாசுகளுக்கு சம்பந்தமான எந்த மந்திர தந்திரங்களும் தெரியாது. 'அவன் வணங்கும் ஸ்ரீ தத்தரின் கருணையில் இருந்து கீழே இறங்கி விட்டேனா? அல்லது வரப்போகும் கெட்ட நேரமா?' கிளம்பும் போது அவன்

மாமா கூறிய வார்த்தைகளான **“உன்னை சீக்கிரம் சந்திப்பேன் என்று நினைக்கிறேன்”** என்று கூறியது அவன் மனதை பல்வேறு விதமாக வேதனைப்படுத்தியது. அவன்யென்ன இறந்து தன் மாமாவை அடுத்த உலகத்தில் சீக்கிரம் சந்திக்கப் போகிறேனா? மனம் கனத்தது. **‘ஓம் த்ராம் தத்தாத்ரேய நமஹ’** என்று ஜெபிக்கத் தொடங்கினான். தன் மனதை ஒருநிலைப்படுத்தி தியானிக்க முடியவில்லை. அவன் சுயம்பு தத்தரை தரிசிக்க ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்கு சென்றான். ஸ்ரீ தத்தரை தயானிக்கத் தொடங்கினான். அந்த தியானத்தில் தலையில்லா தத்தரை பார்த்தான். அவன் ஜெபம் செய்ய தொடங்கியும் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அர்ச்சகர் கொடுத்த பிரசாதம் ஒருஜாடி விஷத்தில் தோய்த்தது போல தோன்றியது. அர்ச்சகர் ஏதோ சிரித்துக்கொண்டே கூறியது இந்த பிரசாதத்தை சாப்பிட்டால் உடன் நீ இறந்து விடுவாய் என்று கூறுவது போல் இருந்தது. அவன் வீட்டிற்குச் சென்றவுடன் அவன் மனைவியின் நெற்றி வகிட்டில் குங்குமம் இல்லாததை கண்டான். தான் உயிருடன் இருக்கும் போதே ஏன் குங்குமத்தை எடுத்து விட்டாய் என்று இடி போல் முழங்கினான். ஒரு ரூபாய் அளவுக்கு இவ்வளவு பெரிய குங்குமம் வைத்துக் கொண்டிருக்கும் போதே ஏன் இப்படி கடிந்து கொள்கிறார் என்று அவள் ஆச்சரியம் அடைந்தாள். பாப்பையா மனநிலை இழந்துவிட்டான் என்ற பிரச்சாரம் வேகம் பிடித்தது. பீதிகாபுரம் முழுவதும் பல வதந்திகளும் புரளிகளும் விமர்சனங்களும் நிரம்பியிருந்தன. பாப்பையாவுக்கு பல மனரீதியான சிகிச்சைகளும் பேய் பிடித்ததற்கான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன. தனக்கு எதுவுமில்லை என்றும் தான் கூறுவது அனைத்தும் உண்மைதான் என்றும் கூறினான். பைத்தியம் பிடித்தவர்கள் கூட சில சமயம் இப்படி சிந்திக்க வைக்கும் படி பேசுவார்கள் என்று மக்கள் பேசிக் கொண்டனர். பாப்பையாவின் மனைவிக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. அவர் அறியாமையினால் ஸ்ரீ ஸ்ரீபாதரை பற்றி தவறாக பேசியதால்தான் தன் கணவருக்கு அனைத்து துரதிர்ஷ்டங்களும் ஏற்பட்டன என்று எண்ணினாள். உயிரற்ற கற்சிலைகளின் பாதத்தில் விழுவதை விட தெய்வீக ஒளியில் ஜொலிக்கும் உயிருடன் இருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதரிடமே தஞ்சம் அடைந்து விடலாம் என்று அவளுக்கு தோன்றியது.

அவள் ஸ்ரீ ஸ்ரீபாதர் வீட்டிற்கு சென்றாள். அவரை கையில் தூக்கிக்கொண்டு முத்தமிட்டாள். அவர்கள் இருவரும் தனியாக இருந்தபோது தன் அவல நிலையை விளக்கினாள். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் **“அத்தை!! ஒரு சிறிய விஷயத்தை மாற்றினால் எல்லாம் சரியாகிவிடும். நீங்கள் எனக்குத் தாய் போன்றவர் என்பதால் இந்த ரகசியத்தை கூறுகிறேன். நீங்கள் எந்த தாமதமும் இன்றி புது வீடு கட்டுங்கள். நீங்களும் மாமாவும் வாஸ்து பூஜை செய்து குடிபுகுந்தால் எல்லாம் சீராகிவிடும்”** என்றார். ஸ்ரீ ஸ்ரீபாதருடன் நடந்த இந்த உரையாடலை அவள் யாரிடமும் தெரிவிக்கவில்லை. வாடகை வீட்டில் இருப்பதால்தான் இது போன்ற கஷ்டங்கள் ஏற்பட்டது என்றும் உடனடியாக சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்று கூறி சமாளித்தாள். ஒருவர் கைவிடப்பட்ட குழியை பாப்பையாவுக்கு தானமாக கொடுத்தார். உடனடியாக அந்த நிலத்தை அதிக செலவு செய்து சிறந்த வேலையாட்களை அமர்த்தி நிரப்பினர். வீடு

கட்டுவதற்காக வீட்டில் உள்ள அனைத்து பணங்கள், தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை செலவழித்தனர். கொஞ்சம் பணம் கடன் வாங்கினர். மலையின் பாறை கற்களை வாங்கினர். அதை தூளாக உடைத்து வீடு கட்ட உபயோகித்தனர். புது வீட்டிற்கு வந்ததும் பாப்பையா ஆரோக்கியம் பெற்றார்.

"என் அன்பு சங்கர் பட்!! பாப்பையா இறக்கும் தருவாயில் இருந்தான். அவனை இளவயது மரணத்திலிருந்து ஸ்ரீ ஸ்ரீபாதர் காப்பாற்றினார். மனவேதனை அடையச்செய்தும் அவமானப்படுத்தியும் பணத்தை தாராளமாக செலவு செய்ய வைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவன் கர்மாக்களை அழித்தார். அதுமட்டுமல்லாது பாப்பையாவின் தீய கர்மாக்கள் பாறையினுள் ஈர்க்கப்பட்டு அதை தூள்தூளாக உடைத்ததன் மூலம் அவை அழிக்கப்பட்டன. அவதூதர்கள் மற்றும் சித்தர்கள் கடைபிடிக்கும் இம்மாதிரியான முறைகள் மிக வினோதமாக இருக்கும். மீண்டும் ஆரோக்கியம் பெற்ற பாப்பையாவிடம் ஸ்ரீ ஸ்ரீபாதர் "முட்டாளே! உனக்கு மூளையே இல்லை!! நீ தினமும் வணங்கும் ஸ்ரீ தத்தர்தான் உன் கண் முன்னால் மனித உருவில் ஸ்ரீ ஸ்ரீபாதராக இருப்பது என்பதை கூட உன்னால் கண்டுபிடிக்க முடியாத துரதிர்ஷ்டசாலி. ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள கற்சிலைதான் உன்னை காப்பாற்ற போவதாக நம்பினாய். உன் பாவங்களை மலைப்பாறைகளுக்குள் புகுத்தி உன்னை அதை உடைக்க செய்து உன் கர்மாக்களை அழித்த தத்தாத்ரேயர் நான்தான். உனக்கு புது வீட்டையும் அருளினேன். மனித உருவில் இருக்கும் இந்த தத்தாத்ரேயரிடம் நம்பிக்கை வைத்திருந்தால் உன் தீயவைகளை என் உடலுக்குள் இழுத்துக்கொண்டு உன் கர்மாக்களை ஒன்றுமில்லாமல் ஆக்கியிருப்பேன். பக்தனின் மனநிலைக்கு ஏற்றபடிதான் கடவுள் அருளின் பலனும் இருக்கும்" என்றார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் இந்த தெய்வீக லீலைக்கு பின்னர்தான் பாப்பையா அவரை ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்று புரிந்துகொண்டார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் பால் பற்றாக்குறை ஸ்ரீ சிரேஷ்டிக்கும் ஸ்ரீ வர்மாவுக்கும் மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர்கள் ஸ்ரீ சத்யரிஷீஸ்வரரை (ஸ்ரீ பாப்பண்ணார்யா) அணுகி **"ஓ ராஜரிஷி நீங்கள் இந்த உலக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும் நீங்கள் ஜனக மகாராஜாவை போல சிறந்த பிரம்மஞானி. இது ஒரு சிறு விண்ணப்பம். நீங்கள் அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்"** என்றனர். அதற்கு ஸ்ரீ பாப்பண்ணார்யா **"உங்கள் வேண்டுகோள் என்னவென்றே தெரியாமல் நான் எப்படி சம்மதிப்பது? தயக்கம் இல்லாமல் விஷயத்தை கூறுங்கள். அவை தர்மத்தின் கோட்பாடுகளை ஒத்திருந்தால் கண்டிப்பாக சம்மதிக்கிறேன்"** என்றார். பின்னர் சிரேஷ்டி **"நான் காயத்ரி பசுவின் வம்சத்தை சேர்ந்த ஒரு நல்ல அம்சமுள்ள பசுவை ஸ்ரீ வர்மாவிடமிருந்து வாங்கியிருக்கிறேன். அதை எங்கள் குடும்பப் புரோகிதரான ஸ்ரீ அப்பலராஜ சர்மாவுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அந்த பசுவின் பால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் சேவைக்கு உபாயகப்படுத்தப்பட்டால் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். எங்களுக்கு இதை விட வேறு எந்த விருப்பமும் இல்லை"** என்றார்.

ஸ்ரீ சிரேஷ்டியின் வார்த்தைகளை கேட்ட ஸ்ரீ பாப்பண்ணார்யா "சரி,சரி, அந்தத் தாய்ப்பசுவை எங்கள் வீட்டிற்கு அனுப்பி வையுங்கள். ஸ்ரீ அப்பலராஜாவிற்கு அதைக் கொடுக்க முயற்சி செய்கிறேன். ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் வீட்டில் அந்த புனிதம் வாய்ந்த பசு இருந்தால் குறிப்பாக தானம் அளிப்பவரும் பெறுபவரும் நன்மை பெறுவர்" என்றார்.

அந்தத் தாய்ப்பசு ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ஸ்ரீ அப்பலராஜ சர்மா அவளைத் தானமாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இமயமலையில் சடோபாதா என்கிற இடம் இருக்கிறது. தர்மராஜா மற்றும் சிலர் அந்த இடத்தில் இருந்துதான் சொர்க்கத்திற்கு ஏறினர். ஸ்ரீ சச்சிதானந்த அவதூதர் என்ற பெயர் கொண்ட ஒரு சிறந்த மனிதர் அங்கு வாழ்ந்து வந்தார். அவருக்கு சில நூற்றாண்டுகள் வயது இருக்கும். அவர் ஸ்ரீ விஸ்வேஸ்வர பிரபுவின் சீடர். அவர் கைவல்ய ஸ்ருங்கத்தில் வசித்து வந்தார். ஸ்ரீ விஸ்வேஸ்வரப் பிரபு, ஸ்ரீ சச்சிதானந்த அவதூதரிடம்தான் பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளதாகவும் தன் குழந்தைப்பருவ உருவத்தைக் கண்டு திருவருள் புண்ணியம் பெறுமாறு கூறினார். ஸ்ரீ அவதூதர் பீதிகாபுரத்திற்கு வருகை புரிந்தார். ஸ்ரீ பாப்பண்ணார்யா அவரை அன்புடன் வரவேற்றார். அவர் ஸ்ரீ தத்தரை ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் கண்டு அவர் பிறவியின் முழுமை பெற்றார். பால் பற்றாக்குறை பிரச்சனை அவர் முன் கொண்டுசெல்லப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் உண்மையிலேயே ஸ்ரீ தத்தர் என்பதாலும் அவருக்கு பால் வழங்கும் இந்த உன்னத சேவையை இழந்துவிடக் கூடாது என்பதால் அப்பலராஜ சர்மா பசு தானத்தை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ அவதூதர் அழுத்தமாக கூறினார். பிராமண சங்கம், ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் ஸ்ரீ தத்தர் என்பதற்கு ஆதாரங்கள் கேட்டனர். ஸ்ரீ அவதூதர் பஞ்சபூதங்களின் வாயிலாக ஆதாரம் அளிப்பதாக கூறினார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் ஸ்ரீ தத்தாத்ரேயர் என்று பஞ்சபூதங்கள் ஆதாரம் அளித்தல்

அவதூதர் ஒரு யாகத்தைத் துவங்கினார். பூமிமாதா ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் ஸ்ரீ தத்தர் என்றும் அப்பலராஜ சர்மா பசு தானத்தை ஏற்றுக்கொள்வது தவறு இல்லை என்றும் ஆதாரம் அளித்தாள். மேலும் மாமனார் தன் அன்பினால் கொடுப்பது தானத்தில் சேராது. ஆகவே ஸ்ரீ சத்யரிஷீஸ்வரர் ஸ்ரீ சிரேஷ்டியிடமிருந்து தானமாகப் பெற்றுக் கொண்டு தன் மருமகனுக்கு பரிசாக அளிக்கலாம். இதுதான் பூமித்தாய் அளித்த அறிக்கை. யக்ஞம் தொடங்கிய பின் யக்ஞம் நடந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் மழை பெய்தது. இது இரண்டாவது ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அக்னிதேவன் ஆகுதிகளை ஏற்றுக்கொண்டு பசு தானம் பெற்றுக் கொள்வது தவறில்லை என்று விளக்கினார். இது மூன்றாவது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சடங்கு நடந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் காற்று பயங்கரமான வேகத்தில் வீசியது. இதுவே நான்காவது ஆதாரம். வானத்தில் இருந்து ஒலித்த தெய்வீகக் குரல் ஸ்ரீ ஸ்ரீபாதர் உண்மையில் ஸ்ரீ தத்தர்தான் என்று அறிவித்தது. பஞ்சபூதங்களின் சாட்சியங்களை ஏற்றுக்கொண்டு அப்பலராஜ சர்மா

பசு தானத்தை ஏற்றுக்கொண்டார். பசுவை தானம் கொடுத்த பலன்கள் ஸ்ரீ சிரேஷ்டிக்கு சேர்ந்தது. ஆகவே பசுவின் விலையை ஸ்ரீ நரசிம்மவர்மா அப்பலராஜாவிற்கு கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு ஸ்ரீ அவதூதரின் முன்னிலையில் அபூர்வமான புண்ணிய பலன்கள் ஸ்ரீ சிரேஷ்டிக்கும் ஸ்ரீ வத்சவாயீ வர்மாவிற்கும் கிடைத்தது.

## சுமதி மற்றும் அப்பலராஜாவின் முந்தய பிறவி

ஸ்ரீ அவதூதர், "பீதிகாபுர மக்களே!! எந்த மாதிரியான முட்டாள்கள் நீங்கள்? உங்கள் முன் நடமாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதரை ஸ்ரீ தத்தர் என்று உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. சுயம்பு தத்தரை வழிபடுவது பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. கற்சிலையாக இருந்த கடவுள் இப்போது நடமாடிக் கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்ற உடலுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். அவரை அவதாரம் எடுக்க வேண்டிக்கொண்டுவிட்டு பின்னர் அவர் அவதரித்தவுடன் புறக்கணிப்பது பாவமான செயல். பலநூறு வயதுடைய நான் இங்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனத்திற்காகத்தான் வந்துள்ளேன். தத்தபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்ணுதத்தாவும் சுசீலாவும்தான் இப்போது அப்பலராஜ சர்மாவாகவும் சுமதி மஹாராணியுமாக பிரிந்துள்ளனர்.

கிருத யுகத்தில் லாபாத என்கிற பெயருடைய மகரிஷி ஒருவர் இருந்தார். அவர் ஸ்ரீ தத்தரின் சிறப்பான அருளை பெறும் தகுதி அடைந்தார். அவர் ஸ்ரீ தத்தரை குழந்தையாகப் பார்க்க விரும்புவதாகவும் அந்த பரப்பிரம்ம அவதாரத்தை தந்தைப் பாசத்துடன் வளர்க்க விரும்புவதாகவும் வேண்டிக்கொண்டார். அந்த விருப்பம் தனது கிருஷ்ண அவதாரத்தில் நிறைவேறும் என்று ஸ்ரீ தத்தர் கூறினார். லாபாத மகரிஷி நந்தனாக பிறந்தார். அவர் மனைவி யசோதையாக பிறந்தாள். நந்தன் மற்றும் யசோதை சிவபெருமானை சனி பிரதோஷங்களில் வழிபட்ட புண்ணியம் பெற்றதால் ஸ்ரீ கிருஷ்ணரை தன் குழந்தையாக வளர்த்தனர். யாதவ குலத்தில் ஒரு சாபம் ஏற்பட்டு அனைத்து யாதவர்களும் அழிந்துவிட்டனர். அம்பிகை வாசவி கன்யகாபரமேஸ்வரியாக பிறந்தப் போது நந்தன் பாஸ்கராச்சார்யாவாக ராமடகுல என்கிற குலப்பெயருடன் பிறந்தார். ஆரிய வைசியர்கள் யாக குண்டத்தில் இறங்கி தங்களை அழித்துக் கொண்ட போது ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருவராவது மீதம் இருந்தனர், ஆனால் லாபாத மஹரிஷியின் பரம்பரையில் மட்டும் ஒருவரும் மீதம் இல்லை. அதனால் ஆரியவைஸ்யர்கள் கண்டிப்பாக லாபாத மகரிஷியை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆரிய வைசியர்களின் ஆகுதி முடிந்தவுடன் ஸ்ரீ பாஸ்கராச்சார்யா அவர் வீட்டின் தியான அறையில் தியானத்தில் ஆழ்ந்தார்.

ஸ்ரீ பாஸ்கராச்சார்யாவின் மூதாதையர்களுள் ஒருவர் ஸ்ரீ ராமரின் பக்தர். ஸ்ரீ ராமர் அந்த பக்தருக்கு ஒரு முறை காட்சி கொடுத்தார். அச்சமயத்தில் அவர் தன் பெற்றோர்களுக்கு சேவை செய்யவதற்க்காகச் செல்லவேண்டி இருந்தது. அதனால்

அவர் ஸ்ரீ ராமரை தான் வரும் வரை காத்திருக்க சொன்னார். அவர்கள் வீட்டில் ஸ்ரீ ராமரின் பாதுகைகள் தெளிவாக பதிக்கப்பட்டது. அக்னிப்ரவேசம் முடிந்த பின் அன்னை வாசவி அந்த பாதுகைகளில் நின்றுகொண்டு பாஸ்கராச்சார்யாவிற்கு காட்சி அளித்தாள். பாஸ்கராச்சார்யா தாங்க முடியாமல் அழுதார். சில நொடிகளில் அதே இடத்தில் ஒரு குழந்தை காணப்பட்டது. அந்த குழந்தை வேறெவரும் அல்ல ஸ்ரீ தத்தர்தான். கடவுள் அவரிடம் "தாத்தா, நானும் என் சகோதரி வாசவியும் உங்கள் கண் முன் எப்போதும் குழந்தைகளாக வலம் வருவோம். நாங்கள் உங்களை விட்டு எப்படி இருப்போம்? நீங்கள் இந்த பூமியில் லாபாத மகரிஷியாக பிறந்தீர்கள். உங்கள் பரம்பரையில் எவரும் உயிர்ப் பிழைக்கவில்லை. மிகப்பெரும் புண்ணியத்தி னாலோ அல்லது மிகப்பெரும் பாவத்தினாலோ இது போன்று நடப்பது பொதுவான விஷயம்தான். நீங்கள் நந்த மஹராஜாவாகப் பிறந்த போது சிறந்த புண்ணியங்கள் பெற்றீர்கள். அந்த வம்சத்தில் யாரும் பிறக்கத் தகுதியில்லை என்ற போது அந்த வம்சம் நின்றுவிடும். நீங்கள் முன்பு பெற்ற புண்ணியங்களினால் இப்போது பாஸ்கராச்சார்யாவாக பிறந்து வாசவாம்பிகா அவதாரத்தை பார்த்துள்ளீர்கள். லாபாத பரம்பரையில் யாரும் உயிர் பிழைக்கவில்லை என்பதால் உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் கலங்குகிறீர்கள்.

நான் உங்களுக்கு என்னுடைய உத்தரவாதத்தை அளிக்கிறேன். நீங்கள் பிறந்த ராமடகுல வம்சம் அழியாது. அது கலியுகத்தின் முடிவு வரை தழைத்திருக்கும். நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரிக்கும் போது நீங்கள் என் தாத்தாவாக பிறக்க வேண்டும். அச்சமயத்தில் நீங்கள் மல்லாடி என்கிற குடும்பப்பெயருடன் பாப்பண்ணவதானுலு என்று அறியப்படுவீர்கள். மல்லாடி வம்சம் கூட கலியுகம் முடியும் வரை அழியாது.

## சமர்த்த ராமதாஸ்,சிவாஜி மகராஜ் மற்றும் ஸ்ரீதர ஸ்வாமிகளின் முந்தய பிறப்பு

என் செல்வமே முன்பு பிருஹத்திஸிலநகரத்தில் அளிக்கப்பட்ட உத்திரவாதங் களின் படி இந்த நிகழ்ச்சிகள் பீதிகாபுரத்தில் நடைபெறுகின்றன. ஸ்ரீ ஸ்ரீபாதரின் மூத்த சகோதரர் குருட்டுத்தன்மையில் இருந்து விடுபட்டு சிறந்த பாண்டிதராவார். அந்த உடலைப் பிரிந்த பின் அவர் ஹிரண்ய லோகத்தில் சில காலம் தங்குவார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பத்தினால் மகாராஷ்டிரத்தில் சஜ்ஜன்கட் பகுதியில் சமர்த்த ராமதாசராக பிறப்பார். பசு தானத்தினால் புண்ணியம் பெற்ற நரசிம்ம வர்மா இந்த உடலைப் பிரிந்த பின் சிவாஜி மகாராஜ் என்ற பெயரில் சத்ரபதியாகி ஹிந்து சாம்ராஜ்யத்தை நிறுவ முயலுவார். அவர் ஸ்ரீசைலத்திற்குச் சென்று ஆசி பெறுவார். அவர் சமர்த்த ராமதாஸின் பரமசீடராக புகழடைவார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் இரண்டாவது மூத்த சகோதரரின் ஊனத் தன்மை கூட விடுவிக்கப்பட்டு சிறந்த பண்டிதராவார். இந்த உடலை பிரிந்த பின் ஹிரண்ய லோகத்தில் சில காலம் தங்கி விட்டு ஸ்ரீதரா என்கிற அவதூதராக மீண்டும் பிறப்பார்.

## தெய்வீக சக்தியை புரிந்துகொள்ளவும் மீறவும் முடியாது

நான் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை. நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் உண்மை உண்மையாகத்தான் நிலைத்திருக்கும். இந்த உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் சூரியன் இல்லை என்று வாக்குவாதம் செய்தால் சூரியன் மறைந்து விடாது. தெய்வீகம் விசித்திரமானது. பணக்கார மக்களுக்கும் அனைத்து செல்வங்களையும் அனுபவிக்கும் சிறந்த அரசர்களுக்கும் கூட பிரச்சனைகள் அளிக்கும் சக்தி கடவுளுக்கு உண்டு. அதேபோல் அந்த பிரச்னைகளை அகற்றும் சக்தியும் கடவுளுக்கு உண்டு.

வருங்காலத்தில் கோகனாடா (காக்கிநாடா), வ்யாசபுர அக்ராஹாரம், சியாமளாம்பபுரம் (சாமல்கோட்) மற்றும் ஸ்ரீ பீதிகாபுரம் ஒன்றிணைந்து பெரிய நகரமாக வளர்ச்சி பெறும். ஒரு நாள் இல்லை ஒருநாள், ஒரு பிறவியில் அல்லது வேறு பிறவியிலோ உலகத்தில் உள்ள எல்லா இனம் மற்றும் அனைத்து பாரம்பரியத்தை சேர்ந்த அனைத்து மக்களும் பீதிகாபுரம் வந்து ஸ்ரீ ஸ்வாமியை தரிசனம் செய்வர். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஸ்ரீ ஸ்ரீபாதரின் வாழ்க்கை வரலாறான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆசி பெரும். ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பப்படி ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட அந்தத் தொகுதி கண்ணுக்கு புலப்படாத வடிவத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்த இடத்தில் பூமிக்கடியில் பல்லாயிரம் அடிகளுக்கு கீழ் புதைக்கப்பட்டிருக்கும். அவர் பிறந்த இடத்தில் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோவில் கட்டப்படும். வசதியான வியாபாரியான ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பசு தானம் அளித்ததால் மிகுந்த தகுதி வாய்ந்தவர். அவர் வாழ்க்கை புகழ்பெற்ற ஒன்றாக மாறியது. அவர்கள் குடும்பத்தில் செல்வத்திற்கு குறையே இருக்காது. அவர் சில காலம் ஹிரண்ய லோகத்தில் தங்கியபின் மகாராஷ்டிரத்தில் ஒரு வளமான வைசிய குடும்பத்தில் பிறந்து ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தையும் பார்ப்பார்.

என் அருமை சங்கர் பட், பசு தானம் அளித்த இந்த பகுதி மிகவும் புனிதம் வாய்ந்தது. நீங்கள் குருவபுரத்திற்கு புறப்படலாம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உங்களை எப்போதும் காப்பாற்றுவாராக!

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 10

## ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியின் உருவங்கள் பற்றிய விளக்கம்

நான் திருமலதாஸிடம் விடைபெற்றுக்கொண்டு குருவபுரத்தை நோக்கி என் பயணத்தை தொடர்ந்தேன். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகளை நினைவு படுத்திக் கொண்ட போது என் உடல் முழுவதும் மயிர்க்கூச்செரிந்தது. வழியில் சற்று தூரத்தில் ஒரு அத்தி மரத்தை பார்த்தேன். அது மதிய நேரம். பசி வயிற்றை கிள்ளியது. அருகில் உள்ள ஏதாவது பிராமண கிராமத்தில் பிக்ஷை எடுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பயணக் களைப்பு தீர புனித அத்தி மரத்தின் நிழலில் இளைப்பாறலாம் என்று நினைத்தேன். அங்கு வேறு ஒருவர் அத்தி மர நிழலில் இளைப்பாறிக் கொண்டிருப்பதை கவனித்தேன். நான் சற்று அருகில் சென்றதும் அந்த மனிதர் பூணூல் அணிந்திருப்பதை பார்க்க முடிந்தது.

நான் அத்தி மரத்திற்கு அருகில் வந்தேன். அந்த புதியவர் என்னை அன்புடன் வரவேற்று அமரச்சொன்னார். அவர் கண்களில் இருந்து இரக்கம் பொங்கி வழிந்தது. அவருக்கு முன்னால் ஒரு கூடை இருந்தது. அதில் உணவேதும் இல்லை. அதில் ஒரு செப்புப் பாத்திரம் மட்டும்தான் இருந்தது. அவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை அடிக்கடி ஜபித்து கொண்டிருந்தார். நான் ஆர்வத்துடன் அவரிடம் **“ஐயா, நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக சரணங்களில் சரணடைந்தவரா? நீங்கள் அந்த புனிதமான மனிதரை பார்த்திருக்கிறீர்களா?”** என்று கேட்டேன்.

அவர்: “நான் ஒரு உன்னதமான வைசிய குடும்பத்தில் பிறந்தேன். என் பெயர் சுப்பைய சிரேஷ்டி. நான் என் பெற்றோர்களை குழந்தைப்பருவத்தில் இழந்தவன். எங்கள் வீட்டில் பணம் அபரிமிதமாக குவிந்திருந்தது. நான் பல தூர தேசங்களுக்கு சென்று பல விற்பனைகளும் கொள்முதல்களும் செய்து வணிகம் நடத்தி வந்தேன். நான் அடிக்கடி காஞ்சிபுரத்திற்கு செல்வேன். அந்த ஊரில் சிந்தாமணி என்கிற ஒரு தாசியுடன் நெருக்கம் ஏற்பட்டது. அவளுக்கு நான் தாராளமாகப் பணம் செலவழித்தேன். கேரளா பாலக்காட்டை சேர்ந்த பில்வாமங்களா என்கிற பிராமணனும் வியாபார நிமித்தமாக காஞ்சிபுரத்திற்கு வருவான். அவன் அரபுகளிடம் வைரங்கள் மற்றும் குதிரைகளை பெற்றுக்கொண்டு வாசனைப் பொருட்களை பண்டமாற்று வியாபாரம் செய்தான். சில சமயம் நாங்கள் இருவரும் சேர்ந்து கொண்டு வியாபாரம் செய்வோம். உயர்ந்த ஜாதி குதிரைகளை அரசர்களும் மன்னர்களும் எங்களிடமிருந்து வாங்கிக்கொள்வார்கள். துரதிர்ஷ்டத்தினால் தாசியுடன் ஏற்பட்ட தொடர்பினால் நாங்கள் இருவரும் நல்லொழுக்கம் தவறி விட்டோம்.



சில காலம் அரபுகளோடு நாங்கள் செய்த விற்றல்-வாங்கல் ஏறுமுகமாகச் சென்றது. பின்னர் எங்களிடமிருந்து அதிக அளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு நல்ல குதிரைகளை கொடுப்பதற்கு பதிலாக தரம் குறைந்த குதிரைகளை கொடுத்துவிட்டனர். அந்த வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. வியாபார நஷ்டத்தினால் சொத்துக்களை இழந்தோம். என் மனைவி மனவேதனையில் இறந்துபோனாள். எனக்கு புத்தி சுவாதீனம் இல்லாத ஒரு மகன் இருந்தான். அவனும் துர்மரணம் அடைந்தான்.

என் மகனே, மிகவும் புனிதம் வாய்ந்த தீர்த்தங்களில் (தீர்த்தம் என்றால் தெய்வம் அல்லது ஒரு துறவியினால் புனிதமாக்கப்பட்ட இடம்) ஒன்றான பாதகயா தீர்த்தத்துடன் இருக்கும் ஸ்ரீ பீதிகாபுரம்தான் என் சொந்த ஊர். என்னுடைய அறியாமையால் நான் பிராமணர்களையும் தெய்வங்களையும் அவமதித்து கொண்டிருந்தேன். நான் கடனை வசூலிக்க மிகவும் கொடுமையான முறைகளை கையாள்வது வழக்கம். ஒரு முறை ஸ்ரீ அப்பலராஜசர்மாவின் வீட்டிற்கு அயினவில்லியிலிருந்து உறவினர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களை தங்க வைப்பதற்கும் மற்ற செலவுகளுக்கும் ஸ்ரீ அப்பலராஜ சர்மாவிடம் போதுமான அளவு பணம் இல்லை. ஸ்ரீ சர்மா ஸ்ரீ சிரேஷ்டியை அணுகியிருந்தால் அனைத்து பொருட்களையும் தன் குடும்ப புரோகிதருக்கு இலவசமாகவே அளித்திருப்பார். அது தானமாக கருதப்படும் என்பதால் ஸ்ரீ அப்பலராஜ சர்மா எந்த தானத்தையும் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் என் கடையில் இருந்து 1 வராகன் கடனுக்குப் பொருட்கள் எடுத்துச் சென்றார்.

உறவினர்கள் சென்ற பின்னர் என் கடனை செலுத்துமாறு நான் ராஜசர்மாவை துன்புறுத்தினேன். அந்த சமயத்தில் அவரிடம் பணம் இல்லையென்றும் பணம் கிடைத்தவுடன் கண்டிப்பாகக் கடனைத் திருப்பி அளிப்பதாக ராஜசர்மா பதிலளித்தார். நான் வட்டி வசூலிப்பதில் கில்லாடி. காலம் ஓடிக்கொண்டிருந்தது. நான் வட்டிக்கு வட்டி போட்டு பொய் கணக்கு தயார் செய்தேன். நிலுவைத் தொகையை தீர்க்க ராஜசர்மா பத்து வராகன் செலுத்த வேண்டும் என்று அழுத்தமாகக் கூறினேன். அந்த அளவு பணம் செலுத்த வேண்டும் என்றால் ராஜசர்மா அவர் வீட்டை விற்க வேண்டும். அப்போது இருந்த விலை நிலவரப்படி நான் அந்த வீட்டை எடுத்துக்கொண்டு ஒன்று அல்லது இரண்டு வராகன் விற்பனை விலையாக கொடுக்கவேண்டும். நான் இதை அனைவரிடமும் கூறினேன். ராஜசர்மாவின் வீட்டைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் தீர்மானம். என்னுடைய தீய எண்ணத்தை கவனித்த பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி, **"நீ ஒரு பொல்லாதவன், வாய்க்கு வந்தபடி உளறிக் கொண்டிருக்கிறாய், பணத்திமிரில் கண்மண் தெரியாமல் இருக்கிறாய்! எங்கள் மரியாதைக்குரிய குடும்பப் புரோகிதரை அவமதிப்பது எங்களை அகௌரவப்படுத்துவதற்கு சமம். நீ உன் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாவாய். நெருப்பை விட மிகப் புனிதமான ஸ்ரீ ராஜசர்மாவை துன்புறுத்தினால் ரௌரவத்திலும் மற்ற நரகங்களிலும் வீழ்வாய்"** என்றார்.

ஒரு முறை ஶ்ரீ ஶ்ரீபாதர் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் வீட்டில் இருந்தார். நான் கேலியாக சிரேஷ்டியிடம் "**ராஜசர்மாவினால் என் கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை என்றால் அவர் மகன்களில் யாராவது ஒருவர் என் கடையில் வேலை செய்ய வேண்டும்; அல்லது அவரே வந்து வேலை செய்ய வேண்டும். ஒரு மகன் குருடு, இரண்டாவது மகன் நொண்டி மூன்றாவது மகன் ஶ்ரீ ஶ்ரீபாதருக்கு மூன்று வயது. பின்னர் என் கடன் எப்படி அடையும்?**" என்றேன். பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மிகுந்த வருத்தமுற்றார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் ஊற்றியது. ஶ்ரீ ஶ்ரீபாதர் தன் தெய்வீக கரங்களால் அந்த கண்ணீரை துடைத்தார். அவர் "**தாத்தா, நான் இருக்கும் போது என்ன பயம்? ஹிரண்யாக்ஷனையும் ஹிரண்யகசிபுவையும் கொன்றது நான்தான். சுப்பையாவின் கடனை திருப்புவது எனக்கு கடினமா என்ன? ஶ்ரீ ஶ்ரீபாதர் என்னை நோக்கிப் பார்த்து "நான் உங்கள் கடனை தீர்க்கிறேன். வாருங்கள். உங்கள் கடைக்கு போகலாம். நான் உங்கள் கடையில் வேலை செய்து உங்கள் கடன் பாக்கியை முழுவதுமாக நீக்குகிறேன். கடன் முழுவதும் முடிந்தவுடன் லக்ஷ்மி தேவி உன் வீட்டில் வாசம் செய்ய மாட்டாள். கவனமாக யோசித்துக் கொள்ளுங்கள்**" என்றார்.

கண்மூடித்தனமான இறுமாப்பினாலும் கொடூர குணத்தினாலும் அவர் முன்மொழிந்ததற்கு சம்மதித்தேன். பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஶ்ரீ ஶ்ரீபாதரை தன் தோளில் தூக்கிக்கொண்டு என் கடைக்கு அழைத்து வந்து "**சுப்பையா, ஶ்ரீ ஶ்ரீபாதருக்கு பதிலாக நான் உன் கடையில் வேலை செய்கிறேன். அதற்கு சம்மதமா?**" என்று கேட்டார். நான் சம்மதித்தேன். இதற்கிடையில் ஜடா முடியுடன் இருந்த சந்நியாசி ஒருவர் என்னிடம் வந்து சுப்பைய சிரேஷ்டியின் கடை இருக்கும் இடத்தைப் பற்றி கேட்டார். அவரிடம் நான்தான் சுப்பைய சிரேஷ்டி என்றும் நாம் இருவரும் சந்தித்த அந்த கடை என்னுடையதுதான் என்றேன். பின்னர் அவர் "**ஐயா, எனக்கு அவசரமாக ஒரு செப்புப் பாத்திரம் வேண்டும். விலை எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை. நீங்கள் அதை தயவு செய்து கொடுத்தால் எடுத்துக்கொண்டு உடனடியாக சென்று விடுவேன்**" என்றார். என்னிடம் முப்பத்திரண்டு செப்பு பாத்திரங்கள் இருந்தன ஆனால் ஒன்றுதான் இருப்பதாக கூறி பத்து வராகன் அளித்தால் நான் அதைத் தருவதாக கூறினேன். அவர் உடனடியாக சம்மதித்து, பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் மடியில் அமர்ந்திருக்கும் ஶ்ரீ ஶ்ரீபாதரின் திருக்கரத்தால் அந்த பாத்திரத்தை அளிக்க வேண்டும் என்கிற ஒரு நிபந்தனை விடுத்தார். ஶ்ரீ ஶ்ரீபாதர் அதற்கு சம்மதித்தார். சந்நியாசி ஶ்ரீ ஶ்ரீபாதரின் கையால் செப்புப் பாத்திரத்தை பெற்றுக்கொண்டார். ஶ்ரீ ஶ்ரீபாதர் சிரித்தார். ஜடாமுடியுடன் இருந்த சந்நியாசியும் சிரித்தார். ஶ்ரீ ஶ்ரீபாதர் அந்த சந்நியாசியிடம் "**உன் விருப்பம் நிறைவேறியது. இனி உன் வீட்டில் லட்சுமிதேவி நிரந்தரமாக தங்குவாள். இந்த சந்நியாசி வேடத்தை கலைத்து விட்டு வீட்டுக்கு செல். உன் மனைவியும் குழந்தைகளும் உனக்காக காத்திருக்கின்றனர்**" என்றார். ஜடாமுடியுடன் இருந்த சந்நியாசி மிகுந்த சந்தோஷத்துடன் சென்றார். நான் வெங்கடப்பைய சிரேஷ்டியையும் அப்பலராஜ சர்மாவையும் அவமானப்படுத்த விரும்பினேன். அன்று என் விருப்பம் நிறைவேறியது.



நான் பெருமிதத்துடன் "**இன்று இந்த செப்புப் பாத்திர வியாபாரத்தில் எனக்கு நிறைய பணம் கிடைத்தது. எனக்கு அப்பலராஜ சர்மா அளிக்கவேண்டிய பத்து வராகன் கடன் அடைக்கப்பட்டு விட்டது என்று நினைக்கிறேன். ஆகவே இந்த நிமிடத்தில் இருந்து ஸ்ரீ ஸ்ரீபாதர் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப் படுகிறார்**" என்று கூறினேன். எனினும் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி அந்த வாக்குமூலத்தை காயத்ரி தேவி சாட்சியாக சத்தியம் செய்து தரும்படி கூறினார். துரதிர்ஷ்டசாலியான நான் சத்தியம் செய்தேன்.

என் அருமை சங்கர் பட்! **அவதூதர்கள் மற்றும் சித்த புருஷர்களின் அருள் பெற்ற சிறிய அளவு செப்பு கிடைக்க பெற்றவர்கள் அபரிமிதமான செல்வம் பெறுவர்.** அந்த சந்நியாசி எவ்வளவு ஒரு அதிர்ஷ்டசாலி! அவர் மிகுந்த கருணையான முறையில் ஸ்ரீ தத்தரின் அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் இருந்தே செப்புப் பாத்திரத்தை பெற்றுக்கொண்டார். நான் மிகுந்த துரதிர்ஷ்டசாலி. அந்த நொடியில் இருந்து என் உடலுக்குள், மனதில், ஆத்மாவில் ஜொலித்து கொண்டிருந்த மஹாலக்ஷ்மியின் ஒளி குறையத் தொடங்கியது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்கள் கற்பனை செய்யமுடியாததும் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அளவுக்கும் இருக்கும். அவரின் முன்னிலையில் கூறும் ஒவ்வொன்றும் உண்மையாகிவிடும். என்னிடம் 32 செப்புப்பாத்திரங்கள் இருந்தும் ஒன்றுதான் உள்ளது என்று பொய் உரைத்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த பொய்யை உண்மை ஆக்கிவிட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரும் வெங்கடப்பைய சிரேஷ்டியும் கிளம்பியவுடன் நான் கடையில் பார்த்தபோது 31 பாத்திரங்களுக்கு பதில் ஒரே ஒரு பாத்திரம் மட்டுமே இருந்தது. பத்து வராகன் பெறுவதற்காக நான் பொய்க் கணக்கு காண்பித்தேன், ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த லீலையின் மூலம் ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் சில சந்தேகங்களை நீக்கிவிட்டார்.

விடியற்காலையும் அஸ்தமன நேரமும் மிகவும் புனிதமான நேரம். இந்நேரங்களில் அக்னி தேவரை வழிபட்டால் அனுகூலமான பலன்களைப் பெறலாம். விடியற்காலையில் சூரியக் கடவுள் சக்தியை வெளியிடத் தயாராக இருப்பார். மாலை நேரத்தில் இந்த சக்திகள் அனைத்தும் பின்வாங்கி மீண்டும் சூரியக்கடவுளை சென்றடைந்து விடும்" என்றார்.

பின்னர் நான் "ஐயா! தானங்கள் பெற்றுக்கொள்வதால் புண்ணியங்கள் குறையும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் தானங்களை தவிர்ப்பது கூட பாவம்

என்று உங்களிடமிருந்துதான் கேள்விப்படுகிறேன். என்னால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்லாமல் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம் என்று கூறப்பட்டாலும், பல வழிகளில் அவர் ஸ்ரீ நரசிம்மர் மற்றும் சிவனின் அவதாரம் என்று கூறப்படுகிறதே!! சிவனிடம் அன்னை அனுசுயாவின் குணங்கள் இருப்பதாக கூறப்படுவதும் புரியவில்லை. இதை சற்று விளக்குங்களேன்" என்று கேட்டுக்கொண்டேன்.

பின்னர் சுப்பைய சிரேஷ்டி "நீ பசியாக இருக்கிறாய். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன் பக்தர்களிடம் அவர்கள் வீட்டிற்கு யார் வந்தாலும் ஜாதி மதம் பாகுபாடு பார்க்காமல் உணவு கேட்டு வருபவர்களுக்கு நல்ல உணவும் தண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று எப்போதும் அறிவுறுத்துவார். நீங்கள் முதலில் சாப்பிடுங்கள். அருகில் ஒரு குளம் இருக்கிறது. அதில் உங்களை சுத்தப்படுத்திக் கொண்டு இங்கு வாருங்கள். இதற்கிடையில் நான் அங்கு இருக்கும் வாழை மரத்திலிருந்து இரண்டு வாழை இலைகளை பறித்து வருகிறேன். பீர்க்கங்காய் கூட்டுடன் உணவு உள்ளது. அது அமிர்தம் போன்று சுவையாக இருக்கும் " என்று சுப்பையா சிரேஷ்டி கூறினார்.

எனக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. அந்த கூடையில் செப்புப் பாத்திரத்தை தவிர ஒன்றும் இல்லை. உணவுப்பொருட்களோ,பழங்களோ காய்கறியோ எதுவுமே இல்லை. அனைத்திற்கும் மேலாக பீர்க்கங்காய் பருப்பு சேர்த்து உணவு உள்ளது என்கிறாரே. எதைப்பற்றியும் யோசிக்காமல் கை கால்களை சுத்தப்படுத்திக்கொள்ள குளத்தை நோக்கி புறப்படலாம் என்று எண்ணினேன். சுப்பையா சிரேஷ்டி வாழை மரத்தை நோக்கிச் சென்றார்.

நான் என்னை சுத்தப்படுத்திக் கொண்டு வந்தேன். சுப்பையா இரண்டு வாழை இலைகளை கொண்டு வந்தார். அருகில் இருக்கும் பனை மரத்தில் இருந்து பனை இலைகளை எடுத்து கிண்ணங்கள் செய்திருந்தார். இந்த வினோதமான நிகழ்வுகளை நான் பார்த்தேன். அவர் சிறிது நேரம் கண்ணை மூடி தியானித்தார். பின்னர் காலியான செப்புப் பாத்திரத்தில் இருந்து தண்ணீரை இரண்டு பனை கிண்ணங்களில் ஊற்றினார். செப்புப் பாத்திரத்தில் இருந்து தண்ணீர் வந்தது ஒரு அதிசயம். பின் காலியான செப்பு பாத்திரத்தில் இருந்து கூட்டை பரிமாறினார். பின்னர் சாதத்தை பரிமாறினார். அந்த சுவையான உணவைப் பிரசாதமாக எண்ணி நாங்கள் இருவரும் வயிறார உண்டோம். நாங்கள் உணவருந்தி முடித்தவுடன் அந்த செப்புப் பாத்திரம் முன்பு இருந்தது போலவே காலியாக இருந்தது.

## சனி பிரதோஷ வேளைகளில் சிவனை வழிபடுவதால் கிடைக்கும் பலன்கள்- ஸ்ரீ ஸ்ரீபாதர் அனைத்து தெய்வங்களின் உருவகம்

சனிபகவான் கர்மகாரகன். மொத்தம் இரண்டு நிழல் கிரகங்கள் உள்ளன அவை ராகு மற்றும் கேது. ராகு சனியை போல பலனை அளிக்கும். கேது செவ்வாயைப் போல பலன் அளிக்கும். கர்மகாரகனான சனியின் மகன் சூரியன்தான் நம் அனைத்து கர்மாக்களின் சாட்சி. ஆகவே சனிக்கிழமை மாலை வேளை மிகவும் சக்திவாய்ந்தது.

சதுர்த்தியும் திரயோதசியும் ராகுவுக்கு மிகவும் உகந்த திதிகள். எவர் ஒருவர் சனித் திரயோதசி அன்று மாலை சந்தியா வேளையில் சிவபெருமானை வழிபட்டாலும் தன் பூர்வ ஜென்மங்களில் செய்த கொடூரமான பாவங்களிலிருந்து விடுபடுவர்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் செவ்வாய் கிரகத்தின் ஆதிக்கத்தில் உள்ள சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். ஆகவே சித்திரை நட்சத்திரத்தன்று ஸ்ரீ ஸ்ரீபாதரை வழிபட்டால் அனைத்து கிரக தோஷத்திலிருந்தும் விடுபடலாம். சண்டைகள், விபத்துக்கள், ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளால் ஏற்படும் துர்மரணங்கள், துயரமான வாழ்க்கை மற்றும் கடன் ஆகியவை ஏற்பட செவ்வாய் கிரகம்தான் காரணம். **'ருண' என்றால் பாவம் 'அருண' என்றால் பாவமற்ற என்று பொருள். சித்திரை நட்சத்திரத்தன்றோ அல்லது செவ்வாய்கிழமையன்றோ ஸ்ரீ ஸ்ரீபாதர் சிவப்பு நிறத்தில் ஜொலிப்பார். அன்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அருணாச்சலேஸ்வரை போல் காணப்படுவார். ஆகவே செவ்வாய்க்கிழமையுடன் கூடிய சித்திரை நட்சத்திரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதரை வழிபடுவது மிகவும் புனிதம் வாய்ந்தது.**

சனிக்கிழமை மாலை வேளைகளில் நடைபெறும் சிவபூஜையில் வெங்கடப்பைய சிரேஷ்டி, நரசிம்ம வர்மா மற்றும் பாப்பண்ணார்யா கலந்து கொள்வர். அன்று அப்பலராஜசர்மாவும் கடுமையான விரதம் மேற்கொள்வது வழக்கம். அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி சுமதி மஹாராணி சிவனின் ஸ்வரூபமான அன்னை அனுசுயாவை தியானிப்பாள். இந்தத் தவங்களின் விளைவாகத்தான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் வருகை நடைபெற்றது. ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி, ஸ்ரீ நரசிம்ம வர்மா மற்றும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகளை எந்த சூழ்நிலைகளிலும் தானமாக எடுத்துக்கொள்ள கூடாது என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தந்தைக்கு மௌனமாக கற்பிக்க விரும்பினார். அதை மறுத்தால் பாவம் என்பதையும் தெளிவுபடுத்த விரும்பினார். சங்கர் பட்!! '**ஸ்ரீ ஸ்ரீபாதர் அனைத்து தெய்வங்களின் உருவகம். அவரின் தன்மையானது மிகவும் அற்புதமானதும் அனைத்து தெய்வ உருவங்களின் சக்தியை மீறியதாகும். அவரைப் பார்த்து ஸ்பரிசித்து பேசியவர்கள் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள்**' என்றார்.

சுப்பையா சிரேஷ்டி விவரிக்க தொடங்கினார். "ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தந்தையை நூதனமான முறையில் கடனிலிருந்து விடுபடச் செய்த விஷயம் பீதிகாபுரம் முழுவதும் காட்டுத்தீ போல பரவியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் மூன்று வயது சிறுவன். அப்பலராஜ சர்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் இடைவிடாமல் ஊற்றியது. சுமதி மஹாராணி தன் செல்ல மகனை மார்போடு அணைத்துக் கொண்டு வெகு நேரம் சமாதி நிலையில் இருந்தாள். பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி, நரசிம்ம வர்மா மற்றும் ஸ்ரீ பாப்பண்ணார்யா ராஜசர்மாவின் வீட்டுக்கு வந்தனர். தந்தையை கடனிலிருந்து விடுவிப்பது ஒரு மகனின் கடமை என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார். என்னையும் ராஜசர்மாவின் வீட்டுக்கு அழைத்திருந்தனர். அங்கு கூடியிருந்த அனைத்து பெரியவர்களின் முன்னிலையிலும் ராஜசர்மாவின் கடன் முழுவதும் அடைக்கப்பட்டு விட்டதாக அறிவித்தேன். ராஜசர்மா அதை ஒத்துக் கொள்ளவில்லை. ஒரு சந்நியாசி 10 வராகன் கொடுத்து செப்பு பாத்திரம் வாங்கி சென்றதால் எப்படி

தன் கடன் தீரும் என்று அப்பலராஜசர்மா கேள்வி எழுப்பினார். இதற்குப் பின் சுவாரஸ்யமான விவாதம் நடைபெற்றது.

பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் "**உனக்கு சுருள் ஜடாமுடியுடன் வந்த சந்நியாசியை முன்பே தெரியுமா?**" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் "**இந்த சந்நியாசியை மட்டுமல்ல எனக்கு அனைத்து சந்நியாசிகளைப் பற்றியும் தெரியும்**" என்றார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் இயல்பு

**பாப்பண்ணார்யா:** நீ மூன்று வயது சிறுவன். உனது பேச்சு உன் வயதுக்கு மீறிய ஒன்றாக இருக்கிறது. நீ அனைத்தையும் அறிந்தவனா?

**ஸ்ரீ ஸ்ரீபாதர்:** நீங்கள் அனைவரும் எனக்கு மூன்று வயது என நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை எனக்கு பல லட்சம் வயதாகிறது. நான் அனைத்து படைப்புகளும் உருவாவதற்கு முன்பே இருக்கிறேன். பிரளயத்திற்கு (உலகம் அழிவது) பின்பும் இருப்பேன். இந்த உலகம் சிருஷ்டிக்க படும்போது நடக்கும் அனைத்து நடவடிக்கைகளின் போதும் இருப்பேன். நான் இல்லாமல் படைத்தல் காத்தல் அழித்தல் நடைபெறாது. நானே அனைத்து நிகழ்வுகளுக்கும் சாட்சி.

**பாப்பண்ணார்யா:** ஸ்ரீ ஸ்ரீபாதா!! ஒரு சிறு குழந்தை தான் நிலவில் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டால் நிலவில் இருப்பதாகிவிடாது. அதற்கு நேரடி அனுபவம் வேண்டும். பிரபஞ்சத்தின் அதிபதிக்கு மட்டுமே அனைத்தையும் அறிந்திருப்பது, சர்வ வல்லமையுடைமை, எங்கும் நிறைந்திருப்பது ஆகிய பண்புகள் இருக்கும்.

**ஸ்ரீ ஸ்ரீபாதர்:** அனைத்து இடத்திலும் எல்லா நேரத்திலும் இருக்கும் ஆதிமூலத்தின் இயல்பு நான். நேரத்தையும் இடத்தையும் பொறுத்து தேவைக்கு ஏற்றவாறு நான் என்னை வெளிக்காட்டிக் கொள்வேன். நான் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை என்றால் நான் அங்கு இல்லை என்று குறிப்பிட முடியாது. நான் அன்னமய கோசத்திலும், ப்ரணம்ய கோசத்திலும், மனோமய கோசத்திலும், விஞ்ஞான மயகோசத்திலும், ஆனந்தமய கோசத்திலும் திகழ்கிறேன் (உண்ணும் உணவிலும், உயிரிலும், மனதிலும், ஞானத்திலும், பேரானந்தத்திலும் உறைந்திருக்கிறேன்). என் இருப்பினால்தான் இவை அனைத்தும் தன் வேலைகளை ஒழுங்கு முறையில் செய்கின்றன. நான் ஒரு கோசத்தில் இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டால் நான் அந்த கோசத்தில் இருப்பதை உணர்வீர்கள். உங்களுக்கு நான் அந்த அனுபவத்தை அளிக்க வில்லை என்பதால் நான் மற்ற கோசங்களில் இல்லை என்று ஆகிவிடாது. நான் எல்லா நேரத்திலும் அனைத்து இடங்களிலும் நிறைந்திருப்பவன். அனைத்து அறிவும் ஞானமும் என் பாதத்தில் உள்ளது. அனைத்து படைப்புகளும் என் விருப்பத்தின் அடிப்படையில் உருவாகியுள்ளன. அப்படியானால் நான் சர்வ வல்லமை உடையவன் என்று கூறுவதில் என்ன ஆச்சரியம்?



**அப்பலராஜ சர்மா:** *குழந்தாய்!! நீ பிறந்ததிலிருந்தே எங்களுக்கு புதிராகத்தான் இருக்கிறாய். நீதான் ஸ்ரீ தத்தாத்ரேயர் என்று திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருக்கிறாய். நீ ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி என்கிற பெயரில் அடுத்த அவதாரமாக வருவேன் என்பதையும் மீண்டும் மீண்டும் அறிவித்துக் கொண்டிருக்கிறாய். மக்கள் காகம் போன்றவர்கள். உன் செயல்கள் அனைத்தையும் வைத்து நீ நடிப்பதாகவும், மனநிலை சரியில்லாதவன் என்றும் சூழ்ச்சியான தந்திரங்கள் செய்பவன் என்றும் கூறுகின்றனர். நாம் பிராமணர்கள். நமக்கு என்று உள்ள தர்மத்தின் படி நடந்து கொள்ள வேண்டும். அதை மீறிய ஒன்றாக நாங்கள் அவதாரம்,தெய்வத்தன்மை உடையவன் என்றெல்லாம் கூறினால் ஆணவமாக கருதப்படும்.*

**ஸ்ரீ ஸ்ரீபாதர்:** *அப்பா! நீங்கள் கூறுவதை நான் மறுக்கவில்லை ஆனால் நான் உண்மையைத்தான் பேச வேண்டும், அப்படித்தானே? என்னுடைய பால் பற்றாக்குறை பிரச்சனை வந்த போது மகிழ்ச்சியடைந்தேன். பஞ்சபூதங்களும் சாட்சியளித்தபின் நான் ஸ்ரீ தத்தர் இல்லை என்று உறுதியாக நான் கூறினால் நான் உண்மை அல்லாத ஒன்றை கூறும் குற்றவுணர்வு எனக்கு ஏற்படாதா? ஒருவர் சூரியனைப் பார்த்து இது சூரியன் இல்லை என்று கூறினால் அது வேறு ஒன்றாக ஆகிவிடுமா? இடமும் நேரமும் உண்மையைக் கட்டுப்படுத்தும். பீதிகாபுரத்தில் உள்ள பிராமணர்கள் தாங்கள் உயிருள்ள உடல்கள் மற்றும் தனிநபர்கள் போன்ற சாதாரண மனித தன்மையை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். அதேபோல் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் கூறுவது என்னவென்றால் சர்வ வல்லமையுடைய, சர்வ வியாபியான, எங்கும் நிறைந்திருக்கும் இயல்புடைய ஸ்ரீ தத்தாத்ரேயர் நான்தான் என்பதை நினைவூட்டிக் கொண்டிருக்கிறேன். காலங்கள் மாறலாம் பல உலகங்கள் படைத்து காத்து அழிக்கப்படலாம் ஆனால் நான்தான் ஸ்ரீ தத்தர் என்பது இல்லாமல் போய்விடுமா?*

**பாப்பண்ணார்யா:** *ஸ்ரீ ஸ்ரீபாதா!! அந்த சந்நியாசி சென்றவுடன் 31 செப்புப் பாத்திரங்களுக்கு பதில் ஒரே ஒரு பாத்திரம்தான் இருந்தது. நீ ஏதாவது தந்திரம் செய்து அதை மறைய வைத்தாயா?*

**ஸ்ரீ ஸ்ரீபாதர்:** நடக்கும் ஒவ்வொரு செயல்களும் நேரத்தையும் விதியையும் ஒத்தே நடைபெறுகிறது. காரணம் இல்லாமல் ஒன்றும் நடைபெறுவதில்லை. இதுதான் இயற்கையின் நியதி அதை மீற முடியாது. முன்ஜன்மத்தில் சுப்பையா சிரேஷ்டி காட்டுப்பகுதியில் உள்ள ஒரு தத்தர் கோவிலில் அர்ச்சகராக இருந்தார். காட்டுப் பகுதியில் உள்ள அந்த தத்த கோவிலுக்கு மக்கள் அரிதாகத்தான் செல்வர். அவர் பெண்களின் மீது வெறி கொண்டவராக இருந்தார். பெண்களின் மீது கொண்ட தீராத மோகத்தினால் அவர் மூதாதையர்கள் பழங்காலந்தொட்டு பூஜித்து வந்த பெரிய செப்பு தத்தர் சிலையை விற்க முயன்றார். அப்படி பெறப்பட்ட அந்த பணத்தை தன் மனைவியிடம் கொடுத்தார். சிலை திருட்டு போய்விட்டதாக அனைவரிடமும் கூறி விட்டார். இங்கு வந்த சந்நியாசி தன் பூர்வ ஜென்மத்தில் பொற்கொல்லராக பிறந்து உலகச் சூழலில் சிக்கிக்கொண்டவர். முன்ஜன்மத்தில்

அவர் பொற்கொல்லராக பிறந்தபோது பணத்தாசை பிடித்து தத்தர் சிலையை உருக்கி விட்டார். இந்த பிறவியில் மிகவும் ஏழையாக பிறந்துள்ளார். சுப்பையா தத்தருக்கு பல காலம் பூஜை செய்த புண்ணியத்தால் பணக்காரராக பிறந்துள்ளார். அவர்களின் பூர்வஜென்மத்தில் உருக்கப்பட்ட தத்தர் சிலை 32 செப்பு பாத்திரங்களாக மாற்றப்பட்டு விற்க்கப்பட்டது. பொற்கொல்லன் ஸ்ரீ நரசிம்மரை வழிபடுபவர். அவன் இந்த செப்புப் பாத்திரங்களை ஸ்ரீ நரசிம்மரின் முன்னிலையில் செய்தான். ஆகவே கடவுளின் விருப்பப்படி இந்த 32 செப்பு பாத்திரத்திலும் ஸ்ரீ நரசிம்மரின் 32 அவதாரங்களின் குணங்கள் குடிகொண்டது.

தன் முன் ஜென்மத்தை பற்றி நன்கு அறிந்த இந்த சந்நியாசி மாறாத பக்தியுடன் என்னை வணங்கினார். தன் ஏழ்மையை போக்குமாறு மனமார வழிபட்டார். நான் அவன் கனவில் தோன்றி பீதிகாபுரம் வருமாறு கூறினேன். சிரேஷ்டியிடம் பத்து வராகன் கொடுத்து ஒரு செப்பு பாத்திரத்தை என் கையால் வாங்கிக் கொண்டு அவரை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து விடுமாறு கூறினேன். நான் அறிவுறுத்தியபடி அவர் அப்படியே செய்து பாக்கியசாலி ஆனார். நானும் அவரின் பணப்பிரச்சினை கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு தீருமாறு ஆசீர்வதித்தேன். கடன் கொடுத்தவர்களின் கண்களிலிருந்து தப்பிக்கவே அவர் சந்நியாசி போல் வேடமிட்டு வந்தார். இப்போது புரிந்ததா நான் அந்த சந்நியாசியை பற்றி எல்லாம் தெரிந்தவன் என்று!!

சுப்பையா சிரேஷ்டி நம் குடும்பத்தை ஏமாற்றி பத்து வராகன் பெற வேண்டும் என்று முயற்சி செய்தார். நான் அந்த பத்து வராகனுக்கு ஏற்பாடு செய்துவிட்டு அவர் பூர்வ ஜென்மங்களில் சேர்த்துவைத்த அனைத்து புண்ணியங்களையும் எடுத்து கொண்டுவிட்டேன். சுப்பையா சிரேஷ்டி உங்களுக்கும் சிந்தாமணிக்கும் இருந்த தகாத உறவு பற்றியும் உங்கள் அனைத்து மோசமான அநாகரீகமான நடத்தைகள் பற்றியும் எனக்கு தெரியும். உங்கள் கதை மனித வரலாற்றில் ஒரு நகைச்சுவையாக இருக்கும். ஒரு சிறிய கூடையில் தின்பண்டங்களை விற்று உங்கள் வாழ்க்கையை நடத்துவீர்கள். நீங்கள் என்னைப் போன்ற சிறு பிள்ளைகளுக்கு விற்பனை செய்வீர்கள். உங்களிடமிருந்து வாங்கிய பணத்தைக் கொண்டு என் பெற்றோர்கள் எங்கள் உறவினர்களுக்கு உணவளித்தனர். கொடுத்த பணத்திற்கு வட்டிக் கணக்கு தீர்மானிக்கும் போது நீங்கள் செய்த பொய் கணக்குகள் பற்றி உங்களை விட எனக்கு தெரியும். உங்களிடம் பெற்ற பணத்தை கொண்டு வெறும் சாதம் பருப்பு பீர்க்கங்காய் மட்டும்தான் சமைக்க முடிந்தது. சாப்பாட்டுக்கு தேவையான மற்ற அனைத்து பொருட்களும் என் தந்தையின் கடின உழைப்பில் கிடைத்த பணத்தில்தான் வாங்கியவை. உங்களுக்கு மிகுந்த துயரமான நிலையில் உணவு கூட கிடைக்காத சூழ்நிலையில் இந்த செப்புப் பாத்திரத்திலிருந்து தண்ணீர், சாதம், பருப்பு மற்றும் பீர்க்கங்காய் மட்டும் கிடைக்கும். நீங்கள் சாப்பிடுவதற்கும் வேறு யாருக்காவது கொடுக்கும் போதும் போதுமான அளவு மட்டும்தான் கிடைக்கும்." ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆணித்தரமாக பேசினார்.



ஸ்ரீ ஸ்ரீபாதரின் முகம் பயமுறுத்தும் வகையில் தெய்வீக ஒளியால் நிரம்பியிருந்தது. அவரின் இரு கண்களும் இரண்டு நெருப்பு உருண்டைகள் போல் இருந்தது. அவர் மீண்டும் 'சுப்பையா சிரேஷ்டி இன்று இரவு உங்கள் வீட்டு தெற்கு வாசலுக்கு ஒரு எருமைமாடு வரும். இதன்மூலம் உங்கள் இறப்பு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை யமதர்மராஜர் உணர்த்துகிறார். ஆனால் நான் உங்களுக்கு கருணை காட்டுகிறேன். அந்த எருமைக்கு உங்கள் கையால் அரிசி பருப்பு மற்றும் பீர்க்கங்காய் சமைத்துக் கொடுக்க வேண்டும். அதுதான் அந்த எருமையின் ஒரே விருப்பம். அவற்றை சாப்பிட்டுவிட்டு உங்களுக்கு பதில் அந்த எருமை இறந்துவிடும். அந்த நொடிமுதல் உங்களுக்கு அறிவிப்புக்கு மேல் அறிவிப்பு வரத்தொடங்கி நீங்கள் ஏழ்மை நிலைக்கு செல்வீர்கள். இந்த கூடையை எடுத்துக்கொண்டு நான் அறிவுறுத்தியது போல் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு அரிசி கூட கிடைக்காத சமயத்தில் இந்த செப்புப் பாத்திரம் உதவி செய்யும். நான் உங்கள் மேல் கருணை காண்பிக்கிறேன்" என்று அழுத்தமான குரலில் கூறினார் ஸ்ரீ ஸ்ரீபாதர்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் கோபத்தைப் பார்த்து வெங்கடப்பைய சிரேஷ்டி பயந்து போனார். அவரிடம் ஸ்ரீ ஸ்ரீபாதர் "தாத்தா!! பயந்து விட்டீர்களா? நான்தான் உண்மையில் நரசிம்ம மூர்த்தி. அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். ஆனால் என் குணம் ஸ்ரீ ஸ்ரீபாதா மற்றும் ஸ்ரீவல்லபருடையது போல் இருக்கும். நான் வைசியர் குலத்தை சபித்து விடுவேன் என்று நினைக்கிறீர்கள். அன்னை கன்னிகாபரமேஸ்வரி வைஸ்ய குல மக்களை அழகில்லாமல் பிறக்க சாபம் இட்டது போல் நானும் அனைத்து வைசியர்களையும் ஏழையாக பிறக்க வேண்டும் என்று சபித்துவிடுவேன் என்று கவலைப்படுகிறீர்களா? பயம் வேண்டாம் கடவுள் சாதி சமய வேறுபாடு பார்க்க மாட்டார். அதே போல் ஒரு பக்தனுக்கும் சாதி மதம் வித்தியாசம் கிடையாது. முந்தைய யுகத்தில் பாப்பண்ணார்யா லாபாத மஹரிஷி. நான் ஒரு வரம் அளிக்கிறேன். லாபாத மகரிஷியின் வம்சம் அழிந்துவிட்டாலும் பாப்பண்ணார்யாவின் வம்சத்திற்கு கலியுகம் முடியும் வரை நான் அருள் புரிந்து கொண்டே இருப்பேன். நான் வேறுவகையான ஒரு கூடையை உங்களுக்கு அளிக்கிறேன். அந்த கூடையில் தத்த இனிப்புகள் நிறைந்துள்ளது. நீங்கள் அனைவருக்கும் தாராளமாக அளித்தாலும் அந்த இனிப்பு குறையவே குறையாது. அது சாதாரண கண்களுக்கு புலப்படாது. ஸ்ரீ நரசிம்மருடைய 32 அம்சங்களும் என்னிடம் நிறைந்திருப்பதால் நான் அவரது 33வது அவதாரம். எனவே உங்கள் வம்சத்தின் 33வது தலைமுறையின் போதும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வம்சத்தின் 33வது தலைமுறையின் போதும் ஸ்ரீ வத்சவாயீ நரசிம்ம வர்மா குடும்பத்தின் 33வது தலைமுறையின் போதும் நான் பிறந்த இடமான ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் என் பாதுகைகள் பதிக்கப்படும். இது வத்சவாயீ, மல்லாடி மற்றும் ஸ்ரீ வெங்கடப்பைய சிரேஷ்டி குடும்பங்களுக்கு நான் அளிக்கும் உத்தரவாதம். உங்கள் குடும்பத்தில் யாராவது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் 9 வகை உருவங்களில் ஏதாவது ஒன்றை வழிபட்டால் ஸ்ரீ தத்தருடைய நாய்கள் காவல்காரனைப் போல் சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு நிற்கும். வேதங்கள், புராணங்கள்

மற்றும் உபநிஷத்துக்கள் கண்ணுக்குப் புலப்படாத வேட்டை நாய்கள் மற்றும் மற்ற சூக்ஷ்ம உருவங்களில் அவர்களைப் பாதுகாத்துக் கொண்டே இருக்கும்.

என் பாதுகைகள் நான் விவரித்த வழியில் அல்லாது வேறு எந்த வழியிலும் பீதிகாபுரத்தில் பதிக்கப்படாது. நான் எப்போதும் அளித்த சத்தியத்திற்கு கட்டுப்படுவேன். எங்கள் வீடு பலருக்குக் கைமாறி பின்னர் உங்கள் சந்ததியினரிடம் வந்தடையும். அது தத்த நிலையம் என்று அழைக்கப்படும். இந்த வீட்டின் வாயிலில்தான் நான் அவதூதராக வந்து பவதி பிச்சாந்தேஹி என்று கூறி சுமதி மஹாராணிக்கு தரிசனம் அளித்தேன். என் சகோதரன் அடுத்த பிறவியில் ஸ்ரீதரா என்ற பெயரில் தத்தரின் அம்ச அவதாரமாக புகழடைந்து இந்த இடத்திற்கு 3 முறை நாய் உருவம் எடுத்து வந்து ஜூலை 6 1963 சனிக்கிழமை, செப்டெம்பர் 11 1970 வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 4 1971 புதன்கிழமை ஆகிய நாட்களில் வந்து பிக்ஷயை ஏற்றுக்கொள்வார். சில காலங்களுக்குப் பிறகு பாப்பண்ணார்யாவின் 33வது தலைமுறையை சேர்ந்த ஒருவர் உங்கள் சந்ததியை சேர்ந்தவரின் தத்த நிலையம் என்ற வீட்டிற்கு வந்து உணவருந்துவார். இது என் ஆணை. என் சத்தியத்தை நிறைவேற்றும் சக்தி என்னிடம் உண்டு" என்றார்.

பின்னர் வெங்கடப்பைய சிரேஷ்டி ஸ்ரீ ஸ்ரீபாதரை மார்போடு அணைத்துக் கொண்டார். ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ஸ்ரீ பாப்பண்ணார்யா வாயடைத்து நின்றார். அன்னை சுமதிக்கு நடப்பது அனைத்தும் கனவா அல்லது தெய்வீக மாயையா என்று புரியவில்லை. அப்பலராஜசர்மாவின் மனம் ஸ்தம்பித்து விட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் சகோதரர்கள் இருவரும் தன் சகோதரனைப் பிரமிப்புடன் பார்த்தனர். இது தன் சகோதரனா இல்லை ஸ்ரீ தாத்தாத்ரேயரா என்று நினைத்தனர். இந்த வினோத நிகழ்வுகளைப் பார்த்து அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். என்னுடைய முட்டாள்தனத்திற்கும் மற்றவர்களை இழிவு படுத்தும் குணத்திற்கும் எல்லையே இல்லை. அதனால் நான் **"ஸ்ரீ ஸ்ரீபாதா! சக்தியின் ஒளிக்கதிர்களே மனித உருவம் எடுத்து ஸ்ரீ கிருஷ்ணரின் மனைவிகள் ஆனார்கள். இது பெண்கள் மீது கொண்ட மோகம் இல்லையா? அவதாரங்களுக்கு என்றால் இது தெய்வீகத் திருவிளையாடல், ஆனால் எங்களுக்கு பெண்களின் மீதான இச்சை? என்ன ஒரு சிக்கல்!!"** என்றேன்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் "ஸ்ரீ கிருஷ்ணருக்கு 8 மனைவிகளும் 16000 கோபிகைகளும் இருந்தனர். ஆனாலும் அவர் இல்லற இன்பத்தை துறந்த ஒரு பிரம்மச்சாரி. நீ நினைப்பது போல் அவர் பெண்களை மயக்குபவர் இல்லை. நீ நினைப்பது போல் அது ஒன்றும் உடலுடன் கூடிய தொடர்பு இல்லை. அவர்கள் அனைவரும் ஆத்மாவுடன் உறவில் உள்ள மனைவிகள். சார்ந்திருக்கும் ஆத்மா மனைவி சார்பு தரும் ஆத்மாவே கணவர். இதற்கு மேல் என்ன இருக்கிறது? தேவேந்திரன் சாபம் பெற்று மனித உருவம் எடுத்த போது சதிதேவி திரௌபதியாகப் பிறந்தாள். தேவேந்திரன் ஐந்து உருவங்கள் எடுத்து பஞ்ச பாண்டவர்களாக பிறந்தார். திரௌபதிக்கு 5 கணவர்கள் இருந்தாலும் அர்ஜுனனுடன் மட்டுமே அவள் உடலால் தொடர்பு கொண்டிருந்தாள். தர்மம் வேறு சூக்ஷ்ம தர்மம் என்பது வேறு.

குந்திதேவிக்கு உண்மை அல்லாத ஒன்றை பேசத் தெரியாது. போட்டியில் அர்ஜுனன் மட்டும்தான் மீனின் மீது அம்பு செலுத்தினான் மற்றும் சுயம்வரத்தில் திரௌபதி அர்ஜுனனைத்தான் தேர்ந்தெடுத்தாள். ஒரு நல்ல மனைவி 6 குணங்களை உடையவளாக இருக்கவேண்டும். லக்ஷ்மியின் வடிவமாக இருக்க வேண்டும். திரௌபதி மிகவும் தயாள குணம் நிறைந்தவள். அவள் பூமாதேவியைப் போல் பொறுமை நிறைந்தவளாக இருக்க வேண்டும். சகாதேவனுக்கு வருங்காலத்தில் நடக்கப் போகும் அனைத்து நிகழ்ச்சிகளைப் பற்றியும் தெரியும். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடக்கப்போகும் போர் பற்றியும் அதற்கு முன்னர் நடக்கப்போகும் அனைத்து நிகழ்ச்சிகளைப் பற்றியும் நன்றாக தெரியும். அவற்றை நினைக்கும் போதெல்லாம் அவன் மிகவும் வேதனை அடைவான். ஆகவே திரௌபதி அவனைக் கையாளும் போது தன்னை மிகுந்த பொறுமை உடையவளாக மாற்றிக் கொள்வாள். பீமன் ஒரு சாப்பாட்டு ராமன். அதிகமாக உணவு உண்பதால் பீமன் சோம்பேறியாகி விட்டான். ஆகவே அவனால் தன் வேலைகளைக் கூட செய்ய முடியாதவனாகி விட்டான். அதனால் திரௌபதி ஒரு வேலையாள் போன்று அவனிடம் நடந்து கொண்டாள். தர்மராஜா பாண்டவர்களில் மூத்தவர். பல வகையான அரசியல் சிக்கல்கள் அவர் மனதை வேதனைப்படுத்தின. திரௌபதி ஒரு அமைச்சரைப் போன்று அவரிடம் நடந்துகொண்டு நல்ல அறிவுரைகள் வழங்கினாள். நகுலன் வாள் வித்தையில் சிறந்து விளங்கி மிக வேகமாகச் சண்டையிடுவான். அவன் மிகத் திறமையாக மழைத் துளிகளுக்கு இடையே கூட கத்தியை செலுத்தி அது மழையால் கூட ஈரமாகாதபடி கையாள முடியும். தற்காப்புக் கலைகளில் உள்ள கூரிய ஆற்றல்களின் காரணமாக கடுமையான பயிற்சி மேற்கொண்டு அவனுக்கு அதிகப்படியான பசி இருக்கும். திரௌபதி சுவையான உணவுகளை சமைத்து அவனுக்குப் பரிமாறுவாள். அந்தப் பதார்த்தங்கள் அவன் மனதை திருப்தி படுத்தி போர்க்கள பயிற்சிக்கு ஏதுவாக இருந்தது. எப்படி ஒரு தாய் தன் குழந்தையின் விருப்பங்களை கேட்காமலேயே அறிந்து உணவளிப்பாளோ அதே போல் திரௌபதி நகுலனை நடத்தினாள். அர்ஜுனனை உடல்ரீதியாக மகிழ்ச்சி அளித்து சந்தோஷப் படுத்தினாள். இல்லறக்கலையில் ரம்பையை விட கைதேர்ந்தவளாக இருந்தாள். அவளுக்கு 5 கணவர்கள் இருந்தாலும் தர்மத்தை மீறாமல் அர்ஜுனனிடம் மட்டும் இல்லறம் நடத்தினாள்.

சுப்பையா சிரேஷ்டி, உன்னுடைய காமக்கிழத்தி சிந்தாமணி உன்னிடம் மட்டுமில்லை பில்வாமங்களா மற்றும் பலருடன் உறவு கொண்டிருந்தாள். குண்டூர் பகுதியில் உள்ள மங்களகிரியில் இருக்கும் பானக நரசிம்ம ஸ்வாமியை நீ தரிசிக்கும் போது பில்வாமங்களாவையும் சிந்தாமணியையும் காலம் மற்றும் விதி வசத்தால் சந்திப்பாய். நீ அவர்களை பீதிகாபுரம் அழைத்து வருவாய். அப்போது நான் உங்களுக்கு நீதியைப் போதிப்பேன்.

பின்னர் ஸ்ரீ நரசிம்ம வர்மா ஸ்ரீ ஸ்ரீபாதரை மடியில் அமர்த்திக் கொண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம் **"தாத்தா! நாளை உங்கள் குதிரை வண்டியில் ஏறி உங்கள் வயல்களைப் பார்க்கலாம். பல நாட்களாக அங்குள்ள பூமிமாதா என்னை ஆர்வத்துடன்**

**பிரார்த்தனை செய்து கொண்டு "ஸ்ரீ ஸ்ரீபாதா நீ இங்கு வந்து உன் பாத கமலங்களை என் மீது வைத்து புனிதம் ஆக்க மாட்டாயா? உனக்கு அர்தத்ராண பாராயண (துன்பத்தில் இருப்பவர்களை ரட்சிப்பவர்) என்ற பட்டம் உனக்கு இருக்கிறதல்லவா?"** *என்று கேட்டுக் கொண்டிருக்கிறாள்.*

*அதற்கு ஸ்ரீ வர்மா* **"என் அருமை ஸ்ரீ ஸ்ரீபாதா!! எனக்கு ஒரு சிறிய வேண்டுகோள். எங்கள் நிலம் ஸ்ரீ பீதிகாபுரத்திற்கு அருகில் இருக்கிறது. அங்கு ஒரு கிராமத்தை அமைத்து அந்த கிராமத்தினர் அந்த நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டும். அந்த நிலத்தை அந்த விவசாயிகளுக்கு குறைந்த பணத்திற்கு குத்தகைக்கு கொடுக்க விரும்புகிறேன். அந்த பண்ணையில் நடக்கும் விவகாரங்களை கவனிக்கும் கிராமத்தலைவர் பொறுப்பாளராக உன் தந்தையை நியமிக்க விரும்புகிறேன். அயினவில்லி கிராமத்தில்தான் இப்போது உங்கள் குடும்பத்தவர்கள் எவரும் நிர்வாக பொறுப்பில் இல்லையே!!"** *என்று கேட்டவுடன் அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துகொண்டே "தாத்தா!! நீங்கள் உங்கள் ஜமீன்தார் விவகாரங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் என் ஜமீன்தார விவகாரங்களைப் பற்றி நீங்கள் யோசிக்கவில்லை. இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் என்னை அந்த கிராமத்தில் தலைவராக இருக்க சொல்வீர்கள். அப்படி செய்தால் வரலாற்றில் கண்டிகோட்டா ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப ராஜசர்மா ஒரு கிராமத்திற்கு மட்டும் கர்ணம் என்று எழுதப்பட்டு விடும். ஆனால் என் அலுவல் இந்த பிரபஞ்சத்தையும் தாண்டி உள்ளது. நானே என் கணக்குகளை வைத்துக் கொள்வேன். தினமும் கோடிக்கணக்கான புண்ணிய குவியல்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் செலவிடப்பட்டது. பிரபஞ்சத்தின் குண்டலினியை அசைப்பதுதான் என் அவதார நோக்கம். ஒரு மனிதனுக்கு குண்டலினி இருப்பது போல் ஒரு கிராமத்திற்கும் நகரத்திற்கும் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் குண்டலினி உண்டு. சந்திர சிந்து வேதம் நன்கு அறிந்தவர்களுக்கு மட்டும்தான் இந்த யோக ரகசியம் பற்றித் தெரியும். பாப்பண்ணார்யா, பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் வத்ஸவாயீ குடும்பங்களின் 33 வது தலைமுறை வரும்போதுதான் ஸ்ரீ பீதிகாபுரத்தின் குண்டலினியை அசைக்க முடியும். இப்போது என்ன அவசரம்? உங்களுக்கு அதிர்ஷ்டமாக கிடைத்திருக்கும் இந்த ஒவ்வொரு நொடியையும் நல்ல முறையில் உபயோகப் படுத்தி கொள்ளுங்கள்" என்றார். 'என் அருமை சங்கர் பட்!! ஸ்ரீ நரசிம்ம வர்மா இந்த வழியில் ஸ்ரீ ஸ்ரீபாதரை நிரந்தரமாக பீதிகாபுரத்தில் தங்க வைக்க எண்ணினார்.'*

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகிமை

*என்னிடம் அறியாமை உயர்ந்த நிலையில் இருந்தது.தன்னை ஸ்ரீ கிருஷ்ணர் என்று கூறிய ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அறியாமையினால் அவரைக் கேலி செய்யும் தொனியில் 'ஸ்ரீ ஸ்ரீபாதா!! நீதான் ஸ்ரீ கிருஷ்ணர் என்றால் இந்த அவதாரத்திலும் உனக்கு 8 மனைவிகளும் 16000 கோபியர்களும் உண்டா?' என்று கேட்டேன். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துக்கொண்டே "என் 8 வகையான குணங்களே 8 மனைவிகள். இந்த அவதாரத்தில் எனக்கு 16 வகையான ஆற்றல்கள் உண்டு. ஸ்ரீ*

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா என்கிற இந்த அவதாரத்தின் உயர்ந்த தெய்வீக ஆத்மாவின் உடலிலிருந்தும் மனதிலிருந்தும் 10 திசைகளில் சக்திவாய்ந்த அதிர்வலைகள் ஒவ்வொரு நிமிடமும் வெளியேறுகின்றன. இந்த பாணியில் என் உடல், மனது, மற்றும் ஆத்மாவின் ஒவ்வொரு ஆற்றல்களில் இருந்தும் 10 திசைகளில் அதிர்வலைகள் வெளியேறுமானால் மொத்தமாக 10x10x10=1000 அதிர்வலைகள் ஒரு நிமிடத்தில் வெளியேறுகிறது. அதே போல் என் 16 வகையான ஆற்றல்களிலிருந்து அதிர்வலைகள் வெளியேறும் போது ஒரு நிமிடத்தில் 16000 அதிர்வலைகள் மொத்தமாக வெளியேறும். இவை அனைத்தும் என் 16000 கோபியர்களை குறிக்கிறது. என் முந்தைய அவதாரத்தின் போது இவை மனித உருவம் எடுத்தன. இந்த அவதாரத்தில் உருவமற்று ஆனால் மாறிக்கொண்டும் அதிர்ந்து கொண்டும் விளங்குகின்றன.

என்னுடைய எந்த தெய்வீக உருவத்தை வழிபட்டாலும் எந்த தவறும் இல்லை. அது என்னை வழிபடுவதற்குத்தான் சமம். ஒருவர் என்னுடைய சிவரூபத்தையோ, விஷ்ணுரூபத்தையோ அல்லது ப்ரம்ம ரூபத்தையோ விரும்பலாம். அதேபோல் என்னுள் அடங்கியுள்ள பலவிதமான தெய்வ ஸ்வரூபங்களை கூட வழிபடலாம். ஒருவர் செய்யும் ஆன்மீக சாதகங்கள், ஆன்மீகத்தில் பயணிப்பவர்களின் பல்வேறு வகையான முன்னேற்றங்கள் மற்றும் நேரமும்,அவர்கள் செய்யும் செயலும் கூட ஒருவரின் பரிணாம வளர்ச்சியில் தாக்கங்கள் ஏற்படுத்தும்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் விளக்கினார்.

**அன்று இரவு நரசிம்ம வர்மாவிற்கு 32 வகையான நரசிம்மரின் தரிசனம் கிடைத்தது. அவை:**

1. குண்டபாத நரசிம்ம மூர்த்தி
2. கோப நரசிம்ம மூர்த்தி
3. திவ்ய நரசிம்ம மூர்த்தி
4. பிரம்மாண்ட நரசிம்ம மூர்த்தி
5. சமுத்திர நரசிம்ம மூர்த்தி
6. விஸ்வரூப நரசிம்ம மூர்த்தி
7. வீர நரசிம்ம மூர்த்தி
8. குரூர நரசிம்ம மூர்த்தி
9. பிபாத்ஸ நரசிம்ம மூர்த்தி
10. ருத்ர நரசிம்ம மூர்த்தி
11. தூம்ர நரசிம்ம மூர்த்தி
12. வணி நரசிம்ம மூர்த்தி
13. வ்யாகர நரசிம்ம மூர்த்தி
14. பிதல நரசிம்ம மூர்த்தி
15. பீம நரசிம்ம மூர்த்தி

16. பாதாள நரசிம்ம மூர்த்தி
17. ஆகாச நரசிம்ம மூர்த்தி
18. வக்ர நரசிம்ம மூர்த்தி
19. சக்ர நரசிம்ம மூர்த்தி
20. சங்க நரசிம்ம மூர்த்தி
21. சத்வ நரசிம்ம மூர்த்தி
22. அத்புத நரசிம்ம மூர்த்தி
23. வேக நரசிம்ம மூர்த்தி
24. விதாரண நரசிம்ம மூர்த்தி
25. யோகானந்த நரசிம்ம மூர்த்தி
26. லக்ஷ்மி நரசிம்ம மூர்த்தி
27. பத்ர நரசிம்ம மூர்த்தி
28. ராஜ நரசிம்ம மூர்த்தி
29. வல்லப நரசிம்ம மூர்த்தி.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை

30. நரசிம்ம மூர்த்தியாக பார்த்தார்

பின்னர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியை

31. நரசிம்ம மூர்த்தியாக பார்த்தார் மற்றும்

பின்னர் ப்ரஞஞானபுரத்தில் வசிக்கும் ஸ்வாமி சமர்த்தரை

32. நரசிம்ம மூர்த்தியாக

தரிசித்தார்.

## ஸ்ரீ ஸ்ரீனிவாசரின் கதை

என் அன்பு சங்கர் பட்!! நாளை மிகவும் புனிதம் வாய்ந்த நாளான புரட்டாசி மாதத்தில் வரும் ஸ்ரவண நட்சத்திரம். ஸ்ரீ வெங்கடேஸ்வரர் (ஸ்ரீ பத்மாவதி தேவியின் மணாளன், திருப்பதியில் கோவில் கொண்டுள்ளவர்) திங்கட்கிழமை துவாதசியன்று சித்த யோகத்தில் இந்த வசீகர தோற்றத்தை எடுத்து தோன்றினார். விளம்பி வருடம் விசாக சுத்த ஸப்தமியன்று குபேரனிடமிருந்து கடன் பெற்று உறுதிமொழியை அளித்தார். ஸ்ரீ பத்மாவதி தேவி மிருகசீரிஷ நட்சத்திரத்திலும் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் ஸ்ரவண நட்சத்திரத்திலும் பிறந்தனர். அவர்களது திருமணம் வைகாசி மாதம் சுத்த தசமியன்று உத்திர பல்குனி நட்சத்திரம் கூடிய நன்னாளில் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீனிவாசரும் பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்தார். பாண்டவர்கள் குடும்பத்தை சேர்ந்த சுதன்வாவுக்கும் நாக கன்னிகைக்கும் ஆகாச மஹாராஜா பிறந்தார். தொண்டமான் அவரின் சகோதரர். வசுதானுவும் ஆகாச ராஜாவின் மகன்தான்.

அகத்திய முனிவரின் அறிவுரைப்படி தொண்டைமானுக்கும் வஸுதானுவுக்கும் ராஜ்ஜியத்தை சரிபாதியாக ஸ்ரீ ஸ்ரீனிவாசர் பிரித்துக் கொடுத்தார்" என்று கூறினார்.

மேலும் சுப்பையா சிரேஷ்டி என்னிடம் "நீங்கள் நன்றாக ஓய்வெடுங்கள். நாம் இன்றிரவு முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜபித்துக் கொண்டே இருப்போம். ஜோதிட சாஸ்திரத்தின் படி நாளை மிக புனிதமான நாள். நாளை ஸ்ரீ ஸ்ரீபாதரின் வியத்தகு திருவிளையாடல்களான சிந்தாமணியும் பில்வாமங்களாவும் எப்படி பீதிகாபுரம் வந்தடைந்தனர், ஸ்ரீ குரு அவர்களுக்கு எப்படி கருணை பொழிந்தார்,ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் நிலத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் புரிந்த திருவிளையாடல்களை குறிக்கும் வகையில் சித்ராடா என்ற புகழ்பெற்ற கிராமம் உருவாகப்போவதைப் பற்றி விவரிக்கிறேன். மேலும் வருங்காலத்தில் நடக்கப்போகும் வினோதமான அற்புத நிகழ்வுகள் பற்றியும் அவர் கல்கி அவதாரம் எடுக்க போவதற்கு முன் செய்யப்போகும் திருவிளையாடல்கள் பற்றியும் விளக்குகிறேன்" என்று கூறிவிட்டு அவர் என்னை ஒரு குடிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு இரண்டு ஈச்சம்பாய்களும் வாசலில் நான்கு உயர் இன நாய்கள் காவலுக்கு இருந்தன.

## ஸ்ரீ ஸ்ரீபாதரை தியானம் செய்வதால் கிடைக்கும் பலன்

ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்களை வேறு யாராலும் நிறைவேற்ற முடியாது. அது நம் மனதிற்கு இதமளிக்கும் சந்தோஷத்தை அளிக்கும். அவரை நினைவில் கொள்வதால் மட்டுமே நம் பூர்வ ஜென்மங்களில் செய்த பாவங்கள் எரிந்து சாம்பலாகி விடும்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 11

**ஸ்ரீ தத்தரை வழிபட்டால் அனைத்து தெய்வங்களை வழிபடும் பலன் கிடைக்கும் - அசாதாரணமான பளபளப்புடன் நிகழ்ந்த ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிறப்பு- சுப்பையா சிரேஷ்டி, சிந்தாமணி மற்றும் பில்வாமங்களாவின் அத்தியாயம்**

அடுத்த நாள், சுப்பையா சிரேஷ்டி இவ்வாறு விவரிக்கத் தொடங்கினார். ”ஸ்ரீ தத்தாத்ரேயர் அனைத்து தெய்வங்களின் உருவகம். ஸ்ரீ தத்தரை வணங்கினால் அனைத்து தெய்வங்களையும் வணங்கும் பலன்களைப் பெறலாம். அனைத்து தெய்வங்களுக்குள்ளும் ஸ்ரீ தத்தர் உள்ளார். அன்னை அனுசுயாவின் குணத்தில் உள்ள சிவனை சுமதி மஹாராணி சனி பிரதோஷ காலங்களில் வழிபட்டாள். ஆகவே ஸ்ரீ தத்தரிடம் உள்ள சிவனின் உள்ளார்ந்த தன்மை அனுசுயாவின் உண்மையான குணத்தில் பிரதிபலித்து அன்னை அனுசுயாவுக்கு இணையான சுமதி மஹாராணியின் கருவில் ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்தார். இந்த நிகழ்வு ஒரு அற்புதமான யோகப் பயிற்சி ஆகும்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் பெற்றோர்களின் இணைப்பால் பிறக்கவில்லை. அப்பலராஜ சர்மாவும் சுமதி மகாராணியும் ஆழ்ந்த தியானத்தில் இருந்தபோது இருவரின் கண்களிலிருந்தும் ஒளி வெளியானது. அவை ஒன்று சேர்ந்து சுமதி மகாராணியின் கருவில் தங்கிவிட்டது.

ஒன்பது மாதங்கள் கழிந்த பின் சுமதிமஹாராணி ஒரு ஒளிப்பிழம்பைத்தான் பெற்றெடுத்தாள். இயற்கையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒளியின் ரூபம். அவர் தன் மூன்று வயதிலிருந்து வினோதமான சக்திகளை வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பிறகு ஸ்ரீ வித்யாதரி, ராதா மற்றும் சுரேகா என்ற 3 தங்கைகள் பிறந்தனர். ஸ்ரீ வித்யாதரி பிறந்த அன்று ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் தூரத்து உறவினரான மல்லாடி ராமகிருஷ்ண அவதானி வந்திருந்தார். அவருக்கு சந்திரசேகர் என்ற மகன் இருந்தான். மஹாலக்ஷ்மியே கண்டிகோட்டா குடும்பத்திற்கு ஸ்ரீ வித்யாதரியாக பிறந்திருந்தாள். மல்லாடி ராமகிருஷ்ண அவதானியின் மகன் சந்திரசேகருக்கு ஸ்ரீ வித்யாதரியை மணமுடித்தால் நன்றாக இருக்கும் என அனைவரும் ஒருமனதாக எண்ணினர். ஸ்ரீ ஸ்ரீபாதரும் தன் தங்கை ஸ்ரீ வித்யாதரியை சந்திரசேகர் மணந்து கொள்வதுதான் சரி என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் தீர்மானம் கடினமான வைரம் போன்று உறுதியானது. அவரின் வார்த்தைகளுக்கு ஏற்ப உரிய நேரத்தில் ஸ்ரீ வித்யாதரி-சந்திரசேகர் அவதானியின் திருமண வைபவம் பீதிகாபுரத்தில்

கோலாகலமாக நடைபெற்றது. அடுத்த சகோதரிகளான ராதாவை விஜயவாடாவை சேர்ந்த ஸ்ரீ விஸ்வநாத முரளிகிருஷ்ண அவதானியும் மூன்றாவது சகோதரியான சுரேகாவை மங்களகிரியை சேர்ந்த ஸ்ரீ தாடேபள்ளி தத்தாத்ரேய அவதானியும் மணந்து கொண்டனர்.

என் அருமை சங்கர் பட்!! ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்கள் நம்மால் கற்பனை செய்ய கூட முடியாத அளவுக்கு இருக்கும். அந்த லீலைகளை நினைவில் கொள்பவர்களின் பாவங்கள் அழிந்துவிடும். கோதாவரி ஜில்லாவில் ததன்காபூர்(தனுகு) என்ற கிராமம் இருந்தது. அங்கு வாஜபேய மற்றும் புண்டரிக போன்ற மகாயக்ஞங்கங்களை செய்த பக்தியான குடும்பம் ஒன்று இருந்தது. அந்த குடும்பத்தின் பெயர் வாஜபேயஜூலா. தனுகுவில் உள்ள வாஜபேயஜூலா குடும்பத்திற்கும் பீதிகாபுரத்தில் உள்ள மல்லாடி குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனினும் வாஜபேயஜூலா குடும்பத்திற்கு 'இதம் பிரம்மியம்,இதம் க்ஷத்ரியம்' என்ற தத்துவத்தில் நம்பிக்கை இருந்தது. அவர்கள் பராசர முனிவரின் பரம்பரையை உள்ளடக்கிய : வசிஷ்ட, சக்தி மற்றும் பராசர முனிவர்களின் வழியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ரிக் வேதத்தைக் கடைபிடிப்பவர்கள். மல்லாடி குடும்பம் யஜூர் வேதத்தை கடைபிடிப்பவர்கள். கர்நாடக மாநிலத்தில் ரிக் வேதத்தை மாணவர்களுக்கு கற்பிக்க சரியான குருக்கள் இல்லை. அந்தத் தொடர்பினால் அழைப்பு வந்தவுடன், ஸ்ரீ வாஜபேயஜூலா மாயணாச்சார்யலு தனுகுவில் இருந்து கர்நாடகத்தில் உள்ள ஹொய்சாலாவுக்கு குடி பெயர்ந்தார். அப்போதிலிருந்து இவர்களை ஹொய்சால பிராமணர்கள் என்று அழைத்தனர். இவர்கள் பிராமணர்கள் மற்றும் க்ஷத்ரியர்களின் தொழிலை சமமாக ஏற்றுக் கொண்டனர். அவர்கள் சனாதன தர்மத்தைக் (தோராயமான மொழிபெயர்ப்பு: பிரபஞ்சத்தின் தெய்வீக சட்டத்துடன் இருக்கும் இயற்கையான மனதிற்கு இதமான நீதி. இப்போது ஹிந்து மதம் என்று அழைக்கப்படுகிறது) காக்க பல துன்பங்களை அனுபவித்தார்கள். மாயணாச்சார்யலுவுக்கு இரு மகன்கள். ஒருவர் மாதவாச்சார்யா மற்றொருவர் சாயனாச்சார்யர். இருவரும் மிக உயர்ந்த திறமை கொண்ட ஞானிகள்.

ஸ்ரீ சாயனாச்சார்யர் வேதங்களுக்கு விளக்கவுரை எழுதினார். ஸ்ரீ மாதவாச்சாரியார் ஸ்ரீ லக்ஷ்மியை நோக்கி கடுந்தவம் புரிந்தார். அவளின் காட்சி கிடைத்ததும் தனக்கு அவளின் அபரிமிதமான அருள் வேண்டும் என்று கேட்டார். பின்னர் ஸ்ரீ லக்ஷ்மி அவரிடம் **"என் அருமை குழந்தாய் உனக்கு இந்த ஜென்மத்தில் சாத்தியம் இல்லை"** என்று கூறிவிட்டாள். அவர் உடனே **"நான் சந்நியாசம் பெற்றுக் கொள்கிறேன். அப்படியென்றால் எனக்கு மறுஜென்மம் தானே"** என்று கேட்டார். ஸ்ரீ லக்ஷ்மி அளவற்ற அருளை வழங்கி ஆசீர்வாதித்தாள். அவர் எந்த உலோகத்தைத் தொட்டாலும் தங்கமாக மாறிவிடும். சந்நியாசம் பெற்று கொண்ட பின்னர் ஸ்ரீ வித்யாரண்ய மகரிஷி என்று அழைக்கப்பட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரை ஆசீர்வதித்தார். அவர் பரம்பரையில் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த சந்நியாசியாக ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதியாக அவர் பிறப்பார். வருங்காலத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்கும் போது அவருக்கு குருவாக இருந்து சந்நியாசத்தை

தொடங்கி வைப்பார். அவரின் உலக இன்பங்களின் மீதான விருப்பம் முழுமையாகக் குறையாமல் மீண்டும் சாயணாச்சார்யாவின் பரம்பரையில் கோவிந்த தீக்ஷதலுவாக பிறப்பார். அந்த பிறவியில் தஞ்சை மன்னரின் அரசவையில் முதல் மந்திரியாக இடம் பெற்று ராஜரிஷி என்று அனைவராலும் பாராட்டப்படுவார். இவை அனைத்தும் வருங்காலங்களில் நடக்கப்போகும் சம்பவங்கள். இதுதான் விதியின் போக்கு என்று ஸ்ரீ ஸ்ரீபாதரால் முடிவு செய்யப்பட்டவை. அவருடைய தீர்மானங்கள் அனைத்தும் உண்மையாகும். ஆகவே வருங்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளாக அவர் கணித்தவை அனைத்தும் நடந்தே தீரும்.

எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அவற்றில் ஸ்ரீ தத்தரின் உயிர் சக்தியின் பிரதிபலிப்பு இருக்கும். அது ஒரு புது சைதன்யமாக மாறி பக்கதர்களின் விருப்பத்தை நிறைவேற்றும். ஸ்ரீ தத்தரை வழிபட்டால், அச்செயலை செய்துமுடிக்க எந்த குறிப்பிட்ட தெய்வத்தின் அம்சத்தால் எந்த அளவுக்கு அதை நிகழ்த்த முடியும் என்பதை தீர்மானித்து பக்கதர்களைக் கண் இமை போல் காப்பார். ஒருமுறை துருவன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அருளை பெற கடுந்தவம் புரிந்தார். ஸ்ரீ மஹாவிஷ்ணு அபரிமிதமான தந்தைப் பாசத்தை கொடுத்தருளினார். துருவன் கலியுகத்தில் பிறந்த போது தன் பக்தர்களிடம் இறைவனின் எல்லையற்ற அன்பையும் மன்னித்தலையும் நாடி பெற அறிவுறுத்தினார். கிறிஸ்து, இறைவனின் எல்லையற்ற அன்பையும் மன்னிக்கும் தன்மையையும் எடுத்துக்கூறத் தோன்றினார். ஸ்ரீ தத்தர் மிகவும் உயர்ந்த தத்துவம். அவர் உருவம் மற்றும் உருவமில்லாத் தன்மையின் அடிப்படை மற்றும் அதையும் கடந்த ஒன்று. அதுதான் அவருடைய முழு நிறைவான குணம். ஆதிகாலத்திலிருந்து இருக்கும் அவரின் இத்தன்மைக்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. உண்மையான தத்தரின் தன்மையை உணரத்தான் முடியுமே தவிர அவற்றை தர்க்கம் செய்யும் புத்தியுடன் சிந்தனை செய்வது முற்றிலும் பயனற்றது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் ரகசியம் என்னவென்றால் ஒரு செயலை நடக்க வேண்டுமா அல்லது வேண்டாமா அல்லது வேறு வழியில் நடக்க வேண்டுமா என்னும் திறனை உள்ளடக்கியது.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் குணம்

நான்தான் ஸ்ரீ தத்தாத்ரேயர் என்று அறிவித்த ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் வீட்டில் இருக்கும் காலாக்னி சமான தத்தரை வழிபட்டு வந்தார். ஒரு முறை இதை பார்த்து அதிசயித்த பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் **“என் செல்வமே ஸ்ரீ ஸ்ரீபாதா!! நீ ஸ்ரீ தத்தரா? அல்லது தத்த பக்தனா?”** என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் **“நான் தத்தர் என்று கூறினால் தத்தர் ஆகிவிடுவேன்.தத்த பக்தன் என்று கூறினால் தத்த பக்தன் ஆகிவிடுவேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்று கூறினால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஆகி விடுவேன். எப்படி நினைக்கிறேனோ அப்படியே மாறிக் கொள்வேன். அது தான் என் குணம்”** என்றார்.

இவை அனைத்தும் தாத்தாவிற்கு மிகவும் குழப்பமாக இருந்தது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் “தாத்தா!! நாம் இருவரும் ஒன்றே. என் அடுத்த பிறவியில் உங்களை ஒத்த

உருவத்தில் நான் அவதரிப்பேன். உங்களுக்கு சந்நியாசம் பெற வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருக்கிறது. இந்த ஜென்மத்திலோ அல்லது அடுத்த ஜென்மத்திலோ நீங்கள் சந்நியாசி ஆக வேண்டும் என்பது என் தீர்மானம் அல்ல. உங்களை ஒத்த அதே உருவத்தில் நான் என் அடுத்த அவதாரத்தின் போது பிறந்து உங்களை கர்ம தடைகள் மற்றும் தாக்கங்களில் இருந்து விடுவிப்பேன்".

அப்படி கூறிக்கொண்டே ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாத்தாவின் உள்ளுணர்வுகளின் மையப்புள்ளியான புருவ மத்தியை தொட்டார். ஸ்ரீ பாப்பண்ணார்யா இமயமலையில் அசைக்கமுடியாத சமாதி நிலையில் தவம் புரிந்து கொண்டிருக்கும் பாபாஜியை சில நொடிகள் பார்த்தார். சிறிது நேரத்திற்கு பிறகு அவர் பிரயாகையில்(அலகாபாத்) உள்ள திரிவேணி சங்கமத்தில்(கங்கை,யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் இடம்) ஸ்நானம் செய்வது போல கண்டார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் உருவத்தை கண்டார். பின்னர் அந்த உருவம் ஸ்ரீ குக்குடேஸ்வர் கோவிலில் உள்ள சுயம்பு தத்தருடன் ஐக்கியமாவதை கண்டார். அதிலிருந்து அவதூதர் வெளிவந்தார். அவருக்கு தன் மகள் அகண்ட லக்ஷ்மிசௌபாக்கியவாதி சுமதி மஹாராணி பிக்ஷை அளிப்பதை கண்டார். அந்த அவதூதர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் உருவமாக மாறி சுமதி மகாராணியின் மடியில் அமர்ந்திருப்பது போல் கண்டார். சுமதி மஹாராணியின் மடியிலிருக்கும் சிறு குழந்தை 16 வயது பாலகனாக மாறுவதை கவனித்தார். அந்த பாலகன் அவரை ஆழமாக நோக்கிவிட்டு அவரை ஒத்த உருவமெடுத்தார். எனினும் அந்த மனிதன் சந்நியாசி போல் இருப்பதை கண்டார்.

அந்த சந்நியாசி கம்பீரமாக தன் சீடர்களுடன் நடந்து சென்று ஒரு சங்கமத்தில் நீராடுவது போன்ற காட்சியைக் கண்டார். அந்த சந்நியாசி அவரை பார்த்து "**நீ என்னைக் கண்டவுடன் நான் யார் என்று உனக்குளேயே விவாதித்து கொண்டிருக் கிறாயா? நான்தான் நரசிம்ம சரஸ்வதி. இது கந்தர்வபுரம்**" என்றார். இவற்றை கூறிய சில நொடிகளிலேயே தன் மேலாடையை ஆற்றில் தூக்கி எரிந்து விட்டு அதன் மேல் அமர்ந்து ஸ்ரீசைலத்தை அடைந்தார். மகாபுருஷர்களும் யோகிகளும் அவரைக் கதலி வனத்தில் வணங்கினர். அனைவரும் "**மஹாப்பிரபோ! நீங்கள் அவதரிக்க வேண்டும் என்று பல நூறு வருடங்களாக நாங்கள் தவம் புரிந்து வருகிறோம். எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்**" என்று பிரார்த்தனை செய்து கொண்டனர். பல காலம் தவம் புரிந்த பிறகு ஒரு வயதான கிழவராக வெறும் கோவணம் மட்டும் அணிந்து கொண்டு தோன்றினார். தன் தீர்க்கமான பார்வையால் ஸ்ரீ பாப்பண்ணார் யாவை பார்த்து நான்தான் ஸ்வாமி சமர்த்தர் என்று கூறினார்.

சிறிது நேரத்தில் அந்த உடலைத் துறந்து விட்டு தன் உயிர்ச் சக்தியை ஒரு ஆலமரத்தில் மாற்றிவிட்டு ஸ்ரீசைலத்தில் உள்ள மல்லிகார்ஜுன சிவலிங்கத்துடன் ஐக்கியமாகிவிட்டார். அந்த சிவலிங்கத்திலிருந்து ஒரு தீர்க்கமான இடி போன்ற குரல் கேட்டது, "**பாப்பண்ணார்யா!! நீ மிகவும் அதிர்ஷ்டசாலி. நான் பெற முடியாதவன், வார்த்தைகளாலும் மனதாலும் புரிந்து கொள்ள முடியாதவன், எல்லையற்றவன், ஞானத்தின் மொத்த உருவகம் மற்றும் ஆரம்பமும் முடிவும் இல்லாதவன். உன்னுடைய**

**க்ரியா யோக சக்தியின் மூலம் என்னைச் சூரிய மண்டலத்திலிருந்து எடுத்து சக்தி பாத் செய்து இந்த ஜ்யோத்திர்லிங்கத்தினுள் கொண்டு சேர்த்தாய். ஏற்கனவே இந்த ஜ்யோதிர்லிங்க உருவத்தில் 18000 தேவர்கள் ஐக்கியமாகி எனக்கு சேவை புரிந்து கொண்டிருக்கின்றனர். என்னை ஜ்யோதிர்லிங்க வடிவில் துதிக்கும் பக்தர்களுக்கு இந்த தேவர்கள் பொருள் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவி புரிகின்றனர். மும்மூர்த்திகளின் ஸ்வரூபமான நான், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்,நரசிம்ம சரஸ்வதி மற்றும் ஸ்வாமி சமர்த்தர் ஆகிய வடிவங்களில் உன்னை ஆசீர்வதிக்கிறேன்"** என்றது.

*"குழந்தாய் சங்கர் பட்!! ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்கள் நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்கு இருக்கும். சற்று நேரத்திற்குப் பின் ஸ்ரீ பாப்பண்ணார்யா இயல்பு நிலைக்கு திரும்பினார். அவர் குழந்தைத்தனமான சிரிப்புடன்,கள்ளம்கபடமற்ற முகத்துடன் இனிமையாக சிரித்து கொண்டிருந்த 3 வயது குழந்தையான ஸ்ரீ ஸ்ரீபாதரை கண்டார். இந்த வினோதமான அனுபவம் அவருக்கு மகிழ்ச்சியூட்டும் இனிமையை அளித்தது. அவர் ஸ்ரீ ஸ்ரீபாதரை ஆரத் தழுவிக் கொண்டார். அந்த தெய்வீக களிப்பில் சிறிது நேரம் இருந்தார். அந்த அசாதரணமான அனுபவத்திலிருந்து தன் இயல்பு நிலைக்குத் திரும்பி ஹோமத்தைத் தொடங்கினார். அவர் ஹோமம் செய்யும் விதமே மிகவும் திகைப்பாக இருக்கும். பொதுவாக ஹோமத்தீயை அத்தி மர குச்சிகள் மற்றும் வன்னி மரக் குச்சிகளை கொண்டு எரிய வைப்பார்கள். ஆனால் ஸ்ரீ பாப்பண்ணார்யா புனித சமித்துக்களை ஹோம குண்டத்தில் வைத்த பின் வேத மந்திரங்களை ஜெபிப்பார். நெருப்பு தானே உருவாகி தீ பலமாக எரியத் தொடங்கும். ஸ்ரீ அப்பலராஜசர்மாவும் இதே போன்றுதான் ஹோமங்களை செய்வார். அவர்கள் குடும்பத்தில் அக்னியை வழிபடும் பழக்கம் இருந்தது. மிகவும் புனிதம் வாய்ந்த தினங்களில் அவர்களே ஹோம குண்டத்தினுள் இறங்கி ஆகுதியை படைப்பர். இது போன்று வழிபாடுகள் செய்யும் போது ஒரு நாளும் அவர்கள் உடலுக்கோ துணிகளுக்கோ எந்த வித பாதிப்பும் ஏற்படாது. இது அதிசயத்திலும் மிகப்பெரிய அதிசயம்.*

## ஒரு நிகழ்வு நடக்க அல்லது நடக்காமல் இருக்க செய்யும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் திறன்

*அன்று ஹோமத்தின் போது ஸ்ரீ பாப்பண்ணார்யா எவ்வளவு முறை வேத மந்திரங்களை ஓதி முயற்சி செய்தும் ஹோம தீ உருவாகவே இல்லை. தன் தாத்தாவின் இக்கட்டான இந்த நிலையைப் பார்த்து கேலியாக சிரித்து கொண்டிருந்தார் ஸ்ரீ ஸ்ரீபாதர். தாத்தாவுக்கு வேர்த்து விறுவிறுத்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அக்னி குண்டத்தை நோக்கி* **"அக்னிதேவனே!! நான் உனக்கு ஆணையிடுகிறேன்!! தாத்தா செய்யும் புனிதமான காரியத்திற்குத் தடை செய்யாதே!"** *என்று கூறினார். உடனே தீ உருவாகி நெருப்பு மேலே எழும்பியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாத்தாவின் கமண்டலத்தில் உள்ள நீரை எடுத்து நெருப்பில் தெளித்தார். தீ அணைவதற்கு பதில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இவை அனைத்தையும் கண்டு ஆச்சரியத்தில் உறைந்து போனார் தாத்தா.* **"தாத்தா !! நான் ஸ்ரீ ஸ்ரீபாதராக அவதாரம் எடுப்பதற்கு**

**நீங்களும், பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியும் மற்றும் நரசிம்ம வர்மாவும்தான் பொறுப்பு. ஆகவே நீங்களும் என் அப்பாவும் சிரேஷ்டியிடமிருந்மோ வர்மாவிடமிருந்தோ ஏதாவது பணமோ பொருளோ பெற்றால் அதைத் தானமாக கணக்கிட கூடாது. அவற்றை மறுத்தல் கூட கடவுளுக்கு எதிராக செய்யும் குற்றமாக கருதப்படும். அந்த உதவியை தெய்வத்தின் கருணையாக எண்ண வேண்டும். என் தாய் சுமதி மஹாராணி மல்லாடி குடும்பத்திற்கு மட்டும் மகளாக நடத்தப்படக் கூடாது, அவள் சிரேஷ்டி மற்றும் வர்மா குடும்பங்களுக்கும் கூட மகள்தான். இது என் கட்டளை"** என்று ஶ்ரீ ஶ்ரீபாதர் கூறினார். இதை ஶ்ரீ ஶ்ரீபாதர் அறிவித்துக் கொண்டிருக்கும் போது அப்பலராஜ சர்மாவும் சுமதி மகாராணியும் அங்கு இருந்தனர். ஏதேச்சையாக பைண்ட வெங்கடப்பைய்ய சிரேஷ்டியும் நரசிம்ம வர்மாவும் அங்கு இருந்தனர். ஶ்ரீ ஶ்ரீபாதர் "என்னுடைய விருப்பம் இல்லாமல் ஶ்ரீ பாப்பண்ணார்யா போன்ற துறவியால் கூட நெருப்பை உருவாக்க முடியாது. என் தந்தை அக்னி குண்டத்தில் இறங்கும் போது கூட அக்னி தேவனால் தன் சக்தியை வெளிப்படுத்த முடியும். நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டால் வெங்கடப்பைய்ய சிரேஷ்டியை ஏழையாகவும், பல ஏக்கராக்களுக்கு சொந்தக்காரரான நரசிம்ம வர்மாவை வீடு கூட இல்லாதவராக மாற்ற முடியும். என்னுடைய எண்ணத்தினால்தான் நீங்கள் அனைவரும் இந்த நிலையில் இருக்கிறீர்கள். என்னால் ஒரு பிச்சைக்காரனை அரசனாகவும் ஒரு அரசனை பிச்சைக்காரனாகவும் மாற்ற முடியும். என்னிடம் சரணடைந்த பக்தனின் வேண்டுதல் அனைத்தையும் நிறைவேற்றுவேன். எனினும் அதை நிறைவேற்றுவதற்கு முன்பு அந்த பக்தன் அந்த உயர்வான நிலைக்கு தகுதியானவனா, அவன் அந்த திறன் மற்றும் சக்தியை கொண்டு உலக நன்மைக்காக மட்டுமே பயன்படுத்துவானா என்று சோதித்த பின்பே அளிப்பேன். தேவையென்றால் வானத்தை பூமியாகவும் பூமியை வானமாகவும் கூட என்னால் மாற்ற முடியும்.

கிருதயுகத்தில் லாபாத மஹரிஷியாக இருந்த பாப்பண்ணார்யாவுக்கு மங்கள மகரிஷி என்கிற சிஷ்யர் இருந்தார். ஒரு நாள் மங்கள மகரிஷி தர்ப்பைப் புல்லை அறுத்து கொண்டிருக்கும் போது கை அடிபட்டு இரத்தம் கசிந்தது. உடனே அந்த இரத்தம் உறைந்து விபூதியாக மாறியது. தான் பெரிதாக சாதித்து விட்டதாக எண்ணி பெருமிதம் கொண்டார் மங்கள மகரிஷி. உடனே பரமசிவன் அவர் கண்முன் தோன்றி தன் கையை விளையாட்டாக அசைத்தார். இமயமலையே விபூதியாக விழுவது போல் விபூதி கொட்டியது. **"த்ரேதாயுகத்தில் பாரத்வாஜ முனிவர் பீதிகாபுரத்தில் 'ஸவித்ரு காடக சயனம்' என்கிற யாகத்தை செய்யப் போகிறார். அப்போது அந்த யாகத்தில் உருவாகப் போகிற விபூதியின் சிறிதளவைத்தான் நான் இங்கு உனக்கு உருவாக்கி காட்டினேன்"** என்று பரமசிவன் கூறினார். பிறகு மங்கள மகரிஷியின் கர்வம் நீங்கியது. இவை அனைத்தையும் ஶ்ரீ ஶ்ரீபாதர் கூறுவதை கேட்டு கொண்டிருந்த அனைவரும் வாயடைத்து நின்றனர். "ஒருவர் பல ஜென்மங்களில் செய்த புண்ணியங்களின் காரணமாகவே பீதிகாபுரத்தில் கால் பதிக்க முடியும். நீங்கள் அனைவரும் இந்த அவதாரத்தின் போது என்னோடு இருப்பது வர்ணிக்க முடியாத தனிச்சிறப்பு. நீங்கள் ஆன்மீகத்தைத் தீவிரமாகத் தேடுபவராக

இருந்தால் மட்டுமே என்னுடைய சக்திகளை அனுபவிக்க முடியும். பிறகுதான் என்னுடைய சக்திகளான இரக்கம், அன்பு, பாதுகாப்பு மற்றும் பாவங்களிலிருந்து விடுதலை அளிக்கும் விதம் ஆகியவற்றை அனுபவிக்க முடியும். நான் பிறந்த வீடான ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் என்னுடைய பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்படும். பீதிகாபுரத்தில் என் அன்னை சுமதி மகாராணியின் மடியில் அமர்ந்து கொண்டு காலையில் பால் அருந்துவேன். மதியம் அன்னை சுமதி மஹாராணி சிறிய கவளம் சாதம் ஊட்டுவாள். இரவில் அன்னை சுமதி மஹாராணி மடியில் அமர்ந்து கொண்டு அல்வாவை உண்பேன். பீதிகாபுரத்தில் இருப்பது போலவே கந்தர்வபுரத்திலும் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி உருவமாக இருப்பேன். கந்தர்வபுரத்தில் மதிய நேரங்களில் பிக்ஷை எடுப்பேன். இவை அனைத்தையும் அகக்கண்ணால் பார்க்க முடிகிற சக்தி உள்ளவர்களால் மட்டுமே பார்க்க முடியும்.

## ஸ்ரீ ஸ்ரீதரின் காலத்தின் போது நான் பிறந்த இடத்தில் என் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்படும்- ஸ்ரீ ஸ்ரீபாதரின் எதிர்காலம் குறித்த அறிவிப்பு

அந்த தெய்வீக வார்த்தைகளை கேட்டவர்கள் ஆச்சரியம் கலந்த விவரிக்க முடியாத சந்தோஷத்தை அனுபவித்தனர். அவர்கள் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டே இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தந்தையிடம் சென்று அவர் கண்ணீரை துடைத்து விட்டு, "காலம் கனிந்து வரும் போது என் இரு சகோதரர்களையும் அவர்களுடைய ஊனத்தில் இருந்து விடுவிப்பேன். அவர்கள் இருவரும் சிறந்த பண்டிதர்கள் ஆவார்கள். அவர்கள் தர்மம், கர்மம் மற்றும் பிரம்ம பாதையில் பயணிப்பார்கள். ஸ்ரீ நரசிம்ம வர்மா வருங்காலத்தில் 'சத்ரபதி சிவாஜி' என்கிற பெயரில் சக்ரவர்த்தியாக ஆவார். அவர் சனாதன தர்மத்தை பாதுகாக்கும் மிகப்பெரும் பொறுப்பில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வார். என் மூத்த சகோதரர் பூஸ்தானின் ஸ்ரீ சமர்த்த ராமதாஸாக பிறந்து அவருக்கு சமர்த்த சத்குருவாக ஆவார். சமர்த்த ராமதாஸே சிவ காவ் (ஷேக்காவ்) என்கிற இடத்தில் ஸ்ரீ கஜானன் மஹராஜ் என்கிற பெயருடன் அவதூதராக புகழடைவார். என்னுடைய இன்னொரு மூத்த சகோதரர் 'ஸ்ரீதரா' என்கிற பெயரில் புகழடைவார். என்னுடைய பாதுகைகள் நான் பிறந்த இடத்தில் ஸ்ரீ ஸ்ரீதரரின் காலத்தின் போது பிரதிஷ்டை செய்யப்படும்.

மிகச் சிறந்த ஆளுமை நிறைந்தவர்கள், யோகிகள், உலகத்திலுள்ள அனைத்து தேசங்களில் இருக்கும் மக்களும் எறும்புக் கூட்டம் போல் என் தர்பாருக்கு வந்து என்னை தரிசிப்பர். 'தத்த திகம்பரா!! தத்த திகம்பரா!! ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப திகம்பரா!! நரசிம்ம சரஸ்வதி தத்த திகம்பரா!!' என்று கூறிக்கொண்டு சந்தோஷக் களிப்பில் ஆடுவர். என் அனுமதி கிடைத்த அடுத்த நொடியில் திட்டமிடப்பட்ட அனைத்து காரியங்களும் ஒரே நேரத்தில் முடிந்துவிடும். என்னுடைய பெயரில் ஒரு பெரிய சமஸ்தானம் அமைக்கப்படும். என் செல்வாக்கு அதிகரிக்கும் போது ஒரு பசுவின் குளம்படி அளவு சிறிய நிலம் கூட வாங்க சிரமமாக இருக்கும். எனக்குத் தேவையென்றால் என்னுடையவன் என்று எவரை நினைக்கிறேனோ அவர்கள் முடியைப் பிடித்து பீதிகாபுரத்திற்கு இழுத்து வருவேன். ஒருவன் எவ்வளவு பெரிய

பணக்காரனாக இருப்பினும் எவ்வளவு பெரிய யோகியாக இருப்பினும் என்னுடைய விருப்பம் இல்லாமல் பீதிகாபுரத்தில் இருக்கும் என் சமஸ்தானத்திற்கு வரமுடியாது. இது உறுதி மற்றும் உண்மை. என்னுடைய உண்மையான குணத்தை உணர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக இரு. மனிதன் நினைக்கும் அனைத்து தெய்வங்களின் சக்திகளும் என்னுள் அடங்கியுள்ளது. எனக்கு எவரேனும் தக்ஷிணை அளித்தால் அதை நூறு மடங்காக்கி சரியான சந்தர்ப்பம் வரும் போது புண்ணியங்களாக வழங்குவேன். அந்த பணம் தர்மத்தை மீறாமல் சம்பாதித்ததாக இருக்க வேண்டும். அனைத்து விருப்பங்களும் தர்மத்தை மீறாமல் திருப்தி படுத்தப் பட வேண்டும். நேர்மையான நடத்தைகளால் மோகம் அழிக்கபடும். மோகம் அழிந்த பின் விடுதலை (முக்தி) பெற முடியும்.

'எனதருமை சங்கர் பட்!! ஸ்ரீ ஸ்ரீபாதரின் அமிர்தம் போன்ற வார்த்தைகளை கேட்டாயா?' இந்த தெய்வீக போதனைகள் நடந்த அடுத்த நாள் ஸ்ரீ ஸ்ரீபாதரை நரசிம்ம வர்மா தன் வயல்களைப் பார்க்க குதிரை வண்டியில் அழைத்துச் சென்றார். அவருக்கு பல ஏக்கர் நிலங்கள் இருந்தன. அதில் பல வகையான பயிர்கள் விளைந்திருந்தாலும் பீர்க்கங்காய் செடியில் அபூர்வமாகத்தான் பூ பூக்கும். பூ பூத்து காய்க்கும் காய்கறி பிஞ்சாக இருக்கும் போதே காய்ந்து விடும். அப்படி காய் பெரிதானாலும் கசப்பாகவும் சமைப்பதற்கு ஏற்றதாகவும் இருக்காது. இவற்றை நரசிம்ம வர்மா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கூறினார். அவர் அமைதியான முகத்துடன் **"எங்கள் வீட்டில் அனைவருக்கும் பீர்க்கங்காய் பருப்பு கூட்டு மிகவும் பிடித்தமான ஒன்று. அனைவருக்கும் பிடிக்கும் என்பதால் எனக்கும் பிடிக்கும். பழைய காலத்தில் ஒரு தத்த பக்தன் இந்த இடத்தில் தவம் புரிந்தான். நான்தான் தத்தர் என்பதால் இந்த புனிதமான நிலம் தன் நிலத்தில் என் பாதம் படாதா என்று ஏங்கி கொண்டிருக்கிறது. அதன் ஆர்வத்தை உங்களிடம் அதன் பாஷையில் இவ்வாறு தெரிவித்துக் கொண்டிருக்கிறது. என் பாதம் இந்த நிலத்தில் பட்டவுடன் அதன் தன்மை மாறிவிடும். பின்னர் அது சுவையான பீர்க்கங்காய்களை கொடுக்கும். தாத்தா!! இந்த நிலத்தில் விளைந்த பீர்க்கங்காய்களை எந்தவித தயக்கமும் இன்றி என் வீட்டிற்கு கொடுத்தனுப்புங்கள். எங்கள் வீட்டில் உள்ளோர் அனைவரோடும் நானும் சேர்ந்து அதன் கூட்டை சமைத்து சாப்பிடுகிறோம்"** என்று கூறினார். **"என் அருமை சங்கர் பட்!! அதிசயத்திலும் அதிசியம் அன்றிலிருந்து அந்த நிலத்தில் அதிகமாக பீர்க்கங்காய்கள் விளைந்தன. அவை மிகுந்த சுவையுடன் இருந்தன".**

ஸ்ரீ ஸ்ரீபாதர் நரசிம்ம வர்மாவுடன் குதிரை வண்டியிலிருந்து கீழிறங்கி வயலில் சிறிது நேரம் உலாவிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் இளவயது பழங்குடியின ஆண்களும் பெண்களும் சிலர் அங்கு வந்தனர். அனைவரும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதங்களில் விழுந்து வணங்கினர். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக முகத்தை சுற்றி ஒரு பிரகாசமான ஒளி வட்டம் உருவானது. **"தாத்தா!! இந்த பழங்குடியின மக்கள் என் நரசிம்ம அவதாரத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை தன் சகோதரி போல் பாவித்து வணங்குவார்கள். நீங்கள் நரசிம்ம**

**ஸ்வாமியின் பக்தர். இவர்களின் உதவியை நீங்கள் பெற்றுக் கொண்டால் உங்களுக்கு ஸ்ரீ நரசிம்மரை தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கலாம்**" என்று கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் விளையாட்டுத்தனமாக பேசி தன்னை கேலி செய்வதாக எண்ணினார் நரசிம்ம வர்மா. **"ஏ!! ஆதிவாசிகளே!! நீங்கள் நரசிம்ம தேவரை பார்த்திருக்கிறீர்களா? அவர் எங்கிருக்கிறார் என்று கூற முடியுமா?"** என்று கேட்டார். "இது என்ன பெரிய விஷயம்!! சிங்கத் தலையும் மனித உடலுடன் ஒரு பைத்தியக்காரன் இந்த காடுகளில் சுற்றி கொண்டிருக்கிறான். எங்கள் சகோதரி செஞ்சுலக்ஷ்மியின் மீது அவனுக்கு அலாதி பிரியம். அவளுக்கும் அவனை மிகவும் பிடிக்கும். இருவருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டோம். வேண்டுமென்றால் அவர்கள் இருவரையும் உங்கள் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறோம்" என்றனர்.

இவற்றை பேசிவிட்டு அந்த பழங்குடியின இளைஞர்கள் வேகமாக ஓடி விட்டனர். நரசிம்ம வர்மா இவற்றை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு இளம் வயது ஆணும் பெண்ணும் அவர் வயல்களில் நடந்து வருவதை கண்டார். அதிஷ்டவசமாக அந்த வழியாக நானும் (சுப்பையா சிரேஷ்டி) போய்க்கொண்டிருந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை சைகை காட்டி அவர் அருகில் வருமாறு அழைத்தார். நான் அவரிடம் சென்றதும் **"சுப்பைய சிரேஷ்டி, அங்கு தூரத்தில் வருபவர்கள் உனக்கு யாரென்று தெரிகிறதா?அது பில்வாமங்களாவும் சிந்தாமணியும். மரக் குச்சிகளை சேகரியுங்கள். அதை கொண்டு தீ மூட்டலாம். ஒரு கேலிக்கூத்தை இப்போது பார்க்கலாம்**" என்றார் ஸ்ரீ ஸ்ரீபாதர்.

எனக்கும் நரசிம்ம வர்மாவுக்கும் குப்பென்று வியர்த்து கொட்டியது. அது பில்வாமங்களாவும் சிந்தாமணியும்தான். அதில் துளிக் கூட சந்தேகமில்லை. அவர்கள் இருவரும் குருவாயூர் சென்று ஸ்ரீகிருஷ்ணரை தரிசித்தனர். அதிர்ஷ்டவசமாக, பின்னர் அவர்கள் சிறந்த யோகினியான குரூரம்மாவை சந்தித்திருக்கிறார்கள். அவள் தானாகவே அவர்களிடம் "ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தரிசனம் ப்ராப்திரஸ்து (ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தரிசனம் பெறுவாய்) என்று ஆசீர்வதித்தாள். அவளின் ஆசீர்வாத மகிமையால் அவர்களிடம் பக்தி விதைக்கப்பட்டு பற்றின்மை துளிர்விடத் தொடங்கியது. அவர்கள் இருவரும் மங்களகிரியில் நரசிம்ம ஸ்வாமியை தரிசித்து விட்டு ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க பீதிகாபுரம் வந்து கொண்டிருந்தனர். இருவரும் மங்களகிரியில் "யோகினி குரூரம்மாவின் ஆசி நிறைவேறினால் எங்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் கிடைக்கும். அவரும் ஸ்ரீ தத்தாத்ரேயரும் வேறு அல்ல. நரசிம்ம தேவராகிய உங்களுடைய ஸ்தூல தரிசனம் பெற வேண்டுகிறோம்!!" என்று வேண்டி கொண்டனர். நூறு வயதுடைய அந்த சிறந்த யோகினி பெண்மணியின் ஆசியின் பலனால் அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனத்தை அங்கு பெற்றனர். இது ஒரு அற்புதமான விஷயம்.

அந்த மரக் குச்சிகளில் தீ பற்றி எரியத் தொடங்கியவுடன் சிதையில் ஒரு பிணத்திற்கு ஏற்படும் வேதனையை போலத் தாங்க முடியாத வேதனையை பில்வாமங்களாவும் சிந்தாமணியும் அடைந்தனர்.

சிறிது நேரத்தில் அவர்களை ஒத்த ஒரு கருப்பு உருவம் அவர்கள் உடலில் இருந்து வெளியேறி நெருப்பில் விழுந்து கடுமையாக அழுதது. அந்தக் கருப்பு உருவம் முழுவதும் எரிந்து முடிந்தவுடன் பில்வாமங்களாவுக்கும் சிந்தாமணிக்கும் நினைவு திரும்பியது. அந்த நேரத்தில் ஆதிவாசிகள் தங்கள் சகோதரி செஞ்சுலக்ஷ்மியுடன் அங்கு வந்தனர். அவர்கள் நரசிம்ம தேவரின் கைகளை இறுக்கமாகக் கட்டி ஸ்ரீ ஸ்ரீபாதரின் முன் நிறுத்தினர்.

இது போன்ற அதிசயமான மற்றும் வினோதமான விஷயங்கள் வேறு எந்த யுகத்திலும் நடக்கவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் போது நடந்த அதிசயங்களையும் திருவிளையாடல்களையும் கணக்கிடவும் முடியாது கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம் **"நீதான் முந்தைய காலத்து நரசிம்மரா? இது உன் மனைவி செஞ்சுலக்ஷ்மியா? நீதான் ஹிரண்யகசிபுவைக் கொன்று பிரகலாதனை காப்பாற்றியவரா?"** என்று கேட்டதற்கு 'ஆம்' என்று மூன்று முறை கூறினார். செஞ்சு லக்ஷ்மியும் ஸ்ரீ நரசிம்மரும் பிரகாசமான ஒளி ரூபமாக ஸ்ரீ ஸ்ரீபாதரின் உடலில் ஐக்கியமானார்கள். சிந்தாமணி சிறந்த யோகினியாக மாறினாள். ஆதிவாசிகள் மறைந்தனர். பில்வாமங்களா பக்திமானாக மாறி பில்வாமங்கள மகரிஷி என்று அழைக்கப்பட்டார்.

நரசிம்ம வர்மாவின் இந்த நிலத்தில் பல வினோதமான மற்றும் வித்தியாசமான நிகழ்ச்சிகள் நடந்தமையால் '**சித்ரவாடா**' என்கிற கிராமம் இங்கு வரும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அறிவித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பம் சத்தியம். அவரின் விருப்பம் நடந்தே தீரும் என்று கூறினார் சுப்பையா சிரேஷ்டி.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 12

## குலசேகரனின் கதை

சுப்பையா சிரேஷ்டி பல புதிய விஷயங்களைத் தெளிவாக விளக்கிய காரணத்தால் நான் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். நான் தன்னம்பிக்கை பெறுவதை உணர்ந்தேன். சுப்பையா சிரேஷ்டி இவ்வாறு விவரிக்க தொடங்கினார். "ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் உண்மையில் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி. கலியுகத்தின் முடிவில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் கல்கி அவதாரம் எடுத்து வருவார். பொதுவாக கலியுகம் 4,32,000 வருடங்கள் வரை நீளும் என்று பிராமணர்கள் கூறுவார்கள் ஆனால் சந்திர சிந்து வேதத்தின் படி கலியுகத்தில் 5000 வருடங்கள் முடிந்ததும் ஒரு பிரளயம் ஏற்பட்டு சத்ய யுகம் ஸ்தாபிக்கப்படும்"என்றார். என்னுடைய வியப்புக்கு எல்லையே இல்லை. சிரேஷ்டி கூறுவதும் பிராமணர்கள் மூலம் நான் கேள்விப்பட்டதும் மாறாக இருந்தது.

### நம் சுவாசத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் உள்ள தொடர்பு

சுப்பைய சிரேஷ்டி இவ்வாறு பதிலளித்தார். "என் குழந்தாய் சங்கர் பட்!! கலியுகத்தில் 5000 வருடங்களுக்கு பிறகு அதன் உள் பிரிவு முடிந்து விடும். அதற்கு பிறகு இடைநிலைக் காலம் இருக்கும். பின்னர் கலியுகத்தின் உட்பிரிவான சத்ய யுகம் தொடங்கும். கலியுகத்தின் நீளம் மொத்தம் 4,32,000 வருடங்கள் இருந்தாலும் அதில் சில உட்பிரிவு காலங்கள்,சூக்ஷ்மமான காலங்கள் மற்றும் சில பகுதிகளாக பிரிக்கப்பட்ட காலங்களும் அடங்கும்.

இது யோக சாஸ்திரங்கள் அறிந்தவர்களுக்கு நன்றாகப் புரியும். ஒருவருக்கு ப்ரம்மா 120 ஆண்டுகள் ஆயுள் நிர்ணயித்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்படியென்றால் 120 ஆண்டுகள் அவர் ஸ்தூல சரீரத்தில் வாழ வேண்டும் என்பது இல்லை. அதாவது அவர் சாதாரண நிலையில் 120 ஆண்டுகள் வாழ்ந்தால் எவ்வளவு சுவாசத்தை உள்ளிழுத்து வெளியே விடுவாரோ அதற்காக விதிக்கப்பட்ட காலம் என்பதுதான் அதன் பொருள். நிலையற்ற மனம் உடையவர்கள், கோபக்காரர்கள், வேலைகளை அவசரமாக செய்பவர்கள், தினமும் துயரத்தில் வாழ்பவர்கள்,தீய எண்ணங்கள் உடையவர்கள் தங்கள் ஆயுள் சுவாசத்தை குறைந்த காலத்திலேயே செலவிட்டு விடுவார்கள். ஒரு மிகப்பெரிய ஆமை மூச்சை மெதுவாக வெளியே விடுவதால் 300 ஆண்டுகள் வாழ்கின்றது. மிகுந்த நிலையற்ற மனதுடைய குரங்கு குறைந்த காலத்தில் உயிரிழந்து விடுகிறது. உடல் கூறுகள் அனைத்தும் சரியாக இருந்தால் மட்டுமே மூச்சு உள்ளிழுத்தலும் வெளியிடுதலும் சரியாக

இருக்கும். யோகிகள் மூச்சை இழுத்து விட்டு சிறிது நேரம் நிலைநிறுத்திப் பின்னர் தங்கள் அனைத்து உள்ளுறுப்புகளிலும் பரவவிடுவர். இதனால் அவர்களின் மூச்சு சேமிக்கப்பட்டு அவர்கள் நீண்ட காலத்திற்கு வாழ்கின்றனர். மனிதனின் உடலில் உள்ள உயிரணுக்கள் தற்போது பரிணாம வளர்ச்சிக்கு உட்படுத்தப்படும்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பக்தியுடன் பாராயணம் செய்யவதால் கிடைக்கும் பலன்

பத்து வருடங்களுக்கு முன் இருந்தது போல் நமது உடல் இப்போது இருக்காது. பழைய உயிரணுக்கள் அழிந்து புதியவை உருவாகியிருக்கும். அதே போல் பிராண சக்தியும் பல மாற்றங்கள் அடையும். உயிர் அளிக்கக்கூடிய புதிய பிராண சக்திகள் உருவாகும் மற்றும் நோயுற்ற பழைய பிராண சக்திகள் அழிக்கப்படும். அதே போல் மனோசக்தியிலும் பல மாறுதல்கள் ஏற்படும். பழைய எண்ணங்கள் மாறி அல்லது அழிந்து புதிய எண்ணங்கள் தோன்றும். புதிதாக தோன்றும் எண்ணங்கள் தெய்வீக சக்தியையும் அருளையும் ஈர்க்கும் தன்மையுடன் இருக்கும். இதனால் மனத்தூய்மை ஏற்பட்டு பிராண சக்தியும் உடலும் தூய்மை அடையும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் போன்ற புத்தகங்கள் கடவுளின் உருவகம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் சித்தர்கள் மற்றும் யோகிகளின் பிராணன் அடங்கியுள்ளது. இது போன்ற புத்தகங்களை மனதாலோ அல்லது மனதையும் குரலையும் ஒருங்கிணைத்து வாய்விட்டோ படிக்கும் போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மனச் சைதன்யம் அவ்விடத்தை நோக்கி கவரப்படும். பக்தியுடன் இப்புத்தகத்தை பாராயணம் செய்யும் பக்தரின் உடல், உயிர் நிலை,மனக்கஷ்டம் மற்றும் துன்பங்கள் ஆகியவற்றின் அதிர்வலைகள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மனச் சைதன்யத்தை அடைந்துவிடும். அவரிடம் சென்ற அதிர்வலைகள் தூய்மையாக்கப்பட்டு தெய்வீக அருளுடன் கூடிய அதிர்வலைகளாக பக்தனிடம் வந்து சேரும். அச்சூழ்நிலைகளில் பக்தன் இந்த உலகம் மற்றும் அனைத்து உலகங்களிலிருந்தும் சுகம் பெறுவான்.

## நல்லவர்களுக்கு அன்னதானம் அளிப்பதால் கிடைக்கும் பலன்

இந்தப் புத்தகத்தை பாராயணம் செய்து முடித்த பின்னர் பதினோரு நன்மக்களுக்கு உணவோ அல்லது ஏதாவது ஒரு தத்த க்ஷேத்திரத்தின் செலவுக்கு உபயோகமாகும் வகையில் பணமோ கொடுக்கலாம். அப்படிச் செய்தால் மட்டுமே பாராயண பலனை முழுமையாக பெற முடியும். நல்லவர்களுக்குச் செய்யும் அன்னதானத்தினால் நீண்ட ஆயுளை பெறலாம். அப்படி செய்யும் போது பக்தனுக்கே தெரியாத வண்ணம் இன்னும் சில வருடங்களுக்கு அவனுக்கு தேவையான அளவு உணவு உருவாக்கப்படும். அதுமட்டுமல்லாமல் உணவை உண்பவர் திருப்தி அடைந்தால் அவர்களின் மனநிறைவின் அதிர்வலைகள் மற்றும் அதன் யோக முறைக்குத் தொடர்புடைய அமைதி, பலம், திருப்தி மற்றும் செல்வம் ஆகியவை புலப்படா வண்ணம் வெளிப்படும். காலப்போக்கில் அந்த விதைகள் துளிர்விட்டு செழித்து சிறந்த மரமாக ஆகும். ஸ்ரீ கிருஷ்ணர் அன்னை திரௌபதியிடம் இருந்து ஒரே ஒரு பருக்கை பெற்றுக்கொண்டு துர்வாச முனிவர் மற்றும் அவரின் 10000

சீடர்களுக்கும் தேவையான உணவை அளித்தார். ஆகவே நாம் ஸ்ரீ குருவுக்கு பயபக்தியுடன் அளிக்கப்படும் அனைத்தும் புலப்படாத இடத்தில் விதையாக இருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். காலப்போக்கில் இந்த விதைகள் பக்தனுக்கு எல்லா வகையான சுகங்களையும், செல்வங்களையும் அளிக்கும்.

ஒருமுறை ஸ்ரீ கிருஷ்ணரும் சுதாமரும் தர்பை பறிப்பதற்காக காட்டுக்கு சென்றனர். ஸ்ரீகிருஷ்ணர் களைப்பாக இருந்தமையால் சுதாமர் மடியில் படுத்து உறங்கி விட்டார். ஆசிரமத்திலிருந்து கொண்டுவந்திருந்த அவலை ஸ்ரீகிருஷ்ணருக்கு தெரியாமல் சுதாமர் உண்டார். தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன் விழித்தெழுந்தது **"சுதாமா!! எனக்கு பசியாக இருக்கிறது. நாம் வீட்டிலிருந்து கிளம்பும் போது குருபத்தினி பசியாறுவதற்கு ஏதாவது கொடுத்துள்ளாரா?"** என்று கேட்டதற்கு இல்லை என்றார் சுதாமர். **"நீ வாயை மெல்லுவது போல தெரிகிறதே?"** என்று கிருஷ்ணர் கேட்டவுடன் **"ஒன்றும் இல்லையே நான் விஷ்ணு சஹஸ்ரநாமத்தைத்தான் பாராயணம் செய்து கொண்டு இருக்கிறேன்"** என்றார் சுதாமர். "ஓஹோ அப்படியா!! எனக்கு குருபத்தினி நம் இருவருக்கும் அவலை கொடுத்தனுப்பியது போலவும் நீ எனக்கு கொடுக்காமல் உண்பது போலவும் கனவு கண்டேன்" என்று கிருஷ்ணர் கூறினார். பின்னர் சுதாமர் **"ஸ்ரீ கிருஷ்ணா!! நீ மிகவும் அசதியாக இருக்கிறாய். அதுவும் இது பகல் நேரம். பகல் கனவு பலிக்காது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன"** என்றார். ஸ்ரீ கிருஷ்ணர் சிரித்துவிட்டு அமைதியாக இருந்தார். சில காலங்களுக்கு பிறகு சுதாமர் ஏழையாகி குசேலர் (உடை கூட இல்லாதவராக) ஆகிவிட்டார். தன் கஷ்டங்களுக்கு பரிகாரமாக பலமுறை அவர் விஷ்ணு சகஸ்ரநாமத்தை பாராயணம் செய்தார். கடைசியில் ஸ்ரீ கிருஷ்ணரின் கருணை கிடைத்தது. சுதாமாரிடமிருந்து அவலைப் பெற்றுக்கொண்டு அளவில்லாத செல்வத்தை அளித்தார் ஸ்ரீகிருஷ்ணர். களைப்பாக இருந்தபோது ஸ்ரீகிருஷ்ணரை தன் மடியில் குசேலர் வைத்துக் கொண்டமையால் ஸ்ரீ கிருஷ்ணர் குசேலரை அன்னப்பறவையின் சிறகுகளால் ஆன மெத்தையில் படுக்கவைத்து பாதத்தை பிடித்து விட்டார். இதன் மூலம் கர்மாவின் கோட்பாடு எப்படியெல்லாம் மர்மமாக வேலை செய்யும் என்பதை கடவுள் நமக்கு உணர்த்துகிறார்.

## மல்யுத்த வீரனின் அகங்காரத்தை அழிப்பது


ஸ்ரீ ஸ்ரீபாதர் 4 வயது குழந்தையாக இருந்தபோது வர்மக்கலையின் ரகசியங்களைக் கற்ற மலையாளி ஒருவன் பீதிகாபுரம் வந்தான். அவன் பெயர் குலசேகரன். நம் உடல் பாகங்களை கட்டுப்படுத்தும் உயிர் மையங்களுக்கு **'மர்மம்'** என்று பெயர். அந்த மர்ம புள்ளிகளைத் தொட்டாலோ அடித்ததாலோ அந்த மனிதன் தன் சுயநினைவு இழப்பதற்கோ அல்லது உடல் செயலற்று ஊனம் ஏற்படுவதற்கான சாத்தியம் உண்டு. மக்களுக்கு இக்கலையை உபயோகப்படுத்தி அந்த புள்ளிகளில் பாதிக்கப்பட்டுள்ள நோயை குணப்படுத்தலாம் அல்லது நோயின் அறிகுறியை தடுக்கலாம். தற்காப்புக் கலையைத் தவிர சில சிறப்பு மர்மங்களுக்கு அடங்கல் என்று பெயர். அடங்கல் மர்மங்களை கொண்டு பிரச்சனைகளை குணப்படுத்துவது பற்றி கற்பிக்கும் மருத்துவக் கலைக்கு மர்ம சிகிச்சை என்று பெயர். சுஸ்ருதா

என்கிற பண்டைய கால அறுவை சிகிச்சை நிபுணர் இம்முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இந்த கலை பன்னிரண்டு ஆபத்தான மர்ம புள்ளிகளின் மீதுதான் கவனம் செலுத்துகிறது. இக்கலையை ஒரு குருவிடம் கற்றுக் கொண்டு உலக நன்மைக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். பிராண சக்தி இந்த மர்ம புள்ளிகளில்தான் மிகுதியாக இருக்கும். இப்புள்ளிகளில் அதிகமான அழுத்தம் கொடுத்தாலோ அல்லது அடித்தாலோ ஒருவரின் உயிருக்கே ஆபத்தாக முடியும். சில மர்ம புள்ளிகளை அழுத்தும் போது உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றப்படுவது மட்டுமல்லாது குணப்படுத்தவே முடியாத பல கொடுமையான நோய்களைக் கூட குணப்படுத்தி விடலாம்.

குலசேகரன் ஏழுமலையானின் (வெங்கடேஸ்வரர்) பக்தன். பல ராஜ்ஜியங்களுக்குச் சென்று அனைத்து மல்யுத்த வீரர்களையும் வென்று வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்தான். உரிய நேரத்தில் பீதிகாபுரம் வந்தான். பீதிகாபுரத்தில் கூட மல்யுத்த வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று கூடி குலசேகரன் கையால் தங்களுக்கு மரண அடி விழுந்து நம் ஊரின் கௌரவம் கண்டிப்பாக அழிந்துவிடும் என்று முடிவெடுத்தனர். முனிவர்களுக்கு பல வினோத சக்தியுண்டு என்பது தெரிந்த ஒன்றுதான். தெரிந்தவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம் என்று கூறுகிறார்கள். அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் அடைக்கலத்தை நாடிச்சென்று இந்த கடினமான பிரச்சனையைத் தீர்க்க எண்ணினர். அச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டில் இருந்தார். ஸ்ரீ நரசிம்ம வர்மா அவருக்கு வெள்ளி ஜரிகையால் ஆன தலைப்பாகை ஒன்றைச் செய்து வைத்திருந்தார். அவர் தன் வயல்களை கண்காணிக்க செல்லும்போது ஸ்ரீ ஸ்ரீபாதரை அந்த தலைப்பாகையை அணிந்துகொள்ளச் செய்து தன்னுடன் அழைத்துக்கொண்டு குதிரை வண்டியில் ஏறி செல்வது வழக்கம். அன்று தலைப்பாகையை அணியப்போகும் சமயத்தில் ஸ்ரீ நரசிம்ம வர்மாவை சற்று நேரம் காத்திருக்க சொன்னார் ஸ்ரீ ஸ்ரீபாதர். இதற்கிடையில் பீதிகாபுரத்தின் மல்யுத்த வீரர்கள் அங்கு வந்தனர். அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அடைக்கலம் அடைந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களுக்கு உத்தரவாதம் அளித்தார்.

பீதிகாபுரத்தில் பீமா என்கிற கூன் முதுகுடன் ஒருவன் இருந்தான். அவன் உடல் மிகவும் நெளிந்து இருக்கும். மேலும் மிகவும் பலவீனமானவன். ஸ்ரீ நரசிம்ம வர்மா அவனால் எந்த வேலைகளையும் செய்ய முடியாவிட்டாலும் அவன் சேவைகளைப் பெற்றுக்கொண்டு சம்பளம் கொடுப்பார். அவனுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அளவற்ற அன்பும் பாசமும் மற்றும் அசைக்கமுடியாத நம்பிக்கையும் இருந்தது. அவன் எப்போதும் தன் கூன் முதுகை சரி செய்யுமாறு ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் வேண்டிக்கொள்வான். சரியான நேரம் வரும் போது அவன் முதுகை நேராக்குவதாக அவனிடம் ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறுவார். **“அந்த மல்யுத்த வீரனை கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்? நம்மிடம் பீமா இருக்கிறானே. அவன் குலசேகரனை எதிர் கொள்வான். பீமா போன்ற ஒருவன் நம்மிடம் இருக்கும் போது என்ன பயம்?”** என்றார்.

ஸ்ரீ தத்தரின் வழிமுறைகள் அனைத்தும் விசித்திரமாகவும் வினோதமாகவும் இருக்கும். குலசேகரனோடு போட்டியிட பீமாவை தேர்ந்தெடுத்ததை எண்ணி



பீதிகாபுர மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். சிலர் அந்த சண்டையில் ஒன்று பீமா இறந்துவிடுவான் அல்லது ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக ஒளி வெளிப்படும் என்று எண்ணினர். ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்கு அருகில் மல்யுத்த மேடை அமைக்கப் பட்டிருந்தது. அதைக் காண மக்கள் கூட்டமாக வந்திருந்தனர். சண்டை தொடங்கியது. குலசேகரன் அடித்த ஒவ்வொரு அடியிலும் பீமாவின் உடல் சக்தி பெற்றுக்கொண்டே வந்தது. பீமாவை எந்த இடத்தில் குலசேகரன் அடித்தானோ அதே இடத்தில் அவனுக்கு அடி விழுந்தது. குலசேகரன் வலுவிழந்தான். பீமாவின் கூன் முதுகு நிமிர்ந்து அவன் பலசாலி ஆனான்.

குலசேகரன் ஸ்ரீ ஸ்ரீபாதரின் காலில் விழுந்து நமஸ்கரித்தான். "குலசேகரா!! மனித உடலில் மொத்தம் 108 மர்ம முடிச்சுகள் உள்ளன. உனக்கு அவற்றைப் பற்றி அதீத ஞானம் உள்ளது. ஆனால் பீமா என்னை முழுவதுமாக நம்பினான். நான்தான் அவனுடைய பாதுகாவலன் என்ற ஞானம் அவனுக்கு இருந்தது. உன்னுடைய ஞானம் பெரிதா அல்லது அவனுடைய ஞானம் பெரிதா? நீ ஆணவத்தில் ஆடினாய். எனக்கு தெய்வீக திருவிளையாடல்கள் மிகவும் பிடிக்கும். நானே சட்டத்தை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தி அதற்கான பலவிதமான தண்டனைகளையும் அளிப்பவன். இன்று முதல் பீமாவின் பலவீனம் உன்னிடம் வந்து சேரும். நீ பலவீனமானவனாக வாழ்வாயாக! எனினும் உனக்கு உணவுக்கும் உடைக்கும் எந்த பற்றாக்குறையும் இருக்காது. உன் உடலின் அனைத்து பிராண சக்திகளையும் பீமா பெற்றுக்கொண்டு வலிமையான மனிதனாக இருப்பான். இந்த உலகத்தில் நான்தான் பலசாலி. நான் திருப்பதியில் இல்லையா? என் பாதுகாப்பை நாடி வந்த போதும் நீ இந்த மர்மக்கலையை தவறாக பயன்படுத்தினாய். ஆகவே இந்த மர்மக்கலையை உன்னிடம் இருந்து நான் திரும்ப பெற்றுக் கொள்கிறேன்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் சில நொடிகள் வெங்கடேஸ்வரர் பத்மாவதி போல் காட்சி கொடுத்து அவனை திருப்தி படுத்தினார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக திருவிளையாடல்களைப் புரிந்துகொள்ளவும், சிந்திக்கவும் முடியாது. அவரின் அருளை பெறுவது மட்டுமே நமக்கு சரியான மார்க்கம்". இவ்வாறு சுப்பையா சிரேஷ்டி முடித்துக்கொண்டார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 13

## ஆனந்த சர்மா அளித்த தகவல் தொகுப்பு

நான் சுப்பையா சிரேஷ்டியிடம் விடைபெற்றுக் கொண்டு என் குருவபுர பயணத்தைத் தொடர்ந்தேன். இரவு நேரத்தில் ஒரு கிராமத்தை அடைந்தேன். யார் வீட்டில் யாசகம் பெறலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு பிராமணர் அவர் வீட்டின் வாயிலில் உள்ள திண்ணையில் அமர்ந்து கொண்டு அருகில் அமர்ந்திருப்பவர்களிடம் உரையாடிக்கொண்டிருந்தார். அவர் கண்கள் பிரகாசமாக இருந்தன. அவர் கண்களில் இருந்து கருணை மழை பொழிந்து கொண்டிருந்தது. அவர் என்னை அன்புடன் அவர் வீட்டிற்குள் அழைத்து உணவளித்தார். நான் உணவருந்திய பின் அவர் பேசத் தொடங்கினார். "குழந்தாய்!! என் பெயர் ஆனந்த சர்மா. நான் பக்தியுடன் காயத்ரி மந்திரத்தை ஜெபிப்பவன். காயத்ரி தேவி சில நாட்களுக்கு முன் என் மனக்கண்ணில் தோன்றி ஒரு தத்த பக்தன் இங்கு வரப் போவதாக கூறினாள். அவருக்கு திருப்திகரமாக உணவு அளிக்குமாறும் அப்படி செய்தால் ஸ்ரீதத்தரை தரிசித்த அளவுக்கு புண்ணியம் கிடைக்கும் என்று கூறினாள். அவள் கூறிய படி அனைத்தும் நடந்து விட்டது. எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது" என்றார். நான் அவரிடம் "ஐயா,நான் வெறும் தத்த பக்தன்தான். ஸ்ரீ தத்தர் இந்த பூமியில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற பெயரில் உலாவி கொண்டிருப்பதை கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க குருவபுரம் நோக்கி சென்று கொண்டிருக்கிறேன். என் பெயர் சங்கர் பட். நான் கர்நாடகத்தை சேர்ந்த பிராமணன்"என்றேன்.

### கண்வ மஹரிஷியின் ஆஸ்ரமத்தை பற்றிய விளக்கம்

என் வார்த்தைகளைக் கேட்டு ஆனந்த சர்மா சிரித்தார். அவர் "ஐயா! என் தந்தை எனக்கு உபநயனம் செய்து வைத்துக் கொண்டிருந்த போது ஒரு அவதூதர் எங்கள் வீட்டிற்கு வந்தார். எங்கள் வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் அவருக்கு எல்லா சேவைகளும் செய்தோம். அவர் காயத்ரி மந்திரத்தைப் பயிற்சி செய்வது பற்றி பல விஷயங்களை விளக்கினார். எங்களை பெஞ்சலகோனாவில் உள்ள நரசிம்மரைத் தரிசிக்கச் சொன்னார். என்னை என் தந்தை பெஞ்சலகோனாவிற்கு அழைத்துச் சென்றார். எதிர்பாராதவிதமாக நரசிம்மரைத் தரிசித்த பின் என் தந்தை தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். அந்த தியானம் பல நாட்களுக்கு இரவும் பகலும் தொடர்ந்தது. எனக்கு பயமாக இருந்தது. பசிக்கத் தொடங்கியது. முன் பின் தெரியாத ஒருவர் எனக்கு உணவளித்தார். என்னை யாருமே போக முடியாத காட்டுப் பாதை வழியாக ஒரு குகைக்குள் அழைத்து சென்றார். அங்கு சென்றவுடன்

அவர் மறைந்துவிட்டார். அந்த குகையில் ஒரு வயதான துறவியைக் கண்டேன். அவர் கண்கள் எரியும் தீ பந்து போல இருந்தது. அவருக்கு 101 முனிவர்கள் சேவை செய்து கொண்டிருந்தனர். அந்த வயதான துறவிதான் கண்வ மகரிஷி என்றும் இதுதான் அவர் தவம் செய்யும் இடம் என்றும் அவரின் சீடர்கள் இளைஞர்கள் போல் தோன்றினாலும் அவர்களுக்கு 1000 வயது என்றும் கூறினார். மேலும் நான் ஸ்ரீ தத்தாத்ரேயரை அவதூதர் வடிவில் தரிசனம் செய்ததன் பலனால்தான் இந்த தபோ பூமிக்கு என்னால் வர முடிந்தது என்றார்.

நான் ஆச்சரியத்தையும் பெரும் மகிழ்ச்சியையும் அனுபவித்தேன். என்னால் எதுவும் பேச முடியாமல் உடல் நடுங்கத் தொடங்கியது. பின்னர் கண்வ மகரிஷி 'இப்போது ஸ்ரீ தத்தர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் பீதிகாபுரத்தில் உள்ளார். அவர் எங்களை அன்புடன் பார்த்துக் கொள்ளுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்ததாக அவரிடம் தெரிவித்து விடுங்கள். விரைவில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தரிசனம் உங்களுக்கு கிடைக்கட்டும்!' என்று கூறி தன் புனிதமான கரங்களை என் தலை மீது வைத்து ஆசீர்வதித்தார். மறுகணமே என் தந்தை இருந்த இடத்திற்கு நான் சென்றுவிட்டேன். என் தந்தைக்கு தியானம் கலைந்தவுடன் நாங்கள் இருவரும் எங்கள் கிராமத்தை அடைந்தோம். எனக்கு ஆசிரமத்தில் ஏற்பட்ட அனுபவத்தை பற்றியோ அல்லது ஸ்ரீ தத்தாத்ரேயரின் புது அவதாரம் பீதிகாபுரத்தில் இருப்பதைப் பற்றியோ நான் என் தந்தையிடம் கூறவில்லை.

## ராஜமுந்திரிக்கு அருகில் இருக்கும் புனிதம் வாய்ந்த பட்டிசாசலா க்ஷேத்திரம்

காலம் போய்க்கொண்டே இருந்தது. கண்வ மஹரிஷியின் ஆசீர்வாத மகிமையால் எனக்கு தியானத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதுகைகள் தரிசனம் கிடைத்தது. ஒரு சமயம் எங்கள் வீட்டிற்கு சில உறவினர்கள் வந்திருந்தனர். அவர்கள் புனித க்ஷேத்திரங்களுக்கு செல்ல வேண்டும் என்றும், புனித நதிகளில் நீராட வேண்டும் என்றும் விருப்பப்படுவதாகக் கூறினார்கள். அவர்கள் என் தந்தையும் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அப்போது எனக்கு 10 வயது இருக்கும். என் தந்தைக்கு என் மேல் அலாதி பிரியம். ஆதலால் என்னையும் அவர்களுடன் வரவேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றார். நானும் சம்மதித்தேன். கோதாவரி நதிக்கரையில் அமைந்திருக்கும் நகரம் ராஜமகேந்திரவரம் (ராஜமுந்திரி). ராஜமகேந்திரவரத்திற்கு வடக்கில் அமைந்துள்ள மலைகளில் சில முனிவர்கள் தவம் புரிந்து வருகிறார்கள். இன்னும் சில முனிவர்கள் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள மலைகளில் தவம் புரிந்து வருகிறார்கள்.

கோதாவரி நதிக்கு மத்தியிலும் ராஜமகேந்திரவரத்திற்கு சற்று தூரத்தில் அமைந்துள்ளது பட்டிஷாச்சல என்கிற புனித க்ஷேத்திரம். பட்டிஷாச்சலத்திலும் ராஜமகேந்திரவரத்தின் கோடி லிங்க க்ஷேத்திரத்திலும் மஹாசிவராத்திரியின் போது இந்த முனிவர்கள் வேதத்தை பாராயணம் செய்வது வழக்கம். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் இருந்து வரும் முனிவர்கள் வழியில் எதுருலபள்ளி என்கிற இடத்தில் சந்தித்து கொள்வர். எதுருலபள்ளிக்கு அருகில் இருக்கும்

முனிகூடலி என்கிற இடத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வர். அவர்கள் பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு விவாதங்கள் மேற்கொள்வர். என் நல்வினைகளின் பலனால் முனிகூடலி கிராமத்திற்கு என் தந்தையுடன் செல்லும் பாக்கியம் பெற்றேன். இது அனைத்தும் ஸ்ரீ தத்தரின் திருவிளையாடல்.

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரே ஸ்ரீ தத்தாத்ரேயரின் கலியுகத்தின் முதலும் முதன்மையான அவதாரம்

மிகவும் ஆழமான விஷயங்களான தத்துவ விவரங்கள்,யோக சாஸ்திரங்களை பற்றிய வேதங்கள் மற்றும் ஜோதிட சாஸ்திரங்களை பற்றிய விஷயங்கள் அங்கு விவாதத்திற்கு வந்தது. அங்கு விவாதத்தில் கலந்து கொண்ட முனிவர்கள் அனைவரும் ஒருமனதாக ஸ்ரீ தத்தாத்ரேயர் பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்ற பெயருடன் அவதரித்துள்ளார் என்றும் கலியுகத்தில் இதுவே ஸ்ரீ தத்தரின் முதலும் முதன்மையான விரிவான அவதாரமாகும் என்று அறிவித்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதரை நேரில் தரிசிக்க முடியாதவர்கள் மனதால் தியானத்தின் மூலம் தரிசிக்கலாம் என்றும் இந்த அவதாரம் அமைதியும் முழுமையான கருணையும் நிறைந்த ஒன்று என்பதையும் அந்த முனிவர்கள் கூறினார்கள்.

பிறகு என் தந்தை என்னை பீதிகாபுரத்திற்கு அழைத்து சென்றார். எங்களுடன் வந்த பண்டிதர்கள் பாதகயா தீர்த்தத்தில் நீராடி விட்டு ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள அனைத்து தெய்வங்களையும் தரிசித்தனர். அங்கிருந்து வேத மந்திரங்களை ஓதிக்கொண்டே ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்கு சென்றனர். ஸ்ரீ பாப்பண்ணார்யாவும் ஸ்ரீ அப்பலராஜசர்மாவும் வேத மந்திரங்களை ஓதிக்கொண்டே எங்களை வரவேற்றனர். அது ஒரு கண்கொள்ளாக்காட்சி. பூர்வ ஜென்மப் புண்ணியங்கள் இல்லையென்றால் இது போன்ற தெய்வீகமான மற்றும் அழகான காட்சியை காண்பதற்கு சாத்தியம் இல்லை.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக உருவத்தின் வர்ணணை

எங்களுக்கு ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்திருந்தனர். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு 5 வயது கூட நிரம்பியிருக்காது. பால் வடியும் அந்த வயதில் ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் பிரகாசமாகவும், பளபளப்பாகவும், தெய்வீக ஒளியுடன் அழகாகவும் உயரமாகவும் காணப்பட்டார். அபரிமிதமான அன்பும் கருணையும் அவர் கண்களில் இருந்து பெரிய நீரோடை போல் பொங்கியது. நான் அவர் பாதத்தைத் தொட்டவுடன் அவர் தன் நம்பிக்கை அளிக்கும் கரங்களை என் தலை மீது வைத்தார். அவர் என்னை (ஆனந்த சர்மா), **“என் அருள் உனக்கு இந்த பிறவியில் மட்டுமல்ல உன் அடுத்த பிறவிகளிலும் இருக்கும். உன் கடைசி பிறவியில் அவதூதராக ஆகி வெங்கையா என்கிற பெயருடன் விளங்குவாய். அப்போது அக்னிஹோத்ரியாக (தினமும் ஹோமம் வளர்ப்பது) இருந்து பிரகாசிப்பாயாக; வறட்சியான காலங்களில் மழை பொழிய வைக்கும் சக்தி படைத்தவராகவும் குடும்பஸ்தர்களின் கஷ்டங்களைப் போக்கும் சகித்தியுள்ளவராகவும் விளங்குவாய்”**

என்று ஆசீர்வதித்தார். இவ்வாறு கூறி ஆனந்த சர்மா முடித்துக்கொண்டார்.

பின்னர் நான் ஆனந்த சர்மாவிடம் "ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் திருவிளையாடல்களை ஒவ்வொரு முறை நான் கேட்கும் போதும் மேலும் மேலும் வினோதமாகவும் விசித்திரமாகவும் உள்ளது. காயத்ரி மந்திரத்தை பக்தியுடன் தொடர்ந்து பாராயணம் செய்வதன் தெய்வீக ரகசியத்தை பற்றி விளக்குங்களேன்" என்று கேட்டுக்கொண்டேன்.

## காயத்ரி மந்திர அக்ஷரங்களின் மகிமையும் அதன் விளக்கங்களும்

ஆனந்த சர்மா விளக்கத் தொடங்கினார். "காயத்ரி சக்தி என்பது பிரபஞ்சத்தின் அனைத்து உலகங்களிலும் பரவியுள்ளது. இந்த சக்தியுடன் தொடர்பை ஸ்தாபித்து கொண்டால் சூக்ஷ்ம குணங்கள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வரும். இதன் மூலம், உடல், மனம் மற்றும் ஆத்மாவோடு தொடர்புடைய அனைத்து பொக்கிஷங்களையும் பெற முடியும். நரம்புகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கும், அந்த குழுமியுள்ள நரம்புகளை கிரந்தி (முடிச்சு) என்று அழைப்பர்.

உடலில் உள்ள பல்வேறு கிராந்திகளில் பல சக்திகள் குவிந்துள்ளது. ஜெப யோக (ஜெபம்: கடவுள் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது) முறையில் கைதேர்ந்தவர்கள் அந்த மந்திரங்களை ஜெபிக்கும் போது அந்த கிரந்திகளில் குவிந்துள்ள சக்திகள் வெளியேறும்.

ஓம் :- இம்மந்திரத்தை ஜபித்தால் தலைக்கு 6 அங்குலத்திற்கு மேல் சக்தி எழும்பும்

பூ :- இம்மந்திரத்தை ஜபித்தால் வலது கண்ணுக்கு 4 அங்குலத்திற்கு மேல் சக்தி எழும்பும்

புவ :- இம்மந்திரத்தை ஜபித்தால் மனிதனின் மூன்றாவது கண்ணுக்கு 3 அங்குலத்திற்கு மேல் சக்தி எழும்பும்

சுவ :- இம்மந்திரத்தை ஜபித்தால் இடது கண்ணுக்கு 4 அங்குலத்திற்கு மேல் சக்தி எழும்பும்

## இந்த பீஜாக்ஷர மந்திரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள நோக்கத்திற்காக உச்சரிக்க வேண்டும்:

| எழுத்தின் எண் | விளக்கம் | மந்திரம் |
|---|---|---|
| 1. | ஆஞ்ஞா சக்கரத்தில் உள்ள தாபிணி கிரந்தியில் பொதிந்திருக்கும் சாபால்ய சக்தியை விழிப்படைய செய்ய | தத் |
| 2. | இடது கண்ணில் உள்ள சபலதா கிரந்தியின் பொதிந்திருக்கும் பராக்கிரம சக்தியைத் தூண்ட | ச |
| 3. | வலது கண்ணில் உள்ள விஸ்வ கிரந்தியில் குவிந்திருக்கும் பாலன சக்தியைத் தூண்ட | வி |

| | | |
|---|---|---|
| 4. | இடது காதில் உள்ள துஸ்தி கிரந்தியில் குவிந்திருக்கும் மங்களகர சக்தியை எழுப்ப | து: |
| 5. | வலது காதில் உள்ள வராத கிரந்தியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள யோக சக்தியை அடைய | வ |
| 6. | மூக்கின் அடிப்பகுதியில் உள்ள ரேவதி க்ராந்தியில் குவிந்துள்ள பிரேம சக்தியை அடைய | ரே |
| 7. | மேல் உதட்டில் உள்ள சூக்ஷ்ம கிரந்தியில் அமைந்துள்ள ஞான சக்தியைத் தூண்ட | நி |
| 8. | கீழ் உதட்டில் உள்ள ஞான கிரந்தியில் அமைந்திருக்கும் தேஜா சக்தியைத் தூண்ட | யம் |
| 9. | தொண்டையில் உள்ள பார்க கிரந்தியில் குவிந்துள்ள ரக்ஷனா சக்தியைத் தூண்ட | பர் |
| 10. | உணவுக்குழாயில் அமைந்துள்ள கோமதி கிரந்தியில் குவிந்துள்ள புத்தி சக்தியை அடைய | கோ |
| 11. | இடது மார்பின் மேல் பகுதியில் உள்ள தேவிகா கிரந்தியில் இருக்கும் தமன சக்தியை எழும்பச் செய்ய | தே |
| 12. | வலது மார்பின் மேல் பகுதியில் உள்ள வாராஹி கிரந்தியில் குவிந்துள்ள நிஷ்டா சக்தியை எழும்பச் செய்ய | வ |
| 13. | விலா எலும்பும் வயிற்றின் மேல் பாகமும் சந்திக்கும் இடத்தில் உள்ள சிம்ஹினி க்ராந்தியில் குவிந்துள்ள தாரண சக்தியைத் தூண்ட | ஸ்ய |
| 14. | கல்லீரலில் உள்ள தியான கிரந்தியில் குவிந்துள்ள பிராண சக்தியைத் தூண்ட | தீ |
| 15. | மண்ணீரலில் உள்ள மரியத க்ராந்தியில் குவிந்துள்ள சம்யம சக்தியைத் தூண்ட | ம |
| 16. | தொப்புளில் உள்ள ஸ்புட கிரந்தியில் குவிந்துள்ள தபோ சக்தியை எழும்பச் செய்ய | ஹி |
| 17. | முதுகெலும்பின் முடிவில் உள்ள மேதா கிரந்தியில் உள்ள தூர்தர்ஷிதா சக்தியைத் தூண்ட | தி |
| 18. | இடது தோளில் உள்ள யோகமாயா கிரந்தியில் குவிந்துள்ள அந்தர்நிகிதா சக்தியைத் தூண்ட | யோ |
| 19. | வலது தோளில் உள்ள யோகினி கிரந்தியில் குவிந்துள்ள உட்பதனா சக்தியை எழும்பச் செய்ய | யோ |
| 20. | வலது முன்கையில் உள்ள தாரிணி கிரந்தியில் குவிந்துள்ள சரசத சக்தியை எழும்பச் செய்ய | நஹ் |

| | | |
|---|---|---|
| *21.* | இடது முன்கையில் உள்ள பிரபாவ கிரந்தியில் அமைந்துள்ள ஆதர்ஷ சக்தியைத் தூண்ட | பிர |
| *22.* | வலது மணிக்கட்டில் உள்ள உஷம கிரந்தியில் அமைந்துள்ள சாகச சக்தியைத் தூண்ட | சோ |
| *23.* | வலது உள்ளங்கையில் உள்ள திருஷ்ய கிரந்தியில் குவிந்துள்ள விவேக சக்தியை எழும்பச் செய்ய | த |
| *24.* | இடது உள்ளங்கையில் உள்ள நிரஞ்சன கிரந்தியில் குவிந்துள்ள சேவா சக்தியை விழிப்படையச் செய்ய | யாத் |

இந்த வழியில் காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களுக்கும் நம் உடலில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 24 கிரந்திகளுக்கும் அந்த கிரந்திகளில் குவித்துள்ள 24 சக்திகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

எண் 9 மாற்றமில்லா பிரம்ம தத்துவத்தை (பிரம்மத்தின் குணம்) குறிக்கிறது. எண் 8 மாய தத்துவத்தை (மாயையின் குணம்) குறிக்கிறது.

## 'தோ சௌபதி தேவ் லக்ஷ்மி' - என்கிற வரியின் விளக்கம்

ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருக்கு பிடித்தவர்கள் வீட்டிலிருந்து 2 சப்பாத்திகளை ஏற்றுக்கொள்வார். அவர் '**தோ சௌபதி தேவ் லக்ஷ்மி**' என்று கூறுவதற்கு பதில் '**தோ சப்பாத்தி தேவ் லக்ஷ்மி**' என்று கூறுவார். இங்கு தோ என்கிற ஒலி இரண்டை குறிக்கிறது. சௌ என்கிற ஒலி நான்கை குறிக்கிறது. பதி தேவ் என்கிற ஒலி பரமேஸ்வரனை (மிக உயர்ந்த கடவுள்) சுட்டி காட்டி, எண் 9 ஆல் குறிக்கப்படுகிறது. '**லக்ஷ்மி**' என்கிற ஒலி மாயையின் உருவத்தையும் அதை எண் 8 ஆல் குறிக்கப்படுகிறது. அதனால்தான் 2498 என்பது மாய எண்ணாக உருவானது. ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த எண்ணை உபயோகப்படுத்தி தன்னை காயத்ரி தேவி, பரமாத்மா மற்றும் பராசக்தி என்று உணர்த்துகிறார் என்று ஆனந்த சர்மா தெளிவாக விளக்கினார்.

பின்னர் நான் "**ஐயா! நீங்கள் காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களை பற்றிய விளக்கியதை என்னால் ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடிந்தது. எண் 9 பரமாத்மவையும் எண் 8 மாயையும் குறிப்பதாக கூறினீர்களே**" என்றேன்.

## எண் 9 ன் விளக்கம்

ஆனந்த சர்மா விளக்கத் தொடங்கினார்."என் அருமை சங்கர் பட் !! பரமாத்மா இந்த பிரபஞ்சத்தையே கடந்தவர். மற்றும் எந்த மாறுதலுக்கும் உற்படாதவர். எண் 9 என்பது ஒரு வினோதமான எண். 9 ஐ ஒன்றுடன் பெருக்கினால் 9 கிடைக்கும்.9 ஐ இரண்டுடன் பெருக்கினால் 18 கிடைக்கும். ஒன்றையும் எட்டையும் கூட்டினால் அதன் மொத்தத் தொகையை 9 கிடைக்கும் (1+8=9). அதேபோல் ஒன்பதுடன் எந்த எண்ணை பெருக்கி அந்த எண்களை கூட்டினால் அதன் கூட்டுதொகை 9 ஆகவே இருக்கும்(9x3=27 மற்றும் 2+7=9). இந்த முறையில்தான் எண் 9 என்பது எந்த மாறுதலும் இல்லாத உயர்ந்த தத்துவத்தை குறிக்கும்.

## காயத்ரியை பற்றிய விளக்கம்

அதுமட்டுமில்லை காயத்ரி மந்திரம் ஒரு கற்பக விருட்சம் போன்றது. ஓம் என்கிற மந்திரம் பூமியில் இருந்து வெளிவரும் மரத்தின் அடித்தண்டு. 'ஓம்காரத்தை' ஒருவர் ஜபித்தால் கடவுள் இருப்பை உணர்ந்து கொள்வது மட்டுமல்லாமல் பக்தியும் அதிகரிக்கும். 'பூ:', 'புவ:', 'ஸ்வ:' என்பது அத்தண்டிலிருந்து வளர்ந்த மூன்று கிளைகள்.'பூ:' என்கிற அக்ஷரம் நம்மை நாமே அறிந்துகொள்ளும் ஞானத்தை அளிக்கிறது. 'புவ:' என்கிற அக்ஷரம் ஒரு உயிரினம் உடலுடன் ஜீவித்திருக்கும் போது கர்மயோகத்தை கடைபிடிக்க வேண்டும் என்பதை பரிந்துரைக்கிறது. 'ஸ்வ:' என்கிற அக்ஷரம் இருமைகளான சுகம் -துக்கம், ஆசை-வெறுப்பு போன்ற எண்ணங்களை ஒன்று போல் பாவித்து சமாதி நிலையை அடைய உதவுகிறது.

'பூ' : என்கிற கிளையில் இருந்து 'தத்', 'சவிது:', 'வரேண்யம்' என்கிற 3 துணை கிளைகள் தோன்றின. 'தத்' ஒருவனுக்கு வாழ்க்கையின் ஞானத்தை அளிக்கிறது. 'சவிது:' உடலுக்கு சக்தியை அளிக்கிறது, 'வரேண்யம்' ஒரு மனிதனிடம் இருக்கும் மிருக உள்ளுணர்வுகளை நீக்கி தெய்வீகத் தன்மையுடையவனாக உருமாற்றம் அடைய உதவுகிறது.

'புவ' : என்கிற கிளையில் இருந்து 'பர்கோ' 'தேவஸ்ய' 'தீமஹி ' என்கிற 3 துணை கிளைகள் தோன்றின. 'பர்கோ' தூய்மையை அதிகரிக்கிறது.'தேவஸ்ய' தேவர்களுக்கு மட்டும் உரித்தான ஞானதிருஷ்டியை வழங்குகிறது. 'தீமஹி' நற்குணங்களை அதிகரிக்கிறது.

'ஸ்வ' : என்கிற கிளையிலிருந்து 'தீயோ', 'யோ ந:', ப்ரசோதயாத்' என்கிற துணை கிளைகள் தோன்றின. 'தீயோ' பகுத்தறியும் தன்மையை வளர்கிறது. 'யோ நஹ:' ஒழுங்கான கட்டுப்பாடை உண்டாக்குகிறது. 'ப்ரசோதயாத்' அனைத்து உயிரினங்களுக்கும் சேவை செய்யும் மனப்பான்மையை உருவாக்குகிறது.

ஆகவே காயத்ரி என்பது ஒரு கற்பக விருட்சம் என்றும் அதிலிருந்து 3 கிளைகளும், ஒவ்வொரு கிளையிலிருந்தும் 3 துணை கிளைகள் தோன்றியுள்ளது என்பது தெரிந்துகொள். அதனால் எண் 2498 என்பது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை குறிக்கும். உனக்கு எண் 9 ன் முக்கியத்துவத்தை பற்றி ஏற்கனவே விளக்கி விட்டேன்.

## எண் 8ன் விளக்கம்

எண் 8 மாயையின் குணம். இது உண்மையில் அனகா தேவியின் (முப்பெரும் தேவியர்களான லக்ஷ்மி, சரஸ்வதி மற்றும் பார்வதி) குணம்.

8ஐ 1 ஆல் பெருக்கினால் 8 வரும். ($8 x 1 = 8$)

8ஐ 2 ஆல் பெருக்கினால் 16 கிடைக்கும். இதன் கூட்டுத்தொகை 7 இது 8 ஐ விட குறைந்த எண். ($8x2=16$. $1+6=7$)

8ஐ 3 ஆல் பெருக்கினால் 24 கிடைக்கும். இதன் கூட்டுத்தொகை 6 இது 7 ஐ விட குறைந்த எண். ($8x3=24$. $2+4=6$)

இந்த வழியில் அனைத்து உயிரினங்களின் சக்திகளையும் குறைக்கும் சக்தி ஜகன்மாதாவிடம்தான் (பிரபஞ்சத்தின் அன்னையிடம்) உள்ளது. ஒரு சக்திவாய்ந்த மனிதனை இந்த உலகத்திற்கு தாழ்த்தப்பட்ட நிலைக்கு உருமாற்றிக் காட்டும் சக்தி மாயத் தத்துவத்திற்கு உண்டு. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் காயத்ரி தேவியின் ஸ்வரூபம். ஸ்ரீ தத்தரும் அவரின் துணைவி அனகா தேவியும் அவர்தான். அவரை மனதாலும் வார்த்தையாலும் செயலாலும் வணங்குபவர்களின் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

அன்னப்பறவையின் மீது அமர்ந்திருக்கும் பிரம்மிசக்தி அன்னை காயத்ரி தேவியினுள் விடியற்காலையில் வாசம் செய்வாள், கருடனின் மீது அமர்ந்திருக்கும் வைஷ்ணவி சக்தி மதிய நேரத்தில் அவளிடம் வாசம் செய்வாள், ரிஷப வாகனத்தில் பயணிக்கும் சாம்பவி சக்தி அந்தி வேளையில் அவளிடம் வாசம் செய்வாள். காயத்ரி மந்திரத்தின் அதிபதி சவிதா தேவி. த்ரேதா யுகத்தில் சவித்ரு காடக சயன யாகத்தை பாரத்வாஜ முனிவர் பீதிகாபுரத்தில் செய்ததன் காரணமாகத்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அங்கு அவதரித்தார். சவிதா தேவி விடியற்காலையில் ரிக் வேதத்தின் உருவத்தை எடுத்துக் கொள்வாள். மதிய வேளையில் யஜுர் வேதத்தின் உருவத்தை எடுத்துக் கொள்வாள். அந்தி வேளையில் சாமவேதமாகவும் இரவில் அதர்வண வேதத்தின் உருவம் எடுத்துக் கொள்வாள். நாம் கண்ணால் காணும் சூரியன் வெறும் அடையாளம் மட்டுமே. யோகிகள் ஆன்மீக முன்னேற்றத்தில் உச்சத்தை அடையும் போது முக்கோண வடிவில் மிகவும் பிரகாசமாக இருக்கும் '**பிரம்ம யோனி**'யைப் பார்க்கும் பாக்கியம் பெறுவார்கள். அதிலிருந்து ஒவ்வொரு நொடியும் பல கோடிக்கணக்கான பிரம்மாண்டங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். அவை ஒவ்வொரு நொடியிலும் பாதுகாக்கப்பட்டும் அழிந்து கொண்டும் இருக்கும். இம்முறையில்தான் ஒவ்வொரு நொடியும் படைத்தல்,காத்தல் அழித்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த கணக்கிலடங்கா பிரபஞ்சங்களைப் படைத்து காத்து அழிக்கும் சவிதா சக்திக்கு சாவித்ரி என்று பெயர். இருப்பினும் காயத்ரியையும் சாவித்திரியையும் பிரிக்க முடியாது. சடலங்களை எரிக்கப் பயன்படுத்தும் நெருப்பு '**லோஹிதா**' என்று அழைக்கப்படும். சமைக்க பயன்படுத்தும் நெருப்பு 'ரோஹிதா' என்று அழைக்கப்படும். இதேபோலத்தான் மாபெரும் சக்தியான '**காயத்ரி மற்றும் சாவித்ரி**' இந்த உலகம் மற்றும் அனைத்து உலக நிலைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி செயல்முறையின் போது, இந்த உலகத்திற்குத் தொடர்பான பல தேவைகள் இருக்கும். அவை அனைத்தும் அன்னை சாவித்ரியின் கருணையால் நிரம்பியிருக்கிறது. அனைத்து உயிரினங்களின் ஆன்மீக முன்னேற்றமும் காயத்ரி தேவியின் அருளால் நிறைவேற்றப்படுகிறது. இவை சேர்ந்து இருந்தால் மட்டுமே இந்த சாதாரண உலக வாழ்க்கையிலும், முக்தி அடைந்த பிறகு வேறு உலகங்களிலும் எல்லா சுகங்களையும், தெய்வீக அனுபவங்களையும் பெற முடியும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாத கமலத்தை சரணடைந்தவர்கள் இரண்டு உலகங்களிலும் முழுமையை பெறுவர். இதுவே மற்ற தெய்வங்களிடம் கொள்ளும் பக்திக்கும் ஸ்ரீ தத்தரிடம் கொள்ளும் பக்திக்கும் உள்ள துல்லியமான வித்தியாசம்" என்றார்.

ஆனந்த சர்மா விவரித்த அனைத்து விஷயங்களும் மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாக எனக்கு தோன்றியது. பின்னர் நான் "**ஐயா!! நீங்கள் பெரிய பாக்கியசாலி. ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்க போவதாக நான் கேள்விப்பட்டேன். மேலும் அவர் ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதியிடம் தீக்ஷை பெற்றுக்கொள்ள போவதாகவும் கேள்விப்பட்டேன். இது மிகவும் வினோதமாக உள்ளதே?**" என்றேன்.

ஆனந்த சர்மா தன் வர்ணனையை தொடங்கினார். "**பக்தர்களுக்காகத்தான் கடவுள் அவதாரம் எடுத்து பூமிக்கு வருகிறார்.** சாதாரண மனிதனாக பிறந்து ஒரு உன்னதமான மனிதன் தன்னை எப்படி வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும் என்பதை போதித்தும் நடைமுறை படுத்தியும் காட்டுகிறார். துறவற அம்சத்தை உயர்த்த வேண்டியிருந்தது. அவர் சந்நியாசி ஆக வேண்டும் என்றால் அதற்கு குரு வேண்டும். அவதாரத்திற்கு தீக்ஷை அளிக்கும் குரு அதற்கு தகுதி உடையவராக இருக்க வேண்டும். கோடிக்கணக்கான மக்களில் ஒருவர்தான் அதற்கு தகுதி பெறுவார். கடவுளின் அவதாரம் பிறந்த குடும்பத்தின் 80 தலைமுறைகள் இரட்சிக்கப்படுவார்கள். அவர்களுக்கு புண்ணியங்கள் மலைபோல் குவிந்திருக்கும். அதேபோல் அவதார புருஷருக்கு குருவாக இருப்பவரின் குடும்பமும் மிகவும் பக்தியுள்ள குடும்பமாக இருக்கும். தனுகு என்கிற ஊரில் உள்ள வாஜபேயஜுல குடும்பத்தில் மாயணாச்சார்யா பிறந்தார். அவர் மனைவி பெயர் ஸ்ரீமதி. இருவரும் பக்தியில் சிறந்தவர்கள். சில காலங்களுக்கு பிறகு மங்களாபுரம் பகுதியில் உள்ள நந்தி கோட்டுரு என்கிற இடத்தில் வசித்து வந்தனர். அவர்களுக்கு மாதவா,சயனா மற்றும் போகிநாத் என்கிற 3 மகன்கள் பிறந்தனர். மாதவா சனாதன தர்மத்தை மீட்க வித்யாரண்யர் ஆனார். ஸ்ரீ பாப்பண்ணார்யா சூரிய பகுதியில் இருந்து சக்தியை எடுத்து ஸ்ரீ மல்லிகார்ஜுன லிங்கத்திடம் செலுத்தினார். உண்மையில் ஸ்ரீ மலையின் மேல் ஸ்ரீ தத்தரின் ஸ்ரீசரணம் (புனித பாதம்) தோன்றியது. ஸ்ரீசைல மலையின் மேல் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தனிச்சிறப்பான பாதம் வந்தது ஒரு உன்னதமான செயல். அந்த மலையின் பெயர் '**ஸ்ரீசைலம்**'. ஸ்ரீ தத்தரின் பொற்பாதங்களுக்கு '**ஸ்ரீசரண்**' என்று பெயர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற இந்த பெயர், நவீனமான ஸ்ரீ தத்தரின் இந்த அவதாரத்திற்கு மிகவும் பொருத்தமான பெயர்.

பல தலைமுறைகளாக பாப்பாண்ணார்யா குடும்பத்திற்கும் வாஜபேயஜுல குடும்பத்திற்கும் தொடர்பு இருந்தது. அனைவரும் விளையாட்டாக மல்லாடி குடும்பத்தில் பெண் பிறந்தால் அவள் வாஜபேயஜுல குடும்பத்தின் மருமகள் என்றும் வாஜபேயஜுல குடும்பத்தில் பெண் பிறந்தால் அவள் மல்லாடி குடும்பத்து மருமகள் என்றும் கூறுவர். எனினும் பாப்பாண்ணார்யா தன் மகளை வாஜபேயஜுல குடும்பத்தில் திருமணம் செய்து வைக்கவில்லை. விதிவசத்தாலும் தெய்வ இச்சையினாலும் பாப்பாண்ணார்யா தன் மகள் அகண்ட லக்ஷ்மி சௌபாக்கியவதி சுமதி மகாராணியை கண்டிகோட்டா அப்பலராஜ சர்மாவிற்குத் திருமணம் செய்து வைத்தார்.

ஸ்ரீ தத்தர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பிறந்து, தன் தாத்தாவுக்கும் வாஜபேயஜுல குடும்பத்திற்கும் உள்ள இரத்த சம்பந்தத்தை மீட்பதற்காகவே மாதவாச்சாரியாவை

தன்னிடம் ஈர்த்துக் கொண்டார். மாதவாச்சார்யாவுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் மேல் அன்பு பொங்கி வழிந்தது. மாதவாச்சார்யா பின்னர் வித்யாரண்ய மஹரிஷியாக மாறினார். அவரின் சீடர் மலயாநந்தா, பின்னர் தேவதீர்த்துலு மலயாநந்தாவின் சீடாராகவும் ஆனார்கள். தேவதீர்த்துலுவுக்கு யாதவேந்திர சரஸ்வதி சீடராகவும் பின்னர் யாதவேந்திரருக்கு கிருஷ்ண சரஸ்வதி சீடர். ஸ்ரீ வித்யாரண்யருக்கும் கிருஷ்ண சரஸ்வதிக்கும் இடையே மூவர் குரு-சிஷ்ய பரம்பரையில் உள்ளனர். ஸ்ரீ வித்யாரண்யரே ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதியாக பிறந்து ஸ்ரீ ஸ்ரீபாதரின் அடுத்த அவதாரத்தின் போது அவருக்கு குருவாக இருந்து தீக்ஷை அளிப்பார். வருங்காலத்தில் ஸ்ரீ வித்யாரண்யர் தன் சகோதரனான சாயணாச்சார்யாவின் வீட்டில் கோவிந்த தீக்ஷிதலுவாக பிறப்பார். அவர் ராஜரிஷியாகி தஞ்சை அரசவையில் முதல் மந்திரியாக விளங்குவார். இது ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக பிரகடனம்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் எப்போதும் உண்மையை மட்டுமே பேசுவார். ஒரு நாள் சுமதி மஹாராணி ஸ்ரீ ஸ்ரீபாதரை குளிக்க வைத்து கொண்டிருந்தாள். அச்சமயத்தில் ஸ்ரீ வெங்கட்டைப்பைய சிரேஷ்டி அங்கு வந்தார். அவரை பார்த்து ஸ்ரீ ஸ்ரீபாதர் "தாத்தா! நாம் மார்க்கண்டேய கோத்திரத்தை சேர்ந்தவர்கள் தானே!" என்று கேட்டார். அவரின் இனிமையான வார்த்தைகளின் உள்அர்த்தத்தை புரிந்துகொண்டு பதிலேதும் கூறாமல் சிரித்தார் சிரேஷ்டி. உண்மையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவர், சிரேஷ்டிதான் மார்க்கண்டேய கோத்திரம். ஸ்ரீ ஸ்ரீபாதர் இதன் மூலம் மறைமுகமாகத் தன் மன எண்ணமான தான் சிரேஷ்டியின் மகள் வழி பேரன் என்பதை கூறியிருக்கிறார். அன்னை சுமதி ஸ்ரீ ஸ்ரீபாதரை குளிக்க வைத்து தண்ணீரால் சுற்றி திருஷ்டி எடுத்துவிட்டு "**மார்கண்டேயரை போல் தீர்க்காயுசுடன் வாழ்வாயாக**" என்று ஆசீர்வதித்தாள்.

மார்க்கண்டேயரின் ஆயுட்காலம் 16 வயதுதான் ஆனால் சிவபெருமானின் அருளால் தீர்க்காயுள் பெற்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் பெற்றோர்களுடன் 16 வயது வரை இருப்பார் என்பதை மறைமுகமாக கூறுகிறார். மார்க்கண்டேயர் 16 வயதிற்கு மேல் வீட்டை விட்டு வெளியேறி துறவியாக வாழ்ந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதரும் 16 வயதுவரை தன் பெற்றோர்களுடன் தங்கி விட்டு அதற்குப் பின்னர் உலகத்தின் குருவானார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தான் இந்த உடலை மறைத்து கொள்வேன் என்றும் தன் உடலுக்கு அழியாத்தன்மை உண்டு என்றும் இப்போது பார்க்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப உருவத்தில்தான் முன்பு அனுசுயா அத்ரியின் மகனாக அவதரித்ததாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் பல்வேறு ரூபங்கள்

ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் யோக சக்தியை வெளிப்படுத்தும் விதமாக தன் யோக சக்தியின் மூலம் பெண் உருவம் தரிசனம் அளித்தார். ஸ்ரீ தத்தரால் மட்டுமே தன் குண்டலினி சக்தியை வெளிக்கொண்டு வந்து பெண் உருவம் எடுக்க முடியும். இந்த 16 வயது தம்பதியை பாப்பண்ணார்யா, ராஜமாம்பா, ஸ்ரீ ஸ்ரீபாதரின் பெற்றோர்கள், நரசிம்ம வர்மா மற்றும் அவர் மனைவி, வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் அவர்

மனைவி ஆகியோர் மட்டுமே காணும் பாக்கியம் பெற்றனர். இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க எண்ணிய ஸ்ரீ ஸ்ரீபாதரின் பெற்றோருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவர் அன்னை சுமதி மகாராணியை முன்னர் அவதூதராக சந்தித்த போதே இந்த தெய்வீக தம்பதியின் தரிசனம் அளிப்பதாக கூறியிருந்தார். அந்த அவதூதர் அன்னை சுமதியிடம் **"தாயே! உங்கள் மகன் 16 வருடங்கள் மட்டுமே உங்களுடன் இருப்பான். அவனுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினால் உங்கள் வார்த்தைகளை கேட்கமாட்டான். மேலும் வீட்டைத் துறந்து வெளியேறி விடுவான். ஆகவே அவனின் விருப்பம் அறிந்து நடந்து கொள்ளுங்கள்"** என்று கூறியிருந்தார். "ஸ்ரீ அனகாவும் ஸ்ரீ தத்தரும் மிகவும் பழமையான தம்பதி. அவர்களுக்கு பிறப்பும் இறப்பும் கிடையாது. அவர்களின் தெய்வீக திருவிளையாடல்களை எப்போதும் வெளிக்காட்டிக் கொண்டே இருப்பர். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி மற்றும் ஸ்ரீ சமர்த்தர் அர்த்தநாரீஸ்வரர் போல் விளங்குகின்றனர் (சிவனும் சக்தியும் ஒன்றாக்கிய ஒரே ரூபமாக).

## நாற்பது நாட்கள் விரத மகிமையும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலன்கள்

இது ஒரு தெய்வீக ரகசியம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கணேச சதுர்த்தியன்று அவதரித்ததற்கு ஒரு முக்கிதத்துவம் உண்டு. ஸ்ரீ கணேசருடைய மகன் பெயர் லாபா. ஒரு யுகத்தின் காலகட்டத்தில் அவர் லாபாத மஹரிஷியாக புகழ் பெற்றார். ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்தின் போது நந்தனாக பிறந்தார். அந்த லாபாத மஹரிஷிதான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் போது ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாய்வழி தாத்தாவாக பிறந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் உள்ளுணர்வுகளில் ஸ்ரீ கணேசரின் குணத்தை சீராக வைத்துக் கொண்டு அவதரித்து பக்தர்கள் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து தடைகளையும் விலக்குகிறார். அவர் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். அவர் குருவபுரத்தில் மறைந்த போது ஹஸ்த நட்சத்திரம், அது சித்திரையிலிருந்து 27வது நட்சத்திரம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய பக்தர்கள் 40 நாட்கள் மண்டல விரதம் இருப்பதாக உறுதி எடுத்துக்கொண்டால் 9 கிரகங்களாலும் 27 நட்சத்திரங்களாலும் நம் ஜாதகத்தில் ஏதாவது கிரக தோஷங்கள் இருப்பின் அவை நீங்கிவிடும். அந்நேரத்தில் பக்தர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை 40 நாட்கள் பக்தி சிரத்தையுடன் வணங்கினாலோ அல்லது அவருடைய சரிதாம்ருதத்தை பக்தியுடன் பாராயணம் செய்தாலோ அவர்களின் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும். ஒரு மனிதனின் மனம்,அறிவு,மனப்பற்று மற்றும் அகங்காரம் ஆகியவற்றில் இருந்து வெளியாகும் ஒவ்வொரு அதிர்வும் துடிப்பும் எல்லா 10 திசைகளிலும் பரவும். அப்படியென்றால் ஒவ்வொன்றுக்கும் 10 திசைகள் என்று எடுத்துக் கொண்டால் மொத்தம் 40 திசைகளில் தனித்தனியாக பரந்து விரியும். அந்த 40 விதமான அதிர்வலைகளையும் தடுத்து ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் திருப்பிவிட்டால் அவை அவரின் சைதன்யத்தை அடையும். அங்கு அவை முறையாக சீர்திருத்தப்பட்டு நல்ல அதிர்வலைகளாக மாற்றம் அடைந்து பக்தனிடமே வந்து சேர்ந்துவிடும். பின்னர் பக்தனின் சரியான அனைத்து வேண்டுதல்களும் நிறைவேறும்.

என் அருமை சங்கர் பட்! என் உள்ளுணர்தல் திறன் மூலம் நீதான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் சரிதாம்ருதத்தை எழுதப்போவது என்பதை தெரிந்து கொண்டேன். பொதுவாக உலக வழக்கில் ஒரு பாராயணப் புத்தகத்தை எழுதுபவர் அவரின் குடும்பப் பின்னணிகளை எழுதுவர். கடவுளின் சரித்திரத்தை எழுதும் போது உன் குடும்பத்தை பற்றிய வர்ணனைகள் தேவையில்லை. கடவுளைத் தியானித்து கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை உன் மனக்கண்ணில் நிறுத்தி எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வண்ணம் எழுது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் சைதன்யத்தில் இருந்து உன் எழுதுகோல் வழியாக வரும் அனைத்தும் உண்மை. இது போன்ற அகத்தூண்டுதலால் எழுதப்படும் புத்தகங்களுக்கும் மந்திரங்களுக்கும் எந்த ஒழுங்குமுறையோ இலக்கணமோ தேவையில்லை. கடவுளை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற பல சிறந்த பக்தர்கள் கூட அந்த ஊரில் பேசும் மொழியில் மிகச் சாதாரண வார்த்தைகளைக் கொண்டு போற்றியுள்ளனர். இலக்கணத்தின் பொதுவான கோட்பாடுகளைக் கூட மீறி உள்ளனர். அப்படியாயினும் அந்த ஸ்தோத்திரங்களை அப்படியேதான் பாராயணம் செய்ய வேண்டும். அவற்றிற்கு இலக்கண மாற்றம் செய்தால் தகுந்த பலன் அளிக்காது. கடவுள் அளிக்கும் அருளின் சக்தி, பக்தன் கூறும் வார்த்தைகளில்தான் உள்ளது. அந்த வார்த்தைகளில் கடவுள் மகிழ்ச்சி அடைந்து வரங்களை அளிக்கிறார். அந்த மந்திரங்களை எந்த மாற்றங்களும் செய்யாமல் பாராயணம் செய்யப்படும் போது கடவுளின் தெய்வீகச் சைதன்யத்தை அது விரைவாக அடையும். வெளித்தோற்றத்தை வைத்து கடவுள் மகிழ்ச்சி அடைவதில்லை. நம் உள் மனப்பாங்கை வைத்துதான் மகிழ்ச்சி அடைகிறார். நம் உள் மனப்பாங்குதான் எப்போதும் நிலைத்திருக்கும் சக்தி. தயவுசெய்து இதை குறித்துக் கொள்" என்றார்.

நான் அவரிடம் "ஐயா!! மதிய உணவுக்கு பின்னர் நாம் சத்குருவை பற்றி உரையாடியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தை பற்றி மேலும் கூறுங்கள் நான் பாக்கியசாலி ஆகிறேன்" என்று கேட்டுக்கொண்டேன். ஆனந்த சர்மா கூறத் தொடங்கினார் "ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மல்லாடி, பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் வத்ஸவாயீ குடும்பங்கள் மிகவும் நெருக்கம். அவர்களுக்கு அவர் பட்டுள்ள கடனை வார்த்தைகளால் கூற முடியாது. அம்மூன்று குடும்பங்களும் சேர்த்து வைத்திருந்த புண்ணியங்கள்தான் அவர்களின் பலம். அதனால்தான் தன் தந்தை அவர்களிடம் பணமோ அல்லது பொருளோ பெறாமல் தவிர்ப்பது கூட துன்பத்திற்கு ஆளாக்கிவிடும் என்கிற கருத்து இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் விரும்பியது போல் அப்பலராஜ சர்மாவும் சுமதிமஹாராணியும் இம்மூவரின் வீடுகளுக்கும் முக்கியமான பண்டிகை நாட்கள் மற்றும் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்ல சாதாரண நாட்களிலும் கூட சென்று வந்தனர். ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஒரு பண்டிகை தினத்தில் அப்பலராஜ சர்மாவையும் அவர் மனைவியையும் தன் வீட்டிற்கு அழைத்திருந்தார். சிரேஷ்டி ஸ்ரீ ஸ்ரீபாதரை தன் மடியில் வைத்துக்கொண்டு தொட்டில் ஆட்டுவது போல் செய்து கொண்டிருந்தார். அன்று சிரேஷ்டி மிகவும் ஆழ்ந்த யோசனையில் காணப்பட்டார். அதற்கு ஒரு காரணம் இருந்தது. பீதிகாபுரத்தில் புகழ் வாய்ந்த ஜோதிடர் ஒருவர்

இருந்தார். அவர் ஒரிசாவில் ஜோதிடம் படித்திருந்தார். அவரின் ஜோதிடப் பலன்கள் பொய்த்ததற்கான சான்றுகள் இல்லை. அவரால் ஒருவரின் இறப்பு நேரத்தை சரியாக கணிக்க முடியும். அவர் சிரேஷ்டி ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட மணி குறிப்பிட்ட நிமிடத்தில் இதய நோயால் இறந்து விடுவார் என்று கூறியிருந்தார். அவர் ஒரு சில மூலிகைகளுக்கும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் புனித மரங்களுக்கும் யோக முறைகளுக்கும் தொடர்பு உண்டு என்று கூறினார். மேலும் தான் கொடுக்கும் மருந்தை உண்டு தாயத்து அணிந்து கொண்டால் அகால மரணத்தை தடுக்கலாம் என்று கூறினார். அவர் அப்பலராஜ சர்மாவுக்கு பதில் தன்னை குடும்ப புரோகிதராக வைத்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார். சிரேஷ்டி அதை நிராகரித்துவிட்டார். தன்னுடைய ஜோதிடம் மட்டும் பொய்த்துவிட்டால் மொட்டை அடித்துக்கொண்டு கழுதை மேல் ஊர்வலம் செல்வதாக சவால் விட்டார். இந்த விவகாரம் அப்பலராஜ சர்மாவிடமும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ பாப்பண்ணார்யா சில ஜோதிடக் கணக்குகளை பார்த்துவிட்டு தெய்வ சக்தியால்தான் இந்த மரணத்தை தடுக்க முடியும் என்றார். அப்பலராஜ சர்மா காலாக்னி சமான தத்தரை வணங்கிவிட்டு புனித நீர் பிரசாதத்தை சிரேஷ்டிக்கு கொடுத்தார்.தன் பெரியப்பாவை போல பாவித்த சிரேஷ்டியை சாந்தமான முகத்துடன் சுமதி மஹாராணி அணுகினாள். அப்போது சிரேஷ்டிக்கு நெஞ்சு வலி எடுத்து **"அம்மா"** என்று சத்தம் எழுப்பினார். **"மகனே என்னை அழைத்தாயா!"** என்று கூறிக்கொண்டே வந்த சுமதி மஹாராணி சிரேஷ்டியின் மார்பை தனது தெய்வீக புனித வளமையான கரத்தால் தொட்டாள். சிரேஷ்டியின் மடியில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஸ்ரீபாதர் 'போ' என்று உரக்கக் கத்தினார். சிரேஷ்டியின் வீட்டில் ஒரு எருமை மாடு இருந்தது. அது உடனடியாக கடுமையாகப் போராடத் தொடங்கி சில நிமிடங்களில் இறந்து விட்டது. சிரேஷ்டி காப்பாற்றப்பட்டார். இந்த தகவல் ஜோதிடருக்குத் தெரிய வந்தது. அவர் உடனே சிரேஷ்டி வீட்டிற்கு ஓடி வந்தார். தன் கணிப்பு ஒரே நொடியில் பொய்யானதை நினைத்து உள்ளுக்குள் மிகவும் வருத்தம் அடைந்தார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த ஜோதிடரை நோக்கி **"நீங்கள் ஒரு ஞானம் மிகுந்த ஜோதிடர் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. நீங்கள் மெத்தப் படித்தவர். நான் அதை மறுக்கவில்லை. ஒளிகளுக்கெல்லாம் ஒளியாக நான் இங்கு இருக்கும் போது சிரேஷ்டிக்கு எதற்கு மரண பயம்? நீங்கள் மொட்டை அடித்துக்கொண்டு கழுதை மேல் ஊர்வலம் செல்ல வேண்டாம். நீங்கள் மனம் திருந்தினால் மட்டும் போதாது. உங்கள் தந்தை உயிரோடு இருந்த போது சிரேஷ்டியிடம் கடன் வாங்கியிருந்தார். அவர் கடனை திருப்பி அளித்துவிட்டதாக பொய்யுரைத்தார். அவர் காயத்ரி தேவியின் மீது பொய் சத்தியம் செய்தார். அதன் பலனாக சிரேஷ்டியின் வீட்டில் எருமையாகப் பிறந்தார். சிரேஷ்டி தயாள குணம் நிறைந்தவர் என்பதால் எருமைக்குத் தாராளமாக உணவளித்து வந்தார். நான் தாழ்ந்த பிறவியான உங்கள் தந்தைக்கு நல்ல பிறவியைத்தான் அளித்தேன். நான் சிரேஷ்டியின் பூர்வ ஜென்ம கர்மாக்களை அந்த எருமைக்கு மாற்றி அதை அகால மரணம் அடைய செய்தேன். நீங்கள் அந்த**

**எருமைக்கு இறுதி சடங்கு செய்து அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதன் பலனாக உங்கள் தந்தையின் தீய கர்மாக்கள் அழிந்து அவர் நற்கதி அடைவார்**" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியதை நம்பிக்கையுடன் அந்த ஜோதிடர் செய்தார்.

"என் அருமை சங்கர் பட்!! ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு உயிரை பலவிதமான வழிகளில் காப்பாற்றுகிறார். சில சமயம் வரும் பிறவிகளில் உள்ள ஆயுளை குறைத்து இந்த பிறவியில் அதிகரிக்கிறார். சிரேஷ்டிக்குச் செய்தது போல் கர்ம பலன்களை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுகிறார். ஒருவரின் ஆயுளை அவரின் நலம் விரும்பிகளின் ஆயுளில் இருந்து எடுத்துக்கொண்டு கூட நீட்டிக்கிறார். ஒருவருக்கு அசாதாரணமான முறையில் மரணத்தைத் தடுத்து வாழ்க்கை அளிக்கிறார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு முழு யோக அவதாரம். ஒரு யோகி தன்னுடைய பிராண சக்தியைத் தன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவருவதன் மூலம் தன் வளர்ச்சியையும் உடல் சீரழிவையும் தடுக்க முடியும். அவரால் முடியாது என்பது ஒன்றுமே இல்லை. நம் மூச்சை உள்ளிழுத்தல் மற்றும் வெளியிடும் நடைமுறைகளை மாற்றுவதன் மூலம் முக்திக்கு வழி வகுக்க முடியும். ஒரு க்ரியா யோகி தன் பிராண சக்தியை ஆஞ்ஞா, விசுத்தி, அநாஹத, மணிப்பூரக, ஸ்வாதிஷ்டான மற்றும் மூலாதாரம் வழியாக பலமுறை செலுத்துகிறார் மேலும் அதை மேலிருந்து கீழ்நோக்கியும் மற்றும் கீழிருந்து மேல் நோக்கியும் சுழலச் செய்கிறார். ஒரு முறை க்ரியா யோக பயிற்சியை மேற்கொள்ள எடுக்கும் நேரம் இயற்கையாக ஒரு வருடத்தில் ஏற்படும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு சமம். குழந்தாய் அப்படியென்றால் ஒருவர் ஒரு நாளின் ½ பங்கு நேரத்தில் 1000 கிரியாக்கள் 3 வருடங்கள் செய்தால் இயற்கையாக 10 லட்சம் வருடங்களில் ஏற்படும் ஆன்மீக முன்னேற்றத்தை பெறலாம். புராணங்களில் துறவிகள் பல வருடங்கள் தவம் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பது இயற்கையான பரிணாம வளர்ச்சிக்கு தேவைப்படும் நேரம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அப்படியென்றால் யோகிகள் எடுத்துக்கொள்ளும் நேரமும் இயற்கையாக பரிணாம வளர்ச்சி அடைய தேவைப்படும் நேரமும் வெவ்வேறு. பிரம்மா மூச்சுகளின் எண்ணிக்கையைச் சரி செய்து அனைத்து உயிரினங்களின் ஆயுளையும் நீட்டுகிறார் ஆனால் வருடங்களின் எண்ணிக்கையைச் சரி செய்வது மூலம் அல்ல. தீய பண்புகளான கோபம் மற்றும் வருத்தம் ஆகியவை ஏற்படும் போது மூச்சு வேகமாக செலவழிக்கப்படும் (short breaths). இதனால் ஆயுள் குறைகிறது. நிலையற்ற மனம் கொண்ட குரங்கு அதிக மூச்சு எண்ணிக்கைகள் எடுக்கிறது. இதே 300 வருடங்கள் வரை வாழும் ஆமையானது குரங்கு எடுக்கும் 8 மூச்சுக்கான நேரத்தில் ஒரு மூச்சைத்தான் எடுக்கிறது" என்றார்.

ஆனந்த சர்மாவுடன் நடந்த நல்ல உரையாடலின் மூலம் நான் அதிக ஞானம் பெற்றேன். அடுத்த நாள் காலையில் என் தினசரி வேலைகளை முடித்துக்கொண்டு ஆனந்த சர்மாவிடம் விடைபெற்றுக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசிக்க என் குருவபுர பயணத்தைத் தொடர்ந்தேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 14

## தத்த தாஸுக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதம்

சில நாட்கள் பயணத்திற்கு பின் நான் '**முந்தகல்லு**' என்கிற கிராமத்தை அடைந்தேன். சில பயணிகளை விசாரித்தபோது இன்னும் சில நாட்கள் பயணித்தால் குருக்கட்டாவை அடைந்து விடலாம் என்று கூறினர். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரை காண மிகவும் ஆவலுடன் இருந்தேன். அப்போது கையில் கள்ளுப் பானையுடன் ஒருவன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தான். நான் ஒரு பண்டிதனாக இல்லாத போதும் பிராமணன் என்பதாலும் சில மத நெறிமுறைகளைத் கடைபிடிப்பவன் என்பதாலும் கள்ளின் துர்நாற்றம் என்னை நோக்கி வருவது தாங்கிக்கொள்ள முடியாத சங்கடத்தை அளித்தது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை கூறிக்கொண்டே வேகமாக நடக்கத் தொடங்கினேன். அந்த மனிதனும் வேகமாக நடந்து வந்து என்னை அடைந்தான். அவன் என்னை **"நான் உங்களைப் பார்க்க வந்து கொண்டிருக்கும் போது என்னை விட்டு விலகி செல்வது நியாயமா?"** என்று கேள்வி எழுப்பினான். **"நீ யார்? உனக்கு என்னிடம் என்ன வேலை?"** என்று நான் கேட்டதற்கு அவன் பலமாக சிரித்தான். கள்ளின் தாங்கமுடியாத வாடை அவன் வாயிலிருந்து வீசியது. **"நான் யார் என்று நீ தெரிந்துகொள்வதற்கு முன் முதலில் நீ யார்?எங்கிருந்து வருகிறாய்? எங்கே சென்று கொண்டிருக்கிறாய்? என்று கூறு"** என்றான். இந்த இடத்தில் கள் விற்பவர்கள் கூட தத்துவமாக உரையாடுவார்களோ என்று எண்ணிக்கொண்டேன். அங்கு சென்று கொண்டிருப்பவர்கள் அனைவரையும் அருகில் வருமாறு சத்தமாக அழைத்தான். நொடிப்பொழுதில் அங்கு ஒரு கூட்டம் கூடியது. அங்கு கூடியிருந்தவர்களிடம் "ஐயா!! நான் இந்தப் பகுதியில் கள் இறக்கி வியாபாரம் செய்து வருகிறேன். நான் தர்மத்தை மீறாமல் வாழ்ந்து வருகிறேன். பனைமரம்தான் எனக்கு கல்ப விருக்ஷம். நான் மரத்தின் மேல் ஏறி கள் இறக்கிக் கொண்டு வரும் வரையில் மரத்தடியில்தான் இந்த பிராமணர் நின்றுகொண்டிருந்தார். தான் பிராமணனாக இருந்தாலும் கள்ளுக்கு அடிமையாகிவிட்டதாக கூறினார். தன்னிடம் பணம் இல்லை, கொஞ்சம் கள்ளை தன் தொண்டையில் ஊற்றி புண்ணியத்தை சேர்த்துக் கொள்ளுமாறு கூறினார். நானும் அதற்கு ஒத்துக் கொண்டேன். நான் கள்ளை ஊற்றப்போகும் சமயத்தில் அங்கு பலரின் நடமாட்டம் தெரிந்தது. பலர் முன்னிலையில் கள் குடித்தால் தன் பிராமணத்துவத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்று கூறி மறுக்கிறார். என் சத்தியத்தை மீறினால் நான் மிகப்பெரிய பாவியாகி விடுவேன். இந்தக் கள் எங்கள் குல மக்களுக்கு அமிர்தம் போன்றது. இதை இந்த பிராமணனுக்கு அளித்து புண்ணியத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பினேன். இந்த பிராமணர் என் அனைத்து நம்பிக்கைகளையும் தூள் தூளாக்க நினைக்கிறார். இங்குள்ள புனிதமானவர்கள்

அனைவரும் இவருக்குத் தர்மத்தை போதித்து என்னை பாவி ஆவதிலிருந்து காப்பாற்றுங்கள்" என்றான்.

அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் கள் இறக்கி வாழும் கவுடா ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஆதலால் தன் சாதிக்காரன் கூறும் வார்த்தைகளை நம்பினர். அன்று என்னை வற்புறுத்தி கள் குடிக்க வைத்தனர். பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர். என்னைக் கள் குடிக்க வைத்த அந்த வினோதமான மனிதன் கூட எங்கோ சென்று விட்டான். **"இப்படி ஒரு உன்னத பிறவியெடுத்து தெய்வீக அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்கச் சென்று கொண்டிருக்கும் போது இப்படிப்பட்ட கீழ்த்தரமான பானத்தை குடித்து விட்டேன். என்னுடைய பிராமணத்துவம் எரிந்து சாம்பலாகி விட்டது. புனிதத்தன்மை வாய்ந்த ஸ்ரீ ஸ்ரீபாதரை எந்த முகத்துடன் நான் பார்ப்பது? என் விதி அப்படி. விதி மிகவும் வலியது. என் தலையில் இப்படி எழுதியிருந்தால் வேறு மாதிரியா நடக்கும்?"** என்று என் மனதில் நினைத்துக் கொண்டேன். எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. என் கால்கள் தடுமாறின. என் வாயிலிருந்து தாங்கமுடியாத கள்ளின் துர்நாற்றம் வீசியது. எனக்கு மயக்கம் ஏற்படுவது போல் இருந்தது. என் துரதிர்ஷ்டத்தை குறை கூறிக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜபித்துக் கொண்டே நடந்தேன். அப்போது வழியில் ஒரு குடில் தென்பட்டது. அது ஒரு தவம் செய்யும் இடம் போல் தோன்றியது. அங்கு கண்டிப்பாக உன்னதமானவர்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. நான் புனிதமானவர்களைத் தரிசிக்கத் தகுதியற்றவன் என்று எண்ணினேன். அந்த ஆசிரமத்திற்குள் நுழைய எனக்கு விருப்பம் இல்லை. இது போன்று மது அருந்தியிருக்கும் நிலையில் புனிதம் வாய்ந்த அந்த ஆசிரமத்திற்கு செல்வது கண்டிக்கத்தக்கது என்று தோன்றியது.

நான் அவ்வழியாக சென்று கொண்டிருக்கும் போது யாரோ கை தட்டி மிகவும் சத்தமாக **"சங்கர் பட்!! நில்லுங்கள். ஸ்ரீ தத்தானந்த ஸ்வாமி உங்களை ஆசிரமத்திற்கு அழைத்து வரச் சொன்னார்"** என்று கூறினார். இந்த திருவிளையாடலின் ஆச்சரியத்தை எண்ணி அப்படியே நின்று விட்டேன். நான் ஸ்ரீ தத்தானந்த ஸ்வாமியின் முன் கொண்டு செல்லப்பட்டேன். கருணை பொழியும் கண்களுடன் ஸ்ரீ ஸ்வாமி என்னை குளித்து விட்டு வருமாறு கூறினார். குளித்துவிட்டு வந்தவுடன் எனக்கு இனிப்பான பழங்கள் கொடுக்கப்பட்டது. அதை உண்டவுடன் என்னை அருகில் அழைத்து **"குழந்தாய்!! ஸ்ரீ தத்தாத்ரேயரின் புது அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு உன் மேல் கருணை அதிகமாக உள்ளது. உன் மேல் எவ்வளவு கருணை அவருக்கு! தன் தெய்வீக கரங்களாலேயே அமிர்தத்தை அளித்து உன்னை அருந்தச் செய்தார். அவரை கள் இறக்கும் கவுடர் என்று நீ தவறாக எண்ணிக் கொண்டாய். அமிர்தத்தை கள் என்று நினைத்துக்கொண்டு ஏமாந்து விட்டாய். என்ன ஒரு முரண்பாடு!!"** என்றார்.

எனக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. நான் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த முழு பிரபஞ்சமும் மெதுவாக மறையத் தொடங்கியது. கடலலை போல் எல்லையில்லா பிரபஞ்சத்தின் சக்தி என்னை ஆட்கொள்வது போல் உணர்ந்தேன்.

அந்த அளவற்ற சக்தியில் மிகவும் சிறிய மற்றும் இழிவான அகம்பாவம் நிறைந்த என் ஜீவாத்மா மறைந்தது. 'நான்' என்பது தெரியாத அல்லது உணர்ந்து கொள்ள முடியாத ஒரு தெய்வீக பேரின்பத்தில் மூழ்கினேன். சுருக்கமான 'நான்' என்ற எண்ணம் மறைந்ததும் இந்த பிரபஞ்சமே கனவு போல் தோன்றியது. ஸ்ரீ ஸ்வாமிகள் சிறிது மந்திர நீரை என் மீது தெளித்தார். அவரின் தெய்வீகக் கரங்களால் விபூதியை என் நெற்றியில் பூசினார். பின்னர் நான் சுயநினைவுக்கு திரும்பினேன். சில நொடிகளுக்கு நான் தெய்வீகப் பேரின்பத்தை அனுபவித்தேன். வெளிச்சுற்றுப்புறங்களின் சுயநினைவுக்கு வந்தவுடன் நான் மீண்டும் என் பழைய முழு நிலைக்கு இழுத்துச் செல்லப்படுவதை உணர்ந்தேன்.

ஸ்ரீ ஸ்வாமிகள், "நீ ஏதோ ஒரு பிறவியில் கவுடா பிரிவில் பிறந்திருந்தாய். அப்போது கீழ்த்தரமான அந்த சாராயத்தை மோசமாகக் குடித்துக் கொண்டிருந்தாய். உன் ஆழ்மன பண்பின் ஒரு மூலையில் கள் குடிக்க வேண்டும் என்ற ஆவல் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ ஸ்ரீபாதருடைய அருள் மட்டும் இல்லையென்றால் நீ பிராமணனாக இருப்பினும் உன் நெறிமுறை தவறி கள்ளுக்கு அடிமையாகி இருப்பாய். ஸ்ரீ ஸ்ரீபாதரின் பார்வை அமிர்தம் போன்றது. உன் ஜாதகத்தின் படி பல விபத்துக்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. தன்னுடைய அமிர்தம் போன்ற பார்வையினால் உனக்குத் தெரியாமலே அவற்றை அழித்துக் கொண்டு இருக்கிறார். ஸ்ரீ குருவின் சிறப்பை யாரால்தான் வர்ணிக்க முடியும்? அவரது சிறப்புக்களை வர்ணிக்க முடியாமல் வேதங்கள் கூட பேச்சற்று நிற்கின்றன" என்றார். நான் அவரிடம் **"ஐயா!! ஸ்ரீ குருவின் சிறப்புகளை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவரைப் பற்றி பல புது விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் மிகுதியாகிறது. ஸ்ரீ குரு மீண்டும் மீண்டும் அவர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்கப் போவதாக கூறிக்கொண்டு இருக்கிறார். அவரின் திருவிளையாடல்களின் உள்ளர்த்தத்தைத் தெரிந்துகொள்ளத் தீவிரமான விருப்பம் உள்ளது**" என்றேன்.

அதற்கு, ஸ்வாமிகள் "மகனே!! ஆன்மீகத் தாகத்துடன் இருக்கும் வேத ஞானிகளுக்கு ஆன்மீகத்தில் பொதிந்திருக்கும் உண்மையை அறிந்து கொள்வதுதான் நோக்கம். அவர்களின் மாய வார்த்தைகளில் '**ருதமு**' மிகவும் முக்கியமானது. ருதமு என்றால் உண்மை என்று பொருள். அதாவது இங்கு உண்மை என குறிப்பிடப்படுவது ஆன்மாவின் உண்மை மற்றும் வஸ்துக்களின் (பொருட்கள்) உண்மை. இதை சடங்கு முறைகளின் வாயிலாக கூறினால் உண்மை, யாகம், நீர் மற்றும் உணவு என்று பல பெயர்களில் கூறலாம். இதே போல் '**சரஸ்வதி**' என்கிற வார்த்தை மிகவும் குறிப்பிடத்தக்கது. சரஸ்வதி நதி பூமிக்கு அடியில் பாய்கிறது. அதை உண்மை கூற்றுகளை போதிக்கும் ஒன்று, உண்மையை போதிக்கும் ஒன்று, நம் சைதன்யத்தில் உள்ள கருத்துக்கள் அல்லது எண்ணத்தை போதிக்கும் ஒன்று, பெருங்கடலை பற்றி கூறும் ஒன்று, நம் மனதை ஒளியூட்டும் ஒன்று என்று விவரிக்கப்படுகிறது. ஆகவே ஸ்ரீ குருதான் வற்றாத நீரோடை போன்ற போதனைகளின் சக்தி. அவரின் குரல் சத்தியம். அவர் நம் மனதை பிரகாசமாக்குகிறார். அவர் நமக்குள் உயர்வான உண்மையையும் ஆழ்மன ஞானத்தையும் ஸ்தாபிக்கிறார்.

வேதங்களில், யக்ஞம் என்பது நம் உள் குணத்தின் புற வெளிப்பாடு. மனிதர்கள் அவர்களிடம் இருக்கும் அனைத்தையும் ஆகுதியின் மூலம் தேவர்களுக்கு அர்ப்பணிக்கிறார்கள். தேவர்கள் அதற்கு கைமாறாக பசுவையும் குதிரையையும் அளிக்கிறார்கள். பசுக்கூட்டம் என்பது பிரகாசத்தின் செல்வம். குதிரை என்பது வலிமைச் செல்வத்தை குறிக்கிறது. தேவர்கள் நமக்கு தவத்தின் சக்தியையும் அளிக்கிறார்கள். வேதங்களின் ரகசிய அர்த்தங்கள் தகுதியானவர்களுக்கு மட்டும் தெரியப்படுத்துவத்தை உறுதி செய்யும் விதமாக, அது ரகசியமாக பாதுகாக்கப் படுகின்றன. யக்ஞத்திற்கு நெய் (தெளிவுபடுத்தப்பட்ட வெண்ணெய்) மிக முக்கியமானது. நெய் என்றால் பிரகாசம் என்பது நேரடி அர்த்தம். வேதத்தில் '**கோ**' என்கிற சொல் ஒளியை குறிக்கிறது. வேதத்தில் குதிரை என்றால் வலிமை என்று பொருள், அதாவது ஆத்மாவின் வலிமை மற்றும் தவத்தின் சக்தி. சந்யாசிகள் தங்கள் மந்திரங்களில் பசு முகத்துடன் குதிரையின் உருவம் வேண்டும் என்று வரம் கேட்டனர். அதன் பொருள் என்னவென்றால் ஒளியால் இயக்கப்படும் ஆன்மீக சக்தியை விரும்பினர். சந்நியாசிகள் பல மந்திரங்கள் வாயிலாக தங்கள் சந்ததியையும் மகனையும் விரும்பி பிரார்தித்துக்கொண்டதற்கு சூக்ஷ்ம அர்த்தம் உள்ளது. அவர்களின் உள் வலிமையின் தலைமுறையை குறிக்கும் அடையாளம்தான் மகனின் பிறப்பு. இதை அவர்கள் கீழ்கண்டவாறு கூறுகிறார்கள்: "**அக்னி தனிப்பட்ட முறையில் நமக்கு ஒரு மகனாக பிறக்கிறது. நெருப்பு என்கிற மகன் யாகத்தில் பிறந்தவன். அவரே அனைத்து தந்தைகளுக்கும் தந்தையாக பிரபஞ்சத்தின் தீயாக விளங்குகிறார்**" என்கின்றனர்.

அதே பாணியில் சலீல மற்றும் உதக (நீர்) என்பதும் பரிந்துரைக்கப்பட்ட உள் அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக 'சலிலம் அப்ரகேதம்' என்ற வரியை எடுத்துக்கொள்வோம். சைதன்யம் இல்லாத தெய்வீகமான கடல், ஜதாப்தி (செயல்பட முடியாத கடல்) என்கிற இருள் நிறைந்த கடலில் ஐக்கியமாகும் போது அவரவர்களின் வலிமையைப் பொறுத்து தெய்வீகம் வடிவம் எடுக்கும். இதை பெருங்கடல் என்று கூட விவரிக்கலாம். ஒரு சூக்தத்தில் (கடவுளை போற்றும் கீர்த்தனைகள்) சரஸ்வதியிடம் பொதிந்துள்ள ஞான கதிர்களை சலீலவின் மேல் அடுக்கில் உள்ள நீர் என்று முனிவர்கள் குறிப்பிடுகிறார்கள். வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏழு நதிகளுக்கு (ஸ்ரோதஸ்வினி) உள்ளர்த்தம் இருக்கிறது. அவை சொர்க்கத்தின் தெய்வீகப் பண்புகள். பராசர முனிவர் நீரில் குடியிருக்கும் ஞானம் தான் பிரபஞ்சத்தின் உயிர் என்று வலியுறுத்துகிறார்.

பசுவைத் திருடுபவர்களை வ்ருத்ரா மற்றும் தசயு என்று அழைப்பர். விருத்தா என்கிற அசுரன் பிரகாசம்,நீர்,உயர்ந்த உண்மை மற்றும் உயர்வான சைதன்ய நிலை ஆகியவற்றை திருடி ரகசியமாக தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வான். இது போன்ற கொடூரமான நடத்தைகள் புரியும் சக்திகள் வ்ருத்திரர்கள் மற்றும் தசயுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை இருளின் சக்திகள். உண்மையை தேடுபவர்களுக்கு அவை மிகப்பெரிய எதிரிகள்" என்று ஸ்ரீ ஸ்வாமி முடித்துக் கொண்டார்.

## அத்தி மரத்திற்கு அளிக்கப்பட்ட வரம் - ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தின் மகிமைகள்

ஸ்ரீ ஸ்வாமிகள் என்னிடம், "குழந்தாய்!! மஹாவிஷ்ணு நரசிம்ம ஸ்வாமியாக அவதரித்து அத்தி மரத்தூணை பிளந்துகொண்டு வெளி வந்து பிரகலாதனை காப்பாற்றினார். பிரஹலாதன் அரசன் ஆனான். சில காலங்களுக்கு பிறகு இரண்டாகப் பிளந்த தூண் துளிர்விட தொடங்கியது. அந்த அத்தி மரம் ஒரு வடிவம் பெற்றது. இதைக்கண்டு ஆச்சரியம் அடைந்த பிரஹலாதன் அதை வழிபட தொடங்கினான். ஒரு நாள் ஸ்ரீ தத்தாத்ரேயர் தியான நிலையில் பிரகலாதனின் முன் தோன்றி சில போதனைகள் செய்தார். பிரகலாதனுக்கு துவைதத்தில் ஈடுபாடு இருப்பதை கூர்ந்து நோக்கிய ஸ்ரீ தத்தர், பிரஹலாதன் கலி யுகத்தில் ஒரு துறவியாக உருவம் எடுத்து தாழ்த்தப்பட்டோரை உயர்த்தி துவைத்த நெறியை பரப்புவாயாக என்று ஆசீர்வதித்தார். அத்தி மரம் மனித உருவம் எடுத்து ஸ்ரீ தத்தரின் பாதத்தில் விழுந்து தனக்கு வரமளிக்க வேண்டியது. பின்னர் ஸ்ரீ தத்தர் தான் எல்லா அத்தி மர வேரிலும் சூக்ஷ்ம ரூபத்தில் குடி கொள்வதாகவும், அவர் நரசிம்மர் வடிவத்தில் அத்தி மரத்திலிருந்து தோன்றியமையால் கலியுகத்தில் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி என்ற பெயரில் அவதரிப்பதாகவும் உறுதியளித்தார். இந்த விஷயங்கள் அனைத்தும் பைங்கிய பரிமாணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த பைங்கிய பரிமாணம் இப்போது இமயமலையில் சப்த மகரிஷிகளின் துறவற இடமான சாம்பலா என்கிற கிராமத்தில் மட்டும்தான் உள்ளது. பைங்கிய பரிமாணத்தின் ஞானம் மற்ற இடங்களில் அழிந்து விட்டது. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்கிற விவாதம் எழும்பிய போது நரசிம்ம ஸ்வாமி நான் இங்குதான் இருக்கிறேன் என்று கோபமான உருவத்தில் உயிரற்ற தூணில் இருந்து வெளிப்படுத்திக் கொண்டு தன் இருப்பை நிரூபித்தார். அதேபோல் கலியுகத்தில் மக்கள் வக்கிரமான எண்ணங்களுடன் கடவுளின் இருப்பை விவாதிக்கும் போது, ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியாக அவதரித்து தன் இருப்பை நிரூபிப்பப்பது மட்டுமல்லாது எப்படி பிரகலாதனை காப்பாற்றினாரோ அதேபோல் பக்தர்களையும் காப்பார்" என்றார்.

பின்னர் நான் அவரிடம் "**ஸ்வாமி!! நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை பீதிகாபுரத்தில் பார்த்துள்ளீர்களா? அவரது பால்ய லீலைகளை கேட்பதற்கு ஆவலாக உள்ளது**" என்றேன்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகா அற்புதங்கள்

ஸ்ரீ ஸ்வாமிகள் கூறத் தொடங்கினார். "எனக்கு சிறு வயதில் திக்குவாய். மக்கள் என்னை கேலி செய்வர். அதோடு சேர்த்து ஒரு வினோதமான நோயால் பாதிக்கப் பட்டேன். ஐந்து வயதிலிருந்து அந்த நோயின் தாக்கம் அதிகரித்தது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு வயது ஏறுவதற்கு பதில் பத்து வயது ஏறியது போன்று தோற்றம் அளிக்க தொடங்கினேன். எனக்கு பத்து வயது இருக்கும் போது ஐம்பது வயது ஒத்தவரின் பண்புகள் இருந்தது. பீதிகாபுரத்தில் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் தலைமையில் ஒரு யாகம் நடைபெற்றது. பிராமணர்களுக்குத் தாராளமாகத் தானம்

அளிக்கப்பட்டது. பண்டிதர்களுக்குத் தாராளமாக சன்மானம் வழங்கப்பட்டது. என் தந்தை ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்களை பற்றி பலர் கூறி கேள்விப்பட்டிருந்தார். அதனால் என்னை அந்த யாகத்திற்கு அழைத்துச் சென்றார். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு அப்போது 6 வயது கூட நிரம்பியிருக்காது. யாகத்திற்குத் தேவையான நெய் வாங்கப்பட்டது. அனைத்து நெய்யும் ஒரு வயதான பிராமணனின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது. அவன் ஒரு கஞ்சன் மட்டுமல்லாது பேராசைக்காரனாகவும் இருந்தான். நெய்யின் முக்கால் பகுதியை மட்டும் யாகத்திற்கு அனுப்பிவிட்டு கால் பகுதியை எடுத்து வைத்துக் கொண்டான். யாகம் தொடங்கியது. நெய்யின் அளவு போதாது என்று யாகத்தை நடத்தும் வேத விற்பன்னர்கள் எண்ணினர். உடனடியாக சென்று நெய் வாங்குவது கடினம். இத்துயரம் யாகத்திற்கு ஒரு தடை என்று அனைவரும் கருதினர். ஸ்ரீ பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரை அமைதியான முகத்துடன் பார்த்தார். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதர் **"சில திருடர்கள் என்னுடைய இராஜ்யத்தைக் கைப்பற்றி என் பணத்தை அபகரிக்க நினைக்கின்றனர். பீதிகாபுரத்தில் என் பெயரில் ஒரு பெரிய தர்பார் ஸ்தாபிக்கப்படப் போகிறது. நான் அத்திருடர்களை உள்ளே வர அனுமதிப்பேன். அவர்கள் திருடிய பணத்துடன் வெளியில் வரும் போது நான் ரகசியமாக கதவருகில் நின்று கொண்டு பெரிய குச்சியால் அவர்களை அடிப்பேன். அதோடு அந்த இடத்திலேயே சிலர் இறந்து விடுவர். சிலர் பணத்தை தவற விட்டு ஓடி விடுவர். நான் சனீஸ்வரரையும் ஜ்யேஷ்டா தேவியையும் (மூதேவி) அத்திருடர்களின் வீட்டில் தங்க ஆணையிடுவேன்"** என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியதை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் பின்னாட்களில் நடக்கப்போவதை தெரிவிக்கிறார் என்று எண்ணினர்.

இதற்கிடையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த வயதான பிராமணரை அழைத்து ஒரு பனை ஓலையில் **"அம்மா கங்காமாதா!! இந்த யாகத்திற்குத் தேவையான நெய்யை நீ தர வேண்டும். எங்கள் தாத்தா ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி கடனைத் தீர்த்து விடுவார். இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணை"** என்று எழுதச் சொன்னார். அது வெங்கடப்பைய சிரேஷ்டியிடம் காண்பிக்கப்பட்டது. அவர் சம்மதித்தார். அந்த வயதான பிரமணனுடன் நால்வர் பாத கயா தீர்த்தத்திற்கு சென்றனர். அந்த ஓலைச்சுவடியை குளத்தில் சமர்ப்பித்தனர். அந்த குளத்திலிருந்து நீரை அவர்கள் கொண்டு சென்றிருந்த பாத்திரத்தில் எடுத்துக் கொண்டனர். வேத மந்திரங்கள் முழங்கிக் கொண்டிருந்த யாகம் நடக்கும் இடத்திற்கு நீர் கொண்டு வரப்பட்டது. அனைவர் முன்னிலையிலும் அந்த நீர் நெய்யாக மாறியது. யாகம் இனிதே நடந்து முடிந்தது. சிரேஷ்டி அவர் உறுதி அளித்தது போல் அதே பாத்திரத்தில் சம அளவில் நெய்யை பாத கயா தீர்த்தத்தில் சமர்ப்பித்தார். நெய் ஊற்றப்படும் போது அது நீராக மாறியது.

என் தந்தை என்னுடைய துயரமான நிலையை ஸ்ரீபாதரிடம் தெரிவித்தார். **"இன்னும் சிறிது நேரம் காத்திருங்கள் உங்கள் மகனின் உடலில் உள்ள நோயை சரி செய்கிறேன். அவனின் திக்குவாய் பிரச்சனையையும் சரி செய்கிறேன். ஒரு வீட்டை எரிக்க வேண்டும். அதற்குத்தான் சரியான முகூர்த்தம் பார்க்க வேண்டும்"** என்றார்.

அவரின் வழிகளை நம்மால் யூகிக்க முடியாது. இதற்கிடையில் அந்த வயதான பிராமணன் அங்கு வந்தார். நெய் திருடியதால் தனக்கு ஏதாவது தீங்கு நடக்குமா என்ற பயத்துடன் இருந்தார். நடந்தவைகளை ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கூறி மன்னிப்பு கேட்டுவிடலாமா என்று யோசித்துத் கொண்டிருந்தார். எது நடந்தாலும் சரி ஸ்ரீ ஸ்ரீபாதரை சந்தித்தால் நன்மை மட்டும் தான் உண்டாகும் என்ற முடிவுக்கு வந்தார். அப்போது அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு சுவாரசியமான உரையாடல் நடைபெற்றது.

**"என் அருமை வயதானவரே! நீங்கள் முகூர்த்தம் நிச்சயம் செய்வதில் திறமைசாலி. ஒரு வீட்டை எரிக்க நல்ல முகூர்த்தம் கூறுங்களேன்"** என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கேட்டார்.

**"வீடு கட்டுவதற்கு மற்றும் அடிக்கல் வைப்பதற்கு தானே முகூர்த்தம் பார்ப்பார்கள்! எரிப்பதற்கு இல்லையே!"** என்றார் பெரியவர்.

**"அது எப்படி திருடுவதற்கும் தீ வைப்பதற்கும் முகூர்த்தம் இல்லாமல் இருக்கும்!"** என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கேட்டார்.

அதற்கு அந்த வயதானவர் **"நான் அப்படிப்பட்ட முகூர்த்தத்தை கேள்விப் பட்டதில்லை. இப்படிப்பட்ட நிகழ்வுகள் கெட்ட நேரம் மற்றும் துரதிர்ஷ்டமான நேரங்களில் நடக்குமோ என்னவோ? அவை கெட்ட நேரங்களில் நடக்கலாம்"** என்றார்.

**"இப்போது ஏதாவது கெட்ட நேரம் நடந்து கொண்டிருக்கிறதா?"** என்றார் ஸ்ரீ ஸ்ரீபாதர்.

**"அப்படி ஒரு கெட்ட நேரம்தான் கடந்து கொண்டிருக்கிறது"** என்றார்.

"பெரியவரே! எவ்வளவு நல்ல விஷயத்தை கூறினீர்கள்! ஒரு அயோக்கியன் யாகத்திற்கு வாங்கிய நெய்யை திருடிவிட்டான். அக்னி பகவானின் பசி இன்னும் தீரவில்லை. அவருக்கு நியாயமாகச் சேரவேண்டிய நெய்யையும் அது இருக்கும் வீட்டையும் சேர்த்து எடுக்கப் போகிறார். இந்த வழியில் தன் பசியைத் தீர்த்து கொள்ளப் போகிறார். அவர் சந்தோஷத்தில் ஆடிக்கொண்டிருக்கிறார்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் சொல்வதை கேட்டு கிழவரின் முகம் வெளுத்துபோனது. சில நொடிகளில் அவர் வீடு எரிந்து சாம்பலானது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த வயதானவரை எரிந்த சாம்பலை கொண்டுவர சொன்னார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர் கோபத்தினால் இழப்புகளையும் ஏற்படுத்துவார், தன் கருணையினால் வரமும் அளிக்கக் கூடியவர் என்பது அந்த பிராமணனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவர் சொல்லுக்குக் கீழ் பணிந்து சாம்பலை கொண்டு வந்து கொடுத்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த சாம்பலைத் தண்ணீரில் கரைத்துக் கொடுத்து என்னைக் குடிக்கச் சொன்னார். இதே போல் என்னை மூன்று நாட்கள் குடிக்கச் சொன்னார். நாங்கள் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் விருந்தாளியாக இருந்தோம். என்னுடைய வினோதமான நோயும் திக்குவாய் பிரச்சனையும் சரியானது. நான் ஆரோக்கியமாக ஆனேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் உதார குணமுடய தன் திருக்கரங்களை என் தலை மீது வைத்து சக்தி பரிமாற்றம் செய்து

அருளினார். 'இன்று முதல் நீ தத்தானந்தா என்ற பெயரில் புகழடைவாய். நீ திருமண பந்தத்தில் நுழைந்து அதை பூர்த்தி செய்துவிட்டு பிறகு அதைத் துறந்துவிட்டு மக்களுக்கு நீதியை போதிப்பாய். உன் பூர்வ ஜென்மத்தில் நீயும் இந்த வயாதன பிராமணனும் சேர்ந்து வியாபாரம் செய்து வந்தீர்கள். வியாபாரத்தில் பகை ஏற்பட்டு நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கொல்லத் திட்டமீட்டீர்கள். ஒரு நாள் அந்த வயதான பிராமணனின் வீட்டிற்குச் சென்று பாயசம் கொடுத்து அவனை அன்புடன் பருக வைத்தாய். அதில் விஷம் கலந்திருப்பது தெரியாமல் அவன் அதை குடித்துவிட்டு இறந்து விட்டான். அதே நேரத்தில் அவனும் உனக்கு தெரியாமல் உன் வீட்டை எரிக்க ஆள் அனுப்பியிருந்தான். எரிந்த வீட்டில் உன் மனைவியும் சேர்ந்து எரிந்து விட்டாள். திரும்பியதும் அனைத்தும் எரிந்து சாம்பலானதை கண்டு மாரடைப்பால் நீ இறந்து விட்டாய். முற்பிறவியில் நீ ஒருவனுக்கு விஷம் கொடுத்ததால்தான் இந்த வினோத நோயால் இந்த பிறவியில் பாதிக்கப்பட்டாய். அவன் பூர்வ ஜென்மத்தில் உன் வீட்டை எரித்ததால் இந்த ஜென்மத்தில் அவன் வீடு எரிந்து சாம்பலானது. நான் இத்திருவிளையாடலின் மூலம் உங்கள் இருவரையும் உங்கள் கர்மப் பிடியிலிருந்து விடுவித்துவிட்டேன்' என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறினார். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையுடன் என் வீட்டிற்கு திரும்பினேன். பின்னர் வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தேன்.



ஸ்ரீ ஸ்ரீபாதரின் தலையீட்டால் எங்கள் இருவரின் கர்ம பந்தங்கள் அறுக்கப்பட்டு எங்கள் இருவருக்கும் நன்மை அளிப்பதாக இருந்தது. அவரின் லீலைகள் தெய்வீகமானது. அந்த வயதான பிராமணனுக்கு ஸ்ரீ நரசிம்ம வர்மா புது வீடு கட்டிக் கொடுத்தார். என் நோயும் திக்குவாய் பிரச்சனையும் தீர்ந்து பண்டிதனானேன். சிவன் இல்லாமல் தக்ஷன் செய்த யாகம் போர்க்களம் போலானது. தர்மத்தின் சூக்ஷ்மங்களை நாம் கவனிக்க வேண்டும்.

மகனே சங்கர் பட்! அனைத்து தெய்வங்களும் அதி அற்புதமான ஒளியில் இருந்துதான் தோன்றுகின்றன. அதிதியின் உருவம் எல்லையற்றது. தெய்வங்கள் அவள் குழந்தைகள். மனித குலத்தின் முன்னேற்றத்திற்கும் மேன்மைக்கும் அவர்கள்தான் பொறுப்பு. தெய்வங்கள் மனிதனுக்குத் தனிப்பட்ட ஒளியை அளிக்கின்றன. அவை மனிதனின் ஆத்மாவுக்கு தெய்வீக சைதன்யம் என்னும் செல்வத்தைப் பொழிகின்றன. அவர்கள் உண்மையை நிலை நிறுத்துவர். அவர்கள் தெய்வீக லோகங்களை நிர்மாணிப்பவர்கள். மனிதனுக்குத் தடைகளாக இருக்கும் தீய சக்திகளை வென்று முக்தியையும் விவரிக்க முடியாத பேரானந்தத்தையும்

அளிக்கின்றனர். முனிவர்கள் தெய்வங்களைப் பார்த்து பின் அவர்களின் பல்வேறு செயல்பாடுகளைக் கவனித்த பின் அவர்களை பல பெயர்களைக் கொண்டு விவரிக்கின்றார். வேதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளுக்குச் சிறப்பு அர்த்தங்கள் உண்டு. பிரபலமாக பயன்பாட்டில் உள்ள 'அஸ்வம்' என்பதற்கு குதிரை என்று பொருள். எனினும் முனிவர்களுக்கு அஸ்வம் என்பது உயிர் நிலையின் உணர்வுகளின் அடையாளம். அது மன உணர்வுகளையும் மூச்சுக்களின் சக்தியையும் ஆதிக்கம் செய்கிறது.

இந்த ரகசியங்கள் அனைத்தும் கிரியா யோகம் சம்பந்தப்பட்டது. வார்த்தைகளும் (வாக்ரூபம்) மூலிகைகள், கால்நடைகள் போன்று உயிரோடு வாழ்பவை. அவை மனிதனின் ஆற்றலைக் கொண்டு உருவாக்கப்படவில்லை. அவை முழுவதும் உயிர்த்துடிப்புடன் அன்னையிடமிருந்து தோன்றியவை. அவை பீஜாக்ஷர ஒலியில் இருந்து தோன்றியவை. அவை முழு வளர்ச்சி பெற்ற வாழும் ஓசைகள். இந்த இலக்கண வேருக்கு பல கணக்கிட முடியாத சந்ததிகள் உண்டு. அதன் வளர்ச்சி அழியாத ஒன்று மற்றும் அவை பல்வேறு வகுப்புகள் மற்றும் இனங்கள், வம்சங்கள் மற்றும் குடும்பங்களாகப் பிரிந்துள்ளது. அந்த சொற்கள் வரிசையில் ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான அமைப்பு மற்றும் தூண்டும் வரலாறும் இருக்கிறது.

## பிராமணர்கள் ஏன் பூமியின் கடவுள் (பூசுரர்கள்) என்று அழைக்கப்படுகிறார்கள்

வேத தீர்க்கதரிசிகளின் கூற்றுப்படி ஒரு மொழியை வாயு, அக்னி அல்லது இந்திரன் உருவாக்கவில்லை. உயிர் உறுப்புகளின் தன்மையிலிருந்துதான் மனது தோன்றியது. உணர்ச்சி உறுப்புகளின் (ஐம்புலன்கள்) ஒத்துழைப்பு மற்றும் விலக்கும் தன்மையை பொருத்துதான் மனதின் அறிவு உருவாகும். இதுபோன்ற பரிணாம முறைகளில்தான், மொழி மற்றும் கற்பித்தலின் சோதனை உயிருடன் இருக்கும் உறுப்புகள் மற்றும் சைதன்யத்தைப் பின்பற்றி உருவானது. குழந்தாய்!! அனைத்து தெய்வங்களும் மந்திரங்களின் உருவகம். அனைத்து உலகங்களும் தெய்வங்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அந்த தெய்வங்கள் மந்திரங்களின் கட்டுப்பாட்டில் உள்ளனர். இந்த மந்திரங்கள் புனிதமான பிராமணனின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஆகவே பிராமணர்கள் இந்த பூமியின் தெய்வங்கள். ஆரம்ப காலங்களில் ஓசைகள் தோன்றியபோது, அவை மனிதனால் மிகவும் வரையறுக்கப்பட்ட ஒன்றாகவும், ஐம்புலன்களால் புரிந்து கொள்ளக்கூடிய அடிப்படைக் கருத்துக்களான ஒளி, அசைவு, தொடுதல், குளிர் மற்றும் வெப்பம், பிரமாண்டம், சக்தியின் பயன்பாடு, வேகம் முதலியவற்றைத் தெரிவிக்க மட்டுமே பயன்படுத்தினர். எனினும், அறிவு விரிவடைந்த பின் மொழியில் பல வகைகளும், உறுதிப்பாடும் படிப்படியாக வளர்ந்தது. அதாவது ஒரு தெளிவற்ற தன்மையிலிருந்து தீவிரமான உறுதிப்பாடு நிலைக்கும், பொருட்கள் சார்ந்த நிலையில் இருந்து மனம் சார்ந்த நிலைக்கும், தெரிந்த பொருட்களிலிருந்து தெரியாத பொருட்களுக்கும் மொழி வளர்ந்து முன்னேற்றம் அடைந்தது.

புனிதம் வாய்ந்த புத்தகங்களை படிப்பது மிகவும் நன்மை பயக்கும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சரிதாம்ருதத்தை எழுத நீ தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாய். நீ இதை

சமஸ்க்ரிதத்தில் எழுதினாலும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாய் மொழியான தெலுங்கில் சில காலங்களுக்கு பிறகு மொழிபெயர்க்கப்படும். பக்தியுடன் எந்த மொழியில் பாராயணம் செய்தாலும் அதன் பலன் ஒன்றுதான். இந்த சரிதாம்ருதத்தை யார் எந்த இடத்தில் படித்தாலும் ஸ்ரீ ஸ்ரீபாதர் சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு இருந்துகொண்டு கேட்டுக்கொண்டிருப்பார். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு கதை சொல்கிறேன். கவனமாக கேள்.

ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு 7 வயதானது. வேத முறைகள் கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டு அவருக்கு பூணூல் அணிவிக்கப்படும் வைபவம் நடந்தது. வசதியானவர்கள் வீட்டில் நடத்தப்படும் இது போன்ற நிகழ்ச்சிகளில் பரபரப்பும் உற்சாகமும் நிறைந்திருக்கும். விழாவில் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. எனினும் தத்த தாஸ் என்கிற தாழ்ந்த சாதிக்காரனுக்கு இவ்விழாவை காணும் பாக்கியம் கிடைக்கவில்லை. அவர் தன் சாதிகாரர்கள் அனைவரையும் தத்த சரித்திரத்தை கூறுவதாக கூறி தன் வீட்டிற்கு அழைத்தார். அவர்கள் அனைவரும் மிகவும் ஆர்வமுடன் வந்தனர். தத்த தாஸ் தத்த சரித்திரத்தை இவ்வாறு கூறினார், “பழங்காலத்தில் அன்னை அனுசுயாவுக்கும் அத்ரி மகரிஷிக்கும் மகனாக பிறந்த அந்த உயர்ந்த ஒளிதான் இப்போது கலியுகத்தில் பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளார். இன்று அவருக்கு பூணூல் அணிவிக்கும் வைபவம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவர் தெய்வீக ஒளியில் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார். ஆதரவற்றவர்களை உயர்த்தும் நம் கடவுளுக்கு எப்போதும் நல் அதிர்ஷ்டமும் வளமான ஐஸ்வர்யமும் நிலைத்திருக்கட்டும்!” என்று விவரித்தார். தத்த தாஸுக்கு இதற்கு மேல் ஸ்ரீ குருவை பற்றி கூறுவதற்கு பாண்டித்தியம் இல்லை. அதனால் இதே கதையை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தார். கேட்பவர்களும் எந்த கவனச்சிதறலும் இல்லாமல் அதையே கேட்டுக்கொண்டிருந்தனர். இதேபோல் 53 முறை சென்றது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் அமிர்தம் பொங்கும் பார்வை தத்த தாஸின் மீது விழுந்தது. பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் அங்கு கூடியிருந்த அனைத்து பிரமணர்களிடமும் ‘நான் உடனடியாக பிக்ஷை எடுக்கும் தாழ்ந்த ஜாதிக்காரர் வீட்டிற்கு செல்ல வேண்டும்’ என்றார். ஸ்ரீ பாப்பண்ணார்யா காரணத்தை கேட்டார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் “தூய மனதுடைய தத்ததாஸ் என் வரலாற்றை வர்ணித்துள்ளார். அவர் ஒரு முறை கூறியதை ஒரு அத்தியாயமாக எடுத்துக்கொண்டால் அவர் 53 முறை கூறியதால் 53 அத்தியாயங்கள் முடித்தது போலாகும். எவர் ஒருவர் பக்தி சிரத்தையுடன் 53 அத்தியாயங்களை பாராயணம் செய்கிறார்களோ அவர்களுக்கு நான் உடனடியாக பலனை அளித்ததாக வேண்டும்” என்று கூறினார்

## தன் பக்தர்களிடம் இனம் ஜாதி வேறுபாடுகள் இல்லாமல் ஸ்ரீ ஸ்ரீபாதர் அன்பை பொழிவார்

ஸ்ரீ ஸ்ரீபாதரை தத்ததாஸை சந்திப்பதற்கு பிராமணர்கள் அனுமதியளிக்கவில்லை. இதனால் கோபம் அடைந்த ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆத்திரத்தோடு “நீங்கள் ஜாதி என்ற

பெயரில் ஒடுக்கும் தாழ்ந்த ஜாதி மக்கள் மற்றும் ஹரிஜன மக்கள் வரும் நூற்றாண்டுகளில் என் அருளை தாராளமாக பெறுவர். அவர்கள் வரும் நூற்றாண்டுகளில் மிகுந்த உயர்ந்த நிலையில் இடம்பெற்றிருப்பர். வரும் நூற்றாண்டுகளில் பிராமணர்களில் பெரும்பான்மையானவர்கள் அடிமைத்தனத்தை பின்பற்றி தாழ்த்தப்பட்டு நீதியையும் தர்மத்தையும் விட்டு விலகி தரம் குறைந்து விடுவீர்கள். என் வார்த்தைகள் அனைத்தும் கல்லில் பொறிக்கப்பட்டவை போன்றது. இதில் ஒரு வார்த்தை கூட மாற்ற முடியாது. அப்படி ஒரு பிராமணன் எவரேனும் நல்லொழுக்கத்தை கடைபிடித்து தத்தரின் மேல் பக்தியுடன் இருந்தாரானால் கண்ணை இமை காப்பது போல் நான் அவரை காப்பேன்" என்றார். பெற்றோர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை சமாதான படுத்த முயற்சித்தனர். சிறிது நேரத்திற்கு பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் அமைதியடைந்து மௌனமானார். சரியாக அதே நேரத்தில் தத்த தாஸின் இல்லத்தில் மிகவும் பிரகாசமான தெய்வீக ஒளியுடன் காட்சி அளித்தார். அவர்கள் அவருக்கு பிரியமாக அளித்த இனிப்பான பழங்களை ஏற்றுக்கொண்டார். அவருக்கு அளிக்கப்பட்ட பாலை மிகுந்த அன்புடன் பருகினார். தம் திருக்கரங்களால் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். தத்த தாஸின் வீட்டில் இருந்தவர்கள் அனைவருக்கும் ஆசிகள் வழங்கினார்.

என் மகனே சங்கர் பட்!! ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக அன்பை பார்த்தாயா? அவர் உன் உள்மனதின் எண்ணங்களினால் சந்தோஷம் அடைகிறார். அவருக்கு குலம், கோத்திரம் மற்றும் வஸ்துக்களை பற்றி கொஞ்சமும் அக்கறை இல்லை. ஒருவர் தாழ்ந்த சாதிக்காரனாக இருப்பினும் தத்த பிரசாதத்தை கொடுத்தால் அதை மறுக்காமல் பக்தியுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அதை பெற்றுக்கொள்ளாமல் அவமதித்தால் அவர்கள் துன்பத்திற்கும் இழப்புக்கும் ஆளாக நேரிடும்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களுக்கு அளித்த 12 வாக்குறுதிகள்

ஸ்ரீ ஸ்ரீபாதர் தத்த தாஸின் இல்லத்தில் அளித்த வாக்குறுதிகளை கவனமாக கேள்;

1) என் சரிதாம்ருதம் எந்த இடத்தில் பக்தியுடன் பாராயணம் செய்யப்படுகிறதோ அங்கு நான் சூக்ஷ்ம ரூபத்தில் இருப்பேன்.

2) மனம், சொல், செயலால் என்னிடம் அர்பணித்துக் கொண்டவர்களை கண்ணை இமை காப்பது போல் காப்பேன்.

3) தினமும் மதிய நேரத்தில் ஸ்ரீ பீதிகாபுரத்தில் பிக்ஷை எடுப்பேன். என் வருகை ஒரு தெய்வீக ரகசியம்.

4) என்னை எப்போதும் தியானிப்பவர்களின் கர்மாக்களை எரித்து சாம்பலாக்கி விடுவேன். அந்த கர்மாக்கள் பல பிறவிகளில் குவிந்தது என்றாலும் கூட அவற்றை எரித்து விடுவேன்.

5) **"ஓ! ராமச்சந்திரா!! உணவு கொடு!!"** என்று கேட்பவர்களுக்கு உணவளித்தால் நான் சந்தோஷம் அடைவேன்.

6) நான்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபா!! என் பக்தர்களின் இல்லத்தில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி அனைத்து சௌபாக்கியங்களுடன் வாசம் செய்வாள்.

7) உனக்கு தூய மனம் இருந்தால் என் அருள் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்.

8) நீ எந்த உருவத்தில் உள்ள தெய்வத்தை வழிபட்டாலும் அல்லது எந்த சத்குருவின் ஆதரவு எடுத்துக்கொண்டாலும் எனக்கு சம்மதமே.

9) உன் அனைத்து பிராத்தனைகளும் என்னிடம்தான் வந்து சேரும். என் அருள் அனைத்தும் நீ வணங்கும் தெய்வத்தின் மூலமாகவோ அல்லது சத்குருவின் மூலமாகவோ உன்னிடம் வந்து சேரும்.

10) ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்பது இந்த உருவத்திற்கும் பெயருக்கும் மட்டும் வரையறுக்கப்படவில்லை. அனைத்து தெய்வ உருவங்கள் மற்றும் அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய என் ஒருங்கிணைத்த பாகங்களான, என் பிரபஞ்ச உருவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் தீவிரமான ஆன்மீக சாதனைகளை கடைபிடிக்க வேண்டும்.

11) என்னுடைய அவதாரம் ஒரு விரிவான யோக அவதாரமாகும். மிகச்சிறந்த யோகிகளும் சித்தர்களும் என்னை எப்போதும் தியானித்துக் கொண்டே இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் என்னுடைய பாகங்கள்தான்.

12) என் ஆதரவை நீ பெற்றுக்கொண்டால் தர்ம பாதையையும் கர்ம பாதையையும் போதிப்பேன். எப்போதும் அழிவிலிருந்து பாதுகாப்பேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**




# அத்தியாயம் - 15

## பங்காரப்பா மற்றும் சுந்தரராம சர்மா பற்றிய விவரங்கள்

நான் தத்தானந்த ஸ்வாமியை விட்டு கிளம்பி என் பயணத்தை தொடர்ந்தேன். எனக்கு தாகம் எடுத்ததால் கிணறு இருக்கும் இடத்திற்கு அருகில் சென்றேன். அங்கு தண்ணீரை இறைத்துக் குடிப்பதற்கு ஒரு வாளியும் இருந்தது. நான் கிணற்றுக்குள் ஒரு வினோதமான காட்சியை பார்த்தேன். ஒரு மனிதன் கிணற்றினுள் அமைத்திருக்கும் களிமண்ணால் ஆன வட்டமான வளையங்களுக்கு நடுவே வளர்ந்திருக்கும் மரத்தின் கிளையில் தலைகீழாக தொங்கிக் கொண்டிருந்தான். அந்த அந்நியன் என்னை அன்போடு "சங்கர் பட்!" என்று அழைத்தான். என்னுடைய பெயர் அவனுக்கு எப்படி தெரிந்தது என்று ஆச்சரியத்துடன் நான் அவனிடம் கேட்டேன். அதற்கு அவன் **"உங்கள் பெயர் மட்டுமல்ல நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசிக்க குருக்கட்டா செல்வது கூட எனக்கு தெரியும். நான் உங்களைக் காணத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்"** என்றான்.

அவனைக் கிணற்றிலிருந்து எப்படி வெளியே இழுப்பது என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். வாளியுடன் கட்டப்பட்டிருந்த கயிறு மிகவும் வலிமையற்றதாக இருந்தது. என் எண்ண ஓட்டத்தை அறிந்து கொண்ட அந்தப் புனிதமான மனிதர், "நீங்கள் இவ்வுலக பிணைப்புகளில் கட்டுண்டு இந்த உலகத்திற்குத் தொடர்பான சூழ்நிலை என்னும் கிணற்றில் விழுந்து கிடக்கும் ஒரு மனிதன். நான் இந்த பிணைப்புகளை உடைத்து இந்த விசித்திரமான யோக முத்திரையில் ஆத்மாவின் பேரானந்தத்தில் நிலைத்திருக்கிறேன். என்னை எப்படி உங்களால் உயர்த்த முடியும்? நான் என் விருப்பப்படி எழுவேன். நம் வலிமை போதவில்லை என்றால் ஸ்ரீ ஸ்ரீபாதர் நமக்குத் தேவையான வலிமையை அளிப்பார்". இவ்வாறு கூறிக்கொண்டே கண்ணிமைக்கும் நேரத்தில் எனக்கு அருகில் வந்து நின்றார். எனக்கு பிரமிப்பாக இருந்தது. அவர் பேசத் தொடங்கினார். **"என் பெயர் பங்காரப்பா. உனக்கு தாகமாக இருக்கிறது. முதலில் உன் தாகத்தைத் தணிக்கிறேன்"** என்றார். அந்த வாளியைக் கொண்டு கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து அவர் வேகமாக பருகினார். வினோதமாக என்னுடைய தாகம் தணிந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பின்னர் நாங்கள் இருவரும் சேர்ந்து பயணிக்கத் தொடங்கினோம். அவர், "நான் பொற்கொல்லர் குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் மந்திரங்கள் மற்றும் தந்திரங்களில் கைதேர்ந்தவன். மந்திரங்கள் மற்றும் தந்திரங்களைப் பிரயோகப்படுத்தி எனக்கு பிடிக்காதவர்களை கொல்லும் அளவுக்கு திறன் பெற்றவனாக இருந்தேன். எனக்கு பேய்,பிசாசுகள் மற்றும் அரக்கர்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. நான்

மயானத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வேன். மக்கள் என் பெயரை கேட்டாலே நடுங்குவர். நான் எந்த கிராமத்திற்கு சென்றாலும் நான் ஏதாவது பேய் பிசாசை ஏவி விட்டு துன்பத்தையும் இழப்பையும் ஏற்படுத்தி விடுவேனோ என்ற பயத்தில் மக்கள் அதிகமாக பணம் அளிப்பர். அந்த பணத்தில் பெரும்பான்மையான அளவு என்னையே நம்பியிருக்கும் பேய் பிசாசுகளுக்கு பலியிடுவதற்குத்தான் பயன்படுத்தப்படும். அந்த கெட்ட ஆவிகளுக்கு நேரத்திற்கு பலி இடவில்லை என்றால் அவை எனக்கு மிகுதியான தீங்கு இழைக்கும். ஒரு சாதாரண மனிதனின் முகத்தில் இருக்கும் சாந்தம் இல்லாமல், என் முகம் பேய் பிசாசுகளின் தீய மற்றும் தீங்கு விளைவிக்கும் அம்சங்களைப் பிரதிபலித்தது. நான் சுற்றித் திரிந்து கொண்டிருந்த போது என் பூர்வ ஜென்ம புண்ணியங்களினால் நான் பீதிகாபுரத்திற்கு வந்தேன்.



ஸ்ரீ தத்தரின் அவதாரத்தால் புனிதமாக்கப்பட்ட அந்த ஊரில் கீழ்த்தரமான சதித் திட்டங்களுக்கும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கொள்வதிலும் எந்த பஞ்சமும் இல்லை. நான் ஸ்ரீ பாப்பண்ணார்யா பற்றியும் ஸ்ரீ ஸ்ரீபாதர் பற்றியும் வினோதமான மற்றும் அற்புதமானத் தகவல்கள் கேள்விப்பட்டேன். முதலில் நான் ஸ்ரீ பாப்பண்ணார்யாவை கொல்ல எண்ணினேன். ஒரு குளத்திற்கு சென்று கை நிறைய தண்ணீரை இடைவிடாமல் குடிக்க தொடங்கினேன். ஒரு மனிதனை கொல்வதற்கு என்னிடம் பல வழிகள் இருந்தன. அதில் ஒன்று யாரை கொல்ல வேண்டுமோ அவர்களை மனதில் ஆழமாக நினைத்துக் கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இம்முறையினால் நான் குடிக்கும் அனைத்து தண்ணீரும் அந்த மனிதனின் வயிற்றில் நுழையும். அவர் வயிறு முழுவதும் தண்ணீர் நிரம்பி வீங்கி வெடித்து விடும். அந்த மனிதன் இறந்து விடுவார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளைக் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. நான் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் பாப்பண்ணார்யாவுடன் இருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் பாப்பண்ணார்யாவின் வயிறை அன்போடு தடவி கொண்டிருந்தார். நான் அதிகமான அளவு தண்ணீர் குடித்தாலும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் சக்தியின் பலனால் அவை ஆவியாகிக் கொண்டிருந்தன. மீண்டும் மீண்டும் தண்ணீர் குடித்து நான் சோர்ந்து போனேனே ஒழிய ஸ்ரீ பாப்பண்ணார்யா பாதுகாப்பாகவும் ஆரோக்கியத்துடனும் இருந்தார். என்னுடைய மாயமந்திரம் அன்று தோல்வியடைந்தது மிகவும் வருத்தத்தை அளித்தது. அதன் காரணம் எனக்குத் தெரியவில்லை.

## ஸ்ரீ ஸ்ரீபாதரை வழிபடுபவர்களுக்கு தீய சக்தியின் அச்சுறுத்தல்களை நீக்குதல்

என்னால் பாம்பை மந்திரத்தை கொண்டு கட்டுப்படுத்த முடியும். நான் யாரை தியானித்து மந்திரத்தை ஜெபிக்கிறேனோ அவர்கள் வீட்டுக்குள் அனைத்து மூலைகளில் இருந்தும் பாம்பு வந்து சேர்ந்து அந்த நபரை கொத்தும். நான் பாப்பண்ணார்யாவை தியானித்து மந்திரங்கள் ஜெபித்தேன். பின்னர் பாப்பண்ணார்யாவின் வீட்டிற்கு பல சர்ப்பங்கள் வந்து சேர்ந்தன. அவர் வீட்டுத் தாழ்வாரத்தின் மர உத்திரத்தில் பாம்புகள் ஏறி புடலங்காயை போல தொங்கின. சிறிது நேரத்தில் அவை எங்கிருந்து வந்தனவோ அதே இடத்திற்கு சென்று விட்டது. இந்த வழியில் என்னுடைய இரண்டாவது முயற்சியும் தோல்வியில் முடிந்தது. என்னுடன் இருந்த பேய்களும் பிசாசுகளும் தங்களால் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்கு அருகில் கூட செல்ல முடியவில்லை என்று அப்பட்டமாக கூறின. இவை அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகள்தான் என்று எனக்கு சிறிதளவு புரிந்தது. என்னுடைய பேய்க்குணம் முடியாததால் நான் மயானத்திற்குச் சென்றேன். அங்கு மாவு கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாதர் பொம்மையை செய்து 32 ஊசிகளைக் கொண்டு அந்த மாவு பொம்மையில் 32 புள்ளிகளில் துளையிட்டேன். இந்த செயல்முறையின் மூலம் துளையிட்ட இடங்களில் எல்லாம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் உடலில் நோய் தாக்கும். அது மட்டும் அல்லாமல் அந்த ஊசிகள் திரவமாகி ஸ்ரீ ஸ்ரீபாதரின் உடலில் மூழ்கிவிடும். அவர் உடல் முழுவதும் விஷம் ஏறி இறந்து விடுவார். என்னுடைய இந்த முயற்சியும் தோல்வி அடைந்தது.

வழக்கத்திற்கு மாறாக ஒரு நாள் நள்ளிரவு என் வயிற்றுக்குள் அதிகமான தண்ணீர் நுழைவது போன்ற உணர்வு ஏற்பட்டது. இது எனக்கு மரண வேதனை அளித்தது. என்னுடைய பாம்பு மந்திரத்தினால் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்குள் சென்ற அனைத்து பாம்புகளும் பீதிகாபுரத்தில் இருந்த என் தற்காலிக வீட்டிற்குள் நுழைந்து என்னை கொத்தின. ஸ்ரீ ஸ்ரீபாதரின் மாவு பொம்மையில் எந்த இடத்தில் எல்லாம் நான் ஊசியால் குத்தினேனோ அந்த இடத்தில் எல்லாம் எனக்கு வலி ஏற்பட்டது. இந்த முறைகளில் என்னுடைய தீய நடவடிக்கைகள் அனைத்தையும் என் உடலில் ஏற்பட்டு அவதியுற்றேன். நான் நரகத்தை போன்ற துன்பத்தை அனுபவித்தேன். எனக்கு இறந்து விடலாம் போல் தோன்றியது ஆனால் இறப்பு ஏற்படவில்லை. நரகத்தில் ஏற்படும் வேதனைகள் இறந்த பின்னர்தான் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அன்று இரவு நான் உயிரோடு இருக்கும் போதே அனுபவித்தேன். ஒரு மனிதன் தாங்க முடியாத துன்பத்தை எதிர்கொண்டால் கடவுளின் பக்கம் திரும்புவான். என் மனதில் ஸ்ரீ ஸ்ரீபாதரை அடைக்கலம் பெறலாம் என்று தோன்றியது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் உருவம் என் மனக்கண்ணில் தோன்றி "பங்காரப்பா! உன்னுடைய கொடூரமான பாவங்களினால் இந்த உலகத்தில் பல வருடங்கள் துன்பம் அனுபவித்திருக்க வேண்டும் மற்றும் பின்னர் நரகத்திலும் பல தண்டனைகளுக்கு உட்படுத்த பட்டிருக்க வேண்டியிருந்திருக்கும். எனினும் உன்

மீது கருணை கொண்டு உன் பாவங்கள் அனைத்தையும் ஒரே இரவில் அழித்துவிட்டேன். உன்னுடைய தீய நடைமுறைகள் அனைத்தும் அழிந்துவிட்டன. உன் மனதில் யாருக்காவது தாகம் எடுப்பது போல் தெரிந்தால் அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவர்களுக்கு பதில் நீ தண்ணீர் அருந்தி உன் தாகத்தை தணித்து கொண்டால் அவர்களின் தாகம் அடங்கிவிடும்.

ஒருவர் தலைகீழாகத் தொங்குவது போல ஒரு யோக நடைமுறை உள்ளது. நீ அதைப் பயிற்சி செய்தால் பேரின்பத்தை பெறுவாய். என் வீட்டிற்குள் நுழைவதற்கோ அல்லது ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்குள் நுழைவதற்கோ பல ஜென்மங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். உனக்கு இந்த ஜென்மத்தில் அதற்கு அதிர்ஷ்டம் இல்லை. அதிர்ஷ்டம் என்பது திடீரென்று வருவது அல்ல. துரதிர்ஷ்டம் என்பது பாரபட்சமாக அளிக்கப்படும் ஒன்று அல்ல. பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணியங்கள் திடீரென்று பலனளித்தால் அது நல்லதிர்ஷ்டம் என்று அழைக்கப்படும். பாவச் செயல்கள் திடீரென பலித்தால் அது துரதிர்ஷ்டம் என்று அழைக்கப்படும். பரமேஸ்வரன் நமக்கு உயிர் அளிப்பதால் அதை எடுக்கும் உரிமை அவருக்கு மட்டும்தான் உண்டு. பெற்றோர்கள் நமக்கு பிறப்பு அளிப்பதால் அவர்கள் அதிகபட்சமான அன்புக்கு தகுதியுடையவர்கள். பெற்றோர்களை வயதான காலத்தில் புறக்கணிப்பவர்கள் என் கருணையைப் பெற மாட்டார்கள். உன்னுடைய மிருகத்தனமான நடவடிக்கைகளால் பல அப்பாவிகள் துர் மரணத்திற்கு ஆளானார்கள். இந்த பாவத்தின் பலன் நீ சங்கர் பட் என்கிற கன்னட பிராமணரை சந்திக்கும் வரை உன் மனதில் நிலைகொண்டிருக்கும். அவர் தாகமாக இருக்கும் போது உன்னுடைய ஆற்றலை பயன்படுத்தி அவர் தாகத்தை தணிப்பாய். பின்னர் உன்னுடைய பாவங்கள் அனைத்தும் அழிந்துவிடும். அந்த சங்கர் பட்தான் என்னுடைய வரலாற்றை எழுதுவார்" என்றார். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற போது ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு ஏழிலிருந்து எட்டு வயது இருக்கும்.

என் அருமை சங்கர் பட், நான் அன்றிலிருந்து உங்களுக்காக காத்திருக்கிறேன். இன்று எனக்கு மிகுந்த நன்னாள்!" என்று கூறி பங்காரப்பா தன் உரையை முடித்துக் கொண்டார். எனக்கு இந்த கதைகள் அனைத்தும் குழப்பம் அளித்தன. நான் அவரிடம் **"ஐயா,எப்படி இன்னொருவரின் தாகம் நீங்கள் தண்ணீர் அருந்துவதால் தணியும்? இதன் ரகசியத்தை தயவு செய்து விளக்குங்கள்"** என்றேன். பின்னர் பங்காரப்பா, "என் மகனே, அன்னமய கோசத்தில் வாழும் உயிரினங்கள் வஸ்துக்களின் தாக்கம் பெற்று உணர்ச்சிகளற்ற உலகத்தை அனுபவிப்பர். பிராணமய கோசத்தில் வாழும் உயிரினங்களுக்கு சூக்ஷ்ம உடலின் உள்ளுணர்வுகள் இருக்கும். மனோமய கோசத்தில் வாழும் உயிரினங்களுக்கு மனரீதியான உலகங்களின் தொடர்பு இருக்கும். விஞ்ஞானமய கோசத்தில் வாழும் உயிரினங்களுக்கு அதற்குச் சம்பந்தமான உலகத்தோடு தொடர்பு இருக்கும். ஆனந்தமய கோசத்தில் வாழும் உயிரினங்கள் பேரானந்தத்தை அனுபவிக்கும். என்னால் என்னுடைய பிராணமய சக்தியையும் மற்ற உயிரினங்களின் பிராணமய சக்தியையும் ஒருங்கிணைக்க முடியும். இதனால் அதன் ஒருமைப்பாட்டை உணர்ந்து கொள்வதால் இது சாத்தியமாகிறது.

பழங்காலத்தில் இருந்த ஒரு வகையான யோக முறையினால் வாலி அவரை எதிர் கொள்ளும் மனிதனின் வலிமையில் இரு மடங்கு அதிகம் பெற முடியும். ஆதலால்தான் ராமர் வாலியை மரத்திற்கு பின் மறைந்து கொண்டு கொன்றார்.

விஸ்வாமித்ர முனிவர் ராமருக்கும் லக்ஷ்மணருக்கும் இரண்டு புனித மந்திரங்களான பலா மற்றும் அதிபலாவை துவங்கிவைத்தார். ஒருவர் இந்த மந்திரங்களின் அதிர்வலைகளுக்கு ஏற்றார் போல் பிராண சக்தியை தயார் நிலையில் வைத்திருந்தால் பிரபஞ்சத்தின் மிகவும் உள்புறம் இருக்கும் பிரபஞ்ச சக்தியை தன் இயக்கத்திற்குள் ஈர்த்துக் கொள்ள முடியும். உடல் அசுத்தமாக இருந்தால் அந்த சக்தி உடலுக்குள் நுழையும் போது தாங்க முடியாத வலியை உணர்வர். அதுமட்டுமல்ல. அந்த சக்தியை தக்க வைத்துக் கொள்ள முடியாமல் சிலர் இறந்து கூட விடுவர். ஶ்ரீ ராமரின் உடல் பன்னிரண்டாவது நிலையை சேர்ந்தது. ஶ்ரீ தத்தரின் உடல் பன்னிரண்டாவது நிலையை கடந்த ஒன்று. ஆகவே ஶ்ரீ தத்தரின் அவதாரமான ஶ்ரீ ஶ்ரீபாதர் இயற்கையாகவே எல்லையில்லா வலிமையையும், எல்லையில்லா ஞானத்தையும் பெற்று, எங்கும் நிறைந்திருப்பவர்.

நான் அவரிடம் "**ஐயா, கௌதம முனிவரின் சாபத்தால் அகலிகை கல்லானதாகவும் ஶ்ரீ ராமரின் பாத தூசி அந்த கல்லில் பட்டவுடன் சாப விமோசனம் பெற்றாள் என்று கூறப்படுகிறது. அவள் உண்மையாகவே கல் ஆகிவிட்டாளா அல்லது அதில் ஏதாவது ரகசியமான அர்த்தம் உள்ளதா?**" என்று கேள்வி எழுப்பினேன். பங்காரப்பா விளக்கத் தொடங்கினார். "நீங்கள் ஒரு நல்ல கேள்வி கேட்டீர்கள். இந்திரன் அகலிகையின் நிழல் உருவத்தோடுதான் தொடர்பில் இருந்தான். அது தெரியாத கௌதம முனிவர் கோபத்தோடு அகலிகையை பாறையாக மாற சாபமிட்டார். பின்னர் அகலிகை கௌதம முனிவரிடம் "ஏ, முட்டாள் ரிஷியே என்ன செய்து விட்டீர்கள்?' என்றாள். கௌதமர் தன் புத்தியை இழந்து பைத்தியம் ஆனார். அவர் பல புனித இடங்களுக்குச் சென்று இறுதியில் சிவபெருமானை தரிசித்த பின் மீண்டும் ஆரோக்கியம் பெற்றார். சைதன்யத்தின் பரிணாம வளர்ச்சியின் போது கல் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும். அதன் ஆன்மா செயலற்ற நிலையில் இருக்கும். பாறைகளில் பல வகை உண்டு. சில பாறைகளில் இருக்கும் ஆத்மா அந்தப் பாறையின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும். அந்த அனுபவங்களுக்கு பின் அந்த ஆன்மா வேறு வகையான பாறைக்குள் நுழையும் மற்றும் முதல் பாறைக்குள் வேறொரு ஆன்மா நுழைந்துவிடும். யோகப் பார்வையுடன் இருக்கும் மனிதர்களால் மட்டுமே அந்த குறிப்பிட்ட பாறையில் அந்த ஆன்மா எவ்வளவு காலம் வசிக்கும் என்பதை தெரிந்துகொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட பாறையில் ஒரு ஆன்மா இருக்கிறது என்று அனுமானித்துக் கொள்வோம். அந்த பாறை இரண்டாக உடைக்கப்பட்டது. பின்னர் ஒரு ஆன்மா பாறையின் ஒரு துண்டிலும் இன்னொரு ஆன்மா உடைந்த மற்ற துண்டிலும் இருக்கும். இரண்டு ஆத்மாக்களும் சில அனுபவங்களுக்கு உட்படுத்தப்படும். தான் எம்மாதிரியான அனுபவங்களுக்கு உட்படுத்தப்படுகிறோம் என்பது அந்த ஆன்மாவிற்கு தெரியாது. ஆனால் ஆன்மா பாறைகள் நிலையில் இருக்கும் போது அது அளவில்லா

வலி அனுபவிக்கும். அவைகளுக்கு உயிர் இல்லை என்றாலும் வலியின் அனுபவம் இன்னும் இருக்கும்" என்றார்.

## உயிரினங்கள் பல பிறவிகளில் அனுபவிக்கும் வேதனைகள் பற்றிய விளக்கம்

நான் அவரிடம் "**மகிழ்ச்சி அல்லது வலியை உயிர் இருந்தால் மட்டும்தான் உணர்ந்து கொள்ள முடியும் என்று சொல்வார்கள். அப்படியிருக்க, உயிரற்ற பொருட்கள் அளவில்லா வலிக்கு உட்படுத்தப்படுவது எப்படி சாத்தியம்?**" என்று கேட்டேன். பின்னர் பங்காரப்பா அதற்கு "தனி ஒருவரின் ஆன்மா உயர்ந்த ஆன்மாவுடன் ஐக்கியமாகும் போது அது தெய்வீகப் பேரானந்தத்தை அனுபவிக்கும். இதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது மற்றும் மனதால் புரிந்து கொள்ள முடியாது. அதே போல் தனி ஒருவரின் ஆன்மா பாறையில் இருக்கும் போது, தெய்வீகப் பேரானந்தத்திற்கு எதிர்மறையான மிகப் பெரும் துயரத்தை அனுபவிக்கும். அதையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது மற்றும் மனதால் புரிந்து கொள்ள முடியாது. ஆன்மா பல பாறைகளில் அலைந்து விவரிக்க முடியாத, கற்பனை செய்ய முடியாத, உயிரற்ற பெரும் துன்பங்களை அனுபவித்து கொண்டே இருக்கும். இந்த பாணியில் அவை உலகத்திற்குள் நுழையும். அவை பல வகையான உலோகங்களுக்குள் நுழைந்து உயிர் செயலற்ற நிலையில் இருப்பதை அனுபவிக்கும். அந்த உலோகத்தின் மேல் நீங்கள் அதற்கு தீங்கு விளைவிக்கும் ஏதாவது விஷத்தன்மை உடைய பொருளை ஊற்றினால் செயலற்ற நிலையில் இருக்கும் அதன் உயிர் துன்புற்று இந்த உலோகத்தை விட்டு விலகி இன்னொரு உலோகத்திற்குள் இடம்பெயர்ந்து விடும். உலோகங்களில் தன்னை அடையாளம் கண்டு கொண்ட ஆன்மா பரிணாம வளர்ச்சி முறையின் மூலம் இறுதியாக மரத்தினுள் நுழையும். உயிரற்ற பொருட்களில் செயலற்ற நிலையில் இருந்த அதன் பிராண சக்தி சுறுசுறுப்பாகி நிமிர்ந்த நிலையிலோ அல்லது சாய்வான நிலையிலோ இருப்பதற்கான உந்துதல் ஏற்படும். பலம் அளிப்பதற்காக இருக்கும் வேர்கள் பூமியைப் பிளந்து கொண்டு பரிணாம வளர்ச்சிக்கு வசதிப்படுத்தும்.

இதன் மூலம் ஆன்மா பலவகையான மரங்களுக்குள் நுழைந்து பல அனுபவங்களுக்கு உட்படுத்தப்படும். இந்த வழியில் அது 50% உயிருள்ள நிலைக்கும் 50% உயிரற்ற நிலைக்கும் வரும். பின்னர் புழுவாகவும் பூச்சிகளாகவும் பரிணாமம் அடையும். இந்த நிலையில் நகர வேண்டும் என்கிற அதன் உந்துதல் முழுமையடையும். இந்த பாணியில் பல்வேறு புழுக்கள் மற்றும் பூச்சிகளாக மேலும் மேம்படுத்தப்பட்டு இறுதியில் மீன் உருவம் எடுக்கும். பின்னர் பறவையின் உருவம் எடுக்கும். பல வகையான பறவைகளின் அனுபவங்களை பெற்ற பின்னர் நான்கு கால் உயிரினமாக பிறக்கும். இறுதியாக புனிதமான பசுவாக பிறக்கும். அன்னையைப் போல் அனைவருக்கும் பால் அளிப்பதால் அவளுக்கு தெரியாமலேயே அவள் புண்ணியம் பெற்று கொள்வாள். காளையாக தானியங்கள் உற்பத்திக்கு ஒத்துழைப்பு அளிக்கிறது. அடுத்த பிறவியில் மனித உடல் எடுத்துக்கொள்ளும். மனப்பாங்கைப் பொருத்து எண்ணங்கள் தோன்றும். அவை நடவடிக்கைகளாக மாறும். இந்த பாணியில்தான் நல்ல செயல்களும் தீய செயல்களும் செய்யப்படுகின்றன.

## ஆன்மீக செயல் முறை பாதையின் ஏழு நிலைகள்

மனிதன் தன் பரிணாம வளர்ச்சியின் போது ஏழு நிலைகலைகளுக்குள் நுழைகிறான். முதல் நிலையில் மொத்த ஸ்தூல உடல் அங்கங்களும் சூக்ஷ்ம உடல் அங்கங்களும் ஒரே நேரத்தில் உபயோகப்படுத்தப்படும். இரண்டாவது நிலையில் சூக்ஷ்ம உடல் பாகங்களின் உதவியைக் கொண்டு சூக்ஷ்ம உலகங்களின் அனுபவங்களைப் பெற்று சிறிய அற்புதங்கள் புரிவதற்கான திறன் பெறுவர். மூன்றாவது நிலையில் சூக்ஷ்ம உடலுடன் தூரமான இடங்களுக்குப் பயணம் செய்யும் திறன் பெறுவர். மூன்றாவது நிலைக்கும் நான்காவது நிலைக்கும் இடையே அதீத சக்தியுடன் கூடிய மையப்பகுதி ஒன்று உள்ளது. இந்த நிலையின் தாக்கத்தினால் ஒருவர் வீழ்த்தப்பட்டு ஒரே நிலையில் இருப்பர். கௌதம முனிவர் சபித்த உடன் அகலிகை மிகுதியான அதிர்ச்சிக்கு ஆளானாள். உள்ளுணர்வுகள் வாயிலாகக் கூறவேண்டும் என்றால் அவள் கல் போன்ற நிலையை உணர்ந்தாள். ஸ்ரீ ராமரைக் காணும் வரை அதே உள்ளுணர்வு நிலையில் இருந்தாள். அகலிகையின் உடல் கல் போல ஆகவில்லை. அவள் மனது மட்டும்தான் அந்த நிலையை அடைந்தது. அப்படியென்றால் அவள் மூன்று மற்றும் நான்காவது நிலைக்கு இடையில் இருக்கும் அதீத சக்தியின் மையப்புள்ளியில் இருந்தாள் என்பதுதான் பொருள். ஸ்ரீ ராமரின் பாதகமலங்களின் தூசு பட்டவுடன் அவளுடைய மனது மலரத் தொடங்கி தன் இயல்பு நிலைக்குத் திரும்பினாள். நான்காவது நிலையை அடையும் ஆத்மா அதீத யோக சக்தியுடன் கூடிய ஒன்று. இந்த சக்தியைக் கொண்டு ஆழ்மனதின் வழிகாட்டுதலின் படி உலக நலனுக்காக பயன்படுத்தினால் அடுத்த உயர்ந்த நிலைக்கு முன்னேறலாம். அதற்கு மாறாக இந்த சக்தியை பாவ செயல்களுக்கும் கீழ்த்தரமான சுயநலத்திற்கும் உபயோகப்படுத்தும் போது அழிவு நிச்சயம். ஆன்மா மீண்டும் பாறை நிலையை அடைந்துவிடும். பின்னர் மனிதப் பிறவி எடுக்க முடியாமல் ஆயிரம் பிறவிகளைக் கடந்த பின்னர்தான் அதற்கான வாய்ப்பு கிடைக்கும். ஐந்தாவது நிலையில் இருப்பவர்கள் சங்கல்ப ஞானிகள். சங்கல்ப ஞானிகள் உலக நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டே கடவுளையும் உணர்ந்து கொண்டு இருப்பர். ஆறாவது நிலையில் இருப்பவர்கள் பாவ (*bhava*) ஞானிகள். அவர்கள் உலக நடவடிக்கைகள் மீது மிகச்சிறிய அக்கறையுடன் இருப்பர். ஏழாவது நிலையில் இருப்பவர்கள் எல்லையில்லா பரமாத்மாவின் ஞானத்தை அடைவர்". பங்காரப்பா இவ்வாறு முடித்துக்கொண்டார்.

## அவதாரங்களுக்கும் சாதகர்களுக்கு இடையே உள்ள வித்தியாசம்

பங்காரப்பாவின் வார்த்தைகளை கேட்டவுடன் சில சந்தேகங்கள் என் மனதில் எழும்பி நான் அவரிடம் **"ஐயா, பரிணாம வளர்ச்சி சாதாரண மனிதர்களுக்கு மட்டும் உரித்தான ஒன்றா அல்லது அவதாரங்களுக்கும் பொருந்துமா?"** என்றேன். பின்னர் பங்காரப்பா "அவதாரங்கள் நேரத்தின் தேவையைப் பொறுத்து வருகின்றன. ஒரு மனிதன் கடவுளானால் அவர் சமர்த்த சத்குரு என்று அழைக்கப்படுபவர். இதே கடவுள் மனிதனாக வந்தால் அவரை அவதாரம் என்று அழைப்பர் (இங்கு மீனிலிருந்து

ஸ்ரீ புத்தர் வரை ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிடப்படுகின்றன). ஒரு மீன் நீரில் வேகமாக நீந்தும். ஒரு ஆமை நீரிலும் நிலத்திலும் வேகமாக நகரும். காண்டாமிருகம் என்று கூறப்படுகிற வராகம் நிலத்தில் வேகமாக நகரும். மிருகங்களில் உயர்வான சிங்கத்தின் முகம் மற்றும் மனித உடலின் உருவத்துடன் இருப்பது நரசிம்ம அவதாரம். பிக்ஷை எடுக்கும் குணத்துடன் இருக்கும் வாமன அவதாரம் தாமஸ குணத்தின் அடிப்படையில் தோன்றியது. பரசுராம அவதாரம் ராஜஸ குணத்தின் அடிப்படையில் தோன்றிய ஒன்று. ஸ்ரீ ராம அவதாரம் முக்கியமாக சத்துவ குணத்தின் அடிப்படையில் தோன்றிய ஒன்று. ஸ்ரீ கிருஷ்ண அவதாரம் பிரதான குணங்கள் இல்லாமல் இம்மூன்று குணங்களையும் கடந்த ஒன்று. புத்த அவதாரம் கர்மாவில் முக்கியமான ஒன்றாகும். இந்த யுகத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அவதாரம் மிகவும் தனித்துவமான ஒன்று. இந்த அவதாரம் மொத்த படைப்புகளின் ஒற்றுமையில் வேற்றுமை மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட மிகவும் தனித்துவம் நிறைந்த உன்னதமான மற்றும் அசாதாரணமான அவதாரம். இந்த மொத்த படைப்புகளில் எந்த யோக முறைகளும் மத அல்லது நெறிமுறைகளின் கட்டுப்பாடுகளும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தோற்றத்திற்கு கடன் படவில்லை. ஒருவர் எவ்வளவு பெரிய ஞானியாக இருப்பினும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் செயல்திறனை உணர்ந்து கொள்ள முடியாது. அவர் அவருக்கு மட்டுமே சமம். அனைத்து கோட்பாடுகளும் சம்பிரதாயங்களும் அவரிடம் ஒருங்கிணைகின்றன. அவரே மொத்த படைப்பின் ஆரம்பம் மற்றும் இறுதியான புள்ளி. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் தன்மையுடைய குணமுடையவர், அனைத்து உலக விவகாரங்களையும் மேற்பார்வை செய்து, முன்மொழிந்து, இயக்குகிறார். இதுதான் ஆழ்ந்த தெய்வீக ரகசியம். சப்த ரிஷிகள் கூட புரிந்து கொள்ள முடியாத அவரின் நிலையை நான் எங்ஙனம் விவரிப்பது?

என் அருமை சங்கர் பட், நீ ஒரு அதிர்ஷ்டசாலி! ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளைப் பெற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் வெறும் வீண்தான்". இவ்வாறு பங்காரப்பா முடித்துக்கொண்டார்.

## நல்வினைகள் மற்றும் தீவினைகளின் விளக்கம்

நான் அவரிடம் **"ஐயா, அவர்தான் அனைத்து செயல்களையும் ஊக்குவிப்பவர் என்றால் ஏன் சிலர் நல்லவர்களாகவும் சிலர் தீயவர்களாகவும் பிறக்கின்றனர்?"** என்றேன். அதற்கு பங்காரப்பா பலமாக சிரித்து விட்டு "என் மகனே, நீ ஒரு நல்ல கேள்வி கேட்டாய். படைப்பு எதிர்மாறான ஜோடிகளால் உருவானது. மரணபயம் இல்லை என்றால் ஒரு தாய் கூட தன் குழந்தையை விரும்பமாட்டாள். வேதங்களில் புருஷா என்கிற வார்த்தை ஆத்மாவை குறிப்பிடத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது ஆண்களின் உயர்வை சுட்டிக்காட்டுவதற்கு அல்ல. எப்படி மனித தர்மமும் மிருக தர்மமும் வேறுபாடானதோ அதேபோல்தான் மனித தர்மமும் தெய்வீக தர்மமும் மிகவும் வேறுபாடானது. எதிர்மறை ஜோடிகள் இல்லை என்றால் முன்னேற்றம் அல்லது பரிணாம வளர்ச்சி நடக்க வாய்ப்பு இல்லை. கடவுள் சர்வ

வல்லமை படைத்தவர் என்று கூறப்படும் போது அதில் நல்ல சக்தி மட்டும்தான் அவரிடம் இருக்கும் என்று பொருள் அல்ல. அந்த சர்வ வல்லமைத் தன்மையில் நீ இந்த உலகத்தில் பார்க்கும் மோசடி, வஞ்சகம் மற்றும் வன்முறையும் அடக்கம். வருத்தத்தினால்தான் சந்தோஷத்திற்காக ஏங்குகிறோம். துன்பத்தின் ஞானம் இல்லை என்றால் சுகத்தின் அனுபவம் நமக்குத் தெரியாது. நாம் பார்க்கும் இந்த கோடானுகோடி நட்சத்திரங்கள் முன்பு ஒழுங்கற்ற முறையில்தான் உருவானது. அவை ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்ட போது இன்னும் சில நட்சத்திரங்கள் உருவானது. இவ்வாறு பலமுறை நடைபெற்ற பின்னர் நாம் இப்போது பார்க்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நட்சத்திர கூட்டங்கள் ஆக உருவானது. சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்கள் சூரியனைச் சுற்றி நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட வட்ட பாதையில் சுற்றி வருகின்றன. துருவன் சூரியனின் மையப்புள்ளி. படைத்தல் இந்த வழியில்தான் பரஸ்பர ஈர்த்தல் மற்றும் விலக்குதல் என்கிற பாணியில் நடக்கிறது. கடவுளிடம் ஈர்க்கப்பட்ட ஒருவன் ஆத்திகனாக இருந்து நல்வினைகள் புரிகிறான். கடவுளை விலக்கும் தன்மை உடைய ஒருவன் நாத்திகன் ஆகி தீய வினைகள் புரிகிறான். அவர் ஆத்திகன் மற்றும் நாத்திகன் இருவர்களுக்கும் ஆதரவு அளிக்கிறார். நல்வினைகள் மற்றும் தீய வினைகள் புரிபவர்களுக்கு அவர் ஆதாரமாக விளங்குகிறார். படைப்புத் திருவிளையாடலில் எதுவும் நிரந்தரம் இல்லை. நீ இப்போது நல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் சில பிறவிகளில் தீய நடத்தைகள் செய்திருப்பர். அதனால்தான் இந்த பிறவியில் அவர்கள் நல்லவர்களாக பிறந்திருப்பினும் அவர்களால் துன்பங்களைத் தவிர்க்க முடியவில்லை. முற்பிறவிகளில் செய்த நல்வினைகளின் பலனால் தீய மக்கள் இந்த பிறவியில் சுகத்தை அனுபவிக்க முடிகிறது. பாவம் அல்லது புண்ணியம் உடனடியாக பலன் அளிப்பதில்லை. ஆனால் மிகப்பெரிய பாவம் அல்லது மிகச் சிறந்த புண்ணியம் சீக்கிரம் பலன் அளிக்கும். ஒரு மனிதன் எப்படி நடந்துகொண்டால் சந்தோஷமாக வாழ முடியும் என்பதை நல்ல புத்தகங்கள் விவரிக்கிறது. அவனுக்கு நல்லவை அல்லது தீயவை புரிவதற்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதர்மம் அதிகரித்து நீதிமான்களுக்கு ஆதரவு இல்லாமல் உதவியற்ற நிலையில் இருக்கும் போது கடவுள் தன் மாயையைக் கொண்டு அவதரிக்கிறார். பிறப்பும் இறப்பும் இல்லாத கடவுள் அவதாரம் எடுத்து நம்மிடையே வாழ்வது மிகவும் அற்புதமான விஷயம்.

## அரசனின் இறுமாப்பை உடைத்தல்

மக்களின் வாழ்க்கையை பற்றி அறிந்துகொள்ள பீதிகாபுரத்தின் அரசர்கள் மாறுவேடத்தில் உலாவுவார்கள். அரசருக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அவர் உடனடியாக தன் சிப்பந்திகளை அப்பலராஜ சர்மாவின் வீட்டுக்கு ஒரு ஆணையுடன் அனுப்பினார். அப்பலராஜ சர்மாவும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவும் ஸ்ரீ ஸ்ரீபாதரை அழைத்துக் கொண்டு அரசவைக்கு வரவேண்டும் என்பதுதான் அந்த ஆணையின் சாராம்சம். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவமதிப்பு நிறைந்த அந்த அழைப்பை நிராகரித்து விட்டார். அப்பலராஜ சர்மாவுக்கும் அரசவைக்குச் செல்ல

விருப்பம் இல்லை. ஸ்ரீ பாப்பண்ணார்யா போன்ற சிறந்த மனிதர் தன் மனசாட்சியின் உந்துதல் இல்லாமல் எந்த இடத்துக்கும் செல்ல மாட்டார். ஸ்ரீ பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் **"என் செல்வமே, தங்கமே! மன்னரின் அரசவைக்கு செல்ல உனக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதா?"** என்று கேட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு **"தாத்தா,அந்த மன்னருக்கு பக்தி இல்லை. என்னை பார்ப்பது அவ்வளவு சுலபம் இல்லை"** என்று பதிலளித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த சிப்பந்திகளிடம் திட்டவட்டமாக **"உங்கள் மன்னர் என்னை பார்க்க வேண்டும் என்றால் அவரை இங்கு வரச் சொல்லுங்கள். அவர் இந்த அரசுக்கு மட்டும்தான் அரசர். நான் அரசர்களுக்கெல்லாம் அரசன் மற்றும் இந்த மொத்த படைப்புகளுக்கும் சக்கரவர்த்தி. நான் அனைத்து உலகங்களுக்கும் தலைவன். என்னை வெறும் கையோடு அணுக கூடாது. காணிக்கை எடுத்து வர வேண்டும். உங்கள் அரசன் என்னை குருவாக எண்ணினால் அவரும் குருதக்ஷிணை எடுத்து வர வேண்டும்"** என்றார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் பிரச்சனைகளை உருவாக்குவதில் கில்லாடி. அதேபோல் பிரச்சனைகளை சரி செய்வதிலும் திறமைசாலி. மன்னரின் கோபத்தின் விளைவுகளைப் பற்றி ஸ்ரீ பாப்பண்ணார்யா, அப்பலராஜ சர்மா மற்றும் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி யோசித்துக் கொண்டிருந்தனர். சிப்பந்திகளிடமிருந்து செய்தியை கேள்விப்பட்டவுடன் மன்னர் ஆத்திரத்தில் உக்கிரமாகக் குதித்தார். மன்னர் **"நான் நினைத்தால் அந்த வலிமைற்ற பிராமணர்களின் நிலை என்ன ஆகும் என்பதை புரிய வைக்கிறேன். அவர்களுக்கு நான் எவ்வளவு சக்தி வாய்ந்தவன் என்று தெரியாது"** என்று கூச்சலிட்டான். அவன் அப்படி கூச்சலிட்ட அதே நொடி அவனின் உடலில் இருந்த வலிமை அனைத்தும் வெளியேறி பலமற்றவன் ஆனான். பலவீனத்தால் மயங்கி விழுந்தான். பல சேவையாட்கள் அவனை கவனித்தும் மிகவும் பலவீனமாகவே இருந்தான்.

இதற்கிடையில் அசிங்கமான,உருமாறிய பெண் அவன் மனக்கண்ணில் தோன்றினாள். அவள், **"நான் சக்தி. நான் உனக்குள் குதிக்க போகிறேன்"** என்று கர்ஜிப்பது போல் கூறிக்கொண்டே வலுக்கட்டாயமாக அவனுக்குள் புகுந்தாள். அவனால் அந்த சக்தியின் தாக்குதலைத் தாங்க முடியவில்லை. அவனுக்கு எலும்புகள் நொறுங்குவது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவன் ஈனமான குரலில் **"என்னை விட்டுப் போ!"** என்று கத்தினான். அந்த சக்தி அவன் உடலை விட்டு வெளியே போகும் போது மன்னன் நரக வேதனைக்கு உட்படுத்தப்பட்டான். இந்த முறையில் சக்தி அவன் உடலுக்குள் நுழைந்து கொண்டும் வெளியே சென்று கொண்டும் இருந்தது. இந்த இரு இயக்கங்களினால் அவன் நரக வேதனைக்கு உட்படுத்தப்பட்டான். சிப்பந்திகளின் வாயிலாக ராஜ பண்டிதரான கோட்டா சுந்தர ராம சர்மாவுக்கு தகவல் அனுப்பப்பட்டது. அவர் சுயம்பு தத்தரை வணங்கிவிட்டு புனித தீர்த்தத்தை கொடுத்தார். மன்னன் தத்த விபூதியை நெற்றியில் பூசிக் கொண்டவுடன் சக்தியின் இயக்கம் நின்றது. பின்னர் சர்மா "அரசே இப்போது பார்த்தீர்களா, நம் வழிபாடு எவ்வளவு சீக்கிரம் பலனளிக்கிறது! நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க விரும்பினீர்கள். அது உங்களுக்கு தேவையில்லாத ஒன்று. அவர்கள் வீட்டில் காலாக்னி சமான

*தத்தரின் சிலை இருக்கிறது. அந்த சிலையை வணங்குவதால் அப்பலராஜ சர்மாவுக்கு சிலபல சொற்பமான சக்திகள் கிடைத்துள்ளன. மந்திரங்களின் சக்தியால் பாப்பண்ணார்யாவுக்கு சக்திகள் கிடைத்துள்ளன. பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஒரு வைசியன். அவர் தரமான பொருட்களை போலி என்று பேரம் பேசி மலிவான விலைக்கு வாங்கலாம். அதேபோல் போலியான பொருட்களை நல்ல பொருள் என்று நம்மை நம்ப வைத்து விற்கலாம். கற்பனையான புனைவுகளை ஏற்படுத்தி ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு நம்பமுடியாத சக்திகளை புகுத்தி அவரது பஜனைகள் பாடிக் கொண்டிருக்கின்றனர். நரசிம்ம வர்மா ஒரு உன்னதமான க்ஷத்ரியனாக இருப்பினும் அவர் முட்டாளாகி ஸ்ரீ ஸ்ரீபாதரை தத்தரின் அவதாரம் என்று புகழ்ந்து கொண்டிருக்கிறார். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாம் சிறந்த முறையில் வழிபாடு செய்வோம். அவர்களுக்கு உங்கள் ஆணையை மறுக்க எவ்வளவு தைரியம்? ஒரு அரசன் நினைத்தால் ஸ்ரீ ஸ்ரீபாதரை வற்புறுத்தி வலுக்கட்டாயமாக கூட இழுத்து வர முடியும்!" என்று கூறினார். இந்த முகஸ்துதியான வார்த்தைகளைக் கேட்ட அரசன் ஈனமான குரலில்* "**அவரை வலுக்கட்டாயமாக இழுத்து வருவதால் எனக்கு என்ன லாபம்? அதற்குமேல் எனக்கு கெட்ட பெயர்தான் மிஞ்சும். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மந்திர தந்திரம் தெரியும் என்று நினைக்கிறேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை சக்தியை கொண்டு தாக்கினார். இல்லையென்றால் சக்தி என் உடலுக்குள் வந்து கொண்டும் வெளியே சென்று கொண்டும் இருக்குமா? இதை கடந்து வர நீங்கள்தான் ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். நீங்கள் எங்கள் குடும்ப புரோகிதர். எங்கள் நலனில் உங்களுக்கு எப்போதும் அக்கறை உண்டு**" *என்றார்.*

*பின்னர் சர்மா* "**அரசே தத்தபுராணத்தை பிராமணர்கள் பக்தியோடு பாராயணம் செய்ய வேண்டும். சுயம்புதத்தர் வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிராமணர்களுக்கு விருந்து ஏற்பாடு செய்து தாராளமாக சம்பாவனை அளிக்க வேண்டும். எல்லா ஜாதியினருக்கும் உணவு அளிக்க வேண்டும். இது போல் செய்தால் தத்தர் மகிழ்ச்சி அடைவார். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிக்கிக் கொள்வார். துர்தேவதைகளின் மூலம் ஏற்படும் தொந்தரவுகள் நிவர்த்தி ஆகும்**" *என்றார்.*

*ராஜ புரோஹிதர் கூறியனவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை அரசன் செய்தான். பீதிகாபுர பகுதியில் பல காடுகள் இருந்தன. திருடர்களின் அச்சுறுத்தல் பீதிகாபுரத்தில் அதிகமாக இருந்தது. தத்த புராணம் பாராயணம் தொடங்கிய நாளில் இருந்து திருட்டு பரவலாக அதிகரித்தது. அரசன் அவர்களைத் தடுக்க தவறிவிட்டான். அரசனுக்கு ஆபத்தான கனவுகள் அதிகரித்தன. நோயை விட தீர்வு மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது போல் துன்பங்கள் அதிகரித்தன. கனவில் அரசன் அவன் மூதாதையர்களைக் கண்டான். அவர்கள் மிகவும் பலவீனமாகவும் நலிவடைந்த உடலுடன் பசியில் உணவுக்காக ஏங்கி கொண்டு பிச்சைக்காரர்களை போல் காட்சி அளித்தார்கள். அவர்கள் அவனிடம்* "**எங்களுக்கு ஏன் சிரார்த்தத்தின் போது நீ உணவளிக்கவில்லை? நாங்கள் ஆவி உடலிலேயே இருக்க வேண்டுமா? எங்களுக்கு நல்ல கதி கிடைக்க வேண்டாமா?**" *என்று கேட்டனர். அதற்கு அரசன் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல்தான் சிரார்தம்*

செய்வதாக கூறினான். அதற்கு மூதாதையர்கள் "**நீ சிரார்தம் செய்கிறாய். ஆனால் அவை எங்களிடம் வந்து சேரவில்லை. சிரார்தம் என்ற பெயரில் பிராமணர்கள் நன்றாக திடமாகி திருப்தியாக இருக்கின்றனர். ஒரு பிராமணன் சடங்குகளைக் கடுமையாகப் பின்பற்றி சிரார்தத்தை மந்திரங்களோடு நடத்தி, சடங்குகள் செய்பவரும் அக்கறை மற்றும் சிரத்தையோடு செய்தால் மட்டுமே ஆவிகளுக்கு உன்னத இடம் கிடைக்கும்**" என்றனர்.

மூதாதையர்களின் அழுகை மற்றும் புலம்பல்களினால் அரசனுக்கு இரவு முழுவதும் தூக்கம் இல்லை. இந்த நிலை கண்ணை மூடினாலோ அல்லது விழிப்பு நிலையில் இருந்தாலும் கூடத் தொடர்ந்தது. இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் உச்சமாக திருமண வயதில் இருக்கும் அரசனின் மகளுக்கு பேய் பிடித்தது. தலைமுடியை விரித்து கொண்டு அவள் பயமுறுத்தும் விதமாக சிரித்துக்கொண்டு வீட்டில் உள்ள அனைத்து பொருட்களையும் வீசினாள். அவர்கள் உணவுக்காக அமர்ந்த போது அவர்கள் உணவில் ஏராளமான பூச்சிகள் தென்பட்டன. ஆடைகள் திடீரென தீப்பற்றி எரிந்தன. அரசன் எப்போதெல்லாம் அன்னதானம் நடக்கும் இடத்திற்கு வந்தாலும் அங்கு அவன் வம்சத்து ஆண்களும் பெண்களும் மெலிந்த உடலுடன் பேய்ப் பண்புகள் நிறைந்து காணப்பட்டனர். அரசனின் நிலை பரிதாபகரமாக இருந்தது. ராஜபுரோஹிதர் சுந்தரராஜ சர்மாவின் வீட்டின் சூழ்நிலையும் மோசமாக இருந்தது. மிகவும் சாந்தமாகவும் அமைதியாகவும் இருந்த அவரின் மனைவி சமைக்கும் பாத்திரங்களை கொண்டு திடீரென அவர் தலையில் அடித்தாள். அவர் மகன் அவரை தூணில் கயிற்றால் கட்டினான். அவர் மகள் அவர் முகத்தின் மீது காரியுமிழ்ந்து தன் செருப்பை கொண்டு அவரின் முகத்தில் அடித்தாள். சர்மா உணவு கேட்ட போது காய்ந்த புல்லை அளித்தனர். அதை அவர் சாப்பிடவில்லை என்றால் சூடான இரும்பு கம்பியால் எரிப்பதாக மிரட்டினர். எனினும் சர்மா ஏற்பாடு செய்திருந்த பிராமணர்கள் தத்த புராண பாராயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் அந்த நாளுக்கான பாராயணத்தை முடித்து சாப்பிட்டு முடித்த பின்னர் பேய்,பிசாசுகள் மற்றும் ஆவிகள் அவர்கள் வீட்டில் அலைந்து கொண்டு, அவர்கள் வீட்டில் இருந்தவர்களை பயமுறுத்தின. சில பெண்கள் பயமுறுத்தும் விதமாகச் சிரித்து கொண்டு "**மன்னரின் மூதாதையர்களுக்கு நீங்கள்தான் புரோகிதராக இருந்தீர்கள். அவர்கள் மற்ற பெண்களைத் தாயென்று கருதாமல் கற்பழித்தார்கள். நாங்கள்தான் அந்த பெண்கள்! நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள்! அவர்கள் எங்களை எங்கள் கணவருடன் நிம்மதியாக வாழ விடாமல் பெரும் பாவம் செய்தார்கள். நாங்கள் அந்த அரசனின் குடும்பத்தை பழிவாங்க நினைக்கிறோம். நீங்கள் வெறுமனே பரிகாரங்கள் செய்தால் எங்களுக்கு நற்கதி கிடைக்காது. நீங்கள் அரசனிடம் இருந்து அதிகமாக பணம் பெற்றுக்கொண்டுள்ளீர்கள். அந்த கறைபடிந்த பணம் உங்களிடம் உள்ளது. ஆகவே நாங்கள் உங்கள் குடும்பத்தைத் துன்புறுத்துகிறோம்**" என்றார்கள்.

பாராயணம் செய்யும் பிராமணர்கள்,சுந்தர ராம சர்மா மற்றும் அரசன் ஆகியோர் அந்த நிகழ்ச்சிகளால் மிகவும் பயந்து போயிருந்தனர். அவர்கள்

அனைவரும் வேதனை மற்றும் கிண்டலாக “தத்த புராணத்தை பக்தியோடு பாராயணம் செய்தால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம், இது என்ன வினோதம்? இந்த புராணத்தை படித்தவுடன் சங்கரர் மகிழ்ச்சி அடைந்து இப்போது தன் பேய், பிசாசு மற்றும் அரக்கர்கள் கூட்டத்துடன் கோபமாக நடனம் ஆடுகிறார்; இந்த புராணத்தை படித்தவுடன் மகிழ்ந்த விஷ்ணு,எங்களுக்கு உணவளிக்க மறுத்துவிட்டு உணவை தேடிச்செல்லும் பிச்சைக்காரர்களுக்கு உணவளித்து கருணை புரிகிறார். இந்த புராணத்தை படித்தவுடன் மகிழ்ந்த பிரம்மன் எங்களை ஆபாசமான மற்றும் அவமதிக்கும் வார்த்தைகளைப் பேசி துன்புறுத்துபவர்களை உருவாக்கியிருக்கிறார். ஓ!! தத்தபுராணத்தை படிப்பதால் பிரம்மா,விஷ்ணு மற்றும் சிவன் மிகவும் மகிழ்ந்து எங்களை வார்த்தைகளால் துன்புறுத்தி, சாக விடாமல், அரக்கர்களையும் ஆவிகளையும் பிசாசுகளை சந்தோஷப்படுத்தும் விதமாக வினோதமான நடனங்களை அரங்கேற்றுகின்றனர். இது போன்ற தத்தபக்தி எங்களுக்கு பல பிறவிகளானாலும் தேவையில்லை” என்றனர்.

## மனிதனே இந்த படைப்பின் தொழிலாளி; ஸ்ரீ ஸ்ரீபாதரே கூலி கொடுப்பவர்

பின்னர் பிராமணர்கள், சுந்தர ராம சர்மா மற்றும் அரசன் ஸ்ரீ ஸ்ரீபாதரை அடைக்கலம் அடைந்தனர். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் “இந்த படைப்பில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலாளிதான். நான்தான் முதலாளி. நான் மகிழ்ச்சி அடைந்தால் உங்களுக்கு பாக்கி இருக்கும் சம்பளத்தை விட அதிகமாக தருவேன். எனக்கு அதிருப்திகரமாக இருந்தால் உங்களின் தீய நடவடிக்கைகளுக்கு ஏற்றார் போல் சம்பளத்தை குறைத்து பாக்கியை அளிப்பேன். நான்தான் கோவிலில் இருக்கும் சுயம்பு தத்தர்! நான்தான் காலாக்னி சமான தத்தரின் உருவத்தில் இருக்கிறேன்! உயிரினங்களின் மீது கருணை கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் வந்துள்ளேன். என்னுடைய முகத்தை கற்பூர ஒளியில் வழிபட்டு விட்டு என் பாதத்தில் ஆணி அடித்தால் எப்படி நல்ல பலனை அளிப்பேன்? என்னுடைய பெற்றோர்கள் யார் என்று நினைக்கிறாய்? தத்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்ணு தத்தாவும் அவர் மனைவியும்தான் கலியுகத்தில் என் பெற்றோர்களாக அப்பலராஜ சர்மாவும் சுமதி மஹாராணியுமாக பிறந்துள்ளனர். ஒரு கல்பத்தில் விக்னேஸ்வரரின் மகனாக லாபாவாக பிறந்த ஸ்ரீ பாப்பண்ணார்யா மற்றொரு கல்பத்தில் லாபாத மஹரிஷியாக பிறந்து பின்னர் பிருஹத்ஸிலநகரத்தில் பாஸ்கராச்சார்யாவாக பிறந்தார். அவருடைய கோத்திரத்தை வைசிய ஜாதியில் பிறந்த மக்கள் மிகவும் உயர்வாக மதிப்பர். நான் கணேச சதுர்த்தி அன்று பிறந்தது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பகுதி. நான் வாசவி கன்யகா பரமேஸ்வரியாக அவதரித்தது முதல் பெண்ட வெங்கடப்பைய சிரேஷ்டிக்கு பட்ட கடனும், ஸ்ரீ நரசிம்மர் உருவத்தில் சிம்மாச்சலம் க்ஷேத்திரத்தில் தோன்றிய நாளிலிருந்து ஸ்ரீ நரசிம்ம வர்மாவுக்கு பட்ட கடனும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவர்கள் அனைவரும் மிகவும் புனிதமானவர்கள் என்பதால் இந்த அவதாரத்தின் போதும் என்னுடன் மீண்டும் தொடர்பில் இருக்கிறார்கள். அவர்களின் அன்பும் பாசமும் ஒவ்வொரு பிறவியிலும் என்னை பிணைக்கும். நான் நரசிம்ம சரஸ்வதியாக

அவதரிக்கும் போது என் தாய்வழி தாத்தாவான ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் முகஜாடையில் பிறப்பேன். அவர் எப்படி தன் செப்பு பானையில் இருந்து தண்ணீர் தெளித்து பேய்களையும் ஆவிகளையும் விடுவிக்கிறாரோ அதே போல் என் நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தின் போது கந்தர்வ நகரத்திற்கு (கனகாபூர்) வரும் பக்தர்களை துன்புறுத்தும் பேய்களையும் ஆவிகளையும் நான் விரட்டி அடிப்பேன். ஒருவன் தான் பணக்காரனாக இருப்பதால் கர்வத்தோடு இருக்கக்கூடாது. உங்களிடம் இருக்கும் செல்வம் தூய்மையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் துயரம்தான் வந்துசேரும். நீங்கள் புனிதமாக இருப்பதாக பெருமைபட்டுக் கொண்டால் நீங்கள் புனிதமாக இல்லவே இல்லை. உங்களுடைய கணக்குகள் அனைத்தும் என்னிடம் இருக்கிறது. கருணையின் காரணத்தால் நான் உங்களுடைய பாவ செயல்களை ரத்து செய்திருக்கிறேன். நீங்கள் ஒரு பாவி என்று உணர்ந்து என்னை அடைக்கலம் அடைந்து அன்புடன் என்னை "**ஸ்ரீ ஸ்ரீபாத தத்தா! ஸ்ரீவல்லப திகம்பரா!**" என்று அழைத்தால் நான் நொடிப்பொழுதில் உங்கள் பாவங்களை எரித்து நேர்மையானவனாக ஆக்கிவிடுவேன். நீங்கள் உண்மையை பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் நினைத்ததால்தான் இந்த துன்பங்களுக்கு ஆளானீர்கள். நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை வசைபாடியதால் இது போன்ற வினோதமான மற்றும் விசித்திரமான பிரச்சனைகளில் சிக்கினீர்கள். நீங்கள் தத்த புராணத்தை பக்தியோடு பாராயணம் செய்த போதும் நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை வசைபாடியதால் உங்களுக்கு அது எந்த நிவர்த்தியும் அளிக்கவில்லை. ஸ்ரீ தத்தரே உண்மையில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக வந்துள்ளார். இது முற்றிலும் உண்மை." இவ்வாறு பங்காரப்பா முடித்தார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 16

## ஸ்ரீமன் நாராயணன் அளித்த விவரங்கள்

ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக சரித்திரத்தைப் பற்றி மீண்டும் ஞாபகப் படுத்தி கொண்டும், மனதில் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை நினைவு படுத்திக்கொண்டும் என் பயணத்தைத் தொடர்ந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதரின் இருப்பிடமான குருகட்டாவை நான் நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தினால் என் மனது உற்சாகம் அடைந்தது. நான் வழியில் ஒரு கரும்புத் தோட்டத்தைப் பார்த்தேன். அந்தத் தோட்டத்தின் விவசாயி ஒரு கட்டிலின் மீது நன்றாக அமர்ந்திருந்தார். அவர் என்னை அன்போடு அழைத்து **"இங்கு சற்று நேரம் இளைப்பாறி விட்டு செல்லுங்கள். கரும்புச்சாறு அருந்திவிட்டு செல்லலாம். தயவுசெய்து வாருங்கள்"** என்றார். அந்த விவசாயி அளித்த கரும்புசாறைக் குடித்தேன். அது மிகவும் இனிப்பாக இருந்தது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க சென்று கொண்டிருப்பதை அறிந்து அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். விவசாயி விவரிக்கத் தொடங்கினார்: "ஐயா, என் பெயர் ஸ்ரீமன் நாராயணன். என்னுடைய குடும்பப்பெயர் மல்லாடி. எங்கள் சொந்த ஊர் மல்யாத்திரிபுரம். காலப்போக்கில் அந்த கிராமம் மல்லாடி என்றானது. ஸ்ரீ பாப்பண்ணார்யாவுடைய சொந்த ஊர் கூட மல்யாத்ரிபுரம்தான் மற்றும் அவரின் குடும்பப் பெயர் கூட மல்லாடிதான். ஆனால் அவர் பிராமணர் நான் கம்மா (விவசாயிகள்) சாதியைச் சேர்ந்தவன். எங்களுக்கும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் குடும்பத்திற்கும் நெருக்கம் இருந்தது.

ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு எட்டு வயது இருக்கும் போது நாங்கள் மல்யாத்ரிபுரத்தை விட்டு பீதிகாபுரத்திற்கு குடி பெயர்ந்தோம். எங்கள் சொந்த கிராமத்தின் நிலை பாதகமாக இருந்தது. நிதி நிலைமை நெருக்கடியாக இருந்தது. எங்களுக்கு கடன்களால் ஏற்பட்ட இன்னல்களைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நாங்கள் எங்கள் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தையும் விற்று விட்டு மாற்றுத் துணி கூட இல்லாமல் பீதிகாபுரம் வந்தடைந்தோம். ஸ்ரீ பாப்பண்ணார்யா எங்களை நல்ல முறையில் நடத்தி உணவும் தண்ணீரும் அளித்தார். நாங்கள் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்ய எண்ணினோம். நாங்கள் ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம் **"ஒட்டுண்ணி போல் இருந்து கொண்டு உண்பது விரும்பத்தக்கது அல்ல. நீங்கள் உணவும் நீரும் அளித்து எங்கள் உயிரை காப்பாற்றினீர்கள். நாங்கள் முன்பு பூக்கள் விற்ற அதே இடத்தில் இப்போது விறகு விற்பது துன்பம் அளிக்கிறது. இந்த காரணத்தினால்தான் நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு பீதிகாபுரம் வந்தோம். எங்கள் மீது கருணை கொண்டு உங்கள் நிலத்தை**

**குத்தகைக்கு கொடுங்கள். நாங்கள் நன்றியுடன் இருப்போம். தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள்"** *என்று வேண்டிக்கொண்டோம்.*

*அன்றைய தினத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் இருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர்,* **"ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டு உணவு தெய்வீக பிரசாதத்திற்கு சமம். தெய்வீக கருணை இழந்த ஒருவருக்கு இது கிடைக்காது. ஸ்ரீ பாப்பண்ணார்யா போன்ற சிறந்த தபஸ்வீயின் (தவங்கள் புரிபவர்) தரிசனம் சாதாரண மனிதனுக்கு கிடைக்காது. நீங்கள் முற்பிறவியில் செய்த நல்வினைகளின் பலனால்தான் உங்களுக்கு இந்த பாக்கியம் கிடைத்தது"** *என்று குறிப்பிட்டார். ஸ்ரீ பாப்பண்ணார்யா* **"எங்கள் நிலத்தை ஏற்கனவே விவசாயிகளுக்கு கொடுத்துவிட்டோம். அவர்கள் நிலத்தில் விளைவித்து கொண்டிருக்கின்றனர். நியாயமான காரணங்கள் இல்லாமல் அவர்களை நீக்குவது நீதிக்கு புறம்பானது. சில நாட்களுக்கு பொறுமையாக காத்திருங்கள். வேறு ஏதாவது வழி பிறக்கும்"** *என்றார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர்* **"கைநிறைய உளுந்து இருக்கிறது. இதை பத்திரமாக துணியில் கட்டி எடுத்துக்கொண்டு மேற்கு நோக்கி செல்லுங்கள். உங்கள் விருப்பம் நிறைவேறியவுடன் இந்த உளுந்தை தூக்கி எறிந்து விடுங்கள். பாறைக்கு இடையில் இருக்கும் ஒரு தவளைக்கு உணவளிக்கும் கடவுள் உங்களுக்கு உணவும் நீரும் அளிக்க முடியாதா என்ன?"** *என்று கூறினார். ஸ்ரீ பாப்பண்ணார்யா வீட்டில் உணவருந்தி விட்டு உளுந்தை மேலாடையின் நுனியில் கட்டிக்கொண்டு மேற்கு நோக்கி பயணித்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால் உணவுக்கும் தண்ணீருக்கும் எந்த பஞ்சமும் ஏற்படவில்லை. உணவு கேட்காமலேயே கிடைத்துக்கொண்டிருந்தது. இது ஒரு மகா அற்புதம். நாங்கள் ஆந்திர மாநிலத்தைக் கடந்து கர்நாடக மாநிலத்தை அடைந்தோம். வழியில் ஒரு குடிசையைப் பார்த்தோம். அந்தக் குடிசையில் ஒரு வயதான தம்பதி இருந்தனர். அவர்களும் கம்மா சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பாம்பு தீண்டி இறந்து விட்டான். சில நாட்களுக்குப் பிறகு அவன் மனைவி கிருஷ்ணா நதியில் குளித்துக் கொண்டிருந்தபோது தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டாள். அவர்கள் மகனுக்கு குழந்தைகள் இல்லை. அந்த வயதான தம்பதியை வயதான காலத்தில் கவனித்து கொள்ள யாரும் இல்லை. அவர்கள் உறவினர்கள் சொத்தை அபகரிக்க எண்ணினர். அவர்கள் இனிமையான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு நல்லவர்கள் போல் நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வயதான தம்பதி தங்கள் நிலத்தை அந்த உறவினர்களுக்கு எப்படி பங்கிட்டு கொடுக்கலாம் என்ற குழப்பத்தில் இருந்தனர். நாங்கள் அந்த வயதானவர்களின் உபசரிப்பை ஏற்றுக்கொண்டோம். அந்த வயதான தம்பதியின் குடிசையை விட்டு கிளம்பலாம் என்று எண்ணிய போதெல்லாம் ஏதாவது தடை ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. ஒரு முறை நாங்கள் விடாப்பிடியாக பயணத்தை தொடர எண்ணினோம். திடீரென வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் வாந்தி பேதியால் அவதியுற்றனர். அவர்களுக்கு உடல் தேறிய பின் நாங்கள் கிளம்ப நினைத்த போது வயதான தம்பதி எங்களை தடுத்தனர். அவர்கள் எங்கள் மீது கொண்ட அன்பு பெருகியது. இது அவர்கள் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் அவர்களின் சொத்தை பிடுங்க நினைப்பதாக அவர்கள் எண்ணினர்.*

துணியில் கட்டப்பட்டிருந்த உளுந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் கொடுத்த உளுந்து இனி எங்களுக்கு தேவை இல்லை என்று எண்ணிக்கொண்டு அதை தூக்கி எறிந்தோம். எது நடந்தாலும் இனி அங்கேயே தங்கி விடுவது என்று முடிவு செய்தோம்.

உறவினர்களுக்கு அந்த சொத்தின் மீது மட்டும்தான் விருப்பம் இருந்தது, ஆனால் அந்த வயதான தம்பதியர் மீது அல்ல. நாங்களும் அவர்களுடைய சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் எங்களை தத்து எடுத்துக்கொண்டு சொத்துக்களை எங்களிடம் ஒப்படைப்பது என்று பிடிவாதமாக இருந்தார்கள். அவர்களின் உறவினர்கள் நடக்கும் நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவை அவர்களுக்கு மிகவும் வேதனை அளித்தது. அதனால் அவர்கள் அனைவரும் தங்களுக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தனர். சொத்துக்கள் அனைத்தையும் அவர்களுக்குள் பிரித்துக் கொண்டு எங்களை ஏதாவது ஒரு வழியில் வீட்டை விட்டு விரட்டுவது என்று விரும்பினர்.

இந்த உறவினர்கள் அனைவருக்கும் தெரிந்த ஜோதிடர் ஒருவர் இருந்தார். அவருக்கு ரகசியமாக லஞ்சம் கொடுத்து வயதான தம்பதியர் வீட்டுக்கு அழைத்து வந்தனர். அந்த ஜோதிடர் **“உங்கள் விருந்தினர்கள் மிகவும் துரதிர்ஷ்டசாலிகள். அவர்கள் எந்த வீட்டில் தங்கினாலும் அந்த இடத்தை விட்டு அதிர்ஷ்டம் சென்று விடும். அது மட்டும் அல்ல. அனைத்துவிதமான வறுமைகளும் அவர்களை வந்து சேரும். அவர்களைச் சீக்கிரமாக உங்கள் வீட்டை விட்டு அனுப்புங்கள்”** என்றார். அதற்கு அந்த வயதான கணவனும் மனைவியும் **“அவர்கள் ஜாதகத்தில் அப்படி ஒரு துரதிர்ஷ்டம் இருந்தால் அதற்கு வேதத்தில் ஏதாவது பரிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும். பூஜை மற்றும் சடங்குகள் செய்து அவர்களின் துரதிர்ஷ்டத்தை சரி செய்து அனைத்து அனுகூலமான அதிர்ஷ்டங்களையும் அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். நாங்கள் அதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்கிறோம். மொத்த உலகமும் தேவர்களின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகிறது. தேவர்கள் மந்திரங்களுக்கு கட்டுப்படுகின்றனர். அந்த மந்திரங்கள் பிராமணர்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஆகவே உங்களைப் போன்ற உண்மையான பிராமணன்தான் பூமியின் தேவர்கள். தயவுசெய்து எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்”** என்றனர்.

ஜோதிடர் வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்வதை தவிர வேறு வழியில்லை. என் அருமை சங்கர் பட், நெல் விளைய மழை வேண்டும். யக்ஞம் மழை அளிக்கும். யக்ஞம் சடங்குகளால் ஆனது. வேதம் அனைத்து சடங்கு முறைகளின் ஆதாரம். மனிதர்கள் யக்ஞத்தின் வாயிலாக தேவர்களை வழிபட வேண்டும். தேவர்கள் அனைத்து விதமான செல்வங்களையும் அளிக்க வேண்டும். இந்த முறையில்தான் மனிதர்களும் தேவர்களும் பரஸ்பரம் சார்ந்து இருக்கின்றனர். யக்ஞங்கள் ஐந்து வகைப்படும் அவை தேவ யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம், பித்ரு யக்ஞம் மற்றும் பிரம்ம யக்ஞம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகள் மிகவும் வித்தியாசமானது. வயதான தம்பதியைக் கொண்டு பண உதவி செய்ய வைத்து நல்லொழுக்கம் நிறைந்த

பிராமணர்களை கொண்டு யக்ஞத்தை நடத்தி மங்களகரமான ஆசீர்வாதங்கள் பெறச்செய்தார். உண்மையில் எங்கள் ஜாதகத்தில் எந்த தோஷமும் இல்லை. வயதான தம்பதியின் அன்பினால் புனிதமான யாகத்தைக் காணும் பாக்கியம் பெற்றோம். இந்திரனும் மற்ற தேவர்களும் மறைமுகமான கடவுள். யக்ஞத்தை முன்னின்று நடத்தும் பிராமணர்கள்தான் நேரடியான கடவுள். மந்திரங்களின் சக்தியால் இந்திரன் மற்றும் அனைத்து தேவர்களுக்கும் அளிக்கப்படும் சிறிய ஆஹுதி பல மடங்காகப் பெருகி அனைத்து தெய்வங்களையும் திருப்திப் படுத்தும்.

## பூமித்தாயின் ஏழு ஆதாரங்கள்

பசுக்கள், வேதங்கள், பிராமணர்கள், பதிவ்ரதைகள், சத்தியவான்கள், லாபத்தைத் தேடாத மனிதர்கள் மற்றும் கொடையுள்ளம் கொண்ட மக்கள் ஆகியோர்தான் பூமித்தாய்க்கு ஆதாரம். விவசாயம் செய்ய காளை அவசியம். கோமாதா நெய், பால் மற்றும் தயிர் போன்ற மனிதனுக்குத் தேவையான பொருட்களை அளித்து இந்த உலகத்தில் வாழ்வதற்கும், யக்ஞங்கள் மற்றும் சடங்குகள் வாயிலாக மற்ற உலகங்களுக்குள் நுழைவதற்கும் உதவி புரிகின்றது. இந்திரன் மற்றும் அனைத்து தேவர்களும் அவிசை (யக்ஞத்தின் போது வேத மந்திரங்களுடன் ஹோமத்தில் அளிக்கப்படுபவை) ஏற்றுக்கொள்கின்றனர். வேதங்களே அனைத்து தர்மங்களின் தொடக்கம். ஆகவே பூமிக்கு ஆதாரமாக வேதங்களும் விளங்குகிறது. பிராமணர்கள் மக்களை யக்ஞம் போன்ற புண்ணிய காரியங்கள் செய்ய வைக்கின்றனர். ஆகவே பிராமணர்களும் பூமிக்கு ஆதாரமாக விளங்குகின்றனர். நல்லொழுக்கமுள்ள மனைவி தன் ஒழுக்கத்தன்மையால் தர்மத்தைக் காத்து அது கலங்கப்படாமல் பாதுகாக்கிறாள். உண்மையான மக்கள் தன் உண்மைத் தன்மையுடன் உண்மையைப் பற்றிக்கொண்டு பூமியை பாதுகாக்கின்றனர். லாபத்தைத் தேடாத மக்கள் என்றால் பேராசை இல்லாதவர்கள்,மற்றவர்களுடன் கூடி வாழும் போது சந்தோஷத்தை பகிர்ந்து கொள்பவர்கள். கொடையுள்ளம் கொண்டவர்கள் பூமியில் இருக்கும் தன் செல்வங்கள் மற்றும் மற்ற உலகங்களில் சேர்த்த புண்ணியங்களைக் கொண்டு ஆதரவற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் துரதிர்ஷ்டமான மக்களைக் காப்பாற்றுவர். நாங்கள் ஸ்ரீ பாப்பண்ணார்யா போன்ற சிறந்த நீதிமான்களைச் சந்தித்ததன் காரணமாக, யக்ஞத்தின் உருவகமான ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களை கருவியாகக் கொண்டு, அவர் அனைத்து யக்ஞ செயல்முறைகளையும் மறைமுகமாக முடித்து எங்களுக்கு நல்லதிர்ஷ்டத்தை அருளினார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களைக் காப்பாற்றும் வழி

யாகம் எந்த தடையும் இல்லாமல் நடந்து முடிந்தது. அந்த வயதான தம்பதி எங்களைத் தங்கள் வாரிசாக ஆக்க முடிவு செய்தனர். அவர்கள் உறவினர்களுக்கு நடந்தவைகள் எதுவும் பிடிக்கவில்லை. எங்கள் வயல்களில் ஒன்றில் மிளகாய் பயிரிடப்பட்டு இருந்தது. அந்த தோட்டத்தின் நான்கு ஓரத்திலும் பனை மரம் இருந்தது. அந்த பனை மரங்களில் இருந்து கள் எடுப்பதற்காக கவுடர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. உறவினர்கள் அறுவடை செய்யப்பட்ட மிளகாய்களை

குறுக்கு வழியில் அபகரிக்க முயற்சித்தனர். பழுத்த மிளகாய்களை மூட்டை நிறைய பிடுங்கினர். அவற்றை மாட்டு வண்டியில் அடுக்கிச் செல்ல தயாராக இருந்தனர். அப்போது நான் வயலுக்குச் சென்றேன். அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். நானோ ஒற்றை ஆள், அவர்கள் பத்து பேர் இருந்தனர். ஆச்சரியமாக, நான் பனை மரம் ஒன்றில் ஒரு கரடி கள் அருந்திக் கொண்டிருப்பதைக் கண்டேன். கரடி மரத்திலிருந்து குதித்தது. அனைவரும் கரடிக்கு பயந்தனர். அதன் கூர் நகங்களை கொண்டு மனிதனின் தசைகளைக் கூட கிழிக்க முடியும். அதன் நகம் உடலில் பதிந்தால் விஷம் ஏறிவிடும். கரடி மாட்டுவண்டியின் அருகில் சென்றது. பயங்கரமான பயத்தினால் உறவினர்கள் ஓடிவிட்டனர். நான் மிகவும் பயந்து ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை ஜபிக்கத் தொடங்கினேன். அந்த கொடூரமான கரடி சாந்தமாக மாறியது. அது மிகவும் அமைதியாகி நான் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை கூறும் போதெல்லாம் அது கை தட்டியது. நான் மிளகாய்கள் நிறைந்த சாக்குகளுடன் இருந்த மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். வண்டிக்கு முன்னால் கரடி நடந்து சென்றது.



இந்த நிகழ்ச்சி எங்கள் வீட்டில் உள்ள வயதான தம்பதிக்கு மட்டுமல்லாமல் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. இரவு முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜபித்துக் கொண்டு இருந்தோம். அந்த கரடி அமைதியாகவும் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜெபிக்கும் போது தோன்றும் இசைக்கு ஏற்றாற் போல் தாளம் போட்டு கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிரசாதத்தைக் கூட சந்தோஷமாக ஏற்றுக் கொண்டது. அன்றிலிருந்து அந்த கரடி எங்கள் குடும்ப உறுப்பினர் போல் ஆனது.

அது எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் மிகுந்த அன்பு செலுத்தியது. எங்கள் குடும்பத்தோடு பகையாக இருப்பவர்களுக்கு பயத்தை உண்டாக்கியது. அந்தக் கரடி எங்களுடைய அனைத்து நிலங்களுக்கும் காவலாக இருந்தது. நாங்கள் திருடர்கள் பயம் இல்லாமல் இருந்தோம். ஸ்ரீ தத்தரின் லீலைகள் தொடர்பான விவாதங்களும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜபமும் எங்கள் வீட்டில் தடையில்லாமல் தினமும் நடந்துகொண்டிருந்தது." இவ்வாறு ஸ்ரீமன் நாராயணன் முடித்தார்.

ஸ்ரீமன் நாராயணன் இந்த தகவல்களை அளிக்கும் போது அந்த கரடி கரும்புத் தோட்டத்திற்குள் நுழைந்தது. அதைப் பார்த்தவுடன் பயத்தில் எனக்கு மிகுதியாக

வியர்த்தது. ஆனால் அது என்னிடம் மிகுந்த நட்புத் தன்மையை வெளிக்காட்டியது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை ஜபித்தவுடன் அது சந்தோஷத்தில் ஆட தொடங்கியது.

ஸ்ரீமன் நாராயணன் தொடர்ந்தார் “ஒரு முறை எங்கள் பக்கத்து கிராமங்களுக்கு ஒரு தாந்த்ரீகன் வந்தான். தீய நடைமுறைகளின் மூலம் அவன் சில சக்திகள் பெற்றிருந்தான். அவன் கட்டுப்பாட்டிற்குள் வருபவர்களிடம் அவன் அதிக அளவு பணத்தைப் பெற்றுக் கொண்டான். வயதான தம்பதியின் உறவினர்கள் அவனிடம் உதவிக்குச் சென்றனர். அந்த தாந்த்ரீகன் எங்கள் கிராமத்திற்கு வந்தான். அவன் தாந்த்ரீகத்தை கரடியின் மீது செலுத்தினான். கரடியின் வலிமை முழுமையாக அழிந்து விட்டது. உறவினர்களுக்கு மிகுந்த சந்தோஷம். கரடி அசையாமல் தூங்கி கொண்டே இருந்தது. தாந்த்ரீகன் ஒரு யோக பயிற்சியின் மூலம் கரடியின் சைதன்யத்தை நெருக்கமாக அறிந்துகொண்டு இன்னொரு யோக பயிற்சியின் மூலம் அதன் சக்திகள் அனைத்தையும் தன்னிடம் ஈர்த்துக் கொண்டான்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் பூர்வ கர்மாக்களின் மூலம் பக்தர்களை காப்பாற்றுதல்

ஸ்ரீ ஸ்ரீபாதரின் விளையாட்டுத்தனமான பொழுதுபோக்குகள் நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத வண்ணம் இருக்கும். செயல்களுக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான வேலை. ஒரு செயல் காரணம் இல்லாமல் நடக்காது. இந்திரன் அவன் தர்மத்தின் படி கடுமையான மழை உண்டாக்கினான். ஸ்ரீ கிருஷ்ணர் அவரின் தர்மத்தின் படி கோவர்த்தன மலையைத் தூக்கி கோபால தர்மத்தைப் பூர்த்தி செய்தார். அதே முறையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த தாந்த்ரீகனின் யோக சக்தியை செயல்படுத்த அனுமதித்தார். எனினும் கரடியிடம் இருந்த புண்ணியத்தின் சிறிய அளவு அதை ஸ்ரீ ஸ்ரீபாதரின் பக்தனாக மாற்றியது. அது மௌனமாக அழுது கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அனைத்து ஜீவராசிகளின் புலம்பல்களையும் கண்டிப்பாகக் கேட்பார். ஒருவரின் பூர்வ கர்மாக்களை கழிக்கும் போது தன் கருணையினால் பாவ கர்மாக்களின் விளைவுகளின் வீரியத்தைக் குறைப்பார்.

தத்த சரித்திர பாராயணமும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக பஜனையும் எங்கள் வீட்டில் தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தது. அங்கு கூடியிருந்த பக்தர்கள் மனதில் பல சந்தேகங்கள் எழும்பின. சிலர் மறதி உடையவர்களாகவும் சிலர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் உண்மையான பக்தியுடன் இருந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜபம் நடந்து கொண்டிருந்த போது ஒரு அற்புதம் நடந்தது. அசைய முடியாமல் இறந்தது போல் கிடந்த கரடி சுயநினைவிற்கு வரத் தொடங்கியது. முன்பு இருந்த அனைத்து வலிமைகளையும் மீண்டும் பெற்றது. பக்தர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தைப் பாடிய போதெல்லாம் அது சந்தோஷத்தில் குதித்தது. ஸ்ரீ தத்தாத்ரேயரின் யோகமுறைகள் பண்டைய யோக முறைகளை விட மிகவும் மேம்பட்ட ஒன்று. கரடியின் ஆன்ம சைதன்யம் தாந்த்ரீகனுக்கு மாற்றப்பட்டது. மனித குணத்துடன் இருந்த தாந்த்ரீகனின் ஆன்ம சைதன்யம் கரடியின் குணமாக மாறியது. கரடியிடம் இருந்த கரடிக் குணம் அணைக்கப்பட்டு

மனித குணம் உருவெடுக்க தொடங்கியது. தாந்த்ரீகன் மனித உருவத்தில் இருந்தாலும் அவனின் குணம் கரடியின் குணமாக மாறியதால், அவன் கரடி போல நடந்துகொள்ளத் துவங்கினான். அவனுடைய சீடர்களே அவனை கயிற்றில் கட்டி காட்டில் விட்டு விட்டனர்.

கரடி மனித பாஷையில் பேச தொடங்கியது."ஐயா, நான் என் பூர்வஜென்மத்தில் வட்டிக்கு பணம் கொடுப்பவன். நான் அதிகமான வட்டி வசூலித்து மக்களை துன்புறுத்துவேன். அதன் பலனாக நான் கரடியாக பிறந்துள்ளேன். என்னுடைய பூர்வ ஜென்ம புண்ணியங்களினால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணை பெற்றுள்ளேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் உண்மையில் ஸ்ரீ தத்தர்தான் என்பதை குறித்துக் கொள். அவரின் கருணையால் எனக்கு உயர்ந்த பிறவி கிடைக்கப்போகிறது. அந்த தாந்த்ரீகன் பல பாவச்செயல்கள் செய்துள்ளான். மேலும் அவன் என்னை போன்ற ஒரு வாயில்லாத ஜீவனை, ஸ்ரீ ஸ்ரீபாதரின் பக்தனைத் துன்புறுத்த நினைத்தான். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தண்டனை அளித்துவிட்டார். பாதுகாத்தலும் தண்டனையும் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் குடிகொண்டுள்ளது. அவரை மாறாத பக்தியுடன் வணங்குபவர்களிடம் எப்போதும் கருணையோடு இருப்பார். அவரின் பக்தர்களைத் துன்புறுத்துபவர்கள் மற்றும் ஆத்திகர்களுக்கு துன்பம் விளைவிப்பவர்கள் ஆகியோரைத் தண்டிக்கிறார். தண்டனை பெற்ற பின் அவர்கள் மெதுவாக பக்தர்களாக மாறுகிறார்கள். ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை ஜபித்துக் கொண்டே இருங்கள்; எனக்கு நல்ல நிலை கிடைக்கப்போகிறது" என்றது.

அனைவரும் இந்நிகழ்ச்சியினால் அதிசயத்தில் ஆழ்ந்தனர். அனைவரும் பக்தியோடு ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜெபத்தை தொடர்ந்தனர். கரடி மிகவும் அமைதியாக சமாதி நிலையில் இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜபம் நடந்து கொண்டிருந்த போது மூன்று நாகங்கள் எங்கிருந்தோ வந்தன. ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜபம் தொடர்ந்து கொண்டிருந்த போது அவைகளும் சமாதி நிலையில் இருந்தன. கரடி அமைதியான முறையில் தன் உயிரை நீத்தது. மூன்று நாகங்களும் கரடியை மூன்று முறை சுற்றி வந்தது. அந்த நாகங்கள் எங்கிருந்து வந்தன எதற்காக வந்தன என்று யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. மனிதர்களுக்கு செய்வது போலவே நாங்கள் கரடிக்கு இறுதிச் சடங்குகள் செய்தோம். நாகங்கள் எங்கள் வீட்டில் முழுநாளும் இருந்தது. எல்லா நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமம் மட்டுமே ஒரே அடைக்கலம். நாங்கள் அந்தப் புனித நாமத்தை எப்போதும் நினைவில் கொண்டிருந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு அளிக்கப்பட்ட பாலை அந்த நாகங்கள் அருந்தின. அந்தக் கூட்டத்தில் பெண்கள் யாராவது மாதவிடாயில் இருந்தாலோ துர்நாற்றம் அடிக்கும் தீட்டினால் பாதிக்கப்பட்டிருந்தாலோ அந்த நாகங்கள் சீற்றமாக ஒலி எழுப்பின. நாகங்கள் இருப்பதால் சிலர் எங்கள் வீட்டிற்கு வர பயந்தனர். தத்த பக்தர்கள் சுதந்திரமாக வந்து செல்வர். தத்தரின் பெயரையோ ஸ்ரீ ஸ்ரீபாதரின் பெயரையோ கேட்டால் அந்த நாகங்கள் பக்திப் பரவசத்தை அடைந்தன. வயதான தம்பதியின் உறவினர்கள் சட்டத்திற்கு புறம்பாக அந்த வீட்டின் சில பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். ஊர் பெரியவர்கள் அந்த

இடத்தை சர்ச்சைக்குரிய இடம் என்று குறிப்பிட்டனர். தீர்ப்பு வரும் வரை உறவினர்களுக்கு அந்த இடத்தில் காய்கறி விளைவித்துக் கொள்ள அனுமதித்தனர். உறவினர்கள் ஊர்ப் பெரியவர்களை பணத்தால் கவர்ந்திருந்தனர். இக்காரணத்தினால் இறுதித் தீர்ப்பு அளிக்கப்படாமல் வலுவற்ற காரணங்களால் தீர்ப்பு நிலுவையில் இருந்தது. அந்த சர்ச்சைக்குரிய நிலத்தில் ஒரு பாம்புப் புற்று இருந்தது. முன்பு நாகசதுர்தியின் போது மக்கள் அந்த புற்றில் பால் ஊற்றுவார்கள். அந்த புற்றில் பாம்பு எதுவும் இல்லாததால் மக்கள் தைரியமாக பால் ஊற்றுவார்கள். அங்கு பால் ஊற்றுபவர்கள் **"நாக தேவனே! நாக தேவனே! எங்களுக்கு காட்சி அளியுங்கள்! எங்கள் ஆசைகளை நிறைவேற்றுங்கள்"** என்று பிரார்த்தனை செய்து கொள்வர். பிராத்தித்து கொண்ட அனைவருக்கும் அங்கு நாகம் இல்லை என்பது நன்றாக தெரியும். ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் திறமைசாலி. நாக சதுர்த்தி நெருங்கிக்கொண்டிருந்தது. இம்முறை புற்றில் பாலை ஊற்றிவிட்டு வேண்டி கொள்பவர்கள் அந்த புற்றை நெருங்குவதற்கு மிகவும் தயங்கினர்.

இறுதியில் நாக சதுர்த்தியும் வந்தது. எவ்வளவு வினோதமான உலகம்! அவர்கள் **'நாகதேவனே! நாகதேவனே! காட்சி கொடுங்கள்!"** என்று பிரார்த்தனை செய்து கொள்வர், காட்சி கொடுத்தால் பயந்து ஓடிவிடுவர்! நாங்கள் வயதான தம்பதியோடு பாம்புப் புற்றில் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பால் அளித்து பிரார்த்தனை செய்து கொண்ட பின் மூன்று நாகங்களும் தோன்றின. பாலைப் பருகி விட்டு புற்றினுள் சென்று விட்டன. அந்த வருடம் எங்களைத் தவிர வேறு யாரும் பால் ஊற்ற வரவில்லை.

## தங்கள் பக்தர்களைப் பாதுகாக்கும் நாகங்களைக் கொல்ல நினைப்பவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் புத்தி புகட்டுதல்

நாக சதுர்த்தி அன்று எங்கள் ஊருக்கு ஒரு மந்திரவாதி வந்தான். கிராமத்தலைவனும் எங்கள் உறவினர்களும் அவனை வரவேற்றனர். அவன் தன் மந்திர சக்தியால் எந்த விதமான விஷ நாகத்தையும் அசைய முடியாமல் செய்து தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் திறன் கொண்டிருந்தான். பாம்புக் கடியால் உயிர் பிரிந்தவர்களின் உயிரை மீண்டும் கொண்டு வரும் திறனையும் பெற்றிருந்தான். அவன் உள்ளங்கையில் கருட ரேகை இருந்தது. ஒருவரின் உள்ளங்கையில் கருட ரேகை இருந்தால் சர்ப்பங்கள் அவர்கள் கட்டுப்பாட்டிற்கு வரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. கிராமத் தலைவனும் மந்திரவாதியும் எங்கள் வீட்டில் உள்ள மூன்று நாகங்களையும் கொல்ல திட்டம் தீட்டி கொண்டிருந்தனர்.

பாம்புப் புற்றை சுற்றி நெருப்பு பற்ற வைக்கப்பட்டது. மந்திரவாதி அவன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு வினோதமான தாந்த்ரீக சடங்குகளை மேற்கொண்டான். உரத்த குரலில் மந்திரங்கள் ஜெபித்தான். உன்னதமான நாகங்களை கொல்வது பாவம் என்பதால் எங்களுக்கு வேதனையாக இருந்தது. எனினும், எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. உன்னதமான வர்க்கத்தை சேர்ந்த அந்த அப்பாவி நாகங்களை ஸ்ரீ ஸ்ரீபாதர் மட்டும்தான் காப்பாற்ற வேண்டும். கட்டுப்பட்டது போல் அந்த நாகங்கள் புற்றிலிருந்து வெளியே வந்தன. இது மாந்திரீகன் மற்றும்

அவனின் சீடர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. எனினும், அந்த சந்தோஷம் சிறிது நேரம்தான் நிலைத்தது. வெளியே வந்த நாகங்கள் நொடிக்கு நொடி பெரிதாகி கொண்டே போனது. அந்த மாந்த்ரீகன் மந்திரத்தை அதிக சத்தத்தோடு படித்தான். சர்ப்பங்கள் அந்த மந்திரங்களுக்கு கட்டுப்பட்டது போல் நெருப்புக்கு அருகே சென்றது. என்ன ஒரு ஆச்சரியம்! அக்னிதேவனே அவைகளுக்கு பாதை அளிப்பது போல அதன் பாதையில் இருந்து நெருப்பு அணைய தொடங்கியது. இறுதியாக எல்லா நெருப்பும் அணைந்தது. சர்ப்பங்கள் சுதந்திரமாக அங்கிருந்து சென்றன. மாந்த்ரீகனும் அவன் சீடர்களும் திகைப்படைந்தனர். இதற்கிடையில் கிராமத் தலைவனின் மூத்த மகனுக்கு பாம்புக் கடியின் அறிகுறிகள் தோன்றின. பாம்பு கடிக்காமலேயே அவன் உடல் முழுவதும் விஷம் ஏறியது போன்ற வினோதமான பாம்புக் கடி அறிகுறி அவனிடம் தோன்றியது. கிராமத் தலைவனின் இரண்டாவது மகனின் கண் மங்கத் தொடங்கியது. அவன் திடீரென குருடனானது மிகவும் வழக்கத்திற்கு மாறானதாக இருந்தது. மந்திரவாதி பல மந்திரங்களை ஜெபித்தும் எந்த பயனும் இல்லை. அவன் உள்ளங்கையில் இருந்த கருட ரேகை உருமாறி மறைந்து போனது. ஊர்த் தலைவனுக்கு பயங்கரமான பயம் தொற்றிக்கொண்டது. உதவியற்றவர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ ஸ்ரீபாதரைத் தவிர எவராலும் அவனை காப்பாற்ற முடியாது.

மந்திரவாதியின் மந்திர சக்திகள் முழுவதும் மறைந்து போனது. மந்திரவாதி சில நிமிடங்களில் இறந்து போனான். அந்த குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் திருவிளையாடல்கள் எப்படி இருக்கும் என்று யாருக்குத் தெரியும்? கிராம தலைவன் ஓலமிட்டுக் கொண்டு எங்களிடம் ஓடி வந்தான். எங்களால் என்ன செய்ய முடியும்? ஸ்ரீ ஸ்ரீபாதரை ஒருமனதாக பக்தியுடன் நினைவில் கொண்டால் அவரின் இரு மகன்களும் உயிர் பெறுவர் என்று கூறினோம். மந்திரவாதியின் சடலம் கிராமத் தலைவனின் வீட்டில் இருந்தது.

கிராமத் தலைவனின் இரு மகன்களும் விதியின் முரண்பாட்டால் பாதிக்கப்பட்டவர்கள். எங்கள் உறவினர்கள் பயத்தில் நடுங்கி கொண்டிருந்தனர். சூழ்நிலை முழுவதும் பரிதாபகரமாக இருந்தது. மந்திரவாதியின் சடலம் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு சிதைக்கு நெருப்பு வைக்கப்பட்டது. திடீரென எரிந்து கொண்டிருந்த பிணத்தில் ஒரு அசைவு தென்பட்டது. அந்தச் சடலம் தன்னை எரியும் நெருப்பில் இருந்து காப்பாற்றுமாறு அழுதது. எனினும் சுடுகாடு காப்பாளன் எரியும் பிணத்தின் மீது தண்ணீர் ஊற்ற மறுத்துவிட்டான். அந்த மந்திரவாதி பேயாகி விட்டான் என்றும் அவன் காப்பாற்றப்பட்டால் தன் உடலுக்குள் மீண்டும் புகுந்து கொண்டு பிசாசுகள் செய்யும் அனைத்து தீய நடவடிக்கைகளும் அதே மனித உடலுடன் மேற்கொள்வான் என்று கூறினர். மேலும் அவனுடைய உடல் எரிந்து சாம்பலாகி விட்டால் அவன் வெறும் பிசாசாக மட்டும் இருந்து கொண்டு அவன் கட்டுப்பாட்டிற்குள் வருபவர்களின் உடலில் மட்டும் புகுந்து கொண்டு தொல்லைகள் அளிப்பான் என்று கூறினர். உடல் இல்லாத பேயை விட தன் உடலில் புகுந்து கொள்ளும் பேய்க்கு

அதிக சக்தி உண்டு என்று எண்ணினர். தன் சொந்த உடலுடன் இருக்கும் பேய் மிகுந்த அழிவையும் துயரத்தையும் உண்டாக்கும். **மக்களின் பூர்வ கர்மாக்களுக்கு ஏற்றார் போல் உணர்வுகளை அளித்து, பூர்வ கர்மாக்களின் பலன்களை அனுபவிக்க செய்வதன் மூலம், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் உண்மையான குணத்தை வினோதமான வழியில் மக்களுக்கு வெளிக்காட்டுகிறார்.**

சுடுகாட்டுக் காப்பாளர்களில் இரக்க குணம் படைத்த ஒருவன் பிணம் படும் வேதனையைப் பொறுக்கமுடியாமல் தண்ணீர் ஊற்றினான். அந்த தண்ணீர் நெருப்பை அணைக்க வில்லை. அதற்கு மாறாக நெய் ஊற்றப்பட்டது போல இன்னும் பிரகாசமாக எரிய வைத்தது. மந்திரவாதியின் உடல் முழுவதும் நெருப்பு பிடித்திருந்தாலும் அது எரியவில்லை. அவன் கைகால்கள் உரு மாறவில்லை. நரகத்தில் படும் வேதனையைப் போல உடலுடன் வேதனையை அனுபவித்து கொண்டிருந்தான்.

சங்கர் பட், ரௌரவம் மற்றும் மற்ற நரகங்களில் பல்லாயிரம் வருடங்களாக உயிரினங்கள் துன்பங்களை அனுபவித்து கொண்டிருக்கின்றன. குளிக்கும் போதும், தலை முடியை அலசும் போதும், துண்டை பிழியும் போதும், உணவு அருந்தும் போதும் தண்ணீரைத் தெளித்துக்கொண்டே

**"ரௌரவே அபுண்ய நிலையே பத்மார்புதே நிவாஸினாம்
அர்த்தினாம் உதகம் தத்தம் அக்ஷயம் உபாதிஷ்டதே"**

என்கிற இந்த மந்திரத்தைக் கூற வேண்டும். இந்த மந்திரத்தை கூறிக்கொண்டே தெளிக்கப்படும் தண்ணீர் ரௌரவம் மற்றும் மற்ற நரகங்களில் பல்லாயிரக்கணக்கான எண்ணற்ற வருடங்களாக வசித்து கொண்டிருப்பவர்களின் தாகத்தை தணிக்கும். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒழுக்கமான மக்களால் எளிதில் அணுக முடிந்த தங்கப் பொக்கிஷம். பாவமான செயல்கள் புரிபவர்களுக்கும் ஒழுக்கத்தில் இருந்து தவறியவர்களுக்கும் எமதர்மராஜா போன்றவர்.

மந்திரவாதியின் பிணம் சிதையில் இருந்து எழுந்தது. அங்கிருந்து குதித்து கிராமத்தலைவனின் வீட்டிற்கு சென்றது. முழுவதும் எரியாமல் அதே சமயம் நெருப்பினால் உண்டாகும் பயங்கரமான வலியை அனுபவித்து கொண்டு அழுது கொண்டே அந்த மந்திரவாதி கிராம தலைவனின் வீட்டை அடைந்தான். நாங்கள் அனைவரும் ஸ்ரீ தத்தரின் கதைகளைக் கூறிக்கொண்டும் ஸ்ரீ தத்தரின் தெய்வீகமான போற்றத்தக்க புது அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தைப் பாடிக்கொண்டும் கிராமத் தலைவனின் வீட்டில் தான் இருந்தோம். **"தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாதவல்லப தத்த திகம்பரா!"** என்கிற பாடலின் புனித நாமம் அந்த சுற்றுப்புறக் காற்றை சக்தி ஏற்றி புனிதமாக்கிக் கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மொத்த உடலில் இருந்து வரும் தெய்வீக கதிர்கள் அவரின் மொத்த உருவத்திற்கு அருகில் இருப்பவர்களைத் தூய்மை ஆக்கும். அவரின் சூக்ஷ்ம உருவத்தில் இருந்து வரும் தெய்வீகக் கதிர்கள் பூமி முழுவதையும் தூய்மையாக்கும். அவர் காரண உடலில் இருந்து வரும் புனிதமான கதிர்கள் கோடானு கோடி

பிரபஞ்சங்களையும் தூய்மை ஆக்கும். அவரின் மகா காரண உடல் எப்போதும் விவேகமான,மேலான மற்றும் பேரானந்தமான அத்வைத நிலையில் நிலைத்திருக்கும். அது எப்போதும் அமைதியாக நிலைத்திருக்கும். அந்த உருவத்தில் இருந்து பரவும் தனிச்சிறப்புடைய தெய்வீக கதிர்கள் சாலோக்யா, சாமீப்ய மற்றும் சாயுஜ்ய (மூன்று விதமான முக்திகள்) போன்ற நிலைகளில் வசிக்கும் அவதூதர்கள், அம்ச அவதாரங்கள், சிறந்த சித்தர்கள் மற்றும் சிறந்த யோகிகளைப் புனிதம் ஆக்குகின்றன. அவரின் தெய்வீக நாமத்தை ஜெபித்தால் அவர் நம் கண்ணுக்குத் தெரியாத படி அவ்விடத்தில் இருப்பார். தன்னுடைய சக்தியையும் நிலையையும் தெய்வீக அற்புதங்கள் மூலம் நிரூபிப்பார்.

அந்த மந்திரவாதி கேலியாக ஸ்ரீ ஸ்ரீபாதரை "தத்தர் என்ன திகம்பரரா? ஸ்ரீ ஸ்ரீபாதர் தத்தரா? ஸ்ரீ ஸ்ரீபாதர் கூட திகம்பரரா? அவர் நிர்வாண பைத்தியமா?" என்றான். நெருப்பு அவன் உடலை வேதனை படுத்தி கொண்டு இருந்தபோது மந்திரவாதி சுடுகாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டான். அவன் முழு நிர்வாண நிலையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமம் பாடப்பட்டு கொண்டிருந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டு அனைத்து பக்தர்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டான். இது என்ன சாதாரண விஷயமா? இது சாதாரண யோகிகளுக்கு சாத்தியமா? இது போன்ற லீலைகளை கேள்விப்பட்டிருக்கிறோமா? இது போன்று பார்த்திருக்கிறோமா? அனைத்தும் வினோதமான, மிகவும் அற்புதமான கேள்விப்படாத மற்றும் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்று. எவர் ஒருவர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் புனிதமான பாதங்களுக்கு முன் தன் தலை பணிந்து அடைக்கலம் அடைகிறார்களோ அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஒரு குழந்தை தன் தாயின் மடியில் எப்படி பாதுகாப்பாக இருக்கிறதோ அதே போன்ற சந்தோஷத்தைப் பெறுவர். அவர்கள் அனைத்து புனிதமான விஷயங்களையும் சுகங்களையும் பெறுவர்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமஜபம் நடந்துகொண்டிருந்தபோது மந்திரவாதியும் ஆடினான், அவனுக்குக் கொஞ்சம் நிவாரணம் கிடைத்தது. அவன் ஆட்டத்தை நிறுத்தினால் வலி அதிகரித்தது. அவனுக்கு நிர்வாணமாக ஆடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. இவை அனைத்தும் தன்னுடைய தவறு என்பதையும் தான் செய்த தவறுகளினால்தான் இது போன்ற முறையில் அனைத்தும் நடக்கின்றன என்பதை உணர்ந்து கொண்டான். அவன் தன் மந்திர சக்திகளினால் பல பாம்புகளை நெருப்புக்கு அனுப்பியதை நினைவு கூர்ந்தான். அவனுடைய அறியாமைக் காலங்களில் திகம்பர சந்நியாசிகளையும் சிறந்த மனிதர்களையும் தூற்றியதன் பலன்தான் இவை அனைத்தும் என்று எண்ணினான். அவன் செய்த குற்றங்கள் அனைத்தையும் உணர்ந்து வருத்தம் அடைந்து ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் முழு மனதோடு சரணடைந்தான். அவன் மனதில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டவுடன் நெருப்பின் வேகம் குறைந்தது. நான் என் ஆடைகளை அவனுக்கு அணிந்துகொள்ள அளித்தேன். அவன் பின்னர் மிகவும் ஈடுபாட்டுடன் தெய்வீக பஜனையில் கலந்து கொண்டான். சூரிய உதயத்தின் போது இரண்டாவது மகனுக்கு கண் பார்வை மீண்டும் கிடைத்தது. ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு அளிக்கப்பட்ட பசும்பால் கிராமத் தலைவனின் மூத்த மகனின்

வாயில் ஊற்றப்பட்டவுடன் அவனுடைய மயக்க நிலை நீங்கி மீண்டும் உணர்வு பெற தொடங்கினான். அந்த மந்திரவாதி தான் ஸ்ரீ ஸ்ரீபாதரை நினைவில் கொண்டு ஒழுக்கமாக வாழ்வதாக கூறிவிட்டு எங்கோ சென்றுவிட்டான்.

கிராமத்தலைவன் அந்த சர்ச்சைக்குரிய நிலம் அந்த வயதான தம்பதியுடையதுதான் என்று தீர்ப்பு வழங்கினான். மூன்று நாகங்கள் வாழ்ந்த பாம்புப் புற்றில் மூன்று அத்தி மரங்கள் வளர்ந்தது. சில நாட்களுக்கு பிறகு தத்தானந்த அவதூதர் என்கிற சந்நியாசி அழைக்கப்படாமலேயே எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் அத்தி மரத்தடியில் அமர்ந்து கொண்டு தியானம் செய்தார். ஒரு சனிக்கிழமை மாலை வேளையில் நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதருக்காக தயார் செய்த அல்வாவை நிவேதனம் செய்தார். அதை எங்களுக்கும் பிரசாதமாக அளித்து சாப்பிட சொன்னார். அவர் "ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாய்வழி தாத்தாவின் வீட்டில் உள்ள அத்தி மரத்தடியில் அமர்ந்து கொள்வார். அவர் தாய் வெள்ளிக் கிண்ணம் நிறைய அல்வாவை அன்போடு அவருக்கு ஊட்டிவிடுவாள். இந்த மூன்று அத்தி மரங்களும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி மற்றும் ஸ்வாமி சமர்த்தர் ஆகிய மூவரின் அடையாளம். வருங்காலத்தில் இந்த மூன்று அத்தி மரங்களின் விதைகளும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பிறந்த இடத்தில் அத்தி மரமாக வளரும். அவரின் தெய்வீக உருவச்சிலை இந்த அத்தி மரத்தடியில் ஸ்தாபிக்கப்படும். எவர் ஒருவர் அந்த அத்தி மரத்தடியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் சிலைக்கு சனி பிரதோஷத்தன்று அல்வா நிவேதனம் செய்கிறார்களோ அவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணை தங்க பொக்கிஷம் போன்று எளிதாகக் கிடைக்கும்" என்று கூறினார். இவ்வாறு ஸ்ரீமன் நாராயணன் முடித்தார்.

இந்த அற்புதமான கதைகளைக் கேட்ட பின் என்னுடைய பக்தி வலுவடைந்தது. அடுத்த நாள் நான் குருகட்டாவிற்கு புறப்பட்டேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 17

## ஸ்ரீ நாமானந்தாவை சந்தித்தல்

நான் குருகட்டாவை நோக்கி பயணித்து கொண்டிருந்த போது வழியில் தலைவிரி கோலத்தில் கரகரப்பான ஓசையுடன் சிரித்துக் கொண்டே என்னை நோக்கி ஒரு பெண் ஓடி வந்தாள். அவள் பார்ப்பதற்கு புத்தி தடுமாற்றம் அடைந்தவள் போல் தோன்றினாள். அவள் என்னை நோக்கி வேகமாக ஓடி வந்ததால் என் நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. என் கைகளும் கால்களும் நடுங்கின. அவளை இரண்டு ஆண்கள் கையில் குச்சியுடன் துரத்திக் கொண்டு வந்தனர். அவள் ஓடி வந்து என் காலில் விழுந்து அந்த இரு ஆண்களிடமிருந்து காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டாள். அனைத்தும் எனக்குக் குழப்பமாக இருந்தது. பயணத்திற்கு கூட செலவு செய்ய முடியாத ஒரு பலவீனமான பிரமணனால் எப்படி ஒரு பெண்ணை அந்நியர்களிடமிருந்து புதிய இடத்தில் காப்பாற்ற முடியும்? நான் என்னை அறியாமல் **“அம்மா, பயப்படாதே. ஸ்ரீ ஸ்ரீபாதர் உன்னை கண்டிப்பாக அந்த போக்கிரிகளிடமிருந்து காப்பாற்றுவார். பயப்படாமல் எழுந்து கொள்”** என்று கூறினேன். அந்த அந்நியர்கள் என்னை ஆச்சரியமாக பார்த்தனர். தங்களின் பலத்திற்கு கொஞ்சம் கூட ஈடில்லாத இந்த மனிதன் தங்களை குண்டர்கள் என்றுகூடக் கருதாமல் என்ன ஒரு தைரியத்தில் அந்த பெண்ணை காப்பாற்ற போகிறார்கள் என்று ஆச்சரியப்பட்டனர். அவர்கள் **“ஏ பலவீனமான பிராமணரே, அந்த பெண்ணின் கெட்ட நடத்தைக்காக அவளை கொல்ல போகிறோம். உன்னால் காப்பாற்ற முடியாது. எங்களை தடுத்தால் உன்னையும் கொன்றுவிடுவோம். ஒழுங்காக எங்களுக்கு வழி விடு”** என்று எச்சரித்தனர்.

என்னுள் ஒரு மறைவான சக்தி நுழைந்தது போல் உணர்ந்தேன். என் மனதில் எந்த எண்ணமும் தோன்றாமல் என் வாயிலிருந்து வார்த்தைகள் தானாகவே எந்த முயற்சியும் இல்லாமல் வந்தன. என் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் என்னை இன்னும் ஆபத்தான இக்கட்டான நிலைக்கு தள்ளியது. நான் அவர்களிடம், “நீங்கள் பிராமணர்களாகப் பிறந்த போதும் நேற்று இரவு ஒரு பசுவை வெட்கம் இல்லாமல் கொன்றீர்கள். அதன் மாமிசத்தைத் தின்று விட்டு மலிவான மதுபானத்தை அருந்திவிட்டு அனைத்து தீய நடவடிக்கைகளையும் செய்தீர்கள். என்னைப் போன்ற ஒரு மனிதனையும் இந்த அபலை பெண்ணையும் கொல்வது ஒன்றும் உங்களுக்கு கடினம் அல்ல. நான் எதற்கும் தயார். உங்கள் மீது பரிதாபப்பட்டு இவற்றை கூறுகிறேன். இந்தப் பெண்ணைக் கொன்ற பின் உங்களுக்கு தொழுநோய் வரும். தொழு நோய் தாக்கியவர்களுக்கு அசாதாரணமான காம இச்சை தோன்றும்.

பாம்புகள் தொழுநோயாளியை கொத்தாது. தொழுநோயை குணப்படுத்த பாம்பு விஷத்தில் இருந்துதான் மருந்து தயாரிக்க வேண்டும் ஆனால் அந்த வழிமுறை அனைவருக்கும் தெரியாது. காம இச்சைகளைக் கட்டுப்படுத்தி சரியான மருந்துகள் எடுத்துக் கொண்டால் நோய் வலுவிழக்கும். நோய்களில் மிகவும் அருவறுப்பான இந்த நோயினால் நீங்கள் தவிக்க வேண்டும் என்று நினைத்தால் இந்த பெண்ணைக் கொல்லலாம். உங்கள் நன்மைக்காகத்தான் அக்கறையோடு கூறுகிறேன்" என்று கூறினேன்.

என் வார்த்தைகளை கேட்டவுடன் அந்த இரு அந்நியர்களும் நிலைகுலைத்தனர். அற்புதத்திலும் அற்புதம்! நான் கூறியவற்றில் சில அவர்களின் கடந்த காலத்துடன் ஒத்து இருந்ததால் எதிர் காலத்திலும் என் கணிப்பு பலித்து விடும் என நம்பினர். அவர்கள் தன் தவறுகளை ஒப்புக்கொண்டனர். நான் ஜோசியத்தில் துளிக் கூட ஞானம் இல்லாதவனாக இருப்பினும் அவர்கள் பார்வைக்கு நான் சிறந்த ஜோசியராக தெரிந்தேன். நாங்கள் அருகில் இருக்கும் மரத்தின் நிழலில் அமர்ந்தோம். நான் அவர்களை பற்றிய முழு விவரங்களையும் அளிக்குமாறு கேட்டுக் கொண்டேன். அவர்கள் பின்னர் கூறத் தொடங்கினர். "ஐயா, நீங்கள் அனைத்தும் அறிந்தவர், நீங்கள் முக்காலமும் அறிந்தவர். இருப்பினும் நீங்கள் கேட்டதால் நாங்கள் கூறுகிறோம். நாங்கள் இருவரும் சகோதரர்கள். நாங்கள் பிராமண ஜாதியில் பிறந்திருந்தாலும் எங்களுக்குள் பிராமண குணம் முற்றிலும் மறைந்து விட்டது. எல்லா வகையிலும் தரம் தாழ்ந்து விட்டோம். நாங்கள் மாட்டிறைச்சி உண்பவர்களுடன் நட்பு பாராட்டினோம். நாங்கள் மதுபானங்கள் அருந்தப் பழகிக் கொண்டோம். நாங்கள் விபச்சாரம் செய்தோம். அனைத்து வகையான தீய பழக்கங்களினாலும் சீரழிந்தோம். ஒரு மலைப் பாறையின் மீது பத்மாசனத்தில் இந்த பெண் அமர்ந்திருப்பதை பார்த்தோம். அவளிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்தோம். அவள் மறுத்துவிட்டாள். அவள் எங்கள் காம இச்சையை மறுத்துவிட்டதால் நாங்கள் அவளை வலுக்கட்டாயமாக அடைய எண்ணி அவளை பற்றிப்பிடித்தபின் வினோதமாக அவள் எங்கள் பிடியிலிருந்து தப்பிவிட்டாள். நாங்கள் அவளை துரத்தினோம். எங்கள் பூர்வஜென்ம புண்ணியங்களினால் மட்டுமே உங்களை காணும் பாக்கியம் பெற்றோம்" என்று கூறினர். பின்னர் நான் "எது நல்லது எது தீயது என்பதை அறிந்து கொள்ளவே கடவுள் நமக்கு பகுத்தறியும் தன்மையை அளித்திருக்கிறார். நாம் நற்பாதையில் நடந்தால் நல்ல பலன்களை பெறலாம். தீய பாதையில் பின்பற்றினால் வேறு வழியின்றி தீய பலன்களைத்தான் அனுபவிக்க வேண்டும். தாய் போன்ற இந்த பெண் ஒழுக்கமானவளாகத்தான் தெரிகிறாள். அவளைத் தவறான குணம் உடையவள் என்று நீங்கள் தவறுதலாக நினைத்து விட்டீர்கள். அதற்கு மேலாக நீங்கள் மிகவும் கீழ்த்தரமான விருப்பங்களுடன் அவளை அணுகினீர்கள். இப்போது அதற்கு வருத்தப்படுகிறீர்கள். இதற்கு கடவுள் உங்களை மன்னிப்பாரா என்று எனக்கு தெரியவில்லை ஆனால் என்னிடம் ஒரு சிறு நல்ல விஷயம் இருக்கிறது. மூவுலகங்களும் வணங்கும் மும்மூர்த்திகளின் உருவகமான ஸ்ரீ தத்தர் இப்போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக இந்த உலகத்தில் மனித உருவில்

உலாவிக் கொண்டிருக்கிறார். கோரமான பாவிகளை உயர்த்த அவருடைய அற்புதமான வளமான பாத கமலத்தை பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. நான் அவருடைய பல திருவிளையாடல்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் இப்போது வசித்துக் கொண்டிருக்கும் குருகட்டாவிற்குத்தான் நான் இப்போது சென்று கொண்டிருக்கிறேன்" என்று கூறினேன். நான் அந்தப் பெண்ணை பார்த்து **"அம்மா, உன்னை பற்றி கூறு"** என்றேன். அவள் தன்னை பற்றி விவரிக்க தொடங்கினாள். "ஐயா, நீங்கள் இந்த பாவிகளிடமிருந்து என்னை காப்பாற்றினீர்கள். நீங்கள் என் தந்தை போன்றவர். நான் ஒரு புகழ்பெற்ற பிராமண குடும்பத்தில் பிறந்தேன். எனக்கு சிறு வயதிலேயே திருமணம் நடந்தது. என்னுடைய துரதிர்ஷ்டத்தை எவ்வாறு கூறுவேன்? என் கணவர் ஆண்மையற்றவர். அவர் என்னை எப்போதும் கொடுமைப் படுத்திக் கொண்டே இருப்பார்.

நான் என் இளமையின் விருப்பங்கள் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு என் கணவரை கடவுள் போல் பாவித்து சேவைகள் செய்து வந்தேன். என் கணவர் கொடுமைப்படுத்தி அதில் இன்பம் காண்பவர். அவர் எனக்கு மற்ற ஆண்களுடன் தகாத உறவு இருப்பதாகக் கூறுவார். சுமங்கலி பெண்களின் அடையாளமாக நான் பூ வைத்து அலங்கரித்துக் கொண்டால் நான் கள்ளக்காதலனை அழைப்பதாகக் குற்றம் சாட்டுவார். நான் அலங்காரம் அனைத்தையும் கலைத்து விட்டால், ஏன் விதவை போல் தோற்றம் அளிக்கிறாய் என்று கேட்பார். நான் வீட்டில் உள்ள மற்ற குழந்தைகளிடம் அன்பு செலுத்தினால், நான் குழந்தைகள் இல்லாததால் உள்ளூர வருத்தப்படுவதாக குறிப்பிடுவார். நான் சரியான அளவு சாப்பிட்டால் நான் சாப்பாட்டு ராமன் போல சாப்பிட்டு பணத்தை விரயம் செய்வதாக குற்றம் சாட்டப்படுவேன். நான் கொஞ்சமாக சாப்பிட்டால், எனக்கு கணவர் வீட்டில் உணவே அளிக்கப்படாதது போல் நடித்து அக்கம்பக்கத்தினரின் மனதில் பரிதாப எண்ணம் ஏற்பட இவ்வாறு நடந்து கொள்கிறேன் என்று கூறுவார். நான் விரதம் மேற்கொண்டால் நான் என் கணவரை விட்டுப் பிரிய ரகசிய மந்திரங்களைக் கூறி அந்த மந்திரங்களின் மூலம் அந்த தெய்வங்களை மகிழ்விப்பதாக குற்றம் சாட்டுவார். அவர் எனக்கு இவ்வளவு மனத்துன்பங்கள் இழைத்தும் என் மாமனாரோ அல்லது மாமியாரோ அல்லது வீட்டில் உள்ள பெரியவர்களோ என் கணவரை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேச மாட்டார்கள். இந்த பூமியில் இருந்து கொண்டே நரகம் எப்படி இருக்கும் என்பதை நான் என் புகுந்த வீட்டில் இருந்துகொண்டே புரிந்துகொண்டேன். இந்த முறையில் எனக்கு காலம் மிகவும் துயரமாக இருந்தது" என்றாள்.

அவள் மேலும் தொடர்ந்தாள். **"இதற்கிடையில் மந்திர தந்திர சாஸ்திரங்களில் கைதேர்ந்த ஒருவர் எங்கள் கிராமத்திற்கு வந்தார். அவருக்கு ஜோசியத்தில் மிகவும் ஞானம் இருப்பதாகச் செய்தி பரப்பப்பட்டது. என் மாமனாரும் மாமியாரும் அவரை எங்கள் வீட்டிற்கு அழைத்தனர். அவர் சில கணக்குகள் போட்டு சில வினோத சடங்குகள் செய்து எனக்கு துரதிர்ஷ்டம் இருப்பதாகவும் என் ஜாதகம் அமங்கலப் பண்புகள் நிறைந்திருப்பதாகவும் அந்த துரதிர்ஷ்டத்தினால்தான் என் கணவர் ஆண்மையற்றவராக ஆனார் என்றும் கூறினார். என்னை இந்த வீட்டை விட்டு**

**வெளியே அனுப்பினால்தான் இந்த குடும்பத்தில் உள்ள தீய விளைவுகள் அகலும் என்று அறிவுரை வழங்கினார். மேலும் தான் சில மந்திர தந்திரங்களும் சில சடங்குகள் செய்தால் அவற்றின் பலனால் என் கணவர் ஆண்மை பெறுவார் என்றும் அவருக்கு இன்னொரு திருமணம் செய்து வைத்தால் குழந்தைகள் பிறக்கும் என்று கூறினார்"** என்றாள்.

அந்த அபலைப் பெண் மேலும் தொடர்ந்தாள். "என் கணவர், அவர் பெற்றோர்கள் மற்றும் அவர்கள் வீட்டில் இருந்த அனைவரும் கருணையின்றி என்னை வீட்டை விட்டு வெளியேற்றினர். வேறு வழி தெரியாமல் நான் நடந்தே என் பெற்றோர் வீட்டிற்குச் சென்றேன். வழியில் எங்கள் வீட்டுக்கு வந்த போலி மந்திரவாதி என்னிடம் மிரட்டும் தொனியில் பேசினான். அவனுடைய கீழ்த்தரமான காம இச்சைக்கு என்னை பலியிட நினைத்தான். நான் பத்திரகாளி போல் கோபம் கொண்டு அருகில் இருக்கும் பெரிய பாறையை எடுத்து என் முழு பலத்துடன் அவனை தாக்கினேன். பாறை அவன் தலையில் பலமாகப் பட்டு அந்த இடத்திலேயே இறந்து விட்டான். கடவுளே! நான் பெண்ணாக இருப்பினும் சூழ்நிலைகளின் காரணமாக ஒரு பிராமணனைக் கொல்ல நேரிட்டது. எனக்கு குழப்பமாக இருந்தது. என் பெற்றோர்களின் வீட்டில் கூறினால் கூட, நான் பிரச்சனைகளைத்தான் சந்திக்க நேரிடும். என் பெற்றோர்கள் என்னை அன்போடு பாதுகாத்தாலும் என் சகோதரர்களும் அவர்கள் மனைவிகளும் என்னை அன்போடு நடத்துவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. நான் அந்தப் போலி மந்திரவாதியை கொல்வதை பலர் பார்த்தனர் ஆனால் அவனுடைய வக்கிர புத்தி அவர்களுக்கு தெரியாது. இந்த செய்தி நாலாபக்கமும் பரவியது. என் விதி என்னை எங்கு அழைத்து சென்றாலும் செல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டு அந்த தெரியாத பாதையில் நான் பயணித்தேன். அப்போது நான் ஒரு ஏரியைக் கண்டேன். எனக்கு தாகமாக இருந்தது. அதிலிருந்து நீரைப் பருகி என் தாகத்தைத் தணித்துக் கொண்டேன். அந்த ஏரிக்கு அருகில் ஒரு அத்தி மரம் இருந்தது. ஸ்ரீ தத்தருக்கு அத்தி மரம் மிகவும் பிடிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. நான் அந்த மரத்தடியில் படுத்து மெதுவாக உறங்கிவிட்டேன். சிறிது நேரம் கழித்து விழித்து கொண்டேன். எனக்கு மிகவும் பசியாக இருந்தது. நான் என் கண்களை திறந்தவுடன் என் இரு பக்கங்களிலும் இரண்டு நாகங்கள் காவல்காரனை போல் நின்றுகொண்டிருந்தது. நான் அந்த இரு நாகங்களையும் வணங்கியவுடன் என் பிரார்த்தனையை மதித்து அவை எங்கோ சென்று விட்டன. நான் 'தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஜய குரு தத்தா! தத்த திகம்பரா!' என்று பாடினேன். ஸ்ரீ தத்தர் வெறும் நினைவலைகளாலேயே மகிழ்ச்சி அடைந்து தன் பக்தர்களை காப்பாற்றுவார் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அதிர்ஷ்டவசமாக அத்தி மரத்தின் அடியில் நான் இருந்தேன். நான் ஸ்ரீ தத்தரின் கருணை குடையின் நிழலில்தான் இருக்கிறேன் என்று எண்ணிக்கொண்டேன்.

அந்த வழியில் சென்று கொண்டிருந்த வழிப்போக்கர் ஒருவர் நான் ஸ்ரீ தத்தர் நாமத்தை பாடிக் கொண்டிருப்பதை மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார். அவர்



அத்தி மரத்தின் நிழலில் நின்றார். நான் பயந்து அவரிடம் "நீங்கள் யார்? இங்கிருந்து உடனடியாக செல்லுங்கள். செல்லவில்லை என்றால் இங்கிருக்கும் பெரிய பாறையை எடுத்து உங்களை அதனால் கொன்றுவிடுவேன். சிறிது நேரத்திற்கு முன்தான் நான் ஒரு போலி மந்திரவாதியை கொன்றேன்" என்று கூறினேன். அந்த புது மனிதன் தன் கைகளைக் கட்டிக்கொண்டு "அம்மா, என் பெயர் ரவிதாஸ், நான் ஒரு சலவை தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தவன். நான் ஒரு தத்த பக்தன். நான் குருவபுரத்தில் வசிக்கிறேன். ஸ்ரீ குரு தத்தர் இந்த பூமியை புனிதப்படுத்த ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற அவதாரத்தில் அற்புதமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார். அவர் தான் கீழிறங்கி வந்திருக்கும் இந்த நற்செய்தியை அசாதாரணமான அற்புதங்களின் மூலம் தொலைவில் பரவி இருக்கும் தன் பக்தர்களுக்குத் தெரிவிக்கிறார். இதை அனுபவித்து மட்டும்தான் உணர்ந்து கொள்ள முடியும்! நான் குருவபுரத்திற்குதான் சென்று கொண்டிருக்கிறேன். நீங்கள் விருப்பப்பட்டால் என்னுடன் வரலாம். குருவபுரம் அருகில்தான் உள்ளது. நான் இங்கு இருக்கும் என் உறவினர்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டு குருவபுரத்திற்கு திரும்பிக் கொண்டு இருக்கிறேன்" என்றார்.

நான் சுருக்கென்று அவரிடம் "என்னால் உங்கள் வார்த்தைகளை நம்ப முடியாது. நீங்கள் கூறும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் யார் என்று எல்லாம் எனக்கு பொருட்டு அல்ல. ஸ்ரீ ஸ்ரீபாதர் உண்மையிலேயே தத்தர் என்றால் இந்த அபலைப் பெண்ணைத் தன் புனிதமான பாதத்திற்கு அருகில் ஈர்த்து காப்பாற்றுவார். தன்னை உண்மையில் ஸ்ரீ தத்தர் என்று நிரூபிக்கும் பொறுப்பு அவரிடம்தான் இருக்கிறது. நான் அவருடைய நாமத்தை ஜபிக்க மாட்டேன். நான் தத்தருடைய நாமத்தை மட்டும்தான் ஜெபிப்பேன். அதற்குப் பின் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கிறேன். நீங்கள் இப்போது இங்கிருந்து செல்லவில்லை என்றால் என்னிடம் இருந்து உங்களுக்கு ஆபத்து காத்திருக்கிறது. அவர் வேறு எந்த வார்த்தையும் கூறாமல் "**தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப தத்த திகம்பரா!**" என்று பாடிக் கொண்டே சென்று விட்டார். பிறகு நான் பத்மாசனத்தில் பாறை மீது அமர்ந்து கொண்டு தியானம் செய்து கொண்டிருந்த போது இந்த குண்டர்களிடம் இரையாக மாட்டிக்கொண்டேன். நீங்கள் என்னை அவர்களிடமிருந்து காப்பாற்றினீர்கள்" என்று அந்த பெண் முடித்துக் கொண்டாள்.

நான் அந்தப் பெண்ணிடம் "அம்மா, ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால்தான் நீங்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். இந்த படைப்பில் அவர் வசிக்காத தேசங்களே இல்லை, அவருக்கு தெரியாத நேரம் இல்லை. காரணம் மற்றும் விளைவுகளின் தொடர்புகளால்தான் இந்த படைப்பில் பல தேசங்களில் வெவ்வேறு சமயங்களில் பல்வேறு சம்பவங்கள் நடக்கின்றன. அனைத்து நிகழ்வுகளுக்கும் பெரும் காரணம் அவர்தான். உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை எளிதாக்க பல தேசங்களில் வெவ்வேறு சமயங்களில் பல வகையான முன்னேற்ற நிலைகள் மூலம் வெவ்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இந்தப் படைப்பில் எந்த காரணமும் இல்லாமல் விளைவுகள் தென்படாது. ஸ்ரீ ஸ்ரீபாதர் பண்புகள் அற்றவரா அல்லது பண்புகள் உள்ளவரா, உருவம் அற்றவரா அல்லது உருவம் உள்ளவரா , அனைத்து நிலைகளையும்

கடந்தவாரா என்பது யாருக்கும் தெரியாது. அவருக்கு மட்டுமே அவரைப் பற்றி தெரியும். நாம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை ஜபித்தால் கண்டிப்பாக அவருடைய அருளை பெறலாம். அனைத்து விதமான துன்பங்கள் மற்றும் இழப்புகளிலிருந்து வெளியேறலாம்" என்று கூறினேன்.

இதற்குப் பின்னர், நான், பிராமண சகோதரர்கள் மற்றும் சுசீலா என்ற பெயருடைய அந்த பிராமண பெண்ணுடன் சேர்ந்து குருகட்டா நோக்கி பயணித்தோம். நாங்கள் அனைவரும் தத்தர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை ஜபித்துக்கொண்டே பயணத்தை தொடர்ந்தோம். வழிப்போக்கர்களுக்கு நாங்கள் ஒரு பஜனை கோஷ்டி போல காணப்பட்டோம். எங்கள் பயண மத்தியில் ஸ்ரீ நாமானந்தா என்கிற சிறந்த மனிதரின் ஆசிரமத்தை அடைந்தோம்.

## ஸ்ரீ தத்தர் தீண்டத்தகாதவராக வேடமிட்டு வந்து நாமானந்தரை அருளுதல்

ஸ்ரீ நாமானந்தர் முக்காலங்களான கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களைப் பற்றி நன்கு அறிந்தவர் என்பது எங்களுக்கு புரிந்தது. ஸ்ரீ நாமானந்தர் பேசத்தொடங்கினார், "என்னுடைய தந்தை பெயர் மாயணாச்சார்யலு. என் பெயர் சாயணாச்சார்யலு. நாங்கள் பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் வைஷ்ணவர்கள். நான் சந்நியாசத்திற்குள் நுழைந்த பிறகு ஸ்ரீ நாமானந்தா என்று அழைக்கப்படுகிறேன். சந்நியாசத்திற்குள் நுழைவதற்கு முன்னர் வடக்கில் உள்ள அனைத்து புண்ணிய க்ஷேத்திரங்கள் மற்றும் சித்த க்ஷேத்திரங்களையும் மிகுந்த பற்றின்மையுடன் தரிசித்தேன். என்னை உயர்த்தும் சத்குருவை தேடிக் கொண்டிருந்த போது வழியில் பீதிகாபுரம் வந்தடைந்தேன். நாங்கள் வைஷ்ணவர்கள் என்பதால் சிவ வழிபாட்டை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் எங்கள் மத வழக்கத்தையும் தூய்மையையும் கண்டிப்பாக கடைபிடிப்போம். குந்தி மாதவ ஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டு கோவிலில் இருந்து வெளியே வந்த போது தீண்டத்தகாதவர் ஒருவரை குறுக்கிட நேர்ந்தது. அவரைப் பார்த்தது என்னால் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. அதற்கும் மேலாக அவர் என் அருகில் வந்து "**நாமானந்தா எனக்கு குருதக்ஷிணை கொடுத்துவிட்டு இங்கிருந்து செல்**" என்று இடிபோல் முழங்கினார். நான் திடுக்கிட்டுப் போனேன். ஊருக்கு நடுவில் இருந்த அனைவரும் இந்த வினோதமான காட்சியைப் பார்த்தனர். ஒரு வைதீகமான வைஷ்ணவ பிராமணனிடம் ஒரு தீண்டத்தகாதவன் உரத்த குரலில் குருதக்ஷிணை கேட்பது கலியுகத்தின் அசாதாரணமான நிகழ்வுகளில் ஒன்று என மக்கள் கருதினர். மற்ற சிலர் அந்த தீண்டத்தகாதவன் மது அருந்தியிருந்ததால் உன்னதமான வைஷ்ணவரை மிரட்டுகிறார் என எண்ணினர். நான் அவரிடம் "**எனக்கு உன்னைத் தெரியாது. ஆனாலும் நான் ஒரு வைஷ்ணவ பிராமணன் நீயோ ஒரு சண்டாளன். என் பெயர் கூட நாமானந்தர் இல்லை. என்னிடமிருந்து வலுக்கட்டாயமாக குருதக்ஷிணை கேட்பது சரியில்லை**" என்றேன். என்னால் அதற்கு மேல் பேச முடியவில்லை. அவருடைய கண்கள் எரியும் கரித்துண்டை போல சிவப்பாக இருந்தது. அவருடைய முகபாவனைகள் அங்கிருந்த அனைவருக்கும் மிகுந்த பயத்தை

உண்டாக்கியது. அவர் என்னுடைய வார்த்தைகளில் சமாதானம் அடையாமல் "உனக்கு என்னைத் தெரியாது என்று பொய் சொல்கிறாய். நீ பைத்தியம் பிடித்த நாய் போல் அலைந்து கொண்டு பல்வேறு வகையான மக்களையும் என்னை உயர்த்தும் சத்குரு எங்கிருக்கிறார் என்று கேட்டுக்கொண்டிருந்தாய். நீ பிராமணன் என்ற அகந்தையினால் உண்மையைக் காணத் தவறிவிட்டாய். நான்தான் உன் சத்குரு. உன்னுடைய துறவற நிலைக்கு நாமானந்தா என்கிற பெயரை அளிக்கிறேன். உன்னிடம் இருக்கும் அனைத்து பணத்தையும் என்னிடம் குரு தக்ஷிணையாக கொடுத்துவிட்டு அனைவர் முன்னிலையிலும் என் பாதத்தில் விழுந்து என்னை குருவாக ஏற்றுக்கொள். நீ இப்படி செய்தால் எல்லாம் சரி. நீ அப்படி செய்யவில்லை என்றால் உன் உடலை கத்தியால் துண்டுகளாக்கி உன் சதைகளை குவித்து வைப்பேன். உன் ரத்தத்தை குடித்துவிட்டு உன் தலையை சுத்தியால் மீண்டும் மீண்டும் அடித்து கூழாக்கி விடுவேன். உன் உயிர் உடலில் இருந்து வெளியேறுவதைத் தடுத்து நிறுத்தி விடுவேன். துண்டிக்கப்பட்ட அனைத்து உடற்பகுதிகளிலும் உயிர் சக்தியை தங்க வைத்து மிகத் துன்பமான நரக வேதனையை அனுபவிக்கச் செய்வேன். என்னுடன் வியாபாரம் செய்வது மிகவும் நுட்பமான ஒன்று. ஆம் அல்லது இல்லை என்று கூறு. இரண்டே வார்த்தை. நீ பிரார்த்தனை செய்து கொண்டாலும் முப்பத்து முக்கோடி தேவர்களில் ஒருவருக்கு கூட உன்னை காப்பாற்றும் தைரியம் கிடையாது" என்று திட்டவட்டமாக கூறினார். இவ்வாறு திடமான வார்த்தைகளைக் கூறிவிட்டு தன் உறையில் இருந்து கத்தியை எடுத்து என்னை கொல்ல முற்பட்டார். தவிர்க்கமுடியாத இந்த சூழ்நிலைகளினால் நான் ஒரு தீண்டத்தகாதவனின் பாதத்தில் விழுந்தேன். என்னிடம் இருந்த எல்லா பணத்தையும் குரு தக்ஷிணையாக அளித்தேன். தெய்வங்களைப் பற்றிய அனைத்து வர்ணனைகளும் எனக்கு கற்பனையாக தோன்றியது. எனினும் என்னுடைய எல்லா எண்ணங்களும் தலைகீழாகும் விதமாக அழகான




உள்ளத்தை கொள்ளை கொள்ளும் தெய்வீக உருவம் என் முன் தோன்றியது. அந்த தெய்வீகக் கண்களில் இருந்து எல்லையில்லா அன்பும் கருணையும் பொழிந்தது. அந்த தெய்வீக உருவம் "**நான் ஸ்ரீ தத்தர். நான் இப்போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக பீதிகாபுரத்தில் அவதரித்துள்ளேன். நீ என்னுடையவன். நான் உன்னுடையவன். நான் உன் சொத்து. நீ என் சொத்து. சச்சி தானந்தம்தான் நம்மை ஒன்றாக இணைத்தது. நீ இன்று முதல் நாமானந்தர் என்று அழைக்கப்பட்டு தர்மத்தை போதித்து எப்பொழுதும் அமைதி பெறுவாயாக. இந்த உலகத்தை விட்டு வெளியேறியதும் என்னிடம் வந்து சேருவாய்**" என்று கூறியது.

## நாமானந்தருக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் கையாலேயே உணவு அளித்தல்

*ஐயா, இந்த முறையில்தான் நாமானந்தர் என்ற பெயருடன் சந்நியாசி ஆனேன். எனக்கு பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரைக் காண வேண்டும் என்ற ஆவல் இருந்தது. எனக்கு மிகவும் பசியாக இருந்தது. எந்த வீட்டிலும் எவரும் உணவு அளிக்கவில்லை. மக்கள் என்னை பைத்தியக்காரன் என்றும், மது அருந்திய தீண்டத்தகாதவன் என்னிடம் குருதக்ஷிணை பெற்றுக்கொண்டான் எனவும் பல வினோதமான கருத்துக்கள் என் மீது கொண்டிருந்தனர். நான் பிராமணனாக இருப்பினும் தீண்டத்தகாதவனை என் குருவாக ஏற்றுக்கொண்டதால் நானும் தீண்டதகாதவன் ஆகிவிட்டேன் என்றும் எனக்கு பிக்ஷை அளிப்பது தர்ம சாஸ்திரத்திற்குப் புறம்பானது என்று முடிவு செய்தனர். பீதிகாபுரத்தில் இருந்த பிராமணர்கள் இவ்வாறு தீர்மானம் எடுத்துக்கொண்டு எனக்கு பிக்ஷை அளிக்கவில்லை. எந்த விதமான முயற்சியும் இல்லாமலேயே நான் அப்பலராஜசர்மாவின் வீட்டை அடைந்தேன். நான் 'பவதி பிக்ஷாம் தேஹி!" என்று கூறக் கூட வாய் திறக்க தெம்பில்லாமல் இருந்தேன். அச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் கதவைத் திறந்து கொண்டு கையில் உணவுத் தட்டோடு வந்தார். அவர் என்னை அவர் வீட்டு திண்ணையில் அமரச்செய்து தன் தெய்வீக கரங்களாலேயே எனக்கு உணவை ஊட்டி விட்டார். தன் கைகளாலேயே என் வாயையும் கைகளையும் சுத்தம் செய்தார். எல்லையில்லா வலிமை நிறைந்த தன் வளமான கரங்களை என் தலைமீது வைத்து* **"உனக்கு அனைத்தும் ஏற்பாடு செய்யப்படும். எதற்கும் கவலைப்பட தேவையில்லை. பாறைக்கு இடுக்கில் இருக்கும் தவளைக்கு உணவளிக்கும் கடவுளுக்கு உன்னை வலுப்பெற செய்ய முடியாதா? நீ எங்கிருந்தாலும் உனக்குப் பின் நான் இருப்பேன். கண்ணுக்கு தெரியாவண்ணம் உன்னுடனேயே உலாவுவேன். கண்ணை இமை காப்பது போல நான் உன்னைப் பாதுகாப்பேன்"** *என்று உறுதி அளித்தார். இவ்வாறு உறுதியளித்த பின் எனக்கு பிரியா விடையளித்தார். அன்று முதல் நான் சந்நியாசியாகி சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்கிறேன். கண்ணுக்குத் தெரியாத அவருடைய தெய்வீகக் கரங்கள் என்னை எப்போதும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன" என்று ஸ்ரீ நாமானந்தா முடித்துக்கொண்டார்.*

## நான்கு வகையான ஜீவன் முக்திகள்

**"ஐயா, ஸ்ரீ தத்தரை வழிபட்டால் விரைவாக மோக்ஷம் பெறலாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு ஏதாவது சிறப்பு வழிபாட்டு முறை இருக்கிறதா? ஏதாவது தனிப்பட்ட மந்திரங்கள் தியானிக்க வேண்டுமா? என் சந்தேகங்களை தீர்த்து வைத்து உதவுங்கள்"** *என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு ஸ்ரீ நாமானந்தர் சாந்தமான முகத்துடன் பதிலளித்தார். "குழந்தாய், மோகத்தை (மாயை) அழிப்பதே மோக்ஷம் (விடுதலை). விடுதலை இறந்த பிறகு தான் வரும் என்று நியதி இல்லை. உடல் பூர்வ கர்மாக்களின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும். அதைத் தாங்கிக் கொண்டு ஜீவாத்மா மோக்ஷ நிலையில் நிலைத்திருக்கமுடியும். இப்படிப்பட்ட மனிதர்களை ஜீவன் முக்தர்கள் என்று அழைப்பர். ஒருவர் தனக்கு மிகவும் பிடித்த*

கடவுளின் உலகத்தில் வசிப்பதே ஸாலோக்ய முக்தி. புண்ணியம் பெற்றவர்கள் அவர்களுக்கு பிடித்தமான கடவுளுக்கு அருகில் வசிப்பர். இதற்கு ஸாமீப்ய முக்தி என்று பெயர். ஒருவர் அதீத புண்ணியங்கள் செய்திருந்தால் அவர்கள் விரும்பும் கடவுளின் உருவத்தைப் பெறுவர். இதற்கு சாரூப்ய முக்தி என்று பெயர். அதற்கு மேல் விசேஷமான நிலையில் பக்தன் அவனுக்கு பிடித்த கடவுளின் சைதன்யத்துடன் கலந்து விடுவான். இதற்குச் சாயுஜ்ய என்று பெயர். ஒரு குறிப்பிட்ட ஆன்மீக நிலையை அடைந்த தத்த பக்தர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டு ஸாலோக்ய முக்தியை அனுபவிக்கலாம். உடல் பூர்வ கர்மாக்களின் விளைவுகளுக்கு உட்படுத்தப்படும். எனினும் அவர்களின் மனம் ஸ்ரீ தத்தரின் பாத கமலங்களை நோக்கியே இருக்கும். அவர்கள் தங்கள் ஞானப் பார்வையின் மூலம் படைப்புகளின் கோட்பாடுகள், தர்மத்தின் நுட்பங்கள் மற்றும் விவரிக்க முடியாத பேரானந்தத்தை அனுபவிக்க படைப்பினால் நடத்தப்படும் வினோதமான மற்றும் அற்புதமான செயல்முறைகளைக் கவனித்துக் கொண்டு இருப்பர். இந்த சுயநலமற்ற யோகீஸ்வரர்களின் தெய்வீக சக்திகள் அவர்களுக்கு சம்பந்தம் இல்லாமல் உலக நலனுக்காக உபயோகப்படுத்தப்படும். ஒரு சிலர் இந்த பௌதீக உலகத்தில் வாழ்ந்து கொண்டே ஸாமீப்ய முக்தி அடைவர். இவர்களுக்கு ஸாலோக்ய முக்தியில் இருக்கும் பக்தர்களை விட ஸ்ரீ தத்தரின் தெய்வீக லீலைகள் தங்கள் ஞானக்கண்கள் மூலம் பகுத்து ஆராய்ந்து நன்றாகத் தெரியும். அவர்கள் அடையும் சந்தோஷம் அதிகமாக இருக்கும். ஒரு உயிரினம் ஒரு உடலுக்குள் உறையிடப்பட்டு இருக்கும் போது அது பல குணங்கள், மனோபாவங்கள் மற்றும் ஆசைகளுக்கு அடிமைபட்ட நிலையில் இருக்கும். பரிணாம வளர்ச்சி முன்னேற்றம் அடையும் போது உயிரினங்கள் அவற்றை தெரிந்து கொண்டு எடை குறைந்து லேசாகும். இந்த எடையற்ற நிலையை அனுபவிப்பது பெரும் பேரானந்தம். சாயுஜ்ய நிலையில் இருக்கும் பக்தர்களின் வாயிலாக ஸ்ரீ தத்தரின் தெய்வீக லீலைகள் எளிதாக வெளிப்படும். அவர்கள் ஸ்ரீ தத்தரின் விருப்பத்துடன் இணைந்திருப்பர். ஸ்ரீ தத்தருடன் சாயுஜ்யத்தில் இருக்கும் சிறந்த யோகிகளுக்கு சுயமான விருப்பங்கள் எதுவும் இருக்காது. அந்த சிறந்த யோகிகளைச் சந்தித்து, தொட்டு பேசும் பாக்கியம் பெற்றவர்கள் ஸ்ரீ தத்தரின் பாதுகாப்பை அந்த யோகிகள் வாயிலாகப் பெறுவர். இந்த பௌதீக உலகம் அல்லது மற்ற உலகங்கங்கள் தொடர்பான ஏராளமான செல்வங்கள் அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரால் மட்டுமே வழங்க முடியும். மனிதர்கள் பல உருவங்களில் உள்ள கடவுள்களை வழிபடுகின்றனர். அந்த கடவுள்கள் அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக அம்சங்கள்தான். ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் அந்த கடவுள்களின் வாயிலாக அருள் புரிகிறார்" என்று கூறினார்.

## ஸ்ரீ தத்தரை வழிபடுவன் முக்கியத்துவம்

பின்னர் நான் அவரிடம் **"ஐயா, அப்படியிருந்தால் வெவ்வேறு உருவங்களில் இருக்கும் கடவுள்களை வழிபட வேண்டுமா? இல்லை ஸ்ரீ ஸ்ரீபாதரை மட்டும் வழிபட்டால் போதுமா? நீங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கும் மற்ற தெய்வங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று கூறுகிறீர்கள். இந்த விஷயத்தை சற்றுத் தெளிவாக**

**எனக்கு புரியும்படி கொஞ்சம் விளக்குங்கள்"** என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு ஸ்ரீ நாமானந்தா மிகவும் மகிழ்ந்து "ஒரு பெண் திருமணமாகி தன் கணவன் வீட்டுக்குச் சென்றாள். ஒருமுறை அவள் சகோதரன் அவளை காணச் சென்றான். அவன் சகோதரியின் மாமியார் அவனிடம் 'உன் சகோதரி இந்த வீட்டில் பல பொருட்களை திருடுகிறாள். அவள் திருட்டுத்தனமாக நிறைய பால், தயிர், மோர் மற்றும் நெய் ஆகியவற்றை சாப்பிடுகிறாள். ஒரு திருட்டு என்றால் நான் கவனிக்காமல் இருந்திருப்பேன். ஒ! எத்தனை திருட்டுக்கள்' என்று கூறினாள். அந்த மாமியார் புலம்பியபடி குற்றம் சாட்டினாள். பின்னர் அவள் சகோதரன் அவளை அழைத்து 'இன்று முதல் பல பொருட்கள் திருடுவதை நிறுத்து. நீ எடுக்கும் அனைத்து பொருட்களும் ஒருங்கிணைந்த கூறுகளாக நீர்த்துபோகாத பாலில் உள்ளது. ஆகவே நீர்த்துப் போகாத பாலை நீ எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள். பால், தயிர்,மோர் மற்றும் நெய்யின் சக்தி நீர்க்காத பாலில் உள்ளது. ஒரு பொருளை உண்பதால் உன் மாமியாரின் குற்றச்சாட்டை நீ தவிர்க்கலாம். இதே பாணியில்தான் ஸ்ரீ தத்தரை வழிபட்டால் அனைத்தும் வந்து சேரும். மக்கள் வெவ்வேறு விதமான நாட்டம் உள்ளவர்கள் என்பதால் அவர்கள் வெவ்வேறு கடவுள்களை வழிபடுகிறார்கள். சிவனை வழிபட்டால் விஷ்ணு தோன்ற மாட்டார். விஷ்ணுவை வழிபட்டால் சிவன் தோன்ற மாட்டார். இருவருடைய அருளும் ஒன்று போலத்தான் இருக்கும். பக்தர்களை காப்பதும் ஒரே மாதிரிதான் இருக்கும். பண்புகள் மற்றும் விடிவங்களுக்குத் தொடர்புடைய பக்தி செயற்பாடுகளின் விளைவுகள் அந்த செயற்பாடுகளுடன் ஒத்துப்போக வேண்டும் அல்லவா? பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து, குறிப்பிடத்தக்க அளவு புண்ணியங்கள் சேரும் போது ஸ்ரீ தத்தரின் மீது பக்தி உதிக்கும். ஆகவே, தத்த பக்தர்களுக்கு முடியாது என்பது கிடையாது. எந்த கடவுளுக்கும் படைப்பாளி எழுதிய தலையெழுத்தை மாற்றும் சக்தி கிடையாது. எனினும் பக்தன் படும் துன்பத்திற்கு பதிலளிக்கும் விதமாக பக்தனின் தலையெழுத்தை அழித்துவிட்டு புதிய விதியை பொறிக்க ஸ்ரீ தத்தர் ஆணையிடுவார். ஒரு உயிரினத்தின் உடல், மனம் மற்றும் ஆன்மீக நிலைகளுக்கு விஷ்ணுதான் காரணம். அவர்தான் ஸ்திதி கர்த்தா (பாதுகாப்பவர் மற்றும் பராமரிப்பவர்). பக்குவம் அடையாத ஒரு ஜீவனுக்குள் திடீரென சக்திவாய்ந்த யோக சக்தி வெளிப்பட்டால் அந்த ஜீவனுடைய உடல் அல்லது மனம் அல்லது அறிவு அந்த சக்தியைத் தாங்க முடியாமல் உயிருடன் இருக்கும் போதே எரியும் நெருப்பில் எரிவது போல் அனுபவம் பெறும். ஆகவே விஷ்ணு ஒரு ஜீவனின் வாழ்க்கை பயணம் சரியான வழியில் நடப்பதற்கும் மற்றும் அதன் கர்மாவிற்கு ஏற்றார் போல் பொருத்தமான நிலையில் தொடர்ந்து இருப்பதற்கும் உதவி புரிகிறார். ஸ்ரீ கிருஷ்ணருக்கும் ஸ்ரீ தத்தருக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஸ்ரீ கிருஷ்ணர் கோவர்த்தன மலையை தூக்கினார். இது அனைத்து பொது ஜனத்திற்கும் தெரிந்த ஒன்று. இருப்பினும் கோபர்கள் மற்றும் கோபிகைகள் தங்கள் பூர்வ ஜென்மங்களில் சிறந்த துறவிகள். மலைகள் யோக கிரந்திகள். யோக கிரந்திகள் வெடிக்கும் போது தீவிரமான யோக சக்திகள் ஊக்கத்தோடு செயல்பட தொடங்கும். பின்னர் ஜீவாத்மா அதிகபட்சமான எடை குறைவும் எளிமையும் அனுபவிக்கும்.



இந்த சூக்ஷ்மமான நிலையில் சிறந்த யோக சந்தோஷத்தைத் பெறலாம். ஒருவர் இந்த சூக்ஷ்ம நிலையைப் பெற பல பிறவிகள் எடுக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணர் தன்னை நாடியவர்களின் பாரத்தை சுமந்து அவர்களின் கிரந்திகளை அழித்து ஜீவன்முக்தர்களாக விடுதலை அளித்தார். இது ஆன்மீக ரகசியம். இது உடல்சார்ந்த பார்வையில் நோக்குபவர்களுக்கு அவர் கோவர்த்தனகிரியை தூக்கி மக்களைக் காப்பாற்றினார் என்றுதான் புரியும். ஆகவே ஸ்ரீ தத்தர் தன் பக்தர்களின் வெவ்வேறு நிலைகளை மாற்ற விரும்பி சாதாரண வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் அவர்களின் பரிணாம வளர்ச்சியை துரிதப்படுத்த விஷ்ணுவிற்கு உத்தரவு இடுகிறார். இந்த செயன்முறையின் போது ஒரு பக்தனுக்கு மீதியிருக்கும் அனைத்து துன்பங்களையும் அவன் அறியாத நிலையில் அனுபவிக்கச் செய்கிறார். அல்லது அதற்கு மாற்று வழியாக ஸ்ரீ தத்தரே அந்த சுமைகள் மற்றும் பொறுப்புகளை சுமக்கிறார். எவ்வளவு கருணை மிக்கவர்! 1,25,000 யோகிகளை அவருடன் சாயுஜ்ய நிலை அனுபவிக்கத் தயார் செய்வதுதான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் முக்கியமான நோக்கம். ஸ்ரீ தத்தர் கர்ம பந்தங்களின் அதிர்வலைகளைக் கலைக்க வேண்டும் என விரும்பினால் அவரிடம் ருத்ரனின் அம்சம் அசாதாரணமாக மலரும். அது கணக்கில்லா பல கோடி பூர்வ ஜென்மங்கள் அல்லது வரும் காலங்கள் தொடர்புடைய கர்மாக்களாக இருந்தாலும் அனைத்து பந்தங்களையும் உடைத்து அந்த ஜீவனுக்கு விமோசனம் அளிப்பார். ப்ரம்மா, விஷ்ணு அல்லது ருத்ரனின் அம்சம் வெளிப்பட்டு அவர் பக்தர்களைச் சரியான நேரத்தில் காப்பாற்றுகிறார். இவை அனைத்தும் அவரின் தீர்மானத்தை பொருத்தது. நாம் பக்தி மார்கத்தை கடைபிடித்து அவரிடம் அந்த விருப்பத்தை உருவாக்க வேண்டும்.

பீதிகாபுரத்தில் ஒரு முறை ஒரு பக்தன் குதிரை மேல் ஏறிய போது அவரைக் கீழே தள்ளி, நசுக்கி காயப்படுத்தியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய நம்பிக்கைக் கரத்தை அவனை நோக்கிக் காட்டியவுடன் அவனுடைய காயங்கள் அனைத்தும் ஒரு நொடியில் மறைந்து போனது. ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாத ஒருவருக்கு ஒரு பாத்திரம் முழுவதும் நூறு வராகன் கிடைத்தது. ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி இந்த முரண்பாட்டை விளக்குமாறு ஸ்ரீ ஸ்ரீபாதரை கேட்டுக்கொண்டார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் "இன்று என்னுடைய பக்தர் இறக்க வேண்டிய நாள். ஆனால் நான் அவனுடைய ஆயுளை இன்னொரு இருபது வருடங்களுக்கு நீட்டித்துள்ளேன். அவனுடைய ஒருமுக பக்திக்கு பரிசாக நான் இந்த முடிவை எடுத்தேன். இன்று நூறு நாணயங்கள் பரிசு பெற்றவர் அபரிமிதமான பரிசு பெற வேண்டிய நாள். அவருக்கு பக்தி துளி கூட இல்லாத காரணத்தாலும் பக்தர்களைக் கேலி செய்த காரணத்தினாலும் நான் அவருடைய அதிர்ஷ்டத்தை வெறும் நூறு வராகனுக்குக் கட்டுப்படுத்தி விட்டேன். நான் என்னுடைய பக்தர்களுடைய சேவகர்களுக்கு சேவகன். அவர்கள்தான் என்னை அவர்களுடைய இதயத்தில் சிறைபிடிக்கும் உண்மையான சக்கரவர்த்திகள். மூவுலகங்களை ஆளும் பரமேஸ்வரர் கூட அப்படிப்பட்ட ஒருவருக்கு சேவகனாகத்தான் இருப்பார்" என்று நல்ல விஷயங்களையும் செய்திகளையும் தெளிவுபடுத்தினார்.

ஸ்ரீ நாமானந்தர் அப்படி கூறியவுடன் எங்களுக்கு மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. பிராமண சகோதரர்கள் ஸ்ரீ நாமானந்தாவிடம் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் கூறுமாறு கேட்டனர். அதற்கு ஸ்ரீ நாமானந்தர் **"நீங்கள் ஒரு வேளை உணவருந்தி மண்டல தீக்ஷை (40 நாட்கள் விரதம்) இருக்க வேண்டும். கடுமையான உடல் உழைப்பு செய்து பணம் ஈட்ட வேண்டும். அந்தப் பணத்தை செலவழித்து ஒழுக்கமான பிராமணர்களுக்கு உணவளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் உங்கள் பாவங்கள் தீரும். உங்கள் பாவங்கள் தீர்ந்ததற்கு அடையாளமாக ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் கனவிலோ அல்லது நேரிலோ கிடைக்கும். மண்டல தீக்ஷைக்கு பின்னரும் நீங்கள் ஒழுக்கத்தோடு இருக்கவேண்டும். அப்படி நீங்கள் உங்கள் பழைய பழக்கங்களுக்கு அடிமையானால் ஸ்ரீ ஸ்ரீபாதரிடமிருந்து கண்டிப்பாக மிகக்கடுமையான தண்டனைகளை பெறுவீர்கள்"** என்றார்.

## அனகா சமேத தத்தாத்ரேயரை வணங்குவது மிகவும் புனிதமானது

சுசீலா என்ற பெயருடைய அந்த பிராமணப் பெண் தன் கஷ்டங்கள் தீர வழி கூறுமாறு ஸ்ரீ நாமானந்தரிடம் கேட்டாள். ஸ்ரீ நாமானந்தர் மிகவும் மகிழ்ந்து அவளிடம் "ஒரு ஆன்மா அழிவற்றது. மனம் ஒரு நொடியில் எண்ணற்ற முறை இறந்து மீண்டும் பிறக்கிறது. ஒரு தம்பதி உடலுறவு மேற்கொள்ளும்போது அவர்கள் இருவருமோ அல்லது யாராவது ஒருவரின் மனச்சைதன்யம் உயிர் உள்ள நிலைக்கும் உயிரற்ற நிலைக்கும் மத்தியில் சிக்கிக் கொள்ளும் போது பிறக்கும் குழந்தை அலியாகப் பிறக்கும். சந்தோஷமான திருமண பந்தத்தைக் கெடுக்கும் ஒருவன் அந்த பாவத்தினால் ஆண்மையற்றவனாக பிறப்பான். அலியின் வாழ்க்கை நரக வேதனை போன்றது. ஆண்மையற்றவனாக பிறப்பதும் ஆண்மை அற்றவனுக்கு மனைவி ஆவதற்குமான காரணங்கள் ஆவன: சந்தோஷமான தம்பதிகளை பிரித்தல், மருமகளை பலவகைகளில் அவமதிக்கும் விதமாக சண்டையிடுதல், பெண்களையும் குழந்தைகளையும் இரக்கம் இல்லாமல் கொல்லுதல், உதவியற்ற ஆதரவு இல்லாத மக்களை கொடுமைப் படுத்துதல். ஒரு ஆண் ஒரு பெண்ணிடமிருந்து பத்து குழந்தைகள் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. அந்த பெண்ணிடமிருந்து பத்து குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வது தர்மத்திற்கு புறம்பானது. பத்து குழந்தைகள் பிறந்த பின் ஒரு பெண்ணை தாய் போல பாவிக்க வேண்டும். உன் கணவர் ஆண்மைத் தன்மை பெற்று சந்தோஷமான இல்லற சுகங்களை பெற நீ அனகா விரதம் (பாவங்கள் அழிந்து தடைகள் விலகி நல்ல எண்ணங்கள் நிறைவேற) மேற்கொண்டு ஸ்ரீ தத்தாத்ரேயர் சமேத அனகா தேவியை மகிழ்விக்க வேண்டும். ஸ்ரீ தத்தர் உன்னை கண்டிப்பாக ஆசீர்வதிப்பார். ஸ்ரீ ஸ்ரீபாதரை வணங்கும் ஒருவருக்கு இந்த பூவுலகம் மற்றும் மற்ற வானுலகங்களிலும் சந்தோஷம் அபரிமிதமாகப் பொழியும். ஸ்ரீ பாப்பண்ணார்யா தன் பேரனை உண்மையான ஸ்ரீ தத்தாத்ரேயராக கண்டு சித்த மங்கள ஸ்தோத்திரத்தை கூறினார். ஸ்ரீ தத்தரின் மிக உயர்ந்த நிலையை கண்ட காட்சியின் அனுபவமாக வந்த வார்த்தைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. ஒவ்வொரு வார்த்தையைக் கூறும் போதும் அதன் உயிரோட்டமுள்ள உள்ளுணர்வுகள் பல கோடி வருடங்களுக்கு நீடிக்கும். அந்த உணர்ச்சி வெளிப்பாட்டில் எந்தவித இலக்கணத் தவறுகளும் தேட அவசியமில்லை. சித்த

மங்கள ஸ்தோத்திரம் பாராயணம் செய்ய எந்த வித கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தேவையில்லை. ஸ்ரீ பாப்பண்ணார்யா, தன் வாயில் இருந்து அந்தப் புனிதமான ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதை காணும் பாக்கியம் பெற்றேன். அந்த ஸ்தோத்திரம் இன்னும் என் மனதில் அதிர்வலைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அதை இப்போது கேளுங்கள்!

## சித்த மங்கள ஸ்தோத்திரம்

1. ஸ்ரீமதனந்த ஸ்ரீ விபூஷித அப்பல லக்ஷ்மி நரசிம்மராஜா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

2. ஸ்ரீ வித்யாதரி ராதா சுரேகா ஸ்ரீராகிதரா ஸ்ரீ ஸ்ரீபாதா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

3. மாதா சுமதி வாத்ஸல்யாம்ருத பரிபோஷித ஜய ஸ்ரீ ஸ்ரீபாதா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

4. ஸத்ய ருஷீச்வர துஹிதானந்தன பாபண்ணார்யனுத ஸ்ரீ சரணா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

5. ஸவித்ருகாடகச் சயன புண்யபல பரத்வாஜ ருஷிகோத்ர சம்பவா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

6. தோ சௌளபதி தேவ் லக்ஷ்மி கண சமிக்யா போதித ஸ்ரீ சரணா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

7. புண்ய ரூபிணீ ராஜமாம்ப சுத கர்ப புண்யபல ஸம்ஜாதா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

8. சுமதிநந்தன, நரஹரினந்தன தத்த தேவப் பிரபு ஸ்ரீபாதா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

9. பீதிகாபுர நித்ய விஹாரா, மதுமதி தத்தா, மங்கள ரூபா!
   ஜய விஜயீபவ, திக்விஜயீபவ, ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ!

## மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தோத்திரத்தின் பொருள்

1) வளமாக அலங்கரிக்கப்பட்டுள்ள அப்பல லக்ஷ்மி நரசிம்ம ராஜாவுக்கு வெற்றி, வெற்றி, பிரபஞ்சத்திற்கு வெற்றி, நித்திய மங்களத்திற்கு உயர்ந்த வெற்றி உண்டாகட்டும்;

2) ஸ்ரீ வித்யாதரி, ராதா மற்றும் சுரேகா விடமிருந்து ஸ்ரீ ராக்கி அணியும் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு வெற்றி, சிறந்த வெற்றி, பிரபஞ்சத்திற்கு வெற்றி, அற்புதமான அழியாத வெற்றி உண்டாகட்டும்;

3) அன்னை சுமதியின் அன்பினால் அமுதம் ஊட்டப்பட்ட ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு வெற்றி, மாபெரும் வெற்றி, எல்லா திசைகளிலும் ஒட்டுமொத்த வெற்றி உண்டாகட்டும்;

4) சத்யருஷீஸ்வர் என்று போற்றப்பட்ட சிறந்த ரிஷி ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் மகளுக்கு பிறந்த ஸ்ரீசரணருக்கு வெற்றி, அற்புதமான வெற்றி, எல்லா திசைகளிலும் தடையற்ற வெற்றி உண்டாகட்டும்;

5) பாரத்வாஜ முனிவரின் கோத்திரத்தில் வந்தவரே, வெற்றி, பிரபஞ்சத்தை வென்றவருக்கு போற்றத்தக்க வெற்றி, ஸவித்ரு காடக சயன யாகத்தின் புண்ணிய பலனுக்கு தடையில்லா வெற்றி உண்டாகட்டும்;

6) தோ சௌ பதி தேவ் லக்ஷ்மி என்கிற சிறந்த எண்ணை விளக்கிய ஸ்ரீசரணருக்கு வெற்றி, வெற்றி, பிரபஞ்ச வெற்றி, உயர்ந்த மிகுதியான வெற்றி உண்டாகட்டும்;

7) பக்தியுள்ள ராஜமாம்பாவின் புண்ணிய பலனாகப் பிறந்த மகளின் மகனுக்கு, வெற்றி, சிறந்த வெற்றி, பிரபஞ்ச வெற்றி, அற்புதமான அழியாத வெற்றி உண்டாகட்டும்;

8) சுமதி மற்றும் நரஹரிக்கு மகனாகவும் ஸ்ரீ தத்த தேவரான ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு வெற்றி, மாபெரும் வெற்றி, எல்லா திசைகளிலும் வெற்றி, அற்புதமான தடையில்லா வெற்றி உண்டாகட்டும்;

9) பீதிகாபுரத்தில் மதுமதி தத்தராக, மங்கள ரூபனாக எப்போதும் சுற்றித் திரியும் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு, வெற்றி, அற்புதமான வெற்றி, அனைத்திலும் வெற்றி, தடையில்லா வெற்றி மழை பொழியட்டும்;

ஸ்ரீ நாமானந்தர் இந்த அமுதம் போன்ற வார்த்தைகளை சுசீலா என்கிற பிராமண பெண்ணிடம் விளக்கினார். "என் செல்வங்களே, இந்த புனிதம் வாய்ந்த சித்த மங்கள ஸ்தோத்திரம் பாராயணம் செய்தால் அனகா லக்ஷ்மி விரதம் மேற்கொள்வதற்கு சமமான பலனும், புனிதமான ஆயிரம் பிராமணர்களுக்கு உணவளித்த பலனையும் பெறலாம். ஒருவர் மண்டல தீக்ஷை மேற்கொண்டு, ஒரு வேளை உணவருந்தி, கடின உழைப்பினால் ஈட்டிய பணத்தை கொண்டு ஆயிரம் பிராமணர்களுக்கு உணவளித்த பலனை பெறலாம். இந்த ஸ்தோத்திரம் போற்றத்தக்கவர்களால் பாராயணம் செய்யப்படும். இதை பாராயணம் செய்தால் சித்த புருஷர்களை காண்பதும் அவர்களின் தொடுதல் உணர்வு கூட சாத்தியம். மனதில் உள்ள அனைத்து விருப்பங்களும் நிறைவேறும். தூய்மையான மனது,பேச்சு மற்றும் செயலுடன் தத்தரை வணங்கி இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்யும் பக்தனுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் உடனடியாக அருள் புரிகிறார். உன்னதமான இடத்தில் இருக்கும் சித்தர்கள் இந்த ஸ்தோத்திரம் பாராயணம் செய்யப்படும் இடத்தில் கண்ணுக்கு தெரியாத வண்ணம் உலாவுவார்கள்.



## ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளால் ஆண்மையின்மை நீங்குதல்

ஸ்ரீ நாமானந்தரின் அமுதம் போன்ற வார்த்தைகளைக் கேட்ட அடுத்த நொடி என் மனதிற்குள் ஒரு எண்ணம் தோன்றியது. நான் அவரிடம் "**சிறந்தவரே, நாங்கள் இன்று இரவு முழுவதும் இந்த தெய்வீக ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்து கொண்டும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகள் மற்றும் பொழுதுபோக்குகள் பற்றி கதை பேசிக்கொண்டும் இந்த ஆசிரமத்திலேயே கழிக்க விரும்புகிறோம். நீங்கள் அதற்கு அன்புகூர்ந்து சம்மதிக்க வேண்டும்**" என்று கேட்டுக் கொண்டேன். என்னுடன் இருந்த பிராமண சகோதரர்களும் சுசீலாவும் அதற்குச் சம்மதித்தனர். கருணை உள்ளம் கொண்ட ஸ்ரீ நாமானந்தா எங்கள் வேண்டுகோளுக்குச் சம்மதித்தார். இரவு முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமம் பாடப்பட்டும் அவரின் கதைகள் மற்றும் லீலைகள் கதாகாலட்சேபம் நடத்தப்பட்டும் சித்த மங்கள ஸ்தோத்திரம் பாராயணம் செய்யப்பட்டும் கழிந்தது. விடிந்தவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு தெய்வீக மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டது.

மங்கள ஆரத்தி முடிந்தவுடன் உணவுப் பொருட்களுடன் இரண்டு மாடுகள் பூட்டப்பட்ட ஒரு மாட்டு வண்டியில் ஒருவன் எங்கள் ஆசிரமத்திற்கு வந்தான். அந்த வண்டிக்காரன் சுசீலாவிடம் இன்னும் சற்று நேரத்தில் இன்னொரு மாட்டு வண்டியில் அவள் மாமனார்-மாமியார் மற்றும் கணவன் இங்கு வருவார்கள் என்று கூறினான். அவன் உணவு பொருட்களை அங்கு இறக்கி வைத்துவிட்டு சென்று விட்டான். அந்த வண்டிக்காரன் வந்து சென்றபோது ஸ்ரீ நாமானந்தர் தியானத்தில் இருந்தார். ஸ்ரீ நாமானந்தர் தியானத்தில் இருந்து சுயநினைவுக்கு வந்தவுடன் "**அந்த வண்டிக்காரன் எங்கே?**" என்று கேட்டார். அவன் முன்பே சென்று விட்டான் என்று நாங்கள் கூறியவுடன் "**எவ்வளவு அதிர்ஷ்டக்காரர்கள் நீங்கள்! நான்தான் துரதிர்ஷ்டசாலி**" என்றார். நாங்கள் அனைவரும் அவரின் புலம்பலைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். ஸ்ரீ நாமானந்தர் "**ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் கருணை மிக்கவர். அவர்தான் வண்டிக்காரனாக வந்து உங்களுக்கு தரிசனம் அளித்தார். அன்னை சுசீலா மிகவும் அதிர்ஷ்டசாலி. உங்கள் கணவரின் ஆண்மையற்ற தன்மை நீங்கிவிட்டது. அதுமட்டு மல்லாமல் உங்கள் கணவர் மற்றும் அவர் பெற்றோர்கள் உங்களைக் காண மாட்டு வண்டியில் மிக விரைவாக இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்**" என்று கூறினார்.

கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களை தெரிந்த ஸ்ரீ நாமானந்தர் கணித்தது போலவே அனைத்தும் நடந்தது. சுசீலா அவள் கணவர் மற்றும் மாமனார் மாமியாருடன் அவர்கள் வீட்டுக்கு சென்றாள். நான் இரு பிராமண சகோதரர்களுடன் குருகட்டாவிற்கு பயணிக்க ஸ்ரீ நாமானந்தரிடம் அனுமதி பெற்றேன். அவரின் ஆசியுடன் நாங்கள் குருகட்டாவை நோக்கி பயணித்தோம்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 18

## ரவிதாஸின் கதை-
## ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகப் புனித தரிசனம்

### ரவிதாஸின் கதை

நான் பிராமண சகோதரர்களுடன் குருவபுரத்தை (குருகட்டா) அடைந்தேன். எண்ணற்ற பலகோடி பிரபஞ்சங்களின் மிக உயர்ந்த தலைவரும், ஆதி புருஷரும், ஆதியும் அந்தமும் இல்லாத ஒருவரும், பதினான்கு உலகங்களின் சக்ரவர்த்தியும், லீலா அவதாரம் எடுத்து வந்தவருமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கிருஷ்ணா நதியில் நீராடி விட்டு கரையை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அவருடைய தெய்வீகப் புனித உருவத்தை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அவர் புனிதமான உருவத்தில் இருந்து பளபளப்பான தெய்வீக ஒளிக் கதிர்கள் மின்னியது. அவருடைய இரு கண்களில் இருந்தும் எல்லையில்லா அன்பும் கருணையும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. அவர் என் அருகில் வந்து என்னை தன் பாதத்தில் நமஸ்கரிக்குமாறு கூறினார். நான் அவர் பாதத்தில் நமஸ்கரிக்கும் போது அவர் கமண்டலத்தில் இருந்து புனித நீரை எடுத்து என் தலையில் தெளித்தார். நான் பேச முற்படுவதற்கு முன்னரே அவர் தன் இனிமையான குரலில் "என் அருமை சங்கர் பட்! உன் மேல் நான் கொண்ட அதீத அன்பின் காரணமாகத்தான் நான் உன்னை இங்கு ஈர்த்தேன்" என்றார். அவருடைய இனிமையான வார்த்தைகள் மற்றும் எல்லையில்லா அமுதம் போன்ற கருணையான பார்வைகளையும் வர்ணிக்கப் போதுமான வார்த்தைகள் இல்லை. எல்லையில்லா சக்தி மற்றும் அனைத்து உலகங்களிலும் பாதுகாப்பு அளிக்கக் கூடிய திறன் கொண்ட அவருடைய தெய்வீகக் கரத்தை என் தலை மீது வைத்தார். என்னுள் குண்டலினி சக்தி வேகமாக எழும்பி அது என்னை உதவியற்ற நிலைக்கு எடுத்துச் சென்றது. என் கண் முன் இருந்த முழு பிரபஞ்சமும் மறைந்துவிட்டது போல் தோன்றியது. ஒவ்வொரு நரம்பிலும் மின்சாரத் தீ போன்ற எல்லையற்ற சக்தி சுட்டெரித்து ஆயிரக்கணக்கான பெருங்கடல்கள் என்னை மூழ்கடிப்பது போல தூண்டப்பட்டு மயக்கம் ஏற்பட்டது. என் கண்கள் மூடிக்கொண்டன. என் இதயம் மற்றும் நாடித் துடிப்பு நின்றது. என் மனது அனைத்து சந்தேகங்களில் இருந்தும் விடுபட்டு அசைவற்று வெறுமையில் நின்றது. என் மனதின் சைதன்யம் எல்லையில்லா பிரபஞ்சத்தின் சைதன்யத்துடன் ஐக்கியமானது. அவ்வப்போது நான் பேரானந்த நிலையில் சூக்ஷ்ம ரூபத்தில் இருப்பது எனக்கு சுயநினைவுக்கு வந்தது. மற்ற நேரங்களில் 'நான்' என்ற எண்ணம் குறைந்து

விவரிக்க முடியாத தெய்வீகப் பேரானந்த நிலையில் இருந்தேன். அந்த நிலையில் என்னிடமிருந்து கோடானுகோடி பிரபஞ்சங்கள் உருவாக்கப்பட்டு, காக்கப்பட்டு அழிக்கப்படுகிறது என்ற ஞானமும் **'நான்'** என்பதும் பிரபஞ்ச சைதன்யமும் வேறல்ல என்பதையும் உணர்ந்து கொண்டேன். **'நான்'** என்பது அமைதியாக இருக்கும் போது நான் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தேன். இவை அனைத்தும் எனக்கு வினோதமாக இருந்தது.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் அதீத அன்புடன் அவர் கமண்டலத்தில் இருந்த நீரை என் மீது தெளித்தார். நான் சுயநினைவுக்கு வந்தேன். இந்த பிரபஞ்சத்தின் ஆதி குருவான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஆயிரம் தாய்களின் அன்பை மறக்கடிக்கச் செய்யும் அவருடைய அமுதம் போன்ற கருணையான பார்வையால் என்னை பார்த்தார். மிகவும் அழகாக என்னைப் பார்த்து சிரித்தார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரை சந்திக்க வருகை புரியும் வெளிநாட்டவர்கள்

என்னுடன் வந்த இரு பிராமணர்களுக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் பேசுவதற்கோ அவர் புனிதமான பாதங்களை தொடுவதற்கோ தைரியம் இல்லை. ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னைப் பார்த்து அந்த இரு பிராமணர்களை பற்றி விசாரித்தார். நான் அவரிடம் **"ஸ்வாமி, இவர்கள் இருவரும் தெய்வீக ஸ்ரீசரணரை தரிசிக்க வந்துள்ளனர், அவர்களும் பிராமணர்கள்தான்"** என்றேன். அதற்கு அமைதியான அழகன் **"என் செல்வமே, இவர்கள் இருவரும் பிராமணர்கள் போலத் தோன்றவில்லை. பசுவின் மாமிசத்தை உண்ணும் வெளிநாட்டவர்கள் போல தோற்றம் அளிக்கிறார்கள். அவர்களை கேட்டால் உண்மை உறுதி செய்யப்படும்"** என்றார். பின்னர் அந்த இரு சகோதரர்களும் தாங்கள் பிராமணர்கள் இல்லை என்பதையும் தாங்கள் மிலேச்சர்கள் (வேதத்தை பின்பற்றாத வர்கள்) என்பதையும் ஒத்துக்கொண்டனர். இஸ்லாமியர்கள் படிக்கும் கலிமாக்களை (இஸ்லாமியர்களின் ஆறு அடிப்படை வரிகள்) பாராயணம் செய்திருப்பதாகக் கூறினர். ஒவ்வொரு நொடியும் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் லீலைகளால் மகிழ்ச்சியடைகிறார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பின்னர் அந்த சிறந்த ஆசான் "பல ஜென்மங்களில் செய்த புண்ணியங்கள் ஒருசேர பலன் அளிக்கும் அதிர்ஷ்டத்தினால் மட்டுமே ஒருவர் ஸ்ரீ தத்தர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற வேடத்தில் உலாவிக் கொண்டிருக்கிறார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும். அப்படிப்பட்ட உறுதியான எண்ணம் மற்றும் அவர் மீது முழுமையான பக்தி இருப்பது மிகவும் அதிர்ஷ்டமான ஒன்று. அனைத்து தெய்வங்களும் பசுவில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட பசு இல்லாத ஒரு வீடு சுடுகாட்டிற்கு சமம். பசுவுக்கு சேவை செய்பவர்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள். பசுவின் பால் வலிமையையும் திருப்தியையும் அளிக்கும். பசுவின் மாமிசத்தை உண்ணும் பிராமணர்கள் கண்டிப்பாக தண்டிக்க படுவர்.

யாகங்கள் மற்றும் யக்ஞ சடங்குகளின் போது ஆட்டை பலி கொடுக்கும் சம்பிரதாயம் இருக்கிறது. இந்த பலியினால் பலி கொடுக்கப்படும் ஆடு மட்டுமல்லாது அதனுடன் ரத்த சம்பந்தம் உள்ள அனைத்து ஆடுகளும் தாழ்ந்த பிறவியில் இருந்து உன்னதப் பிறவி எடுக்கும். மிக விரைவில் அவை பிராமண பிறவி எடுக்கும். பலி

ஆட்டுக்கு இது போன்ற உன்னதப் பிறவி அளிக்கப் போதுமான அளவு யக்ஞ பலி கொடுப்பவர்கள் யோக பலமும் தபோபலமும் (ஆன்மீக நடைமுறைகளினால் பெறப்படும் ஆன்மீக சக்தி) பெற்றவராக இருக்க வேண்டும். யக்ஞம் நடத்தப்பட்டு ஆட்டை பலி கொடுக்கும் அளவுக்கு யோகபலமும் தபோபலமும் இல்லை என்றால் ஆட்டைக் கொன்ற பாவம் வந்து சேரும். தர்மத்தின் செயல்முறைகள் இடத்தையும் நேரத்தையும் பொறுத்து மாறுபடும். இதே ஒரு சிறந்த சந்நியாசி, அவர் மிலேச்சராக இருப்பினும் பசுவின் மாமிசத்தை உண்டால் அது பரமேஸ்வரனுக்கு படைத்தது போல் ஆகி அந்த பசுவிற்கும் அதன் ரத்த சம்பந்தம் உள்ள அனைத்து பசுக்களும் உன்னத பிறவி எடுக்கும். இல்லையென்றால் அதீத பாவம் வந்து சேரும். அதனால்தான் பொதுவான கட்டுப்பாடாக பசுவைக் கொல்வது கொடும்பாவம் என்று கருதப்படுகிறது. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடந்த குருக்ஷேத்திர போர் தொடங்குவதற்கு முன்னர் போருக்கு பொருத்தமான தர்ம க்ஷேத்திரத்தை ஸ்ரீ கிருஷ்ணர் தேடிக்கொண்டிருந்தார். அப்போது அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடன் இருந்தார். ஒரு இடத்தில் ஒரு விவசாயி தன் வயலுக்கு நீர் பாய்ச்சி கொண்டிருந்தார். நீரின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த ஒரு பாறையை தேடிக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவருடைய மகன் வீட்டில் இருந்து அவருக்கு உணவு கொண்டு வந்திருந்தான். அவர் உணவை சாப்பிட்டு முடித்துவிட்டு தன் மகனின் தலையை கத்தியால் வெட்டி நீரின் போக்கை கட்டுப்படுத்தினார். கத்தியால் வெட்டிய தந்தையும், வெட்டுப்பட்ட மகனும் வெட்டப்படும் நேரத்தில் எந்தவிதமான மன உணர்ச்சிக்கும் உட்படுத்தப்படாமல் கலங்காமல் இருந்தனர். சமுதாயத்தின் நலனுக்கு உணவு மிகவும் அவசியம். ஒரு விவசாயிக்கு பயிர் விளைவிப்பதில் மட்டும்தான் அக்கறை இருக்க வேண்டும். அந்த விவசாயி இந்த தர்மத்தை நிலைநாட்ட எந்தவித பரிசையும் எதிர்பார்க்கவில்லை. கிருஷ்ணர் அந்த இடத்தை வரப்போகும் போருக்குப் பொருத்தமான தர்ம க்ஷேத்திரம் என்று முடிவு செய்தார்.

நீங்கள் பெயரளவில்தான் பிராமணர்கள்! பசுவின் மாமிசத்தை உண்பதை நீங்கள் நியாயப்படுத்த முடியாது. எனினும் உங்களுடைய பூர்வஜென்ம புண்ணியங்களினாலும், உங்கள் மூதாதையர்களின் பிரார்த்தனைகளின் வலிமையினாலும், மேலும் என்னுடைய சுதந்திரமான கருணையினாலும் உங்களுக்கு என்னுடைய தரிசனம் பெரும் அதிர்ஷ்டம் கிடைத்தது. இது ஒரு மிகப்பெரும் அதிர்ஷ்டமாகவும் மதிப்புமிக்க வாய்ப்பாகவும் கருதுங்கள். நான் உங்களுடைய வணக்கத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன். என்னுடைய பாதத்தை தொடாதீர்கள். என்னுடைய கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து உங்கள் தலை மீது தெளிக்க முடியாது. இந்த இடத்தை விட்டு உங்களுக்கு பிடித்த இடத்திற்கு உடனடியாக செல்லுங்கள். உங்களுக்கு உணவுக்கும் உடைக்கும் எந்த பஞ்சமும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன். இஸ்லாமிய பெண்ணை மணந்து மிலேச்ச மதத்தை பின்பற்றுங்கள். நீங்கள் கொன்ற பசுக்கள் உங்களுக்கு இந்த பிறவி மற்றும் வரும் பிறவிகளில் குழந்தைகளாக பிறக்கட்டும். அவர்கள் உங்களை பலவாறு தொல்லைகள் செய்யட்டும். நீங்கள் கடின உழைப்பினால் சம்பாதித்த பணத்தைக் கொண்டு

சந்தோஷமாக வாழட்டும். நீங்கள் இருவரும் என்னை தரிசிக்கும் பாக்கியம் பெற்றதால் நீங்கள் இருவரும் படே பாபா மற்றும் அப்துல் பாபா என்ற பெயருடன் என் முழு சத்குரு அவதாரமான சாய்பாபாவினால் உயர்த்தப் படுவீர்கள். மகாராஷ்டிரத்தில் ஷிலாதி என்கிற கிராமம் இருக்கிறது. காலப்போக்கில் அது ஒரு சித்த க்ஷேத்திரமாக மாறும். அங்கு சாய்பாபாவின் ஆசியை பெறுவீர்கள். என்னுடைய ஆணையை மீற முடியாது. கல்லில் பொறிக்கப்பட்டது போல் மாற்ற முடியாது. இந்த இடத்தை விட்டு உடனடியாக செல்லுங்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களை ஆணையிட்டார்.

நானும் ஸ்ரீ ஸ்ரீபாதர் மட்டும் இருந்தோம். பின்னர் ரவிதாஸ் என்ற சலவைத் தொழிலாளி அங்கு வந்தார். அவர் தொடர்ந்து ஸ்ரீ ஸ்ரீபாதரை வணங்கி கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரை சிறிது நேரம் கண்டுகொள்ளவில்லை. அதற்குப் பின்னர் அவரை பார்த்து சிரித்தார். இதற்கு என்ன காரணமாக இருக்கும் என்று நான் யோசித்து கொண்டிருந்தேன். அழகான சிரிப்புடன் அவர் என்னை கருணையோடு பார்த்து என் புருவ மத்தியை அழுத்தமாக தொட்டார். அற்புதம்! அற்புதமான காட்சிகள் என் மனக்கண் முன் தோன்றின:

## பக்தர்கள் மேல் ஸ்ரீ ஸ்ரீபாதர் பொழியும் கருணை

ரவிதாஸ் குருகட்டாவை நோக்கி படகை செலுத்திக் கொண்டு வந்தான். மிகவும் அறிவாளியான வேத பண்டிதர் அந்த படகில் பயணித்தார். வேத பண்டிதர் தான் பிராமணர் என்பதால் அப்படகில் தான் மட்டும்தான் பயணிக்க வேண்டும் என்றும் மற்றவர்கள் ஏறிக்கொண்டால் தீண்டத்தகாதவர்களின் ஸ்பரிசம் அவர் மீது பட நேரிட்டு பாவம் உண்டாகும் என்று கூறினார். ரவிதாஸ் அதிகமான கட்டணம் கேட்டான். பண்டிதர் தான் பெரிய அறிவாளி என்றும் தான் ஸ்ரீ ஸ்ரீபாதரை சந்திக்க போவதாகவும் கூறினார். மேலும் ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகச் சிறந்த ஞானி என்பதால் தன்னுடைய பாண்டித்யத்தை அடையாளம் கண்டு கொண்டு தனக்கு தாராளமாக தானம் அளிப்பார் என்று கூறினார். படகின் கட்டணத்தை அந்த பணத்திலிருந்து தருவதாக சத்தியம் செய்தார். ரவிதாஸ் சம்மதித்தான். படகுப் பயணம் தொடங்கியது. பயணத்தின் போது நடந்த உரையாடலில் ரவிதாஸுக்கு புராணங்களைப் பற்றியும் பண்டைய புராணக் கதைகள் பற்றியும் ஞானம் இல்லை என்பதை கவனித்தார். அவர் **"பார் என்னுடைய வாழ்க்கை முழுமை அடைந்து விட்டது. உனக்கு புராணங்கள் பற்றியும் கதைகள் பற்றியும் எந்த ஞானமும் இல்லை என்பதால் உன்னுடைய முக்கால்வாசி வாழ்க்கை வீணாகிவிட்டது"** என்று குறிப்பிட்டார். ரவிதாஸ் மௌனமாக இருந்தான். ஆற்றின் நீரோட்டம் வேகமாக இருந்ததால் நீர் நிரம்பி வழிந்தது. கூடுதலாக படகில் ஓட்டை விழுந்ததால் தண்ணீர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது. ரவிதாஸ் அவரிடம் **"ஐயா, உங்களுக்கு நீச்சல் தெரியுமா?"** என்று கேட்டான். பண்டிதர் தெரியாது என்றார். பின்னர் ரவிதாஸ், **"எனக்கு நீச்சல் தெரியும் ஆனால் உங்களுக்குத் தெரியாது. ஆகவே உங்கள் வாழ்க்கை நூறு சதவிகிதம் வீண்தான்"** என்றான். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை கூறிக்கொண்டே அவன் தண்ணீருக்குள்

குதிக்க முற்பட்டான். கண்ணைக் கூசும் ஒளிமயமான வெளிச்சம் ஒன்று ஆற்றுக்கு நடுவில் தோன்றியது. இது அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகத்துவம் என்று ரவிதாஸ் எண்ணினான். தண்ணீர் படகுக்குள் நுழைந்து கொண்டு இருந்தது; எனினும் கண்ணுக்கு தெரியாத கை ஒன்று அந்தத் தண்ணீரை எடுத்து வெளியே போட்டு கொண்டு இருந்தது. இருவரும் பத்திரமாக கரை வந்து சேர்ந்து ஸ்ரீ ஸ்ரீபாதர் தரிசனத்துக்கு சென்றனர். ரவிதாஸ் ஸ்ரீ ஸ்ரீபாதரை வணங்கினால் அதுவரை அலட்சியமாக நிராகிப்பவர் அன்று அமைதியான முகத்துடன் சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொண்டார். எனினும் ரவிதாஸுடன் வந்திருந்த பண்டிதரை அலட்சியத்தோடு பார்த்தார். வேத விவாதங்களில் ஈடுபட விரும்பிய பண்டிதர் ஊமை போல் நின்றிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம் "பண்டிதரே, மிதமிஞ்சிய ஆணவத்தால் சரி எது தவறு எது என்பதை பகிர்ந்துணரும் தன்மையை இழந்து விட்டீர்கள். நீங்கள் உன்னதமான குடும்பத்தில் இருந்து வந்த பண்டிதர் என்றாலும் நற் புண்ணியங்களை சேர்த்துக் கொள்வதற்கு பதிலாக பாவங்களைச் சேர்த்து கொண்டுள்ளீர்கள். கடமை தவறாத உங்கள் மனைவியை மிகுந்த வேதனை படுத்தி உள்ளீர்கள். சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சலவைத் தொழிலாளியின் மனைவியை அவனிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்துள்ளீர்கள். அவளை உங்கள் காமக்கிழத்தியாக வைத்துக் கொண்டீர்கள். தவிர்க்கமுடியாத காரணங்களால் உங்கள் காமக்கிழத்தியான அந்த சலவைத்தொழிலாளியின் மனைவி உங்களை மனதில் சபித்துக் கொண்டே தன் உடலை உங்களுக்கு தருகிறாள். நல்ல பிராமணப் பெண்ணான உங்கள் மனைவி தன் திருமண வாழ்க்கை பாழாகிவிட்டது என்று மனவேதனை அடைந்து கொண்டு இருக்கிறாள். இவை அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த நான் உங்களை இங்கு வரவழைத்தேன். உங்கள் ஜாதகப்படி இன்று நீங்கள் இறந்திருக்க வேண்டும். நான் உங்களுக்கு இன்னும் மூன்று வருடங்கள் வாழ்க்கையை நீட்டிக்கிறேன். வீட்டுக்குச் சென்று உங்களுடைய தீய நடத்தைகளை சரி செய்யுங்கள். இல்லையென்றால் உங்கள் விதிப்படி நடக்கட்டும் என்று நான் விட்டுவிடுகிறேன். நீங்கள் பண்டிதர் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. நான் உங்களுடைய பாண்டித்யத்திற்கு பரிசு அளிக்க வேண்டுமா? அல்லது உங்கள் ஆயுளை மூன்று வருடங்கள் நீட்டிக்க வேண்டுமா? உடனடியாக பதில் கூறுங்கள்" என்றார்.

அனைத்தும் அறிந்த ஸ்ரீ ஸ்ரீபாதரின் வார்த்தைகளைக் கேட்ட பண்டிதர் பேச்சற்று ஊமை போல நின்றிருந்தார். அவருக்கு தன் வாழ்நாளை நீட்டிக்கத்தான் விருப்பம் இருந்தது ஆனால் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வரவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதர் தானே "உங்கள் மனவிருப்பத்தின் படி உங்கள் ஆயுளை நீடிக்கிறேன். உங்கள் காமக்கிழத்தியாக இருக்கும் சலவைத் தொழிலாளியின் மனைவி உங்களுக்கு அடுத்த பிறவியில் மனைவியாக இருந்திருக்க வேண்டும் ஆனால் இந்த பிறவியிலேயே அவளை சொந்தமாக்கிக் கொண்டீர்கள். குறிப்பிட்ட பிறப்புக்கு தொடர்புடைய தர்மம் அந்த பிறப்புக்கு மட்டும்தான் வரையறுக்கப்பட்டுள்ளது. நீங்கள் அந்த நிபந்தனையை மீறி உள்ளீர்கள். வரும் பிறவிகளில் அந்த சலவைத் தொழிலாளி

தம்பதி ராஜ வசதிகளை அனுபவிப்பர். நீங்கள் உங்களுடைய பூர்வ ஜென்ம கர்மாவினால் ஆண்மையற்றவனாகப் பிறந்து அந்த சலவை பெண்ணுக்கு வேலைக்காரனாக வேலை செய்வீர்கள். நீங்கள் இந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது நல்வினைகள் புரிந்தீர்களானால் உணவு மற்றும் உடைகளுக்குத் தேவை ஏற்படாமல் அந்தச் சலவைத் தொழிலாளிப் பெண்ணுக்கு சேவை புரிவீர்கள். இந்த மூன்று வருடங்கள் தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் நீங்கள் சலவைத் தொழிலாளிக்கும் அவன் மனைவிக்கும் வேலைக்காரனாகப் பிறந்து அனைத்து விதமான தொல்லைகளுக்கும் ஆளாகி உங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறமாட்டீர்கள். உங்களை இங்கு மரணத் தருவாயில் அழைத்து வந்த ரவிதாஸ் உங்களுடைய அனைத்து நல்வினைகளின் பலன்களையும் பெறுகிறான். அவனின் நல்வினைகளினால் ஸ்ரீ தத்தரின் உண்மையான அவதாரமான எனக்குச் சேவை செய்ய முடியும். இந்த புனித க்ஷேத்திரத்தை விட்டு உடனடியாக செல்லுங்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த பண்டிதருக்கு ஆணையிட்டார்.

அந்தப் பண்டிதர் சென்றுவிட்டார். ரவிதாஸ் ஸ்ரீ ஸ்ரீபாதரின் துணிகளை துவைத்துக் கொண்டும் ஆசிரம வளாகத்தை சுத்தம் செய்து கொண்டும் மற்ற சேவைகளைச் செய்து கொண்டிருந்தான். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆற்றில் குளிக்க வரும்போதெல்லாம் ரவிதாஸ் அவர் பாதத்தில் நமஸ்கரிப்பான். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவனுடைய வணக்கத்தை கருணையான முகத்துடன் ஏற்றுக் கொள்வார். ரவிதாஸ் தன் தந்தை கூறிய வார்த்தைகளை நினைவில் கொண்டிருந்தான். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்கும் நிறைந்திருப்பவர், ஒவ்வொரு முறை ஸ்ரீ ஸ்ரீபாதரை நமஸ்கரிக்கும் போதும் நூறு பேரை நமஸ்கரிப்பதால் கிடைக்கும் சிறந்த அதிர்ஷ்டம் பெறலாம் என்று அவன் தந்தை கூறியிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நற்பலன்கள் கிடைக்கும் என்றும் கூறியிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் ரவிதாஸின் வணக்கத்தை ஏற்றுக்கொண்டதால் அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். ஒரு நாள், ரவிதாஸ் ஒரு அரசன் ஒரு அழகான பெண்ணுடன் தண்ணீரில் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து தானும் அரசனாக பிறந்தால் நன்றாக இருக்கும் என நினைத்தான். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆற்றங்கரைக்கு குளிப்பதற்காக வந்த போது இந்த விஷயம் அவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது விவாதத்திற்கு வந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் வைதுர்யநகரத்தை ஆளும் இஸ்லாமிய அரச குடும்பத்தில் பிறக்கும் வரத்தை அவனுக்கு அளித்தார். தான் நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்கும் போது அவனுக்கு தரிசனம் அளிப்பதாக உறுதி அளித்தார். ஒரு வினோதமான சிரிப்புடன் ரவிதாஸை நோக்கினார். ரவிதாஸ் அங்கேயே உடனடியாக இறந்தான். இந்த அற்புதமான காட்சிகளை என் மனக்கண்ணில் கண்டவுடன் நான் ஆச்சரியத்திற்கு உட்படுத்தப்பட்டேன்.

நான் என் சுயநினைவு பெற்றவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னைப் பார்த்து இனிமையாக சிரித்தார். ஒவ்வொரு நொடியும் லீலைகள் புரியும் குருதேவரின் மகிமைகளை எவ்வாறு புகழ்வேன்? இதற்கிடையில் சில பெண்கள் நோயுற்ற தன் கணவர்களுடன் அங்கு வந்தனர். சிலர் தங்கள் மகள்களுக்கு தகுதியான

மாப்பிள்ளைகளை தேடி வந்தனர். ஸ்ரீகுரு மஞ்சள் துண்டுகளை விநியோகித்தார். அனைவரும் மிகவும் சந்தோஷமாக அந்த இடத்தை விட்டு சென்றனர்.

## வல்லபேசனுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தானம் பெற பாத்திரம் அளித்தல்

இதற்கிடையில் அங்கு ஒரு பிராமண இளைஞன் வந்தான். அவன் உடல் முழுவதும் தூசியால் நிரம்பியிருந்தது. அவன் காஸ்யப கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தை சேர்ந்தவன். அவன் பெயர் வல்லபேச சர்மா. அவன் பீதிகாபுர அக்ரஹாரத்தில் இருந்து வந்திருந்தான். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவனுடைய உறவினர்கள் நலத்தைப் பற்றி விரிவாக விசாரித்தார். இது அனைத்தும் அறிந்தவருக்கு ஒரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. பலர் மதிய பிக்ஷைக்காக உணவு தயாரித்துக் கொண்டு வந்திருந்தனர். அச்சமயத்தில் அவர் தன் தெய்வீகக் கரங்களை மேல் நோக்கிக் காண்பித்து ஏதோ பெறப்போவது போல செய்தார். பாயசம் நிரம்பிய ஒரு வெள்ளிப் பாத்திரம் பெறப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அங்கு கூடியிருந்த அனைத்து பக்தர்களுக்கும் அந்த பாயசத்தை வழங்குமாறு என்னைக் கூறினார். பலருக்கு விநியோகிக்க பட்டாலும் அந்த பாயசம் காலி ஆகவில்லை. அவர் பக்தர்கள் தயாரித்துக் கொண்டு வந்த உணவுகளை கிருஷ்ணா நதிக்குள் போட ஆணையிட்டார். அந்த வேலை ரவிதாஸிடம் ஒப்படைக்கப்பட்டது. நீரில் வாழும் உயிரினங்களுக்குக் கூட ஸ்வாமியின் பிரசாதம் பகிர்ந்தளிக்கப்படும்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் வல்லபேசனை தனக்கு அருகில் அமரச் சொன்னார். நான் வல்லபேசனுக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். சுப்பண்ண சாஸ்திரி என்கிற கன்னட பிராமணர் எனக்கு அருகில் அமர்ந்து கொண்டார். ஒரு ஏழைப் பிராமணர் தன் மகளுக்கு நல்ல வரன் அமைத்துத்தருமாறு ஸ்வாமியிடம் வேண்டிக்கொண்டார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் “நான் இருக்க பயம் எதற்கு? பாவங்கள் இருக்கும் இடத்தில்தான் பயம் இருக்கும். இந்த வல்லபேசன் உங்கள் மருமகன் ஆவான். சுப்பண்ண சாஸ்திரி புரோகிதராக இருந்து இந்த திருமணத்தை நடத்தி வைப்பார். வல்லபேசனுடைய மூதாதையர்கள் மிகவும் கோபத்தில் உள்ளனர். மூதாதையர்களின் சாபம் வாழ்க்கைக்கு நல்லதல்ல. மூதாதையர்களுக்கு பக்தியுடன் செய்யும் சடங்குகள் மற்றும் படைக்கப்படும் நைவேத்யங்கள் மட்டுமே அவர்களைச் சென்றடையும். ஆகவே திருமண மந்திரங்கள் ஜெபிக்கப் படுவதற்கு முன்னர் கருட புராணத்தில் இருந்து மந்திரங்கள் படிக்கப்பட வேண்டும். உங்கள் மகளுடைய திருமண நல்வாழ்க்கைக்கு மஞ்சள் துண்டை பெற்றுக்கொள்ளுங்கள். இன்று நீங்கள் பெரும் இந்த பிரசாதம் மிகவும் அரிதானது. மல்லாடி குடும்பம், வத்சவாயீ குடும்பம் மற்றும் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி குடும்பம் எனக்குப் படைக்க பாயசம் செய்திருந்தனர். நான் அதை உங்களுக்கு விநியோகித்தேன். தீய ஆவிகளான பிணம் தின்னி பேய்கள் மற்றும் பிசாசுகளினால் தொல்லைகள் அனுபவிப்பவர்கள் இந்த பிரசாதத்தை உண்டால் உடனடியாக துயர் நீங்கப் பெறுவர். மிகவும் தரித்திரம் சூழ்ந்த நிலையில் இருப்பவர்கள் இந்தப் பிரசாதத்தை உண்ட பின் வளம் பெற தொடங்குவர்.

*ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த தெய்வீக உரையாடலை நிகழ்த்திக் கொண்டிருந்த போது அவருடைய கன்னத்தில் கண்ணீர் உருண்டோடியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் கரடுமுரடான குரலுடன்* **“மல்லாடி, பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் வத்சவாயீ குடும்பங்களுக்கு நான் பட்ட கடன் காலத்தை கடந்த ஒன்று. நான் அவர்களுடைய அன்பான பக்திக்கு உருகி விடுவேன். நான் சூக்ஷ்ம ரூபத்தில் சுதந்திரமாக அவர்களுடைய அடுக்களைக்குள் சாப்பிட நுழைவேன். அவர்கள் மட்டுமல்ல என்னை அன்போடு வணங்குபவர்களின் வீடுகளிலும் சிறுவனாக உலாவுவேன். என்னுடைய பாத ஒளி அவர்களின் மனதில் எதிரொலிக்கும். என்னுடைய சம்மதம் இல்லாமல் யாரும் குருவபுரத்தில் இரவில் தங்க கூடாது. கொடிய அரக்கனும் கொடூரமான பேய்களும் தனக்கு விடுதலை அளிக்குமாறு அதீத துயரத்துடன் அழும். நான் அவற்றை விரைவாக வழங்கி புதிய விடுதலையுடன் உடல்களை அளிப்பேன். தேவர்கள், தேவதைகள், யக்ஷர்கள், மறைவான சக்திகள் மற்றும் மஹா உடல்களின் உயர்ந்த ஆத்மாக்கள் என்னுடைய தரிசனத்தைப் பெற இங்கு வருகிறார்கள். பல நூற்றாண்டுகளாகத் தவத்தில் இருக்கும் மஹாசித்தர்கள், மஹாயோகிகள் மற்றும் மஹாபுருஷர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் என்னை தரிசிப்பதற்கும், என்னைத் தொடுவதற்கும் என்னுடன் உரையாடுவதற்கும் இங்கு வருகிறார்கள். நீங்கள் நதியை சந்தோஷமாகக் கடந்து செல்லுங்கள். என்னுடைய ஆணைகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்”** *என்பது ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணை. நாங்கள் ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள கிராமத்தை அடைந்தோம். சுப்பண்ண சாஸ்திரி மணமகன் மற்றும் மணமகளை மணமகளின் தந்தை வீட்டில் அமரச் செய்தார்.*

*அவர் மந்திரங்களை ஜெபித்தார். சாஸ்திரிக்கு திருமண மந்திரங்கள் மட்டும்தான் தெரியும், இறுதிச் சடங்குக்கான மந்திரங்களும் அதன் செயல்முறைகள் பற்றி அவருக்கு ஞானம் இல்லை. மேலும் மணமகனையும் மணமகளையும் திருமண மனையில் அமர்த்திய பின் இறுதி சடங்கு மந்திரங்கள் ஜெபிக்கலாம் என்பதை அவர் கேள்விப்பட்டதில்லை. அவர் அப்படிப்பட்ட மந்திரங்களைக் கண்டதோ அல்லது கேட்டதோ இல்லை. சுப்பண்ண சாஸ்திரி ஸ்ரீ ஸ்ரீபாதரை தியானித்து கொண்டு பிரதான குருவாக அமர்ந்தார். எந்தவித முயற்சியும் இல்லாமல் அவர் வாயிலிருந்து மந்திரங்கள் தானாகவே வந்தன. இது சுப்பண்ண சாஸ்திரிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த செயல்பாடு நடந்து முடிந்த பின்னர் திருமண மந்திரங்களை கூறி திருமணம் நடந்தது. தாலிக்கு பதிலாக மஞ்சள் கிழங்குடன் கூடிய மஞ்சள் கயிறு கட்டப்பட்டது. மணமகளின் தந்தையும் மணமகனும் பரம ஏழை. இந்த திருமணம் சம்பிரதாயங்களின் படி நடக்காததால் திருமணத்திற்கு வந்திருந்த பிராமணர்கள் அனைவரும் குறை கூறிவிட்டு திருமணம் நடக்கும் இடத்தை விட்டு சென்றுவிட்டனர். வல்லபேசனுக்குப் பெற்றோர்கள் இல்லை. மணமகளைத் தவிர மணமகளின் பெற்றோர்கள், மணமகன்,புரோகிதர் மற்றும் என்னையும் சேர்த்து மொத்தம் ஐந்து பேர் மட்டுமே இருந்தோம். புதுமண தம்பதியுடன் நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க சென்றோம். ஸ்ரீ ஸ்வாமி எங்களை ஆசீர்வதித்து சந்தோஷப்படுத்தினார். அவர் தன் முன்னிலையில் எங்கள்*

அனைவரையும் சில நேரம் தியானத்தில் இருக்கும் படி உத்தரவிட்டார். நான் தியானத்தில் ஆழ்ந்தவுடன் வல்லபேசனின் வருங்காலத்தை பார்த்தேன். வல்லபேசன் ஒரு மஞ்சள் வியாபாரி. அவன் வியாபாரத்தில் லாபம் அடைந்தவுடன் குருவபுரத்தில் உள்ள ஆயிரம் பிராமணர்களுக்கு தானம் செய்வதாக முடிவு செய்தான். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளால் லாபம் கிடைத்தது ஆனால் தன் வேண்டுதலை நிறைவேற்றுவதை தள்ளிப்போட்டு கொண்டிருந்தான். இதற்கிடையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் குருவபுரத்தில் இருந்து மறைந்து தன்னை மறைத்துக் கொண்டு இருந்தார். குருவபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதுகை மட்டும் இருந்தது. வல்லபேசன் குருவபுரத்திற்கு பணத்துடன் வந்த போது நான்கு திருடர்கள் பயணிகள் போல வேடமிட்டு அவனுடன் சேர்ந்து கொண்டு அவனை கொன்றனர். அவன் தலை துண்டிக்கப்படும் போது அவன் ஸ்ரீ ஸ்ரீபாதரை நினைத்துக்கொண்டான். ஸ்ரீ ஸ்ரீபாதர் சந்நியாசி வேடத்தில் திரிசூலம் ஏந்திக் கொண்டு வந்து மூன்று திருடர்களைக் கொன்றார். நான்காவது திருடன் தான் எந்த திருட்டையும் செய்யவில்லை என்றும் மற்ற மூவர் வழியில் அவனைக் கண்டு கவர்ந்திழுப்பது போல் பேசி தங்கள் கூட்டாளி ஆக்கி கொண்டனர் என்று கூறினான். தன்னை காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டான்.

கருணையுள்ளம் கொண்ட ஸ்ரீகுரு அதற்கு உத்தரவாதம் அளித்து கொஞ்சம் விபூதியை அவனிடம் கொடுத்து வல்லபேசனின் உடலின் மீது தெளித்துவிட்டு அவன் தலையையும் உடலையும் சேர்க்குமாறு ஆணையிட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அமிர்தம் போன்ற பார்வையினால் வல்லபேசன் மீண்டும் உயிர் பெற்றான். நடந்தது அனைத்தையும் திருடனின் மூலமாக வல்லபேசன் தெரிந்து கொண்டான். அவனுடைய ஆச்சரியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை. தனக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரைக் காணும் அதிர்ஷ்டம் இல்லை என்று வருத்தப்பட்டான். வல்லபேசன் பொருட்டு தனக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தரிசனம் கிடைத்ததை எண்ணி திருடன் மகிழ்ச்சியடைந்தான். வல்லபேசன் தன் தவறை உணர்ந்து கொண்டான். நீண்ட நாட்களுக்கு முன்னரே அவனுக்கு ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் அளிக்கும் அளவுக்கு செழுமை இருந்தது. இப்போது அவனால் நாலாயிரம் பேருக்கு விமரிசையாக அன்னதானம் அளிக்க முடியும். அவனுடைய தேவையில்லாத தாமதத்தினால் பல தொல்லைகள் நிகழ்ந்து விட்டது, அதைச் சரி செய்யும் விதமாக நாலாயிரம் பிராமணர்களுக்கு குருகட்டாவில் விமரிசையான அன்னதானம் ஏற்பாடு செய்தான்.



## ஸ்ரீ ஸ்ரீபாதரின் விஸ்வரூபம்

*சிறிது நேரத்திற்கு பின் ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்கள் கண்களைத் திறக்க ஆணையிட்டார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் உற்றுநோக்கி,* **"நான் இருக்கும் போது எந்த காரியமும் காரணம் இல்லாமல் நடைபெறாது. படைப்புகள் படைக்கப்பட்ட விதம் வினோதமானது. உருவம் இல்லாத நான் உங்கள் முன் மனித உருவத்தில் தோன்றியிருப்பது ஒரு விசித்திரம். குணங்கள் இல்லாத நான் உங்கள் முன் குணங்கள் இருப்பது போல தோற்றமளிப்பது ஒரு விசித்திரம். வரம்புகள் மற்றும் எல்லைகள் இல்லாதவனாகிய நான் வரம்புகளும் எல்லைகளும் உள்ளவன் போல் காட்சி அளிப்பது ஒரு விசித்திரம். என்னுடைய கையில் அனைத்து சக்திகளும் உள்ளன. பரந்து விரிந்துள்ள இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அணுவுக்குள்ளும் நான் வசிக்கிறேன். ஒரு அணுவை இன்னொன்றோடு சேர்ப்பதை தீர்மானிப்பவன் நான்தான். பிரளய காலத்தில் ஒவ்வொரு அணுவையும் வெடிக்க செய்து படைப்புக்கான தளத்தைத் தயார் செய்யும் ருத்ரன் நான்தான். ஞானம் எது அஞ்ஞானம் எது என்பதை உங்களுக்கு கற்பிக்கும் பழங்கால அதிசயம் நான்தான். அனைத்து உயிரினங்களையும் பலவகையான மாயைகளுக்குள் கிடத்தி மகிழ்ச்சியடைவேன். என்னைத் துயரத்தில் உதவிக்கு அழைப்பவர்களுக்கு ஆயிரம் கரங்களுடன் விரைந்து செல்வதும் நான்தான். அவர்களை பாதுகாக்கும் பழமையானவர் நான்தான். நானாக அனைத்து உயிரினங்களிலும் வீற்றிருக்கும் 'நான்'தான் உண்மையான நான். நான் ஒரு சர்வவியாபி,சர்வவல்லமை உடையவன், சர்வ ஞானம் ஆகியவை என்னுள் இல்லை என்று கூறினால் அது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரும். அத்தன்மைகள் வெளிப்படுத்தப்பட்டு அவற்றை நீங்கள் அனுபவித்தால் உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாது அல்லவா?"** *என்றார். பரப்பிரம்மத்தின் உருவகமான ஸ்ரீ குருதேவர் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ மணியோசை கேட்டது. அனைவரின் ஆச்சரியத்திற்கு இணங்க அந்த மணி ஸ்ரீ ஸ்ரீபாதரின் புனித பாதத்தின் அருகில் இறங்கியது. சில நொடிகளில் நாங்கள் அனைவரும் அதை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது மறைந்தது.*

## ஸ்ரீ ஸ்ரீபாதர் அனைத்து பெண்களையும் தாயாக மதித்தல்

*ஸ்ரீ ஸ்ரீபாதர் தொடர்ந்து "ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் உடனடியாக பலன்கள் அளிக்கும் ஒரு அற்புத அவதாரம். என்னுடைய நாமத்தை நினைவு படுத்திக் கொள்ளாமல் எந்த அவதூதரும் முழுமை அடைய முடியாது. அவரால் யோகத் தடைகளை கடந்து வர முடியாது. வல்லபேசா கேள்! உன் சிறு வயதில் உன் தந்தை இறந்த போது உன் தந்தையின் நான்கு சகோதரர்களும் உன்னை எப்படித் துன்புறுத்தி உன் சொத்துக்களை பிடுங்கிக்கொண்டு பிச்சைக்காரன் போல் ஆக்கினார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய குழந்தைகள் கூட உன்மீது எவ்வளவு பகையோடு இருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது. உன் சித்தப்பாக்கள்-பெரியப்பாக்கள் இறந்த பின்னர் மீண்டும் பிறந்து திருடர்களாக ஆவர். நீ குருகாட்டாவிற்குச் செல்லும் போது உன் பணத்தை அபகரிக்க திட்டமிடுவர். அச்சமயத்தில் நீ என் நாமத்தை நினைத்துக்கொண்டால் நான்*

சூலாயுதத்தால் மூவரை கொல்வேன். நான்காமவன் பெரிய குற்றங்கள் செய்யவில்லை என்பதால் அவனை விட்டு விடுவேன்" என்றார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் வார்த்தைகளைக் கேட்டு வல்லபேசனின் மனைவி கண்ணீர் விட்டாள். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் **"அம்மா! நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், நான் அனைத்து பெண்களையும் என்னை பெற்றெடுத்த அகண்ட சௌபாக்கியவதி சுமதி மகாராணியாகப் பார்க்கிறேன். சிறந்த அன்னையின் மடியில் எப்போதும் நான் குழந்தையாக இருப்பேன். வருத்தப்படாதே! நான் கொடுத்த மஞ்சள் கிழங்கை பத்திரமாக வைத்துக்கொள். அது உனக்கு அனைத்து மங்களத்தையும் அளிக்கும். நீ சுமங்கலியாக இருப்பாய். என் சட்டம் பாறையில் பொறிக்கப்பட்டது போல மாறாத ஒன்று. இந்த படைப்பில் எந்த சக்தியாலும் அதை மாற்ற முடியாது.** எனக்கு முதல் குருவாகவும் காயத்ரி மந்திரத்தை தொடங்கி வைத்தவருமான என் தந்தையின் பெயர் அழியாமல் இருக்க விரும்புகிறேன். ஆகவே என் அடுத்த அவதாரத்தின் பெயர் என் தந்தையின் பெயரில் உள்ள நரசிம்ம என்ற வார்த்தையையும் சரஸ்வதி என்ற பட்டத்தையும் சேர்த்துக்கொண்டு நரசிம்ம சரஸ்வதி என்று அழைக்கப்படுவேன். என்னுடைய தாத்தா ஸ்ரீ பாபண்ணார்யாவின் உருவம் நீடித்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதைப் பொருட்டு நரசிம்ம சரஸ்வதியின் உருவம் எல்லா விதத்திலும் என் தாத்தாவின் உருவத்தை உருவத்தை ஒத்திருக்கும். என் தாத்தாதான் என் இரண்டாவது குரு. நான் வேதங்களை என் தாத்தாவிடம்தான் கற்றுக்கொண்டேன். நீங்கள் இப்போது பார்த்த மணி என் தாத்தாவின் வீட்டில் ஒரு காலத்தில் இருந்தது. அது என்னுடைய விருப்பத்திற்கு இணங்க பல தேசங்களுக்கு ஆன்மீகத் தேடல்களில் உள்ளவர்களை ஆசீர்வதிக்க பயணிக்கும். அது பூமியின் அடுக்குகளுக்குக் கீழும் பூமியின் வெளிபரப்புக்கு மேலும் பயணிக்கும். சங்கர் பட் வெற்றி என்பதை குறிக்கும் எண்ணான- நீ எழுதும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் பதினெட்டாம் அத்தியாயம் பீதிகாபுரத்தை அடையும் போது, இந்த மணி மீண்டும் பீதிகாபுரத்தை வந்தடையும். இந்த மணியின் வடிவம் மற்றும் அளவில் பல மாறுதல்கள் ஏற்பட்டு என்னுடைய விருப்பத்தின் பேரில் உலாவும். என்னுடைய தாத்தாவின் வீட்டில் ஒரு சமஸ்தானம் அமைக்கப்படும். நான் அந்த மணியை வெற்றியின் ஒலியாக என் அன்பின் அடையாளமாக பீதிகபுரத்திற்கு அனுப்புவேன்" என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**


# அத்தியாயம் – 19

## குருசரணை சந்தித்தல்

வல்லபேஸ்வர சர்மா தம்பதி, சுப்பண்ண சாஸ்திரி மற்றும் நான் ஆகியோர் ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளை நினைவுப்படுத்தி கொண்டோம். இதற்கிடையில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தூரத்து உறவினரான லிங்கன்ன சாஸ்திரி அங்கு வந்தார். அவர் வேதம் மற்றும் வேதாந்தத்தைக் கற்றுத் தேர்ந்தவர். லிங்கன்ன சாஸ்திரி, "நான் என் மூதாதையர்களுக்கு காரியங்கள் செய்ய பீதிகாபுரத்தில் உள்ள பாத கயா க்ஷேத்திரத்திற்கு வந்தேன். என் தாத்தா மத சம்பிரதாயங்களை மதிக்கும் பணக்கார பிராமணனாக இருப்பினும் அவர் மகா கஞ்சர். அவர் துஷ்டத்தனம் மிகுந்த காரணங்களைக் கூறிக்கொண்டு தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைத் தன் வசதிக்கேற்ப மாற்றிக்கொள்வார். அவர் யதாசக்தி (ஒருவருடைய திறனுக்கு ஏற்ற சக்தி) கோட்பாடுகளுக்கு வக்கிரமான விளக்கங்கள் அளித்தார். மூதாதையர்களை திருப்திப்படுத்த அளிக்கப்படும் பத்து வகையான தானங்களுக்கு சிறிய அளவிலான பணத்தை கொண்டு படைப்பார். அவர் சிரார்த்த தினங்களில் பணம் அனாவசியமாக செலவழிக்கப் படுவதாகவும், அதிதிகள் இன்றுதான் நல்ல வாய்ப்பு என்று சாப்பாட்டு ராமன் போல சாப்பிடுகிறார்கள் என்றும் மனதுக்குள் நினைத்துக் கொண்டு சங்கடப்படுவார். இந்த சடங்குகளால் தன் வீட்டில் உள்ள அனைத்து செல்வங்களும் திருடப்பட்டு வெற்று ஓடாக ஆகிவிடுகிறது என்று வருத்தப்படுவார். சில நாட்களுக்குப் பிறகு என் தாத்தா இறந்துவிட்டார். என் தந்தையும் என் தாத்தாவின் வழியையே பின்பற்றினார். காலம் எப்படி உலகத்தை விழுங்குறதோ அதே போல் என் தந்தையையும் விழுங்கிவிட்டது. எனினும் நான் மூதாதையர்களுக்கு செய்யும் சடங்குகளை சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது போல என்னுடைய சக்திக்கு ஏற்றார் போல் என்னால் முடிந்த அளவுக்கு நல்ல முறையில்தான் செய்து வந்தேன்.

இதற்கிடையில் எங்கள் வீட்டில் எந்தவித காரணமும் இல்லாமல் சண்டைகள் மூண்டு மனம் நிம்மதி இழந்தது. சண்டைகள் எந்தவித காரணமும் இல்லாமல் திடீரென மூளும். அமைதியாக இருக்கும் உறவினர்கள் கூட எங்கள் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தால் கோபமாகி சண்டையிட தொடங்குவர். எங்கள் வீடு சண்டைகளின் மையமானது. என் மனைவி என்னிடம் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்கு சென்று விட்டாள். நான் தூங்கிக்கொண்டிருந்த போது என் மகன் என் நெஞ்சின் மீது அமர்ந்துகொண்டு என் கழுத்தை நெறிக்க முற்பட்டான். என் மருமகள் என்னை தவறான முறையில் **"உங்கள் வயதில் உள்ளவர்கள் பலர் இப்போது சுடுகாட்டிற்குச் சென்று விட்டனர். எப்போது உங்களுடைய முறை எப்போது வரும்?"**

என்று கூறினாள். என்னைப் போன்ற மிக வறுமையானவனுக்கு மகளாகப் பிறக்க என்ன பாவம் செய்தேனோ என்று என் மகள் கடுமையாக கூறினாள். என் மருமகன் என்னை கிண்டல் செய்யும் தொனியில் "**எங்கள் வீட்டில் வேலைக்காரர்கள் இல்லை. நீங்கள் கல் போல வலுவாக இருக்கிறீர்கள். நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து வீட்டை பெருக்குவது, மாடு மேய்ப்பது, தேவைப்பட்டால் சிரார்தங்களுக்கு பிராமணார்த்தம் சாப்பிட்டு விட்டு எள்ளு தானம் பெற்றுக்கொள்ளலாம். நாங்கள் கூட பட்டினியாக இருந்து கொண்டு உங்களுக்கு மலை போல உணவு ஏற்பாடு செய்கிறோம். நீங்கள் உங்களுக்குத் தேவையான உணவை சமைத்துச் சாப்பிட்டுவிட்டு மீதி இருக்கும் உணவை எங்களுக்கு கொடுத்தால் போதும்**" என்றார். என் வாழ்க்கை முள்ளின் மேல் நிற்பது போல் ஆனது. ஒவ்வொரு உயிரினமும் வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டு சந்தோஷத்தை அனுபவிப்பர். ஆனால் எனக்கு இனிமையான வாழ்க்கை இனி கிடையாது என்பது தெளிவாகிவிட்டது. நான் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடலாம் என்றால் பிசாசாக பிறந்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது. நான் இறந்த பிறகு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது போல சடங்குகள் எனக்கு நடைபெறாது என்று எனக்கு தெளிவாகப் புரிந்துவிட்டது. ஒரு நாள் மாட்டுத்தொழுவதில் என்னுடைய வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு சாப்பிட வந்த போது என் மருமகள் கெட்டுப்போன உணவை அளித்தாள். அந்த உணவு துர்நாற்றம் எடுத்து உணவில் புழுக்கள் நெளிந்தன. அதிகமாக வேலை செய்த காரணத்தினால் மிகுந்த களைப்புடன் இருந்தேன். வயிற்றை பிடுங்கிய பசி வேதனையை அதிகரித்தது. கண்ணீர் சிந்தக் கூட வலு இல்லை. கெட்டுப்போன உணவை சாப்பிடவும் முடியாது, பசியையும் தாங்கிக்கொள்ள முடியாது. மிகவும் துயரமான நிலையில் இருந்த நான் இந்த மக்கள் மற்றும் உறவுகள் அனைத்தும் உண்மையா அல்லது இந்திரனின் மாய அம்சமா என்ற எண்ணம் மனதில் தோன்றியது. என் மனம் சோர்வடைந்து எண்ணக்கூடிய சக்தியற்று இருந்தது.



இப்படிப்பட்ட இக்கட்டான தருணத்தில் ஒரு அவதூதர் எனக்கு மாட்டுக்கொட்டகையில் காட்சியளித்தார். அவர் கண்களில் இருந்து கருணை பெருக்கெடுத்து ஓடியது. அந்த தெய்வீக கருணை உருவத்தை நான் கண்ட அடுத்த நொடி சிறு பிள்ளையை போல் கதறி அழுதேன். அவரை எனக்கு ஆயிரம் வருடங்களாக தெரியும் என்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் அந்த அவதூதரின் பாதத்தில் விழுந்து அவற்றை என்

நெஞ்சோடு பற்றிக்கொண்டேன். அவதூதர் தன் தெய்வீக கரங்களால் உணவை தொட்டார்.

தட்டில் இருந்த உணவு மறைந்துபோனது. அந்த இடத்தில் இனிப்பு பதார்த்தமான அல்வா நிறைந்த ஒரு தட்டு தோன்றியது. அவதூதர் அந்த அல்வாவில் சிறிய அளவை மட்டும் எடுத்துக்கொண்டு என்னை மீதியிருக்கும் அல்வாவை உண்ணச் சொன்னார். நான் முழுத் திருப்தியுடன் உண்டு சக்தியும் வலுவும் மீண்டும் பெற்றேன்.

அவர் இரும்பு கடப்பாறை கொண்டு என் வீட்டின் வடகிழக்கு பகுதியில் தோண்ட சொன்னார். அந்த இடத்தை ஆழமாக தோண்டியவுடன் இரண்டு நாய்களின் எலும்புக்கூடு வெளிப்பட்டது. நான் அவற்றை தூக்கி எறிந்தேன். அவதூதர் அந்த குழியில் கஞ்சியை ஊற்றச் சொன்னார். நான் குழியில் கஞ்சியை ஊற்றி மண்ணால் மூடிவிட்டேன். பின்னர் அந்த அவதூதர் **"நான் பிசாசுகளின் தீய விளைவுகளை வெளியேற்றி விட்டேன். வீடு இப்போது சுத்தமாகி விட்டது. உன் நிலைமை மெதுவாக முன்னேறும். நீ பாதகயா க்ஷேத்திரமான பீதிகாபுரத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறாய். நீ உடனடியாக கிளம்ப வேண்டும். அதற்கான தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். நாம் மீண்டும் பீதிகாபுரத்தில் சந்திப்போம்"** என்றார்.

நான் அணிந்து கொண்டிருந்த ஒற்றை துணியுடன் பீதிகாபுரத்திற்கு புறப்பட்டேன். வீட்டில் உள்ளவர்கள் யாரிடமும் தெரிவிக்காமல் உடனடியாகப் புறப்பட்டேன். நான் சிறிது தூரம் பயணித்த பின் இரவு வேகமாக வரத் தொடங்கியது. அச்சமயத்தில் நான் ஒரு மாந்தோப்பைக் கடந்து கொண்டிருந்தேன். அந்தத் தோப்பின் சொந்தக்காரரான நரசிம்மப்பா என்னை வரவேற்றார். அவர் உண்பதற்கு இனிப்பான பழங்கள் வழங்கினார். அந்தப் பழங்களை உண்ட பின் என் பசி தீர்ந்தது. அவர் அன்று இரவு அவர் வீட்டில் தங்கி தன் உபசரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டவுடன் நான் சம்மதித்தேன். அடுத்த நாள் காலை நான் நீராடிவிட்டு காலை வழிபாடுகளை முடித்தவுடன் அவர் எனக்கு துணிகளும் தக்ஷிணையாக பணமும் அளித்தார். அந்த அவதூதர் கூறிய படியே அனைத்தும் சரியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. அந்த விவசாயி, **"ஐயா, நேற்று மதியம் என் கனவில் ஒரு அவதூதர் தோன்றி ஒரு ஒழுக்கமான பிராமணர் தோப்பின் வழியாக நடந்து செல்வார். அந்த வழிப்போக்கருக்கு தங்க இடமளித்து உபசரிப்புகள் செய்து உண்பதற்கு மாம்பழங்கள் கொடுத்து அடுத்த நாள் உடையும் பணமும் தானமாகக் கொடுக்க ஆணையிட்டார். நான் உங்களை காணும் பாக்கியம் பெற்றேன். உங்களுக்கு சேவை செய்யும் அதிர்ஷ்டம் பெற்றுள்ளேன்"** என்றார். அந்த விவசாயி மிகுந்த உற்சாகத்தில் இருந்தார்.

இந்த நிகழ்ச்சியில் இருந்து அவதூதர் ஒரு சாதாரணமான அவதூதர் இல்லை என்பதும் அவர் தெய்வீக சக்திகள் நிறைந்தவர் என்பதும் தெளிவானது. நான் வேத மந்திரங்கள் ஜெபித்துக் கொண்டே நடந்து சென்று கொண்டிருந்தேன். நான் புதுத் துணிகளை உடுத்திக் கொண்டு வேத மந்திரங்களை ஜெபிக்கும் போது என்

நரம்புகளில் ஏதோ மின்சாரம் பாய்வது போல உணர்ந்தேன். அந்த மின்சார சக்தியினால் என் உடலில் விவரிக்க முடியாத சந்தோஷத்தை அனுபவித்தேன். எனக்குப் பின்னால் ஒரு வேத பண்டிதர் வேகமாக என்னை நோக்கி வருவதைக் கவனித்தேன். அவர் வேதத்தில் உள்ள சாவித்ரி பண்ணாவை பாராயணம் செய்து கொண்டிருந்தார். நானும் அவருடன் சேர்ந்து கொண்டு சாவித்ரி பண்ணாவை பாராயணம் செய்யத் தொடங்கினேன். பின்னர் அந்த வேத பண்டிதர் என்னிடம் "சாவித்ரி பண்ணா மிகவும் முக்கியமானது. த்ரேதா யுகத்தில் பாரத்வாஜ முனிவர் ஸவித்ரு காடக சயனம் என்கிற யாகத்தை நிகழ்த்தினார். அது பீதிகாபுரத்தில் நடைபெற்றது. ஸ்ரீ தத்தர் சில காலங்களுக்கு முன் கொடுத்த சத்தியத்தை நிறைவேற்றும் பொருட்டு இப்போது பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளார். வேதங்கள் கடவுளால் அங்கீகரிக்கப்பட்டவை. வேதங்களை பாராயணம் செய்யும் உரிமை பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் அதை படிக்கும் உரிமை அனைத்து ஜாதியினருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பிராமணர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் என்ன செய்தார்? அவர் பிராமணர்களின் பாதத்தைக் கழுவி அந்த நீரை தன் தலையில் தெளித்துக் கொண்டார். உங்களுக்கு பீதிகாபுரத்தில் இருந்து அழைப்பு வந்திருப்பது பேரதிர்ஷ்டம்.

நான் அவரிடம் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் யார் அவரின் சிறப்புகளைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பதாகக் கூறினேன். அந்த வேத ஞானி "என் குழந்தாய், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தரிசனம் அனைத்து பாவங்களையும் அழித்துவிடும். அவர் உண்மையில் ஸ்ரீ தத்தாத்ரேயர். பீதிகாபுரம் அவருடைய லீலைகள் நிறைந்த பிறந்த இடம். பழைய யுகங்களில், தேவைகள் ஏற்படும் போது முக்கியமான அவதாரங்களோடு சிறந்த மனிதர்களும் அவதரிப்பர். முந்தைய காலத்தில் சுசீலா மற்றும் விஷ்ணுதத்தர் என்கிற ஒழுக்கமான தம்பதி இருந்தனர். சிறந்த பக்தியுடன் கூடிய சுசீலா தன் ஆன்மீக சாதனையின் போது அன்னை அனுசுயாவுடன் ஒன்றாவதை உணர்ந்தாள். தத்த ஜெயந்தி அன்று பிரசவ வலி அவளுக்கு ஏற்பட்டது. விஷ்ணுதத்தர் தன்னுடைய ஆன்மீக முயற்சியின் போது, தான் அத்ரி மஹரிஷியுடன் ஒன்றாவது போல அனுபவித்தார். இரண்டு வெவ்வேறு தனித்துவமான தனி மனிதர்கள் ஒரே பண்புடன் ஆவது என்பது உடல் சார்பற்ற, அசாதாரணமான மனது மற்றும் அறிவுக்கு அப்பாற்பட்ட தெய்வீக மர்மம், அதை வார்த்தைகளின் மூலம் விவரிக்க முடியாத ஒன்று. அவர்கள் இப்போது சுமதி மஹாராணி மற்றும் அப்பலராஜ சர்மாவாக பிறந்துள்ளனர். அவர்களின் பூர்வ ஜென்ம பலன்களினால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அவர்களின் மகனாகப் பிறந்தார். அவர்கள் கிருஷ்ண யஜுர் வேதம், ஆபஸ்தம்ப சூத்ரம் பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவர்கள். பழைய காலத்தில் வைசிய குலத்தில் பிறந்த லாபாத மஹரிஷி, வாசவி கன்யகாபரமேஸ்வரியின் அவதாரத்தின் போது பாஸ்கராச்சார்யராகவும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தின் போது பாப்பண்ணார்யாவாக, சுமதி மஹாராணியின் தந்தையாகப் பிறந்துள்ளார். நீங்கள் அந்த புனிதமானவர்களைப் பீதிகாபுரத்தில் சந்திப்பீர்கள். உங்களுக்கு

மாந்தோப்பில் உடையும் பணமும் கொடுத்த விவசாயி பூர்வ ஜென்மத்தில் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் தந்தை சுப்பராமைய்ய சிரேஷ்டியின் வீட்டில் வேலைக்காரனாக இருந்தார். அவர் மிகவும் புனிதமான சுப்பராமைய்ய சிரேஷ்டியின் வீட்டு உணவை உண்டதன் புண்ணியத்தால் இந்த பிறவியில் நிலத்திற்கு அதிபதி ஆகி அனைத்து சுகங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். பீதிகாபுரத்தில் உள்ள பைண்ட வெங்கடப்பைய்ய சிரேஷ்டியும் ஸ்ரீ நரசிம்ம வர்மாவும் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மிகவும் நெருக்கம். அவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் மீது மிகுந்த பக்தியுடன் கூடிய பெற்றோர்கள் போன்ற அன்பு உண்டு" என்றார்.

நான் அந்த வேத ஞானியிடம், "ஐயா, கர்ம பந்தங்கள் சிக்கலான கட்டுப்பாடுகள் என்பதை கவனித்திருக்கிறேன். யக்ஞத்தின் போது பவமான கடம் (யக்ஞத்தில் உபயோகப்படுத்தப்படும் பானை) உடைந்தால் பிரதான பூசாரியின் தலையும் நொறுங்கி இறந்துவிடுவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது நடைபெறும் யக்ஞங்களில் மூன்று பவமான கடங்களில் ஏதாவது ஒன்று தவறுதலாக உடைந்தால் பிரதான பூசாரியின் தலை நொறுங்குவது இல்லை. இதற்கு என்ன காரணம்? வேதம் மற்றும் சாஸ்திரங்களில் புனிதம் அல்லது புனிதம் அற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது நடக்கவில்லை என்றால் நாத்திகர்கள் வேதங்களை ஏளனம் பேசுவர்" என்று கேட்டேன். அதற்கு அந்த சிறந்த மனிதர் "குழந்தாய், இப்போது நடைபெறும் யக்ஞங்களில் உள்ள பவமான கடங்களில் உயிரை அழிக்கக் கூடிய மின்சார சக்திகள் போன்றவை இல்லை. யக்ஞத்தை நடத்தும் பிரதான பூசாரி சிறந்த ஆன்மீகத்தைக் கடைபிடிப்பவராக இருக்க வேண்டும். அவருக்குள் யோகத்தீ இருக்க வேண்டும். அந்த யோகத்தீதான் யக்ஞங்களின் போது பவமான கடங்களில் மின்சார சக்தியை உருவாக்கும். ஒரு சிறந்த யோகி யக்ஞத்தை முன்மொழிந்து பிரதானமாக நடத்தும் போது,அதற்கு உடனடியாக பலன் ஏற்பட்டு, அது உலக நலனை உண்டாக்கும். அதற்கு பதிலாக வெறும் பேருக்கு யக்ஞம் என்ற பெயரில் சடங்குகள் நடத்தப்பட்டால் வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது போல பலன்கள் கிடைக்காது. **16,116,1116** ஆகிய கணக்கீட்டில் தானங்கள் வழங்கப்படுவதிலும் ஒரு மர்மமான பொருள் உள்ளது. கோத்திரம் தந்தை வழி சம்பந்தப்பட்டது. படைப்புகள் தொடரும் வரை இந்த கோட்பாடு மாறாது. ஸாபிந்தியா (உறவுகளில் திருமணம் செய்து கொள்வதற்கான விதிமுறை) தாய் வழி சம்பந்தப்பட்டது. இந்த நடைமுறை ஏழு தலைமுறைகளுக்கு பின்னர் நின்றுவிடும். மகனும் செல்வமும் திருமணத்தின் இரண்டு பலன்கள். இவை இரண்டையும் பெறுவதற்கு பெண் என்னும் நெருப்பு தேவை. பண்புகளில் வித்தியாசம் பார்க்காத ஸ்ரீ ஸ்ரீபாதர் எப்படி ஜாதி வித்தியாசம் பார்ப்பார்? அவர் அத்வைத கருத்துக்கள் போதிக்கிறார்; அத்வைத செயல்களை போதிக்கவில்லை. ஆதிசங்கரரைப் போல் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கும் பாகுபாடு கிடையாது. ஆதிசங்கரர் ஹேம வித்யாவை (தங்கம் தயாரிக்கும் கலை) மிகவும் உணர்ச்சிவசப்படும் இயல்புடைய கள் இறக்கி மக்களுக்கு உதவும் கவுடா இன மக்களுக்கு கற்றுக் கொடுத்தார். சாத்வீக குணமுடைய பிராமண மக்களுக்கு ஆதிசங்கரர் ஹேம வித்யாவை கற்றுக் கொடுக்கவில்லை. அதேபோல் ஸ்ரீ ஸ்ரீபாதரும்

மதம்,இனம் ஜாதி,நிறம் மற்றும் வயது பார்க்காமல் தகுதியை மட்டும் கருத்தில் கொண்டு தன் அருளைப் பொழிவார். ஆதிசங்கரர் ஹேம வித்யாவை பிராமணர்களுக்கு கற்றுக்கொடுத்திருந்தால் அவர்கள் கஞ்சர்களாக மாறி பணம் மற்றும் மற்ற கவர்ச்சிப் பொருட்களில் மாட்டிக்கொண்டு தங்களுடைய கடமைகளை மறந்திருப்பர். மனம்,ஞானம்,அஹங்காரம் மற்றும் பூமியுடன் கூடிய பஞ்சபூதங்கள்- இவை எட்டும் செயலற்ற இயல்புகள் என்று அழைக்கப்படுகிறது. இவை ஒன்று என்ற எண்ணை குறிக்கும் உயிருள்ள உலகத்தின் இயல்போடு கலக்கும் போது ஒன்பது ஆகிறது. எண் இரண்டிலிருந்து ஒன்பது வரை எட்டு ஆற்றல் அற்ற குணங்களைக் குறிக்கிறது. பூஜ்ஜியம் பிரம்ம தத்துவத்தைக் குறிக்கிறது. பூஜ்ஜியத்தில் இருந்து ஒன்பது வரை உள்ள கணிதம் அடிப்படை குணம் அல்லது படைப்பை குறிக்கிறது. ஸ்ரீ ஸ்ரீபாதர் விளையாட்டாக "**தோ சௌபதி தேவ் லக்ஷ்மி**" என்று கூறி பிக்ஷை கேட்பார். இது 2498 என்ற எண்ணை குறிக்கும். ஒவ்வொரு அசைவு மற்றும் ஒவ்வொரு வார்த்தையிலும் பல பொருள்கள் கண்டறியலாம். படைப்பின் எதிர்மறையை இரண்டு என்ற எண் குறிக்கிறது; நான்கு என்ற எண் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண மற்றும் மஹாகாரண உடல்களை குறிக்கிறது; எண் ஒன்பது மாறாத ப்ரம்ம தத்துவத்தை குறிக்கிறது; எண் எட்டு மஹாமாயையை குறிக்கிறது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அர்த்தநாரீஸ்வரர் (சிவனும் பார்வதியும் ஒன்று சேர்ந்த உருவம்).

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் விஸ்வரூபம்

நான் பிருஹத்ஸில நகரம் என்று அழைக்கப்பட்ட பெனுகொண்டா கிராமத்தைச் சேர்ந்தவன். என்னை கணபதி சாஸ்திரி என அழைப்பார்கள். நான் வேதங்களை படிக்க வ்யாஸபுர அக்ரஹாரத்துக்கு வந்தேன். நான் என் குருவுக்கு சேவை செய்து கொண்டு வேதங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். என் குருவுக்கு அவர் வீட்டின் அருகில் சில விளை நிலங்கள் இருந்தன. அவர் ஏராளமான கால்நடைகளை வளர்த்து வந்தார். நான் அவற்றை மேய்த்துக்கொண்டு வயலுக்கு வந்தேன். ஒரு நாள் மிகவும் ஒளி பொருந்திய பத்து வயது சிறுவன் ஒருவன் மாடு மேய்ப்பவன் போன்ற வேடத்தில் எங்கள் வயலுக்கு வந்தான். அவன் பூணூல் அணிந்து கொண்டிருந்தான். அதனால் நான் அவனை பிராமணன் என்று நினைத்துக்கொண்டு அவனிடம் உறுதிப்படுத்திக்கொள்ள கேட்டேன். அதற்கு அந்த சிறுவன், "நான்தான் நான். என்னுள் அனைத்து குணங்களும் உள்ளன. அனைத்திற்கும் அடிப்படை நான்தான். நீ என்னுடைய பிராமண அம்சங்களைப் பார்த்து என்னை பிராமணன் என்று நினைத்துக் கொள்வது ஒன்றும் தவறல்ல, ஆனால் அது முழுமையான உண்மை அல்ல. என்னுடைய க்ஷத்திரிய தன்மைகளை பார்த்து என்னை க்ஷத்ரியன் என்று நினைப்பது பொய்யல்ல, ஆனால் அதுவும் முழுமையான உண்மை அல்ல. என்னுடைய வைசிய அம்சங்களை நோக்கி என்னை வைசியன் என்று நினைப்பதும் பொய்யல்ல, ஆனால் அதுவும் முழு உண்மையல்ல. என்னுடைய சூத்திர பண்புகளை பார்த்து நான் சூத்திரன் என்று நினைப்பது தவறு ஒன்றும் இல்லை, ஆனால் அதுவும் முழு உண்மை அல்ல. என்னை சண்டாளன் என்று நினைத்தால் கூட தவறு அல்ல, அதுவும் கூட முழு உண்மை அல்ல. நான்

எல்லைகளுக்கு அப்பாற்பட்டவன். உண்மை மற்றும் பொய் என்று தோன்றும் அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் மற்றும் அது போன்ற விஷயங்களுக்கு ஆதாரம். நான் உயர்வான உண்மை. அந்த உண்மையின் குணம் எல்லைகளைக் கடந்த ஒன்று. என்னுடைய தர்மம் உயர்வான தர்மம். இது அனைத்து தர்மங்களையும் கடந்த அந்த தர்மத்திற்கு ஆதாரமாக விளங்குகிறது. என்னுடைய குணம் உயர்வான அன்பு. இந்தப் படைப்பில் உள்ள உயிரினங்களிடம் உள்ள அன்பின் அனைத்து பண்புகளிலிருந்து விலகி உள்ளது. அது மட்டும் அல்ல. இவை அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது. என்னை ஆணாக நினைத்தால் பெண் போல நடந்து கொள்வேன். என்னைப் பெண்ணாக நினைத்தால் ஆண் போல நடந்து கொள்வேன். என்னை சிவபெருமானாக நினைத்து கொண்டால் பாதி ஆண் மற்றும் பாதி பெண்ணாக நடந்து கொள்வேன். என்னை மனதாலும் வார்த்தைகளாலும் உணர்ந்து கொள்ள முடியாத மற்றும் இந்த இரு உருவங்களும் வெளிப்படுவதற்கு முன்பே நிலவிய தெய்வீகப் பேரானந்தம் என்று நிரூபிக்க முடியும். இது போன்ற வினோத குணங்கள் உடைய என்னை உன்னால் எப்படி தெரிந்து கொள்ள முடியும்?" என்றான்.

இந்த உரையாடல் அனைத்தும் அதிகப்படியான காய்ச்சல் வந்தவன் உளறுவது போல் எனக்குத் தோன்றியது. பித்தம் ஏறினால் கூட ஒருவர் இதுபோன்ற தெளிவற்ற பைத்தியங்கள் உளறுவது போல நடந்து கொள்வர் என நினைத்துக் கொண்டேன். என் மன ஓட்டத்தை புரிந்து கொண்ட சிறுவன் "நான் இப்போது சனீஸ்வரனுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். சனீஸ்வரன் என்னிடம் "கடவுளே, இந்த வேடிக்கையைப் பாருங்கள், நான் கணபதி சாஸ்திரியை எப்படியெல்லாம் வினோதமான சிக்கல்கள் மற்றும் பந்தங்கள் ஏற்படுத்தி துன்புறுத்துகிறேன் என்று பாருங்கள்" என்றார். எனினும் நான் கணபதி சாஸ்திரியின் விளைவுகளைப் பெற்றுக்கொண்டு அவரால் (சனீஸ்வரன்) உனக்கு எந்தவித சிக்கல்களையும் ஏற்படுத்த முடியாது என்று கூறிவிட்டேன்" என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் எனக்கு ஆர்வம் அதிகரித்தது. உண்மையில் ஜாதகப்படி எனக்கு மிகப்பெரிய கெட்ட நேரம் துவங்க உள்ளது. நான் திகைப்பில் இருந்த போது அந்த இடையன் ஒரு பசுவிடம் சென்று **"காயத்ரி, எனக்கு மிகவும் பசிக்கிறது. பால் தருவாயா?"** என்று கேட்டான். அந்த பசு சரி என்பது போல தலையை அசைத்தது. அதன் மடியில் இருந்து பால் அருவி போல் தரையில் கொட்டியது. அந்த இடையன் முழு திருப்தியுடன் பாலை குடித்தான். உண்மையில் அது மலட்டுப்பசு, ஆனால் அந்த இடையனுக்கு பால் கொடுத்தது. இவை அனைத்தும் எனக்கு குழப்பமாக இருந்தது. அந்த இடையன் ஒரு மாமரத்திற்கு கீழே அமர்ந்தான். நான் அவனை மீண்டும் பார்த்தபோது அவனுடன் பணக்கார உடைகளை அணிந்த பத்து வயதுடைய கிராமத்து பெண் ஒருவள் இருந்தாள். அவர்கள் பார்ப்பவர்களுக்கு ஆனந்தத்தை அளித்தனர். அவர்களின் சந்தோஷமான உரையாடல்கள் அவர்கள் சந்தோஷமான தம்பதி போன்ற உணர்வை ஏற்படுத்தியது. இதற்கிடையில் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி குதிரை வண்டியில் இருந்து இறங்கினார். அவருடன் பத்து வயதுடைய பிரகாசமான சிறுவன் ஒருவன் இருந்தான்.

அது வேறு யாருமல்ல ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபர்தான் என்று பின்னர் தெரிந்துகொண்டேன். ஶ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி தன் தந்தையின் நினைவாக இந்த நிலத்தை என் குருவுக்கு தானமாக அளித்திருந்தார். இந்த நிலத்தின் பரந்த பரப்பளவு நிலங்களுக்கு ஶ்ரீ சிரேஷ்டிதான் சொந்தக்காரர். ஶ்ரீ சிரேஷ்டி தன் நிலங்களை மேற்பார்வையிட பீதிகாபுரத்தில் இருந்து வ்யாசபுர அக்ராஹாரத்திற்கு வருவதுண்டு. ஶ்ரீ சிரேஷ்டி அந்த இடையன் மற்றும் அந்த பெண்ணை பார்த்து அவர்கள் ஶ்ரீ ஶ்ரீபாதரின் ஜாடையை ஒத்து இருப்பதை கண்டு வியப்படைந்தார். மேலும் அவர்கள் மிகவும் பிரகாசமாக இருந்தனர்.

ஶ்ரீ ஶ்ரீபாதர் சிரேஷ்டியிடம் "**தாத்தா, ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்?**" என்றார். அதற்கு ஶ்ரீ சிரேஷ்டி ஶ்ரீ ஶ்ரீபாதரை அவர்கள் இருவரையும் பார்க்குமாறு கூறினார், அந்த காட்சி கண்களுக்கு விருந்தாக இருப்பதாக குறிப்பிட்டார். பின்னர் ஶ்ரீ ஶ்ரீபாதர், ஒருவரைக் காண்பது மற்றும் பார்க்கப்படும் காட்சி ஆகிய இரண்டும் ஒன்று தானா என்று கேட்டார். ஶ்ரீ சிரேஷ்டி தனக்கு இது போன்ற தத்துவ விஷயங்கள் தெரியாது என்று வெளிப்படையாக தெரிவித்தார்.

ஶ்ரீ ஶ்ரீபாதர் அதற்கு, "இதில் என்ன தத்துவம் இருக்கிறது? எல்லையில்லாத தனது மாயையின் நடமாட்டத்தை ஶ்ரீ ஹரி கண்டு ஆச்சரியப்படுவார் என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் படைப்பு ஒன்பது வகையான உணர்ச்சிகளை கொண்டுள்ளது. அந்த படைப்பின் விதிகளில் ஒன்று என்னவென்றால், ஆச்சரியமூட்டும் அற்புதமான காட்சிகளை உருவாக்க வேண்டும். அங்கு இரண்டு இருக்கிறது; இங்கு ஒன்று. துவைதம் உண்மையா? அல்லது அத்வைதம் உண்மையா? நான் ஒன்றா? இரண்டா? அல்லது அதிக எண்ணிக்கையா? தயவுசெய்து யோசித்துக் கூறுங்கள்" என்று ஶ்ரீ ஶ்ரீபாதர் கூறியவுடன் அந்த இடையனும் விவசாயப் பெண்ணும் ஶ்ரீ ஶ்ரீபாதரின் மாயையா என்ற சந்தேகம் ஶ்ரீ சிரேஷ்டியின் மனதில் எழுந்தது. ஶ்ரீ ஶ்ரீபாதர் ஶ்ரீ சிரேஷ்டியின் தாடையை வருடி "என் அருமை தாத்தா, ஏன் சந்தேகப் படுகிறீர்கள்? நீங்களும் உங்கள் குடும்பமும் என்னைப் மறக்காமல் இருக்கும் வரையில் நானும் என் சக்தியும் உங்கள் விளைநிலத்தில் கண்ணுக்கு தெரியாத உருவத்தில் உலாவி கொண்டிருப்போம். ஆன்மீகத் தேடல்களில் இருப்பவர்கள் தங்கள் வீடுகளில் என் காலடி சப்தத்தை கண்டிப்பாக கேட்பார்கள்! அனகாதேவியுடன் கூடிய அர்த்தநாரீஸ்வர உருவமான ஶ்ரீ அனகா சமேத தத்தாத்திரேயர் உங்கள் கண்முன் அவதூதராக ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப உருவத்தில் இருக்கிறது. எந்த சந்தேகமும் படாதீர்கள். நான் சுமதி மகாராணிக்கு மகனாகப் பிறப்பதற்கு முன்பே அவள் முன் தோன்றி எனக்குத் திருமணம் செய்து வைக்க எந்த முயற்சியும் செய்யக்கூடாது என்றும் அப்படி முயற்சித்தால் நான் கண்டிப்பாக வீட்டை விட்டு சென்று விடுவேன் என்றும் உறுதியாக கூறியிருந்தேன். தூய்மையான பக்தியினால் என்னைச் சிறை பிடித்த ராஜரிஷி நீங்கள் என்பதால் உங்களுக்கு அனகா தேவியுடன் இருக்கும் என்னுடைய அனகா உருவத்தை காண்பித்தேன். ஶ்ரீ ஶ்ரீபாதரின் முன்னிலையில் எந்த செயலும் காரணம் இல்லாமல் நடக்காது. படைப்பின் செயல்முறை மிக மிக வினோதமானது. செயல்கள், அதன் விளைவுகள் மற்றும் நேரம்,

அது நடைபெறும் இடம் ஆகியவற்றை நான்தான் முடிவு செய்வேன். என் செயல்கள், லீலைகள் மற்றும் அற்புதங்களினால் அறிவில்லாதவர்களுக்கு ஞானம் வழங்குவது என்னுடைய அவதாரத்தின் ஒரு பகுதி வேலை” என்றார்.

அப்படி கூறிக்கொண்டே ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒளிப்பிழம்பாக மாறி மா மரத்திற்கு அருகில் சென்றார். நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த இடையனும் விவசாயப் பெண்ணும் பேரொளியாக மாறி ஸ்ரீ ஸ்ரீபாதருக்குள் ஐக்கியமானார்கள். பருவம் இல்லாத போது மாம்பழம் முளைப்பது ஒரு சாத்தியமற்ற விஷயம் என்றால் எங்கள் கண்முன்னே மாமரத்தில் மாங்காய் முளைத்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அதைப் பறித்தார். அவரின் தொடுதல் அதன் மீது நன்றாக பட்டவுடன் எங்கள் கண்முன்னேயே அது பழுக்கத் தொடங்கியது. எப்படி ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு உணவையும் இனிப்பையும் ஊட்டுவாளோ அதே போல் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ சிரேஷ்டிக்கு பழுத்த மாம்பழத்தை ஊட்டி விட்டார். ஸ்ரீ சிரேஷ்டி அந்த மாம்பழத்தைச் சாப்பிடும் போது சிறுவனை போல அழுதார். ஆயிரம் அன்னையின் அன்பை விட ஸ்ரீ ஸ்ரீபாதரின் அன்பு உயர்ந்தது. அவருடைய கண்களில் இருந்து கருணையும் அன்பும் பொழியும் போது மூன்று சக்திகளின் உருவகமான, அனகா தேவியைப் போல தோற்றம் அளிப்பார். அந்த மாம்பழத்தின் கொட்டை, ஒரு வேலைக்காரன் முதலாளியின் ஆணைக்கு காத்திருப்பது போல ஸ்ரீ ஸ்ரீபாதர் முன் நின்றது. அவர் கையசைத்ததும் மேலே பறந்து சென்றுவிட்டது. அது மாம்பழத்தின் கொட்டையாக இருந்தபோதும் அது ஒரு ஒளிபொருந்திய பொருளாக மாறியது.

ஸ்ரீ ஸ்ரீபாதர், “சிலர் மிகவும் பிடிவாதமாக முதலில் விதை வந்ததா அல்லது மரம் வந்ததா என்று விவாதம் செய்வார்கள். எனினும்,இவை இரண்டிற்கும் முன்பே ஒன்று இருந்தது. அதுதான் கடவுள். விதையில் இருந்து மரத்தை உருவாக்குவதா அல்லது மரத்தில் இருந்து விதையை உருவாக்குவதா என்பது அவர் விருப்பத்தை பொறுத்துதான் இருக்கும். அவருடைய தீர்மானத்தில் இருந்து சப்தரிஷிகள் கூட மீற நினைக்க முடியாது. ஒரு பரமாத்மாவுக்கு கறை படிந்தால் அது ஜீவாத்மா என்று அழைக்கப்படும். கறையில்லாத ஜீவன் பரமாத்மாவுடன் கலந்துவிடும். ஒரு ஜீவன் பரமாத்மாவுடன் கலந்துவிட்டால் அதன் தன்மைகள் அனைத்தும் வறுத்த விதைகள் (முளைக்காத) போல் ஆகிவிடும். இருப்பினும் பரமாத்மா அந்த ஜீவனை படைப்பின் சுழற்சிக்கு மீண்டும் கொண்டு வர நினைத்தால் அதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. எனினும் அவருடன் கலந்த ஜீவன் படைப்பிற்குள் கொண்டுவரப்பட்டால் , அந்த மனிதன் ஒரு குறிக்கோளுக்காகப் பிறவி எடுத்து கடவுளின் பணிகளை நிறைவேற்றுவார்.

சில ஜீவன்கள் பரமாத்மாவுடன் ஐக்கியமாக விரும்பாமல் ஸாமீப்ய முக்தியில் (பரமாத்மாவுக்கு அருகில்) இருந்து கொண்டு பேரானந்தத்தை அனுபவிப்பர். பரமாத்மா அதுபோல இருக்கும் ஜீவன்களை கூட மீண்டும் ஒரு நோக்கத்திற்காக பிறக்க செய்து கடவுளின் பணிகளை செயல்படுத்துவார். அவர்களின் காரண

ஜென்மம் முடிந்தவுடன் அவர்கள் மீண்டும் ஸாமீப்ய முக்தியில் இருந்து கொண்டு தெய்வீகப் பேரானந்தத்தை அனுபவிப்பர். இந்த வழியில்தான் ஒரு ஜீவனின் விருப்பத்திற்கு ஏற்ப துவைத (இருமை) அல்லது விசிஷ்டாத்வைத (விசேஷமான துவைதம்) அல்லது அத்வைத (இருமை அல்லாத) நிலை அளிக்கப்படும்.

ஆகவே துவைதம் அல்லது விசிஷ்டாத்வைதம் அல்லது அத்வைதம்தான் சிறந்தது என மக்கள் தர்க்கம் செய்வது சரி கிடையாது. ஒவ்வொரு நொடியும் படைத்தல்,காத்தல்,அழித்தல் நடந்து கொண்டே இருக்கிறது. ஒரு கல்பத்தின் முடிவு ஏற்படும் போது பிரம்மா,விஷ்ணு மற்றும் ருத்ரன் பரமாத்மாவின் வெளிப்படுத்தாத பேரானந்த நிலையில் நிலைத்திருப்பர். அவர்கள் மகா சங்கல்பத்தின்(மிகப்பெரிய திட்டம்) படி மீண்டும் வெளிப்படுத்தும் நிலைக்கு திரும்பி எதிர்காலத்திற்காக புதிதாக உருவாக்கப்பட்ட பிரபஞ்சங்களில் படைத்தல்,காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவைகளை நிகழ்த்துவர். வரும் கல்பத்தில் ஒன்பது இலக்கணங்களும் அறிந்த ஞானியான ஹனுமான் பிரம்மன் ஆவார். ஜீவன்களுக்கு அவரவர்களின் திறன் மற்றும் தகுதிக்கேற்ப பிரபஞ்சத்தை நிர்வாகிக்கும் பங்கு அளிக்கப்படும். ஆகவே இந்தப் படைப்பில் இருக்கும் கோடானுகோடி பிரபஞ்சங்களின் நிர்வாகத்திற்காக பணியில் இருக்கும் தெய்வீக சக்திகளும் எண்ணற்றவை. இந்த தெய்வீக சக்திகளுக்கு இடையூறாக இருக்கும் துஷ்ட சக்திகளும் எண்ணற்றவை.

முகமதியர்கள் உருவமில்லாத நற்குணமுடைய ஒன்றை அல்லாஹ் என்று அழைக்கிறார்கள். கிறிஸ்துவர்கள் உருவமில்லா நற்குணமுள்ள ஒன்றை ஜெஹோவா என்று அழைக்கிறார்கள். அவர்கள் அதில் குடிகொண்டிருக்கும் சைதன்யத்தை, படைப்பில் பிரதிபலிப்பை இயேசு-கடவுளின் மகன் என்ற பெயரிட்டிருக்கிறார்கள். அமைதி, மரியாதை, அன்பு மற்றும் கருணை ஆகியவற்றைப் பேணுகிற அந்த அற்புதமான சைதன்யத்தை பரிசுத்த ஆவி என்று அழைக்கிறார்கள். அனைத்து தர்மங்கள், மதங்கள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றில் விளக்கப்பட்டுள்ள சுயமான பிரகாசத்துடன் ஒளிர்வது நான்தான். அவரவரவர்களின் விருப்பம், நாட்டம் மற்றும் அவர்கள் பின்பற்றும் பாதையில் உணரும் பல வகையான தத்துவங்கள் நான்தான். நான் அனைத்து வகையான அம்சங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்பதால் சாத்தியம் அல்லது சாத்தியம் இல்லை என்பதற்கு ஆளாக மாட்டேன், ஆகவே எனக்கு தனித்துவமான கொள்கை கிடையாது. நான் எல்லா ஆண் மற்றும் பெண் தெய்வங்களில் பிரகாசமுட்டும் ஒளியுடன் திகழ்கிறேன்,ஆகவே அனைத்து வழிபாடுகள் மற்றும் பாராயணங்கள் அந்தந்த உருவம் வழியாக என்னிடம் மட்டுமே வந்து சேரும். நான்தான் அனைவருக்கும் அருள் புரிகிறேன். கலிபுருஷனின் மாயை நிறைவுறும் போது அனைத்து மதங்களுக்கும் சாராம்சமான சனாதன தர்மத்தின் உருவகம் நான்தான் என்ற ஞானம் உதிக்கும். ஆர்வமுள்ள ஒருவன் புற நடைமுறைகளின் மூலமாகவோ அல்லது அக நடைமுறைகளின் மூலமாகவோ என்னை அடையலாம். என்னை புறம் மூலமாகவோ அல்லது அகம் மூலமாகவோ பின்தொடரும் ஆன்மீக ஆர்வலரை எப்போதும் கவனித்து கொள்வேன். அவர்களை அன்புடன் அழைக்கும் ஒருவன் நான்தான். வேதங்களில் உண்மை,ஞானம் மற்றும்

முடிவில்லா தன்மையை பிரம்மம் என்று அறிவித்துள்ளனர். சத்ய, ஞான மற்றும் ஆனந்த(உண்மை என்ற தெய்வீகம்,ஞானம் மற்றும் நித்தியம்) பிரம்மன் நான்தான். நாத்திகருக்கு கடவுள் இல்லை என்பதை போதிப்பதும் நான்தான். கடவுளை வெகுவாக புகழும் ஆத்திகருக்கு அவரின் இருப்பை உணர்த்துவதும் நான்தான். அனைத்து குருக்களுடைய உருவகம் நான்தான். சத்யலோகம், சத்ய நாமம்,கோலோகம் மற்றும் மகா சூன்யம் போன்ற அனைத்து ஆன்மீக முயற்சிகளின் எல்லா நிலைகளிலும் ஒளிரும் சுய ஒளி நான்தான். என்னிடம் முழுமையாக சரணடைந்து எல்லா சுமைகளையும் என் மேல் சுமத்தி என்னை தூய்மையான பக்தியுடன் வழிபடுபவர்கள் அனைவரையும் எப்போதும் கவனித்து கொள்வேன். நான் ஸ்ரீ ஸ்ரீபாதர். நான் ஸ்ரீவல்லபர். தாத்தா, நீங்கள் இப்போது பார்க்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் வேறு யாரும் அல்ல பழைய யுகத்தில் இருந்த அத்ரி மற்றும் அனுசுயாவின் மகன்தான். பாரத்வாஜ முனிவருக்கு செய்த சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக நான் பீதிகாபுரத்தில் அவதரித்திருக்கிறேன்" என்றார்.

பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் வழிந்தது. அவர் ஸ்ரீ ஸ்ரீபாதரை இறுக்கமாக தழுவிக்கொண்டார். அவர் அனுபவித்த பரவசத்தை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. சிறிது நேரத்திற்கு பின்னர் சிரேஷ்டி, **"என் செல்வமே! தங்கமே! உன்னுடைய கருணை எப்போதும் எங்கள் குடும்பத்தின் மீது இருக்க வேண்டும், எங்கள் கோத்திரத்திற்கு அருள் புரிய வேண்டும்! எங்கள் ஆர்யவைசிய குலத்தின் மீது நீ அருள்புரிய வேண்டும்!"** என்று கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுதலை ஏற்ற ஸ்ரீ ஸ்ரீபாதர், "தாத்தா, ததாஸ்து! ஒரு பிராமணனுக்கு ஒரு வரம் கேட்க உரிமை உண்டு. க்ஷத்திரியன் இரண்டு வரங்களும், வைசியன் மூன்று வரங்களும், சூத்திரன் நான்கு வரங்களும் கேட்க உரிமை உண்டு. நான் நீங்கள் கேட்ட மூன்று வரங்களையும் அளிக்கிறேன். நான் செய்யும் இந்த சத்தியத்திற்கு முப்பத்து முக்கோடி தேவர்களும் சாட்சி. நான் பிறந்த இடமான என் தாய்வழி தாத்தாவான ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மகா சமஸ்தானம் அமைக்கப்படும். உங்கள் வம்சத்தின் 33வது தலைமுறை,ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் 33வது தலைமுறை மற்றும் ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் 33வது தலைமுறை நடக்கும் போது உங்கள் 33வது தலைமுறையைச் சேர்ந்த ஒருவரைக் கருவியாக கொண்டு நானே என்னுடைய சமஸ்தானத்தை ஸ்தாபிப்பேன். உங்கள் வம்சத்தை தோற்றுவித்த மூதாதையரான மார்க்கண்டேய மகரிஷியை வியாழக்கிழமை மதியம் தோறும் எனக்கு படைக்கப்படும் நெய்வேத்தியத்தின் சில பகுதியை பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிடுகிறேன். இதன் மூலம் மார்க்கண்டேய கோத்திரத்தில் பிறந்தவர்கள் பயனடைவார்கள்.

நீங்கள் விரும்பியபடி ஆர்யவைசிய குலத்தில் பிறந்தவர்கள் என்னுடைய அருளைப் பெறுவார்கள். **ஆர்யவைசியர்களுக்கு ஆளும் சக்தியை அளிக்கிறேன். அந்த நோக்கத்தை பொருட்டு, ஒரு ஆர்ய வைசியர் பாரதத்தின் ஆட்சி பொறுப்பேற்பார், அவர் பீதாகபுரத்திற்கு விஜயம் செய்வார். சிறப்பான நாடி ஜோதிடரின் கணிப்புப்படி அவர் என்னுடைய அபரிமிதமான அருளைப் பெறுவார்.** அதற்குப் பின்னர் நேபாளத்தில்

இருந்து பல பக்தர்கள் என்னை தரிசிக்க பீதிகாபுரம் வருவர். என்னுடைய ஆணை பாறையில் பொறிக்கப்பட்ட ஒன்று போன்றது. என்னுடைய சட்டத்தை மீற இந்த படைப்பில் உள்ள எந்த உயிரினத்தினாலும் முடியாது.

தாத்தா, என்னுடைய வெற்றிமணி பலவகையான மாறுதல்களுக்கு ஆளாகி என்னுடைய சிலை பிரதிஷ்டை செய்யப்படும் இடத்திற்குக் கீழ் உள்ள பூமியின் உள் அடுக்கில் இருக்கும். வருங்காலத்தில் அந்த வெற்றிமணி அந்த இடத்தை அடைந்து விட்டது என்பதன் அடையாளமாக அந்த இடத்தைத் தோண்டும் போது சில மண்பானைகள் கிடைக்கும். சிறந்த புண்ணியம் பெற்றவர்களால் மட்டுமே பீதிகாபுரத்தில் அமையவிருக்கும் மகா சமஸ்தானத்திற்கு பண உதவி செய்ய முடியும். ஏதாவது ஒரு பிறவியில் ஆர்யவைசிய குலத்தில் பிறந்தவர்கள் மற்றும் பீதிகாபுரத்துடன் தொடர்பு உடையவர்களால் மட்டுமே பண உதவி கிடைக்கும். எதையும் நம்பாதவர்கள், முட்டாள்கள், மிகவும் ஆணவம் கொண்டவர்கள் மட்டும்தான் அனைத்திற்கும் சாட்சி கேட்பார்கள். என்னுடைய சரிதாம்ருதத்தை பாராயணம் செய்வதால் விருப்பங்கள் நிறைவேறும். பீதிகாபுரத்தில் உள்ள என் சமஸ்தானத்தில் நடைபெறும் புண்ணிய காரியங்களில் பங்கேற்பவர்களின் தடைகள் விலகும். நான் பிறந்த நட்சத்திரமான சித்திரை நட்சத்திரத்தில் என்னை பக்தியுடன் வழிபட்டால் கடன் தொல்லைகள் விலகும்;பெண்களுக்குத் தகுந்த மணமகன் கிடைப்பர்; பேய்,பிசாசு,அரக்கன் மற்றும் கண்ணுக்குத் தெரியாத ஆவிகளிடமிருந்து வரும் இன்னல்கள் விலகும். ஸ்ரவண மாதம் பௌர்ணமி அன்று ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி எனக்கு ராக்கி அணிவித்தாள். அன்றைய தினம் என் அருகில் பீதிகாபுரத்தில் இருப்பவர்களுக்கு சித்ரகுப்தன் (மனிதனின் அனைத்து கர்மாக்களையும் பதிவிடுபவர்) சிறந்த புண்ணியம் அருளுவார். நானே என் மேல் ஆதிக்கம் செலுத்துபவன். என்னுடைய சரிதாம்ருதம் சுயமான தரம் பெற்றது. என்னுடைய லீலைகள் அந்த தரத்திற்கான சான்றுகள். சூரியனை சூரியன் என்று கூறுவதற்கு வேறு ஏதாவது சான்று வேண்டுமா என்ன?"

ஸ்ரீ ஸ்ரீபாதருடைய லீலைகள் மற்றவர்களுக்கு சாத்தியம் இல்லை. அடுத்த நாள், வல்லபேஸ்வர சர்மா தம்பதி, சுப்பண்ண சாஸ்திரி, லிங்கண்ண சாஸ்திரி மற்றும் நான் ஆகியோர் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க குருகட்டா சென்றோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களை மிகுதியாக ஆசீர்வதித்தார். அவர் சிரிப்புடன் **"ஆஹா, என்ன மாதிரியான விவாதங்கள்! என்ன விவாதங்கள்! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சமஸ்தானம் அமைய பல காலங்கள் கடக்க வேண்டும். மல்லாடி, வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் வத்சவாயீ குடும்பங்களின் மீது பட்ட கடன் எப்போது தீரும்?"** இவ்வாறு கூறிவிட்டு, அவர் மௌனமானார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 20

## விஸ்ஸாவதானி அளித்த தகவல்கள் - ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக புனித உருவத்தை பற்றிய வர்ணனை

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக புனித உருவத்தின் வர்ணனை

விடியற்காலையில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் பெற நான் குருகட்டாவை அடைந்தேன். தெய்வீகப் பேரொளி அவரிடம் இருந்து வெளியேறிக்கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகக் கண்கள் அமைதி, கருணை, அன்பு மற்றும் ஞானம் ஆகியவற்றை போராளியாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அவருடன் இருப்பவர்கள் கேட்காமலேயே அமைதி, கருணை, அன்பு மற்றும் ஞானத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். பிரபஞ்சத்திற்கே தலைவரான உருவமற்ற கடவுள், மனித உருவம் எடுத்து என் கண் முன்னே இருப்பது விவரிக்க முடியாத சந்தோஷம் மற்றும் களிப்பை என் உடல் முழுவதும் பரவச் செய்தது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை அன்புடன் சைகை செய்து தன்னை வணங்குமாறு கூறினார். அவர் எனக்கு சைகை செய்த போது அவர் தெய்வீகக் கரங்களில் இருந்துக் விவரிக்க முடியாத அன்பு மற்றும் அமைதி அதிர்வலைகள் எழும்பி என் மனது, இதயம் மற்றும் உடலில் இடம் பெயர்ந்து, நான் பெயர் தெரியாத உலகங்கங்களுக்கு பயணப்படுவது போல் உணர்ந்தேன். பக்தியுடன் அவருடைய புனிதமான பாதங்களை தொட்டேன். என் உடல் லேசானது. என் கண்களில் இருந்து கருப்பு ஒளி வெளியாவதை கவனித்தேன். சிறிது நேரத்திற்கு பின்னர் கருப்பு ஒளி என் உடலின் அனைத்து அங்கங்களில் இருந்தும் வெளியானது. அந்த கருப்பு ஒளி அசிங்கமான மனித உருவம் எடுத்தது. அந்த உருவம் என்னை ஒத்ததாக இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்து கொண்டே, **“உன்னைப் போலவே இருக்கும் அந்த கருப்பு உருவம் யார் என்று கவனித்தாயா?”** என்றார். நான் அதற்கு, **“ஸ்வாமி, அந்த உருவம் என்னைப் போலவே இருப்பதை கவனித்தேன், ஆனால் அது ஏன் என் உடலிலிருந்து வெளியானது என்பது எனக்கு தெரியவில்லை. அந்த உருவம் யார் என்பதும் எனக்கு தெரியவில்லை”** என்று பதிலளித்தேன்.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், “என் மகனே, அந்த கருப்பு உருவம் உன் பாவ உடல். அவன் உன் பாவம் நிறைந்த தனித்தன்மை. இப்போது உன் உடலில் மீதம் இருப்பது புனிதமான தனித்தன்மை. ஒவ்வொரு மனித உடலிலும் பாவத்தன்மை மற்றும் புனிதத்தன்மை இருக்கும். பாவம் மற்றும் புண்ணியத்தில் இருந்து விடுதலை

பெறுவதுதான் மோக்ஷம். பிராமணனாகப் பிறந்த ஒருவன் ஒழுக்கத்துடன் இருந்துதான் பாவம் நிறைந்த உடலை எரிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் தன்னுடைய புண்ணியங்களின் வலிமையை கொண்டு மற்றவர்களை உயர்த்த வேண்டும். ஒரு பிராமணன் முக்கியமாக சாத்வீக பண்பு (தூய்மை,அமைதி மற்றும் நல்லிணக்கம்) உடையவனாக இருக்க வேண்டும். அவர் வேதங்களில் கூறப்பட்டுள்ளது போல சடங்குகளை மற்றவர்கள் நலனுக்காக நடத்தி, அவர் ஜீவனத்திற்குத் தேவையான பணத்தை மட்டும் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த பணத்தை பெற்றுக் கொள்வதால் அவர்களின் பாவங்களையும் சேர்த்து பெற்றுக் கொள்வார்கள். அந்த பாவங்களை தன்னுடைய தீவிரமான தவம் என்னும் நெருப்பில் எரிக்க வேண்டும். அப்படிப்பட்ட நடைமுறையில் வாழும் பிராமணர்கள் மட்டும்தான் பிராமணன் என்ற வார்த்தைக்கு தகுதியானவர்கள். அப்படி இல்லை என்றால் சாதி என்பதால் மட்டுமே பிராமணன். அவன் பிரம்ம ஞானம் என்னும் பேறு பெறும் பிராமணன் ஆக முடியாது. என் தாய்வழி தாத்தாவான ஸ்ரீ பாப்பண்ணார்யா, என் தந்தை அப்பலராஜசர்மா ஆகியோரை உண்மையான பிராமணர் என்று கூற முடியும். என் தாய்வழி பாட்டி ராஜமாம்பா மற்றும் என் அன்னை சுமதி மஹாராணி ஆகியோர் மிகவும் புனிதம் வாய்ந்தவர்கள். அவர்களை நினைத்துக் கொண்டாலே, உயிரினங்களிடம் உள்ள ஆயிரக்கணக்கான பாவங்கள் உடனடியாக காணாமல் போய்விடும்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு ஸ்ரீ ஸ்ரீபாதர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் தன்னுடைய புருவ மத்தியைத் தொட்டுவிட்டு தன் வலது கையை நீட்டினார். அவருடைய உள்ளங்கையில் இருந்து அற்புதமான ஒளி எழும்பியது. யாகத்திற்குத் தேவையான புனித பொருட்கள் ஒன்றாக உருவானது. பின்னர் தங்கம், வெள்ளி, சில இனிப்பு பழங்கள் மற்றும் பூக்கள் உருவானது. அதற்குப் பின் புனிதத் தீ மூண்டது. என் உடலில் இருந்து வெளியேறிய பாவம் நிறைந்த மனிதன் பயத்தில் அழத் தொடங்கினான். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய கண்ணசைவில் அந்தப் பாவம் நிறைந்த மனிதனை தெய்வீக தீயினுள் விழச் செய்து சாம்பலாக்கினார். அந்த மனிதன் தன் விருப்பத்திற்கு மாறாக தீயில் விழுந்தான். நெருப்பு அவன் உடல் முழுவதும் பரவியது. நான் **"ஸ்வாமி, நான் எரிக்கப்படுகிறேன்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!"** என்று அழுதேன். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தெய்வீகக் கண்களில் இருந்து வந்த ஒளி அலை என்னைத் தொட்டது. என் உடல் குளிர்ச்சி அடைந்தது. பாவம் செய்தவனை யாகத்தீ எரித்தது. பலவகையான மின்சாரம் என் உடலில் எழும்பியது. என் குண்டலினி எழுப்புவது என்னால் உணர முடிந்தது. என்னுடைய நாடித்துடிப்பு நின்றது. என் இதயத்துடிப்பு நின்றது. நான் சமாதி நிலையில் விழுந்தேன்.

அது மதியம். அன்று வியாழக்கிழமை. ஸ்ரீ ஸ்ரீபாதர் குளித்த பின்னர் பக்தர்கள் சூழ இருந்தார். பக்தர்கள் அளித்த பிக்ஷையை தன் கரங்களால் தொட்டார். பக்தர்கள் மீது தன் கமண்டலத்தில் உள்ள நீரை தெளித்தார். கொஞ்சம் உணவு யாகத்தின் பிரசாதமாக எட்டு திசைகளிலும் வைக்கப்பட்டது. கோடிக்கணக்கான குயில்கள் கூவுவது போல இனிமையான குரலில் என் பெயரைக் கூறி அழைத்தார். அங்கு

இருந்த அனைத்து மக்களையும் உணவு உண்ணுமாறு ஆணையிட்டார். அவர் என்னை தனக்கருகில் வருமாறு கூறினார். அவர் தன்னுடைய கண்ணை ஒரு நொடி மூடினார். பின்னர் தன்னுடைய கண்ணை மீண்டும் திறந்து தன் பார்வையை என்னை நோக்கி செலுத்தினார். அவர் கரங்களில் வெள்ளி பாத்திரம் தோன்றியது. அதில் வட இந்திய உணவான அல்வா நிரம்பியிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு இந்த அல்வா மிகவும் பிடிக்கும்.

ஸ்ரீ ஸ்ரீபாதர், "என் பக்தர்கள் பக்தி என்னும் பந்தத்தால் என்னைக் கட்டி விடுகிறார்கள். உண்மையான அக்கறை மற்றும் அன்பினால் மட்டுமே என்னைக் கட்டி வைக்க முடியும். ஸ்ரீ சிரேஷ்டி வீட்டில் அவர் மனைவி வெங்கட சுப்பமாம்பா இந்த அல்வாவை எனக்காக தயாரித்துவிட்டு நான் இந்த இனிப்பை உண்ட பின்னர்தான் நான் உணவு உட்கொள்வேன் என்று உறுதி எடுத்துள்ளார். அவர்களுடைய பேத்தி லக்ஷ்மி வாசவி எனக்கு ராக்கி அணிவித்துள்ளாள். அவள் கணவரின் ஜாதகப்படி அவருக்கு மரணம் சம்பவிக்க போவதாக ஜோசியர்கள் கணித்ததாக கூறினாள். அவள் கணவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தீக்ஷை அனுசரித்தாள். அவள் எனக்கு ராக்கி அணிவித்தது உண்மை என்றால் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு சுமங்கலியாக இருக்க அருளவேண்டும் என்று அறிவுறுத்தினாள். எனக்கு வேறு வழி இல்லை. நான் சிரஞ்சீவி லக்ஷ்மியை லக்ஷ்மி சௌபாக்யவதியாக இருக்க ஆசீர்வதித்து பூக்கள்,வளையல்கள் மற்றும் குங்குமம் அளித்தேன். என் தாய்வழிப் பாட்டியாக கருதும் வெங்கட சுப்பமாம்பா அன்புடன் தயாரித்த அல்வாவை என்னுடன் எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். பல பிறவிகளில் பெற்ற பாவங்கள் அனைத்தும் இந்த அல்வா அழித்துவிடும். என் பக்தர்கள் வீட்டில் படைக்கப்படும் பிரசாதங்களை சூக்ஷ்ம கதிர்கள் மூலம் நானே பெற்றுக்கொள்வேன். எனினும் இது ஸ்ரீ சிரேஷ்டியின் வீட்டில் தயாரிக்கப்பட்ட மகாப்பிரசாதம் என்பதால் நானே ஸ்தூலமாக சென்று அதைப் பெற்றுக் கொண்டேன். நீயும் இந்த பிரசாதத்தை எடுத்துக்கொள்" என்றார். நான் பிரசாதத்தை எடுத்துக்கொண்டேன். அந்த பிரசாத்தின் இனிப்பை யாரால் வர்ணிக்க முடியும்? பிரசாதத்தின் சிறிதளவை வானத்தில் தூக்கி எறிந்தார். அது வானத்தில் எங்கோ சென்றுவிட்டது. கொஞ்சம் பிரசாதத்தை தன் கையில் இருந்து தவறவிட்டார். பின்னர் பூமி பிளந்து கொண்டு பிரசாதத்திற்கு வழிவிட்டது. பிரசாதம் பூமிக்குள் சென்றதும் பிளந்த பூமி சாதாரண நிலைக்கு திரும்பியது.

அங்கு இருந்த பக்தர்களுக்கும் அந்த பிரசாதம் வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அவதாரம் எவரையும் ஏமாற்றாது. அந்தப் பிரசாதம் பலருக்கு விநியோகிக்கப்பட்டாலும் அது குறையவே இல்லை. இதற்கிடையில் பத்மசாலியர் சாதியைச் (கைவினை தொழிலாளர்கள் சாதி) சேர்ந்த குருசரண் அங்கு வந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருக்கும் பிரசாதம் அளித்தார். பின்னர் அந்த வெள்ளிப் பாத்திரத்தை கிருஷ்ணா நதியில் தூக்கி எறிந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் உற்றுநோக்கி, **"பத்மசாலியர் மார்க்கண்டேய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். சில காரணங்களால் அவர்கள் அசைவம் உண்ணுபவர்கள் ஆகிவிட்டனர். என் முன்னிலையில் எந்த காரியமும் காரணம்**

**இல்லாமல் நடக்காது. குருசரணா! நீ எனக்கு பல நாட்களாக நைவேத்தியம் செய்து கொண்டிருக்கிறாய். ஸ்ரீகுருவின் பாதங்களில் தஞ்சம் அடைந்து ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாய். இன்று ஸ்ரீகுருவின் கைகளால் பிரசாதம் பெற முடிந்தது. உனக்குத் தெரிந்த அளவுக்கு குரு தத்துவத்தைப் பற்றி சங்கர் பட்டுக்கு விளக்கு. இன்று மதியம் நான் யோக நித்திரையில் (யோக உறக்கம்) மானச சஞ்சரம் (மனதின் சூக்ஷமத்தில் பயணிப்பது) செய்வேன். என்னை அப்போது யாரும் சந்திக்க வர கூடாது. என்னுடைய ஓய்வை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது**" என்று கூறினார்.

ஸ்ரீ குருசரண் என்ற பெயருடைய சிறந்த பக்தரை நான் சந்திக்க வேண்டும் என்பது கண்டிப்பாக ஸ்ரீகுருவுடைய விருப்பம்தான்! ஸ்ரீ குருசரண் யோகப்பாதையில் நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தார். நான் அவரிடம் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பண்புகளை விவரித்து என்னை புண்ணியவான் ஆக்குமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் குருசரண் நிதானமாக விவரிக்கத் தொடங்கினார். "பல கோடி கணக்கில்லா பிரபஞ்சங்கள் படைக்கப்பட்டு, காக்கப்பட்டு மற்றும் அழிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்த உருவமற்ற, குணங்களற்ற தத்துவம் பழைய யுகத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயராக அவதரித்து உருவம் மற்றும் குணம் பெற்றது. அந்த தத்துவம் இப்போது இந்த யுகத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப உருவத்தில் அவதரித்துள்ளார். இந்த அவதாரம் உருவமற்றதாக இருப்பினும் மனித உருவத்தில் தோன்றியுள்ளது; குணமற்றதாக இருப்பினும் குணம் உள்ளவர் போல தோன்றுகிறது; விரிவான அனைத்து தெய்வங்களும் ஒரே தெய்வமாக காட்சியளிக்கிறார். அனைத்து விதமான யோகப்பாதைகளுக்கும் இவர்தான் இறுதி இலக்கு. இந்த படைப்பின் தொடக்கம் முதல் துறவிகளின் தனிப்பட்ட பயிற்சிகள் மற்றும் தவங்கள் மூலம் தோன்றிய அனைத்து தெய்வங்களும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக வெளிப்பாடுதான்.

பழைய காலங்களில் துறவிகளுக்குப் பல தெய்வீக சக்திகள் இருந்தன. வசிஷ்டர் அவிசு (யாகத்தீயில் இடப்படுபவை) கொண்டு சடங்குகள் செய்வார். விஸ்வாமித்ரர் மற்றும் ஜமதக்னி அவிசு இல்லாமல் சடங்குகள் நிகழ்த்தும் வழிமுறை கொண்டிருந்தனர். மந்திரங்களின் ரகசியம் மற்றும் அந்த சடங்கின் ரகசியம் தெரிந்தவருக்கு மட்டும்தான் அந்த சடங்கை செய்ய முடியும் அல்லது முடியாது அல்லது வேறு வழியில் நிகழ்த்தலாம் என்பது தெரியும். ஸ்ரீ ஸ்ரீபாதர் சர்வ வல்லமை படைத்தவர். அவருக்கு கர்மாவின் ரகசியம் தெரியும் என்பதால் ஒவ்வொருவரை நடத்தும் விதம் வேறுபடும். அன்பின் சக்தி அனைத்துவிதமான சக்திகளையும் விட உயர்ந்தது. அதன் வலிமை எல்லையற்றது. பாப்பண்ணார்யா, நரசிம்ம வர்மா மற்றும் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஆகியோர் வினோதமான யோக சக்திகள் நிறைந்தவர்கள். இவர்கள் மூவருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதர் மீது அளவில்லா அன்பும் பக்தியும் உண்டு. அவர்களின் அன்பின் சக்தியைக் கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாதரை எதுவேண்டுமானாலும் நிகழ்த்தி தர வற்புறுத்த முடியும். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களுடைய விருப்பத்திற்கு இசைந்தாக வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர் இயற்கையாகவே அனைத்து பெண்களிடமும் தன் தாயைக் காணும் குணம் பெற்றவர். எவரேனும் ஸ்ரீ ஸ்ரீபாதரை சிறிய குழந்தை போல் பாவித்து அன்பு செலுத்தி வணங்கினால், ஸ்ரீ ஸ்ரீபாதர்

அவர்கள் வீட்டு சிறு குழந்தை போல நடந்து கொள்வார். இது மஹாமாயை. யோகிகள் மற்றும் ஞானிகளால் மீண்டும் மீண்டும் போற்றப்பட்ட குணங்களற்ற உருவமற்ற பரப்பிரம்மன் தெய்வீகக் குழந்தையாக பீதிகாபுரத்தில் பிறந்து தன் லீலைகளை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்பது தர்க்கத்தை மீறிய ஒரு விஷயம். வேதங்கள் மற்றும் சாஸ்திரங்களைப் படிப்பது, யோகப் பாதை, ஞானம் ஆகிய செயல்முறை மூலம் மட்டும்தான் கடவுளை அனுபவிக்கலாம் என்ற எண்ணத்தில் இருப்பவர்களுக்கு கடவுள் அந்தந்த முறையில், அந்தந்த பாதைகள் மூலம் அவரை உணரும் அனுபவம் அளிக்கிறார். சாஸ்திரங்கள் மூலம் கடவுள் அனுபவம் முறை படுத்தப்பட்டுள்ளது. எனினும், சாஸ்திரங்களைத் தாண்டிய ஒரு பாதையின் மூலமாகவும் கடவுளை உணர முடியும். கடவுள் அனைத்து விதத்திற்கும் அப்பாற்பட்டவர். ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகள் தர்கத்திற்கு ஏற்றது இல்லை. அவை முன்பு கேள்விப்படாத ஒன்று" என்றார்.

பின்னர் நான் ஸ்ரீ குருசரணரிடம் "ஐயா, ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் உங்களுக்கு முதலில் எப்போது கிடைத்தது? அந்த விவரங்களை எனக்கு கூறி புண்ணியவான் ஆக்குங்கள்" என்று வேண்டிக்கொண்டேன். அதற்கு குருசரண் "ஆஹா, ஒழுக்கமான பிராமணரே, நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. என்னுடைய பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணியங்களினால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகப் பொழுதுபோக்குகளை அவர் முன்னிலையிலேயே உங்களுக்கு விவரிக்கும் அதிர்ஷ்டம் பெற்றுள்ளேன். உங்களுக்கு ஸ்ரீ குருவின் அருளும் கருணையும் உள்ளது". இவ்வாறு கூறிவிட்டு அவருக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் முதல் தரிசனம் எப்படி கிடைத்தது என்பதை சுருக்கமாக விவரித்தார். "நான் பக்தர்கள் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தேன். ஸ்ரீ தத்தர் எங்கள் குடும்ப தெய்வம், அவரை குழந்தைப் பருவம் முதல் வணங்கிக் கொண்டிருந்தேன். எங்கள் குடும்பத்தில் பணக்கஷ்டம் மிகுதியாக இருந்தது. எவ்வளவுதான் ஸ்ரீ தத்தரை வணங்கிய போதும் பிரச்சனைகள் குறையவில்லை. மாறாக அவை அதிகரித்தன. சில மூத்தவர்கள் எனக்கு தத்தரின் அருள் கிடைக்கவில்லை என்றும் நான் வேறு ஒரு கடவுளை குடும்ப தெய்வமாக தேர்வு செய்து கொண்டு வணங்கினால் என் கஷ்டங்கள் தீரும் என அறிவுரை வழங்கினார்கள். நான் எந்த தெய்வத்தைத் தேர்வு செய்தால் என் பிரச்சனைகள் தீரும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள், அந்த எண்ணத்துடனேயே தூங்கிவிட்டேன். என் கனவில் ஒரு பயங்கரமான கசாப்புக்காரனைப் பார்த்தேன். அவன் ஒரு ஆட்டுக்கூட்டத்தை அன்புடன் மேய்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அவன் தன் கசாப்புக் கத்தியைக் கொண்டு சில ஆடுகளை வெட்டினான். அவன் கையில் வைத்திருந்த கத்தி எனக்கு பயத்தை உண்டாக்கியது. அவன் வானமே இடிந்து விழுவது போன்ற சத்தத்தில் "நான்தான் தத்தர்! நீ எந்த இறைவன் அல்லது இறைவியை வணங்கினாலும் அவை அனைத்தும் என்னுடையதுதான்! நீ வெறுமனே உன் கடவுளின் பெயரையும் உருவத்தையும் மாற்றினால் நான் மாறமாட்டேன். அதற்கு மேலாக நான் உன்னை விட்டுச் செல்லமாட்டேன். நீ என்னுடைய நிழல். என் நிழல் எப்படி என்னை விட்டு சென்று தனியாக இருக்கும்? நான்தான் அனைத்து தெய்வங்கள் மற்றும்

மனிதர்களின் விருப்பங்களை நிர்வாகிக்கும் சிறந்த தீர்மானம். நான்தான் ப்ரம்மம், என்னிடம் இருந்துதான் அனைத்து கடவுள்களின் அவதாரங்கள் வெளியாகின்றன! புலியின் வாயில் சிக்கிய மிருகம் கூட தப்பிவிடலாம், ஆனால் என் கையில் சிக்கிய நீ தப்பிக்க முடியாது. தத்த பக்தர்கள் சிங்கக்குட்டிகள் போல இருக்க வேண்டுமே ஒழிய கோழைகளாக இருக்கக்கூடாது. நான் சிங்கம் போன்றவன். சிங்கக்குட்டிகளுக்கு சிங்கத்திடம் எந்த பயமும் இருக்காது. அவை தன் விளையாட்டுகள் மற்றும் சேஷ்டைகள் மூலம் தன் தாய்க்கு வேடிக்கை காட்டும். நான் கண்டிப்பாக இந்த கத்தியால் உன்னை கொன்றுவிடுவேன். உன்னை காப்பாற்ற மூவுலகிலும் யாரும் இல்லை" என்றான்.

மிகுதியான பயத்தினால் நான் அழுதேன். அந்த நேரத்தில் என் கனவு கலைந்தது. வீட்டில் இருந்தவர்கள் விஷயத்தை கேட்டனர். என் கனவைப் பற்றி அவர்களிடம் கூறினேன். என் பூர்வ ஜென்ம கர்மாக்களின் பலன்கள்தான் வறுமைக்குக் காரணம் என்று அழுது புலம்பினேன். எங்களுடைய பணக்கஷ்டம் மேலும் மோசமானது. இதற்கு செத்துவிடலாம் என்று தோன்றியது. அடுத்த நாள் காலை ஒரு ஹரிதாஸ் (கடவுளை துதி பாடுபவர்) எங்கள் வீட்டிற்கு முன் தோன்றினார். அவர் கைகளில் மரத்தினால் ஆனஜாலரா வைத்திருந்தார். அவர் ஹரி நாமத்தை பாடிக்கொண்டிருந்தார். அரிசியை சேமித்துக்கொள்ள தலையின் மீது ஒரு பாத்திரம் வைத்திருந்தார். அவர் ஒரு வினோதமான ஹரிதாஸ். அவர் ஒரு பாத்திரத்தில் அத்தி மரத்தின் சிறு பகுதியை வைத்திருந்தார். வீட்டு வாசலில் நிற்கும் ஹரிதாஸுக்கு அரிசி கொடுக்காமல் இருந்தால் அது கெட்ட சகுனம். ஆகவே என் வீட்டில் அரிசியைத் தேடினேன், கடினமான முயற்சிக்கு பின்னர் கை நிறைய நொய் அரிசியை அவருக்கு அளித்தேன். அந்த நொய்யை அவர் வாங்கிக்கொண்டு, "ஐயா, நேற்று இரவு ஒரு கசாப்புக்காரன் குருசரண் என்னும் தத்த பக்தனைக் கொன்றுவிட்டான். எனினும் ஆச்சரியமாக அவனுடைய உயிர் சக்தி அவன் உடலை விட்டு பிரிந்து இந்த அத்தி மரத்தில் தங்கிவிட்டது. ஸ்ரீ தத்தாத்ரேயர் அத்தி மரத்தின் வேரில் வசிக்கிறார் என்பது நிலையான வாக்கு. இது சாதாரண செடி இல்லை. கோதாவரி பகுதியில் ஸ்ரீ பீதிகாபுரம் என்ற புண்ணிய க்ஷேத்திரம் உள்ளது. அந்த ஊரில் சுயம்பு தத்தர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்கிற உருவத்தில் உலாவுவதாக கூறப்படுகிறது. இந்தச் செடி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தாய்வழி தாத்தாவின் வீட்டில் உள்ள அத்தி மரத்தின் சந்ததியை சேர்ந்தது. இந்த செடியை உங்கள் வீட்டில் நட்டு எல்லா மங்களங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார். இவற்றைக் கேட்டதும் என் தலை சுற்றியது. நான் அந்த ஹரிதாஸிடம் "ஐயா, நான்தான் அந்த குருசரண். நான் கொலை செய்யப்படவில்லை. நான் ஒரு தத்த பக்தன்! நான் ஒரு கசாப்புக்காரனை என் கனவில் பார்த்தேன். அவன் தன் கத்தியால் என்னை கொன்றுவிடுவதாக எச்சரித்தான். ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய உடம்பு கிடைக்கவில்லை என்றால் அத்தி மரக்குச்சிகளை சவம் போல அடுக்கி இறந்தவருக்கு செய்யும் ஈமச் சடங்குகள் செய்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு மனிதனின் உயிர் சக்தி அத்தி மரத்தில் ஈர்க்கப்படுவதும் மற்றும் அதே நேரத்தில் உயிர் சக்தி அந்த

மனிதனின் உடலிலும் தங்கியிருப்பதும் பற்றி கேள்விப்பட்டதோ பார்த்ததோ இல்லை" என்றேன்.

## அத்தி மரத்தின் மகிமைகள்

பின்னர் ஹரிதாஸ் பலமாக சிரித்துவிட்டு, "நீ சொல்வது உண்மைதான்! நான் மறுக்கவில்லை! படைப்பின் மொத்த மர்மங்களும் ஆதிகுருவான ஸ்ரீ தத்தாத்ரேயருக்குத்தான் தெரியும். அவர் அடுத்த நொடி எதைக் குறிப்பிட போகிறார் என்பது சப்த ரிஷிகளுக்குக் கூடப் புரியாது. அப்படியிருக்க நான் என்ன? நீ என்ன? நீ உடல்ரீதியான மரணம் மட்டும்தான் மரணம் என்று நினைக்கிறாய். மரணத் தருவாய் நெருங்கும் போது, சத்குரு தன் சீடனை வெகுவான மனவேதனைகள், கொடூரமான அவமானங்கள், தாங்கமுடியாத தொல்லைகள் மற்றும் இழப்புக்களுக்கு ஆட்படுத்தி சேர்ந்திருக்கும் கர்மாக்களை அழித்து மறுபிறவி அருள்கிறார். ஒரு அவதாரத்தால் தன் பக்தனுக்கு சிறிய தொல்லைகள் ஏற்படுத்திக்கூட மறுபிறவி அருள முடியும். எனினும் ஸ்ரீ தத்தாத்ரேயர் தன் பக்தனின் உயிர்ச் சக்தியை அவர் வாழும் அத்தி மரத்திற்குள் இழுத்துக் கொண்டு, அத்தி மரத்திலிருந்து வெளியாகும் உயிர் சக்தியை கொண்டு பக்தனின் உடலைக் காப்பாற்றுகிறார். ஏதுமறியாத பக்தன் தன் உடலில் உள்ள உயிர்ச் சக்தியின் காரணமாகவேதான் உயிருடன் இருப்பதாக நினைத்துக் கொள்வான். ஆனால் உண்மையில் அத்தி மரத்தில் இருந்து வெளியாகும் உயிர் சக்தியானது தடையில்லாமல் பக்தனின் உடல்ரீதியான செயல்பாடுகளை நடத்திக் கொண்டிருக்கும். மரண நேரம் முடிவடைந்த நொடிக்கு முன்னதாக அத்தி மரத்தில் இருந்து பக்தனுக்கு அனுப்பப்படும் உயிர்சக்தி அவனுக்குள் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டு அவன் இன்னும் சில காலம் வாழ்வான். அத்தி மரத்தில் இருந்து மிகுதியான உயர்சக்தி வெளியானாலும், அம்மரத்தில் எந்த குறையும் இருக்காது. ஸ்ரீ தத்தாத்ரேயர் ஒவ்வொரு அத்தி மரத்தின் அடிப்பகுதியிலும் சூக்ஷ்ம ரூபத்தில் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டு இருப்பதுதான் அதற்குக் காரணம்" என்றார்.

ஹரிதாஸ் கூறிய அனைத்தும் எனக்கு விசித்திரமாக இருந்தது. கிருஷ்ணதாஸ் என்ற பெயருடைய ஹரிதாஸ் தன் வழியை நோக்கிச் சென்றுவிட்டார். நான் அந்த அத்தி மரக்கன்றை என் வீட்டுப் பின்புறத்தில் நட்டுவிட்டு மிகுந்த அன்பு மற்றும் பக்தியுடன் வளர்த்து வந்தேன். என் தூரத்து உறவினர் ஒருவர் பட்டு வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு வயதாகிவிட்டது, குழந்தைகளும் இல்லை. அவருக்கு என் மீது அதீத அன்பு இருந்தது. அவர் எங்கள் வீட்டில் தங்கத் துவங்கினார். அவர் எனக்கு கொஞ்சம் பணம் கொடுத்து பட்டு வியாபாரம் செய்யுமாறு அறிவுரை கூறினார். அவர் எங்கள் வீட்டில் இருந்த அத்தி மரத்தைச் சுற்றி வந்து ஸ்ரீ தத்தரை மிகுந்த பக்தியுடன் வணங்கி வந்தார். எப்பொழுதெல்லாம் எங்கள் வீட்டில் பிரச்சனைகள் ஏற்படுகிறதோ நாங்கள் பவித்ரமான அத்தி மரத்தை சுற்றி வந்து எங்கள் கஷ்டங்களை அந்த மரத்திடம் சமர்பிப்போம். எங்கள் கஷ்டங்கள் ஸ்ரீ தத்தரை அடையும். எங்கள் கஷ்டங்கள் எதிர்பாராத விதத்தில் நிவர்த்தியாகும். அத்தி மரம் எங்களுக்கும் ஸ்ரீ தத்தாத்ரேயருக்கும் இடையே ஒரு நட்புப் பாலம்

போல இருந்தது. ஐயா, அத்தி மரத்தை வணங்குவது தத்த பக்தர்களுக்கு முக்கியமான கடமைகளுள் ஒன்று. ஒரு வீட்டில் அத்தி மரம் இருக்கிறது என்றால் அந்த வீட்டில் ஸ்ரீ தத்தாத்ரேயரே இருப்பதாகப் பொருள். எனினும், எவ்வளவுதான் அத்தி மரத்தின் மகிமைகள் பற்றி எடுத்துரைத்தாலும் அது குறைத்துக் கூறுவது போலத்தான் ஆகும்.

## பாவச் செயல்களால் முள் செடியாக பிறத்தல்

தொழில் நிமித்தமாக நான் ஒரிசாவுக்குச் செல்லும் போது அதிர்ஷ்டவசமாக நான் பீதிகாபுரத்திற்குச் சென்று ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டை கண்டுபிடித்தேன். அச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவுடன் வீட்டின் பின்புறத்தில் இருந்தார். அவர்கள் வீட்டுப் பின்புறத்தில் ஒரு முள் மரம் ஒன்று இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் கவனமாக அந்த மரத்திற்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், **“குழந்தாய், உனக்கு மிகவும் பிடித்தமான சோமலதா அல்லது சஞ்சீவினி செடி போல இந்த முள் மரத்தைக் கவனிக்க வேண்டியது சரியா? நீ அதை கவனிக்கவில்லை என்றாலும் அது வளரத்தானே போகிறது?”** என்றார்.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், **“தாத்தா, இந்த முள் மரம் முற்பிறவியில் நம் தெருவில் வசித்து வந்த விஸ்ஸாவதானி, அவர் நம்மை கேலி செய்யும் வகையில் ‘சுயம்பு தத்தர் பாப்பண்ணவதானிக்கு பேரனாக பிறந்துள்ளார்! என்ன ஒரு பைத்தியக்காரத்தனம்! கடவுளுக்கு எதிரான எவ்வளவு பெரிய குற்றம் இது!’ என்று கூறினார். என் அன்னை, என் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றும் நான், பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டில் உணவு உட்கொண்ட போது இந்த விஸ்ஸாவதானி, மல்லாடி மற்றும் கண்டிகோட்டா குடும்பங்கள் மிகவும் இழிவானவர்கள் மற்றும் தர்மத்தை மீறி விட்டனர், இந்த இரு குடும்பங்களையும் பிராமண சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்று பிராமண சங்கத்தில் ஒரு சர்ச்சையை கிளப்பினார். இந்த முள் மரம் வேறு யாருமல்ல அந்த விஸ்ஸாவதானிதான்”** என்று குறிப்பிட்டார்.

**“ஸ்ரீ ஸ்ரீபாதர் தத்தாத்ரேயரா? அதற்கு என்ன சாட்சி? சாஸ்திரங்களில் இருக்கிறதா? வேதங்களில் இருக்கிறதா?”** என்று விவாதங்களை எழுப்பிய விஸ்ஸாவதானி இப்போது முள் மரமாக இருக்கிறார். பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் நரசிம்ம வர்மா என் தெய்வீக அன்னையைத் தன் மகளாகக் கருதி உணவு அளித்து புதுத் துணி கொடுத்து மரியாதை செலுத்தினர். இதுபோன்று என் அன்னையை பயபக்தியுடன் நடத்துவதால் அவர்கள் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டதாக நினைத்துக்கொள்வார்கள். விஸ்ஸாவதானி அவர்கள் இருவரையும் தினமும் ஏசிக்கொண்டிருப்பார். இந்த முள் மரம்தான் அந்த விஸ்ஸாவதானி. இறந்த பிறகு சடங்குகள் செய்யப்படாமல் இருந்தமையாலும், அதன் காரணமாக பாவங்கள் அதிகப்படியாக சேர்ந்து விஸ்ஸாவதானி அவர் குணத்துக்குப் பொருத்தமான முள் மரமாக பிறந்துள்ளார். வயதான விஸ்ஸாவதானியை முள் மரமாகப் பார்த்து இரக்கம் கொண்டு இந்த மரத்துக்குத் தண்ணீர் ஊற்றி கொண்டிருக்கிறேன்” என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் முடித்தார்.

சிறிது நேரத்திற்கு பின்னர், அவர்கள் பின்புறத்தில் இருந்து தெருவுக்குள் வந்தனர். மயக்கும் அழகு வாய்ந்த ஸ்ரீ ஸ்ரீபாதரை நான் கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, எனக்கு விக்கல் எடுக்க தொடங்கியது. என் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கெடுத்தது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தெய்வீக பாத கமலங்களில் விழுந்தேன். அன்புடன் ஸ்ரீ ஸ்ரீபாதர் என் முதுகை வருடி, "**என் அன்புக்குரியவனே! எழுந்திரு! இது என்ன பைத்தியக்காரத்தனமான நடவடிக்கை? நீ இறந்து, மீண்டும் உயிர் பெற்று என்னிடம் வந்துள்ளாய்**" என்றார். நான் பட்டு வியாபாரம் செய்கிறேன் என்பதை தெரிந்து கொண்டு ஸ்ரீ பாப்பண்ணார்யா, "**இந்தத் தங்க குழந்தைக்கு பொருத்தமான பட்டு சட்டைகள் ஏதாவது இருக்கிறதா?**" என்று கேட்டார். நான் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு தகுந்த ஆடைகளை கொடுத்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டிற்குள் அழைத்து சென்று "**குருசரணா, நான் உனக்கு ஒரு அற்புதம் காட்டுகிறேன்**" என்று கூறினார். ஸ்ரீ பாப்பண்ணார்யாவும் ஸ்ரீ ஸ்ரீபாதரைத் தொடர்ந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களை முள் மரத்திடம் அழைத்துச் சென்று "**வயதான விஸ்ஸாவதானி, உன் பிள்ளைகள் உன் ஈமச்சடங்கை சிரத்தை இல்லாமல் செய்ததாலும் ஸ்ரீ பாப்பண்ணார்யா போன்ற சிறந்த மனிதர்களைக் காரணமில்லாமல் ஏசியதாலும் உனக்கு இதுபோன்ற இழிவான பிறப்பு கிடைத்துள்ளது. இந்த குருசரண் முந்தைய பிறவியில் உனக்கு மகனாக பிறந்திருந்தான். உன் ஈமச்சடங்குகளை அவனை செய்ய சொல்கிறேன். அதற்கு சம்மதமா?**" என்று கேட்டார். எங்களுக்கு எதுவும் புரியவில்லை. பிசாசு வடிவத்தில் ஆவியாக இருந்த விஸ்ஸாவதானி அந்த முள் மரத்துக்குள் நுழைந்து இதைவிடத் தனக்கு வேறு எந்த பாக்கியமும் கிடையாது என்று தெளிவாக பதிலளித்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை அந்த முள் மரத்தை முழுவதுமாக பிடுங்கச்செய்தார். அவர் கையில் இருந்த அத்தி மர குச்சிகளை வைத்து தீ மூட்டச் சொன்னார். நான் அதை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு உரசி தீயை உண்டாக்கினேன். நான் அந்த முள் மரத்தை எரித்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை குளிக்கச் சொன்னார்.

நான் குளித்த பின் ஸ்ரீ ஸ்ரீபாதர் எனக்கு விபூதியை அளித்து என் உடல் முழுவதும் பூச சொல்லிவிட்டு, "சிவன் சுடுகாட்டிலிருந்து சாம்பலை எடுத்து தன் உடல் முழுவதும் பூசி கொள்வதாக மக்கள் நினைக்கின்றனர். சிவன் சிறந்த மனிதர்கள், சித்தர்கள் மற்றும் மஹா யோகிகள் ஆகியோரின் இறந்த உடலின் சாம்பலை மட்டும்தான் தன் உடலில் பூசிக் கொள்வார். அவர்கள் சிவன் உடலில் உள்ள ஒளி வட்டத்துடன் சேர்ந்து விடுவார்கள். கவனக்குறைவினால் குரங்கோ, பாம்போ அல்லது பசுவோ இறந்து விட்டால் அவைகளுக்கு நாம் ஈமச்சடங்கு செய்ய வேண்டும். அவைகளுக்கு இறுதிச் சடங்கை செய்துவிட்டு அன்னதானம் செய்தால் மட்டும் போதும். மந்திரங்களால் சடங்குகள் செய்யவேண்டிய அவசியமில்லை. நம்முடன் பூர்வஜென்மத்தில் கடன்பட்ட விலங்குகள் கவனக்குறைவினால் நம் கரங்களில் இறந்துவிடும். அவைகளின் உடல்களை அக்கறையுடன் எரித்தால் நம்மிடம் எஞ்சியுள்ள கர்மாக்கள் அழிந்துவிடும். அவை உன்னதமான நிலையை அடைந்துவிடும். ஒரு சமயம் பழைய யுகத்தில் இந்த உலகம் பஞ்சம் மற்றும் பற்றாக்குறையினால் துன்பம் அடைந்தது. பசுக்களின் எண்ணிக்கை

அதிகரிக்காவிட்டால் புனிதப் பொருட்களான பசுநெய் கிடைக்காது. யக்ஞங்களும் மற்ற சடங்குகளும் நடைபெறாவிட்டால் மனிதனுக்கும் தேவர்களுக்கும் இடையே பிரபஞ்சத்தின் தலைவர் ஏற்படுத்திய பரஸ்பர கூட்டுறவு வீணாகிவிடும். தர்மம் வலுவிழந்துவிடும். தேவையான உணவு இல்லாத போது மனிதனால் வாழ முடியாது. தன் தவத்தின் வலிமையால் கௌதம முனிவர் தன் ஆசிரமத்தில் பயிர்களை விளைவித்தார். அவர் மாயப் பசுவை கொன்ற பாவத்திலிருந்து விடுபட கோதாவரி நதியை வெளிப்படுத்தினார். ஆகவே உலகம் கௌதம முனிவருக்கு மிகவும் கடன்பட்டுள்ளது. கௌதம முனிவரின் மனைவியான அகலிகை ஒரு சிறந்த பதிவிரதை.

இந்த விஸ்ஸாவதானி கௌதம முனிவரின் கோத்திரத்தைச் சேர்ந்தவன். அந்த கோத்திரத்தில் பிறந்தது மட்டும்தான் கௌதம முனிவருக்கும் விஸ்ஸாவதானிக்கும் உள்ள ஒரே தொடர்பு. இந்த பந்தம் ஒரு சிறிய தொடர்பாக இருந்தாலும், இது கீழ்கண்ட காரணங்களினால் நடைபெற்றது: திரேதா யுகத்தில் பீதிகாபுரத்தில் நடைபெற்ற ஸவித்ரு காடக சயன யாகத்தில் கௌதம முனிவரும் கலந்து கொண்டார்; விஸ்ஸாவதானி அதிர்ஷ்டவசமாக பீதிகாபுரத்தில் பிறந்தது மட்டுமல்லாமல் மிகவும் அரிதான ஒன்றான என்னுடைய தரிசனமும் அவருக்குக் கிடைத்தது. காரணமற்ற கருணையின் மூலம் தகுதியில்லாத ஒருவருக்குக் கூட ஸ்ரீ தத்தர் உன்னத நிலையை அளிப்பார் என்பது இந்த உலகத்திற்கு தெரியும் நேரம் வந்துவிட்டது. கடன்பட்ட பந்தம் இல்லாமல் ஒரு நாய் கூட உன்னை அணுகாது. யாராவது உன்னிடம் உதவி கேட்டு வந்தால் உன்னால் முடிந்த உதவியைச் செய். உன்னால் முடியவில்லை என்றால் உன் இயலாமையைக் கடுமையான குணங்கள் அல்லாமல் கண்ணியமான வார்த்தைகளால் எடுத்துக் கூறு. நீ அவர்களை கருணையில்லாமல் நடத்தினால், அனைத்து உயிரினங்களுக்குள்ளும் வாசம் செய்யும் நான் உன்னிடமும் கருணை இல்லாமல் நடந்து கொள்வேன். அனைத்து நிகழ்வுகளுக்கும் மூலக்காரணம் நான்தான் என்பது உண்மை. அது போலவே நீ, இந்த உலகம் மற்றும் அனைத்து படைப்புகளும் உண்மை. அனைத்து உண்மைகளுக்கும் உண்மையான நான்தான் உயர்வான உண்மை. வேதங்களில் கூட உண்மை, ஞானம் மற்றும் முடிவற்ற தன்மைகள்தான் உயர்வான பிரம்மம் என்று கூறப்பட்டுள்ளது" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த விவரங்களை மேலே கூறிய முறையில் தெளிவுபடுத்தினார்.

நான் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தேன். பாப்பண்ணார்யாவின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் வெளியாகி கன்னத்தில் வழிந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய சிறிய கைகளினால் தன் தாத்தாவின் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டு, **"தாத்தா, இப்போதெல்லாம் நீங்கள் என்னைப் பற்றியே சிந்தித்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பிறப்பு பூர்ணத்துவம் ஆகிவிட்டது! நான் நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தை உங்கள் உருவத்தில்தான் எடுக்க போகிறேன். இது உண்மை".** இவ்வாறு கூறிக்கொண்டே ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய கையை பாப்பண்ணார்யாவின் கையில் வைத்தார். பின்னர் பாப்பண்ணார்யா தன்னுடைய சந்தேகத்தைக் கேட்டார். "ஸ்ரீ ஸ்ரீபாதா பல நாட்களாக எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அதை கேட்கட்டுமா?" என்றார். உடனே ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரிப்புடன் " தாத்தா, உங்களைப் போன்ற உயர்ந்த

*நிலையில் இருப்பவர்களுக்கு சந்தேகம் இருக்குமா? ஒரு பத்து வயது சிறுவனால் அதைத் தீர்க்க முடியுமா? என்ன ஒரு ஆச்சரியம்! எனினும் நான் முயற்சி செய்கிறேன். கேளுங்கள்" என்றார்.*

*ஸ்ரீ பாப்பண்ணார்யா,* **"படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவைகளை பிரம்மா, விஷ்ணு, சிவன் தானே செய்கிறார்கள்?"** *என்று கேட்டார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு* **"ஆம்"** *என்றார்.*

*ஸ்ரீ பாப்பண்ணார்யா,* **"சரஸ்வதி, லக்ஷ்மி மற்றும் பார்வதி அவர்களின் சக்தி வடிவங்கள் தானே?"** *என்று கேட்டார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாதர்* **"ஆமாம்"** *என்றார்.*

*ஸ்ரீ பாப்பண்ணார்யா,* **"ஆதிபராசக்தி மும்மூர்த்திகளையும் அவர்களின் சக்தி வடிவங்களையும் உருவாக்கினாள் இல்லையா?"** *என்றார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாதர் "ஆமாம்" என்றார்.*

*பின்னர் ஸ்ரீ பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம்* **"அப்படியென்றால் நீ யார்?"** *என்று கேட்டார்.*

## ஸ்ரீ ஸ்ரீபாதரே அனைத்து தெய்வங்களின் உருவகம் - அவரே எல்லாவற்றின் தொடக்கம்

*ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர் தாத்தாவின் வாயில் இருந்து சரமாரியாக வந்த கேள்விகளைக் கேட்டு அழகாக சிரித்துக் கொண்டே,* **"தாத்தா, உங்கள் கண்முன் இப்போதுதான் அந்த முள் மரத்திற்கு உன்னத நிலையை அளித்தேன். என்னுடைய செயல்களுக்கு சாஸ்திரங்களின் ஒப்புதலோ அல்லது தரநிலையோ இருக்கிறதா என்று விவாதிப்பது தேவையில்லாத ஒன்று. நான் அனைத்து யோக நிலைகளிலும் இருக்கிறேன். அந்தந்த யோக நிலைகளில் இருக்கும் யோகி என்னைக் கண்டிப்பாக சந்திப்பான். படைப்பு மாயை அல்ல. இவை அனைத்தையும் படைப்பு என்று நினைப்பதுதான் மாயை.** இந்த முழு படைப்பிலும் எளிமையான தெய்வீகச் சைதன்யம் பரவியுள்ளது. எனினும் பல்வேறு இடங்கள் மற்றும் நிலைகளைப் பொறுத்து பரிணாமம் ஏற்படும். இதுதான் பரிணாமச் செயல்முறையின் அடிப்படை. காலத்தை பற்றிய ஞானம் இருப்பதால் பரிணாம செயல்முறையை உணர முடியும்.

காலம் என்கிற கருத்து சூரியன்,சந்திரன் மற்றும் பூமியைக் கணக்கில் கொண்டு உருவாக்கப்பட்டது. அத்ரி முனிவரால் மூன்று காலங்கள் (கடந்த,நிகழ் மற்றும் எதிர் காலங்கள்)மற்றும் மூன்று நிலைகளை (விழிப்பு,தூக்கம் மற்றும் கனவு) ஒரே நேரத்தில் அனுபவிக்க முடியும். பதிவிரதையான அன்னை அனுசுயா படைப்புகளிடம் பொறாமை இல்லாத தன்மையை அனுபவித்தாள். என்னால் அனைத்து அம்சங்களும் நிறைந்த படைத்தல்,காத்தல் மற்றும் அழித்தல்; ஸ்தூல, சூக்ஷ்ம மற்றும் காரண சரீரங்கள்; கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களை ஒரே நேரத்தில் அனுபவிக்க முடியும். ஆகவே நான் எப்போதும் இருக்கிறேன். நடந்தவை அனைத்தும், நடந்து

கொண்டிருப்பவை மற்றும் நடக்கப்போகும் அனைத்தையும் நான் ஒரே நேரத்தில் அனுபவிப்பேன். அப்படிப்பட்ட நிலையில் மும்மூர்த்திகளும் மூன்று சக்திகளும் என்னுள்தான் இருக்கிறார்கள் என்பதில் என்ன ஆச்சரியம். படைப்புக்கு முன்னால் இருந்த ஆதிபராசக்தியிடம்தான் மும்மூர்த்திகள் மற்றும் மூன்று தேவியரின் சக்திகள் இருந்தன என்பது உண்மை. எனக்கும் ஆதிபராசக்திக்கும் வித்தியாசம் இல்லை என்றாலும் அதில் சிறிய விஷயம் உள்ளது. அனைத்து படைப்புகளும் ஒரு அன்னையின் கருவில் இருந்துதான் வரவேண்டும் என்ற சிறந்த தீர்மானம் இருப்பதால், ஆதிபராசக்தி உருவம் வெளிப்பட்டது. அது பிரம்மயோனியின் உருவம். அதிலிருந்துதான் மும்மூர்த்திகளான பிரம்மா,விஷ்ணு மற்றும் சிவன்- மற்றும் சரஸ்வதி, லக்ஷ்மி மற்றும் பார்வதி வெளியே வந்தார்கள். எனினும், படைக்க வேண்டும் என்கிற விருப்பமும், படைத்தல் இந்த முறையில்தான் நடக்க வேண்டும் என்கிற செயல்முறையின் திட்டத்தின் விருப்பமும் எப்படி ஏற்பட்டது? நான்தான் அந்த உந்துதல் சக்தி அல்லது மகா சங்கல்பத்தின் உருவகம். ஆதிபராசக்தி, மும்மூர்த்திகள் மற்றும் மூன்று தேவிகளின் வருகை அந்த மகா சங்கல்பத்தின் படிதான் நடந்தது. அந்த மகாசங்கபத்தின் வடிவம் பரமகுருவின் (உண்மையான முதல் குரு) ஆளுமை தன்மை. இது மிகவும் ரகசியமான விஷயம். எப்போதெல்லாம் மகா சங்கல்பம் விரும்புகிறதோ அது உடனடியாக நடக்கும். நினைப்பது மற்றும் நிறைவேறுவது ஒரே நேரத்தில் நடக்கும். அனைத்து சக்திகளையும் தடுக்க வல்ல ஆரம்ப காலம் முதல் இருக்கும் சக்தி நான்தான்.

தாய்-குழந்தை, தந்தை-மகன், கணவன்-மனைவி, சகோதரன்-சகோதரி ஆகியோருக்கு இடையே உள்ள உறவு தவிர்க்க முடியாது. இந்த உறவு முறைகள் சிறந்தவை என்பதை எடுத்துரைக்கத்தான் ஆண் மற்றும் பெண் கடவுள்களின் உருவம் வெளியானது. மாயையில் இருக்கும் சக்திதான் ஜீவன். நான் மாயையை மீறிய உயர்ந்த சக்தி. யோக சக்தியின் மூலம்தான் மாய சக்தியையும் மகாசக்தியையும் சந்திக்க முடியும். ஆதிபராசக்தி அல்லது ஸ்ரீ தத்தரை வணங்கும் போது அதில் மும்மூர்த்திகள் மற்றும் மூன்று சக்திகளும் சேர்ந்து இருக்கும். ஆன்மீக முயற்சிகள் நிறைந்தவர்கள் மட்டும்தான் தெய்வீக உறவு முறைகள், அவர்களின் குணங்கள் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தொடர்புடைய நிலைகளின் அனுபவங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரை வணங்குபவர்களுக்கு அனைத்து பாவங்களும் அழிந்து விடும்

ஒரு மிருகத்திற்கு சமஸ்கிருத இலக்கணங்களை கற்பிப்பது பயனற்றது. ஒரு மிருகம் சமஸ்கிருத இலக்கணம் கற்றுக் கொள்ள விரும்பினால் அது தாழ்ந்த பிறவியில் இருந்து விடுபட வேண்டும். அது மனிதப் பிறவி எடுத்து திறமையான ஒருவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். எனக்கு அனைத்து உயிரினங்களிடமும் உட்புறமான இணைப்பு இருப்பதால் அவர்களிடமிருந்து மனப்பாங்கு, சார்பு நிலைகள் மற்றும் அசுத்தங்கள் என்னிடம் வந்து சேரும். தினமும் புனித குளியல்

மற்றும் ஜெபங்கள் செய்வதன் மூலம் அந்த அசுத்தங்களை எரித்து உயிரினங்களின் முன்னேற்றத்திற்கு உதவுகிறேன். உண்மையில் நான் வழிபாடுகள் செய்ய வேண்டியதில்லை. என்னை வணங்குபவர்களின் தீய தாக்கங்களை நான் என்னிடம் ஈர்த்துக்கொள்கிறேன் மற்றும் எங்கள் குடும்ப தெய்வமான காலாக்னி சமான தத்தருக்கு சிறிய வழிபாடுகள் செய்கிறேன். அந்த வழிபாடுகளினால் கிடைத்த பலனை என் பக்தர்களிடம் சமர்ப்பிக்கிறேன். எந்த கர்மாவையும் செய்யாமல் பலன்கள் பெற முடியாது. ஆகவே, நான் இந்த உடலைக் கொண்டு தவம் மற்றும் சிறந்த புனித சடங்குகளை செயல்படுத்துகிறேன். நான் முடிவில்லா சைதன்யம் என்பதால் செயல்படுத்தப்பட்ட சடங்குகளுக்கு உடனடி பலன் கிடைக்கிறது. அதனால் ஒவ்வொரு பக்தனின் தகுதிக்கேற்ப அந்த பலன்களை அவர்களுக்கு அனுப்புகிறேன். அதனால்தான் நான் ஆதிகுரு உருவம். எப்படி பெற்றோர்களின் சொத்து குழந்தைக்கு சேருமோ, குருவின் சீடர்கள் அந்த குருவின் சக்திகளுக்கு வாரிசாவார். பகவத்கீதையில் கூட கர்மாக்களின் செயல்பாட்டில் இருந்து தப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## என்னுடைய அவதாரத்திற்கு முடிவு கிடையாது

ஸ்ரீ தத்தராகிய என்னை எளிதாக அணுக முடியும். மற்ற தெய்வங்கள் பக்தர்கள் செய்யும் தவத்தினால் திருப்தி அடைந்து வரங்களை அருளுவர். எனினும், குரு வடிவ தத்துவத்தின் உருவகமான தத்தர், மிகவும் கருணை நிறைந்தவர், தன் தவ வலிமையால் தன் பக்தர்களுக்கு வரம் பெறுவதற்குத் தடையாக இருக்கும் தீய சக்திகள் மற்றும் துரதிர்ஷ்ட சக்திகளை அழித்து விடுவார். தாத்தா, அதுதான் என்னை ஸ்ம்ருதி மாத்ர பிரசன்னா (வெறும் நினைவுகளாலேயே திருப்தி அடைபவர்) என்று அழைக்கப்படுவதற்கான காரணம். அனைத்து குருக்களுடைய வடிவமாக இருப்பது நான்தான். இது மிகப்பெரும் கருணையினால் எடுக்கப்பட்ட பரமகுரு அவதாரம் என்பதால் இந்த அவதாரத்திற்கு முடிவு கிடையாது. என்னுடைய பக்தர்களின் அழைப்பு வந்தவுடன் நான் பதிலளிப்பேன். நான் என்னுடைய பக்தர்களுடைய அழைப்புக்காக காத்திருக்கிறேன். என்னுடைய பக்தன் என்னை நோக்கி ஒரு படி முன்னேறினால் நான் அவர்களை நோக்கி நூறு படி எடுப்பேன். பக்தர்களை கண் இமை காப்பது போலக் காத்து அவர்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் மற்றும் கஷ்டங்களில் இருந்து பாதுகாப்பதுதான் என்னுடைய இயற்கையான குணம்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவுக்கு தெய்வீக போதனைகள் அளித்தார்.

பின்னர் நான் மகா குருவிடம், **"மகாப்பிரபு, சோமலதா (சோம செடி) மற்றும் சோமயாகம் என்பது என் காதில் கேட்டது. அதை பற்றி கூறுங்கள்"** என்று வேண்டுகோள் விடுத்தேன். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் சோமலதா என்பது சஞ்சீவினி மூலிகை என்று கூறிவிட்டு அதை நான் பார்க்க வேண்டுமா என்று கேட்டார். நான் ஆமாம் என்றவுடன் அவர் கைகளில் சஞ்சீவினி மூலிகை தோன்றியது. அதை அவர் என்னிடம் கொடுத்தார். அது இப்போதும் என் பூஜை அறையில் அவரின் தெய்வீக பிரசாதமாக பத்திரமாக இருக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் தொடர்ந்தார். "இந்த சஞ்சீவினி மூலிகை இமயமலை தொடர்கள், மானசரோவர், காஷ்மீர், சிந்து நதியின் பிறப்பிடம், ஸ்ரீ மல்லிகார்ஜுனரின் உறைவிடமான ஸ்ரீசைலம் மலை, சஹ்யாத்ரி, மகேந்திர தேவகிரி, விந்தியா மலைத்தொடர்கள், மற்றும் பத்ரிநாத் காடுகளில் கிடைக்கும். லக்ஷ்மணர் இந்த மூலிகையின் சக்தியால்தான் ஆழ்ந்த மயக்க நிலையில் (கோமா) இருந்து குணமடைந்தார். இதை உடம்பில் தேய்த்துக் கொண்டால் வானூர்தியில் செல்வது போன்ற இயல்பு ஏற்படும். இது திசுக்களை உறுதியாக்கி,கண்களை ஒளியூட்டி, கேட்கும் திறனை அதிகரிக்க செய்யும். இதை உபயோகிப்பதால் பல நோய்களில் இருந்து விடுபடலாம். இதன் திறனால் தீயினால் ஏற்படும் எல்லா வகையான பயம் அல்லது பாதிப்பு, நீர் அல்லது விஷம் ஆகியவற்றினால் ஒருவருக்குத் துன்பம் நேரிடாது. இது அணிமா போன்ற அஷ்டமாசித்திகளை அளிக்கும். இந்த சஞ்சீவினி செடி ஒரு நாளுக்கு ஒரு இலை என்கிற விதத்தில் சுக்ல பக்ஷத்தில் இருந்து துளிர் விடத் துவங்கும். அதில் பௌர்ணமி அன்று பதினைந்து இலைகள் இருக்கும். மீண்டும் கிருஷ்ண பக்ஷம் துவங்கி பதினான்கு நாட்கள் ஒவ்வொரு இலையாக உதிர்ந்து அமாவாசை அன்று அனைத்து இலைகளும் உதிர்ந்து செடி காய்ந்து விடும். காய்ந்த குச்சிகளை நீரில் நனைத்து இரவில் அறையில் வைத்தால் அது ஒளியை உமிழும். காட்டு விலங்குகள் இந்த சஞ்சீவினி செடியை சஹயாத்ரி மலைத்தொடர்கள் மற்றும் பீமசங்கர் மலைத்தொடர்களில் பாதுகாக்கின்றன. அமாவாசை நள்ளிரவில் தெய்வீக ஒளியுடன் ஜொலிக்கும் போது அதை அடையாளம் கண்டுகொள்ள முடியும். என் அருமை குருசரணா, இதை போன்று இருபத்தி நான்கு வகையான மூலிகைச் செடிகள் உள்ளன. அனைத்தும் மிகப் புனிதமானது. இந்த செடிகளுக்குள் தெய்வீக சக்திகள் வசிக்கின்றன. ஆகவே மிகுந்த பணிவுடன் வேத மந்திரங்களை ஜபித்துக்கொண்டே இந்த மூலிகைகளை சேகரிக்க வேண்டும். மூலிகை செடிகளின் பெயர்கள்:

**1.** சோம **2.** மஹா சோம **3.** சந்திரமா **4.** அன்சுமான் **5.** மஞ்சுவான் **6.**ரஜிதப் பிரப **7.** துருவா **8.** கணியான் **9.**ஸ்வேதான் **10.** கனகப் பிரப **11.** பிரதானவான் **12.**லால் விருத்தா **13.** கரதீரா **14.** அன்சவான் **15.**ஸ்வயம் பிரபா **16.**ருத்ராக்ஷா **17.** காயத்ரி **18.** ஏஸ்தம் **19.** பாவத **20.**ஜகத **21.** சாகர **22.** அணிஸ்டம் **23.**ரேய்க்த **24.**த்ரிபத காயத்ரி.

நான் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் விடைபெற்றுக்கொண்டு பீதிகாபுரத்தை விட்டு கிளம்பினேன். குருசரணர் இவ்வாறு என்னிடம் (சங்கர் பட்) விவரித்து முடித்ததும் ஸ்ரீ மகா குருவின் யோக மானஸ சஞ்சாரம் முடிந்துவிட்டது என்றும் நாங்கள் அவரை தரிசிக்கலாம் என்ற தகவல் கிடைத்தது. நாங்கள் அவரைத் தரிசினம் செய்தோம். அவருடைய தெய்வீக கரங்களில் இருந்து பழங்கள் மற்றும் பிரசாதத்தை நாங்கள் பெற்றுக் கொண்டோம். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் "நீங்கள் இருவரும் கிருஷ்ணா நதியைக் கடந்து அக்கரைக்கு செல்லுங்கள். மஞ்சலா கிராமத்திற்கு செல்லுங்கள். மஞ்சலா கிராமத்தின் தேவதை உங்களை ஆசீர்வதிப்பாள். அந்த அன்னையின் அருளை பெற்ற பின் குருகட்டாவிற்கு திரும்புங்கள். நீங்கள் எங்கிருந்தாலும்

எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் நான் உங்களை கவனித்து கொண்டுதான் இருப்பேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வருங்காலத்தில் மஞ்சலாகிராமம் உலகம் முழுவதும் பிரசித்தி பெரும். ஒரு மகாபுருஷரின் உயிருள்ள சமாதி அங்கு அமைய இருப்பதால் அந்த இடம் புகழடையும். அந்த மகாபுருஷரின் லீலைகள் அற்புதமாக இருக்கும். பீதிகாபுரம் ஸ்தூல ரூபத்தில் இருப்பது போல சூக்ஷ்ம ரூபத்திலும் இருக்கும். அந்த சூக்ஷ்ம ரூபம் சொர்ண பீதிகாபுரம். என்னுடைய ஸ்தூல சரீரத்தில் இருக்கும் ஒளிவட்டத்தில் இருந்து அது ஸ்திரமாக ஸ்தாபிக்கப்படும். கால கல்பம், தேசம் அல்லது எந்த காலத்தை சேர்ந்தவர்கள் போன்ற அனைத்திற்கும் அப்பாற்பட்டு என்னுடைய கருணை பெற்றவர்களின் சைதன்யம் சொர்ண பீதிகாபுரத்தில் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும். யோகப் பார்வை உள்ளவர்கள் இதைப் புரிந்து கொள்ள முடியும். சொர்ண பீதிகாபுரத்தில் தங்களுடைய உயிருள்ள சைதன்யத்துக்கு இடம் கிடைக்கப் பெற்றவர்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள். நான் அவர்களுடைய ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்து காப்பாற்றுவேன். என் அருமை சங்கர் பட், பல நூறு வருடங்களுக்கு பிறகு என்னுடைய பெயரில் ஒரு பெரிய சமஸ்தானம் உருவாகும். என்னுடைய பாதுகைகள் நான் பிறந்த இடமான என் தாய்வழி தாத்தாவின் வீட்டில் உள்ள அத்தி மரத்தின் அடியில் ஸ்தாபிக்கப்படும். என்னுடைய சிலை, முந்தைய அவதாரம் மற்றும் அடுத்த அவதாரத்தின் சிலைகளும் ஸ்தாபிக்கப்படும். நான் உங்களுக்கு அதி அற்புதமான பார்வையை அளிக்கிறேன். பாருங்கள்!" என்று கூறிக்கொண்டே குருசரண் மற்றும் என்னுடைய புருவமத்தியை தொட்டார். அற்புதமான காட்சியைக் கண்டு திருப்தி அடைந்தோம். அவருடைய விருப்பம் அற்புதம்; அவருடைய லீலைகள் விசித்திரமானது. நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடங்கிய போது அவர், "வசிஷ்டரின் முக்கியமான குணங்களைக் கொண்ட ஒருவர் என்னுடைய சமஸ்தானத்துக்கு புரோகிதராக வருவார்" என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 21

## தண்டிஸ்வாமி குக்குடேஸ்வரர் கோவிலுக்கு விஜயம் செய்தல்

### இடத்தின் தூய்மையின் அவசியம் மற்றும் ஆன்மீக ஆர்வலர்களின் மனப்பாங்கும்

ஸ்ரீ மகாகுருவின் ஆணைக்கு இணங்க நானும் குருசரணரும் மஞ்சளா கிராமத்திற்கு கிளம்பினோம். வழியில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகள் பற்றி பேசிக்கொண்டே சென்றோம். நான் குருசரணரிடமிருந்து பல ஆன்மீகம் சம்பந்தமான விஷயங்கள் பற்றித் தெரிந்து கொண்டேன். நான் குருசரணரிடம் **“ஐயா, ஸ்ரீ ஸ்ரீபாதர் வசிஷ்ட முனிவரின் பண்புகள் நிறைந்த ஒருவர்தான் தன் சமஸ்தானத்தின் பூஜாரியாக வருவார் என்று கூறினார். அந்த அதிர்ஷ்டக்காரர் யாராக இருப்பார்? இவை எந்த நேரத்தில் நடைபெறும்?”** என்று கேட்டேன்.

குருசரண் அதற்கு, “சங்கர் பட், ஸ்ரீ ஸ்ரீபாதர் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவர் பிறந்த ஊரில் அவர் பெயரில் ஒரு மகாசமஸ்தானம் ஸ்தாபிக்கப்படும் என்று கூறினார். அவர் சமஸ்தானத்து பூஜாரியாக ஒரு சிறந்த துறவி வருவார் என்பது ஸ்ரீ ஸ்ரீபாதருடைய விருப்பம். தெய்வீக விருப்பம் இல்லாமல் மகா துறவிகள் அங்கு வர முடியாது. நீண்ட நேர தியானம், வழிபாடு, புனித தெய்வீக மந்திரங்கள் ஜெபிப்பது மற்றும் பக்தி சிரத்தையுடன் வழிபடுதல் ஆகியவை காற்று மண்டலத்தை சுத்தப்படுத்துகிறது. பிரபஞ்சத்தின் உள் மைய பகுதியில் இருந்து பத்து திசைகளிலும் எண்ண அலைகள் வியாபிக்கிறது. புனித உணர்வுகள் உடையவர்கள் புனிதமான அதிர்வலைகளை ஏற்றுக்கொள்கின்றனர். அசுத்தமான உணர்வுகள் உடையவர்கள் அசுத்த அதிர்வலைகளை பெற்றுக்கொள்கிறார்கள். எண்ண அலைகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மிகவும் புனிதமாக்கப்பட்டு மற்றும் சக்தியூட்டப்படும் போது, அந்த இடம் சிறந்த மனிதர்களின் மன சைதன்யத்தைத் தொட்டு, அவர்களைப் பல அற்புதமான வழிகள் மூலம் எந்தவித முயற்சியும் இல்லாமல் அவ்விடத்திற்கு ஈர்த்துக்கொள்ளும். அதற்கு மாறாக ஒரு இடத்தில் தீய எண்ணங்கள் பரவி இருந்தால் அந்த இடம் பல வினோத வழிகளின் மூலம் தீய மக்களின் மன சைதன்யத்தைத் தொட்டு அவ்விடத்திற்கு ஈர்த்துக்கொள்ளும். ஆகவே ஆன்மீக ஆர்வலர் ஒரு தூய்மையான இடத்தில்தான் வசிக்க வேண்டும். அவருக்கு தூய்மையான மனது வேண்டும். அவர்கள் இது போன்ற எண்ணம் உள்ளவர்களிடம்தான் நட்பு பாராட்ட வேண்டும். அவர்கள் தூய்மையானவர்களிடம் இருந்து மட்டும்தான் உணவு அல்லது பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் தன்னை வேதம் மற்றும் வேதாந்தத்தில்

சிறந்த ஞானி என்ற அகங்காரம் கொண்டால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணை அவர்களுக்கு கிடைக்காது. மிதமான சாதனைகளுடன் களங்கமற்ற மனதுடன் இருக்கும் ஞானிகளுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரிடமிருந்து அசாதாரணமான நன்மைகள் கிடைக்கும்.

நான் என் வியாபார நிமித்தமாக ஒரிசாவில் உள்ள பூரி ஜெகந்நாதர் கோவிலுக்குச் சென்றேன். அங்கு ஸ்ரீ ஜெகந்நாதரின் சிலைக்கு பதிலாக ஸ்ரீ ஸ்ரீபாதரைக் கண்டேன். அப்போது கோவிலில் என்னையும் சேர்த்து மூன்று அல்லது நான்கு பக்தர்கள் இருந்தனர். அவர்களுக்கு அவர்களின் இஷ்ட தெய்வத்தின் காட்சியை அளித்து விட்டு, பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதராக காட்சி கொடுத்தார். இதன் மூலம் தான் அனைத்து தெய்வங்களின் உருவகம் என்பதை மௌனமாகக் கற்பிக்கிறார்.


## தண்டிஸ்வாமியின் அகங்காரத்தை அழித்தல்

நான் கோவிலுக்குச் சென்ற அன்று தண்டிஸ்வாமி தன்னுடைய 108 சீடர்களுடன் அங்கு வந்திருந்தார். மகான்களை சந்தித்தால் அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்குவது நம் பாரம்பரியம். நான் அவரை வணங்கியவுடன் தண்டிஸ்வாமி தன் பேச்சை இழந்துவிட்டார். நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தண்டிஸ்வாமிக்கு பேச்சு அளிக்குமாறு வேண்டிக்கொண்டோம். அவருக்கு உடனே பேச்சாற்றல் கிடைத்தது. தண்டிஸ்வாமியின் சீடர்களுக்கு நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பக்தர்கள் என்று தெரிந்தவுடன் தவறான நோக்கத்துடன் தர்க்கம் செய்யத் தொடங்கினர். **"ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு தந்திரக்காரர். அவருடைய சீடர்களும் தந்திரக்காரர்கள். அவர்களுடைய கீழ்த்தரமான தந்திரங்களால் எங்கள் ஸ்வாமியின் பேச்சை பறித்தனர், ஆனால் எங்கள் ஸ்வாமி மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பதால் அவர் மீண்டும் பேச்சாற்றல் பெற்றார். எங்கள் ஸ்வாமிஜி ஸ்ரீ ஸ்ரீபாதரின் உண்மையான குணத்தை வெளிக்காட்டுவார். எங்கள் ஸ்வாமிஜி பீதிகாபுரம் சென்று ஸ்ரீ ஸ்ரீபாதரை வென்று வெற்றி வாகை சூடுவார். பீதிகாபுர மக்கள் எங்கள் வெற்றிக்கு தேர் பவனி ஏற்பாடு செய்வார்கள்"** என்றனர். எங்களால் எந்த பதிலும் சொல்ல முடியவில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளில் ஒரு பகுதி என்னவென்றால் அவரை நம்பியிருப்பவர்களை அவர் மிகுந்த சங்கடமான நிலைக்கு கொண்டு சென்று பின்னர் அவர்கள் காப்பாற்றுமாறு அழும் போது வினோதமான வழிகளில் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள். பிரச்சனைகளை உருவாக்குபவரே அவர்தான். உதவி கேட்பவர்களுக்கு தீர்வு அளிப்பவரும் அவர்தான். இதுபோன்ற தெய்வீக திருவிளையாடல்களை அனைத்து தத்த பக்தர்களும் அனுபவித்திருக்கின்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு தண்டிஸ்வாமி பீதிகாபுரத்திற்கு வந்தார். அதிர்ஷ்டவசமாக என் பயண வழியில் நானும் அப்போது பீதிகாபுரத்திற்கு வந்தேன். பீதிகாபுரத்தில் ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ அப்பலராஜ சர்மா மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாதர் மீது வெறுப்புணர்ச்சி இல்லாத மக்களுக்கு பற்றாக்குறை இல்லை. தண்டிஸ்வாமி குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள தெய்வங்களைத் தரிசனம் செய்தார். அவர்கள் சுயம்பு தத்தரின் சிலையையும் பார்த்தனர். தண்டிஸ்வாமி, **"இங்குள்ள சுயம்பு தத்தரின் சிறப்பு எல்லையற்றது. சுயம்பு தத்தர் என்னைக் கருவியாக கொண்டு**

**தன்னை தத்த அவதாரமாக கூறிக்கொண்டு அகங்காரத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கர்வத்தை கட்டுப்படுத்த என்னை அனுப்பியுள்ளார். இன்றிலிருந்து பீதிகாபுரத்திற்கு நல்ல நாள் துவங்கிவிட்டது. நீங்கள் அனைவரும் கவலையில்லாமல் இருக்கலாம்".** இவ்வாறு கூறிவிட்டு தன்னுடைய மனஉறுதியால் விபூதி, குங்குமம் மற்றும் சில பொருட்களை உருவாக்கி தன் சீடர்களுக்கு அளித்தார். பிராமணர்கள் வேத மந்திரங்கள் முழங்க தண்டிஸ்வாமியை ஊருக்குள் அழைத்து வர ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். ஊரில் தண்டோரா அடிக்கப்பட்டு பொது அறிவிப்பு செய்யப்பட்டது. அதில் **"தன்னை தத்தர் என்று கூறிக்கொள்ளும் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தவறை உணர்ந்து தண்டிஸ்வாமியின் முன் நமஸ்கரிக்க வேண்டும். ஸ்ரீ பாப்பண்ணார்யா தண்டிஸ்வாமியின் முன் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும். ஸ்ரீ அப்பலராஜ சர்மாவின் குடும்பம் பல தலைமுறைகளாக வணங்கிவரும் காலாக்னி சமான தத்தர் சிலையை தண்டிஸ்வாமிக்கு முன் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும். ஸ்வாமிஜி அளிக்கும் தண்டனைகளை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்"** என்று அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் தலைமையில் ஆர்யவைசிய சங்கம் கூடியது. அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதர், ஸ்ரீ அப்பலராஜ சர்மா மற்றும் ஸ்ரீ பாப்பண்ணார்யா தண்டிஸ்வாமியின் முன் தலை வணங்க கூடாது என்றும் இது போன்ற தவறான செயல்களை ஆதரிக்க கூடாது என்றும் முடிவெடுத்தனர். ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் தலைமையில் கூடிய க்ஷத்ரிய சங்கமும் இதே போன்ற தீர்மானம் எடுத்தனர். அச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாத்தாவின் வீட்டில் உள்ள அத்தி மரத்தின் நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். தெய்வீக ஒளியுடன் திகழும் அவருடைய முகத்தைக் கண்டு ஸ்ரீ சிரேஷ்டி வருத்தமடைந்து கண்ணீர் வடித்தார். ஸ்ரீ நரசிம்ம வர்மா, ஸ்ரீ சிரேஷ்டி மற்றும் ஸ்ரீ பாப்பண்ணார்யா ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு அருகில் சத்தமில்லாமல் அமர்ந்தனர். அப்பலராஜ சர்மா பித்து பிடித்தவர் போல் அசைவற்று அமர்ந்திருந்தார். ஸ்ரீ கிருஷ்ணருக்கு இணையான ஸ்ரீ ஸ்ரீபாதர் தூங்கி எழுந்தவுடன் தனக்கு பசிக்கிறது என்றும் தயிர் சாதம் சாப்பிட வேண்டும் போல இருக்கிறது என்று கேட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் தாய்வழி பாட்டி வெள்ளிக் கிண்ணத்தில் சாதத்துடன் தயிரை கலந்து கொண்டு வந்தாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதை மிகவும் விரைவாக உண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாத்தாவை வேதங்கள் கூறுமாறு கேட்டார். ஸ்ரீ அப்பலராஜ சர்மாவும் வேதங்கள் ஜெபிப்பதில் சேர்ந்து கொண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு வேத மந்திரங்கள் ஜெபித்தார்.



நரசிம்ம வர்மாவும் ஸ்ரீ சிரேஷ்டியும் இனிமையான வேதங்களை ஆழ்ந்த சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள சுயம்பு தத்தர் சிலையில் தயிர்சாதக் குவியல் தோன்றியது. கோயில் அர்ச்சகர் அதை எவ்வளவு முறை துடைத்தும் அது மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருந்தது. இது போன்ற அற்புதத்தை சுயம்பு தத்தர் காண்பிப்பது வினோதமாக இருந்தது. தண்டிஸ்வாமி, அவருடைய சீடர்கள் மற்றும் பீதிகாபுரத்தில் புதிதாக சேர்ந்த சீடர்கள் அனைவரும் ஊரில் இருந்து கிளம்பி வேத மந்திரங்கள் ஜபித்துக்கொண்டே கோவிலுக்குச் செல்ல தொடங்கினர். அவர்கள் அடுத்த அடி எடுத்து வைத்தால் பூமி பிளப்பது போலத் தோன்றியது. பார்ப்பவர்களுக்கு அவர்கள் ஒரே இடத்தில் நின்று கொண்டு கால்களை மட்டும் அசைத்து கொண்டு முன்னே செல்ல முடியாமல் இருப்பது போல் தெரிந்தது. இது போன்ற வினோத நடையால் நிறைய நேரம் வீணானது. இந்த அற்புதத்தைப் பார்த்து மக்கள் வியந்தனர். இதற்கிடையில் தண்டிஸ்வாமி வைத்துக்கொண்டிருந்த பிரம்ம தண்டம் உடைந்து இரண்டானது. தண்டிஸ்வாமிக்கு அவருடைய முதுகெலும்பு இரண்டாக உடைந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. அவர் நெடுஞ்சான்கிடையாக தரையில் விழுந்தார். இந்த நிகழ்ச்சி பீதிகாபுர பிராமணர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர்கள் தண்டிஸ்வாமியை விட ஸ்ரீ ஸ்ரீபாதர் சக்தி வாய்ந்தவர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் பகைமை வளர்த்துக் கொண்டால் தங்களுக்குப் பிரச்சனை உண்டாகும் என்று உணர்ந்து கொண்டனர். ஆனால் அவர்களுக்கு அந்த இடத்தை விட்டு கிளம்பி தங்கள் வீடுகளுக்கு எப்படி செல்வது என்பது தெரியவில்லை.

## மோகத்தை அழித்தால் மோக்ஷம் பெற முடியும்

பீதிகாபுரத்தில் அப்பண்ணா என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பாம்புகளைப் பிடித்து மக்களுக்கு வேடிக்கை காட்டி ஜீவனம் நடத்தி வந்தார். அந்த நேரத்தில் அவர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு வந்து தன் பாம்புகளை வைத்து வேடிக்கை காட்டினார். ஸ்ரீ ஸ்ரீபாதர் வேத மந்திர பாராயணத்தை நிறுத்தச் சொன்னார். அப்பண்ணா திருப்தி ஆகும் அளவுக்கு உணவு அளிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அப்பண்ணாவை அழைத்து **“உன்னுடைய பானை முழுவதும் இங்கிருந்து தண்ணீரை நிரப்பிக்கொண்டு குக்குடேஸ்வரர் கோவிலுக்குச் செல். குக்குடேஸ்வரர் கோவிலில் சில பாவிகள் பீதிகாபுரத்தில் மனித உருவில் உலாவிக் கொண்டிருக்கும் ஸ்ரீ தத்தரை எந்த காரணமும் இல்லாமல் ஏசுகிறார்கள். அவர்கள் செய்த பாவத்தினால் சித்ரகுப்தன் அவர்கள் இறந்த பின் அடுத்த பிறவியில் பிசாசாகப் பிறக்க வைக்க முடிவெடுத்துள்ளார். நான் சித்ரகுப்தனிடம் பேசி சில வழிகளைக் கண்டுபிடித்து அவர்களுடைய பாவத்தை ரத்து செய்துவிட்டேன். இந்த பாவிகளால் பூமித்தாயும் ஆத்திரம் அடைந்துள்ளாள். கோவிலுக்குச் சென்று நான் கேட்டுக்கொண்டதாகக் கூறி அவளை அமைதியாக இருக்கச் சொல். அங்கு இருப்பவர்கள் யாரேனும் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க வேண்டும் என்று கூறினால் இந்த தண்ணீரை அவர்கள் மீது தெளித்து**

**விடு. அனைவருக்கும் தண்டோரா போட்டு அறிவித்த மாதிகா ஜாதியைச் சேர்ந்த சுப்பையா வீட்டுக்குச் சென்று அவனையும் உன்னுடன் அழைத்துக்கொள். அவனுடைய பானையில் இருந்து தயிர் சாதத்தை எடுத்து அனைவருக்கும் மகாபிரசாதமாக விநியோகம் செய்"** *என்றார்.*

*அப்பண்ணா மற்றும் சுப்பையா கோவிலுக்குச் சென்று ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு அனைவரையும் அழைத்து வந்தனர். ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் கோபமாக இடி முழங்குவது போல "நீ! நீ தண்டிஸ்வாமி என்று பெருமை பட்டுக்கொள்கிறாயா? நீ வணங்கும் தத்தர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் இருப்பது கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாத மிகவும் மோசமான முட்டாள். உன்னிடம் சிஷ்ய கூட்டம் வேறு. அவர்கள் உன் முட்டாள்தனத்துக்கு பொருத்தமானவர்கள்தான். இது தவிர பீதிகாபுரத்தில் வேறு புது சிஷ்ய கூட்டம். உன்னால் என்னை என்ன செய்ய முடியும்? இந்த முழு படைப்பையும் ஆளும் இந்த ஒரே சக்திக்கு முன் உன் இருப்பு என்ன? உன் திறன் என்ன? தெய்வீகத்தை ஏசியதால் நீயும் உன்னை நம்பி இருந்தவர்களும் பெரிய பாவம் செய்துவிட்டீர்கள். சித்ரகுப்தன் நீங்கள் அனைவரும் பல நூறு வருடங்களுக்கு பிசாசாகப் பிறக்க முடிவெடுத்துவிட்டார். என்னுடைய தாராளமான கருணையினால் அவற்றை ரத்து செய்துவிட்டேன். நீங்கள் மனிதப் பிறவி எடுத்தாலும் மிகவும் தாழ்ந்த பிறப்பு எடுத்து துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளேன். மிகச்சிறிய தண்டனையுடன் அதையும் கூட விலக்கிவிட்டேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவம் எரியும் நெருப்பு போன்றது. நெருப்புடன் விளையாடினால் விபத்துக்கள் ஏற்படும். என்னையும் என்னுடைய மாயையையும் பிரிக்கமுடியாத போது விமோசனம் என்ன என்பதை யோசியுங்கள். மோகத்தை அழிப்பதுதான் மோக்ஷம். உயிருடன் இருக்கும் மனிதன் பேரானந்தத்தை அனுபவிக்க விரும்பினால் அதற்கு அவர்கள் தகுதியானவர்களாக இருந்தால் நான் அவர்களுக்கு அதை அளிப்பேன். அவர் மாயையைக் கடந்த மகிழ்ச்சியின் உருவகமான மிகவும் உயர்ந்த பேரானந்த நிலையிலேயே இருக்க வேண்டும் என விரும்பினால் அதையும் அவருக்கு அருளுவேன். என்னுடைய பார்வையில் பண்புகளற்ற உருவமில்லாத ஒன்றுக்கும் உருவமுள்ள பண்புகள் நிறைந்த ஒன்றுக்கும் மற்றும் விடுதலைக்கும் அடிமைத்தனத்துக்கும் வித்தியாசம் இல்லை. ஒவ்வொரு நொடியும் பல்லாயிரக்கணக்கான உலகங்கள் உருவாக்கப்பட்டு, நிலைபெற்று, அழிக்கப்படுகிறது. உயிருள்ளவர்கள் அடையக்கூடிய அற்புதமான பேரானந்த உயர்ந்த நிலைக்கு எல்லை அல்லது கட்டுப்பாடுகள் என்பது கிடையாது. இறந்த பிறகு என்னிடம் வர வேண்டும் என நினைப்பவர்கள் கண்டிப்பாக என்னிடம் வருவார்கள். அவர்கள் எத்தனை தெய்வீக நூறு வருடங்கள் அந்த நிலையில் இருந்து விட்டு எப்போது மீண்டும் அனுப்பப்பட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்த வஞ்சக நாடகத்தின் இயக்குனர் நான்தான் மற்றும் இப்போது மனித உருவில் உங்கள் முன்னிலையில் இருக்கிறேன். நீங்கள் என்னை பார்த்து கொண்டிருக்கிறீர்கள். நான் உருவமற்ற நிலையில் இருந்தாலும் உங்களை எப்போதும் பார்த்துக் கொண்டே இருப்பேன் என்பதைத் தெரிவிக்க உயர்ந்த நிலையில் இருந்து மனித உருவத்திற்கு*

இறங்கி வந்துள்ளேன். சிறந்த யோகிகளின் யோக சக்திகள் உலக நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். உலகம் என்பது இந்த பூமி மட்டும் அல்ல. உங்களுக்கு கீழ் உள்ள மக்களுக்கு உதவ வேண்டியது உங்களுடைய கடமை.

தர்மத்தின் பாதை, கர்மப் பாதை, யோகப் பாதை, பக்திப் பாதை மற்றும் ஞானப் பாதை ஆகியவற்றை போதிக்கவே நான் அவதரித்துள்ளேன். நான்தான் ஒரே உண்மை மற்றும் அனைத்து உண்மைகளின் பிறப்பிடம். நான்தான் ஒரே தர்மம். நான்தான் அனைத்து தர்மங்களின் பிறப்பிடம். அனைத்து செயல்களுக்கும் நான்தான் ஒரே காரணம். என்னுடைய விருப்பம் இல்லாமல் இந்த படைப்பில் எதுவும் உருவாகாது. நான் இல்லாமல் படைப்பு எதுவும் இல்லை. நான் இருப்பதால்தான் நீங்களும் இருக்கிறீர்கள். ஆகவே படைப்பும் இருக்கிறது. இந்த உண்மையைப் பற்றி வேறு என்ன சொல்ல முடியும்? இமயமலைக்குச் சென்று எந்தவித விருப்பம் இல்லாமல் தவம் செய். சீடர்கள் சேர்த்துக்கொள்ளாதே. உனக்கு விடுதலை அல்லது முன்னேற்றம் கிடைக்கவில்லை என்றால் எனக்கோ அல்லது இந்த படைப்புக்கோ எந்த இழப்பும் இல்லை. படைப்பு நடவடிக்கைகள் தேவைக்கேற்ப தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். இது உண்மையான விஷயம். உன்னைத் தொடரும் பீதிகாபுர பிராமணர்களின் ஊர்வலம் ஒட்டக திருமணத்தில் கழுதைகளின் கூத்து நாடகம் போல இருக்கிறது. அப்போது கழுதைகள் ஒட்டகத்தின் அழகை மெச்சும். ஒட்டகங்கள் கழுதையின் மெல்லிசையை பாராட்டும். அவர்கள் இருவரும் தங்கள் பரஸ்பர அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாலும் உண்மை வேறுவிதமாக இருக்கும்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய பயனுள்ள பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

## அருந்ததிக்கும் வசிஷ்டருக்கும் உள்ள உறவு

நான் குருசரணரிடம், **"அன்னை அருந்ததி தாழ்ந்த சாதியில் பிறந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் எப்படி வசிஷ்ட முனிவரை மணந்து கொண்டார்?"** என்று கேட்டேன். பின்னர் குருசரணர் அந்த அத்தியாயத்தை விவரிக்க தொடங்கினார். "பழைய காலத்தில் வசிஷ்டர் ஆயிரம் வருடங்கள் தவம் புரிந்தார். அந்த நேரத்தில் அக்ஷமாலா என்ற பெயருடைய தாழ்ந்த சாதி பெண் அவளுடைய தகுதிக்கு ஏற்றார் போல் அவருக்கு சேவை செய்து கொண்டிருந்தாள். முனிவர் அவள் சேவைகளில் மகிழ்ந்து ஏதாவது வரம் கேட்கும்படி கூறினார். அவள் வசிஷ்டர் தன் கணவராக வேண்டும் என்று கேட்டாள். வசிஷ்டர் **"நானோ பிராமணன் நீயோ தாழ்ந்த சாதிப் பெண். நம்முடைய திருமண பந்தம் எப்படி சரியானதாக இருக்கும்?"** என்று கேட்டார். அதற்கு அவள், **"நீங்கள் என்னை வரம் கேட்க சொன்னீர்கள். நான் கேட்டேன். நீங்கள் விரும்பினால் அந்த வரத்தை அளியுங்கள். இல்லையேல் நான் விடைபெற அனுமதி அளியுங்கள்"** என்று பதிலளித்தாள். முனிவர் தன்னுடைய சத்தியத்தை மீற பயந்து அவளுடைய உடலை என்ன செய்தாலும் அதற்கு அவள் சம்மதிக்க வேண்டும் என்று கூறினார். அவள் சம்மதித்தாள். முனிவர் அவளை சாம்பலாக்கி பின்னர் மீண்டும் உயிர் பெற செய்தார். இவ்வாறு ஏழு முறை செய்தார். தாழ்ந்த சாதி பிறப்பு ஏழாவது பிறப்பில் தூய்மையாக்கப்படும் என்பதால் அவள்

தூய்மையானவள் ஆனாள். பின்னர் வசிஷ்டர் அவளை மணந்து கொண்டார். அவள் கணவர் செய்த சடங்குகள் எதற்கும் அவள் துளிக் கூட தடை ஏற்படுத்தவில்லை, அவள் அருந்ததி என்ற பெயருடன் புகழடைந்தாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் இவற்றை வசிஷ்ட கோத்திரத்தை சேர்ந்த ஸ்ரீ நரசிம்ம வர்மாவிடம் தெரிவித்தார். ஒரு சூத்திர பெண்ணுக்கும் பிராமண ஆணுக்கும் பிறந்த ஒருவன் தன் ஏழாவது பிறவியில் பூணூல் அணிவிக்கப்பட்ட பின் பிராமணனாக கருதப்படுகிறான். நான்கு வர்ணத்தவர்களும் அவரவர்களின் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட கடமைகளைச் செய்ய வேண்டியதுதான் சரி. ஒரு பிராமணன் தன்னுடைய தீய செயல்களினால் படிப்படியாக தன் நிலையில் இருந்து கீழிறங்கி சூத்திரனாக மாறுகிறான். ஒரு சூத்திரன் நல்ல செயல்களைச் செய்து படிப்படியாகத் தன் நிலையில் இருந்து மேலே சென்று பிரமணனாகிறான். எனினும் ஸ்ரீ தத்தரின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருப்பவர்கள் அவர்களின் தகுதிக்கேற்றாற்போல் விரைவாக உயர்ந்த நிலையை அடைவார்கள். ஸ்ரீ தத்தர் தன் பக்தனின் வாழ்க்கைச் சூழ்நிலை மற்றும் சாதி-மதம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல், அவருடைய சுகமான வாழ்க்கைக்குத் தேவையான நீண்ட ஆயுள், உடல்நலம் மற்றும் செல்வம் ஆகியவற்றை அளிக்கிறார். பல பிறவிகளில் சேர்ந்த கர்மாக்களை அழித்து பக்தனை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வது ஸ்ரீ ஸ்ரீபாதருடைய இயற்கையான திருவிளையாடல்.

## தத்த பக்தர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் அளிக்கும் உத்தரவாதம்

ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பெருமைகளைப் பேசியவாறே நாங்கள் இருவரும் மஞ்சளா கிராமத்தை அடைந்தோம். மஞ்சளா கிராமத்துப் பெண் தெய்வம் எங்களுக்கு தெய்வீக தரிசனம் அளித்து அருளினாள். அவள் தன் திருக்கரங்களால் எங்களுக்கு பிரசாதம் ஊட்டி விட்டு, **"பழங்காலத்துப் பிரகலாதனுக்கு முன்னோடியான ஸ்ரீ தத்தாத்ரேயர் இப்போது பூமியில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் இருக்கிறார். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய விருப்பங்களை புரிந்து கொள்ள முடியாது. வரும் நூற்றாண்டுகளில் பிரஹலாதன் குரு சார்வபௌமராக அவதரித்து இந்த இடம் மந்த்ராலயம் என்ற பெயருடன் புகழ் பெறும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் தனிப்பட்ட முறையில் என்னிடம் மட்டும் கூறினார். அவர் தினமும் துங்கபத்ரா நதியின் நீரை எடுத்துக் கொள்வார். உங்களுக்கு மங்களகரமான முன்னேற்றங்கள் நடக்கட்டும்"** என்று வாழ்த்திவிட்டு தன்னுடைய பழைய உருவத்தை மீண்டும் அடைந்தாள்.

நாங்கள் அங்கிருந்து புறப்பட முற்பட்ட போது கிருஷ்ண தாஸ் என்ற பெயருடைய மால-தாசரி அங்கு வந்தார். மஞ்சளா கிராமத்துப் பெண் தெய்வம் அவருக்குப் பிரசாதம் மற்றும் தன் கருணையின் அடையாளமாக ஒரு மலர் மாலை அளித்துவிட்டு குருகட்டாவிற்கு செல்லும் படி ஆணையிட்டாள்.

நாங்கள் மூவரும் குருகட்டா பயணத்தை தொடங்கினோம். அனைத்து தத்த பக்தர்களும் ஒரே சாதியை சேர்ந்தவர்கள்தான். ஸ்ரீ தத்தரின் பிரசாதம் எந்த ஜாதியை சேர்ந்தவர் அளித்தாலும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். கிருஷ்ணதாஸுடன் எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பு புது உற்சாகத்தை அளித்தது. எங்களின் உரையாடலின்

போது அவர், "தக்ஷிணைகளாக அளிக்கப்படும் வெவ்வேறு எண்களான 16,116 மற்றும் 1116 ஆகிய எண்களின் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் எண்ணான 2498 ன் அர்த்தத்தையும் புரிந்துகொள்ளலாம். உலகம் எப்படி ஆத்மாவில் இருந்து தோன்றுகிறதோ குழந்தைகளும் தந்தையிடமிருந்து பிறக்கிறார்கள். திருமணத்தின் போது ஒரு மணமகன் அக்னி தேவரிடம் "**அக்னிஹோத்ரரே, இந்த மணப்பெண்ணுடன் எனக்கு பத்து குழந்தைகள் பிறக்க அருள் புரியுங்கள்**" என்று வேண்டிக்கொள்வான். அவனே பதினோராவது குழந்தை ஆகிவிடுகிறான். தர்மத்தின் படி பத்து குழந்தைகள் பெற்றுக்கொள்வது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் மனைவியைத் தாயாக பாவிக்க வேண்டும். ஒரு மகன் தந்தையின் பத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறான் (1/10). பத்தில் ஒரு பகுதியாக மொத்தம் பத்து பேர்கள் ஒன்று சேர்ந்தால் முழு எண்ணான தந்தை என்பது கிடைக்கும் (1/10 * 10 =1). ஆத்மாவின் ஆளுமை சிவன் என்பதால் அவர் முழுமையானவர் என்று மதிக்கப்படுகிறார். பதினாறு ஒன்றில் பத்துக்களை பத்தால் வகுக்கும் போது முழு எண்ணான சிவனை குறிக்கும் ஒன்று கிடைக்கும். ஆறு மீதியாக கிடைக்கும்(16 divided by 10= quotient 1 and remainder =6). விஷ்ணு மூல பிரகிருதியின் உருவகமாக மாயையின் உருவத்தில் விளங்குகிறார். புருஷரின் ஒரு பாதிதான் பிரக்ருதி (இயற்கை). பத்தில் பாதி ஐந்து அதை மேலே உள்ள மீதம் ஆறு என்ற எண்ணை ஐந்தினால் வகுத்தால் விஷ்ணுவை குறிக்கும் முழு எண் ஒன்றும் மீதமாக ஒன்றும் கிடைக்கும் (6/5 = 1 remainder =1). சிவன் மற்றும் விஷ்ணுவின் (புருஷர் மற்றும் பிரக்ரிதி) சந்ததியான பிரம்மா அவர்களின் பத்தில் ஒரு பங்கு. ஆகவே மேலே உள்ள ஒன்று என்னும் பாக்கி என்னை ஒன்றால் வகுக்கும் போது பிரம்மாவை குறிக்கும் ஒன்று என்கிற முழு எண் விடையாக கிடைக்கும். இப்போது மீதம் எதுவும் இருக்காது.

பூரணம் என்றால் பூஜ்ஜியம். அதற்குப் பண்புகள் இல்லை ஆதலால் அது ருத்திரனின் உருவம். அனைத்தும் அழிக்கப்பட்டால் அகண்ட விண்வெளி மட்டுமே காணப்படும். அகண்ட வெளியில் மட்டுமே அனைத்தையும் அழிக்க முடியும். விஷ்ணுவின் உருவத்துக்கு எல்லையற்ற தன்மை உண்டு. படைப்பில் எல்லையற்ற குணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் பதினாறு அற்புதமான ஆற்றல்கள் கொண்டவர்

என் அருமை சங்கர் பட், ஒரு பொருள் கணக்கிட முடியாத துண்டுகளாக உடைந்தால் ஒவ்வொரு துண்டும் வெறுமையாகி விடும். அப்படிப்பட்ட வெறுமைகள் அனைத்தையும் இடைவிடாமல் ஒன்றாகச் சேர்த்தால் ஒரு வரையறுக்கப்பட்ட வடிவம் உருவாகும். ஆகவே சிவனும் கேசவனும் வேறல்ல என்பதைத் தெரிந்துகொள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தசம பிரிவுகளில் பத்தால் வகுக்கப்பட்டபின் மீதம் இருந்த ஆறு பத்தில் ஒரு பங்கில் ஐந்து பத்தில் ஒரு பங்கு(5 1/10ths) விஷ்ணுவாக வடிவம் எடுத்தது. பஞ்சபூதங்களால் ஆன இயற்கை விஷ்ணுவின் அம்சமாக கருதப்படுகிறது. விஷ்ணு தக்ஷனின் யாகத்தை அழித்த வீரபத்ரரிடம் "**மூலாதாரமான**

**இயற்கை ஈஸ்வரனை அனுபவிக்க பார்வதி என்னும் உருவம் எடுத்தது, அசுரர்களுடன் போர் புரியும் போது துர்கை என்னும் உருவம் எடுத்தது, கோபமாக இருக்கும் போது காளி தேவியானது மற்றும் ஆண் உருமாக இருப்பது நான்"** என்றார். இதுதான் ஸ்ரீ ஸ்ரீபாதரை சோடச கால பரிபூரணர் (பதினாறு அற்புதமான ஆற்றல்களின் சரியான உருவகம்) என்று அறிவிப்பதற்கான அடிப்படைக் காரணம். அவர் பீதிகாபுரத்தை விட்டு பதினாறு வயதில் கிளம்பினார். அவர் பிரம்மா,விஷ்ணு மற்றும் ருத்ரனின் உருவகம், அவரை சோடச கால பரிபூரணர் என்றுதான் கூற வேண்டும்.

## பலவகையான தெய்வங்கள்

விஷ்ணு இயற்கையின் உருவகம் என்பதால் ஐந்து பத்தில் ஒரு பங்கு விஷ்ணுவை குறிக்கும். பார்வதி மற்றும் பரமேஸ்வரனின் யோக இணைப்பினால் தோன்றிய மகன் பிரம்மா என்பதால் அவர் சிவனின் பத்தில் ஒரு பங்கு உருவம். காரணம் மிகத் தெளிவாக உள்ளது. சைதன்யத்தின் உருவமான சிவன் மிகவும் முக்கியம். விஷ்ணுவின் உருவம் மாயையான பிரபஞ்சத்தின் உருவம் என்பதால் அது முக்கியம் அல்ல. ஆகவே பிரம்மா சிவனின் பத்தில் ஒரு பங்கு. பிரம்மனின் அடையாளம் ஒன்று. இந்த ஒற்றை எண் இரண்டிலிருந்து ஒன்பது வரை அனைத்து எண்களிலும் பரவியுள்ளது அதாவது அஷ்ட மூர்த்திகளிலும் (சிவனின் 8 பண்புகள்) பரவியுள்ளது. அதனால் பிரம்மா ஒன்பதாவதான பிரஜாபதி என்ற வடிவம் பெற்றார். 16,100 மற்றும் 1000 என்ற எண்களில் கடைசி இரண்டு எண்களைச் சிறப்பாக கணக்கிட்டு 16ஐ அவ்விரண்டு எண்களுடன் இணைக்கும் போது, அவை 116 மற்றும் 1116 என்றாகிவிடும். இவற்றைப் பத்தால் வகுத்தால் இந்த படைப்பில் உள்ள அனைத்து பொருட்களின் அடையாளங்களாக விளங்கும். ஒன்று என்ற எண் ருத்ரனை குறிக்கும்; இரண்டு முழு எண்களான 11 விஷ்ணுவைக் குறிக்கும், மூன்று முழு எண்களான 111 பிரம்மாவைக் குறிக்கும். 16,116 மற்றும் 1116 சோடச த்ரி தக்ஷிணா என்று அழைக்கப்படுகிறது. அதனால்தான் மூன்று விதமான தக்ஷிணைகளைக் கொடுப்பவர்கள் பிரம்மஞானம் பெறுகிறார்கள் என்று கூறப்படுகிறது. மூன்று விதமான தக்ஷிணைகள் செய்யப்பட்டால் அது உடல், பணம் மற்றும் மனதை தானம் செய்வதற்கு சமம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்களுக்குச் சமமான பணம் ஒருவர் தானம் செய்தால் மொத்த உலகத்துக்கும் தானம் செய்த பலன் பெறுவர். பிண்டாண்ட தானம் (உடலை தானம் செய்வது) உலகத்தைக் குறிக்கிறது. நம் உடல் மூன்று விதமான யாகங்களின் உருவம். விடியற் காலையின் யாகம், மதியநேர யாகம் மற்றும் காயத்ரி, த்ரிஷ்துப மற்றும் ஜகதி சந்தஸ் (மூன்று விதமான வேத கவிதைக்கான அளவுகோல்) என்று அழைக்கப்படும் மூன்றாவது யாகம் குறிப்பிட்ட கணக்கிலான எழுத்துக்களுடன் குறிப்பிட்ட அளவுகோலில் இருக்கும். அப்படியென்றால் காயத்ரிக்கு 24 எழுத்துக்களும், த்ரிஷாதுபவுக்கு 44 எழுத்துக்களும், ஜகதிக்கு 48 எழுத்துக்களும் இருக்கும். மூன்றையும் கூடினால் 116 கிடைக்கும். ஆகவே பிண்டாண்ட தானத்தின் படி இப்பணத்தொகை நன்கொடை செய்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பலன்களைப் பெறலாம்.

## ஸவித்ரு காடக சயன யாகத்தின் பலனே ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம்

சூரியனுக்கு நடுப்பகுதியில் உள்ள ஒளிபொருந்திய ஒரு இடம் அனைத்து ஞானப் பண்புகளையும் தூண்டுகிறது. அதுதான் அன்னை காயத்ரி. அவள் 24 என்னும் எண்ணை குறிக்கிறாள். ஒன்பது என்ற எண் பிரம்மத்தையும் எட்டு என்ற எண் மாயையும் குறிக்கிறது. த்ரேதா யுகத்தில் பீதிகாபுரத்தில் பாரத்வாஜ முனிவர் ஸவித்ரு காடக சயனம் என்ற யாகத்தை நிகழ்த்தினார். அன்று செய்யப்பட்ட சத்தியத்தை நிறைவேற்றவே ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இப்போது பீதிகாபுரத்தில் அவதரித்துள்ளார். அவர் சக்தி மற்றும் சக்தா சேர்ந்த அர்த்தநாரீஸ்வரரின் உருவம் என்பதையும் உயிரினங்களின் அறிவு மற்றும் குணங்களைத் தூண்டி அவர்களை ஒழுக்கமான பாதையில் இடும் சிறந்த அவதாரம் என்பதை குறிப்பிடும் வகையில் 'தோ செளபதி தேவ் லக்ஷ்மி' என்று கூறி பிக்ஷை எடுப்பார். யாருக்கும் அவருடைய விளையாட்டுதனமான பொழுதுபோக்குகள் மற்றும் கற்பிக்கும் முறைகளின் இலக்கணம் தெரியாது. அவரே புது இலக்கணங்களின் ஆசிரியர் என்பதால் அவை அவருக்கு மட்டும்தான் தெரியும்" என்றார்.

நான் கிருஷ்ணதாஸ் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். நான் பல புது விஷயங்கள் கற்றுக்கொண்டேன். பாண்டித்யத்தின் காரணமாக அகங்காரம் கொண்ட ஒருவருக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருள் கிடைக்காது.

கிருஷ்ணதாஸ் மீண்டும் கூறத் தொடங்கினார். **"ஸ்ரீ ஸ்ரீபாதர் எறும்பு முதல் பிரம்மம் வரை அனைத்திலும் உள்ளார். ஒருமுறை ஸ்ரீ வர்மா ஸ்ரீ ஸ்ரீபாதருடன் தன் வயலில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது பல நல்ல பாம்புகள் அங்கு வந்தன. அவர் வினோதமாக ஒவ்வொரு நாகத்தின் தலை பாகத்தையும் பிய்த்து எறிந்தார். அவர் தூக்கி எறிந்தவை ஒரு மலை போல குவிந்திருந்தது. யாரும் முன்பு பார்த்திராத எறும்பு கூட்டம் அங்கு கூடியது. ஸ்ரீ வர்மா தூங்கிக்கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ வர்மாவின் தூக்கம் கெடாமல் இருக்க அனைத்து எறும்புகளையும் கொன்றுவிட்டார். சிறிது நேரத்திற்குப் பின்னர் ஸ்ரீ வர்மா விழித்துக்கொண்டார். இறந்து கிடந்த எறும்புகளை பார்த்து பரிதாபப்பட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரிப்புடன், "ஒரு அரசன் தன் சேவகனைக் காப்பாற்ற வேண்டும். இது இயற்கையின் ஒழுங்குமுறை. இந்த எறும்புகளுக்கு ஒரு வினோதமான அரசன் இருக்கிறான். அவன் விரைவில் வருவான். பாருங்கள்!"** என்று கூறினார். இதற்கிடையில் வினோதமான ஒளியுடன் ஒரு வெள்ளை எறும்பு அங்கு வந்தது. அது அனைத்து இறந்த எறும்புகளையும் சுற்றி வந்தது. இறந்த எறும்புகள் அனைத்தும் உயிர் பெற்றது. ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரிப்புடன் **"இந்த எறும்பு ராஜாவுக்கு சஞ்சீவனி சக்தி இருக்கிறது. அந்த சக்தியின் மூலம் அதன் அனைத்து எறும்புகளையும் காப்பாற்றி விட்டது. படைப்பில் இதுபோன்ற பல அற்புதங்கள் இருக்கின்றன. தாத்தா, நீங்கள் விரும்பினால் இது போன்ற அற்புதங்களை நான் ஒவ்வொரு நொடியும் காண்பிக்கிறேன்"** என்றார்.

நரசிம்ம வர்மா இறந்த பாம்புகளைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். அதுவும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் வேலைதான் என்பதை கவனித்தார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு

*நாகத்தின் தலை பாகத்தையும் இன்னொரு நாகத்தின் உடலையும் இணைத்து தன் தெய்வீக கரங்களை அசைத்தார். அதுபோல அவர் அனைத்து நாகங்களுக்கும் உயிர் அளித்தார். அவை மீண்டும் உயிர் பெற்று ஸ்ரீ ஸ்ரீபாதரை சுற்றிய பின்னர் கிளம்பிச் சென்றன.*

*அந்த நாகங்கள் ஏன் வந்தன, ஸ்ரீ ஸ்ரீபாதர் ஏன் இப்படி அவைகளை நடத்தினார் என்பது யாருக்கு தெரியும்! நான் இவற்றை பற்றி ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கேட்ட போது அவர் உற்றுநோக்கி,* **“ஒருவருக்கு ராகு கிரகத்தின் வலிமை போதுமான அளவு இல்லாத போது அவர்களின் வேலைகளில் தடைகள் நேரிடும். அவர்களுக்கு மலைப்பாம்பின் பிடியில் இருப்பது போன்ற அனுபவம் ஏற்படும். இதை சிலர் கால சர்ப்ப யோகம் என்று கூறுவர். நாகங்களுக்கு ராகுதான் அதிபதி. இதுபோன்ற தடைகளை ஏற்படுத்தும் நாகங்கள் நம் கண்ணுக்கு புலப்படாது. என் பக்தர்களின் வழியில் இருக்கும் தடைகளை அழித்து அவர்களுக்கு சுகமும் சந்தோஷத்தையும் அளிக்கிறேன்”** *என்றார்.*

*நாங்கள் பத்திரமாக குருகட்டாவை அடைந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் அழகான சிரிப்புடன் எங்களை ஆசீர்வதித்தார்.*

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 22

## குருதத்த பட்டின் கதை

### ஸ்ரீ ஸ்ரீபாதர் மட்டுமே தன் பக்தர்களுடைய ஜாதகத்தின் பலன்களை முடிவு செய்வார்

குருசரண், கிருஷ்ணதாஸ் மற்றும் நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் முன்னிலையில் விவரிக்க முடியாத உற்சாகத்தில் இருந்தோம். ஸ்ரீ குருதேவரை தரிசிக்க குருதத்தபட் என்கிற ஜோசியர் வந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரை மிகுந்த அன்புடன் நடத்தினார். நாங்கள் அனைவரும் அமைதியான ஒரு இடத்தில் சத்சங்கம் நடத்தும் படி கூறப்பட்டது. எங்கள் உரையாடல் ஜோதிட விஞ்ஞானத்தை நோக்கி சென்றது. நான் ஸ்ரீ பட்டிடம் **"ஐயா, ஜோதிட விஞ்ஞானத்தில் குறிப்பிட்டுள்ளபடியே அனைத்தும் நடைபெறுமா? அல்லது மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா அல்லது பலன்கள் கூடுதலாக நடக்குமா? மனித வாழ்க்கை பூர்வ ஜென்ம கர்மாக்களின் நிபந்தனைக்கு உட்பட்டதா?அல்லது மனித முயற்சிகளால் கட்டுபதப்படுபவையா?"** என்று கேட்டேன்.

பின்னர் ஸ்ரீ பட், "ப சக்கரம் (ப- ஒளி) என்றால் நட்சத்திரத்தின் பாதைகள் என்று அர்த்தம். அதன் தொடக்கப் புள்ளி அஸ்வினி நட்சத்திரம். அஸ்வினி நட்சத்திரத்தின் மண்டலத்தை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். அந்த நட்சத்திரத்தின் சரியான இடத்தைக் கண்டுபிடிக்க இரண்டு வழிகள் உள்ளன. அவை சித்ர பக்ஷம் மற்றும் ரேவதி பக்ஷம் ஆகும். ரேவதி நட்சத்திரத்தின் ஒளி தேவையான ஆற்றலை விட எட்டு புள்ளிகள் கீழே உள்ளதால் அஸ்வினி நட்சத்திரத்தின் இடத்தை கண்டுபிடிக்க இந்த வழிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது. அஸ்வினி நட்சத்திரத்தில் இருந்து $180^\circ$ இல் சித்திரை நட்சத்திரம் இருப்பதால் அது ஒற்றை கோளாக அற்புதமான ஒளியுடன் ஜொலிக்கிறது. அதோடு ஆறு ராசிகளை கூட்டினால் அது அஸ்வினி நட்சத்திரத்தின் இடத்தைக் குறிக்கும். ஆகவே சித்ர பக்ஷம் அஸ்வினி நட்சத்திரத்தின் இடத்தைக் கண்டுபிடிக்க சரியான வழி. அஸ்வினி நட்சத்திரம் 'துரக-முக அஷ்வினி ஸ்ரேணி'(வரிசையாக உள்ள குதிரை முகங்கள்) போல மூன்று கோளங்களைக் கொண்டவை என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்ரீபாதர் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்ததற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கிறது. அஸ்வினி நட்சத்திரம் மூன்று கோள்களாக இருந்தாலும் அவை ஒன்று போல காணப்படுவது போலவேதான் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய உருவமும். அதுதான் ப சக்கரத்தின் தொடக்கம். அதுதான் அவருடைய தத்தாத்ரேய உருவம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் அவருடைய முதல் அவதாரம். அவருடைய பிறந்த நட்சத்திரமான சித்திரை நட்சத்திரம் அஸ்வினி நட்சத்திரத்தில் இருந்து நேர்கோட்டில் சரியாக $180^\circ$ இல் உள்ளது. ஒரு கிரகம்

அல்லது நட்சத்திரத்தின் வலிமை $180^\circ$ தொலைவில் குவிந்திருக்கும். ஒரு மனிதனுடைய கிரகங்களின் அமைப்பு அவனுடைய பூர்வ ஜென்ம கர்மாக்களை கருத்தில் கொண்டு சரியான கணித ரீதியான அமைப்பில் பிறப்பான். கிரகங்களுக்கு மனிதனின் மீது விருப்பு அல்லது வெறுப்பு இருக்காது. அதிலிருந்து வெளியாகும் பலவகையான கதிர்கள் மற்றும் பலவகையான அதிர்வலைகளுக்கு ஏற்றார் போல் உரிய நேரங்கள் மற்றும் இடங்களில் அதற்கு தொடர்புடைய நிகழ்ச்சிகளை உருவாக்கும் சக்தி உண்டு. அந்த எதிர்மறை அதிர்வலைகள் மற்றும் கதிர்களின் காரணமாக ஏற்படும் விரும்பத்தகாத பலன்களில் இருந்து தப்பிப்பதற்கு நம்மிடம் அதை தடுக்கும் அதிர்வலைகள் மற்றும் கதிர்கள் இருத்தல் வேண்டும். அதை மந்திரங்கள்,தந்திரங்கள், தியானம், பிரார்த்தனை மற்றும் அதுபோன்ற முறைகள் அல்லது நம்முடைய தனிப்பட்ட யோக சக்தியின் மூலம் பெற முடியும். எனினும் பூர்வ ஜென்ம கர்மாக்கள் மிகவும் வலிமையாக இருந்தால் மேலே கூறிய வழிமுறைகள் வேலை செய்யாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஸ்ரீ ஸ்ரீபாதரால் மட்டுமே நம் தலையெழுத்தை மாற்றி எழுத முடியும்! நம் தலையெழுத்தை அவர் மாற்றி எழுதினால் அதன் மூலம் இந்த உலகத்திற்கு ஏதாவது நன்மை ஏற்படும் சூழ்நிலை உண்டாகும். இது சாதாரண சூழ்நிலைகளில் நடைபெறாது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தேவையில்லாமல் படைப்புகளின் திட்டங்களிலும் விதியை தீர்மானிக்கும் தெய்வங்களின் நடவடிக்கைகளிலும் தலையிட மாட்டார். இருந்தாலும் பக்தர்களுடைய தவிப்பு ஸ்ரீ ஸ்ரீபாதரைத் தூண்டும். கடவுளின் மனதிலிருந்து எழும்பும் அன்பு மற்றும் கருணையின் சக்தி விதியை தீர்மானிக்கும் தெய்வங்களின் வலிமையை வலுவிழக்கச் செய்யும். விதி ஆற்றல்கள் அற்றது. ஸ்ரீ ஸ்ரீபாதருடைய உணர்வுகள் குறிப்பிட்ட பண்புகள் உடையது. அவர் தேவை என்று நினைத்தால் நிகழ்த்த முடியாததை நிகழ்த்தி காட்டும் தன் தன்மையை வெளிக்காட்டும் விதமாக, தூசியை வானமாகவும், வானத்தை தூசியாகவும் ஆக்கி காட்டுவார். அது அவருக்கு ஒரு சாதாரண விஷயம்" என்றார்.

ஸ்ரீ பட் தொடர்ந்தார், "அறியாத பருவத்தில் நான் ஜோதிடத்தில் சிறந்த ஞானி என்ற மாயையில் இருந்தேன். நான் கர்நாடகத்தை சேர்ந்தவன். என்னால் தெலுங்கில் சரளமாக பேச முடியாது. சமஸ்க்ருதத்தில் சம்பாஷிக்க முடியும். அதிர்ஷ்டவசமாக நான் பீதிகாபுரம் சென்றேன். சிலரிடமிருந்து ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை பற்றி கேள்விப்பட்டேன். ஸ்ரீ தத்தாத்ரேயர் எங்களுடைய குடும்ப தெய்வம். நான் பாதகயா க்ஷேத்திரத்தில் உள்ள குக்குடேஸ்வரர் கோவிலில் அமைந்துள்ள சுயம்பு தத்தரை மிகுந்த பக்திச் சிரத்தையுடன் வழிபட்டேன். தியானத்தில் இருந்தபோது எனக்கு ஒரு குரல் கேட்டது, "முட்டாளே! எத்தனை நாட்களுக்கு முன்பே நீ இறந்து விட்டாய்? என்னுடைய பக்தன் என்று பெருமிதம் கொண்டிருக்கிறாய்! என்னுடைய முகத்தின் அருகே கற்பூர ஆரத்தி காட்டி என் பாதங்களில் ஆணி அடிக்கிறாய். இந்த பாதகயா க்ஷேத்திரத்துக்கு வந்து என் பாதங்களில் ஆணி அடித்து என்னுடைய ரத்தத்தை பார்க்க போகிறாயா? என்ற குரல் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருந்தது. நான் ஜோதிட பண்டிதன்

என்பதால் என்னுடைய ஜாதகக் கணக்குகளைப் போட்டு பார்த்தேன். நான் இறக்க வேண்டிய சரியான தேதி மற்றும் நேரத்தில் பாதகயா க்ஷேத்திரத்தில் உள்ள சுயம்பு தத்தருக்கு முன்பு இருந்தேன். என்னுடைய நாடித் துடிப்பை உணர முயற்சி செய்தேன். நாடித் துடிப்பு நின்று போனது. என் இதய துடிப்பை உணர முயற்சி செய்தேன். அதுவும் வேலை செய்யவில்லை. என்னுடைய முகத்தை கண்ணாடியில் பார்த்தேன். அதில் உயிரின் அறிகுறிகளுக்கு பதிலாக இறப்பின் அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தன. சிரித்துக்கொண்டே என் முகத்தை கண்ணாடியில் பார்த்தேன். அதில் பெருமை பட்டுக்கொள்ள என்ன இருக்கிறது? அது அசிங்கமான பிசாசின் தன்மையுடன் பிணத்தினுடைய சிரிப்பு போல இருந்தது. சுயம்பு தத்தர் கோவிலில் இருந்த அர்ச்சகர் மிகவும் பேராசை பிடித்தவர். என்னால் அவருடைய சூக்ஷ்ம உடலை பார்க்க முடிந்தது. அவருடைய சூக்ஷ்ம உடல் என்னுடையதை விட மிகவும் அசிங்கமாக இருந்தது. என் தனித்தன்மையில் ஏதோ ஒரு ஓரத்தில் ஒளிந்திருந்த பகுத்தறியும் சக்தி விழித்துக்கொண்டது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்காவிட்டால் என்னுடைய கஷ்டமான நிலை தீராது என்பதைப் புரிந்து கொண்டேன். தெய்வங்கள் தனித்தன்மை நிறைந்த பூரணமான பேரானந்தம். இதயத் துடிப்பு அல்லது நாடித்துடிப்பு இல்லாத போதும் அவர்கள் உயர்ந்த பேரானந்தத்தில் இருப்பர். என்னுடைய நிலைமை மிக மோசமாக இருந்தது. என்னுடைய ஆத்மாவில் சந்தோஷம் இல்லை. அதற்கு மாறாக மிகுந்த சோகம் இருந்தது. ஒரு ஆத்மா உடலிலிருந்து வெளியேறும் போது உடல் சம்பந்தமான துன்பங்கள் முடிவடைந்துவிடும்; ஆனால் என்னுடைய ஆத்மா உடலை விட்டு நீங்கவில்லை. என்னுடைய இதயம் செயலிழந்து விட்டது. ஸ்ரீ குருதேவர் எனக்கு ஒரு வினோதமான சூழ்நிலையை உண்டாக்கினார். மிகவும் இழிவான மற்றும் பாவம் செய்தவர்களின் வார்த்தைகளைக் கேட்டு ஏமாந்தேன் என்பதை உணர்ந்து கொண்டேன். என்னை திசைதிருப்பிய தீங்கான வரிகள் என்னவென்றால், **“கல்லாக கோவிலில் இருக்கும் சுயம்பு தத்தர் கண்டிகோட்டா குடும்பத்தில் அவதரித்துள்ளார்; அது உண்மை என்றால் அந்த கல்லுக்கு இதயத்துடிப்பும் நாடிதுடிப்பும் இருக்காது. மூதாதையர் களுக்கு முக்கியமான தினமான மகாளய அமாவாசை தினத்தன்று ஒரு அவதூதர் கண்டிகோட்டா குடும்பத்தாரிடம் பிக்ஷை பெற்றுக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. அது வேறு யாருமல்ல ஸ்ரீ தத்தாத்ரேயர்தான் என்றும் அந்த**




**உச்ச தெய்வம் மல்லாடி குடும்பத்திற்கு பெண் வழி பேரனாக பிறந்துள்ளார் என்றும்**

**கூறப்படுகிறது. என்ன ஒரு அற்புதம்! என்ன ஒரு ஏமாற்றுத்தனம்! என்ன ஒரு மோசடி!"** இவற்றைக் கேட்டதினால் ஸ்ரீ ஸ்ரீபாதரின் மீது தவறான எண்ணம் ஏற்பட்டது.

நான் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய வீட்டுக்கு வேகமாகச் சென்றேன். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பத்து வயது இருக்கும். அவர் தெருவுக்கு வந்து என்னை கண்டிக்கும் விதமாக "வா முட்டாளே! முன்னமே இறந்துவிட்டு உயிருள்ளவன் போல பாசாங்கு செய்யும் உன்னைப் போல உதவாக்கரைகள், மனித உருவில் இருக்கும் பிசாசுகள், உங்களுடைய மூதாதையர்களுக்காக ரௌரவத்தில் துன்பங்கள் அனுபவிப்பவர்கள் மற்றும் உன்னுடைய தீய நடவடிக்கைகளால் மற்ற நரகங்களில் இருப்பவர்களும் உன்னத நிலை அளிக்க ஒருவர் அவதூதர் வடிவத்தில் மகாளய அமாவாசை தினத்தன்று இந்த புனித இல்லத்துக்கு வந்து பிக்ஷை கேட்டார். அவர் யார் என்று உனக்குத் தெரியுமா? அவர் வேறு யாருமல்ல ஸ்ரீ தத்தாத்ரேயர்தான். தத்தாத்ரேயர் யாரென்று உனக்குத் தெரியுமா? அது நான்தான், என் பெயரைக் கேட்டாலே ராக்ஷஸக் கூட்டமும் பிசாசுகளும் பயத்தில் நடுங்குவார்கள். நான்தான் அந்த தத்தர். நான் உன்னைப் பாறையாக மாற்றினேன் ஆனால் பசி தாகத்தை அப்படியே வைத்து விட்டேன். உன் பிராணனை எடுத்து விட்டேன் ஆனால் உயிருள்ள மனிதனின் தோற்றத்தை அப்படியே விட்டுவிட்டேன். நான் தத்தரா இல்லையா என்பதை பிறகு முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் நீ உயிரோடு இருக்கிறாய் என்று மக்களை ஏமாற்றுவது சரியா?" இவ்வாறு அவர் இடி இடிப்பது போன்ற குரலில் கேள்விகள் எழுப்பியதும் நான் பயத்தில் நடுங்கினேன். இதற்கிடையில் சுமதி மஹாராணி வீட்டிலிருந்து வெளியே வந்தார். என்னைப் பார்த்ததும் பயத்தில் உறைந்து "**கண்ணையா! பிணத்தின் சாயலில் இருக்கும் இந்த அகோரி யார்? உள்ளே வா!இந்த அகோரியின் தீய பார்வை போக உனக்கு திருஷ்டி எடுக்கிறேன்**" என்று அலறினார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் "**அம்மா, இவர் இன்னும் அகோரி ஆகவில்லை. இவர் அகோரியாகப் பிறந்து எரிந்துகொண்டிருக்கும் பிணங்களை உண்பார். அடுத்த பிறவிக்கு முன்னரே என்னிடம் வந்துள்ளார். அம்மா, இவருக்கு மீதி இருக்கும் பழைய சாதத்தைக் கொடு**" என்றார்.

அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி சுமதி மஹாராணி ஸ்ரீ ஸ்ரீபாதருக்காக கொஞ்சம் பழைய சாதம் வைத்திருந்தாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் எனக்கு அந்த பழைய சாதத்தை கொடுத்துவிட்டு அந்த இடத்தை விட்டு போகச் சொன்னார். குக்குடேஸ்வரர் கோவிலுக்கு எதிரில் உள்ள திறந்தவெளியில் நான் அந்த உணவை உண்டேன். நான் அதை உண்ட உடனேயே என்னுடைய துயரமான நிலை மறைந்தது. நான் ஸ்ரீ ஸ்ரீபாதரைப் பார்க்க மீண்டும் அவர் வீட்டுக்குச் சென்றபோது ஸ்ரீ சிரேஷ்டி அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ சிரேஷ்டியின் மளிகைக் கடையில் இருந்தார். அவர் தனிப்பட்ட முறையில் வராகன்களை வாங்கி பணப்பெட்டியில் போட்டு கொண்டிருந்தார். ஸ்ரீ சிரேஷ்டி தனிப்பட்ட முறையில் சோளத்தையும் அரிசியையும் வாடிக்கையாளர்களுக்கு அளந்து கொடுத்துக்கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ சிரேஷ்டியிடம், "**தாத்தா!**

**இன்று கணக்குகளை முடிக்க வேண்டிய நாள்! என் தந்தைக்கு எவ்வளவு தக்ஷிணை கொடுக்க போகிறீர்கள்? எனக்கு எவ்வளவு தக்ஷிணை கொடுப்பீர்கள்?"** என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சிரேஷ்டி, **"குழந்தாய்! உன் தந்தைக்கு கொடுப்பது பண்டிதர்களுக்கு கொடுக்கப்படும் தானம், உனக்கு கொடுக்கப்படுவது வெங்கடாசலபதி ஸ்வாமிக்கு அளிப்பதாக சத்தியம் செய்யப்பட்ட பணம். நமக்கு இடையே எந்த பேரமும் கிடையாது. உனக்கு எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள். எனக்கு என்ன தேவையோ அதை நீதான் கொடுக்க வேண்டும்!"** என்றார். என்ன ஒரு அற்புதமான காட்சி அது! ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு சிறு துண்டு வெல்லத்தை எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டார். இன்னொரு துண்டு வெல்லத்தை எனக்கு பிரசாதமாகக் கொடுத்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ சிரேஷ்டியிடம் **"தாத்தா! நான் செய்த கணேச பூஜை இப்போது முடிந்து விட்டது. கணேசர் நைவேத்தியமாக வெல்ல துண்டை தன் வாயில் போட்டுக் கொண்டு விட்டார். உங்களுக்கு ஆதாரம் வேண்டுமென்றால் என் வாயை பாருங்கள்"** என்று கூறிக்கொண்டே தன் வாயை திறந்து காட்டினார். ஸ்ரீ சிரேஷ்டிக்கு என்ன அற்புதமான காட்சி கிடைத்தது என்பது நமக்கு தெரியாது, ஆனால் சிறிது நேரத்திற்கு பின்னர் ஸ்ரீ சிரேஷ்டி ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், **"என் தங்கக் குழந்தாய், கணேசரிடம் அவருக்கு எப்போதெல்லாம் பசியாக இருக்கிறதோ எவ்வளவு வெல்லம் வேண்டுமானாலும் என்னிடம் கேட்காமலேயே நைவேத்தியமாக எடுத்துக்கொள்ளலாம் என்று கூறிவிடு"** என்றார். இதற்கிடையில், அகண்ட லக்ஷ்மி ஸௌபாக்யவதி வெங்கட சுப்பமாம்பா அங்கு வந்து ஸ்ரீ ஸ்ரீபாதரை எண்ணெய் குளியல் செய்து வைக்க அழைத்துச் சென்றார்.

குருதத்த பட் என்னிடம், "சங்கர் பட், குறுக்குப்புத்தி கொண்டவர்களின் வார்த்தைகளைக் கேட்டு வீணாகி அகோரியாகப் பிறக்க இருந்த துரதிர்ஷ்டத்தில் இருந்து ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னைக் காப்பாற்றினார். என்னுடைய விதிப்படியே விட்டிருந்தால் நான் முழுவதுமாக விழுந்திருப்பேன். மனிதர்கள் மீதுள்ள தூய்மையான அன்பின் காரணமாக சத்குருக்கள் பூர்வ ஜென்மங்களினால் பெற்ற விதியின் விளைவுகளிலிருந்து திறமையாக நம்மை விடுவிக்கிறார். அதற்காக அவரின் மதிப்புமிக்க நேரத்தையும் சக்தியையும் செலவு செய்கிறார்.

சந்திர சிந்து வேதத்தின் படி ஸ்ரீ ஸ்ரீபாதருடைய ஜாதகம் கணிக்கப்பட வேண்டும். அதை சாதாரண கணித முறையில் கையாள முடியாது. சந்திர சிந்து வேதத்திற்கு ஏற்றார் போல் திதி,நாள் மற்றும் நட்சத்திரம் இருக்க வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர், ஸ்ரீ அப்பலராஜ சர்மா மற்றும் ஸ்ரீ பாப்பண்ணார்யா அவர்கள் வீட்டில் தெலுங்குடன் சமஸ்க்ரிதமும் பேசுவார். அவர்கள் இமயமலையில் வசிக்கும் சப்தரிஷிகள் பேசும் சந்தியா பாஷையிலும் (யோக மொழி) பேசுவார்கள். சாம்பலாவில் பேசப்படும் இந்த மொழி சமஸ்கிருதத்தை போல இருக்காது. இந்த மொழியின் இனிமையும் மென்மையும் வர்ணிக்க முடியாது. பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர், ஸ்ரீ பாப்பண்ணார்யா மற்றும் ஸ்ரீ அப்பலராஜ சர்மாவால் மட்டுமே இந்த பாஷையில் பேச முடியும்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் சத்யருஷீஸ்வரர் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம், **"தாத்தா, ஸ்ரீ கிருஷ்ணர் உண்மையும் பேசவில்லை பொய்யும் பேசவில்லை. அவர் செய்து முடிக்க வேண்டிய கடமைகளை மட்டுமே போதித்தார்"** என்றார். ஸ்ரீ பாப்பண்ணார்யா **"என் குழந்தாய், நாம் எப்போதும் உண்மையை மட்டுமே பேச வேண்டும். சாதாரணமாக கூட பொய் பேசக்கூடாது"** என்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்தார். அன்று மதியம் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு வந்தார். ஸ்ரீ சிரேஷ்டிக்கு ஸ்ரீ பாப்பண்ணார்யா மஹாளய பக்ஷ தினத்தன்று தன் வீட்டுக்கு வந்து உணவருந்தி விட்டு, உணவருந்திய பின் கண்டிப்பாக தக்ஷிணை பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆசை தீவிரமாக இருந்தது. இப்படி செய்தால் அவருடைய மூதாதையர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது அவருடைய எண்ணம். ஸ்ரீ சிரேஷ்டியின் மனதில் ஸ்ரீ பாப்பண்ணார்யா தன் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வாரா என்ற சந்தேகம் இருந்தது. இருப்பினும் அவர் ஸ்ரீ ஸ்ரீபாதரை நினைத்துக்கொண்டே தன்னுடைய எண்ணத்தை ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம் தெரிவித்தார். ஸ்ரீ பாப்பண்ணார்யா கண்டிப்பாக உணவருந்திவிட்டு தக்ஷிணை பெற்றுக் கொள்வதாகக் கூறினார். இந்த வார்த்தைகள் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வாயில் இருந்து தானாகவே வந்தன. ஸ்ரீ சிரேஷ்டியின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் திறமைசாலி. மஹாளய பக்ஷத்தின் போது ஸ்ரீ சிரேஷ்டியும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவும் தாங்கள் செய்து கொண்ட சத்தியத்தை மறந்துவிட்டனர். மஹாளய அமாவாசை அன்று ஸ்ரீ சிரேஷ்டி ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு வந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துக்கொண்டே, **"முதலாவதாக சத்தியம் செய்யக்கூடாது. அப்படி செய்தால் அதை நிறைவேற்ற வேண்டும். சத்தியம் செய்துவிட்டு மறந்துவிட்டால், பெற்று கொண்டவராவது நியாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இருவரும் எனக்கு விளக்கம் அளித்ததாக வேண்டும்"** என்றார். இருவரும் தங்கள் தவறை உணர்ந்தனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் ஸ்ரீ ஸ்ரீபாதர் எவ்வளவு தூரம் மக்களுக்கு எச்சரிக்கை ஏற்படுத்தும் திறன் மிக்கவரோ அதற்கு சமமாக அதை அவர்கள் மறக்கச் செய்யும் திறனும் கொண்டவர் என்பதை காட்டுகிறது. இருவரும் தங்கள் தவறுக்காக வருந்தினர். அவர் அவர்களைத் தேற்றும் வகையில் "உங்கள் இருவருக்கும் மறதி ஏற்பட்டதற்கு என்னுடைய பங்கு உள்ளது. ஒவ்வொரு மனிதனின் சைதன்யத்தின் உருவத்தில் '**நான்**' (பிரபஞ்சமான நான்) மற்றும் '**நான்**' (அகங்காரம்) என்பதும் இருக்கும். ஒரு உயிரினம் தன் பெற்றோர்களிடமிருந்து உடல் மட்டுமல்லாது '**நான்**' என்னும் சைதன்யத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த '**நான்**' என்னும் சைதன்யத்துக்கு பிரபஞ்ச திட்டத்தின் ஒரு பகுதியாக நியமிக்கப்பட்ட கடமைகள் (கர்மா) இருக்கும். இந்த கர்மபந்தம் தந்தையிடமிருந்து மகனுக்கும், மகனிடமிருந்து அவனுடைய மகனுக்கும் தொடர்ந்து கொண்டே இருக்கும். எப்போது ஒருவர் இல்லறத்தைத் துறந்து துறவறம் மேற்கொள்கிறாரோ அப்போது கர்மபந்தத்தில் இருந்து விடுபடுவது நிகழும். நீங்கள் இருவரும் செய்து கொண்ட சத்தியம் இந்த பெயர் மற்றும் உருவத்தில் நிறைவேற்றப்படத் தேவையில்லை. இந்த சத்தியம் '**நான்**'

என்று அழைக்கப்படுகிற பிரபஞ்சத்தின் சைதன்யத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஆகவே ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவது ஒரு இடத்தில் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் ஸ்ரீ சிரேஷ்டியின் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் மஹாளய பக்ஷத்தின் போது உணவருந்தலாம். நீங்கள் அது எப்போது,எப்படி எந்த வழியில் நடைபெறும் என்று கேட்கக்கூடாது. கர்மாவின் உருவம் மிகவும் சூக்ஷ்மமானது அதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். ஒரு சில செயல்களுக்கு பௌதீக நேரமும் யோக நேரமும் வித்தியாசப்படும். பௌதீக நேரத்தின் படி இந்த சத்தியம் மஹாளய பக்ஷத்தின் போது நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், அது தொடர்பான யோக நேரம் இன்னும் வரவில்லை என்பதால் அது தூரமான வருங்காலத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் அனுகூலமான வார்த்தைகளை இருவரிடமும் பேசினார்.

பின்னர் நான் ஸ்ரீ பட்டிடம் ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறிய பௌதீக நேரம் மற்றும் யோக நேரம் பற்றி விவரமாகக் கூறும்படி கேட்டேன். பின்னர் ஸ்ரீ பட் அதற்கு "பௌதீக நேரம், பௌதீக இடம் போலவே மானசீக நேரம் மற்றும் மானசீக இடம் என்பதும் உண்டு. அவை ஒன்றாகச் சேர்ந்ததுதான் யோக காலம் (யோக நேரம்) மற்றும் யோக தேசம் (யோக இடம்) என்று அழைக்கப்படும். ஒரு அறுபது வயதுடைய மனிதன் இருபது வயதுடையவர் போல படிப்பின் மீது நாட்டம் உள்ளவராக இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம். அவருக்கு உடல்ரீதியாக அறுபது வயது. இது அவர் உடலுடன் தொடர்புடையது. எனினும் அவருடைய மானசீக வயது இருபதாகத்தான் கருத வேண்டும்.

அதேபோல் ஒரு இருபது வயது இளைஞன் அறுபது வயதுக்கு உரியவரின் பொறுப்புகளை தன் தோளில் சுமந்தால் அவருடைய உடல் ரீதியான வயது இருபதைக் குறிக்கும். இது அவர் உடலுடன் தொடர்புடையது. ஆனால் அவருடைய மானசீக வயது அறுபது. அதே வழியில்,பௌதீக நேரமும் மானசீக நேரமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எந்த சட்டமும் இல்லை. அவை வேறுபட்டு இருக்கலாம்.

எவரெல்லாம் காசி அல்லது பீதிகாபுரத்தில் வசிக்க வேண்டும் என்று மானசீகமாக நிலையான ஆவல் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் காசி அல்லது பீதிகாபுரத்தில் வசிக்கும் பலன்களைப் பெறுவார்கள். உடல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்தாலும் மனது அங்கு வாசம் செய்யாமல் இருந்தால் அந்த குறிப்பிட்ட இடத்தில் வசிப்பதற்கான பலன்களைப் பெற முடியாது. ஒருவர் மனதில் தீர்க்கமான ஆசையுடன் எப்போதும் தான் காசிக்கு தீர்த்த யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்றும் தான் காசியில் வசிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருந்தால் அவர் காசியில் வசிக்கும் பலன்களைப் பெறுவார். அவர் மானசீகமாக காசியில் வசிப்பதுதான் அதற்குக் காரணம். ஆகவே அவர் உடல் ரீதியாக எந்த தேசத்தில் வசித்தாலும் அவருடைய மானசீக தேசம் காசிதான். அதேபோல் காசியில் வசிக்கும் ஒருவர் பசுவைக் கொன்று விட்டால் அவர் உடல்ரீதியாக காசியில் வசிப்பதற்கான

பலன்களை பெற மாட்டார். கங்கை நதியில் நின்று கொண்டு மீன் பிடிக்கக் காத்திருக்கும் கொக்குகள் கங்கை நதியில் ஸ்நானம் செய்த பலன் பெறாது.

அதேபோல் ஒருவருடைய மானசீக நேரமும் மானசீக இடமும் சரியான சுருதியில் இயங்காவிட்டால் அவர் பீதிகாபுரத்திலேயே வசித்துக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாதரை சந்தித்துக் கொண்டு இருந்தாலும் அவர் பீதிகாபுரவாசி அல்லது ஸ்ரீ ஸ்ரீபாதரின் பக்தர் என்று கணக்கில் கொள்ள முடியாது. யோக நேரம் மற்றும் யோக இடம் தொடர்புடைய விஷயங்களைச் சிறந்த ஆன்மீக வலிமை உடைய ஒருவரால் மட்டும்தான் புரிந்து கொள்ள முடியும். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒருவருக்கு அருளும் யோக நேரம் மற்றும் யோக இடம் எப்படிப்பட்ட பலன்களை அளிக்கும் என்பது தெய்வீக ரகசியம். கர்மாவை செயல்படுத்த மட்டும்தான் மனிதனுக்கு அதிகாரம் உள்ளது.

நல்ல செயல்களால் சுகங்களும் தீய செயல்களால் துன்பங்களும் பலன்களாகக் கண்டிப்பாக தொடரும். பூர்வ ஜென்ம கர்மாக்களின் பந்தங்கள் நம்மைப் பின்தொடரும் மற்றும் தொந்தரவு செய்தாலும் சத்குருவின் கருணையால் யோக நேரம் பெற முடியும். யோக நேரம் வந்தால் அந்த இடத்தில் எந்தெந்த கர்மாக்கள் கழிக்கப்பட வேண்டுமோ அவை யோக இடத்தில்(யோக வெளி) விடுவிக்கப்படும். இது ஒரு வினோதமான விஷயம். பீதிகாபுரத்தில் ஸ்ரீ நரசிம்ம வர்மாவுடன் சிவய்யா என்கிற வேலைக்காரன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவனை ஆழ்ந்த பார்வையால் நோக்கினார். உடனடியாக அவனுடைய ஆழ்மன குணத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவன் உணவையும் தூக்கத்தையும் துறந்தான். அவன், "நான்தான் படைத்தல்,காத்தல் மற்றும் அழித்தலுக்கு காரணம். நான் மிகவும் பழமையானவன். நானே உற்பத்தி ஸ்தானம். அனைத்து படைப்புகளும் என்னிடமிருந்துதான் தோன்றுகின்றன, என்னால்தான் வளர்ச்சி அடைகின்றன மற்றும் மீண்டும் என்னிடமே ஐக்கியமாகின்றன" என்றெல்லாம் புரியாத வண்ணம் பேச தொடங்கினான். ஸ்ரீ நரசிம்ம வர்மா, சிவய்யா மீது மிகவும் பரிதாபப்பட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் சிவய்யாவை காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்து கொண்டார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் சிவய்யாவை சுடுகாட்டிற்கு அழைத்து சென்றார். ஸ்ரீ நரசிம்ம வர்மாவும் பின்தொடர்ந்தார். சுடுகாட்டில் காய்ந்த அத்தி மரக்கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு சிவய்யாவினால் எரியூட்டப்பட்டது. பின்னர் சிவய்யா புதுமையான மன இயல்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இவை அனைத்தும் ஸ்ரீ நரசிம்ம வர்மாவுக்கு விசித்திரமாக இருந்தது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம் **"தாத்தா, இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. வ்யாசபுர அக்ரஹாரத்தில் இருந்த ஒரு பண்டிதர் என்னை எப்போதும் விமர்சித்துக் கொண்டே இருந்தார். என்ன ஒரு குற்றம்! வேதத்தின் தனித்துவமான பரமாத்மா எங்கே! இந்த விஷமக்கார சிறுபிள்ளை ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்கே? படைத்தல்,காத்தல் மற்றும் அழித்தலுக்கு இந்த ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் காரணம் என்றும் அவர்தான் ஆதிகாலத்து தொடக்கம் என்றும் கூறுகிறார்கள். இவை அனைத்தும் பித்தலாட்டம், அப்பட்டமான பொய்"** என்று

கூறிக்கொண்டிருந்தார். அவருக்கு இந்த எண்ணம் எப்போதும் இருந்தது. அந்த பண்டிதர் சமீபத்தில்தான் இறந்தார். அவர் பேயாக மாறி விட்டார். ஒரு பிறவியில் சிவய்யா அவருக்கு சிறிது கடன் பட்டிருந்தார். நான் யோக நேரம் உருவாக்கி சுடுகாட்டை யோக இடமாக முடிவு செய்தேன். ஈமச்சடங்கிற்காக அத்தி மரக்கட்டைகளை யோக கர்மாவாக அடுக்கி வைத்து அந்த பண்டிதரை பேய் வாழ்க்கையில் இருந்து விடுவித்தேன். நான் சிவய்யாவை பேயிடம் இருந்து காப்பாற்றினேன்" என்று கூறினார்.

"என் அருமை சங்கர் பட்,பீதிகாபுரத்தில் அவதரித்த பேரோளி, தர்மத்தின் வெளிச்சம் இப்போது குருகட்டாவை புனிதப் படுத்திக் கொண்டிருக்கிறது. கிரகங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் விருப்பத்திற்கேற்ப பலன்கள் தருகின்றன. எந்த ஒரு ஜோதிட பலனும் குறிப்பிட்ட பௌதீக நேரம் மற்றும் பௌதீக இடத்தையும் பொறுத்து நிகழாது. அந்த விருப்பம் யோக நேரம் மற்றும் யோக இடத்தை பொறுத்தே முடிவு செய்யப்படும்.

## குவிந்துள்ள விதியின் பலன்கள் மற்றும் இறப்பை கூட ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணையால் தவிர்க்க முடியும்

ஸ்ரீ ஸ்ரீபாதர் விருப்பப்பட்டால் ஜோதிட முறைப்படி இப்போது நடக்க வேண்டிய நிகழ்ச்சிகள் கூட ஆயிரம் வருடங்களுக்கு பிறகு நடைபெறச் செய்யலாம். அவர் விருப்பப்பட்டால் வேறு எந்த இடத்திலோ நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை இங்கு நடைபெற வைக்கலாம். அப்படியென்றால் அவரால் யோக இடத்தைத் தீர்மானிக்க முடியும். நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும். ஸ்ரீ ஸ்ரீபாதர் தான் பிரியப்பட்ட இடத்திற்கு இடங்கள் மற்றும் நேரத்தை மாற்றலாம். ஒருமுறை சிரேஷ்டியின் வீட்டில் உள்ள தெய்வத்தின் முன்னிலையில் உடைக்கப்பட வேண்டிய தேங்காயை ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் கையாலேயே உடைத்தார். தேங்காய் தூள்தூளாக உடைந்தது. அது முழுவதும் ரத்தமாக இருந்தது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரேஷ்டியிடம், "தாத்தா, நீங்கள் இன்று இறந்திருக்க வேண்டும். உங்கள் தலை சுக்குநூறாகி ரத்தம் ஓடியிருக்க வேண்டும். நான் அந்த நேரத்தையும் இடத்தையும் தேங்காய்க்கு மாற்றி உங்களை காப்பாற்றி விட்டேன்" என்று கூறினார். ஸ்ரீ சிரேஷ்டி ஸ்ரீ ஸ்ரீபாதரின் வார்த்தைகளை கேட்டு ஆச்சரியம் அடைந்தார். இதற்கிடையில் இருள் வரத் தொடங்கியது. நாங்கள் மூவரும் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் விடைபெற்றுக்கொண்டு குருகட்டாவை விட்டு கிளம்பி கிருஷ்ணா நதியின் அக்கரைக்கு சென்றோம்.


**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் - 23

## சிவ வழிபாட்டின் ரகசிய முக்கியத்துவத்தைப் பற்றிய விளக்கம்- சிவயோகியின் சிறந்த பக்தி- ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருக்கு அளித்த போதனைகள்

### சிவயோகியின் சிறந்த பக்தி- ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருக்கு அளித்த போதனைகள்

நான் கிருஷ்ணா நதியின் ஒரு கரையில் இருந்து குருகட்டாவிற்கு புறப்பட முற்பட்ட போது தர்ம குப்தர் என்ற வைசியனை சந்திக்க நேரிட்டது. அவரும் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க குருகட்டாவிற்குத்தான் வந்துகொண்டிருந்தார். அவர் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டிக்கு உறவுக்காரர் என்பதை உரையாடலின் போது தெரிந்து கொண்டேன். என்னுடைய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. நான் இதுவரை சந்தித்த ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய பக்தர்கள் அனைவரும் அவருடைய தெய்வீக வரலாறு, லீலைகள், அற்புதங்கள் மற்றும் வியத்தகு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை விவரித்தனர். அவர்கள் விவரித்த அற்புதமான நிகழ்வுகளில் ஒரு சிறப்புத் தன்மை இருந்தது. ஒவ்வொருவரும் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய வாழ்க்கையின் குறிப்பிட்ட வயதில் நடந்த சில நிகழ்ச்சிகளை மட்டும்தான் கூறினர். அந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக்கும் தொடர்பு இல்லை என்றாலும் அவை அற்புதங்களுக்கு எல்லாம் அற்புதமாகத் தோன்றின. அவை நான் இதுவரை முன்பு கேட்டிராத வினோதமான விஷயங்களாக இருந்தன. இதுவரை ஸ்ரீ ஸ்ரீபாதரின் வாழ்க்கையில் நடைபெற்ற பத்து வயது வரையிலான தெய்வீகத் திருவிளையாடல்கள் அவர் பக்தர்கள் மூலம் வயதுவாரியாக கற்பிக்கப்பட்டேன். தர்ம குப்தர் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பதினோராவது வயதில் நடந்த நிகழ்ச்சிகளை விளக்குவார் என்று எண்ணினேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒவ்வொரு நொடியும் லீலைகள் புரிந்து கொண்டே இருப்பார்.



இதற்கிடையில், தர்ம குப்தர் விவரிக்கத் தொடங்கினார், "ஐயா சங்கர் பட், நான் ஒரு சிவ பக்தன். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பதினோரு வயதிருக்கும் போது ஒரு சிவயோகி பீதிகாபுரத்துக்கு வந்தார். அவர் மதிக்கத்தகுந்த ஒருவர். அவர் தன் கையாலேயே பிக்ஷை எடுப்பார். அவரிடம் பை, தட்டு அல்லது பாத்திரம் எதுவும் கிடையாது. பார்ப்பவர்கள் கண்களுக்கு ஒரு பைத்தியக்காரன் போல தோற்றம் அளித்தார். அவர் முதலில் குக்குடேஸ்வரர் கோவிலுக்கு வந்தார். அவருடைய தூசு படிந்த உடலையும் பைத்தியம் பிடித்தது போன்ற தோற்றத்தையும் கண்ட கோவில் அர்ச்சகர்கள் அவரை கோவிலுக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. எந்தவித உடல் உணர்வுகள் இல்லாத அவதூதர் அவர். அவர் மீண்டும் மீண்டும் சிவனின் பஞ்சாக்ஷரத்தை (நமசிவாய) கூறிக்கொண்டிருந்தார். நான் குதிரையில் சவாரி செய்து கொண்டு ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தேன். ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி எனக்கு மைத்துனர் முறை. வழியில் எப்போதும் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்கு செல்வது என் வழக்கம். நான் மிகவும் பிரபல்யமான வைசியன் என்பதால் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் உள்ள அர்ச்சகர்கள் என் பெயரில் சிறப்பு பூஜைகள் செய்தனர். தாராளமாக சம்பாவனை கொடுப்பது என் பழக்கம். நான் சம்பாவனையாக ஐந்து வராகன்கள் கொடுத்தேன். அதை அவர்களுக்குள் பங்கு போட்டு கொண்டனர். அவர்கள் தங்களுடைய பணக் கஷ்டங்கள், துன்பங்கள் மற்றும் பிரச்சனைகளை தெரிவித்தார்கள். என்னைப் போன்ற உன்னதமான வைசியர்கள் ஒத்துழைத்தால்தான் சனாதன தர்மம் காப்பாற்றப்படும் என்று திட்டவட்டமாக கூறினர். திடீரென ஒரு சிவயோகி வீசும் காற்றைப் போல கோயிலுக்குள் வந்தார். அவருடன் இரண்டு பாம்புகளும் கோவிலுக்குள் நுழைந்தன. அவற்றைப் பார்த்த அர்ச்சகர்களுக்கு குப்பென்று வியர்த்து கொட்டியது.

சிவயோகி அவர்களிடம், "**அர்ச்சகர்களே! பயப்படாதீர்கள். இவை நீங்கள் வணங்கும் குக்குடேஸ்வரரின் ஆபரணங்கள். ஒரு குழந்தை எப்படி தன் தந்தையை தழுவிக்கொள்ளுமோ அதே போல் இவர்கள் ஸ்ரீ குக்குடேஸ்வரரை தழுவிக் கொள்ள ஆவலாக இருக்கிறார்கள். இவை நம்முடைய சகோதரர்கள் போன்றவர்கள். நம் சகோதரர்களை பார்த்து பயப்படுவது, ஓடுவது அல்லது கொல்வது மகாபாவம். அர்ச்சகர்கள் செய்த சிறப்பு பூஜையில் இங்கு ஈர்க்கப்பட்டுள்ளார்கள். மிகுந்த அக்கறை மற்றும் சிரத்தையுடன் சர்பங்களை ஆபரணமாக அணிந்திருக்கும் ஸ்ரீ குக்குடேஸ்வரரை வணங்குவோம்! நமக்க மற்றும் ஜமக்க மந்திரங்களை இனிமையான குரலில் ராகத்துடன் பாடுவோம்**" என்றார்.

அர்ச்சகர்கள் செய்வது அறியாமல் தவித்தனர். அர்ச்சகர்களில் சிலர் முகஸ்துதி செய்பவர்களாக இருந்தனர். பணக்கார பக்தர்கள் அர்ச்சகர்களுக்கு தாராளமாக சம்பாவனை அளிக்கும் வகையில் முகஸ்துதியான வார்த்தைகள் பலவற்றை பேசுவார்கள். பீதிகாபுரத்தில் சூரிய சந்திர சாஸ்திரி என்ற பெயருடைய அர்ச்சகர் ஒருவர் சிறந்த பண்டிதர் மட்டுமல்ல மத சம்பிரதாயங்களையும் சிரத்தையாக கடைபிடிப்பவர். அவருக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் மீது மிகுந்த பக்தி இருந்தது. அவர் ஸ்ரீ

ஸ்ரீபாதரை நினைத்துக்கொண்டு இனிமையான குரலில் ராகத்துடன் நமக்க மற்றும் ஐமக்க மந்திரங்களை பாராயணம் செய்ய தொடங்கினார். அங்கு வந்திருந்த நாகங்களும் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் விதமாக அந்த ராகத்திற்கு ஏற்றார் போல தன் தலையை அசைத்தது.

சூரிய சந்திர சாஸ்திரி சிவயோகியை ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு அழைத்து வந்தார். சிவயோகியை திருப்தி படுத்தும் வகையில் தாராளமாக உணவு அளிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் சிவயோகிக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனம் கிடைத்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருக்கு சிவசக்தி ஸ்வரூபத்தின் காட்சியை அளித்தார். சிவயோகி மூன்று நாட்களுக்கு சமாதி நிலையில் இருந்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர் சிவயோகிக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தெய்வீக கரங்களாலேயே உணவு ஊட்டினார்.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் சுருக்கமாக விளக்கும் வகையில், **"என் செல்வமே, சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள மதச் சடங்குகளைச் செய்து மோக்ஷத்தை அடைந்துகொள். புராணத்தில் கூறப்பட்டுள்ள அனைத்தும் கட்டுக் கதையோ அல்லது பொய்யோ இல்லை. புராணங்களின் சாதாரண அர்த்தமும் அதில் உள்ள மறைமுகமான ரகசிய அர்த்தமும் வேறு. ஆன்மீகத்தில் அதீத நாட்டத்துடன் கடுமையான ஆன்மீக ஒழுக்கத்தை கடைபிடிப்பவர்களுக்கு மட்டும்தான் புராணங்களின் உள் அர்த்தம் மற்றும் ஆழ்ந்த ரகசியங்கள் அவர்களின் ஆழ்மனதில் பளிச்சிடும்.** பருவங்களுக்குக் காரணமான சூரியன் மற்றும் சந்திரனில் சூரியன் உயர்வான என்னையும் சந்திரன் மனதையும் குறிக்கிறது. உயர்வான என்னை குறிக்கும் சூரியனின் பிரகாசமும் மனதைக் குறிக்கும் சந்திரனும் ஒன்றிணைந்தால் மட்டுமே படைப்பின் செயல்பாடுகள் நடக்கும். அமாவாசை மாயையை குறிக்கிறது. இந்த மாயை சந்திர ஒளியின் கோண அளவை கூட்டி, முதலில் வசுக்கள் என்ற ஆற்றலை படைத்து, மீண்டும் அதனுள்ளேயே (மாயை) ஐக்கியமாகிவிடும். எப்படி மாயை பரமாத்மாவின் பிரகாசத்தை ஆழ்மன சந்திரனின் உருவத்துக்கு செலுத்துகிறதோ, சூரியனின் கதிர்களும் சந்திரனுக்கு செலுத்தப்படும். மாயையும் அமாவாசையும் செயலற்ற ஒன்று என்றாலும் அவற்றின் மூலமாகத் தோன்றிய உலகம் அதன் அறிவுசார்ந்த தாக்கத்துக்கு அருகில் இருப்பதால் அறிவுள்ள மற்றும் செயலற்ற பண்புகளின் கலவையாக இருக்கும்.

எப்படி வசந்த காலம் இயற்கை சுழற்சியின் துளிர்விடும் காலத்தின் அடிப்படையோ, பெண்களின் மாதவிடாய் சுழற்சியும் குழந்தை பிறப்புக்கு அடிப்படையாக விளங்குகிறது. பிரம்மஞானத்தை அடைய வேண்டும் என்ற ஆவல் ஒரு பெண்ணிடம் இருக்கும் வம்சத்தில் இருந்துதான் தோன்றியது. பெண்களின் மாதவிடாய் சுழற்சி படைப்பாளியான பிரம்மத்தை எதிர்க்கிறது என்று கூறப்படுகிறது. ஆகவே பிரம்மஹத்தியால் (பிரமத்தை கொல்வது) அது உருவாக்கப்பட்டது என்று பண்டிதர்களால் கூறப்படுகிறது. வேதத்தின் ரகசியங்கள் சந்தஸ் (கவிதையில் உள்ள எழுத்துக்கள் மற்றும் சொற்களின் பயன்பாட்டை குறிக்கும் கலை) என்கிற போர்வையில் மறைக்கப்பட்டுள்ளதால் அது சந்தஸா என்று அழைக்கப்படுகிறது.

பெண்களின் மாதவிடாய் சுழற்சி நேர்மையாக இல்லாமல் குறுக்குத் தன்மையுடன் இருப்பதால், பெண்கள் மாதவிடாய் காலத்தில் மூன்று நாட்கள் தள்ளி வைக்க படுகிறார்கள். சொர்க்கம் இயற்கையான ஒளியுடன் பளபளப்பான கோளமாக இருக்கும். மனிதர்களின் இடமான பூமி இறப்பு மற்றும் பிறப்பின் இடம். மற்ற நரகங்கள் சூரியனின் ஒளியில் ஒளியூட்ட பட்டிருக்கிறது. ஆகவே அவை ப்ருஷ்னுலு என்று அழைக்கப்படுகிறது. அனைத்து பாதாள லோகங்களிலும் ஜாதவேதன் (அக்னி தேவரின் பெயர்) மற்றும் மற்ற தெய்வீக ஆற்றல்களும் இருக்கும். நாம் வாழும் பூமி பாதாளத்திற்கு முன்னால் உள்ளது. அக்னியே பிரதான தெய்வம். அனைத்து எட்டு தெய்வீக ஆற்றல்களும் அஷ்ட வசுக்கள் என்று அழைக்கப்படுகிறது. அவை சூரியனிடமிருந்து ஒளி பெறுவதால் அவை வசுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த எட்டு கோளங்களுக்கும் இடையே உள்ள காற்றோட்டம் நிறைந்த இடம்தான் ஏழு கடல்கள் என்று அழைக்கப்படுகிறது. யாக்யவல்க்கியர் என்கிற முனிவர் இந்தக் காற்று கடலையும் குறிக்கிறது என்று குறிப்பிடுகிறார். சாதாரண மக்கள் ஏழு கடல்கள் என்பதை தண்ணீர் என்றுதான் நினைத்துக் கொள்வார் ஆனால் அது சரியல்ல.

## சிவனின் சிறப்பு-ஆந்திர மாநிலத்தில் உள்ள பதினோரு சிவ க்ஷேத்திரங்களில் உள்ள சிவ வடிவங்கள்

பதினோரு ருத்ரர்களின் (பிரபஞ்சத்தின் விருப்பம் மற்றும் அதிர்வலைகளின் அதிபதி) தனித்தன்மைகளை உள்ளடக்கியதுதான் சிவன். ஆந்திர மாநிலத்தில் பதினோரு சிவ க்ஷேத்திரங்கள் உள்ளன. அங்கு சென்றால் பல நன்மைகள் கிடைக்கும்.

அவை,

1) பிருஹத்ஸிலநகரத்தில் உள்ள நாகரேஸ்வரர்
2) ஸ்ரீசைலத்தில் உள்ள மல்லிகார்ஜுனர்
3) திராக்ஷாராமத்தில் உள்ள பீமேஸ்வரர்
4) க்ஷீரராராமத்தில் உள்ள ராமலிங்கேஸ்வரர்
5) அமராவதியில் உள்ள அமரலிங்கேஸ்வரர்
6) கோடிப்பள்ளியில் உள்ள கோடிப்பள்ளி சோமேஸ்வரர்
7) பீதாபுரத்தில் உள்ள குக்குடேஸ்வரர்
8) மஹாநந்தியில் உள்ள மகாநந்தீஸ்வரர்
9) காலேஸ்வரத்தில் உள்ள காலேஸ்வரர்
10) ஸ்ரீ காளஹஸ்தியில் உள்ள காளஹஸ்தீஸ்வரர்
11) த்ரிபுராந்தகத்தில் உள்ள த்ரிபுராந்தகேஸ்வரர்

உண்மையில் சிவனுக்கு உருவம் கிடையாது. அனைத்து ஆத்மாக்களிலும் ஒளிரும் ஜோதியின் வடிவம்தான் சிவலிங்கம். ஸ்படிக லிங்கம் என்பது சித்தியடைந்த (பூர்ணத்துவம்) பின்னர் தூய்மையான மனதில் பொதிந்துள்ள தூய்மையின் உருவம். நம் தலையில் உறைந்துள்ள மூளைக்கு ஞானத்தை அளிக்கும் ருத்திரர் கபாலி என்று அழைக்கப்படுகிறார். மூளையில் இருந்து கழுத்து வரை கீழ்நோக்கி பரவும் நரம்புகள்

ருத்ர ஜடை என்று அழைக்கப்படும். ஹதயோகியின் வடிவத்தில் இருக்கும் சிவன் லகுலீச என்று அழைக்கப்படுவார். சிவன் பிக்ஷை எடுக்க செல்வதன் மூலம் ஆத்மாக்களின் பாவங்களை எடுத்து விடுகிறார். சிவன் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலின் அதிர்வலைகளுக்கு ஏற்றார் போல் இசை, தாளத்துடன் பரவசமாக நடனமாடுகிறார். ஆதலால்தான் சிவன் நடராஜன் என்று அழைக்கப்படுகிறார். மிகுந்த பேரானந்தத்தை அளிக்கும் பாவ விமோச்சனத்தை சிவன் அளிக்கிறார். சித் என்றால் சைதன்யம் (ஆத்ம ஸ்வரூபம்), அம்பரம் என்றால் ஆகாயம் அல்லது ஆடை. சிதம்பரர் ஆகாயத்தின் உருவத்தில் இருப்பவர். பரந்து விரிந்துள்ள பிரபஞ்சத்தில் நீ பார்க்கும் இந்த ஆகாயம் ருத்திரன் என்ற உருவத்தில் உள்ளது. பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் பன்னிரண்டு ராசிகளை குறிக்கின்றன. அதனால் சிவன் நேரத்தின் பண்பை வெளிப்படுத்துபவர். எட்டு திசைகளும் சித்-ஆகாச உருவத்தின் எட்டு உருவகங்கள். பஞ்சபூதங்களும் அவரின் ஐந்து முகங்கள். ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் மற்றும் மனது ஆகியவை சேர்ந்து பதினோரு ருத்ர ஆற்றல்கள் ஆகின்றன. அவை ஏகாதச ருத்திரர்கள் என்று அழைக்கப்படுகிறது. உமாமகேஸ்வரரின் உருவம் நிலையான, இரக்கமுள்ள மற்றும் அழகான உருவம். திரிபுராந்தகரின் உருவம் மூன்று குணங்களையும் அழிக்கிறது. ஞானக் கண் என்பது மூன்றாவது கண். ஆழ்ந்த தியானத்தில் சமாதி நிலையில் இருக்கும் போது சிவபெருமானின் ஜடாமுடியில் புனிதமாக இருக்கும் அன்னை கங்கை எப்போதும் தெய்வீகமாக வெளிப்பட்டு கொண்டு இருக்கிறாள்.

ஆதிகால ஜோடியான சிவ-பார்வதியின் உருவம்தான் மிதுன ராசியின் அடையாளம். ஆருத்ரா நட்சத்திரம் வானத்தில் ஜொலிக்கும் போது சிவன் தனது தரிசனத்தை அளிக்கிறார். மிதுன ராசியை ஒருவர் அடைவதற்கு முன்னர் ரிஷப ராசியை கடக்க வேண்டும். அந்த ரிஷபம்தான் நந்தீஸ்வரன். இதுதான் தர்மத்தின் தனித்தன்மை. புருவமத்தியில் ஜொலிக்கும் ஒளியே அவருடைய நெற்றியை அலங்கரிக்கும் பிறைச்சந்திரன். யோகநிலையின் காரணமாக மோகம் வீழ்த்தப்படும். ஆண் மற்றும் பெண் என்ற பேதம் அழிந்து ஒன்றுபட்ட நிலையை அடையலாம். அந்த நிலைதான் அர்த்தநாரீஸ்வரர் உருவம்.

லிங்கோத்பவத்தின் (லிங்கத்தின் தோற்றம்) பொழுது ஆயிரம் இதழ்கள் கொண்ட சகஸ்ரார சக்கரத்தில் ஒரு கற்பூர சுடர் தெய்வீக ஒளியாக பிரகாசிக்கும். மொத்த உடலில் சூக்ஷ்ம உடல் மறைந்திருத்தல்தான் லிங்கம் என்பதன் அர்த்தம். அது ஒளியை போல ஜொலிக்கும் என்று வேதங்கள் உறுதிப்படுத்துகின்றன.

சிவ வழிபாட்டின் ரகசியத்தை முறையான, ஒழுக்கமான பயிற்சி மற்றும் குருவின் அருளால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும். எப்படி ஒரு ஸ்தூல பீதிகாபுரம் இருக்கிறதோ அதேபோல் விந்தையான ஒளியினால் உருவான சொர்ண பீதிகாபுரம் என்று ஒன்று உள்ளது. அது என்னுடைய சைதன்யத்தினால் கட்டப் பட்டது. என்னை எப்போதும் தியானித்துக் கொண்டே இருக்கும் அறிவாளிகள் மற்றும் பக்தர்களால் மட்டுமே அதை அனுபவித்துத் தெரிந்துகொள்ள முடியும்.

அவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் சொர்ண பீதிகாபுரவாசிகள் ஆவார்கள். நான் அவர்களுக்கு எப்போதும் எளிதில் அணுகக்கூடிய வகையில் இருப்பேன்.

நீ ஸ்தூல பீதிகாபுரத்தில் குக்குடேஸ்வரர் கோவிலில் பார்த்த அர்ச்சகர்கள் சிவகணங்களின் (சிவனின் வேலையாட்கள்) வழியைச் சேர்ந்தவர்கள். பிசாசுகள், பேய்கள் மற்றும் ஆவிகளின் கூட்டங்கள் பல உள்ளன. எவர் ஒருவர் யோக முறையை பயிற்சி செய்தாலோ அல்லது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை வணங்கினாலோ அந்த பிசாசுகள் மற்றும் பேய்கள் அவர்களுக்குத் தொந்தரவு அளிக்கும். அந்தத் தடைகளை மீறி வருபவர்கள் மிகவும் பாக்கியசாலிகள். என் தாய்வழி தாத்தாவின் வீட்டில் ஒரு மஹாஸமஸ்தானம் அமையும் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். எறும்புக்கூட்டம் போன்ற பக்தர்களும், யோகிகளின் கூட்டமும் என்னுடைய சமஸ்தானத்திற்கு வருகை புரிவார்கள். யார்,எப்போது, எவ்வளவு பேர், எந்த வழியில் வரவேண்டும் ஆகிய அனைத்தையும் நான்தான் முடிவு செய்வேன். அவர்கள் பீதிகாபுரவாசிகளாக இருப்பதால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சமஸ்தானத்துக்கு வந்து என்னை தரிசிக்கலாம் என்று நினைப்பது முற்றிலும் பொய். என்னுடைய கருணை தகுதியானவர்களின் மீதுதான் அமிர்தம் போல பொழியும். தகுதியற்றவர்களுக்கு அது ஒரு கானல் நீர் போல்தான் இருக்கும்" என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 24

## அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின் விளக்கம்

பின்னர் நான் ஸ்ரீ தர்ம குப்தரை சிவபெருமானுடைய பல்வேறு ஆபரணங்கள் மற்றும் ஆயுதங்களின் உள் அர்த்தத்தை விளக்குமாறு கேட்டுக் கொண்டேன். தர்ம குப்தர் விவரிக்கத் தொடங்கினார், “சங்கர் பட், கணபதியின் முக்கியமான ஆயுதம் பாசக்கயிறு மற்றும் அங்குசம் ஆகும். விஷ்ணுவின் ஆயுதம் சக்கரம். சிவனுடைய முக்கியமான ஆயுதம் திரிசூலம் ஆகும். திரிசூலத்தில் மூன்று கூர்மையான பாகங்கள் இருக்கும். அவை நெருப்பின் சுடர்களின் உருவத்தை குறிக்கின்றது. திரிசூலத்தின் மூன்று கூர்மையான பாகங்களும் கீழே ஒன்றாக ஒரு கைப்பிடியில் இணைக்கப்பட்டு இருக்கும். அந்த மூன்று கூர்மையான பாகங்களும் சத்வ, ராஜஸ மற்றும் தாமச குணங்களை குறிக்கின்றன. உண்மையில் அவற்றின் சங்கமம் மூன்று தன்மைகளுக்கும் அப்பாற்பட்டது. திரிசூலம் அதன் உள் அர்த்தத்தைத்தான் குறிக்கின்றது. இதுமட்டு மல்லாது மூச்சுக் காற்று இட மற்றும் பிங்கலை நாடிகள் வழியாக தலையில் உள்ள புருவ மத்தியின் புள்ளியை சென்றடைகிறது. இட, பிங்கலை மற்றும் சுஷ்மன நாடிகள் சந்திக்கும் புள்ளி திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது. இதுதான் பிரம்ம ஞானத்தின் புள்ளி. இதுதான் திரிசூலத்தின் உள்ளர்த்தம்.

சிவன் நாகத்தை ஆபரணமாக தரித்தவர். ஒருவருக்கு குண்டலினி சக்தி எழும்போது அவருக்கு அஷ்டமா சித்திகள் கிடைக்கும். குண்டலினியை குறிக்கும் வகையில் சர்ப்பத்தின் வடிவத்தில் இருக்கும் நாகாபரணன் என்று சிவன் அழைக்கப்படுகிறார். சிவன் ஈஸ்வரன் என்றும் அழைக்கப்படுகிறார். எல்லா சிறந்த சித்திகளும் நாகத்தைப் போலவே மிகவும் ஆபத்தானது. அவை அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு உலக நலனுக்காக உபயோகப்படுத்துவதால் சிவனுக்கு ஈஸ்வரன் என்ற பெயரும் கிடைத்தது.

சிவனின் திரிசூலத்தில் டமரு கட்டப்பட்டிருக்கும். ஆகாயத்திற்கு ஒலியெழுப்பும் குணம் உண்டு. ஒலியின் அதிர்வலைகள் வானத்தில் பரவும். மந்திர ஜெபங்கள் கேட்டாலோ அல்லது நாம் ஜெபித்தாலோ அதிர்வலைகள் வெளியாகும். அந்த அதிர்வலைகளின் ஓசை நம் காதுகளுக்கு சிவனின் டமார சத்தத்தை போலவே இருக்கும். மந்திரங்களை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்வதால் ஒரு யோகிக்கு சந்தோஷம் கிடைக்கும். அந்த விவரிக்க முடியாத சந்தோஷத்தில் அவர் நடனமாடுவார். அதைக் குறிக்கும் வகையில்தான் பரமேஸ்வரன் தன் கையில் டமருவை வைத்திருக்கிறார்.

புருவ மத்தியில் இருக்கும் ஆக்ஞா சக்கரம்தான் அனைத்துவிதமான ஞானங்களுக்கும் மையமாகத் திகழ்கிறது. ஞானமுடைய ஒருவருக்கு இந்த சக்கரம் திறக்கப்பட்டால் அவர் அதி அற்புதமான பார்வையைப் பெறுவார். ஒரு யோகி

இந்த சக்கரத்தின் மூலம் கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களைப் பற்றி தெரிந்துகொள்ளலாம். இந்த ஆக்ஞா சக்கரம்தான் பரமேஸ்வரனின் மூன்றாவது கண். இந்த ஞானக்கண் திறந்தால் சிற்றின்ப ஆசைகளின் அதிபதியான மன்மதனை வெல்லமுடியும்.

சிவன் சுடுகாட்டில் வசிப்பதாக கூறப்படுகிறது. ஒரு யோகியின் அனைத்து ஆசைகளும் யோகத்தீயில் எரிக்கப்பட்டால் அவன் அமைதியை அளிக்கும் நிர்வாண நிலையை அனுபவிப்பான். அறிவு அல்லது ஞானம் வெள்ளை நிறத்துக்கு ஒப்பிடப்படும். அதுதான் விபூதி. ஒருவர் தூய்மையான ஞானதத்திற்குள் நுழையும் போது அவருடைய எண்ணங்களும் ஆசைகளும் எரிந்துவிடும். அதன் மூலம் அவர் சந்தோஷம் பெறுவார். ஞானத்தினால் பெறப்படும் தூய்மை நான்கு நிலைகளில் நடைபெறும்: அவை இயற்கையான, அதி அற்புதமான, ஆன்மீகமான மற்றும் ஆழ்மன நிலைகளில் நடைபெறும். அதை குறிக்கவே சிவபக்தர்கள் நான்கு கோடுகளுடன் விபூதியை தன் நெற்றியில் பூசிக் கொள்கிறார்கள்.

பாகு போல தோற்றமளிக்கும் சிலாசித்து என்கிற உயர்ந்த மருந்து ஒன்று உள்ளது. அதை உண்பவர்கள் எப்போதும் மாறா இளமையுடன் இருப்பார்கள். பண்டைய காலத்தில் சிலாசித்தர் என்ற முனிவர் கல்லை உண்டு வாழ்ந்து வந்தார். அவர் பின்னர் நந்தீஸ்வரனாக பிறந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் ரோகிணி நட்சத்திரம் ரிஷப ராசியில் பிறந்தார். ஆருத்ரா நட்சத்திரம் ருத்திரனின் இடம். மிதுன ராசி அர்த்தநாரீஸ்வரர் தத்துவத்தைக் குறிக்கிறது. வானத்தில் மிதுன ராசிக்கு முன்பு ரிஷப ராசி தோன்றுகிறது. அந்த ரிஷபம்தான் நந்தீஸ்வரன். நந்தி தர்மத்தின் உருவத்தை காட்டுகிறது. கீழ்த்தரமான குணத்துடன் கூடிய காமத்தின் பண்புகள் நிறைந்த மன்மதனை சிவன் எரித்தார். பின்னர் மன்மதன் உருவமற்றவனாகி உயர்ந்த குணமுடைய புனிதமான திருமண தர்மத்துடன் இணைந்து விட்டான். அதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணர் உபமன்யு மகரிஷியின் மாணவனாகி சிவனை சிரத்தையுடன் வழிபட்டார். மேலும் சிவனின் அருளால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ருக்மிணியின் மூலம் பிரத்யும்னன் என்கிற மகன் பிறந்தான். அந்த பிரத்யும்னன் பூர்வஜென்மத்தில் தாழ்ந்த குணமுடைய மன்மதனாகப் பிறந்தான். ரிஷப ராசி மன்மதன் மற்றும் காமனின் வீடு. அனைத்துவிதமான ஒழுக்கமான ஆசைகளும் உயர்ந்த குணமுடையவை. நேர்மையான ஆசைகள் தர்மத்திற்கு உட்பட்டவைதான் என்பதை தெரியப்படுத்தவே ‘விருஷோத்தசர்ஜனம்’ என்கிற சடங்கு செய்யப்படுகிறது.

தாந்த்ரீக சித்திகள் மற்றும் சக்திகள் புலியைப் போல ஆபத்தானது. சிவன் அந்த தாந்த்ரீக சித்திகள் மற்றும் சக்திகளை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார். புலி சக்தியின் வாகனம். சக்தியை தன்னுடைய துணைவியாக தன் கட்டுப்பாட்டில் வைத்து கொண்டதன் அடையாளமாக அவர் புலித்தோலை அணிந்துகொண்டார்.

சிவனுடைய ஜடாமுடியில் வசிக்கும் புனித கங்கை நதி தூய்மையான பிரம்ம ஞானத்தையும் ,வற்றாத அறிவையும் அழியாத் தன்மையை அடைந்ததையும்

குறிக்கிறது. சிவனின் தலையில் உள்ள பிறை சந்திரன் மகா பேரானந்தத்தையும், சந்தோஷத்தையும், அழியாத கருணையினால் கிடைக்கும் ஆழ்ந்த அமைதியையும் குறிக்கிறது. ஆகவே சந்திரகலாதரனின் குணம் அழியாத்தன்மை மற்றும் விவரிக்க முடியாத சந்தோஷ நிலையை அடைவதற்கான ஆதாரமாக விளங்குகிறது.

அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின் உள்ளர்த்தம் என்னவென்றால் மனிதன் வாழ சக்தி அளிக்கும் உயிர் சக்தி இரண்டாக பிரிக்கப்பட்டு - பெண்களின் கருப்பையில் கருமுட்டையாகவும் ஆண்களிடம் விந்துக்களாகவும் தங்கி இருக்கும். அவை இரண்டும் ஒன்று சேர்ந்தால் உயிரினங்கள் உருவாகும். எனினும் படைப்பில் மண்புழுவிடம் தந்தை மற்றும் தாயின் அங்கங்கள் இரண்டும் ஒரே உடலில் இருக்கும். ஆண் மற்றும் பெண் இருவரிடமும் ஆண்-தன்மை மற்றும் பெண்-தன்மை இணைந்தே இருக்கும். உடலின் வலப்பக்கத்தில் ஆணின் தன்மையும், இடப்பக்கத்தில் பெண்ணின் தன்மையும் இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள். மூச்சுக் காற்றின் மூலம் உண்டாகும் சக்தி வலப்பக்கத்திலிருந்து சுழலும்போது பிங்கலை நாடி என்றும் இடப்பக்கத்தில் இருந்து சுழலும் சக்தி இட நாடி என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். பிராணாயாமம் செய்யும் போது வலப்பக்கத்தில் இருந்து மூச்சுக்காற்று இழுக்க பட்டால் அது உடலில் வெப்பத்தை உண்டாக்கும். ஆகவே அது சூரிய நாடி என்று அழைக்கப்படுகிறது. இடப்பக்கத்தில் இருந்து மூச்சுக்காற்று இழுக்கப்பட்டால் உடல் குளிர்ச்சி பெறும். ஆகவே இது சந்திர நாடி என்று அழைக்கப்படுகிறது.

கால புருஷனின் உடலில் வெப்பத்தை அளிக்கும் ஆறு மாதங்கள் மேஷ ராசியில் இருந்து துலாம் ராசி வரை இருப்பதால் அது சூரிய நாடி என்று கருதப்படுகிறது. அஸ்வயுஜ முதல் பங்குனி வரையிலான மற்ற ஆறு மாதங்கள் சந்திர நாடி என்று கருதப்படுகிறது. சூரியன் மற்றும் சந்திரனின் இயக்கத்தால் பௌர்ணமி மற்றும் அமாவாசை கட்டங்கள் நடைபெறுகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு யோகி மூச்சுப் பயிற்சியின் மூலம் காலச்சக்கரத்தில் இருக்கும் அனைத்தையும் தன் உடலில் பெற முடியும். அவர் நேரத்தின் ஞானம் பெறுவதன் மூலம் கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களை பற்றி உணர்ந்து கொள்ள முடியும். இந்த காலச்சக்கரம்தான் பிரிக்கமுடியாத தம்பதியான அர்த்தநாரீஸ்வரர் தத்துவம் என்று கருதப்படுகிறது. இரவு மற்றும் பகல், அமாவாசை மற்றும் பௌர்ணமி மற்றும் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக தோன்றுகின்றன. ஒன்றுக்கு இன்னொன்று ஆதாரமாக விளங்குகிறது. இரவில்லாமல் பகல் இல்லை மற்றும் பகல் இல்லாமல் இரவு இல்லை. அர்த்தநாரீஸ்வரர் தாயும் தந்தையுமாக இருந்து எல்லையில்லா படைப்பு உருவாவதற்குக் காரணமாக இருக்கின்றனர். பழைய படைப்புகள் வெளியேறுவதற்கும் புதிய படைப்புகள் தோன்றுவதற்கும் ஆதாரமாக சிவன் விளங்குவதே அவர் அழிக்கும் கடவுள் என்று அழைக்கப்படுவதன் உள்ளர்த்தம். படைப்பில் மாற்றங்கள் இயற்கையாகவே நடைபெறும். புதுப் படைப்புகள்

உருவாவதும், அவை சிறிது காலம் தொடர்வதும் மீண்டும் அழிவதும் தவிர்க்க முடியாத ஒன்று. ஒருவர் அதர்வண வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அஸ்திரங்கள், சாஸ்திரங்கள் மற்றும் மந்திரங்களை அடைய அனைத்து அஸ்திரங்கள் மற்றும் சாஸ்திரங்களின் அதிபதியான ஈசான ருத்திரனின் அருளை பெற வேண்டும்" என்று தர்ம குப்தர் கூறி முடித்தார்.

நான் தர்ம குப்தரிடம் ஆருத்ரா நட்சத்திரத்திற்கும் சிவ-பார்வதிக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை பற்றி விரிவாக விளக்குமாறு கேட்டுக் கொண்டேன். பின்னர் மீண்டும் அவர் விவரிக்க தொடங்கினார், "ருத்திரன் வில்-அம்புடன் மானை துரத்தும் வேடன் போல தோற்றமளிப்பார். இந்த உருவத்தில்தான் ஆருத்ரா நட்சத்திரம் வானத்தில் காட்சி அளிக்கும். அவர் வேடனை போல இருப்பார்.

## கிரகங்களின் இயக்கத்தினால் உண்டாகும் விளைவுகள்

வேடனை போன்ற உருவத்தில் இருக்கும் ருத்திரனின் உருவம் நட்சத்திர மண்டலத்தில் மிதுனம் மற்றும் கடக ராசிக்கு இடையே ஓரத்தில் இருக்கும். தீங்கு அளிக்க கூடிய கிரகங்களான சனி, செவ்வாய் அல்லது ராகு அந்த மண்டலத்திற்கு அருகே சென்றால், உலகம் முழுவதும் போர் மூள்வது போன்ற பெரும் அழிவுகள் ஏற்படும். இது போன்ற கிரக இயக்கத்தின் போதுதான் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே யுத்தம் மற்றும் மகாபாரத போர் ஆகியவை நிகழ்ந்தன.

மான்யு என்ற உருவத்தில் வேதத்தில் கூறப்பட்டுள்ள அம்பைத் தாங்கிக் கொண்டு காட்சி அளிக்கும் பயங்கரமான ருத்திரன் காலசம்ஹார மூர்த்தி. அந்த ருத்திரனுடைய ஆயுதம் திரிசூலம் அல்ல; அம்புதான் அவருடைய ஆயுதம்.

மாசி மாதத்தில் அமாவாசைக்கு முன் வரும் பதினான்காவது பிறை மகா சிவராத்திரி என்று அழைக்கப்படும். ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முன் வரும் பதினான்காவது பிறை மாத சிவராத்திரி என்று அழைக்கப்படும்.

## சனி பிரதோஷத்தில் சிவனை வழிபடுவதன் பலனால் சனிக் கிரகத்தால் ஏற்படும் தீமைகள் விலகும்

மகா சிவராத்திரி செவ்வாய் கிழமையில் வந்தால் அது மிகவும் முக்கியமானதாக கருதப்படும். பதிமூன்றாவது பிறை சனிக்கிழமையில் ஏற்பட்டால் அது சனி திரயோதசி என்று அழைக்கப்படும். விதியின் விளைவாக சனி கிரகத்தால் ஏற்படும் பல்வேறு இன்னல்கள் தீர சனி திரயோதசி அன்று சிவனை வழிபட்டு எள்ளு தானம் மேற்கொள்ள வேண்டும். சனிக் கிரகத்திற்கு சிவன்தான் அதிபதி. ஆகவே சிவனை நல்லெண்ணெய் கொண்டு வழிபட்டால் சனியினால் ஏற்படும் அனைத்து தோஷங்களும் நீங்கும். சிவன் சனிக்கு அதிபதி என்பதால் சனிக்கிழமை அந்தி வேளையில் சிவனை வழிபட்டால் கர்மாவால் ஏற்படும் தீமைகள் அனைத்தும் அழிக்கப்பட்டு அமைதியும் சுகமும் பெறலாம். சிவனே அழிவுக்கு காரணம். ஒவ்வொரு மனிதனும் சனி பிரதோஷ நேரத்தில் சிவனை வணங்க வேண்டும். இந்த வழிபாட்டின் மூலம் அமங்கலமான செயல்களால் ஏற்படும் கொடும்பாவங்கள்

சாம்பலாகி புதிய தெய்வீக பேரொளி மற்றும் புனிதமான அதிர்வலைகள் மூலம் உடல், உள்ளம், அறிவு, அகங்காரம், மனம் மற்றும் ஆன்மா ஆகியவை தூய்மையாகி சந்தோஷமான புது வாழ்க்கை அருளப்படுகிறது. ஒருவர் இந்த அனைத்து உச்ச சாதனைகளையும் அடைய வேண்டுமானால் அவர் சனிப் பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடுதல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள வழிகளால் சனியின் சீற்றம் குறைகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையின் இரவின் போதும், ஒவ்வொரு உயிரினத்தின் பாவங்களுக்கு காரணமான துரதிர்ஷ்டம் மற்றும் அழிவை உண்டாக்கும் எதிர்மறை சக்திகள் கண்ணுக்குத் தெரியாத தடித்த கருப்பு உருவத்தில் இருக்கும். அது மஹாகாலனின் (மஹாபிரளயத்தின் போது இருக்கும் சிவன்) சக்தி உருவமான மகாகாளியிடம் குடிகொள்ளும். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை சூரிய உதயத்தின் போது, அண்டத்தின் சூரியனின் மைய பகுதியில் வாசம் செய்யும் மகாசக்தியின் அருளினால், ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவருக்கு புதுவாழ்க்கை தொடங்கும். ஸ்ரீ பரமேஸ்வரனின் யோகத்தீயில் அமங்கலமான பாவ மூட்டைகள் எரிந்து விடும்.

## பஞ்சபூதங்களின் உருவமாக சிவன் இருத்தல்

பஞ்சபூதங்களும் சிவனின் உருவம்தான். நம் உடலில் பூமியின் குணம் மூலாதாரத்தில் உள்ளது. அதன் அடையாளமாக ஆன்மீகத் தேடலில் உள்ளவர்கள் பார்த்திவ லிங்கத்தை வழிபடுகிறார்கள். ஸ்வாதிஷ்டானம் நீரின் குணத்துடன் ஒப்பிடப்படுகிறது. ஜல லிங்கம் இந்த மையத்தை குறிக்கிறது. மணிப்பூரகம் நெருப்பின் குணத்துடன் ஒப்பிடப்படுகிறது. ஜுவால லிங்கம் இந்த மையத்தை குறிக்கிறது. இது ஹிரண்ய ஸ்தம்பம் (தங்கத்தினாலான தூண்) என்றும் அழைக்கப் படுகிறது. இதயத்தில் உள்ள அனாஹத சக்கரம் காற்று குணத்தின் இருப்பிடம். வாயு லிங்கம் காற்றின் சின்னம். ஆகாயத்தின் இடமான தொண்டையில் இருக்கும் விசுத்த சக்கரம் சிதம்பர லிங்கம் என்று அழைக்கப்படுகிறது. ஆகாச லிங்கம் என்று அழைக்கப்படுகிற சிதம்பர லிங்கத்துக்கு வடிவம் கிடையாது. பஞ்சபூதங்களின் சக்திகளைக் கொண்ட இந்த சிவலிங்கங்களை வழிபட்டு,வணங்கி மற்றும் தரிசனம் செய்தால் சிறந்த பலன்களைப் பெறலாம்.

சிதம்பரம் க்ஷேத்ரத்தில் உள்ள திரைக்கு பின்னால் ஒளிந்திருக்கும் ஒன்று, சிதம்பர ரகசியம் என்று அழைக்கப்படும். திரை தூக்கப்பட்டால் அங்கு ஒன்றும் இருக்காது. தூய்மையான வானமே சிவனின் ஆத்ம லிங்கம். இதயம்தான் ஆன்மாவின் இருப்பிடம் ஆகவே ஆகாயத்தில்தான் ஆன்மா வசிக்கிறது. உண்மையில் ஆகாயத்திற்கு உருவம் கிடையாது. மனதை ஒருநிலை படுத்தி உண்மையான தன்னை நோக்கி தியானிக்கும் யோகிகளுடைய இதய வானம் திறக்கப்படும். அவர்களுடைய மனதில் முழு படைப்புகள், முழு பிரபஞ்சம், நட்சத்திரங்கள், கிரகங்கள் மற்றும் மற்றவை அனைத்தும் தோன்றும். ருண என்றால் பாவம். அருண என்றால் பாவமற்ற. பரமேஸ்வரன் இதய வானில் வசிக்கிறார். திருவண்ணாமலையில் இருக்கும் பரமேஸ்வரன் அருணாச்சல மலையாக அருணாச்சலேஸ்வரர் உருவம் மற்றும் மகா சித்த

உருவத்திலும் வசிக்கிறார். அவரின் தரிசனம் அனைத்து பாவங்களையும் நடுநிலைப்படுத்திவிடும். அதே அருணாச்சலேஸ்வரர் இப்போது பீதிகாபுரத்தில் மனித உருவத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளார். அவர் இப்போது தெய்வீக ஒளியாக குருகட்டாவில் ஜொலித்துக் கொண்டு நம்மை விடுவிக்கும் எண்ணத்துடன் இருக்கிறார்.

குருகட்டா அருணாச்சல மலைக்கு ஈடானது. அர்த்தநாரீஸ்வரர் வடிவில் இருக்கும் அருணாச்சலேஸ்வரர் வேறு யாரும் அல்ல ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான். அருணாசலத்தில் இருக்கும் சிறந்த சித்தரும் இந்த முனிவருடைய வேடத்தில்தான் இருக்கிறார். எப்படி திருவண்ணாமலையில் இருக்கும் மலை சிவனின் உருவமோ அதேபோல் குருகட்டா ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவம். சிவனின் சக்திகள் அருணாச்சல சிவலிங்கத்தில் இருப்பதைப் போலவே சிவனுடைய சக்திகள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவத்திலும் இருக்கிறது. அருணாசலத்தில் மஹாசித்தர் வடிவில் இருக்கும் பரமேஸ்வரனைப் பார்ப்பது மிகவும் கடினம் ஆனால் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய மஹாசித்தர் வடிவத்தை எளிதாக அணுக முடியும்" என்று தர்ம குப்தர் முடித்துக்கொண்டார்.

நான் தர்ம குப்தரிடம், **"ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ பத்மாவதி தேவியுடன் கூடிய ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி கலந்த உருவம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் நீங்கள் சிவ-சக்தி உருவம் என்று உறுதிப்படுத்துகிறீர்கள். சிவனை சனி பிரதோஷ காலங்களில் வழிபடுவது மிகுந்த நன்மையை அளிக்கும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். இவை அனைத்தும் எனக்கு குழப்பமாக இருக்கிறது. தயவு செய்து விளக்குங்கள்"** என்று வேண்டிக் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு தர்ம குப்தர் சிரித்துக்கொண்டே பதிலளித்தார். "ஐயா, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய தெய்வீக குணத்தை சப்தரிஷிகளாலும் புரிந்துகொள்ள முடியாது. எனினும் என்னால் முடிந்த அளவுக்கு உங்களுக்கு விளக்கம் அளிக்க முயற்சி செய்கிறேன். ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி கிருத யுகத்தில் (சத்ய யுகம்) இருந்து இருக்கிறார். அவர் தசரத மகாராஜாவுக்கு (அயோத்தியின் மன்னன், ஸ்ரீ ராமனின் தந்தை) வரங்களை அளித்தார். அவர் ஸ்ரீராமராக பிறக்கப் போவதாக கூறியதால், அவரை கௌசல்யாவின் மகனான ஸ்ரீராமராகவும் வணங்கலாம் என்று கூறினார். ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி சில காலங்களுக்கு சக்தியின் உருவமான பாலாதிரி புரசுந்தரியாகவும் வணங்கப்பட்டார். சில காலங்களுக்கு பிறகு அவர் சிவனின் உருவமாக வணங்கப்பட்டார். சிலர் அவரை சுப்பிரமணிய ஸ்வாமியாக வணங்குகிறார்கள். ஸ்ரீ ராமானுஜரின் முயற்சியினால் அவர் இப்போது வைஷ்ணவர் களால் மகாவிஷ்ணுவாக வணங்கப்படுகிறார். புத்தர்கள் அவரை மகா சூனியமாகக் கருதுகிறார்கள். உண்மையில் அவர் ஸ்ரீ தத்தர்! அவர் மாயையில் தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் திறமைசாலி. ஆன்மீகத் தேடலில் இருப்பவர்கள் எவராயினும் அவர்களின் அழைப்புக்கு பதிலளிக்கும் வகையில் தன் லீலையின் மூலம் நிரூபித்து காப்பாற்றி தான் கடவுள் என்பதை மெய்ப்பிக்கிறார். அதே ஒருவர்தான் இப்போது இந்த உலகத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக தன் இருப்பை அளித்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் இடப்பக்கத்தில் சக்தியும் வலப்பக்கத்தில் சிவனும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சிவ-சக்தியின் தன்மைகள் நிறைந்தவர். பத்மாவதி தாயார் அவர் இதயத்தை அலங்கரிக்கிறார். இதயம் கருணையின் அடையாளம். அது அனாஹதச் சக்கரத்தின் இடம். சக்தி அங்கிருந்து உயர்ந்த சக்கரங்கள் மற்றும் தாழ்மையான சக்கரங்களுக்கும் நீளும். ஆகவே தெய்வீக சைதன்யத்துடன் கூடிய மற்றொரு உடலில் அவர் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் மற்றும் ஸ்ரீ பத்மாவதி. வாணி (சரஸ்வதி) மற்றும் ஹிரண்யகர்பரின் உருவமாகவும் இருக்கிறார். வாணி அதாவது சரஸ்வதி, அவளுடைய நாவில் வாசம் செய்யும் பேச்சின் உருவங்களான பரா, பஸ்யந்தி, மத்யமா மற்றும் வைகரி ஆகியவைகளால் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறாள். வாணி தேவி மற்றும் ஹிரண்யகர்பரின் தெய்வீக சைதன்யம் அத்வைத நிலையில் தொடர்ந்து இருக்கிறது.

**உண்மையான சிதம்பர ரகசியம் என்னவென்றால்:** அவர் மூன்று விதமான சைதன்யங்ளையும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்கிறார். அவருடைய வெவ்வேறு உடல்களுக்கும் துளி கூட ஒற்றுமை இருக்காது. ஒரே நேரத்தில், வாணி-ஹிரண்யகர்பர், சிவ-பார்வதி, பத்மாவதி-ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆகியோரின் சைதன்யங்களுடன் கூடிய உடலை எடுத்துக் கொள்கிறார். ஒரே நேரத்தில், மேலே கூறப்பட்டுள்ள உருவங்களையெல்லாம் மீறிய ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்ற சைதன்யத்துடன் கூடிய உடலையும் எடுத்தார்.

இது அவருடைய யோகமாயை, அவருடைய வைஷ்ணவ மாயை. இதுதான் சிதம்பர ரகசியம். அவரை துவைதம், அத்வைதம்,விசிஷ்டாத்வைதம் மற்றும் அவற்றை எல்லாம் தாண்டி ஒன்று என்றெல்லாம் கருதிக் கொள்ளலாம். அவரின் யோகமாயை மற்றும் வைஷ்ணவமாயைக்கு எல்லை இல்லை என்பதுதான் இதற்கெல்லாம் காரணம். அழகான உருவமான ஜகன்மோகினியாக (விஷ்ணுவின் பெண் அவதாரம்) தந்திரமாகத் தன்னை மாற்றிக்கொண்டு தேவர்களுக்கு அமுதம் வழங்கிய ஒருவருக்கு; தன்னுடைய மோகினி அவதாரத்தில் மன்மதனின் தேவை கூட இல்லாமல் சிவனை கவர்ந்த ஒருவருக்கு; தர்மசாஸ்தாவைப் (சிவன் மற்றும் மோகினியின் மகன்) பெற்றெடுத்த ஒருவருக்கு எதுவும் சாத்தியம் இல்லை என்பது கிடையாது! ஞானத்தை வழங்கும் ஸ்ரீ தத்தர், "**நான்தான் மோகினி உருவம்; தர்மசாஸ்தாவின் உருவமும் நான்தான்**" என்று கூறுகிறார். அவருக்கு எதுவும் முடியாது என்பதே கிடையாது! ஆத்மா தன்னை மாயையின் மூலம் படைத்துக் கொள்ளும் அல்லவா? மோகினியின் உருவத்தில் இருந்த அவர் தன்னை தர்மசாஸ்தாவாக படைத்து கொண்டார். ஆஹா, என்ன ஒரு தந்திரமான வழி!" இவ்வாறு கூறி ஸ்ரீ தர்ம குப்தர் என்னை ஆச்சரியமடைய வைத்தார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 25

## ருத்ராக்ஷங்களின் மகிமைகள்

### சிவனை வழிபடும் முறைகள் மற்றும் அதன் பலன்கள்

நான் ஸ்ரீ தர்ம குப்தரிடம் சிவனை வழிபடும் வழிகளைக் கூறுமாறு கேட்டுக் கொண்டேன். ஸ்ரீ தர்ம குப்தர், "என் அருமை சங்கர் பட், பஞ்சாக்ஷர மந்திரமான நமசிவாய என்ற மந்திரத்தை ஜெபிப்பதுதான் சிவனை வழிபட முதல் வழிமுறை. இரண்டாவது வழிமுறை சிவனை ஸ்ரீ மஹாந்யாஸ வழிகள் மூலம் வழிபடுதல். மூன்றாவது வழிமுறை ருத்ராபிஷேகம் செய்வது (தெய்வத்திற்கு அபிஷேகம் செய்தல்).

ஐந்து அக்ஷரங்கள் கொண்ட மந்திரம் பஞ்ச பூதங்களை குறிக்கும். ஒரு உயிரினம் மிருகத்தனமான பிணைப்புகளான பற்று, மோகம் முதலியவைகளில் சிக்கிக் கொள்வதால் மிருகம் என்று அழைக்கப்படுகிறது. உயிரினங்களை மிருகத்தனமான பந்தங்களில் இருந்து பசுபதி விடுவிக்கிறார்.

ஐந்து கோணங்களுடன் கூடிய நட்சத்திரம் ஐந்து அக்ஷரங்கள் கொண்ட சிவமந்திரம் என்று கூறப்படுகிறது. ஐந்து கோணங்களுடன் கூடிய மந்திரத்தில் முதலாவது வகை விடுதலையை அளிக்கிறது, இரண்டாவது ஆடம்பரம் மற்றும் செழுமையை வழங்குகிறது. வழிபாட்டின் போது செய்யப்படும் ஐந்து வகையான சேவைகளில், சந்தனப்பொடி பூமியின் குணத்தையும் , இளநீர் நீரின் குணத்தையும், விளக்கு நெருப்பின் குணத்தையும், சாம்பிராணியின் நறுமணம் காற்றின் குணத்தையும், மணியின் ஓசை ஆகாயத்தின் குணத்தையும் குறிப்பதாக கூறப்படுகிறது. இதே பாணியில் சிவனை வழிபடும் போது செய்யப்படும் ஐந்து வகையான சம்பிரதாயங்கள் பஞ்சபூதங்களின் குணங்களை குறிக்கிறது.

ஐந்து எழுத்துக்கள் கொண்ட பஞ்சாக்ஷர மந்திரம் மற்றும் அதன் குணங்களை ஜெபிக்கும் பக்தர்களுக்கு ஐந்து குணங்களும் ஐந்து நிறங்களில் தோன்றும். ஐந்து நிறங்களாவன,

1. வெள்ளை முத்தைப் போன்ற பாதரசத்தின் ஒளி அல்லது வெள்ளியைப் போன்ற பேரொளி
2. பவளத்தைப் போன்ற சிவப்பு நிறம்
3. தங்கத்தை போன்ற மஞ்சள்
4. பிரபஞ்சத்தில் பரவியுள்ள நீல நிற ஆகாயத்தை போன்ற ஒளிபொருந்திய நீலம்
5. தூய்மையான வெள்ளை ஒளி

புருவ மத்தியில் ஒளிரும் ஐந்து வண்ணம் கொண்ட ஒளியை 'சாந்தியோபாஸனா' (சந்தியாவந்தனம்) என்று முனிவர்கள் கூறுகிறார்கள். ஆன்மீகத் தேடலுக்கு யந்திரம், மந்திரம், பஞ்ச தத்துவ பயிற்சி மற்றும் யோகப்பயிற்சி மற்றும் சரணாகதி ஆகியவை

முக்கியமான ஆக்கக்கூறுகள். இதன் மூலம் தேகாத்மாவின் அதாவது உடலுடைய ஆத்ம எண்ணங்கள் அழிந்துவிடும்; ஜீவனுடைய உடல் கோவில் என்று கருதப்படும்; அதில் ஒளிரும் ஜீவன் சிவ ஆத்மாவாக மாறிவிடும்; மற்றும் மோக்ஷம் கிடைத்துவிடும். மோக்ஷம் பெற பஞ்சாக்ஷர ஜபம், சிவனை மஹாந்யாஸ வழிபாடு செய்தல் மற்றும் ருத்ராபிஷேகம் சிறந்த உதவிகள் புரியும்.

விஷ்ணுவுக்கு சகஸ்ரநாம ஸ்தோத்திரம் பிடிக்கும். கணபதிக்கு மோதகம் என்றால் இஷ்டம். சூரியன் நமஸ்காரத்தினால் மகிழ்ச்சி அடைகிறார். சந்திரன் தண்ணீர் அளிப்பதால் சந்தோஷம் அடைகிறார். அவிசு(நெய் மற்றும் வெண்ணெய் காணிக்கை) பெறுவதினால் அக்னி பகவான் சந்தோஷம் அடைகிறார். சிவன் அபிஷேகப் பிரியர். முந்தைய ஒரு கல்பத்தில் மிகப்பெரிய பிரளயம் ஏற்பட்ட போது பிரம்மா வருங்காலப் படைப்பிற்காக பல்வேறு உயிரினங்கள்,மரம் மற்றும் மூலிகைச் செடிகள் ஆகியவற்றின் விதைகளை ஒரு பாத்திரத்தில் நிரப்பினார். அந்த பாத்திரத்தில் அனைத்து கடல்கள் மற்றும் நதிகளின் நீருடன் அமிர்தத்தையும் ஊற்றினார். அதற்குள் தன்னுடைய உயிர்சக்தியைச் செலுத்தி காயத்ரி மந்திரத்தால் சக்தியூட்டினார். அந்த பாத்திரம்தான் பூர்ணகும்பம் (முழு குடம்: கூறுகள் மற்றும் சைதன்யத்தை குறிக்கும். அதாவது முழுமையான தெய்வீகம் நிரம்பியுள்ளது) என்று அழைக்கப்படுகிறது. அந்த பூரண கும்பத்தில் இருந்த அமிர்தம் தொடர்ந்து பூமியின் மீது தெளிக்கப்பட்டது. முனிவர்கள் இந்த அபிஷேகத்தை கைலாச மலையில் செய்ததால் அது அமிர்தமான இடமாக ஆனது. ஸ்ரவண மாதம் பௌர்ணமி அன்று அமர்நாத் குகையில் இயற்கையாகவே பனிலிங்கம் உருவாகும். அமர்நாத் சிவலிங்கத்தை பார்த்தாலே பாவங்கள் அனைத்தும் அழிந்துவிடும்.

## வசிஷ்ட மற்றும் அகத்திய முனிவர்களின் பிறப்பு

பூர்ணகும்பம் தலைகீழாக கவிழ்க்கப்பட்ட போது இரண்டு சிறந்த முனிவர்கள் வெளி வந்தனர். முதலாவதாக வெள்ளை ஒளியுடன் வசிஷ்ட முனிவர் வெளிவந்தார். இரண்டாவதாக நீல நிற ஒளியுடன் அகஸ்திய முனிவர் பிறந்தார். இருவரும் மித்ர மற்றும் வருண தேவர்களின் உள்ளார்ந்த பண்புகளுடன் பிறந்தனர்.

பூரண கும்பத்தில் புனிதமாக்கப்பட்ட நீரினால் ஏகாதச ருத்ராபிஷேகம் (ஏகாதச: 11. ஆகவே 11 அபிஷேகங்கள்) செய்யப்பட வேண்டும். இதை செய்வதினால் பரமேஸ்வரன் சந்திரனின் பதினோராவது பிறையின் நற்பலனை, அதாவது ஏகாதச ருத்திரரின் பண்புகளை அளிப்பார். பதினோரு ருத்திரர்களுக்கும் நிலவின் பதினோராவது பிறைக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதினாலும், வைஷ்ணவர்களும் இந்த நாளை புனிதமாக கருதுவதால், சிவனும் கேசவனும் பிரிக்க முடியாதவர்கள் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். ஏகாதச ருத்ராபிஷேகம் நமகம் மந்திரங்களுடன் நடத்தப்பட்டால் பாதகமான அம்சங்கள் மூலம் ஏற்படும் துர்மரணங்கள் தவிர்க்கப்படும். சோமலதாவின் பிரதான தெய்வம் சந்திரன். அவர் புத்துணர்ச்சிக்குத் தேவையான வலிமையைப் பொழிகிறார். இந்த சந்திரனின் ஒளிக்கீற்று யோகியின் புருவ மத்திக்கு மேலேயும் சகஸ்ரார மையத்திற்கு முன்னால் தலையில் ஒளிரும்.

## சிவபெருமானுடைய வெவ்வேறு உருவங்களின் விளக்கம்

இந்த காரணத்தினால்தான் சிவபெருமானுடைய மகுடத்தை பிறைச்சந்திரன் அலங்கரிக்கிறது. குஜராத்தில் உள்ள சோம்நாத் க்ஷேத்திரத்தில் சிவனின் தலையில் உள்ள பிறைச் சந்திரனை போல ஒளிரும் சந்திரகாந்தா கல்லினால் ஆன ஸ்படிக லிங்கம் வழிபடப்படுகிறது.

ஒருவர் ருத்ர நிலை அடையும் வரை ருத்ராபிஷேகம் செய்யக்கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. காலம் அனைத்தையும் மாற்றி விடும், ஆதலால் அபிஷேகம் செய்பவர் நேரத்துடன் ஒன்றாகி யக்ஞத்தின் உருவத்தை மஹன்யாஸத்துடன் தன் மனதில் செலுத்தி ருத்திராபிஷேகம் மேற்கொள்ள வேண்டும்.

போதாயன முனிவர் விவரித்துள்ள மஹன்யாஸ ருத்ராபிஷேகம் சிவனுடைய ஐந்து உருவங்களை வழிபடும் முறையை கூறுகிறது. அவை தத்புருஷ, அகோர, சத்யோஜாத, வாமதேவ மற்றும் ஈசான ஆகும். தத்புருஷ உருவம் மின்சார சக்தியைப் போன்ற பிரளய காலத்தில் தோன்றும் நெருப்பை ஒத்ததாக இருக்கும். அகோர உருவம் வானத்தின் நீல நிறம் போல இருக்கும், அதாவது கரு நீல வண்டு போன்ற நிறத்தில் இருக்கும். சத்யோஜாத உருவம் சந்திரனுடைய மல்லிகை வெள்ளை நிறத்தில் இருக்கும். வாமதேவன் உருவம் பனி வெள்ளை நிறத்தில் இருக்கும். ஈசான உருவம் மிகவும் பிரகாசமான உருவம் ஆகவே அவர் வானத்தின் நிறத்தில் இருப்பார்.

ருத்திரர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் என்று கூறப்படுகிறது. அதாவது ருத்திரகணங்கள் என்று பெயருடைய தேவர்கள் ஒரு குழுவிற்கு மூன்று பேர் என்ற விகிதத்தில் உள்ளனர். ஆகவே பதினோரு ருத்திரர்களுக்கு 33 கோடி ருத்திரகணங்கள் இருக்கிறார்கள். அவர்கள் பூமி,வானம்,பிரபஞ்சம், நீர், காற்று, உடல், உயிர்சக்தி மற்றும் மனம் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

கணபதிதான் முப்பத்து முக்கோடி ருத்ர கணங்களின் அதிபதி. அதனால்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கணேச சதுர்த்தி அன்று பூமியில் அவதரித்து யோக வழியின் மூலம் தன்னிடம் கணபதியின் கூறுகள் இருப்பதை வெளிப்படுத்தினார். ஆகவே எவரொருவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை நினைவுபடுத்தி வணங்கினாலும் முப்பத்து முக்கோடி ருத்திரகணங்களுடைய அருளையும் பெறுவார்கள்.

## ருத்ராக்ஷம் பற்றிய விளக்கம்

சிவபக்தர்கள் கண்டிப்பாக ருத்ராக்ஷம் அணிய வேண்டும். ருத்ராக்ஷத்தில் பிராமண, க்ஷத்ரிய, வைசிய மற்றும் சூத்திர பிரிவுகள் உள்ளன. வெள்ளை ருத்ராக்ஷம் பிராமண பிரிவை சேர்ந்தது. அவை அபூர்வமாகத்தான் கிடைக்கும். சிவப்பு மற்றும் தேன் நிற ருத்ராக்ஷங்கள் க்ஷத்ரிய பிரிவை சேர்ந்தது. புளியங்கொட்டை நிறத்தில் இருக்கும் ருத்ராக்ஷம் வைசிய பிரிவையும் கருப்பு நிறம் சூத்திர பிரிவையும் சேர்ந்தது.

பொதுவாக ருத்ராக்ஷங்கள் ஐந்து முகத்தில் இருந்து பதினாறு முகங்கள் கொண்டவையாக இருக்கும். பாலிலோ தண்ணீரிலோ ருத்ராக்ஷத்தை வைத்தால் அது முழுகி விடும். மெல்லியதாக அல்லது லேசான எடையுள்ள ருத்ராக்ஷங்களை அணியக்கூடாது. ருத்ராக்ஷத்தை செப்பு கரண்டிக்குக் கீழ் வைத்து அதற்கடியில் செப்புத்தட்டை வைத்தால்(அதாவது இரண்டு செப்புகளுக்கு நடுவே) அது





சாலிகிராமம் போல வலப்பக்கம் சுழன்றால் அது நல்ல வகை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில ருத்ராக்ஷங்கள் இடப்பக்கம் சுழலும். அவை வறுமையை கொண்டு சேர்க்கும். ஆகவே கிரஹஸ்தர்கள் அவ்வகை ருத்ராக்ஷங்களை உபயோகிக்க கூடாது. கிரஹஸ்தர்கள் அதை உபயோகித்தால் அசம்பாவிதமான நிகழ்வுகளான மனைவியின் இறப்பு, குடும்பத்தில் பிளவுகள் மற்றும் குடும்பத்தை துறந்து விடுதல் போன்றவை நடைபெறும். எனினும் துறவிகள் இதை உபயோகிப்பர்.

பிராமணர்கள் வெள்ளை நிற ருத்ராக்ஷத்தையும், க்ஷத்ரியர்கள் சிவப்பு நிற ருத்ராக்ஷத்தையும், வைசியர்கள் வெளிர் மஞ்சள் நிற ருத்ராக்ஷத்தையும், சூத்திரர்கள் கருப்பு நிற ருத்ராக்ஷத்தையும் உபயோகிக்க வேண்டும் என காலாக்னி ருத்ரர் கூறுயிருக்கிறார். அப்போதுதான் சாதகமான பலன்கள் கிடைத்து, பாவங்கள் அழிக்கப்பட்டு அவர்களுடைய ஆசைகள் அனைத்தும் நிறைவேறும்.

பல்வேறு எண்களுடன் கூடிய முகத்துடன் இருக்கும் ருத்ராக்ஷங்களின் சிறப்பு பண்புகள் பின்வருமாறு:

**ஒற்றை முக ருத்ராக்ஷம்** சிவனுடைய உருவம்;
**இரண்டு முக ருத்ராக்ஷம்** அர்தநாரீஸ்வரரின் உருவம்;
**மூன்று முக ருத்ராக்ஷம்** அக்னியின் உருவம்;
**நான்கு முக ருத்ராக்ஷம்** பிரம்மனின் உருவம்;
**ஐந்து முக ருத்ராக்ஷம்** ருத்ரனின் காலாக்னி உருவம்;
**ஆறு முக ருத்ராக்ஷம்** கார்த்திகேயனின் உருவம்;
**ஏழு முக ருத்ராக்ஷம்** மன்மதனின் உருவம்;
**எட்டு முக ருத்ராக்ஷம்** ருத்ர பைரவரின் உருவம்;

ஒன்பது முக ருத்ராக்ஷம் கபில முனிவரின் உருவம்; இது கிடைப்பது மிகவும் கடினம்.

ஒன்பது முக ருத்ராக்ஷத்தில் வித்யா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி, சாந்த சக்தி, வாம சக்தி, ஜ்யேஷ்டா சக்தி, ருத்ர சக்தி, அங்க சக்தி மற்றும் பஷ்யந்தி ஆகிய சக்திகள் உள்ளடங்கியுள்ளன. ஆகவே ஒன்பது முக ருத்ராக்ஷம் தேவர்களுடைய தர்மத்தின் உருவம்.

பத்து முக ருத்ராக்ஷம் விஷ்ணுவின் உருவம்;
பதினோரு முக ருத்ராக்ஷம் உண்மையாகவே ருத்திரனுடைய உருவம்;
பன்னிரண்டு முக ருத்ராக்ஷம் பன்னிரண்டு ஆதித்யர்களுடைய உருவம்;

இந்த வழியில்தான் ருத்ராக்ஷங்களுக்கும் பல்வேறு தேவர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறது.

ஶ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப உருவத்தின் சைதன்யத்தில் பற்று மற்றும் பற்றின்மை சக்திகளின் அதிபதியான கணேசரின் குணம் உள்ளது. ஆகவே அவர் முப்பத்து முக்கோடி தெய்வங்களின் தெய்வீக உருவம். அதுமட்டுமில்லை. அவருடைய விருப்பம் இல்லாமல் இந்த படைப்பில் ஒரு அணு கூட அசையாது. அவர்தான் அனைத்து

இயக்கங்களுக்கும் பொறுப்பு. அனைத்து நிகழ்வுகளுக்கும் அவர்தான் காரணம். அவரை சிவனாக நினைப்பவர்களுக்கு விஷ்ணுவாக காட்சி அளிக்கிறார். அவரை விஷ்ணுவாக நினைப்பவர்களுக்கு சிவனின் அனுபவத்தை அளிக்கிறார். நாம் நம் விவாத குணத்தை விட்டுவிட்டு மனதார முழுமையாக சரணடைந்தால் அவர் தன்னுடைய உண்மையான உருவத்தில் காட்சி அளிப்பார்.

இவ்வாறு தர்ம குப்தர் சிவனை வழிபடும் முறைகள் மற்றும் ருத்ராக்ஷம் தொடர்பான விஷயங்களைத் தெளிவாக விளக்கினார். பின்னர் அவர் என்னுடன் குருகட்டாவிற்கு வந்து ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசித்து பிறவிப் பலனை அடைய விரும்புவதாக கூறினார்.

நாங்கள் இருவரும் குருகட்டாவிற்கு வந்து குரு சர்வபௌமரான (பிரபஞ்சத்தின் அரசன்) ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசனம் செய்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் யோக நித்திரையில் இருந்து தன் கண்களை திறந்து **"ஆஹா! என்ன ஒரு விவாதம்! ஸ்ரீ ஸ்ரீபாதர் என்று ஒருவர் இருக்கிறார்! அவரே சிவன்! நான் ஸ்ரீ ஸ்ரீபாதரா? அல்லது என்னுடைய வடிவத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதர் வந்திருக்கிறாரா? உண்மையில் நான் யார்? தர்ம குப்தர் இதை சற்று விளக்குங்களேன்?"** என்று குறிப்பிட்டார்.

பின்னர் தர்ம குப்தர் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், **"ஸ்வாமி, நான் மஹாகுருவை தரிசிக்க பீதிகாபுரத்தில் இருந்து கிளம்பிய போது என்னுடைய மைத்துனர் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி அறியாமையினால் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் வாதம் மற்றும் எதிர்வாதம் செய்யாமல் அவரிடம் தஞ்சம் அடைந்து அருள் மட்டும் பெற்றுக் கொள் என்று எச்சரித்திருந்தார். ஆகவே நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் மௌனம் மட்டுமே சாதிப்பேன். வேதங்கள் கூட உங்களுடைய குணங்களை விவரிக்க முடியாமல் வாயடைத்து நின்ற போது நான் யார், உங்கள் முன் ஒரு சாதாரண மனிதன் தானே? என்னுடைய அறிவு என்ன?"** என்றார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் கருணை நிறைந்தவராக மாறினார். அவர் என்னையும் தர்ம குப்தரையும் அவர் பாதத்தில் நமஸ்கரிக்க அனுமதித்தார். நாங்கள் அவர் பாதத்தைத் தொட்டவுடன் பல மணி நேரத்திற்கு சுயநினைவை இழந்து தியான நிலையிலேயே இருந்தோம். இரவு வரத் தொடங்கியது. ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களை குருகட்டாவை விட்டு கிளம்பி கிருஷ்ணா நதியின் அக்கரைக்குச் செல்ல கட்டளையிட்டார். நாங்கள் அவருடைய கட்டளையை பின்பற்றினோம். நானும் தர்ம குப்தரும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகளை பேசிக்கொண்டே இரவை கழித்தோம். அவருடைய லீலைகள் குறிப்பிட்ட முறையில்தான் இருக்கும் என்று கூற இயலாது. நாங்கள் எங்களை மறந்து உறங்கினோம். எங்கிருந்தோ தூரத்தில் இருந்து ஒரு இன்னிசையை கேட்டோம். சில யோகிகள் '**ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப திகம்பரா**' என்ற பெயரை ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 26

## கன்யகாபரமேஸ்வரி பிறப்பின் கதை

காலையில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தரிசனத்துக்காக குருகட்டாவை அடைந்தோம். ஸ்ரீ தர்ம குப்தருக்கு கலியுகத்தின் வருகை பற்றி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தீவிரமான விருப்பம் இருந்தது. அன்றைய தினம் ஸ்ரீ ஸ்ரீபாதர் சாந்தமான முகத்துடன் அழகான மலர்ச்சியுடன் காணப்பட்டார். கருணை பொழியும் அமிர்தம் ததும்பும் பார்வையுடன், அவருடைய தெய்வீகப் பாத கமலத்தை தொடும் சிறந்த அதிர்ஷ்டத்தை எங்களுக்கு அளித்தார்.

ஸ்ரீ தர்ம குப்தர் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் கலியுகத்தின் தொடக்கம் பற்றி எங்களுக்கு கூறுமாறு வேண்டிக்கொண்டார்.

அதற்கு ஸ்ரீசரண், **"என் குழந்தைகளே, காலம் என்பது பரமாத்மாவின் பிரபஞ்ச உருவம். சூரியனை காலத்தின் ஆத்மா என்றும் கூறலாம். சூரியன் அவிட்ட நட்சத்திலிருந்து திருவோண நட்சத்திரத்தை சுற்றி விட்டு மீண்டும் அவிட்ட நட்சத்திரத்திற்கு வருவது ஒரு பிரம்ம கல்பம் என்று கூறப்படுகிறது. பிரம்ம கல்பத்தின் ஒரு பாதி சிருஷ்டி கல்பம் என்றும் மீதி பாதி பிரளய கல்பம் என்றும் கணக்கிடப்படுகிறது. சாதாரண மக்கள் ஒரே மாதிரியான பகலையும் இரவையும்தான் அனுபவிப்பார்கள்.**

**பித்ரு தேவதைகள் தொடர்பான காலத்தில் ஒரு பாதி சுக்ல பக்ஷமாகவும் மறுபாதி கிருஷ்ண பக்ஷமாகவும் இருக்கும். வருடத்தில் ஆறு மாதம் உத்திராயணமாகவும், ஆறு மாதம் தக்ஷிணாயணமாகவும் இருக்கும். ஒரு யோகி காலச்சக்கரத்தை தன் உடலிலேயே காண்பார். இந்த ஆழ்ந்த ஞானத்தை தாரக ராஜ யோக வித்யா என்று அழைப்பர். தாரக ராஜயோகம் தெரியாத ஒருவருக்கு காலத்தின் ஞானம் இருக்காது.**

தாரக ராஜ யோக முறையில் உடல் பிரம்மாண்டமாக நினைக்கப்படும். அனைத்து உலகங்களும் அதில் அடங்கியிருக்கும். நம் தலையில் உள்ள எண்ணத்தின் மையம் பிரம்மலோகம் என்று அழைக்கப்படும். தொப்புளில் விஷ்ணு லோகம் இருக்கிறது. ருத்ர லோகம் (சிவன்) நம் இதயத்தில் இருக்கிறது. ஆவிகள் இனப்பெருக்கத்தின் தேவதைகளாக நம் விந்துக்களில் இருக்கிறது. அந்த இனப்பெருக்க தேவதைகள் மனிதனின் முந்தைய தலைமுறைகளின் கர்ம பலன்களை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் சென்று அதன் பலன்களை அவர்களை அனுபவிக்கச்

செய்வர். ஆகவே பூர்வ ஜென்ம பலன்களை சரியான முறையில் வழங்குவதற்கு காலம் மிகவும் முக்கியம்.

## கலியுக முடிவு அறிகுறிகள்

இறந்தவர்களின் ஆவிகள் இறந்த பெரியவர்கள் அல்ல. அவர்கள் மூதாதையர்களின் பெயரில் செய்யப்படும் சடங்குகளின் பலன்களைப் பெற்று கொண்டு அவர்களுக்கு உன்னத இடத்தை அளிக்கும் இனப்பெருக்க தேவதைகள். அவர்களுக்கு எந்த பிறப்பும் கிடையாது.

ஒரு யோகி தன்னுடைய உடலில் உள்ள ஆறு யோக மையங்களை வெளியில் உள்ள ஆறு பருவங்களாக காட்சிப்படுத்தி கொள்வார். ஒரு வருடத்தில் பன்னிரண்டு அமாவாசைகளும் பன்னிரண்டு பௌர்ணமிகளும் உண்டு. இந்த இருபத்தி நான்கு புனித தினங்களையும் காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களாக புரிந்து கொள்ள வேண்டும். காலத்தின் உருவகமான நாராயணனை சிலர் சம்வத்சர புருஷர் (படர்ந்துள்ள அனைத்து சைதன்யத்திலும் மாறாத மற்றும் வெளிப்படுத்தாதவர்) என்று வணங்குகிறார்கள். இந்த ஞானத்தைத்தான் துவாதசாக்ஷர் வித்யா என்று அழைக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு ஒரு எழுத்து விகிதம் பன்னிரண்டு மாதங்களுக்கு பனிரெண்டு எழுத்துக்களுடன் கூடிய மந்திரம் ஆனது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றங்கள் கலியின் சகாப்தத்தின் முடிவு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆறுகள் மற்றும் ஓடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் நஷ்டம் ஏற்படுதல்; பூமி பிரளய காலத்தில் இருப்பது போலவே எப்போதும் நில அதிர்ச்சியில் அதிர்ந்து கொண்டே இருப்பது; சூரியனும் சந்திரனும் தன் பாதையில் இருந்து விலகுதல்; சூரியனின் மேல் பருமனான இருள் ஏற்பட்டு பகல் பொழுதில் சூரியன் கண்ணுக்கு தெரியாமல் இருப்பது; கொடூரமான வால் நட்சத்திரங்கள் வானத்தில் தோன்றி கலியுகத்தின் முடிவை எச்சரிக்கை செய்யும்.

துவாபர யுகத்தின் கடைசி பகுதியில் கலியுகத்தின் அதிபதியான கலிபுருஷன் மேற்குப் பகுதியில் கடலில் உள்ள ஒரு தீவில் கடுமையான தவம் மேற்கொண்டான். இவை அனைத்தும் வேதவியாச முனிவரால் பவிஷ்ய புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

## மிலேச்ச இனத்தின் வருகை

வேத மந்திரங்கள், யாகங்கள் மற்றும் தவங்களின் பெரும் பரவலை கண்டு கலிபுருஷன் மிகுந்த துயரம் அடைந்தான். அவன் கடவுளிடம் **“தர்மம் எரியும் நெருப்பு போல எல்லா இடத்திலும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் நான் எப்படி கலியின் தாக்கத்தை ஏற்படுத்துவது? நான் உங்களுக்குச் செய்த சத்தியத்தை நிறைவேற்ற யுக தர்மத்தை பரப்ப வேண்டும். இது எனக்கு சாத்தியம்**


**இல்லாமல் இருக்கிறது**" என்று பிரார்த்தனை செய்து கொண்டான். பின்னர் கலிபுருஷனுக்கு பிரபஞ்சத்தின் அதிபதி மேற்கு பகுதி கடலில் உள்ள ஒரு தீவை காட்டினார். அத்தீவில் கடவுள் கலி புருஷனுக்கு மிலேச்ச இனத்தை தொடங்கியவரான ஆதாம் என்கிற ஆணையும் ஹவ்யவதி என்கிற பெண்ணையும் காட்டினார். அவர்கள் இன்பம் அனுபவிக்க ஒரு அழகான தோட்டத்தை உருவாக்கினார். உண்மையில் அவர்கள் இருவரும் சகோதரன்-சகோதரி. கலிபுருஷன் அந்த தோட்டத்திற்குள் பாம்பாகச் சென்றான். அவர்களுக்குள் ஒழுக்கமற்ற காமத்தைத் தூண்டி ஒழுக்கக்கேடான குழந்தைகளை பிறக்க வைக்க ஊக்குவித்தான். அவர்கள் இருவரும் வீழ்ச்சி அடைந்த பின்னர் அவர்களிடம் இருந்த தெய்வீகச் சக்திகள் மறைந்தன.

**இந்த தம்பதியிடமிருந்துதான் கலி தர்மத்தின் தொடக்கமான மிலேச்ச இனம் தொடங்கியது.**

துவாபர யுகத்தின் கடைசி பகுதியில் அதாவது துவாபர யுகம் முடிவடைவதற்கு 2800 வருடங்களுக்கு முன்னரே மிலேச்சர்களின் நிலத்தில் அவர்களின் வம்சாவளி பலமடங்காக வளரத்தொடங்கியது. இது பவிஷ்ய புராணத்தின் ப்ரதிஸர்க பர்வாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீலாச்சலத்தில் படைக்கப்பட்ட ஆதாம் மற்றும் ஹவ்யவதி பாவத்தின் பழத்தை சுவைத்து ஆர்யதர்மத்துக்கு கேடு விளைவிக்கும் வண்ணம் பல சந்ததிகளை உருவாக்கி, ஒழுக்கமற்ற அனைத்தையும் உண்டனர். நான் கல்கியாக அவதரித்து பல கோடிக்கணக்கான ஒழுக்கமற்ற மக்களை அழித்து சத்திய யுகத்தை ஸ்தாபிக்க வேண்டும். இதுதான் என்னுடைய தொலைதூர எதிர்காலத்தின் திட்டம்" என்று கூறினார்.

பின்னர் தர்ம குப்தர், **"ஸ்வாமி, எனக்கு பல நாட்களாக உங்களிடமிருந்து ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் கதையை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. அதை தயவு செய்து கூறுங்கள்**" என்று கேட்டார். ஸ்ரீசரண் அழகாக சிரித்துக்கொண்டே கூறினார்:



## கன்யகா புராணம்

கன்யகா புராணம் ஸ்கந்த புராணத்தில் உள்ள சனத்சுஜதா சம்ஹிதாவில் சேர்க்கப்பட்டுள்ளது. பிருஹத்சிலநகரம் 'ஜ்யேஷ்ட சைலம்' என்றும் அழைக்கப்படுகிறது. மொத்தம் பதினெட்டு நகரங்கள் உள்ளன. அவை:

1) பிருஹத்சிலநகரம்
2) நிர்வத்தியபுரம்
3) வீரநாராயணம்
4) விஷாலபுரம்
5) அசந்தமு
6) நரசபுரம்
7) தனதபுரம்
8) தர்மபுரம்
9) பெத்த ஜெகந்நாதம்
10) காளிங்காம்புரம்
11) பஞ்சாலபுரம்
12) பலகொலானு
13) பெத்த திரிகுணாபுரம்
14) பீமாபுரம்
15) கண்டசாலம்
16) பீதிகாபுரம்
17) சின்ன ஜெகந்நாதம்
18) சின்ன திரிகுணாபுரம்

குஸும சிரேஷ்டி பிருஹத்ஸிலநகரத்தை தலைநகராகக் கொண்டு இந்த நகரங்களை ஆண்டு வந்தார். பதினெட்டு என்பது வெற்றிக்குரிய எண். இந்த பதினெட்டு நகரங்களிலும் 714 கோத்திரங்களை சேர்ந்த வைசிய நகர ஸ்வாமிகள் இருந்தனர். அதில் 102 கோத்திரங்கள் மட்டுமே இயற்கையாக உருவானது. அந்த 102 கோத்திரங்கள் மீதும் கடுமையான விதிகள் போடப்பட்டன. மற்ற கோத்திரங்களைச் சேர்ந்த மக்கள் தாங்களும் அந்த கடுமையான விதிகளை பின்பற்றுவதாக கூறியதால் அவர்களும் வைசிய நகரஸ்வாமிகள் கோத்திரத்தில் இணைந்ததால் மொத்தம் 714 கோத்திரங்கள் ஆனது. கடுமையாக விதிமுறைகளைக் கடைபிடித்த 102 கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் பிருஹத்சிலநகரத்தில் வாழ்ந்து வந்தார்கள்; அவர்கள் ஆர்யமஹாதேவி அதாவது பார்வதிதேவியை வணங்கினர். அவர்கள் ஆர்யவரதத்தில் இருந்து இடம் பெயர்ந்ததாலும் ஆர்யமஹாதேவியை வணங்கி மற்ற வைஸ்யர்களை விட வித்தியாசமாக இருந்தமையால் அவர்கள் ஆர்யவைசியர்கள் என்று அழைக்கப்பட்டனர். மற்றவர்களும் தங்களை ஆர்யாவைசிய கோத்திரத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். ஸ்ரீ குஸும சிரேஷ்டிக்கு பாஸ்கராச்சார்யா குருவாக இருந்தார். என்னுடைய தாத்தா ஸ்ரீ பாப்பண்ணாச்சார்யாதான் பூர்வ ஜென்மத்தில் பாஸ்கராச்சார்யாவாக பிறந்திருந்தார். மற்ற கோத்திரக்காரரர்களின் வேண்டுகோளை கேட்ட பாஸ்கராச்சார்யா, **"என் அருமை மக்களே, தகுதியை சோதிக்காமல் அதன் மதிப்பை கணக்கிட்டு முடிவு செய்ய முடியாது. தகுதியின் மதிப்பை முடிவெடுக்க நாம் அனைவரும் அக்னி பரீக்ஷை மேற்கொள்ள வேண்டும். இந்த அக்னி பரிக்ஷையில் வெல்பவர்களுக்கு கண்டிப்பாக ஆர்யவைசியர் என்ற பட்டம் கொடுக்கப்படும். இல்லையேல் இந்த பட்டம்**

**கொடுக்கப்படமாட்டாது. இது எல்லோருக்கும் சம்மதமா?"** என்று கேட்டவுடன் அதற்கு அனைவரும் சம்மதித்தனர்.

அப்போதெல்லாம் வைசியர்கள் மிகுந்த பக்தியுடன் பரமேஸ்வரியை வழிபடுவார்கள். அவர்களின் தீவிர பக்தியின் காரணமாக சிலர் தங்களுடைய குழந்தைகளை பரமேஸ்வரிக்கு நேர்ந்து விட்டுவிடுவார்கள்.

அப்படி நேர்ந்துவிடப்பட்ட பெண்களை கௌரி பாலிகைகள் என்று அழைப்பார்கள். ஆண்களை பால நகரர்கள் என்று அழைப்பார்கள். கௌரி பாலிகாவை பால நகருவுக்குத்தான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற கடுமையான விதி இருந்தது. பாஸ்கராச்சார்யா சைதன்ய க்ரியா யோகா என்ற முறையில் இந்த கௌரிபாலிகாவுக்கும் பாலநகருவுக்கும் சிறப்பு தீக்ஷைகள் அளிப்பார். சிறு குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் யோகினிகள் மற்றும் யோகியாக மாறிவிடுவார்கள். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மிகுந்த உயர் நிலையில் இருப்பார்கள் என்றும் அவர்கள் குடும்பங்கள் செல்வச் செழிப்பு மற்றும் சந்தோஷத்துடன் கௌரி மற்றும் ஷங்கர் போல வாழ்வார்கள் என பாஸ்கராச்சார்யா நம்பினார். இந்த 18 நகரங்களும் தனிச்சிறப்புடன் புனிதமாக்கப்பட்டவை. இந்த தெய்வீக நகரங்களுக்கு நாகரேஸ்வர மஹாதேவர் தலைவராகவும் குஸும சிரேஷ்டி அரசனாகவும் இருந்தனர். இந்த அணுகுமுறை மூலம் ஒரு புது படைப்பை கொண்டு வர வேண்டும் என்பது பாஸ்கராச்சார்யாவுடைய விருப்பம்.

குஸும சிரேஷ்டி தம்பதிக்கு குழந்தைகள் இல்லாததால் பாஸ்கராச்சார்யா புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தினார். ஆர்யமஹாதேவி ஹோமத்தில் தோன்றி இரண்டு பழங்களை அவர்களுக்கு அளித்தாள். அதன் விளைவாக வைகாசி மாதம் முன்பாதியில் உள்ள தசமி அன்று வெள்ளிக்கிழமை அன்று புனர்வசு நட்சத்திரத்தில் வாசவி கன்யகாபரமேஸ்வரி பிறந்தாள். வாசவி கன்யகாவுடன் இரட்டை சகோதரனாக ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அந்த குழந்தைக்கு விருபாக்ஷர் என்று பெயரிட்டனர்.

வாசவி கன்யகா உண்மையில் என்னுடைய தெய்வீக சகோதரி. அவளுடைய இரட்டை சகோதரனாக பிறந்த விருபாக்ஷர் நந்தீஸ்வரனின் அம்சத்துடன் பிறந்தார். முன்பொரு காலத்தில் கல்லை உணவாக உண்ணும் சிலாத மகரிஷி இமயமலைக்குச் சென்றார். அவர் ஹைமவதி மஹாதேவியை தரிசனம் செய்து **"அன்னையே! நீ மலையின் மகள். நான் கல்லை உண்பதால் ஒரு வழியில் நானும் மலையின் மகன்தான். தயவுசெய்து உங்களுக்குச் சகோதரனாக பிறக்கும் பாக்கியத்தை எனக்கு அருள வேண்டும்"** என வேண்டிக் கொண்டார். ஸ்ரீ ஹைமவதி அதற்கு "மகரிஷி, நான் இந்த பிறவியில் பரமேஸ்வரனை மணந்து கொள்வேன். நீங்கள் எங்கள் வாகனமாக நந்தீஸ்வரனாக இருப்பீர்கள். கலியுகத்தில் நான் கன்யகா பரமேஸ்வரியாக பிறக்கும் போது நீங்கள் என் இரட்டை சகோதரனாக பிறப்பீர்கள். நான் இந்த கல்லின் மீது தவம் புரிந்தேன், அதை உங்களுக்குப் பரிசாக அளிக்கிறேன். இந்தக் கல்லை ஜ்யேஷ்டா சைலத்துக்கு கொண்டு செல்லுங்கள். இந்தக் கல் ஒரு குழியில் இடப்பட்டு அதன் மீது ஒரு கோட்டை கட்டப்பட வேண்டும். கலியுகத்தில் குஸும

சிரேஷ்டி என்கிற ஒரு நல்ல வைசியன் அந்த கோட்டையை நிர்மானிப்பார். பின்னர் நானும் 102 கோத்திரங்களை சேர்ந்த தம்பதிகளும் தீயினுள் சென்று கைலாசத்தை மீண்டும் அடைவோம். கலியுகத்தின் முடிவு வரும் போது என் சகோதரன் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கல்கியாக அவதரித்து தீய எண்ணங்கள் கொண்ட கோடிக்கணக் கானவர்களை வெட்டிச் சாய்த்து தர்மத்தை நிலைநாட்டுவார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன்னுடைய யதி உருவத்தை விடுத்து பத்மாவதி வெங்கடேஸ்வரராக வெளிப்படுவார். ஸ்ரீ பத்மாவதி சிங்கள (ஸ்ரீலங்கா) நகரத்தில் பிறப்பாள். ஸ்ரீ வெங்கடேஸ்வரர் சாம்பலா கிராமத்தில் பிறப்பார். கலியுகத்தின் முடிவில் அவர்களுடைய திருமணம் நடைபெறும். கல்கி பகவான் பிருஹத்சில நகரத்துக்கு வரும் போது நான் கன்யகா பரமேஸ்வரியின் உருவத்திலும் என் இறைவன் நாகரேஸ்வரர் உருவத்திலும் கல்கி உருவத்தில் இருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை வரவேற்று சிறந்த மரியாதை செய்வோம். அன்பின் அடையாளமாக என் சகோதரருக்கு நான் ராக்கி அணிவிப்பேன். என் மீதுள்ள மிகுதியான அன்பினால் என் சகோதரர் எனக்கு தெய்வீக ஆபரணங்கள், வைரம், முத்து மற்றும் தெய்வீக ராஜ உடைகள் ஆகியவற்றை அளித்து அருமையான முறையில் நாகரேஸ்வரருடன் எனக்கு திருமணம் செய்து வைப்பார். எங்கள் தெய்வீக திருமணத்தை முன்பு என்னுடன் தீயில் நுழைந்த 102 கோத்திரக்காரர்களும் கண்டு களிப்பார்கள். அடுத்து நாங்கள் புதுமண தம்பதியாக பீதிகாபுரத்துக்கு செல்வோம். கல்கியின் உருவத்தில் இருக்கும் இறைவன் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தன்னுடைய முந்தைய அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் எங்களுக்கு தரிசனம் அளிப்பார். என் அருமை சிலாதா, என்னுடைய திருமணம் நடைபெறும் போது கல்கி பகவானும் நீங்களும் சகோதரர்களாக என் திருமண வைபவத்தில் கலந்து கொள்வீர்கள். நீங்கள் அவ்வாறு ஆசீர்வதிக்கப்படுவீர்கள்" என்று ஹைமாவதி தேவி கூறினாள்.

என் குழந்தைகளே, இந்த துணை ராஜ்யத்தின் மேற்கு பக்கத்தில் கோஸ்தானி நதி ஒரு எல்லையாக இருந்து கொண்டு, பிருஹத்சிலநகரத்தை தலைநகராக கொண்டதாகவும் இருக்கும். அந்தர்வேதி (ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு கிராமம்) தெற்கு பக்கத்தின் எல்லை. கோதாவரி நதி கிழக்கு மற்றும் வடக்கு பக்கத்தின் எல்லைகள்.

குஸும சிரேஷ்டியின் இல்லத்தில் மங்கள ஆரத்தி எடுக்கும் போது உபயோகப்படுத்தப்படும் உலோகத்தினால் ஆன ஒரு ஆரத்திகரண்டி மற்றும் ஒரு கை மணி ஆகியவை இருந்தன. அவை இரண்டையும் சேர்த்தால் பதினாறரை (16 ½) வீஜதிற்கு மேல் கணம் இருக்கும். பாஸ்கராச்சார்யாவின் வீட்டிலும் மங்கள ஆரத்தி எடுக்க பயன்படுத்தப்படும் உலோகத்திலான ஒரு ஆரத்திகரண்டி மற்றும் ஒரு கைமணி இருந்தது. அவை இரண்டும் சேர்த்து பதினாறரை (16 ½) வீஜத்திற்கு மேல் கணம் இருக்கும். என்னுடைய மகா சமஸ்தானம் அமைக்கப்பட்ட பின்னர் இப்போது பாஸ்கராச்சார்யாவின் வீட்டில் இருக்கும் ஆரத்திக் கரண்டி மற்றும்

கைமணி பீதிகாபுரம் வந்தடைந்து என்னுடைய சிலைக்கு அருகில் இருக்கும் அத்தி மரத்தின் பல அடிகளுக்கு கீழ் பாதுகாக்கப்படும். அது அங்கு வந்தடைந்த நேரத்தில் என்னுடைய சரிதாம்ருதம் வெளிச்சத்துக்கு வரும்.

என் குழந்தைகளே, நாளை ஸ்ரீ வாசவி கன்யகாவின் பிறந்தநாள். மேலும் வெள்ளிக்கிழமை. சந்திர சிந்து வேதத்தின் படி மிகவும் புனிதமான நேரம். நீ இந்த இடத்தை (குருகட்டா) விட்டு உடனடியாக செல்ல வேண்டும். பஞ்சதேவ பர்வதம் என்கிற இடத்தில் வைக்கோலை கொண்டு ஒரு சிறிய வீடு கட்டுங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தும் ஏற்பாடுகளும் செய்யப்படும். நாளை நான் அங்கு தர்பாரை நடத்துகிறேன். **மாங்கல்ய பாக்கியம் கேட்டு வரும் பெண்கள் அங்கு விநியோகிக்கப்படும் மஞ்சள் கிழங்கை கண்டிப்பாக பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த மஞ்சள் கிழங்கைப் பெற்று பூஜை அறையில் வைக்கும் பெண்களுக்கு கண்டிப்பாக மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.**

நாளை ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரியின் விரிவான கதையை விளக்குகிறேன். நாளை பஞ்சதேவ மலைக்கு வரும் என்னுடைய பக்தர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பல ஜென்மங்களில் செய்த புண்ணியங்கள் இருந்தால் மட்டுமே என் மூலம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் கதையைக் கேட்க முடியும்.

இப்போது முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நான் தர்பார் நடத்துவேன். என்னுடைய சௌகரியத்திற்கு ஏற்றார் போல் அது குருகட்டாவிலோ அல்லது பஞ்சதேவ மலையிலோ, வேறு எந்த இடத்திலோ இருக்கும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் தர்மங்கள் கற்றுக் கொடுக்கப்படும். அது குருகட்டாவிலோ அல்லது பஞ்சதேவ மலையிலோ நடைபெறும். வரும் காலங்களில் பல மாறுதல்கள் நடக்கப்போகிறது. வரும் நூற்றாண்டுகளில் இந்தியா மிலேச்சர்கள் மற்றும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருக்கும். விதியின் வழி மிகவும் வினோதமானது. ஆன்மீகச் சக்தியின் மூலம் மட்டுமே இந்த கர்ம-பூமி மற்றும் வேத-பூமிக்கு விடுதலை கிடைக்கும். **தத்தரை மறக்கவில்லை என்றால், தத்தர் மறக்க மாட்டார். மறதி இறப்பு போன்றது. நினைவு புது பிறவி அளிக்கும்**" என்று கூறினார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**




# அத்தியாயம் – 27

## விருபாக்ஷரை பஞ்சதேவ மலையில் சந்தித்தல்

நானும் தர்ம குப்தரும் கிருஷ்ணா நதியின் அக்கரையை அடைந்தோம். அது மதிய நேரம். அது வியாழக்கிழமை மதிய நேரம், ஸ்ரீகுரு சர்வபௌமர் ஒரே நேரத்தில் பல இடங்களில் இருந்து பிக்ஷை பெற்றுக்கொள்ளும் புனிதமான நேரம். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களை ஒரு நாளுக்குள் வைக்கோல் வீடு கட்டும் படி கூறினார். எங்களுக்கு அந்த இடம் பரிச்சயம் இல்லை. அதற்கும் மேலாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்றால் அதற்கான இடம் வேண்டும். வீடு கட்டுவதற்கு கருவிகளும் எங்களுக்கு தேவை. மேல் பாகத்தை மூடுவதற்கு வைக்கோல் தேவை. இவை அனைத்தையும் செய்வதற்கு தகுந்த வேலை ஆட்கள் தேவை.

### பஞ்சதேவ மலையின் முக்கியத்துவம்

நாங்கள் அங்கும் இங்கும் நாடோடி போல் திரிந்து கொண்டிருந்தோம். நாங்கள் ஒரு வயலுக்குள் நுழைந்தோம். அங்கு ஒரு விவசாயி அவருடைய மாடுகளுக்காக ஒரு கொட்டகை கட்டிக் கொண்டிருந்தார். அவர் அந்த நிலத்தின் உரிமையாளர் அமர்வதற்காக ஒரு பொருத்தமான இட அமைப்பு உள்ள உயரமான இடத்தில் ஒரு திண்ணை போன்ற உயர்ந்த இடம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அந்த இடத்தின் உரிமையாளர் எங்களை அன்போடு அழைத்து உணவளித்தார். நாங்கள் பசியோடு இருந்தோம். ஒரு சூத்திரன் அளித்த உணவை உண்ணலாமா என்ற சந்தேகத்தில் இருந்தோம். அந்த உரிமையாளர் மிகவும் கடுமையாக எங்களிடம், “நீங்கள் எங்களுடைய கால்நடைகளைத் திருடி வேறு இடங்களில் விற்றுவிட்டீர்கள். இப்போது மீண்டும் இங்கு வந்து கால்நடைகள் ஏதாவது இருந்தால் ஓட்டிக் கொண்டு செல்வதற்காக வந்துள்ளீர்கள். இது போன்ற தீய எண்ணத்துடன் வந்துள்ள உங்களுக்கு சூத்திரனிடமிருந்து உணவு எடுத்துக் கொள்ளலாமா என்ற சந்தேகம் எழும்புகிறது!” என்று பேசினார். எங்களுக்கு விஷயம் புரிந்தது. நில உரிமையாளர் எங்களைத் திருடர்கள் என்று



எண்ணிக் கொண்டிருக்கிறார். அந்த உணவை வேண்டாவெறுப்பாக உண்டோம். பேசிக்கொண்டிருந்த போது அவருடைய பெயர் விருபாக்ஷர் என்பதை தெரிந்து கொண்டோம். நாங்கள் சாப்பிட்டு முடித்தவுடன் எங்களை இரண்டு மரங்களில் கட்டி போட்டனர். நானோ பிக்ஷை எடுத்து வாழும் ஒரு ஏழை பிராமணன். என்னிடம் பணம் ஏதுமில்லை, ஆனால் தர்ம குப்தரிடம் பணம் இருந்தது. நில உரிமையாளர் தன் வேலை ஆட்களை விட்டு எங்களிடம் இருந்த பணம் அனைத்தையும் அபகரிக்கச் சொன்னார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் நினைத்துப் பார்க்க முடியாத லீலை

எங்களைப் பற்றிய உண்மையைக் கூறினால் கூட எந்த உபயோகமும் இல்லை என்று உணர்ந்து கொண்டோம். நில உரிமையாளரின் கட்டளையினால் நாங்கள் கைதிகளாகி என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தோம். இதற்கிடையில் அங்கு சில மைலார் ஜாதி மக்கள் வந்தனர். மைலார் ஜாதியில் '**கங்க கவில்லு**' என்கிற பிரிவு இருக்கிறது. இவர்கள் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் பீடத்தை சுமந்து செல்வார்கள். அவர்கள் நெற்றியில் விபூதி பட்டை போட்டுக் கொள்வார்கள். அவர்கள் கைகளில் சிறிய வெற்றி மணியைத் தூக்கி கொண்டு ஸ்ரீ கன்யகாபரமேஸ்வரி தேவியை போற்றி பாடல்கள் மற்றும் துதிகள் பாடிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் திருமண வைபவங்களின் போதும், மற்ற புனித நிகழ்ச்சிகளின் போதும் மற்றும் அன்னை ஸ்ரீ வாசவியின் பிறந்தநாளின் போதும் காவடி போல குறுகலான வாயுள்ள பெரிய பாத்திரங்களை தூக்கிக் கொண்டு வருவார்கள். இவர்களைத் தவிர வீர முஷ்டுலு என்கிற வகையான மக்களும் அங்கு வந்தனர். அவர்கள் பிரபையை போல எரியும் குச்சிகளை வைத்துக் கொண்டு இடுப்பில் அதைச் சுற்றிக் கொண்டு 'ஐயா ஐயா' என சத்தம் போட்டு கொண்டே தங்கள் கைகளில் வெற்றி மணியை அடித்துக் கொண்டே வருவார்கள். அந்த பிரபையில் வாள்,கேடயம் மற்றும் பலவகையான போர் ஆயுதங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருப்பதை பார்க்கலாம்.

அங்கு மைலார்களுடன் வீர முஷ்டுலுவும் வந்தார்கள். விஷ்ணுவர்தன மன்னனுடைய சில சிப்பாய்கள் அன்னை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் பக்தர்களாகி விஷ்ணுவர்தன மன்னனுக்கு நம்பிக்கையுள்ள சிப்பாய்களுடன் சண்டையிடுவதற்காக பாலநகரர்களுடன் சேர்ந்து கொண்டனர். அந்த சிப்பாய்களின் குடும்பங்களில் உள்ள அன்னை ஸ்ரீ வாசவியின் பக்தர்கள்தான் வீர முஷ்டுலு என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் அந்த புனிதப் போர் தினத்தன்று தங்களுடைய செல்வம், மரியாதை மற்றும் வாழ்க்கையை இழந்தமையால், புனிதமான தினங்களில் வைசிய மன்னர்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்துவார்கள். அந்த விவசாயி மைலார்கள் மற்றும் வீர முஷ்டுலுக்களுக்கு உணவளித்து மரியாதை செய்தனர். பின்னர் எங்களை விடுவித்துவிட்டு மாட்டுக் கொட்டகை கட்டும் பணிக்கு உதவி புரியும் படி கேட்டுக்கொண்டனர். நாங்களும் சம்மதித்தோம். வேலை முடிந்தவுடன்

விருபாக்ஷர் என்னிடம், **“முஷ்டிலோ முஷ்டி வீர முஷ்டி (பிக்ஷைக்குள் பிக்ஷை, அதாவது குறுகிய மனப்பான்மையுடன் வீரமாக எடுக்கப்படும் பிக்ஷை) என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?”** என்று கேட்டார். எனக்குத் தெரியாது என்று பதிலளித்தேன். சாயங்காலம் எங்களுக்கும் உணவு கொடுக்கப்பட்டது. அவர் அங்கிருக்கும் கால்நடைகளை பாதுகாத்துக் கொண்டு அங்கேயே உறங்க வேண்டும் என எங்களை ஆணையிட்டார். பின்னர் தன்னுடைய வேலையாட்கள் கூட்டத்துடன் அங்கிருந்து சென்று விட்டார்.

அன்று இரவு நாங்கள் இருவரும் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய நாமத்தையும் லீலைகளையும் நினைவூட்டிக் கொண்டோம். காலையில் கண்விழித்த போது அங்கு மாட்டுக் கொட்டகையில் மாடுகள் அல்லது எருதுகள் இருந்ததற்கான சுவடே இல்லை. அருகில் இருந்த விவசாயிகள் நாங்கள் இந்த நிலத்தை எவ்வளவு பணம் கொடுத்து வாங்கினோம் என விசாரித்தனர். நாங்கள் முந்தைய நாள் நடந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் அவர்களிடம் தெரிவித்தோம். நாங்கள் கூறியவற்றை அவர்கள் நம்பாமல் எங்களைப் பைத்தியகாரர்கள் என நினைத்தனர். எது உண்மை அல்லது பொய் என்பதை தீர்க்க முடியாது. பின்னர் ஒரு அந்நியர் அங்கு வந்தார். அவர் எங்களிடம் **“ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி வைகாசி சுத்த தசமி அன்று பிறந்தாளா அல்லது சப்தமி அன்று பிறந்தாளா?”** என்று கேட்டார். ஸ்ரீ தர்ம குப்தர் அதற்கு அன்னை வாசவி தேவி தசமி திதி அன்று பிறந்தாள் மேலும் அன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாள் முழுவதும் தசமி திதி என்று பதிலளித்தார். அந்த பதிலைக் கேட்டதும் அவர் எங்களிடம், **“வேலையில்லாமல் குருகட்டாவில் உட்காந்திருக்கும் அந்த பைத்தியக்காரனிடம் செல்லும் இரண்டு பைத்தியங்கள் நீங்கள் தானா?”** என்று கேட்டார். அந்த அந்நியரின் நடத்தை எங்களுக்கு மிகவும் ஆட்சேபனைக்குரிய வகையில் இருந்தது.

ஸ்ரீ தர்ம குப்தர் என்னிடம், **“அந்த அந்நியர் அவமதிக்கும் தொனியில் பேசினாலும் நம் கடமையை கற்பித்திருக்கிறார். நாம் உடனடியாக குருகட்டாவிற்கு செல்ல வேண்டும்”** என்றார். நாங்கள் இருவரும் குருகட்டாவிற்கு படகில் சென்றோம். படகோட்டிக்குக் கொடுக்க என்னிடமோ தர்ம குப்தரிடமோ பணமே இல்லை. அந்த படகோட்டி எங்களை கண்டிக்கும் வகையில், **“இந்த ஒரு தடவை உங்களை மன்னித்து விடுகிறேன். படகில் ஏறுவதற்கு முன்னர் உங்களிடம் பணம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிவிப்பது உங்களுடைய கடமை”** என்று கூறினான். படகோட்டி ஸ்ரீ தர்ம குப்தரை பார்த்தான். ஸ்ரீ தர்ம குப்தரின் கையில் இருந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டான். அதைத் தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் கிருஷ்ணா நதிக்குள் தூக்கி எறிந்தான். நாங்கள் குருகட்டாவை அடைந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் கிருஷ்ணா நதியில் நீராடிவிட்டு ஆழ்ந்த தியானத்தில் இருந்தார்.

சிறிது நேரம் கழித்து கண்களை திறந்து எங்களை பார்த்து சிரித்தார். **“பஞ்சதேவ மலையில் தர்பார் நடத்த வீடு கட்டி முடித்தீர்களா”** என்று எங்களை கேட்டார். முந்தைய நாள் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் நாங்கள் அவரிடம் விவரித்தோம்.

அவர், “என் செல்வங்களே, என்னுடைய விருப்பம் இல்லாமல் என்னிடம் எவரும் வர முடியாது. என்னுடைய விருப்பம் இல்லாமல் என் மேல் எவருக்கும் பக்தி ஏற்படாது. ஒருவர் எவ்வளவு பெரிய பணக்காரனாக இருப்பினும் அவரை ஒரு நொடியில் பரம ஏழை ஆக்கிவிடுவேன். ஒருவர் எவ்வளவு பரம ஏழையாக இருப்பினும் சில நொடிகளில் பணக்காரன் ஆக்கி விடுவேன். ஆரோக்கியமான மனிதனை பைத்தியக்காரனாகவும், பைத்தியக்காரனை ஆரோக்கியமானவனாகவும் என்னால் மாற்ற முடியும். என் கையில் அனைத்து சக்திகளும் சித்திகளும் அடங்கியுள்ளன.

நேற்று நீங்கள் பார்த்த நில உரிமையாளர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் சகோதரரான விருபாக்ஷர். நீங்கள் பார்த்த பசு வளம் அனைத்தும் குஸும சிரேஷ்டி அப்போது வைத்திருந்த அதே பசு வளம். நீங்கள் பார்த்த மைலார்கள் மற்றும் வீர முஷ்டிகளும் பழைய நாட்களைச் சேர்ந்தவர்கள்தான். ஆட்சேபனைக்குரிய மொழியில் உங்களை குருகட்டாவிற்கு செல்கிறீர்களா என்று கேட்டது நான்தான். தர்ம குப்தரிடம் மோதிரத்தை வாங்கி கிருஷ்ணா நதியில் எறிந்தது நான்தான். என்னுடைய அரசவை மைலார்கள், வீர முஷ்டிகள், வீரபத்ரர்கள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளால் கட்டப்பட்டது. உண்மையில் உங்களுடைய நல் அதிர்ஷ்டத் தினால்தான் அந்த சிறந்த முயற்சியில் நீங்களும் பங்கு எடுத்துக் கொண்டீர்கள். எனக்கு இறந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களாகிய அனைத்து காலங்களும் ஒன்றுதான். எல்லா இடங்களும் ஒன்றுதான்.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நடந்த சம்பவங்களை என்னால் மீண்டும் உருவாக்க முடியும். புது சம்பவங்களை சில மாறுதல்களுடன் கூட என்னால் உருவாக்க முடியும். கலியுகத்தின் முடிவில் என்னுடைய மாய மனித தோற்றமான ஸ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப உருவம் ஸ்ரீ பத்மாவதி வெங்கடேஸ்வரராக மாறும். அனைத்தும் என் கையில்தான் இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 28

## ஸ்ரீ வாசவி மற்றும் நாகரேஸ்வரரின் கதை

### விஷ்ணு-மஹாவிஷ்ணு, லக்ஷ்மி-மஹாலக்ஷ்மி, சரஸ்வதி-மஹாசரஸ்வதி, காளி-மஹாகாளி உருவங்களை பற்றிய விளக்கம்

அன்று வெள்ளிக்கிழமை. ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் பிறந்தநாள் விழாவிற்கான புனிதமான நேரம். ஸ்ரீ ஸ்ரீபாதர் கிருஷ்ணா நதியின் மீது நடந்து அக்கரையை அடைந்தார். நாங்கள் படகு மூலம் அக்கரையை அடைந்தோம். அப்போது நேரம் காலை ஏழு மணி. அந்த புனிதமான நேரத்தில்தான் ஸ்ரீ வெங்கடேஸ்வரரும் ஸ்ரீ அலமேலு மங்கா தாயாரும் வழிபாடுகள் மற்றும் மற்ற சேவைகளையும் ஏற்று கொள்வார்கள்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் முந்தைய நாள் கட்டப்பட்ட மாட்டுக் கொட்டகைக்குள் (கோசாலை) நுழைந்து ஆழ்ந்த தியானத்தில் மூழ்கினார். நாங்களும் அதே நேரத்தில் கோசாலைக்குள் நுழைந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தர்பார் தொடங்கியது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும்.

அற்புதங்களுக்கு எல்லாம் அற்புதம்! ஸ்ரீசரணருடைய உடல் திடீரென மிகவும் ஒளி வீச தொடங்கியது. அந்த பிரகாசம் நாலாபக்கமும் பரவியது. அவருடைய உடல் ஸ்தூல உடலாக இல்லாமல் பிரகாசத்தின் உருவமாக இருந்தது. அவர் கோசாலையை விட்டு வெளியே வந்தார். எப்போதும் அவருடைய நிழல் தரையில் விழும் ஆனால் அன்று அவருடைய நிழல் தரையில் விழவில்லை. பொதுவாக அவர் நடக்கும் போது தரையில் அவருடைய கால்தடங்கள் இருக்கும் ஆனால் அன்று இல்லை. அவர் சூரிய பகவானை உற்று நோக்கினார். அவர் உடல் முழுவதும் தெய்வீகப் பேரொளியால் நிரம்பி, அந்த பிரகாசத்தின் உருவம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போனது. சிறிது நேரத்திற்கு பின்னர் அவருடைய பிரகாசமான உருவம் சூரியனுடன் ஐக்கியம் ஆனது. ஸ்ரீ ஸ்ரீபாதர் மறைவதை எங்கள் கண்களால் நாங்கள் பார்த்தோம்.

சூரியனின் பிரகாசத்தில் தெய்வீகப் பளபளப்புடன் கூடிய ஒரு குழந்தையைப் பார்த்தோம். சூரியனிடமிருந்து வெளிவந்த அந்த குழந்தை வேகமாக பூமியை நோக்கி வந்தது. அந்தக் குழந்தை பூமியில் காலடி வைத்தவுடன் பூமி எங்கள் பார்வையை விட்டு மறைந்து போனது. அக்குழந்தையின் சிரிப்பு அற்புதமாக இருந்தது. அக்குழந்தை சூரியனை தீர்க்கமாகப் பார்த்தவுடன் எங்களால் மீண்டும் பூமியை பார்க்க முடிந்தது. அவர் எங்கள் இருவரையும் மீண்டும் சூரியனைப்

பார்க்கச் சொன்னார். சூரியனில் அழகு மற்றும் வசீகரம் பொருந்திய ஒரு தெய்வீகக் குழந்தையை கண்டோம். அந்த தெய்வீகக் குழந்தை பெண் உருவத்தில் இருந்தது. அவள் வசீகரிக்கும் சிரிப்புடன் பூமியை நோக்கி வந்தாள். அந்த தெய்வீகக் குழந்தையின் பாதம் பூமியை தொட்டவுடன் எங்களுக்கு பூமி மறைந்து போனது. நாங்கள் அவற்றை பிரமிப்பு மற்றும் ஆச்சரியத்துடன் பார்த்தோம். அந்த தெய்வீகக் குழந்தை எங்களை பார்த்து சிரித்தது. உடனேயே பூமி எங்கள் கண்களுக்கு தெரிய தொடங்கியது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த பெண் உருவத்தை மிகுந்த பாசத்துடன் தன் கைகளில் வைத்துக் கொண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு பதினாறு வயது அந்த தெய்வீகக் குழந்தைக்கு மூன்று வயது. அவள் பார்ப்பதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதரை போலவே இருந்தாள். அவள் பட்டாடை உடுத்திக் கொண்டு விலையுயர்ந்த தெய்வீக ஆபரணங்களை அணிந்து கொண்டிருந்தாள். ஸ்ரீ ஸ்ரீபாதரும் அந்த தெய்வீகக் குழந்தையும் மீண்டும் கோசாலைக்குள் நுழைந்தனர். நானும் ஸ்ரீ தர்ம குப்தரும் இந்த அற்புதமான காட்சிகளை ஆச்சரியம், உற்சாகம் மற்றும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தோம். இவை அனைத்தும் மந்திர மாயமா என்ற சந்தேகம் எனக்கு எழும்பியது.

என்னுடைய மன உணர்வுகளை உணர்ந்துகொண்ட ஸ்ரீ ஸ்ரீபாதர் இடி முழங்குவது போன்ற குரலில், "ஏ, சங்கர் பட், இது மாய மந்திரமோ அல்லது ஏமாற்று வித்தையோ அல்ல. இது என்னுடைய குணம். இது என்னுடைய தெய்வீக மனநிலை. நான் ஒரு நொடியில் வானத்தை பூமியாக மாற்றி விடுவேன். நான் எதை விரும்பினாலும் பிரம்மா என் விருப்பத்திற்கு ஏற்றார் போல் உருவாக்கி விடுவார். பின்னர் அது படைப்பில் பல வழிகளில் வெளிப்படுத்தப்படும். கண்ணுக்குத் தெரியாத இயற்கையின் குணங்கள் படைப்பின் உருவம் மற்றும் குணங்கள் வாயிலாக வெளிச்சத்திற்கு வரும். நான் பிரம்மனுடைய உருவம் என்று கூறப்பட்டால் நான் பிரம்மாவுக்கு படைப்பதற்கான அகத்தூண்டுதல் அளிப்பேன். படைக்கப்பட்ட உயிரினங்கள் மற்றும் பொருட்கள் அனைத்தும் சிறிது காலத்திற்கு நிலைத்திருக்கும். இது விஷ்ணுவினுடைய செயல்பாடு. விஷ்ணுவை துரிதப்படுத்தி அப்படி செய்யச் சொல்லும் அந்த மகாவிஷ்ணு நான்தான்! சரஸ்வதியும் மகா சரஸ்வதியும் ஒன்றல்ல. சரஸ்வதி படைப்பின் ஞானத்துக்கு தொடர்புடைய உருவம். சரஸ்வதிக்கு தூண்டுதலும் வலிமையையும் அளிக்கும் அனகாதேவிதான் மஹாசரஸ்வதி. இந்த படைப்புகள் நிலைத்திருக்கத் தேவையான பொருட்ச் செல்வங்கள் அளிக்கும் பொறுப்பு லக்ஷ்மி உடையது. லட்சுமியைத் தூண்டி அதிகாரம் செய்யும் அனகாதேவிதான் மஹாலக்ஷ்மி. படைப்பின் சக்தியின் உருவம்தான் காளி. அனகாதேவிதான் மஹாகாளியாக இருந்து காளியைத் தூண்டி வலிமை அளிக்கிறாள்.

## அனகா லக்ஷ்மியின் உருவம்

அனகாவுடன் தொடர்பில் உள்ள அனகா லக்ஷ்மிதான் என்னுடைய தத்த உருவம். அனகா லக்ஷ்மி மகாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி மற்றும் மகாகாளி இணைந்தது போல் இல்லாமல் தனித்துவமாக அன்னையின் தெய்வீக உருவமாக அவதரித்தாள்.

ஆகவே அனகா லக்ஷ்மி மகாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி மற்றும் மகாகாளி ஆகியோரின் ஒன்றுபட்ட நிலைக்கு ஆதாரமாக இருக்கும் தெய்வீக சக்தி மற்றும் இவர்கள் அனைவரையும் விட உயர்ந்த சக்தி என்பதை நாம் கவனிக்க வேண்டும். என்னுடைய அனகா உருவம் பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்திரனின் ஒன்றுபட்ட நிலை என்பதையும் கவனித்துக் கொள். அந்த மூன்று உருவங்களும் ஆதாரம் மற்றும் அதையும் மீறிய ஒன்றான என் அனகா உருவத்தை நான் தொடர்ந்து கொண்டிருப்பேன். என்னுடைய சக்தா (சக்தியின் ஆண் வடிவம்) உருவத்தின் இடது பக்கம் மூன்று சக்திகளின் உருவகம் இருக்கிறது.

திரேதா யுகத்தில் ஸவித்ரு காடக யாகம் செய்த பலனால் என்னுடைய அர்த்தநாரீஸ்வரத் தத்துவத்தில் உபயோகித்த என்னுடைய போற்றத்தக்க தெய்வீக உருவத்தை ஆதாரமாக கொண்டு, விஷ்ணுமாயையுடன் பீதிகாபுரத்தில் சந்நியாசியின் உருவத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்தேன். நீங்கள் இப்போது பார்க்கும் உருவம் மஹாலக்ஷ்மி மற்றும் மகாவிஷ்ணுவின் உண்மையான நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மாவதியின் (லக்ஷ்மியின் உருவம் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் துணைவி) சைதன்யத்தில் மஹாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி மற்றும் மஹாகாளி இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள். அவள் மூன்று சக்திகளையும் கொண்ட பராசக்தி மற்றும் அவர்களுடைய ஆதாரமாகவும் அவர்களை எல்லாம் மிஞ்சிய ஒன்றாக திகழ்கிறாள். பிரம்மாவின் மிகப்பெரிய உருவத்தின் சைதன்யம், மஹாவிஷ்ணுவின் விஸ்வரூபம், மற்றும் ருத்திரனின் பிரளயகால உருவம் ஆகியவை ஸ்ரீ வெங்கடேஸ்வரர் உருவத்திற்குள் திகழ்கிறது. அவர் பரப்ரம்மாவின் உருவமாகவும் மற்றும் அவர்களின் ஆதாரமாகவும் அவர்களுக்கு அப்பால் நிலைத்திருக்கிறார். எப்படி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவம் அர்த்தநாரீஸ்வரர் உருவத்தில் இருக்கிறதோ, ஸ்ரீ பத்மாவதி மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் உருவம் மஹாவைஷ்ணவ மாயையின் வடிவத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்" என்றார்.

பின்னர் நான், **"குரு சர்வபௌமா! உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும். நீங்கள் பத்மாவதி சமேத வெங்கடேஸ்வரர் என்று கூறினீர்கள். மீண்டும், நீங்கள் அனகா லக்ஷ்மி சமேத அனகா என்றும் கூறினீர்கள். மந்தமான புத்தியுடைய என் போன்ற ஒருவனுக்கு உங்களுடைய குணங்கள் கொஞ்சம் கூடப் புரியாது. என் மீது கருணை கொண்டு உதவி புரியுங்கள்"** என்று கூறினேன்.



## ஸ்ரீ ஸ்ரீபாதர்தான் ஸ்ரீ வெங்கடேஸ்வரர்

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், "என் குழந்தைகளே! என்னுடைய ஆற்றல்கள் எல்லையற்றது. என்னுடைய தெய்வீகக் குணம் பல வழிகளில் வெளிப்படுத்திக் கொள்ளும் இயல்புடையது. மகாலட்சுமியும் பத்மாவதியும் ஒரே குணம் உடையவர்களாக இருப்பினும் அவள் மஹாலக்ஷ்மியின் குணத்தை ஏற்றுக் கொள்ளும் போது அவளுடைய துணைவனாக என்னிடமிருந்து ஸ்ரீ மஹாவிஷ்ணு வெளிப்படுவார். அவள் பத்மாவதியின் குணங்களை பெற்றுக் கொள்ளும் போது என்னிடமிருந்து ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் முக்கியமான குணங்கள் வெளியேறுமாறு செய்வேன். ஆதி இயல்புகள் உருவம் மற்றும் பண்புகளுடன் பிறவி எடுத்தால் அதற்குண்டான குறிப்புகள், உலக அனுசரிப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும். என்னுடைய சகோதரியான இந்த உயர்ந்த சக்தி என்னுடைய கிருஷ்ண அவதாரத்தின் போது யோகமாயாவாகப் பிறந்து வானத்திற்குள் பறந்து சென்று விட்டாள். சிறந்த முனிவர்கள், யோகிகள் மற்றும் வைசிய துறவிகள் ஆகியோர் செய்த கடுமையான தவத்தின் பலன் அவளை வாசவி கன்யகாவாக தோன்றச் செய்தது. நான் சில முக்கியமான காரணங்களால் ஸ்ரீ பீதிகாபுரத்தில் அவதரித்தேன். வருங்காலத்தின் நிகழ்ச்சிகளை முழுத் திருப்தியுடன் உன் கண்களால் பார். என்னுடைய அவதாரத்தின் முக்கியமான தனிச்சிறப்பு மற்றும் பிரத்தியேகமான தெய்வீகக் களிப்பு மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சிறப்பான லீலைகளையும் புரிந்துகொள்வாய். என் அருமை சங்கர் பட், இன்று பஞ்சதேவ மலையில் நடைபெறும் அனைத்து லீலைகளைப் பற்றியும் எழுது. சரிதாம்ருதத்தில் அவற்றை நடந்தபடியே, நீ பார்த்தபடியே நம்பிக்கையுடன் எழுது. அது வருங்கால சந்ததியினரின் அகத்தூண்டுதலுக்கு ஆதாரமாக விளங்கும். இது பல தீவிரமான சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும். இது ஆத்திகர்களுக்கு புது வலிமை, பக்தி மற்றும் உற்சாகத்தை அளிக்கும்" என்று கூறினார்.

நாங்கள் இருவரும் இந்த காட்சிகளை கண்டு திகைத்து நின்று கொண்டிருந்த போது, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவம் தெய்வீகப் பேரொளியாகி அதிலிருந்து ஸ்ரீ பத்மாவதி மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் அதீத ஒளியுடன் வெளி வந்தனர்.

நாங்கள் தெய்வீக பெண் குழந்தையை பார்த்த போது அது மேலும் மேலும் வளர்ந்து தெய்வீக ஒளியுடன் பதினெட்டு வயதுடைய ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரியாக உருவம் எடுத்தது. அந்த இடத்தில் இருந்து கோசாலை மறைந்து எல்லா இடத்திலும் தெய்வீக ஒளியை பரப்பிய வண்ண ஒளிமயமான பூமண்டலத்துடன் ஒரு அற்புதமான மாளிகை தோன்றியது.

நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே ஒரு அரச தம்பதி தங்களுடைய அனைத்து வேலையாட்களுடன் அங்கு தோன்றினார்கள். அது குஸும சிரேஷ்டி தம்பதி என்பதை நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம். நாங்கள் முந்தைய நாள் விவசாயியாக பார்த்த விருபாக்ஷர் இன்று இளவரசன் போன்ற உடையில்

இருந்தார். அவர் என்னை, **“ஐயா, முஷ்டியில் முஷ்டி வீர முஷ்டி என்றால் என்ன?”** என்று கேட்டார். **“எனக்கு தெரியாது”** என்று கூறினேன்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் உருவத்தில் இருந்த ஸ்ரீ ஸ்ரீபாதர், **“என் அருமை சங்கர் பட், ஒரு உருவத்தோடும் குணத்தோடும் இருக்கும் போது ஒருவரின் மரியாதைகள் மற்றும் ஐதீகங்களைக் கவனித்தாயா? அவை அனைத்தையும் முழுமையாக பின்பற்ற வேண்டும். நீ மெதுவாக அனைத்தையும் புரிந்து கொள்வாய்”** என்றார்.

ஸ்ரீ வாசவி கன்யகா உருவத்தில் இருந்து கர்ஜனை செய்வது போன்ற ஓசை கேட்டவுடன் நான் பயந்து ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்று நினைத்தேன். இதற்கிடையில் அந்த குணம் அமைதியாகி வாசவியின் உருவத்தில் இருந்து ஸ்ரீ வாசவி தேவி மற்றும் ஸ்ரீ நாகரேஸ்வரர் வெளிப்பட்டனர். பின்னர் வைசிய முனிவர்கள் பின்தொடர்ந்தனர். வைசிய தம்பதிகள் ஜோடியாகவே வெளி வந்தனர். இது ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி பிருஹத்சிலநகரத்தில் வாழ்ந்த அரச மாளிகை என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரர், **“என் அருமை சங்கர் பட், நீ இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் வைசிய தம்பதிகள் ஸ்ரீ வாசவி கன்யகாவுடன் அக்னிப்ரவேசம் செய்த அதே தம்பதிகள்தான். இந்த வைசிய ரிஷிகள் 101 கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள்”** என்று கூறினார். இதற்கிடையில் குஸும சிரேஷ்டி, **“மஹாகுரு பாஸ்கராச்சார்யா வரவில்லை. 102வது கோத்திரத்தை சேர்ந்த லாபாத மகரிஷியும் வரவில்லை. ஸ்வாமி, இவர்கள் இருவரையும் கருடாழ்வார்(விஷ்ணுவின் வாகனம்) சேர்க்கவில்லையா?”** என்று கேட்டார். பின்னர் வெங்கடேஸ்வர ஸ்வாமி, “வைசிய முனிவர்களே, நீங்கள் அறிந்த பாஸ்கராச்சார்யாதான் முந்தைய பிறவியில் லாபாத மஹரிஷியாக பிறந்தார். இப்போது நான் எடுத்துள்ள ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரத்தில் என்னுடைய தாய்வழி தாத்தாவாக பீதிகாபுரத்தில் இருக்கிறார். பாப்பண்ணார்யா மற்றும் புண்ணியம் வாய்ந்த வடிவமான ராஜமாம்பாவும் பீதிகாபுரத்தில் இருந்து தங்கள் யோகப் பார்வை மூலம் இங்கு நடக்கும் லீலைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி சுமதி மஹாராணி, பிரம்மஸ்ரீ அப்பலராஜ சர்மா, அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி வெங்கட சுப்பமாம்பா, மகரிஷி வெங்கடப்பைய சிரேஷ்டி ஆகியோர் ஒளிபொருந்திய தெய்வீக வானூர்தியில் சூக்ஷ்ம உடலுடன் கீழிறங்கி வந்தனர். அவர்கள் மிகவும் பிரமாண்டமாக வரவேற்கப்பட்டனர்.

அன்று ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரியின் பிறந்தநாள் என்பதால் அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி சுமதி மஹாராணி, அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி குஸுமாம்பா, அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி வெங்கட சுப்பமாம்பா மற்றும் மற்ற பவித்ரமான பெண்கள் ஸ்ரீ வாசவிக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து ஆபரணங்களால் அலங்கரித்தனர். ஸ்ரீ நாகரேஸ்வர ஸ்வாமி மிகுந்த அபூர்வமான பேரொளியுடன் பளபளப்பாக இருந்தார். அவருக்கும் மங்கள ஸ்நானம் செய்விக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீனிவாச ஸ்வாமி, "வைசிய முனிவர்களே, பதினெட்டு நாகர ஸ்வாமிகளே, அக்னிகுண்டத் தம்பதிகளே! இன்று மிகவும் புனிதமான நாள். இது மிகவும் தெய்வீகமான நேரம். இன்று ஸ்ரீ வாசவி தேவிக்கும் ஸ்ரீ நாகரேஸ்வரருக்கும் திருமண நிச்சயதார்த்தம் செய்யலாம் என்று முடிவெடுத்துள்ளேன். அதற்கு உங்களுடைய யோசனைகள், சம்மதம் மற்றும் எப்படி அதை நடத்துவது என்பதற்கான சில வழக்கமுறைகளின் விவரங்கள் வேண்டும்.

ஸ்ரீ வாசவி கன்யகா பார்வதியாக இருந்த போது அசுரன் இராவணன் கைலாயத்திற்கு வந்தான். அவன் பரமேஸ்வரனை வலியுறுத்தி கேட்டு ஆத்ம லிங்கத்தைப் (பரமாத்மாவின் அழியாத உருவம்) பெற்றுக்கொண்டான். சிவன் அதை அவனுக்கு அளித்தார். அதற்கு பிறகு கேட்கக்கூடாத விருப்பமாக ஒன்றை கேட்டான். அம்பிகை காளி உருவம் எடுத்தாள். பின்னர் ஆத்ம லிங்கமும் பூமியில் கோகர்ணம் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

எனினும் கலியுகத்தில் இராவணனின் அம்சமான கந்தர்வன் ஒருவன் வாசவியைக் கேட்டான். அது உங்களுக்கு தெரிந்த விஷ்ணுவர்தன மன்னன்தான். வாசவி 102 கோத்திரங்களை சேர்ந்த தம்பதிகளுடன் அக்னிப்ரவேசம் செய்ததும் உங்களுக்குத் தெரிந்ததுதான். கௌரி பாலிகைகள் மற்றும் பாலநகரர்களை ஸ்ரீ பாஸ்கராச்சார்யா வளர்த்து வந்தார். ஸ்ரீ வாசவி கன்யகாவும் கௌரி பாலிகைதான். நாகரேஸ்வரரை பாலநகராராகக் கொண்டு இந்தத் திருமணத்தை நடத்தி வைப்பது புத்திசாலித் தனமானதுதான். ஆனாலும் அதில் ஒரு தடங்கல் இருக்கிறது. அதை நீங்கள்தான் தீர்த்து வைக்க வேண்டும். உங்கள் கருத்துக்களின் பேரில் ஸ்ரீ வாசவி கன்யகாவின் நிச்சயதார்த்தத்தைப் பற்றி முடிவெடுத்துக் கொள்ளலாம்.

ஸ்ரீ நாகரேஸ்வரருக்கு பெற்றோர்களோ கோத்திரமோ கிடையாது. அவர் சுயம்பு. ஆனால் நம் கன்யகாவுக்கோ அவரைக் கணவராக அடைய மனது, வார்த்தை மற்றும் செயலால் விருப்பம் இருக்கிறது. ஸ்ரீ நாகரேஸ்வரரும் நம் கன்யகாவை மணந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறார். ஒரு மணமகளை மணமகனுக்குத் தாரை வார்த்து கொடுப்பதற்கு முன் மணமகனின் குலம், கோத்திரம் மற்றும் மற்ற விஷயங்களைப் பற்றி நன்றாக யோசித்து கொள்ள வேண்டும். உறவினர்களுக்குள் திருமணம் செய்து கொள்வது (முறை பையன்) நம் பாரம்பரியத்தில் இருக்கிறது. நான் உங்கள் முடிவுக்கு கட்டுப்படுகிறேன்" என்றார்.

ஸ்ரீ ஸ்ரீனிவாசரின் வார்த்தைகளைக் கேட்டு இந்த உலகத்தின் தர்மமாக இருந்த அனைவரும் வியப்படைந்தனர். ஒரு கௌரி பாலிகையை பாலநகரருக்கு மட்டும்தான் திருமணம் செய்து வைக்க முடியும். அவர்கள் கோத்திரம் இல்லாத சங்கர பகவானுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கலாமா என்று யோசித்தனர். கன்யகாவுக்கும் ஸ்ரீ நாகரேஸ்வரரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. இந்த கடினமான சூழ்நிலையைச் சமாளிக்க மெத்த படித்த கணபதியிடமிருந்து உதவி பெற்று கொள்ளலாம் என எண்ணினர். எதைச் செய்வதாக இருந்தாலும் கணபதியின் ஆசீர்வாதமும் அருளும் முக்கியம் என்பதை அவர்கள் புரிந்து

*கொண்டிருந்தனர். அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டவுடன் கணபதி வெளிப்பட்டார். அனைவரும் அவரை நமஸ்கரித்தனர். கணபதி,* **“ஸ்ரீனிவாசா, இந்த வாசவி உண்மையில் என் அன்னை பார்வதி தேவிதான். அதனால் அவளை நாகரேஸ்வரருக்கு திருமணம் செய்து வைப்பதில் எந்தவித தவறும் இல்லை”** *என்றார்.*

*பின்னர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர்,* **“என் அருமை கணேசா, நீ சிறுவன். தர்மத்தையும் சூக்ஷ்ம தர்மத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு உனக்கு வல்லமை வேண்டும். நீ கணங்களின் தலைவன். முப்பத்து முக்கோடி தேவர்களில் முதன்மையானவன், பிரவிருத்தி மற்றும் நிவிருத்தி கணங்களின் தலைவனாகவும் இருக்குகிறாய், மேலும் உன்னுடைய ஆணை இல்லாமல் எந்த திருமணமும் தர்மத்திற்குட்பட்டு நடந்தவை ஆகாது. பார்வதியின் திருமணத்தின் போது நீ பிறக்கவே இல்லை. அந்த வழக்கில் பார்வதியின் திருமணம் தர்மத்திற்கு உட்பட்டு நடைபெறவில்லை”** *என்றார்.*

*அனைத்து வைசிய மூத்தவர்களும் திகைப்படைந்தனர். ஸ்ரீ வாசவியின் திருமணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, பார்வதியின் திருமணத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்ரீனிவாசாரின் கூற்று ஒத்துக்கொள்ள முடியாததாகவும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அவர்களுக்கு இருந்தது. மேலும் அவர்களால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை.*

*பின்னர் கணபதி, “என் அருமை புத்திசாலி மாமாவே, உங்களுடைய தவறான விளையாட்டை என்னால் பகுத்தறிய முடிகிறது. என்னுடைய தந்தைக்கும் தாய்க்கும் திருமணம் நடைபெறக் கூடாது என்பதுதான் உங்கள் விருப்பம். திருமண வைபவத்தின் போது மணமகன் ஏராளமாக பணம் செலவழித்து தக்ஷிணை மற்றும் அன்னதானம் செய்ய வேண்டும். என் தந்தையிடம் பணம் இல்லை என்று கேலி செய்கிறீர்கள். நான் இதை வேறு கோணத்தில் பார்க்கிறேன். ஒவ்வொரு மனிதனுக்கும் குண்டலினி சக்தி இருக்கிறது. நான் மூலாதார சக்கரத்தில் இருக்கிறேன். பார்வதி-பரமேஸ்வரர் திருமண நேரத்தில் அவர்கள் என்னை அழைத்ததால் நான் சங்கரரின் மூலாதார சக்கரத்தில் இருந்தேன். திருமணம் என்னுடைய சம்மதத்தோடுதான் நடைபெற்றது. ஆகவே பார்வதி-பரமேஸ்வரர் திருமணம் தர்மத்திற்கு உட்பட்டுதான் நடைபெற்றது. அந்த சமயத்தில் நான் என்னை ஸ்தூல உலகத்தில் வெளிப்படுத்தி கொள்ளவில்லை. ஆனால் நான் அனைத்து கடவுள்கள் மற்றும் மனிதர்களின் மூலாதாரத்தில் இருக்கிறேன். லாபாதா என்னுடைய மகனாக பிறந்தார். அவர்தான் கிருத யுகத்தில் லாபாத மஹரிஷி. லாபாதரின் கோத்திரம் 102 கோத்திரங்களில் உள்ளது. கணப குலத்தின் ரத்தினங்களான தன குப்தர் மற்றும் தனலக்ஷ்மி தம்பதி அக்னிப்ரவேசம் செய்ததால் அந்த பரம்பரை நின்று போனது. அதனால் புத்திசாலித்தனமாக நான் லாபாத மகரிஷியை மகனாகப் பெற்றெடுத்தேன்.*

*ஆகவே எங்கள் கோத்திரம் லாபாத கோத்திரம் ஆனது. என்னுடைய கோத்திரம் லாபாத கோத்திரம் ஆனதால் என்னுடைய தந்தையின் கோத்திரமும் லாபாத கோத்திரம்தான். இந்த லாபாத கோத்திரம் ஆரிய வைசியர்களின் 102 கோத்திரங்களில் ஒன்று. நாகரேஸ்வரரும் ஆரிய வைசியர்தான். நீங்கள் வாசவியின் சகோதரர் என்று கூறுகிறீர்கள். இப்போது லாபாத மகரிஷி பாப்பண்ணார்யாவாக வந்துள்ளார்.*

அதனால் நீங்கள் உங்கள் தாத்தாவிடம் அனுமதி பெற்று நாகரேஸ்வரர் லாபாதி கோத்திரத்தைச் சேர்ந்தவர் என எடுத்துக் கொள்ளலாமா என்று கேளுங்கள். அதை உறவினர்களுக்குள் நடக்கும் திருமணமாகக் கூட கருதலாம். அது எப்படியென்றால் பிரபாத கோத்திரத்தில் பிறந்த குஸும சிரேஷ்டிக்கு லாபாதி கோத்திரத்தில் உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாய்வழி மாமா முறை உறவு ஆகிறது. இது போன்ற தடைகளை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதைத் தெரிந்துதான் நான் முன்பே தனலக்ஷ்மி மற்றும் தனகுப்தர் தம்பதியை அக்னிப்ரவேசம் செய்யவைத்து கோத்திரத்தை முடித்து விட்டேன். ஸ்ரீ நாகரேஸ்வரருக்கு இந்த கோத்திரத்தை கொடுக்கலாம். இன்று முதல் நான் இன்னொரு வரத்தையும் அளிக்கிறேன். நீங்கள் லக்ஷ்மியின் கணவர் என்பதால் மக்கள் அனைவரும் லக்ஷ்மியின் அருள் பெற உங்களை வணங்குவார்கள். இப்போதிலிருந்து எவரொருவர் சிவனை வழிபட்டு அவருக்கு அபிஷேகம் செய்தாலும் அவருக்கு லக்ஷ்மியின் அருள் கிடைக்கும். '**ஐஸ்வர்யம் ஈஸ்வர ஆராதிசே**' என்ற கருத்து உலகெங்கிலும் பரவட்டும். சிவபெருமானை சனிப்பிரதோஷ காலங்களில் வழிபடுபவர்களுக்கு எல்லா உலகங்களிலும் சந்தோஷம் கிடைக்கும்" என்றார்.

ஸ்ரீ ஸ்ரீனிவாசர் வைசிய மூத்தவர்களிடம் யோசனை கேட்டார். அனைவரும் ஒருமனதாக கணபதி கூறியவைகளை ஆமோதித்தனர். பிரபாத கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்ரீ வாசவிக்கும் லாபாத கோத்திரத்தை சேர்ந்த நாகரேஸ்வரருக்கும் மிகுந்த சந்தோஷத்துடன் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இரவில் பெரிய விருந்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. விழாவில் அப்சரஸ் பெண்கள் பாட்டும் நடனமும் நிகழ்த்தினர்.

அன்னை வாசவி, "102 கோத்திரங்களின் எண்ணிக்கை 102 கோத்திரங்கள்தான். லாபாத கோத்திரம் இல்லை என கருதுவது தவறு. அது ஸ்ரீ நாகரேஸ்வரரின் கோத்திரம் என்ற காரணத்திற்காக அந்த 102வது கோத்திரத்தின் பரம்பரை முடிக்கப்பட்டது. நான் பிறந்த கோத்திரத்தை பிரபாத கோத்திரம் என்றும் ஸ்ரீ நாகரேஸ்வரரின் கோத்திரத்தை லாபாத கோத்திரம் என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லா வைசியர்களும் லாபாதி கோத்திரத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதேபோல் அவர்கள் அனைவரும் ஸ்ரீ நாகரேஸ்வரரை வணங்க வேண்டும். நான் கன்யகா உருவத்தில் இருந்தாலும் என்னுடைய இறைவன் என்னுடைய ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறார் என்பதை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் நான் ஸ்ரீ நாகரேஸ்வரருடைய ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறேன். என்னை வணங்கி விட்டு அவரை வணங்காமல் இருந்தாலோ, அவரை வணங்கிவிட்டு என்னை வணங்காமல் இருந்தாலோ எந்த பலனும் கிடைக்காது. என்னுடைய கன்யகா உருவம் பதினெட்டு வருடங்கள்தான் இருக்கும். இதற்கு முன்னர் நான் பரமேஸ்வரி. இதற்கு பின்னர் நான் மீண்டும் பரமேஸ்வரி ஆகிவிடுவேன். என்னை நீங்கள் கன்யகாவாக நினைத்தால் நான்

கன்யகாவின் அனுபவங்களை அளிப்பேன். என்னை பரமேஸ்வரியாக நீங்கள் எண்ணினால் நான் உங்களுக்கு சௌபாக்யவதி மங்கள ரூபிணியின் தரிசனம் அளிப்பேன்" என்றாள்.

## திருப்பதியில் உள்ள சிலை பாலாதிரிபுரசுந்தரியாகவும் ஈஸ்வரனாகவும் வணங்கப்பட்டது

மேலும் அவள் "ஒரு சமயம் திருமலையில் உள்ள சிலை பாலாதிரிபுரசுந்தரியாக வணங்கப்பட்டது. பின்னாட்களில் ஈஸ்வரனாக வணங்கப்பட்டது. இன்னும் பின்னாட்களில் மகாவிஷ்ணுவாக வணங்கப்பட்டு வருகிறது.

திருமலையில் உள்ள சிலையின் பாலாதிரிபுரசுந்தரி உருவம் நான்தான். ஈஸ்வரன் உருவத்தில் இருந்தது ஸ்ரீ நாகரேஸ்வரர்தான். மகாவிஷ்ணுவின் உருவத்தில் இருப்பது என் சகோதரர் ஸ்ரீ தத்தர்தான்.

ஒருமைத்தன்மை உள்ளுணர்வுகளுடன் தொடர்புடையது தானேயொழிய அது ஸ்தூல உலகத்துடன் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்" என்றாள்.

ஸ்ரீ ஸ்ரீனிவாசர், "**சகோதரி, நான் இப்போது பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் இருக்கிறேன். நீ என்னுடைய சமஸ்தானத்தில் என் சகோதரியாக இருக்க வேண்டும்**" என்றார். அதற்கு அம்பிகை, "**அண்ணா, இது எனக்கு சம்மதம். அதற்கு முன்னர் நீங்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் உருவத்தில் பிருஹத்சிலநகரத்தில் உள்ள கன்யகா பரமேஸ்வரியின் மகா சமஸ்தானத்துக்கு வர வேண்டும்**" என்றாள். உலக நாடகங்களின் மையமான ஸ்ரீ ஸ்ரீனிவாசர் சிரித்தார்.

ஸ்ரீ வாசவியின் பிறந்தநாள் இவ்வாறு பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது. அடுத்த நாள், அந்த இடம் சாதாரண கோசாலையாக இருந்தது. காலை நேர வேலைகளை முடித்துக் கொண்டு நாங்கள் குருகட்டாவை நோக்கி பயணித்தோம்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 29

## அக்னிப்ரவேசம் மேற்கொண்ட தம்பதிகள் பற்றிய விளக்கம்- ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தெய்வீக அறிவுரை

குருகட்டாவை அடைந்தவுடன் ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசனம் செய்தோம். அவருடைய கட்டளைக்கு அடிபணிந்து அவர் இருக்கும் இடத்தில் அமர்ந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் பின்வரும் செய்திகளை எங்களுக்கு அருள்கூர்ந்து வழங்கினார்:

### ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் சரணடைந்தவர்களை அவர் காப்பாற்றுவார்

"என் அருமை மகன்களே, நேற்று நடந்த ஸ்ரீ வாசவியின் பிறந்தநாள் விழாவைக் காண நீங்கள் பாக்கியம் செய்திருக்கிறீர்கள். நேரமும் இடமும் என் கையில் விளையாட்டுப் பந்து போன்றவை. நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் அல்லது கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களில் நடந்த அல்லது நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் என்னால் மாற்ற முடியும். நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் இடத்தையும் நேரத்தையும் முடிவில்லா பயணமாகத் தோன்ற நான் ஆணை இடுவேன். உங்களுடைய சைதன்ய நிலைக்கு ஏற்ப என்னைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ள முடியும். எல்லா தர்மங்களையும் துறந்து விட்டு உங்களுடைய ஆழ் மனதில் இருக்கும் என்னிடம் தஞ்சம் அடைந்து என்னுடைய கட்டளைகளுக்கு உட்பட்டு செயல்படும் போது உங்களுடைய பாரங்களை நான் சுமந்து உங்களை அக்கரைக்கு அழைத்து செல்வேன். இயற்கையை வெறும் வார்த்தை மூலம் என்னால் ஆணையிட முடியும் என்பதால் நான் சரஸ்வதி என்ற பெயருடன் புகழடைவேன். கலியுகத்தில் உள்ள மக்கள் ஹிரண்யகசிபு போன்றவர்கள். அவர்களுடைய பிரச்சனைகள், யோசனைகள், எண்ணங்கள், மற்றும் செயல்கள் அனைத்தும் மிகவும் சிக்கலானது. அவர்கள் இயற்கையுடன் பொருள் ரீதியான சிறந்த அறிவை வளர்த்துக் கொண்டு இயற்கை அன்னையிடமிருந்து ஹிரண்யகசிபு போல வரங்களைப் பெற்றுக் கொள்வார்கள். ஆதலால், கலியுகத்தில் பிரகலாதனைப் போல் உள்ள அப்பாவி பக்தர்களை காப்பாற்றுவதற்காக நான் நரசிம்மரைப் போல அவதாரம் எடுக்க வேண்டும். ஆகவே நான் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி என்ற பெயரில் கந்தர்வபுரத்தில் இன்னொரு அவதாரம் எடுத்து புகழடைவேன்" என்றார்.

### ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரியுடைய உத்தரவாதத்தின் கதை

பின்னர் அவர் ஸ்ரீ வாசவி அன்னையைப் பற்றி கூறினார். "சமாதி என்ற பெயருடைய துறவி ஜகன்மாதாவின் பக்தராக இருந்தார். அவர் பின்னாட்களில் குஸுமஸ்ரேஷ்டியாக பிறந்தார். ஆதி சக்தி வாசவி என்ற பெயரில் அவருடைய

*மகளாகப் பிறந்தாள். கேட்கக்கூடாத ஒன்றை விஷ்ணுவர்தன் கேட்டான். ஆர்யாவைஸ்யர்கள் தங்கள் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள அக்னியில் விழுவதே மேல் என சிந்தித்து முடிவெடுத்தனர். ஸ்ரீ வாசவி மிகுந்த பேரொளியுடன் ஆரிய மகாதேவியாகத் தன் பெற்றோர்கள் மற்றும் மற்ற கோத்திரத்தை சேர்ந்த தன் உறவினர்களுக்கும் காட்சி அளித்தாள். அந்தப் பேரொளியைக் காண முடியாமல் பலர் மயக்கம் அடைந்தனர். பின்னர் அம்பிகை தன் பேரொளி வடிவத்தை விடுத்து சாதாரணமாகத் தோற்றம் அளிக்கும் வாசவி கன்யகா உருவத்தில் காட்சி அளித்தாள். அவள் அவளுடைய வைசிய மக்களிடம்,* **"தாய் தந்தையரே, நாம் அக்னிப்ரவேசம் மேற்கொண்ட உடனேயே விமலாதித்தனுடைய தலை ஆயிரம் துண்டுகளாக உடைந்துவிடும். ஸ்ரீ நாகரேஸ்வரர்தான் வைசியர்களின் ஆதார தெய்வம் என்பதை எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். விந்தியவாசினி என்று அழைக்கப்படுவது வேறு யாருமல்ல நான்தான். பசுக்கள் மற்றும் பிராமணர்களுக்கு சேவை செய்வது, குலதெய்வ வழிபாடு மற்றும் கோத்திர வழிபாடுகள் உன்னிப்பாக நடத்தப்பட வேண்டும். இந்த விதிகள் மற்றும் விதிமுறைகளை நீங்கள் அனைவரும் பின்பற்றினால் உங்கள் இல்லங்கள் மற்றும் மனதில் என் கொலுசொலியை கேட்பீர்கள் என்று நான் உங்களுக்கு கருணையுடன் உத்தரவாதம் அளிக்கிறேன். உங்கள் இல்லங்களில் லக்ஷ்மி கடாக்ஷம் பிரகாசிக்கும். நீங்கள் இவ்வுலக வாழ்க்கையில் அனைத்து மங்களமும் சுகங்களையும் பெற்று வெற்றியாளராகி கைலாசத்தை அடைந்து அங்கு சந்தோஷமாக இருப்பீர்கள்"** *என்றாள்.*

*நான் அவரிடம்,* **"மகாபிரபு, ஹோம குண்டத்தில் இறங்கிய தம்பதிகள் யார்? அவர்களுடைய கோத்திரம் என்ன? தயவுசெய்து எனக்கு கூறுங்கள்"** *என்று கேட்டேன். இறைவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து கூறினார், "102 கோத்திரங்களை சேர்ந்த மக்கள் ஆரிய வைசியர்கள் என்று அழைக்கப்படுவார்கள். ஆர்யமஹாதேவி என்கிற ஸ்ரீ வாசவி கன்யகாவுடன் ஹோமகுண்டத்திற்குள் இறங்கிய தம்பதிகளை நினைவில் கொள்பவர்களின் பாவங்கள் அனைத்தும் விலகிவிடும்.*

## கோத்திரங்கள் பற்றிய வர்ணனை

*லாபாத மகரிஷியின் கோத்திரத்தைச் சேர்ந்த தனதா மற்றும் தனலக்ஷ்மியை முதலில் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆர்யவைசியர்களின் கோத்திரங்கள் பின்வருமாறு:*

1. *பிரபாத ரிஷியின் ப்ரபாதச கோத்திரம்*
2. *மாண்டவ்ய ரிஷியின் மானவச கோத்திரம்*
3. *ஆங்கீரஸரின் கர்கஸ்ய கோத்திரம்*
4. *கோபக ரிஷியின் கோபகச கோத்திரம்*
5. *பூதிமாஷ முனியின் பூதிமாக்ஷச கோத்திரம்*
6. *ஸ்ரீவத்ஸ முனியின் ஸ்ரீவத்ஸ கோத்திரம்*

7. கண்வ மகரிஷியின் கண்வச கோத்திரம்
8. கந்தர்ப்ப மகரிஷியின் கந்தர்பச கோத்திரம்
9. காலூரப்பியாச ரிஷியின் காலூரப்பியாச கோத்திரம்
10. தேவவல்க்யரின் தேவவல்க்யஸ்ய கோத்திரம்
11. மைத்ரேயரின் மைத்ரேயஸ்ய கோத்திரம்
12. சனக மகரிஷியின் சனகச கோத்திரம்
13. ஆங்கீரச முனியின் உத்தமோஜச கோத்திரம். இந்த உத்தமோஜச கோத்திரத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. அக்னியை வழிபட்ட ஆங்கீரசர் பிற்காலத்தில் உத்தரோதர நாரதர் என்ற பெயரைப் பெற்றார்.
14. வாமதேவ ரிஷியின் வாமதேவச கோத்திரம்
15. காஸ்யப முனியின் காஸ்யபச கோத்திரம்
16. ஜராத்கார முனியின் ஜரத்காரச கோத்திரம்
17. சுரீக்ஷண முனியின் துர்வாசன கோத்திரம்
18. மௌத்கல்யரின் மௌத்கல்யச கோத்திரம்
19. ஆத்ரேய ரிஷியின் ஆத்ரேய கோத்திரம்
20. ஜாதுகர்ண முனியின் ஜாதுகர்ணச கோத்திரம்
21. புண்டரீக முனியின் புண்டரீகச கோத்திரம்
22. தௌம்யா ரிஷியின் சுப்ரமண்யச கோத்திரம்
23. வாயவிய ரிஷியின் வாயவியஸ கோத்திரம்
24. பராசர ரிஷியின் பராசர்ய கோத்திரம்
25. பௌலட்ஸ்ய ரிஷியின் பௌல்ட்ஸ்யச கோத்திரம்
26. அகஸ்திய ரிஷியின் அகஸ்தியஸ கோத்திரம்
27. கௌதம முனியின் கௌதமச கோத்திரம்
28. பார்கவ ரிஷியின் போதயநச கோத்திரம்
29. ஜெய்முனியின் மஸ்கஸ கோத்திரம்
30. மதங்க முனியின் ஹரிவல்கச கோத்திரம்
31. சம்வர்த்த முனியின் வ்யாபச கோத்திரம்
32. விஷ்வக்சேனரின் விஷ்வக்ஸேன கோத்திரம்
33. தும்புர ரிஷியின் சாண்டில்யச கோத்திரம்
34. பௌஷல ரிஷியின் விஷ்ணுவிருத்த கோத்திரம்
35. வருண ரிஷியின் வைரோஹித்யஸ கோத்திரம்
36. சுகாஞ்சன ரிஷியின் சுகாஞ்சனச கோத்திரம்

37. பரதந்து முனியின் பரதந்துச கோத்திரம்
38. தேவல ரிஷியின் பவித்ர பதனிச கோத்திரம்
39. பிங்கல ரிஷியின் பிங்கலச கோத்திரம்
40. கபில முனியின் கபிலச கோத்திரம்
41. பாரத்வாஜ ரிஷியின் பாரத்வாஜச கோத்திரம்
42. முனிராஜ ரிஷியின் முனிராஜஸ கோத்திரம்
43. ருஷ்யஸ்ருங்கரின் ருஷ்யஸ்ருங்கச கோத்திரம்
44. மந்தபாலரின் மந்தபாலச கோத்திரம்
45. உக்கிரசேன ரிஷியின் உக்கிரசேனச கோத்திரம்
46. மார்க்கண்டேய ரிஷியின் மார்கண்டேயச கோத்திரம்
47. மஞ்சத்திரதுலரின் மௌஞ்சாயநச கோத்திரம்
48. யாக்ஞவல்க்ய ரிஷியின் யாக்ஞவல்கச கோத்திரம்
49. பாபி ரிஷியின் பாப்ரேயச கோத்திரம்
50. ப்ராசீனரின் ப்ராசீனச கோத்திரம்
51. ஸ்ரீதரரின் ஸ்ரீதராச கோத்திரம்
52. ஜடபரதரரின் ஜடபரதச கோத்திரம்
53. கர்க்யரின் தித்திரச கோத்திரம்
54. கௌண்டின்யரின் கௌண்டின்யச கோத்திரம்
55. வேதநிதியின் கபீதரஸ கோத்திரம்
56. பிருகு மஹரிஷியின் பார்கவச கோத்திரம்
57. சம்வர்த்தரின் சம்வர்தச கோத்திரம்
58. ஹயக்ரீவரின் த்ரிஜதச கோத்திரம்
59. வால்மீகரின் வால்மீகச கோத்திரம்
60. பவித்ரபாணியின் தைதீயச கோத்திரம்
61. மரீசரின் மரீசச கோத்திரம்
62. போதாயனரின் சௌவர்னச கோத்திரம்
63. சரபமுனியின் உச்சிட்சஸ கோத்திரம்
64. காம்யக ரிஷியின் காந்தேயச கோத்திரம்
65. சத்யவ்ரதரின் ஸத்யஸ கோத்திரம்
66. மகாசேனரின் சனத்குமாரச கோத்திரம்
67. கௌத்சரின் கௌத்சஸ கோத்திரம்

68. ஸ்தூல சிரஸ்ஸின் வதுகச கோத்திரம்
69. கிருஷ்ண துவைபாயனரின் சௌசேயச கோத்திரம்
70. மாதவரின் ஐம்பசூதனச கோத்திரம்
71. தேவரதரின் தேவரதச கோத்திரம்
72. சரபங்கரின் சரபங்கச கோத்திரம்
73. நேத்ரபாதசரின் நேத்ரபாதச கோத்திரம். இந்த கோத்திரத்தில் தௌம்யரை நேத்ரபாதச வம்சத்தின் நேத்ரபாதச தௌம்யர் என்று அழைக்கப்படுவார்.
74. விஷ்ணு விருத்த முனியின் க்ருத்ஸ்னமதச கோத்திரம்
75. சக்கரபாணி முனியின் சக்கரபாணிச கோத்திரம்
76. ப்ருஹஸ்பதியின் ஜீவந்திச கோத்திரம்
77. வசிஷ்டரின் வசிஷ்ட கோத்திரம்
78. துர்யாவ்ரதரின் சௌனகச கோத்திரம்
79. மௌசல ரிஷியின் சுவர்ணச கோத்திரம்
80. ஆங்கீரஸ ரிஷியின் சுவர்ணச கோத்திரம்
81. சனந்தனரின் சனந்தனச கோத்திரம்
82. புண்டரீகரின் உத்க்ருஷ்டஸ கோத்திரம்
83. ஆங்கீரஸரின் சுக்லாச கோத்திரம்
84. புண்டரீகரின் புண்டரீகரச கோத்திரம்
85. கிருஷ்ணரின் கிரிஷ்ணச கோத்திரம்
86. த்ரிஜடுவின் தரணிச கோத்திரம்
87. பல்லவ முனியின் பல்லவச கோத்திரம்
88. சதுஷ்கருனுவின் மௌசலச கோத்திரம்
89. ஆஸ்வலாயனரின் அச்சாயனஸ கோத்திரம்
90. சுந்தர்ய முனியின் சுந்தரச கோத்திரம்
91. வருணரின் வருணச கோத்திரம்
92. ஜாபாலியின் வாசுதேவச கோத்திரம்
93. சாரங்கரவரின் சாரங்கவச கோத்திரம்
94. சுதீக்ஷனரின் சுதீக்ஷனச கோத்திரம்
95. சௌம்யரின் சௌம்யச கோத்திரம்
96. புலஸ்தியரின் பரஸ்பராயனஸ கோத்திரம்
97. கௌசிகரின் கௌசிகாச கோத்திரம்
98. பிரேதமனஸ்கரின் சாமரனஸ கோத்திரம்

*99. சனத் குமார ரிஷியின் ஜாபாலச கோத்திரம்*

*100. பாவன ரிஷியின் நாரதச கோத்திரம்*

*101. ப்ருஹதீஷ ரிஷியின் ப்ருஹவஷ்ருச கோத்திரம்*

*102. விஸ்வாமித்ர ரிஷியின் விஷ்வாமித்ரச கோத்திரம்*

*என் செல்வங்களே இதுதான் 102 கோத்திரங்கள்" என்றார்.*

*ஸ்ரீ தர்ம குப்தர் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம்,* **"ஜெயம், மகா குருவுக்கு ஜெயம் உண்டாகட்டும். நீங்கள் கூறியது போல் லாபாதி கோத்திரம் 102 கோத்திரத்தில் சேர்க்கப்படவில்லை. நீங்கள் லாபாதி கோத்திரத்தை சேர்த்தால் 103 கோத்திரங்கள் ஆகிவிடும். இறைவா, என்னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்யுங்கள்"** *என்றார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர்,* **"லாபாத மஹரிஷியின் கோத்திரத்துக்கு தனதகுல கோத்திரம் என்ற இன்னொரு பெயர் இருக்கிறது. லாபாத மகரிஷிக்குத் தொடர்புடைய காஸ்யபச கோத்திரம் இருக்கிறது. பிரபாத கோத்திரத்தில் அபிரமாம்பா மற்றும் ராமச்சந்திரார்ய தம்பதியை தவிர குஸுமாம்பா மற்றும் குஸும சிரேஷ்டி தம்பதியும் அக்னிப்ரவேசம் செய்தனர். லாபாத மகரிஷிக்குத் தொடர்புடைய தனதகுல கோத்திரம் இருக்கிறது. காஸ்யபச கோத்திரம் முடிவடைந்துவிட்டது. காஸ்யபச கோத்ரம் முடிவடைந்து தனதகுல கோத்திரம் தொடர்ந்து கொண்டு இருப்பதால் மொத்தம் 102 கோத்திரங்கள்தான். கலியுகத்தின் முடிவில் ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி மற்றும் ஸ்ரீ நாகரேஸ்வரரின் திருமணம் நடைபெறும் போது, ஸ்ரீ வாசவி கன்யகாவின் கோத்திரம் பிரபாத கோத்திரத்துடனும் ஸ்ரீ நாகரேஸ்வரரின் கோத்திரம் காஸ்யபச கோத்திரத்துடனும் தொடர்புடையதாக இருக்கும். இதுதான் அதில் உள்ள சூக்ஷ்ம தர்மம். ஸ்ரீ வாசவியை கன்யகாவாக நடத்தப்படும் வரை தனதகுல கோத்திரம் 102 கோத்திரத்தில் கருதப்படும். கலியுகத்தின் முடிவில் லாபாத மகரிஷி கோத்திரம் காஸ்யபச கோத்திரம் என்று அறியப்படும். கலியுகத்தின் முடிவில் தனதகுல கோத்திரம் முடிவடையும்"** *என்றார்.*

## அக்னிப்ரவேசம் மேற்கொண்ட தம்பதிகளின் பெயர்கள்

*அக்னிப்ரவேசம் மேற்கொண்ட தம்பதிகளின் பெயர்களை ஸ்ரீ ஸ்ரீபாதர் பின்வருமாறு கூறினார்:*

*1. அபிரமாம்பா - ராமச்சந்திரடு*

*2. ப்ரம்மராம்பா - பாலர்க சிரேஷ்டி*

*3. ராஜமுகி - ராஜேந்திர குப்தா*

*4. ராஜ்யலக்ஷ்மி - திரவினராஜ சிரேஷ்டி*

*5. சமதர்ஷினி - சோமதுடு*

*6. கீர்த்திகாந்தா - உத்பலாக்ஷுடு*

*7. பீமாம்பா - பிருத்வீச குப்தா*

*8. புஷ்பாம்பா - புவனாதப சிரேஷ்டி*

| | | | |
|---|---|---|---|
| 9. | சித்ரபாஷிணி | - | சித்ராசுபகர்யுலு |
| 10. | பாலாமை | - | பலதேவ சிரேஷ்டி |
| 11. | ராகமாஜம் | - | ரகாக்ய சிரேஷ்டி |
| 12. | பல்லபாம்பா | - | பாலவ்ய சிரேஷ்டி |
| 13. | நாரிமணி | - | நாகாக்ய சிரேஷ்டி |
| 14. | தனலெட்சுமி | - | தன குப்தா |
| 15. | ருக்மவதி | - | பாவன சிரேஷ்டி |
| 16. | சந்திரமுகி | - | பூதாத்மர்ச்சார்யலு |
| 17. | தர்மாம்பா | - | உத்தமாவ்ய சிரேஷ்டி |
| 18. | அம்ருதபாஷிணி | - | கௌதம சிரேஷ்டி |
| 19. | பல்லபாம்பா | - | மல்லாகிய சிரேஷ்டி |
| 20. | விசக்ஷணாங்கி | - | ரக்ஷாவ்ய சிரேஷ்டி |
| 21. | சந்திரரேகா | - | ஶ்ரீங்கதாம சிரேஷ்டி |
| 22. | ஜானவி | - | ஜமதக்னி குப்தா |
| 23. | கலாவதி | - | சந்திராக்ய சிரேஷ்டி |
| 24. | நீலாம்பா | - | நந்தாக்ய சிரேஷ்டி |
| 25. | பல்லவபாணி | - | வல்லப சிரேஷ்டி |
| 26. | அனுமிதா | - | அனந்த சிரேஷ்டி |
| 27. | போதமாம்பா | - | போகாக்ய சிரேஷ்டி |
| 28. | விமல | - | கபிலாச்சார்யலு |
| 29. | அபிநவாம்பா | - | அமல சிரேஷ்டி |
| 30. | தாராவளி | - | வாமனாச்சார்யலு |
| 31. | கனகாங்கி | - | குமுதாக்கிய சிரேஷ்டி |
| 32. | இந்துமுகி | - | விதாகிய சிரேஷ்டி |
| 33. | கமலாவதி | - | கணசத்வ சிரேஷ்டி |
| 34. | சஞ்சலாக்ஷமி | - | பவனாகிய சிரேஷ்டி |
| 35. | பிரமராமணி | - | தந்துனாமார்யுடு |
| 36. | மஞ்சுவாணி | - | சுந்தார்கிய சிரேஷ்டி |
| 37. | ஆர்யமாம்பா | - | மல்லாகிய சிரேஷ்டி |
| 38. | குந்தரதனா | - | கோவிந்த குப்தா |
| 39. | அப்ஜாமுகி | - | ஜாமதக்னி சிரேஷ்டி |
| 40. | கமலாக்ஷி | - | சமதாக்கிய சிரேஷ்டி |
| 41. | தாரணிதேவி | - | குமார சிரேஷ்டி |
| 42. | ஹல்லகாம்பா | - | பார்திவாச்சார்யலு |
| 43. | தனலட்சுமி | - | தனதகுப்தா |
| 44. | லோலாம்பா | - | லோகாவ்யவ்ய சிரேஷ்டி |

| | | | |
|---|---|---|---|
| 45. | கமலாவதி | - | கௌராக்ய சிரேஷ்டி |
| 46. | சௌதாமினி | - | பம்பராச்சார்யலு |
| 47. | சந்திரகலா | - | சந்திரமௌலி சிரேஷ்டி |
| 48. | தனுமத்யா | - | த்ருதசத்யா சிரேஷ்டி |
| 49. | சுதர்சினி | - | சௌதாகிய சிரேஷ்டி |
| 50. | சுபோதினி | - | சிம்மசேனாசார்யுலு |
| 51. | மோகினி | - | பவித்ரபாணி சிரேஷ்டி |
| 52. | குஸுமாம்பா | - | குஸும சிரேஷ்டி |
| 53. | பாலாமணி | - | ஜனார்தன சிரேஷ்டி |
| 54. | தந்தவதி | - | அமிர்தாகிய சிரேஷ்டி |
| 55. | சமசீலா | - | சமலாகிய சிரேஷ்டி |
| 56. | சித்ரரேகா | - | குசலாவ்யா சிரேஷ்டி |
| 57. | பாமாமணி | - | பாஸ்கராச்சார்யலு |
| 58. | மணிமஞ்சரி | - | ஆதித்ய குப்தா |
| 59. | தனவதி | - | தர்மாக்ய சிரேஷ்டி |
| 60. | ஷ்யாமலாம்பா | - | கிருஷ்ண சிரேஷ்டி |
| 61. | சரஸ்வதி | - | பரசிவ சிரேஷ்டி |
| 62. | காளிவதம்ச | - | பாலாக சிரேஷ்டி |
| 63. | ஹேமரேகா | - | ஸ்வர்ணரத சிரேஷ்டி |
| 64. | மணிஷலாக | - | கந்தர்ப்ப சிரேஷ்டி |
| 65. | மேதாம்பா | - | மார்க்கண்டேய சிரேஷ்டி |
| 66. | ப்ரித்விதேவி | - | ப்ருதுநாம சிரேஷ்டி |
| 67. | தனதாம்பா | - | முலார்யுலு |
| 68. | ப்ரோலாஸினி | - | புண்யராசி குப்தா |
| 69. | பிம்பாதரி | - | பீணபக்ஷார்யுலு |
| 70. | பல்லவாம்பா | - | போகாக்ய சிரேஷ்டி |
| 71. | ஹேமாங்கி | - | ம்ருத்சதுவஜார்யுலு |
| 72. | தேவாம்பா | - | போகாக்ய சிரேஷ்டி |
| 73. | இபயானா | - | நாகாவ்ய சிரேஷ்டி |
| 74. | பூமாம்பா | - | ப்ரமார்யுலு |
| 75. | விதுராம்பா | - | மாதாவார்யுலு |
| 76. | ஸோமப்ரபா | - | சிம்மத்வஜாய சிரேஷ்டி |
| 77. | கம்புகண்டி | - | கபிலார்யுலு |
| 78. | வசந்திகா | - | அர்தநாரீச சிரேஷ்டி |
| 79. | பிபூலாம்பா | - | நாகத்வஜாய சிரேஷ்டி |
| 80. | மஞ்சுவாணி | - | குணபூஞ்ச குப்தா |

81. நீலவேணி - பானு குப்தா
82. கிருஷ்ணாம்பா - நாகவ்யாய சிரேஷ்டி
83. புஷ்பதாமா - விதாக்ய குப்தா
84. பிரபாவதி - பத்மநாப சிரேஷ்டி
85. நவநீதாங்கி - விண்ணாகிய சிரேஷ்டி
86. விண்ணமாம்பா - விஸ்வநாத சிரேஷ்டி
87. மேதாம்பா - வீரபாத்ராருயுலு
88. கங்காபவானி - வித்யாதர சிரேஷ்டி
89. சித்ராங்கி - விண்ணவரேண்ய சிரேஷ்டி
90. சுந்தரி - ஜீமுத சிரேஷ்டி
91. ராஜமுகி - ராஜேஸ்வர சிரேஷ்டி
92. உத்ருளாக்ஷி - பூண்டிதார்யுலு
93. பத்மகந்தி - பாலபானு சிரேஷ்டி
94. சத்யவதி - சத்யசந்த சிரேஷ்டி
95. சந்திராம்பா - ஜலதாக்ய சிரேஷ்டி
96. பாவனிதேவி - சந்திரபான சிரேஷ்டி
97. பத்மாக்ஷி - மேகசேன குப்தா
98. சபலாக்ஷி - சிம்மமுக சிரேஷ்டி
99. மணிமாலா - கனமுகார்யுலு
100. தாவணி - நிர்ஜலசேன குப்தா
101. லீலாவதி - ஜனார்தன குப்தா
102. குமுதவல்லி - சுதர்ஷன சிரேஷ்டி

இந்த விஷயங்களைக் கூறிய பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் தியானத்தில் ஆழ்ந்தார். எங்களையும் தியானத்தில் இருக்க சொன்னார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 30

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மகா சமஸ்தானம் ஸ்தாபிக்கப்படும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதரே அறிவித்தல்

### வாசவியின் அக்னிப்ரவேசத்தின் காரணம்

*ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தியானத்தில் இருந்து வெளிவந்தார். ஸ்ரீ தர்ம குப்தர் அவரிடம்,* **"மஹாபிரபு! உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும்! ஏன் வாசவியின் உருவத்தில் இருந்த ஆர்யமஹாதேவி 102 கோத்திர தம்பதிகளுடன் அக்னிகுண்டத்தில் இறங்க வேண்டும்? அவளுடைய விருப்பத்தின் மூலம் விமலாதித்யனாகிய விஷ்ணுவர்தனனுடைய தலையை ஆயிரம் துண்டுகளாக்கி இருக்கலாமே"** *என்று கேட்டார். அவருடைய தாமரை முகத்தில் புன்னகையுடன் ஸ்ரீ ஸ்ரீபாதர், "என் செல்வமே, மஹாலக்ஷ்மி கோதா தேவியாக வந்தபோது ஸ்ரீ ரங்கநாதனுக்கு அன்பு பாசத்துடன் சேவைகள் புரிந்து அவளுடைய இறைவனுடன் ஐக்கியம் ஆனாள்.*

### அக்னி வித்யாவின் சிறப்பு

*குஸும சிரேஷ்டி முந்தைய ஜென்மத்தில் சமாதி என்ற வைசிய ரிஷியாக பிறந்திருந்தார். ஆர்யமஹாதேவி தன்னுடைய முந்தைய பிறவியில் கொடுத்த வரத்தை நிறைவேற்ற ஸ்ரீ வாசவி கன்யகாவாக பிறந்தாள். அக்னி வித்யா மிகவும் கடுமையான வித்யா. ஒரு மனிதன் தன்னுடைய தெய்வீக ஒளியைத் தூண்டி, தன் 72,000 நாடிகள் மற்றும் துணை நாடிகளைப் புனிதமாக்கி, மாற்றம் அடையச் செய்து தன்னுள் மெதுவாக சக்தியை வெளிப்படுத்தி ஆதிசக்தியுடன் ஐக்கியமாவார். பின்னர் அவர் எப்போதும் பரமாத்மாவுடனேயே இருக்கும் ஆதிசக்தியுடன் சாயுஜ்ய நிலைக்குச் செல்வார். இதுதான் அக்னி வித்யா. இது மிகவும் கடினமான வித்யா.*

*உயிரினங்களுக்கு அறுபத்தி நான்கு நிலைகளில் சைதன்யம் இருக்கும். நாத சம்பிரதாயத்தில் உள்ள மக்கள் அறுபத்தி நான்கு ஷாபர் மந்திரங்களை செயல்படுத்தி அறுபத்தி நான்கு சைதன்ய நிலைகளில் ஒன்றரக் கலந்து உயிரினங்களை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வர். நாத மக்களின் ஆதிகுரு தத்தாத்திரேயர்தான். இப்போது உங்கள் கண் முன் இருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உண்மையில் பழைய காலத்து தத்தர்தான்!*

*சதுரங்க பலகையில் மொத்தம் 64 கட்டங்கள் உண்டு. மஹாவிஷ்ணு மஹாலக்ஷ்மியுடன் பொழுதுபோக்காக சதுரங்கம் விளையாடுவதில் ஒரு உள்ளர்த்தம் இருக்கிறது. அவர் அறுபத்து நான்கு சைதன்ய நிலைகளில் இருக்கும் பல்வேறு உயிரினங்களின் விரிவாக்க செயல்முறை மற்றும் பரிணாம வளர்ச்சிகளைக் கவனித்து*

அவற்றிற்கு சாட்சியாகி அவர்களின் மாற்றங்களுக்குத் தேவையான அருளை வழங்குவதோடு தன் தெய்வீகப் பொழுதுபோக்கை அனுபவிக்கிறார்.

## ஒரு மனிதன் தெய்வீக ஆத்மா ஆகத் தேவையான தகுதிகள்

ஒவ்வொரு மனிதனுடைய சைதன்ய நிலையைப் பொருத்துதான் மாற்றங்களின் விகிதம் நிர்ணயிக்கப்படும். ஒரு மனிதன் தெய்வீக ஆத்மாவாக உருமாற வேண்டும் என்பது பிரபஞ்ச மனதின் மீற முடியாத சட்டம். ஒவ்வொரு மனிதனின் முழு நிறைவான நிலைக்கு ஏற்றாற் போல் அவன் செயல்படுத்தும் யோக முறைகள், மந்திரங்கள், யக்ஞங்கள் மற்றும் மற்ற சடங்கு முறைகள் மற்றும் பரோபகார செயல்களைப் பொறுத்து ஆன்மாவின் ஒளி ஒளியூட்டப்படும். அந்த பிரகாசத்தைப் பொருத்துதான் நாடிகள் தூய்மையாக்கப்படும். அவர்களின் தூய்மை நிலையைப் பொருத்துதான் அவர்களுக்கு உடல் ரீதியான, மன ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான சக்திகள் கிடைக்கும். அந்த சக்திகள் அல்லது திறன் அதிகரிக்கும் போது அவர்கள் செய்யும் நற்காரியங்களைப் பொறுத்துதான் தெய்வீக அருள் இருக்கும்.

மனிதனிடத்தில் சரஸ்வதி, லக்ஷ்மி மற்றும் துர்க்கையின் ஆற்றல் மிக்க சக்திகள், விதை உருவத்தில் இருக்கும். மேலும் அவை வளர்வதற்கான சரியான சூழ்நிலைகள் ஏற்படும் போது அம்பிகையின் அருள் பொங்கி வழிந்து வெளிப்படும்.

ஆர்ய மஹா தேவி ஸ்ரீ வாசவியாக பிறந்த போது 102 கோத்திரங்களைச் சேர்ந்த தம்பதிக்கு மட்டும்தான் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் அம்பிகையும் அவர்களுடன் அக்னியில் நுழைந்தாள், அந்த தம்பதிகள் தேவர்களுக்கு இணையான நிலையில் உள்ள ஒளியாக உருமாறினார்கள். அந்த கோத்திரங்களை சேர்ந்த மக்களுடைய வேண்டுதல்களின் சக்தியினால் அவர்கள் ஈர்க்கப்பட்டு தங்கள் ஆசீர்வாதத்தை அளிக்கிறார்கள்.

இந்த ஆசீர்வாதங்களினால் அந்த கோத்திரங்களைச் சேர்ந்த மக்கள் இந்த உலகத்தில் மட்டுமல்லாமல் மற்ற உலகங்களிலும் மிகுதியான சந்தோஷம் பெறுகிறார்கள். அதனால்தான் ஆர்யவைசியர்கள் அக்னியோகத்தின் சிறப்பை கவனமாக கவனித்து, தர்மம் மற்றும் கர்ம உருவம் வாயிலாக தூண்டப்படும் அக்னியில் எச்சரிக்கையோடு இருந்துகொண்டு அவர்களிடம் உள்ள அக்னியை எரியூட்ட வேண்டும். இவ்வாறு அக்னி யோகத்தின் பலன்களை அவர்களின் அடுத்த தலைமுறைகளுக்குப் பரிமாற்றம் செய்ய வேண்டும். ஒரு குடும்பத்தில் தூண்டப்பட்ட தர்மம் மற்றும் கர்ம அக்னி ஏழு தலைமுறைகளுக்கு பண்பை வெளிப்படுத்தும். ஏழாவது தலைமுறையில் கூட யாரவது அக்னியை தர்மம் மற்றும் கர்மாவின் உருவத்தில் தூண்டினால் அக்னி புத்துணர்ச்சி பெரும். அந்த அக்னி எரிந்து கொண்டிருக்கும் வரை அந்த குடும்பங்களில்,அவர்கள் வீடுகளில் எட்டு வகையான செல்வங்கள் மற்றும் சுகங்கள் நிறைந்திருக்கும்.

புறநிலையில் வெளிப்படுத்தாத விஷயங்கள் கூட அக்னியின் மூலம் வெளிப்படும். பூர்வ ஜென்மங்களில் செய்த பாவங்களினால் மக்கள் பல வகையான

கஷ்டங்கள், இழப்புகள் மற்றும் உலகாந்தர பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். இந்த பாவங்களின் பலன்களை மந்திரங்கள், தந்திரங்கள், யோகா, தானங்கள் மற்றும் நீதியான செயல்கள் மூலம் அழித்து சந்தோஷத்தைப் பெற முடியும். வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களைக் கூட வெளிப்படுத்தாத உருவமாக அக்னி மாற்றிவிடும். இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் உயிரினங்களின் பாவம் வெளிப்படுத்தாத உருவத்திற்குள் சென்று விடும். அவை அடுத்த பிறவிகளில் வெளிப்படுத்தப்படும். ஒருவர் மிகப்பெரிய பாவம் அல்லது மிகப்பெரிய புண்ணியம் செய்தால் அதன் முக்கியமான பகுதியின் பலன்கள் இந்த பிறவியில்தான் அனுபவிக்கப்படும்.

ஆகவே, இந்த பிறவியில் மனிதர்கள் செய்யும் நற்செயல்களின் நற்பலன்களுக்கு தொடர்புடைய புண்ணிய அதிர்வலைகள் வெளிப்படாத உருவத்தில் அக்னி தேவரிடம் எடுத்து செல்லப்படும். அவை அடுத்த பிறவியில் வெளிப்படுத்தப்படும். ஆர்யமஹாதேவிக்கு இணங்க பலப்படுத்தப்பட்ட 102 கோத்திர மக்கள் மற்றும் ஜென்யூ தேவர்கள் அக்னியோகம் மேற்கொண்டனர். அவர்கள்தான் அவர்களுடைய ரிஷிகள் வரிசையின் விதையை பாதுகாப்பது மட்டுமல்லாமல் அருள்பாலிக்கும் நேர்மறையான அதிர்வலைகளைப் பத்திரப் படுத்துகின்றனர். அவற்றை அந்த கோத்திரங்களில் வெளிப்படுத்தும் நிலையில் அடைய, ஒருவர் புண்ணிய காரியங்கள் செய்ய வேண்டும்.

ஒருவர் புண்ணிய காரியங்கள் செய்வதால் அந்த புண்ணியங்களினால் கிடைக்கும் புண்ணியங்கள் மாற்றுமல்லாது விதை உருவத்தில் இருக்கும் நேர்மறையான அதிர்வலைகளையும் பெற முடியும். அதன் பலனாக சிறிய புண்ணியங்களால் கூட பெரிய பலன்கள் பெற முடியும். இவை அனைத்தும் ஸ்ரீ வாசவியின் அருள் மழையினாலும் அந்த தம்பதிகளின் அக்னிப்ரவேசத்தின் பலனினாலும்தான்.


என் செல்வங்களே, நான் கூறியது போல ஆரிய வைசியர் குடும்பத்தில் பிறப்பது ஒரு பெரிய வாய்ப்பு என நினைப்பதில் எந்த தவறும் இல்லை. அதில் ஒரு சிறப்பு நிபந்தனை உள்ளது. ஒருவர் ஆரிய வைசியராக பிறந்துவிட்டு புண்ணிய காரியங்கள் செய்யாமல், பாவ செயல்கள் செய்தால் பாவச் செயல்களின் விளைவுகள்தான் அதிகமாக இருக்கும். அக்னியில் இறங்கிய தம்பதிகளின் சாபம் மற்றும் ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரியின் சாபம் ஆகியவை சேர்ந்து கொள்ளும். ஒரு சாதாரண மனிதன் செய்யும் பாவத்தின் பலன்களை காட்டிலும் ஒரு ஆரிய வைசியர் செய்யும் பாவத்தின் பலன் ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கும். ஆகவே 102 கோத்திரங்களில் பிறப்பது அதிர்ஷ்டமானதாக இருந்தாலும் மிகவும் ஆபத்தானதும் கூட என்பதை புரிந்துகொள். விழிப்புடன் இரு; ஸ்ரீ வாசவி தேவி என்னுடைய தெய்வீக சகோதரி. நாங்கள் இருவரும் அன்னை அனுசுயாவின் அக்னி யோகத்தினால் பிறந்த இரட்டையர்கள் என்பதையும் அடையாளம் கண்டுகொள். நாங்கள் கோபமடைந்தால் எல்லா பேரழிவுகளும் நடைபெறும். நாங்கள் திருப்தி அடைந்தால்

எல்லா அதிர்ஷ்டமான விஷயங்களும் நடைபெறும்" என்றார்.

நான் மகா குருவிடம், "மகா பிரபு, உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும். ஸ்ரீ வாசவி கன்யகா உங்களை வெங்கடேஸ்வரரின் உருவத்தில் தன் சமஸ்தானத்துக்கு வரச் சொன்னாள். இதன் அர்த்தத்தை கொஞ்சம் விளக்குங்களேன்" என்று கேட்டுக்கொண்டேன்.

அவர், "சங்கர் பட், என்னுடைய பிறந்த இடமான பீதிகாபுரத்தில் என்னுடைய மகா சமஸ்தானம் ஸ்தாபிக்கப்படும் என்பதை தெரிந்துக் கொள்.

நீ சரிதாம்ருதத்தை எழுதிக் கொண்டிருக்கிறாய். அதன் உண்மைத்தன்மை குறித்து சில முட்டாள்கள் கேள்வி எழுப்புவர். அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் எப்படி உண்மையில் ஸ்ரீ பத்மாவதி வெங்கடேஸ்வரர் என்ற கேள்வி எழுப்புவார்கள். அந்த உண்மைக்கு நம்பகத்தன்மை அளிக்கத்தான் ஆரிய மஹாதேவி ஸ்ரீ வாசவி கன்யகாவின் உருவம் எடுத்தாள், நான் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் உருவத்தில் பிருஹத்சிலநகரத்தில் ஸ்தாபிக்கப்படுவேன். இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் வெளிச்சத்திற்கு வருவதற்கு முன் நடைபெறும். இது என்னுடைய தீர்மானம். பல உருவங்கள் இருக்கும் போது ஏன் வெங்கடேஸ்வரரின் உருவம் அங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டும்? அங்கு வெங்கடேஸ்வரரை ஸ்தாபிக்கும் மக்களுக்கு ஏதாவது தெரியுமா? இது என்னுடைய லீலை. நான் அங்கு வெங்கடேஸ்வரராக நிறுவப்படுவேன். சமஸ்தானத்தை நிறுவும் மக்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சமஸ்தானம் எப்படி உருவாகும் மற்றும் சரிதாம்ருதம் எப்படி வெளிச்சத்துக்கு வரும் என்பதெல்லாம் தெரியாது. அப்பாவி மற்றும் முட்டாள்தனமான மக்களின் ஆதரவினால் என்னுடைய வேலைகளை நான் முடித்துக்கொள்வேன்; இது என்னுடைய தெய்வீக இன்ப உணர்வில் ஒரு பகுதி. என்னுடைய சமஸ்தானம் ஆர்யவைசியர்களால் நிறுவப்படும். ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் குடும்ப வாரிசுகளின் மூலம் எனக்கு பீதிகாபுரத்தில் ஸ்ரீ வாசவி கன்யகாவின் கோவில் கட்டப்பட்டு இருக்கும். இவை அனைத்தும் தெளிவாக வினோதமாகத் தெரிந்தாலும் என்னுடைய பக்தர்களுக்கு நானும் ஸ்ரீ வாசவி கன்யகாவும் உண்மையில் சகோதரன்-சகோதரி என்பது தெரியும்.



என் செல்வமே, கலியுகத்தின் அதாவது கலி மஹா யுகத்தின் முடிவில் கலியின் அந்தர்தாஸ (இடைநிலை காலம்) காலம் முடிவடைந்து அதன் பிறகு வரும் நிலைமாற்று காலமான யுகசந்தி (நிலைமாற்ற காலம்) நடைபெறும் போது நான் என்னுடைய உருவத்தில் திருமலைக்கு வருவேன். பின்னர் நான் சில புனிதமான இடங்களுக்கு செல்வேன். பீதிகாபுரத்தில் உள்ள என்னுடைய மஹாஸமஸ்தானத்துக்கு வருவேன். நான் ஈலா நதியில் நீராடுவேன். நான் குக்குடேஸ்வரரை சந்திப்பேன். என்னோடு மஹாஸமஸ்தானத்துக்கு வரும் மகாசித்தர்கள் மற்றும் மகா யோகிகள் மிகவும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

சியாமளாம்பபுரம் (சாமர்லகோட்டா) மற்றும் வ்யாசபுர அக்ராஹாத்துடன் சேர்ந்து பீதிகாபுரம் பெரிய நகரமாக மாறும். என்னுடைய மகா சமஸ்தானத்துக்கு மக்கள் எறும்புக் கூட்டம் போல வருவார்கள். ஸ்ரீ வாசவி அவதாரத்தின் போது அவளுடன் இருந்த விருபாக்ஷரை மீண்டும் பிறக்க நான் ஆணையிட்டுள்ளேன். நான் அவரை இந்தியாவின் அரசராக்குவேன். அவர் என்னை பீதிகாபுரத்தில் தரிசித்த பின்னர் அவருக்கு அவருடைய பூர்வ ஜென்மம் பற்றிய ஞானம் கிடைக்கும்.

என் செல்வமே, கலியுகத்தில் பல விசித்திரமான விஷயங்கள் நடைபெறும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மகா சமஸ்தானத்துக்கு வசிஷ்டரின் கோத்திரத்தைச் சேர்ந்த சிறந்த சாதகர் அர்ச்சகராக நியமிக்கப்படுவார். அவர் மூலம் நான் புரியும் தெய்வீக லீலைகளுக்கு எல்லையே இருக்காது. ஒவ்வொரு நொடியும் தெய்வீக லீலைகள் மற்றும் தெய்வீக பேரானந்தம் நிறைந்தவையாக இருக்கும். நான் குபேரனிடம் பெற்ற கடனை செலுத்த வேண்டும். குபேரனின் குடும்பத்தில் ஆர்யமஹாதேவிதான் வாசவி கன்யகாவாக பிறந்துள்ளாள். அவளை நாகரேஸ்வரருக்கு திருமணம் முடிக்க வேண்டும். திருமணத்திற்கு தேவையான பணத்தை மீண்டும் நான் குபேரனிடம் இருந்து பெற விரும்பவில்லை. ஆகவே குபேரனுடைய குடும்பத்தினர்கள் மற்றும் லக்ஷ்மியின் மகன்களிடம் என் லீலைகளை காட்டி அவர்களுடைய கஷ்டங்களை நீக்கி பணத்தை அவர்களிடமிருந்து வரியாக எடுத்து கொள்வேன். குபேரனுக்கு செல்வங்கள் அளித்தது நான்தான். அப்படியென்றால் குபேரனுக்கு முஷ்டி (பிக்ஷை) அளித்ததும் நான்தான். இப்போது நான் மிகுந்த கடனில் மூழ்கியிருக்கிறேன். ஆகவே நான் இப்போது குபேரனிடம் இருந்து கடன் பெறுகிறேன். முஷ்டிக்குள் முஷ்டி வீரமுஷ்டி என்று அழைக்கப்படும். பெருமிதம் மற்றும் பகட்டான சொல்லுடன் கேட்கப்படும் முஷ்டி வீரமுஷ்டி என்று அழைக்கப்படும்" என்றார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகச் சிரிப்பை காண ஆயிரம் ஜென்மங்கள் கூட போதாது.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 31

## தசமஹாவித்யா பற்றிய விளக்கம்

நாங்கள் தினமும் மாலை வேளையில் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு கிருஷ்ணா நதியின் அக்கரைக்கு செல்வோம். காலை வேளையில் மீண்டும் இக்கரைக்கு வருவோம். ஸ்ரீ மஹாகுருவின் பிரசாதமாக நாங்கள் புது யோக விஷயங்கள் மற்றும் பல தெய்வீக ரகசியங்களையும் கற்றுக் கொண்டிருந்தோம். ஸ்ரீ தேவியை தசமஹாவித்யா முறைகளின் மூலம் வழிபடலாம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஸ்ரீசரணரை தசமஹாவித்யாவின் குணங்களை பற்றி கூறுமாறு மன்றாடி கேட்டுக்கொண்டேன். ஸ்ரீ குருசர்வபௌமர் பின்வரும் முறையில் விவரித்தார்.

"அன்புக் குழந்தைகளே, ஸ்ரீவித்யா வழிபாடு மிகவும் உயர்ந்த ஒன்று. பழைய காலத்தில் அகத்தியர் ஹயக்ரீவரின் (ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குதிரை முக அவதாரம்) அருளால் ஸ்ரீவித்யாவை பெற்றார். அதை அவர் தன் மனைவி லோபமுத்திரை தேவிக்கு கற்பித்தார். ஸ்ரீ லோபமுத்திரை தேவி ஸ்ரீவித்யாவில் மறைந்துள்ள அர்த்தங்களை அகத்தியருக்கு விளக்கினாள். லோபமுத்திரை தேவி ஒரு வழியில் அகத்தியருக்கு குருவானாள். இன்னொரு வழியில் அகத்தியர் லோபமுத்திரைக்கு குருவானார். இது மிகவும் அற்புதமானது.

### லோபமுத்திரை மற்றும் அகத்தியரின் வரலாறு

அகத்தியரின் தவப்பயனால் விதர்ப்ப மன்னனுக்கு மகள் பிறந்தாள். அவள் லோபமுத்திரை என பெயரிடப்பட்டாள். அகத்தியருக்கு அவளை மணந்துகொள்ள விருப்பம். விதர்ப்ப மன்னன் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டான். தன் மகளைத் தர மறுத்தால் அந்த வயதான துறவி தனக்கு ஏதாவது சாபம் அளித்து விடுவாரோ என்ற பயம் அவனுக்கு இருந்தது. வயது வித்தியாசம் அதிகம் உள்ள இந்தத் திருமணத்தை நடத்த அவனுக்கு மிகவும் தயக்கமாக இருந்தது.

மன்னன் தன் மகளிடம் ஆலோசனை செய்த போது, தான் அகத்தியருக்காகவே பிறந்துள்ளதாகவும் அவரைத்தான் மணமுடிப்பேன் என்றும் கூறினாள். திருமணத்திற்குப் பின் அவருடைய அரச மகள் மரப்பட்டையில் செய்த புடவையை உடுத்திக் கொண்டு தவம் புரியும் இடங்களுக்கு சென்று விட்டாள். அகத்தியர் லோபமுத்திரைக்கு ஸ்ரீவித்யாவை பற்றி கற்பித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு அவர் அவளுடன் உடலுறவு செய்ய விரும்பினார். அவள் அகத்தியரிடம், **“லலிதா தேவியை வழிபட்ட பின்னர் நான் லலிதாவின் உருவமாக மாறி விட்டேன். நீங்கள் சிவனின் உருவமாக மாறாத வரை நான் உங்களுடன் உறவு கொள்ள முடியாது”** என்றாள். அகத்தியர் கடுந்தவம் புரிந்து சிவனின் ஸ்வரூபத்தை அடைந்து மீண்டும் அவளிடம் உறவு கொள்ளக் கேட்டார்.

அதற்கு அவள், **“நான் அரச குடும்பத்தில் பிறந்தவள். என்னிடம் க்ஷத்ரிய பெண்களுக்குத் தேவையான பட்டுத்துணி, ஆபரணங்கள் மற்றும் அனைத்து வகையான செல்வங்கள் இல்லாத போது உங்களுடன் உறவு கொள்வதற்கு சாத்தியம் இல்லை. ஆகவே நான் கூறிய பொருட்செல்வங்கள் அனைத்தும் கிடைக்காவிட்டால் என்னுடன் உறவு கொண்டு தாம்பத்தியத்தை அனுபவிப்பது சரியாக இருக்காது. அதுமட்டுமல்ல. நீங்களும் பட்டுத்துணி உடுத்தி விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து கொண்டு வாசனை திரவியங்களை பூசிக்கொள்ள வேண்டும். பின்னர்தான் என்னுடன் இன்பம் அனுபவிப்பது முறையாக இருக்கும்”** என்றாள். அதிகமான பணம் சம்பாதிக்க அகத்தியர் இல்வலன் என்ற ஒரு அரக்கனிடம் சென்று ஒரு வித்தையின் மூலம் அவன் சகோதரன் வாதாபியை ஜீரணித்தார். அந்த அரக்கனிடம் இருந்து மிகுந்த செல்வத்தை பெற்றார். அகத்தியர் தன் மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றிய பின்னர் நற் குழந்தைகளை பெற்றார்.

இல்வலன் மற்றும் வாதாபி இருவரும் சகோதரர்கள். வாதாபி ஆடு உருவம் எடுப்பான். இல்வலன் அந்த ஆட்டை கொன்று விருந்தினர்களுக்கு உணவாகப் படைப்பான்.

விருந்தினர்கள் உண்ட பின்னர், இல்வலன் வாதாபியை வெளியே வருமாறு அழைப்பான். வாதாபி விருந்தாளிகளின் வயிற்றை கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பின்னர் இரண்டு அரக்கர்களும் இறந்தவர்களை உணவாக உண்பார்கள். அகத்தியர் ஆட்டின் மாமிசத்தை உண்டபின்னர் இல்வலன் வாதாபியை வெளியே வருமாறு அழைத்தபோதும், **“ஜீரணம், ஜீரணம், வாதாபி ஜீரணம்”** என்று அகத்தியர் கூறினார். அகத்தியர் விருப்பப்படியே வாதாபி ஜீரணம் ஆனான். இல்வலன் அகத்தியருக்கு சத்தியம் செய்தது போலவே பெருந்தொகை கொண்ட பணத்தை அவரிடம் அளித்தான். வாதாபி மற்றும் இல்வலனின் அச்சுறுத்தலில் இருந்து மக்கள் மீண்டனர்.

அகத்தியர் ஒரு முறை ஏழு கடல்களில் இருந்தும் நீரை தன் கமண்டலத்திற்குள் ஈர்த்து அதை குடித்து விட்டார். அதே அகத்திய முனிவர்தான் விந்திய மலையின் அகந்தையை அடக்கினார். அவர் சிறந்த சித்தர் உருவத்தில் தென்னிந்தியாவில் இன்னும் இருக்கிறார். அவர்தான் தமிழ் மொழியை கண்டுபிடித்தவர். அவர் பல இடங்களில் கோயில்கள் கட்டியுள்ளார். நான் கல்கி அவதாரம் எடுத்து வரும்போது அகத்தியர் பரசுராமரைப் போல அப்போது குருவாக இருப்பார்.

## தேவியின் தசமஹாவித்யாக்கள்

காளி தசமஹாவித்யாவின் முதல் உருவம். மஹாகாளி அனைத்துவிதமான கலை மற்றும் அறிவியலின் தொடக்கம். அவளுடைய வித்யாக்கள் மகாவித்யாக்கள்

என்று அழைக்கப்படுகிறது. ஒரு சமயம் மதங்க முனிவரின் ஆசிரமத்தில் இருந்த மகா மாயாவிடம் அனைத்து தேவர்களும் பிரார்த்தனை செய்து கொண்டனர். அம்பிகை மதங்கப் பெண்ணின் உருவத்தில் காட்சி அளித்தாள். அவள் இருளை போன்ற மிகுந்த கருமையான நிறத்துடன் இருந்ததால் காளி என்ற பெயர் பெற்றாள். அவள் சும்பன் மற்றும் நிசும்பன் என்ற அசுரர்களைக் கொன்றாள். காளிக்கு கருநீல நிறமும் இருப்பதால் அவள் தாரா என்ற பெயருடனும் கருதப்படுகிறாள். யோக சாதனையின் பலன்களைப் பெற சாதாரணமாக பல வருடங்கள் ஆகும் ஆனால் மக்கள் காளியை வழிபடுவதன் மூலம் சில நாட்கள் அல்லது மாதங்களில் அவற்றை பெருகிறார்கள். எனினும்,ஆன்மீக பயிற்சியின் போது காளியின் சக்தி யோகியின் உடலில் ஈர்க்கப்பட்டு அவர் எரியும் நெருப்பு போன்ற தாங்க முடியாத வேதனையை அனுபவிப்பார்.

தாரா தசமஹாவித்யாவின் இரண்டாவது உருவம். அவள் விமோசனம் மற்றும் மோக்ஷத்தை எப்போதும் அளிப்பாள். ஆகவே அவள் தாரா என்ற பெயருடன் புகழடைந்தாள். அவள் நீல சரஸ்வதி என்ற பெயருடன் கூட அழைக்கப்பட்டாள். அவள் தன் பக்தர்களைக் கொடூரமான விபத்துகளில் இருந்து காப்பாற்றுகிறாள். ஆகவே யோகிகள் அவளை உக்ரதாரா வடிவத்தில் வணங்குகிறார்கள். வசிஷ்ட முனிவர் தாராவின் மகா பக்தர். சித்திரை மாதம் சுத்த தசமியின் இரவு தாரா ராத்திரி என்று அழைக்கப்படுகிறது.

தசமஹாவித்யாவின் மூன்றாவது உருவம் சின்னமஸ்தா. இது மிகவும் மறைவான ஒன்று. ஒருமுறை தேவி தன் தோழிகள் ஜெயா மற்றும் விஜயாவுடன் மந்தாகினி நதிக்கு நீராட சென்றாள். நீராடிய பின்னர் பசியின் வேதனையால் பீடிக்கப்பட்டு கருமையான நிறத்தில் மாறினாள். அவள் தோழிகள் அனைவரும் உணவு கேட்டனர். கருணை கொண்ட தேவி தன் தோழிகளின் பசியைத் தணிக்க தன் தலையை வாளால் துண்டித்தாள், வெட்டுப்பட்ட தலை அவள் இடக்கையில் வந்து விழுந்தது. அவளுடைய முண்டத்தின் மூன்று இடத்தில் இருந்து இரத்தம் பிரவாகம் எடுத்தது. அவள் தோழிகள் இரண்டு துளையில் இருந்து வரும் இரத்தத்தையும், மூன்றாவது துளையில் இருந்து வரும் இரத்தத்தை தேவியே குடித்தாள். அவள் சின்னமஸ்தா என்ற பெயருடன் புகழடைந்தாள். ஹிரண்யகசிபு மற்றும் சிலர் சின்னமஸ்தா தேவியின் பக்தர்கள்.

தசமஹாவித்யாவின் நான்காவது உருவம் ஷோடசி மகேஸ்வரி. அவள் உள்ளம் கருணை நிறைந்தது. அவளை அடைக்கலம் அடையும் பக்தர்களுக்கு ஞானம் எளிதில் கிடைக்கும். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து மந்திரங்கள் மற்றும் தந்திரங்கள் அந்த மஹாவித்யா சக்தியைத்தான் வணங்குகிறது. வேதங்களால் கூட அவளை விவரிக்க முடியாது. இந்த மஹாசக்தி மகிழ்ச்சி அடைந்தால் பக்தர்களின் அனைத்து விருப்பங்களையும் பூர்த்தி செய்வாள். இந்த தேவியை வணங்கினால் செல்வம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டும் கிடைக்கும்.

புவனேஸ்வரி தேவி தசமஹாவித்யாவின் ஐந்தாவது உருவம். எல்லா எழுபது கோடி மந்திரங்களும் அவளை எப்போதும் வணங்குகின்றன. காளி தத்துவத்தில்

இருந்து கமல தத்துவம் வரை மொத்தம் பத்து நிலைகள் இருக்கின்றன. வெளிப்பாடு இல்லாத புவனேஸ்வரி தேவி அவற்றில் இருந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டு பிரம்மாண்ட வடிவத்தை எடுத்துக் கொள்கிறாள்.

பிரளயத்தின் போது அவளுடைய காளி உருவம் மெதுவாக கமலத்தில் இருந்து அதாவது, வெளிப்படையாக இருக்கும் பிரபஞ்சத்தில் இருந்து விதை உருவத்திற்கு உருமாறும். ஆகவே அவள் காலத்தின் ஜென்மத்தாத்ரி (நேரத்தை பெற்றெடுப்பவள்) என்று அழைக்கப்படுவாள்.

திரிபுரபைரவி தசமஹாவித்யாவின் ஆறாவது உருவம். காலத்தின் (மகாகாலன்) சிறப்பான நிலையினால் ஏற்படும் சூழ்நிலைகளை தணிக்கும் சக்தி திரிபுரபைரவி என்று அழைக்கப்படும். இந்த திரிபுரபைரவி ஸ்ரீ நரசிம்மரிடமிருந்து பிரிக்க முடியாத சக்தி என்று கூறப்படுகிறது. படைப்பில் எப்போதும் மாறுதல்கள் நடைபெறும். இவற்றிற்கு ஈர்ப்பு மற்றும் விலக்கு ஆற்றல்தான் அடிப்படைக் காரணம். இது ஒரு இடைவிடாத செயல்முறை. இரவு நேரத்தில் திரிபுரபைரவி காலராத்திரி என்று அழைக்கப்படுவாள். பைரவருக்கு கால பைரவர் என்று பெயர். என்னுடைய அடுத்த அவதாரமான ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி அவதாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தனித்துவமான பண்புகளின் கலவையாக இருக்கும். சிறந்த யோகிகளுக்கு அது திரிபுரபைரவி மற்றும் கால பைரவர் அவதாரமாக இருக்கும்.

தூமாவதி தசமஹாவித்யாவின் ஏழாவது அவதாரம். இந்த தூமாவதி வேறு யாரும் அல்ல உக்ரதாராதான். அவளைத் தஞ்சம் அடைந்தால் அனைத்து பேரிடர்களும் அழிந்து எல்லா செல்வங்களும் கிடைக்கும். எல்லாவிதமான சிக்கலான பிரச்சனைகளையும் அவள் அழித்துவிடுவாள் என்று கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் உயிரினங்களின் துயரமான நிலைகளான பசி மற்றும் தாகம், சண்டை மற்றும் ஏழ்மைக்கும் அவள்தான் காரணம். அவளுடைய அருளால் அனைத்து விதமான கஷ்டங்களும் தூரம் சென்று விடும்.

பகளாமுகி தசமஹாவித்யாவின் எட்டாவது உருவம். துரதிர்ஷ்டங்களினால் நாடு மற்றும் சமுதாயத்தில் ஏற்படும் துயரம் அகலவும், உலகத்தில் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகளை அகற்றவும், எதிரிகளை அடக்கவும் இந்த அன்னையை வணங்க வேண்டும். ஸ்ரீ பிரம்மா பகளா தசமஹாவித்யாவின் முதல் மற்றும் முதன்மையான பக்தர். ஸ்ரீ விஷ்ணு மற்றும் பரசுராமரும் (விஷ்ணுவின் 6வது அவதாரம்) பகளாமுகி தேவியின் பக்தர்கள்தான். பல காலங்களுக்கு திருமலையில் உள்ள வெங்கடேஸ்வரரின் சிலை பகளாமுகியாக வணங்கப்பட்டு வந்தது.

மாதங்கி தசமஹாவித்யாவின் ஒன்பதாவது உருவம். ஒரு கிரஹஸ்தனுக்கு சுகமான வாழ்க்கை மற்றும் நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கும் வல்லமை பெற்றவள். அவள் மதங்க முனிவரின் மகள்.

கமலாலயா பத்தாவது தசமஹாவித்யா. அவள் செல்வ செழிப்பின் அடையாளம். அவளை பார்கவர் வணங்கியதால் பார்கவி என அழைக்கப்பட்டாள். அவளுடைய கருணையால் ஒருவர் நில அதிபதித்துவத்தையும் உயர்ந்த புகழையும் பெறலாம். அவள் சிறந்த மிகுதியான பொருள் செல்வத்தின் அடையாளம். அவள் பத்மாவதி

தேவி என்றும் அழைக்கப்படுகிறாள். அவள் திருமலையில் உள்ள வெங்கடேஸ்வர ஸ்வாமியின் துணைவி.

என் அருமை குழந்தைகளே, தசமஹாவித்யாவின் குணங்களை ஒவ்வொரு நாளும் எவ்வளவு கற்பிக்க வேண்டும் மற்றும் யாரால் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து கற்பிக்கிறேன். தசமஹாவித்யாவின் உருவகமான அனகாதேவி மற்றும் அவள் இறைவன் அனகாவை எவர் வணங்குகிறார்களோ, அவர்களின் குழந்தைகளின் அருளான அஷ்டமாசித்திகள் அவர்களுக்கு அருளப்படும். ஒவ்வொரு மாதமும் வரும் பகுலாஷ்டமியின் போது அனகாஷ்டமி மேற்கொண்டால் உங்களுடைய அனைத்து விருப்பங்களும் நிறைவேறும். சங்கர் பட், எவர் ஒருவர் நீ எழுதும் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பாராயணம் செய்தவுடன் வளர்பிறை அல்லது தேய்பிறை அஷ்டமி அன்று அனகாஷ்டமி விரதத்தை கடைபிடித்து, பதினோரு பேருக்கு உணவளித்தாலோ அல்லது தத்த கோவிலுக்கு நன்கொடை அளித்தாலோ, அவர்கள் உடனடியாக பலன் அடைவார்கள்.

## சரிதாம்ருதத்தை பக்தியுடன் பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலாபலன்

ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப சரிதாம்ருதம் வெறும் புத்தகம் என்று எண்ணாதே. அது தனிச்சிறப்பான சைதன்யத்தின் உயிரோட்டமுள்ள ஓடை. அதை பக்தியுடன் பாராயணம் செய்தால் அதன் எழுத்துக்களில் உள்ள வலிமை என் மனதின் சைதன்யத்தில் பாயும். உனக்குத் தெரியாமலேயே என்னுடன் உனக்குத் தொடர்பு இருப்பதால் உன்னுடைய சரியான விருப்பங்கள் என்னுடைய கருணையினால் நிறைவேறும். இந்தப் புத்தகத்தை உங்கள் பூஜையறையில் வைத்திருந்தாலே அது புனிதமான அதிர்வலைகளை ஏற்படுத்தும். துரதிர்ஷ்டம் மற்றும் இருள் நிறைந்த ஆவிகளின் சக்திகள் அகன்று சென்றுவிடும்.

எவரொருவர் தெரிந்தோ தெரியாமலோ ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப சரிதாம்ருதத்தை ஏசினாலோ அல்லது விமர்சனம் செய்தாலோ அவர்கள் பல பிறவிகளில் சேர்த்துவைத்த நல் வினைகள் பறிக்கப்பட்டு விடும். தர்ம தேவதைகள் நற்செயல்களினால் கிடைத்த பலன்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து தகுதியான ஏழை மக்களிடம் விநியோகித்து விடுவார்கள். இந்த வழியில்தான் நீங்கள் ஏழையாகவும், ஏழை பணக்காரனாகவும் மாறுகிறார்கள். இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று நான் சத்திய பரிமாணம் செய்கிறேன். அது அதற்கே தரப் படிநிலையாக இருக்கும். இதை துஷ்பிரயோகம் அல்லது விமர்சனம் செய்வோரிடம் குவிந்துள்ள செல்வங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டு கடைசியில் ஏழையாக ஆகிவிடுவான். வறுமையின் வலி விலக வேண்டும் என்றால் இந்தப் புத்தகத்தை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்ய வேண்டும்.

**வெற்றி! வெற்றி! ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 32

## நவநாதர்களின் கதை மற்றும் விளக்கம்

நான் ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாத கமலங்களை தொட்டுவிட்டு அவரிடம், **“ஸ்வாமி, நவநாதர்கள் என்கிற சிறந்த சித்த யோகிகள் ஸ்ரீ தத்தரின் அம்ச அவதாரங்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஸ்ரீசரணா, கருணைகொண்டு அவர்களைப் பற்றி கூறுங்கள்”** என்று கேட்டுக்கொண்டேன்.

நவநாதர்களுடைய பெயரை கேட்டவுடனேயே வெளியில் உள்ள படைப்புகளின் மீது ஸ்ரீவல்லபரின் கண்களில் இருந்து அமிர்தம் பொங்கும் பார்வை வழிந்தோடுவதைக் கவனித்தேன். ஒரு பசு தன் கன்றின் மீது காட்டும் அன்பின் உள்ளுணர்வுகளை அவருடைய பார்வையில் நான் கண்டேன். அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, “என் அருமை செல்வங்களே, மச்சேந்திரர், கோரக்ஷகர், ஜாலந்தரர், கஹனி, அட்பங்கர், சௌரங்கர், பர்த்தரி, சர்படா, மற்றும் நாகநாதர் (மச்சேந்திரநாத், கோரக்நாத், ஜாலந்தரநாத், கஹனி நாத், அட்பங்கநாத், சௌரங்கநாத், பர்த்தரிநாத், சர்படிநாத் மற்றும் நாகநாத்) ஆகியோர் நவநாதர்கள். அவர்களை நினைத்துக் கொண்டாலே மங்களகரமான பலன்கள் கிடைக்கும். நவநாதர்கள் பெயர்களை நினைவு படுத்திக் கொள்ளும் பக்தர்களுக்கு ஸ்ரீ தத்தரின் அருள் கண்டிப்பாகக் கிடைக்கும்.

கலியுகம் தொடங்குவதற்கு சில வருடங்களுக்கு முன்னர், ஸ்ரீகிருஷ்ணரை சூழ்ந்திருந்த பக்தர்களான உத்தவர் மற்றும் அனைத்து யாதவர்களும் நவநாராயணர்களைப் பற்றி எண்ணினார்கள், அவர்கள்தான் இப்போது நவநாதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ரிஷபப் பேரரசருக்கு மொத்தம் நூறு மகன்கள். அவர்களில் நாராயணரின் அம்சம் கொண்ட ஒன்பது மகன்களே நவநாராயணர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் பெயர்களாவன: 1. கவி 2.ஹரி 3. அந்தரிக்ஷ 4. பிரபுத்தா 5. பிப்பலாயன 6. ஆவிர்ஹோத்ரா 7.திருமிலா 8. சமசா மற்றும் 9. கரபாஜனா ஆகும்.

இவர்கள் அனைவரும் அவதூதர் நிலையில் இருந்த சித்தபுருஷர்கள் (சித்திகளுடன் இருந்த முனிவர்கள்). நான் கிருஷ்ண அவதாரத்தின் போது செய்த சத்தியத்திற்கு இணங்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் என்னுடைய ஆணைப்படி அவர்கள் நவநாதர்களாக இந்த பூமியில் பிறந்தார்கள். கவி மச்சேந்திரநாத் ஆக பிறந்தார். ஹரி மச்சேந்திரநாத்தின் சீடராக கோரக்ஷகா என்ற பெயரில் பிறந்தார். அந்தரிக்ஷர் ஜாலந்தரராகவும் பிரபுத்தா அவரின் சீடராக கானிஃபா என்ற பெயரில் பிறந்தார். பிப்பலாயனர் சர்படாவாக பிறந்தார். அவிர்ஹோத்ரா நாகநாதராகப்

பிறந்தார்.திருமிலா பர்த்தரிநாத் என்ற பெயரிலும் சமசா ரேவநாத் என்ற பெயரிலும் பிறந்தனர். கரபாஜனா கஹனி என்ற பெயரில் பிறந்தார்.

படைப்பின் தொடக்கத்தின் போது சில காரணங்களினால் பிரம்மாவின் விந்து கசிந்து விழுந்தது. பல இடங்களில் விழுந்த அந்த விந்தணுக்களில் இருந்து பல முனிவர்கள் தோன்றியதாக வியாச முனிவர் பவிஷ்ய புராணத்தில் எழுதியிருக்கிறார்.

உபரிச்சர வசு என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு ஊர்வசியின் மீது மோகம். ஒருமுறை அவனுடைய விந்து கசிந்து யமுனை நதியில் விழுந்தது. அதை ஒரு மீன் குடித்துவிட்டது. அந்த மீனிலிருந்து மச்சேந்திரநாத் பிறந்தார். சிவன் தன்னுடைய நெற்றியின் நெருப்பிலிருந்து (நெற்றிக்கண்) மன்மதனை எரித்து சாம்பலாக்கினார். அந்த சாம்பலில் மன்மதனுடைய ஆன்மா சூக்ஷ்ம ரூபத்தில் தங்கியிருந்தது. ப்ருஹதராதா என்கிற அரசன் யாகம் மேற்கொண்ட போது அக்னி குண்டத்தில் இருந்து ஜாலந்தரநாத் வெளியே வந்தார். பிரம்மாவின் விந்து ரேவா அல்லது நர்மதா நதியில் விழுந்த போது ரேவண சித்தர்(ரேவநாத்) பிறந்தார். சில விந்துக்கள் பாம்பின் தலைப் பகுதியில் மீது விழுந்தது. அதை உணவென்று நினைத்து பாம்பு உண்டு விட்டது. அதனால் அது கர்பம் தரித்தது. ஜனமேஜயன் சர்ப்பயாகம் நடத்திக் கொண்டிருந்தார். அஸ்திகா என்ற பெயருடைய முனிவர் ஒரு சிறந்த சர்பத்தை அழிவில் இருந்து காப்பாற்றினார். தாக்ஷகாவின் மகளான பத்மினி என்கிற நாகதேவதையை ஒரு பெரிய அத்தி மரத்தின் பொந்தில் மறைத்து வைத்தார். ஆவிர்ஹோத்ரா அந்த கருப்பையில் இருந்த கருவில் இருந்து பிறக்க வேண்டும். தாக்ஷகாவின் மகள் அந்த கருவை அத்தி மரத்தின் பொந்திற்குள் வைத்துவிட்டு தன் சொந்த இடத்திற்குச் சென்று விட்டாள். அதிலிருந்து வடசித்தநாகநாதர் என்ற பெயருடன் ஆவிர்ஹோத்ரர் பிறந்தார்.

மச்சேந்திரர் தேசத்தில் அலைந்து கொண்டிருந்தபோது குழந்தையில்லாத ஒரு பெண்ணுக்கு விபூதி அளித்தார். அதன் மீது நம்பிக்கை இல்லாத அந்த பெண்மணி அதை குப்பையில் எரிந்து விட்டாள். அந்த விபூதிக்கு அதிகமான சக்தி இருந்தமையால் அதிலிருந்து கோரக்நாதர் பிறந்தார். பார்வதியின் திருமணத்தின் போது, அந்தத் திருமணத்தை புரோகிதராக இருந்து நடத்திவைத்த பிரம்மனுக்கு பார்வதியின் அழகைக் கண்டவுடன் அவன் கவனம் சிதறியது. அதன் காரணமாக அவன் விந்து கசிந்தது. அது அவனுக்கு வெட்கத்தை ஏற்படுத்தியதால் அனைவரிடமிருந்தும் மறைக்க அவன் பாதத்தின் குதிகாலால் அதைத் துடைத்துக்கொண்டான். தேய்க்கப்பட்ட விந்து 60,000 பாகங்களாகி அதிலிருந்து வாலகில்யர்கள் என்ற 60,000 முனிவர்கள் பிறந்தனர். மீதமிருந்த சிறிய பகுதி கழிவாக மாறி பாகீரதி நதிக்குள் விழுந்தது. அவை மெதுவாக நதியில் மிதந்து சென்று கரையில் உள்ள புல்புதருக்குள் சிக்கிக்கொண்டது. பிப்பலாயனரின் ஆத்மா அதனுள் நுழைந்து சர்படநாத் என்கிற பெயருடைய நவநாதர் பிறந்தார்.

கௌலிகா என்ற பெயருடைய முனிவர் பிக்ஷை எடுக்க செல்வதற்காக தன் குடிலுக்கு வெளியே பிக்ஷைப் பாத்திரத்தை வைத்திருந்தார். அதே நேரத்தில்

சூரியனுடைய விந்து அதனுள் விழுந்தது. அதை கவனித்த மகரிஷி அதை அதிலேயே பத்திரப்படுத்தினார். பர்த்தரி என்றால் பிக்ஷை பாத்திரம். பார்த்தாரிநாத் பிக்ஷை பாத்திரத்தில் இருந்து பிறந்தமையால் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

இமயமலையில் உள்ள அடர்ந்த காடு ஒன்றில் பெரிய யானை ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது. சரஸ்வதியை பார்த்தவுடன் மோகம் அடைந்தார் பிரம்மன், அதனால் அவருடைய விந்து வெளியானது. அந்த விந்து தெய்வாதீனமாக யானையின் காதினுள் விழுந்தது. பிரபுத்தா என்கிறவர் அதிலிருந்து உயிர் பெற்றார். யானையின் காதில் இருந்து பிறந்தமையால் அவர் நவநாதர்களில் ஒருவரான கர்ண கனிஃபா என்ற பெயருடன் புகழடைந்தார்.

கோரக்கநாதர் சஞ்சீவினி மந்திரத்தைக் கூறிக்கொண்டே ஒரு களிமண்ணால் ஆன மனித சிலையை உருவாக்கினார். சஞ்சீவினி மந்திரத்தின் திறனால் அந்த உருவத்திலிருந்து கரபாஜனா உயிர் பெற்று கஹனிநாத் என்கிற பெயரில் பிறந்தார். இந்த நவகிருஷ்ணர்கள் (நவநாராயணர்கள்) தங்களுடைய மொத்த உடலையும் (சமாதி) மந்தார மலையில் பாதுகாத்து வைத்துவிட்டு பூமியில் தங்கள் ஆற்றல்களுடன் நவநாதர்களாக பிறந்து தர்மத்தை ஸ்தாபிக்கும் திட்டத்தில் பங்குபெற்றனர்" என்று கூறினார்.

நான் அவரிடம், **"வெற்றி, வெற்றி, குரு ஸர்வ பௌமருக்கு வெற்றி உண்டாகட்டும். நீங்கள் நவநாதர்கள் நவகிருஷ்ணர்களின் அம்ச அவதாரம் என்று கூறினீர்கள். ஸ்வாமி, நவநாதர்களுக்கும் நவகிரிஷ்ணர்களுக்கு ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?"** என்று கேட்டேன்.

ஶ்ரீ ஶ்ரீபாதர் சிரித்துக்கொண்டே தன் தெய்வீக அன்பு நிறைந்த பார்வையை எங்கள் மீது செலுத்தினார். அவர் "என் செல்வங்களே, இந்த படைப்புகள் அனைத்தையும் தீர்மானிப்பவன் நான்தான். எல்லா ஆண் மற்றும் பெண் தெய்வங்களின் தீர்மானங்கள் என்னுடைய தீர்மானத்தில் ஒரு சிறிய பகுதிதான். இந்த பகுதி எண்ணங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட அளவு வரை சுதந்திரம் இருக்கும். விவசாயி ஒரு பசுவை பெரிய கயிறு கொண்டு மரத்தில் கட்டுவான். அந்த கயிற்றின் தூரம் உள்ள வரை மட்டுமே அந்த பசுவினால் புல்லை மேய முடியும். அப்படியென்றால் பசுவினால் தீர்மானிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இடம் வரையில்தான் புல் மேய முடியும். அது வரம்புக்கு உட்பட்டதுதான் மேய முடியும். அதற்கு கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது. அதற்கு அளிக்கப்பட்டுள்ள இடம் வரையில் சுதந்திரமாக மேயலாம். அந்த எல்லையை அது கடக்க வேண்டும் என்று எண்ணினால் கண்டிப்பாக விவசாயியின் அனுமதி பெற வேண்டும். அந்த குறிப்பிட்ட இடத்தில் உள்ள உணவு முடிந்து விட்டதென்றால் விவசாயி வேறு மரத்திலோ அல்லது அதே மரத்தில் கட்டியபடி கயிற்றை நீளமாகவோ ஆக்குவான். அதே முறையில்தான் அம்ச அவதாரங்களுக்கும் தர்மம் மற்றும் கர்மாவின் கோட்பாடுகளுக்கு உட்பட்டு சுதந்திரம் அளிக்கப்படும். ஆகவே, தீர்மானம் மூல தத்துவத்தில் இருந்துதான் வெளிப்படும். அதைச் செயல்படுத்தும் பொறுப்பு மட்டும்

அம்ச அவதாரங்களுக்கு அளிக்கப்படும். அதில் ஏதாவது பிரச்சனை உருவானால் அம்ச அவதாரங்கள் அவற்றை மூல தத்துவத்திடம் சமர்ப்பிக்கும். அவர்கள் மூல தத்துவத்திடமிருந்து அருளைக் கொண்டுவந்து உயிரினங்களுக்கு நன்மை ஏற்படுத்துவார்கள். மூல தத்துவத்தின் அம்ச அவதாரங்களுக்குத் தீய குணங்களான காமம், வெறுப்பு, கர்வம் முதலியவை இல்லாததால் மூல தத்துவம் மேற்கொள்ளும் அனைத்து செயல்களையும் அவர்களால் மேற்கொள்ள முடியும். ஆகவே உயிரினங்களைப் பொறுத்த வரையில் அது முழு அவதாரம் அல்லது அம்ச அவதாரம் எதுவானாலும் இரண்டிற்கும் எந்தவித வித்தியாசமும் கிடையாது.

## சாய்பாபாவை பற்றிய விளக்கம்

நான் உன்னிடம் முன்பே கூறியது போல என்னுடைய சமர்த்த சத்குரு உருவம் சாய்பாபா என்ற பெயரில் வருங்காலத்தில் நிகழும். அவர் ஷிலாதி (ஷீர்டி) நகரம் என்ற ஊரை தன் பணிகளுக்காகத் தேர்ந்தெடுத்து தன் பக்தர்களை பாதுகாப்பார். இந்த அவதாரத்துக்கும் என்னுடைய குணத்துக்கும் வேற்றுமை இருக்காது. எவ்வளவு அருள் வழங்கப்பட வேண்டும், எவ்வளவு வழங்கப்பட கூடாது என்பதற்கான முடிவை நான் எடுப்பேன். சாய்பாபாவின் பக்தர்கள் செய்யும் பிரார்த்தனைகள் அவரை சஞ்சலப்படுத்தி, என்னிடமிருந்து அவர் அதிகமான அருள் கேட்டால் நான் கண்டிப்பாக அளிப்பேன். சாதாரண மனிதனின் பிரார்த்தனை மற்றும் வேதனையைக் கேட்டு கடவுளின் தத்துவம் அருள் புரியும் போது, சாய்பாபா கேட்கும் போது அதை அளிக்க மாட்டாரா என்ன? ஆகவே சாய்பாபாவைப் பின்தொடரும் பக்தர்கள் மிகவும் நன்மை பெறுவார்கள். **'சேத்தே விஷ்ராம்யதி இதி சாய்'** என்று கூறப்படுகிறது. சாய்பாபாவின் குணம் உறுப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது. சாய்பாபாவின் குணம் என்னுடன் ஐக்கியமான நிலையில் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்" என்று அறிவித்தார்.

பின்னர் நான் அவரிடம், **"ஸ்ரீ மஹாகுருவுக்கு வந்தனம். ஸ்ரீ வாசவி கன்யகா முழு அவதாரமா அல்லது அம்ச அவதாரமா?"** என்று கேட்டேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு, "ஆர்யமஹாதேவிக்கு அளித்த சத்தியத்தை நிறைவேற்றவே அவள் குஸும சிரேஷ்டிக்கு மகளாக பிறந்தாள். கன்யகா அவதரிக்கவில்லை என்றால் வைசிய ஜாதியில் பல விபத்துகள் நேர்ந்திருக்கும். சமாதி என்ற பெயருடைய வைசியன் இந்த ஆபத்துகளை வெளிப்படுத்தப்படாத நிலையில் விதை வடிவத்தில் கவனித்தார். அந்த வெளிப்படுத்தப்படாத நிலை வெளிப்படும் நிலைக்கு மாறி துளிர்விட்டு பெரிய மரமாகி வைசிய ஜாதிக்கு பேராபத்து நேரிடும் என்பதை கவனித்தார். அம்பிகை வாசவியாக வெளிப்படவில்லை என்றால் விஷ்ணுவர்தனன் போன்ற கொடூரமான அரசர்கள் குஸும சிரேஷ்டி போன்ற சிறிய மன்னர்களின் வீட்டு அழகான பெண்களையோ அல்லது அவர்கள் உறவினர்களையோ மணந்து கொண்டு மனைவிகளாக்கிக் கொண்டு அவர்களிடம் இன்பம் அனுபவித்து அனைவரையும் தர்மத்தில் இருந்து தாழ்த்தி இருப்பான். சாதாரண மன்னர்களின் எந்த பெண்ணுக்கும் இது போல நடக்கக்கூடாது என்பதற்காகவும் அவர்களின் கற்பு, சுயமரியாதை மற்றும் தங்கள் ஜாதியின் மீது விருப்பம் இருக்க வேண்டும் என்பதற்காகவும்

வெவ்வேறு கோத்திரங்களை சேர்ந்த தம்பதிகளுடன் வாசவி அக்னியில் இறங்கினாள். ஜாதியின் மீதுள்ள விருப்பமும் சுயமரியாதையும் அக்னியில் தூண்டப்பட வேண்டும். இல்லையேல், கண்ணியம் மற்றும் பெருமிதம் உடைய வைசியர்கள் எரிக்கப்பட வேண்டும். இந்த அக்னிபரீக்ஷையில் ஸ்ரீ வாசவியின் அருளால் வைசியர்கள் வெற்றி பெற்றனர். அந்த தியாகத்திற்கு ஈடாக அந்த கோத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செல்வம் மற்றும் ஆரோக்கியம் அளிக்கப்பட்டு, உணவு மற்றும் உடைக்கு எந்தவித தட்டுப்பாடும் இருக்காது. ஸ்ரீ வாசவி கன்யகா ஆர்யமஹாதேவியின் ஒரே ஒரு ஒளிரும் ஒளிக்கதிர். பூமியால் அந்த முடிவில்லா சக்தியின் ஒளிக்கதிரை தாங்க முடியாது. ஸ்ரீ வாசவி ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அம்ச அவதாரமாக வந்தாள். அவளுடைய பதினெட்டு வயது வாழ்க்கையில் அவளுடைய ஜாதி மக்களின் மோசமான விதியை யோகாக்னியில் எரியூட்டினாள். கற்பை இழப்பது தாங்க முடியாத மோசமான விதி. செல்வம் அல்லது செழுமையை இழப்பதை விட ஒரு பெண் தன் கற்பை இழப்பது மோசமான விதி என்பதை உணர்ந்துகொள். அது போன்ற ஒரு அச்சுறுத்தல் அவளுக்கு நேர்ந்த போது, அவள் அதே போன்று விதியுடைய தன் கோத்திரத்தை சேர்ந்த எல்லா மக்களையும் தன் பக்கம் ஈர்த்தாள். அவள் தன்னை 102 கோத்திர தம்பதிகளுடன் எரியூட்டிக் கொண்டு இயற்கையின் தெய்வீக உண்மையை ஸ்தாபித்தாள். அவள் தன்னுடைய உண்மையான ஆர்யமஹாதேவி உருவத்தை வெளிப்படுத்தியவுடன் குஸும சிரேஷ்டி உட்பட அனைவரும் பயந்துவிட்டனர். என் செல்வங்களே, மூவர் மட்டுமே கற்புள்ள பெண்களின் உண்மை உருவத்தை பார்க்க முடியும். அவர்கள் தங்களுடைய அனைத்து ஆபரணங்கள் மற்றும் தாலியுடன் தரிசனம் அளிப்பார்கள்:

* அவர்களை விட உயர்ந்த நிலையில் இருக்கும் மகாத்மாக்களுக்கு தரிசனம் அளிக்கும் போது.
* அக்னி சாட்சியாக அவர்களை மணந்த கணவருக்கு தரிசனம் அளிக்கும் போது.
* தங்களுடன் கீழ் நிலையில் உள்ள உண்மையான பக்தர்களுக்கு அருள் புரியும் போது.

விஷ்ணுவர்தனன் உண்மையில் மரண தேவதையின் மீதுதான் மோகம் கொண்டான், வாசவியின் மீது அல்ல. மரண தேவதை வாசவியிடம், "தாயே, நான் உன் உருவத்தை எடுத்துக் கொள்கிறேன்" என்று வேண்டிக்கொண்டாள். அம்பிகை சம்மதித்தாள். பின்னர் வாசவியின் இன்னொரு உருவம், அவளின் உருவத்தை ஒத்த ஒன்று வெளியானது. அந்த உருவம் மரண தேவதையுடன் ஐக்கியமானது. மரண தேவதை விஷ்ணுவர்தனனுடன் ஐக்கியமாகி அவனுடைய தலையை ஆயிரம் பாகங்களாக உடைத்து விட்டு வெளியேறியது. இதுதான் அன்று நடந்த உண்மை சம்பவம்" என்று கூறினார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 33

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தனிப்பட்ட முறையில் அவரே ரமணி மற்றும் நரசிம்ம ராயுடுவின் திருமணத்தை நடத்தி வைத்தல்

நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அனுமதி பெற்றுக் கொண்டோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்களிடம், **"என் அன்பு குழந்தைகளே! நீங்கள் இங்கிருந்து ஸ்ரீ பீதிகாபுரம் செல்லுங்கள். என்னுடைய புனிதமான ஆசீர்வாதம் எப்போதும் உங்களுடன் பாதுகாப்பாக துணையிருக்கும்"** என்று ஆணையிட்டார். ஸ்ரீ மஹாகுருவின் ஆணைப்படி ஸ்ரீ தர்ம குப்தரும் நானும் கிருஷ்ணா நதியின் அக்கரையை அடைந்தோம். நாங்கள் ஸ்ரீசரணரின் பாதச்சுவடுகளை ஒரு பாறையின் மீது கண்டோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த பாறையின் மீது நின்று கொண்டு சூரிய நமஸ்காரம் செய்வார். ஸ்ரீசரணரின் பாதச்சுவடுகளைக் கண்டு எங்களுக்கு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

நாங்கள் பஞ்சதேவ மலை கிராமத்தை அடைந்தோம். சோள வயலில் உருவான பாதச்சுவடுகளைப் பின்தொடர்ந்தோம். அந்த வயலின் சொந்தக்காரர் எங்களை அன்புடன் வரவேற்றார். அவர் எங்களுக்கு இனிப்பான பழங்கள் மற்றும் குடிக்க இனிப்பான மோர் ஆகியவற்றை வழங்கினார். அந்த விவசாயியின் பெயர் நரசிம்ம ராயுடு. அவர் வயலில் ஒரு வீடு கட்டினார். அந்த வீட்டில் இளைப்பாறி அவருடைய உபசரிப்பை ஏற்றுக்கொள்ளும்படி எங்களைக் கேட்டுக்கொண்டார். நாங்கள் சம்மதித்தோம்.

அவர் ஸ்ரீசரணரின் மகிமை வாய்ந்த லீலைகளை விவரித்தார். "ஐயா! என்னுடைய பெயர் நரசிம்ம ராயுடு. நான் என்னுடைய குழந்தைப் பருவத்தில் மிகவும் பலவீனமாகவும் பயந்தவனாகவும் இருந்தேன். நான் என் குழந்தை பருவத்திலேயே என் பெற்றோர்களை இழந்துவிட்டேன். நான் என் தாய்மாமாவின் வீட்டில் வளர்க்கப்பட்டேன். என்னுடைய அத்தை மிகுந்த சண்டைக்காரி. நான் அவர்கள் வீட்டில் நிறைய உடல் உழைப்பு உள்ள வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. வயலில் நிறைய வேலை இருக்கும். என் மாமாவுக்கு ரமணி என்கிற பெயரில் ஒரு மகள் இருந்தாள். அந்த ஊரில் உள்ள எங்கள் சொந்தகாரப் பெண்கள் அனைவரைக் காட்டிலும் அவள் மிகவும் அழகானவள். அதுமட்டுமல்லாமல், எல்லா நல்ல குணங்களும் நிறைந்தவள். அவளுக்கு கடவுள் பக்தி இருந்தது. அவள் தனது இஷ்ட தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணரை வணங்கினாள். என் அத்தை எனக்கு பழைய உணவை கொடுக்கும் போது அவளால் அதை தாங்கிக்கொள்ள முடியாது. எனக்கு உணவு சிறிய அளவு அளிக்கப்பட்டு கண்ணியமற்ற முறையில் நடத்தப்பட்டேன். வேலைப்பளு எப்போதும் அதிகமாக இருந்தது. ரமணி அவள் அம்மாவுக்குத் தெரியாமல் எனக்கு

இனிப்பான பழங்களையும் சூடான உணவுகளையும் அளிப்பாள். என் அத்தைக்குத் தெரிய நேர்ந்தால் என் அத்தையிடம் இருந்து எங்களுக்கு அடி மற்றும் கடும் சொல்லும் கிடைக்கும். என் மாமா மிகவும் நல்லவராக இருப்பினும் அவரால் தன் மனைவியை எதிர்த்து எதுவும் பேச முடியவில்லை. சில சமயம் என் அத்தை மற்ற குடும்பங்களைச் சேர்ந்த காப்பு ஜாதி இளைஞர்களை விட்டு என்னை அடிக்க சொல்வாள். ஆரம்பத்தில் நான் மிகவும் பலவீனமாக இருந்தேன். அந்த அடிகளினால் மேலும் பலவீனம் அடைந்தேன். நான் மிகவும் பயந்தவன் கூட. ஆகவே அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் கூட என்னை திறமையற்றவன் என்று கருதுவார்கள். என்னுடன் இளையவர்களுக்கு கூட நான் கீழ்படிந்து நடக்க வேண்டியிருந்தது.

ரமணி மிகவும் அழகாக இருந்ததால் எங்கள் ஊரில் இருந்த காப்பு இளைஞர்களுக்கு அவளை மணந்து கொள்ள தீவிரமான விருப்பம் இருந்தது. என்னிடம் சொத்து அல்லது பணம் கிடையாது. என்னுடைய உடல் வேறு மிகவும் பலவீனமாக இருந்தது. இவை அனைத்திற்கும் மேலாக நான் ஒரு பயந்தவன். என்னுடைய மாமா செல்வந்தர் மற்றும் அவரிடம் சொத்துகள் இருந்தது. அவருக்கு நல்ல குணங்கள் இருந்தாலும் பேராசை பிடித்தவர். என்னுடைய அத்தை கோபக்காரியாக இருந்தாலும் முகஸ்துதி செய்பவர்களிடம் ஏமாந்துவிடுவாள்.

ரமணி எந்த சூழ்நிலையிலும் நான்தான் அவளுக்குக் கணவனாக வரவேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணரிடம் வேண்டிக்கொள்வாள். இதற்கிடையில் ஒரு போலி சந்நியாசி எங்கள் ஊருக்கு வந்தான். அவன் காளியின் உபாசகன் என்றும் அவனால் கடந்த,நிகழ் மற்றும் எதிர் காலங்களைத் துல்லியமாக கூறமுடியும் என்று பலமாக பிரச்சாரம் செய்யப்பட்டது. உண்மையில் அவனிடம் சில சக்திகள் இருந்தன. அவன் ஊர்க்காரர்களுக்குக் கணித்த விஷயங்கள் நூறு சதவிகிதம் உண்மையாக இருந்தது. அவனுடைய ஏமாற்று வார்த்தைகளில் என் அத்தை மயங்கி அவன் வலையில் சிக்கினாள். அவன் காளி பூஜை செய்ய எங்கள் வீட்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவன் ரமணி வணங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணரின் மண் பொம்மையை வீட்டை விட்டு வெளியே தூக்கி எரிய வேண்டும் என்று கூறினான். என் அத்தை அதற்கு சம்மதித்தாள். ரமணி எவ்வளவு அழுதும் எதுவும் பயனிலை. போலி சந்நியாசி பூஜை செய்யத் தொடங்கியதும் பல கோழிகள் பலியிடப்பட்டன. பூஜையறை முழுவதும் ரத்த வெள்ளமாகப் பார்ப்பதற்கு மிகவும் கொடூரமாக இருந்தது. மண்டை ஓடுகள் மற்றும் சுடுகாட்டில் வழிபாட்டுக்கு உபயோகப்படுத்தப்படும் சில விநோதமான பொருட்கள் வீட்டில் வைக்கப்பட்டிருந்தன. இந்த பூஜை முடிந்தவுடன் ஒரு புதையல் கிடைத்து குடும்பம் முழுவதும் பணக்காரர்களாக ஆகிவிடுவார்கள் என்று நம்ப வைத்தான். அந்த போலி சந்நியாசிக்குப் புகழ்ந்து பேசி மயக்கும் கலை நன்றாக தெரிந்திருந்தது. இந்த கலையின் மூலம் ரமணியின் கற்பை பறிக்க திட்டம் தீட்டினான்.

அவனுடைய வினோதமான பூஜை முறைகளின் மூலம் ரமணியின் உடல்நலம் பாதிப்படைய துவங்கியது. அவள் மிகவும் விசித்திரமான வகையில் நடந்து கொள்ளத் தொடங்கினாள். அவள் முன்பு இருந்தது போல் இல்லை. இரவில் இரத்தத்தை குடிக்க தொடங்கினாள். உணவு சாப்பிடாமல் இரத்தத்தை மட்டுமே குடித்துக் கொண்டிருந்தாள். அவள் உடலில் காளிதேவி புகுந்துள்ளதாகவும் அதனால்தான் அவள் இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கிறாள் என்றும் காளிதேவி அவளை விட்டு சென்றதும் சாதாரண மனுஷ ரூபத்திற்கு திரும்பிவிடுவாள் என்று போலி சந்நியாசி அனைவரிடமும் சமாதானம் கூறினான்; மேலும் காளி அன்னைக்கு இரத்தக் காணிக்கை அளிக்கவில்லை என்றால் அவள் சமாதானம் அடைய மாட்டாள், பின்னர் புதையலும் கிடைக்காது என்றான். இந்த வழியில், அனைத்து விஷயங்களும் அச்சமூட்டும் வகையில் இருந்தது. சாப்பாடு நிறைந்த பாத்திரங்கள் திடீரென கிணற்றில் விழுந்தன. மனித எலும்புக்கூடுகள் வீட்டில் அங்குமிங்கும் தென்பட்டன. நள்ளிரவில் பயமுறுத்தும் ஓசையுடன் வினோதமான உருவங்கள் தோன்றின. எங்கள் முழு வீடும் சுடுகாட்டைப் போல தோற்றம் அளித்தது. அந்த போலி சந்நியாசியை வீட்டை விட்டு விரட்ட என் மாமாவுக்கு துணிச்சல் இல்லை. இந்த கஷ்டங்களை தாங்கிக் கொண்டால் தனக்கு புதையல் கிடைக்கும் என்று என் அத்தை நம்பி கொண்டிருந்தாள். முழுச் சூழ்நிலைகளும் மிகவும் குழப்பமாகவும் புரிந்து கொள்ள முடியாத வகையில் இருந்தது.

ஒரு இரவு நேரத்தில் போலி சந்நியாசி ரமணியை நெருங்கினான். அவள் அவனுடைய தந்திரத்தில் மயங்கி விட்டதால் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி விடுவாள் என்று நினைத்தான். அவன் ரமணியை நெருங்கியவுடன் அவள் பயந்த தொனியில் சத்தமாக அலறி விட்டு ஒரு இரும்பு பொருள் கொண்டு அவன் தலையில் அடித்தாள். அவள் ஏன் அப்படி நடந்து கொண்டாள் என்பது அவளுக்கே தெரியவில்லை. தன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒருவர் திடீரென எப்படி இப்படி நடந்து கொண்டார் என்பது போலி சந்நியாசிக்குப் புரியவில்லை.

## துன்பத்தில் இருப்பவர்களின் அழைப்பிற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் பதிலளித்தல்

விடிந்த பிறகு, ஒரு ஏழை பிராமண பிச்சைக்காரர் எங்கள் வீட்டுக்கு வந்தார். ரமணி வீட்டை விட்டு வெளியே வந்து அவரிடம், **"இந்த வீட்டில் பேய்,பிசாசுகள் மற்றும் ஆவிகள் நிறைய உள்ளன வேண்டுமென்றால் அவற்றை பிக்ஷையாகப் பெற்றுக்கொள்ளுங்கள்"** என்று கூறினாள். பிராமணன் அதற்கு ஒத்துக் கொண்டார்.

அவருடைய மலர்ச்சியான முகம் அமைதியாகவும் ஒளி பொருந்தியதாகவும் இருந்தது. இதற்கிடையில், என் மாமா வெளியே வந்து, **"ஐயா, எங்கள் வீட்டின் சூழ்நிலை முழுவதும் வருத்தமளிக்கும் வகையில் இருக்கிறது. உங்களுக்கு வேண்டுமென்றால் இந்த சூழ்நிலைகளை அளித்துக் கொண்டிருக்கும் தீய சக்திகளை பரிசாக பெற்றுக்கொள்ளுங்கள்"** என்றார். பின்னர் என் அத்தையும் சேர்ந்து


கொண்டார். **"எங்கள் வீட்டில் ஒன்றுமே இல்லை. உங்களுக்கு வேண்டுமானால் எங்கள் வீட்டின் ஏழ்மையை எடுத்துக்கொள்ளுங்கள்"** என்றாள். நானும் அப்போது வீட்டில் இருந்தேன். நான் அவரிடம், **"ஸ்வாமி, என்னிடம் என் மூதாதையர்கள் காலத்திலிருந்து இருக்கும் ஒரு வெள்ளி தாயத்து ஒன்று இருக்கிறது. உங்களுக்கு வேண்டுமென்றால் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்"** என்றேன். அவர் அதற்கு சம்மதித்த உடன் நான் அந்த தாயத்தை அவரிடம் பிக்ஷையாக அளித்தேன். இதற்கிடையில், போலி சந்நியாசி சில மண்டை ஓடுகளை சுடுகாட்டில் இருந்து கொண்டு வந்தான். **"ஏழைப் பிராமணரே! உங்களுக்கு வேண்டுமென்றால் இந்த மண்டை ஓடுகளை பிக்ஷையாக எடுத்துக் கொள்ளுங்கள்"** என்று ஏளனமாக கூறினான். அவர் பெற்றுக்கொண்டார்.

திடீரென எங்கள் வீட்டில் ஒரு தெய்வீக ஒளி தோன்றியது. பிராமண அதிதி மறைந்து போனார். தெய்வீக பேரொளியின் காரணத்தினால் போலி சந்நியாசியின் உடல் முழுவதும் எரிவது போல் உணர்ந்தான். ஒளியின் ஒரு கதிர் ரமணிக்குள் நுழைந்தது. அவள் ஆரோக்கியம் பெற்றாள். என்னுடைய அத்தைக்கு பக்கவாதம் ஏற்பட்டு பேசும் திறனை இழந்தாள். என்னுடைய மாமாவுக்கு மிகுந்த நடுக்கம் ஏற்படத் தொடங்கியது. எனக்கு மிகுதியான தைரியம் வந்தது. எனக்கு ஏதோ ஒரு புது சக்தி என்னுள் நுழைந்தது போலவும் மிகவும் வலிமை பெற்றது போலவும் உணர்ந்தேன். மந்திரவாதியின் வாயில் இருந்து ரத்தம் வெளியேறி அவனுடைய திறன்கள் அனைத்தையும் இழந்தான். அந்த தெய்வீக ஒளி மனித உருவம் எடுத்தது. அது துன்பத்தில் இருப்பவர்கள் அடைக்கலம் அடையும் ஒருவரின் உருவம், அனைத்து ஆண் மற்றும் பெண் தெய்வங்களின் உருவம், ஆதி, நடுத்தர அல்லது அந்தமில்லாத ஒன்றின் தெய்வீக போற்றத்தக்க வடிவம்- ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் உருவம்.

ஸ்ரீசரணர், "உண்மையில் அன்னை காளி ஒருவரிடம் மறைந்திருக்கும் தீய குணங்களான காமம், கோபம் போன்றவற்றை அழிக்கிறாள், அவளுக்கு கோழி, ஆடு மற்றும் மற்ற உயிரினங்கள் தேவையில்லை. உலகத்தின் தீய சக்திகளின் உயிர் சக்தி காளியின் உருவம் எடுத்து பல வகையான பலிகள் கேட்கின்றன. உண்மையான காளி அன்னை புனிதமான குணங்களான அன்பு, அமைதி மற்றும் கருணை நிறைந்தவள். உலகத்தில் உள்ள பேய், ஆவிகள் போன்ற தீய சக்திகளின் உயிர் சக்தி ஒரு குறிப்பிட்ட தெய்வம் போல வேடமிட்டுக் கொண்டு தன் தீய சக்திகளை வெளிப்படுத்துகின்றன. தீய மந்திரவாதிகள் அவற்றை வணங்கி உலகத்துக்கு சொல்ல முடியாத கேடு விளைவிக்கிறார்கள். இந்த உலகத்தில் உள்ள பேய்களின் உருவங்களின் முக்கியமான சக்திகளுக்கு தெய்வங்களின் உருவங்களை எடுக்கும் திறன் படைத்தவை, ஆனால் அந்த உருவங்களுக்கு தெய்வீக சக்திகள் இருக்காது.

தர்மம் மிகுந்த தாழ்ந்த நிலையைத் தொடும் போது நான் உறுதியளித்தது போல நான் அவதாரம் எடுப்பேன்; இந்த ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அவதாரம் அந்த

உறுதியை நிறைவேற்ற வந்த ஒன்று. இந்த அவதாரம் அன்பு, அமைதி,கருணை மற்றும் இரக்கம் போன்ற எல்லையில்லா பண்புகள் கொண்டது.




எங்களுடைய வீடு முழுவதுமாக சுத்தமானது. போலி சந்நியாசி விரட்டி அடிக்கப்பட்டான். ஸ்ரீசரணரின் கருணையினால் என் அத்தையின் பக்கவாதம் சரியானது. ஸ்ரீ ஸ்ரீபாதரே அவர் கையாலேயே எங்களை ஆசீர்வதித்து எனக்கும் ரமணிக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார். அச்சமயத்தில் அவருக்கு பன்னிரெண்டு வயதுதான் இருக்கும். அப்போது அவர் பீதிகாபுரத்தில் இருந்தார். அவருடைய வேடிக்கையான சூக்ஷ்ம ரூபத்தில் பஞ்சதேவ மலையில் இருந்தார். அன்று அவர் எங்களுக்கு அருளிய மந்திர அக்ஷதை இவைதான். அவர் அன்று எங்களிடம் வருங்காலத்தில் தர்ம குப்தரும் சங்கர் பட்டும் இங்கு வரும்போது அவர்களிடம் சிறிது அளவு அக்ஷதையை அளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். ஆஹா, என்ன ஒரு அற்புதமான தெய்வீகத் திருவிளையாடல்கள் நிறைந்த அவதாரம்!" என்று விவரித்து முடித்தார் நரசிம்ம ராயுடு.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 34

## சரபேஸ்வரரின் கதை

நானும் தர்ம குப்தரும் சில நாட்கள் பயணம் செய்த பின் ஒரு கிராமத்தை அடைந்தோம். நானும் தர்ம குப்தரும் எங்கள் பயண வழி முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை ஜபித்துக்கொண்டே, அவருடைய எல்லையில்லா கருணை மற்றும் இரக்கத்தைப் பற்றி நினைவூட்டிக்கொண்டே சென்றோம். வழியில் யாராவது ஒருவர் எங்களுக்கு விருந்தோம்பல் செய்து கொண்டே இருந்தனர். சில இடங்களில் எங்கள் பயணத்தை மாட்டுவண்டி மூலம் தொடர்ந்தோம். சில இடங்களில் குதிரை வண்டியில் பயணித்தோம். மற்ற சில இடங்களில் நடைப்பயணம் மேற்கொண்டோம். இவை அனைத்தும் எங்களை மறைமுகமாக கவனித்துக் கொண்டே இருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய திருவிளையாடலின் அருள் என்று கருதினோம். நாங்கள் எந்த வழி மூலம் அல்லது என்ன முறையின் மூலம் பயணித்தாலும் எங்களுக்கு விருந்தோம்பல் யார் மூலமாவது கிடைத்துக் கொண்டே இருந்தது.



நாங்கள் சென்ற ஒரு கிராமத்தில் ஒரு விசேஷமான சம்பவம் நடைபெற்றது. ஒரு பிராமணனின் வீட்டில் இருக்கும் அனைத்து பொருட்களும் வீதியில் வீசப்பட்டது. அவருடைய மனைவியும் குழந்தைகளும் வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்தனர். அந்த பிராமணன் ஒரு வட்டிக்காரனிடமிருந்து கடன் வாங்கியிருந்தார். அவரால் கடனைத் திருப்பி செலுத்த முடியவில்லை. ஒரு நாள் அந்த பிராமணன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவனை கடன் கொடுத்தவன் மிரட்டி அந்த இடத்திலேயே நிற்கச் சொன்னான். பிராமணன் அங்கேயே நின்றார். கடனளித்தவன் அந்த பிராமணனை சுற்றி கரியால் ஒரு வட்டம் வரைந்து அதை விட்டு வெளியே வரக்கூடாது என்று கூறினான். அந்த பிராமணன் எப்போது தன் கடனை திருப்பி அளிப்பார் என்று தெரிவிக்குமாறு அவன் கேட்டான். அந்த பிராமணன் ஒரு மாதத்திற்குள் திருப்பி அளிப்பதாக கூறினார். ஆனால் அந்த பிராமணனுக்கு பணம்

கிடைக்காததால் அவர் கூறிய வார்த்தையை நிறைவேற்ற முடியவில்லை. அந்த பிராமணன் குறிப்பிட்ட நேரத்திற்குள் பணத்தை அளிக்காவிட்டால் அவர் வீட்டை தான் ஆக்கிரமித்து கொள்வேன் என்று முன்பே அந்த கடன் கொடுத்தவன் கண்டிப்பாகக் கூறியிருந்தான். இந்த வகையில்தான் அந்த கடன் கொடுத்தவன் பிராமணனுக்குத் தொல்லைகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தான். கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியை வினோதமான கேலிக்கூத்தை பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தனரே ஒழிய அந்த கடன் கொடுத்தவனைச் சமாதானப் படுத்தி பணத்தைத் திருப்பி அளிப்பதற்கு இன்னும் கொஞ்சம் கால அவகாசம் கேட்க யாருக்கும் துணிவு இல்லை.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களை இக்கட்டான நிலைமைகளுக்கு உள்ளாக்கி, அவர்களுடைய பக்தியைச் சோதித்து அவர்களை காப்பாற்றுவார்

அந்த பிராமணனின் துயரமான நிலைமையை நினைத்து தர்ம குப்தருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவர் உதவி செய்யலாம் என்று எண்ணிய போது அவரிடமும் என்னிடமும் பணமே இல்லை. எனினும் நான் அங்கு சென்று, **“ஐயா, இந்த ஏழை பிராமணனின் மீது இரக்கம் கொண்டு அவருக்கு இன்னும் ஒரு மாதம் அவகாசம் கொடுங்கள். இதற்கிடையில் அவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அருளால் தன் கஷ்டத்தில் இருந்து வெளியே வந்துவிடுவார். கொஞ்சம் அமைதியாக யோசியுங்கள். அவர் பணம் கொடுப்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்”** என்றேன். இந்த வார்த்தைகள் என்னை அறியாமலேயே என் வாயில் இருந்து வந்தன. கடன் கொடுத்தவன் என்னிடம், **“சரி, நான் உன்னை நம்புகிறேன். நான் அவருக்கு இன்னும் ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கிறேன், ஆனால் பணம் முழுமையாக திருப்பி அளிக்கப்படும் வரை நீங்கள் இருவரும் இந்த ஊரை விட்டு செல்லக்கூடாது. அப்படி பணம் திருப்பி அளிக்கப்படாவிட்டால் நான் அந்த பிராமணனின் வீட்டை எடுத்துக் கொள்வது மட்டுமல்லாமல் உங்கள் இருவரையும் அனாவசியமாக கால நீட்டிப்பு செய்ததற்காக கிராம பஞ்சாயத்திற்கு அழைத்து செல்வேன். நீங்கள் அவர்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும்”** என்றான்.

நான் அளித்த சத்தியத்திற்காக வருத்தம் அடைந்தேன். நானோ தர்ம குப்தரோ அந்த பிராமணனின் கடனை குறித்த நேரத்திற்குள் திருப்பி அளிப்பதற்கு சாத்தியம் இல்லை. சாத்தியக்கூறுகளை பற்றி கொஞ்சம் கூட யோசிக்காமல் முட்டாள்தனமாக சத்தியம் செய்துவிட்டேன். இதுபோன்ற யோசிக்காமல் செய்த சத்தியத்திற்கு என்னை நானே குற்றம் சாட்டி கொள்ள வேண்டும். இது போன்ற விஷயங்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் மீது பழி சுமத்துவது முறையாகாது. என்னோடு சேர்த்து தர்ம குப்தரையும் துயரமான நிலைக்கு ஆளாக்கி விட்டேன். இது இன்னொரு பாவம். வார்த்தைகளில் கட்டுப்பாடு இல்லாத போது எப்படி எல்லாம் பிரச்சனைகள் ஏற்படும் என்பதை விவரிக்க இது ஒரு எடுத்துக்காட்டு. கடவுளின் லீலைகளுக்கு எல்லைதான் ஏது? அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒன்று பக்தி அதிகமாகும் அல்லது பக்தி மறைந்து போகும். தர்ம குப்தர் கொஞ்சம் கூடக் கவலை படவில்லை. அவர்

என்னிடம், **“சங்கர் பட், நடந்த விஷயங்களுக்கு வருத்தம் அடையாதே. நடந்தவை,நடந்து கொண்டிருப்பவை மற்றும் நடக்கபோகும் அனைத்தும் அவருடைய லீலைதான். பிரம்மா எதை எழுதியிருக்கிறாரோ அது நடந்தே தீரும்**” என்றார்.

அந்த பிராமணரின் வீட்டில் சாப்பாட்டுக்குத் தேவையான எந்தவித மளிகைப் பொருட்களும் இல்லை. அவரிடம் பணம் இல்லை. எப்படியும் அவரும் அவருடைய குடும்பத்தினரும் பட்டினியாகத்தான் இருக்கப் போகிறார்கள். இப்போது விருந்தினர்களாக நாங்களும் சேர்ந்து கொண்டோம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளால் எங்களுக்குத் தங்க ஒரு இடம் கிடைத்தது. இதுவே எங்களுக்கு போதும் என்று தோன்றியது. பசி மற்றும் முழுமையான சோர்வு ஏற்படும் போது; கடன் அளித்தவர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படும் நேரங்களில்; ஒன்றை செய்யலாமா அல்லது வேண்டாமா என்று தெரியாமல் குழப்பத்தில் மாட்டிக்கொண்டு தவிக்கும் போது; இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும் போது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் ஒரே அடைக்கலம் என்பதை நான் உணர்ந்தேன். நாங்கள் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் குளித்துவிட்டு வந்தோம். நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் நாமத்தை ஜெபிக்கத் தொடங்கினோம், இந்த சூழ்நிலையில் அவருடைய நாமத்தை நினைவூட்டி கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. அந்த ஏழை பிராமணனின் வீட்டில் விளக்கேற்றி கடவுளை வணங்குவதற்குத் தேவையான எண்ணெய், திரி அல்லது மற்ற பொருட்கள் எதுவும் இல்லை. நாங்கள் ‘**ஸ்ரீ ஸ்ரீபாத ராஜம் சரணம் ப்ரபத்யே**’ என்கிற நாமத்தைக் கூறும் போதெல்லாம் அந்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் மீண்டும் கூறினர். அந்தத் தெருவில் அக்கம் பக்கத்தில் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளும் அங்கு கூடினர். அவர்களும் பக்தியுடன் ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை ஜபித்தனர்.

இதற்கிடையில், சில விவசாயிகளும் அந்த பிராமணரின் வீட்டுக்கு வந்தனர். நான்தான் அந்த பிராமணரின் கடனைத் திருப்பி அடைப்பதற்கு உத்தரவாதம் அளித்தவன் என்றும் நான் ஒரு மஹாபுருஷரின் சீடன் என்கிற காரணத்தால் என்னுடைய தெய்வீக சக்தியின் மூலம் அந்த பிராமணரின் கடனைத் திருப்பி அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்கிற விஷயம் கிராமம் முழுவதும் பரவியது. என்னிடம் தெய்வீக சக்தி இல்லை என்றால் இவ்வாறு திடமாக உத்தரவாதம் அளித்திருக்க மாட்டேன் என்றும் நான் ஒரு சிறந்த ஜோசியக்காரன் என்பது போன்ற விஷயங்கள் பரவின. அந்த கிராமத்தில் இருக்கும் விவசாயிகளுக்குப் பந்தயம் கட்டுவதில் அதிக விருப்பம். சிலர் அந்த பிராமணர் பணத்தைத் திருப்பி அளித்து விடுவார் என்றும் சிலர் அவரால் கடனைத் திருப்பி அளிக்க முடியாது என்றும் பந்தயம் கட்டினர். என்ன ஒரு மோசமான விதி! வசதியான நிலைமையில் இருந்த நான் தேவையில்லாத துயரத்தை நானே ஏற்படுத்தி கொண்டேன் என்று நினைத்துக்கொண்டேன். சாத்தியமற்ற ஒரு வாக்குறுதியை வழங்கிவிட்டு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டேன். நான் அந்த பிராமணரின் கடனை திருப்பி அளிக்க முடியாமல் கிராம பஞ்சாயத்திற்கு அழைத்து செல்லப் படுவேன் என்று

எண்ணினேன். என்னுடன் சேர்ந்து ஸ்ரீ தர்ம குப்தரும் பிரச்னைக்கு ஆளாவார். இதற்கும் மேலாக என்னுடைய வெற்று சத்தியத்தை நம்பி சிலர் பந்தயம் வேறு கட்டியுள்ளனர். மிகக் குறைந்த பட்சமாக, என்னுடைய பயனற்ற சத்தியம் சூதாடிகளுக்கு பந்தயம் கட்டுவதற்கு ஒரு காரணமாக இருந்தது. தன் லீலைகள் மூலம் ஒவ்வொரு நொடியும் களிப்படையும் தெய்வீகப் பொழுதுபோக்குக் கலைஞரான ஸ்ரீ ஸ்ரீபாதரின் புனிதமான பாதங்கள் மட்டும்தான் எனக்கு ஒரே அடைக்கலம். நாரத முனிவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவிடம் கூறிய, **“சத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்”** என்கிற வார்த்தைகள் என் நினைவுக்கு வந்தது. ஸ்ரீ நாராயணன் தன் சேவகர்களின் வார்த்தைகளைக் கவனித்து அந்த வார்த்தைகளை உண்மை ஆக்குவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று தோன்றியது.

அந்த கிராமத்தில் சரபேஸ்வர சாஸ்திரி என்கிற பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் மந்திர சாஸ்திரத்தில் வல்லுநர். சில பிசாசுகளின் துணையுடன் கடந்த,நிகழ் மற்றும் எதிர் காலங்களைப் பற்றி கூறிக்கொண்டிருந்தார். சில சூதாடிகள் சரபேஸ்வர சாஸ்திரியை சந்தித்து இந்த பந்தயத்தைப் பற்றி கூறினர். அவர் சில பிசாசுகளிடம் அடைக்கலம் அடைந்து அந்த பிராமணன் கடனை திருப்பி அளிக்க மாட்டார் என்று கூறினார். இந்த தகவலால் பந்தயப் பணத்தின் தொகை அதிகரித்தது. அந்த கிராமத்தில் உள்ள சூதாடி விவசாயிகள் நூறு வராகனுக்கு பந்தயத்தை தொடங்கினர். சரபேஸ்வர சாஸ்திரியா அல்லது சங்கர் பட்டா, இவர்களில் யார் சிறந்தவர் என்பதை இது தீர்மானிக்க போகிறது என்ற காரணத்தினால் இந்த பந்தயத்தில் அவர்கள் ஆர்வமாக இருந்தனர்.

“ஸ்ரீ ஸ்ரீபாதா! நீங்கள்தான் இந்த சூதாடிக் கூட்டத்திற்கு மத்தியில் என்னை சிக்க வைத்தீர்கள்; நீங்கள்தான் என்னை கிராமப் பஞ்சயத்துக்கு அழைத்துச் செல்ல தயார் படுத்தினீர்கள்; அந்த ஏழை பிராமணனுக்கு நம்பிக்கை அளித்த பின்னர் பிரச்சனைகளை உருவாக்க நினைத்தீர்கள்; உண்மையான சீடரான ஸ்ரீ தர்ம குப்தரையும் சங்கடத்தில் ஆழ்த்தி உள்ளீர்கள். இந்த தெய்வீக திருவிளையாடலின் உள்ளர்த்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு கொஞ்சம்தான் ஞானம் இருக்கிறது மேலும் எனக்கு ஆன்மீக சக்தி எல்லாம் இல்லை. ஜோசியம் போன்ற சிறந்த கலைகள் எல்லாம் எனக்கு தெரியாது. நான் ஜபம்,தபம், யோக பயிற்சிகள், கடுமையான கோட்பாடுகள் மற்றும் பக்தி போன்றவைகளை கடைபிடிப்பதில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதரின் சரிதாம்ருதத்தை ஒரு ஆர்வத்தின் காரணமாகத்தான் எழுத வேண்டும் என்று எண்ணினேனே ஒழிய அதற்குத் தேவையான எந்த தகுதியும் எனக்குக் கிடையாது. என்னை எப்படிக் காப்பற்றி உயர்த்தப் போகிறார் என்பது அவருடைய விருப்பம் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். வைராக்கியம் உள்ள ஒருவர் மன்னரை விட வலிமையானவர் என்று ஒரு பழமொழி உண்டு. இதுவரை என்னிடம் இல்லாத ஒரு துணிச்சல் என்னுள் துளிர்விடத் தொடங்கியது. எது நடக்குமோ அது நடந்தே தீரும்,ஸ்ரீ ஸ்ரீபாதர் ஏதாவது ஒரு வழியில் என்னை காப்பாற்றுவார் என்று திடமாக நம்பினேன்.

சரபேஸ்வர சாஸ்திரிக்கு ஒரு சகோதரி இருந்தாள். அவளும் அதே கிராமத்தில்தான் வசித்து வந்தாள். ஒரு நாள் விடியற்காலையில் அவளுக்கு ஒரு கனவு வந்தது. அந்த கனவு என்னவென்றால், அவளுக்கு காய்ச்சல் அதிகமாக இருந்தது, அவள் கணவர் இறந்து அவள் விதவை ஆகிவிட்டாள். அவள் தன் சகோததரர் சரபேஸ்வர சாஸ்திரியிடம் இந்த கனவின் வெளிப்பாடு பற்றி விசாரித்தாள். சரபேஸ்வரன் தான் வணங்கிக் கொண்டிருக்கும் பிசாசிடம் இந்த விஷயத்தைப் பற்றி கேள்வி எழுப்பினார். வேற்று நாட்டில் இருக்கும் அவளுடைய கணவன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது சில திருடர்கள் அவனிடம் இருந்த பணத்தைக் கொள்ளை அடித்து விட்டு அவனை கொன்று விட்டதாக அந்த பிசாசு கூறியது.

இதைக் கேட்டதும் சரபேஸ்வர சாஸ்திரியின் சகோதரி மிகவும் அழுதாள். இதற்கிடையில் கடனைத் திருப்பி அளிப்பது குறித்து பந்தயம் செய்த சிலர் சரபேஸ்வர சாஸ்திரியின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் சங்கர் பட் என்னும் பெயர் கொண்ட ஒரு சிறந்த மனிதர் அந்த கிராமத்தில் தங்கி இருப்பதாக கூறினர்; அவரால் நிகழ்த்த முடியாத செயல்களைக் கூட நிகழ்த்த முடியும்; அவர் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்னும் தெய்வத்தை வணங்குபவர்; மேலும் அந்த கனவின் உண்மையான அர்த்தத்தை அவரிடம் கூடக் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்று கூறினர். அவள் தன் சகோதரனைத் தவிர வேறு எந்த பண்டிதரும் சிறந்தவர் என்று இதுவரை கேள்விப்பட்டதில்லை. முதல் முறையாக தன் சகோதரரை விட ஒரு பண்டிதர் சிறந்தவர் என்று கேள்விப்பட்டிருப்பதால் அவரிடம் சென்று தன் பிரச்சனையைக் கூறி ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள விரும்பினாள்.

நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்து வரப்பட்டாள். அவள் மிகவும் பரிதாபமாக என்னிடம், “**அண்ணா! தயவுசெய்து என் மாங்கல்யத்தை காப்பாற்றுங்கள்**” என்று வேண்டிக்கொண்டாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் பஞ்சதேவ மலையில் நடைபெற்ற விவசாயியின் திருமணத்தின் போது அளித்த அக்ஷதை என்னிடம் இருந்தது. எனக்கு ஏதோ ஒரு தெய்வீக அகத்தூண்டல் ஏற்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் கையாலேயே இந்த அக்ஷதைகளை அளித்திருப்பதால் நான் அதை அவளிடம் கொடுத்தால் அந்த பெண்ணின் மாங்கல்யம் பலம் பெறும் என்று மனதில் பட்டது. நான் அவளிடம், “**அம்மா, இந்த மந்திர அக்ஷதைகளை எடுத்துக்கொள். இது மஞ்சளுடன் கூடிய சொர்ண அக்ஷதைகள். இதை உன் பூஜை அறையில் பத்திரமாக வைத்துக்கொள். உன் கணவர் இன்னும் சில நாட்களில் உன்னிடம் வந்து சேருவார். இது சத்தியம்**” என்று கூறினேன்.

இந்த விஷயத்தை கடனை திருப்பி அடைப்பது குறித்து பந்தயம் கட்டிய விவசாயிகள் சரபேஸ்வர சாஸ்திரியிடம் தெரிவித்தனர். அவர் மிகவும் கோபமடைந்தார். அவருடைய சகோதரி தன் கணவர் மட்டும் வீடு திரும்பி விட்டால் தான் அந்த

ஏழை பிரமணனுடைய கடனை அடைப்பது மட்டுமல்லாமல் சங்கர் பட்டை தன் குருவாக ஏற்றுக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை வணங்குவதாக கூறினாள்.

மூன்று நாட்கள் முடிந்தது. இந்த மூன்று நாட்களும் விவசாயிகள் நான் தங்கியிருந்த ஏழை பிராமணனின் வீட்டுக்கு உணவு கொண்டு வந்தனர். அவர்கள் எனக்கு சாதகமாக பந்தயம் கட்டியவர்கள். நான் வெற்றி பெற்றால் அவர்களும் வெற்றி பெற்று அந்த பந்தயத்தில் நிறைய பணம் கிடைத்து லாபம் அடைவார்கள்.

மூன்று நாட்களுக்கு பிறகு நான்காவது நாளன்று சரபேஸ்வர சாஸ்திரியின் மைத்துனர் தூர தேசத்தில் இருந்து பாதுகாப்பாக வந்தடைந்தார். சரபேஸ்வர சாஸ்திரியின் சகோதரியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நான் அளித்த மந்திர அக்ஷதைகளின் பலன்களால்தான் அவளுடைய சௌபாக்கிய தன்மை தக்கவைக்கப்பட்டது என்று நம்பினாள். பயணத்தின் போது அவள் கணவனை சில திருடர்கள் கொல்ல முற்பட்டபோது, ஒரு முஸ்லீம் மல்யுத்த வீரர் திருடர்களை கொன்று அவரைக் காப்பாற்றினார்.

ஆஹா! ஸ்ரீ ஸ்ரீபாதரின் மகிமைகளுக்கு எல்லைதான் ஏது! சரபேஸ்வர சாஸ்திரியின் அகங்காரம் அழிக்கப்பட்டது. என் வாக்குகள் பலித்தமையால், நாங்கள் தங்கியிருந்த ஏழை பிராமணனின் கடனை சரபேஸ்வர சாஸ்திரி திருப்பி அளித்தார். சரபேஸ்வர சாஸ்திரி என்னையும் தர்ம குப்தரையும் அவர் வீட்டு உபசரிப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். நாங்கள் சம்மதித்தோம்.

சரபேஸ்வரர் எங்களிடம், "ஐயா, நான் தூமாவதி தேவி என்னும் தசமஹாவித்யாவை வணங்குபவன். தந்திர புத்தகங்களின் படி அவள் உண்மையில் உக்ரா தேவி. அவள் மகிழ்ச்சியாக இருந்தால் எல்லா விதமான நோய்கள் மற்றும் துயரங்களை நீக்குவாள். அவள் கோபமாக இருந்தால், அவள் அனைத்து சுகங்கள் மற்றும் சந்தோஷங்களை அழித்துவிடுவாள். அவளிடம் சரணடைந்து விட்டால், எல்லா பேராபத்துகளும் நீங்கி அனைத்து செல்வங்களையும் பெறலாம். அவள் கோபப்பட்டாலோ, பசி மற்றும் தாகத்துடன் இருந்தாலோ சண்டை மற்றும் அனைத்துவிதமான ஏழ்மைகளும் விளைவிப்பாள். நான் அந்த உயர்ந்த அன்னையின் அருளை பெற்றேன். பேயை விரட்டுதல் மற்றும் கொலை செய்வது போன்ற கொடிய பயிற்சிகளின் தீய தன்மைகளை இந்த அன்னை நீக்குவாள். மாந்திரீகத்தால் ஏற்படும் வேதனைகளினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் தங்களை பாதுகாத்துக்கொள்ள இந்த அன்னையை பக்தியுடன் வழிபட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. ஆரம்பத்தில் நான் மக்களின் நலனுக்காக பணத்தின் மீது ஆசை இல்லாமல் வேலை செய்தேன். பின்னர் நான் பேராசை கொண்டவனாக மாறி, மரண பயம் மற்றும் உச்சாடனங்களின் இன்னல்களால் துன்பப்பட்டு கொண்டிருப்பவர்களிடம் அதிக பணம் வசூலித்தேன். இதை அந்த அன்னையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில், எனக்கு ப்ரேதமய ஜகத்தில் உள்ள ஒரு சக்திவாய்ந்த ப்ரேதாத்மாவுடன் தொடர்பு ஏற்பட்டது. அந்த ப்ரேதாத்மாவுடைய சக்தியின் துணையினால் எனக்கு கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களை பற்றி கூறும் அசாத்தியமான சக்தி கிடைத்தது. இந்த ஆவிகள் முடிவில் அவர்களை வணங்குபவர்களை பரிதாபகரமான நிலைக்கு கொண்டு சேர்த்துவிடும். அவற்றை யாரும் வணங்க கூடாது. அப்படி வழிபட்டால், அந்த சக்தியினால் சம்பாதிக்கும் பணம் அனைத்தும் பொதுக் காரியங்களுக்கு மற்றும் பணத்தேவையில் இருப்பவர்களுக்கு தானமாக அளித்துவிட வேண்டும். அப்படி செய்தால் அந்த ஆவிகள் நம்முடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கும். அப்படி செய்யாமல் சுயநலத்துடன் பணம் சம்பாதித்தால், அவை தவறான கணிப்புகள் கூறி அவற்றை வழிபட்டவர்களுக்கு அவமானத்தை தேடிக் கொடுத்து பரம ஏழையாக ஆக்கிவிடும். அதுமட்டுமல்லாமல், சில சமயம் மரணம் கூட சம்பவிக்கும். சுயநலத்தினால் நம்மிடம் உள்ள புண்ணியங்களின் குவியல்கள் குறைந்துவிடும். பின்னர் இறந்தவரின் ஆவி அஷ்ட கஷ்டங்களுக்கு (எட்டு விதமான கஷ்டங்கள்) உட்படுத்தப்படும்.

நான் ஒரு முட்டாள், சம்பாதித்த பணத்திற்கு நியாயமாக நடந்து கொள்ளாமல் சுயநலத்துடன் வாழ்ந்து வந்தேன். அதனால் அந்த இறந்தவரின் ஆவி என் கட்டுப்பாட்டை விட்டு சென்றுவிட்டது. அது தவறாக குறிப்பு அளித்து எனக்கு அவமானத்தை அளித்துவிட்டது. நான் இழிவைச் சந்திக்க நேர்ந்தது. இன்று முதல் நீங்கள்தான் எனக்கு குரு. என்னை தயவுசெய்து சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார். நான் அவரிடம், **"ஐயா, இந்த உலகத்திற்கு அல்லது படைப்பிற்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தவிர வேறு குருவே கிடையாது. நான் என்னை குருவாக நினைத்து கர்வம் கொண்டால், நீங்கள் இதுவரை அனுபவித்த அவமானத்தை காட்டிலும் அதிகமான அவமானங்களை நான் அனுபவிக்க நேரிடும். நாங்கள் குருகட்டாவில் இருந்து கிளம்பும் போது, ஸ்ரீ ஸ்ரீபாதர் தசமஹாவித்யாவை பற்றி சுருக்கமாக கூறினார். அவர் சரியான நேரத்தில் தேவையான அளவு மீதி விஷயங்கள் உங்களுக்கு கற்பிக்கப்படும் என்று கூறினார். நான் உங்களிடமிருந்து தசமஹா வித்யாக்களில் காளி மற்றும் தூமாவதி பற்றி தெரிந்து கொண்டன். ஐயா, தயவுசெய்து என்னைக் குருவாக ஏற்றுக் கொள்ளாதீர்கள். நான் இங்கு சில வினோதமான சூழ்நிலைகளில் மாட்டிக் கொண்டு விட்டேன். இப்போதுதான் அவற்றில் இருந்து வெளியே வந்துள்ளேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் கடினமான துயரங்கள் அளிப்பதில் திறமைசாலி. அந்த கடினமான துயரங்களில் இருந்து தன் பக்தர்களை வெளியே இழுத்து வருவதிலும் அவர் மிகுந்த திறமைசாலி. இந்த உலகம் மற்றும் மற்ற உலகங்களை அடைய ஸ்ரீ ஸ்ரீபாதர் நாமத்தை ஜெபிப்பதுதான் ஒரே வழி"** என்று கூறினேன்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 35

## உக்ரதாரா தேவியைப் பற்றிய விளக்கம்

### தாரா தேவியின் பக்தரை ஸ்ரீ ஸ்ரீபாதர் தண்டித்துக் காப்பாற்றுதல்

நாங்கள் சரபேஸ்வர சாஸ்திரியிடம் விடைபெற்றுக்கொண்டு எங்கள் பயணத்தை தொடர்ந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் நாமத்தை நினைவூட்டி கொள்வதுதான் இந்த உலகம் மற்றும் எல்லா உலகங்களையும் அடைவதற்கான ஒரே வழி. நாங்கள் சிறிது தூரம் பயணித்த பின்னர் ஒரு ஆசிரமத்தைக் கண்டோம். சித்தர் என்ற பெயருடைய முனிவர் ஒருவர் அந்த ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தார். அவர் ஜடப் பொருட்களை முற்றிலும் துறந்தவராக இருந்தார். அவர் மிகவும் சாதாரணமான ஒரு ஆடையை மட்டும் அணிந்திருந்தார். அவர் ஆஸ்ரமத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்த அவருடைய இரண்டு சீடர்கள் எங்களை நாங்கள்தான் சங்கர் பட் மற்றும் தர்ம குப்தரா என்று கேட்டனர். நாங்கள் ஆம் என்றோம். நாங்கள் ஆசிரமத்திற்குள் அழைத்து செல்லப்பட்டோம். தாரா தேவியின் உருவப்படம் ஆசிரமத்தினுள் இருந்தது. சித்தர் தாரா தேவியின் உபாசகர் என்பது புரிந்தது.

சித்தர் எங்களிடம், ”என் குழந்தைகளே, ஸ்ரீ ஸ்ரீபாதர் உங்கள் வருகையைப் பற்றி முன்பே எங்களுக்கு கூறிவிட்டார். ஸ்ரீ குருவின் ஆணைப்படி உங்களுக்கு விருந்தோம்பல் அளிக்கப்படுகிறது. நான் தாரா தேவியின் பக்தன். அந்த அன்னை தனது பக்தர்களுக்கு மோக்ஷத்தை அளிப்பதால் அவள் தாரா என்று அழைக்கப்படுகிறாள். அவள் எந்த முயற்சியும் இல்லாமல் பேசும் சக்தியை அருளி தன் பக்தர்களைக் கொடூரமான விபத்துகளில் இருந்து காப்பாற்றுகிறாள். ஆகவே அவள் நீலாசரஸ்வதி என்றும் அழைக்கப்படுகிறாள். மொத்தம் மூன்று ஹயக்ரீவர்கள் (குதிரை தலை உடையவர்கள்) உள்ளனர். ஒருவர் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரம். அடுத்தவர் ஒரு முனிவர் மற்றும் மூன்றாவது ஒரு அசுரன். ஹயக்ரீவ அசுரனை வதம் செய்ய தாராதேவி நீல உருவம் எடுத்தாள். அவளை வழிபட்டால் சாதாரண மனிதன் கூட பிருஹஸ்பதிக்கு ஈடான பண்டிதன் ஆகிவிடுவான். வசிஷ்ட முனிவர்தான் தாரா தேவியை பாரதவர்ஷத்தில் (இந்தியா) முதன் முதலாக வணங்கியவர். அவளை வசிஷ்டர் ஆராதித்த தாரா தேவி (வசிஷ்டர் வணங்கிய தாரா தேவி) என்று அழைப்பர். நான் பல வருடங்களாக தாரா தேவியை வணங்கிக் கொண்டிருந்த போதிலும் அவளை ஒரு நாள் கூட தரிசனம் செய்ததில்லை. நான் மிதிலா பகுதியில் இருக்கும் மஹிஷி என்னும் கிராமத்தில் இருக்கும் உக்ரதாரா தேவி பீடத்திற்குச் சென்றேன். அங்கு ஒரே பீடத்தின் மேல் தாரா, ஏகஜடா மற்றும் நீல சரஸ்வதியின் உருவச்சிலைகள் இருந்தன. நடுவில் ஒரு பெரிய சிலையும் அதற்கு

இரு பக்கங்களிலும் இரண்டு சிறிய சிலைகளும் இருந்தன. வசிஷ்ட முனிவர் இந்த இடத்தில்தான் தாரா தேவியை வணங்கி அவள் அருளை பெற்றார் என்று பெரியோர்களால் கூறப்படுகிறது.

நான் உக்ர தாராதேவியின் சிலையை வணங்கிய பின் கோவிலை விட்டு வெளியே வந்தவுடன் மிகவும் அழகு மற்றும் மகிழ்ச்சி பொருந்திய ஒரு சிறுமியைக் கவனித்தேன். அவள் கால் கொலுசின் ஓசை கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தது. அந்தச் சிறுமி நடந்த போது அவள் கொலுசின் ஒளி என் மனதில் ரீங்காரமிட்டது. அந்த சிறுமிச் என்னிடம், **“என் மகனே, நீ அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கிறாய். ஒருவேளை என்னைத்தான் இந்த முழு உலகத்திலும் தேடிக் கொண்டிருந்தாய் போலும். இது உண்மையா?”** என்று கேட்டாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இது உக்ரதாரா தேவி தானா அல்லது ஏதாவது பைத்தியக்கார பெண் இவ்வாறு பேசுகிறாளா? உக்ரதாரா தேவி சிவனுடைய சவ உருவத்தின் மேல் ப்ரத்யாலீட முத்திரையில் (காலை அகலமாக விரித்துக் கொண்டு) அமர்ந்திருப்பாள். நீல நிற முக்கண்களுடன் அவள் கத்தரிக்கோல், மண்டையோடு, தாமரை மற்றும் வாள் ஆகியவற்றை தன் கைகளில் வைத்திருப்பாள். அவள் புலித்தோல் அணிந்திருப்பாள். மண்டை ஓடுகளால் ஆன மாலை அணிந்திருப்பாள். இதுதான் பேரானந்தம் மற்றும் மோக்ஷம் அளிக்ககூடிய இந்த அன்னையின் உண்மையான உருவம். எனினும் நான் கண்டது பன்னிரண்டு அல்லது பதிமூன்று வயதுக்கு மேல் ஆகாத ஒரு சிறுமியின் அழகிய உருவம். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்னால் பதிலேதும் அளிக்க முடியவில்லை. திடீரென அந்த சிறுமி பிரகாசத்துடன் ஒளிரத் தொடங்கினாள். அவள் உடலில் இருந்த அனைத்து அணுக்களும் ஒளிரத் தொடங்கியது. அவள் உடல் ஒரு சிறுவனின் உருவம் எடுத்தது. அந்தச் சிறுவனுடைய உடல் தங்க நிறத்தில் மாறியது. அந்த சிறுவனின் கண்கள் தெய்வீகக் குணங்களான அமைதி, இரக்கம் மற்றும் கருணையுடன் கூடிய ஒரு யோகியின் கண்களை ஒத்து இருந்தது. அந்தச் சிறுவன் தன் இரு கால்களிலும் கொலுசு அணிந்திருந்தான். அவன் என்னிடம் **“ஐயா, என் கால்களில் உள்ள கொலுசுகள் எனக்கு மிகவும் இறுக்கமாக இருக்கிறது. அதை கொஞ்சம் கழற்றுகிறீர்களா?”** என்று கேட்டான். நான் அதற்கு சம்மதித்தேன். அவன் என்னிடம், **“நீங்கள் இந்த கொலுசுகளை வைத்துக்கொள்ளுங்கள். அதில் உயிர் சக்தி அடங்கியுள்ளது. இது நீங்கள் எங்கே செல்ல வேண்டும், என்ன சாப்பிட வேண்டும் மற்றும் யாரிடம் பேச வேண்டும் போன்ற எல்லா விஷயங்களையும் உங்களுக்காக முடிவு செய்யும்”** என்றான்.

அவற்றைக் கூறி விட்டு அந்த சிறுவன் மறைந்துவிட்டான். நான் ‘காளிகாட்’டிற்குச் (கொல்கத்தாவில் இருக்கும் புகழ்பெற்ற காளி கோவில்) சென்றேன். நான் அங்கிருக்கும் காளி தேவியின் சிலையை தரிசனம் செய்துவிட்டு தெற்கு நோக்கி பயணித்தேன். புகழ்பெற்ற ஸ்தலமான ‘பூரி’க்கு சென்றேன். மேலும் தெற்கில் உள்ள சிம்மாச்சலம் க்ஷேத்திரத்தை (ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி கோவில்) அடைந்தேன். அதிர்ஷ்டவசமாக பாதகயா க்ஷேத்திரமான பீதிகாபுரத்துக்கு வந்தேன். நான் அங்கு ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்குச் சென்றேன். அங்கிருந்த சுயம்பு






தத்தர் சிலையை தரிசித்தேன். சுயம்பு தத்தரின் சிலைக்கு அருகில் ஒரு பாம்புப் புற்று இருந்தது. அந்தப் புற்றில் தெய்வீக சர்ப்பம் ஒன்று இருந்தது. நான் சுயம்பு தத்தரை தரிசனம் செய்தவுடன் அந்த தெய்வீக சர்ப்பம் தோன்றியது. அந்த சர்பத்தைப் பார்த்தவுடன் என்னுடைய குண்டலினி சக்தி எழும்பத் தொடங்கியது. என் உடல் என் கட்டுப்பாட்டை இழந்தது. ஒரு பைத்தியக்காரன் போல அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தேன். அன்னை தாராவின் நாமத்தை ஜபித்துக் கொண்டே அலறிக் கொண்டிருந்தேன். தெய்வாதீனமாக, க்ஷத்ரிய ஜமீன்தாரான நரசிம்ம வர்மாவின் வீட்டுக்கு அருகில் வந்தேன். மஹிஷி கிராமத்தில் எனக்கு தரிசனம் அளித்த அந்த சிறுமியின் உருவம் என் மனக்கண்ணில் தோன்றியது. அந்த சிறுமியின் உருவம் சிறுவன் உருவமாக மாறியது. அன்று எனக்கு தரிசனம் அளித்த அதே தெய்வீகச் சிறுவன் இப்போது எனக்கு முன் நின்று கொண்டிருக்கிறான். ஸ்ரீ வர்மாவின் வீட்டில் ஒரு குதிரை வண்டி இருந்தது. அதை மனிதன் கூட இழுக்கலாம். அந்த தெய்வீகச் சிறுவன் அந்த வண்டியில் தன் தாய் வழி தாத்தாவின் வீட்டுக்கு செல்ல விரும்பினான். ஸ்ரீ வர்மா தன் வேலைக்காரனை அந்த வண்டியை இழுக்க அழைத்தார். வேலைக்காரன் வந்து நின்றான். அந்த தெய்வீக சிறுவன் வேலைக்காரனை வண்டிக்குள் ஏறச் சொன்னான். அந்த சிறுவன் என்னிடம், **“நீ இந்த வண்டியை இழுக்கவில்லை என்றால், உன் தோலை உரித்து செருப்பாக தைத்து போட்டு கொள்வேன். நான் ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளி. தோலை உரித்து செருப்பு தைப்பது என்னுடைய குடும்பத் தொழில். எருமை மற்றும் பசுக்களின் தோலை விட உன்னை போன்ற மிருகங்களின் தோல் உயர்வானது**” என்றான்.

கட்டாயமான சூழ்நிலையில் அந்த வண்டியை இழுக்க சம்மதித்தேன். மாட்டை ஓட்டுவதற்கு பயன்படுத்தப்படும் குச்சி போன்ற ஒரு குச்சியை அந்த சிறுவன் தன் கையில் எடுத்துக் கொண்டான். அந்த மாட்டு வண்டியை இழுப்பதற்கு நான் அனைத்து வகையான துன்பங்களையும் அனுபவித்தேன். தெய்வீகச் சிறுவன் தன் கையில் இருந்த குச்சியை கொண்டு என்னை பலமாக அடித்தான். இருவருடைய உடல் எடையும் இருபது பேருக்கு ஈடான எடை போல இருந்தது. அந்த வண்டியை இழுப்பதற்காக நான் பல்வேறு விதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது அதை அதிகரிக்கும் விதமாக அந்தச் சிறுவன் குச்சியை கொண்டு என்னை அடித்துக் கொண்டிருந்தான். நான் எப்படியோ பலமான வலியுடன் இரத்தம் சொட்ட வண்டியை அந்த சிறுவனின் தாய்வழி தாத்தா வீடு வரை இழுத்து வந்துவிட்டேன். அந்த சிறுவனுடன் வந்த வேலைக்காரன் என் நிலையை பார்த்து மிகவும் வருத்தமடைந்தான். எனினும் அந்தச் சிறுவன் இவை அனைத்திலிருந்தும் இன்பத்தை அனுபவிக்கும் கொடூர எண்ணமுடையவனாகவே இருந்தான். என்னிடம் அன்பு செலுத்தினால் தண்டிக்க படுவான் என வேலைக்காரனை அந்த சிறுவன் எச்சரித்தான். நான் அரை நிர்வாணமாக காட்சி அளித்தேன். அந்த சிறுவன் வீட்டினுள் சென்று தன் இரண்டு கைகள் முழுவதும் மிளகாய்த்தூளை அள்ளிக் கொண்டு வந்தான். என் உடலிலிருந்து இரத்தம் வெளியாகி கொண்டிருந்த



பகுதிகளில் எல்லாம் மிளகாய்த்தூளை தேய்த்தான். மஹிஷி கிராமத்தில் அளிக்கப்பட்ட இரண்டு கொலுசுகளும் என் இடுப்பில் இருந்தன.



இதற்கிடையில் தெய்வீக சிறுவனின் தாய்வழி பாட்டியான புண்ணியவதி ராஜமாம்பா வெளியே வந்தாள். அவளுக்கு புண்ய ரூபிணி என்ற இன்னொரு பெயரும் இருக்கிறது. அவளைக் கண்டவுடன் என் உடல் எரிச்சல் குளிர்ச்சி அடைய தொடங்கியது. அவளுடைய கணவர்தான் சத்ய ருஷீஸ்வரர் என்று புகழ்பெற்ற, ஸ்ரீ பாப்பண்ணார்யா. அவர் என்னிடம், **"குழந்தாய், உன்னுடைய கிராமம் எது? எங்கிருந்து வந்திருக்கிறாய்? நீ சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்ட பின் உணவருந்திவிட்டு செல்லலாம்"** என்று ஹிந்தியில் பேசினார். அந்த வேலைக்காரன் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய கொடூரமான நடத்தைகளை அவருடைய தாய்-வழி தாத்தா மற்றும் பாட்டியிடம் தெரிவித்தான்.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், **"பாட்டி, இந்த வேலைக்காரன் பொய் சொல்கிறான். அவருக்கு ரத்தம் எதுவும் வரவில்லை. அது வெறும் வியர்வைதான். நான் மிளகாய் பொடியை தேய்க்கவே இல்லை. அது சந்தனப்பொடி"** என்றார். அந்த வேலைக்காரனை சென்று சோதிக்க சொன்னார். சோதனைக்கு பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியவை அனைத்தும் உண்மையாக இருந்தது. ஸ்ரீ பாப்பண்ணார்யா, **"ஸ்ரீ ஸ்ரீபாதா, நீ உண்மை விளம்பி. நீ ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும் அடையாளம் இருக்கிறது என்று கூறினால் அங்கு ரத்தக் கறை இருக்கும். அங்கு சந்தனப்பொடி இருக்கிறது என்று கூறினால் அங்கு சந்தனப்பொடி இருக்கும். நீ கூறும் வார்த்தைக்கு ஏற்றார் போல் அவை அங்கு இருக்கும். நீ உண்மையில் உக்ரதாரா தேவியின் உருவகம் என்று தோன்றுகிறது. உக்ரதாரா பேச்சின் செயல்திறனை அருளுவாள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். உண்மையில் நீ உக்ரதாராவின் உருவகம். மேலும் நீ உன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றார் போல் அனைத்து விதமான பொருட்களின் குணம் மற்றும் பண்புகளை மாற்ற கூடியவன். தயவுசெய்து உன்னுடைய விளையாட்டுப் பொழுதுபோக்குகளை நிறுத்திவிட்டு துரதிர்ஷ்டம் நிறைந்த இவருக்கு கருணை காட்டு"** என்று கூறினார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் உற்றுநோக்கி, "தாத்தா, நீங்கள்

பேசுவது உண்மை. என்னுள் விருப்பம் எழுவதும் அது நிறைவேற்றப்படுவதும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் நடைபெறும் என்று நீங்கள் கூறினீர்கள். அது உண்மையா அல்லது இல்லையா என்று முடிவு செய்வதற்கு வேதங்களின் உதவி தேவை. இந்த அந்நியன் ஒரு சத் பிராமணன். இவர் உக்ரதாராவை வணங்குபவர். எனினும், அவர் எந்த குருவிடமும் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் தானாகவே சந்நியாச தர்மத்தை பெற்றுக் கொண்டு விட்டார். இவர் தந்தை அனைத்து வகையான துன்பங்களையும் மேற்றக்கொண்டு இவரை வளர்த்து ஆளாக்கினார். இவர் கருவில் இருந்த போது இவர் அன்னை பெரும் வலியில் அவதிப்பட்டாள். இவர் பிறக்கும் போது இவர் அன்னைக்கு மிகுந்த இரத்தப்போக்கு ஏற்பட்டது. அச்சமயத்தில் அவள் அனுபவித்த வேதனை இரத்தம் வழியும் காயங்களில் மிளகாய் பொடியை தேய்த்தால் ஏற்படும் எரிச்சல் உணர்வு போல இருந்தது.

நரசிம்ம வர்மா வீட்டில் இருந்த வேலைக்காரன் பூர்வஜென்மத்தில் இவருடைய தந்தை. அந்த வேலைக்காரனின் மனைவி இவருடைய தாய். இறந்த பெரியவர்களுக்கு முறையாக சடங்குகள் செய்யாவிட்டால் தீய பலன்களை அளிக்கும். இவர் சந்நியாசி ஆகிவிட்டதால் இவருடைய பெற்றோர்களுக்குச் சடங்குகள் செய்யவில்லை. இவருடைய பாவ கர்மா மற்றும் புண்ணிய கர்மா இவரை பாதகயா க்ஷேத்திரமான ஸ்ரீ பீதிகாபுரத்துக்கு இழுத்து வந்துள்ளது. இந்த சிறு துன்பங்களின் மூலம் பாவ கர்மாக்களை அனுபவிக்க செய்து அதன் தீய விளைவுகளை தடுத்து விட்டேன். ஒரு குழந்தை தாயின் கருவறையில் ஒன்பது மாதங்கள் இருக்கும். ஒருவர் காசி க்ஷேத்திரத்தில் ஒன்பது மாதங்களோ, அல்லது ஒன்பது நாட்களோ அல்லது ஒன்பது நாழிகைகளோ தங்கியிருந்தால் மூதாதையர்களின் சாபங்கள் ரத்து செய்யப்படும். ஸ்ரீ பீதிகாபுரம் காசிக்கு இணையான ஒரு க்ஷேத்திரம். இவர் தன்னுடைய பூர்வ ஜென்மத்து பெற்றோர்களுடன் ஒன்பது நாட்கள் இந்த க்ஷேத்திரத்தில் தங்கியிருந்தால் இறந்தவர்களின் ஆவிகளால் ஏற்படும் சாபங்கள் அனைத்தும் நீக்கப்படும்" என்று கூறினார். அவர் கூறியபடியே நான் செய்தேன். எனக்கு அவருடைய அருளும் ஆசீர்வாதமும் கிடைத்தது. அவர் அன்று எனக்கு அளித்த கொலுசை பத்திரமாக என் பூஜை அறையில் பாதுகாப்பாக வைத்தேன். நான் உக்கிரதாரா மந்திரத்தில் பூர்ணத்துவம் பெற்றேன். என்னுடைய தந்திர சக்தியின் மூலம் கடுமையான நோய்களை குணமாக்கி கொண்டிருக்கிறேன்.

நீங்கள் இருவரும் இங்கு வருவதற்கு முன்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் என் மனக்கண்ணில் தோன்றி சங்கர் பட்டும் தர்ம குப்தரும் இந்த வழியில் வருவார்கள் என்றும் நான் உங்களுக்கு உணவளித்து, தங்க இடமளித்து, இந்த கொலுசுகளை அளிக்க வேண்டும் என்று கூறினார்" என்று சித்தர் விவரித்து முடித்தார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 36

## வேதாந்த சர்மா அளித்த விவரங்கள் - மாதங்கியின் வழிபாடு

### மாதங்கியின் வழிபாடு

நானும் ஸ்ரீ தர்ம குப்தரும் மகா பிரசாதமாக ஸ்ரீ ஸ்ரீபாதர் அளித்த கொலுசுகளை எடுத்துக்கொண்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். முந்தைய நாள் இரவு முழுவதும் அந்த கொலுசின் இனிமையான ஓசை எங்கள் மனதில் எதிரொலித்து கொண்டே இருந்தது. ஒருவர் ஓம் என்னும் ஓசையை எந்தவித முயற்சியும் இல்லாமல் இதயத்தில் உள்ள அனாகத சக்கரத்தில் கேட்கலாம் என்று படித்திருக்கிறேன். ஆனால் நேற்று இரவு எங்கள் இதயங்களில் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய கொலுசின் இனிமையான ஓசையை கேட்டோம். சக்தி அனாகத சக்கரத்தில் இருந்து மற்ற சக்கரங்களுக்கு பாய்ந்தது. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த போது எங்களுடைய உடலில் உள்ள நரம்புகளில் ஒரு புதுவித சக்தி உருவாவது போல் தோன்றியது.

நாங்கள் நடந்து செல்லும் போது எங்களுக்கு கொலுசின் ஓசையும் கேட்டது. நாங்கள் நின்ற போது கொலுசின் ஓசையும் நின்றது. இதற்கிடையில் அருகில் இருக்கும் கிராமத்தில் வயலுக்கு நடுவில் ஒரு ஆசிரமம் இருப்பதைக் கவனித்தோம். அந்த கிராமத்தின் புறநகர்ப்பகுதியில் தாழ்ந்த ஜாதி மக்கள் வசித்தனர். நாங்கள் இருவரும் இந்த இடத்திற்கு அருகில் ஆசிரமம் எப்படி வந்தது என்று விவாதித்துக் கொண்டிருந்தோம்.



நாங்கள் ஆசிரமத்துக்கு அருகில் வந்ததும் கொலுசின் ஓசை நின்று போனது. எங்களுக்கு ஒரு ஆழ்ந்த ஆன்மீக அனுபவம் கிடைக்கப்போகிறது என்று எண்ணிக்கொண்டோம். அச்சமயத்தில் அறுபது வயது மதிக்கத்தக்க வயதான துறவி ஒருவர் ஆசிரமத்தில் இருந்து வெளியே வந்தார். அதற்குப் பின்னர் முப்பது வயதுடைய யோகினி அன்னை ஒருவர் ஆசிரமத்தில் இருந்து வெளியே வந்தார். அவர்கள் அன்புடன் எங்களை ஆசிரமத்திற்குள் அழைத்துச் சென்றனர். அந்த துறவி விவரிக்க தொடங்கினார். **"என் பெயர் வேதாந்த சர்மா. நான் பீதிகாபுரத்தில் வசித்து வந்தேன். இப்போது பங்காரய்யா என்று அழைக்கப்படுகிறேன். இவள் பெயர் பங்காரம்மா. நான் பிறப்பால் ஒரு பிராமணன். இந்த பெண் சக்கிலியர் ஜாதியைச் (செருப்பு தைக்கும் தொழிலாளி) சேர்ந்தவள். எங்கள் வீட்டில் மாதங்கியின் பலிபீடம் ஒன்று இருக்கிறது. தசமஹாவித்யாவில் ஒருவரான மாதங்கியை நாங்கள் வழிபட்டு வருகிறோம்"** என்றார்.

எனக்கு திகைப்பாக இருந்தது. இந்த மனிதர் தான் பிராமணன் என்கிறார் ஆனால் அந்த பெண்ணோ சக்கிலிய ஜாதியை சேர்ந்தவள் என்கிறார். இவர்களுடைய திருமணம் வேதத்தில் கூறியுள்ள படி தர்மத்தின் சம்மதத்துடன் எப்படி நடைபெற்றது?

எங்களுக்கு பழங்களும் கிழங்குகளும் கொடுக்கப்பட்டது. பங்காரய்யா கூறத் தொடங்கினார், "ஐயா, அருந்ததி வசிஷ்டரை மணந்து கொள்ள வேண்டிக்கொண்ட போது, அவள் உடலை எந்த சூழ்நிலைக்கு உட்படுத்தினாலும் அவள் தடுக்க கூடாது என்ற நிபந்தனையை வசிஷ்டர் விடுத்தார். அதற்கு அவள் சம்மதித்தாள். ருந்தனம் என்றால் மறுப்பு. துறவி அவளை ஏழு முறை எரித்து பின்னர் உயிர் பெறச் செய்தார். இப்படிச் செய்தும் அவள் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. அதனால்தான் அவள் 'அருந்ததி' ஆனாள். அதற்குப் பின்னர் அவளை தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

நான் பீதிகாபுரத்தில் இருந்த போது மூன்று முறை திருமணம் செய்து கொண்டேன். மூன்று மனைவிகளும் பின்னர் இறந்துவிட்டனர். என்னுடைய விதியை நினைத்து வருத்தம் அடைந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாதர் நகைச்சுவையாக **"தாத்தா, உங்களுக்கு ஒரு பாட்டி கண்டுபிடித்துள்ளேன். அவளை மணந்து கொள்ளாமல் உங்கள் மனைவியாக ஏற்றுக் கொண்டால் உங்களுக்கு உன்னத பிறப்பு அளிப்பேன்"** என்று கூறுவார்.

பீதிகாபுரத்து பிராமண சங்கத்துக்கு ஸ்ரீ பாப்பண்ணார்யாதான் தலைவர். பிராமணர்கள் வேத பண்டிதர்களின் மாநாடு நடத்துமாறு சங்கத்தினரை கேட்டுக்கொண்டனர். தர்மம் மற்றும் கர்மா தொடர்புடைய நுட்பமான இடங்களைப் பற்றி விவாதிக்கும் தேவை இருந்தது, அதற்கேற்றாற்போல் சில முடிவுகள் எடுக்க வேண்டும் என நினைத்தனர். தூர தேசங்களில் உள்ள பண்டிதர்களும் பீதிகாபுரத்தில் இருந்த பண்டிதர்களும் அழைப்பது என முடிவெடுத்தனர். யார் யாரையெல்லாம் அழைப்பது என்ற முடிவு செய்யும் வேலை எனக்கு அளிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய பூணூல் அணிவிப்புக்கு பின்னர் வேதங்களை பாராயணம் செய்ததே இல்லை. சொல்லப்போனால், அவர் தாத்தாவின் பாதத்திற்கு

கீழ் அமர்ந்தோ அவர் தந்தையிடமோ வேதங்களின் பாடங்களை படித்ததில்லை. இருப்பினும் எவரேனும் ஸ்ரீ ஸ்ரீபாதரை சோதிக்க எண்ணி வேதத்தின் ஏதாவது ஒரு அத்தியாயத்தில் இருந்து ஏதாவது அடிகளை கேட்டால் அவர் உடனே கூறிவிடுவார். பாப்பண்ணார்யாவுக்குத் தெரிந்த அனைத்து வேதங்களும் ஸ்ரீ ஸ்ரீபாதருக்கும் தெரியும். வேதங்கள் மட்டுமல்ல வேதாந்தங்களும் வேதத்தின் ரகசியங்களும் கூட அவருக்குத் தெரியும். ஆகவே நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரையும் மாநாடுக்கு அழைக்க முடிவு செய்தோம்.

பிராமணர்களின் உண்மையான எண்ணம் வேறு மாதிரியாக இருந்தது. மாநாட்டுக்காக பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாநாட்டில் தர்மசாஸ்திரம் பற்றி முழுமையாக விவாதிக்கப்பட வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர் தர்மத்தை மீறுவதை வன்மையாகக் கண்டித்து, ஸ்ரீ அப்பலராஜ சர்மாவையும் ஸ்ரீ பாப்பண்ணார்யாவையும் பிராமண ஜாதியை விட்டு ஒதுக்கி வைத்து விட்டு, அந்த தீர்மானத்தின் பிரதியை ஸ்ரீ சங்கராச்சாரியாரின் ஒப்புதலுக்கு அனுப்பி விட்டு, அந்த இரண்டு குடும்பங்களையும் பீதிகாபுரத்தை விட்டு வெளியே அனுப்ப வேண்டும் என்பதுதான் அவர்களுடைய உள் எண்ணமாக இருந்தது. அவர்கள் தங்களுடைய எண்ணத்தை என்னிடம் தெரிவித்த போது நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். பிராமண மாநாட்டின் தலைவராக நான் ஆகவேண்டும் என்ற வலுவான மற்றும் வினோதமான ஆசை எனக்குள் உருவானது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் எல்லா ஜாதியை சேர்ந்தவர்களின் வீடுகளுக்கும் சுதந்திரமாக செல்வது வழக்கம். அவர் மிகவும் சுதந்திரமாக நடந்து கொள்வார். அதே பீதிகாபுரத்தில் பங்காரய்யா மற்றும் பங்காரம்மா என்ற தம்பதி வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரைப் பார்த்து பேச வேண்டும் என்ற ஆசை மிகுதியாக இருந்தது.

திடீரென ஸ்ரீ ஸ்ரீபாதர் தோலினால் ஆன செருப்பு வேண்டும் எனக் கேட்டார். அவருக்கு அப்போது பதினான்கு வயது இருக்கும். பிராமணர்கள் மரத்தினால் ஆன செருப்புதான் அணிய வேண்டும், தோல் செருப்பு அணியக்கூடாது என்ற காரணத்தினால் அவர் வீட்டில் உள்ளவர்கள் அவருடைய வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். யார் மூலமாகவோ இந்த விஷயம் இந்த சக்கிலிய தம்பதிக்கு தெரிய வந்தது. தாங்கள் தோல் செருப்பை ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு அளித்தால் ஆசீர்வதிக்க படுவோம் என்று அவர்கள் எண்ணினார்கள். திடீரென ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்கள் வீட்டில் தோன்றினார். அவருடைய தெய்வீகப் பாதத்தின் அளவு எடுக்கப்பட்டது. பங்காரம்மா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், **“மகாபிரபு, நான் என்னுடைய தோலை பிய்த்து எடுத்து உங்களுக்கு செருப்பாக தைத்து அணிவிக்க விரும்புகிறேன்”** என்று கெஞ்சி கேட்டுக் கொண்டாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துவிட்டு மறைந்துவிட்டார்.

எங்கள் வீட்டில் ஒரு சிறந்த பசு ஒன்று இருந்தது. அது திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது. பங்காரய்யா மற்றும் பங்காரம்மா தம்பதி அதன் தோலை பதப்படுத்தி ஒரு தோல் செருப்பை ஸ்ரீ ஸ்ரீபாதருக்காக தயார்

செய்தனர். இதற்கிடையில் வேத பண்டிதர்களின் மாநாடு ஆரம்பித்தது. ஆதிசங்கரரைப் பற்றி விவாதம் தொடங்கியது. ஸ்ரீ ஆதிசங்கரர் காசியில் மண்டன மிஷ்ராவுடன் விவாதம் செய்தார். உபய பாரதிதேவி (மண்டன மிஷ்ராவின் மனைவி) தான் விவாதத்தில் தோற்கடிக்கப்படும் வரை பரிக்ஷை முடிவடையவில்லை என்று கூறினாள். உபய பாரதிதேவி கலவியில் கேள்வி கேட்டாள். ஸ்ரீ ஆதிசங்கரருக்கு அந்த அறிவியலில் ஞானம் இல்லை. அதனால் அவர் ஆறு மாத காலம் அவகாசம் கேட்டார். ஸ்ரீ ஆதிசங்கரர் தர்மத்தை மீறாமல் கலவியல் ஞானத்தைப் பெற எண்ணினார். இதற்கிடையில், அரசன் ஒருவன் இறந்தான். ஸ்ரீ ஆதிசங்கரர் கூடுவிட்டு கூடுபாயும் ஆற்றலின் மூலம் அரசனின் இறந்த உடலுக்குள் நுழைந்தார்.

தன் உடலைப் பாதுகாப்பாக வைத்து கொள்ளும் படி தன் சீடர்களிடம் தெரிவித்தார். அப்படி ஏதேனும் ஆபத்து நேரிடுமானால் அரச மாளிகைக்கு வந்து சங்கேத பாஷையில் அவரிடம் தெரிவிக்குமாறு கூறினார். அரசி அரசனிடம் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்தை கவனித்தாள். அவள் ஒரு சிறந்த மனிதனின் ஆன்மா தன் கணவரின் உடலுக்குள் புகுந்துள்ளது என்றும் தன் கணவரின் பிராணமய ஜகத் இறந்த உடலுக்குள் ஈர்க்கப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து கொண்டாள். அவளுடைய கணவனின் உடல் காம இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது இந்த சிறந்த மனிதனின் ஆன்மா அந்த அனுபவத்தின் ஞானத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அந்த உடலில் சாட்சியாக மட்டும் விளங்கிக் கொண்டிருந்தது. இந்த சிறந்த மனிதனின் ஆன்மா அவள் கணவனின் உடலில் இருக்கும் வரைதான் அவள் கணவனின் பிராணமயச் சைதன்யம் அந்த உடலில் இருக்கும் என்பதை அறிந்து கொண்டாள். ஆகவே அவள் தன்னுடைய அரசவையில் இருந்தவர்களை அழைத்து அந்த ஊரில் எவருடைய இறந்த உடல் இன்னும் எரிக்கப்படாமல் இருந்தால் அதை உடனடியாக எரிக்க உத்தரவிட்டாள். அரசனின் உருவத்தில் இருந்த ஸ்ரீ ஆதிசங்கரருக்கு அவருடைய உடல் எரிக்கப்பட்ட போது அவருடைய சீடர்கள் இந்த விஷயத்தை சங்கேத பாஷையில் தெரிவித்தனர். ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மரின் அனுகிரஹத்தினால் தன் எரிந்த பாதங்களையும் கைகளையும் மீண்டும் பெற்றார்.

## பிராமண மாநாட்டில் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய அற்புதமான சொற்பொழிவு

ஸ்ரீ ஸ்ரீபாதர் கூட்டத்தாரிடம், "ஒரு ஆத்மா ஒரு நேரத்தில் ஒரே உடலில்தான் இருக்க முடியும் என்றும் அந்த உடலை விட்டு வெளியேறினால் இன்னொரு உடலில் நுழைய முடியும் என்று கூறுகிறீர்கள். அப்படியென்றால் நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். ஒரு ஆன்மாவினால் ஒரே நேரத்தில் மூன்று அல்லது நான்கு உடல்களில் இருந்து கொண்டு தன்னுடைய மூன்று அல்லது நான்கு பிறவிகளின் கர்மாக்களைக் கழிக்க முடியுமா?" என்று கேட்டார். இது மிகவும் சிக்கலான விஷயம் என்றும் இது போல் முன்பு நடந்ததற்கான சான்றுகள் இல்லை என்றும் அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் கூறினார்கள்.

ஶ்ரீ ஶ்ரீபாதர் அதற்கு பதிலளிக்கும் விதமாக, "இது போன்ற நிகழ்ச்சிகள் முன்பு ஏன் நடக்கவில்லை? உங்களுக்கு இது போன்ற விஷயங்கள் இருப்பது தெரியாது. ஒரு சாபத்தின் காரணமாக தேவேந்திரன் பஞ்சபாண்டவர்களாகவும் அவருடைய மனைவி சதிதேவி திரௌபதியாகப் பிறந்து அவர்களை மணந்து கொண்டாள். சதிதேவியும் புரந்தரனும் (இந்திரன்) பூமியில் பிறந்திருந்தாலும் அவர்களுடைய உண்மையான குணம் சொர்க்கத்தில்தான் இருந்தது. அர்ஜுனன் மட்டும்தான் திரௌபதியுடன் தாம்பத்தியத்தில் ஈடுபட்டான். அவள் தர்மருடன் அரசியல் தொடர்பான விஷயங்களை விவாதிப்பாள். தாயைப் போல சுவையான உணவுகள் சமைத்து பீமனுக்கு பரிமாறுவாள். அர்ஜுனனுக்கு காம இன்பங்கள் அளிப்பாள். நகுலனுக்கு லக்ஷ்மியின் உருவமாக தோன்றுவாள். சஹாதேவனுக்கு கடந்த,நிகழ் மற்றும் எதிர் காலங்களை பற்றி நன்றாக தெரிந்ததால் அனைத்து நிகழ்ச்சிகளும் விரைவாக நடைபெற்று குருக்ஷேத்திர போர் விரைவில் முடிவடைய வேண்டும் என விரும்பினான். அதனால் பூமித்தாயைப் போன்ற மிகுந்த பொறுமையுடன் அவனை கையாண்டாள். கடவுளுடைய தர்மமும் மனிதனுடைய தர்மமும் வெவ்வேறு. மிருக தர்மம் வேறு மாதிரியானது. இவை அனைத்தையும் ஒன்றாக கலக்க கூடாது" என்றார்.

நான் அவரிடம், "**புராண காலங்களில் பல வினோதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கலாம். இப்போது அதே போல் நடப்பதில்லை**" என்றேன். ஶ்ரீ ஶ்ரீபாதருடைய கூர்மையான பார்வை என் மீது விழுந்தது, அவர் என்னை நோக்கி, "நீங்கள் மூன்று பெண்களை மணந்து கொண்டீர்கள். மூவரும் இறந்து விட்டனர். மூவருக்கும் வெவ்வேறு ஆத்மாக்களா இருந்தது? அல்லது ஒரே ஆத்மாவா? ஒரு ஆண் மூன்று பெண்களை மணந்து கொள்ள தர்மம் அனுமதி அளித்திருக்கும் போது, மூன்று ஆண்களை ஒரு பெண் மணந்து கொள்ள தர்மம் அனுமதி அளிக்காதா என்ன? ஆத்மா என்றால் என்ன? திருமண தர்மம் என்றால் என்ன?" என்று கேள்வி எழுப்பினார். நான் அந்த கேள்விக்கு ஒரு ஆண் எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம், ஆனால் பெண்களுக்கு அந்த உரிமை இல்லை என்று அழுத்தமாகக் கூறினேன்.

ஶ்ரீ ஶ்ரீபாதர் அதற்கு, "ஓஹோ, நீங்கள் பிரபஞ்சத்தின் தலைவரை விட சிறந்தவரா? மண்டோதரி ஒரு சிறந்த பதிவிரதை. அவள் வாலிக்கு மனைவியாக இருந்த போது அவளுடைய உடலில் இருந்த அணுக்கள் வேறு விதமாக இருந்தது. அவள் ராவணனுக்கு மனைவியாக இருந்த போது அவளுடைய உடலின் அணுக்கள் வேறு விதமாக இருந்தது. அவள் விபீஷணனுக்கு மனைவியாக இருந்த போது அவளுடைய உடலின் அணுக்கள் வேறு விதமாக இருந்தது. ஆத்மா உணர்ச்சிகள் அற்றது. அதற்கு எதன் மீதும் பற்று கிடையாது. அது அழிவில்லாதது, தூய்மையானது மற்றும் மிகவும் புனிதமானது. தாமச குணங்கள் நிறைந்திருந்த வாலிக்கு அவள் மனைவியாக இருந்த போது, அதற்கு ஏற்றார் போல் தன் பொறுப்புக்களை நிறைவேற்றினாள். ராஜஸ குணம் முழுமையாக நிறைந்த ராவணனுக்கு அவள் மனைவியாக இருந்த போது அதற்கு ஏற்றார் போல தன்னை மாற்றிக் கொண்டாள்.

சத்வ குணங்கள் முழுமையாக நிறைந்த விபீஷணனுக்கு மனைவியாக இருந்த போது அதற்கு ஏற்றார் போல தன் கடமைகளை நிறைவேற்றினாள்" என்றார்.

என்னால் பதிலளிக்க முடியவில்லை. சில யோசனைகளுக்குப் பின்னர், "**ஸ்ரீ ஸ்ரீபாதா, நீ கூறுவதை நாங்கள் ஒத்துக் கொண்டால், பெண்களுக்குப் பல கணவர்கள் இருப்பதையும் நாங்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்**" என்றேன். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், "இது கலியுகம். பல கீழ்த்தரமான இனங்கள் உருவாகும். மிருகங்கள், பக்ஷிகள், மரங்கள் மற்றும் பூச்சிகள் கூட மனிதப் பிறவி எடுக்கும். அவற்றின் குணங்களை ஒத்து அதன் பல்வேறு உறவு முறைகள் இருக்கும். தர்மத்திற்கு புறம்பான உறவு முறைகள் உருவாகும் போது கலப்பு சாதிகள் தோன்றும். அவை கலியுகத்தின் முடிவில் அழிந்துவிடும். அசுரத்தனமான சக்திகள்தான் எதிர்பாராத கலப்பு இனங்கள் அல்லது சாதிகள் தோன்றுவதற்கான காரணம். ஆகவே அசுர சக்திகளை அழிக்க வேண்டும். அசுரன் அழிந்து விட்டால் அவன் மீண்டும் பிறக்க மாட்டான், ஆனால் ஒரு அசுரன் பிறக்க வேண்டிய இடத்தில் பத்து அசுரர்கள் பிறந்து விடுவார்கள். தர்மத்தை ஒத்த உறவு முறைகள் மட்டும்தான் தழைத்திருக்கும். ஆகவே மக்கள் அனைவரும் தங்களுடைய குடும்பம், கோத்திரம் மற்றும் ஜாதிக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

அவ்வப்போது சில தெய்வீக ஆத்மாக்களும் தோன்றுவார்கள். அவர்கள் ஒரே ஆத்மாதான். அந்த ஆத்மா ஆண் உருவத்தில் தோன்றினால், அந்த ஆத்மாவின் சக்தியும் பெண் உருவமாகத் தோன்றும். அவர்களுடைய பந்தம் தெய்வீகத் திருமண பந்தம் என்று அழைக்கப்படும். அப்படிப்பட்ட தெய்வீக ஆத்மாக்கள் படைப்பின் ஆரம்பம் முதலே இருக்கிறது. அவர்கள் படைப்பின் முடிவு வரை கூட இருப்பார்கள். அவர்கள் பிரிக்கமுடியாத நெருங்கிய ஒற்றுமையுடன் பராசக்தி மற்றும் பரப்பிரம்ம உருவத்தில் நிலைத்திருப்பார்கள்.

நீங்கள் வேதாந்த சர்மா என்கிற பெயருடைய பிராமணராகவும், பங்காரய்யா என்ற பெயருடைய சக்கிலியனாகவும் ஒரே சமயத்தில் பிறந்துள்ளீர்கள். உங்களுடைய சக்தி உங்களுடைய மூன்று மனைவிகளாகவும், உங்கள் வீட்டில் சமீபத்தில் இறந்த பசுவாகவும் மற்றும் சக்கிலியனின் மனைவி பங்காரம்மாவாகவும் பிறந்துள்ளது. உங்கள் இறந்த மனைவிகள் மற்றும் இறந்த பசுவின் சைதன்யங்கள் தாழ்ந்த ஜாதிப் பெண்ணான பங்காரம்மாவுடன் ஐக்கியமாகியுள்ளது. சைதன்யம் எங்கிருந்து தோன்றியதோ அந்த இடத்திற்கு பின்னோக்கி சென்று ஐக்கியமாகி விட வேண்டும். படைப்பின் மர்மங்கள் மிகவும் ஆழமானது. சப்தரிஷிகளின் சக்தியால் கூட அதைப் புரிந்துகொள்ள முடியாது. பங்காரம்மாவின் உடல் பங்காரய்யாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதால், நீங்கள் தர்மத்தை மீறாமல் அவளுடன் திருமண வாழ்க்கை மேற்கொள்ளலாம். அவளிடமிருந்து உடல் ரீதியான சுகங்களை நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது. நான் தர்மத்தின் ஆசனத்தில் இருந்து கொண்டு இவ்வாறு முடிவெடுத்துள்ளேன். இயற்கைக்குள் நுழைந்தால் அவற்றின் தர்மத்தின் படி கோட்பாடுகள் மற்றும் பழக்கங்களை கடைபிடிக்க வேண்டும். பங்காரம்மா

தன்னுடைய தோலினால் ஆன செருப்பை எனக்குத் தைத்து கொடுக்க விரும்பினாள். நான் அந்த சத்தியத்தை ஏற்றுக் கொண்டேன். அவள் பங்காரம்மாவாக உயிரோடு இருக்கும் போதே அவளுக்கே தெரியாமல் ஒரு பசுவாக பிறந்தாள்.

எதுவும் தெரியாமலேயே அவள் உங்களுடைய மூன்று மனைவிகளாகவும் பிறந்தாள். ஒரு சைதன்யம் மூன்று அல்லது நான்கு உடல்களில் பிரிக்கப்படும் போது ஒவ்வொரு குறிப்பிட்ட உடலும் தான் ஒன்று மட்டும்தான் என்று எண்ணிக் கொள்ளும். அவைகளால் அனைத்து பகுதிகளின் ஒரே தன்மையைக் கண்டுபிடிக்க முடியாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளதுதான் 'காலே பஞ்ச ஸஹஸ்ராணி ஜெயதே வர்ண சங்கரே' என்ற வரியின் அர்த்தம். இது சாதிகளின் கலப்படங்களை பற்றி கூறவில்லை. இது இனங்களின் கலப்பு பற்றிதான் கூறுகிறது. ஜாதிக் கலப்படங்கள் நிகழும் போது அது கீழ்ப் பிறப்புகளை உருவாக்கும். இனங்கள் கலக்கப்படும் போது புதிய சக்தியுடன் புது இனம் ஒன்று உருவாகும். அந்த புது இனம் மனிதன் பரிணாம வளர்ச்சி அடையும் போது தெய்வீகத் தன்மை அடையும். இந்த பூமியில் தெய்வீக இனம் ஒன்று பிறக்கும்.

இந்த பிராமண சபையின் உண்மையான நோக்கம் என்ன என்பது எனக்குத் தெரியும். என் தந்தையையும் தாத்தாவையும் பிராமண ஜாதியில் இருந்து தள்ளிவைக்க வேண்டும் என்பதுதான் உங்களுடைய ஆழ்மனதில் ஒளிந்திருக்கு தீய எண்ணம். ஆகவே வேதாந்த சர்மா நான் உங்களை பிராமண ஜாதியில் இருந்து ஒதுக்கி வைக்கிறேன். இன்றிலிருந்து நீங்கள் பங்காரய்யா என்று அழைக்கப்படுவீர்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆணையிட்டார்.

முழுச் சபையும் திகப்படைந்தது. அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு ஒளி என்னுள் ஐக்கியமானது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் மிகவும் தீர்க்கமாக, "உங்களுடைய கண்களுக்கு முன்பே பங்கரய்யாவின் சைதன்யம் வந்து வேதாந்த சர்மாவினுள் ஐக்கியமானது. இவர் தாழ்ந்த ஜாதிக்காரரா அல்லது பிராமணனா என்பதை இப்போது முடிவு செய்யுங்கள். நீங்கள் எங்களை ஜாதியை விட்டு தள்ளிவைத்துவிட்டு ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரிடம் ஒப்புதல் பெற்றுக்கொள்ள விரும்பினீர்கள். ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யாரால் என்னை என்ன செய்துவிட முடியும்? நான் உங்கள் கண் முன்தான் பிறந்து வளர்ந்துள்ளேன். என் தந்தையிடமோ அல்லது தாத்தாவிடமோ எந்த வேதங்களையும் படிக்காமல் வேதங்களை பாராயணம் செய்கிறேன். நான் பல இடங்களில் ஒரே நேரத்தில் தரிசனம் அளிக்கிறேன். நான் ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யாரை சந்திக்க நேர்ந்தாலும் நான் எதற்கு பயப்பட வேண்டும்? அவர் தினமும் வணங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ சாரதா சந்திரமௌலீஸ்வரராக அவருக்கு தரிசனம் அளித்து அருள் புரிவேன். பின்னர் அவர் என்னை கண்டிப்பாக கடவுள் என்று ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். பின்னர் அவருடைய முடிவு உங்களுக்கு மேலும் வலியை உண்டாக்கும். க்ஷத்ரியர்கள் மற்றும் வைசிய சபை உங்களுடைய முடிவுக்குக் கீழ்பணிய மாட்டார்கள். அவர்கள் வைதீக நடைமுறைகள்

மற்றும் சடங்குகளுக்கு அளிக்கும் ஆதரவை நிறுத்தினாலோ, தானங்கள் அளிப்பதை நிறுத்தினாலோ நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் பட்டினிதான் கிடக்க வேண்டும். என்னோடு சண்டையிட வேண்டும் என நீங்கள் விரும்பினால் உங்களுக்கு எல்லா வழிகளிலும் அழிவுதான் வந்து சேரும். வாழ்க்கையின் நான்கு நிலைகளில் (வாழ்க்கையின் நான்கு நிலைகள்: மாணவன், குடும்பஸ்தன், வானப்ரஸ்தம், சன்யாசம்) பின்பற்ற வேண்டிய கடமைகளை நான் விளக்குகிறேன். பதினெட்டு வகையான வர்ணத்தவர்களும் சுகம் மற்றும் சந்தோஷத்துடன் வாழ வேண்டும். உங்களுடைய கடமைகளை திறம்படச் செய்து தர்மத்தை ஸ்தாபிப்பதில் பங்கு கொள்ளுங்கள். இல்லையென்றால், பல துன்பங்கள் மற்றும் இழப்புகளுக்கு ஆளாக நேரிடும். நான் சாந்தமாகத் இருப்பேன், ஆனால் நீங்கள் குழப்பமான சூழ்நிலைகளுக்கு தள்ளப்படுவீர்கள். குணங்களின் வளர்ச்சியின் போது, இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று சரிப்படுத்திக் கொள்ளும் முறை, இன்னொன்று சரிபடுத்தப்படும் முறை. இரண்டாவது வழி அதாவது சரி படுத்தப்படும் முறைக்கு நிறைய நேரம் அளிக்கப்படும். நீங்கள் சரி செய்யப்படும் முறைக்கு தயார் இல்லை என்றால், நீங்கள் அழிவைத்தான் வரவேற்கிறீர்கள். தேவையென்றால், நான் அழிவின் மூலம் கூட தர்மத்தை நிலை நாட்டுவேன்.

வேறு எந்தவித மாற்று வழியும் இல்லாததால், நான் பங்காரம்மாவை அழைத்துக்கொண்டு ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்திற்கு பயணிக்கும் போது, இந்த இடத்திற்கு வந்தடைந்தோம். நான் மாதங்கி தேவியின் சிலையை இந்த ஆசிரமத்தில் பிரதிஷ்டை செய்து இங்கேயே வாழ்ந்து வருகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த வழியாக குருகாட்டாவிற்கு செல்லும் போது இங்கு தங்கி எங்களை ஆசீர்வதித்து விட்டு, **"நீ இறந்த பிறகு, கர்ம பந்தங்களின் காரணமாக மீண்டும் பிராமணனாக பிறப்பாய். கர்ம பந்தங்களின் காரணமாக பங்காரம்மா சூத்திரப் பெண்ணாகப் பிறப்பாள். பின்னர் நீங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வீர்கள். உங்களுக்கு குழந்தைகள் பிறக்கும். உங்கள் பரம்பரை என்னை வணங்கும் பாக்கியம் பெறுவார்கள். நீங்கள் எல்லா சுகங்களையும் பெற்று வாழ்வீர்களாக!" என்று கூறினார். ஐயா, இதுதான் எங்களுடைய கதை"** என்றார்.

அவர் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் தனக்கு உள்ள தொடர்பைப் பற்றி விளக்கி விட்டு, "ஸ்ரீ ஸ்ரீபாதருடைய கொலுசுகள் உங்களிடம் இருக்கிறது என்றும், நீங்கள் இந்த வழியில் பயணிக்கும் போது, அதை நான் பெற்றுக் கொண்டு அதற்கு பதிலாக தோலால் ஆன செருப்பை உங்களிடம் ஸ்ரீ ஸ்ரீபாதர் அளிக்கச் சொன்னார்.

நாங்கள் மதங்க முனிவரின் மகளான மாதங்கி தேவியை வணங்குகிறோம். அவளை வணங்கினால் அபரிமிதமான இல்லற பேரின்பங்களைப் பெறலாம். அவளை ராஜமாதங்கி, கர்ணமாதங்கி மற்றும் பல பெயர்களில் அழைக்கலாம். ஒரு முறை ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்தூல உடலுடன் எங்கள் ஆஸ்ரமத்தில் காட்சி அளித்தார். அச்சமயத்தில் பங்காரம்மா பால் காய்ச்சி கொண்டிருந்தாள்.

தோல் செருப்பின் தோலுக்குச் சொந்தமான பசு தன் தலையை ஆட்டிக் கொண்டே எங்கள் முன் கடந்து சென்று எங்களுக்கு தரிசனம் அளித்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர்

எங்களிடமிருந்து பாலைப் பெற்றுக்கொண்டார். நாங்கள் வணங்கிக் கொண்டிருக்கும் மாதங்கியின் சிலை அவர் பெயரில் அமையவிருக்கும் சமஸ்தானத்தில் உள்ள அத்தி மரத்தின் பல அடி ஆழத்திற்குக் கீழ் சென்றடையும் என்று கருணையுடன் அறிவித்தார். அதைப் பல சித்த புருஷர்கள் வணங்குவார்கள் என்றும் கூறினார். அவர் பங்காரம்மாவை அழைத்து, "**அம்மா, உன் கணவர் மிகவும் தகுதி வாய்ந்தவர். நீ அடுத்த பிறவியில் அவரிடமிருந்து எல்லா சுகங்களையும் அனுபவித்து கொள். நான் உனக்காக தங்கத்தினால் ஆன திலகத்தை (உச்சிப்பொட்டு) தயாராக வைத்துள்ளேன். நான் உனக்காக மிகவும் புனிதமான திருமாங்கல்யமும் தயார் செய்து வைத்துள்ளேன். அவை ஹிரண்ய லோகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. அடுத்த பிறவியில் நான் ஆசீர்வதித்து என் கையாலேயே உங்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்**" என்று கூறினார்.

ஐயா, நீங்கள் எங்கள் கதையை கேட்டீர்கள். எப்போதும் சித்த மங்கள ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்கிறீர்கள். அதன் மூலம் நீங்கள் கண்டிப்பாக மகா புருஷர்களின் அருளைப் பெறுவீர்கள். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய கைகள் மற்றும் கால்களாக சித்தர்கள், மஹாசித்தர்கள் மற்றும் மஹாயோகிகள் விளங்குகிறார்கள். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தீர்மானத்தை அவர்கள் மூலம் மேற்கொள்கிறார். அவர் ஒருமுறை ராஜமாதங்கி தேவியாக காட்சி அளித்து எங்களுக்கு அருளினார். முழுப் படைப்பு மற்றும் எல்லா ரகசியங்களும் அவரின் கைகளில்தான் உள்ளது. நீங்கள் எப்போதும் அவரையே நினைவில் கொண்டு, தியானித்து வணங்குங்கள். எல்லா சித்திகளும் அவர்தான். அவர் உங்களுடைய தாயைப் போல உங்களைப் பாதுகாப்பார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களின் மீது காட்டும் அன்பு ஒரு கோடி அன்னையின் அன்பை விட உயர்வானது" என்று கூறி முடித்தார்.


**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 37

## சின்னமஸ்தா தேவி பற்றிய வர்ணனை

பங்காரய்யா மற்றும் பங்காரம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு அவர்கள் அளித்த ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தோல் காலணிகளை எடுத்துக் கொண்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் ஒரு காட்டுப் பகுதியை கடந்த போது ஒரு ஆலமரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டோம். சில யோகினிகள் கூட்டமாக அங்கு வந்தனர். அவர்கள் எங்களை பார்த்து, **“இது மிகவும் துன்பமான நேரம். நீங்கள் இந்த இடத்திற்கு வருவதற்கு தகுதியானவர்கள் கிடையாது. நாங்கள் இங்கு சின்னமஸ்தா தேவியை வணங்குகிறோம். அவள் மிகவும் ரகசியமான குணமுடையவள். ஆண்கள் இந்த இடத்தில் நுழைவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இது ஒரு தெய்வீக நிலம். இங்கு யார் வந்தாலும் அவர்கள் உயிருடன் செல்லமாட்டார்கள்”** என்று கூறினார்கள். இவற்றை கேட்டவுடன் எங்களுடைய உயிர் சக்திகள் சென்றுவிட்டது போல் உணர்ந்தோம். பின்னர், ஒளி பொருந்திய ஒரு யோகினி அன்னை அங்கு வந்தாள். அவளுடைய கண்கள் எரியும் கரித்துண்டுகள் போல இருந்தன. அவளுடன் வந்த யோகினிக் கூட்டம் ஒரு சிறிய கூடையில் சின்னமஸ்தா தேவியின் சிலையை கொண்டு வந்தனர். பின்னர் அந்த யோகினி அன்னை, **“எப்படியோ இவர்கள் இங்கு வந்துவிட்டனர். இவர்களுக்கு புடவைகளையும் ரவிக்கைகளையும் கொடுங்கள்”** என்றாள். அவளின் ஆணைக்கிணங்க, யோகினிகள் எங்களுக்கு புடவை மற்றும் ரவிக்கையைக் கொடுத்தனர். அங்கு எரிந்துகொண்டிருந்த நெருப்பில் எங்களுடைய துணிகளை எறிந்தனர்.



நாங்கள் புடவை மற்றும் ரவிக்கை அணிந்து கொண்டவுடன் எங்கள் உடல்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. எங்களுடைய ஆண் தன்மை மறைந்தது. எங்களுக்கு பெரிய மார்பகங்கள் உருவானது. பிறப்புறுப்புகளும் மாற்றம் அடைந்தது. எங்கள் உடல் பெண் உடலாக மாறியது. எங்கள் குணம் பெண்களுடைய குணம் போல மாறின. எங்களுடைய குரலும் பெண்கள் குரல் போல் ஆனது. யோகினிக் கூட்டம் எங்களுக்கு புது பெயர் சூட்டினர். அவர்கள் என்னை சங்கரம்மா என்றும் தர்ம குப்தரை தர்மம்மா என்றும் அழைத்தனர். எங்களுக்கு உண்பதற்கு மாமிசமும் குடிக்க மதுபானமும் அளிக்கப்பட்டது.

## சின்னமஸ்தாவின் முறையான வழிபாடு

பகலில் மனிதனாகவும் இரவில் புலியாகவும் உலாவும் மரலப் புலி பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இது போன்ற தெய்வ வழிபாடு இருக்கிறது என்றும் இவர்கள் போன்ற யோகினிகள் வெறும் தங்களுடைய விருப்பத்தினால் மட்டுமே ஆண்களைப் பெண்களாக மாற்ற முடியும் என்று யூகித்துக் கூட பார்த்ததில்லை, கனவில் கூட கண்டதில்லை. தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. பிரமிப்பு மற்றும் பயம் ஏற்படுத்தும் வகையில் வினோதமான நடனங்கள் அரங்கேறின. பின்னர் அந்த யோகினி அன்னை, "மாறுகின்ற இந்த உலகத்தின் தலைவர்தான் கபந்தன். இந்த சக்தி சின்னமஸ்தா தேவி என்று அழைக்கப்படும். இந்த உலகத்தில் வளர்ச்சி மற்றும் அழிவு எப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அழிவு குறைந்தால் வளர்ச்சியின் அளவு அதிகரிக்கும். பின்னர்தான் புவனேஸ்வரி தேவி (உலகத்தின் தெய்வம்) வெளிப்படுவாள். அதற்கு மாறாக, அழிவு அதிகரித்து வளர்ச்சி குறையும் போது, சின்னமஸ்தா தேவியின் முக்கியத்துவம் அதிகரிக்கும். அந்த மகா அன்னையின் உருவம் மிகவும் ரகசியமானது. ஒரு முறை பார்வதிதேவி அவள் தோழிகளுடன் மந்தாகினி நதிக்கு நீராடச் சென்றாள். குளித்தவுடன் அவளைப் பசி மிகவும் துன்புறுத்தியது. அதனால் அவள் கரு நீல நிறத்திற்கு மாறினாள். அந்த சமயத்தில் அவள் தோழிகளும் உணவு கேட்டனர். அவர்களை அவள் சிறிது நேரம் காத்திருக்க சொன்னாள். சிறிது நேரம் கழித்து அவர்கள் மீண்டும் உணவு கேட்டனர். அவள் அவர்களை இன்னும் சிறிது நேரம் காத்திருக்க சொன்னாள். இது போன்று மூன்று முறை நடந்தது. பின்னர் அந்த மகாதேவி தன் தலையை தன் வாளால் வெட்டினாள். அவளுடைய முண்டத்தின் மூன்று இடத்தில் இருந்து இரத்தம் பிரவாகம் எடுத்தது. அவள் தோழிகள் இரண்டு துளையில் இருந்து வரும் இரத்தத்தையும் மூன்றாவது துளையில் இருந்து வரும் இரத்தத்தை தேவியே குடித்தாள்.

பக்தி சிரத்தையுடன் சின்னமஸ்தாவை நள்ளிரவில் வணங்கினால் நற்பலன்கள் கிடைக்கும். பகைவர்களை வெல்வதற்கும், எதிரி படைகளை தடுத்து நிறுத்துவதற்கும், இராச்சியத்தை வெல்வதற்கு மற்றும் மிகவும் கடினமான மோக்ஷத்தை பெறுவதற்கும்

அவளை வணங்க வேண்டும். திசைகளே அவளுடைய ஆடைகள். அவளுடைய தொப்புளில் '**யோனி சக்கரம்**' இருக்கிறது.

அவளுடன் எப்போதும் கிருஷ்ண (தாமச) மற்றும் ரக்த (ராஜஸ) குணம் நிறைந்த தோழிகள் இருப்பார்கள். யோக பாஷையில், தலை வெட்டுப்பட்ட போதும் உயிரோடு இருப்பது என்பது முழுவதுமாக அந்தர்முகமாக இருத்தல் என்பதன் அடையாளமாக கூறப்படும். சின்னமஸ்தாவை நெருப்பின் இடமான மணிப்பூரக சக்கரத்தில் தியானிக்கப்பட்ட வேண்டும். அவள் ஹிரண்யகசிபுவால் வணங்கப்பட்ட தெய்வம். இவை அனைத்தும் எங்களுக்கு வினோதமாகவும் பயத்தையும் அளித்தது. இதற்கிடையில் நடுராத்திரி ஆனது. இசைக்கருவிகள், நடனம், பாட்டு மற்றும் வாத்தியங்களின் ஓசை அதிகமாக இருந்தது. யோகினிகள் இரண்டு நல்ல பெண்களை பலியிட விரும்பினார்கள். நாங்கள் இருவரும் அங்கு தயாராக இருந்தமையால் எங்களை பலியிடலாம் என்று எண்ணினார்கள். எங்கள் கழுத்தில் வேப்பிலையை கட்டினார்கள். எங்கள் நெற்றியில் பெரிய திலகம் இடப்பட்டது. கூறிய கத்தியால் எங்களின் தலை துண்டிக்கப்பட்டது. இரத்தம் பீறிட்டவுடன் யோகினிக் கும்பல் அந்த ரத்தத்தை வெறித்தனமாக கூச்சலிட்டுக் கொண்டு குடித்தனர். எங்கள் தலை மற்றும் உடல் தூக்கி எறியப்பட்டன. ஆனாலும் நாங்கள் உயிருடன் இருப்பது போல் உணர்ந்தோம். எங்கள் உடல் முழுவதும் வேதனை ஏற்படுத்தும் எரிச்சலை உணர்ந்தோம். அந்த யோகினி கும்பலின் மிகுந்த இழிவான மற்றும் மோசமான வேலைக்கு நாம் பலிகடா ஆகிவிட்டோம் என்று எண்ணினோம்.

பின்னர் எங்களுக்கு தூக்கம் அதிகரித்தது. அந்த தூக்க நிலையில் மங்கலாக ஒரு ஒளியை கண்டோம். அந்த ஒளி எங்களை நெருங்கிய போது அந்த யோகினி கூட்டம் மறைந்து காற்றில் உருகுவது போல அனுபவித்துணர்ந்தோம். எங்கள் தலையும் உடலும் மீண்டும் ஒன்றானது. விடியல் ஆக இன்னும் இரண்டு அல்லது மூன்று நாழிகைகள் இருந்தது. நாங்கள் எப்போதும் தூங்கி எழுவது போல விழித்தெழுந்தோம். நாங்கள் புடவை மற்றும் ரவிக்கை அணிந்திருந்தோம். எங்களுடைய பெண் தன்மை மறையத் தொடங்கியது. எங்களுக்கு ஆண் தன்மை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. எங்கள் துணிகள் எரிக்கப்பட்ட இடத்தில் ஆண்கள் அணியும் புதுத் துணிகள் இருந்தது. எங்களுடைய குளியல் மற்றும் தினசரி வழிபாடுகள் மற்றும் சடங்குகளை முடித்துக்கொண்டு புதுத் துணிகளை அணிந்து கொண்டோம்.

பின்னர் எங்களுடன் இன்னொரு பயணி சேர்ந்து கொண்டார். அவர், "ஐயா, நேற்று நீங்கள் பார்த்தது அனைத்தும் ஒரு யோக நடைமுறை. இது மிகவும் ரகசியமான யோக பயன்பாடு. உங்கள் உடலில் உள்ள பெண் குணம் தூய்மை ஆக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொருவரிடமும் ஆண் மற்றும் பெண் தன்மை ஆகிய

இரண்டும் இருக்கும். அந்த இரு குணங்களும் தூய்மை ஆக்கப்படாவிட்டால் பிரபஞ்சத்தின் சைதன்யம் நம்மிடம் பாயாது. அந்த குணங்கள் தூய்மை ஆக்கப்பட்டவுடன் எவ்வளவு தேவையோ அவ்வளவு பிரபஞ்ச சைதன்யத்தின் சக்தி உங்கள் உடலுக்குள் பாயத் துவங்கும். ஆன்மாவுக்கு ஆண் அல்லது பெண் என்ற பாகுபாடு கிடையாது. இதுதான் இந்த இரு குணங்களின் ஆதாரம் மற்றும் இவை இரண்டையும் மீறிய ஒன்று.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் கருணையினாலும், யோகினிக் கூட்டத்தின் அசாதாரணமான யோக நடைமுறைகளின் மூலமாகவும் ஒப்பற்ற அருளைப் பெற்றுள்ளீர்கள். மிக எளிதில் திறக்க முடியாத சூஷ்மன பாதை உங்களுக்கு திறந்துள்ளது. உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? உங்களுடைய மிகுந்த அதிர்ஷ்டத்தின் காரணத்தால் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தோல் செருப்புகள் உங்களிடம் இருக்கின்றன. நீங்கள் தோலால் ஆன உடலின் சைதன்யத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு தெய்வீக சைதயன்யத்தின் பாய்ச்சலுடன் தொடர்பு பெற்று விட்டீர்கள். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய லீலைகளை அவரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்" என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 38

## பகளாமுகி வழிபாட்டின் விளக்கம்

பீதிகாபுரத்துக்குச் சென்று கொண்டிருந்த போது வழியில் ஒரு சந்நியாசியை சந்தித்தோம். அவர் ஒரு அத்தி மரத்தின் அடியில் அமர்ந்திருந்தார். அவருடைய கண்கள் மிகவும் பளபளப்பாக இருந்தது. நாங்கள் அவரை நோக்கிச் சென்றபோது அவர் நாங்கள்தான் சங்கர் பட்டும் தர்ம குப்தருமா என்று எங்களை பார்த்து கேட்டார். நாங்கள் ஆம் என்று பதில் அளித்தோம். அவர் எங்களைச் சிறிது நேரம் அத்தி மரத்தடியில் இளைப்பாறி விட்டு செல்லுமாறு கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய தோல் காலணிகள் எங்களிடம் இருக்கிறதா என்று கேட்டார். நாங்கள் இருக்கிறது என்று கூறினோம். அவர் அந்த தோல் காலணிகளைத் தன்னிடம் கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக அவரிடம் இருந்த நாகரத்தினத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். நாங்கள் அதற்கு சம்மதித்தோம்.

நான் அவரிடம், **"ஐயா, எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய சரிதாம்ருதத்தை எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய நாளிலிருந்து நான் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பக்தர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய குறிப்பிட்ட வயதில் நடைபெற்ற குறிப்பிட்ட சம்பவங்களை விவரித்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணம் என்னவாக இருக்கும்?"** என்று கேட்டேன். அதற்கு அந்த சந்நியாசி, "ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆதிபைரவி மற்றும் ஆதி பிரம்மன் சேர்ந்த பண்புகள் நிறைந்தவர். அவர் காலத்தை அதிகாரம் செலுத்தும் கால பைரவர். அவர் காலத்தின் உருவகம். அவரும் கால புருஷனும் வெவ்வேறு அல்ல. அவர் மஹாகாலனின் உருவம். ஒரு சம்பவம் எங்கு எப்பொழுது நடைபெற வேண்டும் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். நேரம் மற்றும் காலத்தினால் சிறைப்பட்டவர்களால் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தீர்மானத்தை கண்டுபிடிக்க முடியாது. அவருக்கு இடம் மற்றும் காலத்துடன் விளையாடுவது பந்து விளையாட்டு போன்றது. அனைத்து உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி, அந்த உயிரினங்களின் குணங்கள், அவர்களுடைய கடமைகள், அவர்களின் பண்புகள், அவர்களுடைய கர்மாக்கள் மற்றும் அவர்களுடைய ஆதிக்கம் அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. தான் மெத்தப் படித்தவன் என்ற மமதையில் இருக்கும் ஒருவனை ஒரே நொடியில் அவரால் அறிவில்லாதவனாக மாற்ற முடியும். அவரால் அறிவில்லாத ஒருவனை வேதம் மற்றும் வேதாந்தத்தில் சிறந்த ஞானியாகவும் மாற்ற முடியும். அவர் யோகத்தன்மை நிறைந்த அவதாரம். ஒருவருடைய பாவ மூட்டைகள் எரிக்கப்பட்டு புண்ணியங்கள் குவிந்த பின்னர்தான் அவர் அவதாரம் என்றும் அவர்தான் உண்மையில் ஸ்ரீ தத்தர் என்றும் அறிந்து

கொள்ள முடியும். இது பொதுவான ஒரு நிலை. எனினும் ஒருவர் மீது அவர் கருணை மற்றும் அன்புப் பார்வை பொழிந்தால், இந்த பொதுவான நிபந்தனைகளை மீறி அவர் பக்தர்களைப் பாதுகாப்பார். அவர் தன்னுடைய தெய்வீக லீலைகளை ஒவ்வொரு நொடியும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய சரிதாம்ருதத்தைப் படிப்பவர்களுக்கு முறையான வழியில் பரிணாம வளர்ச்சி நடைபெறும். அதனால்தான் அவருடைய அந்தந்த வயதில் நடைபெற்ற ஒன்று அல்லது இரண்டு சம்பவங்கள் மட்டுமே உங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவை அனைத்தும் வரிசையாக உங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இவை அனைத்தும் அவருடைய தெய்வீக லீலைகளின் ஒரு முக்கியமான பகுதி. அவர் பூமியின் பரிணாம வளர்ச்சிக்காக மட்டுமே அவதரித்துள்ளதாக எடுத்துக் கொள்வது தவறு. ஒவ்வொரு நொடியும் பல கோடிக்கணக்கான பிரபஞ்சங்கள் படைத்து, காத்து, அழிக்கப்படுகிறது. இவை அனைத்தின் முழு பரிணாம வளர்ச்சியும் அவருடைய கையில்தான் உள்ளது. அவருடைய ஆழமான தெய்வீகப் பார்வையில் பல கோடிக்கணக்கான பிரபஞ்சங்கள் உருவாகி அழியும். இதுதான் அவருடைய உண்மையான குணம். உயர்ந்த குணமுடைய, உருவமற்ற ஒன்று, எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத வெளிப்படுத்திக் கொள்ளாத ஒன்று, இப்போது மனித உருவத்தில் பீதிகாபுரத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. இதுவே ஒரு மிகப்பெரிய அதிசயம். அவதரித்த பின்னர், அவருடைய லீலைகளுக்கு முடிவுதான் ஏது? அவரைப் பற்றி விவரிக்க முடியாமல் வேதங்களே மௌனமாக இருக்கின்றன. அவருடைய ஞானம் எல்லையற்றது. வேதங்களின் ஞானம் வரையறுக்கப்பட்டதுதான். அவருடைய சக்தியும் கருணையும் எல்லை இல்லாதவை. அவர் எல்லா இடத்திலும் எல்லா நேரத்திலும் நிலைத்திருக்கிறார். அவர் உண்மைகளுக் கெல்லாம் உண்மை, ஞானதிற்கெல்லாம் ஞானம், முடிவில்லாத அடைய முடியாத எல்லையில்லாத் தன்மைக்கு அப்பாற்பட்டவர்.



## பகளாமுகி வழிபாடு

உண்மையில் நான் ஒரு வங்காள தேசத்தை சேர்ந்தவன். நான் பகளாமுகியின் பக்தன். அவள் தசமஹாவித்யாவில் ஒருத்தி. எதிரிகளைத் தனிப்பட்ட நிலையில் அழிக்க பகளாமுகியை வழிபட வேண்டும். பரமேஸ்வரரின் அழித்தல் சக்தியின் விரிவான உருவம்தான் பகளாமுகி. பகளாமுகியை வழிபட்டால் பேச்சாற்றல் கிடைக்கும் அதாவது ஒருவர் நல்லொழுக்கம் உள்ளவராக வாழ்ந்து, மனது, பேச்சு மற்றும் செயலை ஒருமுகப்படுத்தினால், அவர்கள் கூறும் அனைத்தும் உண்மையாகி விடும். நான்கு வகையான பேச்சுக்கள் உள்ளன: அவை பரா, பஷ்யந்தி, மத்யமா மற்றும் வைகரி ஆகும்.

சத்யயுகத்தில் இந்த உலகமே அழிந்து விடுவது போன்ற புயல் காற்று அடித்தது. உயிரினங்கள் படும் துன்பத்தைக் கண்டு மஹாவிஷ்ணு வருத்தம் அடைந்தார். அவர் கடுந்தவம் மேற்கொண்ட போது ஸ்ரீ வித்யா மஹா தேவி பகளாமுகி உருவம் எடுத்து தோன்றினாள். அவள் ஸ்ரீமன் நாராயணன் முன் தோன்றி அழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்த புயல் காற்றை சமாதானப் படுத்தினாள் சிலர் அவளை வைஷ்ணவி தேவி (ஸ்ரீ விஷ்ணுவின் சக்தி உருவகம்) என்றும் கருதுகிறார்கள். அவள் செவ்வாய்க்கிழமை சதுர்தசி அன்று நள்ளிரவு நேரத்தில் பிறந்தாள். அவள் ஸ்தம்பன சக்தியின் (எதிரிகளை அசையாமல் செய்யக்கூடிய சக்தி) உருவம். அவள்தான் சூரிய மண்டலம் நிலையாக இருப்பதற்குக் காரணம். அதே போல்தான் சொர்க்கமும் அதே இடத்தில் இருக்கிறது. அவள் இந்த உலகம் மற்றும் மற்ற எல்லா உலகங்களிலும் சுகங்களை அளிக்கிறாள். ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவருக்கு தீய சக்திகளால், ஏற்படும் பெரும் குழப்பங்களைத் தடுத்து நிறுத்துகிறாள். அதேபோல், ஆன்மீக ஆர்வலரின் முன்னேற்றத்திற்கு உறுதி அளித்து பாதுகாக்கும் வகையில் இருளான சக்திகளை இயக்க விடாமல் நிறுத்தி அவர்களுக்கு அருள் புரிகிறாள். அவளைப் படபாமுகி, ஜாதவேதமுகி, உல்கமுகி, ஜுவாளமுகி மற்றும் பரிஹத்பானுமுகி என்றெல்லாம் அழைக்கிறார்கள். உண்மையில் பகளா மஹாவித்யாவை ஸ்ரீ பிரம்மாதான் முதன் முதலில் பயிற்சி செய்தார். ஸ்ரீ பிரம்மா மஹாதேவியை திருமலையில் உள்ள பாலாவின் (ஸ்ரீ வெங்கடேஸ்வரர்) வடிவத்தில் கண்டு வணங்கினார். அவர் அவளை ஸ்ரீ வெங்கடேஸ்வரர் மற்றும் அவர் துணைவி ஸ்ரீ பத்மாவதியாக வணங்கி பிரம்மோற்சவ விழாவைத் தொடங்கினார். ஸ்ரீ பிரம்மா இந்த வித்யாவை சனகர் மற்றும் மற்ற துறவிகளுக்கு போதித்தார். பகளாமுகியை வணங்கியதில் விஷ்ணுவும் ஒருவர். பரசுராமரும் இவளை வணங்கினார்.

என் க்ஷேத்ராடனங்களின் போது நான் பீதிகாபுரத்துக்கு வந்தேன். நான் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்குச் சென்றேன். பின்னர் அழகான ஒரு சிறுவனை கண்டேன். அந்த சிறுவன் என்னிடம், **"நீங்கள் வங்காளத்தில் இருந்து இங்கு வந்துள்ளீர்கள் என்பது எனக்குத் தெரியும். பலகாலமாக இப்போது வரை, நான் இந்த கோவிலில் சுயம்பு தத்தர் என்ற பெயரில் சிறைப்படுத்தப்பட்டுளேன். எனக்கு மூச்சு முட்டுகிறது. எனக்கு மிகவும் வியர்க்கிறது. அதனால் இங்குள்ள அர்ச்சகர்களை**

**எனக்கு குளிர்ச்சி ஏற்படுத்தும் சேவைகளை செய்ய வேண்டினேன். அவர்கள் அதற்கு மறுத்து விட்டனர். எனக்கு வேறு வழி தெரியாததால் வெளியே செல்வதாகக் கூறினேன். அதற்கு அவர்கள் நான் வெளியே செல்வதற்கு பதில், அவர்களே என்னை விரட்டி விட்டார்கள். ஆகவே சில நாட்களுக்கு முன் நான் வெளியே வந்தேன்"** என்றான்.

அவருடைய வார்த்தைகளின் உள்-அர்த்தத்தை நான் புரிந்துகொண்டேன். அவர்தான் உண்மையில் ஸ்ரீ தத்தர் என்பதையும் அவருக்கு பக்தி சேவைகள் சரியான முறையில் சிரத்தையாக நடைபெறவில்லை என்பதையும் புரிந்து கொண்டேன். அவருக்கு தீண்டாமை பிடிக்கவில்லை என்பதனாலும் தீண்டத்தகாத மக்களை ஆச்சாரமான பிராமணர்கள் கோவிலுக்குள் அனுமதிக்காத காரணத்தால் துயரத்தில் இருப்பவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் துன்பத்தில் இருப்பவர்களை காப்பாற்ற அவரே அவதரித்து வந்துள்ளார் என்பது தெளிவானது.

நான் அவரிடம் என்னுடைய இஷ்ட தெய்வமாக காட்சி அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். பரமாத்மா புன்னகைத்தார். நான் மகாதேவியான ஸ்ரீ பகளாவைக் கண்டேன். இந்த மனித கண்ணை கொண்டு அந்த பேரொளியை காண முடியவில்லை. நான் மயங்கி விழுந்தேன். சில நல்லுள்ளம் கொண்டவர்கள் மரத்தடியில் பாய்விரித்து என்னைப் படுக்க வைத்தனர். உண்மையில் நான் மயக்கம் அடையவில்லை. அவர் எனக்கு உயர்ந்த பேரானந்தத்தை அளித்தார். நான் அந்த தெய்வீக சந்தோஷத்தை எட்டு நாட்களுக்கு அனுபவித்தேன். என்னுடைய இதயமும் நாடிதுடிப்பும் நின்றது. மக்களால் என் நிலைமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

## சந்நியாசி அளித்த விவரங்கள்

என்னுடைய கதை பீதிகாபுரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. ஒரு பிராமண சந்நியாசி ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்குள் நுழைந்ததாகவும் அங்குள்ள சுயம்பு தத்தரை தரிசித்ததாகவும் வதந்திகள் பரவின. நான் ஒரு இழிவான தந்திரக்காரன் என்றும் ஸ்ரீ குக்குடேஸ்வரர் மீது தந்திரங்கள் செய்ய முற்பட்டேன் என்றும், அர்ச்சகர்களின் சிரத்தையான நடவடிக்கைகளினால் குக்குடேஸ்வரர் மற்றும் சுயம்பு தத்தரின் சக்திகள் குறையவில்லை என்றும் எதிர்மறையான முடிவுகளால் சந்நியாசி மயக்கம் அடைந்து நாடித்துடிப்பு மற்றும் இதயத்துடிப்பு இல்லாமல் இருக்கிறார் என்று வதந்திகள் குறிப்பிட்டவாறு பரவின.

பொதுவாக பீதிகாபுரத்தில் புரளிகள் வேகமாகப் பரவும். பீதிகாபுரத்து மக்கள் உண்மையை பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் கூறி அனைவரையும் நம்ப வைப்பதில் வல்லவர்கள். அவர்களுக்கு மத்தியில் அவதரித்த ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அவர்கள் அனைவரையும் விட திறமைசாலி. இங்கு நடந்து கொண்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் அவருக்கு மிகப்பெரிய பொழுதுபோக்காக இருந்தது. அவர் நித்தியம் களிப்படையும் ஒரு தெய்வீக மகிழ்ச்சியாளர்.

அர்ச்சகர்களுடைய முக்கியத்துவம் பீதிகாபுரத்தில் அதிகரித்தது. அர்ச்சகர்களின் சிரத்தை மற்றும் நேமத்தினால்தான் அந்த மந்திரவாதி மயங்கி விழுந்து பிணம் போல் இருக்கிறான் என்ற வார்த்தைகள் பரவின. அந்த அர்ச்சகர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டால் எல்லா தோஷங்களும் நிவர்த்தி ஆகி, அவர்கள் செய்யும் பூஜை சிறந்த நன்மை அளிக்கும் என்றும் கூறப்பட்டது. அர்ச்சகர்கள் பூஜையை தொடங்கினர். பிராமணர்களுக்குத் தாராளமாக தானங்கள் வழங்கப்பட்டன. திடீரென அர்ச்சகர்களுக்கு ஒரு கவலை ஏற்பட்டது. அவர்கள் சுயம்பு தத்தர் மற்றும் ஸ்ரீ குக்குடேஸ்வரரை மிகுந்த உழைப்புடன் வணங்கி வந்தனர். அதன் பலனால் அவர்களுக்கு பலவகையான அன்னதானங்கள் மற்றும் தாராளமான தானங்களும் கிடைத்து வந்தன. அந்தப் பணத்தை அவர்கள் வீட்டில் இருந்த பெட்டிகளில் சேமித்து வந்தனர். அச்சமூட்டும் வகையில் அடுத்த நாள் காலையில் அவை அதிலிருந்து காணாமல் போயிருந்தன. அவர்கள் பூஜைகள் செய்வதாக ஒத்து கொண்டமையால் தினமும் கண்டிப்பாக பூஜை செய்தாக வேண்டியிருந்தது. ஆனால் சம்பாதித்த பணம் காணாமல் போனது. அது மட்டுமல்லாமல், நிறைய அன்னதானம் வழங்கப்பட்டு, அவர்கள் அதிக அளவு உண்டாலும் அவர்கள் பலவீனமாகவும் சோர்வடைந்தும் இருந்தனர். அவர்கள் பலவீனமாக இருப்பதும் வைத்த பணம் காணாமல் போவதும் மிகவும் வினோதமாக இருந்தது. அவர்கள் நடக்கும் உண்மையை வெளியே சொன்னால் அவர்கள் மிகுந்த சங்கடமான சூழ்நிலைகளை சந்திக்க நேரிடும். அர்ச்சகர்கள் மந்திர தந்திரங்களில் வல்லவர்கள் என்று பிரகடனம் செய்யப்பட்டிருப்பதால், அவர்களுக்கு யக்ஷினிகளின்( பெண் குணமுடைய ஆவிகள். சிலசமயம் குறும்புத்தனமான இருக்கும்) தொந்தரவு இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்தால் அது அவர்களின் கௌரவத்திற்குக் கேடு விளைவிக்கும். ஆகவே பிராமணர்கள் இந்த விஷயத்தை யாரிடமும் வெளியிடாமல் தங்களுக்குள்ளேயே வைத்திருந்தனர்.

சந்நியாசி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு, அவர் இறந்திருந்தால் தகனம் செய்யலாம் என்று முடிவு செய்தனர். அவர்கள் இந்த விஷயத்தை ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம் கொண்டு சென்றனர். பின்னர் ஸ்ரீ பாப்பண்ணார்யா சந்நியாசியின் உடலை சோதனை செய்துவிட்டு, சந்நியாசி இறக்கவோ அல்லது மயக்கம் அடையவோ இல்லை, அவர் சமாதி நிலையில் இருக்கிறார் என்றார். சிலர் ஸ்ரீ பாப்பண்ணார்யா கூறுவதைக் கண்டுகொள்ளாமல் சந்நியாசியின் உடலை எரித்து விட்டால் யக்ஷினிகளின் தீய தொந்தரவுகள் முற்றிலும் அழிக்கப்படும் என்று எண்ணினார்கள். மற்ற சிலரோ, சந்நியாசி எரிக்கப்பட்டால் அவருடைய சக்திகள் கொடூரமாக வளர்ந்து பல பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று கூறினர். என்னுடைய உடல் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய வினோதமான தீர்மானத்தினால் எரியூட்டப்படாமல் இருந்தது.

எட்டு நாட்களுக்கு பின்னர் என் உடல் சாதாரண நிலையை அடைந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னுடைய தெய்வீகத் திருக்கரத்தால் என் தலையை தொட்டார். அங்கிருந்த பிராமணர்கள் எவரும் எனக்கு பிக்ஷை அளிக்கவில்லை. தங்குவதற்கும்

உணவு அருந்துவதற்கும் ஸ்ரீ பீதிகாபுரத்தில் இருந்த ஆடு மேய்ப்பவர்கள் சிலர் இடம் அளித்தனர். நான் ஜாதி பாகுபாடு பார்க்காதவன் என்பதால் அங்கிருந்த ஆட்டிடையர்கள் அனைவரும் எனக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்களில் லக்ஷ்மி என்ற பெண் ஒருத்தி இருந்தாள். அவள் கணவர் அவளை மிகவும் அன்பாக நடத்துவார். அவர்தான் அந்த ஆட்டிடையர்கள் கூட்டத்துக்கு தலைவனாகவும், அந்த ஜாதியினருக்கு இடையே ஏற்படும் சண்டைகளுக்கு நீதிபதி போல இருந்து தீர்த்து வைப்பார். அவர் வயதில் இளையவராக இருப்பினும், அவர் படித்தவர் என்பதால், அவர் சொத்துப் பத்திரங்களை படித்து அதில் குறிப்பிட்டுள்ள படி பங்கிட்டு அளிப்பார், மேலும் நிலம் சம்பந்தமான பத்திரப் பதிவுகளுக்குச் செல்வார். அதனால்தான் அவர் வயதில் இளையவராக இருப்பினும் அவர் ஜாதி மக்கள் அவரை தலைவராக தேர்ந்தெடுத்தனர். அவர் மனைவி லக்ஷ்மி மிகவும் பக்தி நிறைந்தவள். துரதிர்ஷ்டவசமாக, அவள் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்பு விதவை ஆகியிருந்தாள். எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாதருடைய சிறப்புகள் நன்றாகத் தெரியும் என்பதால், நான் லட்சுமியிடம் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் நீ ஏதாவது தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் அது உனக்கு நன்மை பயக்கும் என்று கூறினேன். இதற்கிடையில், ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் வீட்டில் இருந்த பசு பால் தருவதை நிறுத்திவிட்டது. அதனால் லக்ஷ்மி ஸ்ரீ சிரேஷ்டியின் வீட்டுக்குப் பால் கொண்டு செல்வாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் எப்போதும் ஸ்ரீ சிரேஷ்டியின் வீட்டுக்கு வருவது வழக்கம். அவர் **"பாட்டி,பசிக்கிறது"** என்று கேட்பதற்கு முன்பே வெங்கட சுப்பமாம்பா பாலைக் காய்ச்சி அவருக்கு அளித்து விடுவார். மேலும் அவள் பாலேடு மற்றும் வெண்ணெயும் அவருக்கு அளிப்பாள். வெங்கட சுப்பமாம்பா லக்ஷ்மியை இன்னும் அதிகமாக பால் கொண்டு வர சொன்னாள். லக்ஷ்மி ஸ்ரீ சிரேஷ்டி வீட்டுக்கு அதிகமான அளவு பால் கொண்டு சென்றால் அவர்கள் வீட்டுக்கு கொஞ்சம் அளவுதான் பால் மிஞ்சும், அவள் நீர்மோர்தான் குடிக்க வேண்டும். இருப்பினும், தாராள குணம் நிறைந்த லக்ஷ்மி அவள் அருந்துவதற்காகவும் மற்ற தேவைகளுக்காகவும் வைத்திருக்கும் பாலையும் சிரேஷ்டியின் வீட்டுக்கே விற்று கொண்டிருந்தாள்.

## புராண பண்டிதரின் கதை

இதற்கிடையில், கதாகாலட்சேபம் நடத்தும் பண்டிதர் ஒருவர் அந்த ஊருக்கு வந்தார். ஸ்ரீ பீதிகாபுரத்தில் இருக்கும் பிராமணர்கள் புராணங்கள் சூத்திரர்களுக்குத் தானே ஒழிய எங்களை போன்ற உயர்ந்த பிராமணர்களுக்கு எல்லா புராணமும் முன்பே தெரியும் என்றனர். ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ சிரேஷ்டி மற்றும் ஸ்ரீ வர்மா அந்த பண்டிதருக்கு தக்ஷிணை அளித்தனர். பண்டிதர் கூறும் புராணக் கதாகாலட்சேபத்துக்கு எல்லா சூத்திரர்களும் செல்வதாக ஒத்துக்கொண்டனர். அதுமட்டுமல்லாமல், தண்டோரா அடிக்கப்பட்டு சூத்திரர்களும் பண்டிதருக்கு தக்ஷிணை அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அங்கிருந்த சில பிராமணர்கள் சூத்திரர்கள் அளிக்கும் தக்ஷிணையில் பாதிப் பணத்தை பிராமண சங்கத்திற்கு அளிக்க வேண்டும் என்றும் மீதிப் பணத்தை பண்டிதர் எடுத்துக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். அதற்கு ஸ்ரீ பாப்பண்ணார்யா அவர்களைக் கண்டிக்கும்

வகையில், "**இதைத்தான் முஷ்டியிலும் முஷ்டி வீரமுஷ்டி என்று கூறுவார்கள். நீங்கள் புராணத்தைக் கூட கேட்கப்போவதில்லை என்று கூறிவிட்டீர்கள். ஆனால் மறுபுறம், அந்த பண்டிதர் கஷ்டப்பட்டு கதாகாலட்சேபம் செய்து சம்பாதித்த பணத்தை பிடுங்கப் பார்க்கிறீர்கள். நீங்கள் இம்மாதிரியான குணங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால் வருங்காலங்களில் கால புருஷனின் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாவீர்கள்**" என்றார்.

அந்த பண்டிதருக்கு ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. புராண கதாகாலட்சேபம் தொடங்குவதற்கு முன்னர் லக்ஷ்மி அவருக்குப் பால் காய்ச்சி கொடுப்பாள். பாலை அருந்திவிட்டு அவர் கதாகாலட்சேபம் செய்ய தொடங்குவார்.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனைவருடைய இதயத்திலும் வசிப்பவர்; அதனால்,அவருக்கு தெரியாதது என்று ஒன்றும் இல்லை. அந்த பண்டிதர் ஒரு சிறந்த ஞானி மற்றும் சிறந்த யோகி. அவருடைய யோக சக்தியின் மூலம் அவருடைய ஆத்மாவின் மற்ற உருவங்களைக் கண்டுபிடித்தார். அந்த உருவங்களின் சைதன்யங்களை தனக்குள் ஈர்த்துக் கொண்டார்.

அவருடைய ஆன்மா ஒரு ஜமீன்தாரின் வீட்டில் நான்கு மாத குழந்தையின் உருவத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தார். லக்ஷ்மி அவருக்கு பால் கொடுக்கும் போது, அவருடைய யோக பார்வையின் மூலம் அவளைப் பார்த்தவுடன் தன்னுடைய ஆன்மாதான் அவளுக்கு அடுத்த பிறவியில் கணவராக வரப்போகிறது என்பதை அறிந்து கொண்டார். அப்படியென்றால் மேலே கூறப்பட்டுள்ள குழந்தை உருவம்தான் லக்ஷ்மியின் அடுத்த பிறவியில் அவளுக்கு கணவராக வரப்போகிறது.

அவருடைய ஆன்மாவின் எல்லா ஆண் உருவங்களும் தன் மூல பிரகிருதியான பண்டிதருடன் ஏற்கனவே ஐக்கியமாகி விட்டது. அவர் தன் யோக உள்பார்வையின் மூலம் அவருடைய சக்தி உருவத்தைத் தேடிய போது, லக்ஷ்மிதான் அவருடைய மூலப் பிரகிருதியின் பெண் உருவம் என்பதைப் புரிந்து கொண்டார். அவருடைய பெண் குணங்கள் ஏற்கனவே லக்ஷ்மியுடன் ஐக்கியமாகி விட்டதைக் கவனித்தார். அவருடைய நான்கு மாத குழந்தை உருவம் இன்னும் சில மாதங்கள் வாழ்ந்து விட்டு இறந்து விடும் என்றும் அவருடைய கர்மாக்கள் ஏதேனும் பாக்கி இருந்தால் அது முடிவுக்கு வரும் என்பதை உணர்ந்தார். அவர் பண்டிதராக பீதிகாபுரம் வந்ததே அவருக்கு பீதிகாபுரத்துடன் இருக்கும் கர்மாக்களை நிறைவேற்றத்தான்.

லக்ஷ்மிக்கு அவளுடைய கணவன் மீது அலாதி பிரியம் உண்டு. தன் கணவருடைய சைதன்யம் அவருடைய பழைய உடலை விட்டு நீங்க முடியவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். அவளுடைய கணவனின் உருவம் பலமுறை தன் அருகில் நின்று கொண்டிருப்பது போல உணர்ந்திருக்கிறாள். மனிதர்கள் விரஜா நதியைக் (உயர்ந்த சொர்க்கமான, ப்ரம்மலோகத்தில் இருக்கும் நதி) கடக்க வேண்டும் என்றால் கோதானம் செய்ய வேண்டும். அவள் கணவரை பத்திரமாக விரஜா நதியை கடந்து அழைத்துச்சென்ற அதே பசுதான் இப்போது பூமியில் பிறந்துள்ளது என்பது

அவளுக்கு தெரியும். அவள் அந்த பசுவை பார்த்ததினால் இந்த விஷயம் அவளுக்கு தெரிந்திருந்தது. அனைத்தும் அறிந்த ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு லக்ஷ்மியின் கணவருடைய சைதன்யம் விரஜா நதியைக் கடந்து அவருடைய மூலப் பிரகிருதியான பண்டிதருடன் ஐக்கியமாகி இருக்கிறது என்பது நன்றாக தெரியும்.

எனினும், பண்டிதர் பீதிகாபுரத்துக்கு வந்து தன் கர்மபந்தங்களை நிறைவேற்றிவிட்டு, தன்னுடைய ஆன்மாவின் மற்ற உருவங்களுடைய கர்ம பந்தங்களையும் தன் யோகசக்தி மூலம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டு பரமாத்வுடன் ஐக்கியமாகிவிட வேண்டும் என்ற முடிவுடன்தான் அங்கு வந்தார். அப்படி பண்டிதர் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிவிட்டால் பிராமண ஜமீன்தாரின் குழந்தையும் இறந்துவிடும். அப்படி நடந்தால் லட்சுமியின் அடுத்த பிறவியில் கணவராக வர இருக்கும் பிராமணன் தன் முற்பிறவியிலேயே இறந்துவிட்டதால், லக்ஷ்மி தன்னுடைய அடுத்த பிறவியில் பிறந்து கன்னியாகவே வாழ்ந்து இறக்க நேரிடும்.

லக்ஷ்மிக்கு அடுத்த பிறவி எடுத்து பிறக்க வேண்டும் என்ற தீவிரமான ஆசை இருந்தது. அதனால், அவள் இந்த உடலை அவள் உதிர்த்த பின்னர் சைதன்ய நிலையை மீண்டும் பெற்று அவள் ஒரு நற்குணம் மிக்க பிராமண குடும்பத்தில் பிறப்பாள். அவளுடைய கணவனான ஜமீன்தாரின் குழந்தை அப்பொழுது பெரியவனாக வளர்ந்திருப்பார். பாவம்! லக்ஷ்மி ஒரு அப்பாவி. இவை எதுவும் தெரியாமல் அவள் அர்த்தநாரீஸ்வர யோகா நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள். இவை அனைத்தும் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய லீலைகள்தான்!

புராணங்களின் கதாகாலட்சேபம் முடிவுக்கு வந்தது. பண்டிதர் சூத்திரர்களிடம் தானங்கள் பெற்றுக் கொண்டார். லக்ஷ்மி சூத்திர ஜாதியில் பிறந்தவள். பண்டிதர் சூத்திரர்களின் தொடர்பை ஒத்துக் கொண்டதினால், சூத்திரர்களுடன் தனக்கு கர்மபந்தம் மீண்டும் ஏற்பட்டுவிட்டது என்று எண்ணினார். அவருக்கு இருக்கும் மீதி கர்ம பந்தங்களை யோகத்தீ மூலம் எரிக்க விரும்பினார்.

அவர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் உணவருந்தி விட்டதால், தன்னுடைய பிராமணப் பிறப்புடன் தொடர்புடைய கர்ம பந்தம் மீண்டும் தனக்கு ஏற்பட்டு விட்டது என்று எண்ணினார். அந்த யோகிக்கு தானங்கள் கொண்டு வருவதற்காக ஸ்ரீ பாப்பண்ணார்யா வீட்டுக்குள் சென்றார். அச்சமயத்தில் லக்ஷ்மி ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு வந்தாள். லக்ஷ்மியின் வீட்டில் இருந்த பசு ஒரு கன்று ஈன்றிருந்தது. அந்த பசுவின் பாலில் இருந்து வெண்ணெய் தயாரிப்பதற்காக அந்த பாலை ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு கொண்டு வந்திருந்தாள். லக்ஷ்மிக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் மீது அலாதியான பக்தி மற்றும் அக்கறை உண்டு.

ஸ்ரீ பாப்பண்ணார்யா பண்டிதருக்கு மரியாதை செய்தார். பண்டிதர் தான் விடைபெற்றுக் கொள்ள அனுமதி கேட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு, **“நீங்கள் செல்வதற்கு அனைவரும் அனுமதி அளித்து விட்டனர். இரண்டு பேர் மட்டும் செல்ல அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர். நான் வியாபாரிகளின் கணக்கில் கைதேர்ந்தவன்.**

**பாக்கி செலுத்த வேண்டிய கடனை திருப்பி அளிக்காமல் நீங்கள் பீதிகாபுரத்தை விட்டு வெளியே செல்ல முடியாது"** *என்றார்.*

*அந்த பிராமணர் கலக்கம் அடைந்தார். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஸ்ரீ தத்தருடைய அவதாரம் என்று முன்பே கேள்விப்பட்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம், "என் அன்புக்குரியவரே, இந்த லக்ஷ்மி ஒரு அப்பாவி. அவள் இன்னும் சில வருடங்கள்தான் உயிரோடு இருப்பாள். அவளுடைய இறப்புக்கு பின் அவள் என்ன ஆக வேண்டும்? நீங்கள் உங்களுடைய ஞான உருவத்தில் பிராமணராகவும், உங்கள் அறியாமையின் உருவத்தில், லக்ஷ்மியின் கணவரான ஆட்டிடையன் உருவத்திலும் பிறந்தீர்கள். அந்த ஆட்டிடையன் உருவத்துடன் லக்ஷ்மி தன் சந்தோஷம் மற்றும் துக்கங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளாள். உங்களுக்குள் இருக்கும் ஆட்டிடையனின் சைதன்யம் பசுவுடன் விராஜா நதியைக் கடந்து சென்று விட்டு மீண்டும் சுதந்திரமாக பூமியை வந்தடைந்து விட்டது. இந்தப் பெண் தன் கணவன் மீது கொண்டுள்ள தீவிரமான அன்புத்தீயைக் கொண்டு அவர் சைதன்யத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளாள். ஆட்டிடைச்சியுடைய உருவத்தில் இருக்கும் இந்த சைதன்யம் இன்னும் சில வருடங்களில் அவளுடைய இந்த உடல் இறந்து பிராமண சைதன்யத்துக்குள் நுழையும் போது மாறிவிடும். அவள் ஆட்டிடைச்சி உருவத்தில் இருக்கும் பிரமணப் பெண். நீங்கள் பிராமண உருவத்தில் இருக்கும் ஆட்டிடையன். எனக்கு உங்களுடைய கர்ம உறவுகள் பற்றி நன்றாகத் தெரியும். நான் பத்மாவதி தேவியின் உருவகம். நான்தான் இந்தப் பெண்ணை வருங்காலத்தில் பிராமணப் பெண்ணாக பிறப்பாய் என்று நெற்றியில் தங்கத் திலகமிட்டு ஆசீர்வதித்தேன். நான் அவளுக்காக திருமாங்கல்யத்தை உருவாக்கி அதை ஹிரண்ய லோகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளேன். இந்த தங்கத்துடன் இருக்கும் தொடர்பு உடைந்து விட்டது என்றால் மனைவிக்கு அவள் கணவருடன் இருக்கும் தொடர்பும் உடைந்துவிடும். அதனால்தான் அவளுடைய புனிதமான தங்கத் திருமண ஆபரணங்களை நான் ஹிரண்ய லோகத்தில் பத்திரப்படுத்தி உள்ளேன். சில மாதங்களே ஆன அந்தக் குழந்தையின் உருவத்தில் இருக்கும் உங்கள் சைதன்யத்தைத் திரும்ப பெற்றுக் கொண்டால், அந்த உடலை ஏதாவது அசுரன் ஆக்கிரமித்துக் கொண்டு தீய செயல்களை செய்வான். அதனால், அவளுடன் இருக்கும் கர்ம பந்தங்களைத் திரும்ப விடுவித்துக் கொள்ளாதீர்கள். அதற்கு பதிலாக, அந்த பெண்ணிடம் இருந்து தங்கத்தைத் தானமாக பெற்றுக் கொண்டு அவளுடன் கர்ம பந்தத்தைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த பிறவியில் நீங்கள் சிறந்த தம்பதியாக வாழ்ந்து என்னுடைய பக்தர்களாகி மோக்ஷம் அடைவீர்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் இவ்வாறு கூறிவிட்டு அவர்களை ஆசீர்வதித்தார்.* **"என் அருமைக் குழந்தைகளே, அந்த பிராமணக் குழந்தை வளர்ந்து பெரியவனாகும். லக்ஷ்மி ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்து அவன் மனைவியாவாள். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய லீலைகள் உண்மையிலேயே மிகவும் அற்புதமானது!"** *என்றார் சந்நியாசி.*

**வெற்றி! வெற்றி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 39

## நாகேந்திர சாஸ்திரியை சந்தித்தல்

நாங்கள் காலநாகத்தின் ரத்தினத்தை பெற்றுக் கொண்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். ஸ்ரீ பீதிகாபுரத்திற்கு செல்லும் ஆவல் எங்களுக்கு அதிகரித்தது.


### காலநாகத்தின் வடிவங்கள்

வழியில் ஒரு பிராமணரின் வீட்டில் எங்களுக்கு விருந்தோம்பல் கிடைத்து. அவருடைய பெயர் நாகேந்திர சாஸ்திரி. அவருக்கு மந்திர சாஸ்திரங்கள் தெரியும். அவருடைய வீட்டில் பல நல்ல பாம்புகள் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தன, ஆனால் யாருக்கும் எந்த தொந்தரவும் கொடுக்கவில்லை. அவர் அந்த நல்ல பாம்புகளை தன் குழந்தைகள் போல் கவனித்துக் கொண்டார். அவருடைய உடல் மீது அந்த பாம்புகள் சுதந்திரமாக சென்றுகொண்டிருந்தது. தெய்வீக நாகங்களுக்கு அதன் தலை பகுதியின் மீது ரத்தினம் பதிக்கப்பட்டிருந்தது. நாகேந்திர சாஸ்திரி இந்த நாகங்களை பல வருடங்களாக வணங்கி வருகிறார். அவர் நாகங்களின் அதிபதியிடம் காலநாகத்தின் ரத்தினத்தை வழிபடுவதற்கு வேண்டிக் கொண்டிருந்தார்.

### நாகமணியின் செயல்திறன்

நாகேந்திர சாஸ்திரி, "அன்புக்குரியவர்களே, இன்று மிகவும் நன்னாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் பதினைந்து வயதுடைய சிறுவனாக இருந்தபோது நான் பீதிகாபுரத்துக்குச் சென்றேன். நான் பாதகயா க்ஷேத்திரத்துக்குச் சென்றேன். சுயம்பு தத்தர் உருவச் சிலையின் கழுத்தைச் சுற்றி காலநாகம் இருப்பதைக் கண்டேன். அதன் தலைப் பகுதியில் ஒரு ரத்தினம் இருந்தது. நேரத்தை கட்டுப்படுத்தும் நாகங்கள் காலநாகங்கள் என்று அழைக்கப்படும். அவைகளின் தலைப் பகுதியில் ரத்தினம் இருக்கும். இரவு நேரத்தில் அந்த ரத்தினம் தெய்வீக ஒளியை வெளியிடும். காலநாகங்களுக்கு குண்டலினி சக்தி உண்டு. அவை எப்போதும் மகாமுனிவர்கள் போல தியான நிலையிலேயே இருக்கும். பலவகையான தரம் மனிதர்களிடம் மட்டுமல்ல நாகங்களிடம் கூட உண்டு. பொதுவாக காலநாகங்களை மனிதர்களால் பார்க்க முடியாது. காலநாகங்களின் தலை பகுதியில் இருக்கும் நாக மணிக்கு செவ்வாய் கிரகத்தால் ஏற்படும் தோஷங்களை அகற்றும் சக்தி உண்டு. அந்த தீய அதிர்வலைகள் நாக மணியில் ஐக்கியமாகி நல்ல அதிர்வலைகள் அதிலிருந்து வெளிவரும். அந்த நல்ல அதிர்வலைகள் செவ்வாய் தோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல பலன்களை அளிக்கும். ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் நல்ல இடத்தில்

இல்லாவிட்டால், அவர் வாழ்க்கையில் சண்டைக்கான சூழ்நிலைகள் சூழ்ந்துகொண்டு எப்போதும் சாதகமற்ற சூழ்நிலைகளே சூழ்ந்த வண்ணம் இருக்கும். அவைகள் என்னவென்றால்: வீட்டில் உள்ளவர்களுடன் விரோதம், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் விரோதம், கடன் தொல்லைகள், பெண்களுக்குச் சரியான வயதில் திருமணம் நடைபெறாமல் அவர்கள் வாழ்க்கை முழுவதும் கன்னியாகவே இருத்தல், திருமணம் ஆன பின்னரும் குழந்தை பாக்கியம் கிடைக்காமல் இருத்தல், எல்லா தொழில்களிலும் தோல்வி அடைதல், திறமைசாலியாக இருப்பினும் எந்த வேலையும் கிடைக்காமல் இருத்தல் ஆகியவை ஆகும். நான் சுயம்பு தத்தரைப் பார்த்த பின்னர் காலநாகத்தின் ரத்தினத்தை பெரும் ஆவல் அதிகரித்தது. அந்த ரத்தினத்தை பெற்றால் என் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நல்ல முன்னேற்றம் அடைவேன் என்று நான் வலுவாக நம்பினேன்.



## ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பாதுகைகளின் சிறப்புகள்- நாகதோஷ நிவத்திக்கான விதிமுறைகள்

நான் ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டின் அருகே கடந்து சென்று கொண்டிருந்தேன். அந்த வீட்டில் இருக்கும் மரங்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதர் விளையாட்டுத்தனமாக தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். ஸ்ரீ நரசிம்ம வர்மா மரங்களுக்குத் தண்ணீர் செல்வதற்கான பாத்தி கட்டிக் கொண்டிருந்தார். அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு அத்தி மரம் இருந்தது. தண்ணீர் வேகமாக வேருக்கு செல்வதற்காக இந்த மரத்திற்கு அருகில் ஸ்ரீ நரசிம்ம வர்மா பாத்தி கட்டிக் கொண்டிருந்தார். அந்த மரத்தின் வேருக்கு அருகில் தோண்டும் போது ஸ்ரீ ஸ்ரீபாதருடைய செப்பினால் ஆன பாதுகைகளை கண்டெடுத்தார். அந்த பாதுகைகள் பதினாறு வயதுடைய சிறுவனுக்கான அளவில் இருந்தது. **“நாகேந்திர சாஸ்திரி இங்கு வாருங்கள்”** என்ற குரல் எனக்கு கேட்டது. ஆச்சரியத்துடன் நான் அவர் இருந்த இடத்திற்கு சென்றேன். ஸ்ரீ வர்மா அந்த பாதுகைகளை இளநீரால் அலம்பி அபிஷேகம் செய்தார். அவை ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாத கமலங்களுக்கு முன் வைக்கப்பட்டது. ஸ்ரீ வர்மா அது தனது வழிபாட்டுக்காக கொடுக்கப்படும் என்று எண்ணிக் கொண்டிருந்த போது ஸ்ரீ ஸ்ரீபாதருடைய எண்ணமோ வேறு விதமாக இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அன்புடன் அந்த பாதுகைகளை என்னிடம் அளித்தார். அவர் என்னிடம், “நாகேந்திர சாஸ்திரி, நாக பீடம் அமைத்து இந்த பாதுகைகளை வழிபடுங்கள். பலகாலமாக காலநாகத்தின் ரத்தினம் வேண்டும்

என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள். நான் உங்களிடம் மகிழ்ந்து விட்டேன். தெய்வீக ரத்தினங்களுடன் இருக்கும் காலநாகங்கள் வணங்கும் தெய்வீக பாதகமலங்களுடன் விளங்கும் மஹாஸ்வாமி நான்தான். இந்த தெய்வீக பாதுகைகள் என்னுடையதுதான். அவற்றை வணங்குங்கள். கொடிய நோயினால் பாதிக்கப் பட்டவர்கள் உங்களை அணுகுவார்கள். இந்த பாதுகைகளை வழிபட்டு அதன் தீர்த்தத்தை அவர்களுக்கு அளித்தால் அவர்களுடைய நோய் குணமாகும். எல்லாவிதமான நாக தோஷங்களும் (நாகங்களை துன்புறுத்துவதால் ஏற்படும் தோஷம்) விலகி விடும். நாகதோஷம் நிவர்த்தியின் போது அளிக்கப்படும் தக்ஷிணை மனைவி,கணவன் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் ஆகியோரின் பணம் சேர்த்து அளிக்கும் தொகையைத்தான் அளிக்கவேண்டும் என்பதை நீங்கள் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும். ஒருவன் தன்னுடைய நாக தோஷ நிவர்த்திக்காக தானம் செய்கிறான் என்றால் அவன் கண்டிப்பாகத் தன்னுடைய மைத்துனன் அல்லது மாமனார் அதாவது தன் மனைவியின் குடும்பத்துப் பணத்தை அதில் சேர்த்து அளிக்க வேண்டும். இதே ஒரு பெண் நாகதோஷ நிவர்த்திக்காக தானம் செய்கிறாள் என்றால் அவள் தன் கணவன் குடும்பத்தில் இருந்து பணத்தைப் பெற்று அந்த தொகையுடன் சேர்த்து அளிக்க வேண்டும். கணவன் மற்றும் மனைவி இருவரும் நாகதோஷ நிவர்த்திக்கு தானம் செய்தால், தன்னுடைய பணத்துடன் இருவருடைய குடும்பத்தினருடைய பணத்தையும் சேர்த்து அளிக்க வேண்டும். கணவன் தான் உழைத்து பெற்ற பணத்தையும், மனைவி தன் சீதன பணத்தையும் அளிக்க வேண்டும். இந்த தொகைகளை ஒன்றாகச் சேர்த்து அளிக்க வேண்டும். திருமணம் ஆகாத பெண் தன் நாக தோஷத்திற்காக தானம் அளிக்கிறாள் என்றால் அவள் தன் தந்தையுடைய பணத்தையும் அவள் தாய்மாமனுடைய பணத்தையும் சேர்த்து அளிக்க வேண்டும். இந்த வழியில்தான் நாகதோஷத்தை முழுவதுமாகத் தீர்க்க முடியும்.

முன்பொரு காலத்தில், சும்பன் மற்றும் நிசும்பன் என்ற அரக்கர்களால் முற்றுகையிடப்பட்ட தேவர்கள் இமயமலையை அடைந்து ஹைமவதியை போற்றினர். பின்னர் கௌரியின் உடலில் இருந்து கௌஷிகி என்ற தெய்வம் வெளியானது. கௌஷிகி பார்வதியின் உடலை விட்டு சென்றதும், அவள் உடல் கருமையாக மாறியது. அந்த உருவம்தான் காளி என்ற பெயரில் புகழ் பெற்றது. அந்தக் காளி கௌரியின் உருவத்திற்கு மாற விரும்பியது. அந்த எண்ணம் அவளுக்கு ஏற்பட்டவுடன் அவள் மறைந்து விட்டாள். பரமேஸ்வரன் நாரதரிடம் அவள் எங்கு சென்றாள் என்று கேட்டார்.

பின்னர் நாரதர் அவள் மேரு மலையின் வடக்குப் பகுதியில் இருக்கிறாள் என்றார். சிவனுடைய ஆணைக்கு இணங்க நாரதர் அவளிடம், **“தாயே, நீங்கள் சிவனை மணந்துகொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும்”** என்று வேண்டிக் கொண்டார். திருமண உத்தேசத்தை கேட்டவுடன் அவள் கோபமடைந்தாள்.

அங்கேயே அவளுடைய ஷோடசி உருவம் அவள் உடலில் இருந்து வெளியானது. அதிலிருந்து திரிபுரபைரவியின் உருவமான சாயாவிக்ரஹ உருவம் வெளியானது. பார்வதி அழிக்கும் உருவத்தில் இருந்தால் சிவனுடன் உடல் ரீதியாக ஒன்றிணைவதற்கு சாத்தியம் இருக்காது. அவள் கோபம் மற்றும் மன உணர்ச்சியினால் நிறைந்திருப்பாள். நேரத்தை ஆளும் காலநாகர்கள்தான் பார்வதியின் கோபம் மற்றும் மன உணர்ச்சிகளுக்கு காரணம். நான் மஹாவிஷ்ணுவின் உருவம் என்பதால், சிவனின் திரிசூலத்தின் மூலம் நான்தான் நாகமணிகளை உருவாக்கினேன். காலநாகர்கள் அந்த ரத்தினத்தை அணிந்து கொள்வார்கள் என்ற வரத்தை அவற்றிக்கு அளித்தேன். மேலும், காலநாகர்கள் சிவன் மற்றும் பார்வதியின் உடலை ஆபரணங்களாக அலங்கரிப்பார்கள் என்று ஆசீர்வதிதேன். ஹைமவதி என்னுடைய சகோதரி என்பதால், அவளுடைய குடும்பத்தில் இருந்து பெற்ற பணம் தக்ஷிணையாக சேர்க்கப்படாவிட்டால் நாகதோஷம் முழுவதுமாக நீங்காது என்ற நிபந்தனை விடுத்தேன். என் அருமை நாகேந்திர சாஸ்திரி, என்னுடைய வார்த்தைகளை உன்னிப்பாக பின்பற்றுங்கள். உங்களுடைய நாக சாஸ்திர வல்லமையை இந்த உலகத்தின் நன்மைக்காக பயன்படுத்துங்கள்.

## தத்த பக்தர்களின் ஆன்மீக பலன்கள்

சிறிது காலத்திற்கு பின்னர் சங்கர் பட்டும் தர்ம குப்தரும் உங்களிடம் வருவார்கள். அவர்களிடம் இந்த தெய்வீக பாதுகைகளை அளித்துவிட்டு காலநாகத்தின் ரத்தினத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உடலின் இயக்கங்களுக்கு கால வரம்பு இருக்கிறது. மனதுக்கு ஒரு கால வரம்பு இருக்கிறது. பிராணனுக்கு ஒரு கால வரம்பு இருக்கிறது. ஆத்மா கால வரம்புக்கு அப்பாற்பட்டது. கிரகங்களும் நட்சத்திரங்களும் இருக்கும் வரை காலம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். வளர்ச்சி மற்றும் அழிவு, காலத்தைப் பொருத்துதான் நடக்கும். பல பிரபஞ்சங்கள் தோன்றி, வளர்ந்து சில காலங்களுக்கு நிலைத்திருந்து விட்டு அழிந்துவிடும். இவை அனைத்தும் காலத்தின் சிறப்பு. அந்த காலத்தின் உருவம் என்னுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. காலபுருஷன் எப்போதும் என் பக்தர்களுக்கு உதவி புரிவான். ஸ்ரீ தத்தரை வணங்குபவர்களை பேய், பிசாசு, ஆவிகள் போன்ற தீய சக்திகளால் எந்தவித தீங்குகளும் செய்ய முடியாது. இந்த படைப்பில் இருக்கும் எல்லா உயிரினங்களை விட நான்தான் வலிமையானவன். உயிரினங்கள் என்னிடமிருந்து தான் சக்தியை பெற்றுக் கொண்டு வளர்கிறது. ஆணவத்துடன் வெறி கொண்டு பெருமை பட்டு கொள்பவர்களிடமிருந்து என் சக்திகளை திரும்பப் பெற்றுக் கொண்டு விடுவேன். பெருமை மற்றும் ஆணவம்தான் அழிவுக்கு மூலக்காரணம். என்னை எப்போதும் நினைத்துக் கொண்டு வழிபடுபவர்கள் எப்போதும் மனநிறைவு மற்றும் சந்தோஷத்துடன் வாழ்வார்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் விளக்கினார்.

அந்த சிறந்த மனிதர்கள் எனக்கு ஸ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டில் உணவு ஏற்பாடு செய்திருந்தனர். ஸ்ரீ வர்மா எப்போதும் பெருமளவில் அன்னதானம்

செய்வார். ஸ்ரீ தத்தருக்கு அன்னதானம் என்றால் மிகவும் பிடிக்கும். ஏதாவது ஒரு உயிரினம் பசியில் வாடினால் அவருக்கு பற்றாக்குறை உணர்வு ஏற்படும். அவர் அனைத்து உயிரினங்களின் நலம் விரும்பி.

நான் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டு கிளம்பினேன். நான் இந்த இடத்தில் ஒரு ஆசிரமம் கட்டினேன். என்னிடம் வருபவர்கள் அனைவருக்கும் வர்ணாசிரம தர்மத்தை (ஜாதி மற்றும் வயதுக்கு ஏற்றபடி சரியாக வாழ்வது) பற்றி போதனை செய்து கொண்டிருக்கிறேன்.

இதற்கிடையில் என் மனைவி இறந்துவிட்டதால் நான் மிகுந்த துயரத்தில் இருந்தேன். ஒரு நாள், ஒரு நாவிதனின் மனைவி பாம்புக் கடியால் இறந்துவிட்டாள். எனக்கு தெரிந்த நாகவித்யாவின் மூலம் அவளைக் கடித்த பாம்பை அழைத்து விஷத்தை வெளியேற்றினேன். ஆனால் அந்த நாவிதனின் மனைவிக்கு மீண்டும் அந்த உடலுக்குள் புகுவதற்கு விருப்பம் இல்லை. மாறாக அவள் பிராணமய ஜகத்தில் இருந்து கொண்டு மக்களை ஆட்கொள்ள விரும்பினாள். மக்கள் துயரப்படுவதை பார்த்து அவள் சந்தோஷமாக அனுபவித்துக் கொண்டிருந்தாள். அந்த நாவிதன் தன் மனைவியை மீண்டும் உயிரோடு கொண்டு வருமாறு கெஞ்சினான். பின்னர் நான் அவனிடம் வேண்டும் என்றால் என்னுடைய மனைவியின் ஆத்மாவை அந்த உடலுக்குள் செலுத்துகிறேன் ஆனால் அவளை அவன் தாயைப் போல பாவிக்க வேண்டும் என்று கூறினேன். அவன் அதற்கு சம்மதித்தான்.

இறந்த என் மனைவியின் ஆத்மா நாவிதனின் மனைவியுடைய உடலுக்குள் புகுத்தப்பட்டது. அப்படியென்றால் என் மனைவி மீண்டும் உயிர்ப் பெற்று விட்டாள். நாவிதனின் மனைவி மிகவும் தீய குணம் நிறைந்தவள். அவள் மிகவும் சண்டைக்காரி என்பதால் அவளுடைய நரம்புகள் அனைத்தும் குறைபாடுகளுடன் இருந்தது. குறைகள் நிறைந்த அந்த உடலில் தங்குவதற்கு என் மனைவிக்கு மிகவும் பதற்றமாக இருந்தது. உடல் முழுவதும் எரிவது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. அவள் மிகுந்த வலியை அனுபவித்தாள். அவள் அந்த உடலை விட்டு வெளியேற அனுமதிக்குமாறு மீண்டும் மீண்டும் என்னை கேட்டுக் கொண்டே இருந்தாள்.

நாகேந்திர சாஸ்திரி என்கிற பிராமணன் நாவிதனின் மனைவியை மீண்டும் உயிர் பெற செய்துவிட்டு அவளுடன் தகாத உறவு மேற்கொண்டு நாவிதனனுக்கு துரோகம் செய்கின்றார் என்ற செய்தி நான் வாழ்ந்து கொண்டிருந்த கிராமம் முழுவதும் பரவியது. அதனால் நாவிதர் ஜாதியின் முக்கியஸ்தர்கள் இந்த தவறான நடத்தைகளை அந்த பகுதியில் வசிக்கும் பிராமணர்களுக்கு தெரியப் படுத்தி என்னை என் ஜாதியில் இருந்து தள்ளி வைத்துவிட்டு, நான் மந்திரம் மற்றும் தந்திரம் மூலம் சம்பாதிக்கும் பணத்தில் முக்கால் பாகத்தை நாவிதனுக்கு இழப்பீடாக அளித்துவிட்டு மீதியிருக்கும் கால் பாகத்தை மட்டும் நான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்தனர்.

என்னுடைய நிலை மிகவும் மோசமானது. இந்த விஷயத்தில் எவரும் என்னுடைய விளக்கத்தைத் கேட்கத் தயாராக இல்லை. நாவிதனின் இறந்த மனைவி சில பெண்களை ஆட்கொண்டு தான் நாகேந்திர சாஸ்திரியின் இறந்த மனைவி என்று கூறி , தன் கணவருடைய நடத்தையைத் தடுக்க வேண்டியது நாவித ஜாதியின் தலைவருடைய கடமை என்று கூறினாள். அனைவரும் மிகவும் கோபமடைந்து என்னையும் அந்த நாவிதனுடைய மனைவியையும் கொல்லப் போவதாக மிரட்டினர்.

நான் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம் அடைக்கலம் அடைந்தேன். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், "**நீங்கள் அவளுடைய கணவன் என்பதால் அவளை நாவிதனின் மனைவியின் உடலுக்குள் நுழைப்பது சரியாகிவிடாது. அதுமட்டுமல்ல. உங்களுடைய மந்திர மற்றும் தந்திர சாஸ்திரங்கள் மூலம் துயரத்தில் இருப்பவர்களுக்கு சேவை புரியும் போது எந்தப் பணமும் தக்ஷிணையாக எதிர்பார்க்கக்கூடாது. பணத்தின் மீது பேராசை கொள்ள கூடாது. அவர்கள் கொடுப்பதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்**" என்று உறுதியாகக் கூறினார். நான் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டேன். பின்னர் என் மனைவியுடைய ஆத்மா நாவிதனின் மனைவியின் உடலில் இருந்து வெளியேறி சென்றுவிட்டது. அந்த உடல் தகனம் செய்யப்பட்டது" என்று கூறி முடித்தார் நாகேந்திர சாஸ்திரி.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 40


## பாஸ்கர சாஸ்திரியை சந்தித்தல்

### சங்கர் பட்டுக்கும் தர்ம குப்தருக்கும் ஏற்பட்ட வினோதமான அனுபவங்கள்

நாங்கள் பல போக்குவரத்து வழிகள் மூலம் பயணித்தோம். சில சமயம் நடந்து சென்றும், சில சமயம் இரட்டை மாட்டு வண்டி மூலம், சில சமயங்களில் குதிரை வண்டி மூலம் பயணித்தோம். சில நாட்கள் பயணம் செய்த பின்னர் திரிபுராந்தகம் என்னும் மஹாக்ஷேத்திரத்தை அடைந்தோம். நாங்கள் ஸ்ரீ திரிபுராந்தகேஸ்வரர் கோவிலுக்கு சென்றோம். எனக்குப் பல அனுபவங்கள் கிடைத்தது. எங்களிடம் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக பாதுகைகள் இருந்தன. எங்கள் பயணத்தின் போது ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்கள் கூடவே இருப்பது போலவே தோன்றியது. எங்கள் உடலுக்குள் ஸ்ரீ ஸ்ரீபாதர் இருப்பது போல் உணர்ந்தோம். நாங்கள் அடுத்த அடி எடுத்து வைக்கும் போது எங்கள் உடலுக்குள் இருக்கும் ஸ்ரீ ஸ்ரீபாதரே அடுத்த அடி எடுத்து வைப்பது போல் இருந்தது. நாங்கள் பேசும் போது என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல், அவர் எங்கள் மூலம் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொண்டோம். நாங்கள் உணவு உண்ட போது, எங்களுக்குள் வாசம் செய்யும் அவர் உண்பது போல் உணர்ந்தோம். ஸ்ரீ ஸ்ரீபாதர் எங்கள் உடல், சதை, ரத்தம் மற்றும் நரம்புகள் முழுவதிலும் நிறைந்திருப்பது போல் உணர்ந்தோம். ஜீவாத்மாதான் பரமாத்மா என்கிற கோட்பாடு பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம் ஆனால் உடல் முழுவதும் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய சைதன்யம் நிறைந்திருப்பது போலவும் அவருடன் எந்த வித தொடர்பும் இல்லாமல் இது போன்ற அனுபவம் எங்களுக்கு அருள் செய்யப்பட்டிருப்பது போன்ற அதிசயத்தைப் பார்த்ததோ அல்லது முன்பு கேள்விப்பட்டதோ இல்லை.

திரிபுராந்தகேஸ்வரர் கோவில் அர்ச்சகர் பெயர் பாஸ்கர சாஸ்திரி. அவர் எங்கள் மீது மிகவும் அன்பு செலுத்தினார். அவர் பீதிகாபுரத்தை சேர்ந்தவர். அவர் இந்த கோவிலின் தினசரி பூஜைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஷோடசி ராஜராஜேஸ்வரியின் பக்தர். ஸ்ரீ பீதிகாபுரத்தில் இருக்கும் ஸ்ரீ குக்குடேஸ்வரரின் துணைவியான ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கனவின் மூலம் அவருக்கு மந்திர உபதேசம் செய்தாள். எங்கள் இருவரையும் தன் விருந்தாளிகளாக வரும்படி அழைத்தார். எங்களிடம் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பாதுகைகள் இருப்பதை அவர் கவனித்தார். பாதுகைகளை அவருடைய பூஜை அறையில் வைத்தோம். அந்த பாதுகைகளில் இருந்து ஒரு தெய்வீக குரல் கேட்டது:

“என் குழந்தைகளே, நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள். இந்த பாதுகைகள் பாஸ்கர சாஸ்திரியால் வழிபட வேண்டும். இந்த பாதுகைகள் இப்போது செப்பு உருவத்தில் உள்ளது. பாஸ்கர சாஸ்திரியின் மந்திர ஜெபத்தின் வலிமையால் சில வருடங்களுக்குப் பின்னர் அவை சொர்ண பாதுகைகளாக மாறி விடும். ஹிரண்ய லோகத்தில் இருந்து ஒரு மகாபுருஷர் வந்து அதை ஹிரண்ய லோகத்துக்கு எடுத்துச் சென்று அங்கேயே வழிபடுவார். பின்னர் அவர்கள் காரண லோகத்துக்கு எடுத்து செல்வார்கள். பின்னர் நான் வசிக்கும் மகா காரண லோகத்திற்கு என்னிடம் கொண்டு வருவார்கள். நான் அதை அணிந்து கொண்டு காரண லோகத்துக்கு வந்து அங்கிருக்கும் ஆத்மாக்களை ஆசீர்வதிப்பேன். பின்னர் ஹிரண்ய லோகத்துக்கு வந்து அங்கிருக்கும் மகா புருஷர்களை ஆசீர்வதிப்பேன். பின்னர் என்னுடைய பாதுகைகள் பேரொளி பெறும். பின்னர் பதினெட்டாயிரம் சித்த புருஷர்கள் அந்த பாதுகைகளை நான் பிறந்த இடத்திற்குத் தங்க விமானத்தில் எடுத்துக் கொண்டு செல்வார்கள். மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டு தெய்வீகக் கற்பூர ஆரத்தியுடன், அதை நான் பிறந்த இடத்தின் பூமிக்கு 360 அடி ஆழத்திற்குக் கீழே ஸ்தாபிப்பார்கள். அந்த பாதுகைகளை தங்க நிறத்தில் அங்கு இருக்கும் தெய்வீகச் சர்ப்பங்கள் வணங்கும். அறுபத்து நான்காயிரம் யோகினிக் கூட்டம் என்னை வணங்குவார்கள். அவர்கள் அந்த பாதுகைகளை தங்க ஆசனத்தில் வைப்பார்கள். நான் அங்கு தினமும் யோகினிகள் கூட்டம் மற்றும் முனிவர்கள் புடைசூழ தர்பார் நடத்துவேன். பூமியுடன் இணைக்கப்பட்ட சொர்ண பீதிகாபுரம் பல்வேறு அளவுகளுடன் யார் கண்ணுக்கும் தெரியாத நிலையில் இருக்கும். சாதாரண மக்களுக்கு பூமிக்கு மேல் இருக்கும் பீதிகாபுரம்தான் கண்ணுக்கு தெரியும். யோக பார்வை இருக்கும் ஒருவரால் மட்டுமே சொர்ண பீதிகாபுரத்தைப் பார்க்க முடியும். என்னுடைய சொர்ண பாதுகைகள் பதிக்கப்பட்ட அதே இடத்தின் பூமியின் வெளிப் பகுதியில் என்னுடைய பாதுகைகள் பீதிகாபுரத்தில் பதிக்கப்படும். ஆகவே அனைவரும் மிகவும் சந்தோஷமாக இருங்கள்.



வருங்காலத்தில் பல அற்புதங்கள் நடைபெறப் போகிறது. என்னுடைய மஹாஸமஸ்தானத்தில் உள்ள என் பாதுகைகளை தரிசனம் செய்ய மக்கள் எறும்பு கூட்டம் போல வருவார்கள்" என்று கூறியது.

நாங்கள் மகிழ்ச்சியில் உறைந்து போனோம். ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி ஷோடசி ராஜராஜேஸ்வரியின் சிறந்த பக்தர். நான் அவரிடம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் மகிமைகளைப் பற்றி விவரிக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பகுத்தறியும் சக்தியின் அடையாளம்

பின்னர் அவர், "என் அருமை செல்வங்களே, ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் சைதன்யம் நம் மனதின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களுக்கு அப்பால் உள்ள பரந்து விரிந்துள்ள இடத்தில் அமைந்துள்ளது. பொதுவாக எண்ண ஓட்டத்துடன் கூடிய நம்முடைய மனம் அவற்றை அறிவுசார்ந்த சக்தியாக மாற்றுகிறது. அவளுடைய தூய்மையாக்கும் செயல்திட்டம் என்னவென்றால் அந்த மாற்றத்தை தடுத்து, அவற்றை பகுத்தறிவு நிறைந்த ஒன்றாக மாற்றுகிறாள். அந்த மஹாதேவி இந்த செயல்திட்டத்திற்கு நமக்கு உதவி செய்கிறாள். குறுகிய வரம்புகளை கடந்து நம் விருப்பங்களை விரிவடைய செய்ய அவள் அருள்புரிகிறாள். வலிமை மற்றும் பகுத்தறிவு சக்தி ஒரே இடத்தில் இருப்பதில்லை. எனினும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அருள் நமக்குக் கிடைத்தால் வலிமை மற்றும் பகுத்தறியும் சக்தி ஆகியவை நம்மிடத்தில் வாசம் செய்யும். தெய்வீக சைதன்யம் எல்லையற்றது. நம் மனதை அந்த எல்லையற்ற தன்மைக்குத் திறக்கச் செய்கிறாள். நம்மிடம் மற்றும் பிரபஞ்சத்தில் சிந்தனைகள் வளர்ச்சி பெறுவதற்கு அவள் நமக்கு ஒத்துழைப்பு அளிக்கிறாள். அசாதாரணமான தெய்வீக ஞானம் பெறுவதற்கும், நம்முள் மற்றும் பிரபஞ்சத்தில் அழிவில்லாத தெய்வீக சக்திகள் வளர்ச்சி பெறவும் மற்றும் சிறந்த சாதகங்கள் பெறுவதற்கும் அவளுடைய அருள் மிகவும் அவசியம். ஸ்ரீ ராஜராஜேஸ்வரி எல்லையற்ற சக்தியின் அடையாளம். அவளுக்கு ஏதாவது தெரியவேண்டும் என்று அவள் விரும்பினால், அவளுக்குத் தெரியாதது என்று ஒன்றுமே இருக்காது.

அவள் அனைத்து உயிரினங்கள் பற்றியும், அவற்றின் குணங்கள், அவற்றை இயக்கும் சக்தி, இந்த உலகத்தின் தர்மம் மற்றும் அதைச் சார்ந்த நேரம் ஆகிய அனைத்து விஷயங்களையும் கிரகித்துக் கொண்டவள். அவளுக்கு யார் மீதும் பாரபட்சம் கிடையாது. அவளுக்கு யார் மீதும் விருப்போ அல்லது வெறுப்போ கிடையாது. தன்னுடைய ஆன்மீக முயற்சிகளின் வலிமைகள் மூலம் வருங்காலத்தைப் பற்றி ஞானம் பெற்றவர்களைத் தனக்கு நெருக்கமான நம்பிக்கையாளர்களாக ஏற்றுக் கொள்வாள்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அருளை பெற்ற ஒருவரால் பகுத்தறியும் சக்தி மூலம் தீய சக்திகளை அழிக்க முடியும். தேவி அவர்களுக்கு தேவையான பலன்களை அருள்கிறாள். அவள் எந்த படைப்பின் மீதும் பற்றுதல் இல்லாமல் பற்றற்றவளாகவே இருக்கிறாள். அவள் ஒவ்வொருவருடைய குணம்,தேவை மற்றும் திறன் ஆகியவற்றை

கருத்தில் கொண்டு அனைவரையும் கையாள்கிறாள். அவள் தன்னுடைய விருப்பத்தை யார் மீதும் வலுக்கட்டாயமாகத் திணிப்பதில்லை. அவள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் பரிணாமம் பெற வழி நடத்துகிறாள். அவள் ஏதும் அறியாதவர்களுக்கு அவர்களின் ஏதும் அறியாத பாதையில் செல்ல அனுமதிக்கிறாள். அந்த மக்களின் தனித்தன்மைக்கு அவள் மதிப்பளிக்கிறாள். அவர்கள் உயர்த்தப்படுகிறார்களா அல்லது கெட்டுப்போகின்றனரா என்பது பற்றி அவள் கவலைப் படுவதில்லை. அவளுடைய கருணை எல்லைகள் இல்லாததும் வற்றாததும் ஆகும். அவள் அனைவரையும் தன் குழந்தைகளாகவே கருதுகிறாள். ராக்ஷசர்கள், ஆவிகள் மற்றும் பிசாசுகளை கூட தன் குழந்தைகளாகப் பாவிக்கிறாள். அவளுடைய கருணை மனிதனுடையது போல கண்மூடித்தனமானது அல்ல. அவளுக்கு கருணை மிகவும் அதிகமாக இருந்தாலும் தன் பகுத்தறிவுத் தன்மையை விட்டுக்கொடுக்க மாட்டாள். பரமாத்மா வகுத்த பாதையில் இருந்து விலக மாட்டாள். ஞானம்தான் அவள் சக்தியின் மையம். ஆகவே அவளுடைய அருள் நமக்கு கிடைத்தால், உண்மை வெளியாகும் மற்றும் உண்மை மற்றும் ஞானம் மூலம் நமக்கு படிப்பினை கிடைக்கும். அவளுடைய அருளைப் பெற கடமை மற்றும் உண்மையை இடைவிடாது பின்பற்ற வேண்டும். அப்போதுதான் அவளால் நாம் ஆசீர்வதிக்கப் படுவோம்.

நான் பீதிகாபுரத்தில் வசித்து வந்ததால் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய கருணையினால் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அருள் எனக்கு கிடைத்தது. இது என்னுடைய தீக்ஷை நேரம். இன்று நான் அதிக நேரம் தியானத்தில் கழிக்க வேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர் எந்த சூழ்நிலையில் பீதிகாபுரத்தை விட்டு கிளம்பி தன் பயணத்தை தொடங்கினார் என்பதை நாளை விவரிக்கிறேன். நீங்கள் வருவதற்கு முன்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் நான் அளித்த புளியோதரையை சிறிதளவு ஏற்றுக்கொண்டார். அவர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் உருவத்தில் தரிசனம் அளிப்பார். இந்த மஹாப்ரஸாதத்தை எடுத்துக் கொண்டு நீங்களும் தியானம் செய்யுங்கள்" என்று பாஸ்கர சாஸ்திரி கூறினார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் - 41

## போலி சந்நியாசியின் கதை- ஸ்ரீ ஸ்ரீபாதர் தத்த தீக்ஷை அளித்தல், தான் தத்தர் என்று அறிவித்தல் மற்றும் பீதிகாபுரத்தை விட்டு மறைந்து விடுதல்

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மஹாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி, மகாகாளி மற்றும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் உருவகம் என்று ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி எங்களிடம் கூறினார். எப்போதும் ஸ்ரீ ஸ்ரீபாதரை சிரத்தையுடன் வணங்குபவர்களால் மட்டுமே ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பெண் குணத்தை புரிந்து கொள்ள முடியும்.

நான் நான்கு நிலை பேச்சுக்களான பரா, பஸ்யந்தி, மத்யமா மற்றும் வைகரி பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அவற்றை பற்றி விளக்கம் அளிக்குமாறு நான் ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரியிடம் கேட்டுக்கொண்டேன். அதற்கு ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி, "அம்பிகை ஒவ்வொரு பேச்சிலும் வெளிப்படுகிறாள். அவள் ஒவ்வொருவரின் பேச்சின் மூலமாக மற்றும் ஒவ்வொரு தனிநபருக்குள்ளும் பேசுகிறாள். வெளியில் கேட்கப்படும் பேச்சை ஸ்தூல பேச்சு (மொத்த பேச்சு அல்லது உண்மையான பேச்சு) என்று கூறப்படுகிறது. பேச்சுகள் வெளியே கேட்கப்படாமல் உள்ளுக்குளேயே இருந்து கொண்டு உதட்டின் அசைவினால் உணர்ந்து கொள்ளக்கூடியதை மத்யமா என்று கூறப்படுகிறது. மத்யமத்தை விட சூக்ஷமமானது வைகரி என்று அழைக்கப்படும். ஒரு பேச்சு தொண்டையில் தங்கி வாய் வரை வந்து விட்டு வெளியே வராமல் நடுவழியில் தங்கி பின்னர் மனதை நோக்கி செல்வதை பஷ்யந்தி என்று அழைக்கப்படும். பரா என்கிற இந்த பேச்சு இன்னும் சூக்ஷமமானது. இது வெறும் எண்ணமாக தொப்புளில் வாசம் செய்யும்.

அம்பிகை திரிபுர பைரவியாகவும் வணங்கப்படுகிறாள். அவள் முக்குணங்கள் (சத்வ, ரஜஸ் மற்றும் தாமச குணங்கள்), மூன்று உலகங்கள், மும்மூர்த்திகள் மற்றும் மூன்று இருப்பு நிலைகளின் கட்டுப்படுத்தும் தெய்வமாக (அதிபதி) விளங்குகிறாள். திரிபுடியை திரிபுரமாக ஆக்கி மூவுலகங்களையும் ஆள்கிறாள். பக்தியுடன் முழுமையாக சரணடைந்து அவளிடம் அடைக்கலம் அடைந்தால், நமக்கு இந்த உலகம் அல்லது பிற உலகங்களில் இருந்து ஏற்படும் எதிர்ப்புகள் அனைத்தும் எந்தவித தீங்கையும் ஏற்படுத்தாது. எதிர்மறை சக்திகள் இந்த ஸ்தூல உலகத்துக்கு மட்டும் வரையறுக்கப் பட்டதல்ல. நம் உயிர் சக்திகளின் நிலைகளை போல மன ரீதியான ஆழ்மன நிலைகளான உடல் சார்ந்த நிலை மற்றும் ஆன்மீகம் சார்ந்த நிலை என்ற இருப்பு நிலைகள் இருக்கிறது. அதன்படி, பல்வேறு உலகங்களும்

இருக்கின்றன. அதற்குத் தேவையான வளர்ச்சிகள் நாம் பெற்றால், இந்த ஸ்தூல உலகத்தில் வாழ்வது போலவே அந்த உலகங்களிலும் வாழலாம்.

**ஒரு மனிதன் முன்னேற வேண்டும் என விரும்பினால், அவனுக்கு பக்தியும் திடமான நம்பிக்கையும் வேண்டும். பக்தி என்றால் எல்லாவற்றையும் முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வது. அனுபவத்தின் மூலம்தான் நம்பிக்கை பெற முடியும். பின்னர் நாம் அந்த நம்பிக்கையை ஆதாரமாக கொண்டு வாழ வேண்டும். தேவையான நேரங்களில் நமக்கு கண்டிப்பாக உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கையுடன் கூடிய பாதுகாப்பு உணர்வு நம்மிடம் இருக்கும் போது அது தன்னம்பிக்கையாக ஆகிறது.**

சக்தி இல்லாத ஞானத்தினால் செயலற்ற நிலை உண்டாகும். ஞானம் இல்லாத சக்தி கண்மூடித்தனமாக்கி அழிவை உண்டாக்கும். ஆகவே, நாம் இயற்கையின் பந்தங்களில் இருந்து நம் ஞானத்தின் மூலம்தான் விடுதலை பெற முடியும். சக்தியின் (அண்டவெளியின் ஆதி சக்தி) அருளினால்தான் பூர்ணத்துவம் அடைய முடியும். சக்தி ஞானத்திடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

சாங்கிய யோக பாதையில் சைதன்யம் (ஆத்ம ஸ்வரூபம்) புருஷர் (ஆண்) என்றும் பிரகிருதி (இயற்கை) பெண் என்றும் அழைக்கப்படும். கீழ் நிலைகளில் இவை இரண்டுக்கும் மோதல்கள் இருக்கும். சைதன்யம் செயல்கள் புரியாது. இயற்கைக்கு ஞானம் கிடையாது. இவை இரண்டும் ஒன்றிணைந்தால்தான் படைப்புகள் நடக்கும். இவை இரண்டுக்கும் ஊனம் இருக்கிறது. சைதன்யத்தை நோக்கினால், அது ஒரு நொண்டி. இயற்கை ஒரு குருடு. இந்த உலகத்தில் குருட்டுத்தன்மையும் நொண்டித்தன்மையும் இருக்கிறது என்பதை நிரூபிக்கவே, ஶ்ரீ ஶ்ரீபாதரின் குடும்பத்தில் நொண்டித்தன்மையுடன் ஒரு சகோதரனும் குருட்டுத் தன்மையுடன் ஒரு சகோதரனும் பிறந்தனர். சைதன்யம் நொண்டி என்பதையும் இயற்கை குருடு என்பதையும் இந்த பிறப்புகள் எடுத்துக் காட்டுகிறது.

மேல் நிலைகளில், சைதன்யமும் பிரகிருதியும் ஈஸ்வரன் மற்றும் ஈஸ்வரி என்று அழைக்கப்படும். மேல் நிலைகளில் இவ்விரண்டுக்கும் மோதல் இருக்காது. சரியான நேரம் வந்தபோது ஶ்ரீ ஶ்ரீபாதர் தன் சகோதரர்களுடைய நொண்டித்தன்மை மற்றும் குருட்டுத்தன்மையை முழுவதுமாக சரியாக்கினார். ஒரு மஹா திட்டத்தை அவர் மேற்கொள்ள போகிறார் என்பதை குறிக்கும் வண்ணம்தான் இதுபோன்ற நொண்டித் தன்மை மற்றும் குருட்டுத்தன்மையை முற்றிலுமாக ஒழித்தார்.

ஆழ்நிலையில், சைதன்யத்தை ப்ரம்மம் என்றும் பிரகிருதியை மாயை என்றும் கூறுவார்கள். தானே பிரம்மன் மற்றும் அதேபோல் மாயை என்பதை நிரூபிக்கவே அவர் தனது பதினாறாவது வயதில் வீட்டை விட்டு, குடும்பத்தை பிரிந்து சந்நியாசி போல உலாவிக் கொண்டிருந்தார். வரையறை இல்லாத, எல்லையற்ற பண்புகள் உடைய பிரம்மத்துக்கு வரையறை அளிப்பது சக்தி என்னும் மாயைதான். எல்லையற்ற குணமுடைய பிரம்மமாக இருப்பினும் மாயையின் வரையறைக்குக் கட்டுப்பட்டு வேலை செய்வதை குறிக்கும் வகையில் அவரின் பிறப்பு பீதிகாபுரத்தில் நிகழ்ந்தது.

பதினாறு வயதிற்கு பின்னர் அவர் எல்லையற்ற குணமுடைய பிரம்மமாக மாயையின் கட்டுப்பாட்டில் இருக்க போவதில்லை என்பதை அவர் முன்பே தெளிவாக்கி விட்டார். அவர் பக்தர்களை முன்னேற்ற அவதரித்த உயர்ந்த அடிப்படை தத்துவம்.

கீழ் நிலைகளில் பிரகிருதி மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். அதை விவரிக்கவே, இயற்கையால் பீதிகாபுரத்தில் பல சர்ச்சைகள், விவாதங்கள் மற்றும் துன்பங்கள் ஏற்பட்டதாக ஸ்ரீ ஸ்ரீபாதரின் சரிதாம்ருதத்தில் இருக்கிறது. பின்னர், மத்திய நிலையில் புருஷரும் பிரகிருதியும் சமமாக இருக்கும். இந்த நிலையில் சில நாத்திகர்கள் மற்றும் சிலர் பிரச்சனைகளை உருவாக்கினர். அதேபோல, பல அனுபவங்களைப் பெற்ற பின்னர் நம்பிக்கை பெற்ற பிறகு அவரை அவதாரம் என்று கண்டுணர்ந்த மக்கள் இருந்தனர்.

அவர் பீதிகாபுரத்தை விட்டுச் சென்ற போது இருந்த நிலையில் மாயை அவருடன் ஐக்கியமாகி இருந்தது. தான் பரப்பிரம்மத்தின் அவதாரம் என்று தெளிவாக அறிவித்துவிட்டு பின்னர் தன் அவதார லீலைகளை மிகுதியாக வெளிக்காட்டினார். பீதிகாபுரத்தின் சூழ்நிலை அதற்கு ஏற்றவாறு இல்லை என்பதால் அவர் பீதிகாபுரத்தை விட்டு கிளம்பி விட்டார்.

சில நூற்றாண்டுகளுக்கு பிறகு உலகம் முழுவதும் அவருடைய புகழ் பரவும் போது, அவருடைய விருப்பத்தின் படி பீதிகாபுர வாசிகளுக்கும் ஞானம் உதிக்கும். முழுமையாக வெளிப்பட்ட நிலையில், அவருடைய தெய்வீகச் சைதன்யம் மனிதனுடைய சைதன்யத்தின் நொண்டித்தன்மையையும் இயற்கையின் குருட்டுத் தன்மையையும் அகற்றும்.

நான் ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரியிடம் எந்த சூழ்நிலையில் ஸ்ரீ ஸ்ரீபாதர் பீதிகாபுரத்தை விட்டு கிளம்பினார் என்று கேட்டதற்கு:

“ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக லீலைகள் சாதாரண மக்களின் கற்பனைக்கு அப்பால் இருக்கும். ஒருமுறை ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலுக்கு ஒரு சந்நியாசி வந்தார். அவர் ஒரு தத்த பக்தர். அவர் மக்களுக்கு தத்த தீக்ஷை வழங்கினார். தத்த தீக்ஷை நாற்பது நாட்களுக்கு அனுசரித்தால் எல்லா விருப்பங்களுக்கும் நிறைவேறும் என்று அறிவித்தார். பீதிகாபுரத்தில் இருக்கும் பிராமண சமூகமும் தத்த தீக்ஷை எடுத்துக் கொண்டனர். அவருக்கு பெருமளவு தக்ஷிணை கிடைத்தது. அந்த பணத்தில் சிறு பகுதியை அவரிடம் தீக்ஷை பெற்றுக் கொண்ட பிராமணர்களுக்கு அளித்தார். அந்த பிராமணர்கள் மற்ற ஜாதியை சேர்ந்தவர்களிடம் சந்நியாசியிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டு தாராளமாக தக்ஷிணை அளித்து தங்கள் வாழ்க்கையை முழுமையாக்கி கொள்ளுமாறு கூறினர். பிராமணர்களின் வார்த்தையை மீற முடியாமல் பலர் அவரிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டு பெரிய தொகையை சந்நியாசிக்கு தக்ஷிணையாக அளித்தனர். இதற்கிடையில், அனைவரும் தத்த தீக்ஷை பெற்றுக்கொள்ளலாமா என்கிற விவாதம் எழும்பியது. பிராமணர்கள், க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்கள் சங்கத்தினர் அனைவரும் சேர்ந்த ஒரு கூட்டம் நடைபெற்றது. அதற்கு ஸ்ரீ பாப்பண்ணார்யா தலைமை தாங்கினார். ஸ்ரீ பாப்பண்ணார்யா, “**ஸ்ரீ**

**தத்தர் அனைவருக்கும் உரித்தானவர். அனைவரும் தீக்ஷை பெற்றுக் கொள்ளலாம். ஆகவே அனைத்து ஜாதியினரும் சந்நியாசியிடம் தீக்ஷை பெற்று கொள்ளலாம். தீக்ஷை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்**" *என்று குறிப்பிட்டார்.*

**"ஐயா! பிராமணர்கள், க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்கள் தங்கள் மத சம்பிரதாயங்களை கடைபிடிப்பவர்கள். ஆகவே அவர்கள் தீக்ஷை பெறலாம். சூத்திரர்கள் மத சம்பிரதாயங்களை கடைபிடிக்க மாட்டார்கள். ஆகவே அவர்கள் தீக்ஷை பெற்றுக் கொள்ளக்கூடாது. அவர்களிடம் நாம் தக்ஷிணை மட்டும் பெற்றுக்கொண்டு நம்முடைய தவ வலிமையினால் அவர்களை உயர்த்த வேண்டும்**" *என்று பிராமண சங்கத்தின் பெரும்பாலானோர் கூறினார்கள்.*

*பின்னர் ஸ்ரீ பாப்பண்ணார்யா தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார். "எல்லா ஜாதியிலும் சம்பிரதாயங்களை கடைபிடிப்பவர்கள் மற்றும் கடைபிடிக்காதவர்கள் இருக்கிறார்கள். யார் சிரத்தையுடன் ஜாதி சம்பிரதாயங்களைக் கடைபிடிக்கிறார்கள் யார் கடைபிடிப்பதில்லை என்று முடிவு செய்வது மிகவும் கடினம். முழு சமூகத்தின் நல்வாழ்வு மற்றும் சௌபாக்யத்தை கருத்தில் கொண்டு தத்த ஹோமம் அல்லது மற்ற யாகங்கள், சடங்குகள் மற்றும் சம்பிரதாய முறைகளைச் செய்து முழு சமூகத்தின் நல்வாழ்வை பெறலாம். சூத்திரர்களிடம் தக்ஷிணை மட்டும் பெற்றுக்கொண்டு தீக்ஷை அளிக்காமல் இருப்பது நியாமற்ற செயல் என்று எனக்கு தோன்றுகிறது. தக்ஷிணையை பெற்றுக்கொண்டு நம்முடைய தவவலிமையால் சூத்திரர்களை உயர்த்துவது போலவே மற்ற ஜாதியினரான பிராமணர்கள்,க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்களையும் உயர்த்தலாம். அப்படியிருந்தால் குறிப்பிட்ட சாதியினருக்கு மட்டும் சிறப்பாக தீக்ஷை அளிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டுமல்லாது தீக்ஷை அளிப்பதற்கு பெருமளவு பணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூலி வேலை செய்யும் ஏழை மக்கள் பல நாட்கள் பட்டினியாக இருந்து இந்த பெருந்தொகையை தக்ஷிணையாக அளிக்கிறார்கள். தக்ஷிணை அனைவரும் தானே முன்வந்து அளிக்க வேண்டும். தனக்கு முடிந்த மற்றும் சந்தோஷத்துடன் அளிக்கும் தொகையைத்தான் தக்ஷிணையாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் தத்தர் சந்தோஷமாக இருப்பார்" என்று கூறினார்.*

*பிராமணர்கள் இவ்வார்த்தைகளுக்கு மறுப்பு தெரிவித்தனர்.* **"நாம் பிராமணர்களாக இருப்பினும் நம் கிராமத்துக்கு சிறந்த பரமஹம்ஸ பரிவ்ராஜகர் (அலைந்து கொண்டிருக்கும் சந்நியாசி) வந்த போது அவரை பூரண கும்பத்துடன் வேத மந்திரங்கள் முழங்க வரவேற்கவில்லை. அதுமட்டுமல்லாமல் மக்களின் நல்வாழ்வுக்காக அவர் தத்த மண்டல தீக்ஷை அளிக்கும் போது பிராமண சங்கத்தை சேர்ந்தவர்கள் வித்தியாசமான மனப்பான்மையை வெளிக்காட்டுகின்றனர். இது மிகவும் வெட்கக்கேடு"** *என்று கூறினர்.*

*பின்னர் ஸ்ரீ பாப்பண்ணார்யா, "வந்திருப்பவர் உண்மையிலேயே பரமஹம்ச பரிவ்ராஜகர் என்றால் அவரை வரவேற்க சில சம்பிரதாயங்கள் இருக்கிறது. அவர்*

வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தன்னுடைய பிரதான சீடர்கள் மூலம் இங்கிருக்கும் பிராமண சங்கத்துக்குத் தெரியப் படுத்த வேண்டும். பின்னர் பிராமண சங்கம் அவர்களுடைய முழு விவரங்களையும் கணக்கில் கொண்டு பிரதான சீடர்களுடன் சாஸ்திரங்கள் பற்றி விவாதிப்பர். இதன்மூலம், பிரதான சீடர்களின் சாஸ்திர திறன் தெரிந்து கொள்ளப்படும். பின்னர் சங்கத்தினர் அவர்கள் தகுதியான பரமஹம்ச பரிவ்ராஜகரின் சீடர்கள் தானா என்று முடிவு செய்வார்கள். பின்னர், பரமஹம்ச பரிவ்ராஜகர் வரும்போது பூரண கும்பத்துடன் வேத மந்திரங்கள் முழங்க வரவேற்பு அளிக்கப்படும். பிறகு அவருடன் சாஸ்திரங்கள் பற்றிய விவாதங்கள் நடத்தப்படும். அவர் பரிந்துரைக்கும் யக்ஞங்கள், யாகங்கள், தீக்ஷை அல்லது பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும். இவை ஏதும் இல்லாமல் பரமஹம்ச பரிவ்ராஜகர் குக்குடேஸ்வரர் கோவிலுக்கு வந்துவிட்டார். உடனேயே தத்த தீக்ஷை பற்றி உங்களிடம் பிரஸ்தாபிக்கத் தொடங்கிவிட்டார். இது நம்முடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெற்றதா?" என்று ஸ்ரீ பாப்பண்ணார்யா கேள்வி எழுப்பினார்.

அதற்கு பிராமணர்கள், **"இது விதிமுறைகள் மீறப்பட்டதை பற்றி விவாதம் செய்யும் நேரம் அல்ல. நீங்களும் உங்கள் மருமகன் ஸ்ரீ அப்பலராஜசர்மாவும் தீக்ஷை பெற்று கொண்டு தக்ஷிணை அளிப்பீர்களா?"** என்று கேட்டனர். அதற்கு ஸ்ரீ பாப்பண்ணார்யா, **"நாங்கள் அனைவருடைய நல்வாழ்வுக்காக தீக்ஷை எடுத்துக் கொள்வோமே ஒழியே எங்களின் தனிப்பட்ட நல்வாழ்வுக்காக இல்லை. நாங்கள் அந்த சந்நியாசியிடம் தீக்ஷை எடுத்துக் கொள்ளாத காரணத்தால் அவருக்கு தக்ஷிணை அளிக்கப் போவதில்லை. அப்படி எந்த பிரமணராவது அந்த சந்நியாசியிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டு தக்ஷிணை அளிக்க விரும்பினால் தாராளமாகச் செய்யலாம். பிராமண சங்கம் பொதுவான பிரச்சனைகள் மற்றும் நல்வாழ்வுக்கான முடிவுகளைத்தான் எடுக்குமே ஒழிய தனிப்பட்ட தீக்ஷை, பிரச்சிகளுக்குள் தலையிடாது"** என்று ஸ்ரீ பாப்பண்ணார்யா திட்டவட்டமாக கூறினார். ஸ்ரீ சிரேஷ்டியும் ஸ்ரீ வர்மாவும் சந்நியாசியிடம் தீக்ஷை பெற மறுத்துவிட்டனர். இருப்பினும், பிராமணர்கள், க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்களுக்கு சந்நியாசியிடமிருந்து தத்த மண்டல தீக்ஷை பெற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது வேண்டாமா என்கிற சுதந்திரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.



## ஶ்ரீ ஶ்ரீபாதர் தத்த தீக்ஷை அளித்தல்

ஶ்ரீ ஶ்ரீபாதர் மீது பக்தியும் அக்கறையும் கொண்ட சில விவசாயிகள் இருந்தனர். அவர்களில் வெங்கையா ஒரு முக்கியமானவர். ஶ்ரீ ஶ்ரீபாதர் வெங்கையாவின் வீட்டுக்கு சென்றார். அவர் அவர்களிடம் சந்நியாசியிடம் தத்த தீக்ஷை பெற முடியவில்லை என்று யாரும் வருத்தம் அடைய வேண்டாம். தான் தத்த தீக்ஷை அளிப்பதாக அறிவித்தார். மேலும், தக்ஷிணை அவர்களால் முடிந்த தொகையை மட்டும்தான் அளிக்க வேண்டும் என்று கூறினார். தான் அளிக்கும் முறைக்கு மண்டல தீக்ஷை தேவை இல்லை என்றும் ஒரு இரவு மட்டும் தீக்ஷை அனுஷ்டித்தால் போதுமானது என்றும் கூறினார். ஶ்ரீ ஶ்ரீபாதர் ஒரு முழுப் பகல் மற்றும் இரவு முழுவதும் வெங்கையாவின் வீட்டில் இருந்தார். ஶ்ரீ ஶ்ரீபாதர் பதினெட்டு வர்ணத்தவருக்கும் தீக்ஷை அளித்தார். தீக்ஷை பெற்றவர்களில் பிராமணர்கள், க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்களும் அடக்கம்.

## ஶ்ரீ ஶ்ரீபாதர் தானே ஶ்ரீ தத்தர் என்று அறிவித்தல்

அந்த நாளன்றுதான் ஶ்ரீ ஶ்ரீபாதர் தன்னை ஶ்ரீ தத்தர் என்று வெளிப்படையாக கூறினார். அது நடைபெற்ற நாள் ஶ்ரீ தத்தருக்கு மிகவும் உகந்த நாளான வியாழக்கிழமை. அவரிடம் தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களுக்கு தன் புனிதமான ஆசீர்வாதத்தை அளித்து விட்டு அவர்களை பஜனை செய்யவைத்தார். அவர் தன்னை ஶ்ரீ தத்தர் என்று அறிவித்து விட்டு, தனக்கான விரிவான திட்டங்கள் காத்திருப்பதாகவும், பக்தர்கள் அவரை நினைவூட்டிக் கொண்டவுடனேயே அவர் மகிழ்ச்சி அடைந்து அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதாகக் கூறினார்.

அடுத்த நாள் விடியற்காலையில் அதாவது வெள்ளிக்கிழமை அன்று ஶ்ரீ ஶ்ரீபாதர் ஶ்ரீ நரசிம்ம வர்மாவின் வீட்டுக்குச் சென்றார். அங்கு ஶ்ரீ ஶ்ரீபாதருக்கு சம்பிரதாயமான மங்கள ஸ்நானம் செய்யப்பட்டது. அவர் ஒரே ஒரு வாழைப்பழத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அதை நரசிம்ம வர்மா வீட்டு பசுவுக்கு அளித்துவிட்டார். பின்னர் ஶ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் வீட்டுக்கு வந்தார். அங்கேயும் அவருக்கு மங்கள ஸ்நானம் செய்யப்பட்டது. அங்கு அவர் வெண்ணெய்,பால், மோர் மற்றும் பாலேடு ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டார். தன் பக்தர்கள் தன்னை அழைப்பதாகவும், பீதிகாபுரத்தை விட்டு செல்லும் நேரம் வந்துவிட்டது என்று கூறினார். பின்னர் அவர் தன் தாய்வழி தாத்தாவான ஶ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு சென்றார். அங்கேயும் அவருக்கு மங்கள ஸ்நானம் செய்யப்பட்டது. அங்கு தானே ஶ்ரீ தத்தர் என்றும் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லப உருவம் ஒரு மாய உருவம் என்று அறிவித்தார். துன்பங்களால் தவித்துக் கொண்டிருப்பவர்களும் நோயினால் வேதனைப்பட்டு கொண்டிருக்கும் நோயாளிகளும் தன்னை அழைப்பதாக கூறினார்; 'நான்தான் ஶ்ரீ தத்தர்' என்று தெளிவாக அறிவித்துவிட்டு உலகத்தை தன் தெய்வீக லீலைகள் மூலம் உயர்த்த வேண்டிய திட்டத்தை தொடங்க சரியான தருணம் இதுதான் என்று அறிவித்தார்.

அதற்கு பின்னர் அவர் தன்னுடைய வீட்டுக்குச் சென்றார். அவருடைய பெற்றோர்கள் அவர் திருமணத்தை பற்றிய பேச்சை தொடங்கியவுடன், "அம்மா, நான் முன்பே பலமுறை தாத்தாவுக்கும், ஸ்ரீ சிரேஷ்டிக்கும் ஸ்ரீ வர்மாவுக்கும் அனகா லக்ஷ்மியுடன் சேர்ந்து தரிசனம் அளித்திருக்கிறேன். பலர் அந்த தெய்வீக தம்பதி ஸ்ரீ சிரேஷ்டியின் விவசாய நிலத்தில், ஸ்ரீ வர்மாவின் நிலங்களில் மற்றும் மாந்தோப்புகளில் லீலைகள் புரிவதை பார்த்திருக்கிறார்கள்.

அனகா லக்ஷ்மியுடன் கூடிய என் உருவத்தைப் பாருங்கள்! என்னுடைய போற்றத்தக்க தெய்வீகப் புனிதமான உருவத்தை பாருங்கள்! நான் முன்பே அவதூதராக வந்தபோதே என்னுடைய திருமணத்தைப் பற்றி பேசினால் இந்த வீட்டை விட்டு சென்றுவிடுவேன் என்று கூறியிருந்தேன்" என்று கூறினார்.

தன் புனித உருவத்தின் காட்சி அளித்து விட்டு தன் சகோதரர்களைத் தொட்டார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அமிர்தம் பொங்கும் பார்வையால், அவர் சகோதரர்களின் ஊனத்தன்மை முற்றிலுமாக நீங்கியது. சுமதி மகாராணியும் அப்பலராஜ சர்மாவும் ஸ்தம்பித்து நின்றனர். அவர்களால் எதுவும் பேச முடியவில்லை. இதற்கிடையில், அவருடைய தாய்வழி பாட்டியான ராஜமாம்பா, தாய்வழி தாத்தாவான ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் அவர் மனைவி வெங்கட சுப்பமாம்பா, ஸ்ரீ நரசிம்ம வர்மா மற்றும் அவர் மனைவி அம்மஜம்மா ஆகியோர் அங்கு வந்தனர். அவர் அவர்கள் அனைவருடனும் அன்பாக பேசி, ஆனந்தமாக சிரித்தார். பின்னர் சுமதி மஹாராணி, **"என் செல்வமே, நீ எல்லா கடனையும் தீர்த்துவிட்டுச் செல்வதாக கூறுகிறாய் ஆனால், நீ பாலுக்காக ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியிடமும், வத்சவாயீ ராஜாவிடமும், மல்லாடி குடும்பத்திடம் பட்ட கடனை உன்னால் தீர்க்கவே முடியாது"** என்று கூறினாள்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் மறைதல்

ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாயிடம், "அம்மா, நீங்கள் கூறுவதை நான் மறுக்கவில்லை. இந்தக் குடும்பங்கள் என்னை மறக்காத வரை நானும் அவர்களை மறக்க மாட்டேன். அவர்கள் என்னை மறந்தாலும் நான் அவர்களுக்கு என்னை நினைவூட்டுவேன். அவர்களை வற்புறுத்தியாவது எனக்குச் சேவைகள் செய்ய வைத்து நல்ல பலன்களை அளிப்பேன். நான் உங்கள் பெற்றோர் குடும்பத்தின் ஒவ்வொரு தலைமுறையினரின் யாராவது ஒருவரின் வீட்டில் உணவு எடுத்துக் கொள்வேன். எனினும், தக்ஷிணை பெற்றுக் கொள்ள மாட்டேன். உங்கள் குடும்பம் என்னை பாசத்துடன் மருமகன் போல பாவிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நானும் அவர்களுடன் கடமை தவறாத மருமகன் உறவுடன் பழகுவேன். இதற்கு மேல் உங்கள் குடும்பத்தினருக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டுவிட்டு தன் தந்தையிடம் திரும்பி, "நம் கண்டிகோட்டா குடும்பத்தில் வேதம் பல காலங்களுக்கு தழைத்திருக்கும். என்னுடைய இரு சகோதரர்களும் வேத ஞானிகள் ஆவார்கள். கண்டிகோட்டா குடும்பம் என்னை மறக்காத வரையில் நானும் அவர்களை மறக்க மாட்டேன்.

ஸ்ரீதர சர்மா தன் பிறவிகள் ஒன்றில் சமர்த்த ராமதாஸாகப் பிறப்பார். அச்சமயத்தில் ஸ்ரீ நரசிம்ம வர்மா சத்ரபதி சிவாஜியாகப் பிறப்பார். சமர்த்த ராமதாஸ் அவருக்கு குருவாக இருப்பார். இதன் மூலம் இந்த இரு குடும்பங்களுக்கும் இடையே இருக்கும் ஆச்சாரிய உறவு நன்றாக ஸ்தாபிக்கப்படும். ராமராஜ சர்மா மீண்டும் ஸ்ரீதரா என்ற பெயரில் பிறந்து சிறந்த யோகியாக ஆவார். ஸ்ரீதரரின் சீடர்களால் என்னுடைய பெயரில் ஒரு மகா சமஸ்தானம் பீதிகாபுரத்தில் அமைக்கப்படும். ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி உடனான பந்தம் வலுவடையும். அதுமட்டுமல்லாமல், வத்சவாயீ குடும்பத்தினரும் அங்கு வருவார்கள்" என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் உத்தரவாதம் அளித்தார்.

சாவித்ரி பன்னா பாராயணம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் வேதங்களை தன் உயிர் போல கருதினார். வேத கோஷங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, அனைவரும் பார்த்துக் கொண்டிருந்த போதே ஸ்ரீ ஸ்ரீபாதர் மறைந்து சென்றுவிட்டார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 42

**ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பெற்றோர்கள், ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ நரசிம்ம வர்மா மற்றும் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டிக்கு தெய்வீக தரிசனம் அளித்தல். முதல் முறையாக 'தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தத்த திகம்பரா!' என்ற ஜெபத்தை உச்சரித்தல்**

## ஸ்ரீ ஸ்ரீபாதர் எல்லா நேரங்களிலும் தன் தெய்வீக தரிசனத்தை தன் பெற்றோர்கள், ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீ நரசிம்ம வர்மா மற்றும் பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டிக்கு அளித்தல்

மதிய உணவுக்கு பின்னர் ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி பேச தொடங்கினார், "ஸ்ரீ ஸ்ரீபாதர் அன்று ஒரே ஒரு இரவு மட்டும் சூத்திரர்களின் வீட்டில் தத்த தீக்ஷை அளித்தார். வழக்கமாக தீக்ஷைக்கு பரிந்துரைக்கப்படும் கோட்பாடுகளை அவர் செய்யவில்லை. அவர் பக்தர்களின் கைகளில் ஒரு நூலை மட்டும் கட்டிவிட்டு அவர்களை பஜனை பாட வைத்தார். பீதிகாபுரத்தில் உள்ள பிராமணர்கள் இது சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளதற்கு மாறாக இருக்கிறது என்று கருதினர். மேலும் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னை ஸ்ரீ தத்தர் என்று கூறியதையும், தன்னை நினைத்த மாத்திரத்திலேயே பக்தர்களுடைய பிரச்சனைகள் அனைத்தும் மறைந்துவிடும் என்று அவர் கூறியதையும் அவர்கள் வன்மையாக கண்டித்தனர். அவர் கூறியவை அனைத்தும் சாஸ்திரங்களை கேலி செய்வது போல் இருப்பதாக எண்ணினர். அனைத்து பிராமணர்களும் இந்த விஷயத்தை சங்கராச்சாரியாரிடம் தெரிவித்து ஸ்ரீ பாப்பண்ணார்யாவையும் ஸ்ரீ அப்பலராஜசர்மாவையும் பிராமண ஜாதியை விட்டு தள்ளி வைக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். எனினும், ஸ்ரீ ஸ்ரீபாதர் திடீரென காணாமல் போனது விவாதத்திற்கு வந்தது. ஆன்மீக சம்பந்தமான விஷயங்களில், சங்கராச்சாரியாரின் சம்மதம் இல்லாமல் எந்தவித சிறப்புப்பெயரும் அளிக்கப் படுவதில்லை. ஆகவே அவர்கள் ஒரு பதினாறு வயதுடைய சிறுவனை ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்று கூறிக்கொள்வது தெய்வீகத்துக்கு எதிரான துரோகம் என்று எண்ணினார்கள்.

சில நயவஞ்சக பிராமணர்கள் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டுக்கு வந்து தாங்கள் வருத்தப்படுவது போல் வெளிப்படுத்தினர். வீட்டில் இருந்தவர்கள் எவரும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மறைந்து விட்டதை எண்ணி வருத்தப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீ பாப்பண்ணார்யா, **"இப்போது ஸ்ரீ தத்தர் இன்னும் பிரகாசமாக ஒளிர போகிறார். அந்த மகாபிரபு எங்கள் வீட்டில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் எங்களுக்கு பேரானந்தத்தை அளித்தார். அவர் எங்கள் கண்களை கட்டியிருந்த மாயையின் திரையை அகற்றி விட்டார். இன்று எங்கள் கண்களின் இமையாக இருக்கிறார். அவர் இப்போது முன்பைவிட அதிகமாக எங்கள் அகக்கண்ணில் தெய்வீக தரிசனம் அளித்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் மிகவும் பாக்கியசாலிகள்"** என்று கூறினார். வந்திருந்த பிராமணர்கள் திடுக்கிட்டனர். உட்புறத்தில் கறைபடிந்த எண்ணங்களும், வெளிப்புறத்தில் அனுதாப வார்த்தைகள் கொண்ட அவர்கள் அங்கிருந்து ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் வீட்டுக்கு சென்றனர். அங்கு சுமதி மஹாராணி, ஸ்ரீ அப்பலராஜ சர்மா, மற்றும் அவருடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டனர்.

ஸ்ரீ அப்பலராஜ சர்மா, **"முன்பு எங்களுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரை பற்றி பல கவலைகள் இருந்தன. எங்கள் மனம் இப்போது நிம்மதியாக இருக்கிறது. நாங்கள் அவரை நினைத்த மாத்திரத்தில் அவர் எங்கள் மனக்கண் முன் தோன்றி விடுகிறார். நாங்கள் விரும்பிய உடனேயே அவர் ஸ்தூல உடலுடன் எங்களுடன் பேசுகிறார். ஸ்ரீ தத்தருக்கே பெற்றோர்கள் ஆகிவிட்டதால் நாங்கள் பிறந்த பலனை அடைந்து விட்டோம். எங்களுக்கு முன்பு எப்போதும் இல்லாத சந்தோஷம் இப்போது இருக்கிறது"** என்று உறுதியாகக் கூறினார். அங்கிருந்த சூழ்நிலை பிராமணர்கள் நினைத்ததற்கு மாறாக இருந்தது.

ஸ்ரீ வெங்கடப்பைய சிரேஷ்டி, **"உன்னதமான பிராமணர்களே! முன்பெல்லாம் ஸ்ரீ ஸ்ரீபாதருடன் சில மணி நேரங்கள்தான் செலவழித்துக் கொண்டிருந்தோம். இப்போது எங்கள் மனக்கண்ணில் எப்போதும் உலாவுவது மட்டுமல்லாமல் ஸ்தூல உடலுடன் எங்கள் வீட்டில் உலாவிக் கொண்டிருக்கிறார்"** என்றார்.

ஸ்ரீ நரசிம்ம வர்மா பிராமணர்களிடம், **"எங்கள் கண்களைக் கட்டியிருந்த மாயத்திரை இப்போது விலகிவிட்டது. எப்போதும் பேரானந்தத்தை அளிப்பவரும், தெய்வீகப் பேரானந்தத்தில் மகிழ்ச்சி அடைபவருமான அந்த மகாபிரபு எங்கள் வீட்டில் உலாவிக் கொண்டிருக்கிறார். அவர் எங்களுடன் கேலி செய்து கொண்டும், எங்களுடனும் எங்களுக்கு பின்னாலும் விளையாடிக்கொண்டும், எங்கள் கண் பார்வையிலேயே இருக்கிறார். முன்பை விட இப்போது அதிகமாக ஸ்தூல உடலுடன் தரிசனம் அளிக்கிறார்"** என்று கூறினார்.

இந்த விஷயங்கள் அனைத்தும் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவிலில் இருந்த சந்நியாசியிடம் தெரிவிக்கப்பட்டது. சந்நியாசிக்கு மனக்கிளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. அவர், "ஸ்ரீ ஸ்ரீபாதர் தன்னைத் தெளிவாக ஸ்ரீ தத்தர் என்று கூறிவிட்டு இப்போது மறைந்து விட்டார். வேறு எந்த தெய்வத்தையும் குறிப்பிடாமல் நான் வணங்கும் ஸ்ரீ

தத்தாத்ரேயரின் பெயரை குறிப்பிட்டிருக்கிறார். அப்படியென்றால் ஸ்ரீ தத்தாத்ரேயர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் அவதரித்திருக்க வேண்டும். அவருடைய இந்த அவதாரம் உண்மையெனில், எதிர்காலத்தில் நான் கண்டிப்பாகத் துன்பத்தை சந்திக்கப்போவதும் உண்மை. ஸ்ரீ தத்தருக்கு ஒரு வினோதமான குணம் உண்டு. அவர் எனக்கு சங்கடங்களை வரவழைத்து விட்டு, அதில் சந்தோஷம் அனுபவித்துவிட்டு, நான் முழுமையாகச் சரணடைந்த பின்னர் என்னை காப்பாற்றுவார். இதுதான் அவருடைய குணம். பல பிராமணர்கள் என்னை பெருமளவு பணத்தினால் கௌரவப்படுத்தியது ஸ்ரீ தத்தரின் கருணை என்று எண்ணினேன். ஸ்ரீ தத்தரின் கருணையில் எனக்கு மட்டுமேயான சிறப்பான தண்டனைகள் ஏதாவது இருக்குமோ?" என்று எண்ணிக் கொண்டார்.

மேலும் அவர், "**ஸ்ரீ தத்தருக்கு நான் பெயர், புகழ் மற்றும் பணத்திற்காக ஏங்கி கொண்டிருப்பது தெரியும். என்னைப் பின்தொடர்ந்த பிராமணர்களும் பணத்திற்கு அலைபவர்கள்தான். என்னிடமோ இந்த பிரமணர்களிடமோ எந்தவித ஆன்மீக சக்தியும் இல்லை. பணம் சம்பாதிக்கவே தத்த தீக்ஷை ஏற்பாடு செய்யப்பட்டது. தத்த தீக்ஷை எடுத்துக் கொண்டவர்களின் ஆசைகள் நிறைவேற வில்லை என்றால் தாங்கள் சரியான முறையில் தீக்ஷையை கடைபிடிக்கவில்லை என்று எண்ணிக் கொள்வார்கள். இதே அவர்களுடைய ஆசைகள் நிறைவேறிவிட்டால் அது தீக்ஷையின் பலனால் என்று நம்புவார்கள். வினோதமான மற்றும் விசித்திரமான செயல்முறையின் மூலம் என்னைப் பிரச்சனைக்குள் தள்ளிவிடப் போவது ஸ்ரீ ஸ்ரீபாதர் அல்லவா?"** என்று அந்த சந்நியாசி பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தார்.



இதற்கிடையில், ஒரு வயதான பிராமணர் குக்குடேஸ்வரர் கோவிலுக்கு வந்தார். அவர் தன்னுடைய பெயர் நரசிம்ம கான் என்றும், காஸ்யப கோத்திரத்தை சேர்ந்தவர் என்று கூறினார். தான் மஹாராஷ்டிர மாநிலத்தில் இருந்து ஸ்ரீ குக்குடேஸ்வரரை தரிசிப்பதற்காக வந்துள்ளதாகக் கூறினார். மேலும் அங்கு ஒரு பரமஹம்ஸ பரிவ்ராஜகர் ஒருவர் தத்த தீக்ஷை அளித்துக் கொண்டிருப்பதை கேள்விப்பட்டு அவருடைய தரிசனத்துக்காக வந்ததாக கூறினார். அவர் தன் இடுப்பில் ரகசியமாக பல வராகன்கள் கொண்டுவந்திருந்தார். அவர் அத்தனை வராகன்களையும் சந்நியாசிக்கு தக்ஷிணையாக அளித்தார். அந்தப் பணத்தை பெற்றுக் கொண்டவுடன் சந்நியாசி சந்தோஷத்தில் மூழ்கினார். தீக்ஷை தொடங்குவதற்காக, சந்நியாசி அந்த வயதான பிராமணரின் கையில் கமண்டலத்திலிருந்து தண்ணீர் ஊற்றுவதற்காக அவருடைய கையை நீட்ட சொன்னார். பிராமணர் கையை

நீட்டினார். தண்ணீருடன் சேர்ந்து ஒரு தேளும் அவர் கையில் விழுந்தது. பின்னர் அந்த பிரமணருடைய தொனி உறுதி வாய்ந்ததாக மாறியது. அவர், **“கமண்டலத்தில் இருந்து நீரை என் கையில் ஊற்றி அதை குடிக்க சொன்னீர்கள். என்ன ஒரு அற்புதம்! நீங்கள் பல வருடங்களாக செய்த தவத்தின் பலன் இப்போது எனக்கு வழங்கப்பட்டது. நான் அந்த அருளை பீதிகாபுரத்துக்கு வழங்குகிறேன்”** என்றார். சந்நியாசி ஆச்சரியத்தில் ஸ்தம்பித்து போனார். அந்த வயதான பிராமணர் ஒரு நொடியில் மறைந்து விட்டார். திடீரென ஒரு பிராமணர் தனக்கு தேள் கொட்டி விட்டதாகக் கதறினார். அந்த பிராமணர் சந்நியாசியிடம் தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களில் ஒருவர். தேள் கடிக்கு மருந்தாக அந்த பிராமணன் மீது சில மந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது. எனினும் அவருடைய வலி குறையவில்லை. பல்வேறு விதமான மந்திரங்கள் ஜபிக்கப்பட்டாலும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. குக்குடேஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. நிறைய அளவு கற்பூரம் ஏற்றப்பட்டது. அந்தப் பிராமணர் மயங்கி விழுந்தார். அவர் வாயிலிருந்து நுரை வெளியானது. அவரைத் தேள் கொட்டவில்லை பாம்பு கொத்தி விட்டது என்று உறுதிப்படுத்தப்பட்டது.

சிலர் அந்த மஹாராஷ்டிர பிராமணரின் கையில் ஊற்றப்பட்ட தண்ணீருடன் தேள் விழுந்ததை கவனித்திருந்தனர். அதனால், அந்த தேள்தான் இந்த பிராமணரை கொட்டியிருக்க வேண்டும் என்று கூறினர்.

பீதிகாபுரத்தில் என்ன விதமான வதந்திகள் தோன்றி, அது எவ்வளவு வேகமாக பரவி, மக்களுக்கு தொல்லைகள் கொடுக்கும் என்பது கடவுளுக்கு மட்டும்தான் தெரியும். ஸ்ரீ குக்குடேஸ்வரர் சிலைக்கு அபிஷேகம் செய்தும், சுயம்பு தத்தருக்கு கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டாலும் அந்த பிராமணரின் தேள்கடி வலி குறையாததற்கு தத்த தீக்ஷை அளித்த அந்த சந்நியாசிதான் காரணம் என்று சிலர் சந்தேகித்தனர்.

அந்த மஹாராஷ்டிர பிராமணர் அளித்த வராகன்களுக்கு பதில் கரிக்கட்டைகள் தான் இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்தான் அந்த பாணியில் தன்னைத் தண்டிக்க வந்தது என்று அந்த சந்நியாசிக்கு பயத்தில் இதயத்துடிப்பு அதிகமானது.

பீதிகாபுரத்தில் ஒரு வினோதமான வதந்தி ஒன்று பரவியது. மலை மற்றும் பள்ளத்தாக்குகளில் வசிக்கும் மந்திர தந்திரங்கள் நன்கு அறிந்த கோய மற்றும் செஞ்சு மக்களுக்கு மட்டும் தெரிந்த ஒரு கலை ஒன்று இருக்கிறது. அந்த சந்நியாசி அந்த கலையை அந்த பிராமணர் மீது பயன்படுத்தி விட்டார் என்றும், அந்த வித்தையில் தண்ணீரில் இருந்து தேள் வடிவத்தில் ஒரு ஆவி வெளிவரும்; அது யாரையாவது கடித்துவிட்டு பாம்பாக மாறிவிடும்; அது பாம்பாக மாறும் அந்த நொடியில் தேள் கொட்டியவருக்கு வாயில் இருந்து நுரை வெளியேறும்; சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த பாம்பு ஆவியாக மாறிவிடும்; பாம்பு ஆவியாக மாறியவுடன் தேள்கடி பெற்ற அந்த நபர் பைத்தியம் போல குதிக்கத் தொடங்குவார்; அந்த ஆவி சிறிது நேரத்திற்கு பின் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டு அந்த நபரை விட்டு வெளியேறி மற்றவர்களின் வீட்டுக்குள் நுழையும்; அந்த வீடுகளில் இருந்து



பணத்தைத் திருடி தன் முதலாளியிடம் ஒப்படைத்துவிடும். பீதிகாபுரம் வதந்திகளின் பிறப்பிடம் என்பது அந்த பாவப்பட்ட சந்நியாசிக்கு தெரியவில்லை.

நுரையாக வாந்தி எடுத்துக் கொண்டிருந்த அந்த பிராமணன் சிறிது நேரத்திற்கு பின்னர் எழுந்து கொண்டார். அவர் தன் வயிற்றில் ஏற்பட்ட ஒருவித வலி காரணமாக குதித்துக் கொண்டிருந்தார். அவர் இன்னும் சிறிது நேரத்தில் ஆவியாக மாறிவிடுவார் என்று வதந்திகள் பரவின. அனைவரும் '**பிசாசே, நாளைக்கு வா!**' என்று அவர்கள் வீட்டில் எழுதுமாறு பரிந்துரைக்கப்பட்டது. அப்படி எழுதியிருப்பதை அந்த ஆவிகள் தினமும் வந்து பார்த்து விட்டு சென்று விடும் என்று கூறினார்கள். அப்படி ஆவி அவர்கள் வீட்டில் நுழைந்து விட்டால் அவர்கள் வீட்டில் உள்ள பணத்தை திருடி விடும் என்று மக்களிடம் எச்சரிக்கப்பட்டது.

அதுவரை அந்த சந்நியாசிக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருந்த பிராமணர்கள் அவரை விட்டு அவரவர்களின் வீட்டுக்கு சென்று விட்டனர். அது பிராமண வீடா, க்ஷத்ரிய வீடா அல்லது வைசிய வீடா என்ற பாகுபாடு இல்லாமல், அனைவரது வீட்டின் வாசலிலும் '**பிசாசே, நாளைக்கு வா!**' என்று கரிக்கட்டையால் எழுதப்பட்டது.

வெங்கையா என்ற விவசாயி தண்டோரா போட்டு எல்லா சூத்திரர்களின் வீட்டிலும் கரி நிரப்பப்பட்ட பானை பத்திரமாக வைக்கப்பட்டால்தான் சந்நியாசி அனுப்பிய ஆவி சூத்திரர்கள் வீட்டுப் பணத்தைத் திருடாது என்று கூறினான்.

வலியால் துடித்துக் கொண்டிருந்த அந்த பிராமணர் சிறிது நேரத்திற்கு பின்னர் குணமானார். இதற்கிடையில் ஒரு விவசாயி குக்குடேஸ்வரர் கோவிலில் இருந்த பிரமணரிடம் சென்று, "**எங்கள் ஜாதித் தலைவர் வெங்கையா ஸ்ரீ ஸ்ரீபாதர் அளித்த மந்திர அக்ஷதைகளை உங்களுக்கு அளிக்க விரும்புகிறார். அந்த மந்திர அக்ஷதைகளின் சக்தியினால் நீங்கள் ஆரோக்கியம் பெறுவீர்கள்**" என்று கூறினான்.

பின்னர் அந்த பிராமணர், "**இப்போது அந்த வலி குறைந்துவிட்டது. அந்த வதந்திகள் உண்மையானால் எனக்கு எந்த நேரத்திலும் பேய் பிடிக்கலாம். இவன் சூத்திரர்கள் வீட்டில் இருந்து மந்திர அக்ஷதை பெற்றுக் கொள்ளுமாறு கூறுகிறான். பிராமணர்கள்தான் சூத்திரர்களுக்கு மந்திர அக்ஷதை கொடுப்பார்கள், ஆனால் சூத்திரன் அவர்கள் வீட்டுக்கு பிராமணர்களை அழைத்து மந்திர அக்ஷதை அளிக்க மாட்டார்கள். வெங்கையா ஒரு நற்குணமுடையவர், என் நலத்திற்காகதான் என்னை அவர் வீட்டுக்கு அழைத்திருப்பார்**" என்று எண்ணியவாறே வெங்கையாவிடம் மந்திர அக்ஷதைகளை பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

பீதிகாபுரத்தில் பரவிய வதந்தியால், அனைத்து சாதியினரும் சந்நியாசியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். தந்திரங்களில் கைதேர்ந்த அந்த சந்நியாசிக்கு தக்ஷிணை அளிப்பது சரியல்ல என்ற முடிவுக்கு வந்தனர். அவர்கள் அளித்த பணத்தை சந்நியாசியிமிருந்து திரும்ப பெற்றுக் கொண்டனர். அவர்கள்

அந்த சந்நியாசிக்கு எந்த அடி உதையும் கொடுக்காமல் கிராமத்தை விட்டு வெளியேற்றினர். அந்தப் பணத்தை என்ன செய்வது என்று ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம் கேட்டனர்.

ஸ்ரீ பாப்பண்ணார்யா, "**இந்தப் பணத்தை கொண்டு உணவுப் பொருட்கள் வாங்குங்கள். எல்லா ஜாதி மக்களுக்கும் விமரிசையான விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். ஸ்ரீ தத்தாத்ரேயர் அன்னதானத்தில் மிகவும் மகிழ்ச்சி அடைவார். தனிப்பட்ட தக்ஷிணைகள் எதுவும் அவசியம் இல்லை**" என்று கூறினார்.

குக்குடேஸ்வரர் கோவிலுக்கு எதிரில் பெரிய பந்தல் போடப்பட்டது. பதினெட்டு சாதி மக்களுக்கும் சிறப்பான விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. பீதிகாபுரத்தில் உள்ள அனைத்து மக்களும் முதல் முறையாக "**தத்த திகம்பரா! தத்த திகம்பரா! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப தத்த திகம்பரா!**" என்ற தெய்வீக நாமத்தை ஜபித்தனர். பல காலங்களுக்கு முன்பே இந்த நாமம் உலகம் முழுவதும் பரவும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறிவிட்டார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 43

## அனகா லக்ஷ்மியை பற்றிய வர்ணனை

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் வைஷ்ணவ மாயை

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி தன் இரவு வழிபாட்டை முடித்துக் கொண்டு, **“ஐயா! பக்தியுடன் செய்யும் ஸ்ரீ வித்யா வழிபாடு உயர்வை அளிக்கும். உண்மையில், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மகா சரஸ்வதி, மஹாலக்ஷ்மி மற்றும் மஹாகாளியின் உருவகம்”** என்றார். நான் அவரிடம், **“ஐயா, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ஸ்ரீ பத்மாவதி வெங்கடேஸ்வரரின் அவதாரம் என்று அழைக்கப்படுகிறார். அவர் முப்பெரும் தேவியர் என்றும் நீங்கள் இப்போது கூறுகிறீர்கள். அவர் அனகா லட்சுமியுடன் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறார். எனக்கு எதுவும் புரியவில்லை. தயவுசெய்து விவரமாக விளக்குங்கள்”** என்று கேட்டுக்கொண்டேன்.

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் விஸ்வரூபம்

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி, “ஐயா, கடவுள் எல்லா உயிரினங்களிலும் வீற்றிருக்கிறார். அவர் எறும்பு முதல் பரபிரம்மா வரை எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறார். அவர் இந்த எல்லா படைப்புகளிலும், படைப்பின் உருவத்தில் இருக்கிறார். அப்படியென்றால் அவர் அனைத்து உயிரினங்களின் சைதன்யத்தில் இருக்கிறார். இதுதான் இந்த அவதாரத்தின் சிறப்பு. இந்த படைப்பில் உள்ள அனைத்து உயிரினங்களுக்குள்ளும் அவர் இருந்தாலும் அவருடைய உணர்வை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அது வேறு ஒன்றுமல்ல அவருடைய வைஷ்ணவ மாயைதான் (விஷ்ணுவின் மாயை). ஒருவர் அவர்களுக்குத் தொடர்புடைய உறவுகள், வரையறை மற்றும் கோட்பாடுகளை மதிக்க வேண்டும் என்று அவர் கூறுவார். அவர் மஹாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி மற்றும் மஹாகாளியின் உருவங்களில் இருக்கிறார் என்றால் அவர்தான் அவர்களின் சைதன்யம், அந்தந்த உருவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்று பொருள். அவரின் யோக மாயையின் மூலம், அந்தந்த தனிப்பண்புகளுடன் இருப்பது போல் எப்போதும் அடையாளம் காணப்படுகிறார். அவர் மஹாசரஸ்வதியின் சைதன்யத்துடன் அடையாளம் காணப்பட்டால், அவர் நான்முகன் பிரம்மாவுடன் ஒன்றாக கலந்திருக்கும் நிலையிலும் இருப்பார். இருப்பினும், அவருக்கு மஹாசரஸ்வதி அல்லது ஹிரண்யகர்பர் உருவங்களுடன் எந்தத் தொடர்பும் இருக்காது. ஒரு ஆத்மா நான்கு அல்லது ஐந்து ஆண் உருவத்தில் வெளிப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆத்மாவின் சக்தி உருவமும் நான்கு அல்லது ஐந்து உருவங்களில் பிறக்கும்.

ஒரு ஆண் உருவத்திற்கும் பெண் உருவத்திற்குமான தொடர்பை விதி முடிவு செய்யும், அதற்குண்டான வரையறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

அதே முறையில்தான் அவர் அனகாவாகவும், அவருக்கு துணைவியாக அனகா லக்ஷ்மி விளங்குகிறாள். அதுதான் அவருடைய அர்த்தநாரீஸ்வரர் உருவம். எனினும் அவர் ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபர் உருவத்தில் ஒரு துறவி உருவத்தில் இருக்கிறார். அந்தந்த உருவங்களுக்கான பண்புகளுடன் கூடிய உறவுகள் மற்றும் வரையறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இதுதான் தர்மத்தின் சூக்ஷ்மம். தர்மம் வேறு சூக்ஷ்ம தர்மம் வேறு. அவருடைய தெய்வீகக் கருணையை அபரிமிதமாகப் பொழியவே அவர் படைப்பின் உருவத்தில் இருக்கிறார். அவர் படைப்புடன் அடையாளம் கண்டுகொள்ளும் உருவத்தில் இருப்பது, மனிதனுடைய முன்னேற்றம் வேகப்படுத்தப்படும் என்று அர்த்தம். ஶ்ரீ ஶ்ரீபாதரை ஜபம், தியானம் மற்றும் தவம் மூலம் உணரலாம். அவர் தன்னுடைய தவப்பலன்களை தனக்காக வைத்துக் கொள்ள மாட்டார். அதை இந்த மொத்த படைப்புக்காக அர்பணித்து விடுவார். அவர் தன் தவப்பலன்களை தன் பக்தர்களின் துயர் துடைக்கவும் அவர்களை நோயிலிருந்து குணமாக்கவும் அவர்களைக் கர்ம பந்தங்களில் இருந்து விடுவிக்கவும் உபயோகப்படுத்துவார்.

ஜகன்மாதாவின் நான்கு உருவங்களான மஹாசரஸ்வதி, மஹாலக்ஷ்மி, மஹாகாளி மற்றும் ராஜராஜேஸ்வரி தெய்வீகத்தை வெளிக்காட்டவும் பிரபஞ்சத்தை ஆட்சி செய்வதற்கும் வெளிப்படுத்தப்பட்டவை.

### அம்பிகைக்கு மூன்று நிலைகள் இருக்கின்றன:

- ★ **எல்லையற்ற நிலை**
- ★ **பிரபஞ்ச நிலை**
- ★ **தனிப்பட்ட நிலை**

பிரபஞ்சம் படைக்கப்படுவதற்கு முன்னர் பராசக்தி எல்லையற்ற நிலையில் இருந்தாள். பின்னர் பரமாத்மாவின் எல்லையில்லா உண்மைகளை ஈர்த்துக் கொண்டவுடன், பிறகு அவை அவளுடைய சைதன்யத்தினுள் நுழைந்த பின்னர் அவள் இந்த பிரபஞ்சத்தில் ஒரு படைப்பாக பிறக்கிறாள்.

அவளுடைய வேலை படைத்தலுடன் முடிந்துவிடாது. அவள் எல்லா உயிரினங்களையும் படைக்கிறாள்; அவற்றை தனக்குள் தக்கவைத்துக் கொள்கிறாள்; அவர்களுக்குள் நுழைந்து அவர்களை வலுவடைய செய்கிறாள்; இதுதான் அவளுடைய பிரபஞ்ச நிலை.

### அனகா லக்ஷ்மியின் உண்மையான உருவம்

தனிப்பட்ட நிலையில், அவள் மனித குணத்துக்கும் தெய்வீக குணத்திற்கும் இடையே இருக்கிறாள். இதுதான் அனகா லக்ஷ்மி உருவம் உதித்ததன் ரகசியம். அவள் தன்னுடைய மூல குணத்தின் சில ஆற்றல்களை அவதரிக்கச் செய்கிறாள்.

அந்த ஆற்றல்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் முடிந்தவுடன், அவற்றை தன்னுடைய மூல குணத்துக்குள் ஈர்த்துக் கொள்கிறாள். அனகாவின் விருப்பம் இல்லாமல், அனகா லக்ஷ்மி ஒரு வேலை கூட செய்ய மாட்டாள். அவள் தன் அதிபதியுடைய விருப்பங்களை நிறைவேற்றுவாள். ஶ்ரீ ஶ்ரீபாத ஶ்ரீவல்லபருடைய உருவத்தில் தாய் மற்றும் தந்தை இருவரும் வீற்றிருப்பதால், ஶ்ரீ ஶ்ரீபாதருடைய பக்தர்களுக்கு அருள் அபரிமிதமாகக் கிடைக்கும்.

அனகா லக்ஷ்மிக்கு முக்கியமாக மூன்று சமநிலைகள் இருக்கின்றன. அவை பர நிலையைச் (சச்சிதானந்த நிலை) சேர்ந்த நன்மை பயக்கும், ஞானம் நிறைந்த சந்தோஷமான நிலை ஆகும். இங்கிருக்கும் உலகங்கள் எல்லையற்ற இருப்புடன், எல்லையில்லா சக்தியுடன் மற்றும் எல்லையில்லா பேரானந்தத்துடன் நிறைந்திருக்கும். இந்த நிலையில் வாழும் ஆத்மாக்கள் விவரிக்க முடியாத முழுமையிலும் மாற்றமில்லா ஒன்றான நிலையில் இருப்பார்கள்.

சச்சிதானந்த சமநிலைக்குக் கீழ், விசாலமான ஆனந்தச் சைதன்ய நிலையில் இருக்கும் உலகங்கள் இருக்கும். அனகா லக்ஷ்மி அவர்களின் தெய்வீக சைதன்யத்தில் மகா சக்தியாக வாசம் செய்கிறாள். இந்த உலகம்தான் வேதங்களில் மகரலோகம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த உலகங்களில் செயல்கள் தோல்வியடையாது. ஒவ்வொரு பெரும் முயற்சியிலும், இச்சா (விருப்பத்தின்) சக்தி மற்றும் ஞான சக்தி எந்தவித முயற்சியும் இல்லாமல் முழுமை அடையும். அங்கிருக்கும் எல்லா அனுபவங்களும் முழுமையான பேரானந்த கடல் போல இருக்கும். பெருவெள்ளம், அலைகள், பொய், வலி மற்றும் துயரம் ஆகியவையால் அங்கு நுழைய முடியாது. ஒவ்வொரு உருவம், ஒவ்வொரு அசைவு மற்றும் ஒவ்வொரு அனுபவமும் சந்தோஷம் நிறைந்ததாக இருக்கும்.

இதற்குக் கீழே அஞ்ஞான சமநிலை இருக்கும். அறியாமை நம் உலகங்களில் இருக்கும். இங்கிருக்கும் உலகம் மனம், உயிர் மற்றும் உடல் நிறைந்ததாக இருக்கும். எல்லா அனுபவங்களும் முழுமையில்லாமல், வரையறுக்கப்பட்ட மற்றும் தோல்வியுடன் கூடியதாக இருக்கும்.

## ராஜராஜேஸ்வரியின் மகிமைகள்

அன்னை ராஜராஜேஸ்வரியுடைய சைதன்யத்தின் கருணைக்கு எல்லையே இல்லை. அவள் அனைவரையும் தன் குழந்தைகளாகவே பாவிக்கிறாள். பிராணமய மற்றும் மனோன்மய நிலைகளில் இருக்கும் இருண்ட கூட்டத்தை சேர்ந்தவர்கள் அசுரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு சுயக்கட்டுப்பாடு, தவம் மற்றும் ஞானம் இருக்கும். அவர்கள் செருக்கு மிக்கவர்கள். கீழ் பிராணமய நிலையின் இருண்ட கூட்டத்தை சேர்ந்தவர்கள் ராக்ஷஸர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கொடூரமான மற்றும் தீவிரமான எண்ணங்களும் சக்திகளும் இருக்கும். அதற்கும் கீழே உள்ள பிராணமய நிலையில், மற்ற சில உயிரினங்கள் வாழ்கின்றன. அவைகள் பிசாசுகள் மற்றும் பிரமாத கணங்கள் (சிவனின் வேலைக்காரர்கள்) என்று

அழைக்கப்படுகின்றன. அசுரர்களின் மாயை எந்த வேடத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள முடியும். உண்மையில் பிசாசுகள் தனிப்பட்டவர்கள் கிடையாது. அவை மனங்கள் இல்லாத விருப்பங்கள் மற்றும் பேராசை நிறைந்த வடிவங்களின் உருவம். ராக்ஷஸர்களுக்கு வலுவான பிராணமய நிலை இருக்கும். அவர்களுக்கு மனது இருக்காது. அவர்களின் கண்ணுக்கு முன் எது வந்தாலும் விழுங்க முயற்சி செய்யவார்கள்.

## அசூரி, காளி, ஷ்யாமா மற்றும் மகாகாளி உருவங்கள்

பிராணமய சக்தி மூலம் காளி, ஷ்யாமா மற்றும் மற்ற உருவங்களை நம்மால் பார்க்க முடியும். காளி அழிவு சக்தி. அவள் இயற்கையின் அறியாமை சக்தியாக, துன்பங்கள் நம்மை மூழ்கடிக்கும் போது அனைத்தையும் இருளில் கண்மண் தெரியாத போராட்டத்தோடு வெட்டிச் சாய்த்து விடுவாள். எனினும் மகாகாளி, உயர்ந்த சமநிலையைச் சேர்ந்தவள். பொதுவாக அவள் தங்க நிறத்தில் தோன்றுவாள். அவள் அசுரர்களுக்கு பயத்தை உண்டாக்குவாள். ராஜராஜேஸ்வரி பகுத்தறிவின் சக்தியாக விளங்கும் போது, மஹாகாளி வலிமை மற்றும் சக்தியைக் குறிக்கிறாள். அந்த மகா அன்னை அபரிமிதமான முரட்டுத்தனம் மற்றும் ஆழமான சிந்தனையுடன் ஜொலிப்பாள். தெய்வீகத்தை அடைவதற்கு முக்கியமானத் தடையாக விளங்கும் கொடூரமானவற்றை அழிப்பாள். காளிக்குள் இருக்கும் சக்தியானது தீவிரமான வேகத்துடன் முன்னேறி நாம் கடவுளை அடையும் வரை அமைதியாக இருக்காது. சண்டை மற்றும் அழிவின் மூலம் அது நின்றுவிடும். எனினும் மகாகாளி வேறு மாதிரியானவள். நம்முடைய திறனுக்கு அப்பால் தடைகள் ஏற்பட்டு நம் முன்னேற்றத்துக்குத் தடையாக விளங்கும் சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் போது, பக்தர் மஹாகாளி சக்தியை தனக்குள் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

## ஆன்மீகத் தேடலில் உள்ளவர்களின் நிலையில் மஹாகாளி, மஹாலக்ஷ்மி மற்றும் மகா சரஸ்வதியின் உருவங்கள்

மஹாலக்ஷ்மி அழகு பிரகாசம் நிறைந்தவள். பகுத்தறிவு மற்றும் வலிமை ஆகிய சக்திகளை பெற வேண்டும் என்றால் அழகு அவசியம். அப்படியென்றால், நம்முடைய சாதனையை நாமே மதிப்பீடு செய்து கொள்ளவில்லை என்றால் பூர்ணத்துவம் கிடைக்காது. அதாவது, ஒரு குறிப்பிட்ட நிலையில் சமநிலை போல ஒரு நிலை உருவாகும். அந்த நிலையில் இதுதான் பூரணத்துவ நிலை என்பது போல நமக்குத் தோன்றும். ஆனால் அதற்கும் மேலான நிலைக்கு நாம் சென்றால், நாம் புதுவிதமான சக்திகளையும் புதுச் சூழ்நிலைகளையும் எதிர்கொள்வோம். அதற்கு ஏற்றார் போல் ஒரு புதுவிதமான சமநிலை ஒன்று உருவாகும். அந்த நிலையில், பூர்ணத்துவம் உருவாகும். ஆகவே மஹாலக்ஷ்மிதான் முழுமையான பூர்ணத்துவ நிலையின் அடையாளம். பகுத்தறிவதில் பூர்ணத்துவம் கிடைத்து வலிமையில் கிடைக்காவிட்டால், அதை சரியான பூர்ணத்துவம் என்று கூறமுடியாது. ஆகவே, முழுமையான பூர்ணத்துவத்தில் நான்கு பண்புகள் அதாவது பகுத்தறியும் சக்தி, வலிமை, அழகு மற்றும் பூர்ணத்துவம் ஆகியவை சரியான விகிதத்தில் இருக்கும். தெய்வீகத்துக்கும்

அழகுக்கும் இடையே உள்ள நட்பு ரகசியமானது, அது மனிதனுக்கு தெரியாது. இந்த அழகு பிரபஞ்சம் முழுவதும் பரவி உள்ளது. மஹாலக்ஷ்மியின் அருளால் மட்டுமே பல பொருட்கள், சக்திகள் மற்றும் பல்வேறுபட்ட உயிரினங்கள் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன. அவை அனைத்தும் ஒன்றாகும். இந்த ஒன்றிணைந்த நிலை சந்தோஷத்தை அளிக்கும். மஹாலக்ஷ்மி பல பொருட்கள், சக்திகள் மற்றும் உயிரினங்களை ஒன்றிணைத்து தன் உருவமாகவும் மாற்றுகிறாள். மஹாலக்ஷ்மி அன்பு மற்றும் பேரானந்தத்திற்கு அதிபதி. எனினும், லக்ஷ்மி பொருட்களின் சேர்க்கையை மட்டும்தான் குறிக்கிறாள். மஹாலக்ஷ்மி பொருட்கள், ஸ்தூல சக்திகள் மற்றும் பூமி சார்ந்த உயிரினங்களுக்குச் சரியான வடிவம் அளித்து நிம்மதியான தெய்வீக பேரானந்தத்தை வழங்கி தெய்வீக வாழ்க்கையை அளிக்கும் ஒரு மகாசக்தி.

ஆனால், அனகா லட்சுமியுடைய சக்தி முழுமையாக இயங்க வேண்டுமென்றால், ஒருவருக்கு பகுத்தறியும் சக்தி, வலிமை, அழகு ஆகியவற்றுடன் சேர்த்து திறமையும் இருக்க வேண்டும். வேதங்கள் அதை அன்னை சரஸ்வதி என்று குறிப்பிடுகின்றன. அவளை உபநிஷத்துக்கள் உத்கீதா என்று அழைக்கிறது. தசமஹாவித்யாவில் அவள் மாதங்கி என்று அழைக்கப்படுகிறாள். அவள் வைகரி பேச்சுடன் தொடர்புடையவள்.

எனினும், மஹாசரஸ்வதி என்பது வேறு. அவள் ஆத்மாவின் சைதன்யத்துடைய தெய்வீகச் சாதுர்யம் மற்றும் செயல்களையும் குறிக்கிறாள். இந்த அன்னையின் கருணையால், செயல்களைத் திறம்படச் செய்வது பற்றியும், தெய்வீக ஞானத்தை எப்படி உபயோகப்படுத்துவது போன்ற ஞானத்தை அடைய முடியும். வாழ்க்கையில் ஆன்மாவின் சைதன்யத்தை எப்படி பயன்படுத்துவது என்ற ஞானம் கிடைக்கும். மேலும் பல சக்திகளை ஒன்றிணைத்து எப்படி சந்தோஷத்தை அடையலாம் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். மாற்றம் மற்றும் பூர்ணத்துவத்திற்கு மிகவும் தொலைவில் உள்ள சிறிய விஷயங்கள் கூட மஹா சரஸ்வதிக்கு சொந்தமானதுதான்.

என் செல்வங்களே! பேரானந்தம் என்ற விஷயம் மிகவும் உயர்ந்தவரான பரமேஸ்வரனுடன் தொடர்புடையது, ஆனால் ஒரு யோகியோ பரவசத்தை அனுபவிப்பவன். ஆசைகள் அற்றவன் சந்தோஷம் பெறுவான். சுகம் என்பது அனைவருக்கும் அருகில்தான் இருக்கிறது ஆனால் துன்பமோ தவிர்க்கமுடியாமல் அதனுடன் சேர்ந்தே வந்துவிடும்.

## அனகாதேவி மற்றும் அனகாவின் உருவங்கள்

லக்ஷ்மி தேவி ஸ்ரீ அனகா தேவியின் உருவம். அவள் ராஜராஜேஸ்வரி, மஹாலக்ஷ்மி, மகாகாளி மற்றும் மகா சரஸ்வதியின் அனைத்து குணங்களையும் உள்ளடக்கியவள். ஸ்ரீ அனகா விஷ்ணுவின் உருவம். அவர் பரமேஸ்வரன் மற்றும் மும்மூர்த்திகளின் குணங்கள் மற்றும் சக்திகளைக் கொண்டவர். ஆகவே அனகா மற்றும் அனகா தேவியை வணங்கினால் அனைத்துவிதமான சுகங்களையும் பெறலாம். அனகாஷ்டமி விரதம் அனைத்து தத்த பக்தர்களும் கட்டாயம் செய்ய வேண்டும்.

அனகாஷ்டமி விரதம் மேற்கொள்வதினால் அனைத்துவிதமான புனிதத்துவமும் பெறலாம்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் சிறப்பு மற்றும் தத்த பக்தியின் சிறப்பு

என் செல்வங்களே, அனகா-அனகா தேவியுடன் சேர்ந்து பூமியில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உருவத்தில் அவதரித்தார். அவர் அனைத்து உயிரினங்களின் உடல் ரீதியான ,மன ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான சைதன்யத்துடன் அதிக நெருக்கம் உடையவர். அவர் ஸ்மர்த்திருகாமி. அதாவது, அவரை நினைத்தாலோ அல்லது அழைத்தாலோ உடனே பதிலளிப்பார். அவருடைய அனைத்து பக்தர்களுடைய துன்பங்கள் மற்றும் இழப்புகளை நீக்கி, இந்த உலகம் மற்றும் மற்ற உலகங்களிலும் சுகங்களை அளிக்கிறார். தசமஹாவித்யாவை வணங்குவதால் கிடைக்கும் பலன்கள் தத்தரை வணங்கினால் உடனடியாக கிடைக்கும். அவர்தான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக அவதரித்துள்ளார். ஒருவர் பல தெய்வங்களை வணங்கினால் கண்டிப்பாக அவருக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். ஸ்ரீ தத்தரை வணங்கினால் அந்த பலன்கள் உடனடியாக கிடைக்கும். அது எப்படி சாத்தியம் என்றால், ஸ்ரீ தத்தர் அனைத்து தெய்வங்களும் சேர்ந்த ஒரு உருவம்; அவர் எல்லா நான்கு யுகங்களின் அவதாரம் மற்றும் எல்லையே இல்லாத மகிமைகள் நிறைந்த அவதாரம்.

## ஸ்ரீ ஸ்ரீபாதரின் சரிதாம்ருதத்தின் மகிமைகள்

என் அருமை சங்கர் பட், நீ எழுதும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் சிறந்த யோகிகள் மற்றும் மகா புருஷர்களால் பாராயணம் செய்யப்படும். அவர்கள் சந்தியா மொழியின் இலக்கணத்தின் உதவியுடன் அதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் யோக அனுபவங்கள் மிகவும் விசித்திரமாக இருக்கும். ஸ்தூல சமநிலையில் இருக்கும் மனிதர்கள் பக்தியுடன் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பாராயணம் செய்தால், அவர்களுக்கு இந்த உலகம் மட்டுமல்லாது மற்ற உலகங்களிலும் மங்களகரமான முன்னேற்றம் பெறுவார்கள். இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். இதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் யோக சக்திகள் நிரம்பியவை. ஒவ்வொரு எழுத்தும் பீஜாக்ஷர சக்தி நிரம்பியுள்ளது. இந்த புத்தகத்தை எந்த மொழியில் பாராயணம் செய்தாலும் ஒரே மாதிரியான பலன்கள் கிடைக்கும். இது மகாபிரபுவின் எழுத்து வடிவம்" என்று கூறினார் பாஸ்கர சாஸ்திரி.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 44

## சொர்ண பீதிகாபுரம் பற்றிய வர்ணனை

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி அன்றிரவும் அவர் வீட்டிலேயே தங்கி ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகச் சரித்திரத்தை கேட்டுக்குமாறு கேட்டுக்கொண்டார். அடுத்த நாள் எங்கள் குளியல் மற்றும் தினசரி சடங்குகளை முடித்துக் கொண்டு ஸ்ரீ த்ரிபுராந்தகேஸ்வரர் கோவிலுக்குச் சென்றோம். கோவிலில் ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி ஸ்ரீ ஸ்ரீபாதரைப் பற்றி கூறத் தொடங்கினார்.

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிறந்த இடம்

"என் செல்வங்களே! ஸ்ரீ ஸ்ரீபாதர் உண்மையில் சிவபெருமானின் உருவகம். அவர் பீதிகாபுரத்தை விட்டு மறைந்ததும் காசியை அடைந்தார். கங்கை நதியில் நீராடினார். அவர் ஸ்ரீ பீதிகாபுரத்துக்கு வருகை புரிந்தது மூலம் பூமியுடைய குணங்களின் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு உந்துதல் அளித்தார். ஆகவே, பூமியில் அவர் பிறந்த இடமான ஸ்ரீ பீதிகாபுரம் உயிர் உணர்வு பெற்றது. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அங்கு அவருடைய பாதுகைகள் அவருடைய மஹாசமஸ்தானத்தில் பதிக்கப்படும். அங்கிருக்கும் பூமி உயிரோட்டம் நிறைந்ததாகவும், படிப்படியாக அது பூமி முழுவதையும் உயிர்ப்பிக்கும். விழிப்புணர்வு பெற்றவர்கள் தெய்வீக ஈர்ப்பு சக்தி காரணமாக பீதிகாபுரத்துக்கு ஈர்க்கப்படுவார்கள். பிரித்வி தத்துவத்தில் அவர் செய்த யக்ஞம் பீதிகாபுரத்தில் இருந்துதான் தொடங்கியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். **அவர் முன்பு சென்ற இடங்கள் அல்லது அவர் எங்கெல்லாம் செல்ல போகிறாரோ அந்த இடமெல்லாம் விழிப்புணர்வு பெரும். அந்த இடங்களில் எல்லாம் எவர் ஒருவர் தன் காலடியை பதிக்கிறாரோ, அவர்கள் கண்டிப்பாக அந்த தெய்வீக சக்தியினால் ஈர்க்கப்படுவார்கள்.**

அதுமட்டுமல்லாமல், அனைவரிடத்திலும் பூமியின் ஒரு பகுதி (பஞ்சபூதங்களில் ஒன்றான பூமியின் தன்மை) இருக்கிறது. அதற்கு சத்தம், ஸ்பரிசம், ரூபம்,ரசம் மற்றும் காந்தம் (ஒலி,தொடுதல்,உருவம்,ருசி மற்றும் வாசனை)ஆகிய தன்மைகள் உண்டு. நாம் அதை யோகத்தின் அடைப்படையில் யோசித்தால், ஒருவருடைய உடலில் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீகக் கருணையினால் பூமியின் தன்மை விழிப்புணர்வு ஏற்பட்டால் அவர்கள் கண்டிப்பாக பீதிகாபுரத்துக்கு இழுத்து வரப்படுவார்கள்" என்று கூறினார்.

நான் அவரிடம், **"ஐயா, பூமியின் தன்மை விழிப்புணர்வு அடைந்த ஒருவர் ஸ்தூல உடலுடன் பீதிகாபுரத்துக்கு வர இயலுமா?"** என்று கேட்டேன்.

## சொர்ண பீதிகாபுரத்தின் சிறப்பு

அவர் சிரித்துக்கொண்டே கூறத் தொடங்கினார். "உங்கள் கேள்வி நியாயமானதுதான்! பௌதீக பீதிகாபுரம் இருப்பது போலவே சொர்ண பீதிகாபுரம் என்று ஒன்று இருக்கிறது. பௌதீக பீதிகாபுரம் எவ்வளவு தூரம் உள்ளதோ அதே அளவு சொர்ண பீதிகாபுரமும் இருக்கும். சொர்ண பீதிகாபுரம் முழுவதுமாக சைதன்யத்தினால் கட்டப்பட்டது. ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவருக்கு அந்த சைதன்யம் தொடர்பான விஷயங்கள் வளர்ச்சி பெறும் போது, அவர் சொர்ண பீதிகாபுரத்துவாசி ஆவார். சொர்ண பீதிகாபுரத்தில் சைதன்யத்தினால் கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான அற்புதமான மாளிகைகள் இருக்கும். சொர்ண பீதிகாபுரத்தில் யோகிகள் மற்றும் மகா புருஷர்கள் விவரிக்க முடியாத பேரானந்தத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் அது நம் ஸ்தூலக் கண்களுக்கு புலப்படுவதில்லை. சொர்ண பீதிகாபுரம் யோகக் கண்கள் மற்றும் ஞானக் கண்களுக்கு மட்டும்தான் புலப்படும்.

## காசியின் குறிப்பிடத்தக்க அடையாளங்கள் - பஞ்ச கோச யாத்திரை

அதே போல, சொர்ண காசி என்று ஒன்று உள்ளது. சைதன்யத்தினால் கட்டப்பட்ட சொர்ண காசி, பௌதீக காசி எவ்வளவு தூரம் பரந்து விரிந்துள்ளதோ அதே அளவு பரந்து விரிந்துள்ளது. **"காசிக்குச் சென்று அங்கு வாழ வேண்டும் என்று எப்போதும் நினைத்துக் கொண்டே இருக்கும் ஒருவர் காசியில் வசிப்பதினால் கிடைக்கும் பலன்களைப் பெறுவார். ஒருவர் காசி விஸ்வேஸ்வரரை எப்போதும் தன் மனச் சைதன்யத்தில் சொர்ண காசியில் வசிப்பதாக நினைத்துக்கொண்டே இருந்தால் காசி விஸ்வநாதரின் அருளைப் பெறலாம்.** இதை புரிந்து கொள்வது மிகவும் சுலபம். உங்களுடைய அன்னமய கோசத்திற்குத் தொடர்புடைய கூறுகளுடன் ஒரு பீதிகாபுரம் இருக்கிறது. அதேபோல், பஞ்சபூதங்களால் ஆன காசி ஒன்று இருக்கிறது. பிராணமய கோசத்திற்குத் தொடர்புடைய பிராணமய பீதிகாபுரம் என்று ஒன்று இருக்கிறது. அதேபோல், பிராணமய காசியும் இருக்கிறது. மனோன்மய கோசத்திற்குத் தொடர்புடைய மனோன்மய பீதிகாபுரம் ஒன்று இருக்கிறது. அதேபோலத்தான் மனோன்மய காசியும் இருக்கிறது. விஞ்ஞானமய கோசத்திற்குத் தொடர்புடைய விஞ்ஞானமய பீதிகாபுரம் ஒன்று இருக்கிறது. அதேபோல, விஞ்ஞானமய காசியும் இருக்கிறது. ஆனந்தமய கோசத்திற்குத் தொடர்புடைய ஆனந்தமய பீதிகாபுரம் ஒன்று இருக்கிறது. அதேபோல், ஆனந்தமய காசியும் இருக்கிறது. இந்த ஆனந்தமய பீதிகாபுரத்தை நான் சொர்ண பீதிகாபுரம் என்று கூறுகிறேன். இந்த ஆனந்தமய காசியைத்தான் நான் சொர்ண காசி என்று கூறுகிறேன்" என்று கூறினார்.

நான் அவரிடம், **"ஐயா! நான் ஒரு அஞ்ஞானி. தயவுசெய்து இதை எனக்கு விளக்கமாக கூறுங்கள். சிலர் காசியில் பஞ்ச கோச யாத்திரை மேற்கொள்வதால் சிறந்த பலன்கள் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அது என்ன?"** என்று கேட்டேன்.

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி, "என் செல்வமே, பஞ்ச கோச யாத்திரை என்பது வெறும் பௌதீக ரீதியான க்ஷேத்ராடனம். உண்மையில், நம்முடைய சைதன்யம் அன்னமய, பிராணமய, மனோன்மய, விஞ்ஞானமய மற்றும் ஆனந்தமயம் ஆகிய ஐந்து விதமான கோசங்கள் மூலம் பயணிக்க வேண்டும். இதுதான் அதில் ஒளிந்திருக்கும் ஆழ்ந்த தெய்வீக ரகசியம். ஸ்ரீ ஸ்ரீபாதரின் அருளால், ஆன்மீகத் தேடலில் உள்ளவர்கள் அதற்கு தேவையான சக்திகளைப் பெற்றுக் கொண்டு பஞ்ச கோச யாத்திரையை மேற்கொள்வார்கள்.

ஆகவே, ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் யோக சக்தியின் மூலம் பஞ்சபூதங்களுக்குத் தொடர்புடைய ஐந்து சிறந்த யக்ஞங்கள் மேற்கொள்கிறார். அந்த ஐந்து யக்ஞங்களின் அடையாளமாக அவர் குருகட்டாவிற்கு அருகில் இருக்கும் பஞ்சதேவ மலையில் தன் தர்பாரை நடத்துகிறார். இந்த தெய்வீக ரகசியங்கள் தீவிரமான ஆன்மீகத் தேடலில் உள்ளவர்களால் மட்டுமே தன் யோகப் பார்வையால் புரிந்துகொள்ள முடியும். ஒரு சாதாரண மனிதனால் இதைப் புரிந்துகொள்ள முடியாது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் கங்கை நதியில் நீராடினார். பின்னர் கங்காதேவி அவர் முன் தோன்றி தினமும் கங்கையில் நீராடுமாறு கேட்டுக்கொண்டாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் தான் கங்கையில் தினமும் நீராடுவதாக வரம் அளித்தார். கங்காதேவியின் சைதன்யம் ஐந்து விதமான கோசங்களில் இருக்கும் அதாவது அன்னமய, பிராணமய, மனோன்மய, விஞ்ஞானமய மற்றும் ஆனந்தமயம் கோசங்களாகும்.

நான் அவரிடம், **"உன்னதமானவரே, அன்னை கங்கா நீர் வடிவானவள். அவளுக்கு எப்படி ஐந்து கோசங்கள் இருக்க முடியும்? எனக்கு அது புரியவில்லை"** என்று கேட்டேன்.

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி சிரித்துக்கொண்டே, "குழந்தாய், தெய்வங்கள் மந்திரங்களின் உருவகம். அவைகளுக்கு ஸ்தூல வடிவம் கிடையாது. மந்திரங்கள் 'சப்த பிரம்மத்தின்'(பிரம்மாவின் பீஜாக்ஷர உருவம்) சக்தி உருவம். அன்னை கங்கா என்றால் சக்தி மற்றும் சைதன்யத்தின் வடிவில் இருக்கும் தெய்வம். அவள் ஸ்தூல வடிவில் இருக்கும் கங்கா நதிக்கு நெருங்கிய அடையாளத்துடன் விளங்கும் ஒரு துணை தெய்வம். அப்படியென்றால் அவள் சைதன்ய உருவத்தில் இருக்கும் ஒரு தெய்வம் என்று பொருள்படும். அதேபோல், சூரியன் என்று குறிப்பிடப்பட்டால், நாம் வானத்தில் உருண்டையாக காணும் சூரியனின் நெருங்கிய அடையாளத்துடன் அதன் தெய்வீக சைதன்யத்துடன் தொடர்புடைய ஒன்று என்று பொருள்படும். தர்மத்தின் சூக்ஷ்மத்தையும் அதில் மறைந்துள்ள தெய்வீக ரகசியத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

மனிதனிடம் நீரின் குணமும் உள்ளது. அந்த நீரின் குணத்தை தூய்மையாக்க அவர் ஜல யக்ஞம் செய்ய முடிவெடுத்தார். அவர் தினமும் காசியில் உள்ள கங்கை நதியில் நீராட விரும்பினார். இந்த யோக பயிற்சியின் மூலம், ஸ்தூல நிலையில் இருக்கும் அனைத்து நதிகளும் புனிதமாக்கப்படும். அனைத்து புண்ணிய நதிகளிலும் அசுத்தங்கள் விலகி புனிதம் அடையும். கங்கை போன்ற புனித நதிகளில் பாவம்

செய்த மனிதர்கள் நீராடுவதால் அந்த நதி மாசடைகிறது. சிறந்த மனிதர்கள், புனிதம் நிறைந்தவர்கள் மற்றும் சைதன்யத்தின் உருவமாக இருப்பவர்கள் அந்த நதிகளில் நீராடினால், நதிகள் மீண்டும் புனிதமாகிவிடும். அவர் செய்த ஜல யக்ஞத்தின் உள் அர்த்தம் என்னவென்றால், உயிரினங்களின் உடலில் திரவ உருவமாகப் பாயும் நீர் குணத்தை தூய்மைப்படுத்துவதே ஆகும். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்னும் தெய்வீகச் சக்கரவர்த்தியின் வெறும் கை அசைவினால், பல கோடிக்கணக்கான பிரபஞ்சங்களை படைத்து, காத்து, அழிக்க முடியும். அவர் உண்மையில் மும்மூர்த்திகளின் ரூபமான ஸ்ரீ தத்தாத்ரேயர்தான். பாரத்வாஜ முனிவருக்கு த்ரேதா யுகத்தில் அளித்த சத்தியத்திற்குக் கட்டுப்பட்டே, ஸவித்ரு காடக சயனம் என்னும் யாகம் நிகழ்த்தப்பட்ட இடமான பீதிகாபுரத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் விளையாட்டுகள் நிறைந்த மனித உருவத்தில் அவதரித்தார். மகாசித்தர்கள், மகா யோகிகள் ஆகியோரை ஆசீர்வதிக்கவும், தர்மத்தை உயர்த்துவதும்தான் இந்த அவதாரத்தின் நோக்கம். அவர் நரசிம்ம சரஸ்வதியாக அவதரிக்க போவதாக அளித்திருக்கும் சத்தியத்தின் ஒவ்வொரு எழுத்தும் முற்றிலும் உண்மை.

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய தெய்வீகச் சத்தியத்தையும், அவருடைய அவதாரத்தைப் பற்றியும் கேலி பேசுபவர்கள் பிசாசுகளாக பிறப்பார்கள். பலவீனமான மற்றும் துரதிர்ஷ்டம் உடைய மக்களைத்தான் பேய்கள் பிடித்துக்கொள்ளும் என்றும் அவர்களுக்குத்தான் கந்தர்வ நகரத்தில் (கனகாபூர்) நரசிம்ம சரஸ்வதியின் உருவத்தின் மூலம் நிவாரணம் அளிப்பேன் என்று பலமுறை கூறியிருக்கிறார். அவருடைய தெய்வீக வாக்குகளை சந்தேகப்படுபவர்கள் ரௌரவம் போன்ற நரகங்களுக்குச் செல்வார்கள்.

நீங்கள் எழுதும் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்கிற புத்தகத்தில் இருக்கும் ஒவ்வொரு எழுத்தும் சத்தியம். இது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். இந்த சரிதாம்ருதத்தை எந்த மொழியில் சிரத்தையுடன் பாராயணம் செய்தாலும், அபரிமிதமான நற்பலன்களை அளிக்கும். அந்த மகாபிரபு, தான் தகுதியானவர்களை மட்டுமே தன் சரிதாம்ருதத்தின் மொழிபெயர்ப்புக்காக தேர்ந்தெடுப்பேன் என்றும், அவர் சரிதாம்ருதத்தை மொழிபெயர்க்கும் சமயத்தில் தன் சிறப்பான கருணை அவர் மீதும் இருக்கும் என்று கூறியிருக்கிறார். மேலும் இந்த புத்தகத்தை பூஜை அறையில் வைத்து வழிபட்டாலே, அவருடைய கருணையை பெற்றுவிடலாம் என்றும் கூறியிருக்கிறார். கலியுகத்தில் இந்த புத்தகத்தை பாராயணம் செய்தாலே புனிதமான முன்னேற்றங்களைப் பெற்றுவிடலாம் என்றும் உறுதியளித்திருக்கிறார். ஆகவே, இந்தப் புத்தகத்தை நீங்கள்தான் எழுதுகிறீர்கள் என்பது வெறும் நொண்டிச்சாக்குதான். அவருடைய தெய்வீகப் பாத கமலங்கள்தான் உங்களை இந்தப் புத்தகத்தை எழுத வைத்துக் கொண்டிருக்கிறது" என்றார்.

அதற்கு நான், "**ஆஹா உன்னதமானவரே, நீங்கள் கூறுவது மிகவும் பொருத்த மாகத்தான் இருக்கிறது. நான் ஒரு ஞானி இல்லை. மேலும், எனக்கு வேதம் மற்றும் வேதாந்தம் போன்ற விஷயங்களில் எந்தவித ஞானமும் இல்லை. இது போன்ற**

**மிகவும் பிரம்மாண்டமான ஒரு வேலையை என்னைப் போன்ற ஒரு அஞ்ஞானி நிகழ்த்தப்போவது எனக்கு மிகவும் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கிறது**" *என்றேன்.*

*அதற்கு ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி,* "**ஸ்ரீ தத்தரின் அணுகுமுறை அப்படித்தான் இருக்கும். தவிர்க்கப்பட வேண்டிய பொருட்களை கொண்டு நோயை குணமாக்குவது, அஞ்ஞானிகளை கொண்டு அசாதாரணமாக வேலைகளை நிகழ்த்துவது போன்ற திருவிளையாடல்கள் அவருடைய வழக்கமான பொழுதுபோக்குகள். இது ஒரு தெய்வீகத் திருவிளையாடல். அதுதான் அவருடைய குணம். இது அவருடைய தெய்வீக சக்திக்கு சான்றான விளக்கம்**" *என்றார்.*

*ஒருமுறை சந்நியாசி ஒருவர் குக்குடேஸ்வரர் கோவிலுக்கு வந்தார். அப்போது ஸ்ரீ ஸ்ரீபாதர் சிறு குழந்தை. ஸ்ரீ நரசிம்ம வர்மாவும் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியும் ஸ்ரீ ஸ்ரீபாதரை குதிரை வண்டியில் ஏற்றிக்கொண்டு குக்குடேஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சந்நியாசி குக்குடேஸ்வரர் கோவிலில் தியான நிலையில் இருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் திடீரென ஸ்ரீ சிரேஷ்டியிடம்,* "**தாத்தா! ஏன் இந்த மீனவனை இங்கு வர அனுமதித்தார்கள்?**" *என்று கேட்டார். ஸ்ரீ நரசிம்ம வர்மா தாழ்ந்த குரலில்,* "**கண்ணையா! இப்படி எல்லாம் சொல்லக் கூடாது. அவர் ஒரு சந்நியாசி, அவர் கோபப்பட்டால் சபித்து விடுவார்**" *என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதர் பதிலளிக்கும் விதமாக,* "**மீனவனுக்குக் கூட கோபம் வருமா? மீனின் துர்நாற்றத்துடன், மீனை உண்பவர்கள் எல்லாம் மீனவர்கள் தானே சந்நியாசி என்றா கூறமுடியும்?**" *என்று கேட்டார்.*

*ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மக்களைத் தூண்டிவிடும் குணம் உண்டு. இதற்கிடையில், அந்த சந்நியாசி தன் கண்ணைத் திறந்தார். அவர் தனது உடல் முழுவதும் மீன் துர்நாற்றம் அடிப்பது போல உணர்ந்தார். அவர் ஒரு உண்மையான சந்நியாசி. அவர் கடவுளின் மீன் அவதாரத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார். கடவுளின் மீன் அவதாரத்துக்கு ஏதாவது யோக அர்த்தம் இருக்கிறதா என்று யோசித்துக் கொண்டிருந்தார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர்,* "**ஸ்வாமி, உங்கள் கமண்டலத்தில் சிறிய மீன் குஞ்சுகள் இருக்கின்றன. அவை எவ்வளவு சந்தோஷமாக எல்லா திசைகளிலும் செல்கின்றன பாருங்கள்!**" *என்றார்.*

## சந்நியாசிக்கு சிறப்பு அருள்

*இவை அனைத்தும் சந்நியாசியை குழப்பம் அடையச் செய்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் சந்நியாசியின் கண்களை உற்று நோக்கினார். பின்னர் சந்நியாசி தன்னை உள்நோக்கி பார்த்தார். அவருக்கு யோகப்பார்வை கிடைத்து, ரத்த குழாய்கள் மற்றும் உடலில் உள்ள பல்வேறு திரவங்களில் உள்ள சிறிய உயிரணுக்கள் மீனை ஒத்ததாக இருந்ததை கண்டார். இந்த சிறு, சிறு உயிரணுக்கள்தான் உடலில் பல வகையான அனுபவங்களை தோற்றுவிக்கின்றன என்று புரிந்து கொண்டார். மீன் வடிவத்தில் இருக்கும் சிறு உயிரணுக்கள்தான் மூக்கின் வாசனை உணர்வுக்கான காரணம் என்பதை உணர்ந்து*

கொண்டார். அதேபோல், மீன் வடிவத்தில் இருக்கும் மிகச்சிறிய உயிரணுக்கள்தான் ருசி உணர்வை அளிக்கிறது. **"ஆஹா, இதுதான் கடவுளின் மீன் அவதாரம் (மகாவிஷ்ணுவின் மச்ச அவதாரம்)"** என்று அவர் ஆச்சரியப்பட்டார். ஒருவர் மூலாதாரத்தில் இருக்கும் வாசனை உணர்வை அளிக்கும் சிறு உயிரணுக்களை அடையாளம் கண்டுகொள்ளும் ஞானத்தைப் பெற்று விட்டால், உலகத்தில் உள்ள அனைத்து வாசனைகளையும் அவரால் கட்டுப்படுத்த முடியும் என்பதை அறிந்து கொண்டார். அவர் தன்னுடைய வெளிப்புறப் பார்வையை மீண்டும் பெற்று சிரித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதரும் சிரித்தார். அந்த சந்நியாசி ஸ்ரீ ஸ்ரீபாதரின் பாதத்தில் நமஸ்கரித்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரை ஆசீர்வதித்தார். பின்னர் அந்த சந்நியாசியின் உடலில் இருந்து ஒரு அருமையான நறுமணம் வீசியது. இதுதான் பராசர முனிவர் மத்சய கிரந்தியை யோஜன கிரந்தியாக மாற்றுவதற்கு செய்த யோக செயல்முறை என்பதை புரிந்து கொண்டார். பதிவிரதைகளின் உடலில் இருந்து வாசனை வெளியேறும். அதனால்தான் அவர்கள் சுவாசினிகள் (நறுமணம் உடையவள்) என்று அழைக்கப்படுகிறார்கள். உடலின் அனுபவங்கள் அனைத்தும் நறுமணத்தால் நிரம்பி இருந்தால், அதற்கு ஏற்ப பௌதீக மாற்றங்கள் ஏற்பட்டு நறுமணம் பரவும் என்பதை மௌனமாகவே ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த சந்நியாசிக்கு கற்பித்து விட்டார். அவர் ஒரு தெய்வீகத் திருவிளையாட்டுக்காரர்!

ஸ்ரீ ஸ்ரீபாதர், **"உங்களுக்கு மீன் அவதாரம் பற்றி தெரியும். ஆமை அவதாரம் (மகாவிஷ்ணுவின் கூர்ம அவதாரம்) தெய்வீக குணம் மற்றும் அசுர குணங்களின் அடித்தளம். மந்தார மலையை ஆமையின் முதுகில் வைத்து தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்தனர். நீங்கள் உள்நோக்கிப் பார்த்தல், ஆமை தன் தலையை ஓட்டுக்குள் மறைத்துக் கொள்வது போல நீங்கள் மகா யோகியாகி விடுவீர்கள். அப்படியில்லாமல், நீங்கள் வெளிப்புறமாக திரும்பினால், தீய குணங்கள் அனைத்தும் குவிந்து அசுரர் ஆகிவிடுவீர்கள். உங்கள் தலையை வெளியில் நீட்டினால், யாராவது ஒருவர் உங்கள் தலையை வெட்டி விடுவார்கள். நீங்கள் இறந்து விடுவீர்கள். நீங்கள் இறக்க வேண்டாம் என நினைத்தால், உங்கள் பார்வையை உள்நோக்கியே செலுத்துங்கள். யோகா பயிற்சி செய்யுங்கள். நீங்கள் கர்ம பந்தங்களில் இருந்து விடுபட வேண்டும்"** என்று கூறினார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் - 45

## அனுமனை பூமியில் அவதரிக்குமாறு அறிவுறுத்துதல்

### ஸ்ரீ ஸ்ரீபாதர் காசியில் தங்கியிருத்தல்

ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரியின் வீட்டில் எங்கள் மதிய உணவை முடித்த பின்னர், அவர் விவரிக்க தொடங்கினார். "என் குழந்தைகளே, ஸ்ரீ ஸ்ரீபாதருடைய லீலைகள் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டதாகும். அவர் பல சிறந்த மனிதர்களை காசியில் ஆசீர்வதித்தார். அவர்களுக்குத் தேவையான யோக சக்திகள் மற்றும் சித்திகளை அருளினார்.

அவர் அங்கிருந்த முனிவர்களிடம், "நான் நரசிம்ம சரஸ்வதி என்கிற பெயரில் இன்னொரு அவதாரம் எடுப்பேன். நான் பீதிகாபுரத்தில் இருந்து மறைந்த பிறகு காசிக்கு வந்ததற்கு ஒரு வலுவான காரணம் இருக்கிறது. இது மிகவும் புண்ணியம் வாய்ந்த க்ஷேத்திரம். இது பல சித்தர்களின் இருப்பிடம். நான் கங்கை நதியில் குளிப்பதற்காக யோக வழியின் மூலம் தினமும் இங்கு வருவேன். நான் என்னுடைய நரசிம்ம சரஸ்வதி அவதாரத்தின் போது என் சந்நியாச தீட்சை பெற இங்குதான் வருவேன். வரும் நூற்றாண்டுகளில் நான் ஷ்யாம சரணரை (ஸ்ரீ லஹரி மஹாஸியா *1828-1895*, மஹாவதார் பாபாஜியின் சீடர்) இங்கு பிறக்கச்செய்து குடும்பஸ்தர்களுக்கு க்ரியா யோகாவை கற்பிக்குமாறு ஆணையிடுகிறேன். அனுமான்தான் அடுத்த யுகத்தின் பிரம்மா. நான் அனுமனை ஷியாம சரணரிடம் அனுப்பி கிரியா யோக தீக்ஷை பெற்றுக் கொள்ளுமாறு செய்வேன். இது சத்தியம்" என்றார்.

### அனுமனுக்கு சீதா, ராமர், லக்ஷ்மணர், பரதர் மற்றும் சத்ருகுணராக தரிசனம் அளித்தல்

பின்னர் ரிஷி கூட்டத்துடன், அவர் தன் யோக பாதையின் மூலம் பத்ரிகா வனத்தை (பத்ரிநாத்) அடைந்தார். அங்கு நர-நாராயண குகையில் இருந்தவர்கள் பலருக்கு கிரியா யோக தீட்சை அளித்தார். அங்கிருந்து அவர் பன்னிரண்டு கோச தூரம் (*36 km*) உள்ள ஊர்வசி குண்டத்துக்கு (பிரம்மபுத்ரா நதியில் உள்ள ஒரு தீவு) சென்றார். அவர் ரிஷி கங்கா நதியிலும் ஸ்நானம் செய்தார். அவர் 5000 ஆண்டுகள் தவம் செய்து கொண்டிருந்த சர்வேஸ்வரானந்தா என்ற பெயருடைய யோகி ஒருவரை ஆசீர்வதித்தார். அங்கிருந்து அவர் நேபாளம் சென்றார். அங்கு ஒரு மலையின் மீது தியானம் செய்து கொண்டிருந்த அனுமானுக்கு ராமர்,சீதை, லக்ஷ்மணர், பரதர்

*மற்றும் சத்ருகுணராக தரிசனம் அளித்தார். அவர் அனுமனிடம்,* **"என் அருமை அனுமானே! நீங்கள் அக்னி பீஜமான (அக்னியின் விதை ஒலி) 'ராம்' என்னும் வார்த்தையை எத்தனை கோடி முறை கூறியிருப்பீர்கள் என்று கணக்கிட முடியவில்லை. நீங்கள் 'ராம்' என்னும் பீஜ ஒலியை மிகச்சிறிய கணத்தில் கூட உச்சரித்து இருக்கிறீர்கள். உங்களுடைய கணக்கை வைத்துக் கொள்வதற்கு சித்ரகுப்தனுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. அதை கணக்கிட முடியாது. எல்லையில்லா மஹா சூன்ய காலத்திலும் 'ராம்' என்னும் பீஜ ஒலியை நீங்கள் பல கோடி முறை ஜெபித்திருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் காலத்தை கடந்தவர். நீங்கள் காலாத்மகர் ஆகிவிட்டீர்கள். சித்ரகுப்தன் உங்களுடைய வயதை பல நூறு ஆயிரம் வருடங்களாக கணக்கிட முடியாமல் இருக்கிறார். நீங்கள் கலியுகத்தில் ஒரு முறை அவதரிக்க வேண்டும். நீங்கள் உணர்வுகளை சமன்படுத்தும் திறன் படைத்தவர் என்பதால், 'சாய்' என்ற நாமத்துடன் புகழடைவீர்கள்"** *என்றார்.*



## 'ராம' பீஜத்தின் மகிமைகள்

*அனுமன், "ஸ்வாமி,* **'ராம'** *பீஜம் அக்னி பீஜம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நான் அக்னி தேவனின் அனுகூலத்தை பெற்றுள்ளேன் என்பதும் உண்மைதான். அக்னியுடன் ஐக்கியமானதால் நான் பூர்ணத்துவம் பெற்றேன் என்பதும் உண்மைதான். உடல் ரீதியாகப் பார்த்தால் நான் உங்களுடைய சேவகன். உயிர் சக்தியின் அடிப்படையில் பார்த்தால் நான் உங்களுடைய ஒரு பகுதி. ஆத்மாவின் அடிப்படையில் பார்த்தால், நான் நீங்கள்தான். நான் எந்த உருவத்தில் அவதரிக்க வேண்டும் என்பதை தயவு செய்து கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் சிரித்துக்கொண்டே,* **"நீங்கள் சிவனுடைய தெய்வீக உற்பத்தி ஸ்தானத்தில் இருந்து தோன்றினாலும், நீங்கள் ஸ்ரீ ராமரின் பக்தனாகி விட்டீர்கள். அரபு மொழியில், 'அல்' என்றால் சக்தி, 'அஹா' என்றால் சக்தா அதாவது, சக்தியை தாங்கிப்பிடிக்கும் ஒன்று என்று அர்த்தம். ஆகவே, 'அல்லா' என்றால் சிவசக்தி சேர்ந்த ரூபம். நீங்கள் என்னை ஜானகி**

**வல்லபரின் உருவத்தில் வணங்கி விட்டீர்கள். இனி, என்னை சிவ-சக்தியாக, மிலேச்சர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய 'அல்லா' என்ற நாமத்தை கூறிக்கொண்டு வணங்குவீர்கள்**" *என்றார்.*

*அனுமன் அதற்கு,* "**ஸ்வாமி, பாரத்வாஜ முனிவர் த்ரேதா யுகத்தில் ஸவித்ரு காடக சயனம் என்னும் யாகத்தை நிகழ்த்தினார் என்பது எனக்கு தெரியும். அன்று நீங்கள் அளித்த வரத்திற்கு இணங்கவே நீங்கள் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தீர்கள் என்பதும் எனக்கு தெரியும். நான் உங்களிடம் இருந்து எந்த சூழ்நிலையிலும் பிரிய விரும்பவில்லை. உங்களுடைய கோத்திரம்தான் என்னுடைய கோத்திரமும். நான் உங்கள் குழந்தை**" *என்றார்.*

## ஸ்ரீ ஸ்ரீபாதருக்கும் ஸ்ரீ அனுமானுக்கும் இடையே நடந்த உரையாடல்

*ஸ்ரீ ஸ்ரீபாதர் : 'என் அருமை அனுமானே! நீங்கள் எடுத்துக்கொள்ளும் உடல் பாரத்வாஜ கோத்திரத்திலேயே பிறக்கட்டும்.'*

*அனுமன் :* **'அல்லா மாலிக், அப்படியென்றால், அல்லாவே கடவுள்'**

*ஸ்ரீ ஸ்ரீபாதர் அனுமனை*

*ஆரத் தழுவிக்கொண்டு:* **'அனுமனே! உங்களுடைய உடல் ரீதியான யோசனைகளை கைவிடுங்கள். நீங்கள் என்னுடைய ஒரு அங்கம்'**

*அனுமன் : 'ஸ்வாமி, நான் உங்களுடைய பகுதிதான் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அம்ச அவதாரங்கள் பூமியில் தன் வேலைகளை முடித்தவுடன் தன் ஆதார குணத்திற்குள் ஐக்கியம் ஆகிவிடும். பின்னர் அந்த அம்ச அவதாரங்கள் தங்கள் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை இழந்துவிடும். ஆகவே, நான் எடுக்கப் போகும் அம்ச அவதாரமானது எப்போதும் மூல தத்துவத்துடன் (ஆதார குணம்) தொடர்பில் இருந்து கொண்டே இருக்க வேண்டும் மற்றும் உங்களுடைய ஆதார சக்தி மற்றும் வலிமை சக்திகள் அனைத்தும் உடையதாக இருக்க வேண்டும்.'*

*ஸ்ரீ ஸ்ரீபாதர் : 'என் அருமை அனுமனே, நீங்கள் மகா புத்திசாலி. என்னுடைய வலிமைகள் மற்றும் உயர்ந்த ஆற்றல்கள் அனைத்தும் உங்களிடமும் செழித்திருக்கும். நான் நரசிம்ம சரஸ்வதியின் உடலில் கதலி வனத்தில் 300 வருடங்கள் மறைந்த நிலையில் யோக சமாதியில் இருப்பேன். பின்னர் ஸ்வாமி சமர்த்தராக பிரக்ஞானபுரத்தில் (அக்கல்கோட்) புகழடைவேன். என்னுடைய*

ஸ்தூல உடலை நான் துறக்க வேண்டிய நேரம் வரும்போது, சாயியின் உருவத்தில் இருக்கும் உங்கள் மூலம் அவதரிப்பேன். என்னுடைய அவதாரம் உங்களுக்குள்தான் இருக்கிறது என்பதை சந்தேகத்திற்க்கு இடமில்லாமல் அறிவிப்பேன். நீங்கள் சர்வ சமர்த்த சத்குரு அவதாரமாக புகழடைவீர்கள்.'

அனுமன் : 'ஸ்வாமி! ஸ்தூல உடலின் நிலைப்பாட்டில் இருந்து கூறவேண்டும் என்றால், நான் உங்களுடைய சேவகன். அதனால்தான், நான் '**அல்லா மாலிக்**' என்ற வார்த்தைகளை கூறிக்கொண்டு உலாவிக் கொண்டிருப்பேன். ஜீவாத்மாவின் பார்வையில் இருந்து கூறவேண்டும் என்றால், உங்களுடைய தெய்வீக ஒளியின் தீப்பொறியுடன் கூடிய குருவின் உருவம் என்பது போல நடந்து கொள்வேன். ஆனால் ஸ்ரீசரணர் ஸ்ரீ தத்தர் தானே? உங்களுக்கும் எனக்கும் ஏதாவது வேறுபாடு இருப்பது சரியாகுமா? நான் உங்களை போல மாறினாலும், நீங்கள் என்னை போல மாறினாலும்தான் அத்வைதம் நிறைவேற்றப்படும். அதனால் அன்புகூர்ந்து ஸ்ரீ தத்தரின் பிரதான குணங்கள் எனக்குள் ஐக்கியமாகும்படி ஆணையிடுங்கள்'

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கால புருஷனை (காலத்தின் தெய்வீக உருவகம்) தன் கண்முன் தோன்ற ஆணையிட்டார். கால புருஷன் தோன்றி கைகட்டி நின்றார். பின்னர் அந்த மகாபிரபு அவரை, "கால புருஷா, இந்த அனுமன் உன்னை மிஞ்சி விட்டார், அவர் காலாதீதன் (காலத்தை கடந்தவர்) ஆகிவிட்டார். அவருக்கு என்னுடன் ஐக்கியமான நிலையை அருளியிருக்கிறேன். நான் அவருக்கு '**நாதா**' என்னும் பட்டத்தை அளிக்கிறேன். இனி, அவர் '**சாய்நாதர்**' என்று அழைக்கப்படுவார். நான் இந்த நாளை தத்த ஜெயந்தியாக முடிவு செய்கிறேன். அனுமனுடைய சைதன்யம் தத்தரின் ஸ்வரூபத்திற்கு ஏற்றவாறு மாறும்" என்றார்.

அங்கிருந்த அனைத்து முனிவர்களும் ஆச்சரியத்துடன் கடவுளை பார்த்தனர். இதற்கிடையில், அனுமனுடைய உடலில் இருந்த அனைத்து உயிரணுக்களும் வெடித்துச் சிதறின. அதிலிருந்து அன்னை அனுசுயா வெளியானாள். அவள் ஸ்ரீ ஸ்ரீபாதரை பார்த்து, "என் அருமை கிருஷ்ண கண்ணையா, என்ன ஒரு தந்திரகார பிள்ளை நீ! தத்தரே, நான் உன்னை பெற்றெடுக்கும் போது பிரசவ வலி ஏற்படுவது இயற்கை. நான் அந்த பிரசவ வலியில் ஒரு இனிமை இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் எனக்கு வலியே அளிக்காமல் நீ பிறந்து விட்டாய்.

எனக்கு இப்போது அந்த பிரசவ வலியை கொடுக்க முடிவெடுத்துவிட்டாய் போலும். எனக்கு இப்போது வயிற்றில் பயங்கரமான வலி இருக்கிறது. நீ என் கண்முன்தான் இருக்கிறாய். நீ என்னுடைய கருவறையில் இருந்து மீண்டும் பிறக்க நினைக்கிறாயா? என்ன இதெல்லாம்? என்ன வைஷ்ணவமாயை இது?" என்று கேட்டாள்.

*ஸ்ரீ ஸ்ரீபாதர்* : *'அம்மா, மகன்கள் தன் தாயின் நியாயமான ஆசைகளை நிறைவேற்ற வேண்டும். அனுமன் இப்போது உங்கள் கருவறையில் இருக்கிறார். நான் அவருக்கு என்னுடன் ஐக்கியம் ஆகும் நிலையை அருளியிருக்கிறேன். ஒரு வழியில், நான் என் மாயையில் மூலம் மீண்டும் உங்கள் கருவறையில் இருந்து பிறக்கிறேன்'*

*சிறிது நேரத்திற்குப் பின்னர் பிரசவ வலி அதிகரித்தது. அன்னை அனுசுயா மூன்று தலைகளுடன் கூடிய அழகான தத்தரின் உருவத்தை பெற்றெடுத்தாள். சிறிது நேரத்திற்குப் பின்னர் அந்த உருவம் மறைந்து சிறு குழந்தை ஒன்று அவள் மடியில் இருந்தது. அனுசுயா புதிதாகப் பிறந்த அந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தாள். சிறிது நேரத்திற்கு பின்னர் இந்த காட்சிகள் மறைந்து போயின. அனுமனுடைய உருவம் தெரிந்தது. ஜானகியும் (சீதா) ராமனும்தான் அவர் முன் நின்று கொண்டிருந்தனர்.*

*அனுமன்* : *'ஸ்வாமி! நான் மிலேச்ச மதத்தில் உள்ள நல்ல விஷயங்களையும் சனாதன தர்மத்தில் உள்ள நல்ல விஷயங்களையும் ஒருங்கிணைக்க முயற்சி செய்கிறேன். ஒரு மிலேச்ச குருவும் அவசியம்.'*

*ஸ்ரீ ஸ்ரீபாதர்* : *'மெஹபூப் சுபானி என்னும் ஒரு ஞானி என்னுள் இருக்கிறார். நான் அவரை வாரிஸ் அலிஷாவாக அவதரிக்க செய்வேன். அவர் உங்களுக்கு குருவாக இருந்து யோக ரகசியங்களை கற்பிப்பார். ஷியாம சரணர் கிரியா யோகாவைக் கற்பிப்பார். உங்களுக்கு வேறு ஏதாவது வரம் வேண்டுமென்றால் கேளுங்கள்'*

## ஸ்ரீ மாணிக்கப்பிரபுவின் வருகை

*அனுமன்* : *'ஸ்வாமி, நீங்கள்,பத்மாவதி மற்றும் வெங்கடேஸ்வரரைப் பிரிக்க முடியாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே, உங்கள் வழிபாடு அறிந்த வைஷ்ணவ குரு ஒருவரை எனக்கு அருள வேண்டும்'*

*ஸ்ரீ ஸ்ரீபாதர்* : 'கோபால் ராவ் (வெங்குசா அல்லது ஸ்வாமி வெங்க அவதூதர்) என்ற பெயருடைய ஒரு சிறந்த வைஷ்ணவரை உங்களுக்கு குருவாக அருளுகிறேன். அவர் எப்போதும் என்னை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். மேலும் அவர் எப்போதும் என் சைதன்யத்துடன் கலந்திருக்கிறார். அவர் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் பக்தர் என்பதால், அவர் வெங்குசா என்று அழைக்கப்படுவார். அவருடைய அந்த உடலை உதிர்த்த பின்னர், அவருடைய அஸ்தியை ஒரு மண்பானையில் இட்டு பூமியில் புதைத்து வையுங்கள். என்னுடைய பரிந்துரைக்கு பின்னர் அந்தப் பானையை திறந்தால், அங்கு ஒரு வெங்கடேஸ்வர ஸ்வாமியின் சிலை இருக்கும். நீங்கள் அந்த சிலையை வழிபட்டால், நான் மகிழ்ச்சி அடைந்து வரம் அளிப்பேன்'.

*அனுமன் அன்னை ஜானகியிடம்* : 'அம்மா, இந்த குழந்தை மீது அன்பு கொண்டு, ஒரு வைர மாலையை எனக்கு அளித்தீர்கள். அந்த வைரத்தை உடைத்து அதில் ராமரின் நாமம் இருக்கிறதா என்று பார்த்தேன். அதில் ராமரின் நாமத்தை கண்டுபிடிக்க முடியாததால், அதைத் தூக்கி எரிந்து விட்டேன். அந்த பெருங்குற்றத்தை நீங்கள் தயவுகூர்ந்து மன்னிக்க வேண்டும்'

*ஸ்ரீ ஸ்ரீபாதர்* : 'தெய்வீகத்தின் முன்னிலையில் எந்த ஒரு செயலும் காரணம் இல்லாமல் நடைபெறாது. நான் அந்த மாணிக்க ஹாரத்தை பத்திரமாக வைத்திருக்கிறேன். அந்த மாலையும் தத்தரின் உருவம்தான்! சந்தேகம் ஏன்? நான் அந்த மாணிக்க ஹாரத்தில் என்னுள் இருக்கும் ஆத்மஜோதியின் மூலம் உயிர் சக்தியை செலுத்தி இருக்கிறேன். இந்த மாணிக்க ஹாரம் ஒரு குருவின் உருவமாக செழிக்கட்டும். அந்த குரு வடிவம் ஸ்ரீ மாணிக்கப் பிரபு என்று அழைக்கப்படட்டும்!' என்றார்

என் செல்வங்களே, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பத்ரிநாத்தில் நாராயணரின் உருவத்தில் இருக்கிறார். அவர் நர என்ற பெயருடைய முனிவர் ஒருவர் பூமியில் தோன்றுவார் என்று கூறியிருக்கிறார். ஸ்ரீசரணருக்கு மட்டும்தான் அந்த அவதாரம் எந்த பெயரில் எந்த உருவத்தில் ஏற்படும் என்பது தெரியும்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் துரோணகிரியில் உள்ள சாம்பலாகிரி கிராமத்தில் தங்கி இருத்தல்

ஒரு முறை பீதிகாபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தாய் மாமாவான வெங்காவதானி குழந்தைகளுக்கு வேதம் நடத்திக் கொண்டிருந்தார். அருகில் ஒரு தென்னை மரம் இருந்தது. அந்தப் புனிதமான இடத்திற்கு ஒரு குரங்கு வந்து அங்கு கற்பிப்பிக்கப்படும் அனைத்து வேத மந்திரங்களின் ஓசையை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தது. மரத்தில் இருக்கும் தேங்காய்கள் அல்லது வேறு எந்த பொருட்களையும் சேதம் செய்யாமல் வேத மந்திர கோஷங்களை கேட்டுக்கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர் மாமாவிடம், "**மாமா, கடவுளுக்கு அவதாரங்கள் இருப்பது போல தென்னை மரங்களுக்கும் அவதாரங்கள் இருக்கிறதா?**" என்று கேட்டார். அதற்கு அவர் தாய் மாமா, "**கண்ணையா, என்ன மாதிரியான கேள்வி இது? கேட்கும் கேள்வியில் ஏதாவது அர்த்தம் இருக்க வேண்டும்**" என்றார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர், "**மாமா, விஷயம் அதுவல்ல! மரத்தில் இருந்து காய் வளர்கிறது. அந்த பழம் அல்லது அதில் இருக்கும் கொட்டை மீண்டும் மரமாகிறது. அந்த மரம் மீண்டும் காய் அளிக்கிறது. இதே போன்று, மரம் விதையாகவும், பழம் மீண்டும் மரமாகவும் மாறும் செயல்முறை தொடர்ந்து கொண்டே இருக்கிறது**" என்று கூறியவுடன் அந்த உரையாடல் முடிந்தது. திடீரென, ஒரு பெரிய தேங்காய் தென்னை மரத்தில் இருந்து அவர்களுக்கு அருகில் விழுந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த தேங்காயை தன் கையில் எடுத்தார். அவர் அந்தக் குரங்கை பார்த்து, "**நான் உன்னை வெறும் கையோடு அனுப்ப விரும்பவில்லை. இதை என் கையில் இருந்து உனக்கு பிரசாதமாக அளிக்கிறேன். என் கையில் இருந்து இன்னொரு தேங்காயை நீ கேட்கக்கூடாது. அதற்கு உனக்கு சம்மதம் என்றால், இதை நீ எடுத்துக் கொள்ளலாம்**" என்றார். அந்த குரங்கு சம்மதிக்கும் தொனியில் தன் தலையை அசைத்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் கையால் தேங்காயை அளித்துவிட்டு அதன் உடல் முழுவதும் அன்போடு தடவிக் கொடுத்தார். அது சந்தோஷமாக சென்றது. அந்த குரங்கு யார் என்று யாருக்கு தெரியும்? அதற்கு ஏன் தேங்காய் அளிக்கப்பட்டது? எந்த முயற்சியும் இல்லாமல் அந்த தேங்காய் ஏன் விழுந்தது? அவருடைய திருவிளையாடல்கள் அனைத்தும் வினோதமாகவும், கற்பனைக்கு எட்டாத அளவுக்கும் இருக்கும்.

மகாப்பிரபு துரோணகிரி என்று அழைக்கப்படும் சஞ்சீவினி மலைக்கு சென்றார். இங்கிருக்கும் முனிவர்களுடன் அவர் சில நாட்கள் செலவழித்தார். அங்கிருக்கும் மகாயோகிகளுக்கு அவர் என்ன அருளினார் என்பது யாருக்கு தெரியும்? பின்னர் கல்கி அவதரிக்கப்போகும் சாம்பலா கிராமத்திற்குச் சென்றார். அந்த இடத்திற்கு மஹாயோகிகளால் கூட செல்ல முடியாது. இமய மலையில் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தவம் புரியும் மஹாபுருஷர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்ரீபாதர் சாம்பலா கிராமத்தில் உள்ள ஸ்படிகம் போன்ற

மலையின் தூய்மையான தண்ணீரைப் பருகினார். அந்த தண்ணீரைப் பருகுபவர்களின் வயது அப்படியே நிலைத்து விடும். ஆகவே, அந்த சமயத்தில் இருந்து அவர் என்றும் பதினாறாக, அவர் உடலில் எந்தவித மாறுதல்களும் ஏற்படாமலேயே இருந்தார்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் கோகர்ணம் பகுதியில் இருந்து சொர்க லோகத்திற்கு செல்லுதல்

பின்னர் அவர் பல புனித க்ஷேத்திரங்களுக்கு பயணம் மேற்கொண்டு பல பக்தர்கள் மற்றும் மகரிஷிகளை ஆசீர்வதித்தார். அவர் கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் கோகர்ண க்ஷேத்திரத்தில் மூன்று வருடங்கள் தங்கியிருந்தார். அது ஒரு மகா புண்ணிய க்ஷேத்திரம். அங்கு அவர் பல தெய்வீக லீலைகளை வெளிக்காட்டி இருக்கிறார். அவை கணக்கில் அடங்காதவை. அவர் ஒவ்வொரு நொடியும் தன் லீலைகளால் மகிழ்ச்சி அடைபவர். அங்கிருந்து அவர் ஸ்ரீசைலம் சென்றடைந்தார். முன்பு ஸ்ரீ பாப்பண்ணார்யா, ஸ்ரீசைலத்தில் ஒரு மஹாயக்ஞத்தை நிகழ்த்தி, சூரிய மண்டலத்தில் இருந்து சக்தியை எடுத்து மல்லிகார்ஜுன லிங்கத்திடம் செலுத்தினார். அதன் காரணமாகத்தான், ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அவதாரம் நிகழ்ந்தது. அவர் அங்கிருந்து, யோக பாதையின் மூலம், எரியும் நெருப்பு பந்து போல் ஆன உடலுடன் சூரிய மண்டலத்திற்கு சென்றார். பின்னர் அங்கிருந்து துருவ நட்சத்திரத்திற்கும், அங்கிருந்து பின்னர் ஆருத்ரா நட்சத்திரத்திற்கும் சென்றார். நான்கு மாதங்களுக்கு பின்னர் அவர் ஆருத்ரா நட்சத்திரத்தில் இருந்து மீண்டும் ஸ்ரீசைலம் வந்தடைந்தார். ஆருத்ரா நட்சத்திரத்தில் உள்ள மகரிஷிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஸ்ரீசைலத்தில் சித்த புருஷர்களின் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தார். அவர் அங்கு ஒரு புது தெய்வீக யோக ஞானத்தை வடிவமைத்து அந்த மாநாட்டில் போதித்தார். பின்னர் அந்த சித்த புருஷர்களை ஆருத்ரா நட்சத்திரத்திற்கு அனுப்பி வைத்தார். அவருடைய திட்டங்கள் புரிந்துகொள்ள முடியாதவையாக இருக்கும். பல கோடி பிரபஞ்சகளுக்கு அவர் மட்டும்தான் ஒரே சக்கரவர்த்தி. சிறிது காலத்திற்கு பின்னர், அவர் குருகட்டா என்னும் தெய்வீக இடத்தை சென்றடைந்தார்" என்று கூறினார் பாஸ்கர சாஸ்திரி.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 46

## ஸ்ரீ தன குப்தர் வீட்டுக்கு செல்லுதல்

### ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரிக்கு அளிக்கப்பட்ட பாதுகைகளில் மந்திர அக்ஷதைகள் தோன்றுதல்

நாங்கள் பாஸ்கர சாஸ்திரியிடம் விடைபெற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டு செல்ல முற்பட்டோம். ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி சிறிது நேரம் தியானதிற்கு சென்றார். நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதருடைய பாதுகைகளை ஏற்கனவே ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரியிடம் அளித்துவிட்டோம். அவர் அதை தன் பூஜை அறையில் வைத்திருந்தார். அந்த பாதுகைகளில் மந்திர அக்ஷதை தோன்ற துவங்கின. நாங்கள் அந்த அதிசயத்தை கண்டு வியப்படைந்தோம். ஸ்ரீ பாஸ்கர சாஸ்திரி, "என் அருமை பெரியோர்களே, ஸ்ரீ ஸ்ரீபாதர் அளிக்கும் தெய்வீகத் திருப்பங்கள் விவரிக்க முடியாத வண்ணம் இருக்கும். ஸ்ரீ பத்மாவதி பிறந்த நட்சத்திரம் மருகசீரிஷம். ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பிறந்த நட்சத்திரம் ஸ்ரவணம். உத்திர பல்குனி நட்சத்திரம் ஸ்ரீ மாதாவுக்கு (பத்மாவதி) தோழமையான நட்சத்திரம், ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கும் மிகுந்த தோழமை நட்சத்திரம். ஆகவே அவர்களுடைய தெய்வீக திருமணம் உத்திர பல்குனி நட்சத்திரத்தில்தான் நடைபெற்றது. என் அருமை செல்வங்களே, இன்றும் இது உத்திர பல்குனி நட்சத்திரத்தின் நேரம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதுகைகள் மீது அவர் மந்திர அக்ஷதை தோன்றச் செய்திருப்பதன் மூலம், அவர் உண்மையில் பத்மாவதி-வெங்கடேஸ்வரரின் உருவம் என்பது தெரிகிறது. ஆகவே, இந்த தெய்வீக மந்திர அக்ஷதைகளை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மங்களம் கிடைக்கும்! ஸ்ரீசரணரின் அருள் உங்களுக்கு பரிபூர்ணமாக கிடைக்கட்டும்" என்றார்.

### சங்கர் பட் மற்றும் ஸ்ரீ தர்ம குப்தர் தங்கள் பயண வழியில் பல புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசித்தல்

என்ன ஒரு மகாஅதிர்ஷ்டம்! அவர் நம் ஒவ்வொரு நடவடிக்கையும், ஒவ்வொரு எண்ணத்தையும், நம் ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை உணர்ந்தோம். நாங்கள் சிறிது தூரம் மாட்டு வண்டியில் பயணித்தோம். அந்த மாட்டுவண்டி ஒரு திருமண கோஷ்டியை சேர்ந்தது. பின்னர் ஒரு வைசிய முக்கியஸ்தரின் குதிரை வண்டியில் பயணித்தோம். அவர்கள் கொண்டவீடு என்னும்

இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஶ்ரீ தன குப்தர் என்னும் முக்கியமான வைசியர், "என் செல்வங்களே, இன்று எங்களுக்கு மிகவும் புனிதமான நாள். ஒரு மாட்டு வண்டியில் பயணிக்கும் திருமண கோஷ்டிக்கு ஶ்ரீ ஶ்ரீபாதர் அளித்த மந்திர அக்ஷதைகளை அளித்திருக்கிறீர்கள். பின்னர், அதை எங்களுக்கும் அளித்தீர்கள். ஒருமுறை, என் வியாபார நிமித்தமாக நான் பீதிகாபுரம் செல்ல நேர்ந்தது. நான் ஶ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியின் வீட்டில் ஶ்ரீ ஶ்ரீபாதரை தரிசித்தேன். பின்னர் ஶ்ரீ ஶ்ரீபாதர் என்னிடம் அன்புடன், "**நான் ஆசீர்வதித்த மந்திர அக்ஷதைகளை உங்கள் மகனின் திருமணத்திற்காக அளிப்பேன். அந்த மந்திர அக்ஷதைகளை உங்களிடம் அளிக்கும் ஏழை பிராமணனுக்கு நீங்கள் பதினோரு வராகன் தக்ஷிணையாக அளிக்க வேண்டும். அவருடன் ஒரு வைசிய முக்கியஸ்தரும் வருவார். அவருடைய மகனுக்கு உங்கள் மகளை திருமணம் செய்து வைப்பதாக சத்தியம் செய்து கொடுங்கள். அவருக்கு நூறு வராகன் அளித்து, கொண்டவீடு என்ற இடத்தில் வெற்றிலை பாக்கு மாற்றிக்கொண்டு நிச்சயதார்த்தம் செய்து திருமணத்தை நிச்சயம் செய்யுங்கள்"** என்றார்.

என்னிடமோ அல்லது ஶ்ரீ தர்ம குப்தரிடமோ பணம் எதுவும் இல்லை. நாங்கள் கொண்டவீடு என்ற ஊரை அடைந்தோம். ஶ்ரீ தன குப்தருடைய மகனின் திருமண வைபவம் விமரிசையாக நடைபெற்றது. ஶ்ரீ தர்ம குப்தருக்கு மணமகளின் குடும்பம் தூரத்து உறவினர்கள். ஶ்ரீ தர்ம குப்தரின் குடும்பத்தினர் அந்த திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஶ்ரீ தர்ம குப்தரின் குடும்பத்தினருக்கு, அவர் எங்கிருக்கிறார் எப்போது திரும்பி வருவார் என்பதெல்லாம் தெரியாது.

ஶ்ரீ தர்ம குப்தரின் குடும்பத்தினர், ஶ்ரீ தன குப்தரின் மருமகள் வீட்டிற்கு முன்பே வந்திருந்தனர். ஶ்ரீ தர்ம குப்தரின் மகனும் திருமணத்திற்கு வந்திருந்தான். ஶ்ரீ தர்ம குப்தரின் மகனுக்கும், ஶ்ரீ தன குப்தரின் மகளுக்கும் திருமண நிச்சயதார்த்தம் கொண்டவீடு என்ற இடத்தில் நடைபெற்றது. அதுவரை பணமே இல்லாத என்னிடம், அப்போது பதினோரு வராகன் கிடைத்தது. அந்த நிமிடம் வரை ஒரு பைசா கூட இல்லாத ஶ்ரீ தர்ம குப்தரிடம், அப்போது நூறு வராகன் இருந்தது. ஆஹா, என்ன ஒரு அற்புதமான திருப்பம் நிறைந்த நிகழ்வுகள்!

ஶ்ரீ தர்ம குப்தருக்கு வைர வியாபாரம் தொடர்பான முக்கியமான சில வியாபாரிகளிடம் பரிச்சயம் இருந்தது. அவர்கள் அந்த வியாபாரத்தை உறுதி படுத்துவது தொடர்பான விஷயங்களுக்காக கொண்டவீடில் தங்க விரும்பினார்கள். ஶ்ரீ தத்தர் கொண்டவீடில் மாறுவேடத்தில் உலாவுவதாக கூறப்படும். அங்கு அம்பிகா யோகிகள், சிவயோகிகள் மற்றும் ரஸவாதிகளும் வசித்து வந்தார்கள்.

என்னை விஜயவாடிகாவிற்கு (விஜயவாடா) குதிரை வண்டியில் அனுப்பி வைப்பது என்று முடிவானது. நான் விஜயவாடிகாவை அடைந்தேன். எனக்கு ஶ்ரீ தன குப்தரின் உறவினர்கள் வீட்டில் தங்க இடம் அளிக்கப்பட்டது. கிருஷ்ணா நதி

அந்த இடத்தில் பாய்கிறது. அங்கு ஸ்ரீ கனக துர்கா மல்லேஸ்வர ஸ்வாமியின் கோவில் இருக்கிறது. நான் கிருஷ்ணா நதியில் நீராடிவிட்டு கோவிலை தரிசித்தேன். அன்னை துர்காவின் கோவிலில் வயதான துறவி ஒருவரை சந்திக்க நேரிட்டது. அவருக்கு பீதிகாபுரம் சென்று ஸ்ரீ ஸ்ரீபாதரை தரிசிக்க வேண்டும் என்ற விருப்பம் அதிகமாக இருந்திருக்கிறது.

நாங்கள் இருவரும் விஜயவாடாவை விட்டுக் கிளம்பி சில நாட்கள் பயணத்திற்கு பின்னர் ராஜமஹேந்திரவரத்தை அடைந்தோம். அங்கு மார்க்கண்டேஸ்வரர் மற்றும் கோடிலிங்கேஸ்வரர் கோவில்களை தரிசனம் செய்தோம். எங்களுடைய பயணம் திருப்திகரமாக இருந்தது. நான் என்னுடன் இருந்த வயதான துறவியிடம், "இன்னும் சில நாட்களில் நாம் பீதிகாபுரத்தை அடைந்துவிடுவோம். நாம் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவதரித்த வீட்டுக்கு செல்லப்போகிறோம். நாம் ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டி மற்றும் ஸ்ரீ நரசிம்ம வர்மாவை சந்திக்க போகிறோம். நமக்கு ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் ஆசீர்வாதம் கிடைக்க போகிறது. நாம் அன்னை சுமதி மஹாராணியையும், தந்தை அப்பலராஜ சர்மாவையும் சந்திக்க போகிறோம். ஒரு அற்புதமான வளமான நேரம் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இது அடுத்தடுத்து மங்களகரமான விஷயங்கள் நடைபெறுவதற்கான சுப நேரம். பின்னர், நாம் பீதிகாபுரத்தில் இருந்து குருகட்டா சென்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரை தரிசனம் பெறலாம்" என்று கூறினேன்.


அந்த சந்நியாசி பேரானந்தம் நிறைந்த மனநிலையில் இருந்தார். வழியில் இருந்த கோவில்கள் அனைத்தையும் தரிசனம் செய்து கொண்டிருந்தோம். சில நாட்களில் பீதிகாபுரத்தை அடைந்தோம். ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் வீட்டில் தங்க மற்றும் உணவருந்த இடம் அளிக்கப்பட்டது. அங்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் பல பால்ய லீலைகளை கேட்டோம். பீதிகாபுரத்தில் இருக்கும் பிராமணர்களும் ஸ்ரீ ஸ்ரீபாதரின் குணத்தைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொள்ள தொடங்கியிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டோம். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய எத்தனை லீலைகளைத்தான் நான் விவரிப்பது? ஆயிரம் நாக்குகள் கொண்ட ஆதிசேஷனால் கூட அவருடைய லீலைகளை விவரிக்க முடியாது. அவருடைய லீலைகளின் எடுத்துக்காட்டாக சிலவற்றை மட்டுமே இந்த புத்தகத்தில் சேர்த்துள்ளேன்.

## ஸ்ரீ ஸ்ரீபாதருடைய உறவினர்களின் குருகட்டா பயணம்

ஸ்ரீ நரசிம்ம வர்மா மற்றும் அவரது மனைவி அம்மஜம்மாவுக்கும் குருகட்டா சென்று ஸ்ரீ ஸ்ரீபாதரை பார்க்க விருப்பம் இருந்தது. அவர்கள் இந்த விஷயத்தை ஸ்ரீ பைண்ட வெங்கடப்பைய சிரேஷ்டியிடம் தெரிவித்தனர். அவரும் சம்மதித்தார். இந்த விஷயம் ஸ்ரீ பாப்பண்ணார்யாவுடன் பேசப்பட்டது. அவருக்கும் அவர் பேரனை ஸ்தூல உடலில் காண விருப்பம் இருந்தது. சுமதி மஹாராணி தன் மகனுடைய நலத்தை விவரமாக எங்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். ஸ்ரீ

அப்பலராஜ சர்மா கண்டிப்பானவராக தோற்றமளித்தாலும், அவரின் குழந்தையைப் பார்க்க உள்ளூர ஆவலாகத்தான் இருந்தார்.

குருக்கட்டா பயணம் முடிவானது. பயணத்திற்காக பதினெட்டு குதிரை வண்டிகள் தயார் படுத்தப்பட்டன. நாங்கள் அனைவரும் ஒன்றாக குருகட்டாவிற்கு பயணித்தோம். பயணம் பல நாட்களுக்கு நீடிக்கும் என்று நாங்கள் அனைவரும் எண்ணி கொண்டிருந்தோம். ஆனால், பயணம் முடிவான பின்னர், ஸ்ரீ ஸ்ரீபாதரை கண்டிப்பாக விரைவில் தரிசனம் பெற்று விடுவோம் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டது. சுமதி மஹாராணி தன் சிறு மகனை எப்போது பார்க்க போகிறேனோ என்று நினைத்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். அனைவரும் தைரியமான வார்த்தைகள் கூறி அவளுக்கு நம்பிக்கை அளித்து தேற்றிக் கொண்டிருந்தனர்.



## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பெற்றோர்கள் மற்றும் தாத்தா-பாட்டிகளுக்கு மீண்டும் தரிசனம் அளித்தல்

அனைத்தையும் அறிந்த, உலக நாடகத்தின் இயக்குனரான, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப மகாபிரபு, இங்கு நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். பதினெட்டு குதிரை வண்டிகளில் பயணித்துக் கொண்டிருந்த அனைவரும் மயங்கி விழுந்தனர். வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தவர்களுக்கும் போதையில் தள்ளாடியது போன்ற நிலை ஏற்பட்டது. குதிரைகள் தரையில் ஓடுவதற்கு பதில் வானத்தில் பறப்பது போல் இருந்தது.

நாங்கள் பீதிகாபுரத்தை விட்டு சூரிய உதயத்தின் போது கிளம்பினோம். அப்போது மதிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தவர்கள் நாம் சரியான பாதையைத் தவற விட்டு விட்டோம் என்றும் தெரியாத பகுதியில் இருக்கிறோம் என்றனர். நான் வண்டியை விட்டு இறங்கி, இது எந்த இடம் என்று அறிந்துகொள்ள சுற்றி பார்த்தேன். அங்கிருந்த பயணிகளிடம் அந்த கிராமத்தின் பெயர் என்ன என விசாரித்தேன். அவர்கள் இது பஞ்சதேவ

*மலை என்று கூறினார்கள். மேலும் அவர்கள்,* "**இன்று வியாழக்கிழமை. அதனால் நாங்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தர்பாருக்காக வந்துள்ளோம். அவரிடம் வருபவர்களின் நலத்தை விசாரித்து, அவர்களின் கவலைகள் மற்றும் நோய்களுக்கும் நிவாரணம் அளிக்கிறார். வருபவர்கள் அனைவருக்கும் அதிகமாக உணவு அளிக்கப்படுகிறது**" *என்று கூறினார்கள். இது என்ன கனவா அல்லது நனவா என்று குழம்பி விட்டோம். நாங்கள் எந்த வழியில் யோசித்தாலும், பஞ்சதேவ மலையை இவ்வளவு குறைவான நேரத்தில் எப்படி அடைய முடியும் என்று எங்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.*

*அது கனவல்ல உண்மை என்று உறுதியானது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் அன்னை சுமதி மஹாராணி அவரை தழுவிக் கொண்டு அழுதாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவளிடம்,* "**அம்மா, குணங்களற்ற, உருவமற்ற, உயர்ந்த தத்துவமான ஒரு குழந்தையை பெற்றெடுக்க நீங்கள் மிகவும் பாக்கியம் செய்துளீர்கள். நீங்கள் அன்னை அனுசுயாவுக்கு இணையான பதிவிரதை சிரோன்மணி. நீங்கள் கண்ணீர் சிந்தினால் இங்கு பயிர்கள் விளையுமா?**" *என்று கேட்டுக்கொண்டே தன் தெய்வீகக் கரங்களால் தன் தாயின் கண்ணீரைத் துடைத்தார்.*

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 47

## ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பெற்றோர்கள் மற்றும் சீடர்களை பீதிகாபுரத்தில் இருந்து பஞ்சதேவ மலைக்கு கொண்டுவருதல்

### ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒருவரின் கர்மாவிற்கு உட்பட்ட தர்மத்தை மதிப்பிட்டு அருள் புரிதல்

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தர்பாரில் அதிக அளவு உணவு பரிமாறப்பட்டது. பலருக்கு உணவளிக்கப்பட்டபோதும், உணவு அள்ள அள்ள குறையாமல் இருந்து கொண்டே இருப்பது ஒரு அற்புதம். மகாபிரபுவின் ஆணைப்படி மீதமான சாதம், பொரியல் மற்றும் மற்ற உணவுகள் கிருஷ்ணா நதியில் இடப்படும். ஸ்ரீ ஸ்ரீபாதரின் பிரசாதம் நீர்வாழ் உயிரினங்களுக்கு அளிக்கப்படும்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம், "தாத்தா, நீங்கள் சூரிய மண்டலத்தில் இருந்து சக்தியை எடுத்து ஸ்ரீசைலத்தில் செலுத்தினீர்கள். த்ரேதா யுகத்தில், பாரத்வாஜ முனிவரின் வழிகாட்டுதலில், அனைத்து முனிவர்களும் நான் அவதரிக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு, ஸவித்ரு காடக சயனத்தை பீதிகாபுரத்தில் நிகழ்த்தினார்கள். அவர்களுக்கு அளித்த சத்தியத்தை நிறைவேற்ற நான் வரவேண்டியதாயிற்று. பிரம்மத்தின் உருவத்தை வார்த்தைகளாலோ அல்லது மனதாலோ புரிந்து கொள்ள முடியாது என்றும் ஸ்ரீ தத்தர் நினைத்தால் எதுவும் சாத்தியமில்லை என்பது கிடையாது என்று நீங்கள் ஸ்திரமாக கூறியிருக்கிறீர்கள். என்னால் நேரத்தையும் இடத்தையும் நீட்டிக்க முடியும். என்னால் அவற்றை சுருக்க முடியும். என்னுடைய விருப்பம் நிறைவேற்றப்படும். அதை எவற்றினாலும் தடுத்து நிறுத்த முடியாது. எனக்கு தேவை என்று நான் எண்ணினால், நான் வானத்தையும் பூமியையும் சேர்த்து வைப்பேன். கிரகங்களும் நட்சத்திரங்களும் என் கையில் விளையாட்டுப் பந்துகள் போன்றவை" என்றார்.

அவர் ஸ்ரீ பாப்பண்ணார்யாவிடம், "நீங்கள் லாபாத மஹரிஷியாகப் பிறந்த போதும், நந்தனாகவும்,பாஸ்கராச்சார்யராக பிறந்த போதும் நான் உங்களுக்கு அருள் புரிந்திருக்கிறேன். இப்போது நீங்கள் ஸ்ரீ பாப்பண்ணவதானியாக வந்துள்ள போது நான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக வந்துள்ளேன். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை" என்றார்.

பின்னர் ஸ்ரீ வெங்கடப்பைய சிரேஷ்டி, "**தங்கக் குழந்தாய், உனக்கு அனைத்தும் சாதாரணமான ஒன்று, ஆனால் எங்களுக்கு அனைத்தும் அசாதாரணம் மற்றும் நினைத்துப் பார்க்க முடியாதவை**" என்றார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர், "தாத்தா, நான் ஒரு திறமையுள்ள வியாபாரி. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சரியான பாக்கி அளிக்க வேண்டுமோ, அவர்களின் கர்மா மற்றும் தர்மத்தை சரியாக அளந்த பின்னர் அவர்களுக்கு அருளுவேன். என்னிடமிருந்து வெளியாகும் ஒரு சிறு ஒளிக்கதிர் கூட ஒரு சிறந்த யோகியாகவோ அல்லது மகாசித்தராகவோ ஆக முடியும். இந்த பூமியால் அந்த சிறு ஒளிக்கதிரைக் கூட தாங்கிக் கொள்ள முடியாது. உங்களால் சிறிய ஒளிக்கதிரினால் உண்டாகும், சிறு அளவிலான குண்டலினியைக் கூட தாங்கிக் கொள்ள முடியாது. அதனால்தான், நான் என்னை மாயைக்குள் மறைத்துக் கொள்கிறேன். தேவையென்றால், நான் எந்தவிதமான அசாதாரணமான அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டுவேன். என்னால் தூக்க முடியாத பாரம் என்று ஒன்று கிடையவே கிடையாது. என்னால் தீர்க்க முடியாத பிரச்சனை என்று ஒன்று கிடையவே கிடையாது. என்னால் அருள முடியாத வரங்களே கிடையாது. என்னால் செய்ய முடியாத வேலை என்று ஒன்று கிடையவே கிடையாது. நான்தான் ஸ்ரீ தத்தர் என்பதை உங்களுக்கு உணர்த்தவே, நான் உங்களை பீதிகாபுரத்தில் இருந்து இந்த வழி மூலம் இங்கு அழைத்து வந்தேன்" என்றார்.


ஸ்ரீ நரசிம்ம வர்மா, "**நீங்கள்தான் அனைவரையும் பாதுகாக்கும் ஒரே க்ஷத்ரியர். மற்றவர்கள் பெயரளவில் மட்டுமே க்ஷத்ரியர்**" என்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு, "**அரசர்களின் குணம் என்னிடம் எப்போதும் உண்டு. நீங்கள் மஹாராஷ்டிர மாநிலத்தில்,சனாதன தர்மத்தைக் காப்பாற்ற சிவாஜி சக்கரவர்த்தி என்ற பெயரில் பிறப்பீர்கள்**" என்றார். பின்னர் ஸ்ரீ நரசிம்ம வர்மா, "**வெற்றி, ஸ்ரீ ஸ்ரீபாத சர்வபௌமருக்கு வெற்றி**" என்று வாழ்த்தினார்.

ஸ்ரீமதி அம்மஜம்மா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், "**என் செல்வமே, தங்கக் குழந்தாய்! நாங்கள் எங்கள் கண்களால் உன் திருமணத்தை பார்க்க ஆவலாக இருந்தோம். உன் திருமணம் கோலாகலமாக கொண்டாடப்படுவதை நான் பார்க்க வேண்டும். நான் உனக்கு திருமணத் திலகமிட்டு மணக்கோலத்தில் பார்க்க ஆசையாக இருக்கிறது**" என்றாள். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர், "**பாட்டி, அப்படியே ஆகட்டும்! உலக நன்மைக்காக நான் சாம்பலா கிராமத்தில் கல்கியாக அவதரித்து, சிங்களத்தில் பத்மாவதியாக பிறக்கும் அனகா லக்ஷ்மியை மணப்பேன். அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. நான் உங்கள் ஆசையை கண்டிப்பாக நிறைவேற்றுவேன். ஒரு கன்னிசாமி என்று ஐயப்பனை தரிசிக்க சபரிமலைக்கு வரவில்லையோ அன்றுதான் கலியுகத்தின் முடிவு என்பதை தெரிந்து கொள்ளுங்கள். தர்ம சாஸ்தாவாக அவதரித்த நான், என் வார்த்தையை மீறக் கூடாதல்லவா? அதற்கு நீங்கள் இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டும்**" என்றார்.

## இந்த உலக நாடகத்தில் மாய கயிற்றினை இழுத்து லீலைகள் புரிபவர்

ஸ்ரீமதி வெங்கடசுப்பமாம்பா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், "கண்ணையா, நீ பால், தயிர், பாலேடு மற்றும் வெண்ணெய் ஆகியவற்றை ருசித்துப் பல நாட்கள் ஆகிறது. என் கையாலேயே உனக்கு ஊட்டி விடுகிறேன்" என்றாள். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், "பாட்டி, கண்டிப்பாக எனக்கு ஊட்டி விடுங்கள். எனக்கு களைப்பாக இருக்கிறது. நீங்கள் பால், தயிர், பாலேடு மற்றும் வெண்ணெய் ஆகியவற்றை கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று எனக்கு தெரியும். பல நாட்கள் பயணம் செய்தால் அவை எல்லாம் கெட்டுப் போய்விடாதா? உங்கள் அனைவருடைய அன்புக்கும் பாசத்துக்கும் நான் சிறைப்பட்டு கிடக்கிறேன். அதனால்தான் நீங்கள் கொண்டு வரும் அனைத்து பொருட்களும் கெட்டுப் போய் விடக்கூடாது என்பதால்தான் உங்களை இந்த வினோதமான வழியில் இங்கு அழைத்து வந்தேன். பாட்டி! பாருங்கள் நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. பல மைல்கள் தூரம் பதினெட்டு குதிரை வண்டிகளை இழுத்து வருவது ஒருவருக்கு சாதாரணமான விஷயமா என்ன? என் உடல் முழுவதும் வலிக்கிறது. என் கை எல்லாம் கொப்பளித்து விட்டது" என்றார். உடனே அவள் ஸ்ரீ ஸ்ரீபாதரின் கையைப் பார்த்து வியந்து போனாள். ஸ்ரீசரணரின் கைகள் முழுவதும் கொப்பளித்துப் போயிருந்தன. வெங்கடசுப்பமாம்பா அவர் கைகளில் பாலாடையை தடவிவிட்டாள். வெண்ணீர் ஒத்தடமும் அளிக்கப்பட்டது. உலக நாடகத்தின் இயக்குனரின் லீலைகளுக்கு எல்லைதான் ஏது?

ஸ்ரீமதி ராஜமாம்பா, "தங்கக் குழந்தாய், உனக்குப் பிடித்த அல்வாவை உன் வெள்ளிக் கிண்ணத்தில் நான் கொண்டு வந்துள்ளேன். அருகில் வா! என் செல்வமே, என் கையாலேயே உனக்கு ஊட்டி விடுகிறேன்" என்றாள். மூன்று பாட்டிகளும் சேர்ந்து அவருக்கு அல்வாவை ஊட்டிவிட்டனர். அல்வா அள்ள அள்ளக் குறையாமல் இருந்து கொண்டே இருந்தது. ஸ்ரீ ஸ்ரீபாதர் இந்த பொழுதுபோக்கை நீண்ட நேரத்திற்கு நிகழச் செய்து கொண்டிருந்தார்.



ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களிடம், "**மூன்று பாட்டிகளுக்கும் என் மேல் பாசம் அதிகமாக இருக்கிறது. இவ்வளவு அல்வாவை நான் சாப்பிட்டால் எனக்கு நோய் ஏற்பட்டு விடாதா? நீங்கள் செய்வது சரிதானா?**" என்று இந்த கேள்வியை கேட்டுவிட்டு, அல்வாவை தன் கையாலேயே, தன் சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் அவர்களுடைய கணவன்மார்களுக்கும் ஊட்டி விட்டார். வந்திருந்தவர்களில் வெங்கையா என்கிற விவசாயி ஒருவரும் இருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர் வீட்டில் தான் அனைவருக்கும் தத்த தீக்ஷை அளித்தார். அவர் தன் கையாலேயே வெங்கையாவுக்கு அல்வா அளித்துவிட்டு, மீதி இருக்கும் அல்வாவை குதிரைவண்டி ஓட்டுநர்களுக்கும் குதிரைகளுக்கும் அளிக்கும் படி ஆணையிட்டார். அந்த வெள்ளிக் கிண்ணத்தை வெங்கையாவுக்கு பரிசாக அளித்தார்.

ஸ்ரீ அப்பலராஜ சர்மா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், "**என் அருமை மகனே! என் தங்கமே! நீ தத்தர் என்பது தெரியாமல் நாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் எங்களை மன்னித்து விடு**" என்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அதற்கு, "**அப்பா, நான் உங்களுடைய மகன். மகன் தன் தந்தையை மன்னிக்க முடியுமா? என்ன இது வழக்கத்திற்கு மாறாக! உங்கள் மகனான என் மீது நீங்கள் அன்பைப் பொழிய வேண்டும். என்னுடைய நலனையே எப்போதும் விரும்புங்கள்**" என்றார்.

ஸ்ரீ வெங்காவதானியும் அவர் மனைவியும் மிகவும் அழுதனர். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் அவர்களிடம், "**மாமா, நம்முடைய உறவு நிரந்தரமானது. நான் உங்களுக்கு மட்டும் மருமகன் அல்ல. உங்கள் குடும்பத்தில் பிறந்தவர்கள் அனைவரும் என்னை மருமகனாக எண்ணிக் கொள்ளலாம். நான் என்னுடைய தெய்வீக லீலைகள் மூலம் உங்களை சந்தோஷப்படுத்துவேன். நீங்கள் உங்களுடைய ஏக்கங்களை என் கல்கி அவதாரத்தின் போது, பத்மாவதி தேவியை உங்கள் மகளாக பாவித்து தீர்த்துக் கொள்ளலாம்**" என்றார். சுமதி மகாராணிக்கு துக்கம் பொங்கியது. அவளுக்கு அவரை மணமகன் போல அலங்கரித்து, திருமண திலகம் இட வேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் போனதைத் தாங்க முடியவில்லை. இன்னொரு பக்கம், அவள் மகன் முனிவர் மற்றும் பற்றுகள் அற்றவராக மாறிவிட்டார். இவற்றை அவளால் தாங்க முடியவில்லை. பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தாயின் அருகில் வந்து, "அம்மா, எனக்கு நீங்கள் வேறு அன்னை அனுசுயா வேறு அல்ல. நான் உங்கள் விருப்பங்களை கல்கி அவதாரத்தின் போது கண்டிப்பாக நிறைவேற்றுவேன். அம்மா, நான் உங்கள் கருவறையில் இருந்து பிறந்ததால்தான் இவ்வளவு சிறப்பானவனாக ஆனேன். நான் உங்களுடைய பாசம் என்னும் அமிர்தம் ஊட்டப்பட்டிருக்கிறேன். அம்மா, வாசவி என்ன செய்தாள் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? நான் பசியாக இருந்த போது, நான் குழந்தையாக மாறி அன்னை அனுசுயாவிடமிருந்து தாய்ப்பாலை குடிக்கச் சென்றேன். ஆனால் அனைத்து பாலையும் வாசவி குடித்துவிட்டாள். பின்னர் என் சகோதரி என்னிடம், "**சகோதரனே, நீங்கள் அன்னை சுமதியிடம் சென்று பால் பருகுங்கள். தாமதித்தால், நான் அந்த பாலையும் குடித்து விடுவேன்**" என்று என்னை எச்சரித்தாள். அம்மா, இப்போது சொல்லுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்" என்று நம்பிக்கை அளித்தார். அவ்வாறு கூறிக்கொண்டே அவர் ஒரு சிறு குழந்தையாக

மாறினார். அவர் ஒரு கடினமான தரையில் படுத்துக் கொண்டு தன் தாயை ஏக்கமாக பார்த்தார். சுமதி மகாராணிக்கு துக்கம் பொங்கியது. அவள் குழந்தையை தன் கையில் எடுத்துக் கொண்டு தாய்ப்பால் புகட்டினாள். அவள், **“மகளே, வாசவி!”** என்று அழைத்தாள். சில மாதங்களே ஆன ஒரு பெண் குழந்தை பூமியில் தோன்றியது. இரண்டு குழந்தைகளும் அவள் இரு மார்பிலும் தாய்ப்பால் பருகின. அன்னை சுமதியின் துக்கம் அனைத்தும் நொறுங்கிப்போனது.

வெங்கையா ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், **“இது மகா குருவிடம் என் பிரார்த்தனை. இந்த தர்பார் இடமும், இந்த தெய்வீக லீலை நடைபெற்ற இடத்திற்கு அருகில் இருக்கும் நிலங்களும் இந்த பிரபஞ்சத்திலேயே மிகவும் புகழ் பெற வேண்டும்”** என்று கேட்டுக்கொண்டார். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர், **“என்னுடைய தர்பார் வருங்காலத்தில் ஒரு நிரந்தரமான கட்டிடமாக ஆகும். அங்கு பசுக்களும் இருக்கும். நான் அங்கு பல அற்புதங்களை வெளிக்காட்டுவேன்”** என்றார்.

இந்த அனுபவங்களை நான் என் கண்களால் நேரில் பார்த்தேன். இங்கு நான் எழுதியிருக்கும் ஒவ்வொரு எழுத்தும் சத்தியம். அங்கிருந்த விருந்தாளிகள் அனைவருக்கும் மயக்கம் ஏற்படுவது போல ஆனது. சில நொடிகளில், அந்த தர்பாரில் சந்நியாசி, நான் மற்றும் ஸ்ரீ ஸ்ரீபாதரைத் தவிர வேறு யாரும் இல்லை. மற்றவர்களுக்கு என்ன ஆனது என்று எனக்குக் கவலையாக இருந்தது. அவர்கள் ஏதாவது தந்திரத்தில் மாட்டிக்கொண்டு விட்டார்களோ என்று சந்தேகப்பட்டேன்.

ஸ்ரீ ஸ்ரீபாதர், **“எந்த பேய் பிசாசும் நான் இருக்கும் இடத்தில் வேலை செய்யாது. நான் அனைவரையும் பத்திரமாக பீதிகாபுரத்தில் விட்டுவிட்டேன். என்னை வணங்குபவர்களையும் இதே முறையில் என்னிடம் இழுத்துக் கொள்வேன் . இது நான் அளிக்கும் உத்தரவாதம்”** என்றார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 48

## பஞ்சதேவ மலையில் இருக்கும் தர்பாரின் வர்ணனை

### ஸ்ரீ ஸ்ரீபாதர் ஆண்கள் மற்றும் பெண்களை அழைக்கும் முறை

ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பஞ்சதேவ மலையில் தர்பார் நடத்துவது வழக்கம். அவர் கிருஷ்ணா நதியின் மீது நடந்து செல்வார். அவர் பாதங்களை எங்கெல்லாம் பதிக்கிறாரோ அங்கெல்லாம் தாமரை மலரும். மரப்பாதுகைகள் தாமரை மலர்மீது எப்படி நின்றது என்பது மனித அறிவுக்கு எட்டாத ஒன்று. அது மட்டுமல்ல. நீரின் மீது நடப்பது கூட அற்புதம்தான். அதைப் பார்ப்பவர்களுக்கு சில நிமிடங்களுக்கு அதிசயமாக இருக்கும். சில நாட்களுக்குப் பிறகுதான் அது வழக்கமான நடவடிக்கை என்று கருதுவார்கள். ஸ்ரீ ஸ்ரீபாதர் கிருஷ்ணா நதியின் அக்கரைக்கு வரும் போது, அவருடைய பக்தர்கள் அவரை அன்போடு வரவேற்பார்கள். தர்பார் சூரிய அஸ்தமனம் வரை நடக்கும். பின்னர் அவர் கிருஷ்ணா நதியைக் கடந்து செல்லும் போது, காலையில் எப்படி தாமரை மலர்ந்து பாதையாக ஆனதோ அதே போல் அந்த நீரில் தாமரையின் மீது நடந்து செல்வார். பின்னர் எல்லா பக்தர்களும் அவருக்கு விடை அளித்து அனுப்புவார்கள். இரவு நேரங்களில் அவர் குருகட்டாவில் தனியாகத்தான் இருப்பார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், திருமணம் ஆகவேண்டிய கன்னிப் பெண்களுக்கும், மங்களகரமான திருமண வாழ்க்கை வேண்டும் என விரும்பும் பெண்களுக்கும் மஞ்சள் கிழங்கை அளிப்பார்.

அவர் வயதான பெண்களை அம்மா சுமதி என்று அழைப்பார். சில சமயம் அவர்களை, அம்மா அனுசுயாம்மா என்றும் அழைப்பார். அவரை விட வயதில் குறைந்த பெண்களை அம்மா வாசவி அல்லது அம்மா ஸ்ரீ வித்யாதரி அல்லது அம்மா ராதா அல்லது அம்மா சுரேகா என்று அழைப்பார். அவருடைய தந்தை வயதில் இருக்கும் மூத்தவர்களை ஐயா அல்லது நாயனா என்று அழைப்பார். சிறுவர்களை ஒரே அல்லது அப்பி அல்லது பங்காரு என்று அழைப்பார். அவருடைய தாத்தாவின் வயதை ஒத்தவர்களை தாத்தா என்று அழைப்பார். வயதான பெண்கள் என்றால், அவர் அன்புடன் அம்மம்மா என்று அழைப்பார்.

### ஸ்ரீ ஸ்ரீபாதருடைய தர்பாரின் தினசரி நிகழ்ச்சிகள்

ஸ்ரீ ஸ்ரீபாதர் அவருடைய வெள்ளிக்கிழமை தர்பாரை சில சமயம் குருகட்டாவிலும், சில சமயம் பஞ்சதேவ மலையிலும் நிகழ்த்துவார். அதேபோல,

அவருடைய வியாழக்கிழமை தர்பார் குருகட்டாவிலோ அல்லது பஞ்சதேவ மலையிலோ நடைபெறும். அது அவருடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை தர்பார்களில், அவர் ரகசியமான யோக வித்யாக்களைப் பற்றி சொற்பொழிவாற்றுவார். பின்னர் வந்திருக்கும் மக்களுடைய நலனை விசாரிப்பார். அவர்களுடைய கஷ்டங்களைப் பொறுமையாக கேட்டு விட்டு நம்பிக்கை அளிப்பார். திங்கட்கிழமை தர்பாரின் போது, புராணங்களில் இருந்து சில அத்தியாயங்களை கூறுவார். அந்த கதாகாலட்சேபம் முடிந்ததும், பக்தர்களின் நலனை விசாரிப்பார். செவ்வாய்க்கிழமை தர்பாரில், உபநிஷத்துக்கள் பற்றி கற்பிப்பார். கற்பித்து முடித்த பின்னர், தனிப்பட்ட பிரச்சனைகளைக் கேட்பது, சில யோசனைகள் அளிப்பது மற்றும் அதேபோல் நம்பிக்கை அளிப்பது போன்றவை நடக்கும். புதன்கிழமை தர்பாரில், வேதங்களின் வர்ணனை மற்றும் அர்த்தங்களும் விளக்குவார். பின்னர், பக்தர்களுடைய துயரங்களை பொறுமையாகக் கேட்டு நம்பிக்கை அளிப்பார். வியாழக்கிழமை தர்பாரின் போது, குரு தத்துவத்தை பற்றி விளக்குவார். இந்த தர்பாரில், பக்தர்களின் கவலைகளுக்கும், தீர்க்க முடியாத நோய்களுக்கும் நிவாரணம் அளித்து, பாதுகாப்பு நம்பிக்கையை அருளுவார். அன்று, சிறப்பாக உணவு தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படும். அவருக்கு பக்தர்களின்மீது அன்பு அதிகரித்தால், அவர் தன் கையாலேயே அனைவருக்கும் உணவு பரிமாறுவார். சில அதிர்ஷ்டசாலிகளுக்கு, தன் கையாலேயே உணவை ஊட்டி விடுவார். கூச்ச சுபாவம் உடைய சிலருக்கு, வலுக்கட்டாயமாக அவர்கள் வாயில் உணவைத் திணித்து சாப்பிட வைப்பார். அவருடைய கஜானா எப்போதும் நிரம்பி வழியும் என்றும், பணத்திற்கோ உணவுக்கோ எந்த பஞ்சமும் இருக்காது என்றும் கூறினார். வெள்ளிக்கிழமை தர்பாரில், அவர் ஸ்ரீவித்யாவை கற்பிப்பார். அவர் வேறுபாடு இல்லாமல் மஞ்சள் துண்டுகளை விநியோகிப்பார். சனிக்கிழமை தர்பாரில், சிவ வழிபாட்டின் முக்கியத்துவத்தை கற்பிப்பார்.

ஸ்ரீ ஸ்ரீபாதரின் தர்பாரைக் காணும் பேறு பெற்றவர்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள்தான். பக்தர்கள் அரிசி, காய்கறிகள், சோளம் மற்றும் கேழ்வரகு தானியங்களை கொண்டு வருவார்கள். தினமும் விருந்து இருக்கும் ஆனால் வியாழக்கிழமைகளில் சிறப்பான உணவுகள் தயாரிக்கப்படும். ஏதாவதொரு இனிப்பு தயாரிக்கப்பட்டு பக்தர்களுக்கு விநியோகிக்கப்படும். ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு மிகவும் இளகிய மனது. யாராவது ஒருவர் ஏதாவது பிரச்சனையுடன் தர்பாருக்கு வந்தால், அவருடைய பிரச்சனை சரியாக்கப் பட்டு சந்தோஷத்துடன்தான் செல்வார்கள். ஸ்ரீ தத்த புராணம் பாராயணம் செய்யப்பட்டால் அவருடைய அருள் பரிபூர்ணமாக கிடைக்கும் என்று கூறுவார். ஸ்ரீ ஸ்ரீபாதருடைய அன்பு ஒரு கோடி அன்னைகளுக்கு சமமானது.

அவர் குருகட்டாவில் இரவு நேரங்களில் தங்குவதற்கு யாரையும் அனுமதிக்கமாட்டார், ஆனால் என்னோடு வந்த வயதான சந்நியாசியை மட்டும் சில நாட்களுக்கு தங்க அனுமதித்தார். சில சமயம், நானும் குருகட்டாவில் தங்க

அனுமதிக்கப்பட்டேன். அவர் அந்த வயதான சந்நியாசியை காசிக்குச் சென்று வாழ்ந்துவிட்டு தன் உடலை அங்கு துறக்குமாறு கூறினார். சமைத்த பாத்திரங்களை கழுவுவது, உணவு சமைப்பது மற்றும் பக்தர்களை உபசரிப்பது போன்றவை என்னுடைய வேலைகள். தர்பாருக்கு வரும் பக்தர்களுக்கு எந்த நேரமானாலும் உணவு அளிக்கப்பட வேண்டும். எவரேனும் தான் ஏற்கனவே சாப்பிட்டுவிட்டதாக கூறினாலும், அது பிரசாதம் என்பதால் மீண்டும் சாப்பிட வற்புறுத்துவார். நான் உணவு போதாது, விருந்தாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறினால், அவர் கமண்டலத்தில் இருக்கும் நீரை எடுத்து உணவுப் பொருட்கள் மீது தெளிப்பார். உணவு அள்ள அள்ள குறையாமல் இருக்கும். இது போல் பலமுறை நடந்திருக்கிறது.

இரவு நேரங்களில் அந்த மகா குருவை தரிசிக்க தேவர்கள் வானுர்திகளில் குருகட்டாவிற்கு வருவார்கள். அவர்கள் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு செல்வார்கள். சில சமயம் இமய மலையில் இருந்து யோகிகள் வருவார்கள். அவர்களும் கிருஷ்ணா நதியின் மீது நடந்து வருவார்கள். அவர்களுடைய உடல் பிரகாசமாக இருக்கும். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் கையாலேயே அவர்களுக்கு உணவு பரிமாறுவார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் ஒரு கைப்பிடி சாதம் மட்டும்தான் உண்பார். அவருடைய பக்தர்கள் அரிசி அல்லது சோளம் அல்லது ராகியால் செய்யப்பட்ட உணவோ அல்லது கஞ்சியோ, வயிறு புடைக்க உண்டாலே தான் திருப்தி அடைவேன் என்று கூறுவார்.

ரவிதாஸ் என்ற பெயருடைய வண்ணானுக்கு ஸ்ரீசரணுடைய துணிகளைத் துவைக்கும் பாக்கியம் கிடைத்தது. அவருடைய தரிசனத்துக்குப் பின்னரும் ஒருவர் தன் தீய பழக்கங்களை தவிர்க்காவிட்டால், வினோதமான பிரச்சனைகளுக்கு ஆளாவார்கள். அதை நிவர்த்தி செய்து கொள்ள, அவர்கள் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம்தான் மீண்டும் வரவேண்டும். ஸ்ரீ ஸ்ரீபாதர் இறந்த மூத்தவர்களுக்கு சிரார்தம் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று கூறுவார். அவர் 18 வர்ணங்களை சேர்ந்தவர்களும் தன் குழந்தைகள்தான் என்று கூறுவார். அவரவர்கள் செய்யும் தர்ம கர்மாக்களுக்கு ஏற்பத்தான் அருள் புரிவேன் என்றும் யாரின் மீதும் தனக்கு பாகுபாடு கிடையாது என்றும் கூறுவார். அன்று அளிக்கப்பட்ட வாய்ப்பு மீண்டும் மீண்டும் கிடைக்காது என்றும் அவருடைய வருங்கால அவதாரங்களில் கடுமையாக நடந்து கொள்வேன் என்று குறிப்பிட்டார். பல பிறவிகளில் செய்த நற்பலன்களினால்தான் அவருடைய தரிசனம் ஒருவருக்கு கிடைக்கும் என்றும், அந்த வாய்ப்பை கண்டிப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இல்லையேல், பல பிறவிகளுக்கு பின்னர்தான் சத்குருவின் தரிசனம் கிடைக்கும் என்று கூறினார். மேலும் முழு உலகத்திலும், ஒவ்வொரு யுகத்தின் போதும் 1,25,000 சித்த புருஷர்கள் இருப்பார்கள் என்றும், அவர்கள் அனைவரும் தன் அம்சம்தான் என்றும், அவர்களில் யாரவது ஒருவரை அடைக்கலம் அடைந்தாலே தன் அருள் அவர்கள் மூலம் வெளிப்படும் என்றும் கூறுவார்.

மேலும், அவர்தான் அனைத்து படைப்புகளின் ஆதாரம் என்றும், அவருடைய விருப்பத்தினால்தான் படைப்புகளின் படைத்தல், காத்தல்,அழித்தல் ஆகிய நிகழ்வுகள் நடக்கின்றன என்றும் கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதர், "நீங்கள் உங்கள் குருவை வணங்கினால், அவர் அவருடைய குருவை வணங்குவார். இந்த வழியின் மூலம் ஆதி குருவான என்னிடம்தான் எல்லா வணக்கங்களும் வந்து சேரும். கடவுள் கோபம் அடைந்தால், குரு பாதுகாப்பார், ஆனால் குருவே கோபம் அடைந்தால், பாதுகாக்க யாரும் இருக்க மாட்டார்கள்" என்று எப்போதும் கூறுவார். மேலும், அவரை ஒருவர் வணங்கினால் இந்த உலகம் மற்றும் மற்ற உலகங்களில் நன்மை பெறலாம். இந்த படைப்பில் யாரையும் வெறுக்க கூடாது, நாம் அப்படி யாரையாவது வெறுத்தால், அதுவும் தன்னிடம் வந்து சேரும் என்று குறிப்பிட்டார்.

அவர் அருளவேண்டும் என்று விரும்பினால், அவர்களின் பாவ புண்ணியங்களை அவர் கவனத்தில் கொள்வதில்லை. ஒருவர் அவருடைய அருளை பெற வேண்டும் என்றால் அவர்களுக்கு சாத்வீக குணம் மிகுதியாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

## எல்லா செயல்களை செய்யும்போதும் கடவுளின் நாமத்தை ஜெபிக்க வேண்டும்

குருகட்டா ஒரு உயர்ந்த க்ஷேத்திரம் என்றும் அங்கிருக்கும் ஈஸ்வரன் விழிப்பு நிலையில் இருக்கிறார் என்றும் தெய்வங்கள், முனிவர்கள் மற்றும் சிறந்த மனிதர்கள் அங்கு யார் கண்ணுக்கும் தெரியாத உருவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அனைவருக்கும் தகுந்த இடம் என்று ஒன்று இருக்கிறது. ஒருவர் தன்னுடைய கடமைகளைச் செய்யும் போது எப்போதும் கடவுளின் நாமத்தை தன் மனதில் நிறுத்த வேண்டும், அந்த கடமைகள் தர்மத்தை ஒத்ததாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் அவருடைய தரிசனம் ஒருவருக்கு கிடைத்தால், பெரும் பாவங்கள் நீங்கும் என்றும் ஒருவர் புண்ணிய காரியங்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு மங்களகரமான பலன்கள் கிடைக்கும் என்று கூறினார். நாம் அனைவரும் ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறும் தெய்வீக வாக்குகளை நம் வாழ்க்கையில் பின்பற்றி அருள் பெறுவோமாக!

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 49

## ஸ்ரீ ஸ்ரீபாதர் கர்மாக்களை அழிக்கும் முறைகள்

### எண் 33 ன் முக்கியத்துவம்- குருகட்டாவில் அவருடைய திட்டங்கள்

ஒருமுறை ஸ்ரீ ஸ்ரீபாதர், "**சங்கர் பட், நாம் இப்போது செய்துகொண்டிருப்பது அக்னி வித்யா. அக்னியை வழிபடுவது வைதீகமான ஒருவரின் இயற்கையான பண்பு. அடுப்பை பற்ற வைத்து உணவு சமைப்பதுதான் நீ அக்னியை வழிபடும் முறை**" என்றார். நான் ஸ்ரீ ஸ்ரீபாதரிடம், "**வணங்குகிறேன், ஸ்ரீ மகா குரு! இந்த மண் அடுப்பு நான் வெளியேறிய பின்பு கூட தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்க வேண்டும்**" என்றேன். அதற்கு ஸ்ரீ ஸ்ரீபாதர், "உன்னுடைய அடுப்புக்கு சுயமான சக்தி கிடையாது. அது என்னுடைய யோக சக்தியுடன் ஐக்கியம் ஆகி இருப்பதால், நீ சமைக்கும் உணவு பிரசாதமாக மாறி பக்தர்களின் துயரம் மற்றும் அவமானங்களைத் துடைக்கிறது. இந்த அடுப்பு இன்னும் ஒன்பது வருடங்கள் இருக்கவேண்டும். அப்படியென்றால் நான் என்னுடைய உடலை என் முப்பதாவது வயதில் மறைத்துக் கொள்வேன். அதற்குப் பின்னர், மூன்று வருடங்களுக்கு பக்தி நிறைந்த மக்களுக்கு பிரகாசமான உருவத்தில் காட்சி அளிப்பேன். அப்போது எனக்கு 33 வயது ஆகிவிடும். ஒரு யோகியின் 33வது வயதின் போது அவர் வாழ்க்கையில் பல மாறுதல்கள் நடைபெறும். முதுகெலும்புகள் மொத்தம் 33தான். ருத்ர கணங்களின் எண்ணிக்கையும் 33 கோடிதான். அதற்குப் பின்னரும் அக்னி யக்ஞம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். நான் இந்த அக்னி வழிபாட்டை உடல் நிலைக்கு கொண்டு வருவேன். கர்மாவை எரிக்கும் அடையாளமாகத்தான் இந்த அக்னி வழிபாட்டை மேற்கொள்கிறேன். எனினும், பக்தர்களுடைய கர்மா மொத்த உருவம் எடுப்பதற்கு முன்னால் சூக்ஷ்ம உருவத்தில் இருக்கும். அதற்கு முன்னால், அது காரண உருவத்தில் காரண சரீரத்தில் இணைக்கப்பட்டிருக்கும். ஆகவே, 33வது வயதிற்கு பின்னர், இது போன்ற அக்னி வழிபாடுகள் எனக்கு அவசியமற்றது. பின்னர் நான் என்னுடைய யோகத்தீயின் மூலம் என்னைச் சார்ந்திருக்கும் ஒருவரின் சூக்ஷ்ம உடல் அல்லது காரண உடல்களில் இருக்கும் பாவங்களை எரித்து விடுவேன். நான் 33வது வயது வரும் வரை நீ இந்த அடுப்புத் தீயை தொடர்ந்து எரித்துக் கொண்டிருக்கலாம். பின்னர், பக்தர்கள் இங்கு வந்து தானாகவே தங்களுக்கான உணவை சமைத்து விட்டு சென்றுவிடுவார்கள். இதுபோன்று மூன்று வருடங்களுக்கு

தொடரும். பின்னர், உடல்ரீதியான உருவத்தில் அக்னி வழிபாடு தேவை இருக்காது. நான் பிரித்வி யக்ஞத்தை தொடங்கிவிட்டேன். அது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஜல யக்ஞத்தை தொடங்கியுள்ளேன். அதுவும் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் இப்போது அக்னி வழிபாட்டை அக்னி யக்ஞமாக தொடங்கியிருக்கிறேன். அதுவும் எந்தவித தடையும் இல்லாமல் தொடரும். அனைத்து உயிரினங்களிலும் அக்னியின் உருவமாக இருக்கும் ஒருவர் நான்தான்! அனைத்து பொருட்களையும் புனிதம் ஆக்குபவன் நான்தான்! அனைத்து பொருட்களையும் எரிப்பவன் நான்தான்!" என்றார்.

பஞ்சபூதங்களுக்குத் தொடர்பாக செய்யப்படும் யக்ஞ சடங்குகள் பற்றி நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஸ்ரீ ஸ்ரீபாதரின் லீலைகளின் முறைகள் பற்றி ஆராய்வது சரியல்ல என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.

ஒரு நாள், ஒரு புதுமண தம்பதி ஸ்ரீ ஸ்ரீபாதரை காண வந்தனர். அவர் அவர்களை பஞ்சதேவ மலையில் இருக்கும் தர்பார் மண்டபத்தில் தங்குமாறு கூறினார். இரண்டு நாட்களுக்கு பிறகு, அந்த இளைஞன் இறந்துவிட்டான். வரங்கள் அளிக்கும் அருள் நிறைந்த கடவுளான, ஸ்ரீ மஹாகுரு அவர்களைக் காப்பாற்றுவார் என்று நம்பினார்கள். ஆனால் புது மணப்பெண் இப்போது விதவை ஆகிவிட்டாள். அது எந்த பெண்ணாலும் தாங்கிக் கொள்ள முடியாது. புதுமண தம்பதியின் உறவினர்கள் பஞ்சதேவ மலைக்கு வந்தனர். அந்த சடலத்தை எரிக்கலாமா அல்லது வேண்டாமா என்ற குழப்பம் நிலவியது. ஸ்ரீ ஸ்ரீபாதரின் அனுமதி இல்லாமல் பஞ்சதேவ மலையின் தர்பாரில் இருந்து பிணத்தை கொண்டு செல்ல முடியாது. புது மணப்பெண் துக்கத்தின் அடையாளமாகக் காணப்பட்டாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் தர்பாருக்கு வந்தார். அந்த புது மணப்பெண் தன் துரதிர்ஷ்டத்தை பற்றி அவரிடம் முறையிட்டாள். ஸ்ரீ ஸ்ரீபாதர் கர்மாக்களின் பலன்கள் தவிர்க்க முடியாது என்று குறிப்பிட்டார். பின்னர் அந்த புதுமணப்பெண், "**செயலற்ற கர்மாவிற்கு என் கணவரை இறக்கச் செய்யும் சக்தி உண்மையில் இருந்தால், கர்மாவிற்கு சிலை அந்தஸ்து அளித்து, கோவில் கட்டி வணங்கலாம். சைதன்யத்தின் உருவகமான, தீயின் உருவமான, தீயை ஆடையாகக் கொண்ட, ஸ்ரீ ஸ்ரீபாதருக்கு முடியாது என்ற ஒன்று கிடையாது என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த துர்பாக்யசாலிக்கு மாங்கல்ய பிச்சை அளித்து, அருளுமாறு கேட்டுக்கொள்கிறேன்**" என்று வேண்டிக்கொண்டாள். அந்த புது மணப்பெண்ணுக்கு ஸ்ரீ ஸ்ரீபாதரின் கருணை மற்றும் இரக்கத்தின் மீது அபார நம்பிக்கை இருந்தது.

## இறந்தவருக்கு உயிர் அருளுதல்

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், "'விஷ்வசோ பல தாயகம்' (நம்பிக்கை நல்ல பலனை அளிக்கும்). உனக்கு என் மேல் வலுவான நம்பிக்கை இருந்தால், உன் கணவர் மீண்டும் உயிரோடு வருவார். கர்மாவின் விதியை மீறாமல், நான் உனக்கு ஒரு வழியைக் கூறுகிறேன். உன் மாங்கல்யத்தை விற்று, அந்த பணத்தில் உன் கணவரின் எடைக்கு நிகரான விறகு வாங்கு. அந்த விறகை இங்கு கொண்டு வா. அந்த விறகு

இங்கு உணவு சமைக்க பயன்படுத்தப்படும் அடுப்புக்காக உபயோகப்படுத்தப்படும். அதோடு உன் அமங்கலங்கள் அனைத்தும் எரிந்து விடும். உன் மாங்கல்யத்தை இழப்பதால் ஏற்படும் துரதிர்ஷ்டம், உன் கணவரின் உடல் எரிக்கப்படுவதால் ஏற்படும் அமங்கலம் ஆகியவை உன் கணவரின் மரண அதிர்வலைகளை ஈர்த்து வைத்துக் கொண்டிருக்கும் விறகை எரிப்பதால் சமன் செய்யப்படும்" என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீபாதரின் ஆணைப்படி செய்தவுடன், அவள் கணவன் மீண்டும் உயிர் பெற்றான்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களின் பல்வேறு பாவ கர்மாக்களை விறகுக்குள் ஈர்த்துவிடுவார். அந்த விறகுக் கட்டைகள் எரிக்கப்பட்டு சுவையான உணவுகள் தயாரிக்கப்படும், இதன்மூலம் பக்தர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட சுப பலன்கள் பெறுவார்கள்.

## ஏழை பிராமணனுக்கு பேரருள் புரிதல்

இன்னொரு சந்தர்ப்பத்தில், ஒரு ஏழை பிராமணன் ஸ்ரீ ஸ்ரீபாதரின் தரிசனத்துக்காக வந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் மீது கருணை காட்டாவிட்டால், தற்கொலை செய்துகொள்வதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்று புலம்பினார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் எரிந்துகொண்டிருந்த விறகை கொண்டு வந்து அவர் மீது தொட்டார். அந்த பிராமணன் வலியினால் பல மணி நேரத்திற்குத் தவித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அவரிடம், **"ஏ பிராமணரே! உங்களுக்கு தற்கொலை செய்து கொள்ள விருப்பம். நான் உங்களை புறக்கணித்திருந்தால், நீங்கள் உண்மையாகவே தற்கொலை செய்து கொண்டிருப்பீர்கள். தற்கொலைக்குத் தொடர்பான அனைத்து தீய கர்மாக்களின் எல்லா அதிர்வலைகளையும் அந்த நெருப்புத் தழும்பு மூலம் ஏற்படுத்தி அழித்துவிட்டேன். இப்போதிலிருந்து, நீங்கள் வறுமையினால் கஷ்டப்பட மாட்டீர்கள். குளிர்ச்சி அடைந்த இந்த விறகு கட்டையை உங்கள் துண்டில் சுற்றி வீட்டுக்கு பத்திரமாக கொண்டு செல்லுங்கள்"** என்றார். அவர் அதே மாதிரி செய்தார். அந்த துண்டை வீட்டிற்கு சென்ற பின் திறந்து பார்த்தபோது, விறகு கட்டை தங்கமாக மாறியிருந்தது. அந்த பிராமணனின் ஏழ்மையும் அழிந்து போனது.

ஸ்ரீ ஸ்ரீபாதர் தன் பக்தர்களின் பாவங்களை அக்னி யக்ஞம் மூலம் வினோதமான வழிகளில் அழிப்பார். சிலசமயம், அவர்களை சில விசேஷமான காய்கறிகளான, கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்றவற்றை கொண்டு வரச் சொல்லுவார். அவர் அந்த பக்தர்களின் தீய நடவடிக்கைகளை அந்த காய்கறிக்குள் ஈர்த்து விடுவார். அந்த காய்கறியை கொண்டு செய்த பொரியலை அந்த பக்தர்களை கண்டிப்பாக உண்ண வைப்பார். இவ்வாறு கர்மாக்களின் இன்னல்கள் முழுவதுமாக அழிக்கப்படும்.

ஒரு பெண் பருவமடைந்த பின்னரும் திருமணம் நடைபெறாமல் இருந்தாள். அவளுக்கு செவ்வாய் தோஷம் இருப்பதைக் கவினித்து, அவளிடம் சிவப்புக் காராமணி கொண்டுவரும்படி கூறப்பட்டது. அந்த சிவப்பு காராமணியை கொண்டு உணவு தயாரிக்கப்பட்டு, அந்த பெண் உட்பட அனைவரும் கண்டிப்பாக உண்ண வேண்டும் என்று ஆணையிட்டார். அவளுடைய கர்மாவின் பந்தம் இந்த முறையில்

அழிக்கப்பட்டதும், அவளுக்கு ஒரு தகுதியான மணமகனுடன் திருமணம் நடைபெற்றது.

சிலரை தர்பாரில் உணவு தயாரிப்பதற்கு பசு நெய் கொண்டு வரச் சொல்லுவார். சிலரை பசு நெய்யினால் தீபம் ஏற்றச் சொல்லுவார். சில கஷ்டமான சூழ்நிலைகளில் அல்லது திருமணமாகாத பெண்களை, வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் அம்பிகையை வழிபடும் படி  ஆலோசனை அளிப்பார்.

ஒருமுறை ஒரு பக்தர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கை ஆனார். ஸ்ரீ ஸ்ரீபாதர் விளக்கெண்ணெய் தீபம் ஏற்றி அவர் அறையில் வைக்கும் படி கூறினார். மேலும் அந்த விளக்கில் எண்ணெய் இரவு நேரத்தில் தீர்ந்து போகாமல் இருக்கும் படி ஊற்றிக் கொண்டே இருக்கும் படி ஆணையிட்டார். அதன்படி செய்ததும், அந்த பக்தரின் நோய் முற்றிலும் குணமானது.

ஒரு பக்தர் மிகுந்த துரதிர்ஷ்டத்தில் இருந்தார். பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர் தொடர்ந்து ஒரு வாரம் முழுவதும் பசு நெய் கொண்டு தீபம் எரிந்து கொண்டே இருந்தால், லக்ஷ்மி கடாக்ஷம் மீண்டும் வீட்டுக்குள் நுழையும் என்று கூறினார். இது போன்ற பல நூதனமான முறைகள் மூலம் அவரை சரணடைந்தவர்களின் பாவ கர்மாக்களை விடுவித்திருக்கிறார்.  மனிதர்கள் இது போன்ற அனைத்து செயல் முறைகளையும் தெரிந்து கொள்வது என்பதற்கு சாத்தியமே இல்லை.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 50

## குரு நிந்தனையால் ஏற்படும் ஏழ்மை மற்றும் மற்ற தோஷங்களில் இருந்து விடுபடுதல்

### நாமஜபம் செய்வதன் மகத்துவம்

ஒரு முறை ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னிடம், **"சங்கர் பட், அக்னி யக்ஞத்திற்கு பின்னர் வாயு யக்ஞம் மிகவும் முக்கியமானது. நான் வாயு யக்ஞத்தை தொடங்க போகிறேன்"** என்றார்.

வாயு யக்ஞம் என்றால் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஒரு வயதான பிராமணர் வயிற்று வலியுடன் குருகாட்டாவிற்கு வந்தார். அவருக்கு வேதனை அதிகமாக இருந்தது. இந்த வலியைத் தாங்கிக் கொள்வதை காட்டிலும் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்று கூறினார்.

பின்னர் ஸ்ரீ ஸ்ரீபாதர், **"உங்களுடைய பூர்வ ஜென்மத்தில், நீங்கள் பலரை குத்தும் வார்த்தைகளால் பேசி துன்பப் படுத்தினீர்கள். குத்தும் மற்றும் அருவருப்பான வார்த்தைகளைக் கூறி அவர்களின் உள்ளத்தைப் புண் படுத்தினீர்கள். அதன் காரணமாகத்தான், இப்போது இந்த துயரமான நோய் ஏற்பட்டுள்ளது. கலியுகத்தில், மூர்க்கத்தனமான வார்த்தைகளின் தீய பலன்களை அழிக்க கடவுளின் நாமத்தை கூறுவது தவிர வேறு எந்த சிறந்த நிவாரணமும் கிடையாது. இதனால், முழு வாயு மண்டலமும் தூய்மை ஆகும். நாமஸ்மரணம் என்னும் மகா யக்ஞத்தை நான் குருகட்டாவில் துவங்கி வைக்கிறேன். நான் பரா, பஸ்யந்தி, மத்தியம மற்றும் வைகரி ஆகிய நான்கு விதமான வாக்குகளை யோகநிலையில் கட்டுப்படுத்த போகிறேன். யாரெல்லாம் சிரத்தையுடன், 'ஸ்ரீபாத வல்லப திகம்பரா, தத்த திகம்பரா' என்று ஜெபிக்கிறார்களோ, நான் அவர்களுக்கு எளிதில் அனுகும் நிலையில் இருப்பேன். மேலும் அனைத்து விதமான சுப முன்னேற்றங்களையும் அளிப்பேன்"** என்று கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் கூறியபடி, **"ஸ்ரீபாத ஸ்ரீவல்லப திகம்பரா"** என்ற நாமம் இரவும் பகலுமாக தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஜபிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த மூன்று இரவுகளும் குருகாட்டாவில் தங்க அனுமதி அளித்தார். மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகளுக்கு பின்னர் அந்த வயதான பிராமணரின் வயிற்று வலி குணமானது.

ஸ்ரீ ஸ்ரீபாதர், "இக்காலங்களில் வாயு மண்டலம் முழுவதும், தீய சொற்களினால் நிரம்பியுள்ளது. ஒரு மனிதன் ஒரு வார்த்தையைக் கூறுகிறான் என்றால், பொதுவாக சத்வ, ராஜஸ மற்றும் தாமச பண்புகளில் ஏதாவது ஒன்றை அல்லது இரண்டை அல்லது மூன்றையும் தூண்டுகிறான். அந்த தூண்டுதல் நலனை ஏற்படுத்தாது என்பதால், அது பூமி, காற்று, நெருப்பு, நீர் மற்றும் ஆகாயத்தில் தீய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பஞ்சபூதங்களும் மாசு பட்டிருப்பதால், அதற்குத் தொடர்பான மனம், உடல் மற்றும் மனிதனின் ஆழ்மனது ஆகியவையும் மாசு பட்டிருக்கும். அதன் விளைவாக அவன் தீய கர்மாக்களைச் செய்கிறான். அதன் பலனால் அவன் ஏழை ஆகிறான். ஏழ்மையின் காரணமாக மீண்டும் பாவங்கள் செய்கிறான். அவன் தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், அவனுடைய மனம் இழிவடைந்து, நற்காரியங்களான தானங்கள் போன்றவற்றில் ஈடுபாடு இல்லாமல் ஆகிவிடுகிறான். அதன் மூலம், மீண்டும் ஏழ்மைக்குத் தள்ளப்படுகிறான்.

## எண்ணம், பேச்சு மற்றும் செயல் ஆகியவற்றின் தூய்மையின் அவசியம்

ஒரு மனிதன் ஏழ்மையின் வேதனையில் இருந்து விடுபட வேண்டும் அல்லது பாவ கர்மாக்களில் இருந்து வெளியாக வேண்டும் என்றால், அவனிடம் தூய்மையான மனம், பேச்சு மற்றும் செயல் ஆகியவை இருக்க வேண்டும். இதுதான் திரிகரண சுத்தி என்று அழைக்கப்படுகிறது. மனதில் ஏற்படும் எண்ணங்கள் பேச்சுடன் ஒத்து இருக்க வேண்டும், என்ன பேசுகிறோமோ அது செயலுடன் ஒத்து இருக்க வேண்டும். திரிகரண சுத்தி அடைந்த ஒரு மனிதன் சிறந்த மனிதன் ஆகி விடுகிறான்.

எண்ணம்,பேச்சு மற்றும் செயலில் வேறுபாடு இருந்தால், திரிகரண சுத்தி இல்லை என்று அர்த்தம். பின்னர் அவன் தீய மனிதன் ஆகிவிடுவான். கலியுகத்தில் விமோசனம் பெறுவதற்கு பல வழிகள் இருக்கிறது. நாமஜபம்தான் எல்லா முறைகளையும் விட சுலபமான வழி. கடவுளின் புனித நாமம் நம் நாவிற்கு பழகிவிட்டால், மங்களகரமான வார்த்தைகளை பேசும் பழக்கம் ஏற்பட தோன்றும். கடவுளின் பெயரை நாமஜபம் செய்யும் போது, கடவுளின் உருவத்தைத் தியானித்தால், மனம் தூய்மையாகி விடும். இதன் மூலம், ஒருவர் உற்சாகம் அடைந்து நல்ல காரியங்களை செய்வார்கள்" என்று கூறினார்.

## கர்மாவில் இருந்து விடுதலை

ஒருமுறை காச நோய் தாக்கிய நோயாளி ஒருவர் குருவபுரத்திற்கு வந்தார். அவருக்கு சர்க்கரை நோயும் இருந்தது. மேலும் சில நோய்களும் இருந்தன. அவரை கண்டவுடன் மகாபிரபு மிகுந்த கோபத்தோடு அவரிடம், **"இந்த மனிதர் முற்பிறவியில் கொள்ளைக்காரனாக இருந்தார். இவர் ஏதுமறியாத பலரிடமிருந்து பணத்தைத் திருடி அவர்களுக்குத் துயரத்தை ஏற்படுத்தி இருக்கிறார். தன் மகளின் திருமணத்திற்காக பணம் சேர்த்து வைத்திருந்த ஒருவரிடம் அவர் பணத்தைத் திருடி விட்டார். பணம் திருட்டு போனதால், அந்த தந்தையால் தன் பெண்ணிற்குத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. தன் பெண்ணை சரியான வயதில் திருமணம் செய்து வைக்க**

**முடியாததால், அவரை அவர் ஜாதியை விட்டுத் தள்ளி வைத்து விட்டனர். அவரால் வரதட்சணை கொடுக்க முடியாததால், அவருடைய மகளுக்கு தகுந்த வரன் அமையவில்லை. வயதான மணமகன்தான் கிடைத்தான். பின்னர் அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டு தன் உயிரை விட்டு விட்டாள். நூறு முழு வருடங்கள் வாழ வேண்டிய வாழ்க்கை சாம்பலாகிவிட்டது**" என்று கூறினார்.

காசநோயாளி ஸ்ரீசரணரிடம் மிகுந்த வேதனையுடன் தனக்கு அடைக்கலம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். இளகிய மனம் கொண்ட ஸ்ரீசரண் அவரை பஞ்சதேவ மலையின் தர்பாரில் இருக்கும் மாட்டுத் தொழுவத்தில் உறங்கச் சொன்னார். அந்த மாட்டுத் தொழுவத்தில் கொசுத் தொல்லை அதிகம். ஸ்ரீ குரு அவருக்கு குடிக்க தண்ணீர் கொடுக்க கூடாது என்று ஆணையிட்டார்.

அந்த மனிதருக்கு பேய்கள் அவர் கழுத்தை நெரித்துக் கொல்ல முயற்சிப்பது போல கனவு கண்டார். இன்னொரு கனவில், ஒரு பெரிய கற்பாறை அவர் நெஞ்சில் வைத்திருப்பது போல் இருந்தது. ஒரு பருத்த மல்யுத்த வீரன் அதன் மீது அமர்ந்திருந்தான். இந்த இரு கனவுகள் மூலம், அவருடைய கர்மா சமன்படுத்தப்பட்டு அவர் ஆரோக்கியம் பெற்றார். ஸ்ரீ ஸ்ரீபாதர் அந்த காச நோயாளியை மனரீதியாக வேதனையை அனுபவிக்கச் செய்து, கர்மாவை சமன்படுத்தினார். இப்படி செய்யாவிட்டால், அவர் உடல்ரீதியாக பல வருடங்களுக்கு அவற்றை அனுபவித்திருக்க வேண்டும்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**



# அத்தியாயம் – 51

**நீரில் மூழ்குதல் மற்றும் பிற ஆபத்துகளில் இருந்து பாதுகாத்தல்- இந்தப் புத்தகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலன்**

## இந்தப் புத்தகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலன்


அன்று ஐப்பசி மாதம் தேய்பிறை பன்னிரண்டாவது நாள் (அஸ்வயுஜ கிருஷ்ண துவாதசி). அன்று ஹஸ்த நட்சத்திரம். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கிருஷ்ணா நதியில் நீராடி விட்டு, சில நேரத்திற்கு தியானத்தில் ஆழ்ந்தார். அன்று நான் எவ்வளவு முறை முயற்சி செய்தும், அடுப்பு எரியவில்லை. அந்த நெருப்பு அணைந்து விட்டது. ஸ்ரீ ஸ்ரீபாதர் என்னை இன்னொரு முறை குளித்துவிட்டு அவரிடம் வரச்சொன்னார். பின்னர் அவர் அறிவிக்க தொடங்கினார், "என் அருமை சங்கர் பட், என்னுடைய முழு உடலையும் மறைத்துக் கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் கிருஷ்ணா நதியில் மறைந்து விடுவேன். நான் குருகட்டாவில் மாறுவேடத்தில் அலைந்து கொண்டிருப்பேன். பிறகு, சந்நியாச நெறியை மீட்டெடுக்க ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி என்கிற பெயரில் மீண்டும் வருவேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் என்கிற பெயரில் நீ எழுதும் புனிதம் வாய்ந்த புத்தகம், பக்தர்களுக்கு ஒரு கற்பக விருட்சமாக இருக்கும். அந்தப் புத்தகத்தில் இருக்கும் ஒவ்வொரு எழுத்தும் சத்தியம். ஆகாயத்தில் ஓசை மட்டுமே இருக்கும். எனக்கு திசைகளே ஆடைகள். ஆகவே, நான் திகம்பரர் என்று அழைக்கப்படுறேன்.

இந்தப் புத்தகத்தைப் படித்தால் ஒருவருடைய மனதின் உலகத்தை (மனோமய ஜகத்) சரி செய்து கொள்வதற்கு சிறந்த உதவி புரியும். எவரொருவர் இந்த புத்தகத்தை பக்தியுடன் பாராயணம் செய்தாலும் அவர்களுக்கு இந்த உலகம் மற்றும் மற்ற உலகங்களில் நன்மை அடைவார்கள். இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் வேத மந்திரங்களுக்கு இணையானது. நீ எழுதும் புத்தகத்தின் சமஸ்கிருத பிரதி, என் மஹாஸமஸ்தானத்தில் உள்ள அத்தி மரத்திற்கு பல அடி ஆழத்திற்கு கீழே ஒலி உருவத்தில் பாதுகாக்கப்படும். அங்கிருந்து எழும் தெய்வீக ஓசைகளை சாதாரண காதுகளால் கேட்க முடியாது. எவரொருவர் தன் இதயத்தில் என் அழைப்பை கேட்கிறார்களோ கண்டிப்பாக என் தரிசனத்திற்கு வருவார்கள். நான் என்னுடைய பக்தர்களை காப்பதில் எப்போதும் விழிப்பாக இருப்பேன். உன்னுடைய சமஸ்கிருத புத்தகத்தின் தெலுங்கு மொழிபெயர்ப்பும் வரும். அது ஸ்ரீ பாப்பண்ணார்யாவின்

33வது தலைமுறையின் போது வெளிச்சத்துக்கு வரும். இது பல மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்படும். அதை எந்த மொழியில் பாராயணம் செய்தாலும், கிடைக்கும் தெய்வீக அனுபவங்கள் மற்றும் பாதுகாப்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

## ஸ்ரீ ஸ்ரீபாதர் சங்கர் பட்டுக்கு அளித்த உறுதி

நீ எனக்கு மிகுதியாக சேவை புரிந்திருக்கிறாய். ஒரு தந்தையிடம் ஒட்டிக் கொண்டிருக்கும் குழந்தையை போல இருக்கிறாய். நான் என்னுடைய மரத்தினால் ஆன பாதுகைகளை உன்னிடம் அளிக்கிறேன். நான் இங்கு இல்லை என்று வருத்தம் அடையாதே. நீ இங்கு இன்னும் மூன்று வருடங்களுக்கு இருப்பாய். இந்த மூன்று வருடங்களும் நான் உனக்கு ஒளி ரூபமாக தரிசனம் அளிப்பேன். நான் உனக்குப் பல யோக ரகசியங்கள் பற்றி தெரிவிப்பேன்.



## ஸ்ரீ ஸ்ரீபாதரின் மறைவு

மூன்று வருடங்களுக்குப் பின்னர், ஐப்பசி மாதம் தேய்பிறை, பன்னிரண்டாவது நாள் அன்று, என் பாதுகைகளின் முன்னிலையில் நீ எழுதிய ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை பாராயணம் செய். அன்று என்னை தரிசிக்க வருபவர்கள் மிகவும் பாக்கியசாலிகள். என்னுடைய மங்களகரமான ஆசீர்வாதம் உங்கள் அனைவருக்கும் எப்போதும் இருக்கும்" என்றார்.

மிக உயர்ந்த கடவுளான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், இவ்வாறு உறுதி அளித்துவிட்டு, கிருஷ்ணா நதியில் இறங்கி மறைந்து போனார்.

நான் அந்த மரப் பாதுகைகளை என் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, தன் தாயை இழந்த சிறு பிள்ளை போல தேம்பி தேம்பி அழுதேன். பின்னர் மயக்கம் அடைந்தேன். நான் கண் விழித்த பின்னர், கிருஷ்ணா நதியில் நீராடிவிட்டு தியானத்தில் ஆழ்ந்தேன். ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன் பிரகாசமான ஒளி வடிவத்தில் என் மனக்கண்ணில் காட்சி அளித்தார்.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 52

## சங்கர் பட்டின் யோக அனுபவங்கள்

### ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக தரிசனம்

தினமும் மூன்று வருடங்களுக்கு நள்ளிரவில், எனக்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் தெய்வீக ஒளி உருவத்தின் தரிசனம் கிடைத்தது. நான் என்னுடைய யோக அனுபவங்களை தனிப் புத்தகமாக எழுதினேன். இமயமலையிலிருந்து ஒரு யோகி வந்து அந்த புத்தகத்தைக் கொண்டு சென்றுவிட்டார். இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைக்கிணங்க நடைபெற்றது.




**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

# அத்தியாயம் – 53

## ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் பீதிகாபுரத்தை வந்தடையும் வழி

### ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் சிறப்பம்சங்கள்

நான் இயற்றிய ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம், அவருடைய தாய்மாமாவின் வீட்டில் சில காலங்களுக்கு இருக்கும். பின்னர் அது தெலுங்கில் மொழி பெயர்க்கப்படும். தெலுங்கு மொழிபெயர்ப்பு முடிவடைந்த பின்னர், நான் எழுதிய சமஸ்கிருத பிரதி மறைந்துவிடும். கந்தர்வர்கள் அதை ஸ்ரீ ஸ்ரீபாதர் பிறந்த இடத்தில் உள்ள பூமிக்கு பல அடி ஆழத்திற்குக் கீழே வைத்துவிடுவார்கள். அங்கு சித்த யோகிகளால் பாராயணம் செய்யப்படும்.

நான் எழுதிய சரிதாம்ருதத்தை ஸ்ரீ ஸ்ரீபாதரின் தெய்வீக பாதுகைகளின் முன்னிலையில் பாராயணம் செய்தேன். ஐவர் அங்கு வந்தனர். அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

நான் ஒரு பண்டிதன் இல்லை. ஆகவே, எந்த அத்தியாயத்தைப் படித்தால் என்ன பலன் கிடைக்கும் என்பதை என்னால் கூற முடியாது. இந்தப் புத்தகத்தின் தெலுங்குப் பிரதி, ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் 33வது தலைமுறையின் போது வெளிச்சத்திற்கு வரும்.

தெலுங்குப் பிரதியை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர், அந்த செயலுக்காக ஸ்ரீ ஸ்ரீபாதரால் நியமிக்கப்பட்டிருக்கும் அந்த நபர், விஜயவாடிகா (விஜயவாடா) பகுதியில் இருக்கும் கிருஷ்ணா நதியில் அதை மூழ்கடித்து விட வேண்டும்.

அந்தப் புத்தகத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் அதிர்ஷ்டசாலி, ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தின் தெலுங்கு பிரதியை அவர் பிறந்த இடத்தில் அமைந்திருக்கும் மஹாஸமஸ்தானத்தில் பாராயணம் செய்து விட்டு அவருடைய புனிதப் பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும். பாராயணத்திற்கு நடுவில் அந்த அதிர்ஷ்டசாலிக்கு கனகாபூரில் இருந்து கேட்காமலேயே பிரசாதம் கிடைக்கும். அவர்தான் ஸ்ரீ பாப்பண்ணார்யாவின் 33 வது தலைமுறையை சேர்ந்தவர் என்பதை இந்நிகழ்வு சுட்டிக்காட்டும்.

இது ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தன் தெய்வீக ஒளி உருவத்தில் தரிசனம் அளித்த போது கூறிய தெய்வ வாக்கு.

**வெற்றி! வெற்றி! ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு வெற்றி!!**

*சுபம்*

# ஸ்ரீ பீடிகாபுரம் / பிதாபுரம் (ஆந்திர பிரதேசம்)

## பார்க்க வேண்டிய இடங்கள்:

1) **'பாத கயா க்ஷேத்ரம்' என்று அழைக்கப்படும் ஸ்ரீ குக்குடேஸ்வரர் கோவில்**

*இங்கு ஸ்ரீ வியாஸர் ஸ்தாபித்த குக்குடேஷ்வரர் சிவலிங்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. இங்கு அம்பாளின் முக்கியமான 18 சக்தி பீடங்களில் ஒரு சக்தி பீடம் அமையப்பெற்றுள்ளது.*

*Sri Kukkuteswarar Temple Devasthanam*
*Pithapuram.*
*Contact : 08869 - 251445*

2) **ஸ்ரீ குந்தி மாதவ ஸ்வாமி கோவில்**
*இக்கோவில் இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்ச மாதவ க்ஷேத்திரங்களுள் ஒன்று.*
*Sri Kunti Madhava Swami Temple*
*Pithapuram.*

3) **ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சமஸ்தானம்**

*இங்கு ஸ்ரீபாதரின் சரண பாதுகை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ தத்தாத்ரேயர் மற்றும் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி திருமூர்த்தங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள அத்திமரம் கற்பக வ்ருக்ஷமாக கருதப்பட்டு வணங்கப்படுகின்றது.*

**ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப மகா ஸமஸ்தானம்**
*(Department of Endowment, Andhra Pradesh)*
*Venugopala Swamy Temple Street, Pithapuram Pincode : 533450*
**East Godavari District, AP, India**
*Contact : (08869) 250300 / 250900 / 252300*
*Mobile : 7382222498*
*Email : info@sripadasrivallabha.org*
*info@sripadasrivallabhamahasamsthanam.com*

4) **ஸ்ரீ கோபால் பாபா ஆஸ்ரமம்**
*Shri Gopal Baba Annasantarpana Trust*
*Bypass Road, Pithapuram*
*Contact : 08869-250299,9133172498*
*www.shrigopalbabamaharajpithapuram.com*

## க்ஷேத்ர ஸ்ரீ பிதாபுரம் அடையும் வழி

சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாக பிதாபுரம் அடையலாம். சென்னையிலிருந்து சர்க்கார் ரயிலில் பிதாபுரம் என்கின்ற ரயில் தடத்தை அடையலாம். சென்னையிலிருந்து சாமல்கோட் அடைந்து அங்கிருந்து காரிலோ (அ) ஆட்டோவிலோ 12km தொலைவில் பீடிகாபுரம் உள்ளது. சென்னையிலிருந்து விஜயவாடா அல்லது காக்கிநாடா அடைந்து அங்கிருந்து பிதாபுரம் அடையலாம். விஜயவாடாவிலிருந்து இந்த வழித்தடத்திற்கு நிறைய ரயில் வசதி உள்ளது.

## தத்த க்ஷேத்ரம் - ஸ்ரீ க்ஷேத்ர கானகாபூர்

ஸ்ரீ தத்தாத்ரேயரின் இரண்டாவது கலியுக அவதாரமான 'ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளின் தபோஸ்தான க்ஷேத்ரம்'. இங்கு ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளின் 'நிர்குண பாதுகை' ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த இடம் நிர்குண மடம் என்றும் அழைக்கப்படுகின்றது. இங்கு ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் த்ரிமூர்த்தி ஸ்வரூப ஸ்ரீ தத்தாத்ரேயராக அருள்புரிகின்றார். இன்றும் ஸ்வாமிகள் குப்தமாக சூக்ஷ்ம ரூபத்தில் பக்தர்களின் நியாயமான வேண்டுதல்களையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றி அருள்பாலிக்கின்றார்.

இங்குள்ள அஷ்ட தீர்த்தங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இந்த அஷ்ட தீர்த்தங்களில் நீராடுவது பக்தர்களின் காம்யங்களை நிறைவேற்றுவதோடு முக்தியையும் அளிக்கின்றது. இங்குள்ள அமரஜா - பீமா நதிகளின் சங்கமஸ்தானமான சங்கம் கோயில் மிகவும் சக்திவாய்ந்தது. ஸ்வாமிகள் இங்குள்ள அத்தி மரத்தின் அடியிலமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். இங்குள்ள அத்தி மரத்தை வலம் வருவது பல்வேறு யாக ஹோமங்களை செய்த பலனை அளிக்க வல்லது.

### க்ஷேத்ர ஸ்ரீ கானாகபூர் அடையும் வழி

சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாகவும், வான் வழியாகவும் கானாகபூர் அடையலாம். சென்னையிலிருந்து மும்பை செல்லும் ரயிலில் கானாகபூர் ரோடு என்கின்ற ரயில் தடத்தை அடைந்து, அங்கிருந்து காரிலோ (அ) ஆட்டோவிலோ 23 km தொலைவில் கோயிலை சென்று அடையலாம். கானாகபூர் ரோடு என்கின்ற ரயில் தடத்தில் நிற்காத பட்சத்தில் காலாபுர்கி (Gulbarga) என்கின்ற ரயில் தடத்திலிருந்து 50 km தொலைவில் கோயிலை சென்று அடையலாம். சென்னையிலிருந்து வான்வழியாக காலாபுர்கி (Gulbarga) விமான நிலையத்தை அடைந்து அங்கிருந்து 45 km தொலைவில் கோயிலை சென்று அடையலாம்.

### முகவரி மற்றும் தொடர்பு கொள்ள :

**ஸ்ரீ க்ஷேத்ர கானகாபுரம்**

*Sri Dattatreya Swamy Temple*
*Ganagapura (Deval Ganagapur)*
*Afzalpur Thaluk, Kalaburagi District,*
*Karnataka*
*Pincode : 585212*
*Contact : Shri Ankur Pujari - Mobile : 9035479569.*

## தத்த க்ஷேத்ரம் - ஸ்ரீ க்ஷேத்ர குருவபுரம்

ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் கலியுக அவதாரமான 'ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் தபோஸ்தானம்'. இந்த க்ஷேத்ரம் கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்துள்ளது. இந்த க்ஷேத்ரத்தை தரிசிக்க கிருஷ்ணா நதியில் பரிசலில் பயணித்து அக்கரை அடைந்து ஸ்வாமியை தரிசிக்க வேண்டும். இந்த க்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் 14 வருடங்கள் தவம் செய்து பின்னர் கிருஷ்ணா நதியில் இறங்கி சென்று தன் அவதாரத்தைப் பூர்த்தி செய்தார். அதனால் இந்த க்ஷேத்ரமானது ஸ்வாமிகளின் தபோஸ்தனமாக போற்றப்படுகின்றது. இந்த க்ஷேத்ரம் ஸ்வாமிகளின் சரண பாதுகா க்ஷேத்ரமாக மிகவும் சக்தி வாய்ந்ததாக மற்றும் பக்தர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேறும் இடமாகவும் கொண்டாடப்படுகின்றது. இந்த க்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பல்வேறு லீலைகளைப் புரிந்துள்ளார். இங்கு இரவில் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை.

### க்ஷேத்ர ஸ்ரீ குருவபுரம் அடையும் வழி

சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாக ராய்ச்சூர் அல்லது கிருஷ்ணா நதி ரயில் தடத்தை அடைந்து அங்கிருந்து காரிலோ / பேருந்திலோ 40 km தொலைவில் குருவபுர க்ஷேத்ரத்தை அடையலாம்.

### முகவரி மற்றும் தொடர்பு கொள்ள :

**ஸ்ரீ க்ஷேத்ர குருவபுரம்**
*Kuruvapur, Somgunj Distrct,*
*Raichur, Karnataka Pincode : 584102*
*Contact : Shri Manjunath Pujari*
*Mobile : 9740313828 / 9448568183*

## ஸ்ரீ குரு தத்த பாதுகா க்ஷேத்ர ராஜிதம்

இந்த கோவில் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள மருதம் 48 (மாருதிபுரம்) என்கிற இடத்தில் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர் மற்றும் ஸ்ரீ சாய்பாபா ஆகியோரின் திருமூர்த்தங்கள் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன. மேலும் ஸ்ரீ குருவின் சரண பாதுகை மற்றும் தியான மண்டபம் ஆகியவை அமையப்பெற்றுள்ளன. இந்த ஆலயம் எழில் கொஞ்சும் அமைதியான இயற்கை சூழலில் அமைந்துள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.

### முகவரி மற்றும் தொடர்பு கொள்ள :

காஞ்சிபுரம் - உத்திரமேரூர் (வழி மாகரல்). இறங்கும் இடம் திருப்புலிவனம். இங்கிருந்து மருதம் சுமார் 1 km தொலைவில் உள்ளது.

*Contact: Smt. Manjari* **9940941049**

## ஸ்ரீ கிருஷ்ண சாயி மந்திர்

இந்த கோவில் பாரதிநகர் தெற்கு காரைக்கால் சாலை, கும்பகோணத்தில் அமைந்துள்ளது. இங்கு சுயம்புவாக அத்தி மரம் தோன்றியுள்ளது. மேலும் தத்த அவதாரிகளான ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ மாணிக் பிரபு, ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ், ஸ்ரீ கஜானன் மகராஜ் ஆகியோருடன் ஸ்ரீ சாய்பாபா காட்சி அளிக்கிறார். மேலும் அகத்திய முனிவரின் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

### முகவரி மற்றும் தொடர்பு கொள்ள :

சாயி S. ஜெயகுமார்

பிள்ளையார் கோயில் தெரு, பாரதிநகர் தெற்கு, காரைக்கால் ரோடு, கும்பகோணம். Ph: 0435 2414919, 8903766111.






ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்



ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி




ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர்



ஸ்ரீ மாணிக் பிரபு மகராஜ்




ஸ்ரீ சாய்பாபா



ஸ்ரீ கஜானன் மகராஜ்



ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்



ஸ்ரீ கோபால் பாபா மகராஜ்,
பிடாபூர்




ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்
SREE PADA SREE VALLABHAR

ஸ்ரீ ஏக முக தத்தாத்ரேயர்
SREE EKA MUGHA DATTATREYAR

ஸ்ரீ ஷீர்டி சாய்பாபா
SREE SHIRDI SAIBABA



ஸ்ரீ அனகா தேவி சமேத தத்தாத்ரேயர்



ஸ்ரீ தத்தாத்ரேயரின் ஸ்வரூபமான


அத்தி மரத்தால் ஆன ஸ்ரீ வானமுட்டி பெருமாள் (எ) ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள்

கோழிகுத்தி

தொடர்புக்கு : +91 98424 23395


SREE CHAKRA DATTATREYAR
(Melsirunai Village, Kancheepuram)





SREE PADA VALLABHA PADHUGAI